ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

தெய்வீகம் பொருந்திய
கவிச்சக்ரவர்த்தியாகிய

கம்பநாட்டாழ்வாரருளிச்செய்தது.

முதலாவது

பாலகாண்டம்.

இது
சென்னை இராஜதானி வித்தியாசாலை
தமிழ்த்தலைமைப் புலமை நடாத்திய
இயற்றமிழாசிரியர்
கோ - இராஜகோபால பிள்ளையவர்கள்
மாணாக்கரான, மஹாவித்துவான்

திருமயிலை - சண்முகம் பிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டதை

88 AVADANAM PAPPIAYER'S CHOOLAY.

இரண்டாம் பதிப்பு.

பிருங்கிமாநகரம்.
வேம்புலிமுதலியாரவர்கள் குமாரர்

நமசிவாயமுதலியாரவர்களால்

தமது
சென்னை - சூளை,
நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது

1913.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

அபியுக்தர் செய்தருளிய

தனியன்கள்.

நேரிசைவெண்பா.

நாராதரத்தினுள்ள தமிழ்க் * குற்றமெல்லாம்
அராவுமரமாயிற்றன்றே இராவணன்மேல்
அம்புநீரட்டாழ்வா னடிபணியுமாதித்தன்
கம்பநாட்டாழ்வான் கவி. (௧)

நேரிசைக் கட்டளைக்கலித்துறை.

வாழ்வார்திருவெண்ணெய்நல்லூர்ச்சடையப்பன்வாழ்த்துபெறத்
தாழ்வாருயரப்புலவோரகவிருடானகலப்
போழ்வார்கதிரினுதித்ததெய்வப்புலமைக்கம்பநாட்
டாழ்வார்பதத்தைச்சிந்திப்பவர்க்கியாதுமரியதன்றே. (௨)

விருத்தங்கள்.

அம்பராவணிசடையானயன்முதல்
உம்பரான்முனிவரால்யோகராலுயர்
இம்பராற்பிணிக்கருமிராமவேழஞ்சேர்
கம்பராம்புலவரைக்கருத்திருத்துவாம். (௩)

வேறு.

சம்பநாடன்னுமைசெவிசாற்றுபூங்
கொம்பனுடன்கொழுநனிராமப்பேர்
பம்பநாடழைக்குங்கதைபாச்செய்த
சம்பநாடன்கழறலேயிற்கொள்வாம். (௪)

* குற்றமிரண்டு சொற்சோர்வு பொருட்சோர்வு.

வேறு.

நாரணன்விளையாட்டெல்லாநாரதமுனிவன்கூற
ஆரணக்கவிதைசெய்தாரறிந்த * வான்மீகியென்பான்
சீரணிசோழநாட்டுத்திருவழுந்தூருள்வாழ்வோன்
காரணக்கொடையான்கம்பன்றமிழினாற்கவிசெய்தானே. (ரு)

‡ அம்பிலே ¶ சிலையைநாட்டியமரர்க்கன்றமுதமீந்த
தம்பிரானென்னத்தானுந்தமிழிலேதாலைநாட்டிக்
கம்பநாடுடையவள்ளல்கவிச்சக்கிரவர்த்திபார்மேல்
நம்புபாமாலையாலேநரருக்கின்றமுதமீந்தான். (சு)

எண்ணியசகாத்தமெண்ணூற்றேழின்மேற்சடையன்வாழ்வு
நண்ணியவெண்ணெய்நல்லூர்தன்னிலேகம்பநாடன்
பண்ணியவிராமகாதைபங்குனியத்தநாளிற்
கண்ணியவரங்கர்முன்னேகவியரங்கேற்றினானே. (எ)

வேறு.

இம்பர்நாட்டிற்செல்வமெல்லாமெய்தியரசாண்டிருந்தாலும்
உம்பர்நாட்டிற்கற்பகக்காவோங்குநீழலிருந்தாலும்
செம்பொன்மேருவனையபுயத்திறல்சேரிராமன்றிருக்கதையிற்
கம்பநாடன்கவிதையிற்போற்கற்றோர்க்கிதயங்களியாதே. (அ)

வேறு.

○ கழுந்தராயுனகழல்பணியாதவர்கதிர்மணிமுடிமீதே
அழுந்தவாளிகள்தொடுசிலைராகவவபிநவகவிநாதன்
விழுந்தநாயிறுவெழுவதன்முன்மறைவேதியருடனாராய்ந்
தெழுந்தநாயிறுவிழுவதன்முன்கவிபாடினனெழுநூறே. (கூ)

பயன்.

‡ நாடியபொருள்கைகூடும்ஞானமும்புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும்வேரியங்கமலைநோக்கும்
நீடியவரக்கர்சேனைநீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமன்றோள்வலிகூறுவோர்க்கே. (க)

வேறு.

நன்மையுஞ்செல்வமுநாளுநல்குமே
இன்மையும்பாவமுஞ்சிதைந்துதேயுமே

---

* வல்மீகம் - புற்று புற்றிலிருந்து கேட்டிருந்தனன் ஆதலாலும் புற்றிலிருந்து வெளிப்பட்டானாகலானும் வால்மீகியெனக் காரணக்குறியாயிற்று.

‡ அம்பு-நீர். ¶ சிலை-கல்-மலை-மந்தரமலை. ○ கழுந்து-படைக்கலங்களிற் கைப்பிடியாற்றேய்ந்த இடம் இவ்வுவமையால் அறிவு தேய்ந்தவர் என்றவாறாயிற்று.

‡ நாடியபொருள்-கல்வி-செல்வங்கள்.

ஜென்மமுமரணமுமின்றித்தீருமே
இம்மையே * ராமவென்றிரண்டெழுத்தினால். (௨)

வடதலைதென்கலைவடுகன்னடம்
இடமுளபாடையாதொன்றினாயினும்
திடமுளரகுகுலத்திராமன்றன்கதை
அடைவுடன்கேட்பவ ‡ ரமரராவரே. (௩)

வென்றிசேரிலங்கையானைவென்றமால்வீரமோத
நின்றராமாயணத்தினிகழ்ந்திடுகதைகடம்மில்
ஒன்றினைப்படித்தோர்தாமுமுரைத்திடக்கேட்டோர்தாமும்
நன்றிதுவென்றோர்தாமுநரகமெய்திடாரே. (௪)

இராகவன்கதையிலொருகவிதன்னிலேகபாதத்தினையுரைப்போர்
பராவருமலரோனுலகினிலவனும்பன்முறைவழுத்தவீற்றிருந்து
புராதனமறையுமண்டர்பொற்பதமும்பொன்றுநாளதனினும்பொன்றா
அராவணையமலனுலகெனும்பரமபதத்தினையணுகுவான்றே. (௫)

வேறு.

o இறுவரம்பினிராமவென்றோரும்பர்
நிறுவரென்பதுநிச்சயமாதலால்
மறுவின்மாக்கதைகேட்பவர்வைகுந்தம்
பெறுவரென்பதுபேசவும்வேண்டுமோ. (௬)

அன்னதானமகிலநற்றானங்கள்
கன்னிதானங்கபிலையின்றானமே
சொன்னதானப்பலனெனச்சொல்லுவர்
மன்னிராமகதைமறவார்க்கரோ. (௭)

ஆதியரியோநமநாராயணர்திருக்கதையறிந்தனுதினம்பரவுவோர்
நீதியனுபோகநெறிநின்றுநெடுநாளதினிறந்துசெகதண்டமுழுதுக்
காதிபர்களாயரசுசெய்துளநினைத்ததுகிடைத்தருள்பொறுத்துமுடிவில்
சோதிவடிவாயழிவில்முத்திபெறுவாரெனவுரைத்தசுருதித்தொகைகளே. (௮)

வேறு.

இனையநற்கதைமுற்றுமெழுதினோர்வியந்தோர்கற்றோர்
அனையதுதன்னைச்சொல்வோர்க்கரும்பொருள்கொடுத்துக்கேட்போர்
கனைகடற்புடவிமீதேகாவலர்க்கரசாய்வாழ்ந்து
வினையமதறுத்துமேலாம்விண்ணவன்பதத்திற்சேர்வார். (௯)

கரைசெறிகாண்டமேழுகதைகளாயிரத்தெண்ணூறு
பரவுறுசமரம்பத்துப்படலநூற்றிருபத்தெட்டே
யுரைசெயும்விருத்தம்பன்னீராயிரத்தொருபத்தாறு
வரமிகுகம்பன்சொன்னவண்ணமுந்தொண்ணூற்றாறே. (௧௦)

---

* ராமஎன்னுமிரண்டெழுத்தின் உச்சாரணத்தால் சகல துன்பமும்போய் நன்மையுண்டாகும், என்பதை கூறியவாறாயிற்று.

‡ அமரர் - (க). இறவாதவர் என்னும் பொருள்படுவதோர் சொல்லாதலா, ல் அதற்கு நித்தியசூரிகளென்று பொருள்கூறலாம். (உ) தேவர்கள்.

o இறுவரம்பின் - மரணகாலத்தில்.

நம்மாழ்வார்திருவடிகளேசரணம்.

காப்புகள்.

ஆழ்வார்துதி.

தருகைநீண்ட * தயரதன்றன்றரும்
இருகைவேழத்திராகவன்றன்கதை
திருகைவேலைத்தரைமிசைச்செப்பிடக்
குருகைநாதன்குரைகழல்காப்பதே. (க)

அநுமான்துதி.

வேறு.

† அஞ்சிலேயொன்றுபெற்ற 0 னஞ்சிலேயொன்றைத்தாவி
§ அஞ்சிலேயொன்றாறாகவாரியற்காகவேகி
¶ அஞ்சிலேயொன்றுபெற்றவணங்கைக்கண்டயலாரூரில்
|| அஞ்சிலேயொன்றைவைத்தானவனெம்மையளித்துக்காப்பான். (௨)

சரசுவதிதுதி.

0 பொத்தகம்படிகமாலைகுண்டிகைபொருள்சேர்ஞான
வித்தகந்தரித்தசெங்கைவிமலையையமலைதன்னை
மெய்த்தகொந்தளகபாரமுகின்முலைத்தவளமேனி
மைத்தகுகருங்கட்செவ்வாயணங்கினைவணங்கல்செய்வாம். (௩)

---

* தசரதன்-பத்துத்திக்கினும் தன்னிரதத்தைச்செலுத்தும் ஆற்றலுள்ளோன்.
† அஞ்சிலேயொன்று (பஞ்சபூதங்களிலொன்று) வாயு. 0 சமுத்திரம். § ஆகாசம். ¶ பூமி. || நெருப்பு. 0 புத்தகம், படிகமாலை, குண்டிகை, ஞானவித்தகம், என்பவற்றிற்கு முறையே, இடப்பாற் கீழ்க்கரம், வலப்பாற் கீழ்க்கரம், இடப்பால்மேற்கரம், வலப்பான் மேற்கரம் என்பன இடங்களாம்.

ஹரிஓம்.



ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

முதலாவது

பாலகாண்டம்.

முதலாவது

சிறப்புப்பாயிரம்.

உலகம்யாவையுந்தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலுநீக்கலுநீங்கலா
* அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கேசரணங்களே. (க)

சிற்குணத்தர்தெரிவருநன்னிலை
எற்குணத்தரிதெண்ணியமூன்றனுள்
முற்குணத்தவரேமுதலோரவர்
நற்குணக்கடலாடுதனன்றரோ. (உ)

ஆதியந்த || மரியெனயாவையும்
ஓதினாலகில்லனவுள்ளன
வேதமென்பனமெய்ந்நெறிநன்மையன்
பாதமல்லதுபற்றிலர்பற்றிலார். (ங)

ஓசைபெற்றுயர்பாற்கடலுற்றொரு
பூசைமுற்றவுநக்குபுக்கென

* அலகிலா-அளவில்லாத. || அரியன எனப்பாடங் கூறுவாருமுளர்.

ஆசைபற்றியறையலுற்றேன்மற் * றிக்
காசில்கொற்றத்திராமன்கதையரோ. (ரு)

நொய்திறெய்யசொன்னூற்கலுற்றேனெனை
வய்தவைவின்மராமரமேழ்தொளை
எய்தவெய்தவற்கெய்தியமாக்கதை
செய்தசெய்தவன்சொன்னின்றதேயத்தே. (௬)

வய்யமென்னையிகழவுமாசெனக்
கெய்தவும்மிதியம்புவதியாதெனிற்
பொய்யில்கேள்விப்புலமையினோர்புகல்
தெய்வமாக்கவிமாட்சிதெரிக்கவே (௬)

தேவபாடையினிக்கதைசெய்தவர்
மூவரானவர்தம்முளுமுந்திய
நாவினுரையின்படிநான்றமிழ்ப்
பாவினலிதுணர்த்தியபண்பரோ. (எ)

துறையடுத்தவிருத்தத்தொகைக்கவிக்
குறையடுத்தசெவிகளுக்கோதில்யாழ்
கறையடுத்தவசுணநன்மாச்செவிப்
பறையடுத்ததுபோலுமென்பாவரோ. (அ)

முத்தமிழ்த்துறையின்முறைபோகிய
† உத்தமக்கவிகட்கொன்றுணர்த்துவென்
பித்தர்சொன்னவும்பேதையர்சொன்னவும்
பத்தர்சொன்னவும்பன்னப்பெறுபவோ. (கூ)

அறையுமாடரங்கும்மடப்பிள்ளைகள்
தறையிற்கீறிடிற்றச்சருங்காய்வரோ
‡ இறையுஞானமிலாதவென்புன்கவி
முறையினாலுணர்ந்தாருமுனிவரோ. (க0)

* "இக்காசில் கொற்றத்திராமன்-இலங்கையர் வேந்தன் போரிடைத்த ன்றுனைமுழுதும் படத்தமியனாய்ப்பட்டானது நிலைமைநோக்கி அயோத்திய ரிறை மேற்செல்லாது இன்றுபோய் நாளை நின்றுனையொடு வாவென விட் டாற்போல்வது" இதனைப் "பேராண்மை" யென்றதற்குப் பரிமேலழகருரை யானுமுணர்க.

† உத்தமக்கவிகள்-சிறப்பினையுடைய கவிகளுக்கென்பதன்றி அறியாமை யாகிய இருளையொழிந்த கவிகளுக்கென்றுரைப்பினுமமையும்.

‡ இறையு ஞானமிலாத - சிறிதேனு மெய்யுணர்ச்சியில்லாத எனக்கொ ள்க. உம்மை, இழிவு சிறப்பு.

* நடையினின்றுயர்நாயகன்றோற்றத்தி
னிடைநிகழ்ந்தவிராமாவதாரப்பேர்த்
தொடைநிரம்பியதோமறுமாக்கதை
சடையன்வெண்ணெய்நல்லூர்வயிற்றந்ததே. (கக)

சிறப்புப்பாயிரம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கக.

உ-வது, ஆற்றுப்படலம்.

ஆசலம்புரியைம்பொறிவாளியும்
காசலம்புமுலையவர்கண்ணெனும்
பூசலம்புநெறியின்புறஞ்செலாக்
கோசலம்புனையாற்றணிகூறுவாம். (க)

† நீறணிந்தகடவுணிறத்தவான்
ஆறணிந்துசென்றார்கலிமேய்ந்தகிற்
சேறணிந்தமுலைத்திருமங்கைதன்
வீறணிந்தவன்மேனியின்மீண்டவே. (உ)

பம்பிமேகம்பரந்ததுபானுவால்
‡ நம்பன்மாதுலன்வெம்மையைநண்ணினன்
அம்பிளுட்டுமென்றகன்குன்றின்மேல்
இம்பர்வாரியெழுந்ததுபோன்றதே. (ங)

புள்ளிமால்வரைபொன்னெனநோக்கிவான்
வெள்ளிவீழிடைவீழ்த்தெனத்தாரைகள்
§ உள்ளியுள்ளவெல்லாமுவந்தீயுமவ்
வள்ளியோரின்வழங்கினமேகமே. (ச)

மானநேர்ந்தறநோக்கிமனுநெறி
போனதண்குடைவேந்தன்புகழெனா

---

* நடையினின்றுயர் இராமாவதாரமெனவும், நாயகன்தோற்றத்தினிடை நிகழ்ந்த இராமாவதார மெனவுமொட்டுக.

† நீறணிந்த கடவுணிறத்த என்பது நீற்றினைப்புனைந்த கடவுள்நிறத்தையுடையனவாகிய மேகங்களை, நிறத்த வினையாலணையும் பெயர், நிறத்தவானெனக்கொண்டு வேறு விரிப்பாருமுளர். மேகங்கள் சிவனைப்போலப்போய் திருமாலைப்போலத்திரும்பின வென்பது கருத்து.

‡ நம்பன்மாதுலன்-சிவபெருமான் மாமனாகிய பருவதராசன். நம்பல் மாதுலன்-நம்புதற்குரியமாமன். § உள்ளியென்றது:இளமை, யாக்கை, செல்வமென்னுமிவை நிலையாமையுடையவென நினைத்தென்பதை.

ஞானமுன்னியநான்மறையாளர்கைத்
தானமென்னத்தழைத்ததுநீத்தமே. (ரு)

தலையுமாகமுந்தாளுந்தழீஇயதன்
நிலைநிலாதிறைநின்றதுபோலவே
மலையினுள்ளவெலாங்கொண்டுமண்டலால்
விலையின்மாதரையொத்ததவ்வெள்ளமே. (சு)

மணியும்பொன்னுமயிற்றழைப்பீலியும்
அணியுமானைவெண்கோடுமகிலுந்தன்
இணையிலாரமுமின்னகொண்டேகலான்
வணிகமாக்களையொத்ததவ்வாரியே. (எ)

பூநிரைத்துமென்றாதுபொருந்தியும்
தேன்வளாவியுஞ்செம்பொன்விராவியும்
ஆனைமாமதவாற்றொடளாவியும்
வானவில்லைநிகர்த்ததுவாரியே. (அ)

மலையெடுத்துமரங்கள்பறித்துமா
டிலைமுதற்பொருள்யாவையுமேந்தலான்
அலைகடற்றலையன்றணைவேண்டிய
நிலையுடைக்கவிநீத்தமந்நீத்தமே, (கூ)

ஈக்கள்வண்டொடுமொய்ப்பவரம்பிகந்
தூக்கமேமிகுந்துட்டெளிவின்றியே
* தேக்கெறிந்துவருதலிற்றீம்புனல்
வாக்குதேனுகர்மாக்களைமானுமே. (கo)

பணைமுகக்களியானைபன்மாக்களோ
டணிவகுத்தெனவீர்த்திரைத்தார்த்தலின்
மணியுடைக்கொடிதோன்றவந்தூன்றலாற்
புணரிமேற்பொரப்போவதுபோன்றதே. (கக)

இரவிதன்குலத்தெண்ணில்பல்வேந்தர்தம்
பரவுநல்லொழுக்கின்படிபூண்டது
சரயுவென்பதுதாய்முலையன்னதிவ்
வுரவுநீர்நிலத்தோங்குமுயிர்க்கெலாம். (கஉ)

வேறு.

கொடிச்சியரிடித்தசுண்ணங்குங்குமங்கோட்டமேலம்
நடுக்குறுசந்தஞ்சிந்தூரத்தொடுநரந்தநாகம்

---

* தேக்கெறிந்து என்பதனைத் தேக்கமரமெறிந்து எனவும், தேக்கெறிந் தெனவும் பொருள்கூறுக.

கடுக்கையார்வேங்கைகோங்குபச்சிலைகண்டில்வெண்ணெய்
அடுக்கலினடுத்ததீந்தேனகிலொடுநாறுமன்றே. (௧௩)

எயினர்வாழ்சீறூரப்புமாரியினிரியல்போக்கி
வயின்வயினெயிற்றிமாதர்வயிறலைத்தோடவோடி
அயின்முகக்கணையும்வில்லும்வாரிக்கொண்டலைக்குநீராற்
செயிர்தருங்கொற்றமன்னர்சேனையைமானுமன்றே. (௧௪)

செறிநறுந்தயிரும்பாலும்வெண்ணெயுஞ்சேர்ந்தநெய்யு
முறியொடுவாரியுண்டுகுருந்தொடுமருதமுந்தி
மறியுடையாயர்மாதர்வளைதுகில்வாருநீராற்
பொறிவரியரவினாடும்புனிதனும்போலுமன்றே. (௧௫)

கதவினைமுட்டிமள்ளர்கையெடுத்தார்ப்பவெய்தி
நுதலணியோடைபொங்கநுகர்வரிவண்டுகிண்டத்
ததைமணிசிந்தவுந்தித்தறியிறத்தடக்கைசாய்த்து
மதமழையானையென்னமருதஞ்சென்றடைந்ததன்றே. (௧௬)

முல்லையைக்குறிஞ்சியாக்கிமருதத்தைமுல்லையாக்கிப்
புல்லியநெய்தறன்னைப்பொருவருமருதமாக்கி
எல்லையிற்பொருள்களெல்லாமிடைதடுமாறுநீராற்
செல்லுறு * கதியிற்செல்லும்வினையெனச்சென்றதன்றே. (௧௭)

காத்தகான்மள்ளர்வெள்ளக்கலிப்பறைகறங்கக்கைபோய்ச்
சேர்த்தநீர்த்திவலைபொன்னுமுத்தொடுதிரையின்வீசி
நீத்தமாந்தலையவாகிநிமிர்ந்துபார்கிழியநீண்டு
[illegible]த்தகாலொன்றினொன்றுகுலமெனப்பிரிந்தவன்றே. (௧௮)

கல்லிடைப்பிறந்துபோந்துகடலிடைக்கலந்தநீத்தம்
எல்லையின்மறைகளாலுமியம்பரும்பொருளீதென்னத்
தொல்லையிலொன்றேயாகித்துறைதொறும்பரந்தசூழ்ச்சி
† பல்பெருஞ்சமயஞ்சொல்லும்பொருளும்போற்பரந்ததன்றே. (௧௯)

தாதுகுசோலைதோறுஞ்சண்பகக்காடுதோறும்
போதவிழ்பொய்கைதோறும்புதுமணற்றடங்கடோறும்
மாதவிவேலிப்பூகவனந்தொறும்வயல்கடோறும்
ஓதியவுடம்புதோறுமுயிரெனவுலாயதன்றே. (௨௦)

உ-வது, ஆற்றுப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௧.

* கதியென்றது பிறப்பினை; அது தேவகதி மனிதகதி விலங்கின்கதி நரககதி யென்பனவற்றை. உயிரெடுத்த கதியின்வழி வினைசேறலின் அதனையே யுவமைகூறினார்.

† பல் பெருஞ்சமயம் சொல்லும்பொருளும்போல் என்பதனைப் பல்பெருஞ்சமயஞ் சொல்லும்பொருள் போலுமென்றியைக்க. எவ்வகைச் சமயங்களும் துவிதம் அத்துவிதம் விசிட்டாத்துவிதமென்னு மூன்றனுளடங்கலின் பல்பெருஞ் சமயமென்றார்.

௨-வது, நாட்டுப்படலம்.

* வாங்கரும்பாதநான்கும்வகுத்தவான்மீகியென்பான்
தீங்கவிசெவிகளாரத்தேவரும்பருகச்செய்தான்
ஆங்கவன்புகழ்ந்தநாட்டையன்பெனுநறவமாந்தி
மூங்கையான்பேசலுற்றானென்னயான்மொழியலுற்றேன். (௧)

வரம்பெலாமுத்தந்தத்துமடையெலாம்பணிலமாநீர்க்
குரம்பெலாஞ்செம்பொன்மேதிக்குழியெலாங்கழுநீர்க்கொள்ளை
பரம்பெலாம்பவளஞ்சாலிப்பரப்பெலாமன்னம்பாங்கர்க்
கரம்பெலாஞ்செந்தேன்சந்தக்காவெலாங்களிவண்டீட்டம். (௨)

ஆறுபாயரவமள்ளாலைபாயமலையாலைச்
சாறுபாயோசைவேலைச்சங்குவாய்பொங்குமோதை
ஏறுபாய்தமரநீரிலெருமைபாய்துழனியின்ன
மாறுமாறாகித்தம்மின்மயங்குமாமருதவேலி. (௩)

தண்டலைமயில்களாடத்தாமரைவிளக்கந்தாங்கக்
கொண்டல்கண்முழவினேங்கக்குவளைகண்விழித்துநோக்கத்
தெண்டிரையெழினிகாட்டத்தேம்பிழிமகரயாழின்
வண்டுகளினிதுபாடமருதம்வீற்றிருக்குமாதோ. (௪)

தாமரைப்படுவவண்டுந்தகைவருந்திருவுந்தாண்டார்க்
காமுகர்ப்படுவமாதர்கண்களுங்காமனம்பும்
† மாமுகிற்படுவவாரிப்பவளமும்வயங்குமுத்தும்
‡ காமுதற்படுவமெய்யுநாமநூற்பொருளுமன்றே. (௫)

நீரிடையுறங்குஞ்சங்கநிழலிடையுறங்குமேதி
¶ தாரிடையுறங்கும்வண்டுதாமரையுறங்குஞ்செய்யாள்
தூரிடையுறங்குமாமைதுறையிடையுறங்குமிப்பி
போரிடையுறங்குமன்னம்பொழிலிடையுறங குந்தோகை. (௬)

படையுழவெழுந்தபொன்னும்பணிலங்களுயிர்த்தமுத்தும்
இடறியபரம்பிற்காந்துமினமணித்தொகையுநெல்லும்
மிடைபசுங்கதிருமீனுமென்றழைக்கரும்பும்வண்டுங்
கடைசியர்முகமும்போதுங்கண்மலர்ந்தொளிருமாதோ. (௭)

---

* எட்டெழுத்தானையவடிகள் நான்கமைந்துள்ளனவாக வகுத்தபெருமை தோன்ற 'வாங்கரும்பாத நான்கும்வகுத்த' வென்றார்.

† மா-கருமை. இதனை 'மைத்தழையாநின்ற மாமிடற்றம்பலவன். என்றதற்குப் பேராசிரியர் கூறலானுமறிக.

‡ முதல் எழுனுருபு. ஈரம்-அச்சம்; இவ்வுரிச்சொல் ஈறுதிரிந்துநின்றது; 'காமநீர்வையக்கண்' என்புழிப்பரிமேலழகர் கூறலானுமறிக. ¶ தார்-பூ.

தெள்விளிசிறியாழ்ப்பாணர்தேம்பிழிநறவமாந்தி
வள்விசிகருவிபம்பவயின்வயின்வழங்குபாடல்
வெள்ளிவெண்மாடத் தும்பர்வெயில்விரிபசும்பொற்பள்ளி
எள்ளருங்கருங்கட்டோகையின்றுயிலெழுப்புமன்றே. (அ)

ஆலைவாய்க்கரும்பின்றேனுமரிதலைப்பாளைத்தேனுஞ்
சோலைவாய்க்கனியின்றேனுந்தொடையிழியிறாலின்றேனும்
மாலைவாயுகுத்ததேனும்வரம்பிகந்தோடிவங்க
வேலைவாய்மடுப்பவுண்டுமீனெலாங்களிக்குமாதோ. (௯)

பண்கள்வாய்மிழற்றுமின்சொற்கடைசியர்பரந்துநீண்ட
கண்கைகான்முகம்வாயொக்குங்களையலாற்களையிலாமை
உண்கள்வார்கடைவாய்மள்ளர்களைகலாதுலாவிநிற்பார்
பெண்கள்பால்வைத்தநேயம்பிழைப்பரோசிறியோர்பெற்றால். (௧௦)

புதுப்புனல்குடையுமாதர்பூவொடுநாவிபூத்த
கதுப்புறுவெறியேநாறுங்கருங்கடற்றரங்கமென்றான்
மதுப்பொதிமழலைச்செவ்வாய்வாட்கடைக்கண்ணின்மைந்தர்
விதுப்புறநோக்குமன்னார்மிகுதியைவிளம்பலாமே. (௧௧)

வெண்டளக்கலவைச்சேறுங்குங்குமவிரைமென்சாந்துங்
குண்டலக்கோலமைந்தர்குடைந்தநீர்க்கொள்ளைச்சாற்றில்
தண்டலைப்பரப்புஞ்சாலிவேலியுந்தழீஇயவைப்பும்
வண்டலிட்டோடுமெண்ணுமதகரமொய்க்குமாதோ. (௧௨)

சேலுண்டவொண்கணாரிற்றிரிகின்றசெங்காலன்னம்
மாலுண்டநளினப்பள்ளிவளர்த்தியமழலைப்பிள்ளை
காலுண்டசேற்றுமேதிகன்றுள்ளிக்கனைப்பச்சோர்ந்த
பாலுண்டுதுயிலப்பச்சைத்தேரைதாராட்டும்பண்ணை. (௧௩)

குயிலினம்வதுவைசெய்யக்கொம்பிடைக்குனிக்குமஞ்ஞை
அயில்விழிமகளிராடுமரங்கினுக்கழகுசெய்யப்
பயில்சிறையரசவன்னம்பன்மலர்ப்பள்ளிநின்றும்
துயிலெழத்தும்பிகாலைச்செவ்வழிமுரல்வசோலை. (௧௪)

பொருந்தியமகளிரோடுவதுவையிற்பொருந்துவாரும்
பருந்தொடுநிழல்சென்றன்னவியலிசைப்பயன்றுய்ப்பாரும்
மருந்தினுமினியகேள்விசெவியுறமாந்துவாரும்
* விருந்தினர்முகங்கண்டன்னவிழாவணிவிரும்புவாரும். (௧௫)

---

* தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துள் முன்னைய இரண்டும் கட்புலனாகாரை நினைந்துசெய்வன வாகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்கீதலன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாதலின், 'விருந்தினர் முகங்கண்டன்ன' என்றார். இவ்வாறே பரிமேலழகர் கூறுவதுங்காண்க.

களிப்புறுமனமுங்கண்ணிற்சிவப்புறுசூட்டுங்காட்டி
உறுப்புறுபடையிற்றாக்கியுறுபகையின்றிச்சீறி
வெறுப்பிலகளிப்பின்வெம்போர்மதுகையவீரவாழ்க்கை
மறுப்படவாவிபேணுவாரணம்பொருத்துவாரும். (கசு)

எறுமைநாகீன்றசெங்கணேற்றையோடேற்றைசீற்றத்
தூருமிவையென்னத்தாக்கியூழுறநெருக்கியொன்றாய்
விரியிருளிரண்டுகூறாய்வெகுண்டனவனையநோக்கி
அரியினங்குஞ்சியார்ப்பமஞ்சுறவார்க்கின்றாரும். (கஎ)

முள்ளரைமுளரிவெள்ளிமுளையிறமுத்தும்பொன்னும்
தள்ளுறமணிகள்சிந்தச்சலஞ்சலம்புலம்பச்சாலில்
துள்ளிமீன்றுடிப்பவாமைதலைபுடைசுரிப்பத்தூம்பி
னுள்வராலொளிப்பமள்ளருழுபகடுரப்புவாரும். (கஅ)

முந்துமுக்கனியினானாமுதிரையின்முழுத்தநெய்யில்
செந்தயிர்க்கண்டங்கண்டமிடையிடைசெறிந்தசோற்றில்
தந்தமிலிருந்துதாமும்விருந்தொடுந்தமரினோடும்
அந்தணரமுதகுண்டியயில்வுறுமமலைத்தெங்கும். (ககூ)

முறையறிந்தவாவைநீக்கிமுனிவுழிமுனிந்துவெஃகும்
இறையறிந்துயிர்க்குநல்குமிசைகெழுவேந்தன்காக்கப்
பொறைதவிர்ந்துயிர்க்குந்தெய்வப்பூதலந்தன்னிற்பொன்னின்
நிறைபரஞ்சொரிந்துவங்கநெடுமுதுகாற்றுநெய்தல். (உ0)

எறிதருமரியின்சும்மையெடுத்துவானிட்டபோர்கள்
குறிகளும்போற்றிக்கொள்வார்கொன்றநெற்குவைகள்செய்வார்
வறியவர்க்குதவிமிக்கவிருந்துணமனையினுய்ப்பான்
நெறிகளும்புதையப்பண்டிநிரைத்துமண்ணெளியவூர்வார். (உக)

கதிர்படுவயலினுள்ளகடிகமழ்பொழிலினுள்ள
முதிர்பலமரத்தினுள்ளமுதிரைகள்புறவினுள்ள
பதிபடுகொடியினுள்ளபடிவளர்குழியினுள்ள
மதுவனமலரிற்கொள்ளும்வண்டெனமள்ளர்கொள்வார். (உஉ)

வேறு.

* பருவமங்கையர்பங்கயவாண்முகத்
துருவவுண்கணையொண்பெடையாமெனக்
கருதியன்பொடுகாமுற்றுவைகலும்
மருதவேலியின்வைகினவண்டரோ. (உங)

---

* மங்கைப் பருவத்தவரை நோக்கிப் பருவமங்கையர் என்றதென்க.

வேலைவென்றமுகத்தியர்வெம்முலை
ஆலைநின்றுமுனிந்திடுமங்கொர்பால்
பாலைதந்தமதுப்பருகிப்பரு
வாலைநின்றுமதர்க்குமருங்கெலாம். (உச)

ஈரநீர்படிந்திந்நிலத்தேசில
கார்களென்னவருங்கருமேதிகள்
ஊரினின்றகன்றுள்ளிடவுண்முலை
தாரைகொள்ளத்தழைப்பனசாலியே. (உரு)

முட்டிலட்டின்முழங்குறவாக்கிய
நெட்டுலைக்கழுநீர்நெடுநீத்தந்தான்
* பட்டமென்கமுகோங்கு † மடப்பைபோய்
நட்டசெந்நெலினூறுவளர்க்குமே. (உசு)

சூட்டுடைத்துணைத்தூநிறவாரணம்
தாட்டுணைக்குடையுந்தகைசான்மணி
மேட்டிமைப்பனமின்மினியாமெனக்
கூட்டினுய்க்குங் ‡ குரீஇக்குழாமரோ. (உஎ)

தோயும்வெண்டயிர்மத்தொலிதுள்ளவும்
§ ஆயவெள்வளைவாய்விட்டரற்றவும்
தேயுநுண்ணிடைசென்றுவணங்கவும்
ஆயமங்கையரங்கைவருந்துவார். (உஅ)

குற்றபாகு ¶ கொழிப்பவர்கோணெறி
கற்றிலாதகருங்கணுலைச்சியர்
முற்றிலாரமுகந்துதம்முன்றிலிற்
சிற்றில்கோலிச்சிதறியமுத்தமே. (உகூ)

துருவைமென்பிணையீன்றதுளக்கிலா
வரிமருப்பினவன்றலையேற்றைவான்
o உருமிடித்தெனத்தாக்குறுமொல்லொலி
வெருவிமால்வரைச்சூன்மழைமின்னுமே. (௩0)

---

* பட்டம்-குளங்கள். † படப்பை-மருதநிலச்சோலைகள். ‡ குரீ-தூக்கணங்குருவிகள். § அங்கைவருந்தலால் வளைவாய் விட்டரற்றலைவாய் விட்டுக்கதறவுமெனவும், இடைசென்று வணங்கலை இடைசென்று தாழவுமெனவுமுரைத்துக்கொள்க

¶ கொழிப்பவர் என்புழிக்கொழிப்பன என்பது சொல்லெச்சம்.

o ஆட்டின மொன்றோடொன்று தாக்குமொல்லொலி கேட்டுப்பயந்து சூன்மழை வாயங்காப்ப மின்னுக்கான்றலின் 'சூன்மழை மின்னுமே' என்றார். இதனைக் 'கருங்கொண் மூவாய் திறந்த மின்னுப்போற்றோன்றி' எனப் பிறருங் கூறலானுமுணர்க மால்வரை என்றார். 'மால்போலுங் குவடுகளையுடைய மலைஎனப்படுதலின். இதனை 'மால்வரை' யென்பதற்கு நச்சினார்க்கினியர் கூறியதனாலு முணர்க. இனிப்பெரிய மலையென்பது மொன்று-வரை-ஆகுபெயர்.

தினைச்சிலம்புவதீஞ்சொலிளங்கிளி
நனைச்சிலம்புவநாகிளவண்டொடும்
* புனைச்சிலம்புவபுள்ளினம்வள்ளியோர்
மனைச்சிலம்புவமங்கலவள்ளையே. (௩௧)

கன்றுடைப்பிடிநீக்கிக்களிற்றினம்
வன்றொடர்ப்படுக்கும்வனவாரிசூழ்
குன்றுடைக்குலமள்ளர்குழுக்குரல்
இன்றுணைக்களியன்னமிரிக்குமே. (௩௨)

வள்ளிகொள்பவர்கொள்வனமாமணி
|| துள்ளிகொள்வனதூங்கியமாங்கனி
புள்ளிகொள்வனபொன்விரிபுன்னைகள்
பள்ளிகொள்வனபங்கயத்தன்னமே. (௩௩)

‡ கொன்றைவேய்ங்குழற்கோவலர்முன்றிலிற்
கன்றுறக்குங்குரவைகடைசியர்
புன்றலைப்புனங்காப்புடைபோதரச்
சென்றிசைககுநுளைச்சியர்செல்வழி. (௩௪)

சேம்புகால்பொரச்செங்கழுநீர்க்குளத்
§ தூம்புகாலச்சுரிவளைமேய்வன
காம்புகால்பொரக்கண்ணகன்மால்வரைப்
பாம்புநான்றெனப்பாய்பசுந்தேறலே. (௩௫)

பெருந்தடங்கட்பிறைநுதலார்க்கெலாம்
பொருந்துசெல்வமுங்கல்வியும்பூத்தலால்
வருந்திவந்தவர்க்கீதலும்வைகலும்
விருந்துமன்றிவிளைவனயாவையே. (௩௬)

o பிறைமுகத்தலைப்பெட்பினிரும்புபோழ்
குறைகறித்திரள்குப்பைபருப்பொடு
நிறைவெண்முத்தினிறத்தரிசிக்குவை
உறைவகொட்பினவூட்டிடந்தோறெலாம். (௩௭)

கலஞ்சுரக்குநிதியங்கணக்கிலா
நிலஞ்சுரக்குநிறைவளநன்மணி

---

* புனலென்பது-புனையெனப் போலியாய் வந்தது.
|| துள்ளிஎன்பது-விரிக்கும் விழிவிரித்தல்.
‡ கொன்றைக்காயானும் வேயானுஞ்செய்தகுழல் 'இதனைக்' கொன்றையந்தீங்குழல் கேளாமோதோழி' எனப் பிறருங் கூறலானுமறிக.
§ அரிவளைமேய்வன பசுந்தேறலை என்றொட்டுக.
o பிறைமுகத்தலைப் பெட்பினிரும்பு கோடரி.

பிலஞ்சுரக்கும்பெறுதற்கரியதங்
குலஞ்சுரக்குமொழுக்கங்குடிக்கெலாம். (௫௮)

கூற்றமில்லையோர்குற்றமிலாமையாற்
சீற்றமில்லைதஞ்சிந்தையிற்செய்கையாற்
* ஆற்றனல்லறமல்லதிலாமையால்
ஏற்றமல்லதிழிதகவில்லையே. (௫௯)

நெறிகடந்துபரந்தனநீத்தமே
குறியழிந்தனகுங்குமத்தோள்களே
சிறியமங்கையர்தேயுமருங்குலே
வெறியவும்மவர்மென்மலர்க்கூந்தலே. (௬௦)

அகிலிடும்புகையட்டிலிடும்புகை
நகிலினாலைநறும்புகைநான்மறை
புகலும்வேள்வியிற்பூம்புகையோடளாய்
முகிலின்விம்மிமுழங்கினவெங்கணும். (௬௧)

வேறு.

இயல்புடைபெயர்வனமயின்மணியிழையின்
வெயில்புடைபெயர்வனமுலையவர்குழல்போற்
புயல்புடைபெயர்வனபொழிலவர்விழிபோற்
கயல்புடைபெயர்வனகடிசமழ்கழனி. (௬௨)

இடையிறமகளிர்களெறிபுனன்மறுகக்
குடைபவர்துவரிதழலர்வனகுமுதம்
‡ மடைபெயரனமெனமடநடையளகக்
கடைசியர்முகமெனமலர்வனகமலம். (௬௩)

|| விதியினைநகுவனவயில்விழிபிடியின்
கதியினைநகுவனவவர்நடைகமலப்
பொதியினைநகுவனபுணர்முலைகலைவாழ்
மதியினைநகுவனவனிதையர்வதனம். (௬௪

பகலினொடிகலுவபடர்மணிமடவார்
¶ நகிலினொடிகலுவநளிவளரிளநீர்
துகிலினொடிகலுவசுதைபுரைநுரைகார்
முகிலினொடிகலுவகடிமணமுரசும். (௬௫)

---

* ஆற்றனல்லற மல்லதிலாமையாலெனற்கு நல்லறமே ஆற்றல் அல்லதாகிய பாவமில்லாமையாலெனக்கொள்க. ‡ மடநடையிளகக்கடைசியர் என்பதற்கு இளநடையிளகுகின்ற அக்கடைசியரெனவிரிக்க. || விதியினை நகுவனவென்பதற்கு விதித்தற்றொழிலைச் சிரிப்பன என்பதன்றிப் பிரமசரிய வொழுக்கத்தைநோக்கிச் சிரிப்பனவென்று விரிக்கினுமமையும். ¶ நகிலம் நகில்என அம்முச்சாரியை குறைந்தது.

காரொடுநிகர்வனகடிபொழில்கழனிப்
போரொடுநிகர்வனபுணர்முலையணைசூழ்
நீரொடுநிகர்வனநிறைகடனிதிசால்
ஊரொடுநிகர்வனவிமையவருலகம். (௬௬)

தென்மலையல்லனநிரைவருதாளம்
சொன்மலையல்லனதொடுகடலமிர்தம்
நன்மலையல்லனநதிதருநிதியம்
பொன்மலையல்லனமணிபடுபுளினம். (௬௭)

பந்தினையிளையவர்பயிலிடமயிலூர்
கந்தனையனையவர்கலைதெரிகழகம்
சந்தனவனமலசண்பகவனமாம்
நந்தனவனமலநறைவிரிபுறவம். (௬௮)

கோகிலநவில்வனவிளையவர்குதலைப்
பாகியல்கிளவிகளவர்பயினடமே
கேகயநவில்வனகிளரிளவளையின்
நாகுகளுமிழ்வனநகைபுரைதாளம். (௬௯)

பழையர்தமனையனபழநறைநுகரும்
உழவர்தமனையனவுழுதொழில்புரியும்
மழவர்தமனையனமணவொலியிசையின்
கிழவர்தமனையனகிளைபயில்வளையாம். (௭௰)

கோதைகள்சொரிவனகுளிரிளநறவம்
பாதைகள்சொரிவனபருமணிகனகம்
ஊதைகள்சொரிவனவுறையுறுமமுதம்
காதைகள்சொரிவனசெவிநுகர்கவிகள். (௭௧)

வேறு.

இடங்கொள்சாயல்கண்டிளைஞர்சிந்தைபோல்
தடங்கொள்சோலைவாய்மலர்பெய்தாழ்குழல்
வடங்கொள்பூண்முலைமடந்தைமாரொடும்
தொடர்ந்துபோவனதோகைமஞ்ஞைகள். (௭௨)

வண்மையில்லையோர்வறுமையின்மையால்
திண்மையில்லைநேர்செறுநரின்மையால்
உண்மையில்லைபொய்யுரையிலாமையால்
* வெண்மையில்லைபல்கேள்விமேவலால். (௭௩)

* வெண்மை-வெளிற்றுத்தன்மை, அறியாமை.

எள்ளுமேனலுமிறுங்குஞ்சாமையும்
கொள்ளுங்கொள்ளையிற்கொணரும்பண்டியும்
அள்ளலோங்களத்தமுதின்பண்டியும்
தள்ளுநீர்மையிற்றலைமயங்குமே. (௩௪)

* உயருஞ்சார்விலாவுயிர்கள்செய்வினைப்
பெயரும்பல்கதிபிறக்குமாறுபோல்
அயிருந்தேனுமின்பாகுமாயலூர்த்
தயிரும்வேரியுந்தலைமயங்குமே. (௩௫)

கூறுபாடலுங்குழலின்பாடலும்
வேறுவேறுநின்றிசைக்கும்வீதிவாய்
ஆறுமாறுவந்தெதிர்ந்தவாமெனச்
† சாறும்வேள்வியுந்தலைமயங்குமே. (௩௬)

‡ மூக்கிற்றூக்குறுமூரிநந்துநேர்
தாக்கிற்றூக்குறும்பறையுந்தண்ணுமை
வீக்கிற்றூக்குறும்விளியுமள்ளர்தம்
வாக்கிற்றூக்குறுமொலியின்மாயுமே. (௩௭)

§ தாலியைம்படைதழுவுமார்பிடை
மாலைவாயமுதொழுகுமக்களைப்
பாலினூட்டுவார்செங்கைப்பங்கயம்
வால்நிலாவுறக்குவிவமானுமே. (௩௮)

பொற்பினின்றனபொலிவுபொய்யிலா
நிற்பினின்றனநீதிமாதரார்
அற்பினின்றனவறங்களன்னவர்
|| கற்பினின்றனகாலமாரியே. (௩௯)

சோலைமாநிலந்துருவியாவரே
வேலைகண்டுதாமீளவல்லவர்
சாலும்வார்புனற்சரயுவும் ० பல
காலினோடியுங்கண்டதில்லையே. (௪௦)

---

* இருவகைப்பற்றையுந் துறந்தலை 'உயருஞ்சார்விலாவுயிர்கள்' என்றார்.

† சாறு-திருவிழா. ‡ வலியநந்துமூக்கி னொலிக்குமொலியு மென்பதற்கு 'மூக்கிற்றூக்குமூரிநந்தும்'' என்றார் மூக்கினுலெலன்பாருமுளர். அதுபொரு ந்தாமையறிக.

§ தாலியைம்படை தழுவுமார்பினில் என்பதற்கு தாலியும் ஐம்படையும் ழுவப்பட்ட மார்பினிடத்து என்க. தாலியாகிய ஐம்படை என்பாருமுளர். ிருமகளே அவ்வடிவமாகலின் அவட்கு மெய்க்காப்பாளர்போற் பஞ்சாயுதங் ளைக்கூறவேண்டு மாகலானங்ஙனங்கூறல் பொருந்தாமையறிக. || மாதரார் ற்புடைமையான் மாரிநிற்பது என்பது ० பலகாலினோடியும் - பலகால்களா னோடியுமெனவும், பலமுறையினோடியுமெனவுஞ் சிலேடைப்பொருள் பயப்ப ங்காண்க.

வீடுசேரநீர்வேலைகான்மடுத்
தூடுபேரினுமுலைவிலாநலம்
கூடுகோசலமென்னுங்கோதிலா
நாடுகூறினகரங்கூறுவாம். (சுக)

ங-வது, நாட்டுப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஉ.

ச-வது, நகரப்படலம்.

செவ்வியமதுரஞ்சேர்ந்தநற்பொருளிற்சீரியகூரியதீஞ் * சொல்
வவ்வியகவிஞரனைவரும் || வடநூன்முனிவரும்புகழ்ந்ததுவரம்பில்
எவ்வுலகத்தோர்யாவருந்தவஞ்செய்தேறுவானுதரிக்கின்ற
அவ்வுலகத்தோரிழிவதற்கருத்திபுரிகின்றதயோத்திமாநகரம். (க)

நிலமகண்முகமோதிலகமோகண்ணேநிறைநெடுமங்கலநாணோ
இலகுபூண்முலைமேலாரமோவுயிரினிருக்கையோதிருமகட்கினிய
மலர்கொலோமாயோன்மார்பினன்மணிகள்வைத்தபொற்பெட்டியோவானோர்
உலகின்மேலுலகோவூழியினிறுதியுறையுளோயாதெனவுரைப்பாம். (உ)

உமைக்கொருபாகத்தொருவனு ‡ மிருவர்க்கொருதனிக்கொழுநனுமலர்மேல்
கமைப்பெருஞ்செல்வக்கடவுளுமுதலோர்கண்டிலாநகரதுகாண்பான்
அமைப்பருங்காதன்முன்பிடித்துந்தவந்தரஞ்சந்திராதித்தர்
இமைப்பிலர்திரிவரிதுவலாலதனுக்கியம்பலாமுவமைமற்றியாதோ. (ங)

அயின்முகக்குலிசத்தமரர்கோனகருமளகையுமென்றிவையயனார்
பயிலுறவுற்றபடிபெரும்பாலுமிப்பெருந்திருநகர்படைப்பான்
மயன்முதற்றெய்வத்தச்சருந்தத்தமனத்தொழிலுணினர்மறந்தார்
புயலுறுகுடுமிநெடுநிலைமாடத்திந்நகர்புகலுமாறெவனோ. (ச)

புண்ணியம்புரிந்தோர்புகுவதுதுறக்கமென்னுமிதருமறைப்பொருளே
மண்ணிடையாவரிராகவனன்றிமாதவமறத்தொடும்வளர்த்தார்
§ எண்ணருங்குணத்தினவனினிதிருந்திவ்வேழுலகாள்விடமென்றால்
‡ ஒண்ணுமோவதனின்வேறொருபோகமுறைவிடமுண்டெனவுரைத்தல்.

* சொல்வவ்விய கவிஞரனைவரும்-ஆழ்வார் தொடக்கமானவரை.

|| வடநூன்முனிவரும்-வான்மீகபகவான் தொடக்கமானவரை.

‡ இருவர்க்கொருதனிக்கொழுநன்-உபேந்திரனை, இவ்வாறுகூறாது வேறுகூறுவாருமுளர் § எண்ணருங்குணம்-எட்டாகிய அருங்குணமென்க, அவை தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என எண்ணுதற்கரியகுணமெனினுமாமென்க. ‡ ஒண்ணுமோ-பொருந்துமோ.

தங்குமாபொருளுந்தருமமுந்துணையாத்தம்பகைப்புலன்களைத்தவிர்க்கும்
பொங்குமாதவமுஞ்ஞானமுட்புணர்ந்தோர்யாவர்க்கும்புகலிடமான
செங்கண்மால்பிறந்தாண்டளப்பருங்காலந்திருவின்வீற்றிருந்தமைதெரிந்தால்
அங்கண்மாஞாலத்தங்நகரொக்கும்பொன்னகரமரர்நாட்டியாதோ. (௬)

அரைசெலாமவணவணியெலாமவணவரும்பெறன்மணியெலாமவண
புரைசைமால்களிறும்புரவியுந்தேரும்பூதலத்தியாவையுமவண
விரைசுவார்முனிவர்விண்ணவரியக்கர்விஞ்சையர்முதலினோரெவரும்
உரைசெய்வாராஞானபோதனுக்குவமைதானரிதரோவுளதோ. (௭)

நால்வகைச்சதுரம்விதிமுறைநாட்டிநனிதவவுயர்ந்தனபணிதோய்
மால்வரைக்குலத்தின்யானையுமில்லையாதலாலுவமைமற்றில்லை
நூல்வரைத்தொடாந்துபயத்தொடும்பழகிநுணங்கியநுவலருமுணர்வே
போல்வகைத்தல்லாலுயர்வினோடுயர்ந்ததென்னலாம்பொன்மதினிலையே. (௮)

மேவருமுணர்வுமுடிவிலாமையினால்வேதமுமொக்கும்விண்புகலால்
தேவருமொக்குமுனிவருமொக்குந்திண்பொறியடக்கியசெயலால்
காவலிற் * கலையூர்கன்னியையொக்குஞ்சூலத்தாற்காளியையொக்கும்
யாவையுமொக்கும்பெருமையாலெய்தற்கருமையாலீசனையொக்கும். (௯)

பஞ்சிவான்மதியையூட்டியவனையபடருகிர்பங்கயச்செங்கால் [ணைத்தோள்
வஞ்சிபோன்மருங்குல்குரும்பைபோற்கொங்கை வாங்குவேய் வைத்தமென்ப
அஞ்சொலார்பயிலுமயோத்திமாநகரினழகுடைத்தன்றெனவறிவான்
இஞ்சிவானோங்கியிமையவருலகங்காணியவெழுந்ததொத்துளதே. (௧௦)

கோலிடையுலகமளத்தலிற்பகைஞர்முடித்தலைகோடலின்மனுவின்
நூல்நெறிநடக்குஞ்செவ்வையின்யார்க்குநோக்கருங்காவலின்வலியின்
வேலொடுவாள்விற்பயிற்றலின்வெய்யசூழ்ச்சியின்வெலற்கருவலத்திற்
சால்புடையுயர்விற்சக்கரநடத்துந்தன்மையிற்றலைவரொத்துளதே. (௧௧)

சினத்தயில்கொலைவாள்சிலைமழுத்தண்டுசக்கரந்தோமரமுலக்கை
கனத்திடையுருமின்வெருவருங்கவண்கல்லென்றிவைகணிப்பிலகொதுகின்
இனத்தையுமுவணத்திறையையுமியங்குங்காலையுமிதமலநினைவார்
மனத்தையுமெறியும்பொறியுளவென்றான்மற்றினியுணர்த்துவதெவனோ. (௧௨)

பூணினும்புகழேயமையுமென்றினையபொற்பினினுயிர்நனிபுரக்கும்
யாணரொண்டிசைக்குமிருளறவிமைக்குமிரவிதன்குலமுதனிருபர்
சேனையுங்கடந்துதிசையையுங்கடந்துதிகிரியுஞ்செந்தனிக்கோலும்
‡ ஆணையுங்கடக்குமாயினுநகருக்கணியெனவியற்றியதன்றே. (௧௩

* கலையூர்கன்னி- துர்க்கை
‡ ஆணை பாதசச்சிலைதவு, வட்டம், கண்ணன் என்றாற்போல

அன்னமாமதிலுங்காழிமால்வரையையலைகடல்சூழ்ந்தனவகழி
பொன்விலைமகளிர்மனமெனக்கீழ்போய்ப்புன்கவியெனத்தெளிவின்றிக்
கன்னியரல்குற்றடமெனயார்க்கும்படிவருங்காப்பினதாகி
நன்னெறியிலக்கும்பொறியெனவெறியுங்காத்ததுநவிலலுற்றதுநாம். (கச)

வேறு.

ஏகுகின்றதங்கணங்களோடுமெல்லைகாண்கிலா
நாகமொன்றகன்கிடங்கைநாமவேலையாமெனு
மேகமொண்டுகொண்டெழுந்துவிண்டொடர்ந்தகுன்றமென்
றூகமொய்ந்துநின்றுதாரையம்மதிற்கண்வீசுமே. (கரு)

அந்தமாமதிற்புறத்தகத்தெழுந்தலர்ந்தநீள்
கந்தநாறுபங்கயத்தகானமானமாதரார்
முந்துவாண்முகங்களுக்குடைந்துபோனமொய்ம்பெலாம்
வந்துபோர்மலைக்கமாமதில்வலைத்தன்மானுமே. (கசு)

சூழ்ந்த * நாஞ்சில்சூழ்ந்தவாரைசுற்றுமுற்றுபாரெலாம்
போழ்ந்தமாகிடங்கிடைக்கிடந்துபொங்கிடங்கர்மா
தாழ்ந்தவங்கவாரியிற்றடுப்பொணாமதத்தினால்
ஆழ்ந்தயானைமீதெழுந்தெழுந்துகின்றபோலுமே. (கஎ)

ஈரும்வாளின்வால்விதிர்த்தெயிற்றிளம்பிறைக்குலம்
பேரமின்னிவாய்விரித்தெதிர்ந்தகட்பிறவகுதீ
சோரவொன்றையொன்றுமுன்றொடர்ந்துசீறிடங்கர்மா
போரில்வந்துசீறுகின்றபோரரக்கர்போலுமே (கஅ)

ஆளுமன்னம்வெண்குடைக்குலங்களாவருங்கரா
கோளெலாமுலாவுகின்றகுன்றமன்னயானையாத்
தாளுலாவுபங்கயத்தரங்கமுந்துரங்கமா
வாளும்வேலுமீனமாகமன்னர்சேனைமானுமே. (ககூ)

விளிம்புதெற்றிமுற்றுவித்துவெள்ளிகட்டியுள்ளுறப்
பளிங்குபொற்றலத்தகட்டடுத்துறப்படுத்தலின்
தளிர்ந்தகற்றலத்தொடச்சலத்தினைத்தனித்துறத்
தெளிந்துணர்த்துகிற்றுமென்றதேவராலுமாவதே. (உ0)

அன்னநீரகன்கிடங்குசூழ்கிடந்தவாழியைத்
துன்னிவேறுசூழ்கிடந்ததுங்குவீங்கிருட்பிழம்
பென்னலாமிறும்புசூழ்கிடந்தசோலையெண்ணிலப்
பொன்னின்மாமதிட்குடுத்தநீலவாடைபோலுமே. (உக)

* நாஞ்சில் மதிலுறுப்பு.

எல்லெனின்றவென்றியானையென்னநின்றமுன்னமால்
ஒல்லையும்பர்நாடளந்ததாளின்மீதுயர்ந்தவால்
மல்லன்ஞாலம்யாவுநீதிமாறுருவழக்கினால்
நல்லவாறுசொல்லும்வேதநான்குமன்னவாயிலே. (உஉ)

தாவில்பொற்றலத்தினற்றவத்தினோர்கடங்குநாட்
பூவுயிர்த்தகற்பகப்பொதும்பர்புக்கொதுங்குமால்
ஆவியொத்தவன்புசேவல்கூவவந்தணைந்திடா
ஓவியப்புறாவின்மாடிருக்கவூடுபேடையே. (உ௩)

கல்லடித்தடுக்கிவாய்பளிங்கரிந்துகட்டிமீ
எல்விடப்பசும்பொன்வைத்திலங்குபன்மணிக்குலம்
வில்விடக்குயிற்றிவாள்விரிக்கும்வெள்ளிமாமரம்
புல்விடக்கிடத்திவச்சிரத்தகால்பொருத்தியே. (உ௪)

மரகதத்திலங்குபோதிகைத்தலத்துவச்சிரம்
புரைதபுத்தடுக்கிமீதுபொன்குயிற்றிமின்குலா
நிரைமணிக்குலத்தினொளிநீள்வகுத்தவோளிமேல்
விரவுகைதலத்திலுய்த்தமேதகத்தின்மீதரோ. (உ௫)

ஏழ் * பொழிற்குமேழ்நிலத்தலஞ்சமைத்தநென்னநூல்
ஊழுறக்குவித்தமைத்தவும்பர்செம்பொன்வேய்ந்துமீச்
சூழ்சுடர்ச்சிரத்துநண்மணித்தசும்புதோன்றலால்
வாழ்நிலக்குலக்கொழுந்தைமௌலிசூட்டியன்னவே. (உ௬)

வேறு.

திங்களுங்கரிதெனவெண்மைதீற்றிய
சங்கவெண்சுதையுடைத்தவளமாளிகை
வெங்கடுங்கால்பொரமேக்குநோக்கிய
பொங்கிரும்பாற்கடற்றரங்கம்போலுமே. (உ௭)

புள்ளியம்புறவிறைபொருந்துமாளிகை
தள்ளருந்தமனியத்தகடுவேய்ந்தன
எள்ளருங்கதிரவனிளவெயிற்குழாம்
வெள்ளியங்கிரியிசைவிரிந்தபோலுமே. (உ௮)

வயிரநற்கான்மிசைமரகதத்துலாம்
செயிரறப்போதிகைகிடத்திச்சித்திரம்
உயிர்பெறக்குயிற்றியவும்பர்நாட்டவர்
அயிருறவிமைப்பனவளவில்கோடியே. (உ௯)

* பொழில் - உலகம்.

சந்திரகாந்தத்தின்றலத்தசந்தனப்
பந்திசெய்தூணின்மேற்பவளப்போதிகைச்
செந்தனிமணித்துலாஞ்செறிந்ததிண்சுவர்
இந்திரநீலத்தவெண்ணில்கோடியே. (௧௦)

பாடகக்காலடிபதுமத்தொப்பன
சேடரைத்தழீஇயனசெய்யவாயன
காடகத்தொழிலனநடுவுதுய்யன
ஆடகத்தோற்றத்தவளவிலாதன. (௧௧)

புக்கவர்கண்ணிணைபொருந்துறுதொளி
தொக்குடன்றயங்கிவிண்ணவரிற்றோன்றலால்
இக்குறநினைப்பினிற்செல்லுந்தெய்வவீ
டொக்கின்றிமைப்பன * வும்பர்நாட்டினும். (௧௨)

அணியிழைமகளிருமலங்கல்வீரரும்
தணிவனவறநெறிதணிவிலாதன
மணியினும்பொன்னினும்வனைந்தவல்லது
பணிபிறிதியன்றனபாக்குமில்லையே. (௧௩)

வானுறநிமிர்ந்தனவரம்பில்செல்வத்தோர்
தானுயர்புகழெனத்தயங்குசோதிய
ஊனமிலறநெறியுற்றவெண்ணிலாக்
கோனிகர்குடிகடங்கொள்ளைசான்றன. (௧௪)

அருவியிற்றுயந்துமுத்தலங்குசாமத்த
விரிமுகிற்குலமெனக்கொடிவிராயின
பருமணிக்குவையன † பசும்பொற்கோடிய
பொருமயிற்கணத்தனமலையும்போன்றன. (௧௫)

அகிலிடுகொழும்புகையளாய்மயங்கின
முகிலொடுவேற்றுமைதெரிகலாமுழுத்
துகிலொடுநெடுங்கொடிச்சூலமின்னுவ
பகலிடுமின்னனிப்பரப்புப்போன்றவே. (௧௬)

துடியிடைப்பணைமுலைத்தோகையன்னவர்
அடியிணைச்சிலம்புபூண்டாற்றுமாளிகைக்
கொடியிடைத்தாளவெண்கோவைசூழ்ந்தன
கடியுடைக்கற்பகக்கான்றமாலையே. (௧௭)

---

* உம்பர்நாட்டினுமென்புழி உம்பர்கள் நிச்சயிக்கினுமென்றும், உம்பருலகைப்பார்க்கினுமென்று முரைப்பினுமமையும்.

† பசும்பொன்-மாற்றுயர்ந்தபொன்.

காண்வருநெடுவரைக்கதலிக்கானம்போல்
கோணியிர்பதாகையின்குழாந்தழைத்தன
வாணனிமழுங்கிடமடங்கிவைகலும்
சேண்மதிதேய்வதக்கொடிகடேய்க்கவே. (௫௮)

பொன்றிணிமண்டபமல்லபூத்தொடர்
மன்றுகளல்லனமாடமாளிகை
குன்றுகளல்லனமணிசெய்குட்டிம
முன்றில்களல்லனமுத்தின்பந்தரே. (௫௯)

மின்னெனவிளக்கெனவெயிற்பிழம்பெனத்
துன்னியதமனியத்தொழிறழைத்தவக்
கன்னிநன்னகர்நிழல்கதுவாலரோ
பொன்னுலகாயதப்புலவர்வானமே. (௬௦)

எழுமிடத்தகன்றிடையொன்றியெற்படு
பொழுதிடைப்போதலிற்புரிசைப்பொன்மதில்
அழன்மணிதிருத்தியவயோத்தியாளுடை
நிழலெனப்பொலியுமானேமிவான்சுடர். (௬௧)

ஆய்ந்தமேகலையவரம்பொன்மாளிகை
வேய்ந்தகாரகிற்புகையுண்டமேகம்போய்த்
தோய்ந்தமாகடனறுந்தூபநாறுமேல்
பாய்ந்ததாரையினிலைபகரல்வேண்டுமோ. (௬௨)

* குழலிசைமடந்தையர்குதலைக்கோதையர்
மழலையங்குழலிசைமகரயாழிசை
எழிலிசைமடந்தையரின்சொலின்னிசை
பழையர்தஞ்சேரியிற்பொருநர்பாட்டிசை. (௬௩)

கண்ணிடைக்கனல்சொரிகளிறுகால்கொடு
மண்ணிடைவெட்டுவவேட்குமைந்தர்கள்
பண்ணைகள்பயிலிடங்குழிபடைப்பன
சுண்ணமக்குழிகளைத்தொடர்ந்துதூர்ப்பன. (௬௪)

பந்துகண்மடைந்தையர்பயிற்றுவாரிடை
சிந்துவமுத்தினமவைதிரட்டுவார்
அந்தமில்சிலதிய † ராற்றகுப்பைகள்
சந்திரனொளிகெடத்தழைப்பதண்ணிலா. (௬௫)

---

* குழலிசைமடந்தையர் -, மழலையங்குழலிசை எழிலிசைமடந்தையரின் சொலின்னிசையெனவும், குதலையங்கோதையர் மகரயாழிசைபழையர்தஞ் சேரியிற் பொருநர் பாட்டிசையெனவும் நிரனிறையாகவைத்துப் பொருள் கொள்க.

† ஆற்றஎன்பதில்-இன் இடைநிலை தொகுத்தல்பெற்றது.

அரங்கிடைமடந்தையராடுவாரவர்
கருங்கடைக்கண்ணயில்காமர்நெஞ்சினை
உருங்குவமற்றவருயிர்களன்னவர்
மருங்குல்போற்றேய்வனவளர்வதாசையே (௩௬)

பொழிவனசோலைகள்புதியதேன்சில
விழைவனதென்றலுமீறுமெல்லென
நுழைவனவன்னவைநுழையநோவொடு
குழைவனபிரிந்தவர்கொதிக்குங்கொங்கையே. (௩௭)

இறங்குவமகரயாழெடுத்தவின்னிசை
நிறங்கிளர்பாடலாளிமிர்வவவ்வழி
கறங்குவவள்விசிகருவிகண்முகிழ்த்
துறங்குவமகளிரோடோதுங்கிள்ளையே. (௩௮)

குதைவரிச்சிலைநுதற்கொவ்வைவாய்ச்சியர்
பதயுகத்தொழில்கொடுபழிப்பிலாதன
ததைமலர்த்தாமரையன்னதாளினல்
உதைபடச்சிவப்பனவுரவுத்தோள்களே. (௩௯)

பொழுதுணர்வரியவப்பொருவின்மாநகர்த்
தொழுதகைமடந்தையர்சுடர்விளக்கெனப்
பழுதருமேனியைப்பார்க்குமாசைகொல்
எழுதுசித்திரங்களுமிமைப்பிலாதவே. (௪௦)

தணிமலர்த்திருமகடயங்குமாளிகை
இணரொளிபரப்பிநின்றிருடுரப்பன
திணிசுடர்நெய்யுடைத்தீவிளக்கமோ
மணிவிளக்கல்லனமகளிர்மேனியே (௪௧)

பதங்களிற்றண்ணுமைபாணிபண்ணுற
விதங்களின்விதிமுறைசதிமிதிப்பவர்
மதங்கியராச்சதிவகுத்துக்காட்டுவ
சதங்கைகளல்லனபுரவித்தார்களே. (௪௨)

முளைப்பனமுறுவலம்முறுவல்வெந்துயர்
விளைப்பனவன்றியுமெலிந்துநாடொறும்
இளைப்பனநுண்ணிடையிளைப்பமென்முலை
திளைப்பனமுத்தொடுசெம்பொனாரமே. (௪௩)

இடையிடையெங்கணுங்களியருந்தன
நடையிளவன்னங்கணளினநீர்க்கயல்

பெடையிளவண்டுகள்பிரசமாந்திடுங்
கடகரியல்லனமகளிர்கண்களே. (ருச)

தழல்விழியாளியுந்துணையுந்தாழ்வரை
முழைவிழைகிரிகிகர்களிற்றின்மும்மத
மழைவிழும்விழுந்தொறுமண்ணுங்கீழுறக்
குழைவிழு * மவில்விழுங்கொடித்திண்டேர்களே. (ருரு)

ஆடுவார்புரவியின்குரத்தையார்ப்பன
சூடுவாரிகழ்ந்தவத்தொங்கன்மாலைகள்
ஓடுவாரிழுக்குவவூடலூடுறக்
கூடுவார்வனமுலைகொழித்தசாந்தமே. (ருசு)

இளைப்பருங்குரங்களாலிவுளிபாரினைக்
கிளைப்பனவவ்வழிகிளர்ந்ததூளியின்
ஒளிப்பனமணியவையொளிரமீதுதேன்
துளிப்பனகுமரர்தந்தோளின்மாலையே. (ருஎ)

விலக்கருங்கரிமதம்வேங்கைநாறுவ
குலக்கொடிமாதர்வாய்குமுதநாறுவ
† கலக்கடைகணிப்பருங்கதிர்கணாறுவ
மலர்க்கடிநாறுவமகளிர்கூந்தலே. (ருஅ)

‡ கோவையிந்நகரொடெண்குறிக்கலாதவத்
தேவர்தந்நகரியைச்செப்புகின்றதென்
யாவையும்வழங்கிடத்திகலியிந்நகர்
ஆணவங்கண்டபினளகைதோற்றதே. (ருகூ)

அதிர்கழலொலிப்பனவயிலிமைப்பன
கதிர்மணியணிவெயில்கால்வமான்மதம்
முதிர்வுறக்கமழ்வனமுத்தமின்னுவ
மதுகரமிசைப்பனமைந்தரீட்டமே. (சு0)

வளையொலிவயிரொலிமகரவீணையின்
கிளையொலிமுழவொலிகின்னரத்தொலி

---

* அவற்றில் என்பது அவில்எனச்சாரியையுள்வழி அற்றுச்சாரியை தவிர்ந்துநின்றது, இவ்வாறு பலவின்படர்க்கை, பலவினீட்டமெனவருத லிற்காண்க. இதற்குவேறுகூறுவாருமுளர்.

† கலங்கடை-கலக்கடை என வலிக்கும் வழிவலித்தல்.

‡ கோவையிந்நகரொடெண் குறிக்கலாத என்பது எழுநகரமென்னும் கொவையினின்ற இந்நகரத்தொடு எண்ணிக்கூறாத எனக்கொள்க, இவ்வாறு கூறுதுகோ இந்நகரரெனவும் ஐசாரியையெனவுங்கொண்டு கூறுவாருமுளர். அவர் எழுநகரத்தொடிதனையுமொன்றெனக்கொள்ளும் பெற்றிமையறியார்போலுமெனக்கடாவியொழிக.

தொளையொலிபல்லியந்துவைக்குஞ்சும்மையின்
விளையொலிகடலொலிமெலியவிம்முமே. (சுக)

மன்னவர்தருதிறையளக்குமண்டபம்
அன்னமென்னடையவராடுமண்டபம்
உன்னருமருமறையோதுமண்டபம்
பன்னருங் * கலைதெரி † பட்டிமண்டபம். (சுஉ)

இரவியிற்சுடர்மணியிமைக்குந்தோரணத்
தெருவினிற்சிறியனதிசைகள்சேணிளங்
கருவியிற்பெரியனவானைத்தானங்கள்
பரவையிற்பெரியனபுரவிப்பந்தியே. (சுங)

‡ சூளிகைமழைமுகில்தொடக்குந்தோரணை
§ மாளிகைமலர்வனமகளிர்வாண்முகம்
வாளிகளன்னவைமலர்வமற்றவை
ஆளிகளன்னவர்நிறத்திறுழ்பவே. (சுச)

மன்னவர்கழலொடுமாறுகொள்வன
பொன்னணித்தேரொலிபுரவித்தாரொலி
இன்னகையவர்சிலம்பேங்கவேங்குவ
கன்னியர்குடைதுறைக்கமலவன்னமே. (சுரு)

ஊடவுங்கூடவுமுயிரினின்னிசை
பாடவும்விறலியர்பாடல்கேட்கவும்
ஆடவுமகன்புனலாடியம்மலர்
சூடவும்பொழுதுபோஞ்சிலர்க்கத்தொன்னகர். (சுசு)

முழங்குதிண்கடகரிமுன்பிணூரவும்
எழுங்குரத்திவுளியோடிரதமேறவும்
பழங்கணோடிரந்தவர்பரிவுதீர்தர
வழங்கவும்பொழுதுபோஞ்சிலர்க்கம்மாநகர். (சுஎ)

கரியொடுகரியெதிர்பொருத்திக்கைப்படை
வரிசிலைமுதலியவழங்கிவாளுளைப்
புரவியிற்பொருவில் ○ செண்டாடிப்போர்க்கலை
தெரிதலிற்பொழுதுபோஞ்சிலர்க்கச்சேணகர். (சுஅ)

---

* கலைகளாவன-வியாகரணம்,போர்நூல், கணிதநூல்,மனுநூல் இதிகாசம்முதலியவை. † பட்டிமண்டபம்-கல்விதெரியுமண்டபம், இதனைப் 'பட்டிமண்டபமேற்றினை, எனப்பிறரும் கூறுதல் காண்க.

‡ சூளிகை-சிகரம். § பெண்கள் முகங்களை மாளிகைமலர்வன எனவும், அன்னவைவாளிகளை மலர்வன சிங்கவேறு போல்வார்மார்பிற்றைப் பனவெனவும் பொருளமைத்துக்கொள்க. வாளிகள்கண்களுக்குருவகம்.

○ செண்டாடி என்றது வையாளிவீதியில் விளையாடியென்க.

நந்தனவனத்தலர்கொய்துநவ்விபோல்
வந்திளையவரொடுவாவியாடிவாய்ச்
செந்துவரழிதரத்தேறன்மாந்திச்சூ
துந்தலிற்பொழுதுபோஞ்சிலர்க்கவ்வொண்ணகர் (சுக)

வேறு.

நாளுவிதமாநனிமாதிரவீதியோடி
மீனூறுவேலைப்புனல்வெண்முகிலுண்ணுமாப்போல்
ஆனூதமாடத்திடையாடுகொடிக்கண்மீப்போய்
* வானூறுநண்ணிப்புனல்வற்றிடநக்குமன்றே. (எ0)

† வன்றோரணங்கள்புணர்வாயிலும்வானினும்பர்
சென்றோங்கிமேலோரிடமில்லெனச்செம்பொனிஞ்சி
குன்றோங்குதோளார்குணங்கூட்டிசைக்குப்பையென்ன
ஒன்றோடிரண்டுமுயர்ந்தோங்கினவும்பர்நாண. (எக)

காடும்புனமுங்கடலன்னகிடங்குமாதர்
ஆடுங்குளனும்மருவிச்சுனைக்குன்றமும்பர்
வீடும்விரவும்மணிப்பந்தரும் ‡ வீணைவண்டு
பாடும்பொழிலும்மலர்ப்பல்லவப்பள்ளிமன்றே. (எஉ)

தெள்வார்மழையுந்திரையாழியுமுட்காளும்
வள்வார்முரசம்மதிர்மாநகர்வாழுமாக்கள்
கள்வாரிலாமைப்பொருள்காவலுமில்லையாதுங்
கொள்வாரிலாமைக்கொடுப்பார்களுமில்லைமாதோ. (எந)

கல்லாதுநிற்பார்பிறரின்மையிற்கல்விமுற்ற
வல்லாருமில்லையவைவல்லரல்லாருமில்லை
எல்லாருமெல்லாப்பெருஞ்செல்வமுமெய்தலாலே
இல்லாருமில்லையுடையார்களுமில்லைமாதோ. (எச)

§ ஏகம்முதற்கல்விமுளைத்தெழுந்தெண்ணில்கேள்வி
ஆகம்முதற்றிண்பணைபோக்கியருந்தவத்தின்
சாகந்தழைத்தன்பரும்பித்தருமம்மலர்ந்து
போகங்கனியொன்றுபழுத்ததுபோலுமன்றே. (எரு)

ச-வது நகரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். கசஎ.

---

* வானூறு-ஆகாயகங்கை. †தோரணவாயிலு மதிலும் தோளார் இசைக்குப்பையென்னு மவ்வொன்றோடு கோபுரமுமதிலுந் தேவர் நாணமிக வோங்கினவென்றுரைத்துக் கொள்க. ‡ வீணைவண்டு-வீணைபோல வண்டென்றியைக்க § கல்வியாகிய ஒரு முதல் முளைத்து வேற்போந்து எண்ணிறந்த கேள்வியாகிய அம்முதன்மையும் வன்மையுமுடைய கவடுகளைப் போக்கி அருந்தவமாகிய இலைகள் தழைத்து அன்பரும் பித்தருமமாகிய மலர்மலர்ந்து போகமாகியகனியொன்று பழுத்ததுபோலுமெனக்கொள்க. அன்பினை மலராகக் கூறுமை ஏகதேசவுருவகம்.

ரு-வது. அரசியற்படலம்.

அம்மாணகருக்கரசன்னரசர்க்கரசன்
செம்மாண்டனிக்கோலுலகேழினுஞ்செல்லநின்றான்
இம்மாண்கதைக்கோரிறையாயவிராமனென்னும்
மொய்ம்மாண்கழலோற்றருநல்லறமூர்த்தியன்னான். (௧)

ஆதிம்மதியும்மருளும்மறனும்மமைவும்
* ஏதின்மிடல்வீரமுமீகையுமெண்ணில்யாவும்
நீதிந்நிலையும்மிவைநேமியினோர்க்குநின்ற
பாதிம்முழுதும்மிவற்கேபணிகேட்பமன்னோ. (௨)

† மொய்யார்கலிசூழ்முதுபாரின்முகந்துதானக்
கய்யார்புனலானனையாதனகையுமில்லை
மொய்யாயவேதத்துறைவேந்தருக்கேய்ந்தயாரும்
செய்யாதயாகமிவன்செய்துமறந்தமாதோ. (௩)

தாயொக்குமன்பிற்றவமொக்குநலம்பயப்பின்
சேயொக்குமுன்னின்றொருசெல்கதியுய்க்குநீரால்
நோயொக்குமென்னின்மருந்தொக்குநுணங்குகேள்வி
ஆயப்புகுங்காலறிவொக்குமெவர்க்குமன்னான். (௪)

ஈய்ந்தேகடந்தானிரப்போர்கடலெண்ணினுண்ணூல்
ஆய்ந்தேகடந்தானறிவென்னுமளக்கர்வாளால்
காய்ந்தேகடந்தான்பகைவேலைகருத்துமுற்றத்
தோய்ந்தேகடந்தான்றிருவிற்றொடர்போகபௌவம். (௫)

வேறு.

‡ வெள்ளமும்பறவையும்விலங்கும்வேசியர்
உள்ளமுமொருவழியோடநின்றவன்
தள்ளரும்பெரும்புகழ்த்தயரதப்பெயர்
வள்ளல்வள்ளுறையயின்மன்னர்மன்னனே. (௬)

¶ நேமிமால்வரைமதிலாகநீள்புறப்
பாவமாகடல்கிடங்காகப்பன்மணி

---

* ஏதமென்றது-கடைகுறைந்து நின்றது. † மொய்-வலிமை, ‡மிக்க மழையும் பெயலின்மையு மின்மையான் வெள்ளமுமொரு வழியோடவெனவும்; பறவையும் விலங்கும் தத்தமக்குவேண்டு முணவுந் தாஞ்சென்றுழிப் பெறுதலின் அவையொருவழியோட வெனவும், தாமடைந்த தலைவனையன்றிப் பிறரெவ்வளவு நிதியமீட்டினும் விழையாமையின் வேசியருள்ளமு மொருவழியோட வெனவுங்கொள்க. மிக்கமழையை அதிவிருட்டியெனவும், பெயலின்மையை அனாவிருட்டி யெனவுங்கூறுவர் வடநூலார். ¶ நேமிமால்வரையே மதிலாகவும், கடலே யகழியாகவும், மலையே மாளிகையாகவும் அரசனுக்கிவ்வுலகம் அயோத்திபோலுமென்றியைக்க

வாமமாளிகைமலையாகமன்னற்குப்
பூமியுமயோத்திமாநகரம்போலுமே. (எ)

* ஆவரும்வன்மைநேரறிந்துநீட்டலால்
மேவருங்கையடைவேலுந்தேயுமால்
கோவுடைநெடுமணிமகுடகோடியால்
சேவடியடைந்தபொற்கழலுந்தேயுமால். (அ)

மண்ணிடையுயிர்தொறும்வளர்ந்துதேய்வின்றி
தண்ணிழல்பரப்பவுமிருளைத்தள்ளவும்
அண்ணறன்குடைமதியமையுமாதலான்
விண்ணிடைமதியினைமிகையிதென்னவே. (கூ)

வயிரவான்பூணணிமடங்கன்மொய்ம்பினன்
உயிரெலாந்தன்னுயிரொப்பவோம்பலாற்
செயிரிலாவுலகினிற் † சென்றுநின்றுவாழ்
உயிரெலாமுறைறவதோருடம்புமாயினன். (க0)

குன்றெனவுயரியகுவவுத்தோளினன்
வென்றியந்திகிரிவெம்பரிதியாமெனை
ஒன்றெனவுலகிடையுலாவிமீமிசை
நின்றுநின்றுயிர்தொறுநெடிதுகாக்குமே. (கக)

எய்யெனவெழுபகையெங்குமின்மையான்
மொய்பொருதினவுறுமுழவுத்தோளினன்
வய்யகமுழுவதும்வறிஞரேம்புமோர்
செய்யெனக்காத்தினிதரசுசெய்கின்றான். (கஉ.)

ரு-வது. அரசியற்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-களக.

* ஆவர் வன்மையுநேரறிந்து நீட்டலால் என உம்மையை வன்மையினிடத்திற்கூட்டுக. யாவருமென்றது மரீஇயது.

† சென்று நின்று வாழுயிரெலாம்-இயங்குதிணைநிலைத்திணைகள்.

௯-வது, திருவவதாரப்படலம்.

ஆயவனொருபகவயனையேங்கர்
தூயமாமுனிவரற்றொழுதுதொல்குலத்
தாயருந்தந்தையுந்தறமுமன்பினால்
மேயவான்கடவுளும்பிறவும்வேறுநீ. (௧)

எங்குலத்தலைவர்களிரவிதன்னினும்
தங்குலம்விளங்குறத்தரணிதாங்கினார்
மங்குநரில்லெனவரம்பில்வையகம்
இங்குனதருளினாலினிதினோம்பினேன். (௨)

அறுபதினாயிரமாண்டுமாண்டுற
உறுபகையொடுக்கியிவ்வுலகையோம்பினேன்
பிறிதொருகுறையிலையெற்பின்வையகம்
மற்குறுமென்பதோர்மறுக்கமுண்டரோ. (௩)

அருந்தவமுனிவருமந்தணாளரும்
வருந்துதலின்றியேவாழ்வின்வைகினார்
இருந்துயருழக்குநரெற்பினென்பதோர்
அருந்துயர்வருத்துமென்னகத்தையென்றனன். (௪)

முரசறைசெழுங்கடைமுத்தமாமுடி
அரசர்தங்கோமகனனையகூறலும்
விரைசெறிகமலமென்பொருட்டுமேவிய
வரசரோருகன்மகன்மனத்தினெண்ணினான். (௫)

அலைகடனடுவணோரனந்தன்மீமிசை
மலையெனவிழிதுயில்வளருமாமுகில்
கொலைதொழிலரக்கர்தங்கொடுமைதீர்ப்பெனென்
றலைவுறுமமரருக்குரைத்தவாய்மையை. (௬)

சுடுதொழிலரக்கராற்றொலைந்துவானுளோர்
கடுவமர்களனடிகலந்துகூறலும்
படுபொருளுணர்ந்தவப்பரமன்யாமினி
அடுவதில்லெனமறுத்தவரோடேகினான். (௭)

கறைமிடற்றிறைவனுங்கடவுளோர்களும்
மறைமுதற்கிழவனைவந்துநண்ணலும்
முறைமையிற்கடன்முறைமுற்றிமுண்டகத்
திறைவனுமவரொடுமினிதினேகினான். (௮)

வடவரைக்குமிசையினவெண்மாசறு
சுடர்மணிமண்டபந்துன்னிநான்முகக்
கடவுளையடிதொழுதமரகண்டகர்
இடிநிகர்வினையமதியம்பினரோ (௯)

* பாகசாதனன்றனைப்பாசத்தார்த்தடல்
† மேகநாதன்புகுந்திலங்கைமேயநாள்
போகமாமலருறைபுனிதன்மீட்டமை
தோகைபாகற்குறச்சொல்லினரோ. (௰)

இருபதுகரந்தலையீரைந்தென்னுமத்
திருவிலிவலிக்கொருசெயலின்றெங்களால்
கருமுகிலெனவளர்கருணையங்கடல்
பொருதிடர்தணிக்கினுண்டெனும்புணர்ப்பினர். (௧௧)

திரைகெழுபயோததிதுயிலுந்தெய்வவான்
மரகதமலையினைவழுத்திநெஞ்சினுற்
கரகமலங்குவித்திருந்தகாலையிற்
‡பரகதியுணர்ந்தவர்க்குதவுபண்ணவன். (௧௨)

§ கருமுகிறாமரைக்காடுபூத்துநீ
டிருசுடரிருபுறத்தேந்தியேடவிழ்
திருவொடும்பொலியவோர்செம்பொற்குன்றின்மேல்
வருவபோற்கலுழன்மேல்வந்துதோன்றினன். (௧௩)

எழுந்தனர்கறைமிடற்றிறையுந்தாமரைச்
செழுந்தவிசுகந்தவத்தேவுஞ்சென்றெதிர்
விழுந்தனரடிமிசைவிண்ணுளோரொடுந்
தொழுந்தொறுந்தொழுந்தொறுங்களிதுளங்குவார். (௧௪)

ஆடினர்பாடினரங்குமிங்குமா
ஓடினருவகைமாநறவுண்டோர்கிலார்
வீடினரரக்கரென்றுவக்கும்விம்மலால்
சூடினர்முறைமுறைதுளவத்தாண்மலர். (௧௫)

பொன்வரையிழிவதோர்புயலின்பொற்புற
என்னையாளுடையவன்றேணின்றெம்பிரான்

---

* பாகசாதனன்-இந்திரன். † மேகநாதன்பிறப்புக்காலத்தில் மேககர்ச்சனைபோல் ஒலித்தமையால் இந்திரஜித்துக்கு மேகநாதனென்னும் பெயர் உண்டாயிற்று.

‡ பரகதிஎன்றதுநலமந்தமில்லதோர்நாடாகியபரமபதத்தை. § இறைவனைமுகிலாகவும், அவரவயவங்களைத் தாமரைமலராகவும், ஆழியையுஞ் சங்கையும் இருசுடராகவும், கருடனைப் பொற்குன்றாகவும் கூறினர். முகில் விடத்துத்தாமரை கூறினமையான் இல்பொருளுவமை.

சென்னிவான்றடவுமண்டபத்துச்சேர்ந்தரி
துன்னிபொற்பீடமேற்பொலிந்துதோன்றினன், (கசு)

விதியொடுமுனிவரும்விண்ணுளோர்களும்
மதிவளர்சடைமுடிமழுவலாளனும்
அதிசயமுடனுவந்தயலிருந்துழி
கொதிகொள்வேலரக்கர்தங்கொடுமைகூறினர். (கஎ)

ஐயிருதலையினோனனுசராதியாம்
மெய்வலியரக்கரால்விண்ணுமண்ணுமே
செய்தவமிழந்தனதிருவினாயக
உய்திறமில்லையென்றுயிர்ப்புவீங்கினர். (கஅ)

எங்கணீள்வரங்களாலரக்கரென்றுளார்
பொங்குமூவுலகையும்புடைத்தழித்தனர்
செங்கணாயகவினித்தீர்த்தலில்லையேல்
நுங்குவருலகையோர்நொடியினென்றனர். (ககூ)

என்றனரிடருழந்திறைஞ்சியேத்தலும்
மன்றலர்துளவினான்வருந்தல்வஞ்சகர்
தந்தலையறுத்திடர்தணிப்பொன்றாரணிக்
கொன்றுநீர் * கேண்மெனவுரைத்தன்மேயினான். (உ0)

வானுளோரனைவரும்வானரங்களாக்
கானினும்வரையினுங்கடிதடத்தினும்
சேனையோடவதரித்திடுமின்சென்றென
ஆனனமலர்ந்தனனருளினாழியான். (உக)

† மசரதமனையவர்வரமும்வாழ்வுமோர்
நிசரதகணைகளானீறுசெய்யயாம்
கசரதுரகமாக்கடல்கொள்காவலன்
தசரதன்மதலையாவருதுந்தாரணி. (உஉ)

வளையொடுதிகிரியும்வடவைத்தீதர
விளைதருகடுவுடைவிரிகொள்பாயலும்
இளைஞர்களெனவடிபரவவேகினாம்
வளைமதிலயோத்தியில்வருதுமென்றனன். (உங)

என்றவனுரைத்தபோதெழுந்துதுள்ளினர்
நன்றிகொண்மங்கலநாதம்பாடினர்
மன்றலர்செழுந்திளவனியுமாயனார்
இன்றெமையளித்தனனென்னுமேம்பலால். (உச)

---

* கேளும் என்பது கேண்மென நின்றது. இது மகரக்குறுக்கம்.
† மசரதனைமனையவர்-பேய்த்தேரன்னவர்.

வேறு

போயதெம்பொருமலென்றுவிந்திரனுவகைபூத்தான்
தூயமாமலருளோனுஞ்சுடர்மதிசூடினோனும்
சேயுயர்விசும்புளோருந்தீர்ந்ததெஞ்சிறுமையென்றார்
மாயிருஞாலமுண்டோன்கலுழன்மேற்சரணம்வைத்தான். (௨௫)

என்னையாளுடையவையன்கலுழன்மீதெழுந்துபோய
பின்னர்வானவரைநோக்கிப்பிதாமகன்பேசுகின்றான்
முன்னரே * யெண்கின்வேந்தன்யானெனமொழிகின்றான்மற்
றன்னவாறெவருநீர்போயவதரித்திடுமினென்றான். (௨௬)

தருவுடைக்கடவுள்வேந்தன்சாற்றுவானெனதுகூறு
மருவலர்க்கசனியன்னவாலியுமகனுமென்ன
இரவிமற்றெனதுகூறங்கவற்கிளையவனென்றோத
அரியுமற்றெனதுகூறுநீலனென்றறைந்திட்டானல். (௨௭)

வாயுமற்றெனதுகூறுமாருதியெனலுமற்றோர்
காயுமற்கடங்களாகிக்காசினியதனின்மீது
போயிடத்துணிந்தோமென்றார்புராரிமற்றியானேவாத
சேயெனப்புகன்றான்மற்றைத்திசையுளோர்க்கவதியுண்டோ. (௨௮)

அருடருகமலக்கண்ணனருண்முறையலருளோனும்
இருடருமிடற்றினோனுமமருமினையராகி
மருடருவனத்தின்மண்ணின்வானரராகிவந்தார்
பொருடருமிருவர்தத்தமுறைவிடஞ்சென்றுபுக்கார். (௨௯)

ஈதுமுன்னிகழ்ந்தவண்ணமெனமுனியிதயத்தெண்ணி
† மாதிரம்பொருததிண்டோன்மன்னநீவருந்தலேழ்
பூதலமுழுதுங்காக்கும்புதல்வரையளிக்கும்வேள்வி
தீதறமுயலினையசிந்தைநோய்தீருமென்றான். (௩௦)

என்னமாமுனிவன்கூறவெழுந்தபேருவகைபொங்க
மன்னவர்மன்னனந்தமாமுனிசரணஞ்சூடி
உன்னையேபுகல்புக்கேனுக்குறுகண்வந்தடைவதுண்டோ
அன்னதற்கடியேன்செய்யும்பணியினிதளித்தியென்றான். (௩௧)

மாசறுசுரர்களோடுமற்றுளோர்தமையுமீன்ற
காசிபனருளுமைந்தன்விபாண்டகன்கங்கைசூடும்
ஈசனும்புகழ்தற்கொத்தோனிருங்கலைபிறவுமெண்ணில்
தேசுடைத்தந்தையொப்பான்றிருவருள்பு[illegible]ந்தமைந்தன். (௩௨)

---

* எண்கு-கரடி. † மாதிரம்-மலை, திக்குமென்பாருமுளர்.

வருகலைபிறவுநீதிமனுநெறிவரம்பில்வாய்மை
தருகலைமறையுமெண்ணிற்சதுமுகற்குவமைசான்றோன்
திருகலையுடையவிந்தசெகத்துளோர்கண்மைதேரா
ஒருகலைமுகச் * சிருங்கமுயர்தவன்வருதல்வேண்டும். (௩௩)

பாந்தளின்மகுடகோடிபரித்தபாரதனில்வைகும்
மாந்தர்கள்விலங்கென்றன்னுமனத்தன்மாதவத்தனெண்ணில்
பூந்தவிசுகந்துளோனும்புராரியும்புகழ்தற்கொத்த
சாந்தனால்வேள்விமுற்றிற்றனையர்களுளராமென்றான். (௩௪)

ஆங்குரையினையகூறுமருந்தவர்க்கரசன்செய்ய
பூங்கழற்றொழுதுவாழ்த்திப்பூதலமன்னர்மன்னன்
தீங்கறுகுணத்தான்மிக்கசெழுந்தவன்யாண்டையுள்ளான்
ஈங்கியான்புரியுந்தன்மையருளுதியிறைவவென்றான். (௩௫)

வேறு.

† புத்தானகொடுவினையோடருந்துயரம்போயொளிப்பப்புவனந்தாங்கும், சத்தானகுணமுடையோன்றயையினொடுந் தண்ணளியின்சாலைபோல்வான், எத்தானும்வெலற்கரியான் மனுகுலத்தேவந்துதித்தோ னிலங்குமௌலி, உத்தானபாதனருளுரோமபதனென்றுளனிவ்வுலகையாள்வான்.

அன்னவன்றான்புரந்தளிக்குந்திருநாட்டினெடுங்காலமளவதாக,மின்னியெழுமுகிலின்றிவெந்துயரம்பெருகுதலும்வேதகன்னால், மன்னுமுனிவரையழைத்துமாதானங்கொடுக்கினும்வான்வழங்காதாகப், பின்னுமுனிவரர்க்கேட்பக்கலைக்கோட்டுமுனிவரின்வான் ‡ பிலிற்றுமென்றார். (௩௭)

ஓதநெடுங்கடலாடையுலகினில்வாழ்மனிதர்விலங்கெனவேயுன்னும், கோதில்குணத்தருந்தவனைக் கொணரும்வகையாவதெனக் குனிக்கும்வேலை, சோதிநுதற்கருநெடுங்கட்டுவரிதழ்வாய்த்தரளநகைத்துணைமென்கொங்கை, மாதரெழுந்தியாமேகியருந்தவனைக்கொணர்துமெனவணக்கஞ்செய்தார். (௩௮)

ஆங்கவரம்மொழியுரைப்பவரசன்மகிழ்ந்தவர்க்கணிதூசாதியாய [தோள்
பாங்குளமற்றவையருளிப்பனிப்பிறையைப்பழித்தநுதற்பணைத்தவேய்த்
எங்குமிடைதடித்தமுலையிருண்டகுழன்மருண்டவிழியிலவச்செவ்வாய்ப்
பூங்கொடியீரேகுவெனத்தொழுதிறைஞ்சியிரதமிசைப்போயினாரே. (௩௯)

வேறு.

ஓசனைபலகடந்தினியொரோசனை
ஏசறுதவனுறையிடமிதென்றுழி
பாசிழைமடந்தையர்பன்னசாலைசெய்
தாசறுமருந்தவத்தவரின்வைகினார். (௪௦)

* சிருங்கம்—கொம்பு. † புத்—ஓர் நரகவிசேடம். ‡ பிலிற்றல்—துளித்தல்.

அருந்தவன் றந்தையையற்றநோக்கியே
கருந்தடங்கண்ணியர்கலைவலாளனிற்
பொருந்தினர்பொருந்துபுவிலங்கெனுப்புரிந்
திருந்தவரிவரெனவினையசெய்தனன். (௪௧)

* அருக்கியமுதலினோடாசனங்கொடுத்
திருக்கெனவிருந்தபின்னினியகூறலும்
முருக்கிதழ்மடந்தையர்முனிவனைத்தொழாப்
பொருக்கெனவெழுந்துபோய்ப்புரையுட்புக்கனர். (௪௨)

திருந்திழையவர்சிலதினங்கடீர்ந்துழி
மருந்தினுமினியனவருக்கைவாழைமாத்
† தருந்தருங்கனியொடுதாழையின்பலம்
அருந்தவவருந்தெனவருளினாரோ. (௪௩)

இன்னனபல்பகலிறந்தபின்றிரு
நன்னுதன்மடந்தையர்நவையின்மாதவன்
றன்னையெம்மிடத்தினுஞ்சார்தல்வேண்டுமென்
றன்னவர்தொழுதலுமவரொடேகினான். (௪௪)

விம்முறுமுவகையர்வியந்தநெஞ்சினர்
அம்மவிதிதுவெனவகலுநீணெறி
செம்மையின்முனிவரன்றொடரச்சென்றனர்
தம்மனமெனமருட்டையலார்களே. (௪௫)

‡ வளநகர்முனிவரன்வருமுன் § வானவன்
களனமர்கடுவெனக்கருகிவான்மிசைச்
சளசளவெனமழைத்தாரைகான்றன
குளனொடுநதிகடங்குறைநடரவே. (௪௬)

பெரும்புனனதிகளுங்குளனும்பெட்புறக்
கரும்பொடுசெந்நெலுங்கவின்கொண்டோங்கிட
இரும்புயல்ககனமீதிடைவிடாதெழுந்
() தரும்புனல்சொரிந்தபோதரசுணர்ந்தனன். (௪௭)

---

* அருக்கியமுதலினோடு என்றமையால் அருக்கியம், பாத்யம் ஆசமனம் என்னும் மூன்றுங்கொள்ளப்படும். அருக்கியம் தலையில் தெளித்துக்கொள்ளுதற்குரிய நீர். பாத்யம்–கால்கழுவுதற்குரிய நீர், ஆசமநம்-உட்கொள்ளுதற்குரிய நீர், இவற்றை கைந்நீர், அடிநீர் முக்குடிநீரெனவும் பொருந்தும்.

† தருத்தருங்கனி-மெலிந்தவின்றது, ‡ வளநகரென்றார். இதுகாறுமிந்நகர் வளமில்லாதாக முனிவன் போந்தமையான் வளனெய்தலின். § வானவன்கண்டு-மூக்கட்கடவுளை புணர்த்திற்று. () அரும்புனலென்றார் இதுகாறும் வான்பிலிற்றாது பெய்தலின்.

காமமும்வெகுளியும் *களிப்புங்கைத்தெழு
கோமுனியிவணடைந்தனன்கொல்கொவ்வைவாய்த்
தாமரைமலர்முகத்தரளவாணகைத்
தாமமென்குழலியர்புணர்த்தசூழ்ச்சியால். (௪௮)

என்றெழுந்தருமறைமுனிவர்யாரொடும்
சென்றிரண்டியோசனைசேனைசூழ்ந்தர
மன்றலங்குழலியர்நடுவண்மாதவக்
குன்றினையெதிர்ந்தனன்குவவுத்தோளினான். (௪௯)

வீழ்ந்தனனடிமிசைவிழிகணீர்தர
வாழ்ந்தனெனினியெனமகிழுஞ்சிந்தையான்
தாழ்ந்தெழுமாதரார்தம்மைநோக்கிநீர்
† போழ்ந்தனிரெனதிடர்புணர்ப்பினாலென்றான். (௫௦)

அரசருமுனிவருமடைந்தவாயிடை
வரமுனிவஞ்சமென்றுணர்ந்தமாலைவாய்
வெருவினர்விண்ணவர்வேந்தன்வேண்டலால்
‡ கரையெறியாதலைகடலும்போன்றனன். (௫௧)

வள்ளுறுவயிரவாண்மன்னன்பன்முறை
எள்ளருமுனிவனையிறைஞ்சியாரினும்
தள்ளருந்துயரமுஞ்சமைவுஞ்சாற்றலும்
உள்ளுறுவெகுளிபோயொளித்ததாமரோ. (௫௨)

அருள்சுரந்தரசனுக்காசியுங்கொடுத்
திருடருதேரின்மீதொல்லையேறினன்
¶ பொருடருமுனிவருந்தொடரப்போயினன்
மருளொழியுணர்வுடைவரதமாதவன். (௫௩)

அடைந்தனன்வளநகரலங்கரித்தெதிர்
மிடைந்திடமுனியொடுவேந்தன்கோயில்புக்
கொடுங்கலில்பொற்குழாத்துறையுளெய்தியோர்
மடங்கலாதனத்திடைமுனியைவைத்தனன். (௫௪)

அருக்கியமுதலியகடன்களாற்றிவே
றுரைக்குவதிலதெனவுவந்துதானருள்
முருக்கிதழிளமுலை § முகநலாடனை
§ இருக்கொடுவிதிமுறையினிதினீந்தனன். (௫௫)

---

* களிப்பு-மயக்கம், போழ்தல்-பிளத்தல். ‡ கரையெறியாத-ஈறுதொகுத்தல்-பெற்றது. ¶ பொருடருமுனிவர்-மெய்ம்மைப்பொருளையுபதேசிக்கு முற்றத்துறந்தமுனிவர், முகநலாள்.அழகான முகத்தையுடையபெண், பெண்ணின் பெயரெனக்கூறுவாருமுளர். § இருக்கொடுவிதிமுறை என்புழி ஒடுவுருபு ஆனுருபின்பொருளது.

வறுமைநோய்தணிதரவான்வழங்கவே
உறுதுயர்தணிந்ததவ்வுலகம்வேந்தருள்
செறிகுழல்போற்றிடத்திருந்துமாதவத்
தறிஞனுண் * டிருக்குநனரசவென்றனன். (௩௧)

வேறு

என்றலுமேமுனிவரன்றன்னடியிறைஞ்சியீண்டேகிக்கொணர்வெனென்
றுன்றுகழன்முடிவேந்தரடிபோற்றச்சுமந்திரனேமுதல்வராய [ஞெ
வன்றிறல்சேரமைச்சரொடுமாமணித்தேரேறுதலும்வானோர்வாழ்த்தி
இன்றெமதுவினைமுடிந்ததெனச்சொரிந்தார்மலர்மாரியிடைவிடாமல். ()

காகளமும்பல்லியமுங்கனைகடலின்மேன்முழங்கக்கானம்பாட
மாகதர்களருமறைநூல்வேதியர்கள்வாழ்த்தெடுப்பமதுரச்செவ்வாய்த்
தோகையர்பல்லாண்டிசைப்பக்கடற்றானைபுடைசூழச்சுடரோனென்ன
ஏகியருநெறிநீங்கியுரோமபதன்றிருநாட்டையெதிர்ந்தானன்றே. (௩௮)

கொழுந்தோடிப்படர்கீர்த்திக்கோவேந்தனடைந்தமைசென்றொற்றர்கூற
கழுந்தொடும்வரிசிலைக்கைக்கடற்றானைபுடைசூழக்கழற்கால்வேந்தன்
செழுந்தோடும்பல்கலனும்வில்வீச † மாகதர்கள்திரண்டுபாட
எழுந்தோடுமுவகையுடன்யோசனைசென்றானரசையெதிர்கோளெண்ணி.

எதிர்கொள்வான்வருகின்றவயவேந்தன்றனைக்கண்ணுற்றெழிலிநாண
அதிர்கின்றபொலந்தேர்நின்றரசர்பிரானிழிந்துழிச்சென்றடியின்வீழ
முதிர்கின்றபெருங்காதறழைத்தோங்கவெடுத்திறுகமுயங்கலோடும்[கான்
கதிர்கொண்டசுடர்வேலான்றனைநோக்கியிவையுரைத்தான்களிப்பின்மிக்

யான்செய்தமாதவமோவிவ்வுலகஞ்செய்தவமோயாதோவிங்கண்
‡ வான்செய்தசுடர்வேலோயடைந்ததெனமனமகிழமணித்தேரேற்றித்[வர்
தேன்செய்ததார்மௌலித்தேர்வேந்தைச்செழுநகரிற்கொணர்ந்தான்றெவ்
வூன்செய்தசுடர்வடிவேலுரோமபதனென்றுரைக்குமுரவுத்தோளான். ()

ஆடகப்பொற்சுடரிமைக்குமணிமாடத்திடையொருமண்டபத்தையண்மி
பாடகச்செம்பதுமமலர்ப்பாவையர்பல்லாண்டிசைப்பப்பைம்பொற்பீடத்
¶ தேடுதுற்றவடிவேலோன்றனையிருத்திக்கடன்முறைகள்யாவுமீந்து
தோடுதுற்றமலர்த்தாரான்விருந்தளிப்பவினிதுகந்தான் §சுரர்நாடீந்தான்.

* இருக்குநானென்றதில் நகரம் நிகல்காலம் காட்டிற்று.

† மாகதர்-நின்றுபுகழ்வோர். ‡ இந்திரனுக்குச் சம்பனை வெற்றிகொண்டு இந்திர பதமளித்த பெருமிதந்தோன்றி வான்செய்த சுடர்வேலோய் என்றார். வான்செய்த சுடர்வேல்-ஆகாயத்தில் விளங்குகின்ற சூரியனையொத்த வேல் அல்லது மேலானகாந்தியையுடைய வேல் என்றும் பொருளுரைத்தலுமாம்.

¶ எடுதுற்றவடிவேல்-இலைவடிவாகச் செய்யப்பட்டவேல். § சுரர்நாடீந்தானென்பதற்கு 'வான்செய்த சுடர்வேலோய்' என்றதற்குரைத்தாங்குரைக்க.

செவ்விநறுஞ்சாந்தளித்துத்தேர்வேந்தன் றனைநோக்கியிவணீசேர்ந்த
கவ்வையுரைத்தருள்கவெனநிகழ்ந்தபரிசரசர்பிரான்கழறலோடும்
*அவ்வியநீத்துயர்ந்தமனத்தருந்தவனைக்கொணர்ந்தாங்கண்விடுப்பனான்ற
செவ்விமுடியோயெனலுந்தேரேறிச்சேனையொடயோத்திசேர்ந்தான். ()

மன்னர்பிரானகன்றதற்பின்வயவேந்தனருமறைநூல்வடிவங்கொண்ட
தன்னமுனிவரனுறையுடனையணுகியிணையடித்தாமரைகளம்பொன்
மன்னுமணிமுடியணிந்தவரன்முறைசெய்திடவிவணீவருதற்கொத்த
தென்னையெனவடியேற்கோர்வரமருளுமடிகளெனயாவதென்றான். (௬௪)

† புறவொன்றின்பொருட்டாகத்துலைபுக்கபெருந்தகைதன்புகழிற்பூத்த
அறனென்றுதிருமனத்தானமரர்களுக்கிடரிழைக்குமவுணராயோர்
திறலுண்டவடிவேலான்றெசரதனென்றுயர்கீர்த்திச்செங்கோல்வேந்தன்
விறல்கொண்டமணிமாடயோத்திநகரடைந்திவணீமீடலென்றான். (௬௫)

அவ்வரந்தந்தன மினித்தேர்கொணர்தியென வருந்தவத்தோனறைதலோடும், வெவ்வரந்தின்றயில்படைக்குஞ் சுடர்வேலோ னடிமிறைஞ்சி வேந்தர்வேந்தன், கவ்வையொழிந்துயர்ந்தனனென்றதிர்குரற்றேர் கொணர்ந்த தனிற்கலைவலாளன், செவ்விநுதற்றிருவினொடும் போந்தேறுகெனவேறிச் சிறந்தான்மன்னே. (௬௬)

வேறு.

குனிசிலைவயவனுங்கரங்கள்கூப்பிடத்
துனியறுமுனிவரர்தொடர்ந்துசூழ்வர
வனிதையு ‡ மருமறைவடிவுபோன்றொளிர்
முனிவனும்பொறிமிசைநெறியைமுன்னினார். (௬௭)

அந்தரதுந்துமிமுழக்கியாய்மலர்
சிந்தினர்களித்தனரமுந்தேவரும்
வெந்தெழுகொடுவினைவீழ்க்குமெய்ம்முதல்
வந்தெழவருடருவானென்றெண்ணியே. (௬௮)

தூதுவரவ்வழியயோத்திதுன்னினார்
மாதிரம்பொருததோண்மன்னர்மன்னன்முன்
ஓதினார்முனிவரவோதவேந்தனும்
காதலென்றளவறுகடலுளாழ்ந்தனன். (௬௯)

எழுந்தனன்பொருக்கெனவிரதமேறினன்
பொழிந்தனமலர்மழையாசிபூத்தன

---

* அவ்வியநீத்தயர்ந்தமனத் தருந்தவன்-கலைக்கோட்டுமுனிவன்.

† புறவொன்றின் பொருட்டாகத்துலைபுக்க பெருந்தகையென்றது சிபியரசனை. இதனை 'அன்பிலவொல்லா' மென்புழிப்பரிமேலழகர் கூறலானு முணர்க.

‡ அருமறைவடிவுபோன் றொளிர்முனிவரன்-கலைக்கோட்டு முனிவன்.

மொழிந்தனபல்லியமுரசமார்த்தன
விழுந்தனதீவினைவேரினோடுமே. (௭௦)

பிதிர்ந்ததெம்மனத்துயர்ப்பிறங்கவென்றுகொண்
டதிர்ந்தெழுமுரசுடையரசர்கோமகன்
* முதிர்ந்தமாதவமுடைமுனியைக்கண்களால்
எதிர்ந்தனன்யோசனையிரண்டொடொன்றினே. (௭௧)

நற்றவமனைத்துமோர்நவையிலாவுருப்
பெற்றிவணடைந்தெனப்பிறங்குவான்றனைச்
சுற்றியசீரையுமுழையின்றோற்றமும்
முற்றுறப்பொலிதருமூர்த்தியான்றனை. (௭௨)

அண்டர்கயொருமரக்கராற்றலும்
விண்டிடப்பொலிதரும்வினைவலாளனைக்
குண்டிகைகுடையொடுகுலவுநூன்முறைத்
தண்டொடுபொலிதருதடக்கையான்றனை. (௭௩)

இழிந்துபோயிரதமாண்டிணைகொடாண்மலர்
விழுந்தனன்வேந்தர்தம்வேந்தன்மெய்ம்மையான்
மொழிந்தனனாசிகண்முதியநான்மறைக்
கொழுந்துமேற்படர்தரக்கொள்கொம்பாயினான். (௭௪)

அயல்வருமுனிவருமாசிகூறிடப்
புயல்பொழிதடக்கையாற்றொழுதுபொங்குநீர்க்
கயல்பொருவிழியொடுகலைவலாளனை
இயல்பொடுகொணர்ந்தனனிரதமேற்றியே. (௭௫)

அடிகுரன்முரசதிரயோத்திமாநகர்
முடியுடைவேந்தனம்முனிவனோடுமோர்
கடிகையினடைந்தனன்கமலவாண்முக
வடிவுடைமடந்தையர்வாழ்த்தெடுப்பவே. (௭௬)

கசட்டுறு † வினைத்தொழிற்கள்வராயுழல்
அசட்டர்களைவரையறுவராக்கிய
வசிட்டனுமருமறைவடிவுபோன்றொளிர்
விசிட்டனும்வேந்தவைபொலியமேவினர். (௭௭)

---

* முதிர்ந்த மாதவமுடை முனியை, பிறங்குவான்றனை, மூர்த்தியான்றனை, வினைவலாளனை, தடக்கையான்றனைக் கண்களால் யோசனையிரண்டொடொன்றின் எதிர்ந்தனனெனக் கூட்டி முடிக்க.

† வினைத்தொழில் ஒருபொருட்பன்மொழி, ஈண்டுத் தீவினையை யுணர்த்திற்று

மாமணிமண்டபமன்னிமாசறு
தூமணித்தவிசிடைச்சுருதியோகிகள்
கோமுனிக்கரசனையிருத்திக்கொள்கடன்
ஏமுறத்திருத்திவேறினையசெப்பினான். (எ௮)

சான்றவர்சான்றவதருமமாதவம்
போன்றொளிர்புனிதநின்னருளிற்பூத்தவென்
* ஆன்றதொல்குலமினியரசின்வைகுமால்
யான்றவமுடைமையுமிழப்பின்றாமரோ. (எ௯)

என்னலுமுனிவரனினிதுநோக்குறு
† மன்னவர்மன்னகேள்வசிட்டனென்றெனும்
நன்னெடுந்தவன்றுணைநவையில்செய்கைநீ
நின்னையிவ்வுலகினினிருபர்நேர்வரோ. (௮0)

என்றனபற்பலவினிமைகூறிநற்
குன்றுறழ் ‡ வரிசிலைக்குவவுத்தோளினாய்
நன்றிகொளரிமகநடத்தவெண்ணியோ
இன்றெனையழைத்ததிங்கியம்புவாயென்றான். (௮௧)

உலப்பில்பல்லாண்டெலாமுறைகணின்றியே
தலப்பொறையாற்றினன்றனையர்வந்திலர்
§ அலப்புநீருடுத்தபாரளிக்குமைந்தரை
நலப்புகழ்பெறலினிநல்கல்வேண்டுமால். (௮௨)

என்றலுமரசநீயிரங்கலிவ்வுல
கொன்றுமோவுலகமீரேழுமோம்பிநம்
வன்றிறன் ¶ மைந்தரையளிக்குமாமகம்
இன்றுநீயியற்றுதற்கெழுகவீண்டென்றான். (௮௩)

ஆயதற்குரியனகலப்பையாவையும்
ஏயெனக்கொணர்ந்தனர்நிருபர்க்கேந்தலும்
தூயநற்புனல்படிஇச்சுருதிநூன்முறை
சாய்வறத்திருத்தியசாலைபுக்கனன். (௮௪)

முழங் ° கழன்மும்மையுமுறுகியாகுதி
வழங்கியேயீராறுதிங்கள்வாய்த்தபின்

---

* இட்சுவாகுதொட்டுவந்த அரசர் பரம்பரையாதலின் ஆன்ற தொல்குலமென்றார். † மன்னவர் மன்ன-சக்கரவர்த்தியே. ‡ அரிமகம்-பரிமேதம். § அலப்புநீர்-கடல். ¶ மைந்தரையளிக்குமாமகம்-புத்திரகாமேஷ்டியாகம்.

° அழன் - மும்மையுமென்றது ஆகவானீயம், தக்ஷிணாக்கினி காருகபத்தியம் என்பவற்றை. இதனை 'முத்தீச்செல்வத்து இருபிறப்பாளர்' என்புழி நச்சினார்க்கினியர் கூறலாறுமறிக. † உரியமாதர் ஈண்டு-பட்டமகிஷிகள் மூவர்.

தழங்கினதுந்துபிதாவில்வானகம்
விழுங்கினர்விண்ணவர்வெளியின்றென்னவே. (௮௫)

முகமலரொளிதரமொய்த்துவானுளோர்
அகவிரைநறுமலர்தூவியார்த்தெழத்
தகவுடைமுனியுமத்தழலினுப்பணை
மகவருளாகுதிவழங்கினானரோ. (௮௬)

ஆயிடைக்கனலினின்றம்பொற்றட்டமீ
தூயநற்சுதைதிகழ்பிண்டமொன்றுசூழ்
தீயெரிப்பங்கியுஞ்சிவந்தகண்ணுமா
ஏயெனப்பூதமொன்றெழுந்ததேந்தியே. (௮௭)

வைத்ததுதரைமிசைமறித்துமவ்வழி
தைத்ததுபூதமத்தவனும்வேந்தனை
உய்த்தநல்லமிர்தினை * யுரியமாதர்கட்
கத்தகுமரபினாலளித்தியாலென்றான். (௮௮)

மாமுனியருள்வழிமன்னர்மன்னவன்
தூமமென்சுரிகுழற்றொண்டைத்தூயவாய்க்
காமரொண்கௌசலைகரத்தினோர்பகிர்
தாமுறவளித்தனன்சங்கமார்ந்தெழ. (௮௯)

கைகயன்றனையைதன்கரத்துமம்முறைச்
செய்கையினளித்தனன்தேவரார்த்தெழப்
பொய்கையுநதிகளும்பொழிலுமோதிமம்
வைகுறுகோசலைமன்னர்மன்னனே. (௯௦)

† நமித்திரர்நடுக்குறுநலங்கொண்மொய்ம்புடை
நிமித்திருமரபுளான்முன்னர்நீர்மையிற்
சுமித்திரைக்களித்தனன்சுரர்க்குவேந்தினிச்
‡ சமித்ததென்பகையெனத்தமரொடார்ப்பவே. (௯௧)

§ பின்னுமப்பெருந்தகைபிதிர்ந்துவீழ்ந்தவை
தம்மையுஞ்சுமித்திரைதனக்குநல்கினான்
ஒன்னலர்க்கிடமும்வேறுலகினோங்கிய
மன்னுயிர்தமக்குநீள்வலமுந்துள்ளவே. (௯௨)

வாம்பரிவேள்வியுமகவைநல்குவ
தாம்புரையாகுதிபிறவுமந்தணன்

---

* உரியமாதர் என்றது ஈண்டு—பட்டமகிஷிகள் மூவர். † நமித்திரர்—பகைவர்.
‡ சமித்தது—அடங்கிற்று. § பின்னும் வினைமாற்றுப்பொருளில் வருவதோரிடைச்சொல்.

ஓம்பிடமுடிந்தபினுலகுகாவலன்
ஏம்பலொடெழுந்தனன்யாருமேத்தவே. (௯௩)

முருடருபல்லியமுழங்கியார்த்தன
இருடருமுலகமுமிடருநீங்கின
தெருடருவேள்வியின்கடன்கடந்துழி
அருடருமவையின்வந்தரசனெய்தினன். (௯௪)

செய்ம்முறைகடன்முறைதிறம்பலின்றியே
மெய்ம்முறைகடவுளுக்கீந்துவிண்ணுளோர்க்
கம்முறையளித்துநீடந்தணாளர்க்கும்
கைம்முறைவழங்கினன்கனகமாரியே. (௯௫)

வேந்தர்கட்கரசொடுவெறுக்கைதேர்பரி
வாய்ந்தநற்றுகிலொடுவரிசைக்கேற்பன
ஈய்ந்தனன்பல்லியந்துவைப்பவேகிநீர்
தோய்ந்தனன்சரயுநற்றுறைக்கணெய்தியே. (௯௬)

முரசினங்கறங்கிடமுத்தவெண்குடை
விரசிடுநிழறரவேந்தர்சூழ்தர
அரசவையடைந்துழியயனுநாணுற
உரைசெறிமுனிவர்தாள்வணங்கியோங்கினன். (௯௭)

அரியநற்றவமுடைவசிட்டனாணையால்
* இரலைநற்சிருங்கமாவிறைவன்றொடொழா
உரியபற்பலவுரைபயிற்றியுய்ந்தனன்
பெரியநற்றவவினிப்பெறுவதியாதென்றான். (௯௮)

எந்தைநின்னருளினாலிடரினீங்கியே
உய்ந்தனனடியனேனென்னவொண்டவன்
சிந்தையுண்மகிழ்ச்சியால்வாழ்த்தித்தேர்மிசை
வந்தமாதவரொடும்வழிக்கொண்டேகினான். (௯௯)

† வாங்கியதுயருடைமன்னன்பின்னரும்
பாங்குடைமுனிவர்தாள்பழிச்சியேத்தல்கொண்
டோங்கியவுவகையராசியோடெழா
நீங்கினரிருந்தனனேமிவேந்தனே. (௧௦௦)

தெரிவையர்மூவருஞ்சிறிதுநாட்செலீஇ
மருவியவயாவொடுவருத்தந்துய்த்தலால்

---

* இரலைநற்சிருங்கமாவிறைவன் - கலைக்கோட்டுமுனி.
† வாங்கியதுயர் - துன்பநீங்கின.

பொருவருதிருமுகமன்றிப்பொற்புநீ
டுருவமுமதியமொடொப்பத்தோன்றினர். (௧0௧)

ஆயிடைப்பருவம்வந்தடைந்தவெல்லையின்
மாயிரும்புவிமகண்மகிழ்வினோங்கிட
வேய்புனர்பூசமும்விண்ணுளோர்களும்
தூயகற்கடகமுமெழுந்துதுள்ளவே. (௧0௨)

சித்தருமியக்கருந்தெரிவைமார்களும்
வித்தகமுனிவரும்விண்ணுளோர்களும்
நித்தருமுறைமுறைநெருங்கியார்ப்புறத்
தத்துறவொழிந்துநீடருமமோங்கவே. (௧0௩)

ஒருபகலுலகெலாமுதரத்துட்பொதிந்
தருமறைக்குணர்வருமவனையஞ்சனக்
கருமுகிற்கொழுந்தெழில்காட்டுஞ்சோதியைத்
திருவுறப்பயந்தனடிறங்கொள்கோசலை. (௧0௪)

ஆசையும்விசும்புநின்றமரரார்த்தெழ
வாசவன்முதலினர்வணங்கிவாழ்த்துறப்
பூசமுமீனமும்பொலியநல்கினாள்
மாசறுகேகயன்மாதுமைந்தனை. (௧0௫)

தளையவிழ்தருவுடைச் * சயிலகோபனுங்
கிளையுமந்தரமிசைகெழுமியார்ப்புற
அளைபுகுமரவினோடலவன்வாழ்வுற
இளையவற்பயந்தனளிளையமென்கொடி. (௧0௬)

படங்கிளர்பஃறலைப்பாந்தளேந்துபார்
நடங்கிளர்தரமறைநவிலநாடகம்
மடங்கலுமகமுமேவாழ்வினோங்கிட
விடங்கிளர்விழியிணைமீட்டுமீன்றனள். (௧0௭)

ஆடினரரம்பையரமுதவேழிசை
பாடினர்கின்னரர்துவைத்தபல்லியம்
வீடினரரக்கரென்றுவக்கும்விம்மலால்
ஓடினருலவினரும்பர்முற்றுமே. (௧0௮)

ஓடினரரசன்மாட்டுவகைகூறநின்
றாடினர்சிலதியரந்தணாளர்கள்
கூடினர்காளொடுகோளுநின்றமை
நாடினருலகினிநவையின்றென்றனர். (௧0௯)

---

* சயிலகோபன்—பூருவத்தில் மலைகளைக்கோவித்துச் சிறகுகளைவெட்டினன் ஆதலால் இந்திரனுக்குச் சயிலகோபனென்று பெயர் வழங்கிவருகின்றது.

மேடமாமதிதிதிநவமிமீன்கழை
நீடுறுமாலைகற்கடகநீதிசேர்
ஓடைமாகளிறனுனுதயராசிகோள்
நாடினேகாதசர்நால்வருச்சரே. (ககO)

நீதி-ஒழுக்கமானது, சேர்-சேர்ந்த, ஓடை-நுதலணியையுடைய, மா-பெருமை பொருந்திய, களிறு-யானையை, அனன்-ஒத்தவனாகிய (இராமமூர்த்தியினது அவதார காலையில்) மா-பெருமைபொருந்திய, மதி-மாஸமானது, மேடம்-மேஷமாயும், திதி-திதியானது, நவமி-நவமியாயும், மீன்-நட்சத்திரமானது, கழை-புனர்பூசமாயும், கற்கடகம்-கடகமானது, உதயராசி-உதயமும், இருசிலக்கினமாகிய சந்திரலக்கினமுமாயும், மால்-புதன், ஐ-ராஜஸ்தானமாகிய பத்தாமிடத்தலும், கோள்-கேதுவிற்கு, நாடு-மிதுனமானது, இல்-வீடாயும், ஏகாதசர்-பதினொன்றுக்குடையவர், நால்வர்-நான்குபேர், உச்சர்-உச்சஸ்தானத்திலும், நீடுறும்-பலமாயிற்கும், ஏகாரம்-தேற்றம்.

இராமர் ஜாதகம்.

சுக்கிரன்	சூரியன் புதன்		கேது
	இராசி		சந்திரன் லக்கினம் குரு
செவ்வாய்			
இராகு		சனி	

என்றனர்சாதக * யீசற்கேனையர்
தன்றனக்குகந்தகுமுறையிற்றுன்றெரிந்
தொன்றியதமனியத்தெழுதியோதினர்
வன்றிறற்சுரர்குருவாழ்த்தெடுப்பவே. (ககக)

மாமுனிதன்னொடுமன்னர்மன்னவன்
ஏமுறப்புனல்படிஇவித்தொடின்பொருள்
தாமுறவழங்கிவெண்சங்கமார்ப்புறக்
கோமகர்திருமுகங்குறுகிநோக்கினன். (ககஉ)

இறைதவிர்ந்திடுகபார்யாண்டொரேழ்சிறை
நிறைதருசாலைதாணீக்கியாவையும்
முறைகெடவறியவர்முகந்துகொள்கெனு
அறைபறையென்றனரசர்கோமகன். (ககங)

* ஈசன்ஈண்டு-சோமன்.

படையொழிந்திடுகதம்பதிகளேயினி
விடைபெறுககமுடிவேந்தர்வேதியர்
நடையுறுரியமருநவையின்றுறுக
கடவுளர்விழவொடுகளிப்பவெங்கணும். (௧௧௪)

ஆலயம்புதுக்குகவந்தணாளர்தம்
சாலையுஞ்சதுக்கமுஞ்சமைக்கசந்தியும்
காலையுமாலையுங்கடவுளர்க்கணி
மாலையுந்தீபமும்வழங்குகென்றனன். (௧௧௫)

என்புழிவள்ளுயர்வானைமீமிசை
நன்பறையறைந்தனர்நகரமாந்தரும்
மின்பிறழ்நுசுப்பினர்தாமும்விம்மலால்
இன்பமென்றளக்கருமளக்கரெய்தினர். (௧௧௬)

ஆர்த்தனர்முறைமுறையன்பினுளுடல்
போர்த்தனபுளகம்வேர்பொடித்தநீணிதி
தூர்த்தனரெதிரெதிர்சொல்லினர்க்கெலாம்
தீர்த்தனென்றறிந்ததோவவர்தஞ்சிந்தையே. (௧௧௭)

பண்ணையுமாயமுந்திரளும்பாங்கரும்
கண்ணகன்றிருநகர்களிப்புகைம்மிகுந்
தெண்ணெயுங்களபமுமிழுதுநானமும்
சுண்ணமுந்தூவினவீதிதோறுமே. (௧௧௮)

வேறு.

இத்தகைமாநக * ரீராறுநாளுஞ்
சித்தமுறுங்களியோடுசிறந்தே
தத்தமையொன்றுமுணர்ந்திலதாவா
மெய்த்தவனுமம்விதிப்பமதித்தான். (௧௧௯)

கராமலையத்தளர்கைக்கரியெய்த்தே
அராவணையிற்றுயில்வோனெனவந்நாள்
விராவியளித்தருண்மெய்ப்பொருளுக்கே
இராமனெனப்பெயரீந்தனனன்றே. (௧௨௦)

கரதலமுற்றொளிர்நெல்லிகடுப்ப
விரதமறைப்பொருண்மெய்ந்நெறிகண்ட
வரதனுதித்திடமற்றறையவொளியை
பரதனெனப்பெயர்பன்னினனன்றே. (௧௨௧)

* ஈராறுநாள் என்றதனைப் பத்துநாளுங்கடந்த விரண்டாநாள் எனப் பெரியாரும் பணித்தமையானறிக.

உலக்குநர்வஞ்சகரும்பருமுய்ந்தார்
நிலக்கொடியுந்துயர்நீத்தனளிந்த
விலக்கருமொய்ம்பின்விளங்கொளிநாமம்
இலக்குவனென்னவிசைத்தனனன்றே. (௧௨௨)

முத்திருக்கொண்டுசெம்முளரியலர்ந்தால்
ஒத்திருக்குமெழிலுடையவிவ்வொளியால்
எத்திருக்குங்கெடுமென்பதையெண்ணிச்
சத்துருக்கனெனச்சாத்தினர்நாமம். (௧௨௩)

பொய்வழியின்முனிபுகறருமறையால்
இவ்வழிபெயர்களிசைத்துழியிறைவன்
கைவழிநிதியெனுநதிகலைமறையோர்
மெய்வழியுவரிநிறைத்தனமேன்மேல். (௧௨௪)

காவியுமொளிர்தருகமலமுமெனவே
* ஓவியவெழிலுடையொருவனையலதோர்
ஆவியுமுடலமுமிலதெனவருளின்
மேவினனுலகுடைவேந்தர்தம்வேந்தன். (௧௨௫)

அமிர்துகுதலையொடணிநடைபயிலாத்
திமிரமதறவருதினகரனெனவும்
† தமரமதுடன்வளர்சதுமறையெனவும்
குமரர்கணிலமகள்குறைவறவளர்நாள். (௧௨௬)

கவுளமொ § டுபநயம்விதிமுறைதருகுற்
றிவளவதெனவொருகரையிறிதிலவா
உவள்தருமறையினொடொழிவறுகலையும்
‡ தவள்மதிபுனையரனிகர்முனிதரவே. (௧௨௭)

யானையுமிரதமுமிவுளியுமுதலா
ஏனையபிறவுமவ்வியல்பினினடையுற்
றானுறுபடைபலசிலையொடுபயிலா
§ வானவர்தனிமுதல்கிளையொடுவளர. (௧௨௮)

அருமறைமுனிவருமமரருமவனித்
திருவுமககருறைசெனமுநமிடரோ
டருவினைதுணிதருமிவரினிதிவணின்
ஒருருபொழுதகல்கிலமுறையெனவுறுவார். (௧௨௯)

---

* கரியகோலத்திருமேனியனாகிய சீராமனை 'ஓவியவெழிலுடையொருவன்' என்றார். † தமரமதுடன் என்றார் எழிசையோடுகூடிய மறையொலியை. ‡ உபநயனமென்றதும் - தவனமென்றதும் குறைந்துநின்றன. அமரர்களதிபதி என்பதுதோன்ற வானவர் தனிமுதல் என்றார்.

அய்யனுமிளவலுமணிநிலமகடன்
செய்தவமுடைமைகடெரிதாநதியும்
மைதவழ்பொழில்களும்வாவியுமருவி
நெய்குழனுறுமிழையெனநிலைதிரிவார். (௧௩0)

பரதனுமிளவலுமொருநொடிபகிரா
திரதமுமிவுளியுமிவரினுமறைநூல்
உரைதருபொழுதினுமொழிகிலரெனையாள்
வரதனுமிளவலுமெனமருவினரே. (௧௩௧)

வீரருமிளைஞரும்வெறிபொழில்களின்வாய்
ஈரமொடுரைதருமுனிவரரிடைபோய்ச்
* சோர்பொழுதணிநகர்துறுகுவரெதிர்வார்
கார்வரவலர்பயிர்பொருவுவர்களியால். (௧௩௨)

எழையரனைவருமிவர்தடமுலைதோய்
கேழிளர்மதுகையர்கிளைகளுமினையார்
வாழியவெனவவர்மனனுறுகடவுட்
டாழ்குவர்கவுசலைதயரதனெனவே. (௧௩௩)

கடல்கருமுகிலொளிர்கமலமதலரா
வடவரையுடன்வருசெயலெனமறையும்
தடவுதலறிவருதனிமுதலவனும்
புடைவருமிளவலுமெனநகர்புகல்வார். (௧௩௪)

எதிர்வருமவர்களையெமையுடையிறைவன்
முதிர்தருகருணையின்முகமலரொளிரா
எதுவினையிடரிலையினிதினுமனையும்
மதிதருகுமரரும்வலியர்கொலெனவே. (௧௩௫)

† அஃதையநினையெமதரசெனவுடையேம்
இஃதொருபொருளலவெமதுயிருடனேழ்
மகிதலமுழுதையுமுறுகவிமலரோன்
உகுபகலளவெனவுரைநனிபுரிவார். (௧௩௬)

வேறு.

இப்பரிசணிநகருறையும்யாவரும்
மெய்ப்புகழ்புனைதரவிளையவீரர்கள்

* சோர்பொழுது - மாலைக்காலம். † அகரஐய என்றது அஃதைய என நின்றது. இதனை 'அஃதைதந்தை' எனப்பிறருங் கூறுதல் காண்க.

தப்பறவடிநிழறழுவியேத்துற
* மூப்பரம்பொருளுக்குமுதல்வன்வைகுறும். (௧௩௭)

அரைசர்தம்பெருமகனகிலம்யாவையும்
விரைசுறுதனிக்குடைவிளங்கவென்றிசேர்
முறைசொலிகறங்கிடமுனிவரேத்துறக்
கரைசெயலரியதோர்களிப்பின்வைகுநாள். (௧௩௮)

ரு-வது. திருவவதாரப்படலம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-௩௭,

எ-வது கையடைப்படலம்.

நனைவருகற்பகநாட்டுநென்னகர்
அனைவருமனைதரவயிர்க்குஞ்சிந்தையான்
நினையவுமரியதுவிசும்பினீண்டதோர்
புனைமணிமண்டபம்பொலியவெய்தினான். (௧)

தூயமெல்லரியணைப்பொலிந்துந்தான்றினான்
சேயிருவிசும்பிடைத்திரியுஞ் † சாரணர்
நாயகனிவன்கொலென்றயிர்த்துநாட்டமேன
ஆயிரமில்லையென்றையநீங்கினார். (௨)

விசுவாமித்திரர் வருதல்.

மடங்கல்போன்மொய்ம்பினான்முன்னர்மன்னுயிர்
அடங்கலுமுலகும்வேறமைத்துத்தேவரோ
டிணங்கொணான்முகனையும்படைப்பெனீண்டெனத்
தொடங்கிய ‡ துனியுறுமுனிவன்றோன்றினான். (௩)

வேறு.

வந்துமுனியெய்துதலுமார்பினணியாரம்
அந்தரதலத்திரவியஞ்சவொளிவிஞ்சக்
கந்தமலரிற்கடவுடன்வரவுகாணும்
இந்திரனெனக்கடிதெழுந்தடிபணிந்தான். (௪)

பணிந்துமணிசெற்றுபுகுயிற்றியவிர்பைம்பொன்
அணிந்ததவிசிட்டதினருத்தியொடிருத்தி
இணைந்தகமலச்சரணருச்சனைசெய்தின்றே
துணிந்ததென்வினைத்தொடர்பெனத்தொழுதுசொன்னான். (௫)

* மூப்பரம்பொருளுக்கு முதல்வன்-சங்கருடணன், பிரத்தியும்னன், அநிருத்தனென்னும் வியூகர் மூவருக்கு முதற்பொருளை, இதனை 'மூப்பரம்பொருளிற்குன் முதலை' என்றிவ்வாசிரியர் பிற்கூறுதலுமிப்பெற்றிநோக்கி, † சாரணர்-தேவவொற்றர். ‡ துனியுறுமுனிவன்-கௌசிகன்.

நிலஞ்செய்தவமென் றுணரின் றுநெடியோயென்
நலஞ்செய்வினையுண் டெனினுமன் றுநகர்நீயான்
வலஞ்செய் துவணங்கவெளிவந்தவி துமுந்தென்
குலஞ்செய்தவமென் றினிதுகூறமுனிகூறும். (௬)

வேறு.

என்னையமுனிவருமிமையவருமிடையூறென் றுடையராகுல்
பன்னகமுநகுவெள்ளிப்பனிவரையும்பாற்கடலும்பதுமபீடத்
தன்னகருங்கற்பகநாட்டணிநகருமணிமாடயோத்தியென்னும்
பொன்னகருமல்லாதுபுகலுண்டோவிகல்கடந்தபுலவுவேலோய். (எ)

இன்றளிர்க்கற்பகநறுந்தேனிடைதுளிக்குநிழலிருக்கையிழந்துபோந்து
நின்றளிர்க்குந்தனிக்குடைக்கீழ்கின்றொதுங்கிக்குறையிரந்துநிற்பநோக்கிக்
குன்றளிக்குங்குலமணித்தோட்சம்பரனைக்குலத்தோடுந்தொலைந்துநீகொ
ண், டன்றளித்தவரசன்றேபுரந்தர * னின்றுள்கின்றதரசவென்றான். ()

உரைசெய்யுமளவிலவன்முகநோக்கியுள்ளத்தினொருவராலும்
கரைசெய்யவரியதொருபேருவகைக்கடல்பெருகக்கரங்கள்கூப்பி
அரைசெய்தியிருந்தபயனெய்தினன்மற்றினிச்செய்வதருளுகென்று
முறைசெய்துகடைத்தலையான்முன்மொழியப்பின்மொழியுமுனிவனுங்கே

தருவனத்துள்யானியற்றுந்தவவேள்விக்கிடையூறுத்தவஞ்செய்வோர்கள்
வெருவரச்சென்றடை † காமவெகுளியெனநிருதரிடைவிலக்காவண்ணம்
செருமுகத்துக்காத்தியெனநின்சிறுவர்நால்வரினுங்கரியசெம்மல் [ன்.
‡ ஒருவனைத்தந்திடுதியெனவுயிரிரக்குங்கொடுங்கூற்றினுளையச்சொன்

எண்ணிலாவருந்தவத்தோனியம்பியசொன்மருமத்தினெறிவேல்பாய்ந்த
புண்ணிலாம்பெரும்புழையிற்கனலுனுழைந்தாலெனச்செவியிற்புகுதலோடு
உண்ணிலாவியதுயரம்பிடித்துந்தவாருயிர்நின்றாசலாடக் [ம்
கண்ணிலான்பெற்றிழந்தானெனவுழந்தான்கடுந்துயரங்காலவேலான். ()

தொடையூற்றுந்தேன்றுளிக்குநறுந்தாராரொருவண்ணந்துயரநீங்கிப்
§படையூற்றமிலன்சிறியனிவன்பெரியோய்பணியிதுவேற்பணிநீர்க்கங்கை
புடையூற்றுஞ்சடையானுநான்முகனும்புரந்தரனும்புகுந்துசெய்யும்
இடையூற்றுக்கிடையூறுயான்காப்பென்பெருவேள்விக்கெழுகவென்றான்.

என்றனனென்றலுமுனிவோனெழுந்தனன் மண்படைத்தமுனியிறு
திக்காலம், அன்றெனவாமெனவிமையோரயிர்த்தனர்மேல்வெயில்கரந்தத

* இற்றைப்போதலனரசாள்வது நின்னாற்கொடுக்கப்பட்டதென்பார் இன்றாசா ள்வதென்றார். † காமவெகுளியெனக் கூறினமையான் மயக்கமென்பதையு முபலக் கணத்தாற் கூறிக்கொள்க. ‡ ஒருவனை—ஒப்பற்றவனை. § படையூற்றமிலனென் றிவ் வாசிரியர் கூறியதை முதனூலாசிரியரும் இன்னும் பதினாறுவயது நிரம்பிற்றில்லையெ ன்றும், பிசாசர் பூசலுக்கியலுதவானென்றும், காமலாக்கணனையழைத்தல்பொ ருந்தாதுகாணென்றும் கூறுவர், இதனை வடநூலார்வாய்க்கேட்டுணர்க.

ங்குமிங்கும், நின்றனவுந்திரிந்தனமீநிவந்தகொழுங்கடைப்புருவநெற்றிமுற்றச், சென்றினவந்தனநகையுஞ்சிவந்தனகண்ணிருண்டனபோய்த்திசைகளெல்லாம். (கங)

வே று.

* கறுத்தமாமுனிகருத்தையுன்னிநீ
பொறுத்தியென்றவற்புகன்றுநின்மகற்
குறுத்தலாகலாவுறுதியெய்துநாள்
மறுத்தியோவெனவசிட்டன்கூறினான். (கச)

† பெய்யுமாரியாற்பெருகுவெள்ளம்போய்
மொய்கொள்வேலைவாய்முடுகுமாறுபோல்
அய்யநின்மகற்களவில்விஞ்சைவந்
தெய்துகாலமின்றெதிர்ந்ததென்னவே. (கரு)

குருவின்வாசகங்கொண்டுகொற்றவன்
திருவின்கேள்வனைக்கொணர்மின்சென்றென
வருகவென்றனனென்றலோடும்வந்
தருகுசார்ந்தனனறிவினும்பரான். (கசு)

வந்தநம்பியைத்தம்பிதன்னொடு
முந்தைநான்மறைமுனிக்குக்காட்டிநற்
றந்தைநீதனித்தாயுநீயிவர்க்
கெந்தைதந்தனனியைந்தசெய்கென்றான். (கஎ)

கொடுத்தமைந்தரைக்கொண்டுசிந்தைமுந்
தெடுத்தசீற்றம்விட்டினிதுவாழ்த்திமேல்
அடுத்தவேள்விபோய்முடித்துநாமெனா
நடத்தன்மேயினனவைக்கணீங்கினான். (கஅ)

வென்றிவாள்புடைவிசித்துமெய்ம்மைபோல்
என்றுந்தேய்வுறாத்தூணியார்த்திரு
குன்றம்போன்றுயர்தோளிற்கொற்ற ‡ வில்
ஒன்றுதாங்கினானுலகந்தாங்கினான். (ககூ)

அன்னதம்பியுந்தானுமையனும்
மன்னனின்னுயிர்வழிக்கொண்டாலெனச்

---

* [illegible]னிபுங்கமுனிவன் என்றதும் பின் கறுத்தமாமுனி என்றதும் கோசிகனே.

† முனிவர்யாவருமிறைவன்பால் விஞ்சையாவுமடைந்து மீட்டுமவனிடத் தருவதியல்பாதலாற் பெய்யுமாரியாற் பெருகுவெ[illegible]ள்ளம்போய் - மொய்கொள் வேலைவாய் முடுகுமாறுபோலென்றுவமையாற் கூறினார்.

‡ உலகமெலாந்தன்னகட்டில் தாங்கிக்கிடவொருபொருளன்றென்பார் கொற்றவில் ஒன்றுதாங்கினானுலகந்தாங்கினானென்றார்.

சொன்னமாதவற்றொடர்ந்தசாயைபோல்
பொன்னின்மாநகர்ப்புரிசைநீங்கினான். (௨௦)

வரங்கண்மாசறத்தவஞ்செய்தோர்கள்வாழ்
புரங்கணேரிலாநகரநீங்கிப்போய்
அரங்கினாடுவார்சிலம்பினன்னநின்
றிரங்குவார்புனற்சரயுவெய்தினார். (௨௧)

கரும்புகால்பொரக்கமுகின்வார்ந்ததேன்
வரம்பைமீதிடுமருதவேலிவாய்
அரும்புகொங்கையாரம்மெலோதிபோல்
சுரும்புவாழ்வதோர்சோலைநண்ணினார். (௨௨)

தாழுமாமழைதழுவுநெற்றியால்
சூழியானைபோற்றோன்றுமால்வரைப்
பாழிமாமுகட்டுச்சிபச்சைமா
ஏழுமேறப்போயாறுமேறினார். (௨௩)

தேவுமாதவற்றொழுதுதேவர்தம்
நாவுளாகுதிநயக்கும்வேள்விவாய்த்
தாவுமாபுகைதழுவுசோலைகண்
டியாவதீதென்றனனவர்க்குமேனின்றான். (௨௪)

௭-வது. கையடைப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-௩௪௧.

௮-வது. தாடகைவதைப்படலம்.

* திங்கண்மேவுஞ்சடைத்தேவன்மேன்மாரவேள்
இங்குநின்றெய்யவும்மெரிதரும்நுதல்விழிப்
பொங்குகோபஞ்சுடப்பூளைவீயன்னதன்
அங்கம்வெந்தன்றுதொட்டநங்கனேயாயினான். (௧)

வாரணத்துரிவையான்மதனனைச்சினவுநாள்
ஈரமற்றங்கமிங்குகுத்தலாலிவணெலாம்
ஆரணத்துறையுளாயங்கநாடதுவுமக்
காரணக்குறியுடைக்காமனாச்சிரமமே. (௨)

பற்றவாவேரொடும்பசையறப்பிறவிபோய்
முற்றவாலுணர்வுமேன்முடுகினாறிவுசென்

* திங்கண்மேவுஞ்சடைத்தேவன்-சிவபெருமான். * தேவர்தம்நா-அனற்கடவுள்.

றற்றவானவனிருந்தியோகுசெய்தனனெனிற்
சொற்றவாமளவதோமற்றிதன்றூய்மையே. (௩)

என்றவந்தணனியம்பலும்வியந்தவ்வயிற்
சென்றுவந்தெதிரெழுஞ்செந்நெறிச்செல்வரோ
டன்றுறைந்தலர்கதிர்ப்பரிதிமண்டிலமகன்
குன்றினின்றிவரவோர்சுடுசரங்குறுகினார். (௪)

பருதிவானவனிலம்பசையறப்பருகுவான்
விருதுமேற்கொண்டெலாம்வேனிலேயல்லதோர்
இருதுவேறின்மையாலெரிசுடர்க்கடவுளும்
கருதின்வேமுள்ளமுங்காணில்வேம்நயனமும். (௫)

படியின்மேல்வெம்மையைப்பகரினும்பகருநா
முடியவேமுடியமூடிருளும்வான்முகடுவேம்
விடியுமேல்வெயிலும்வேமழையும்வேமின்னினோ
டிடியும்வேமென்னில்வேறியாவைவேவாதவே. (௬)

விஞ்சுவான்மழையின்மேலம்பும்வேலும்படச்
செஞ்செவேசெருமுகத்தன்றியேதிறனிலா
வஞ்சர்தீவினைகளான்மானமாமணியிழந்
தஞ்சினார்நெஞ்சுபோலென்றுமாறாதரோ. (௭)

பேய்பிளந்தொக்கநின்றுலர் * பெருங்கள்ளியின்
தாய்பிளந்துக்ககாரகில்களுந்தழையிலா
வேய்பிளந்துக்கவெண்டாளமும்விடவரா
வாய்பிளந்துக்கசெம்மணியுமேவனமெலாம். (௮)

பாருமோடாதுநீடாதெனும்பாலதே
சூருமோடாதுகூடாதரோசூரியன்
தேருமோடாதுமாமாகமீதேரினேர்
காருமோடாதுநீள்காலுமோடாதரோ. (௯)

கண்கிழித்துமிழ்விடக்கனலராவரசுகார்
விண்கிழித்தொளிருமின்னனையபன்மணிவெயில்
மண்கிழித்திடவெழுஞ்சுடர்கண்மண்மகளுடற்
புண்கிழித்திடவெழுங்குருதியேபோலுமே. (௧௰)

வேறு.

புழுங்குவெம்பசியொடுபுரளும்போரரா
விழுங்கவந்தெதிரெதிர்விரித்தவாயின்வாய்

---

* கள்ளிவயிறினகில்பிறக்குமென்றதனாற் பெருங்கள்ளியின்றாய் பிளந்துக்ககாரகில்களுமென்றார்.

முழங்குதிண்கரிபுகுமுடுகிமீமிசை
வழங்குவெங்கதிர்சுடமறைவுதேடியே. (௧௧)

ஏகவெங்கனலரசிருந்தகாட்டினில்
காகமுங்கரிகளுங்கரிந்துசாம்பின
மாகவெங்கனலெனும்வடவைத்தீச்சுட
மேகமுங்கரிந்திடைவீழ்ந்தபோலுமே. (௧௨)

கானகத்தியங்கியகழுதின்றேர்க்குலம்
தானகத்தெழுதலாற்றலைக்கொண்டோடிப்போய்
மேனிமிர்ந்தெழுந்திடல்விசும்பும்வேமெனு
வானவர்க்கிரங்கிநீர்வளர்ந்ததொத்ததே. (௧௩)

ஏய்ந்தவக்கனலிடையெழுந்தகானற்றேர்
காய்ந்தவக்கடுவனங்காக்கும்வேனிலின்
வேந்தனுக்கரசுவீற்றிருக்கச்செய்ததோர்
பாய்ந்தபொற்காலுடைப்பளிக்குப்பீடமே. (௧௪)

தாவரு * மிருவினைசெற்றுத்தள்ளரு
† மூவகைப்பகையரண்கடந்துமுத்தியில்
போவதுபுரிபவர்மனமும்பொன்விலைப்
பாவையர்மனமும்போற்பசையுமற்றதே. (௧௫)

பொரிபரற்படர்நிலம்பொடிந்துகீழுற
விரிதலிற்பெருவழிவிளங்கித்தோன்றலால்
அரிமணிப்பணத்தராவரசர்நாட்டினும்
எரிகதிர்க்கினிதுபுக்கியங்கலாயதே. (௧௬)

எரிந்தெழுகொடுஞ்சுரமினையதெய்தலும்
அருந்தவனிவர்பெரிதளவிலாற்றலைப்
பொருந்தினராயினும்பூவின்மெல்லியர்
வருந்துவர்சிறிதெனமனத்தினைக்கினான். (௧௭)

நோக்கினனவர்முகநோக்கநோக்குடைக்
கோக்குமரருமடிகுறுகநான்முகன்
ஆக்கிய ‡ விஞ்சைகளிரண்டுமவ்வழி
ஊக்கினனவையவருள்ளத்துள்ளினார். (௧௮)

உள்ளியகாலையினூழித்தீயினை
எள்ளுறுகொழுங்கனவெஞ்சும்வெஞ்சுரம்
தெள்ளுதண்புனலிடைச்சேறலொத்தது.
வள்ளலுமுனிவனைவணங்கிக்கூறுவான். (௧௯)

* இருவினை-புண்ணியபாவங்கள். † மூவகைப்பகை-காமவெகுளிமயக்கமென.
‡ விஞ்சைகளிரண்டு-பலம், அதிபலம் என்பன.

* சுழிபடுகங்கையந்தொங்கன்மௌலியான்
விழிபடவெந்ததோவேறுதானுண்டோ
பழிபடாமன்னவன்படைத்தநாட்டினுங்
கழிவதென்காரணமறிஞகூறென்றான். (௨௦)

என்றலுமிராமனைநோக்கியின்னுயிர்
கொன்றுழல்வாழ்க்கையள்கூற்றின்றோற்றத்தள்
அன்றியுமையிருநூறுமையன்மா
ஒன்றியவலியினளுறுதிகேளென. (௨௧)

மண்ணுருத்தெடுப்பினுங்கடலைவாரினும்
விண்ணுருத்திடிப்பினும்வேண்டிற்செய்கிற்பாள்
எண்ணுருத்தெரிவரும்பாவமீண்டியோர்
பெண்ணுருக்கொண்டெனத்தெரியும்பெற்றியாள். (௨௨)

† பெருவரையிரண்டொடும்பிறந்தநஞ்சொடும்
உருமுறழ்முழக்கொடுமூழித்தீயொடும்
இருபிறைசெறிந்தெழுகடலுண்டாமெனின்
வெருவருதோற்றத்தண்மேனிமானுமே. (௨௩)

சூடகவரவுறழ்சூலக்கையினள்
காடுறைவாழ்க்கையள்கண்ணிற்காண்பரேல்
‡ ஆடவர்பெண்மையையவாவுந்தோளினாய்
தாடகையென்பதச்சழக்கினாமமே. (௨௪)

கன்னவிற்றோளினாய்கமலத்தோனருள்
மன்னுயிரனைத்தையும்வாரிவாய்ப்படுத்
தின்னுயிர்வளர்க்குமோநெறிகொள்கூற்றநேர்
அன்னவள்யாவளென்றறையக்கேட்டியால். (௨௫)

இயக்கர்தங்குலத்துளானுலகமெங்கணும்
வியக்குறுமொய்ம்பினனெறியின்வெம்மையான்
மயக்கில்சற்சரனெனும்வலத்தினானுள்
துயக்கிலன்சுகேதுவென்றுளனோர்தூய்மையான். (௨௬)

அன்னவன்மகவிலாதயருஞ்சிந்தையான்
மன்னெடுந்தாமரைமலரின்வைகுறும்

---

* சுழிபடுகங்கையந்தொங்கன் மௌலியான்-சிவன். † வரையிரண்டு-தனங்கள், பிறந்தநஞ்சு-கண், ஊழித்தீ என்றது கூந்தலை, இருபிறை என்றது வளைந்தவெயிற்றை, கடலென்றது உருவத்தை, இருபிறைசெறிந்தெழுகடலென்றது இல்பொருளுவமை, ‡ ஆடவர்பெண்மையையவாவுந்தோளினாயென்றார் முற்றத்துறந்தமுனிவரும் இவன் அழகிற்சாலநைந்து துவக்குண்டமையை.

நன்னெடுமுதல்வனைவழுத்திநற்றவம்
பன்னெடும்பகலெலாம்பயின்றபான்மையான் (௨௭)

முந்தினனருமறைக்கிழவன்முற்றுநின்
சிந்தனையென்னெனச்சிறுவரின்மையான்
நொந்தனனருள்கெனநுணங்குகேள்வியாய்
மைந்தர்களிலையொருமகளுண்டாமென்றான். (௨௮)

பூமடமயிலினைப்பொருவும்பொற்பொடும்
ஏமுறுமதமலையீரைஞ்ஞூறுடைத்
தாமிகுவலியொடுந்தனையடோன்றுநீ
போவெனமலரயன்புகன்றுபோயினான். (௨௯)

ஆயவனருள்வழியலர்ந்ததாமரைச்
சேயவளெனவளர்செவ்விகண்டிவட்
காயவன்யார்கொலென்றாய்ந்துதன்கிளை
நாயகன்சுந்தனென்றவற்குநல்கினான். (௩0)

காமனுமிரதியுங்கலந்தகாட்சியி
தாமெனவியக்கனுமணங்களும்வே
றியாமமும்பகலுமோரீறின்றென்னலாய்த்
தாழ்ந்துபெருங்களிச்சலதிமூழ்கினார். (௩௧)

பற்பலநாட்செலீஇப் * பதுமைபோலிய
பொற்பினாள்வயிற்றிடைப்புவனமேங்கிட
வெற்பணிபுயத்துமாரீசனும்விறல்
மற்பொருசுவாகுவும்வந்துதோன்றினார். (௩௨)

மாயமும்வஞ்சமும்வரம்பிலாற்றலும்
தாயினும்பழகினார்தமக்குந்தேர்வொணா
தாயவர்வளர்வுழியவரையீன்றவக்
காய்சினத்தியக்கனுங்களிப்பின்மேன்மையான். (௩௩)

தீதுறுமவுணர்கடமைதீர்தர
மோதுறுகடலெலாமொருகைமொண்டிடு
† மாதவனுறைவிடமதனின்வந்துநீள்
பாதவமனைத்தையும்பறித்துவீசினான். (௩௪)

விழைவுறுமாதவம்வெஃகினோர்விரும்
புழைகலைபிரலையையுயிருண்டோங்கிய

---

* பதுமா என்றது பதுமையென நின்றது, ஈண்டு திருமகள். † மாதவனென்றதும் தமிழெனுமளப்பருஞ் சலதிதந்தவன் என்றதும் அகத்தியனை.

வழையொடுமரனெலாமடிப்பமாதவன்
தழலெழவிழித்தனன் சாம்பராயினான். (௩௫)

மற்றவன் விளிந்தமைமைந்தர்தம்மொடும்
பொற்றொடிகேட்டுவெங்கனலிற்பொங்குறா
முற்றுறமுடிக்குவென் முனியையென்றெழா
நற்றவனுறைதவிடமதனைநண்ணினாள். (௩௬)

இடியொடுமடங்கலும்வளியுமேங்கிடக்
கடிகெடவமரர்கள்கதிருமுட்குறத்
தடியுடைமுகிற்குலஞ்சலிப்பவண்டமும்
வெடிபடவதிர்த்தெதிர்விளித்துமண்டவே (௩௭)

தமிழெனமளப்பருஞ்சலதிதந்தவன்
உமிழ்கனல்விழிவழியொழுகவுங்கரித்
தழிவனசெய்தலாலரக்கராகியே
இழிகெனவுரைத்தனனசனியெஞ்சவே. (௩௮)

வெருக்கொளவுலகையும்விண்ணுளோரையும்
முருக்கியெவ்வுயிருமுண்டுழலுமூர்க்கராம்
அரக்கர்களாயினரக்கணத்தினில்
உருக்கியசெம்பெனவுமிழ்கட்டீயினர். (௩௯)

ஆங்கவன்வெகுளியுமறைந்தசாபமும்
தாங்கினரெதிர்செயுந்தருக்கிலாமையின்
நீங்கினர்சுமாலியைநேர்ந்துநிற்கியாம்
ஓங்கியபுதல்வரென்றுறவுகூர்ந்தனர். (௪௦)

அவனொடும்பாதலத்தனேகநாட்செலீஇத்
தவனுறு * தசமுகன்றனக்குமாதுலர்
இவரெனப்புடைத்தழித்துலகமெங்கணும்
பவனனிற்றிரிகுநர்பதின்மைந்தர்கள். (௪௧)

மிகுந்திறன்மைந்தரைவேறுநீங்குறாத்
தகுந்தொழின்முனிவரன்சலத்தையுண்ணியே
† வகுந்துவின்வசுவரிவதிந்ததிவ்வனம்
புகுந்தனளழலெனப்புழுங்குநெஞ்சினாள். (௪௨)

‡ உளப்பரும்பிணிப்புறாவுலோபமொன்றுமே
அளப்பருங்குணங்களையழிக்குமாறுபோல்
கிளப்பருங்கொடுமையவரக்கிகேடிலா
வளப்பருமருதவைப்பழித்துமாற்றினாள். (௪௩)

---

* தசமுகன்-இராவணன், † வகுந்து-வழி. ‡ உள்ளத்திற் பருமையாகியபிணிப்படையாத பற்றுள்ளமொன்றே அளவில்லாத நற்குணங்களை யழிக்கும் வண்ணம் போல வெனக்கொள்க.

வேறு.

இலங்கையரசன்பணியமைந்தொரிடையூறு
விலங்கல்வலிகொண்டென துவேள்விநலிகின்றாள்
அலங்கன்முகிலேயவளிவ்வங்கநிலமெங்கும்
குலங்களொடடங்கநனிகொன்றுதிரிகின்றாள். (௪௪)

முன்னுலகளித்துமுறைநின்றவுயிரெல்லாம்
தன்னுயிரெனக்கருது * தன்மையவன்மைந்த
என்னினியுணர்த்துவதினிச்சிறிதுநாளின்
மன்னுயிரனைத்தையும்வயிற்றினிடுமென்றான் (௪௫)

அங்கிறைவனப்பரிசுரைப்பவதுகேளா
கொங்குறைநறைக்குலமலர்ச்சென்னிகுனுக்கர்
எங்குறைவதித்தொழிலியற்று வளென்றான்
† சங்குறைகரத்தொருதனிச்சிலைதரித்தான். (௪௬)

கைவரையெனத்தகையகாளையுரைகேளா
ஐவரையகத்திடையடைத்தமுனியைய
இவ்வரையிருப்பதவளென்பதனின்முன்போர்
மைவரைநெருப்பெரியவந்ததெனவந்தாள். (௪௭)

சிலம்புகள்சிலம்பிடைசெறித்தகழலோடு
நிலம்புகமிதித்தனணெளித்தகுழிவேலைச்
சலம்புகவனற்றறுகணந்தகனுமஞ்சிப்
பிலம்புகநிலக்கிரிகள்பின்றொடரவந்தாள். (௪௮)

இறைக்கடைதுடித்தபுருவத்தளெயிறென்னும்
பிறைக்கடைபிறக்கிடமடித்தவிலவாயள்
மறைக்கடையரக்கி ‡ வடவைக்கனலிரண்டாய்
நிறைக்கடன்முளைத்தெனநெருப்பெழவிழித்தாள். (௪௯)

கடங்கலுழ்தடங்களிறுகையொடுகைதெற்று
வடங்கொள்நுடங்குமிடையாண்மறுகிவாளேன்
இடங்களுமெட்டுந்திசையுமேழுலகுமெங்கும்
அடங்கலுமடங்கவுருமஞ்சநனியார்த்தாள். (௫௦)

---

* மதனறிவுதந்தையறிவாகலின் நீயுமவ்வாறு செய்வையென்பர் தன்மையவன்மைந்த எனவுங்கூறினார். † சங்கேந்தியகை வறிதேகிடப்ப அறத்தை நிறுத்தற்பொருட்டசுரரைக் கொல்லவில்லேந்தி நிற்றலின், சங்குறைகரத்தொருதனிச்சிலைதரித்தானென்றார். ‡ கரியகடல்போல்மேனியும், அக்கடலில் வடவைத்தீயிரண்டாய் முளைத்தாற்போல் விளைந்த வெயிறுந் தோன்றலின் வடவைக்கனலிரண்டாய் நிறைக்கடன்முளைத்தனவென்றார்.

ஆர்த்தவரைநோக்கிநகைசெய்தவருமஞ்சக்
கூர்த்தநுதிமுத்தலையிற்கொடியகூற்றைநபி
பார்த்தெயிறுதின்றுபகுவாய்முழைதிறந்தேதன்
வார்த்தையுரைசெய்தனளிடிக்குமழையன்னாள். (௫௧)

நடக்கரும்வலத்தெனதுகாவலிதில்யாவும்
கெடக்கரிசறுத்தனெனினிச்சுவைகிடக்கும்
விடக்கரிதெனக்கருதியோவிதிகொடுந்தப்
படக்கருதியோபகர்மின்வந்தபரிசென்றே. (௫௨)

மேகமவையிற்றுகவிழித்தனள்புழுங்கா
நாகவரையற்றுகவுதைத்தனண் † மதித்திண்
பாகமெனுமுற்றெயிறதுக்கியயில்பற்று
வாகமுறவுய்த்தெறிவெனென்றெதிரழன்றாள். (௫௩)

அண்ணன்முனிவற்கனுகருத்தெனினுமாவி
உண்ணெனவடிக்கணைதொடுக்கிலனுயர்க்கே
‡ துண்ணெனும்வினைத்தொழிருடங்கியுள்ளேனும்
பெண்ணெனமனத்திடை § பெருந்தகைநினைந்தான். (௫௪)

வேறு.

வெறிந்தசெம்மயிர்வெள்ளெய்ற்றாளயில்
எறிந்துகொல்வெனென்றேற்கவும்பார்க்கிலாச்
செறிந்ததாரவன்சிந்தைநகருத்தெலாம்
அறிந்துநான்மறையந்தணன்கூறுவான். (௫௫)

தீதென்றுள்ளவையாவையுஞ்செய்தமைக்
கோதென்றுண்டிலளித்தனையேகுறை
யாதென்றெண்ணுவதிக்கொடியாளையும்
மாதென்றெண்ணுவதோமணிப்பூணினாய். (௫௬)

நாண்மையேயுடையார்பிழைத்தார்க்கு
வாண்மையேபெற்றவன்றிறலாடவர்
§ தோண்மையேயிவள்பேர்சொலத்தோற்பரேல்
ஆண்மையென்னுமதாரிடைவைகுமே. (௫௭)

இந்திரன்னிடைந்தானுண்டேடோடினார்
தந்திரம்படத்தானவர்வானவர்

---

* விடக்கு-ஊண். † மதித்திண்பாகம்-பிறைக்கோடு. ‡ வினைத்தொழில் என்றது ஒருபொருட்பன்மொழி. துண்ணெனுமென்ற அடையான் தீத்தொழில் என்பது படநின்றது. § பெருந்தகை-பெருந்தன்மையுடைய இராமனை அன்மொழித்தொகை. § தோண்மை-தோளாற்றலை. வாண்மை-வாட்டொழிற்சிறப்பை.

மந்தரம்மிவடோரளனின்மைந்தரோ
டந்தரம்மினியாதுகொலாண்மையே. (ருஅ)

* மன்னர்மன்னவன்காதலமற்றுமொன்
றின்னம்யானுரைக்கின்றதியாதெனின்
முன்னோர்காலநிகழ்ந்தமுறைமையீ
தென்னவோதலுற்றான்றவத்திறலான். (ருகூ)

† பிருகுவென்னும்பெருந்தவன்றன்மனை
வருகயற்கட்கியாதிவல் ‡ லாசுரர்க்
குருகுகாதலுறவுறவாதலே
கருதியாவிகவர்ந்தனனேமியான். (கூ0)

வானகத்தினின்மண்ணினின்மன்னுயிர்
¶ போனகந்தனக்கென்றெனும்புந்திய
தானவள் § குமதிப்பெயராடனை
ஊனெழித்தனன்வச்சிரத்தும்பர்கோன். (கூக)

ஆதலாலரிக்காகண்டலன்றனக்
கோதுகீர்த்தியுடையவல்லாதிடை
ஏதமென்பனவெய்தியவோசொலாம்
தாதடர்ந்துதயங்கியதாரினாய். (கூஉ)

கறங்கிடத்திகிரிப்படிகாத்தவர்
பிறங்கடைப்பெரியோய்பெரியோரொடும்
மறங்கொடித்தரைமன்னுயிர்மாய்த்துநின்
றறங்கெடுத்தவட்காண்மையும்வேண்டுமோ. (கூங)

சாற்றுநாளற்றதெண்ணணித்தருமம்பார்த்
தேற்றும்விண்ணெனன்பதன்றியிவளைப்போல்
○ நாற்றங்கேட்டலுந்தின்னநயப்பதோர்
கூற்றுண்டோசொலேகூற்றுழல்வேலினாய். (கூச)

மன்னும்பல்லுயிர்வாரித்தன்வாய்ப்பெய்து
தின்னும்புன்மையிற்றீமையதேயைய
பின்னுநதாழ்குழற்பேதைமைப்பெண்ணிவள்
என்னுந்தன்மையெளிமையின்பாலதே. (கூரு)

* சக்கரவர்த்தித் திருமகனென்றழைப்பது நோக்கி 'மன்னர்மன்ன வன்காதல' என்றார். † பிருகுமனைவிகியாதியென்பாள் அசுரர்க்குப் புக லிடந்தந்து மாயோன்சக்கரத்தான்மாண்டாளென்பது. ‡ ஆசுரரென்றது நீட்டும்வழி நீட்டல்பெற்றது.

¶ போனகம்-உண்டி. § குமதி-விரோசனனென்னுமசுரன் மகள். ○ நாற்றங்கேட்டலுமென்றதிலக்கணை, கொலையென்றது ஐயீற்று ஒவ்வொரு மைவினைமுற்று. நாளற்றதெண்ணணித் தருமம்பார்த்து விண்ணிலேற்றுங் கூற்றைப்போலாது நாற்றங்கேட்டலுந் தின்னநயப்பதுநோக்கி, ஓர் கூற் றுண்டோ என்றார்.

ஈறினல்லறம்பார்த்திசைத்தேனிவட்
சீறிநின்றிதுசெப்புகின்றேனலேன்
ஆறிநின்றதறனன்றரக்கியைக்
கோறியென்றெதிரந்தணன்கூறினான். (௬௬)

அய்யனங்கதுகேட்டறனல்லவும்
எய்தினாலதுசெய்கவென்றேவினால்
மெய்யநின்னுரைவேதமெனக்கொடு
செய்கையன்றோவறஞ்செய்யுமாறென்றான். (௬௭)

* கங்கைத்தீம்புனனாடன்கருத்தையும்
மங்கைத்தீயனையாளும்மனக்கொளாச்
செங்கைசூலவெந்தீயினைத்தீயதன்
வெங்கட்டீயொடுமேற்செலவீசினாள். (௬௮)

† புதியகூற்றனையாள்புகைந்தேவிய
கதிர்கொண்மூவிலைக்காலவெந்தீமுனி
விதியைமேற்கொண்டுநின்றவன்மேலுமா
மதியின்மேல்வருங்கோளெனவந்ததே. (௬௯)

மாலுமக்கணம்வாளியைத்தொட்டதும்
கோலவிற்கால்குனித்ததுங்கண்டிலர்
காலனைப்பறித்தக்கடியாள்விட்ட
சூலமற்றன துண்டங்கள்கண்டனர். (௭0)

அல்லின்மாரியனையநிறத்தவள்
சொல்லின்மாத்திரையிற்கடலார்ப்பன
கல்லின்மாரியைக்கைவகுத்தாளது
வில்லின்மாரியின்வீரன்விலக்கினான். (௭௧)

வேறு.

‡ சொல்லொக்குங்கடியவேகச்சுடுசரங்கரியசெம்மல்
அல்லொக்குநிறத்தினாண்மேல்விடுதலும்வயிரக்குன்றக்
கல்லொக்கு § நெஞ்சிற்றங்காதப்புறங்கழன்றுகல்லாப்
புல்லர்க்குநல்லோர்சொன்னபொருளெனப்போயிற்றன்றே. (௭௨)

---

* கங்கைத் தீம்புனனாடனென்றதிராமனை தீயானது புனலையவித்தன் முறையாதலின் இம்புனனாடனென்றும், தீயனையாளுமென்றுங்கூறினார். † நாற்றங்கேட்டலுந் தின்னநயப்பதோர் கூற்றுண்டோ என்றதை வற்புறுத்தற்குப் புதிய கூற்றனையாளென்றார். ‡ நிறைமொழிஎன்பதுபற்றிச்சொல் லொக்குமெனச் சுடுசரத்துக் குவமைகூறினார். § கல்வியறிவில்லாத புல்லறிவுடையார்க்கு நல்லோர்கூறிய உறுதிமொழிசிறிதும் பயன்படாமையின் 'நெஞ்சிற்றங்காதப் புறங்கழன்று புல்லர்க்கு நல்லோர் சொன்னபொரு' ளென்றுவமை முகத்தாற்கூறினார்.

பொன்னெடுங்குன்றமன்னான்புகர்முகப்பகழியென்னும்
மன்னெடுங்காலவன்காற்றடித்தலுமிடித்துவானில்
கன்னெடுமாரிபெய்யக்கடையுகத்தெழுந்தமேகம்
மின்னொடுமசனியோடும்வீழ்வதேபோலவீழ்ந்தாள். (௭௩)

பொடியுடைக்கானமெங்குங்குருதிநீர்பொங்கவீழ்ந்த
தடியுடையெயிற்றுப்பேழ்வாய்த்தாடகைதலைகடோறும்
முடியுடையரக்கற்கந்நாண்முந்தியுற்பாதமாகப்
படியிடையற்றுவீழ்ந்தவெற்றியம்பதாகையொத்தாள். (௭௪)

கான்றிரிந்தாழியாக்கத்தாடகைக்கடினமார்பத்
தூன்றியபகழிவாயூடொழுகியகுருதிவெள்ளம்
ஆன்றவக்கானமெல்லாமாயினதந்திமாலைத்
தோன்றியசெக்கர்வானந்தொடக்கற்றுவீழ்ந்ததொத்தே. (௭௫)

வாசநாண்மலரோனன்னமாமுனிபணிமறுத
காசுலாங்கனகப்பைம்பூட்காகுத்தன்கன்னிப்போரில்
கூசிவாளரக்கர்தங்கள்குலத்துயிர்குடிக்கவஞ்சி
ஆசையாலுழலுங்கூற்றுஞ்சுவைசிறிதறிந்ததன்றே. (௭௬)

யாமுமெம்மிருக்கைபெற்றேமுனக்கிடையூறுமில்லை
கோமகற்கினியதெய்வப்படைக்கலங்கொடுத்தியென்றா
மாமுனிக்குரைத்துப்பின்னர் * விற்கொண்டமழையனான்மேல்
பூமழைபொழிந்துவாழ்த்திவிண்ணவர்போயினாரே. (௭௭)

அ-வது. தாடகைவதைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௪௦௬.

௯-வது. வேள்விப்படலம்.

விண்ணவர்போயபின்றைவிரிந்தபூமழையினாலே
தண்ணெனுங்கானநீங்கித்தாங்கருந்தவத்தின்மிக்கோன்
மண்ணவர்வறுமைநோய்க்குமருந்தனசடையன்வெண்ணெய்
அண்ணறன்சொல்லேயன்னபடைக்கலமருளினானே. (௧)

ஆறியவறிஞன்கூறியளித்தலுமண்ணறன்பால்
ஊறியவுவகையோடுமும்பர்தம்படைகளெல்லாம்
தேறியமனத்தான்செய்தநல்வினைப்பயன்களெல்லாம்
மாறியபிறப்பிற்றேடிவருவபோல்வந்தவன்றே. (௨)

---

* இந்திரவில்லொடுதோன்று மேகம்போலெய்தியமை நோக்கி 'விற்கொண்ட மழையனா' னென்றார்.

மேவினம்பிரிதலாற்றேம்வீரநீவீதியினெம்மை
ஏவினசெய்துநிற்றுமிளையவன்போலவென்று
தேவர்தம்படைகள்செப்பச்செவ்விதென்றவனுநேரப்
* பூவைபோனிறத்தினாற்குப்புறத்தொழில்புரிந்தவன்றே. (௩)

இனையனநிகழ்ந்தபின்னர்க்காவதமிரண்டுசென்றார்
அனையவர்காணவாண்டோரரவம்வந்தணுகித்தோன்ற
முனைவவீதியாவதென்றுமுன்னவன்வினவப்பின்னர்
வினையறநோற்றுநின்றமேலவன்விளம்பலுற்றான். (௪)

யானசமடுவிற்றோன்றிவருதலாற்சரயுவென்றே
மேன்முறையமரர்போற்றும்விழுநதியதனினோடும்
ஆனகோமதிவந்தெய்துமரவமதென்னவப்பாற்
போன்பின்பவங்கடீர்க்கும்புனிதமாநதியையுற்றார். (௫)

சுரர்தொழுதிறைஞ்சற்கொத்ததூநதியாவதென்று
† வரமுனிதன்னையண்ணல்வினவுறமலருள்வைகும்
பிரமனன்றளித்தவென்றிப்பெருந்தகைக்குசனென்றோதும்
அரசர்கோன்மனைவிதன்பாலளித்தவர்நால்வராகும். (௬)

குசன்குசநாபன்கோதில்குணத்தினதூர்த்தன்கொற்றத்
திசைகெழுவசுவென்றோதுமிவர்பெயரிவர்கடம்மில்
குசன்கவுசாம்பிநாபன்குளிர்மகோதயமதூர்த்தன்
வசையிறன்மவனமற்றைவசுகிரிவிரசம்வாழ்ந்தார். (௭)

அவர்களிற்குசநாபற்கேயையிருபதின்மரஞ்சொல்
துவரிதழ்த்தெரிவைநல்லார்தோன்றினர்வளருநாளில்
இவர்பொழிற்றலைக்கணாயத்தெய்துழிவாயுவெய்திக்
கவர்மனத்தினனாயந்தக்கன்னியர்தம்மைநோக்கி. (௮)

‡ கொடித்தனிமகரங்கொண்டான்குனிசிலைச்சரத்தானொந்தேன்
வடித்தடங்கண்ணீரென்னைமணத்திரென்றுரைப்பவெந்தை,
அடித்தலத்துணர்த்துநீரோடளித்திடினணைதுமென்ன
ஒடித்தனன்வெரிநைவீழ்ந்தாரொளிவளைமகளிரெல்லாம். (௯)

சமிரணனகன்றபின்னர்த்தையலார்தவழ்ந்துசென்றே
அமிர்துகுகுதலைமாழ்கியரசன்மாட்டுரைப்பவன்றான்
நிமிர்குழன்மடவார்த்தேற்றிநிறைதவன்சூளிநல்கும்
திமிரறுபிரமதத்தற்களித்தனன்றிருவனாரை. (௧௦)

---

* காயாம்பூவையொத்த நிறத்தனாகலின் 'பூவைபோனிறத்தினா' னென்றார்.

† வரமுனி கோசிகன்.

‡ கொடித்தனிமகரங் கொண்டவன்-மன்மதன்.

அவன்மலர்க்கைகடீண்டக்கூனிமிர்ந்தழகுவாய்த்தார்
புவனமுற்றுடையகோவும்புதல்வரில்லாமைவேள்வி
தவர்களிற்புரிதலோடுந்தகையுறத்தழுவினாப்பண்
கவனவேகத்துரங்கக்காதிவந்துதயஞ்செய்தான். (௧௧)

அன்னவன்றனக்குவேந்தனரசொடுமுடியுமீந்து
பொன்னகரடைந்தபின்னர்ப்புகழ்மகோதயத்தில்வாழும்
மன்னவன்காதிக்கியானுங்கவுசிகையென்னுமாது
முன்னர்வந்துதிப்பவந்தமுடியுடைவேந்தர்வேந்தன். (௧௨)

பிருகுவின்மதலையாயபெருந்தகைப்பிதாவுமொவ்வா
இருசிகனென்பவற்குமெல்லியலாளையீந்தான்
அருமறையவனுஞ்சின்னாளறம்பொருளின்பமுற்றி
விரிமலர்த்தவிசோன்றன்பால்விழுத்தவம்புரிந்துமீண்டான். (௧௩)

காதலன்சேணிநீங்கக்கவுசிகைதரிக்கலாற்றாள்
மீதுறப்படரலுற்றாள்விழுநதிவடிவமாகி
மாதவர்க்கரசுநோக்கிமாநிலத்துறுகணீக்கப்
போதுகநதியாயென்னாப்பூமகனுலகுபுக்கான். (௧௪)

எம்முனாணங்கையிந்தவிருநதியாயினாளென்
றம்முனிபுகலக்கேளாவதிசயமிகவுந்தோன்றச்
செம்மலுமிளையகோவுஞ்சிறிதிடந்தீர்ந்தபின்னர்
மைம்மலிபொழில்யாதென்னமாதவன்கூறலுற்றான். (௧௫)

தங்கணாயகரிற்றெய்வந்தவம்பிறிதிலவென்றெண்ணும்
மங்கைமார்சிந்தைபோலத்தூயதுமற்றுங்கேளாய்
எங்கணான்மறைக்குந்தேவரறிவிற்கும்பிறர்க்குமெட்டாச்
செங்கண்மாலிருந்துமேனாட்செய்தவஞ்செய்ததன்றே. (௧௬)

பாரின்பால்விசும்பின்பாலும்பற்றறப்படிப்பதன்னான்
பேரென்பானவன்செய்மாயப்பெரும்பிணக்கொருங்குதேர்வார்
ஆரென்பானமலமூர்த்திகருதியதறிதறேற்றாம்
ஈரைம்பானூழிகாலமிருந்தவமியற்றியிட்டான். (௧௭)

மாவலியின்கதை.

வேறு.

ஆனவனிங்குறைகின்றவந்நாள்வாய்
ஊனமின்ஞாலமொடுங்குமெயிற்றாண்
ஏனமெனுந்திறன்மாவலியென்பான்
வானமும்வையமும்வெளவுதல்செய்தான். (௧௮)

செய்தவர்வானவருஞ்செயலாற்றா
நெய்தவழ்வேள்வியைமுற்றிடநின்றான்
அய்யமில்சிந்தையனந்தணர்தம்பால்
வய்யமும்யாவும்வழங்கவலித்தான். (௧௯)

ஆயதறிந்தனர்வானவரந்நாள்
மாயனைவந்துவணங்கியிரந்தார்
தீயவன்வெந்தொழிதீரெனநின்றார்
நாயகனும்மதுசெய்யநயந்தான். (௨0)

வாமனவதாரம்.

காலநுனித்துணர்காசிபனென்னும்
வாலறிவற்கதிதிக்கொருமகவாய்
நீலநிறத்துநெடுந்தகைவந்தோர்
* ஆலமர்வித்தினருங்குறளானான். (௨௧)

முப்புரிநூலினன்முஞ்சியன்விஞ்சை
கற்பதொர்நாவனனற்பவித்கையன்
† அற்புதனற்புதரேயறியுந்தன்
சிற்பதமொப்பதோர்மெய்க்கொடுசென்றான். (௨௨)

அன்றவன்வந்ததறிந்துலகெல்லாம்
வென்றவன்முந்திவியந்தெதிர்கொண்டான்
நின்றனினந்தணரில்லைநிறைந்தோய்
என்றனினுய்ந்தவர்யாரினியென்றான். (௨௩)

ஆண்டகையவ்வழிகூறவறிந்தோன்
வேண்டினர்வேட்கையின்மேற்படவீசி
‡ நீண்டகையாயினிநின்னுழைவந்தோர்
மாண்டவரல்லவர்மாண்பிலரென்றான். (௨௪)

சிந்தையுவந்தெதிரென்செயவென்றான்
அந்தணன்மூவடிமண்ணருளுண்டேல்
வெந்திறலாயிதுவேண்டுமெனாமுன்
தந்தனனென்றனன்வெள்ளிதடுத்தான். (௨௫)

---

* ஆலமர்வித்தினருங்குறளானான்-ஆலின் சிறுவித்துப்போலச் சிறு குறள்வடிவமானான் என்றபடியென்க. அதன்வித்துமிகச்சிறியதேனும் யானை, தேர், குதிரை, காலாள் என்னு நால்வகைப்படைக்குந் தங்கநிழல் பயப்பதுபோல முன்னர்ச் சிறுகுறளாகச்சென்று பின்நீண்டமையினவ்வாறுவமைகூறினர். அமர்-சிறுமை, இதனை 'அமர் மெய்யுடையவனானான்' என்றிவ்வாசிரியர் கூறுதலுங்காண்க.

† மெய்யுணர்ச்சியுடையராற் காணப்படுபவனாகலின் 'அற்புதரேயறியு' மென்றும், அவர்க்குத்தான் இறப்ப நுண்ணிய ஞானத்திருமேனிகாட்டலின் 'சிற்பதமொப்பதோர் மெய்க்கொடுசென்றான்' என்றுங்கூறினர்.

‡ ஈகைக்குணமுடைமையிற் சிறந்தோனாகலின் 'நீண்டகையாயென்றும், நின்னுழையிரந்தார் மாட்சிமையுடையராகலின் 'மாண்டவ' ரென்றும், அல்லாதாரன்ன ரல்லராகலின், அல்லவர்மாண்பில' ரென்றுங் கூறினர்.

கண்டதிறத்திதுகைதவமைய
கொண்டனிறக்குறளென்பதுகொள்ளேல்
* அண்டமுமுற்றுமகண்டமுமேனுள்
உண்டவனுமிதுணர்ந்துகொளென்றான். (௨௬)

நினக்கிலையென்கைநிமிர்ந்திடவந்து
தனக்கியலாவகைதாழ்வதுதாழ்வில்
† கனக்கரியானதுகைத்தலமென்னின்
எனக்கிதன்மேனலம்யாதுகொலென்றான். (௨௭)

துன்னினர்துன்னலரென்பதுசொல்லார்
முன்னியநன்னெறிநூலவர்முன்வந்
‡ துன்னியதானமுயர்ந்தவர்கொள்க
என்னினிவன்றுணையாவருயர்ந்தார். (௨௮)

$ வெள்ளியையாதல்விளம்பினைமேலோர்
வள்ளியராகவழங்குவதல்லால்
எள்ளுவவென்சிலவின்னுயிரேனும்
கொள்ளுதல்தீதுகொடுப்பதுநன்றால். (௨௯)

மாய்ந்தவர்மாய்ந்தவரல்லர்கண்மாயா
§ ஏந்தியகைகொடிரந்தவரேந்தாய்
வீய்ந்தவரென்பவர்வீய்ந்தவரேனும்
ஈய்ந்தவரல்லதிருந்தவர்யாரே. (௩0)

அடுப்பவரும்பழிசெய்ஞ்ஞருமல்லர்
கொடுப்பவர்முன்புகொடேலெனநின்று
தடுப்பவரேபகைதம்மையுமன்னர்
கெடுப்பவரன்னதொர்கேடிலையென்றான். (௩௧)

கட்டுரையிற்றமகைத்துளபோழ்தே
இட்டிசைகொண்டறனெய்தமுயன்றோர்
உட்டெறுவெம்பகையாவது ○ லோபம்
விட்டிடவென்றுவிலக்கினர்தாமே. (௩௨)

---

* உலகமுண்ட பெருவாயனாகலின் 'அண்டமுமுற்று மகண்டமுமேனு ளுண்டவ' னென்றதென்க. † கனக்கரியான்-மேகம்போலுங் கரியமேனியன். ‡ தக்குழியீதலே நன்றென்பதுபற்றி ' உன்னியதான முயர்ந்தவர் கொள்க' என்றார்.

$ வெள்ளியை வெள்ளியென்னும் பெயரையுடைய, எனவும் வெள்ளறிவையுடைய எனவு மிருபொருள்படநின்றது நேரே ஆசிரியனாகலின்சிலேடையாகக் கூறினான், ¶ கொள்ளுதல்தீது கொடுப்பது நன்று என்பதனை 'நல்லாறெனினுங் கொளறீது மேலுலகமில்லெனினு மீதலே நன்று என்ற குறட்பொருளை யுட்கொண்டது.

§ செத்தாரின்வேறல்லாராதலின் 'ஏந்தியகை கொடிரந்தவர் வீய்ந்தவ' ரென்றும்புகழுடம்போ டழியாதிருப்பது கருதி 'வீய்ந்தவரேனும் ஈந்தவரல்ல திருந்தவர்யாரே யென்றுங்கூறினார். ○ உலோபம் - ஒருவர்க்கிருக்கினிருமையும் கெடுக்குமாயுதமென்க.

வேறு.

எடுத்தொருவருக்கொருவரீவதனின் முன்னே
தடுப்பதுநினக்கிதழகோதகைவில்வெள்ளி
* கொடுப்பதுவிலக்குகொடியோயுனதுசுற்றம்
உடுப்பதுவுமுண்பதுவுமின்றிவிடுகின்றாய். (௩௩)

வேறு.

மூடியவிம்மொழியெலாமொழிந்துமந்திரி
கொடியனென்றுரைத்தசொலொன்றுங்கொண்டியன்
அடியொருமூன்றுநீயளந்துகொள்கென
நெடியவன்குறியகைநீரினீட்டினான். (௩௪)

† கயந்தருநறும்புனல்கையிற்றீண்டலும்
பயந்தவர்களுமிகழ்குறளன்பார்த்தெதிர்
வியர்ந்தவர்வெருக்கொளவிசும்பினோங்கினான்
உயர்ந்தவர்க்குதவியவுதவியொப்பவே. (௩௫)

நின்றகான்மண்ணெலாநிரப்பியப்புறம்
சென்றுபாவிற்றிலைசிறிதுபாரென
ஒன்றவானகமெலாமொடுக்கியும்பரை
வென்றகான்மீண்டதுவெளிபெறாமையே. (௩௬)

உலகெலாமுள்ளடியடக்கியோரடிக்
கலகிலாதவ்வடிக்கன்பன்மெய்யதாம்
இலைகுலாந்துழாய்முடியேகநாயகன்
சிலைகுலாந்தோளினாய்சிறியன்சாலவே. (௩௭)

உரியதிந்திரற்கிதென்றுலகமீந்துபோய்
விரிதிரைப்பாற்கடற்பள்ளிமேவினான்
கரியவனுலகெலாங்கடந்ததாளிணை
திருமகள்கரந்தொடச்சிவந்துகாட்டவே. (௩௮)

ஆதலாலறுவினையறுக்குமாரிய
காதலாற்கண்டவர்பிறவிகாண்குறார்
வேதநான்முறைமையால்வேள்விமுற்றுவேற்
கீதலாதில்லைவேறிருக்கற்பாலதே. (௩௯)

ஈண்டிருந்தியற்றுவென்யாகம்யானென
நீண்டபூம்பழுவத்துநெறியினெய்திப்பின்

---

*கொடுப்பதுவிலக்கு கொடியோயென்பதனை 'கெடுப்ப தழுக்கறுப்பான் சுற்றமுடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக்கெடும்' என்பதனானறிக.

† புதுப்புனலென்றது கருதி 'கயந்தருநறும்புன' லென்றார்.

வேண்டுவகொண்டுதன்வேள்விமேவினான்
காண்டகுகுமாரரைக்காவலேவியே. (௪0)

எண்ணுதற்காக்கரிதிரண்டுமூன்றுநாள்
விண்ணவர்காக்கியமுனிவன்வேள்வியை
மண்ணினைக்காக்கின்றமன்னன்மைந்தர்கள்
கண்ணினைக்காக்கின்றவிமையிற்காத்தனர். (௪௧)

காத்தனர்திரிகின்றகாளைவீரரில்
மூத்தவன்முழுதுணர்முனியைமுன்னிநீ
தீத்தொழிலியற்றுவரென்றதீயவர்
* ஏத்தருங்குணத்தினாய்வருவதென்றென்றான். (௪௨)

வார்த்தைமாறுரைத்திலன்முனிவன்மௌனியாய்ப்
போர்த்தொழிற்குமரனுந்தொழுதுபோந்தபின்
பார்த்தனன்விசும்பினைப் † பருவமேகம்போல்
ஆர்த்தனரிடித்தனரசனியஞ்சவே. (௪௩)

எய்தனரெறிந்தனரெறியுநீருமாப்
பெய்தனர்பெருவரைபிடுங்கிவீசினர்
வைதனர்தெழித்தனர்மழுக்கொண்டோச்சினர்
செய்தனரொன்றலதீயமாயமே. (௪௪)

ஊனகுபடைக்கலமுருத்துவீசின
கானகமழைத்தனகாலமாரிபோல்
மீனகுதிரைக்கடல்விசும்புபோர்த்தென
வானகமறைத்தனவளைந்தசேனையே. (௪௫)

வில்லொடுபகழிவாண்மிடைந்துலாவிடப்
பல்லியங்கிடிப்பினினிடிக்கும்பல்படை
ஒல்லெனவுரறியவூழிப்பேர்ச்சியுள்
வல்லைவந்தெழுந்ததோர்மழையும்போன்றவே. (௪௬)

கவருடையெயிற்றினர்கடித்தவாயினர்
துவர்நிறப்பங்கியர்சுழல்கட்டியினர்
பவர்சடையந்தணன்பணித்ததீயவர்
இவரெனவிலக்குவற்கிராமன்காட்டினான். (௪௭)

கண்டவக்குமரனுங்கடைக்கண்டீயூக
விண்டனைநோக்கித்தன்வில்லைநோக்கினான்

---

* ஏத்தவருங்குணத்தினாயென்றது-ஈறுதொகுக்கப்பட்டது.

† பருவமேகம்-கார்காலமேகம்.

அண்டர்நாயகவினிக்காண்டியீண்டவர்
துண்டம்வீழ்வனவெனத்தொழுதுசொல்லினான். (சஅ)

தூமவேலரக்கர்தங்கிணமுஞ்சோரியும்
ஓமவெங்கனலிடையுகுமென்றுன்னியத்
தாமரைக்கண்ணனுஞ்சரங்களேகொடு
கோமுனியிருக்கையோர்கூடமாக்கினான். (சகூ)

நஞ்சுடவெழுதலுநடுங்கிநாண்மதிச்
செஞ்சடைக்கடவுளையடையுந்தேவர்போல்
வஞ்சனையரக்கரைவெருவிமாதவர்
அஞ்சனவண்ணநின்னபயம்யாமென்றார். (ருo)

கவித்தனன்கரதலங்கலங்கனீரெனச்
செவித்தலநிறுத்தினன்சிலையின்றெய்வநாண்
புவித்தலங்குருதியின்புணரியாக்கினன்
குவித்தனனரக்கர்தஞ்சிரத்தின்குன்றமே. (ருக)

திருமகணாயகன் * தெய்வவாளிதான்
வெருவருதாடகைபயந்தவீரர்கள்
இருவரினொருவனைக்கடலினிட்டதங்
கொருவனையந்தகபுரத்தினுய்த்ததே. (ருஉ)

தணர்த்தபூந்தொடையலான்பகழிதூவினான்
கணத்திடைவிசும்பினைக்கவித்துத்தூர்த்தலால்
பிணத்திடைநடந்திவர்பிடிப்பரீண்டெனா
உணர்த்தினரொருவர்முனொருவரோடினார். (ருங)

ஓடினவரக்கரையுருமின்வெங்கணை
கூடின † குறைத்தலைமிறைத்துக்கூத்துநின்
றாடினவலகையுமையன்கீர்த்தியைப்
பாடினபறந்தனபறவைப்பந்தரே. (ருச)

பந்தரைக்கிழித்தனபரந்தபூமழை
அந்தரதுந்துமிமுகிலினார்த்தன
இந்திரன்முதலியவமரரீண்டினார்
சுந்தரவில்லியைத்தொழுதுவாழ்த்தினார். (ருரு)

வேறு.

புனிதமாதவராசியின்பூமழைபொழிந்தார்
அனையகானத்துமரங்களுமலர்மழைசொரிந்த

---

* காந்தருவக்கணை-அக்கினிக்கணை, வாயுக்கணை, இவற்றை முறையே சுபாகுமாரீசன், இவரையொழித்தற்கு அரக்கர்மேல் விடுத்தலைக்காண்க.

† குறைத்தலை-கவந்தம்

முனியுமவ்வழிவேள்வியைமுறைமையின்முற்றி
இனியசிந்தையனிராமனுக்கினையனவிசைத்தான். (௬௬)

பாக்கியம்மெனக்குளதெனநினைவுறும்பான்மை
போக்கிநிற்கிதுபொருளெனவுணர்கிலென்புவனம்
* ஆக்கிமற்றவையகிலமுமணிவயிற்றடக்கிக்
காக்குநீயொருவேள்விகர்த்தனையெனுங்கருத்தே. (௬௭)

என்றுகூறியபின்னரவ்வெழின்மலர்க்கானத்
தன்றுதானுறைந்தருந்தவமுனிவரோடிருந்த
குன்றுபோற்குணத்தானெதிர்கோசலைக்குரிசில்
இன்றியான்செயும்பணியென்சொல்பணியெனவிசைத்தான். ()

அரியயான்சொலினையதிற்கரியதொன்றில்லை
† பெரியகாரியமுளவவைமுடிப்பதுபின்னர்
விரியும்வார்புனன்மருதஞ்சூழ்மிதிலையர்கோமான்
புரியும்வேள்வியுங்காண்டுநாமெழுகென்றுபோனார். (௬௯)

௯-வது வேள்விப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௪௭௮.

௧௦-வது. அகலிகைப்படலம்.

அகலிகையின் சாபவிமோசனாதி வரலாறுகளைக்கூறுகின்ற படலம்.

அலம்புமாமணியாரத்தோடகிலளைபுளின
நலம்பெய்பூண்முலைநாகிளவஞ்சியாமருங்குற்
புலம்புமேகலைப்புதுமலர்ப்புனையறற்கூந்தற்
சிலம்புசூழுங்காற்சோணமாந்தெரிவையைச்சேர்ந்தார். (௧)

நதிக்குவந்தவரெய்தலுமருணன்றனயனக்
கதிக்குமுந்துறுகலினமான்றேரொடுங்கதிரோன்
உதிக்குங்காலையிற்றண்மைசெய்வான்றனதுருவில்
கொதிக்கும்வெம்மையையாற்றுவான்போற்கடற்குளித்தான். (௨)

கறங்குதண்புனற்கடிநெடுந்தாளுடைக்கமலத்
‡ தறங்கொணன்மலர்க்கோயில்களிதழ்க்கதவடைப்பப்
பிறங்குதாமரைவனம்விட்டுப்பெடையொடுகளிவண்
டுறங்குகின்றதோர்நறுமலர்ச்சோலைபுக்குறைந்தார். (௩)

---

* 'ஏருளுமிறையோனு நான்முகனுமிமையோருங்-கூருளுந்தனியுடம்ப' னாகலின் 'புவனமாக்கி மற்றவையகிலமுந் தன்வயிற்றடக்கிக்காக்குநீ' என்றார்.

† ஈசன் வில்லொடித்தன்முதலிய பற்றிப்பெரிய காரியமுளஎன்றார்.

அவ்வப்பருவங்களின் மலருமியல்புநோக்கி 'அறங்கொணன்மல'ரென்றார்.

இனையசோலைமற்றியாதெனவிராகவன்வினவ
வினையெலாமறநோற்றவன்விளம்புவான்மேனாள்
தனையரானவர்க்கிரங்கியேகாசிபன்றனது
மனையுளாள்தவம்புரிந்தனளிவணெனவலித்தான். (௪)

அண்டகோளகைக்கப்புறத்தென்னையாளுடைய
கொண்ட * னீள்பதத்தெய்தியோர்விஞ்சையர்கோதை
புண்டரீகமென்பதத்தியைப்புகழ்ந்தினள்புகழ
வண்டறாமதுமாலைகைக்கொடுத்தனண்மகிழ்ந்து. (௫)

அன்னமாலையையாழிடைப்பிணித்தயனுலகம்
கன்னிமீடலுங் † கசட்டுறுமுனியெதிர்காணா
என்னையாளுடைநாயகிக்கிசையெடுப்பவளென்
றன்னள்தாளிணைவணங்கிநின்றேத்தலுமனையாள். (௬)

உலகம்யாவையும்படைத்தளித்துண்டுயிழொருவன்
இலகமார்பகத்திருந்துயிர்யாவையுமீன்ற
திலகவாணுதல்சென்னியிற்சூடியதெரியல்
அலகின்மாமுனிபெறுகெனவளித்தனளளியால். (௭)

தெய்வநாயகிசென்னியிற்சூடியதெரியல்
அய்யயான்பெறப்புரிந்ததெத்தவமெனவாடி
வெய்யமாமுனிசென்னியிற்சூடியேவினைபோய்
உய்யுமாறிதென்றுவந்துவந்தும்பர்நாடடைந்தான். (௮)

பொய்யுமாமுகில்வெள்ளியம்பிறங்கன்மீப்பிறழும்
செய்யதாமரையாயிரமலர்ந்துசெங்கதிரின்
மொய்யசோதியைமிலைச்சியமுறைறமைபோன்றொளிரும்
மெய்யினோடயிராவதக்களிற்றின்மேல்விளங்க. (௯)

அரம்பைமேனகைதிலோர்த்தமையுருப்பசியனங்கன்
சரம்பெய்தூணியிற்றளிரடிநூபுரந்தழைப்பக்
கரும்பையுஞ்சுவைகைப்பித்தகுதலையர்கிளரி
நிரம்புபாடலோடாடினர்வீதிகணெருங்க. (௰)

நீலமால்வரைத்தவழ்தருகதிர்நிலாக்கற்றை
போலவேயிருபுடையினுஞ்சாமரைபுரள
கோலமாமதிகுறைறவறநிறைந்தொளிகுலாவ
மேல்நிவர்ந்தெனவெள்ளியந்தனிக்குடைவிளங்க. (௧௧)

---

* நீள்பதம்-அந்தமிலின்பவீடு. † கசட்டுறுமுனி, வெய்யமாமுனி, வெஞ்சொன்மாமுனி, மறநிலாமுனி, தனையொவாதவன், கொடியோன் எனக்கூறியன-துருவாசனை என்க.

தழங்குபேரியுங்குறட்டொடுபொண்டிலிஞ்சங்கும்
வழங்குகம்பலைமங்கலகீதத்தைமறைப்ப
முழங்குநான்மறைமுரிநீர்முழக்கெனவுலகை
* விழுங்குமாவரும்விழாவணிக்கண்டுளம்வியந்தான். (கஉ)

தனையொவாதவன்மகிழ்ச்சியால்வாசவன்றன்கை
வனையுமாலையைநீட்டலுந்தோட்டியால்வாங்கித்
துனைவலத்தயிராவதத்தெருத்திடைத்தொடுத்தான்
† பனைசெய்கையினாற்பறித்தடிப்படுத்ததப்பகடு. (கங)

கண்டமாமுனிவிழிவழியொழுகுவெங்கனலால்
அண்டகூடமுஞ்சாம்பராயொழியுமென்றழியா
விண்டுநீங்கினர்விண்ணவரிருசுடர்மீண்ட
எண்டிசாமுகமிருண்டதுசுழன்றதெவ்வுலகும். (கச)

புகையெழுந்தனவுயிர்தொறுமெயில்பொடித்தவனில்
நகையெழுந்தனநிவந்தனபுருவநன்னுதலில்
சிகையெழுஞ்சுடர்விழியினனசனியுந்திகைப்ப
மிகையெழுந்திடுசதமகவேளெனவெகுண்டான். (கரு)

பூதநாயகன்புவிமகணாயகன்பொருவில்
வேதநாயகன்மார்பகத்தினிதுவீற்றிருக்கும்
ஆதிநாயகிவிருப்புறுதெரியல்கொண்டணைந்த
மாதராள்வயிற்பெற்றனனென்முயன்றமாதவத்தால். (கசு)

இன்றுநின்பெருஞ்செல்விகண்டுவகையினீந்த
மன்றலந்தொடையிகழ்ந்தனைநினதுமாநிதியும்
ஒன்றலாதபல்வளங்களுமுவரிபுக்கொளிப்பக்
குன்றிநீதுயருறுகெனவுரைத்தனன்கொடியோன். (கஎ)

அரமடந்தையர்கற்பகநவநிதியமிர்தம்.
‡ சுரபிவாம்பரிமதமலைமுதலியதொடக்கற்
றொருபெரும்பொருளின்றியேயுவரிபுக்கொளிப்ப
வெருவியோடினவெண்ணெய்வாழ்கண்ணன்மேவாரின். (கஅ)

வெய்யமாமுனிவெகுளியால்விண்ணகமுதலாம்
வையம்யாவையும்வறுமைநோய்நலிதரவானோர்
தையல்பாகனுஞ்சதுமுகக்கடவுளுங்கூடிச்
செய்யதாமரைத்திருதருமார்பனைச்சேர்ந்தார். (ககூ)

---

* விழுங்குமாறு என்பது கடைக்குறைந்துநின்றது. † பனைசெய்கை என்புழிசெய உவமவுருபு. ‡ சுரபி காமதேனு, வாம்பரி என்றது உச்சைசிரவத்தை, மதமலை ஐராவதம்.

வெஞ்சொன்மாமுனிவெகுளியால்விளைந்தமைவிளம்பிக்
கஞ்சநாண்மலர்க்கிழவனுங்கடவுளர்பிறரும்
தஞ்சமில்லைநின்சரணமேசரணெனச்சலியா
தஞ்சலஞ்சலென்றுரைத்தனனுலகெலாமளந்தோன். (௨௦)

மத்துமந்திரம்வாசுகிகடைகயிறடைதாண்
மெத்துச்சந்திரன்சுராசுரர்வேறுவேறுள்ள
கொத்திரண்டுபோல்வலிப்பவரோடதிகொடுத்து
கத்துவாரிதிமறுகுறவமிழ்தெழக்கடைமின். (௨௧)

யாமுமவ்வயின்வருதுநீர்கதுமெனவெழுந்து
போமினென்றருள்புரிதலுமிறைஞ்சினர்புகழ்ந்தார்
* நாமமின்றெனக்களித்தனர்நல்குரவொழிந்த
தாமெனும்பெருங்களிதுளக்குறுதலாலமரர். (௨௨)

மலைபிடுங்கினர்வாசுகிபிணித்தனர்மதியம்
நிலைபெறும்படிநட்டனரோடதிநிரைத்தார்
அலைபெறும்படிபயோததிகடைந்தனரவனி
நிலைதளர்ந்திடவனந்தனுங்கீழுறநெளித்தான். (௨௩)

திறல்கொளாமையாய்முதுகினின்மந்தரந்திரிய
விறல்கொளாயிரந்தடக்கைகள்பரப்பிநீவலிப்ப
மறனிலாமுனிவெகுளியின்மடிந்தனவரவே
† அறனிலாமனத்தடையலாநெடுந்தகையமைத்தான். (௨௪)

இறந்துநீங்கினயாவையுமெம்பிரானருளாற்
பிறந்தவவ்வயிற்சுராசுரர்தங்களிற்பிணங்கச்
சிறந்தமோகினிமடந்தையாலவுணர்தஞ்செய்கை
துறந்துமாண்டனராரமிர்தமரர்கள் துய்த்தார் (௨௫)

வெருவுமாலமும்பிறையும்வெவ்விடையவற்கீந்து
தருவும் ‡ வேறுளதகைமையுஞ்சதமகற்கருளி
மருவுதொல்பெருவளங்களும்வேறுறவழங்கித்
திருவுமாரமுமணிந்தனன்சீதரமூர்த்தி. (௨௬)

அந்தவேலையிற்றிதிபெருந்துயருழந்தழிவாள்
வந்துகாசிபன்மலரடிவணங்கியென்மைந்தர்
இந்திராதியர்புணர்ப்பினாலிறந்தனரெனக்கோர்
மைந்தனீயருளவர்தமைமடித்தலுக்கென்றாள். (௨௭)

---

* நாம்-அச்சம் அது அம்மு முச்சாரியை பெற்றது † அறன் இலாமனத்து அடையலா நெடுந்தகை என்றது திருமாலை. அறன் நில்லா மனத்தெனக் கோடலுமமையும். ‡ வேறுளதகைமையுமென்றது சிந்தாமணி காமதேனு அமுதம் ஐராவதம் முதலியனவென்க.

என்றுகூறலுமகவுனக்களித்தனமினநீ
சென்றுபாரிடைப் * பருவமோராயிரந்தீர
நின்றுமாதவம்புரிதியேனிளைவுமுற்றுதியென்
றன்றுகூறிடப்புரிந்தனளருந்தவமனையாள். (௨௮)

கேட்டவாசவனன்னவட்கடிமையிற்கிடைத்து
வாட்டமாதவத்துணர்ந்தவள்வயிற்றுறுமகவை
வீட்டியேயெழுகூறுசெய்திடுதலும்விம்மி
நாட்டநீர்தரமருத்தெனுநாமமுநவின்றான். (௨௯)

ஆயதிவ்விடமவ்விடமவிர்மதியணிந்த
தூயவன்றனக் † கரிவையிற்றோன்றியதொல்லை
வாயுவும்புனற்கங்கையும்பொறுக்கலாவலத்த
‡ சேய்வளர்ந்தருஞ்சரவணமென்பதுந்தெரித்தான். (௩௰)

காலன்மேனியிற்கருகிருள்கடிந்துலகளிப்பான்
நீலவார்கலித்தேரொடெரிறைகதிர்க்கடவுள்
மாலின்மாமணியுந்தியினயனெனவந்த
மூலதாமரைமுழுமலர்முளைத்தெனமுளைத்தான். (௩௧)

அங்குநின்றெழுந்தயன்முதன்மூவருமனையார்
செங்கணேற்றவன்செறிசடைப் $ பழுவத்தினிறைதேன்
பொங்குகொன்றைநீர்த்தொழுகலாற் ¶ பொன்னியைப்பொருவும்
கங்கையென்னுமக்கரைபொருதிருநதிகண்டார். (௩௨)

இந்தமாநதிக்குற்றுள்ளதகைமையயாவும்
எந்தைகூறுகென்றிராகவன்வினவுறவெனையாள்
மைந்தநின்றிருமரபுளானயோத்திமாநகர்வாழ்
விந்தைசேர்புயன்சகரனிம்மேதினிபுரந்தோன். (௩௩)

விறல்கொள்வேந்தனுக்குரியவரிருவரிலவிதர்ப்பை
பொறையினல்கியபோசணனென்றொருபுதல்வன்
பறவைவேந்தனுக்கிளையமென்சுமதிமுற்பயந்த
அ[illegible]னின்மைந்த ○ ராறயுதர்மற்றஞ்சுமானவன்சேய் (௩௪)

திண்டிறற்புனைசகரனுந்தனையர்சேவகந்தான்
கண்டுமுற்றிய § வயமகம்புரிதலுங்கனன்று

* பருவம்-ஆண்டு. † அரிவை-ஈண்டு மலையரையன்மகள். ‡ சேய்-முருகன். $ பழுவம்-காடு. ¶ பொன்னியைப்பொருவும் கங்கைஎன்றார் 'கங்கையிற்புனிதமாயகாவிரி' எனப்பெரியாரும் பணித்தலினென்க. ○ ஆறயுதர் அறுபதினாயிரம்பேர், அயுதம்-பதினாயிரம். § அயமகம்-பரிமேதம். கபிலனிடையினில் எனவருபின் மேனுருபுவந்தமையை 'நிலவார் நிலமிசைமேல்' எனவருதலானுமமைத்துக்கொள்க, அயம்-குதிரை, மேதம்-கொலை.

வண்டுதுற்றதார்வாசவற்குணர்த்தினர்வானோர்
ஒண்டிறற்பரிகபிலனதிடையினிலொளித்தான். (௩௫)

வாயுவாசிபின்சென்றனனஞ்சுமான்மறுகிப்
பூவினோரிடமின்றியோடினன்புகுந்து
தேவர்கோமகன்சரந்தமையறிந்திலன்திகைத்து
மேவு * தாதைதன்றாதைபாலுரைத்தனன்மீண்டு. (௩௬)

கேட்டவேந்தனுமதலையர்க்கம்மொழிகிளத்த
வாட்டமீக்கொளச்சகரர்கள்வடவையின்மறுகி
நாட்டம்வெங்கனல்பொழிதரநானிலந்தடவித்
தோட்டு † நுங்கினர்புவியினைப்பாதலந்தோன்ற. (௩௭)

நூறியோசனையகலமுமாழமுநுடங்கக்
கூறுசெய்தனரெண்பரால்வடகுணதிசையின்
ஏறுமாதவக்கபிலனிலிவுளிகண்டெரியிற்
சீறிவைதனர்செருக்கினர்நெருக்கினர்செறுத்தார். (௩௮)

சீறும்வெஞ்சினத்தருந்தவன்முனிந்தெரிவிழிப்பப்
‡ பூளைசூடிதன்னகையினிலெயில்பொடித்தனபோல்
ஆளுமைந்தராறயுதருஞ்சாம்பராயவிந்தார்
வேள்விகண்டநல்வேந்தனுக்குரைத்தனர்வேகர். (௩௯)

உழைத்துவெந்துயர்க்கூறுகாண்கிலனுணர்வொழியா
தழைத்துமைந்தனன்மைந்தனையவர்கழிந்தனரேல்
இழைத்தவேள்வியின்றிழப்பதோவெனவவனெழுந்து
தழைத்தமாதவக்கபிலன்வாழ்பாதலஞ்சார்ந்தான். (௪௦)

விண்டுநீங்கினருடலுகுபிறங்கல்வெண்ணீறு
கண்டுதுண்ணெனுமனத்தினன்கபிலமாமுனிதன்
புண்டரீகமென்றாடொழுதெழுந்தனன்புகலக்
கொண்டுபோகநின்னிவுளியென்றுற்றதுங்குறித்தான். (௪௧)

பழுதிலாதவனுரைத்தசொற்கேட்டலும்பரிவால்
தொழுதுவாம்பரிகொணர்ந்தவிசுரர்களுக்கீயா
முழுதும்வேள்வியைமுற்றுவித்தரசனுமுடிந்தான்
§ எழுதுகீர்த்தியாய்மைந்தனுக்கரசியலீந்து. (௪௨)

---

* தாதைதன்றாதையென்றது சகரனை. † நுங்குதல் - விழுங்குதல். ‡ பூளைசூடி தன்னகையினிலெயில் பொடித்தனபோல் சிவபிரான துநகையாற்புரம் பொடிபடுத்தமைபோல். § முற்றத்துறந்தமுனிவரும்விரும்பும் புகழினையுடையனாகலின் இராமனை எழுதுகீர்த்தியாயென்றார்.

பகீரதன் வரலாறு.

சகரர்தொட்டலாற்சாகரமெனப்பெயர்தழைப்ப
மகரவாரிதிசிறந்ததுமகிதலமுழுதும்
நிகரின்மைந்தனேபுரந்தனனிவனெமரபில்
பகிரதன்னெனும்பார்த்திபன்வந்தனன்பரிவால். (சங)

உலகம்யாவையும்பொதுவறத்திகிரியையுருட்டி
இலகுமன்னவனிருந்துழியிறந்தமைவினவ
அலகிறொன்முனியுரைத்திடக்கேட்டனனரசன்
திலகமண்ணுறவணங்கிநின்றொருமொழிசெப்பும். (சச)

* கொடியமாமுனிவெகுளியின்மடிந்தவெங்குரவர்
முடியநீணிரயத்தினிலழுந்திடுமுறைமை
கடியுமாறெனக்கருந்தவமதற்குறுகருமம்
அடிகள்சொற்றுகவென்றலுமந்தணனறைவான். (சரு)

வய்யமாளுடைமன்னவர்மன்னமடிந்தோர்
உய்யநீடவமொழிவறுபகலெலாமொருங்கே
செய்யநாண்மலர்க்கிழவனைநோக்கிநீசெய்தி
தய்யலென்றினிதுரைத்தனனவையறுமுனிவன். (சசு)

ஞாலம்யாவையுஞ்சுமந்திரன்றன்வயினல்கிக்
கோளுமாதவத்திமகிரிமருங்கினிற்குறுகிக்
காலமோர்பதினாயிரமருந்தவங்கழிப்ப
மூலதாமரைமுழுமுதற்கிழவன்முந்தினனே. (சஎ)

நின்பெருந்தவம்வியந்தனரினதுநீள்குரவர்
முன்பிறந்தனரருந்தவன் முனிவினாலினால்
மன்பெரும்புவியதனில்வானதிகடிதணுகி
என்புதோயுமேலிருங்கதிபெறுவரென்றிசைத்தான். (சஅ)

மாகநன்னதிபுவியிடைவருகின்மற்றவள்தன்
வேகமாற்றுதல்கண்ணுதற்கன்றிவேறரிதால்
தோகைபாகனைநோக்கியேயருந்தவத்தொடங்கென்
றேகினானுலகனைத்துமெவ்வுயிர்களுமீந்தான். (சகூ)

மங்கைபாகனைநோக்கிமுன்மொழிந்தனவருடம்
தங்குமாதவம்புரிதலுந்தழனிறக்கடவுள்
அங்குவந்துநின்கருத்தினைமுடித்துமென்றகன்றான்
கங்கையைத்தொழக் † காலமையாயிரங்கழித்தான். (ருo)

ஒருமடக்கொடியாகிவந்துனதுமாதவமென்
பொருபுனற்கொடிவரினவள்வேகமார்பொறுப்பார்

---

* கொடியமாமுனி ஈண்டு கபிலர். † காலம் ஈண்டு வருடத்தை.

அரனுரைத்தசொல்வினோதமற்றின்னுநீயறிந்து
பெருகுநற்றவம்புரியெனவரநதிபெயர்தாள். (ருக)

கரந்தைமத்தமோடெருக்கலர்கூவிளைகடுக்கை
நிரந்தபொற்சடை*நின்மலக்கொழுந்தினைநினையா
அரந்தையுற்றவனிரண்டரையாயிரமாண்டு
புரிந்துநற்றவம்பொலிதரவரைமகள்புனிதன். (ருஉ)

எதிர்ந்துநின்னினைவென்னெனவிறைஞ்சியெம்பெரும
அதிர்ந்துகங்கைமீதறைந்தனளென்றலும்அஞ்சேல்
பிதிர்ந்திடபவகைகாத்துமென்றேகியபின்றை
முதிர்ந்தமாதவமிரண்டரையாயிரமுடித்தான். (ருங)

பெருகுநீரோடுபூதியும்வாயுவும்பிறங்கு
சருகும்வெங்கதிரொளியையுந்துய்த்துமற்றதையும்
பருகலின்றியுமுப்பதினாயிரம்பருவம்
முருகுசாதலின்மன்னவனருந்தவமுயன்றான். (ருச)

உந்தியம்புயத்துதித்தவனுறைதருமுலகும்
இந்திராதியருலகமுநடுக்குறவிரைத்து
வந்துதோன்றினள்வாநதிமலைமகள்கொழுநன்
சிந்திடாதொருசடையினிற்கரந்தனன்சேர. (ருரு)

புன்னுனித்தருபனியெனவாநதிபுனிதன்
சென்னியிற் † கரந்தொளிதரவணங்கினன்திகைத்து
மன்னனிற்றலும்வருந்தனஞ்சடையள்வானதியின்
றென்னவிட்டனனொருசிறிதவனிபோந்திழிந்தான். (ருசு)

இழிந்தநங்கைமுன்மன்னவன்விரைவொடுமேகக்
கழிந்தமன்னவர்கதிபெறமுடுகியகதியால்
அழுந்துமாதவச்சன்னுவின்வேள்வியையழிப்பக்
கொழுந்துவிட்டெரிவெகுளியன்குடங்கையிற்கொள்ளா. (ருஎ)

உண்டுவேந்தனன்மறைமுனிக்கணங்கள்கண்டுவெப்ப
கண்டுவேந்தனும்வணங்கிமுன்னிகழ்ந்தனகழறக்
கொண்டுபோகெனச்செவிவழிகொடுத்தனன்குதித்து
விண்டுநீங்கினருடலுருபொடியின்மேவினளே. (ருஅ)

நிரையமுற்றியசகரர்க ‡ ணெடுங்கதிசெல்ல
விரைமலர்ப்பொழிந்தார்த்தனவிண்ணவர்குழாங்கள்

---

*அநாதிமலமுத்தனென்பதுபற்றி நின்மலக்கொழுந்தென்றார். †கரந்தொளிதர-ஒருபொருட்பன்மொழி. ‡ நெடுங்கதி-பராங்கதி.

முரைசமுற்றியபல்லியமுறைமுறைமுழங்க
அரைசனப்பொழுதணிமதிலயோத்திமீண்டடைந்தான். (௫௯)

அண்டகோளகைப்புறத்ததாயகிலமன்றளந்த
புண்டரீகமென்மத்திடைப்பிறந்தபூமகனூர்
கொண்டதீர்த்தமாயரன்கௌப்பகிரதன்கொணர
மண்டலத்துவந்தடைந்ததிம்மாநதிமைந்த. (௬௦)

சகரர்தம்பொருட்டருந்தவம்பெரும்பகல்தள்ளிப்
பகிரதன்கொணர்ந்திடுதலாற்பகிரதியாகி
மகிதலத்திடைச்சன்னுவின்செவிவழிவரலால்
நிகரில்சானவியெனப்பெயர்படைத்ததிந்நீத்தம். (௬௧)

என்றுகூறலும்வியப்பினொடுவந்தனரிறைஞ்சச்
சென்றுதீர்ந்தனர்கங்கையைவிசாலைவாழ்நகரக்
குன்றுபோற்புயத்தரசன்வந்தடியிணைகுறுக
நின்றுநல்லுரைவிளம்பிமற்றவ்வயினீங்கா. (௬௨)

பள்ளிநீங்கியபங்கயப்பழனநன்னாரை
வெள்ளவான்களைகளைவுறுகடைசியர்மிளிர்ந்த
கள்ளவாணெடுங்கண்ணிழல்கயலெனக்கருதா
அள்ளிநாணுறுமகன்பணைமிதிலைநாடடைந்தார். (௬௩)

வரம்பில்வான்சிறைமதகுகண்முழவொலிவழங்க
அரும்புநாண்மலரசோகங்கள்விளக்கெடுப்ப
நரம்பினூன்றதேன்றாரைகொணறுமலர்யாழின்
சுரும்புபாண்செயத்தோகைநின்றாடுவசோலை. (௬௪)

பட்டவாணுதன்மடந்தையர் * பார்ப்பெனுந்தூதால்
எட்டவாதரித்துழல்பவரிதயங்கள்வெறுப்ப
வட்டநாண் † மரைமலரின்மேல்வயலிடைமள்ளர்
கட்டகாவியங்கட்கடைகழிப்பனகழனி. (௬௫)

தூவியன்னந்தமினமென்றுநடைகண்டுதொடரக்
கூவுமென்குயிற்குதலையர்குடைந்ததண்புனல்வாய்
ஓவில்குங்குமச்சுவடுறவொன்றொடொன்றாடி
‡ பூவுறங்கினும்புள்ளுறங்காதனபொய்கை. (௬௬)

முறையினின்முதுமேதியின்முலைவழியாலுந்
துறையினின்றுயர்மாங்கனிதூங்கியசாறும்

---

* பார்ப்பு-பார்வை. † மரை முதற்குறைந்து நின்றது ‡ பூவுறங்கினும்-மலர் குவியினும். பூ என்றது தாமரை மலரை. அது பூவினிற் சிறந்தமைபற்றி என்க. பூவென்பது பொறிவாழ்பூவே.

அறையுமென்கரும்பாடியவமுதமுமழிதே
நறையுமல்லதுநளிர்புனல்பெருகலாநதிகள். (௬௭)

இழைக்குநுண்ணிடையிடைதரமுகடயர்கொங்கை
மழைக்கண்மங்கையரரங்கினில்வயிரியர்முழவம்
முழக்குமின்னிசைவெருவியமோட்டிள * மூரி
உழக்கவாளைகள்பாளையிற்குதிப்பனவோடை. (௬௮)

† படைநெடுங்கண்வாளுறைபுகப்படர்புனன்மூழ்கிக்
கடையமுன்கடற்செழுந்திருவெழும்படிகாட்டி
மிடையும்வெள்வளைபுள்ளொடுமொலிப்பமெல்லியலார்
குடையவண்டினங்கடிமலர்குடைவனகுளங்கள். (௬௯)

இனையநாட்டினையினிதுசென்றிஞ்சிசூழ்மிதிலை
புனையுநீள்கொடிப்புரிசையின்புறத்துவந்திறுத்தார்
மனையின்மாட்சியையழித்திழிமாதவப்பன்னி
கனையுமேட்டுயர்கருங்கலோர்வெள்ளிடைக்கண்டார். (௭0)

கண்டகன்மிசைக்காகுத்தன்கழற்றுகள்கதுவ
உண்ட ‡ பேதமைமயக்கற § வேறுபட்டுருவங்
கொண்டுமெய்யுணர்பவன்கழல்கூடியதொப்பப்
பண்டைவண்ணமாய்நின்றனண்மாமுனிபணிப்பான். (௭௧)

வேறு.

மாயிருவிசும்பிற்கங்கை ¶ மண்மிசையிழித்தோன்மைந்த
மேயினவுவகையோநமின்னனவொதுங்கிநின்றாள்
தீவினைநயந்துசெய்ததேவர்கோன்றனக்கு செங்கண்
ஆயிரமளித்தோன்பன்னியகலிகையாகுமென்றான். (௭௨)

பொன்னையேய்சடையான்கூறக்கேட்டலும்பூமிகேள்வன்
என்னையேயென்னையேயிவ்வுலகியலிருந்தவண்ணம்
முன்னையூழ்வினையினாலோநடுவொன்றுமுடிந்ததுண்டோ
அன்னையேயனையாட்கிவ்வாறடுத்தவாறருளுகென்றான். (௭௩)

அவ்வுரையிராமன்கூறவறிஞனுமவனைநோக்கிச்
செவ்வியோய்கேட்டிமேனாள்செறிசுடர்க்குலிசத்தண்ணல்

---

* மூரி-எருமை † குளங்களின்கண் மாதர்குடையுந்தோறும் விழிப்பதின்மையான் படைநெடுங்கண் வாளுறை புகப்படர்புனன் மூழ்கியென்றும், அதன்கண் மூழ்கி யெழுதலைக்கடையமுன் கடற்செழுந்திருவெழும்படி காட்டி என்றும் கூறினார். ‡ பேதைமைமயக்கென்றது அறிமையாகிய மயக்கத்தை. § வேறுபட்டுருவங்கொண்டு - திவ்வியதேஹிகளாகி. திவ்யதேகிகள் - நித்தியசூரிகள். ¶ மண்மிசை யிழித்தோன் பகீரதனை.

*அவ்வியமவித்தசிந்தைமுனிவனையற்றநோக்கி
நவ்விபோல்விழியினுடன்வனமுலைநணுகலுற்றான். (௭௪)

தையலாணயனமேவலுமன்மதன்சரமும்பாய
உய்யலாமுறுதிநாடியுழல்பவனொருநாளுற்ற
மையலாலறிவுநீங்கிமாமுனிக்கற்றஞ்செய்து
பொய்யிலாவுள்ளத்தான்றனுருவமேகொண்டுபுக்கான். (௭௫)

புக்கவளோடுங்காமப்புதுமணமதுவின்றேறல்
† ஒக்கவுண்டிருத்தலோடுமுணர்ந்தனளுணர்ந்தபின்னுந்
தக்கதன்றென்னவோராடாழ்ந்தனளிருப்பத்தாழா
முக்கணனனையவாற்றன்முனிவனு ‡ முடுகிவந்தான். (௭௬)

சரந்தரு $ சாபமல்லாற்றடுப்பருஞ்சாபம்வல்ல
வரந்தருமுனிவனெய்தவருதலும்வெருவிமாயா
நிரந்தரமுலகினிற்குநெடும்பழிபூண்டாணின்றான்
புறந்தரனடுங்கியாங்கோர்பூசையாய்ப்போகலுற்றான். (௭௭)

தீவிழிசிந்தநோக்கிச்செய்ததையுணர்ந்துசெய்ய
தூயவனவனை ¶ நின்கைச்சுடுசரமனையசொல்லால்
ஆயிரமாதர்க்குள்ளவறிகுறியுனக்குண்டாகென்
றேயினனவையெலாம் வந்தியைந்தனவிமைப்பின்முன்னம். (௭௮)

எல்லையினாணமெய்தியாவர்க்குநகைவந்தெய்தப்
புல்லியபழியினோடும்புரந்தரன்போயபின்றை
மெல்லியலாளைநோக்கிவிலைமகளனையநீயுங்
○ கல்லியலாதியென்றான்கருங்கலாய்மருங்குவீழ்வாள். (௭௯)

§ பிழைத்ததுபொறுத்தலென்றும்பெரியவர்கடனேயென்பர்
அழற்றருங்கடவுளன்னாய்முடிவிதற்கருளுகென்னத்
தழைத்தவண்டிமிருந்தண்டார்த்தசரதராமனென்பான்
கழற்றுகள்கதுவவிந்தக்கல்லுருத்தவிர்தியென்றான். (௮௦)

அந்தவிந்திரனைக்கண்டவமரர்கள்பிரமன்முன்னா
வந்துகோதமனைவேண்டமற்றவைதவிர்த்துமாறாச்

---

* அவ்வியமவித்தசிந்தை முனிவனென்றது கோதமனை.

† ஒக்கவுண்டு-இருவர்மனமொன்றுபட்டிருந்தின்பந்துய்த்தல்.

‡ முடுகிவருதற்குக்காரணம் ஞானவுணர்ச்சி. $ சாபமிரண்டின் முன்னையதுவில்; பின்னையது வெகுண்டு சொல்லல். ¶ நின்கைச்சுடுசரமனைய சொல்லால் என்றார் நின்கணையிலக்கொழியாதது போன்றம் முனிவன் மொழியுமன்னதாகலின். ○ கல்லியலாதியெனச் சபித்தலைக் கூறுவதே முறை. இவ்வாறு கூறாது வேறுபடக் கூறுவாருமுளர். § "பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும்புகழ்" என்பவாகலின் பிழைத்தது பொறுத்தலென்றும் பெரியவர்கடனே என்றதென்க.

சிந்தையின்முனிவுதீர்ந்துசிறந்தவாயிரங்கணுக்கத்
தந்தமதுலகுபுக்கார்தையலுங்கிடந்தாள்கல்லாய். (௮௧)

இவ்வண்ணநிகழ்ந்தவண்ணமினியிந்தவுலகுக்கெல்லாம்
உய்வண்ணமன்றிமற்றோர்துயர்வண்ணமுறுவதுண்டோ
மைவண்ணத்தரக்கிபோரின்மழைவண்ணத்தண்ணலேயுன்
* கைவண்ணமங்குகண்டேன்கால்வண்ணமிங்குகண்டேன். (௮௨)

† தீதிலாவுதவிசெய்தசேவடிக்கரியசெம்மல்
கோதிலாக்குணத்தான்சொன்னபொருளெலாமனத்திற்கொண்டு
மாதவனருளுண்டாகில்வழிபடர்படருறாதே
போதுநீயென்னையென்றுபொன்னடிவணங்கப்போனான். (௮௩)

அருந்தவனுறையுடன்னையனையவரணுகலோடும்
விருந்தினர்தம்மைக்காணுமெய்ம்முனிவியந்தநெஞ்சன்
பரிந்தெதிர்கொண்டுபுக்குக்கடன்முறைபழுதுறாமற்
புரிந்தபின் ‡ காதிசெம்மல்புனிதமாதவனைநோக்கி (௮௪)

அஞ்சனவண்ணத்தான்றன்னடித்துகள்கதுவாமுன்னம்
வஞ்சிபோலிடையாண்முன்னைவண்ணத்தளாகிநின்றாள்
நெஞ்சினாற்பிழைப்பிலாளைநீயழைத்திடுகவென்னக்
கஞ்சமாமுனிவனன்னமுனிவனுங்கருத்துட்கொண்டான். (௮௫)

குணங்களாலுயர்ந்தவண்ணல்கோதமன்கமலத்தாள்கள்
வணங்கினன்வலங்கொண்டேத்திமாசறுகற்பின்மிக்க
அணங்கினையவன்கையீந்தாண்டருந்தவனோடும்வாச
மணங்கிளர்சோலைநீங்கிமணிமதிற்கிடக்கைகண்டார். (௮௬)

௯-வது. அகலிகைப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௫௬௩

---

* கைவண்ணந்தாடகைபாலும் கால்வண்ணமகலிகைபாலுங்கண்டேனென்றமையால், வில்வண்ணமுதலிய சிலவற்றைமேலுங்காண விரும்புகிறேனெனக் குறிப்பித்தாராயிற்று. † தீதில்லாவுதவி-முன்னும் பின்னுமாகிய வுதவியை நோக்காது செய்யுமுதவி. ‡ காதியரசன் மைந்தனாகலின் கோசிகனைக் காதிசெம்மலென்றும் ராஜரிஷியென்றுங் கூறுவர்.

கக — வது - மிதிலைக்காட்சிப்படலம்.

ஸ்ரீராமபிரானூர் மிதிலாநகரத்தைக் கண்ணுற்றுச்சென்ற செய்தியைச்சொல்லுகிறபடலம்.

மையறுமலரினீங்கியான்செய்மாதவத்தின்வந்து
செய்யவளிருந்தாளென்றுசெழுமணிக்கொடிகளென்னும்
கைகளைநீட்டியந் தக்கடிநகர்கமலச்செங்கண்
ஐயனையொல்லைவாவென்றழைப்பதுபோன்றதம்மா. (க)

நிரம்பியமாடத்தும்பர்நிரைமணிக்கொடிகளெல்லாம்
தரம்பிறரின்மையுன்னித்தருமமேதூதுசெல்ல
* வரம்பில்பேரழகினாளைமணஞ்செய்வான்வருகின்றானென்
றரம்பையர்விசும்பினாடுமாடலினாடக்கண்டார். (உ)

† தயிருறுமத்திற்காமசரம்படத்தலைப்பட்டோடும்
உயிருறுகாதலாரினொன்றையொன்றொருவகில்லாச்
செயிருறுமனத்தவாகித்தீத்தரள்செங்கண்சிந்த
வயிரவான்மருப்பியானைமலையெனமலைவகண்டார். (௩)

பகற்கதிர்மறையவானம்பாற்கடல்கடுப்பநீண்ட
துகிற்கொடிமிதிலைமாடத்தும்பரிற்றுவன்றிநின்ற
முகிற்குலந்தடவுந்தோறுநனைவனமுகிலிற்சூழ்ந்த
அகிற்புகைகதுவுந்தோறும்புலர்வனவாடக்கண்டார் (௪)

ஆதரித்தமுதிற்கோறோய்த்தவயவமமைக்குந்தன்மை
யாதெனத்திகைக்குமல்லான் ‡ மதனற்குமெழுதவொண்ணாச்
சீதையைத்தருதலாலேதிருமகளிருந்தசெய்ய
போதெனப்பொலிந்துதோன்றும்பொன்மதின்மிதிலைபுக்கார். (௫)

சொற்கலைமுனிவனுண்டசுடர்மணிக்கடலுந்துன்னி
அற்கலந்திலங்குபன்மீனரும்பியவானும்போல
¶ விற்கலைநுதலினாருமைந்தரும்வெறுத்துநீத்த
பொற்கலனிடந்தமாடநெடுந்தெருவதனிற்போனார். (௬)

○ தாறுமாய்தறுகட்குன்றந்தடமதவரிவீதாழ்ப்ப
ஆறுமாய்க்கலினமாவிலாழியாலழிந்தோராறாய்ச்

---

* அழகினுக்கழகு செய்பவளாகலின் வரம்பில்பேரழகினாளை என்றதென்க. † தயிர்பரைமத்தியாண்டுங் கலக்குதலான் அதனையே காமசரம் பாய்ந்து வருத்தற்குவமைகூறினார். ‡ மதனற்கும் என்புழி நான்காவது மூன்றாவதன் பொருளது, உம்மை உயர்வுசிறப்பு. ¶ விற்கலை எனவும், விற்கு அலை எனவும் பிரித்துப்பொருளுரைக்க. ○ தாறுமாய்ப்பது யானைகளாதலின் தாறுமாய்தறுகட்குன்றமென்றார். தறுகட்குன்றமென்றது யானையை, தாறு-இருப்புமுள்.

சேறுமாய்த்தேர்களோடத்துகளுமாயொன்றோடொன்று
மாறுமாறாகிவாளாக்கிடக்கிலாமறுகிற்சென்றார். (௭)

தண்டுதலின்றியொன்றித்தலைத்தலைசிறந்தகாதல்
உண்டபின்கலவிப்போரினொசிந்தமென்மகளிரேபோல்
பண்டருகிளவியார்தம் * புலவியிற்பரிந்தகோதை
வண்டொடுகிடந்துதேன்சோர்மணிநெடுந்தெருவிற்சென்றார். (௮)

நெய்திரணரம்பிற்றந்தமழலையினியன்றபாடல்
தைவருமகரவீணைதண்ணுமைதழுவித்தூங்கக்
† கைவழிநயனஞ்செல்லக்கண்வழிமனமுஞ்செல்ல
அய்யநுண்ணிடையாராடுமாடகவரங்குகண்டார். (௯)

பூசலினெழுந்தவண்டுமருங்கினுக்கிரங்கிப்பொங்க
மாசுறுபிறவிபோலவருவதுபோவதாகிக்
காசறுபவளச்செங்காய்மரகதக்கமுகுபூண்ட
ஊசலின்மகளிர்மைந்தர்சிந்தையோடுலவக்கண்டார். (௧௦)

வரப்பறுமணியும்பொன்னுமாரமுங்கவரிவாலும்
சுரத்திடையகிலும்மஞ்ஞைத்தோகையுந்தும்பிக்கொம்பும்
குரப்பணைநிரப்புமள்ளர்குவிப்புறக்கரைகடோறும்
‡ பரப்பியபொன்னியன்னவாவணம்பலவுங்கண்டார். (௧௧)

வள்ளுகிர்த்தளிர்க்கைநோவமாடகம்பற்றிவார்ந்த
கள்ளெனநரம்புவீக்கிக் ¶ கண்ணொடுமனமுங்கூட்டி
வெள்ளியமுறுவறோன்றவிருந்தெனமகளிரீந்த
தெள்விளிப்பாணித்தீந்தேன்செவிமடுத்தினிதுசென்றார். (௧௨)

கொட்புறுகலினப்பாய்மா ○ குலான்மகன்முடுக்கிவிட்ட
மட்கலத்திகிரிபோலவாளியின்வருவமேலோர்
நட்பினினிடையறாவாய்ஞானிகளுணர்வினொன்றாய்க்
கட்புலத்தினையவென்றுதெரிவிலதெரியக்கண்டார். (௧௩)

---

* புலவி-ஊடல். † கூத்தியர்தாம் கருத்திற் பயின்றபாடலை யரங்கினிடைக்கண்ணானும், அதன்பயனைக் கையானுங் காட்டன்முறைமையான் கைவழிநயனஞ்செல்லக் கண்வழிமனமுஞ்செல்ல என்றார்.

‡ மள்ளர் பொன்னிக்கரைகடோறும் பல வேறுதானியங்களைப் பரப்பியவாறுபோல அவ்வாவணங்கிடத்தலினதனையே யுவமைகூறினார். ¶ மனஞ்சென்ற வழிக்கண் செல்வதியல்பாதலின் கண்ணொடுமனமுங் கூட்டி என்றதென்க.

○ குலான் இடைக்குறைந்து நின்றது. குலாலன்மகன்முடுக்கிவிட்ட மட்கலத்திகிரிபோல மேலோர் நட்பினின் இடையறாவாயும், வாளியின் வருவபோல ஞானிகளுணர்வினொன்றாயும், இன்னவெனக்காண்பதரிதாதலின் கட்புலத்தினையவென்று தெரிவில் என்றுங் கூறினார்.

வாளரம்பொருதவேலுமன் மதன்சிலையும்வண்டின்
கேளொடுகிடந்தநீலச்சுருளுஞ் * செங்கிடையுங்கொண்டு
நீளிருங்களங்கநீக்கிநிரைமணிமாடநெற்றிச்
† சாளரந்தோறுந்தோன்றுஞ்சந்திரவுதயங்கண்டார். (௧௪)

பளிக்குவள்ளத்துவார்த்தபசுநறுந்தேறன்மாந்தி
வெளிப்படுநகையவாகிவெறியனமிழற்றுகின்ற
ஒளிப்பினுமொளிக்கவொட்டாவூடலையுணர்த்துமாபோல்
களிப்பினைபுணர்த்துஞ்செய்விக்கமலங்கள்பலவுங்கண்டார். (௧௫)

மெய்வருபோகமொக்கவுடனுண்டுவிலையுங்கொள்ளும்
பையரவல்குலார்தமுள்ளமும்பளிங்கும்போல
மையரிநெடுங்கணுக்கம்படுதலுங்கருகிவந்து
கைபுகிற்சிவந்துகாட்டுங்கந்துகம்பலவுங்கண்டார். (௧௬)

கடகமுங்குழையும்பூணுமாரமுங்கலிங்கநுண்ணூல்
வடகமுமகரயாழும்வட்டினிகொடுத்துவாசத்
தொடையலங்கோதைசோரப்பளிக்குநாய்சிவப்பத்தொட்டுப்
படைநெடுங்கண்ணார்வட்டாட்டாடிடம்பலவுங்கண்டார். (௧௭)

வேறு.

‡ பங்கயங்குவளையாம்பல்படர்கொடிவள்ளைநீலம்
செங்கிடைதரங்கங்கெண்டைசினைவராலினையதேம்பத்
தங்கள்வேறுவமையில்லாவவயவந்தழுவிக்சாலும்
மங்கையர்விரும்பியாடும்வாவிகள் பலவுங்கண்டார். (௧௮)

இயங்குறுபுலன்களங்குமிங்குங்கொண்டேகவேகி
மயங்குபுதிரிந்து § நின்றுமறுகுறமுணர்விதென்னப்
புயங்களிற்கலவைச்சார்ந்தும்புணர்முலைச்சுவடுநீங்காப்
பயங்கெழுகுமரர்வாளாட்டாடிடம்பலவுங்கண்டார். (௧௯)

வெஞ்சினமுருவிற்றென்னுமேனியர்வேண்டிற்றீயும்
நெஞ்சின ¶ ரீசன்கண்ணினெருப்புறுவனங்கனன்னர்
செஞ்சிலைக்கரத்தர்மாதர்புலவிகள் திருத்திச்சேந்த
குஞ்சியர்சூழநின்றமைந்தர்தங்குழாங்கள்கண்டார். (௨௦)

---

* செங்கிடை-செவந்தசடை. † மாதர் இறைவனைச் சாளரந்தொறுங் காண்டலின் அவர் முகத்தை நோக்கிச் சந்திரவுதயங் கண்டாரென்றார்.

‡ பங்கயம்.குவளை, ஆம்பல் முதலியன முறையே,முகம், கண்,வாய், இடை, காது, கண், இதழ், வயிறு, கண், கணைக்கால், என வுருவகத்தாற் கூறினார். இனைய என்பதனாற் பிறவுறுப்புங்கொள்க. § புலன்வழி மனஞ் சென்று திரிதலின் நின்றமறுகுறு முணர்விதென்ன என்றதென்க. ¶ ஈசன்கண்ணிரனெருப்புறுவனங்கனென்றார் "உருவளர் காமன்" எனப்பிறருங் கூறுதல்பற்றியென்க.

வேறு.

பாகொக்குஞ்சொற்பைங்கிளியோடும்பலபேசி
மாகத்தும்பர்மங்கையர்நாணமலர்கொய்யும்
தோகைக்கொம்பினன்னவர்க்கன்னநடைதோற்றுப்
போகக்கண்டுவெண்டினமார்க்கும்பொழில்கண்டார் (உக)

உம்பர்க்கேயும்மாளிகையோளிநிழல்பாய
இம்பர்த்தோன்றுந்நாகர்தநாட்டினெழில்காட்டிப்
பிம்பிப்பொங்குங்கங்கையினூழ்ந்தபடைமன்னன்
அம்பொற்கோயிற்பொன்மதில்சுற்றும்மகழ்கண்டார். (உஉ)

* பொன்னின்சோதிபோதினினூற்றம்பொலிவேபோல்
தென்னுண்டேனிற்றீஞ்சுவைசெஞ்சொற்கவியின்பம்
கன்னிம்மாடத்தும்பரின்மாடேகழிபேடோ
டன்னம்மாடுமுன்றுறைகண்டங்கயனின்றார், (உங)

செப்புங்காலைச்செங்கமலத்தோன்முதல்யாரும்
எப்பெண்பாலுங்கொண் † டுவமிப்போருவமிக்கும்
அப்பெண்டானேயாயினபோதிங்கயல்வேறோர்
ஒப்பெங்கேகொண்டவ்வகைநாடியுரைசெய்வோம். (உச)

உமையாளொக்கும்மங்கையருச்சிக்கரம்வைக்கும்
கமையாண்மேனிகண்டவர்காட்சிக்கரைகாணா
இமையாநாட்டம்பெற்றிலமென்றாரிருகண்ணால்
அமையாதென்றாரந்தரவானத்தவரெல்லாம். (உரு)

வென்றம்மானைத்தாரயில்வேலுங்கொலைவாளும்
பின்றம் ‡ மானப்போர்கயலஞ்சப்பிறழ்கண்ணாள்
குன்றம்மாடக்கோவினளிக்குங்கடலன்றி
அன்றம்மாடத்தும்பரளிக்கும்மமுதன்னாள். (உசு)

பெருந்தேரல்குற்பெண்ணிவளொப்பாளொருபெண்ணைத்
தருந்தாமென்றானுன்முகனின்னுந்தரலாமே
அருந்தாவந்தத்தேவரிரந்தாலமிர்தென்னும்
மருந்தேயல்லா 0 தென்னினிநல்கும்மணியாழி. (உஎ)

அனையாண்மேனிகண்டபினண்டத்தரசாளும்
வினையோர்மேவும்மேனகையாதிமிளிர்வேற்கண்

* பொன்னிற்சோதியும் போதினினூற்றமும் தேனிற்றீஞ்சுவையும் கவியினின்பமும்போலும் விளங்குபவகளாகலினங்ஙனமுவமங்கூறினார். † உவமிப்போருவமிக்கும் அப்பெண்-திருமாமகளை. ‡ எதுகைநோக்கிவிரிந்துநின்றது. 0 திருமகள் கற்பகமுதலியபொருளை முன்னல்கினமையின் என்னினி நல்குமணியாழி என்றார்.

இனையோருள்ளத்தின்னவினோர்தம்முகமென்னும்
பனிதோம்வானின்வெண்மதிக்கென்றும்பகலன்றே. (உ௮)

மலர்மேனின்றிம்மங்கையிவ்வையத்திடைவைகப்
பலகாலுந்தமமெய்ந்நனிவாடும்படிநோற்றார்
அலகோவில்லாவந்தணரோநல்லறமேயோ
உலகோவானோவும்பர்கொலோவீதுணரேமால். (உ௯)

தன்னேரில்லாமங்கையர்செங்கைத்தளிர்மானே
அன்னேதேனேயாரமிர்தேயென்றடிபோற்ற
முன்னேமுன்னேமொய்ம்மலர்தூவிமுறைசாலப்
பொன்னேசூழும்பூவினைதுங்கிப்பொலிகின்றாள். (௩0)

பொன்சேர்மென்காற்கிண்கிணியாரம்புனையாரம்
கொன்சேரல்குன்மேகலைதாங்குங்கொடியன்னார்
தன்சேர்கோலத்தின்னெழில்கானச்சதகோடி
மின்சேவிக்கமின்னரசென்னும்படிநின்றாள். (௩௧)

கொல்லும்வேலுங்கூற்றமுமென்னும்மிவையெல்லாம்
வெல்லும்வெல்லுமென்னமதர்க்கும்விழிகொண்டாள்
சொல்லுந்தன்மைத்தன்றதுகுன்றுஞ்சுவருந்திண்
கல்லும்புல்லுங்கண்டுருகப்பெண்கனிநின்றாள். (௩௨.)

வேறு.

வெங்களிவிழிக்கொருவிழவுமாயவர்
கண்களிற்காணவேகளிப்புநல்கலான்
மங்கையர்க்கினியதோர்மருந்துமாயவள்
எங்கணுயகற்கினியாவதாங்கொலோ. (௩௩)

இழைகளுங்குழைகளுமின்னமுன்னமே
மழைபொருகண்ணிணைமடந்தைமாரொடும்
பழகியவெனினுமிப்பாவைதோன்றலால்
* அழகெனுமணியுமோரழகுபெற்றவே. (௩௪)

எண்ணருநலத்தினளிணையள்நின்றுழி
† கண்ணொடுகண்ணிணைகௌவியொன்றையொன்
றுண்ணவுநிலைபெறாதுணர்வுமொன்றிட
அண்ணலுநோக்கினனவளுநோக்கினள். (௩௫)

* இப்பெண்ணரிசியழகான அனைத்துமழகெய்தலின் 'அழகெனுமதுவுமோரழகுபெற்றதே என்றதென்க. † இது 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்சொற்களென்னபயனுமில' என்னுந் திருக்குறட் பொருளையுட்கொண்டதென்க.

நோக்கியநோக்கெனு நுதிகொள்வேலிணை
ஆக்கியுமதுகையான்றேளிஞழ்ந்தன
வீக்கியகனைகழல்வீரன்செங்கணும்
தாக்கணங்கனையவடனத்திற்றைத்தவே. (௩௬)

பருகியநோக்கெனுப்பாசத்தாற்பிணித்
தொருவரையொருவர்தம்முள்ளமீர்த்தலால்
வரிசிலையண்ணலும்வாட்கணங்கையும்
இருவருமாறிப்புக்கிதயமெய்தினர். (௩௭)

மருங்கிலாநங்கையும்வசையிலையனும்
ஒருங்கியவிரண்டுடற்குயிரொன்றாயினர்
கருங்கடற்பள்ளியிற்கலவிநீங்கிப்போய்ப்
* பிரிந்தவர்கூடினாற்பேசல்வேண்டுமோ. (௩௮)

அந்தமிலழகனையணைகிலாமையாற்
பைந்தொடியோவியப்பாவைபோன்றனள்
சிந்தையு † நிறையுமெய்ந்நலனும்பின்செல
மைந்தனுமுனியொடுமறையப்போயினன். (௩௯)

பிறையெனுநுதலவள்பெண்மையென்படும்
நறைகமழலங்கலானயனகோசரம்
மறைதலுமனமெனுமத்தயானையின்
‡ நிறையெனுமங்குசநிமிர்ந்துபோயதே. (௪0)

மாலுறவருதலுமனமுமெய்யுந்தன்
நூலுறுமருங்குல்போனுடங்குவாணெடுங்
o காலுறுகண்வழிபுகுந்தகாதனோய்
பாலுறுபிரையெனப்பரந்ததெங்குமே. (௪௧)

நோமுறுநோய்நிலைநுவலகிற்றிலள்
ஊமரின்மனத்திடையுன்னிவிம்முவாள்

---

* சனகியை இராமனும், இராமனைச் சனகியுங் காண்டன் மாத்திரையிற் பிரிவுநீங்கிக் கூடிய கூட்டத்தை யொத்தலின் கடற்பள்ளியிற் கலவிநீங்கிப் போய்ப்பிரிந்தவர் கூடினாற் பேசவேண்டுமே என்றார். † நிறையாவது தனக்குள்ளே அடக்கத்தக்கவைகளை யடக்கி யிருத்தல். ஆடூஉக்குணநான்கிலொன்று. நான்காவன —அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி.

‡ நிறை என்றது கற்பை, 'கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெறின்' எனப்பிறருங் கூறுதலிப்பெற்றி நோக்கியென்க. பெண்மைக்குணங்கள் நான்காவன.--நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன. o காதனோய்கண்வழிச்சேறல் மயிர்க்கால் வழியாதலின் காலுறுகண்வழி என்றும், பால்பிரையுற்றவழி முழுதும் வியாபித்துத் தயிராகவேறுபடல்போற்காதலுற்றுத்தான் வேறுபடலின் பாலுறுபிரையெனப் பரந்ததெங்குமே யென்றுங் கூறினர். பிரை-குடத்திலுள்ள பாலையுறைவிக்கும் சிறுமோர்த்துளி.

காமனுமொருசரங்கருத்தினெய்தனன்
வேமெரியதனிடைவிறகிட்டென்னவே (௪௨)

நிழலிடுகுண்டலமதனினெய்யிடா
அழலிடாமிளிர்ந்திடுமெயில்கொள்கண்ணினாள்
சுழலிடுகூந்தலுந்துகிலுஞ்சோர்தரத்
தழலிடுவல்லியேபோலச்சாம்பினாள். (௪௩)

தழங்கியகலைகளுநிறையுஞ்சங்கமும்
மழுங்கியவுள்ளமுமறிவுமாமையும்
இழந்தவளிமையவர்கடையயாவையும்
* வழங்கியகடலெனவறியளாயினாள். (௪௪)

கலங்குழைந்துகநெடுநாணுங்கண்ணற
நலங்குழைதரநின்றுகத்தினேவுண்டு
மலங்குழையெனவுயிர்வருந்திச்சோர்தரப்
பொலங்குழைமயிலைக்கொண்டரிதிற்போயினார். (௪௫)

காதொடுங்குழைபொருகயற்கணங்கைதன்
பாதமுங்கரங்களுமனையபல்லவத்
தாதொடுங்குழையொடுமடுத்ததண்பனிச்
சீதநுண்டுளிமலரமளிசேர்த்தினார். (௪௬)

நாளருநறுமலரமளிநண்ணினாள்
பூளைவீபுரை † பனிபுயற்குத்தேம்பிய
தாளதாமரைமலர்தகைந்தபொய்கையும்
வாளராநுங்கியமதியும்போலவே (௪௭)

மலைமிசைத்தடத்துகுமழைக்கணலிபோன்
முலைமுகட்டுதிர்ந்தனநெடுங்கண்முத்தினஞ்
சிலைநுதற்கடையுறைசெரிந்தவேர்வுதன்
உலைமுகப்புகைநிமிருயிர்ப்பின்மாய்ந்ததே. (௪௮)

கம்பமில்கொடுமனக் ‡ காமவேடன்கை
அம்பொடுசோர்வதோர்மயிலுமன்னவள்
வெம்புறுமனத்தனல்வெதுப்பமென்மலர்க்
கொம்பெனவமளியிற் குழைந்துசாய்ந்தனள். (௪௯)

---

* கற்பகமுதலிய எல்லாப்பொருள்களும் பாற்கடல்வழங்கியபிற்றைஞான்றுவறிய தாயதைக் 'கலையுநிறையுஞ் சங்கமுமுதலிய விழந்தமைக்குவமங் கூறினர். † பனிப்புயற்குத்தேம்பிய தாளதாமரை மலர்தகைந்த பொய்கையும் வாளராநுங்கிய மதியும் செவ்வியும் ஒளியுமிழத்தல் பற்றி அவற்றையே யுவமங்கூறினர்.

‡ கானவேடன் எனப் பாடங்கொள்வாருமுண்டு.

சொரிந்தனநறுமலர்சுறுக்கொண்டேறின
பொரிந்தனகலவைகள்பொதியிற்சிந்தின
எரிந்தவெங்கனல்சுடவிழையிற்கோத்தநூல்
பரிந்தனகரிந்தனபல்லவங்களே. (௨௰)

தாதியர்செவிலியர்தாயார்தௌவையர்
மாதுயருழந்தனர்விழுந்துமாழ்கினர்
யாதுகொலிதுவெனவெண்ணறேற்றலர்
போதுடனயினிநீர்சுழற்றிப்போக்கினர். (௨௧)

அருகினின்றசைக்கின்றவாலவட்டக்கால்
எரியினைமிகுத்திடவிழையுமாலையும்
கரிகுவதீகுவகனல்வகாட்டலால்
உருகுபொற்பாவையுமொத்துத்தோன்றினள். (௨௨)

அல்லினைவகுத்ததோரலங்கற்காடெனும்
வல்லெழுவல்லவோர்மரகதப்பெருங்,
கல்லெனுமிருபுயங்கமலங்கண்ணெனும்
* வில்லொடுமிழிந்ததோர்மேகமென்னுமாநீ. (௨௩)

நெருகியுட்புகுந்தருநிறையும் † பெண்மையும்
உருக்கியென்னுயிரொடுமுண்டுபோனவன்
பொருப்புறழ்தோள்புணர்புண்ணியத்தது
கருப்புவில்லன்றவன்காமனல்லனே. (௨௪)

பெண்வழிநலனொடும்பிறந்தநாணொடும்
எண்வழியுணர்வுநானெங்குங்காண்கிலென்
மண்வழிநடந்தடிவருந்தப்போனவன்
‡ கண்வழிநுழையுமோர்கள்வனேகொலாம். (௨௫)

இந்திரநீலமொத்திருண்டகுஞ்சியும்
சந்திரவதனமும் § தாழ்ந்தகைகளும்
சுந்தரமணிவரைத்தோளுமேயல
முந்தியென்னுயிரையம்முறுவலுண்டதே. (௨௬)

படர்ந்தொளிபரந்துயிர்பருகுமாகமும்
தடந்தருதாமரைத்தாளுமேயல
கடந்தருமதங்கலுழ்களிநல்யானைபோல்
நடந்ததுகிடந்ததென்னுள்ளநண்ணியே. (௨௭)

---

* இரகுநாயகன் வில்லொடுஞ்சேறலின் வில்லொடு மிழந்ததோர் மேகமென்னுமென்றார். † பெண்மை கட்புலனாகியவமைதித் தன்மை என்பர் நச்சினார்க்கினியர். ‡ மனத்திற் புகக்கண்வழிச்சேறலின் கண்வழிநுழையுமோர்கள்வனென்றார் § தாழ்ந்தகைகளும் - முழந்தாளளவும் நீண்டு தொங்கும் கைகளும்.

உரைசெயிற்றேவர்தம்முலகுளானலன்
விரைசெறிதாமரையிமைக்குமெய்ம்மையான்
வரிசிலைத்தடக்கையன்மார்பினூலினன்
அரசிளங்குமரனேயாகல்வேண்டுமால். (௩௮)

பிறந்துடைநலநிறைபிணித்தவெந்திரம்
கறங்குபுதிரியுமென்கன்னிமாமதில்
எறிந்தவக்குமரனையின்னுங்கண்ணிற்கண்
டறிந்துயிரிழக்கவுமாகுமேகொலாம். (௩௯)

என்றிவையினையனவிளம்பும்வந்தெதிர்
நின்றனனவனெனுநீங்கினனெனும்
கன்றியமனத்துறுகாமவேட்கையால்
ஒன்றலபலநினைந்துருகுங்காலையே. (௪௦)

அன்னமென்னடையவட்கமைந்தகாமத்தீ
தன்னையுஞ்சுடுவதுதரிக்கிலானென
நன்னெடுங்கரங்களைநடுக்கியோடிப்போய்
முன்னைவெங்கதிரவன்கடலில்மூழ்கினான். (௪௧)

விரிமலர்த்தென்றலாம்வீசுபாசமும்
எரிநிறச்செக்கருமிருளுங்காட்டலால்
அரியவட்கனறருமந்திமாலையாங்
கருநிறச்செம்மயிர்க்காலன்றோன்றினான். (௪௨)

மீதறைபறவையாம்பறையுங்கீழ்விளி
ஓதமென்சிலம்பொடுமுதிரச்செக்கரும்
பாதகவிருள்செய்கஞ்சுகமும்பற்றலாற்
சாதகமென்னவுந்தழைத்தமாலையே. (௪௩)

வேறு.

கயக்கமென்னுங்கனல்தோய்ந்துகடிநாண்மலரின்விடம்பூசி
இயங்குதென்றன் * மன்மதவேளெய்தபுண்ணினிடைநுழைய
உயங்குமுணர்வுநன்னலமுமுருகிச்சோர்வாளுயிருண்ண
வயங்குமாலைவாளேக்கியிதுவோகூற்றின்வடிவென்றாள். (௪௪)

கடலோமழையோமுழுநீலக்கல்லோகாயாநறும்போதா
படர்பூங்குவளைநாண்மலரோநீலோற்பலமோயானலோ
இடர்சேர்மடவாருயிருண்பதியாதோவென்றதளர்வாண்முன்
மடல்சேர்தாரானிறம்போலுமந்திமாலைவந்ததுவே. (௪௫)

* மன்மதவேள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

மைவானிறத்துமீனெயிற்றுவாடையுயிர்ப்பின்வளர்செக்கர்ப்
பைவாயந்திப்படவரவேயென்னைவளைத்துப்பகைத்தியால்
எய்வானொருவன்கையோயானுயிருமொன்றேயினியில்லை
உய்வானுறவிப்பழிபூணவுன்னோடெனக்குப்பகையுண்டோ. (சுசு)

ஆலமுலகிற்பரந்ததுவோவாழிகிளர்ந்ததோவவர்தம்
நீலநிறத்தையெல்லோருநினைக்கவதுவாய்நிரம்பியதோ
காலனிறத்தையஞ்சனத்திற்கலந்துகுழைத்துக்காயத்தின்
மேலுநிலத்துமெழுகியதோவிளைகருமிருளாய்விளைந்ததுவே. (சுஎ)

வெளிநின்றவரோபோய்மறைந்தார்விலக்கவொருவர்தமைக்காணேன்
எளியன்பெண்ணென்றிரங்காதேயெல்லியாமத்திருளூடே
* ஒளியும்பெய்யுமன்மதனுமுனக்கிம்மாயமுரைத்தாரோ
அளியென்செய்ததீவினையேயன்றிலாகிவந்தாயோ. (சுஅ)

ஆண்டங்கனையாளினையநினைந்தழுங்கும்வேலையகல்வானம்
தீண்டநிமிர்ந்தபெருங்கோயிற்சீதமணியின்வேதிகைவாய்
நீண்டசோதிநெய்விளக்கம்வெய்யவென்றங்கவைநீக்கித்
தூண்டல்செய்யாமணிவிளக்கின்சுடராலிருளைப்பகல்செய்தார். (சுகூ)

பெருந்திண்ணெடுமால்வரைநிறுவிப்பிணித்தபாம்பின்மணித்தாம்பின்
விரிந்ததிவலையுதிர்ந்தமணிவிசும்பின்மீனின்மேல்விளங்க
அருந்தவமரர்கலக்கியநாலமுதநிறைந்தபொற்கலசம்
இருந்ததிடைவந்தெழுந்ததெனவெழுந்ததாழிவெண்டிங்கள். (எ0)

வண்டாயயனுன்மறைபாடமலர்ந்தொருதாமரைப்போது
பண்டாலிலையின்மிசைக்கிடந்து † பாரும்நீரும்பசித்தான்போல்
உண்டானுந்திக்கடல்பூத்தவோதக்கடலுந்தான்வேறோர்
வெண்டாமரையின்மலர்பூத்ததொத்ததாழிவெண்டிங்கள். (எக)

புள்ளிக்குறியிட்டெனவொண்மீன்பூத்தவானம்பொலிகங்குல்
கள்ளிற்சிறந்தவிருட்பிழம்பைநக்கிநிமிருநிலாக்கற்றை
கிள்ளைக்கிளவிக்கென்றுங்கொல்கீழ்பாற்றிசையின்மிசைவைத்த
வெள்ளிக்கும்பத்திளங்கமுகின்பாளைபோன்றுவிரிந்துளதால். (எ௨)

விரைசெய்கமலப்பெரும்போதுவிரும்பிப்புகுந்ததிருவினொடும்
குரைசெய்வண்டின்குழாமிரியக்கூம்பிச்சாம்பிக்குவிந்துளதால்
உரைசெய்திகிரிதனையுருட்டியொருகோலோச்சியுலகாண்ட
அரைசனொதுங்கத்தலையெடுத்தகுறும்புபோன்றதரக்காம்பல். (எ௩)

---

* ஒளி என்றது ஒளித்து எனப் பொருள்படுதலை வரிப் புனைபந்தென் புழி, நச்சினார்க்கினியர் கூறலானுமறிக.

† பாரு நீரும் பசித்தானென்பதற்கு நிலனுங்கடலு முண்டானெனப்பொருள் படல் காண்க.

வண்ணமாலைகைபரப்பியுலகைவளைந்தவிருளெல்லாம்
உண்ணவெண்ணித்தண்மதியத்துதயத்தெழுந்தநிலாக்கற்றை
விண்ணுமண்ணுந்திசையனைத்தும்விழுங்கிக்கொண்டவிரிநன்னீர்ப்
பண்ணைவெண்ணெய்ச்சடையன்றன்புகழ்போலெங்கும்பரந்துளவால். ()

நீத்தமதனின்முளைத்தெழுந்தநெடுவெண்டிங்களெனுந்தச்சன்
மீத்தன்கரங்களவைபரப்பிமிகுவெண்ணிலவாம்வெண்சுதையாற்
காத்தகண்ணன்மணியுந்திக்கமலநாளத்திடைப்பண்டு
பூத்தவண்டம்பழையதென்றுபுதுக்குவானும்போன்றுளதால். (௭௫)

நீங்காமாயையவர்தமக்குநிறமேதோற்றுப்புறமேபோய்
எங்காக்கிடக்குமெறிகடற்குமெனக்குங்கொடியையானாயே
ஓங்காநின்றவிருளாய்வந்துலகைவிழுங்கிமேன்மேலும்
வீங்காநின்ற * கருநெருப்பினிடையேயெழுந்தவெண்ணெருப்பே. (௭௬)

வேறு.

கொடியையல்லைநீயாரையுங்கொல்கிலாய்
மடுவிலின்னமுதத்தொடும்வந்தனை
பிடியின்மென்னடைப்பெண்ணொடென்றலெனைச்
† சுடுதியோகடற்றோன்றியதிங்களே. (௭௭)

மீதுமொய்த்தெழுவெண்ணிலவின்கதிர்
மோதுமத்திகைமென்முலைமேற்பட
ஓதிமப்பெடைவெங்கனலுற்றெனப்
போதுமொய்த்தமளிப்பரண்டாளரோ. (௭௮)

நீக்கமின்றிநிமிர்ந்தநிலாக்கதிர்
தாக்கவெந்துதளர்ந்துசரிந்தனள்
சேக்கையாகிமலர்ந்தசெந்தாமரைப்
‡ பூக்கள்பட்டதப்பூவையும்பட்டனள். (௭௯)

வாசமென்கலவைக்களிவாரிமேல்
பூசப்பூசப்புலர்ந்துபுழுகினள்
வீசவீசவெதும்பினண்மென்முலை
$ ஆசைநோய்க்குமருந்துமுண்டாங்கொலோ. (௮௦)

தாயரிற்பரிசேடியர்தாதுகு
வீயரித்தளிர்மெல்லணைமேனியிற்

---

* கருநெருப்பென்றது இருளை, வெண்ணெருப்பென்றது மதியை கடலின்கண் அமுதத்தோடும் பெண்ணொடுந்தோன்றிய நீ என்னை = சுடுதல் தக்கதன்றென்பார் எனைச் சுடுதியோ என்றானென்க. ‡ பூக்கள் பட்டது பால்வழுவமைதி.

$ ‘தன்னோய்க்குத்தானே மருந்து’ என்பவாகலின் ஆசைநோய்க்கு மருந்துமுண்டாங்கொலே என்றார்.

காயெரிக்கரியக்கரியக்கொணர்ந்
தாயிரத்தினிரட்டியடுக்கினார். (அக)

கன்னிநன்னகரிற் * கமழ்சேக்கையுள்
அன்னமின்னனையாயினளாயவள்
மின்னின்மின்னியமேனிகண்டானெனச்
சொன்னவண்ணலுக்குற்றதுசொல்லுவாம். (அஉ)

ஏகிமன்னனைக்கண்டெதிர்கொண்டவன்
ஓகையோடுமினிதுகொண்டெய்த்திடப்
† போகபூமியிற்பொன்னகரன்னதோர்
மாகமாடத்தனையவர்வைகினார். (அங)

வைகுமவ்வுழிமாதவம்யாவுமோர்
செய்கைகொண்டுநடந்தெனத்தீதறு
மொய்கொள்வீரன்முனரியந்தாளினால்
மெய்கொண்மங்கையருண்முனிமேவினான். (அச)

வந்தெதிர்த்தமுனிவனைவள்ளலுஞ்
சிந்தையாரவணங்கலுஞ்சென்றெதிர்
அந்தமில்குணத்தானெடிதாசிகள்
தந்துகோசிகன்றன்மருங்கெய்தலும். (அரு)

கோதமன்றருகோமுனிகோசிக
மாதவன்றனைமாமுகநோக்கியிப்
போதுநீயிவட்போதவிப்பூதலம்
ஏதுசெய்ததவமென்றியம்பினான். (அசு)

பூந்தண்சேக்கைப்புனிதனையேபொரு
வேயந்தகேண்மைச் ‡ சதானந்தனென்றெனும்
வாய்ந்தமாதவன்மாமுகநோக்கிநூல்
தோய்ந்தசிந்தைக்கௌசிகன்சொல்லுவான். (அஎ)

வடித்தமாதவகேட்டியிவ்வள்ளறன்
இடித்தவெங்குரற்றாடகையாக்கையும்
அடுத்தென்வேள்வியுய்த்தின்னன்னைசாபமும்
முடித்தென்னெஞ்சத்திடர்முடித்தானென்றான். (அஅ)

என்றுகோசிகன்கூறிடவீறிலா
வன்றபோதனன்மாதவனின்னருள்

---

* கமழ்சேக்கை - புஷ்பசயனம். † போகபூமி - ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம்.

‡ சதானந்தன் - அகலிகைபுத்திரன்.

இன்றுதானுளதேலரிதியாதிந்த
வென்றிவீரர்க்கெனவும்விளம்பிமேல். (அக)

என்னில்பூவையுமிந்திரநீலமும்
அன்னல்வேலையுமம்புதசாலமும்
மின்னும்வீயுடைப்பானலு * மேவுமெய்
வள்ளல்தன்னைமதிமுகநோக்கியே. (கூ௦)

நறுமலர்த்தொடைநாயகநானுனக்
கறிவுறுத்துவென்கேளிவ்வருந்தவன்
இறையெனப்புவிக்கீறில்பல்லாண்டெலாம்
முறையினிற்புரந்தேயருண்முற்றினன். (கூக)

அரைசின்வைகியநனினமைந்தழி
விரைசுகானிடைச்சென்றனன்வேட்டைமேல்
உரைசெய்மாதவத்தோங்குவசிட்டனும்
பரைசுவானவன்பாலணைந்தானரோ. (கூஉ)

வேறு.

அருந்ததிகணவன்வேந்தற்கருங்கடன்முறையினாற்றி
இருந்தருடருதியென்னவிருந்துழியினிதுநிற்கு
விருந்தினியமைப்பெனென்னுச்சுரபியைவிளித்துநீயே
சுரந்தருளமிர்தமென்னவருண்மூன்றசுரந்ததன்றே. (கூக)

† அறுசுவைத்தாயவுண்டியரசனின்னனிகத்தோடும்
பெருகெனவளித்துவேந்தோடியாவருந்துய்த்தபின்னர்
நறுமலர்த்தாரும்வாசக்கலவையுநல்கலோடும்
‡ உறுதுயர்தணிந்துமன்னனுய்த்துணர்ந்துரைக்கலுற்றான். (கூச)

மாதவவெழுந்திலாய்நீவயப்புடைப்படைகட்கெல்லாம்
கோதறுமமிர்தமிக்கோவுதவியகொள்கைதன்னால்
தீதறுகுணத்தான்மிக்கசெழுமறைதெரிந்தநூலோர்
மேதகுபொருள்கள்யாவும்வேந்தருக்கென்கைதன்னால். (கூரு)

சிற்கிதுதருவதன்றுனீடருஞ்சுரபிதன்னை
எற்கருளென்றலோடுமியம்பலன்யாதும்பின்னர்
வற்கலையுடையென்யானேவழங்கலென்வருவதாகிற்
கொற்கள்வேலுழவநீயேகொண்டகல்கென்றுகூற. (கூசா)

---

* இவையனைத்தும் இவள் வண்ணம் பெறவேண்டலின் மேவுமெய் வள்ளலென்றார். † அறுசுவை-இனிப்பு, கார்ப்பு, கைப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பன. ‡ உறுதுயர் - பசியாலும் நடையாலுமடைந்ததுயர்.

பணித்ததுபுரிவனென்றுப்பார்த்திபனெழுந்துபொங்கிப்
பிணித்தனன்சுரபிதன்னைப்பெயர்வுழிப்பிணியைவீட்டி
மணித்தடந்தோளினாற்குக்கொடுத்தியோமறைகள்யாவும்
கணித்தவெம்பெருமவென்னக்கலைமறைமுனிவன்சொல்வான். (௯௭)

கொடுத்திலென்யானைமற்றைக்குடைகெழுவேந்தன்றானே
பிடித்தகல்வுற்றதென்னப்பெருஞ்சினங்கதுவுநெஞ்சோ
டிடித்தெழுமுரசவேந்தன்சேனையையானையின்று
முடிக்குவென்காண்டியென்றுமொய்ம்மயிர்சிலிர்த்ததன்றே. (௯௮)

பப்பரரெயினர்சீனர்சோனகர்முதலபல்லோர்
கைப்படையதனினோடுங்கபிலைமாட்டுதித்துவேந்தன்
துப்புடைச்சேனையாவுந்தொலைவுறத்துணித்தலோடும்.
வெப்புடைக்கொடியமன்னன்றனையர்கள்வெகுண்டுமிக்கார். (௯௯)

சுரபிதன்வலியிதன்றால்சுருதிநூலுணரவல்ல
வரமுனிவஞ்சமென்றுமற்றவன்சிரத்தையின்னே
அரிகுதுமென்னப்பொங்கியடர்த்தனரடரவன்றான்
எரியெழவிழித்தலோடுமிறந்தனர்குமரரெல்லாம். (௱)

ஐயிருபதின்மர்மைந்தரவிந்தமையரசன்காணா
நெய்பொழிகனலிற்பொங்கிநெடுங்கொடித்தேர்கடாவிக்
கைதொடர்கணையினோடுங்கார்முகம்வளையவாங்கி
எய்தனன்முனியுந்தன்கைத்தண்டினையெதிர்கவென்றான். (௧௦௧)

கடவுளர்படைகளீறாக்கற்றனபடைகள்யாவும்
விடவிடமுனிவன்றண்டம்விழுங்கிமேல்விளங்கல்காணா
* வடவரைவில்லிதன்னைவணங்கினன்வழுத்தலோடும்
அடலுறுபடையொன்றியாவன்னவனகன்றானன்றே. (௧௦௨)

விட்டனன்படையைவேந்தன்விண்ணுளோருலகையெல்லாம்
சுட்டனவென்னவஞ்சித்துளங்கினர்முனியுந்தோன்றிக்
இட்டியபடையையுண்டுகிளர்ந்தனன்கிளருமேனி
மூட்டவெம்பொறிகள்சிந்தப்பொருபடைமுரணிற்றே. (௧௦௩)

கண்டனனரசன்காணாக்கலைமறைமுனிவர்க்கல்லால்
இண்டிறல்வலியுந்தேசுமுளவெனல்சீரிதம்மா
மண்டலமுழுதுங்காக்குமொய்ம்பொருவலியன்றென்று
தண்டவம்புரியவெண்ணியும்பர்கோன்றிசையையுற்றான். (௧௦௪)

---

* வடவரைவில்லி - வடதிசையிலுள்ளனவெல்லாம் வடவரையேயா
யினும் வில்லியென்னும் குறிப்பால் மேருவெனப்பட்டது.

மாண்டமாதவத்தோன்செய்தவலனையேமனத்திலெண்ணி
பூண்டமாதவத்தனுகியரசர்கோன்பொலியுநீர்மை
காண்டலுமமரர்வேந்தன் றனுக்குறுகருத்தினோடும்
தூண்டினனரம்பைமாருட்டிலோத்தமையெனுஞ்சொன்மானை. (௧0௫)

அண்ணவன்மேனிகாணுவனக்கவேள் சாங்கள்பாயத்
தன்னுணர்வழிந்துகாதற்சலதிபினழுந்திவேந்தன்
பன்னரும்பகல்தீர்வுற்றுப்பரிணதர்தெரிந்த * நூலின்
நன்னயமுணர்ந்தோனுகிநஞ்செனக்கனன்றுநக்கான். (௧0௬)

விண்முழுதாளிசெய்தவினையெனவெகுண்டுநீபோய்
மண்மகளாதியென்றுமடவாறன்னையேவிக்
கண்மலர்சிவப்பவுள்ளங்கறுப்புறக்கடிதினேகி
எண்மரின்வலியனுயயமன்றிசைதன்னையுற்றான். (௧0௭)

தென்றிசையதனைநண்ணிச்செய்தவஞ்செய்யுஞ்செவ்வி
வன்றிறலயோத்திவாழுமன்னவன்றிரிசங்கென்பான்
தன்றனைக்குருவைநண்ணித்தனுவொடுந்துறக்கமெய்த
இன்றெனக்கருளுகென்னவாண்டிறந்தெய்துகென்றான். (௧0௮)

நினக்கொலாதாகினையநீணிலத்தியாவரேனும்
மனக்கினியாரைநாடிவகுப்பல்யான்வேள்வியென்னச்
சினக்கொடுந்திறலோய்முன்னர்த்தேசிகற்பிழைத்துவேறோர்
நினக்கிதனுடிநின்றாய்நீசனாய்விடுதியென்றான். (௧0௯)

மலருளோன்மைந்தன்மைந்தவழங்கியசாபந்தன்னால்
அலரியோன்றானும்நாணும்வடிவிழந்தரசர்கோமான்
புலரியுங்கமலம்போலும்பொலிவொரீஇவதனம்பூவிற்
பலரும்நாங்கிகழ்தற்கொத்தபடிவம்வந்துற்றதன்றே. (௧௧0)

காசொடுமுடியும்பூணுங்கரியதாங்கனகம்போன்று
தூசொடுமேனியுமுந்நூல்தோற்றருந்தோற்றம்போன்று
மாசொடுகருகிமேனிவனப்பழிந்திடவூர்வந்தான்
சீசியென்றியாருமெள்ளத்திகைப்பொடுபெழுவஞ்சேர்ந்தான். (௧௧௧)

கானிடைச்சிறிதுவைகல்கழித்தொர்நாட்கௌசிகப்பேர்க்
கோனினிதுறையுஞ்சோலைகுறுகினன் குறுகவன்றான்
ஈனனீயாவனென்னைநேர்ந்ததிவ்விடையினென்ன
0 மேனிகழ்பொருள்களெல்லாம்விளம்பினன்வணங்கிவேந்தன், (௧௧௨)

---

* நூலின் நன்னயமுணர்தல் - மாதர்பால மனங்கலங்காதிருத்தல்.

0 மேனிகழ் பொருள்களென்றது - தன்னை வசிட்டன் சபித்தன் முதலியன.

இற்றதோவெனநக்கனான்யானிருவேள்விமுற்றி
மற்றுலகளிப்பெனென்னாமாதவர்தம்மைக்கூவச்
சுற்றுறுமுனிவர்யாருந்தொக்கனர்வசிட்டன்மைந்தர்
கற்றிலமரசன்வேள்விகளற்றுறைபுலையற்கீவான். (௧௧௩)

என்றுரைத்தியாங்களெல்லோமென்றனரென்னப்பொங்கிப்
புன்றொழிற்கிராதராகிப்போகெனப்புகறலோடும்
அன்றவரெயினராகியடவிகடோறுஞ்சென்றார்
நின்றவேள்வியையுமுற்றிநிராசனர்வருகமென்றான். (௧௧௪)

அரைசனிப்புலையற்கென்னேயனற்றுறைமுற்றியெம்மை
விரைசுகவல்லையென்பான்விழுமிதென்றிகழ்ந்துநக்கார்
* புரைசைமாகளிற்றுவேந்தைப்போகநீதுறக்கம்யானே
உரைசெய்தேன்றவத்தினென்னவோங்கினன்விமானத்தும்பர். (௧௧௫)

ஆங்கவன்றுறக்கமெய்தவமரர்கள்வெகுண்டுநீ
ஈங்குவந்திடுவதென்னேயிருநிலத்திழிகவென்னத்
தாங்கலில்கவிழ்வான்மற்றுத்தாபதசரணமென்ன
ஓங்கின † னின்னில்லென்னவுரைத்துருமொக்கநக்கான். (௧௧௬)

பேணலாதிகழ்ந்தவிண்ணோர்பெரும்பதமுதலாமற்றைச்
சேண்முழுதமைப்பலென்னாச்செழுங்கதிர்கோணாடிங்கள்
மாணொளிகெடாதுதெற்குவடக்கவாய்வருகவென்று
தானுவோர்வெல்லாஞ்சமைக்குவெனென்னும்வேலை. (௧௧௭)

நறைத்தருவுடையகோனுநான்முகக்கடவுளானும்
கறைத்தருகளனுமற்றைக்கடவுளர்பிறருந்தொக்குப்
பொறுத்தருண்முனிவநின்னைப்புகல்புகுந்தவனைப்போற்றும்
அறத்திறனன்றுதாராகணத்தொடும்மைகவன்னாண். (௧௧௮)

அரசமாதவனீயாதி ‡ யைந்துநாட்டென்பால்வந்துன்
புரைவிளக்கிடுகவென்னாக்கடவுளர்போய்பின்னர்
நிரைதவன்விரைவினேகிநெடுங்கடற்கிறைவன்வைகும்
உரவிடமதனைநண்ணியுறுதவமுஞற்றுங்காலை. (௧௧௯)

குலைதவரிசிலைவாட்டானைக்கோமகனம்பரீடன்
சுவைதருமொழியன்வையத்துயிர்க்குயிராயதோன்றல்

---

* புரைசை - யானைக்கழுத்தணிகயிறு. † நின்னில் லென்றவிடத்து-விரைவுப்பொருளது. ‡ ஐந்துநாண்மீன்களாவன;-அநுஷம் கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் என்பன. இவை படைபபுக்காலந்தொட்டு வடக்கிலிருந்தன தேவர்களால் இவ்விஸ்வாமித்திரர் விஷயமாய்த் தெற்கில் பிரகாசிக்கும்படி நியமிக்கப்பட்டன. ஆதலால் அசுவினிமுதல் விசாகம் வரையிலுள்ள இருபத்திரண்டு நாண்மீன்களே வடக்கிலிப்பொழுது காணப்படுவன.

வதைபுரிபுருடமேதம்வகுப்பவோர்மைந்தற்கொள்வான்
சிதைவிலன்கனகந்தேர்கொண்டடவிகடுருவிச்சென்றான். (கஉ0)

நற்றவரிசிகன்வைகுநனைவரும்பழுவநண்ணிக்
கொற்றவன்வினவலோடுமிசைந்தனர்குமரர்தம்முள்
பெற்றவளிளவலெற்கேயென்றனள்பிதாமுன்னென்றான்
மற்றையமைந்தனக்குமன்னவன்றன்னைநோக்கி. (கஉக)

கொடுத்தருள்வெறுக்கைவேண்டிற்றெற்கமாம்விழுமங்குன்ற
எடுத்தெனைவளர்த்ததாதைக்கென்றவற்றொழுதுவேந்தன்
* தடுப்பருந்தேரினேறித்தடையிலாப்படர்தலோடும்
சுடர்க்கதிர்க்கடவுள்வானத்துச்சியஞ்சூழல்புக்கான். (கஉஉ)

அவ்வயினிழிந்துவேந்தனருங்கடன்முறையினாற்றச்
செவ்வியகுரிசிறானுஞ்சென்றனனியமஞ்செய்வான்
அவ்வியமவித்தசிந்தைமுனிவனையாண்டுக்காணாக்
கவ்வையினோடும்பாதகமலமதுச்சிசேர்த்தான். (கஉ௩)

விறப்பொடுவணக்கஞ்செய்தவிடலையையினிதுநோக்கிச்
சிறப்புடைமுனிவனென்னேதெருமரல்செப்புகென்ன
அறப்பொருளுணர்ந்தோயென்றனன்னைநும்முன்னையென்னை
உறப்பொருள்கொண்டுவேந்தற்குதவினனென்றானற்றோன். (கஉ௪)

மைத்துனனோடுமுன்னாள்வழங்கியமுறைமைகேளாத்
தத்துறலொழிநீயானேதடுப்பெனின்னுயிரையென்னாப்
புத்திரர்தம்மைநோக்கிப்போகவேந்தோடுமென்ன
அத்தகுமுனிவன்கூறவவர்மறுத்தகறல்காணா. (கஉ௫)

எழுங்கதிரவனுநாணச்சிவந்தனனிருகணெஞ்சம்
புழுங்கினன்வடவைதீயமயிர்ப்புறம்பொறியிற்றுள்ள
அழுங்கலில்சிந்தையீர்நீரடவிகடோறுஞ்சென்றே
ஒழுங்கறுபுளிஞராகியுறுதுயருறுகவென்றான். (கஉ௬)

மாமுனிவெகுளிதன்னான்மடிகலாமைந்தர்நால்வர்
தாமுறுசவரராகச்சபித்தெதிர்சலித்தசிந்தை
ஏமுறலொழிகவின்னேபெறுகெனவிரண்டுவிஞ்சை
கோமருகனுக்குநல்கிப்பின்னருங்குணிக்கலுற்றான். (கஉ௭)

அரைசனோடேகி † யூபத்தனைக்குபிம்மறையையாய்தி
விரசுவர்விண்ணுளோரும்விரிஞ்சனும்விடைவலோனும்
உரைசெறிவேள்விமுற்றுமுனதுயிர்க்கிறண்டாகா
பிரசமென்றாரோயென்னப்பழிச்சொடும்பெயர்ந்துபோனான். (கஉ௮)

* தடையிலா - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். † யூபம்-வேள்வித்தூண்

மறைமுனியுரைத்தவண்ணமகத்துறைமைந்தனாய
* சிறையுறுகழலுவன்னஞ்சேமுதற்பிறவுமூரும்
இறைவர்தொக்கமரார்சூழவிளவறன்னுயிரும்வேந்தன்
முன்றதருமகமுங்காத்தார்வடதிசைமுனியுஞ்சென்றான். (௧௪௯)

வடாதிசைமுனியுநண்ணிமலர்க்கரநாசிவைத்தாங்
கிடாவுபிங்கலையானையவிதயத்துடெழுத்தொன்றெண்ணி
விடாதுபற்பருவிற்பமூலமாமுகவிண்டு
தடாதிருட்படலமூடச்சலித்ததெத்தலமுந்தாழி. (௧௫0)

வேறு.

எயிலெரித்தவன்யானையுரித்தநாள்
பயிலுறுத்துரிபோர்த்தநன்பண்பெனப்
புயல்விரித்தெழுந்தாலெனப்பூதலம்
குயிலுறுத்திக்கொழும்புகைவிம்மவே. (௧௫௧)

தமந்திரண்டிலகியாவையுந்தாவுற
நிமிர்ந்தவெங்கதிர்க்கற்றையுநீங்குறக்
கபந்தமாதிரக்காவலர்கண்ணொடும்
சுமந்தநாகமுந் † கண்சும்புளித்தவே. (௧௫௨)

‡ திரிவநிற்பசெகதலத்தியாவையும்
வெருவலுற்றன வெங்கதிர்மீண்டன
கருவியுற்றகனமெலாம்புகை
உருவியுற்றிடவும்பர்துளங்கினர். (௧௫௩)

புண்டரீகனும்புட்டிருப்பாகனும்
குண்டையூர்திகுலிசியுமற்றுள
அண்டர்தாமும்வந்தவ்வயினெய்திவே
றெண்டபோதனன்றன்னையெதிர்ந்தனர். (௧௫௪)

பாதிமாவதிசூடியும்பைந்துழாய்ச்
சோதியோனுமத்தூய்மலராளியும்
வேதபாரகர்வேறிலர்நீயலால்
மாதபோதனவென்னவழங்கினர். (௧௫௫)

அன்னவாசகங்கேட்டுணராந்தணன்
சென்னிதாழ்த்திருசெங்கமலங்குவித்

---

* சிறையுறகலுழனன்னஞ்சே வூருமிறைவர் - மும்மைப்பெருந்தேவர், பிறவூரு மென்றதனான் யானையை யூர்தியாகக்கொண்ட இந்திரன் முதலிய இறைவரைக் குறித்தமைகாண்க. † கண்சும்பிளித்தல்-கண்களைச் சுருக்கிப்பார்த்தல், சும்புளித்தல்-கூசுதல். ‡ திரிவநிற்ப - இயங்குதிணை நிலைத்திணை யுயிரை, சென்றுநின்று வாழுயிரெலாமென்றதுமிது.

துன்னுநல்வினையுற்றதென்றேங்கினன்
துன்னுதேவர்தஞ்சூழலுட்போயினர். (௧௩௬)

ஈதுமுன்னர்நிகழ்ந்த * திவன்றனை
மாதவத்துயர்மாண்புடையாரிலை
நீதிவித்தக்னென்னருணேர்ந்தனிர்
யாதுமக்கரிதென்றனனீறிலான், (௧௩௭)

என்று † கோதமன்காதலன்கூறிட
வென்றிவீரர்வியப்பொடிவந்தெழா
ஒன்றுமாதவன்றனொடுதோங்கிய
பின்றையேத்திப்பெயர்ந்தனன்னிடம். (௧௩௮)

முனியுந்தம்பியுமொய்ம்மிளையாற்றனக்
கினியபள்ளிகளெய்தியபின்னிருட்
கனியும்போல்பவன்கங்குலுந்திங்களும்
தனியுந்தானுமத்தையலுமாயினன். (௧௩௯)

விண்ணினீங்கியமின்னுருவிம்முறை
பெண்ணினன்னலம்பெற்றதுண்டேகொலோ
எண்ணினீதலதென்றறியேனிரு
கண்ணினுள்ளுங்கருத்துள்ளுங்காண்பெறல். (௧௪௦)

வள்ளற்சேக்கைக்கரியவன்வைகுறும்
வெள்ளப்பாற்கடல்போன்மிளிர்கண்ணினன்
அள்ளற்பூமகளாகுங்கொலேவென
துள்ளத்தாமரையுள்ளுறைகின்றதே. (௧௪௧)

அருளிலாளெனினும்மனத்தாசையால்
வெருளுநோய்விடக்கண்ணின்விழுங்கலால்
தெருளிலாவுலகிற்சென்றுநின்றுவாழ்
பொருளெலாமவள்பொன்னுருவாயவே. (௧௪௨)

பூணுலாவியபொற்கலசங்களென்
ஏணிலாகத்தெழுதலவெனினும்
வாணிலாமுறுவற்கனிவாய்மதி
காணலாவதோர்காலமுண்டாங்கொலோ. (௧௪௩)

வண்ணமேகலைத்தேரொன்றுவாணெடுங்
கண்ணரண்டுகதிமுலைதாமிரண்
டுண்ணிவந்தநகையுமுண்டாமெனில்
எண்ணுங்கூற்றினுக்கித்தனைவேண்டுமோ. (௧௪௪)

---

* இவன்று - இவனிராக. † கோதமன்காதலன்-சதாநந்தன்.

கன்னலின்கருப்புச்சிலையான்விரை
பொன்னைமுன்னியபூங்கணைமாரியால்
என்னையெய்துதொலைக்குமென்றாலினி
வன்மையென்னுமிதாரிடைவைகுமே. (௧௬௫)

கொள்ளைகொள்ளக்கொதித்தெழும்பாற்கடற்
பள்ளவெள்ளமெனப்படருந்நிலா
உள்ளவுள்ளவுயிரைத்திருவிட
* வெள்ளைவண்ணவிடமுமுண்டாங்கொலோ. (௧௬௬)

ஏகுநல்வழியல்வழியென்மனம்
ஆகமோவதற்காகியகாரணம்
பாகுபோன்மொழிப்பைந்தொடிகன்னியே
ஆகும்வேறிதற்கையுறவில்லையே. (௧௬௭)

கழிந்தகங்குலரசன்கதிர்க்குடை
விழுந்ததென்னவுமேற்றிசையாள்சுடர்க்
கொழுந்துசேர்நுதற்கோதறுசுட்டிபோய்
அழிந்ததென்னவுமாழ்ந்தது திங்களே. (௧௬௮)

வீசுகின்றநிலாச்சுடர்வீய்ந்ததால்
ஈசனுமதியேகலுஞ்சோகத்தால்
பூசுவெண்கலவைப்புனைசாந்தினை
ஆசைமாதரழித்தனவொன்னவே. (௧௬௯)

வேறு.

ததையுமலர்த்தாரண்ணலிவ்வண்ணமயலுழந்துதளருமெல்லை
சிதையுமனத்திடருடையசெங்கமலமுகமலரச்செய்யவெய்யோன்
புதையிருளினெழுகின்றபுகர்முகயானையினுரிவைப்போர்வைபோர்த்த
உதையகிரியெனுங்கடவுணுதல்கிழித்தவிழியேபோலுதயஞ்செய்தான். ()

விசையாடற்பசுபுரவுக்குரமிதிப்பவுதயகிரிவீரிந்ததூளி
பசையாகமறையவர்கைந்நறைமலருநிறைபுனலும்பரந்துபாய [ன்
அசையாதநெடுவரையின்முகடுதொறுமிளங்கதிர்சென்றணைந்துவெய்யோ
திசையாளுமதகரியைச்சிந்தூரமப்பியபோற்சிவந்தமாதோ. (௧௭௧)

பண்டுவருங்குறிபகர்ந்துபாசறையிற்பொருள்வயினிற்பரிந்துபோன
வண்டுதொடர்நறுந்தெரியலுயிரனையகொழுநர்வரமணித்தேரோடும்
கண்டுமனங்களிசிறப்பவொளிசிறந்துமெலிவகலுங்கற்பினார்போல்
புண்டரிகமுகமலரவகமலர்ந்துபொலிந்தனபூம்பொய்கையெல்லாம். ()

---

* இது சந்திரோபாலம்பனமென்க.

என்னரியமறையினுடுகின்னரர்களிசைபாடவுலகமேத்த
விண்ணவருமுனிவர்களும்வேதியருங்கரங்குவிப்பவேலையென்னும்
மண்ணுமணிமுழவதிரவானரங்கினடம்புரிவாளிரவியான
கண்ணுதல்வர்னவன்கனகச்சடைவிரித்தாலெனவிரிந்தகதிர்களெல்லாம்.

கொல்லாழிநீத்தங்கோர்குனிவயிரச்சிலைதடக்கைகொண்டகொண்டல்
எல்லாழித்தேரிரவியினங்கரத்தாலடிவருடியணர்ந்தநீர்ப்ப
அல்லாழிக்கரைகண்டானுமிரவாய்மணிவிளக்கமழலுஞ்சேக்கைத்
தொல்லாழிதுயிலாதேதுயராழிநெடுங்கடலுட்டுயில்கின்றானே. (கஉ௬)

ஊழிபெயர்ந்தெனக்கங்குலொருவண்ணம்புடைபெயரவுறக்கநீத்த
ஆழியானையினெழுந்துதொன்னியமத்துறைமுடித்துச்சுருதியன்ன
வாழிமாதவற்பணிந்துமனக்கினியதம்பியொடும்வம்பின்மாலை
தாழுமாமணிமௌலித்தார்ச்சனகன்பெருவேள்விச்சாலைசார்ந்தான். ()

முடிச்சனகர்பெருமானுமுறையாலேமறைவேள்விமுற்றிச்சுற்றும்
இடிக்குரலின்முரசியம்பவிந்திரன்போற்சந்திரன்றேய்கோயிலெய்தி
எடுத்தமணிமண்டபத்துளண்டவத்துமுனிவரொடுமிருந்தான்பைந்தார்
வடித்தகுனிவரிசிலைக்கைமைந்தனுந்தம்பியுமருங்கினியிருப்பமாதோ. ()

இருந்தகுலக்குமரர்தமையிருகண்ணின்முகத்தழகுபருகநோக்கி
அருந்தவனையடிவணங்கியாரையிவருரைத்திடுமினடிகளென்ன
விருந்தினர்கணின்னுடையவேள்விகாணியவந்தார்வில்லுங்காண்பார்
பெருந்தகைமைத்தயரதன்றன்புதல்வரெனவவர்தகைமைபேசலுற்றான்.

ககவது. மிதிலைக்காட்சிப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எஉக.

கஉ-வது. குலமுறைகிளத்துப்படலம்.

சூரியவமிசத்தரசரது வரலாறுகூறுகின்ற படலம்.

ஆதித்தன்குலமுதல்வன்மனுவினையாரறியாதார்
பேதித்தவுயிரனைத்தும்பெரும்பசியால்வருந்தாமற்
சோதித்தன்வரிசிலையானிலமடந்தைமுலைசுரப்பச்
சாதித்தபெருந்தகையுமிவர்குலத்தராபதிகாண். (க)

பிணியரங்கவினையகலப்பெருங்காலந்தவம்பேணி
மணியரங்கநெடுமுடியாய்மலரயனைவழிபட்டுப்
பணியரங்கப்பெரும்பாயற்பரஞ்சுடரையாங்காண
அணியரங்கந்தந்தானையறியாதாரறியாதார். (உ)

தான்றனக்குவெலற்கரியதானவரைத்தலைதுமித்தென்
வான்றரக்கிற்றிகொலென்றுகுறையிரப்பவரங்கொடுத்தான்
கேன்றெடுத்தசிலையினனுயிகல்புரிந்தவிவர்குலத்தோர்
தோன்றலைப்பண்டிந்திரன்காண்விடையேறாய்ச்சுமந்தானும். (௩)

அரைசனவன்பின்னோரையென்னனுமளப்பரிதால்
உரைகுறுகநிமிர்கீர்த்தியிவர்குலத்தோனொருவன்காண்
நரைதிரைமூப்பிவைமாற்றியிந்திரனுநந்தாமல்
குரைகடலைநெடுவரையாற்கடைந்தமுதுகொடுத்தானும். (௪)

கருதலரும் * பெருங்குணத்தோரிவர்முதலோர்கணக்கிறந்தோர்
திரிபுவனமுழுதாண்டுசுடர்நேமிசெலநின்றோர்
பொருதுறைசேர்வேலினுய்புலிப்போத்தும்புல்வாயும்
ஒருதுறையினீருண்ணவுலகாண்டோனுளனொருவன். (௫)

மறைமன்னுமணிமுடியுமாரமும்வாளொடுமின்னப்
பொறைமன்னுவானவருந்தானவரும்பொருமொருநாள்
விறன்மன்னர்தொழுகழலாயிவர்குலத்தோன்விற்பிடித்த
அறமென்னவொருதனியேதிரிந் † தமராபதிகாத்தோன். (௬)

இன்னுயிர்க்குமின்னுயிராயிருநிலங்காத்தாரென்று
பொன்னுயிர்க்குங்கழலவரையாம்போலும்புகழ்கிற்பாம்
மின்னுயிர்க்குநெடுவேலாயிவர்குலத்தோன்மேற்பறவை
மன்னுயிர்க்குத்தன்னுயிரைமாறாகவழங்கினனால். (௭)

இடறோட்டவினநெடியவரையுருட்டியிவ்வுலகம்
திடறோட்டமெனக்கிடக்கும்வகையிரங்கித்தெவ்வேந்தர்
உடறோட்டநெடுவேலாயிவர்குலத்தோருவரிநீர்க்
கடறோட்டாரெனின்வேறோர்கட்டுரையும்வேண்டுமோ. (௮)

தானின்றசுடர்வேலோயனந்தனேசொல்லானேல்
யானின்றுபுகழ்த்தேத்தற்கெளிதேயடவிழ்கொன்றைப்
பூநின்றமவுலியையும்புக்களைந்தபுனற்கங்கை
வானின்றுகொணர்ந்தானுமிவர்குலத்தோர்மன்னவன்காண். (௯)

கயற்கடல்சூழுலகெல்லாங்கைநெல்லிக்கனியாக்கி
இயற்கைநெறிமுறையாலேயிந்திரற்குமிடரியற்றி
முயற்கறைபின்மதிக்குடையாயிவர்குலத்தோன்முன்னொருவன்
செயற்கரியபெருவேள்வியொருநூறுஞ்செய்தமைத்தான். (௧௦)

சந்திரனைவென்றானுமுருத்திரனைச்சாய்த்தானும்
துந்துவெனுந்தானவனைச்சுடுசரத்தாற்றுணித்தானும்

* பெருங்குணம், சீவகாருண்ணியமுதலியன. † அமராபதி - இந்திரனகரம்.

வந்தகுலத்திடைவந்தாகுவென்பான்வரிசிலையால்
இந்திரனைவென்றுதிசையிருநான்குஞ்செருவென்றான். (௧௧)

வில்லென்னுநெடுவரையால்வேந்தென்னுங்கடல்கலக்கி
எல்லென்னுமணிமுறுவலிந்துமதியெனுந்திருவை
அல்லென்னுந்திருநிறத்தவரியென்னவயனென்பான்
மல்லென்னுந்திரள்புயத்துக்கணியென்னவைத்தானே. (௧௨)

அயன்புதல்வன்றயரதனையறியாதாரில்லையவன்
பயந்தகுலக்குமரரிவர்தமையுள்ளபரிசெல்லாம்
நயந்துரைத்துக்கரையேறநான்முகற்குமரிதாம்பல்
இயந்துவைத்தகடைத்தலையாயானறிந்தபடிகேளாய், (௧௩)

துனியின்றியுயிர்செல்லச்சுடராழிப்படைவெய்யோன்
பனிவென்றபடியென்னப்பகைவென்றுபடிகாப்போன்
தனுவன்றித்துணையில்லான்றருமத்தின்கவசத்தான்
மனுவென்றநீதியான்மகவின்றிவருந்துவான் (௧௪)

சிலைக்கோட்டுநுதற்குதலைச்செங்கனிவாய்க்கருநெடுங்கண்
விலைக்கோட்டும்பேரல்குன்மின்னுடங்குமிடையாரை
முலைக்கோட்டுவிலங்கென்றங்குடனனுகிமுன்னின்ற
கலைக்கோட்டுப்பெயர்முனியாற்றுயர்நீங்கக்கருதினான். (௧௫)

நார்காத்தநறுங்குஞ்சித்தநயர்களென்றவமின்மை
வார்காத்தவனமுலையார்மணிவயிறுவாய்த்திலரால்
நீர்காத்தகடல்காத்தநிலங்காத்தேனென்னிற்பின்
பார்காத்தற்குரியாரைப்பணீயேயென்றடிபணிந்தான். (௧௬)

அவ்வுரைகேட்டம்முனியுமருள்சுரந்தவுவகையனாய்
இவ்வுலகமன்றியேயெவ்வுலகுமினிதளிக்கும்
செவ்வியிளஞ்சிறுவர்களைத்தருகின்றேனினித்தேவர்
வவ்விநுகர்பெருவேள்விக்குரியவெலாம்வருகென்றான். (௧௭)

காதலரைத்தருவேள்விக்குரியவெலாங்கடிதமைப்ப
மாதவரிற்பெரியோனுமற்றதனைமுற்றுவித்தான்
சோதிமணிப்பொற்கலத்துச்சுதையனையவெண்சோறோர்
பூதகணத்தரசேந்தியனனின்றும் * புறப்பட்ட. (௧௮)

பொன்னின்மணிப்பரிகலத்திற்புறப்பட்டவின்னமுதைப்
பன்னுமறைப்பொருளுணர்ந்தபெரியோன்றன்பணியினால்
தன்னனையநிறைகுணத்துத்தசரதனும்வான்முறையால்
நன்னுதலார்மூவருக்குநாலுகூறிட்டளித்தான். (௧௯)

---

* புறப்பட்டது - என்புழிதுவ்வீறுதொகுத்தல்பெற்றது.

விரிந்திடுதீவினைசெய்தவெவ்வியதீவினையாலும்
அருங்கடையின்மறையறைந்தவறஞ்செய்தவறத்தாலும்
இருங்கடகக்கரதலத்தில்வெழுதரியதிருமேனிக்
கருங்கடலைச்செங்கனிவாய்க்கவுசலையென்பாள்பயந்தாள். (உ0)

தள்ளரியபெருநீதித்தனியாறுபுகமண்டும்
பள்ளமெனுந்தகையானைப்பரதனெனும்பெயரானை
எள்ளரியகுணத்தாலுமெழிலாலுமிவ்விருந்த
வள்ளலையேயனையானைக்கேகயர்கோன்மகள்பயந்தாள் (உக)

அருவலியதிறலினராயறங்கெடுக்கும்விறலரக்கர்
வெருவருதிண்டிறலார்கள்வில்லேந்துமெனிற் * செம்பொற்
பருவரையு † நெடுவெள்ளிப்பருப்பதமும்போல்வார்கள்
இருவரையுமிவ்விருவர்க்கிளையாளுமீன்றெடுத்தாள். (உஉ)

தலையாயபொருளுணர்விற்கலைமகட்குத்தலைவராய்ச்
சிலையாயுந்தனுவேதந்தெவ்வரைப்போர்பணிசெய்யக்
கலையாழிக்கதிர்த்திங்களுதயத்திற்கலித்தோங்கும்
அலையாழியெனவளர்ந்தார்மறைநான்குமனையார்கள். (உங)

திறையோடுமரசிறைஞ்சுஞ்செறிகழற்காற்றசரதனும்
பொறையோடுந்தொடர்மனத்தான்புதல்வரெனும்பெயரேகாண்
‡ உறையோடுநெடுவேலாயுபநயனவிதிமுடித்து
மறையோடுவித்திவரைவளர்த்தானும்வசிட்டன்காண். (உச)

ஈங்கிவராலென்வேள்விக்கிடையூறுகடிதியற்றும்
தீங்குடையகொடியோரைக்கொல்விக்குஞ்சிந்தையனாய்ப்
பூங்கழலார்க்கொண்டுபோய்வனம்புக்கேன்புகாமுன்னம்
தாங்கரியபேருற்றற்று டகையேதலைப்பட்டாள். (உரு)

அலைபுருவக்கடலுருவத்தாண்டகைதன்னீண்டுயர்ந்த
நிலையுருவப்புயவலியைநீயுருவநோக்கய்யா
உலையுருவக்கனலுமிழ்கட்டாடகைதன்னுரமுருவி
மலையுருவிமரமுருவிமண்ணுருவிற்றொருவாளி. (உசு)

செக்கர்நிறத்தெரிகுஞ்சிக்சிரக்குவைகள்பொருப்பென்ன
உக்கனவோமுடிவில்லையோரம்பினொடுமரக்கி
§ மக்களிலங்கொருவன்போய்வான்புக்கான் ¶ மற்றையவன்
புக்கவிடமறிந்திலேன்போந்தனென்வினைமுடித்தே. (உஎ)

---

* செம்பொற்பருவரை-மேரு. †நெடுவெள்ளிப்பருப்பதம்-கைலாயம்.
‡ பகைவரின்மையாலுறைபுகுதலின் உறையோடுநெடுவேலாயென்றார்.
§மக்களிலங்கொருவன் என்றது-சுவாகு¶மற்றையவனென்றது-மாரீசனை.

ஆய்ந்தேறவுணரையவற்கேயுமறிவரிய
காய்ந்தேவிலுலகனைத்துங்கடலோடுமலையோடும்
தீய்ந்தேறச்சுடுகிற்கும்படைக்கலங்கள்செய்நவத்தால்
ஈய்ந்தேனுமனமுட்கவிவற்கேவல்செய்குநவால். (௨௮)

கோதமன்றன்பன்னிக்குமுன்னையுருக்கொடுத்ததிவண்
போதுகின்றதெனப்பொலிந்தபொலன்கழற்காற்பொடிகண்டாய்
காதலென்றனுயிர்மேலுமிக்கரியோன்பாலுண்டால்
ஈதிவன்றன்வரலாறும்புயவலியுமெனவுரைத்தான். (௨௯)

௧௨-வது குலமுறைகிளத்துபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௭௫௦.

௧௩-வது. கார்முகப்படலம்.

வில்லிறுத்ததைக் குறித்துக்கூறும்படலம்.

மாற்றம்யாதுரைப்பதுமாயவிற்குநான்
தோற்றவாரெனமனந்துளங்குகின்றதால்
நோற்றனனங்கையுநொய்தினையன்வில்
ஏற்றுமேலிடர்க்கடலேற்றுமென்றனன். (௧)

என்றனனேன்றுதன்னெதிர்நின்றுரையக்
குன்றுறழ்வரிசிலைகொணர்மினென்றென
நன்றெனவணங்கினர்நால்வரோடினர்
பொன்றிணிகார்முகச்சாலைபுக்கனர். (௨)

உறுவலியானையையொத்தமேனியர்
செறிமயிர்க்கல்லெனத்திரண்டதோளினர்
* அறுபதினாயிரராளவிலாற்றலர்
தறிமடுத்திடையிடைதண்டிற்றூங்கினர். (௩)

நெடுநிலமகண்முதுகாற்றநின்றுயர்
தடநிமிர்வடவரைதானுநாணுற
இடமிலையுலகெனவந்ததெங்கணும்
கடல்புரைதிருநகரிரைத்துக்காணவே. (௪)

* அறுபதினாயிர ரென்றதன்றி அற்றபதினாயிரவரெனக் கொண்டு ஐயாயிரவரெனக் கோடலுமமையும்.

* சங்கொடுசக்கரந்தரித்ததானைய
சிங்கவேறல்லனேவிதனைத்தீண்டுவான்
எங்குளனொருவனின்றேற்றினிச்சிலை
மங்கைதன்றிருமணம்வாழுமாலென்பார். (௫)

கைதவந்தனுவெனல்கனகக்குன்றென்பார்
எய்தவன்யாவனோவேற்றிப்பண்டென்பார்
செய்தவத்திசைமுகன்றீண்டியன்றுதன்
மொய்தவப்பெருமையின்முயற்சியாலென்பார். (௬)

திண்ணெடுமேருவைத்திரட்டிற்றோவென்பார்
வண்ணவான்கடல்பண்டுகடைந்ததென்பார்
அண்ணல்வாளரவினுக்கரசனோவென்பார்
விண்ணிடுநெடியவில்வீழ்ந்ததோவென்பார். (௭)

என்னிதுகொணர்கெனவியம்பினானென்பார்
மன்னவருளர்கொலோமதிகெட்டாரென்பார்
முன்னையூழ்வினையினான்முடிக்கலாமென்பார்
கன்னியுமிச்சிலைகாணுமோவென்பார். (௮)

இச்சிலையுதைத்ததோற்றிலக்கம்யாதென்பார்
நச்சிலை † நங்கைமேனாட்டும்வேந்தென்பார்
நிச்சயமெடுக்குங்கொனேமியானென்பார்
சிற்சிலர்விதிசெய்ததீமைதானென்பார். (௯)

மொய்த்தனரின்னணமொழியமன்னன்முன்
உய்த்தனர்நிலமுதுகுளுக்கிக்கீழுற
வைத்தனர்வாங்குநர்யாவரோவெனாக்
கைத்தலம்விதிர்த்தனர்கண்டவேந்தரே. (௧௦)

போதகமனையவன்பொலிவுநோக்கியவ்
வேதனைதருகின்றவில்லைநோக்கித்தன்
மாதினைநோக்குவான்மனத்தைநோக்கிய
கோதமன்காதலன்கூறன்மேயினான். (௧௧)

‡ இமையவில்வாங்கியவீசன்பங்குறை
உமையினையிகழ்ந்தனனென்னவோங்கிய
கமையுறுசினத்தனிக்கார்முகங்கொளாச்
சமையுறுதக்கனார்வேள்விசாரவே. (௧௨)

---

* சங்கொடு சக்கரந்தரித்த தானையசிங்கவேறென்பதற்குச் சங்குசக்கரமேந்திய படையாகவுடைய சிங்கம்போல்வானாகிய திருமால் எனப் பொருள்கொள்க.

† நங்கைமேல் என்புழி ஏழாவது நான்காவதன்பொருளது.

‡ இமையவில் - மேருமலையாகியவில்.

உக்கனபல்லொடுகேரங்களோடினர்
புக்கனர்வானவர்புகாதசூழல்கள்
* தக்கனல்வேள்வியிற்றழலுமாறின
முக்கணெண்டோளவன்முனியுமாறினன். (௧௩)

தாளுடைவரிசிலைசம்புவும்பர்தம்
நாளுடைமையினவர்நடுக்கநோக்கியிக்
கோளுடைவிடையவன்குலத்துட்டோன்றிய
† வாளுடையுழவனோர்மன்னன்பால்வைத்தான். (௧௪)

கார்முகவலியையான்கழறல்வேண்டுமோ
வார்சடையரனிகர் ‡ வரதநீயலால்
யாருணரறிபவரிதற்குத்தோன்றிய
தேர்முகவல்குலாள்செவ்விகேளென. (௧௫)

வேறு.

இரும்பனையகருநெடுங்கோட்டிணையேற்றின்பணையேற்ற
பெரும்பியளிற்பலிக்குநுகம்பிணைத்ததனோடிணைத்தீர்க்கும்
வரம்பின்மணிப்பொற்கலப்பைவயிரத்தின்கொழுமடுத்திட்
டுரம்பொருவினிலம்வேள்விக்கலகில்பலசாலுழுதேம். (௧௬)

உழுகின்றகொழுமுகத்தினுதிக்கின்றகதிரொளிபோல்
பொழிகின்றபுவிமடந்தைதிருவெளிப்பட்டெனப்புணரி
எழுகின்றதெள்ளமுதோடெழுந்தவளுமிழிந்தொதுங்கத்
தொழுகின்றநன்னலத்துப்பெண்ணரசிதோன்றினள். (௧௭)

குணங்களையென்கூறுவதுகொம்பினைச்சேர்ந்தவையுய்யப்
பிணங்குவன § வழகிவளைத்தவஞ்செய்துபெற்றதுகாண்
கணங்குழையாளெழுந்ததற்பின்கதிர்வாணிற்கங்கையெனும்
அணங்கிழியப்பொலிவிழந்தவாறொத்தார்வேறுற்றார். (௧௮)

சித்திரமிங்கிதுவொப்பதெங்குண்டுசெய்வினையால்
வித்தகமும்விதிவசமும்வெவ்வேறேபுறங்கிடப்ப
அத்திருவையமரர்குலமாதரித்தாரெனவறிஞ
இத்திருவைநிலவேந்தரெல்லாருங்காதலித்தார். (௧௯)

கலித்தானைக்கடலோடுங்கைத்தானக்களிற்றரசர்
ஒலித்தானையெனவந்துமணமொழிந்தார்க்கெதிருடுத்த
புலித்தானைக்களிற்றுரிவைப்போர்வையான்போர்வில்லை
வலித்தானைமங்கைதிருமணத்தானென்றியாம்வலித்தேம். (௨௦)

---

* தக்கன் - பிரமனது மானதபுத்திரருள் ஒருவன். † வாளுடையுழவன் - தேவராதனை. ‡ வரதன்-வரங்கொடுப்போன். § அழகுக்கழகு செய்பவளாதலின்-அழகிவளைத் தவஞ்செய்து பெற்றதென்றார்.

வல்வில்லுக்காற்றார்கண்மாரவேள்வளைகருப்பின்
மெல்வில்லுக்காற்றாராய்த்தாமெய்ம்மைவிளிருற்றார்
கல்வில்லோடுலகீந்தகணங்குழையைக்காதலித்துச்
* சொல்வில்லாலுலகளிப்பாய்போர்செய்யத்தொடங்கினார். (௨௧)

இம்மன்னர்பெருஞ்சேனை † யீவுதனைமேற்கொண்ட
செம்மன்னர்பொருளேபோற்புகழ்வாய்ப்பச்சிறந்ததால்
பொம்மென்னவண்டலம்பும்புரிகுழலைக்காதலித்த
அம்மன்னர்சேனைநமதாசைபோலாயிற்றால் (௨௨)

மற்காக்குமணிப்புயத்துமன்னனிவன்மழவிடையோன்
விற்காக்கும்வாளமருண்மெலிகின்றானெனவிரங்கி
எற்காக்குமுடிவிண்ணோர்படையீந்தாரெனவேந்தர்
அற்காக்கைகூசையைக்கண்டஞ்சினவாமெனவகன்றார். (௨௩)

அன்றுமுதலின்றளவுமாருமிந்தச்சிலையருகு
சென்றுமிலர்போயொளித்தார்தேர்வேந்தர்திரிந்துமிலர்
என்றுமினிமணமுமிலையென்றிருந்தேமிவனேற்றின்
நன்றுமலர்க்குழற்சீதைநலம்பழுதாகாதென்றான். (௨௪)

நினைந்தமுனிபகர்ந்தவெலாநெறியுன்னியறிவனுந்தன்
புனைந்தசடைமுடிதுளக்கிப்போரேற்றின்முகம்பார்த்தான்
வனைந்தனையதிருமேனிவள்ளலுமம்மாதவத்தோன்
நினைந்தவெலாநினைந்தநெடுஞ்சிலையைநோக்கினான். (௨௫)

வேறு.

பொழிந்தநெய்யாகுதிவாய்வழிபொங்கி
எழுந்தகொழுங்கனலென்னவெழுந்தான்
அழிந்தது ‡ வில்லெனவிண்ணவரார்த்தார்
மொழிந்தனராசிகண்முப்பகைவென்றார். (௨௬)

தூயதவங்கடொடங்கியதொல்லோன்
ஏயவன்வல்விலிறுப்பதன்முன்னம்
சேயிழைமங்கையர்சிந்தைதொறெய்யா
ஆயிரம்வில்லையநங்கனிறுத்தான். (௨௭)

சாணுநெடுஞ்சிலைகால்வலிதென்பார்
நாணுடைநங்கைநலங்கினர்செங்கேழ்

* நிறைமொழி மாந்தரென்பதுபற்றி சொல்வில்லாலுலகளிப்பாயென்றார்.

† ஈவார்மேனிற் புகழ் என்பனாதலின் - ஈவுதனைமேற்கொண்ட செம்மன்பொருளே போற்புகழ்வாய்ப்ப என்றார். ‡ அம்பகம்-கண், த்ரியம்பகன்-மூன்றுகண்களையுடைய சிவன், அவன் வில்லாதலால் த்ரியம்பகமென இந்த வில்லுக்குக் காரணக்குறியாயிற்று.

பாணியிவன்படர்செங்கைபடாதேல்
வாணுதல்சீதையும்வாழ்விலளென்பார். (௨௮)

கரங்கள்குவித்திருகண்கள்பனிப்ப
இருங்களிறிச்சிலையேற்றிலனாயின்
நரந்தநறைக்குழனங்கையுநாமும்
மரஞ்செரியிற்புகமூழ்குதுவென்பார். (௨௯)

வள்ளன்மணத்தைமகிழ்ந்தனனென்றால்
கொள்ளெனமுன்புகொடுப்பதையல்லால்
*வெள்ளமணைத்தவன்வில்லையெடுத்திப்
பிள்ளைமுனிட்டபேதைமையென்பார். (௩0)

ஞானமுனிக்கொருநாணிலையென்பார்
கோனிவனிற்கொடியாரிலையென்பார்
மானவனிச்சிலைகால்வளையானேற்
பீனதனத்தவள்பேரிலளென்பார். (௩௧)

தோகையரின்னனசொல்லிடநல்லோர்
ஓகைவிளம்பிடவும்பருவப்ப
மாகமடங்கலுமால்விடையும்பொன்
† நாகமுநாகமுநாணநடந்தான். (௩௨)

ஆடகமால்வரையன்னதுதன்னைத்
தேடருமாமணிசீதையெனும்பொற்
சூடகவால்வளைசூட்டிடநீட்டும்
ஏடவிழ்மாலையிதென்னவெடுத்தான். (௩௩)

தடுத்திமையாமலிருந்தவர்தாளின்
மடுத்ததுநாணுதிவைத்ததுநோக்கார்
கடுப்பினில்யாருமறிந்திலர்கையால்
எடுத்ததுகண்டனரிற்றதுகேட்டார். (௩௪)

வேறு.

ஆரிடைப்புகுதுநாமென்றமரர்கள் ‡ கமலத்தோன்றன்
பேருடையண்டகோளம்பிளந்ததென்றேங்கினைந்தார்
பாரிடையுற்றதன்மைபகர்வதென்பாரைத்தாங்கி
வேரிடைக்கிடந்தநாகமிடியெனவெருவிற்றன்றே. (௩௫)

---

* உலகையழிக்கவந்த கங்கையைத் தன்சடைநுனியிற் கரக்குமாற்ற லோனை 'வெள்ளமணைத்தவ' னென்றும், அவனேந்தும் வில்லை இராம னிடத்தளிப்பது தகாதென்பார் பிள்ளை முன்னிட்டது பேதைமையென் றும் கூறினர்.

† ஆற்றலிற் சிறந்ததாகலின்மாக மடங்கலும், நடையிற் சிறந்ததாக லின் மால்விடையும், சலியாமையின் பொன்னாகமும், கம்பீரமுடைமை யின் நாகமுமென்றின்ன நாணச்சென்றானென்றது. ‡ கமலத்தோன்... கோளம்-பிரமாண்டகோளம்.

பூமழைசொரிந்தார்விண்ணோர்பொன்மழைபொழிந்தமேகம்
பாமமாகடல்களெல்லாம்பன்மணிதூவியார்த்த
கோமுனிக்கணங்களெல்லாங்கூறினவாசிகொற்ற
நாமவேற்சனகற்கின்றுவினைபயந்ததென்றே. (௫௬)

மாலையுமிழையுஞ்சாந்துஞ்சுண்ணமும்வாசநெய்யும்
வேலைவெண்முத்தும்பொன்னுங்காசுநுண்டுகிலும்வீசிப்
பால்வளையமிர்தளாயபல்லியந்துவைப்பமுந்நீர்
* ஒல்கியர்ந்துவாவுற்றென்னவொலிநகர்கிளர்ந்ததன்றே. (௫௭)

நல்லியன்மகரவீணைத்தேனாகநகையுந்தோடும்
வில்லிடவாளும்வீசவேல்கிடந்தனையநாட்டத்
தெல்லியன்மதியமன்னமுகத்தியரெழிலிதோன்றச்
சொல்லியபருவநோக்குந்தோகையினாடினாரே. (௫௮)

உண்ணரவருந்தினாரிச்சிவந்தொளிர்கருங்கண்மாதர்
புண்ணுறுபுலவிநீங்கக்கொழுநரைப்புல்லிக்கொண்டார்
வெண்ணிறமேகமேன்மேல்விரிகடல்பருகுமாபோல்
மண்ணுறுவேந்தன்செல்வம்வறியவர்முகந்துகொண்டார். (௫௯)

வயிரியர்மதுரகீதமங்கையரமுதகீதம்
செயிரியர்மகரயாழின்றேம்பிழிதெய்வகீதம்
பயிரியர்வேயின்கீதமென்றிவைபருகிவிண்ணோர்
உயிருடையுடம்புவெல்லாமோவியமொப்பநின்றார். (௬0)

ஐயன்வில்லிறுத்தவாற்றல்காணியவமரர்நாட்டுத்
தையலாரிழிந்துபாரின்மகளிரைத்தழுவிக்கொண்டார்
செய்கையின்வடிவினாடல்பாடலிற்றெளிதறேற்றார்
மையரிநெடுங்கணோக்கமிமைத்தலுமயங்கிநின்றார். (௬௧)

தயரதன்புதல்வனென்பார்தாமரைக்கண்ணனென்பார்
புயலிவன்மேனியென்பார்பூவையும்பொருவுமென்பார்
மயலுடைத்துலகமென்பார்மானுடனல்லனென்பார்
கயல்பொருகடலுள்வைகுங்கடவுளேகாணுமென்பார். (௬௨)

நம்பியைக்காணநங்கைக்காயிரம்நயனம்வேண்டும்
கொம்பினைக்காணுந்தோறுங்குரிசிற்குமன்னதேயாம்
தம்பியைக்காண்மினென்பார்தவமுடைத்துலகமென்பார்
இம்பரிந்நகரிற்றந்தமுனிவனையிறைஞ்சுமென்பார். (௬௩)

---

* நிறைமதியங் காண்புழி கடல் ஒல்லெனக் கிளர்ந்து பொங்கலான் ஒல்கிளர்ந்துவாவுற்றென்ன என்றார்.

இற்றிவணின்னதாகமதியொடுமெல்லிநீங்கப்
பெற்றுயிர்பின்னுங்காணுமாசையாற்சிறிதுபெற்ற
சிற்றிடைப்பெரியகொங்கைச்சேயரிக்கரியவாட்கட்
பொற்றொடிமடந்தைக்கப்பாலுற்றதுபுகலலுற்றும். (௫௫)

ஊசலாடுயிரினோடுமுருகுபூம்பள்ளிநீங்கிப்
பாசிழைமகளிர்சூழப்போயொருபளிக்குமாடக்
காசறுமணியின்பொய்கைச்சந்திரகாந்தமீன்ற
சீதநீர்தெளித்தமென்பூஞ்சேக்கையையரிதிற்சேர்ந்தாள். (௫௬)

பெண்ணிவணுற்றதென்னும்பெருமையாலருமையான
* வண்ணமும்இலைகளாலேகாட்டவால்வாட்டந்தீர்ந்தேன்
தண்ணறுங்கமலங்கா † ளென்றளிர்நிறமுண்டகண்ணின்
உண்ணிறங்காட்டிநீரென்னுயிர்தரவுலோவினீரே. (௫௭)

வேறு.

நாணுலாவுமேருவோடுநாணுலாவுபாணியும்
தூணுலாவுதோளும்வாளியூடுலாவுதூணியும்
‡ வாணிலாவினூலுலாவுமாலைமார்புமீளவும்
காணலாகுமாகினுவிகாணலாகுமேகொலாம். (௫௮)

விண்டலங்கலந்திலங்குதிங்களோடுமீதுசூழ்
வண்டலம்பலங்கறங்குபங்கியோடும்வார்சிலைக்
கொண்டலொன்றிரண்டுகண்ணின்மொண்டுகொண்டென்னாவியை
உண்டதுண்டெனெஞ்சினின்றுமுண்டதென்றுமுண்டரோ. (௫௯)

பஞ்சரங்குதீயினுவிபற்றநீடுகொற்றவில்
வெஞ்சரங்களைஞ்சரங்கவெய்யகாமனெய்யவே
சஞ்சலங்கலந்தபோதுதையலாரையுய்யவந்
தஞ்சலஞ்சலென்கிலாதவாண்மையென்னவாண்மையே. (௫௯)

இளைக்கலாதகொங்கைகாளெழுந்துவிம்மி § யென்செய்தீர்
¶ முளைக்கலாமதிக்கொழுந்துபோலும்வாண்முகத்தினன்
வளைக்கலாதவிற்கையாளிவள்ளன்மார்பினுள்ளுறத்
திளைக்கலாகுமாகிலானசெய்தவங்கள்செய்மினே. (௬0)

* இராமன் மரகதமேனியனாதலின் இலைகளாலே வண்ணங்காட்டவாலென்றார். † இராமனைக்கண்டவழித்தன் வடிவழகிவந்து மாமை நிறங்கோடலான் என்றளிர் நிறமுண்ட கண்ணென்றார். ‡ அவனைக்காணாத வழியுயிரிழப்பலென்பதுபற்றிக் காணலாகுமாகினுவி காணலாகுமேகோ லென்றார். § என்செய்தீர். ஒன்றுஞ்செய்திலீர் என்பதுபடநின்றது. ¶ கலைகள் பிறத்தற்கிடமாகிய மதிக்கொழுந்தென்பார் முளைக்கலா மதிக்கொழுந்தென்றார்.

எங்குநின் றெழுந்ததிந் தவிந்துவந் ததெனுஞ்சுலா
அங்கியன் றனங்கனெய்த் தவம்பின்வந் தசிந்தைநோய்
பொங்குகின் றகொங்கைமேல் விடம்பொழிந்த தென்னினும்
திங்குல்வந்த திங்களன் றகங்களங்கமில்லையே. (௫க)

அடர்ந்துவந் தனங்கனெஞ்சழுன் றுசிந்துமம்பெனும்
விடங்குடைந்த மெய்யினின் றுவெந்திடாதெழுந்துவெங்
கடந்துதைந்த * காரியானை யன்னகாளைகாலடைந்
துடன்றொடர்ந்துபோன வாவிவந்த வாவெனுள்ளமே. (௫௨.)

விண்ணுளே யெழுந்த மேகமார்பினூ டின்மின்னொடும்
மண்ணுளே யிழிந்த தென்னவந்துபோன மைந்தனூர்
எண்ணுளே யிருந்த போதும்யாவரென்று தேர்கிலென்
கண்ணுளே யிருந்தபோது மென்கொல் காண்கிலாதவே. (௫௩)

† பெய்கடற் பிறந்தயல் பிறக்கொணாமருந்து பெற்
றையபொற் கலத்தொடங்கை விட்டிருந்தவாதர் போல்
மொய்கிடக்கு மண்ணணன்று முயங்கிடாது முன்னமே
கைகடக்க விட்டிருந்து கட்டுரைப்ப தென்கொலோ. (௫௪)

என்றுகொண்டு ணைந்துநைந் திரங்கி விம்மி விம்மியே
பொன்றிணிந்த கொங்கைமங்கையிடரின் மூழ்கு போழ்தின்வாய்க்
குன்றமன்ன சிலைமுரிந்த கொள்கைகொண்டு குளிர்மனத்
தொன்றுமுண்ச ண்மதிமுகத்தொருத்தி செய்த துரைசெய்வாம். (௫௫)

வேறு.

வடங்களுங் குழைகளும் வானவில்லிடத்
தொடங்குபுகலைகளுஞ் சுழலுஞ் சோர்தர
நுடங்கியமின்னென நொய்தினெய்தினள்
நெடுந்தடங்கிடந்தகண் ‡ னீலமாலையே. (௫௬)

வந்தடிவணங்கிலள் வழங்குமோதையள்
அந்தமிலுவகையா ளடிப்பாடினள்
சிந்தையுன் மகிழ்ச்சியும் புகுந்த செய்கையும்
சுந்தரிசொல்லெனத் தொழுது சொல்லுவாள். (௫௭)

§ கரதுரகயமாக் கடலன்கல்வியன்
தயாதனெனும் பெயர்த் தனிச்செங்கோன் மியான்
புயல்பொழி தடக்கையான் புதல்வானபூங்கணை
மயல்விளை மதனற்கும் வடிவுமேன்மையான் (௫௮)

---

* காரியானை கரியயானை என்றபடி. † மணிமுதலியன யாவுந்தருத லின் பெய்கடலென்றார். ‡ நீலமாலை-ஒருசேடியின்பெயர். § நால்வகைப் படையுட்சிறந்தமையின் கயத்தைமுற்கூறினர்.

மராமரமிவையெனவலியதோளினான்
அராவணையமலனென்றயிர்க்குமாற்றலான்
இராமனென்பதுபெயரிளையகோனொடும்
பராவருமுனியொடும்பதிவந்தெய்தினான். (௫௧)

பூணியன்மொய்ம்பினன்புனிதனெய்தவில்
காணியவந்தனனென்னக்காவலன்
ஆணையினடைந்தவில்லதனையாண்டகை
நாணினிதேற்றினானடுங்கிற்றும்பரே. (௬௦)

மாத்திரையளவிற்றாண்மடுத்துமுன்பயில்
ஆத்திரமிதுவெனத்தோளின்வாங்கினான்
எத்தினரிமையவரிழிந்தபூமழை
வேத்தவைநடுக்குறமுறிந்துவீழ்ந்ததே. (௬௧)

கோமுனியுடன்வருகொண்டலென்றபின்
தாமரைக்கண்ணினானென்றதன்மையால்
ஆமவனேகொலென்றையநீங்கினாள்
* வாமமேகலையினுள்வளர்ந்ததல்குலே. (௬௨)

இல்லையேநுசுப்பென்பருண்டுண்டென்னவும்
மெல்லியன்முலைகளும்விம்மவிம்முவாள்
சொல்லியகுறியினத்தோன்றலேயவன்
அல்லனேலிறப்பனென்றகத்துளுன்னினாள். (௬௩)

ஆசையுற்றயர்பவளன்னளாயினள்
பாசடைக்கமலத்தோன்படைத்தவில்லிறும்
ஓசையிற்பெரியதோருவகையெய்தியக்
கோசிகற்கொருமொழிசனகன்கூறுவான். (௬௪)

உரைசெயெம்பெருமவுன்புதல்வன் † வேள்விதான்
விரைவினின்றொருபகன்முடித்தல்வேட்கையோ
முரைசெறிந்ததிர்கழன்முழங்குதானையவ்
வரைசையுமிவ்வழியழைத்தல்வேட்கையோ, (௬௫)

மல்வலானவ்வுரைபகரமாதவன்
ஒல்லையிலவனும்வந்துறுதனன்றெனா
எல்லையிலுவகையானியைந்தவாறெலாஞ்
சொல்லுகென்றோலையுந்தூதும்போக்கினான். (௬௬)

௧௫-வது. கார்முகப்படலம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௮௧௬.

---

* இலக்கணக்குறைபாடின்றியே வளராநின்ற தென்பார் வாமமேகலையினுள்வளர்ந்ததல்குலென்றார். † வேள்வி-மணத்தை.

க௪-வது எழுச்சிப்படலம்.

தசரதன் தனது படைகளோடு மிதிலைக்குச் செல்வதைக் குறித்துக்கூறுகின்ற படலம்.

கடுகியதூதருங்காலிற்காலிற்சென்
றிடிகுரன்முரசதிரயோத்தியெய்தினார்
அடியிணைதொழுமிடமன்றிமன்னர்தம்
* முடியொடுமுடிபொருவாயின்முன்னினார். (௧)

முகந்தனர்திருவருண்முறையினெய்தினார்
திகழ்ந்தொளிர்கழலிணைதொழுதுசெல்வனைப்
புகழ்ந்தனரரசனின்புதல்வர்போயபின்
நிகழ்ந்ததையிதுவெனநெடிதுகூறினார். (௨)

கூறியதூதருங்கொணர்ந்தவோலையை
ஈறில்வண்புகழினாயிதுவென்றனர்
வேறொருபுலமகன்விரும்பிவாங்கினான்
மாறதிர்கழலினான்வாசியென்றனன். (௩)

இலைமுகப்படத்தவரெழுதிக்காட்டிய
தலைமகன்சிலைத்தொழில்செவியிற்சார்தலும்
நிலைமுகவலயங்கணிமிர்ந்துநீங்கிட
மலையெனவளர்ந்தனவயிரத்தோள்களே. (௪)

வெற்றிவேன்மன்னவன்றக்கன்வேள்வியில்
கற்றைவார்சடைமுடிக் † கணிச்சிவானவன்
முற்றவேழுலகையும்வென்றமூரிவில்
இற்றபேரொலிகொலன்றிடித்ததிங்கென்றான். (௫)

என்றுரைத்தெதிரெதிரிடைவிடாதுநேர்
துன்றியகனைகழற்றூதர்கொள்கெனப்
பொன்றிணிகலன்களுந்துசும்போக்கினான்
குன்றெனவுயரியகுவவுத்தோளினான். (௬)

‡ வானவன்குலத்தெமர்வரத்தினால்வரும்
வேனில் $ வேளிருந்தவம்மிதிலைநோக்கிநம்

---

* ஒருவரோடொருவர் நெருங்கி முற்படுவதனான் முடியோடுமுடி பொருவாயிலென்றார். † கணிச்சிவானவன்-மழுப்படை இறைவன். கணிச்சியென்னும் விசேடணத்தாற் சிவனையுணர்த்திற்று. ‡ வானவன் - வானத்தியங்குங் காரணத்தால் சூரியனுக்குத் தலைமைப்பற்றிவந்த பெயர். $ வேள்-விருப்பத்தையுண்டாக்குவோன்.

சேனையுமரசருஞ்செல்கமுந்தெனா
ஆனைமேன்மணமுரசறைகென்றேவினான். (௭)

வாம்பரிவிரிதிரைக்கடலைவள்ளுவன்
தேம்பொழிதுழாய்முடிச்செங்கண்மாலவன்
ஆம்பரிசுலகெலாமளந்துகொண்டநாள்
சாம்புவன்றிரிந்தெனத்திரிந்துசாற்றினான். (௮)

சாற்றியமுரசொலிசெவியிற்சாருமுன்
கோற்றொடிமகளிருங்கோலமைந்தரும்
வேற்றருகுமரரும்வென்றிவேந்தரும்
காற்றெறிகடலெனக்களிப்பினோங்கினார். (௯)

விடைபொருநடையினான்சேனைவெள்ளமோர்
இடையிலையுலகினிலென்னவீண்டிய
கடையுகமுடிவினிலெலையங்காற்படப்
புடைபெயர்கடலெனவெழுந்துபோயதே. (௧௦)

சில்லிடமுலகெனச்செறிந்ததேர்கடாம்
புல்லிடுசுடரெனப்பொலிந்தவேந்தரால்
எல்லிடுகதிர்மணியெறிக்குமோடையால்
வில்லிடுமுகிலெனப்பொலிந்தவேழமே, (௧௧)

கால்விரிந்தெழுகுடைகணக்கிலாதிமம்
பால்விரிந்ததுவெனப்பரப்பபோன்றன
மேல்விரிந்தெழுகொடிப்படலைவிண்ணெலாம்
தோலுரிந்துகுவனபோன்றுதோன்றுமால். (௧௨)

நுடங்கியதுகிற்கொடிநுழைக்கைம்மலைக்
கடங்கலுழ்சேனையைக்கடலிதாமென
இடம்படவெங்கணுமெழுந்தவெண்முகில்
தடம்புனல்பருகிடத்தாழ்வபோன்றவே. (௧௩)

இழையிடையிளவெயிலெறிக்குமவ்வெயில்
தழையிடைநிழல்கெடத்தவழுமத்தழை
மழையிடையெழில்கெடமலருமம்மழை
குழைவுறமுழங்கிடுங்குழாங்கொள்பேரியே. (௧௪)

மன்னணிப்புரவிகண்மகுளிரூர்வன
அன்னமுந்தியதிரையாறுபோன்றன
* பொன்னணிப்புனர்முலைப்புரிமென்கூந்தலார்
மின்னெனமடப்பிடிமேகம்போன்றவே. (௧௫)

---

* மாதரை மின்னாகவும், மடப்பிடியை மேகமாகவு முருவகஞ்செய்தார்.

இணையெடுத்திடையிடைநெருக்கவேழையர்
துணைமுலைக்குங்குமச்சுவடுமாடவர்
மணிவரைப்புயத்துமென்சாந்துமாழ்கிமேல்
அணையெனப்பொலிந்ததக்கடல்செலாறரோ. (௧௬)

முத்தினுண்முழுநிலவெறிக்குமொய்ம்மணிப்
பத்தியாலிளவெயில்பரப்பும்பாகிறும்
தித்தியாநின்றசொற்சிவந்தவாயச்சியர்
* உத்தராசங்கமிட்டொளிக்குங்கூற்றமே. (௧௭)

வில்லினர்வாளினர்வெறித்தகுஞ்சியர்
கல்லினையழித்துயர்மனகத்தோளினர்
வல்லியின்மருங்கினர்மருங்குமாப்பிடி
புல்லியகளிறெனமைந்தர்போயினர் (௧௮)

மன்றலம்புதுமலர்மழையிற்சூழ்ந்தெனத்
துன்றிருகூந்தலார்முகங்கடோன்றலால்
ஒன்றலாமுழுமதியூருமானம்போல்
சென்றனவாலவர்சிவிகையீட்டமே. (௧௯)

மொய்திரைக்கடலெனமுழங்கு † மூக்குடைக்
கைகளிற்றிசைநிலக்களிற்றைறயாய்வன
மையலுற்றிழிமதமழையருமையால்
தொய்யலைக்கடந்திலசூழியானையே. (௨௦)

‡ சூருடைநிலையெனத்தோய்ந்துந்தோய்கிலா
வாருடைவனமுலைமகளிர்சிந்தைபோல்
தாரொடுஞ்சதியொடுந்தாவுமாயினும்
பாரிடைமிதிக்கிலபரியின்பந்தியே. (௨௧)

ஊடியமனத்தினருறுதநோக்கினர்
நீடியவுயிர்ப்பினர்நெரிந்தநெற்றியர்
தோடவிழ்கோதையுந்துறந்தகூந்தலர்
ஆடவருயிரெனவருகுபோயினர். (௨௨)

மாறெனத்தடங்களைப்பொருதுமாமரம்
ஊறுபட்டிடவிடையொடித்துச்சாயத்துராய
ஆறெனச்சென்றனவருவிபாய்கவுட்
டாறெனக்கனலுமிழ்தறுகண்யானையே. (௨௩)

---

* உத்தராசங்கம்-மேற்போர்வை. † மூக்குடைக்கை- புழைக்கை. ‡ சூருடை நிலை பூமியிற்கால்தோயாது செல்லல்.

உழுந்திடவிடமிலையுலகமெங்கணும்
அழுந்தியவுயிர்க்கெலாமருட்கொம்பாயினன்
எழுந்திலனெழுந்திடைப்படருஞ்சேனையின்
கொழுந்துபோய்க்கொடிமதின்மிதிலைகூடிற்றே. (உ௫)

கண்டவர்மனங்கள்கைகோப்பக்காதலின்
வண்டமர்கோதையர்வதனராசியால்
பண்டிகள்பண்டிகள்பரிசிற்செல்வன
புண்டரீகத்தடம்போவபோன்றவே. (உ௬)

பாண்டிலின்வைத்தவோர்பாவைதன்னொடும்
ஈண்டியவன்பினனேகுவானிடை
காண்டலுநோக்கியகடைக்கணஞ்சனம்
ஆண்டவைக்கினியதோரமுதமாயதே. (உ௭)

பிள்ளைமானோக்கியைப்பிரிந்துபோகின்றான்
அள்ளனீர்மருதவைப்பதனினன்னமாம்
புள்ளுமென்றாமரைப்பூவுநோக்கினன்
உள்ளமுந்தானுநின்றூசலாடுவான். (உ௮)

வேறு.

அங்கண்ஞாலத்தரசமிடைந்தவா
பொங்குவெண்குடைசாமரைபோர்த்தலால்
கங்கையாறுகடுத்ததுகாரெனச்
சங்குபேரிமுழங்கியதானையே. (உ௯)

அமரரஞ்சவ்வணங்கனையாருயிர்
கவருங்கூர்நுதிக்கண்ணெனும்காலவேல்
குமரர்நெஞ்சுகுளிப்பவழங்கலால்
சமரபூமியுமொத்ததுதானையே. (உ௧)

தோண்மிடைந்தனதூணமிடைந்தென
வாண்மிடைந்தனவான்மின்மிடைந்தெனத்
தாண்மிடைந்தெனதம்மின்மிடைந்தென
ஆண்மிடைந்தனவாளிமிடைந்தென. (௩௦)

* வார்குலாமுலைவைத்தகண்வாங்கிடப்
பேர்கிலாதுபிறங்குமுகத்தினன்
* தேர்கிலானெறியந்தரிற்சென்றொரு
மூரிமாமதயானையைமுட்டினன். (௩௧)

* வார்குலாமுலை - கச்சுவிரும்புமுலை.

சுழிகொள்வாம்பரிதுள்ளவோர்தோகையாள்
வழுவிவீழலுற்றாளையோர்வள்ளறான்
எழுவினீள்புயத்தாலெடுத்தேந்தினான்
தழுவிநின்றொழியான்றரைதான்வையான். (௩௨)

துணைத்ததாமரைநோவத்தொடர்ந்தடர்
கணைக்கருங்கணினாளையோர்காளைதான்
பணைத்தவெம்முலைப்பாய்மதயானையை
அணைக்கநங்கைக்ககலிடமில்லென்றான். (௩௩)

சுழியுங்குஞ்சிமிசைச்சுரும்பார்த்திட
பொழிமாமதயானையிற்போகின்றான்
கழியகூரியவென்றொருகாரிகை
விழியைநோக்கித்தன்வேலையுநோக்கினான். (௩௪)

தரங்கவார்குழற்றாமரைச்சீறடிக்
கருங்கண்வாளுடையாளையோர்காளைதான்
நெருங்குபூண்முலைநீள்வளைத்தோளினிர்
மருங்குலெங்குமறந்ததுநீரென்றான். (௩௫)

கூற்றம்போலுங்கொலைக் * கண்ணினாலன்றி
மாற்றம்பேசிலாளையோர்வள்ளறான்
ஆற்றுநீரிடையங்கைகளாலெடுத்
தேற்றுவாருமையாவார்கொலேவென்றான். (௩௬)

தள்ளரும்பரந்தாங்கியவொட்டகம்
தெள்ளுதேன்கரும்பியாவையுந்தின்கில
உள்ளமென்னத்தம்வாயுமுலர்ந்தன
கள்ளுண்மாந்தரிற்கைப்பனதேடியே. (௩௭)

அரத்தநோக்கினரற்றிரண்மேனியர்
பரித்தகாவினர்ப்பப்பரரேகினார்
திருத்துகூடத்திற்றிண் † கணையத்தொடும்
எருந்திநேர்ந்தியமால்களிறென்னவே. (௩௮)

பித்தயானைபிணங்கிப்பிடியிற்கை
வைத்தமேலிருந்தஞ்சியமங்கைமார்
எய்த்திடுக்கணுற்றார்புதைத்தார்க்கிரு
கைத்தலங்களிற்கண்ணடங்காமையே. (௩௯)

---

* கண்ணினாலன்றி மாற்றம்பேசவென்றது - கண்ணைவாளன்றி வாயிற்றோன்றுஞ் சொற்களை. † கணையம்-மதயானையைத்தடுக்குமரம்.

வாமமேகலையாரிடைவாலதி
பூமிதோய்பிடிச் * சிந்தரும்போயினார்
காமர்தாமரைநாண்மலர்க்கானத்துள்
ஆமைமேல்வருந்தேரையினையரோ. (௬௰)

இம்பர்நாட்டின்றரமல்லளீங்கிவள்
உம்பர்கோமகற்கென்னின்றதொக்குமால்
கம்பமாவரக்கால்கள்வளைத்தொரு
கொம்பனாளைக்கொண்டோடுங்குதிரையே. (௬௧)

சந்தவார்குழல்சோர்பவைதாங்கலார்
சிந்துமேகலைசிந்தையுஞ்செய்கலார்
எந்தைவில்விறுத்தானெனுமின்சொலை
மைந்தர்பேசமணங்களித்தோடுவார். (௬௨)

குடையர்குண்டிகைதூக்கினர்குந்திய
நடையர்நாசிபுதைத்தகைநாற்றலர்
கடைகளிற்றையுங்காரிகையாரையும்
அடையவஞ்சியவந்தணர்முந்தினார். (௬௩)

நாறுபூங்குழனங்கையோர்கண்களீர்
ஊறநேர்வந் † துருவுவெளிப்படி
மாறுகொண்டலைவந்தலையாகில்வர்
தேறுதேறெனக்கைகளிழிச்சுவார். (௬௪)

குரைத்ததேருங்களிறுங்குதிரையும்
நிறைத்தவார்முரசுந்நெளிந்தெங்கணும்
இரைத்தபேரொலியாவிடையாவரும்
உரைத்துணர்ந்திலருமரினேகினார். (௬௫)

நுட்சிலம்பியலர்ந்தன நுண்டுகில்
‡கட்சிலம்புகருங்குழலார்குழூ
உட்சிலம்புசிலம்பவொதுங்கலால்
புட்சிலம்பிடுபொய்கையும்போன்றதே. (௬௬)

தெண்டிரைப்பரவைத்திருவன்னவர்
துண்டிரைப்புரைநோக்கியநோக்கினைக்
கண்டிரைப்பனவாடவர்கண்களி
வண்டிரைப்பனவானைமதங்களே. (௬௭)

---

* சிந்தர்-குறளர் இவர் மெய்காப்பாளர். † உருவுவெளிப்படஎன்றூர் போர்வழிற்பிரிந்த தலைவன் உருவெளித்தோற்றத்தை. ‡ கள்-மலர்த்தேன்.

* உழைகளத்தனவென்னவுயிர்த்துணை
நுழைகலிக்கருங்கண்ணியர்நூபுர
இழைகலித்தனவின்னியமாவெழு
மழைகலித்தெனவாசிகலித்தவே. (௪௮)

மண்களிப்பநடப்பவர்வாணுதல்
உண்களிக்கமலங்களினுள்ளுறை
திண்களிச்சிறு † தும்பியெனச்சிலர்
கண்களித்தனகாமன்களிக்கவே. (௪௯)

எண்ணமாத்திரமும்மரிதாமிடை
வண்ணமாத்துவர்வாய்க்கனிவாய்ச்சியர்
திண்ணமாத்தொளிர்செவ்விளநீரிழி
சுண்ண ‡ மாத்தனதூளியுமாத்தவே. (௫0)

சித்திரத்தடந்தேர்மைந்தர்மங்கையர்
உய்த்துரைப்பரிணைப்பவுலப்பிலர்
இத்திறத்தினரெத்தனையோபலர்
மொய்த்திரைத்துவழிக்கொண்டுமுன்னினர். (௫௧)

வேறு.

குசையுறுபரியுந்தேரும்வீரருங்குமிழியெங்கும்
விசையொடுகெடுகெப்பொங்கிவீங்கியதூளிவிம்மிப்
பசையுறுதுளியின்றுரைப்பசுந்தொளையடைத்தமேகம்
திசைதொறுநின்றயானைமதத்தொளை §செம்மிற்றன்றே. (௫௨)

கேடகத்தடக்கையாலேகிளரொளிவாளும்பற்றிச்
சூடகத்தளிர்க்கைமற்றைச்சுடர்மணித்தடக்கைபற்றி
○ ஆடகத்தோடையானையழிமதத்திழுக்கலாற்றி
பாடகக்காலினாரைப்பயப்பயக்கொண்டுபோனார். (௫௩)

செய்களின்மடுவினன்னீர்ச்சிறைகளினிறையப்பூத்த
நெய்தலுங்குமுதப்பூவுநெகிழ்ந்தசெங்கமலப்போதும்
கைகளுமுகமும்வாயுங்கண்களுங்காட்டக்கண்டு
கொய்தவைதருதிரென்றுகொழுநரைத்தொழுகின்றாரும். (௫௪)

பந்தியம்புரவிநின்றும்பாரிடையிழிந்தோர்வாசக்
கொந்தளபாரஞ்சோரக்குலமணிக்கலன்கள்சிந்தச்
சந்தநுண்டுகிலும்வீழத்தளிர்க்கையாலணைத்துச்சார
வந்ததுவேழமென்னமயிலெனவிரியல்போவார். (௫௫)

---

* உழை-ஏழிசைக்குள், சிரத்திற்பிறக்குமிசை. † தும்பி - வண்டு ‡ யாத்தனமென்றது மரீஇயது 'ஆதுயில் காலத்தெந்தை' என் புழிப் போல. § செம்மிற்று அடைத்தது. ○ ஆடகம் - நால்வகைப்பொன்னி னொன்று.

* குடையொடுகளிறுந்தொங்கற்குழாங்களுங்கொடியின்காடும்
இடையிடைமயங்கியெங்கும்வெளிகரந்திருளைச்செய்யப்
படைகளுமுடியும்பூணும்படர்வெயில்பரப்பிச்செல்ல
இடையொருகணத்தினுள்ளேயிரவுண்டுபகலுமுண்டே. (௩௬)

முருக்கிதழ்முத்தமூரன்முறுவலார்முகங்களென்னும்
திருக்கிளர்கமலப்போதிற்றீட்டினகிடந்தகூர்வாள்
நெருக்கிடையறுக்கு † நீர்கணீங்குமினீங்குமென்றன்
றருக்கனிலொளிருமேனியாடவரகலப்போவார். (௩௭)

நீந்தருநெறியினுற்றநெருக்கினுற்சுருக்குண்டற்றுக்
காந்தினமணியுமுத்துஞ்சிந்தின ‡ கலாபஞ்சூழ்ந்த
பாந்தளினல்குலார்தம்பரிபுரம்புலம்பப்பைம்பொற்
பூந்தளிருறைப்பமாழ்கிப்போக்கரிதென்னநிற்பார். (௩௮)

கொற்றபல்லியங்களெங்குங்கொண்டலிற்றுவைப்பப்பண்டிப்
பெற்றவேறன்னப்புள்ளிற்பேதையர்வெருவிநீங்க
முற்றுறுபரங்களெல்லாமுறைமுறைபாசத்தோடும்
பற்றறவீசியேகியோகியிற்பரிவுதீர்ந்த. (௩௯)

§ காற்செறிவேகப்பாகர்கார்முகவுண்டைபாரா
வார்சிறைக்கொங்கையன்னகும்பமுமருப்புங்காணப்
பாற்செறிகடலிற்றோன்றும்பணைக்கைமால்யானையென்ன
நீர்ச்சிறைபற்றியேறுநின்றகுன்றனையவேழம். (௪௦)

அறிவியற்கூந்தற்கண்வாளமுதுகுமுதச்செவ்வாய்
விறலியரோடுநல்யாழ்ச்செயிரியர்புரவிமேலார்
நறைசெவிப்பெய்வதென்னநனைவளர்மேகப்பாடல்
முறைமுறைநடாத்தப்போனார்கின்னரமிதுனமொப்பார். (௪௧)

அருவிபெய்வரையிற்பொங்கியங்குசநிமிரவெங்கும்
இரியலிற்சனங்கள்சிந்தவிளங்களிச்செங்கண்யானை
விரிசிறைத்தும்பிவேறோர்வீழ்மதந்தோய்ந்துமாதர்
சுரிகுழல்படியவேற்றின்பிடியொடுந்தொடர்ந்துசெல்ப. (௪௨)

நிறைமதித்தோற்றங்கண்டநீணெடுங்கடலிற்றூங்கி
அறைபறைதுவைப்பத்தேருமானையுமாடன்மாவும்

---

* குடைகளிறு முதலாயின இருளைச்செய்தமையானும், படைகளு முடியு முதலாயின பகலைச்செய்தமையானும், இடையொருகணத்தினுள் ளே யிரவுண்டு பகலுமுண்டே என்றார். † நீர்கள்-முன்னிலைப் பன்மைப் பெயர்; இதனை 'மேவித்தொழு துய்மினீர்கள்' என்றதனாலறிக. ‡ கலாபம்-பதினாறு கோவைமணி, இது மாதரிடையணியுளொன்று. § காற்செறி வேகம்-வாயுவேகம்.

கறைகெழுவேற்கணாருமைந்தருங்கவினியொல்லை
நெறியிடைப்படரவேந்த * னேயமங்கையர்தாஞ்செல்வார். (௬௩)

பொய்கையங்கமலக்கானிற்பொலிவதோரன்னமென்னக்
கய்கயர்வேந்தன்பாவைகணிகையரீட்டம்பொங்கி
அய்யிருநூறுசூழ்ந்தவாய்மணிச்சிவிகைதன்மேல்
தெய்வமங்கையருநாணத்தேனிசைமுரலப்போனாள். (௬௪)

காரணமின்றியேயுங்கனலெழவிழிக்குங்கண்ணார்
வீரவேத்திரத்தார்தாழ்ந்துவிரிந்தகஞ்சுகத்துமெய்யார்
தாரணிபுரவிமேலார்தலத்துளார்தடித்தசொல்லார்
ஆரணங்கனையமாதரடிமுறைகாத்துப்போனார். (௬௫)

விரிமணித்தார்கள்பூண்டவேசரி † வெரிநிற்றோன்றும்
அரிமலர்த்தடங்கணல்லாராயிரத்திரட்டிசூழக்
குருமணிச்சிவிகைதன்மேற்கொண்டலின்மின்னிதென்ன
‡ இருவரைப்பயந்தநங்கையாழிசைமுரலப்போனாள். (௬௬)

செங்கையின்மஞ்ஞையன்னஞ்சிறுகிளிபூவைபாவை
சங்குறைகழித்தவன்னசாமரைமுதலதாங்கி
இங்கலதெண்ணுங்காலிவ்வெழுதிரைவளாகந்தன்னில்
மங்கையரில்லையென்னமடந்தையர்மருங்குபோனார். (௬௭)

வெள்ளெயிற்றிலவச்செவ்வாய்முகத்தைவெண்மதியமென்று
கொள்ளையிற்சுற்றுமீன்கள்குழுமியவனையவூர்தி
தெள்ளரிபாண்டிபாணிச்செயிரியரிசைத்தேன்சிந்த
வள்ளலைப்பயந்தநங்கைவானவர்வணங்கப்போனாள். (௬௮)

கூனொடுகுறளுஞ்சிந்துஞ்சிலதியர்குழாமுங்கொண்ட
பாணிறப்புரவியன்னப்புள்ளெனப்பாரிற்செல்லத்
¶ தேனொடுமிஞிறும்வண்டுந்தும்பியுந்தொடர்ந்துசெல்லப்
பூநிறைகூந்தன்மாதர்புடைபிடிநடையிற்போனார். (௬௯)

துப்பினின்மணியிற்பொன்னிற்சுடர்மரகதத்தின்முத்தின்
ஒப்பறவமைத்தபைம்பூணோவியம்புகழவேறி
முப்பதிற்றிரட்டிகொண்டவாயிரமுகிழ்மென்கொங்கைச்
செப்பருந்திருவினல்லார்தேர்மிசைசூழப்போனார். (௭0)

செவிவயினமிர்தகேள்விதெவிட்டினார்தேவர்நாவின்
அவிகையினளிக்குநீராரையிருகோடிசூழக்

---

* நேயமங்கையரென்றது அறுபதினாயிரமாதரை. † வெரிந்-முதுகு
‡ இருவரைப்பயந்த நங்கை-சுமத்திரியை. ¶ தேன் முதலாயின வென்
றது நால்வகை வண்டினை. ஞிமிறு-பொன்வண்டு.

கவிகையினீழற்கற்பினருந்ததிகணவன்வெள்ளைச்
சிவிகையினன்னமூருந்திசைமுகனென்னச்சென்றான். (எக)

பொருகளிறிவுளிபொற்றேர்பொலங்கழற்குமரர்முந்நீர்
அருவரைசூழ்ந்ததென்னவருகுபின்முன்னுஞ்செல்லத்
திருவளர்மார்பர்தெய்வச்சிலையினர்தேரர்வீரர்
* இருவருமுனிபின்போனவிருவருமென்னப்போனார். (எஉ)

நித்தியநியமமுற்றி † நேமியான்பாதஞ்சென்னி
வைத்தபின்மறைவலோர்க்குவரப்பறுமணியும்பொன்னும்
பத்தியானிரையும்பாரும்பரிவுடனல்கிப்போனான்
முத்தணிவைரப்பூணான்மங்கலமுகூர்த்தநன்னாள். (எங)

இருபிறப்பாளரெண்ணாயிரர்மணிக்கலசமேந்தி
அருமறைவருக்கமோதியறுகுநீரளித்துச்சூழ
வரன்முறைவந்தார்கோடிமங்கலமழலைச்செவ்வாய்ப்
பருமணிக்கலாபத்தார்பல்லாண்டிசைபரவப்போனான். (எச)

கண்டிலனென்னையென்பார்கண்டனனென்னையென்பார்
குண்டலம்வீழ்ந்ததென்பார்குறுகரிதினிச்சென்றென்பார்
உண்டுகொலெழுச்சியென்பாரொலித்ததுசங்கமென்பார்
மண்டலவேந்தர்வந்துநெருங்கினர்மயங்கவென்பார் (எரு)

பொற்றொடிமகளிரூரும்பொலன்கொடார்ப்புரவிவெள்ளம்
சுற்றுறுகமலம்பூத்ததொடுகடற்றிரையிற்செல்லக்
கொற்றவேன்மன்னர்செங்கைப்பங்கயக்குழாங்கள்கூப்ப
மற்றொருகதிரோனென்னமணிநெடுந்தேரிற்போனான். (எசு)

ஆர்த்ததுவிசும்பைமுட்டிமீண்டகன்றிசைகளெங்கும்
போர்த்ததங்கொருவர்தம்மையொருவர்கட்புலங்கொளாமை
சேர்த்ததுசெறிந்ததோடித்திரைநெடுங்கடலையெல்லாம்
ஆர்த்ததுசகரரோடுபகைத்தெனத்தூளிவெள்ளம். (எஎ)

சங்கமும்பணையுஞ்சொம்புந்தாளமுங்காளத்தோடு
மங்கலபேரிசெய்தபேரொலிமழையையோட்டத்
தொங்கலுங்குடையுந்தோகைப்பிச்சமுஞ்சுடரையோட்டத்
திங்கள்வெண்குடைகண்டோடத்தேவருமருளச்சென்றான். (எஅ)

மந்திரகீதவோதைவலம்புரிமுழங்குமோதை
அந்தணராசியோதையார்த்தெழுமுரசினோதை

---

* இருவரென்றது-பரதசத்துருக்கரை.
† நேமியான் - ஆயிரமோலியரும்பரஞ்சுடரை.

கந்துகொல்களிற்றிளைதைகடிகையர்கவிதையோதை
இந்திரதிருவன்செல்லவெழுந்தன திசைகளெல்லாம். (எக)

நோக்கிய திசைகளெல்லாந்தன்னையேநோக்கிச்செல்ல
வீக்கியகழற்கால்வேந்தர்விரிந்தகைம்மலர்கள்கூப்பத்
தாக்கியகளிறுந்தேரும்புரவியும்படைஞர்தாளும்
ஆக்கியதூளிவிண்ணுமண்ணுலகாக்கப்போனான். (அ௦)

வீரருங்களிறுந்தேரும்புரவியுமிடைந்தசேனை
பேர்விடமில்லைமற்றோருலகில்லைபெயர்க்கலாகா
நீருடையாடையாளுநெளித்தனண்முதுகையென்றால்
பார்பொறைநீக்கினானென்றுரைத்ததெப்பரிசுமன்றே. (அக)

இன்னணமேகிமன்னன்யோசனையிரண்டுசென்றான்
பொன்வரைபோலுமிந்துசயிலத்தின்சாரல்புக்காள்
மன்மதக்களிறுமாதர்கொங்கையுமாரனம்புந்
தென்வரைச்சாந்துநாறுஞ்சேனையுமிறுத்ததன்றே. (அஉ)

க௪-வது எழுச்சிப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-அகஅ.

கரு-வது. வரைக்காட்சிப்படலம்.

சந்திரசைலத்தைக் கண்டதைக் கூறித்துரைக்கும் படலம்.

கோவையார்வடக்கொழுங்கவடொடிதரநிவந்த
ஆவிவேட்டனவரிசிலையனங்கன்மேற்கொண்ட
பூவைவாய்ச்சியர்முலைசிலர்புயத்தொடும்பூட்டத்
தேவதாரத்துஞ்சந்தினும்பூட்டினசிலமா. (க)

நேரொடுங்கலில்பகையினைநீதியால்வெல்லும்
சோர்விடம்பெறாவுணர்வினன்சூழ்ச்சியேபோல
வாரொடுந்தொடர்கவட்டொடுமராமரக்குவட்டை
வேரொடுங்கொடுகிரியெனநடந்ததோர்வேழம். (உ)

திரண்டதாளொடுஞ்செறிபணைமருதிடையொடியப்
புரண்டுபின்வர * வுரலொடுபோனவன்போல
உருண்டுகொளொடர்பிறகிடுதறியொடுமொருங்கே
இரண்டுமாமரமிடையிறநடந்ததோர்யானை. (௩)

* உரலொடுபோனவனென்றது-கண்ணபிரானை.

கதங்கொள் * சீற்றத்தையாற்றுவானினியனகழறிப்
பதங்கொள் பாகனுமந்திரியொத்தனன்பன்னூல்
விதங்களாலவன்மெல்லெனவிளம்பும்
இதங்கள்கொள்கிலாவிறைவனையொத்ததோர்யானை. (௪)

மாறுகாணுயதாய்நின்றுமழையெனமுழங்கும்
தாறுபாய்கரி † வனகரிதண்டத்தைத்தடவிப்
பாறுபின்செலக்காலெனச்செல்வதுபண்டோர்
ஆறுபோகியவாறுபோமாறுபோன்றதுவே. (௫)

பாத்தயானையிற்பதங்களிற்படுமெதநாறக்
காத்தவங்குசரிமிர்ந்திடக்கால்பிடித்தோடிப்
பூத்தவேழிலைம்பாலையைப்பொடிப்பொடியாகக்
காத்திரங்களாற்றலத்தொடுந்தேய்த்ததோர்களிறு. (௬)

அலகிலானைகளனேகமுமவற்றொருமிடைந்த
திலகவாணுதற்பிடிகளுங்குருளையுஞ்செறிந்த
உலவைநீள்வனத்தூதமேயொத்தவவ்வூதத்
தலைவனேயொத்துப்பொலிந்ததுசந்திரசயிலம். (௭)

தெருண்டமேலவர்சிறியவர்ச்சேரினுமவர்தம்
மருண்டதன்மையைமாற்றுவரெனுமிதுவழக்கே
உருண்டவாய்தொறும்பொன்னுருளுரைத்தோடி
இருண்டகல்லையுந்தன்னிறமாக்கியவிரதம். (௮)

கொவ்வைநோக்கியவாய்களையிந்திரகோபம்
‡ கவ்விநோக்கினவென்றுகொல்காட்டினமயில்கள்
நவ்விநோக்கியர்நலங்கொண்மேகலைபொலஞ்சாயற்
செவ்விநோக்கினதிரிவனபோல்வனதிரிந்த. (௯)

உய்க்கும்வாசிகளிழிந்தனரன்னத்திறைதுங்கி
மெய்க்கலாபமுங்குழைகளுமிழைகளும்விளங்கத்
தொக்கமென்மரநிழல்படத்துவன்றியகுழல்
புக்கமங்கையர்பூத்தகொம்பாமெனப்பொலிந்தார். (௧௦)

தளங்கொடாமரையெனத்தளிரடியினுமுகத்தும்
வளங்கொண்மாலைவண்டலமரவழிவருந்தினராய்
விளங்குதம்முருப்பளிங்கிடைவெளிப்படவேறோர்
துளங்குபாறையிற்றோழியாயிர்த்திடத்துயின்றார். (௧௧)

---

* சீற்றம் சிறிதுபொழுது நிகழுங்கோபம். இது சீறு என்னும்பகுதியடியாகப் பிறந்ததென்றறியாதார் சிறுமையென்னும் பண்படியாகப் பிறந்ததென்பர். † வனகரிதண்டத்தை தடவுதல்-மோப்பம் பிடித்தல்.

‡ கவ்விநோக்கனவென்றுகால் எனற்குக் கவ்விய அழகுடையனவென்றோ எனக்கொள்க.

பிடிபுக் * காவிடையின்னெடும்பிறங்கியமேகம்
படிப்புக்காலெனப்படிதராப்பரிபுரம்புலம்பத்
துடிபுக்காவிடைத்திருமகடாமரைதுறந்து
குடிப்புக்காலெனக்குடிபுக்கார்கொடியன்னமடவார். (கஉ)

வேறு.

உண்ணமுதமூட்டியிளையோர்நகர்கொணர்ந்த
துண்ணெனுமுழங்கினதுருக்கர்தரவந்த
மண்மகடன்மார்பினணிவன்னசரமென்னப்
பண்ணியல்வயப்பரிகள்பந்தியினிரைத்தார். (கங)

நீர்திரைநிரைத்தவெனநீடிரைநிரைத்தார்
ஆர்கலிநிரைத்தவெனவாவணநிரைத்தார்
கார்நிரையெனக்களிறுகாவிடைநிரைத்தார்
மாருதநிரைத்தவெனவாசிகணிரைத்தார். (கச)

நடிக்குமயிலென்னவருநவ்விவிழியாரும்
வடிக்குமயில்வீரருமயங்கினர்திரிந்தார்
இடிக்குமுரசக்குரலினெங்குமுரல்சங்கின்
கொடிக்களினுணர்ந்தரசர்கோநகரடைந்தார். (கரு)

மிதிக்கநிமிர்தூளியின்விளக்கமருமெய்யைச்
சுதைக்கணுரையைப்பொருவுதூசுகொடுதூய்தா
உதிர்த்தனரிளங்குமரரோவியரிலோவம்
புதுக்கினரெனத்தருணமங்கையர்பொலிந்தார். (கசு)

தாளுயர்தடக்கிரியிழித்துதரைசேரும்
சோளரியெனக்கரிகொள்கொற்றவரிழிந்தார்
பாளைவிரியொத்துலவுசாமரைபடப்போய்
வாளெழநிரைத்த † படமாடமவைபுக்கார். (கஎ)

தூசினொடுவெண்படமுடைக்குடில்கடோறும்
வாசநகைமங்கையர்முகங்கண்மழைவானிற்
காசின்மதியின்கதிர்வழங்குநிழலெங்கும்
வீசுதிரைவெண்புனல்விழுங்கியனபோலும். (கஅ)

மண்ணுறவிழுந்துநெடுவானுறவெழுந்து
கண்ணுதல்பொருந்தவருகண்ணனில்வருங்கார்
உண்ணிறநறும்பொடியைவீசியொருபாகம்
வெண்ணிறநறும்பொடிபுனைந்தமதவேழம். (ககூ)

---

* ஆயிடை என்புழி அகரச்சுட்டு நீண்டது. † படமாடம் - ஆடையாலியன்றமனை. கூடாரம் என இக்காலவழக்கு.

தீயவரொடொன்றிய திறத்தருநலத்தோர்
ஆயவரையங்கிலையறிந்தனர்துறந்தாங்
கேயவருநுண்பொடிபடிந்துடனெழுந்தொண்
பாய்பரிவிரைந்துதறிகின்றனமரந்தே. (உ0)

மும்மைபுரிவன்கயிறுகொய்துசெயன்மொய்ம்பால்
தம்மையுமுணர்ந்துதரைகண்டுவிரைகின்ற
* அம்மையினொடிம்மையையறிந்துநெறிசெல்லும்
செம்மையவரென்னநனிசென்றனதுரங்கம். (உக)

விழுந்தபனியன்னதிரைவீசுபுரைதோறும்
† கழங்குபயின்மங்கையர்கருங்கண்மிளிர்கின்ற
தழங்குகழிசிந்தியதரம்பயிறரங்கத்
தெழுந்திடைபிறழ்ந்தொளிர்கொழுங்கயல்களென்ன. (உஉ)

வெள்ளநெடுவாரியறவீசியுளவேனும்
இள்ளவெழுகின்றபுனல்கேளிரின்விரும்பித்
தெள்ளுபுனலாறுசிறிதேயுதவுகின்ற
உள்ளதுமறாதுதவும்வள்ளலையுமொத்த. (உங)

துன்றிநெறிபங்கிகடுளங்கவழலோடும்
மின்றிரிவவென்னமணியாரமிளிர்மார்பர்
மன்றன்மணநாறுபடமாடநுழைகின்றார்
குன்றின்முழைதோறுநுழைகோளரிகளொத்தார். (உச)

நெருங்கயிலெயிற்றனையசெம்மயிரினெற்றிப்
பொருங்குலிகமப்பியனபோர்மணிகளார்ப்பப்
பெருங்களிறலைப்புனல்கலக்குவனபெட்டுக்
கருங்கடல்கலக்கு ‡ மதுகயிடவரையொத்த. (உரு)

ஒக்கநெறியுய்ப்பவருரைத்தகுறிகொள்ளா
பக்கமினமொய்க்கயலலைக்கநனிபாரா
கைக்கரிமதத்தவிலைமாதர்கலையல்குல்
புக்கவரையொத்தனபுனற்சிறைகளேறு. (உசு)

துகிலிடைமடந்தையரொடாடவர்துவன்றிப்
பகலிடையவட்டிலின்மடுத்தெரிபரப்பம்
அகிலிடுகொழும்புகையழுங்கலின்முழங்கா
முகில்படுநெடுங்கடலையொத்துளதம்மூதூர். (உஎ)

* அம்மை இம்மைப்பயன்களை யறிந்து முத்திநெறிப்படர்பவராதலிற் செம்மையவரென்றார். † கழங்கு என்றது-கழங்காடலை ‡ நீரைக் கலக்கும் மதயானைகளை மதுகயிடவரோடுவமை கூறினார்.

வேறு.

கமருறுபொருப்பின்வாழும்விஞ்சையர்காணவந்தார்
தமரையுமறியார்நின்றுதிகைப்புறுதகமைசான்ற
குமரருமங்கைமாருங்குழுவலால்வழுவிவிண்ணின்
றிமரர்நாடிழிந்ததென்னப்பொலிந்ததவ்வனீகவெள்ளம். (௨௮)

வெயினிறங்குறையச்சோதிமின்னிழல்பரப்பமுன்னாள்
துயிலுணர்செவ்வியோருந் * துனியுறுமுனிவினோரும்
குயிலொடுமினிதுபேசிச்சலம்பொடுமினிதுகூவி
மயிலினந்திரிவவென்னத்திரிந்தனர்மகளிரெல்லாம். (௨௯)

தாளிணைகழல்களார்ப்பத்தாரிடையளிகளார்ப்ப
வாள்புடையிலங்கச்செங்கேழ்மணியணிவலயமின்னத்
தோளெனவுயர்ந்தகுன்றின்சூழல்களினிதுநோக்கி
வாளரிதிரிவவென்னத்திரிந்தனர்மைந்தரெல்லாம். (௩0)

சுற்றியகடல்களெல்லாஞ்சுடர்மணிக்கனகக்குன்றைப்
பற்றியவளைந்தவென்னப்பரந்துவந்திறுத்தசேனை
கொற்றவர்தேவிமார்கண்மைந்தர்கள்கொம்பனார்வந்
துற்றவர்காணலுற்றமலைநிலையுளரத்துமன்றே. (௩௧)

பம்புதேன்மிஞறுதும்பிபரந்திசைபாடியாட
உம்பர்வானகத்துநின்றவொளிவளர்தருவினோங்கும்
கொம்புகள்பணைக்கைநீட்டிக்குழையொடுமொடித்துக்கோட்டுத்
தும்பிகளுயிரேயன்ன துணைமடப்பிடிக்குநல்கும் (௩௨)

பண்மலர்பவளச்செவ்வாய்ப்பனிமலர்குவளையன்ன
கண்மலர்க்கொடிச்சிமார்க்குக்கணித்தொழில்புரியும் † வேங்கை
உண்மலர்வெறுத்ததும்பிபுதியதேனுதவுநாகத்
தண்மலரென்றுவானத்தாரகைதாவுமன்றே. (௩௩)

மீனெனும்பிடிகளோடும்விளங்கும்வெண்மதிநல்வேழம்
கூனல்வான்கோடுநீட்டிக்குத்திடக்குமுறிப்பாயும்
தேனுகுமடையைமாற்றிச்செந்தினைக்குறவர்முந்தி
வானநீராறுபாய்ச்சியைவனம்வளர்ப்பர்மாதோ. (௩௪)

குப்புறக்கருமையாலக்குலவரைச்சாரல்வைகி
ஒப்புறத்துளங்குகின்றவுடுபதியாடியின்கண்
இப்புறத்தேயுங்காண்பார்குறத்தியரியைந்தகோலமீ
அப்புறத்தேயுங்காண்பாரரம்பையரழகுமாதோ (௩௫)

---

* துனி-கலவிக்காலத்து ஆடவர்பாற்குற்றநகாரணமாக மாதவரிடத் துண்டாவவதோர் சிறுபிணக்கு † தினைக்குரல்கொய்தற்கு வேங்கைமலர்தல் காலமாதலின் கணித்தொழில் புரியும் வேங்கை என்றார்.

உதியுறுதுருத்தியூதுமுலையுறுதீயும்வாயின்
அதிவிடாீறுசெய்யுமுண்கிலாதாவியுண்ணும்
கொதிநுனைவேற்கண்மாதர்குறத்தியர்நுதலினேடு
மதியினைவாங்கியொப்புக்காண்குவர்குறவர்மன்னே. (௩௬)

பேணுதற்கரியசீயக்குருளையம்பிடிகளின்ற
காணுதற்கினியவேழக்கன்றுகெளிக்குமுன்றில்
கோணுதற்குரியதிங்கட்குழவியுங்குறவர்தங்கள்
வாணுதற்கொடிச்சிமாதர்மகவொடுதவழுமாதோ. (௩௭)

அஞ்சனக்கிரியினன்னவழிகவுள்யானைகொன்ற
வெஞ்சினத்தரியின்றிண்காற்கவட்டொடுவிஞ்சைவேந்தர்
குஞ்சியந்தலத்துநீலக்குலமணித்தலத்துமாதர்
பஞ்சியங்கமலம்பூத்தபசுஞ்சுவடுடைத்துமன்னே. (௩௮)

செங்கயலனையநாட்டஞ்செவியுறுமுறுவரேன்று
பொங்கிருங்கூந்தல்சோராபுருவங்கணெரியாபூவின்
அங்கையுமிடறுங்கூட்டிநரம்பளைந்தமிர்தமூறும்
மங்கையர்பாடல்கேட்டுக்கின்னரமயங்குமாதோ. (௩௯)

கள்ளவிழ்கோதைமாதர்காதொடுமுறவுசெய்யும்
கொள்ளைவாட்கண்ணினூர்தங்குங்குமக்குழம்புதங்கும்
தெள்ளியபளிக்குப்பாறைத்தெளிசுனைமணியிற்றேய்த்த
வள்ளமுநறவுமென்னவரம்பிலபொலியுமன்னே. (௪0)

ஆடவராலிசோரவஞ்சனவாரிசோர
ஊடலிற்சிவந்தநாட்டத்தும்பர்தம்மரம்பைமாதர்
தோடலர்கோதைநின்றுந்துறந்த * மந்தாரமாலை
வாடலநறவுறுதவயின்வயின்வயங்குமாதோ. (௪௧)

மாந்தளிரனையமேனிக்குறத்தியர்மாலைசூட்டிக்
கூந்தலின்கமுகின்பாளைகுழலினேடொப்புக்காண்பார்
ஏந்திழையரம்பைமாதரெரிமணிக்கடகம்வாங்கிக்
காந்தளம்போதிற்பெய்துகைகளோடொப்புக்காண்பார். (௪உ)

சரம்பயில்சாபமென்னப்புருவங்கடம்மினூட
நரம்பினேடினிதுபாடிநாடகமயிலோடாடி
அரம்பையர்வெறுத்துநீத்தவிர்மணிக்கோவையாரம்
மரம்பயில்கடுவன்பூணமந்திகண்டுவக்குமாதோ. (௪௩)

சாந்துசாய்தடங்கடோறுந் ‡ தாதுராகத்திற்சார்ந்த
கூந்தலம்பிடிகளெல்லாங்குங்குமமணிந்தபோலும்

* மந்தாரம்-பஞ்சதருக்களிலொன்று. † தாதுராகம்-காவிக்கல்,

காந்திணமணியின்சோதிக்கதிரொடுங்கலந்துமூசச்
சேந்துவானகமெப்போதுஞ்செக்கரையொக்குமாதோ. (௪௪)

நிலமகட்கணிகளென்னநிரைகதிர்முத்தஞ்சிந்தி
மலைமகள்கொழுநன்சென்னிவந்துவீழ்கங்கைமான
அலகில்பொன்னலம்பியாரஞ்சார்ந்துவீழருவிமாலை
உலகளந்தவன்றன்மார்பினுத்தரீயத்தையொத்த. (௪௫)

கோடிலாநாகப்போதோடில்வங்கமலருங்கூட்டிச்
சூடுவார்களிவண்டோச்சித்தூநறுந்தேறலுண்பார்
கேடிலாமகரயாழிற்கின்னரமிதுனம்பாடும்
பாடலாலூடனீங்கும்பரிமுகமாக்கள்கண்டார். (௪௬)

பெருங்களிறேயுமைந்தர்பேரெழிலாகத்தோடு
பொருந்துணைக்கொங்கையன்னபொருவில்கோங்கரும்பின்மாடே
மருங்கெனக்குழையுங்கொம்பின்மடப்பெடைவண்டுந்தங்கள்
கருங்குழற்களிக்கும்வண்டுங்கடிமணம்புணரக்கண்டார். (௪௭)

படிகத்தின்றலமென்றெண்ணிப்படர்சுனைமுடுகிப்புக்க
சுடிகைப்பூங்கமலமன்னசுடர்மதிமுகத்தினார்தம்
* வடகத்தோடுடுத்ததூசைமாசிளீர்நனைப்பநோக்கிக்
கடகத்தையெறிந்துதம்மிற்கருங்கழல்வீரர்நக்கார். (௪௮)

பூவணைபலவுங்கண்டார்பொன்னரிமாலைகண்டார்
மேவருங்கோபமன்னவெள்ளிலைத்தம்பல்கண்டார்
ஆவியினினியகொண்கர்ப்பிறிந்தறிவழிந்தவிஞ்சைப்
பாவையர்வைகத்தீய்ந்தபல்லவசயனங்கண்டார். (௪௯)

† பானலங்கண்களாடப்பவளவாய்முறுவலாடப்
பீனவெம்முலையினிட்டபெருவிலையாரமாடத்
தேன்முரன்றளகத்தாடத்திருமணிக்குழைகளாட
வானவர்மகளிராடும்வாசநாறூசல்கண்டார். (௫௦)

சுந்தரவானமாதர்துவரிதழ்ப்பவளவாயும்
அந்தமில்சுரும்புந்தேனுமிஞிறுமுண்டல்குல்விற்கும்
பைந்தொடிமகளிர்கைத்தோர்பசையில்லையென்னவிட்ட
மைந்தரினீத்ததீந்தேன்வள்ளங்கள்பலவுங்கண்டார். (௫௧)

அற்பகலாகுஞ்சோதிப்பளிக்கறையமளிபாங்கர்
மற்பகமலர்ந்ததிண்டோள்வானவர்மணந்தகோலம்
விற்பகைநுதலினார்தங்கலவியின்வெறுத்துநீத்த
கற்பகமீன்றமாலைகலனொடுங்கிடப்பக்கண்டார். (௫௨)

* வடகம்-மேற்போர்வை, † பானல்-நீலோற்பலம்.

கைபெனமலரவேண்டியரும்பியகாந்தளைக்கிப்
பையரவிவையென் றஞ்சிப்படைக்கண்கள்புதைக்கின்றாரும்
கெய்தவழ்வயிரப்பாறைநிழலிடைத்தோன் றும்போதைக்
கொய்திவைதருதிரென் றுகொழுநரைத்தொழுகின்றாரும். (ருங)

பிண்ணங்களுகிரிற்செய்துபிண்டியந்தளிர்க்கைக்கொண்ட
சின்னங்கண்மூலையினப்பித்தேமலர்கொய்கின்றாரும்
வன்னங்கள்பலவுந்தோன்ற * மணியொளிர்மலையினில்லா
அன்னங்கள்புகுந்தவென்னவகன் சுனைகுடைகின்றாரும். (ருச)

வேறு.

ஈனுமாழையிளந்தளிரேயொளி
ஈனுமாழையிளந்தளிரேயிடை
மானும்வேழமுநாகமுமாதர்தோள்
மானும்வேழமுநாகமுமாடெலாம். (ருரு)

திமிரமாவுடற்குங்குமச்சேதகம்.
திமிரமாவொடுஞ்சந்தொடுத்தேய்க்குமால்
அமரமாதரையொத்தொளிரஞ்சொலார்
அமரமாதரையொத்ததவ்வானமே. (ருசு)

பேரவாவொடுமாசுணம்பேரவே
பேரவாவொடுமாசுணம்பேரவே
ஆரவாரத்திஞெடுமருவியே
ஆரவாரத்திஞெடுமருவியே. (ருஎ)

புகலும்வாளரிக்கண்ணியர்பொற்புயம்
புகலும்வாளரிக்கண்ணியர்பூண்மூலை
அகிலுமாரமுமாரவங்கோங்குமே
அகிலுமாரமுமாரவங்கோங்குமே. (ருஅ)

துன்னரம்பைநிரம்பியதொல்வரை
துன்னரம்பையருருவிற்றோன் றுமால்
இன்னரம்பயில்கீதங்களென்னவாம்
இன்னரம்பயில்கின் றனரேழைமார். (ருசு)

ஊறுமாகடமாவுந்ஞூங்கெலாம்
ஊறுமாகடமாமதமோடுமே
ஆறுசேர்வனமாவரையாடுமே
ஆறுசேர்வனமாவரையாடுமே. (சுo)

---

* மணி-நவமணிகளையுங்கொள்க.

கல்லியங்குகருங்குறமங்கையர்
கல்லியங்ககழ்காமர்கிழங்கெடா
வல்லியங்கணெருங்குமருங்கெலாம்
வல்லியங்கணெருங்கிமயங்குமே. (கக)

கோளிபங்கயமூழ்கக்குளிர்கயம்
கோளிபங்கயமூழ்கக்குலைந்தவால்
* ஆளிபொங்குமருவரையூடிழிந்
† தாளிபொங்குமரம்பையரோதியே. (கஉ)

ஆகமாலயமாகவுளால்பொலி
வாகமாலெனலாகியதம்மலை
மேகமாலைமிடைந்தனமேலெலாம்
மேகமாலைமிடைந்தனகீழெலாம். (கங)

பொங்குதேனுகர்பூமிஞிறுமென
எங்குமாதருமைந்தருமீண்டியத்
துங்கமால்வரைச்சூழல்கள்யாவையும்
தங்கிநீங்கலர்தாமினிதாடுவார். (கச)

இறக்கமென்பதையெண்ணிலநெண்ணுங்கால்
பிறக்குமென்பதோர்பீழையதாதலால்
துறக்கமெய்தியதூயவரேயென
மறக்கிற்றிலரன்னதன்மாண்பெலாம். (கரு)

வேறு.

‡ மஞ்சார்மலைவாரணமொத்ததுவானினேறும்
வெஞ்சாயையுடைக்கதிரங்கதன்மீதுபாயும்
§ பஞ்சானனமொத்ததுமற்றதுபாயவேறும்
செஞ்சோரியெனப்பொலிவுற்றதுசெக்கர்வானம். (கசு)

திணியார்சினைமாமரம்யாவையுஞ்செக்கர்பாயத்
தணியாதநறுந்தளிர்தந்தனபோன்றதாழ
அணியாரொளிவந்துநிரம்பலினங்கமெங்கும்
மணியாலியன்றம்மலையொத்ததம்மைபில்குன்றம். (கஎ)

கண்ணுக்கினிதாகிவிளங்கியகாட்சியாலும்
எண்ணற்கரிதாகியிலங்குசிரங்களாறும்

---

* ஆளி-வண்டுகள். † ஆளி-சிங்கம். ‡ செங்கர்வானமுதலியன கூறிப் போந்தமையானும், வருவது மாலைப்போதாகலானும் மஞ்சார்மலை என்பதற்கு அத்தகிரியெனப் பொருளுரைத்துக்கொள்க. § பஞ்சானனம்-விரிந்த முகமுள்ளது.

வண்ணக்கொழுஞ் * சந்தனச்சேதகமார்பணிந்த
அண்ணற்கரியோன்றனை யொத்ததவ்வாசில்குன்றம். (௬௮)

ஊனும்முயிரும்மனையா ரொருவர்க்கொருவர்
தேனும்மிஞிறுஞ்சிருதும்பியும்பம்பியார்ப்ப
† ஆனையினமும்பிடியும்மிகளாளியேறும்
மானுங்கலையும்மென மால்வரைவந்திழிந்தார். (௬௯)

‡ கால்வானகத்தேருடைவெய்யவன்காய்கடுங்கட்
கோல்மாய்கதிர்ப்புல்லுளைக்கொல்சினக்கோளரிம்மா
மேல்பான்மலையிற்புகவீங்கிருள்வேரிருந்த
மால்யானையீட்டமெனவந்துபரந்ததன்றே. (௭௦)

மந்தாரமுந்துமகரந்தமணங்குலாவும்
அந்தாரரசர்க்கரசன்றனீகவெள்ளம்
நந்தாதொலிக்குந்நரலைப்பெருவேலையெல்லாம்
செந்தாமரைபூத்தெனத்தீபமெடுத்ததன்றே. (௭௧)

தண்ணக்கடலிற்றளிசிந்துதரங்கநீங்கி
விண்ணிற்சுடர்வெண்மதிவந்ததுமீன்கள்சூழ
வண்ணக்கதிர்வெண்ணிலவின்றிரள்வாலுகத்தோ
டொண்ணித்திலமீன்றொளிர்வால்வளையூர்வதொத்தே. (௭௨)

மீனுறுவேலையொருவெண்மதியீனும்வேலை
$ நோனாததனைநுவலற்கருங்கோடிவெள்ளம்
வாணுடியரிற்பொலிமாதர்முகங்களென்னும்
ஆனுமதியங்கணமலர்ந்ததனீகவெள்ளம். (௭௩)

மண்ணும்முழவின்றொலிமங்கையர்பாடலோதை
பண்ணுந்நரம்பிற்பகையாவியற் ¶ பாணியோதை
கண்ணும்முடைவேயிசை 0 கண்ணுளராடரோறும்
விண்ணும்மருளும்படிவிம்மியெழுந்தவன்றே. (௭௪)

மணியின்னணிநீக்கிவயங்கொளிமுத்தம்வாங்கி
அணியும்முலையாரகிலாவிபுலத்துநல்லார்
தணியும்மதுமல்லிகைத்தாமம்வெறுத்துவாசம்
திணியும்மிதழ்ப் § பித்திகைக்கத்திகைசேர்த்துவாரும். (௭௫)

---

* சந்தனச்சேதகம்-சந்தனக்குழம்பு. † ஆனையினமென்றது-பிடி யெனப் பிற்கூறலாற்றினமெனக் கூறுக. ‡ கால் சண்டு-ஒற்றையுருளை.
$ நோனா-பொறாது. ¶ பாணியோதை-தாளவோசை. 0 கண்ணுளர்-நாடகர். § பித்திகைக்கத்திகை-கருமுகைமாலை.

புதுக்கொண்டவேழம்பிணிப்போர் * புனைபாடலோதை
மதுக்கொண்டமாந்தர்மடவாரின்மிழற்றுமோதை
பொதுப்பெண்டிரல்குற்புனைமேகலைப்பூசலோதை
கதக்கொண்டயானைகளியாற்களிக்கின்றவோதை. (எக)

உண்ணவமுதன்ன † கலைப்பொருளுள்ளதுண்டும்
பெண்ணாரமுதம்மனையார்மனத்தூடல்பேர்த்தும்
பண்ணுளபாடல்செவிமாந்திப்பயன்கொளாடல்
கண்ணுவினிதுய்க்கவுங்கங்குல்கழிந்ததன்றே. (எஉ)

கரு-வது வரைகாட்சிப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கூ௦கு.

கசு-வது. பூக்கொய்படலம்.

மலர்பறிப்பதைக்குறித்துக் கூறும் படலம்.

மீனுடையெயிற்றுக்கங்குற் ‡ கனகனைவெருண்டுவெய்ய
கானுடைக்கதிர்களென்னுமாயிரங்கரங்களோச்சித்
தானுடையுதயமென்னுந்தமனியத்தறியுணின்று
§ மானுடைமடங்கலென்னத்தோன்றினன்வயங்குவெய்யோன். (க)

முறையெலாமுடித்தபின்னர்மன்னனுமூரித்தேர்மேல்
இறையெலாம்வணங்கப்போனனெழுந்துடன்சேனைவெள்ளம்
குறையெலாஞ்சோலையாகிக்குழியெலாங்கழுநீராகித்
துறையெலாங்கமலமானசோனையாறடைந்ததன்றே. (உ)

அடைந்தவணிறுத்தபின்னரருக்கனுமும்பர்சேர்ந்தான்
மடந்தையர்குழாங்களோடுமன்னருமைந்தர்தாமும்
குடைந்துவண்டுறையுமென்பூக்கொய்துநீராடமைதீர்
தடங்களுமடுவுஞ்சூழ்ந்ததண்ணறுஞ்சோலைசார்ந்தார். (ந)

திண்சிலைபுருவமாகச்சேயரிக்கருங்கணம்பால்
புண்சிலசெய்வரென்றுபோவனபோன்றமஞ்ஞை
பண்சிலம்பணிவாயார்ப்பநாணிஞர்பறந்தகின்னை
ஒண்சிலம்பார்ப்பமாதரொதுங்குதோறொதுங்குமன்னம். (ச)

* புனைபாடல்-யானைகளைத்தளைக்குங்காற் பாடும்பாட்டு. † கலைப்பொருளுள்ளதுண்டு மென்றது-கலையின்றுணிந்தபொருளைச்செவியாகிய வாயால் நுகர்ந்துமெனக் கொள்க. கலைப்பொருள்-சாதியொருமை.
‡ கனகனென்றது-இரணியனை. § மானுடைமடங்கல்-நரமடங்கல்.

செம்பொன்செய்சுருளுந்தெய்வக்குழைகளுஞ்சேர்ந்துமின்னப்
பம்புதேனலம்பவொல்கிப்பண்ணையினுடனோக்கிக்
கொம்பொடுங்கொடியனாரைக்குறிப்பறிந்துணர்தறேற்றார்
வம்பவிழலங்கன்மாலைமைந்தருமயங்கிநின்றார். (௫)

பாசிழைப்பரவையல்குற்பண்டருகிளவித்தண்டேன்
மூசியகூந்தன்மாதர்மொய்த்தபேரமலைகேட்டுக்
கூசினவல்லபேசநாணினகுயில்களெல்லாம்
* வாசகம்வல்லார்முன்னின்றியாவர்வாய்திறக்கவல்லார். (௬)

நஞ்சினுங்கொடியநாட்டமமுதினுநயந்துநோக்கிச்
செஞ்செவேகமலக்கையாற்றீண்டலு † நீண்டகொம்பர்
தஞ்சிலம்படியின்மென்பூச்சொரிந்துடன்றாழ்ந்தவென்றால்
வஞ்சிபோன்மருங்குலார்மாட்டியாவரேவணங்கிலாதார். (௭)

அம்புயத்தணங்கினன்னாரம்மலர்க்கைகடீண்ட
வம்பியலலங்கற்பங்கி ‡ வாளரிமருளுங்கோளார்
தம்புயவரைகள்வந்துதாழ்வனதளிர்த்தமென்பூங்
கொம்புகடாமுமென்றல்கூறலாந்தகைமைத்தொன்றே. (௮)

§ நதியினுங்குளத்தும்பூவாநளினங்கள்குவளையோடு
மதிநுதல்வல்லிபூப்பநோக்கியமாலைத்தும்பி
அதிசயமெய்திப்புக்குவீழ்ந்தனவலைக்கப்போகா
புதியனகண்டபோழ்துவிடுவரோபுதுமைபார்ப்பார். (௯)

¶ உலந்தருவயிரத்திண்டோளொழுகிவரவொளிகொண்மேணி
மலர்ந்தபூந்தொடையன்மாலைமைந்தர்பான்மயிலினன்னார்
கலந்தவர்போலவொல்கியொசிந்தனசிலகைவாராப்
புலந்தவர்போலநின்றவுளசிலபூத்தகொம்பர். (௧௦)

பூவெலாங்கொய்துகொள்ளப்பொலிவிலதுவளநோக்கி
யாவையாங்கணவர்கண்ணுக்கழகிலவிவையென்றெண்ணிக்
கோவையும்வடமுநாணுங்குழைகளுங்குழையப்பூட்டிப்
பாவையர்பனிமென்கொம்பைநோக்கினர்பரிந்துநிற்பார். (௧௧)

வேறு.

துறும்போதினிற்றேன்றுவைத்துண்டுழறும்பியீட்டம்
நறுங்கோதையோடுநனைசின்னமுநீத்தநல்லார்
வெறுங்கூந்தன்மொய்க்கின்றனவேண்டலவேண்டுபோதும்
உறும்போகமெல்லாநலனுள்வழியுண்பரன்றே. (௧௨)

---

* வாசகம்வல்லார்-வாய்வன்மையுடையார் † ஓரறிவுயிரேதாழின் ஆறறிவுயிர்தாழ்வது கூறாதேயமைந்ததென்க. ‡ வாளரிமருளுங்கோள்-கம்பீர நடை, உடல், வலி, சமர்க்கஞ்சாத்தறுகண்மையின்னோரன்னவற்றை. § நதியினுங்குலத்தும் பூவாநளினங்கள்-முகத்தாமரைகள். ¶ உலம்-திரண்டகல்.

மெய்ப்போதினங்கைக்கணியன்னவண்மென்பளிங்கிற்
பொய்ப்போது தாங்கிப்பொலிகின்றதன்மேனிநோக்கி
இப்பாவையெங்கோற்குயிரன்னவளென்னவுன்னிக்
கைப்போதினோடுநெடுங்கண்பனிகாரநின்றாள். (௧௩)

* கோளுண்டதிங்கண்முகத்தாளொருகொம்பொர்மன்னன்
தோளுண்டமாலையொருதோகையைச்சூட்டநோக்கித்
தாளுண்டகச்சாற்றகையுண்டமுலைக்கணாலி
வாளுண்டகண்ணின்மழையுண்டெனவாரநின்றாள். (௧௪)

மயில்போல்வருவாண்மணங்காணியகாதன்மன்னன்
செயிர்தீர்மலர்க்காவினோர் † மாதவிச்சூழல்சேரப்
பயில்வாளிறைபண்டுபிறிந்தறியாள்பதைத்தாள்
உயிர்நாடியொல்கும்முடல்போலலமந்துழன்றாள். (௧௫)

மைதாழ்கருங்கண்கள்சிவப்புறவந்துதோன்ற
நெய்தாவும்வேலானொடுநெஞ்சுபுலந்துநின்றாள்
எய்தாதுநின்றமலர்நோக்கியெனக்கிதீண்டக்
கொய்திநீயென்றோர்குயிலைக்கரங்கூப்புகின்றாள். (௧௬)

செம்மாந்ததெங்கின்னிளநீரையொர்செம்மனோக்கி
அம்மாவிவைமங்கையர்கொங்கைகளாகுமென்ன
எம்மாதர்கொங்கைக்கிவையொப்பனவென்றொரேழை
விம்மாவெதும்பாவெயராமுகம்வெய்துயிர்த்தாள். (௧௭)

போரென்னவீங்கும்பொருப்பன்னபொலங்கொடிண்டோள்
மாரன்னனையான்மலர்கொய்திருந்தானைவேந்தோர்
காரன்னகூந்தற்குயிலன்னவள்கண்புதைப்ப
‡ ஆரென்னலோடும்மனலென்னவயிர்த்தாள். (௧௮)

ஊற்றூர்நறைநாண்மலர் 0 மாதரொருங்குவாசச்
சேற்றால்விளையாதசெந்தாமரைக்கைகணீட்டி
ஏற்றூர்குதவானிடையேந்தினனின்றொழிந்தான்
மாற்றானுதவான்கடு § வச்சையன்போலொர்மன்னன். (௧௯)

தைக்கின்றவேனோக்கினடன்னுயிரன்னமன்னன்
மைக்கொண்டகண்ணாளெதிர்மாற்றவள்பேர்விளம்ப

---

* கோளுண்டதிங்கள் - இராகுவினாற் பிடிக்கப்பட்ட சந்திரன்

† மாதவிசூழல்-வசந்தமல்லிகைக்கொடி வீடு. இதனை வடநூலார்லதாக்ருஹம் என்பர்.

‡ ஆரென்றவன் வினவலான் நம்மைப்பொலிவன் மாட்டுவிளையாட்டு. மகளிர்பலருளரென்பது-கருதினாளென்பது. 0 பன்மாதரென்றது-மாதரென்றது இருவரை. § வச்சையன்-லோபி.

மெய்க்கொண்டநாணந்தலைக்கொண்டவிம்மிமென்பூக்
கைக்கொண்டுமோந்தாளுயிர்ப்புண்கெரிந்தவன்றே. (உ0)

திண்டேரரசன்றொருமன்குலத்தேவிமார்தம்
ஒண்டாமரைவாண்முகத்துண்மினி * ருண்கணெல்லாம்
கண்டாதரிக்கத்திரிவான்மதங்கௌவியுண்ண
வண்டாதரிக்கத்திரிமாமதவானையொத்தான். (உக)

† சந்திக்கலாவெண்மதிவாணுதலாடனக்கும்
வந்திக்கலாகுமடவாட்கும்வகுத்துநல்கி
நிந்திக்கலாயகாவுருவத்தினனின்றபோழ்துஞ்
சிந்திக்கலாபமயிற்கண்கள்சிவந்துபோனார். (உஉ)

வேறு.

வந்தெங்குந்தம்மன்னுயிரேயோபிறிதொன்றோ
கந்தந்துன்றுஞ்சோர்குழல்காணார்கலைபேணார்
‡ அந்தந்தோறுமற்றுகுமுத்தமவைபாரார்
சிந்துஞ்சந்தத்தேமலர்நாடித்திரிவாரும். (உ௩)

யாழொக்குஞ்சொற் $ பொன்னனையாளோரிகன்மன்னன்
தாழத்தாழாடாழ்ந்தமனத்தாடளர்கின்றாள்
ஆழத்துள்ளுங்கள்ளெகிளைப்பாளவனின்ற
சூழற்கேதன்கிள்ளையையேருத்தொடர்வாளும். (உ௪)

அந்தாராகத் § தைங்கணை நூறுடிரமாகச்
சிந்தாகின்றசிந்தையினுன்செய்குவதோரான்
மந்தாரங்கொண்டீகுதியோமாதவியென்றோர்
சந்தார்கொங்கைத்தார்குழலால்பாற்றளர்வாளும். (உ௫)

நாடிக்கொண்டாள்குற்றநயந்தாண்முனிவாற்றாள்
ஊடிக்காணக்காட்டுநலத்தாளுடனில்லாள்
தேடித்தேடிச்செய்தசெழும்பூநறுமாலை
சூடிச்சூடிக்கண்ணடிநோக்கித்துவள்வாளும். (உ௬)

॥ மறலிக்கூறும்வன்கதிர்வேலானிடையேவந்
துறவிக்கோலம்பெற்றிலெனென்றுளுடன்வாழ்விப்

* உண்கள்-மையுண்டகண். இதனை 'இருநோக்கிவளுண்கண்' என்பதனுணர்க. † சந்திக்கலாவெண்மதி-மாலைப்பொழுதிற்றோன்றுங் கலைகளோடு தோன்றுமதி. ‡ அந்தமென்றது-கடைப்பூட்டுகளை $ பொன்னனையாள்-திருமகளொப்பாள். § ஐங்கணை-மா, தாமரை, நெய்தல், அசோகு, முல்லை ॥ எவ்வண்ணவினையையேனும் தன் கைப்படையேயல்லது வேறு துணை வேண்டாது முட்டின்றி முடிக்கு மாற்றலுடையானென்பார் 'மறலிக்கூறும் வன்கதிர்வேலா' னென்றதென்க.

பிறவிக்கொல்லேனென்செய்வதிப்பேரணியென்றோர்
விறலிக்கீவாளொத்திழையெல்லாம்விடுவாளும். (௨௭)

* வம்பிற்பொங்குங்கொங்கைசுமக்கும்வலியின்றிக்
கம்பிக்குந்தந்நுண்ணிடைநோவக்கசிவாரும்
பைம்பொற்கிண்ணம்மெல்விரலுக்கிப்பயில்கின்ற
கொம்பிற்பிள்ளைக்கிள்ளையொளிக்கக்குழைவாரும். (௨௮)

தன்னைக்கண்டாண்மென்னடைகண்டாடமர்போலத்
துன்னக்கண்டாடோழமைகண்டாடுணையென்றாள்
உன்னைக்கண்டாரென்னுவர்பொல்லாதுடீயென்
றன்னக்கன்னிக்காடையளிப்பானமைவாரும். (௨௯)

பாகொக்குஞ்சொன்னுண்கலையாடன்படரல்குல்
ஆகக்கண்டோராடரவாமென்றயனண்ணும்
தோகைக்கஞ்சிக்கொம்பினொதுங்கித்துணரீன்ற
சாகைத்தங்கைக்கண்கள் † புதைத்தேதளர்வாரும். (௩௦)

பொன்னேதேனேபூமகளேகாணெனையென்னாத்
தன்னேரில்லாளங்கொருகொய்யற்றழைசூழ்கி
இன்னேயென்னைக்காணுதிநீயென்றிகலித்தன்
நன் ‡ னீலக்கண்கையின்மறைத்துநகுவாரும். (௩௧)

வில்லிற்கோதைநாணுறமிக்கோரிலவங்கம்
புல்லிக்கொண்டதாமரைமென்பூமலர்தாங்கி
அல்லிற்கோதைமாதர்முகப்பேரரவிந்தச்
செல்வக்கானிற்செங்கதிரென்னத்திரிவாரும். (௩௨)

செய்யிற்கொய்யுஞ்செங்குமுதஞ்செஞ்சிலையொன்றும்
கய்யிற்பெய்யுங்காமனுநாணுங்கவினார்தம்
மையற்பேதைமாதர்மிழற்றும்மழலைச்சொல்
தெய்வப்பாடற்சொற்கலையென்னத்தெரிவாரும். (௩௩)

சோலைத்தும்பிமென்குழலாகுந்தொடைமேவும்
கோலைக்கொண்டமன்மதவாயன்குறியுய்ப்ப
நீலத்துண்கண்மங்கையர்சூழ்நிரையாவின்
மாலைப்போதின்மால்விடையென்னவருவாரும். (௩௪)

வேறு.

○ ஊக்கமுள்ளத்துடையமுனிவரால்
காக்கலாவதுகாமன்கைவில்லெனும்

---

* கச்சினின்று மடங்காதுபுறத்தே தோன்றுவதாகலின் வம்பிற் பொங்குங் கொங்கையென்றார். † புதைத்துத்தளர்வாரென்றதை முன் பின்னாகநிறுத்தி விகுதிபிரித்துக்கூட்டியுரைக்க. ‡ நீலமென்றது-ஆகுபெயர். ○ ஊக்கமென்றது, தாம்விடுத்த காமநுகர்ச்சியிற் றளராதிருக்கு நிலைமையை.

வர்க்குமாத்திரமல்லதுவல்லியிற்
பூக்கொய்வாள்புருவக்கடைபோதுமே. (௩௫)

நாறுபூங்குழ * னன்னுதல்புன்னைமேல்
ஏறினான்மனத்தும்பர்சென்றேறினாள்
ஊறுஞானத்துயர்ந்தவராயினும்
வீறுசேர்முலைமாதரைவெல்வரோ. (௩௬)

சினையின்மேலிருந்தானுருத்தேவரால்
வினையயும்மரியாள்வனப்பின்றலை
நினைவுநோக்கமுநீக்கலன்கைகளால்
நனையுநாண்முறியுங்கொய்துநல்கினான். (௩௭)

வண்டுவாழ்குலாண்முகநோக்கியோர்
† தண்டுபோற்புயத்தான்றடுமாறினான்
உண்டுகோபமுள்ளத்துணர்ந்தவள்
தொண்டைவாயிற்றுடிப்பொன்றுசொல்லவே. (௩௮)

ஏயுந்தன்மையரிவ்வகையாரெலாம்
தூயதண்ணிழற்சோலைத்துறுமலர்
வேயுஞ்செய்கைவெறுத்தனர்வெண்டிரை
பாவுந்தீம்புனற்பண்ணைசென்றெய்தினார் (௩௯)

கசு-வது. பூக்கொய்படல-முற்றிற்று

ஆ. திருவிருத்தம் ௬௦௧௪

கஎ-வது நீர்விளையாட்டுப்படலம்

நீர்விளையாட்டைக் கூறித்துச்சொல்லும் படலம்.

புனைமலர்த்தடங்கணேக்கிப்பூசல்வண்டார்த்துப்பொங்க
‡ வினையறுதுறக்கநாட்டுவிண்ணவர்கணமுநாண
அனகருமணங்களுருமம்மலர்ச்சோலைநின்று
வனகரிபிடிகளோடும்வருவனபோலவந்தார். (க)

அங்கவர்பண்ணைநன்னீராடுமாறமைந்ததோற்றம்
○ கங்கைவார்சடையோனன்னமாமுனிகனலமேனாள்

* நன்னுதன்மனத்தும்பர் சென்றேறுதலென்றது தலைவிபால்வைத்த வேட்கைப்பெருங்கடங்காது அவளையே நாடிநிற்றலை. † தண்டுபோற் புயத்தானென்பதனன் வழியதோளானெனப்போதரலான் தன்றேண் மாலையையொருத்திக்குச் சூட்டிவந்தானென் றாடினாளெனக. ‡ தீவினை யிழந்தா ரெய்துதற்கிடனாகலின் வினையறுதுறக்க நாடென்றார். ○ கங்கை வார் சடையோனன்ன மாமுனியென்றது-தூர்வாசனை.

மங்கையர் கூட்டத்தோடும்வானவர்க்கிறைவன்செல்வம்
பொங்குபாற்கடலிற்செல்லுந்தோற்றமேபோன்றதன்றே. (உ)

மையவாங்குவளையெல்லாமாதர்கண்மலர்கள்பூத்த
* கையவாமுருவத்தார்தங்கண்மலர்குவளைபூத்த
செய்யதாமரைகளெல்லாந்தெரிவையர்முகங்கள்பூத்த
தையலார்முகங்கள்செய்யதாமரைபூத்தவன்றே. (௩)

தாளையேய்கமலத்தாளின்மார்புறத்தழுவுவாரும்
† தோளையேபற்றிவெற்றித்திருவெனத்தோன்றுவாரும்
பாளையேவிரிந்ததென்னப்பாந்துநீருந்துவாரும்
வாளைமீனுகளவஞ்சிமைந்தரைத்தழுவுவாரும் (௪)

வண்டிணக்கமழுஞ்சுண்ணம்வாசநெய்நானத்தோடும்
கொண்டெதிர்வீசுவாருங்கோதைகொண்டோச்சுவாரும்
தொண்டைவாய்ப்பெய்துதூநீர்கொழுநர்மேற்றூகின்றாரும்
புண்டரீகக்கைகூப்பிப்புனன்முகத்திறைக்கின்றாரும். (௫)

‡ மின்னொத்தவிடையினாரும்வேயொத்ததோளினாரும்
சின்னத்தினளகபந்திதிருமுகமறைப்பநீக்கி
அன்னத்தைவருதியென்றேயோடவென்றழைக்கின்றாரும்
பொன்னொத்தமுலையின்வந்துபூவொத்தவுளைகின்றாரும். (௬)

பண்ணுளபவளத்தொண்டைபங்கயம்பூத்ததன்ன
வண்ணவாய்க்குவளைவாட்கண்மருங்கிலாக்கரும்பினன்னார்
உண்ணிறைகயலைநோக்கியோடுநீர்த்தடங்கட்கெல்லாம்
கண்ணுளவாங்கொலென்றுகணவரைவினவுவாரும். (௭)

தேனகுநறவுமாலைச்செறிகுழற்றெய்வமன்னார்
தானுடைக்கோலமேனிதடத்திடைத்தோன்றநோக்கி
நானகநகுகின்றாளிந்நன்னுதறோழியாமென்
றானமில்விலைபினாரமுளங்குளிர்ந்துதவுவாரும். (௮)

குண்டலந்திருவில்வீசக்குலமணியாரமின்ன
விண்டொடர்வரையின்வைகுமென்மயிற்கணங்கள்போல
வண்டுளர்கோதைமாதர்மைந்தர்தம்வயிரத்திண்டோட்
டண்டுகள்தழுவுமாசைபுனற்கரைசார்கின்றாரும். (௯)

---

* சாமுத்திரிகைநூலி னொழுங்கென்பது படக்கையென்றார். † வெற்றித்திருவென்றமையான் தேரளென்றது-ஆடவர்தோளைவிளக்கின்றது. அம்மாதராருடைய உறுப்பிடை யொவ்வொன்றுமே காண்பாருடைய மனங்கண்களை யொருசேரக்கவரும் வனப்பிற்றாகலின் அவ்வாறு தம்மை அவர்பாற் செல்லக்கணவர் அவ்வவ்வமையத்து அவ்வவ்வுறுப்பே காரணமாக அவர்க்கிட்டு மின்னொத்தவிடையினாள்; வேயொத்ததோளினாள் எனகூறுங்கூற்றினைத்தாம்கொண்டு கூறினாரல்லது இடையொன்றுமே சிறந்தார்தோளொன்றுமே சிறந்தாரென இருவகையாரகக் கூறினாரல்லர்.

அங்கிடையுற்றகுற்றம்யாவதென் றறிதறேற்றாம்
செங்கயலனையகாட்டஞ்சிவப்புறச்சீறிப்போன
மங்கையோர்கமலச்சூழன் மறைந்தனண்மறையமைந்தன்
பங்கயமுகமென்றோராதையுற்றுப்பார்க்கின்றானால். (௧௦)

பொற்றொடிதளிர்க்கைசசங்கம்வண்டொடுபுலம்பியார்ப்ப
எற்றுநீர்குடையுந்தோறுமேந்துபேரல்குனின்றும்
கற்றைமேகலைகணீங்கிச்சீறடிகௌவக்காலில்
சுற்றியநாகமென்றுதுணுக்கத்தாற்றுடிக்கின்றாரும். (௧௧)

குடைந்துநீராடுமாதர்குழாம்புடைசூழவாழித்
திடம்புயம்பொலியவாண்டோர்தார்கெழுவேந்தனின்றான்
கடைந்தநாளமிழ்தினோடுங்கடலிடைவந்துதோன்றும்
மடந்தையர்சூழநின்றமந்தரம்போலமாதோ. (௧௨)

தொடியுலாங்கமலச்செங்கைதூநகைத்துவர்த்தசெவ்வாய்க்
கொடியுலாமருங்குனல்லார்குழாத்தொருகுருசினின்றான்
கடியுலாங்கமலவேலிக்கண்ணகன்கானியாற்றுப்
பிடியெலாஞ்சூழநின்றபெய்மதயானையொத்தான். (௧௩)

கானமாமயில்களெல்லாங்களிகெடக்களிக்குஞ்சாயல்
* சோனைவார்குழலினார்தங்குழாத்தொருதோன்றனின்றான்
வானயாறதனைநண்ணிவயின்வயங்கித்தோன்றும்
மீனெலாஞ்சூழநின்றவிரிகதிர்த்திங்களொத்தான். (௧௪)

மேவலாந்தகைமைத்தல்லால் † வேழவிற்றறடக்கைவீரற்
கேவலாங்காட்டுகின்றவிணைநெடுங்கண்ணாரேழை
பாவைமார்பயந்தகோலப்பண்ணையிற்பொலிவாள்வண்ணப்
பூவெலாமலர்ந்தபொய்கைதாமரைபொலிவதொத்தாள். (௧௫)

மிடலுடைக்கொடியவேலேயென்னவாண்மிளிர்வவென்னச்
சுடர்முகத்துலவுகண்ணாடோகையர்சூழநின்றாள்
மடலுடைப்போதுகாட்டும்வளர்கொடிபலவுஞ்சூழக்
கடலிடைத்தோன்றுமென் ‡ பூங்கற்பகவல்லியொத்தாள். (௧௬)

தேரிடைக்கொண்டவல்குற்றெங்கிடைக்கொண்டகொங்கை
ஆரிடைச்சென்றுங்கொள்ளவொண்கிலாவழகுகொண்டாள்
வாரிடைத்தனமீதாடமூழ்கினாள்வதனமைதீர்
நீரிடைத்தோன்றுந்திங்கணிழலெனப்பொலிந்ததன்றே. (௧௭)

* சோனைமழைபோலிடையறாது வார்ந்து தொங்குதலான்சோனை வார் குழலினாரென்றார் † வேழவிற்றடக்கைவீரன்-கரும்புவில்லையுடைய மன்மதன். ‡ கற்பகவல்லி-கற்பகத்தின் மேற்படரும் காமவல்லி.

வேறு.

மலைகடந்தபுயங்கண் மடந்தைமார்
கலைகடைந்தகலல்குல்கடாம்பட
முலைகடந்தமின்முந்திநெருங்கலால்
நிலைகடந்துபாந்ததுநீத்தமே. (கஅ)

* செய்யவாய்வெளுப்பக்கண்சிவப்புற
நெய்யராகமழியத்துகிலைநெகத்
தொய்யின்மாமுலைமங்கையர்தோய்தலாற்
பொய்கைகாதற்கொழுநரும்போன்றதே. (ககூ)

ஆனதூயவரோடுடனாடினர்
ஞானநீரவராகுதனன்றரோ
தேனுநாவியுந்தேக்ககிலாவியும்
மீனுநாறினவேறினிவேண்டுமோ. (உ0)

மிக்கவேந்தர்தம்மெய்யழிசாந்தொடும்
புக்கமங்கையர்குங்குமம்போர்த்தலால்
ஒக்கநீலமுகிற்றலையோடிய
செக்கர்வானகமொத்ததத்தீம்புனல். (உக)

காசுதுண்டுநறுங்கலவைக்களி
ஆகமுண்டதடங்கலுநீங்கலால்
பாகடர்ந்தபணிக்கணிவாய்ச்சியர்
† வேகடஞ்செய்மணியெனமின்னினார். (உஉ)

பாயரித்திறலான் ‡ பசுஞ்சாந்தினால்
தூயபொற்புயத்துப்பொதிதூக்குறி
மீயரித்துவெளுக்கவோர்மெல்லியல்
சேயரிக்கருங்கண்கள்சிவந்தவே. (உங)

§ கதம்பநாள்விரைகள்ளவிழ்தாதொடும்
ததும்புபூந்திரைத்தண்புனல்சுட்டதால்
நிதம்பபாரத்தொர்நேரிழைகாமத்தால்
வெதும்புவாளுடல்வெப்பம்வெதுப்பவே. (உச)

தையலாளையொர்தாரணிதோளினான்
நெய்கொளோதியினீர்முகந்தேற்றினான்

---

* வாய்வெளுத்தலுங் கண்சிவத்தலு மாதரைத்தோய்வதனாலுண்டாவது. †வேகடஞ்செயல்-சாணைபிடித்தல். அன்றி அழுக்கற்றுதல் எனினுமமையும். ‡ பசுமை வெண்மை யென்னும் பண்புகள் வண்ணப்பண்பினையுணர்த்தாது முறையே ஈரமுமின்மையு முணர்த்திநின்றன. § கதம்பம்-பரிமளப்பொடி.

* செய்யதாமரைச்செல்வியைத்தீம்புனல்
கையினூட்டுங்களிற்றரசனென்னவே. (உ௫)

சுளியுமென்னடைதோற்கநடந்தவர்
அளிகொள்சீறடியொத்தனவாமென
விளிவுதோன்றமிதிப்பனபோன்றன
நளினமேறியநாகிளவன்னமே. (உசு)

எரிந்தசிந்தையரெத்தனையென்கெனோ
அரிந்தகூருகிராலழிசாந்துபோய்த்
தெரிந்தகொங்கைகள்செவ்வியநூல்புடை
வரிந்தவங்கலசங்களைமானவே. (உஎ)

தாழுகின்றதனைமலர்க்கையினால்
ஆழிமன்னொருவனூரைத்தனது
வீழியின்கனிவாயொருமெல்லியல்
தோழிகண்ணிற் † கடைக்கணிற்சொல்லினள். (உஅ)

தள்ளியோடியலைதருமாறலால்
தெள்ளுநீரின்முழுகுசெந்தாமரை
புள்ளிமானனையார்முகம்போல்கிலா
துள்ளினூணியொளிப்பனபோன்றவே. (உகூ)

இனையவெய்தியிரும்புனலாடிய
வனைகருங்கழன்மைந்தருமாதரும்
அனையநீர்வறிதாகவந்தேறினர்
புனைநறுந்துகில்பூணொடு ‡ தாங்கினர். (௩0)

மேவினர்பிரிந்தார்க்கந்தவீங்குநீர்
தாவுதண்மதிதன்னொடுந்தாரகை
ஓவுவானமுழுமண்ணுறைதாமரைப்
பூவெலாங்குடிபோனதும்போன்றதே. (௩க)

மானினோக்கியர்மைந்தரோடாடிய
ஆனநீர்விளையாடலைநோக்கினன்
தானுமன்னதுகாதலித்தானென
ᑌ மீனவேலையைவெய்யவனெய்தினன். (௩உ)

ஆற்றலின்மையினாலழிர்தேயுந்தம்
வேற்றுமன்னர்தம்மேல்வரும்வேந்தர்போல்
ஏற்றுமாதர்முகங்களொடெங்கணும்
தோற்றசந்திரன்மீளவுந்தோற்றினன். (௩௩)

கஎ-வது நீர்விளையாட்டுப்படல-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் க0சஎ.

---

* தாமரைச் செல்வியைக் கையினூட்டுங்களிற்றரசசென்ன என்றமையான் கசலக்குமியை யுணர்த்தியது. † கண்ணிற்கடைக்கணிற் சொல்லல் என்றது-நயனபாடையை. ‡ தாங்கினரென்றமையான் ஆடையணி யிவற்றானல்லது இயற்கையழகினையுடையரென்பதும், பூவின்மெல்லியரென்பதும் பெறப்பட்டன. ᑌ மீனவேலையை வெய்யவனெய்தினனென்றது பொழுதுபட்டதென்பதுணர்த்திற்று.

கஅ-வது உண்டாட்டுப்படலம்.

உண்டாடலைக்குறித்துச் சொல்லும்படலம்.

வெண்ணிறநறைநிறைவெள்ளமென்னவும்
பண்ணிறஞ்செறிந்திடைபரந்ததென்னவும்
உண்ணிறைகாமமிக்கொழுகிற்றென்னவும்
தண்ணிறைநெடுநிலாத்தழைத்ததெங்குமே. (க)

கலந்தவர்க்கினியதோர்கள்ளுமாயப்பிரிந்
துலந்தவர்க்குயிர்சுடுவிடமுமாயுடன்
புலந்தவர்க்குதவிசெய்புதியதூதுமாய்
மலர்ந்ததுநெடுநிலாமதனன்வேண்டவே. (உ)

ஆறெலாங்கங்கையேயாயவாழிதாம்
கூறுபாற்கடலையேயொத்தகுன்றெலாம்
* ஈறிலான்கயிலையையியைந்தவெண்ணிற
வேறியாம்புகல்வதுநிலவின்வீக்கமே. (௩)

எள்ளருந்திசைகளோடி † யாரும்யாவையும்
கொள்ளைவெண்ணிலவினாற்கோலங்கோடலால்
வள்ளுறைவயிரவான் ‡ மகரகேதனன்
வெள்ளணியொத்ததுவேலைஞாலமே (௪)

தயங்குதாரகைபுரைதரளநீழலும்
இயங்குதார்மிடைந்தகாரெழினிச்சூழலும்
கயங்கள்போன்றொளிர் ¶ பளிங்கடுத்தகானமும்
வயங்குபூம்பந்தருமகளிரெய்தினார். (௫)

பூக்கமழோதியர்போதுபோக்கிய
சேக்கை 0 யின்பச்செருச்செருக்குஞ்சிந்தையார்
ஆக்கியவமிழ்தெனவம்பொன்வள்ளத்து
வாக்கியபசுநறுமாந்தன்மேயினார். (௬)

மீனுடைவானுடைவிஞ்சைநாட்டவர்
ஊனுடையுடம்பினாருருவமொப்பிலார்
மானுடைநோக்கினார்வாயின்மாந்தினார்
தேனுடைமலரிடைத்தேன்பெய்தென்னவே. (௭)

---

* ஈறிலான்-சங்காரகாரணனாகிய சிவன், இதற்குவேறு கூறுவாருமுளர். † யாரும்யாவையும் என்றது-இயங்குதிணை. நிலைத்திணைகளை. ‡ மகரகேதனன்-கயற்கொடியையுடையமன்மதன். ¶ பளிங்கடுத்த கானமென்றது. பளிங்குப்பாறையை. 0 இன்பச்செருர்-கல்விப்போர்.

உக்கபால்புரைநிலாவுண்டவள்ளமும்
கைக்கொள்வாளொளிபடச்சிவந்துகாட்டத்தன்
மைக்கணுஞ்சிவந்ததோர்மடந்தைவாய்வழி
புக்கதேனமிர்தமாய்ப்பொலிந்தபோன்றவே. (௮)

தாமமுநானமுந்தழைந்ததண்ணகிற்
றாமமுண்குழலியருண்டதூநறை
ஏமவெங்குழியுகுநெய்யினுள்ளுறை
காமவெங்கனலினைக்கனற்றிக்காட்டிற்றே. (௯)

வேறு.

* விடனுக்குநெடியநோக்கினமிர்தொக்குமின்சொலார்தம்
மடனுக்குமடனுமுண்டேவானுதலொருத்திகாணத்
தடனுக்குநிழலைப்பொன்செய்தண்ணறுந்தேறல்வள்ளத்
துடனுக்கவுவந்துநீயேயுண்ணுதிதோழியென்றாள். (௧௦)

அச்சநுண்மருங்குலாளோரனங்கனுளளகபந்தி.
நஞ்சுவேற்கருங்கட்செவ்வாய்நளிர்முகமதுவட்டோன்றப்
பிச்சிநீயென்செய்தாயிப்பெருநறவிருக்கவாளா
எச்சிலைநுகர்தியோவென்றெயிற்றரும்பிலங்கநக்காள். (௧௧)

புறமெலாநகைசெய்தேசப்பொருவருமேனிவேறோர்
மறமுலாங்கொலைவேற்கண்ணாண்மணியின்வள்ளத்துவெள்ளை
நிறநிலாக்கற்றைபாயநிறைந்ததுபோன்றுதோன்ற
நறவெனவதனைவாயின்வைத்தனளுணுட்கொண்டாள். (௧௨)

யாழ்க்குமின்குழற்குமின்பமளித்தனவிவையாமென்னக்
கேட்குமென்மழலைச்சொல்லோர்கிஞ்சுகங்கிடந்தவாயாள்
† தீட்கருங்குவளைதோய்ந்ததண்ணறைச்சாடியுட்டன்
வாட்கணினிழலைக்கண்டாள்வண்டெனவோச்சுகின்றாள். (௧௩)

களித்தகண்மதர்ப்பவாங்கோர்நனங்குழைகள்ளினுள்ளால்
வெளிப்படுகின்றகாட்சிவெண்மதிநிழலைநோக்கி
அளித்தனெனபயம்வானத்தரவினையஞ்சிநீவந்
தொளித்தனையஞ்சலென்றாங்கினியன ‡ வுணர்த்துகின்றாள். (௧௪)

அழிகின்றவறிவினாலோபேதைமையாலோவாற்றிற்
சுழியொன்றிநின்றதன்னவுந்தியாடேயசெந்தேன்

---

* நோய்நோக்கென்பது படவிடனுக்குநெடியநோக்கென்றார்.

† தாட்கருங்குவளை தோய்ந்ததண்ணறைச்சாடியென்றது மொய்க்கும் வண்டுகட்கஞ்சி அத்தண்டின் சிறுதொளையினறவை யுறிஞ்சுதற்கென்க. ‡ உரையாநின்றாளென்னாது உணர்த்துகின்றாளென்றதனான் இனியன என்றது றுதிமொழியென்பதுணர்த்திற்று.

பொழிகின்றபூவின்வேய்ந்தபந்தரைப்புரைத்துக்கீழ்வந்
திழிகின்றகொழுநிலாவைநறவெனவள்ளத்தேற்றாள். (கரு)

மின்னெனநுடங்குகின்றமருங்குலாளொருத்திவெள்ளை
இன்னமிழ்தனையதீஞ்சொலிடைதடுமாறியென்ன
வன்னமேகலையைநீக்கிமலர்த்தொடை * யல்குல்சூழ்ந்தாள்
பொன்னரிமாலைகொண்டுபுரிகுழல்புனையலுற்றாள். (கசு)

கண்மணிவள்ளத்துள்ளேகளிக்குந்தன்முகத்தைநோக்கி
விண்மதிமதுவினாசைவீழ்ந்ததென்றொருத்தியுன்னி
உண்மகிழ்துணைவனோடுமூடுநாள்வெம்மைநீக்கித்
தண்மதியாகில்யானுந்தருவெனீந்தனையென்றாள். (கஎ)

எள்ளொத்தகோலமூக்கினேந்திழையொருத்திமுன்கை
தள்ளத்தண்ணறவையெல்லாந்தவிசிடையுகுத்துந்தேறாள்
உள்ளத்தின்மயக்கந்தன்னுளுட்புறத்துண்டென்றெண்ணி
வள்ளத்தைமறித்துவாங்கிமணிநிறவிதழின்வைத்தாள். (கஅ)

வான்றனைப்பிரிதலாற்றாவண்டினம் † வச்சைமாக்கள்
என்றவர்நிதியம்வேட்டவிரவலரென்னவார்ப்பத்
தேன்றருகமலச்செவ்வாய்திறந்தனணுகரநாணி
ஊன்றியகழுநீர்நாளத்தாளினொருத்தியுண்டாள். (ககூ)

புள்ளுறைகமலவாவிப்பொருகயல்வெருவியோட
வள்ளுறைகழித்தவாள்போல்வரிபுறவயங்குகண்ணாள்
கள்ளுறைமலர்மென்கூந்தற்களியிளமஞ்ஞையன்னாள்
‡ உள்ளுறையன்பனுண்ணானெனாநறவுண்ணலெண்ணாள். (உ0)

வேறு.

கூற்றுறழ்நயனங்கள்சிவப்பக்கூனுதல்
ஏற்றிவாளெயிறுகளதுக்கியின்றளிர்
மாற்றருங்கரதலமறிக்குமாதொரு
o சீற்றமாமபிநயந்தெரிக்கின்றாரினே. (உக)

துடித்தவான்றுவரிதழ்த்தொண்டைத்தூநிலா
கடித்தவாலெயிறுகளதுக்கிக்கண்களால்
வடித்தவெங்குருதிவேல்விழிக்குமாதர்மெய்
பொடித்தவேர்புறத்துகுநறவம்போன்றவே. (உஉ)

* அல்குல் சூழ்ந்தாள் எனப்பின்வருதலான் மேகலை என்ற தாடையினை. † வச்சைமாக்கள்-உலோபிகள். ‡ தன்னுள்ளத்து நீங்காதுறைதலின் உள்ளுறையன்பனென்றார். o சீற்றமாமபிநயமெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

* கனித்திரளிதழ்பொழ்செம்மைகண்புக
நினைப்பதொன்றுரைப்பதொன்றுமோர்நேரிழை
தனிச்சுடர்தாமரைமுகத்துச்சாபமும்
குனித்ததுபணித்ததுகுழவித்திங்களே. (௨௩)

இலவிதழ்த்துவர்விடவெயிறுதேனுக
முலைமிசைக்கச்சொடுகலையுமூட்டற
அலைகுழல்சோர்தரவசதியாட்டலாற்
கலவிசெய்கொழுநருங்கள்ளுமொத்தவே. (௨௪)

† கனைகடற்கள்வனாற்கலக்கமுற்றதை
‡ அனகனுக்கறிவியென்றறியப்போக்குமோர்
இனமணிக்கலையினுடோழ்நீயுடன்
மனமெனத்தாழ்த்தியோவருதியோவென்றாள். (௨௫)

மானமர்நோக்கியோர்மதுகைவேந்தன்பால்
ஆனதன்பாங்கியராயினாரெலாம்
§ போனவர்போனவர்தொடரப்போக்கினாள்
தானுமங்கவர்பினைதமியளேகினாள். (௨௬)

விரைசெயபூஞ்சேக்கையினடுத்த ¶ மீமிசைக்
கரைசெயாவாசையங்கடலுளாளொரு
பிரைசமென்குதலையாள்கொழுநன்பேரெலாம்
உரைசெயுங்கிள்ளையையுவந்துபுல்லினாள். (௨௭)

மன்றனொருசிறையிருந்தொர்வாணுதல்
தன்றுணைக்கிள்ளையைத்தழீஇயென்னாவியை
இன்றுபோய்க்கொணர்கிலையென்செய்வாயெனக்
கன்றிமேலோடெத்தியென்றழுதுசீறினாள். (௨௮)

வளைபயின்முன்கையோர்மயிலனாடனைக்
கிளையவள்பெயரினைக்கொழுநனீதலும்
முளையெயிறிலங்கிடமுறுவல்வந்தது
களகளவுதிர்ந்ததுகயற்கணாலியே. (௨௯)

செற்றமுன்புரிந்ததோர்செம்மல்வெம்மையாற்
பற்றலுமல்குலிற்பாந்தமேகலை
அற்றுகுமுத்தின்முன்னவனிசேர்ந்தன
பொற்றொடியொருத்திகண்பொருசமுத்தமே. (௩௦)

---

* கனிபொழி என்புழி வினைப்பகுதியே வினையெச்சப்பொருடந்தது வரிப்புனைபந்தென்புழிப்போல. † கனைகடல் - ஒலிகடல் ‡ யான்றியே னென்பாள் எதிர்மறைமுகத்தான். அவனை அனகனென்றாள் § போனவர்போனவர்-முற்போனவரையும்பிற்போனவரையுமுணர்த்திற்று. ¶மீமிசை ஒருபொருட்பன்மொழி.

தோடவிழ்கூந்தலாளொருத்திதோன்றலோ
டூடுகேனோவுயிருருகுநோய்கெடக்
கூடுகேனோவவன்குணங்கள்வீணையிற்
பாடுகேனோவெனப்பலவும்பன்னினாள். (௫௧)

மாடகம்பற்றினண்மகரவீணைதன்
தோடவிழ்மலர்க்கரஞ்சிவப்பத்தொட்டனள்
பாடினளொருத்திதன்பாங்குளார்களோ
டேடினதுரைசெயாளுள்ளத்துள்ளதே. (௫௨)

குழைத்தபூங்கொம்பனாளொருத்திகூடலை
இழைத்தனளவ்வவைவிட்டபோதெலாம்
பிழைத்தலுமனங்கவேள்பிழைப்பிலம்பொடும்
உழைத்தனளுயிர்த்தனளுயிருண்டென்னவே. (௫௩)

பந்தணிவிரலினாளொருத்திபையுளாள்
சுந்தரனொருவன்பாற்றூதுபோக்கினாள்
வந்தனனெனக்கடையடைத்துமாற்றினாள்
சிந்தனைதெரிந்திலஞ்சிவந்தநாட்டமே (௫௪)

உய்த்தபூம்பள்ளியினூடணீங்குவான்
சித்தமுண்டொருத்திக்கதன்பன்றேர்கிலான்
பொய்த்ததோர் * மூரியானிமிர்ந்துபோக்குவாள்
எத்தனையிறந்தனகடிகையீண்டென்றாள். (௫௫)

விதைத்தமென்காதலின்வித்துமெய்ந்நிறை
இதைப்புனனனைத்திடமுளைத்தவேயெனப்
பகைத்தனளொருத்தன்மேலொருத்தி † பஞ்சடி
உதைத்தலும்பொடித்தனவுரோமராசியே. (௫௬)

பொலிந்தவாண்முகத்தினான்பொங்கித்தன்னையு
மலிந்தபேருவகையான்மாற்றுவேந்தரை
நலிந்தவாளுழவனோர்நங்கைகொங்கைபோய்
மெலிந்தவாநோக்கித்தன்புயங்கள்வீங்கினான். (௫௭)

ஏய்ந்தபேரெழிலினானொருவனெய்தினான்
வேய்ந்தபோலெங்கணுமனங்கள்வெங்கணை
பாய்ந்தபூம்பள்ளியிற்படுத்தபல்லவந்
தேய்ந்தனநோக்கினன்றிசைக்குஞ்சிந்தையான். (௫௮)

ஊட்டியசாந்துவெந்துலரும்வெம்மையான்
காட்டினையளித்திநீயென்றநல்லவர்

---

* மூரி-உறக்கம் † பஞ்சடி-செம்பஞ்சூட்டியதாள்

ஆட்டுநீர்க்கலசமேயென்னலானவோர்
வாட்டொழின்மைந்தற்கோர்மங்கைகொங்கையே. (௩௯)

பயிருறுகிண்கிணிபரந்தமேகலை
வயிரவான்பூணணிவாங்கிநீக்கினாள்.
உயிருறுதலைவன்பாற்போகவுன்னினாள்
* செயிருறுதிங்களைத்தீயநோக்கினாள். (௪௰)

ஏலுமிவ்வன்மையையென்னென்றுன்னுதும்
† ஆலைமென்கரும்பனாளொருவற்காங்கொரு
சோலைமென்குயிலனாள்சுற்றிவீக்கிய
யாலையைநிமிர்ந்திலவயிரத்தோள்களே. (௪௧)

சேர்குழலொருத்திதன்வருத்தஞ்சொல்லுவான்
மாரனைநோக்கியோர்மாதைநோக்கினாள்
காரிகையிவளவள்கருத்தைநோக்கியோர்
வேரியந்தெரியலான்வீடுநோக்கினாள். (௪௨)

சினங்கெழுவாட்கையோர்செம்மல்பாலொரு
கனங்குழைமயிலனாள்கடிதுபோயினாள்
மனங்குழைநறவமோமாலைதான்கொலோ
அனங்கனேயார்கொலோவழைத்ததூதரே. (௪௩)

தொகுகருகாதற்குத் ‡ தோற்றசீற்றத்தோர்
வகிர்மதிநெற்றியாண்மழைக்கணாலிவர்
துகுதலுமுற்றதென்னென்றுகொற்றவன்
நகுதலுதக்கணானுநீங்கினாள். (௪௪)

பொய்த்தலைமருங்குலாளொருத்திபுல்லிய
கைத்தலநீக்கினள்கருத்தினீக்கலள்
சித்திரம்போன்றவச்செயலோர்தோன்றற்குச்
சத்திரமார்பிடைத்தைத்ததொத்ததே. (௪௫)

மெல்லியலொருத்திதான்விரும்புஞ்சேடியைப்
புல்லியகையினள்போதிதூதெனச்
சொல்லுவானுறுமுறநாணுஞ்சொல்லலள்
○ எல்லையில்பொழுதெலாமிருந்துவிம்மினாள். (௪௬)

---

* நீ தோன்றித்தலைவன்பாற் காமவேட்கையுண்டாக்கப் பிறநியா வண்ணம் செல்வேனை நிலாவெரித்துத் தடுத்தி. இது நிற்குத்தகவென்பான் செயிருறுதிங்களைத் தீயநோக்கினாளென்றார். † பிரிந்து நின்று காமவெப்பத்தானொந்தமையின் ஆலைமென் கரும்பனாளென்றும், அவன்பட்ட காமவிடாயை யொருவண்ணந் தணியப்பெற்றது இவள்சொல்லேயென்றது கருதிச்சோலைமென் குயிலனாளென்றுங் கூறினார். ‡ ஆற்றருப்பைகளென்றாற்போலத் தோற்ற சீற்றமென்புழிக் காலங்காட்டு மின்னிடைநிலை புணர்ந்துகெட்டது. ○ பன்முறையாற்றிய செய்கையினெல்லையில்லாமையை அச்செய்கை நிகழ்ந்த பொழுதின்மேலேற்றி எல்லையில் பொழுதெலா மென்றார்

ஊறுபேரன்பினுளொருத்திதன்னுயிர்
மாறிலாக்காதலன்செலவைமற்றொரு
நாறுபூங்கோதைபாணவிலநாணுவான்
வேறுவேறுறச்சிலமொழிவிளம்பினாள். (௪௭)

உருத்தெரிதன்மையவுயிருமொன்றுதாம்
அருத்தியுமத்துணையாயவீரினார்
ஒருத்தியுமொருத்தனுமுடம்புமொன்றெனப்
பொருத்துவாராமெனப்புல்லினாரரோ. (௪௮)

வெதிர்பொருதோளினாளொருத்திவேந்தன்வந்
தெதிர்தலுந்தன்மனமெழுந்துமுன்செல
மதிமுகங்கதுமெனவணங்கினாளது
புதுமையாதலினவற்கச்சம்பூத்ததே. (௪௯)

துனிவருநலத்தொடுசோர்க்கின்றாளொரு
குனிவருநுதலிக்குக்கொழுநனின்றியே
தனிவருந்தோழியுந்தாயையொத்தனள்
இனிவருதென்றலுமிரவுமென்னவே. (௫௦)

ஆக்கியகாதலளொருத்தியந்தியில்
தாக்கிதெய்வமுண்டென்னுந்தன்மையவள்
நோக்கினணின்றனனவன்றதோர்கிலள்
போக்கினதுதினோடுணர்வும்போக்கினள். (௫௧)

மறப்பிலள்கொழுநனைவரவுநோக்குவாள்
பிறப்பினொடிறப்பெனப்பெயருஞ்சிந்தையால்
* துறப்பருமுகிலிடைத்தோன்றுமின்னெனப்
புறப்படும்புகுமொருபூத்தகொம்பனாள். (௫௨)

எழுதருங் † கொங்கைமேலனங்கனெய்தவம்
புழுதவெம்புண்களில்வளைக்கையொற்றினாள்
அழுதனள்சிரித்தனளற்றஞ்சொல்லினாள்
தொழுதனளொருத்தியைத்தூதுவேண்டுவாள். (௫௩)

ஆர்த்தியுமுற்றதுமறிஞர்க்கற்றந்தான்
வார்த்தையினுணர்த்துதலரிதன்றோமனம்
வேர்த்தனள்வெதும்பினண்மெலிந்துசாய்ந்தனள்
பார்த்தனளொருத்திதன்பாங்கனாளையே. (௫௪)

---

* படமாடத்தைத் துறப்பருமுகிலென்றார்
† கொங்கையினருமைநோக்கி எழுதருங்கொங்கையென்றார்.

தனங்களினிளையவர் தம்மின் மும்மடி
கனங்கனமிடையிடைகளிக்குங்கள்வனாய்
மனங்களினுழைந்தவர் மாந்துதேறலை
அனங்கனுமருந்தினனாதல் வேண்டுமால். (௫௫)

வேறு.

நறைகமழலங்கன்மாலைநளிர்நறுங்குஞ்சிமைந்தர்
துறையறிகலவிச்செவ்வித்தோகையர் தூசுவீசி
நிறையகலல்குல்புல்குங்கலன்கழித்தகலநீத்தார்
அறைபறையனையநீராருமறைக்காவரோதான். (௫௬)

பொன்னருங்கலனுந்தூசும்புறத்துளதுறத்தல்வம்பே
நன்னுதலொருத்திதன்பாலகத்துளநாணுநீத்தாள்
உன்னருந்துறவுபூண்டவுணர்வுடையொருவனேபோல்
தன்னையுந்துறக்குந்தன்மைநாமத்தேதங்கிற்றன்றே. (௫௭)

பொருவருமதனன்போல்வானொருவனும்பூவின்மேலத்
திருவினுக்குவமைசால்வாளொருத்தியுஞ்சேக்கைப்போரில்
* ஒருவருக்கொருவர்தோலாரொத்தனருயிருமொன்றே
இருவரதுணர்வுமொன்றேயென்றபோதியாவர்வெல்வார். (௫௮)

கொள்ளைப்போர்வாட்கணாளங்கொருத்தியோர்குமரனன்னான்
† வள்ளத்தாரகலந்தன்னைமலர்க்கையாற்புதைப்பநோக்கி
உள்ளத்தாருயிரன்னான்மேலுதைபடுமென்றுநீநின்
கள்ளத்தாற்புதைத்தியென்னாமுன்னையிற்கனன்றுமிக்காள். (௫௯)

பாலுளபவளசெவ்வாய்ப்பணைமுலைநிகர்த்தமென்றோள்
வேலுளநோக்கினாளோர்மெல்லியல்வேலையன்ன
மாலுளசிந்தையாங்கோர் ‡ மழையுளதடக்கையாற்கு
மேலுளவரம்பைமாதரென்பதோர்விருப்பையீந்தாள். (௬0)

வேறு.

புனத்துளமயிலினாள்கொழுநன்பொய்யுரை
நினைத்தனள்சீறவாளொருத்திநீடிய
சினத்தொடுகாதலன்சேக்கைப்போரிடை
மனத்துறைகாதலே § வாகைகொண்டதே. (௬௧)

கொலையுருவமைந்தெனக்கொடியநாட்டத்தோர்
கலை 0 யுருவல்குலாள்கணவற்புல்குவாள்

---

* ஒத்தகிழவனும் கிழத்தியுமொத்தவின் பந்துய்த்தலின் ஒருவருக்கொருவர் தோலாரொத்தன ரென்றார். † வளமென்றது - வள்ளமெனவிரிக்கும்; வழிவிரித்தல் பெற்றது; ‡ மழையுளதடக்கை என்றது - கொடையின் சிறப்புத்தோன்றநின்றது. § வெற்றியை வாகை யென்றார்.
0 உருவுதலாகிய இயையில்லாதிருப்ப அவ்வியபுல்பட முலையுருவினவெனக்கூறினார்.

சிலையுருவழிதரச்செறிந்தமார்பிற்றன்
முலையுருவினவெனமுதுகைநோக்கினாள். (சுஉ)

குங்குமமுதிர்ந்தனகோதைசோர்ந்தன
சங்கினமுரன்றனகலையுஞ்சாறின
பொங்கினசிலம்புகள்பூசலிட்டன
மங்கையரிளநலமைந்தருண்ணவே (சுங)

துனியுறுபுலவியைக்காதல்சூழ்சுடர்
பனியெனத்துடைத்தலும்பதைக்குஞ்சிந்தையாள்
புனையிழையொருமயில்பொய்யுறங்குவாள்
* கனவெனாநலத்தினாற்கணவற்புல்லினாள். (சுச)

வட்டவாண்முகத்தொருமயிலுமன்னனும்
† கிட்டியபோதுடல்கிடக்கப்புல்லினார்
விட்டிலர்கங்குலின்விடிவுகண்டிலர்
ஒட்டியவுடல்பிரிப்புணர்கிலாமையால். (சுரு)

அருங்களிமால்களிறனையவீரர்க்கும்
கருங்குழன்மகளிர்க்குங்கலவிப்பூசலால்
நெருங்கியவனமுலைசுமக்கநேர்கலா
மருங்குல்போற்றேய்ந்ததம்மாலைக்கங்குலே. (சுசு)

கடையுறநன்னெறிகாண்கிலாதவர்க்
கிடையுறுதிருவெனவிந்துநத்தினான்
படர்திரைக்கருங்கடற்பரமன்மார்பிடைச்
‡ சுடர்மணிக்கரமெனவிரவிதோன்றினான். (சுஎ)

கஅ-வது உண்டாட்டுப்படல-முற்றிற்று

ஆ திருவிருத்தம்-கககச.

---

* கனவிடைப்பயந்துபோற் கணவனைப் புல்லுதற்கேதுவாதல் பற்றி கனவெனாநலமென்றார். † பிரிவாலுளதாம் வருத்தத்தினருமை தோன்றக் கிட்டியபோதென்றார். ‡ சுடர்மணிக்கரமென்றது பீதகவாடைப்பிரானார் மார்பிடை மணியாகிய கவுத்துவத்தை.

௧௯-வது எதிர்கோட்படலம்.

எதிர்கொள்வதைக்குறித்துக் கூறும்படலம்.

வேறு.

அடாநெறியறைதல்செல்லாவருமறையறைந்தநீதி
விடாநெறிப்புலமைச்செங்கோல்வெண்குடைவேந்தர்வேந்தன்
* படர்முகமுகிலிற்றோன்றும்பருவமொத்தருவிபல்கும்
கடாநிறையாறுபாயுங்கடலொடுங்கங்கைசேர்ந்தான். (௧)

கப்புடைநாவினுகருலகமுங்கண்ணீற்றோன்றத்
துப்புடைமணலிற்றுகிக்கங்கைநீர்சுருங்கிக்காட்ட
† அப்புடையநீகவேலையகன்புனமுகுந்துமாந்த
உப்புடைக்கடலுந்தெண்ணீருண்ணசையுற்றதன்றே. (௨)

ஆண்டுநின்றெழுந்துபோகியகன்பணைமிதிலையென்னும்
ஈண்டுநீர்நகரின்பாங்க ‡ ரிருநிலக்கிழவனெய்தத்
தாண்டுமொப்புரவித்தானைத்தண்ணளிசனகனென்னும்
தூண்டருவபிரத்தோளான்செய்ததுசொல்லலுற்றாம். (௩)

வந்தனனரசனென்னமனத்தெழுமுவகைபொங்கக்
கந்தடுகளிறுந்தேருங்கலினமாக்கடலுஞ்சூழச்
சந்திரனிரவிதன்னைச்சார்வதோர்தன்மைதோன்ற
○ இந்திரதிருவன்றன்னையெதிர்கொள்வானெழுந்துவந்தான். (௪)

கங்கைநீர்நாடன்சேனைமற்றுளகடல்களெல்லாம்
சங்கினமார்ப்பவந்துசார்வனபோலச்சாரப்
பங்கயத்தணங்கைத்தந்தபாற்கடலெதிர்வதேபோன்
மங்கையைப்பயந்தமன்னன்வளநகர்வந்ததன்றே. (௫)

வேறு.

இலைகுலாவலியினனிகமேழெனவுலா
நிலைகுலாமகரநீர்நெடியமாகடலெலாம்
அலகின்மாகளிறுதேர்புரவியாளெனவிராய்
உலகெலாநிமிர்வதேபொருவுமோருவமையே (௬)

தொங்கல்வெண்குடைதொகைப்பிச்சமுட்படவிராய்
எங்கும்விண்புதைதரப்பகன்மறைந்திருளெழப்
பங்கயஞ்செய்யவும்வெளியவும்பலபடத்
தங்குதாமரையுடைத்தானமேபோலுமே. (௭)

---

* படாமுகமென்றது-யானையை. † படைகளின் மிகுதிநோக்கி அப்புடையநீகமென்றார். ‡ இருநிலக்கிழவனென்றது தயரதனை. ○ இந்திரதிருவனென்றதுமது.

கொடியுளாரோதனிக்குடையுளாரோகுலப்
படியுளாரோகடற்படையுளாரோபகர்
மடியிலாவரசினன்மார்புளாரோவளர்
முடியுளாரோதெரிந்துணர்கிலா * முளரியாள். (அ)

வார்முகங்கெழுவுகொங்கையர்கருங்குழலின்வண்
டேர்முழங்கரவமேழிசைமுழங்கரவமே
தேர்முழங்கரவம்வெண்டிரைமுழங்கரவமே
கார்முழங்கரவம்வெங்கரிமுழங்கரவமே, (கூ)

சூழுமாகடல்களுந்திடர்படத்துகடவழ்ந்
தேழுபாராகமுமுற்றுளதெனிற்கெளிதரோ
ஆழியானுலகளந்தன்றுதாள்சென்றவப்
பூழையூடேபொடித்தப்புறம்போயதே. (க0)

மன்னெடுங்குடைமிடைந்தடையவான்மறைதரத்
துன்னிடுநிழல்வழங்கிருடெரப்பெளிதரோ
பொன்னிடும்புவியிடும்புனைமணிக்கலனெலாம்
மின்னிடும்வில்லிடும்வெயிலிடும்நிலவிடும். (கக)

தாவின்மன்னவர்பிரான்வரமுரட்சனகனும்
எவருஞ்சிலையினனெதிர்வரும்நெறியெலாம்
தூவுதண்சுண்ணமுங்கனகநுண்டூளியும்
பூவின்மென்றாதுரும்பொடியுமேபொடியெலாம். (கஉ)

நறுவிரைத்தேனுநானமுநறுங்குங்குமச்
செறியகிற்றேய்வையுமான்மதத்தேக்கரும்
வெறியுடைக்கலவையும்விரவுசெஞ்சாந்தமும்
செறிமதக்களுழிபாய்சேறுமேறெலாம். (கந)

மன்றலங்கோதையார்மணியினும்பொன்னினும்
சென்றவந்துலவுமச்சிதைவிலாநிழலினோர்
வென்றிதிண்கொடியொடும்நெடுவிதானமும்விராய்
நின்றவெண்குடைகளினிழல்களேநிழலெலாம். (கச)

மாறிலாமதுகையான்மகிழ்பெருஞ்சேனைமேல்
ஊறுபேருவகையானனிகம்வந்துற்றபோ
தீறிலோதையினெடுமறிதிரைப்பரவைமேல்
ஆறுபாய்கின்றதோரமலைபோலானதே. (கரு)

கந்தையேபொருகரிச்சனகனுங்காதலோ
டுந்தவோதரியதோர்தன்மையோடுலகுளோர்

* முளரியாள் - சயமகள்,

* தந்தையேயனையவத் தகவினான் முன்புதன்
சிந்தையேபொருநெடுந் தேரின்வந்தெய்தினான். (கசு)

எய்தவத்திருநெடுந் தேரிழிந் திளையதன்
மொய்கொடுஞ் சேனைபின் னிற்கமுன் சேறலும்
கய்யின்வந் தேறெனக் கடிதின்வந் தேறினான்
அய்யனும்முகமலர்ந் தகமுறத் தழுவினான். (கஎ)

தழுவினின் றவனிருங் கிளையையுந் தமரையும்
வழுவில்சிந் தனையினான் வரிசையின் னளவளாய்
எழுகமுந் துறவெனாவினி துவந்தெய்தினான்
உழுவைமுந் தரியனானெவரினும் முயரினான். (கஅ)

இன்னவா றிருவரும் மினியவாறேகவத்
துன்னுமா நகரினின் றெதிர்வரத் துன்னினான்
தன்னையே யனையவன் றழலையே யனையவன்
† பொன்னின்வார் சிலையிறப் புயநிமிர்ந் தருளினான். (ககூ)

தம்பியுந் தானுமத் தானைமன் னவனகர்ப்
பம்புதிண் புரவியும் படைஞரும் புடைவரச்
செம்பொனின் பசுமணித் தேரின்வந் தெய்தினான்
‡ உம்பரும்மிம்பரும்முரகருந் தொழவுளான். (உ0)

யானையோ விரதமோ விவுளியோ பிடிகளோ
ஆனபே § ருறையிலா நிறைவையா ரறிகுவார்
தானையோர் சனகனே வலிநெடுந் தாதைமுன்
போனபேரிருவர் தம்புடைவரும் படையினே. (உக)

காவியுங் குவளையுங் கடிகொள் ¶ காயாவுமொத்
தோவியஞ் சுவைகெடப் பொலிவதோ ருருவொடே
தேவருந் தொழுகழற் சிறுவன் முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந் தரசன்மா டணுகினான். (உஉ)

அனிகம்வந் தடிதொழக் கடிதுசென் றரசர்கோன்
இனியபைங் கழல்பணிந் தெழுதலுந் தழுவினான்
மனுவெனுந் தகையன்மார் பிடைமறைந் தன ‖ மலைத்
தனிநெடுஞ் சிலையிறத் தவழ்கடங் கிரிகளே. (உங)

---

* அனைவோர்க்குந் தெய்வ மிலைமுகட்பைம்பூண்றையென்பது பற்றித் தந்தையே யனையவத்தகவினானென்றார். † பொன்னின் வார்சிலை - ஈசன் வில். ‡ உம்பர் முதலினர் தொழவுளானென்றது - இராமனை.

§ உறை என்றது - மிகப்பெரியதோரெண். ¶ கரியகோலப்பெருந்தகையாதலின் காவியுங்குவளையுங் கடியகாயாவுமென்றார். ‖ மலையென்றது - மேருவை, அது மலைகளுட் சிறந்தமை பற்றி.

இளையபைங்குரிசில்வந்தடிபணிந்தெழுதலும்
தளைவருந்தொடையன்மார்புறவுறத்தழுவினான்
களைவருந்துயரறக்ககனமெண்டிசையெலாம்
* விளைதரும்புகழினானெவரினும்மிகுதியான். (உச)

கற்றைவார்சடையினான்கைக்கொளுந்தனுவிறக்
கொற்றநீள்புயநிமிர்த்தருளுமக்குரிசில்பின்
பெற்றதாயரையுயப்பெற்றுயிர்தொழுதெழுந்
துற்றலோர்வாமனத்துவகை † யாருரைசெய்வார். (உரு)

உன்னுபேரன்புமிக்கொழுகியொத்தொண்கணீர்
பன்னுதாரைகடாத்தொழுதெழும்பரதனைப்
பொன்னின்மார்புறவணைத்துயிருறப்புல்லினான்
தன்னையத்தாதைமுன்றழுவினானென்னவே. (உசு)

கரியவன்பின்புசென்றவனருங்காதலிற்
பெரியவன்றம்பியென்றினையதோர்பெருமையப்
பொருவருங்குமரர்தம்புனைநறுங்குஞ்சியால்
இருவர்பைங்கழலும்வந்திருவரும்வருடினார். (உஎ)

கோல்வருஞ்செம்மையுங்குடைவருந்தண்மையும்
சால்வருஞ்செல்வமென்றுணர்பெருந்தாதைதன்
மேல்வருந்தன்மையான்மிகவிளங்கினர்கடாம்
‡ நால்வரும்பொருவினான்மறையெனுநடையினார். (உஅ)

சான்றெனத்தகையசெங்கோலினானுயிர்கடாம்
ஈன்றநற்றாயெனக்கருதுபேரருளினான்
ஆன்றவிச்செல்வமித்தனையுமொய்த்தருகுறத்
தோன்றலைக்கொண்டுமுற்செல்கெனச்சொல்லினான். (உகூ)

காதலோவறிகிலங்கரிகளைப்பொருவினார்
§ தீதிலாவுவகையுஞ்சிறிதரோபெரிதரோ
கோதைசூழ்குஞ்சியக்குமரர்வந்தெய்தலும்
தாதை ¶ யாதொத்ததத்தானையின்றன்மையே. (௩0)

தொழுதிரண்டருகுமன்புடையதம்பியர்தொடர்ந்
தழிவில்சிந்தையினுகந்தாடன்மாமிசைவரத்

---

* துயரறக் ககனமெண்டிசையெலாம் விளைதரும்புகழினானென்றார் சம்பரன் முதலானோரைக் குலத்தோடுங்களைந்த சிறப்புநோக்கி. † யாரென்னும் வினாவினைக்குறிப்பு ஈண்டின்மைகுறித்து நின்றது 'யா அருலகத்தோர் சொல்லில்லா' ரென்புழிப்போல ‡ நால்வருநடையான் நான்மறை பொருவலினவற்றையே உவமை கூறினார்.

§ ஏனையுவகைபோலாது உயிர்க்குறுதி பயத்தலான் தீதிலாவுவகை யென்றார். ¶ ஆதொத்தது என்றது-ஆதொத்ததெனநின்றது.

தழுவுசங்குடனெம்பணை தழங்கிடவெழுந்
தெழுதருந்தகையதோர்தேரின் மேலேகினன். (௯௧)

பஞ்சிசூழ்மெல்லடிப்பாவைமார்பண்ணை * சூழ்
மஞ்சுசூழ்நெடியமாளிகையின்வந்திடைவிராய்
நஞ்சுசூழ்விழிகள்பூமழையின்மேல்விழநடந்
திஞ்சிசூழ்மிதிலைமாவீதிசென்றெய்தினன். (௯௨)

சூடகந்துயல்வரக்கோதைசோர்தரமலர்ப்
பாடகம்பரதநூல்பகரவெங்கடகரிக்
கோடரங்கிடவெழுங்குவிதடங்கொங்கையார்
ஆடரங்கல்லவேயணியரங்கயலெலாம். (௯௩)

பேதைமார்முதல்கடைப்பேரிளம்பெண்கடாம்
ஏதியார்மாரவேளேவவந்தெய்தினார்
ஆதிவானவர்பிரானனுகலாலணிகொள்கார்
ஓதியார்வீதிவாயுற்றவாறுரைசெய்வாம். (௯௪)

கக-வது. எதிர்கோட்படல-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ககசஅ.

உ௰-வது. உலாவியற்படலம்.

உலாவியலைக்குறித்துக் கூறும்படலம்.

‡ மானினம்வருவபோன்றமயிலினந்திரிவபோன்றும்
மீனினமிளிர்வபோன்றமின்னினமிடைவபோன்றும்
தேனினஞ்சிலம்பியார்ப்பச்சிலம்பினம்புலம்பவெங்கும்
பூநனைகூந்தன்மாதர்பொம்மெனப்புகுந்துமொய்த்தார். (க)

விரிந்துவீழ்கூந்தல்பாரார்மேகலையற்றநோக்கார்
சரிந்தபூந்துகில்கடாங்காரிடைதமொறத்தாழார்
நெருங்கினார்நெருங்கிப்புக்குநீங்குனீங்குமின்னெனன்
றருங்கலமனையமாதர்தேனுகரளியின்மொய்த்தார். (௨)

---

* சூழ் என்னு முதனிலைத்தனி வினைப்பெயர் சூழ்ந்தென்னும் வினையெச்சப் பொருளது. † பேதைமார்முதல் கடைப்பேரிளம் பெண்களென்றது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை; அரிவை, தெரிவை, பேரிளம் பெண்ணென்னு மெழுவரை. ‡ கண்ணான் மானினத்தையும், சாயலான் மயிலினத்தையும். அணிகலனான் மீனினத்தையும், இடையான் மின்னினத்தையுங் கூறினர்.

கண்ணினாற் * காதலென்னும்பொருளையேகாண்கின்றோமிப்
பெண்ணினீர்மையினாலெய்தும்பயனின்றுபெறுதுமென்பார்
மண்ணினீருலர்ந்துவானமழையறவறந்தகாலத்
துண்ணுநீர்கண்டுவீழுமுழைக்குலம்பலவுமொத்தார். (௩)

பள்ளத்துப்பாயுநன்னீரனையவர்பானல்பூத்த
வெள்ளத்துப்பெரியகண்ணார்மென்சிலம்பலம்பமென்பூத்
தள்ளத்தம்மிடைகளோவத்தமைவலித்தவன்பாற்செல்லும்
உள்ளத்தைப்பிடித்துநாமென்றோடுகின்றாருமொத்தார். (௪)

அரத்தமுண்டனையமேனியகலிகைகளித்ததாளும்
விரைக்கருங்குழலிக்காகவில்லிறநிமிர்ந்துவீங்கும்
வரைத்தடந்தோளுங்காணமறுகினின்வீழுமாதர்
இரைத்துவந்தமிழ்தின்மொய்க்குமீயினமென்னலானார். (௫)

வீதிவாய்ச்செல்கின்றான்போல்விழித்திமையாதுநின்ற
மாதரார்கண்களூடேவாவுமான்றேரிற்செல்வான
யாதினுமுயர்ந்தோர்தன்னையாவர்க்குங் † கண்ணனென்றே
ஓதியபெயர்க்குத்தானேயுறுபொருளுணர்த்திவிட்டான். (௬)

எண்கடந்தகிலாதின்றேகுறுமிவன்றேரொன்று
பெண்கடந்தம்மினோர்ந்துபேதுறுகின்றகாலை
‡ மண்கடந்தமரர்வைகும்வான்கடந்தானைத்தான்றன்
கண்கடவாதுகாத்தகாரிகைபெரியளேகாண். (௭)

பயிரொன்றுகலையுஞ்சங்கும்பழிப்பருநலனும்பண்பும்
செயிரின்றியலர்ந்தபொற்புஞ்சிந்தையுமுணர்வுந்தேசும்
வயிரஞ்செய்பூணுநாணுமடனும் § தன்னிறையுமற்றும்
உயிரொன்றுமொழியவெல்லாமுகுத்தொருதெரிவைநின்றாள். (௮)

குழையுறுமிளிருங் ‖ கெண்டைகொண்டலினுலிசிந்தத்
தழையுறுக்கரும்பின்சாபத்தனங்கவேள்சரங்கள்பாய
இழையுறுப்புண்ணுறுதவிளமுலையொருத்திசோர்ந்து
மழையுறுமின்னினன்னமருங்குல்போனுடங்கிநின்றாள். (௯)

---

* காதலைப்பொருளென்றார் வைசேடிகர்பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை அறுவகைப்பொருளென்றதனா னெண்க. † யாவர் கண்ணிடைச்செல்வனென்றதுபற்றிக் கண்ணனென்றதெண்க. ‡ கடவுள் என்னும்பெயர்பற்றி மண்கடந்தமரர்வைகும் வான் கடந்தானென்றார். § உகுத்தெனக் கலைமுதலியன தன்னினீங்கினமை யுணராமை இலக்கணையாற் கூறினார். ‖ இவளையடையத் தவமுடையே னல்லேனெனத் தன்னைநோக்கிக் கவன்றமையான் கெண்டையாலி சிந்தவென்றார்.

பஞ்சணிவிரலினார்தம்படைநெடுங்கண்களெல்லாம்
செஞ்செவேலையயன்மெய்யிற்கருமையைச்சேர்ந்தவோதாம்
மஞ்சனமேனியான்றன்மணிநிறமாதரார்தம்
அஞ்சனநோக்கம்பார்க்கவிருண்டதோவறிகிலேமால் (௧௦)

மாந்தளிர்மேனியாளோர்வாணுதன்மதனனெங்கும்
பூந்துணர்வாளிமாரிபொழிகின்றபூசனோக்கி
* வேந்தர்கோனிணைநோக்கான்வீரன்வில்லாண்மைபாரான்
எந்திழையாரையெய்வான்யாவனோவொருவனென்றாள். (௧௧)

† சொன்னலங்கடந்தகாமச்சுவையையோருருவமாக்கி
இன்னலந்தெரியவல்லாரெழுதியதென்னநின்றாள்
பொன்னையும்பொருவுநீராள்புனைந்தனவெல்லாம்போகத்
தன்னையுந்தாங்கலாதாடுகிலொன்றுந்தாங்கிநின்றாள். (௧௨)

விற்றங்குபுருவநெற்றிவெயர்வரப்பசலைவிம்ம
சுற்றெங்குமெறிப்பவுள்ளஞ்சோரவோர்தோகைநின்றாள்
கொற்றஞ்செய்கொலைவேலென்னக்கூற்றெனக்கொடியகண்ணாள்
மற்றொன்றுங்காண்கிலாதாடமியனோ ‡ வள்ளலென்றாள். (௧௩)

மைக்கருநெடுந்தற்செவ்வாய்வாணுதலொருத்தியுள்ளம்
நெக்கனளுருகுகின்றநெஞ்சிடை § வஞ்சன்வந்து
புக்கனன்போகாவண்ணங்கண்ணெனும்புலங்கொள்வாயும்
சிக்கெனவடைத்தேன்றோழிசேருதுமளியென்றாள். (௧௪)

தாக்கணங்கனையமேனிதைத்தவேள்சரங்கள்பாராள்
வீக்கியகலனுந்தூசும்வேறுவேறானதோராள்
ஆக்கியபாவையன்னாளொருத்தியாண்டமலன்மேனி
¶ நோக்குறுவாரையெல்லாமெரியெழநோக்குகின்றாள். (௧௫)

களிப்பனமதர்ப்பநீண்டகதுப்பினையளப்பகள்ளம்
ஒளிப்பனவெளிப்பட்டோடப்பார்ப்பனசிவப்புள்ளூற

---

* வேந்தர்கோனிணைக் கச்சரும்வீரன் வில்லாண்மைக்கு நாணுமில்லாது எந்திழையாரையெய்வதனான் யாவனோ என்றதென்க. † உளத்து நிகழுங் காமச்சுவை பிறர்க்குப்புலப்பட இற்றென்றுவாயாற் கூறுவதரிதும், ஏனையுலகங்களினும் சிறந்ததாகலின் சொன்னலங்கடந்த காமச்சுவை என்றார் ‡ வள்ளலென்றார் யாவருங்காண வீதியாய்வந்து தவுதனோக்கி § தானடைந்து நமக்கு வேட்கையைப்பெருக்கி அது பயன்படத் தழுவுதலும் உள்ளதேவருதல் பெயர்த்தும் சேர்தலென்னுமொரு நிலை நிற்றலுமில்லாமையின் வஞ்சனென்றும். தன்போற்றோழியும் வேட்கை யுடையாளாகலானும் தான்கண்ணெனும் புலன்கொள்வாயைச் சிக்கென வடைத்தலின் அவனைப்புற—ன்கொண்டுபோகவேண்டுமாகலானுமவனையு முளப்படுத்திச் சேருதுமளியென்றுங்கூறினார். ¶ யாவருமொருங்கு நோக்கலின் திருமேனிக்குக் கண்ணெச்சில்படுமென்றதனானும், தன்னை இறைவற்குரியளாகக்கருதி ஏனையோர் நோக்கப்பெறாது அது நுமக்கின் றென்னுங் கருத்தானுமென்க.

வெளுப்பனகறுப்பவானவேற்கணொளொருத்தியுள்ளம்
குளிர்ப்பொடுகொணவந்தாள்வெதுப்பொடுகோயில்புக்காள், (கசு)

கருநகுழற்பாரம்வார்கொள் கனமுலைகலைசூழல்குல்
நெருங்கினமறைப்பவாண்டோர்நீக்கிட்டம்பெறுதுவிம்மும்;
பெருந்தடங்கண்ணிகாணும்பேரெழிலாசைதூண்ட
மருங்குலின்வெளிகளூடேவள்ளலைநோக்குகின்றாள் (கஎ)

வரிந்தவாளனங்கன்வாளிமனங்கழன்றனவுமாதர்
எரிந்தபூணினமுங்கொங்கைவெயர்த்தபோதிழிந்தசாந்தும்
சரிந்தமேகலைபுழுத்துஞ்சங்குமுந்தாழ்ந்தகூந்தல்
விரிந்தபூந்தொடையுமன்றிவெள்ளிடையரிதவ்வீதி. (கஅ)

* தோள்கண்டார்தோளேகண்டார்தொடுகழற்கமலமன்ன
தாள்கண்டார்தாளேகண்டார்தடக்கைகண்டாருமஃதே
வாள்கொண்டகண்ணார்யாரேவடிவினைமுடியக்கண்டார்
ஊழ்கொண்டசமயத்தன்னானுருவுகண்டாரையொத்தார். (கக)

வேறு.

தையல்சிற்றிடையாளொருதாழ்குழல்
உய்யமற்றவளுள்ளத்தொடுங்கினான்
வய்யமுற்றும்வயிற்றினடக்கிய
அய்யனிற்பெரியாரினியாவரே. (உ0)

அலம்புபாரக்குழலியொராயிழை
சிலம்புமேகலையும்மொலிசெய்திட
நலம்பெய்கொம்பினடந்துவந்தெய்தினாள்
† புலம்புசேடியர்கைமிசைபோயினாள். (உக)

அருப்புமென்முலையாளங்கொராயிழை
இருப்புநெஞ்சினையேனுமொரேழைக்காப்
பொருப்புவில்லைப்பொடிசெய்தபுண்ணியா
கருப்புவில்லிறத்தாட்கொண்டுகாவென்றாள். (உஉ)

மைதவழ்ந்தகருங்கணொர்வாணுதல்
‡ செய்தவன்றனிதோமிசைச்சேறல்விட்
டெய்தவந்தெதிர்நின்றமைதானிது
கய்தவங்கொல்கனவுகொலாமென்றாள். (உங)

---

* தாடகையை வென்ற தோளாண்மை நோக்கித் தோள்கண்டார் தோளே கண்டாரென்றும், அகலிகை சாபமொழித்த தாளின்பெருமை நோக்கிக் கமலமன்னதாள் கண்டார் தாளேகண்டாரென்றும், ஈசன்வில்லிறுத்த ஆற்றலோன்றத் தடக்கைகண்டாருமஃதே என்றுங் கூறினார். † புலம்புசேடியரென்றார் இவளைப்பிரியுமாறுவந்ததென்று கவன்றமையானென்க. ‡ செய்துமுடித்த தவத்தானாகலின் செய்தவனென்றார்.

மாதொருத்திமனத்தினையல்லதோர்
* தூதுபெற்றிலளின்னுயிர்சோர்கின்றாள்
போதரிக்கட்பொலங்குழைப்பூண்முலைக்
கோதையெத்தவஞ்செய்தனளோவென்றாள். (உ௪)

பழுதிலாவொருபாவையன்னாள்பதைத்
தழுதுவெய்துயிர்த்தன்புடைத்தோழியைத்
தொழுதுசேர்ந்துயர்வாளிந்தத்தோன்றலை
எழுதலாங்கொலிம்மன்மதனுமென்றாள். (உ௫)

வண்ணவாயொருவாணுதன்மானுடற்
கெண்ணுங்காலிவ் விலக்கணமெய்திட
† ஒண்ணுமோவிதுணர்த்துகின்றேனிவன்
கண்ணனேயிதுகண்டிரும்பின்னென்றாள். (உ௬)

கனகநூபுரங்கைவளையோடுக
மனநெகும்படிவாடியொர்வாணுதல்
அனகனிந்நகரெய்தியதாதியிற்
சனகர்செய்ததவப்பயனுமென்றாள். (உ௭)

நனிவருந்திநங்குடிபோயிடப
பனிவருங்கணார் ‡ பாசிழையல்குலாள்
முனிவருங்குலமன்னருமொய்ப்பறத
தனிவருங்கொல்கனவின்றலையென்றாள். (உ௮)

புனங்கொள்கார்மயில்போலியோர்பொற்கொடி
மனங்கொள்காதன்மறைத்தலியெண்ணினாள்
§ அனங்கவேளதறிந்தனனற்றந்தான்
மனங்கள்போலமுகமுமறைக்குமே. (உ௯)

இணைநெடுங்கணோரேந்திழையேந்துபூ
அணையணைந்திடியுண்டவராவெனப்
புணர்நல்கிளர்கொங்கைபுழுங்கிட
உணர்வழுங்கவுயிர்த்தனலாவியே. (௩0)

ஆம்பலொத்தமுதூறுசெவ்வாய்ச்சியர்
தாம்பதைத்துயிருட்டமொறுவார்
தேம்புசிற்றிடைச்சீதையைப்போற்சிறி
தேம்பல்பெற்றிலரெங்கணுமுய்வரே. (௩௧)

---

* இள்ளை நாரைமுதலிய தூதினின்று நீக்குதற்கு மனத்தினையல்ல தோர் தூதென்றார். † ஒன்றுமோ என்றது-ஒண்ணுமோ என மரீஇயது.
‡ பசும்பொனணியன்ற அணியைய பாசிழை என்றது - மரபு வழுவமைதி. § உருவிலியாதலான் அநங்கவேளென்றார்.

வேர்த்துமேனிதளர்ந்துயிர்விம்மலோ
டார்த்தியுற்றமடந்தையராரையும்
* தீர்த்தனித்தனைசிந்தையிற்செங்கணிற்
பார்த்திலனுட்பரிவிலனோவென்றாள். (௩௨)

வய்யம்பற்றியமங்கையரெண்ணிலார்
அய்யன்பொற்புக்களவிலையாதலால்
எய்யும்பொற்சிலைமாரனுமென்செய்வான்
† கய்யம்பற்றுடைவாளினுங்கைவைத்தான். (௩௩)

நானவார்குழனாரியரோடலால்
வேனில்வேளொடுமேனுறைவார்களோ
டானபூசலறிந்திலமம்புபோய்
வானநாடியர்மார்பினுந்தைத்தவே. (௩௪)

மருண்மயங்குமடந்தையர்மாட்டொரு
பொருணயந்திலன்போகின்றதேயிவன்
கருணையென்பதுகண்டறியான்பெரும்
பரிணதன்சொல் ‡ படுகொலையானென்றாள். (௩௫)

தொய்யில்வெய்யமுலைத்துடிபோலிடை
நய்யுங்கொய்யமருங்குலொர்நங்கைதான்
கய்யுமெய்யுமறிந்திலள்கண்டவர்
உய்யுமுய்யுமெனத்தளர்ந்தோய்வுற்றாள். (௩௬)

பூகவூசல்புரிபவர்போலொரு
பாகின்மென்மொழிதன்மலர்ப்பாதங்கள்
சேகுசேர்தரச்சேவகன்றேரின்பின்
எகுமீளுமிதென்செய்தவாறரோ. (௩௭)

பெருத்தகாதலிற்பேதுறுமாதரின்
ஒருத்திமற்றங்கொருத்தியைநோக்கியென்
கருத்துமவ்வழிகண்டதுண்டோவென்றாள்
அருத்தியுற்றபின்னாணமுண்டாகுமோ. (௩௮)

நங்கையங்கொருபொன்னயந்தாருய்யத்
தங்களின்னுயிருங்கொடுத்தார்தமர்

---

* தீர்த்தனென்றதிராமனை. † கையம்பற்றுடைவாளினுங் கைவைத்தானென்றார் கை அம்புகளொழிந் துடைவாளினுங் கைவைத்தானென்க. இனி உடைவாளினுங் கைவைத்தான் என்றது-கையம்புமலரப்பாதவின் தேன்சொரிவதனான் நழுவுகின்றமைபற்றி அங்ஙனமாகா வண்ணம் கேதகையின் பராகத்தா னழுவாவண்ணஞ் செய்தானென்றது. ‡ படுகொலையான்-சழிபெருங்கொலையாளி.

எங்களின் னுயிரெங்களுக்கிலா
வெங்கணெங்கண் விளைந்ததிவற்கென்றான். (ரு.கூ)

நாமத்தாலழி வாளொருநன்னுதல்
* சேமத்தார்வில்லிறுத்ததுநேருங்கால்
தாமத்தார்குழற்றாயொழித்தோகைபால்
காமத்தாலன்றுகல்வியினாலென்றாள் (சுய)

ஆரமுந்துகிலுங்கலனியாவையும்
சோரவின்னுயிர்சோருமொர்சோர்குழல்
† கோரவில்லிமுன்னேயெனைக்கொல்கின்ற
மாரவேளின்வலியவர்யாரென்றாள். (சுக)

மாதரின்னணமெய்திடவள்ளல்போய்க்
கோதில்சிந்தைவசிட்டனுங்கோசிக
‡ வேதபாரனுமேவியமண்டபம்
ஏதின்மன்னர்குழாத்தொடுமெய்தினான். (சுஉ)

திருவினாயகன்மின்றிரிந்தாலெனத்
○ துருவின்மாமணியாரந்துயல்வரப்
பருவமேகம்படிந்ததுபோற்படிந்
திருவர்தாளுமுறையினிறைஞ்சினான். (சுந)

இறைஞ்சவன்னவரேத்தினரேவவோர்
நிறைஞ்சபூந்தவிசேறினிழற்கள்போல்
புறஞ்செய்தம்பியருட்பொலிந்தனரோ
¶ அறஞ்செய்காவற்கயோத்தியிற்றோன்றினான். (சுச)

ஆனமாமணிமண்டபமன்னது
தானைமன்னன் றமரொடுஞ்சார்ந்தன்ன்
மீனெலாந்தனபின்வரவெண்மதி
வானிலாவுறவந்ததுமானவே. (சுரு)

வந்துமாதவர்பாதம்வணங்கிமேற்
சிந்துதேமலர்மாறிசிறந்திட
அந்தணாளர்களாசியொடாசனம்
இந்திரன்முகநாணுறவேறினான். (சுசு)

---

* சேமித்துவைத்த வில்லாதலின் சேமத்தார் வில்லென்றார்.

† பிறக்கச்சம் விளைத்தவில்லை வளைத்தவனாகலின் கோரவில்லிஎன்றார். ‡ வேதபாரகன்-வேதபாரனென இடைக்குறைந்தது. ○ தோளாமணி என்றதுபற்றித் துருவின் மாமணி என்றார். ¶ பாப்பணை துறந்தமை அறத்தை நிறுத்தற்பொருட்டாகலின் அறஞ்செய்காவற்றயோத்தியிற்றோன்றினானென்றார்.

கங்கர்கொங்கர்கலிங்கர்குலிங்கர்கள்
சிங்காளதிபர்சேரலர்தென்னவர்
அங்கராசர்குலிங்கரவந்திகர்
வங்கர்மாளவர்சோளர்மராடரே. (சஎ)

மானமாகதர்மச்சர்மிலேச்சர்கள்
ஏனைவீரவிலாடர்விராடர்கள்
சீனர்தெங்கணர்செஞ்சகர்சோமகர்
சோனசேகர்துருக்கர்குருக்களே. (சஅ)

எதியாதவரேழ்திறற்கொங்கணர்
சேதிராசர்தெலுங்கர்கருநடர்
ஆதிவானங்கவித்தவவனிவாழ்
சோதிநீண்முடிமன்னருந்துன்னினார். (சகூ)

தீங்கரும்பினுந்தித்திக்குமின்சொலார்
தாங்குசாமரைமாடுதயங்குவ
ஓங்கியோங்கிவளர்ந்துயர் * கீர்த்தியின்
பூங்கொழுந்துபொலிவனபோன்றவே. (ருo)

சுழலும்வண்டுமிஞிறுஞ்சுரும்புஞ்சூழ்ந்
துழலும்வாசமதுமலரோதியர்
குழலினோடுறக்கூறுபல்லாண்டொலி
மழலையாழிசையோடுமெலிந்தவே. (ருக)

வெங்கணானையினான்றனிவெண்குடை
திங்கடங்கள்குலக்கொடிசீதையாம்
மங்கைமாமணங்காணியவந்தருள்
பொங்கியோங்கித்தழைப்பதுபோன்றதே. (ருஉ)

கூடுபேர்விடமின்றியொன்றும்வகை
நீடுமாகடற்றானைநெருங்கலால்
ஆடன்மாமதயானைச்சனகர்கோன்
நாடெலாமொருநன்னகராயதே. (ருங)

ஒழிந்தவென்னினியொண்ணுதற்றாதைதன்
பொழிந்தகாதறொடரப்பொருளெலாம்
அழிந்துவந்துகொண்டாடவினன்புதான்
இழிந்துளார்க்குமிராமற்குமொத்ததே. (ருச)

உ௦-வது உலாவியற்படல-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஉ௦ரு

---

* கீர்த்தியை வெண்மையாகக்கூறலின் சாமரைமாடு தயங்குவது கீர்த்தியின் பூங்கொழுந்தென்றுவமித்தார்.

௨௧-வது கோலங்காண்படலம்

கோலங்காண்டலைக் குறித்துக்கூறும் படலம்.

தேவியர்மருங்குசூழ * விந்திரனிருக்கைசேர்ந்த
ஓவியமுயிர்பெற்றென்னவுவந்தரசிருந்தகாலை
தாவில்வெண்கவிகைச்செங்கோற்சனகனையினிதுநோக்கி
† மாவியனோக்கினளைக்கொணர்கெனவசிட்டன்சொன்னான். (௧)

உரைசெயத்தொழுதகையனுவந்தவுள்ளத்தன்பெண்ணுக்
கரைசியைத்தருதிரீண்டென்றாயிழையவரையேவக்
கரைசெயற்கரியகாதல்கடாவிடக்கடிதுசென்றார்
பிரைசமொத்தினியசொல்லார்பேதைதாதியரிற்சொன்னார். (௨)

அமிழிமைத்துணைகள்கண்ணுக்கணியெனவமைக்குமாபோல்
உமிழ்சுடர்க்கலன்கணங்கையுருவினைமறைப்பதோரார்
அமிழ்தினைச்சுவைசெய்தென்னவழகினுக்கழகுசெய்தார்
இமிழ்திரைப்பரவைஞாலமேழைமையுடைத்துமாதோ. (௩)

கண்ணன்றன்னிறந்தன்னுள்ளக்கருத்தினைநிறைத்துமீதிட்
டெண்ணின்றுங்கொடிகளோடியுலகெங்கும்பரந்ததன்ன
வண்ணஞ்செய்கூந்தற்பாரவலயத்துமழையிற்றோன்றும்
விண்ணன்றமதியின்மென்பூஞ்சிகழிகைக் ‡ கோதைவேய்ந்தார். ( )

விதியதுவகையால்வானமீனினம்பிறையைவந்து
கதுவுறுகின்றதென்னக்கொழுந்தொளிகளுலத்தூக்கி
மதியினைத்தந்தமேகமருங்குநாவளைப்பதென்னப்
பொதியிருளளகபந்திபூட்டியபூட்டுமிட்டார். (௫)

வெள்ளத்தின்சடிலத்தான்றன்வெஞ்சிலையிறுத்தவீரன்
தள்ளத்தன்னாவிசோரத்தனிப்பெரும் § பெண்மைதன்னை
அள்ளிக்கொண்டகன்றகாளையல்லன்கொலாங்கலென்பாள்
உள்ளத்தினூசலாடுங்குழைநிழலுமிழவிட்டார். (௬)

○ கோனணிசங்கம்வந்துகுடியிருந்தனையகண்டத்
தீனமில்கலன்கடம்மினியைவனவணிதல்செய்தார்

---

* இந்திரனிருக்கை-அரசனதிருக்கை இவ்வாறே வடநூலாரும் இந்திரஸ்தானமென்பர். † மாவியனோக்கினளென்றது-சனகியை. ‡ சிகழிக்கோதை வேய்தலென்றது-மயிர்முடியிற் பூமாலை முடித்தலை. § பெண்மை என்றது-கட்கினிமையாமமைதித்தன்மை. ○ கோவென்றது அயர்வருமமரர்கட்கிறையை, இதனைத் 'தேவிற்றிருமா' லென்பதனானறிக. சங்கமென்றது பாஞ்சசன்னியத்தை.

மானணிநோக்கினார்தம்மங்கலக்கழுத்துக்கெல்லாம்
* தானணியானபோதுதனக்கணியாதுமாதோ. (எ)

கோணிலாவானமீன்களியைவனகோத்ததென்கோ
வாணிலாவயங்குசெவ்விவளர்பிறைவகிர்ந்ததென்கொ
நாணிலாநகையினின்றநளிர்நிலாத்தவழ்ந்ததென்கோ
பூணிலாமுலைமேலாரமுத்தையான்புகல்வதென்னோ. (அ)

மொய்கொள்சீறடியைச்சேர்ந்தமுளரிக்குஞ்செம்மைமீந்த
தய்யலாளமிழ்தமேனிதீயங்கொளிதழுவிக்கொள்ள
வெய்யபூண்முலையிற்சேர்ந்தவெண்முத்தஞ்சிவந்தவென்றால்
செய்யரைச்சேர்ந்துளாருஞ்செய்யராய்த்திகழ்வரன்றே. (கூ)

† கொமையுறவீங்குகின்றகுலிகச்செப்பனையகொங்கைச்
சுமையுறநுடங்குகின்றநுசுப்பினாள்பூண்செயதோளுக்
கிமையுறவிமைக்குஞ்செங்கேழினமணிமுத்தினோடும்
அமையுறவமைதுண்டாமாகினெப்பாகுமன்றே. (க0)

தளையவிழ்கோதையோதிச்சானகிதளிர்க்கையென்னும்
முளரிகளிராமன்செங்கைமுறைமையிற்றீண்டநோற்ற
அளியனகங்குற்போதுங்குவியலவாகுமென்றாங்
கிளவெயில்சுற்றியன்னவெரிமணிக்கடகமிட்டார். (கக)

சில்லியலோதிகொங்கைத்திரள்மணிக்கனகசெப்பில்
வல்லியுமனங்கன்வில்லுமான்மதச்சாந்திற்றீட்டிப்
பல்லியனெறியிற்பார்க்கும் ‡ பரம்பொருளென்னயார்க்கும்
இல்லையுண்டென்னநின்றவிடையினுக்கிடுக்கண்செய்தார். (கஉ)

நிறஞ்செய்கோசிகநுண்டுகினீவிநீவிர்தவல்குற்
புறஞ்செய்மேகலையுந்தாழத்தாரகைச்சும்மைபூட்டித்
திறஞ்செய்காசின்றசோதிபேதைசேயொளியிற்றீர்ந்த
கறங்குபுதிரியயாருங்கண்விளக்குற்றுநின்றா . (கங)

அய்யவாமணிச்சப்போதினைதிகழுநொய்யவாடற்
பய்யரவல்குலாடன்பஞ்சின்றிப்பழுத்தபாதம்
செய்யபூங்கமலனன்னச்சேர்த்தியசிலம்புசால
நொய்யவேநொய்யதன்றோபலபடநுவல்வதம்மா. (கச)

நஞ்சிடையமிழ்தங்கூட்டிநாட்டங்களானவென்னச்
செஞ்சவேநீண்டுமீண்டுசேயரிசிதறித்தீய

---

* தானென்றது திருமாமகளை. † கொம்மை என்றது-கொமை எனக் குறைந்து நின்றது. ‡ பரம்பொருணிலை இல்லையுண்டென நின்றது போன்றிடையுமன்னதாகலினதனையே யுவமித்தார்.

வஞ்சமுங்களவுமின்றிமழையெனமதர்த்தகண்கள்
அஞ்சனநிறமோவண்ணல்வண்ணமோவறிதறேற்றும். (க௫)

மொய்வளர்குவளைபூத்தமுளரிபின்முளைத்த * முந்நாள்
மெய்வளர்மதியினுப்பண்மீனுண்டேலனையதேய்ப்ப
வய்யகமடந்தைமார்க்குநாகர்கோதையர்க்கும்வானத்
தெய்வமங்கையர்க்குமெல்லாந்திலகத்தைத்திலகஞ்செய்தார். (கசு)

சின்னப்பூச்செருருமென்பூச்சேகரப்போதுகோதில்
கன்னப்பூக்கஞலமீதுகற்பகக்கொழுந்துமான
மின்னப்பூஞ் † சுரும்புவண்டுமிஞிறுந்தும்பிகளும்பம்பும்
புன்னைப்பூந்தாதுதானும்பொற்பொடியப்பிவிட்டார். (கஎ)

நெய்வளர்விளக்கமாட்டிநீரொடுபூவுந்தூவித்
தெய்வமும்பராவிவேதபாரகர்க்கீந்துசெம்பொன்
அய்யவிநுதலிற்சேர்த்தியாய்நிறவயினிசுற்றிக்
கய்வளர்மயிலனையைவலஞ்செய்து ‡ காப்புமிட்டார். (கஅ)

கஞ்சத்துக்களிக்குமின்றேன்கவர்ந்துணும்வண்டுபோல
அஞ்சொற்கள்கிள்ளைக்கெல்லாமருளினுளமுகைமாந்தித்
தஞ்சொற்கள்குழறித்தத்தந்தகைதடுமாறிநின்றார்
¶ மஞ்சர்க்குமாதரார்க்குமணமென்பதொன்றேயன்றே. (க௯)

இழைகுலாமுலையினாளையிடையுவாமதிபினோக்கி
மழைகுலாவோதிநல்லார்களிமயக்குற்றுநின்றார்
உழைகுலாநயனத்தார்மாட்டொன்றோன்றேவிரும்பற்கொத்த
தழகெலாமொருங்கேகண்டால்யாவரேயாற்றவல்லார். (உ0)

○ சங்கங்கையுடைமையாலுந்தாமரைக்கோயிலாலும்
எங்கெங்கும்பரந்துவெவ்வேறுள்ளத்தினெழுதிற்றென்ன
அங்கங்கேதோன்றலாலுமருந்ததியனையகற்பின்
நங்கையுநம்பியொத்தாணுமினிப்புகல்வதென்னே. (உக)

பாந்தமேகலையுங்கோத்தபாதசாலகமுநாகச்
சிரஞ்செய்நூபுரமும்வண்கிஞ்சிலம்பொடுசிலம்பியார்ப்பப்
புரந்தரன்கோற்கீழாரம்பையர்புடைசூழ்ந்தென்ன
வரம்பறுசும்மைத்திஞ்சொன்மடந்தையர்தொடர்ந்துசூழ்ந்தார். (உஉ)

* முந்நாள் என்டு-மூன்றாம்பிறையை. † கரும்பு முதலியன நால்வகைவண்டென்க. ‡ காப்பு. சூர்முதலிய தாக்காமைபொருட்டு இடுவதோர்பொருட்டு. ¶ மஞ்சரென்றதாடவரை. ○ சங்கு அங்கையுடைமை சங்கமேந்தியிருத்தல். வளையலணிந்திருத்தல்.

சிந்தொடுகுறளுங்கூனுஞ்சிலதியர்குழாமுந்தெற்றி
வந்தடிவணங்கிச்சுற்றமணியணிவிதானநீழல்
இந்துவின்கொழுந்துவிண்மீனினத்தொடும்வருவதென்ன
நந்தலில்விளக்கமன்னநங்கையுநடக்கலுற்றாள். (உ௩)

வேறு

வல்லியையுயிர்த்தநிலமங்கையிவள்பாதம்
மெல்லியவுறைக்குமெனவஞ்சிவெளியெங்கும்
பல்லவமலர்த்தொகைபரப்பினளெனத்தன்
நல்லணிமணிச்சுடர்தவழ்ந்திடநடந்தாள். (உ௪)

தொழுந்தகையமென்னடைதொலைந்துகளியன்னம்
எழுந்திடைவிழுந்தயர்வதென்னவயலெங்கும்
கொழுந்துடையசாமரைகுலாவவொர்கலாபம்
வழங்கநிழன்மின்னவருமஞ்ஞையெனவந்தாள். (உ௫)

மண்முதலனைத்துலகின்மங்கையருளெல்லாம்
கண்மணியெனத்தகையகன்னியெழில்காண
அண்ணன்மரபிற்சுடரருத்தியொடுதானவ்
விண்ணிழிவதொப்பதொர்விதானநிழல்வந்தாள். (உ௬)

கற்றைவிரிபொற்கடைமயிர்த்துறுகலாபம்
சுற்றுமணிபுக்கவிழைமிக்கிடைவதுவன்றி
விற்றவழவாணிமிரமெய்யணிகண்மின்னச்
சிற்றிடைநுடங்கவொளிர்சீறடிபெயர்த்தாள். (உ௭)

பொன்னினொளிபூவின்வெறிசாந்துபொதிசீதம்
மின்னினிழலன்னவடன்மேனியொளியான
அன்னமு * மரம்பையருமாரமிழ்துநாண
மன்னவையிருந்தமணிமண்டபமடைந்தாள். (உ௮)

சமைத்தவரையின்மைமறைதானுமெனலாமச்
சுமைத்திரண்முலைத்தெரிவைதூய்வடிவுகண்டார்
அமைத்திரள்கொடோளியருமாடவருமெல்லாம்
இமைத்திலருயிர்த்திலர்கள்சித்திரமெனத்தாம். (உ௯)

அன்னவளையல்லளெனவாமெனவயிர்ப்பான்
கன்னியமிழ்தத்தையெதிர்கண்டகடல்வண்ணன்
உன்னுயிர்நிலைப்பதொருத்தியொடுழைந்தாண்
டின்னமிழ்தெழக்களிகொளிந்திரனையொத்தான். (௩0)

* நடையினன்னமும், அழகினரம்பையரும், சொல்லினமிழ்துமொப்பாகாமையினாணவென்றார்

நறத்துறைறமுதிர்ச்சியுறுநல்லமிழ்பில்குற்
றறத்தின்விளைவொத்துமுகடுந்தியருகுய்க்கும்
நிறத்துவரிதழ்க்குயினினைப்பினிடையல்லாற்
புறத்துமுளதோவெனமனத்தொடுபுகன்றான். (௫௧)

எங்கள்செய்தவத்தினிலிராமனெனவந்தோன்
சங்கினொடுசக்கரமுடைத்தனிமுதற்பேர்
அங்கணரசாதலினவ்வல்லிமலர்புல்லும்
மங்கையிவளாமெனவசிட்டன்மகிழ்வுற்றான். (௫௨)

துன்றுபுரிகோதையெழில்கண்டுலகுசூழ்வந்
தொன்றுபிரிகோலொடுதனித்திகிரியுய்ப்பான்
என்றுமுலகேழுமரசெய்தியுளனேனும்
இன்றுதிருவெய்தியதிதென்னவயமென்றான். (௫௩)

நய்வளநவிற்றுமொழிநண்ணவரலோடும்
* வய்யநுகர்கொற்றவனுமாதவருமல்லார்
கய்கடலைபுக்கனகருத்துளதுமெல்லாம்
தெய்வமெனவுற்றவுடல்சிந்தைவயமன்றே. (௫௪)

மாதவரைமுற்கொளவணங்கிநெடுமன்னன்
பாதமலரைத்தொழுதுகண்கள்பனிசோரும்
தாதையருகிட்டதவிசிற்றனியிருந்தாள்
போதினைவெறுத்தரசர்பொன்மனைபுகுந்தாள். (௫௫)

அச்செனநினைத்தமுதலந்தணனிருந்தான்
பச்சைமலையொத்தபடிவத்தடலிராமன்
நச்சுடைவடிக்கண்மலர்நங்கையிவளென்றால்
இச்சிலைகிடக்கமலையேழையுமிறுமே. (௫௬)

எய்யவில்வளைத்துமிறுத்ததுமுரைத்தும்
மெய்விளைவிடத்துமுதலையாம்விடலுற்றாள்
அய்யனையகத்துவடிவேயலபுறத்தும்
கய்வளைதிருத்துபுகடைக்கணினுணர்ந்தாள். (௫௭)

கருங்கடைநெடுங்கணொளியாறுநிறைகண்ணைப்
பெருங்கடலின்மண்டவுயிர்பெற்றினிதுயிர்க்கும்
அருங்கலனணங்கரசியாரமிழ்தனைத்தும்
ஒருங்குடனருந்தினரையொத்துடறடித்தாள். (௫௮)

கணங்குழைகருத்திலுறைகள்வனெனலானான்
வணங்குவிலிறுத்தவனெனத்துயர்மறந்தாள்

* வையநுகர்கொற்றவனென்ற திராமனை.

அணங்குறு * மவிஞ்சைகெடவிஞ்சையினகம்பா
டுணர்ந்தறி. முற்றபயனுற்றவரையொத்தான். (ருகூ)

கொல்லுயர்களிற்றரசர்கோமகனிருந்தான்
கல்விகரையுற்றமுனிகவுசிகனைமேலோய்
வல்லிபொருசிற்றிடைமடந்தைமணநாளாம்
எல்லையினலத்தபகலென்றுரைசெய்கென்றான். (சு0)

வாளையுகளக்கயல்கள்வாவுமதின்மேதி
மூளைமுதுகைக்கிழியமூரியவரான்மீன்
பாளைவிரியக்குதிகொள்பண்ணைவளநாடா
நாளையெனவுற்றபகனற்றவனுரைத்தான். (சுக)

சொற்றபொழுதத்தரசர்கைதொழுதெழுத்தன்
ஒற்றைவயிரச்சுரிகொள்சங்கினொலிபொங்கப்
பொற்றடமுடிப்புதுவெயிற்பொழிதரப்போய்
நற்றபனுச்சிதொடுநன்மனைபுகுந்தான். (சுஉ)

அன்னமரிதிற்பிரியவண்ணலுமகன்றப்
பொன்னினெடுமாடவரைபுக்கனன்மணிப்பூண்
மன்னவர்பிரிந்தனர்கண்மாதவர்கள்போனார்
† மின்னுசுடர்நாயகனுமேருவின்மறைந்தான். (சுங)

உக-வது கோலங்காண்படல-முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம் கஉசுரு.

உஉ-வது: கடிமணப்படலம்.

விவாகத்தைதைக் குறித்துக்கூறும்படலம்.

இடம்படுபுகழ்ச்சனகர்கோனினிதுபேணக்
கடம்படுகளிற்றரசராதியிடைகண்டோர்
தடம்படுபுயத்தசிறுதம்பியர்கள்காறும்
உடம்பொடுதுறக்கநகருற்றவரையொத்தார். (க)

தேடருநலத்தபுனலாசைதெறலுற்றார்
மாடொர்தடமுற்றதனையெய்தும்வகைகாணார்
ஈடழிவுறத்தளர்வொடேமுறுவரன்றே
ஆடகவளைக்குயிலுமந்நிலையளானாள். (உ)

* அவிஞ்சையென்றதவித்தையை, அது பிரவித்துயர்க்கேதுவாக லின் அணங்குறுமென விசேடித்தார் † மின்னுசுடர் நாயகன் ஞாயிறு.

வேறு.

உரவேதுயிலாயிரீதும்மெனக்
கரவேபுரிவாருளரோசதிரோன்
வரவேயெனையாளுடையான்வருமே
இரவேகொடியாய்விடியாயெனுமால். (௩)

கருநாயிறுபோல்பவர்காலொடுபோய்
வருநாளயலேவருவாய்மனனே
பெருநாளுடனேபிரியாதுழல்வாய்
ஒருநாடரியாதொழிவாருளரோ. (௪)

கனையேழ்கடல்போல் *கருநாழிகைதான்
வினையேன்வினையால்விடியாவிடினீ
தனியேபறவாய்தகவேதுமிலாய்
பனைமேலுறைவாய்பழிபூணுதியோ. (௫)

அயில்வேலனல்கால்வனவாய்நிழலாய்
வெயிலேயெனநீவிரிவாய்நிலவே
செயிரேதுமிலாருடறேய்வுறவார்
உயிர்கோளுறுவாருளரோவுரையாய். (௬)

மன்றற்குளிர்வாசம்வயங்கனல்வாய்
மின்றொத்துநிலாநகைவீழ்மலயக்
குன்றிற்குலமாமுழையிற்குடிவாழ்
தென்றற்புலியேயிரைதேடுதியோ. (௭)

தெருவேதிரிவாரொருசேவகனார்
இருபோதும்விடாரிதுவென்னைகொலாம்
கருமாமுகில்போல்பவர்கன்னியர்பால்
வருவாருளரோகுலமன்னவரே. (௮)

தெருளாவினைதீயவர்சேரலர்தோள்
அருளாநெறியோடுமேவாவதுவோ
கருளார்கடலோகரைகாணரிதால்
இருளானதுதானெனையூழிகொலாம். (௯)

பண்ணேமொழியாபகலோபுகுதா
தெண்ணேதவிராவிரவோவிடியா
துண்ணேமொழியாவுயிரோவகலா
கண்ணேதுயிலாவிதுவோகடனே. (௧௦)

* கருநாழிகை-இரவு.

இடையேவளைசோரவெழுந்துவிழுந்
தடலேய்மதனன்சரமஞ்சினையோ
உடலோய்வுறநாளுமுறங்கலையால்
கடலேயுரைநீயுமொர்கன்னிகொலாம். (௧௧)

எனவின்னனபன்னியிருந்துளைவாள்
துனியுன்னிநலங்கொடுசோர்வுறுகால்
மனைதன்னின்வயங்குறமங்கைகிருள்வாய்
அனகன்னினைகின்றனையாமமறைவாம். (௧௨)

* முன்கண்டுமுடிப்பருவேட்கையினால்
என்கண்டுணைகொண்டிதயத்தெழுதிப்
பின்கண்குமொர்பெண்களைகண்டிலெனால்
மின்கண்டவரெங்கறிவார்வினையே. (௧௩)

திருவேயனையாண்முகமேதெரியின்
கருவேகனியேவிளைகாமவிதைக்
கெருவேமதியேயிதுவென்செய்தவா
ஒருவேனொடுநீயுறவாகலையோ. (௧௪)

கழியாவுயிருந்தியகாரிகைதன்
விழிபோலவளர்ந்துவீகிலதால்
அழிபோரிறைவன்படவஞ்சியவன்
பழிபோலவளர்ந்ததுபாயிருளே. (௧௫)

கினையாவொருகானெடிதோநெறிதான்
வினவாதவர்பால்விடைகொண்டிலையோ
புனமானனையாரொடுபோயினவென்
மனனேயெனைநீயுமறந்தனையோ. (௧௬)

தன்னேக்கெரிகாறகைவாளரவின்
பன்னேக்கினதென்பகூபண்டுகொலாம்
என்னேக்கினுநெஞ்சினுமென்றுமுளார்
மென்னேக்கினதேகடுவல்விடமே. (௧௭)

கல்லார்மலர்சூழ்கழிவார்பொழிலோ
டெல்லாமுளவாயினுமென்மனமோ

---

* முன்கண்டென்றது - கன்னிமாடத்துக்காண்டமலை, என்கண் டுணை கொண்டென்றது என்கண்ணாகிய ஓவியக்கோல் கொண் டென்றதை. இதயத்தெழுதி என்றது உள்ளமாகிய எட்டிலெழுதி என்ற தை. வினை என்றது-காண்டற்றொழிலை, பின்கண்டென்ற தாசவையிற் கண்டதை. மின்கண்டவரெங்கறிவார் வினையென்றார். மின்னலைக்கண் டார் வேறுபொருளைக் காணுதவாறுபோற்சனகியைக்கண்டதான்வேறொ ருபொருளைக் கண்டிலரென்பதனுமென்க.

சொல்லாரமுதின்சுவையோடினிதாம்
எல்லோதியர்தாம்விளையாடிடமே. (௧௮)

வேறு

* வானவர்பெருமானும்மனநினைவினனுகத்
தேனகுகுழலாடன்றிருமணவினைநாளை
பூநகுமணிவாசம்புனைநகரனைவீரொன்
ருனையின்மிசையாணைரணமுரசறைகென்ருன். (௧௯)

முரசறைதலுமானமுதியருமிளையோரும்
விரைசெறிகுழலாரும்விரவினர்விரைகின்ருர்
உரைசெறிகிளையோடுமுவகையினுயாகின்ருர்
கரைசெறிவரிதாகுமிரவொருகரைகண்டார். (௨௦)

அஞ்சனவொளியானுமலர்மிசையுறைவாளும்
எஞ்சலின்மணநாளைப்புணர்குவரெனமேலோடும்
செஞ்சுடரிருள்கீறித்தினகரனொருதேர்மேல்
மஞ்சனையணிகோலங்காணியவெனவந்தான். (௨௧)

தோரணநடுவாருந்தூணுறைபொதிவாரும்
பூரணகுடமெங்கும்புனைதுகில்புனைவாரும்
காரணிநெடுமாடங்கதிர்மணியணிவாரும்
ஆரணமறைவாணர்க்கமுதினிதடுவாரும். (௨௨)

அன்னமென்னடையாரும்மழவிடையனையாரும்
கன்னிநன்னகர்வாழைகமுகொடுநடுவாரும்
பன்னருநிரைமுத்தம்பரியனதெரிவாரும்
பொன்னணியணிவாரும்மணியணிபுனைவாரும். (௨௩)

சந்தனமகிலுறுஞ்சாந்தொடுதெருவெங்குஞ்
சிந்தினர்திரிவாருஞ்செழுமலர்சொரிவாரும்
இந்திரதனுநாணுமெரிமணிநிரைமாடத்
தந்தமில்விலையாரக்கோவைகளணிவாரும். (௨௪)

தளங்கிளர்மணிகாலத்தவழ்சுடரிமிழ்தீபம்
இளங்குளிர்முளையார்நற்பாலிகையினமெங்கும்
விளிம்புபொன்விரைநாறவெயிலொடுநிலவீனும்
பளிங்குடையுயர்திண்ணைப்பத்தியின்வைப்பாரும் (௨௫)

* மந்தரமணிமாடமுன்றிலின்வயினெங்கும்
அந்தமிலொளிர்முத்தினகனிரையொளிவீச

* வானவர் பெருமானென்ற தயர்வருமமரர்கட்கிறைவை.

இந்திரனெடுவானம்மீனலர்குவதென்னப்
பந்தரினிழல்வீசப்படர்வெயில்கடிவாரும். (உசு)

வயிரமினொளியினும்மரகதமணிவேதிச்
செயிரறுமொழிதீபஞ்சிலதியர்கொணர்வாரும்
வெயில்விரவியபொன்னின்மிடைகொடிமதிதோயும்
எயிலினினடுவாருமகிலெரியிடுவாரும். (உஎ)

பண்டியினிறைவாசப்பனிமலர்கொணர்வாரும்
தண்டலையிலையோடுகனிபலதருவாரும்
குண்டலம்வெயில்வீசகுரவைகள்புரிவாரும்
உண்டைகொண்மதவேழத்தோடைகளணிவாரும் (உஅ)

கலவைகள்புனைவாருங்கலைநலதெரிவாரும்
மலர்குழன்மலைவாரும்மதிமுகமணியாடித்
திலகமுனிடுவாருஞ்சிகழிகையணிவாரும்
இலவிதழ்பொலிகோலமெழில்பெறவிடுவாரும் (உகூ)

தப்பினமணிகாசுஞ்சங்கமுமபிலன்னார்
ஒப்பனைபுரிபோதுமூடலினுகுபோதும்
துப்புறழிளவாகச்சுண்ணமுமுதிர்தாதும்
குப்பைகளெனவாரிக்கொண்டனர்களைவாரும். (௩0)

மன்னவர்வருவாரும்மறையவர்நிறைவாரும்
இன்னிசைமணியாழினிசைமந்துநுகர்வாரும்
சென்னியர்திரிவாருஞ்சிலதியர்செறிவாரும்
கன்னலின்மணவேலைக்கடிகைகடெரிவாரும். (௩க)

கணிகையர்தொகுவாருங்கலைபலபயில்வாரும்
பணியணியினமுத்தம்பலவிதநிலமன்னர்
அணிநெடுமுடியொன்றொன்றறைதலினுகுமம்பொன்
மணிமலைதொகுமன்னன்வாயிலின்மிடைவாரும். (௩உ)

கேடகம்வெயில்வீசக்கிளரயினிலவினக்
கோடியர்நெடுவிஞ்சைக்குஞ்சரமதுபோல
ஆடவர்திரிவாருமரிவையராகளிகூரு
நாடகவில்வாருநகையுயிர்கவர்வாரும். (௩௩)

கதிர்மணியொளிகாலக்கவர்பொருடெரியாவா
றெதிற்சுடர்தரமின்னுற்றெழுதலினிமையோரும்
மதுவிரிகுழலாரும்மதிலுடைநெடுவானம்
அதுவிதுவெனவோராதலமாலுறுவாரும். (௩௪)

தேர்மிசைவருவாருஞ்சிவிகையில்வருவாரும்
ஊர்தியில்வருவாருமொளிமணிநிரையோடைக்
கார்மிசைவருவாருங்கரிணியில்வருவாரும்
பார்மிசைவருவாரும்பண்டியில்வருவாரும். (௩௫)

முத்தணியணிவாரும்மணியணிமுனிவாரும்
பத்தியின்மிளிர்செம்பொற்பலகலன்மகிழ்வாருந்
தொத்துறுதொழின்மாலைசுரிகுழலணிவாருஞ்
சித்திரநிரைதோயுஞ்சந்துகில்புனைவாரும். (௩௬)

விடநிகர்விழியாருமமுதெனுமொழியாருங்
கிடைபுரையிதழாருங்கிளர்நகைவெளியாருந்
தடமுலைபெரியாருந்தனியிடைசிறியாரும்
பெடையனநடையாரும்பிடியெனவருவாரும். (௩௭)

உண்ணிறைநிமிர்செல்வமொருதுறைசெலவென்றுங்
கண்ணுறலரிதென்றுங்கருதுதலரிதாமா
லெண்ணுறுசுடர்வானத்திந்திரன்முடிசூடும்
மண்ணுறுதிருநாளேயொத்ததமணநாளே. (௩௮)

வேறு.

கரைதெரிவரியதுகனகம்வேய்ந்தது
வரையெனவுயர்ந்ததுமணியிற்செய்தது
நிரைவளைமணவினைநிரப்புமண்டபம்
அரைசர்தமரசனுமணுகன்மேயினான். (௩௯)

வெண்குடையிளநிலாவிரிக்கமின்னெனக்
கண்குடையினமணிமெயிலுங்கான்றிடப்
பண்குடைவண்டினம்பாடவாடன்மா
மண்குடைதுளிவின்மறைப்பவேகினான். (௪0)

மங்கலமுரசினமழையினார்த்தன
சங்குகண்முரன்றனதாரைபோரெனப்
பொங்கினமறையவர்புகலுநான்மறை
கங்குலினொலிக்குமாகடலும்போன்றவே. (௪௧

பரந்ததேர்களிறுபாய்புரவிபண்ணையில்
தரந்தரநடந்தனதானைவேந்தனை
நிரந்தரந்தொழுதெழுநேமிமன்னவர்
புரந்தரன்புடைவருமமரர்போன்றனர் (௪௨)

அனையவன்மண்டபமணுகியம்பொனின்
புனைமணியாதனம்பொலியத்தோன்றினான்

முனிவருமன்னருமுறையினேறினார்
சனகனுந்தன்கிளைதழுவவேறினான். (௫௩)

மன்னருமுனிவரும்வானுளோர்களும்
அன்னமென்னடையணங்கனையமாதரும்
துன்னினர்துவன்றினர்சுடர்கள்சூழ்வரும்
பொன்மலையொத்ததப்பொருவில்கூடமே. (௫௪)

புயலுளமின்னுளபொருவின்மீனுள
இயன்மணியினமுளசுடரிரண்டுள
மயன்முதற்றிருத்தியமணிசெய்மண்டபம்
அயன்முதற்றிருத்தியவண்டமொத்ததே. (௫௫)

எண்டவமுனிவருமிறைவர்யாவரும்
அண்டரும்பிறரும்புக்கடங்கிறாதலால்
மண்டபம்வையமும்வானும்வாய்மடுத்
துண்டவன்மணியணியுதரமொத்ததே. (௫௬)

தராதலமுதலுலகனைத்துந்தள்ளுற
விராவினகுவிந்தனவிளம்பவேண்டுமோ
அராவணைதுறந்துபோந்தயோத்தியெய்திய
இராகவன்செய்கையையியம்புவாமரோ. (௫௭)

சங்கினந்தவழ்கடலேழிற்றந்தன
பங்கலிலருமறைதெரிந்ததீர்த்தங்கள்
கங்கையேமுதலியகலந்தநீரினால்
மங்கலமஞ்சனமரபினாடியே. (௫௮)

என்றுநான்முகன்முதல்யாரும்யாவையும்
நின்றபேரிருளினைநீக்கிநீணெறி
சென்றுமீளாக்குறிசேரச்சேர்த்திடு
* தன்றிருநாமத்தைத்தானுஞ்சாத்தியே. (௫௯)

கோதறுதவத்துத் † தங்குலத்துளோர்தொழும்
ஆதியஞ்சோதியையடிவணங்கினான்
காதியல்கயல்விழிக்கன்னிமார்களை
வேதியர்க்கருமறைவிதியினல்கிய (௬௦)

---

* தன்றிருநாமத்தைத் தானுஞ்சாத்தியென்றது - தன்றிருநாமத்தைத் தானுங்கூறிப் புண்டரமிட்டென்பதை.

† தங்குலத்துளோர்தொழும் ஆதியஞ்சோதி என்றது - ஆயிரமோலியரும்பரஞ்சுடரை.

அழியாவருந்தவத்தினோடறத்தையாக்குவான்
ஒழிவருங்கருணையோருருவுகொண்டென
எழுதருவடிவுகொண்டிருண்டமேகத்தைத்
தழுவியநிலவெனக்கலவைசாத்தியே. (௫௧)

மங்கலமுழுநிலாமலர்ந்ததிங்களைப்
பொங்கிருங்கருங்கடல்பூத்ததாமெனச்
செங்கிடைச்சிகழிகைச்செம்பொன்மாலையும்
தொங்கலுந்துயல்வரச்சுழியஞ்சூடியே. (௫௨)

ஏதமிலிருகுழையிரவுகன்பகல்
காதல்கண்டுணர்ந்தனகதிருந்திங்களும்
சீதைதன்கருத்தினைச்செவியினுள்ளுறத்
தூதுசென்றுரைப்பனபோன்றுதோன்றவே. (௫௩)

கார்விடக்கறையுடைக்கணிச்சிவானவன்
வார்சடைப்புடையினோர்மதியிலைற்சித்தான்
ஆர்சுடர்க்குலமெலாஞ்சூடினனென
வீரபட்டத்தொடுதிலகமின்னவே. (௫௪)

சக்கரத்தயல்வருஞ்சங்கமாமென
மிக்கணிகழுத்தணிதரளவெண்கொடி
மொய்க்குமென்குழலினுண்முறுவலுள்ளுறப்
புக்கனநிறைத்துமெய்பொடித்தபோன்றவே. (௫௫)

பந்திசெய்வயிரங்கள்பொறியிற்பாடுற
அந்தமில்சுடர்மணியழலிற்றோன்றலால்
சுந்தரத்தோளணிவலயந்தொல்லைநாள்
மந்தரஞ்சுற்றியவரவைமானுமே. (௫௬)

கோவையின்பெருவடமுத்தங்கோத்தன
காவல்செய்தடக்கையினவேட்கார்த்துவ
மூவகையுலகிற்குமுதல்வனுமென
ஏவரும்பெருங்குறியிட்டபோன்றவே. (௫௭)

மாண்டபொன்மணியணிவலயம்வந்தெதிர்
வேண்டினர்க்குதவுவான்விரும்பிக்கற்பகம்
ஈண்டுதன்கொம்பிடையீன்றதாமெனக்
காண்டகுதடக்கையிற்கடகமின்னவே. (௫௮)

தேனுடைமலர்மகடிளைக்குமார்பினில்
தானிடைவிளங்கியதகையினார்தான்

மீனொடுசுடர்விடவிளங்குமேகத்து
வானிடுவில்லெனவயங்கிக்காட்டவே. (௧௯)

நனுகவுமிரவுநடக்குஞானத்தர்
உணர்வினினொளிதிகழுத்தரீயந்தான்
தணிவருங்கருணைதன்கழுத்திற்சாத்திய
மணியுமிழ்கதிரெனமார்பிற்றோன்றவே. (௨௦)

மேவருஞ்சுடரெனவிளங்குமார்பினால்
ஏவருந்தெரிந்தினிதுணர்மினீண்டெனத்
தேவருமுனிவருந்தெரிக்கலா * முதன்
மூவருந்தானெனமுடிந்ததொத்ததே. (௨௧)

சுற்றுநீடணிமணிச்சோதிபொங்கமேல்
ஒற்றைமாமணியுமிழுதரபந்தனம்
மற்றுமோரண்டமுமயனும்வந்தெழப்
பொற்றடந்தாமரைபூத்தபோன்றதே. (௨௨)

மண்ணுறுசுடர்மணிவயங்கித்தோன்றிய
கண்ணுறுகருங்கடலதனைக்கைவளர்
தண்ணிறப்பாற்கடறழீஇயதாமென
வெண்ணிறப்பட்டொளிவிளங்கச்சாத்தியே. (௨௩)

சலம்வருதாளமுந்தயங்குநீலமும்
அலம்வருநிழலுமிழம்பொற்கச்சினால்
குலம்வருகனகவான்குன்றைநின்றுடன்
வலம்வருகதிரெனவாளும்வீக்கியே. (௨௪)

முகைவிரிசுடரொளிமுத்தின்பத்திவான்
தொகைவரிபட்டிகைச்சுடருஞ்சுற்றிடத்
தகையுடைவாளெனுந்தயங்குவெய்யவன்
நகையினவெயிலெனத்தொங்கனாற்றியே. (௨௫)

காசொடுகண்ணிழல்கனலக்கைவினை
ஏசறுகிம்புரியெயிறுவெண்ணிலா
வீசலின்மகரவாய்விளங்குமின்னென
ஆசையையொளிகளாலளந்துகாட்டவே. (௨௬)

இனிப்பரந்துலகினையளப்பதெங்கெனத்
தனித்தனித்தடுப்பனபோலுஞ்சால்பின
நனிப்பருநுண்வினைச்சிலம்புநோன்கழல்
பனிப்பருந்தாமரைப்பாதம்பற்றவே. (௨௭)

---

* முதன்மூவரென்றது-மும்மைப்பெருந்தேவரை.

இன்னணமொளிர்தரவிமையவர்க்கெலாம்
தன்னையேயனையதோர்கோலந்தாங்கினான்
பன்னகமணிவிளக்கழலும்பாயலான்
அன்னவர்தவத்தினாலனந்தனீங்கினான். (௬௮)

* முப்பரம்பொருளிற்குண்முதலைமூலத்தை
இப்பரந்துடைத்தவரெய்துமின்பத்தை
அப்பனையப்பினுளமிர்தந்தன்னையே
ஒப்பனையொப்பனையுரைக்கவொண்ணுமோ. (௬௯)

பல்பதினாயிரம்பசுவும்பைம்பொனும்
எல்லையினிலனொடுமணிகள்யாவையும்
நல்லவர்க்குதவினானவினிலுநான்மறைச்
செல்வர்கள்வழுத்துறத்தேர்வந்தேறினான். (௭௰)

பொற்றிரளச்சதுவெள்ளிச்சில்லிபுக்
குற்றதுவயிரத்தினுற்றதட்டது
சுற்றுறுநவமணிசுடருந்தோற்றத்த
தொற்றையாழிக்கதிர்த்தேரொடொத்ததே. (௭௧)

நூல்வருந்தன்மையைநுனிக்குநோன்மைய
சால்பெருஞ்செவ்விய † தருமமாதிய
நாலையுமனையனபுரவிநான்கொரு
பாலமையுணர்ந்தவன்பக்கம்பூண்டவே. (௭௨)

அனையதோர்தேரினிலருணனின்றெனப்
பனிவருமலர்க்கணப்பரதன்கோள்கொளக்
குனிசிலைத்தம்பிபின்கூடவேனையன்
இனியபொற்கவரிகாலியக்கவேகினான். (௭௩)

அமைவருமேனியானழகினாயதோ
கமையுறுமனத்தினாற்கருதவந்ததோ
சமைவுறவறிந்திலந்தக்கதாகுக
‡ இமையவராயினாரிங்குளாருமே. (௭௪)

---

* முப்பரம் பொருளென்றது சங்கருஷணன், பிரத்தியும்னன், அநிருத்தனென்பாரை. முதலையென்றது பாற்கடற்பரமனை. மூலத்தையென்றது வாசுதேவனை. இப்பரந்துடைத்தவரெய்து மின்பத்தையென்றது பரமபதநாதனை. அப்பனையென்றது திருவேங்கடமுடையானை. அப்பினுளமிர்தமென்றது ஆவிக்காவியாய்நின்றபரஞ்சுடரை. அதிமானுடசேட்டிதத்தையுணர்த்தத் தன்னையே யொப்பனையென்று மிவ்வாறிச்சமயத்தவர்கூறும் பரத்துவம், வியூகம், விபவம், அந்தரியாமி, அர்ச்சாவதாரமறி வித்தமைகாண்க.

† தருமமாதிய நாலையும்-அறம், பொருள், இன்பம், வீடு.

‡ கண்ணிமைத்தலின்றி நோக்கலின் இமையவராயினாரிங்குளாருமென்றார்.

வரம்பறுமுலகினைவலிந்துமாய்வின்றித்
திரம்பயிலரக்கர்தம்வருக்கந்தேய்வின்று
நிரம்பியதெனக்கொடுநிறைந்ததேவரும்
அரம்பையர்குழாத்தொடுமாடன்மேயினார். (எ௫)

சொரிந்தினர்பூமழைசுண்ணந்தூவினர்
விரிந்தொளிர்காசுபொன்றூசுவீசினர்
பரிந்தனரகிழனைப்பருகினார்கொலாம்
தெரிந்ததிலந்திருநகர்மகளிர்செய்கையே. (எ௬)

* வள்ளலைநோக்கியமகளிர்மேனியின்
எள்ளரும்பூணெலாமிரியநிற்கின்றார்
உள்ளனயாவையுமுதவிப்பூண்டவும்
கொள்ளையிற்கொள்கெனக்கொடுக்கின்றாரினே. (எஎ)

வேறு

எஞ்சலிலுலகத்துள்ளவெறிபடையரசவெள்ளம்
குஞ்சரக்குழாத்திற்சுற்றக்கொற்றவனிருந்தகூடம்
வெஞ்சினத்தனுவலானுமேருமால்வரையிற்சேரும்
செஞ்சுடர்க்கடவுளென்னத்தேரிடைச்சென்றுசேர்ந்தான். (எஅ)

இரதமாண்டிழிந்தபின்னரிருமருங்கிரண்டுகையும்
பரதனுமிளையகோவும்பரிந்தனரேந்தப்பைந்தார்
வரதனுமெய்திமைதீர்மாதவர்த்தொழுதுநீதி
விரதமெய்த்தாதைபாதம்வணங்கிமாடிருந்தவேலை. (எ௯)

சிலையுடைக்கயல்வாட்டிங்களேந்தியோர்செம்பொற்கொம்பர்
முலையிடைமுகிழ்ப்பத்தேர்மேன்முன்றிசைமுளைத்ததன்றும்
அலைகடற்பிறந்துபின்னையவனியிற்றோன்றிமீள
மலையிடையுதிக்கின்றாள்போன்மண்டபமதனில்வந்தாள். (அ0)

வேறு

என்றிவானவரெலாமிருந்தநம்பியைத்
துன்றிருங்கருங்கடறுவைப்பத்தோன்றிய
மின்றலங்கோதையாண்மாலைசூட்டிய
அன்றினுமின்றுடைத்தழகென்றாரரோ. (அக)

ஒலிகடலுலகினிலும்பர்நாகரில்
பொலிவதுமற்றிவள்பொற்பென்றாலிவன்
மலிதருமணம்படுதிருவைவாயினால்
மெலிதருமுணர்வினேன்விளம்புகேனரோ. (அ௨)

---

* தன்திருநாமத்தை ஒருகாற்கூறியமாத்திரையின், அன்னோர்க்குவீடு பேறு முதலியவற்றை எண்ணியாங்குவரைவாது பயத்தலின் வள்ளலென்றார்.

இந்திரன்சசியொடுமெய்தினானிளஞ்
சந்திரமௌலியுந்தையலாளொடும்
வந்தனன்மலரயன்வாக்கினாளுடன்
அந்தரம்புகுந்தனனழகுகாணவே. (அங)

நீத்தருங்கடலெனநிறைந்தவேதியர்
தோய்ந்தநூன்மார்பினர்சுற்றத்தொன்னெறி
வாய்ந்தநல்வேள்விக்குவசிட்டன்மையற
ஏய்ந்த * நற்றருப்பையோடினிதினெய்தினான். (அச)

தண்டிலம்விரித்துநற்றருப்பைசாத்தியே
மண்டலம்விதிமுறைவகுத்துமென்மலர்
கொண்டவைசொரிந்தெரிகுழுமமூட்டினன்
பண்டுளமறைநெறிபரவிச்செய்தனன். (அரு)

வேறு.

மன்றலின்வந்துமணத்தவிசேறி
வென்றிநெடுந்தகைவீரனுமார்வத்
தின்றுணையன்னமுமெய்தியிருந்தார்
ஒன்றியபோகமும்யோகமுமொத்தார். (அசு

கோமகன்முன்சனகன்குளிர்நன்னீர்
பூமகளும்பொருளும்மெனநீயென்
மாமகடன்னொடுமன்னுதியென்னாத்
தாமரையன்னதடக்கைனீந்தான். (அஎ)

அந்தணராசியருங்கலமன்னர்
தந்தபல்லாண்டிசைதார்முடிமன்னர்
வந்தனைவானவர்வாழ்த்தொலிபோல
முந்திசயங்கமுழங்கினமாதோ. (அஅ)

வானவர்பூமழைமன்னவர்பொற்பூ
ஏனையர்தூவுமிலங்கொளிமுத்தம்
தானகுநாண்மதவொன்றிவைதம்மால்
மீனகுவானின்விளங்கியதிப்பார். (அகூ)

வெய்யகனற்றலைவீரனுமந்நாள்
மய்யறுமந்திரமுற்றும்வழங்கா
செய்யமையாகுதியாவையுநேர்ந்தான்
தய்யறளிர்க்கை † தடக்கைபிடித்தான். (கூ0)

* நற்றருப்பை-நுனித்தருப்பை.

† தடக்கைபிடித்தான்-பாணிக்கிரகணஞ்செய்தான்.

இடம்படுதோளவனேடியைவேள்வி
தொடங்கியவெங்கனல்சூழ்வருபோதின்
மடம்படுசிந்தையண்மாறுபிறப்பின்
உடம்புயிரைத்தொடர்கின்றதையொத்தாள். (கக)

வலங்கொடுதீயைவணங்கினர்வந்து
பொலம்பொரிசெய்வனசெய்பொருண்முற்றி
இலங்கொளி * யம்மிமிதித்தெதிர்நின்ற
கலங்கலில்கற்பினருந்ததிகண்டார். (கஉ)

மற்றுளசெய்வனசெய்துமகிழ்ந்தார்
முற்றறியமாதவர்தாண்முறைசூடிக்
கொற்றவனைக்கழல்கும்பிடலோடும்
பொற்றொடிகைக்கொடுநென்மனைபுக்கான். (கங)

ஆர்த்தனபேரிகளார்த்தனசங்கம்
ஆர்த்தனநான்மறையார்த்தனர்வானோர்
ஆர்த்தனபல்கலையார்த்தனபல்லாண்
டார்த்தனவண்டினமார்த்தனவேலை. (கச)

கேகயன்மாமகள்கேழ்கிளர்பாதம்
தாயினுமன்பொடுதாழ்ந்துவணங்கா
ஆயதனன்னையடித்துணைசூடித்
தூயசுமித்திரைதாடொழலோடும். (கரு)

அன்னமுமன்னவரம்பொன்மலர்த்தாள்
சென்னிபுனைந்தனள்சிந்தையுவந்தார்
கன்னியருந்ததிகாரிகைகாண
நன்மகனுக்கிவணல்லணியென்றார். (கசு)

சங்கவளைக்குயிலைத் † தழிநின்றார்
அங்கணனுக்குரியாருளராவார்
பெண்களினிப்பிறரெங்குளரென்றார்
கண்கள்களிப்பமனங்கள்களிப்பார். (கஎ)

எண்ணிலகோடிபொன்னெல்லையில்கோடி
வண்ணவருங்கலமங்கையர்வெள்ளம்
கண்ணகனொடொடுகோசயர்தூசும்
பெண்ணினணங்கனையாள்பெறுகென்றார். (கஅ)

---

* அம்மிமிதித்தலைச் சத்தபதி என்பவர் வடநூலார்.

† தழீஇஎன்றது தழியென்க்குறுக்கும் வழிகுறுக்கல்பெற்றது.

நூற்கடலன்னவர்சொற்கடனோக்கி
மாற்கடலன்னமனத்தவனோடும்
* காற்கடல்போற்கருணைக்கடல்பண்டைப்
பாற்கடலன்னதொர்பாயலணைந்தான். (௯௯)

பங்குனியுத்தரமானபகற்போ
தங்கணிருக்கினிலாயிரநாமச்
சிங்கமணத்தொழில்செய்ததிறத்தால்
மங்கலவங்கிவதிட்டன்வகுத்தான். (௪௦௦)

† வள்ளறனக்கிளையோர்கடமக்கும்
எள்ளவில்கொற்றவன்யான்பினளித்த
அள்ளன்மலர்த்திருவன்னவர்தம்மைக்
கொள்ளுமெனத்தமரோடுகுறித்தான். (௪௦௧)

கொய்ந்நறைதாரன் ‡ குசத்துவசப்பேர்
நெய்ந்நறைவேலவன்மங்கையர்நேர்ந்தார்
மய்ந்நறைகண்ணியர்வானுறைநீரார்
மெய்ந்நறைமூவரைமூவரும்வேட்டார். (௪௦௨)

வேட்டவர்வேட்டபின்வேந்தனுமேனாள்
கூட்டியசீர்த்திகொடுத்திலனல்லால்
ஈட்டியமெய்ப்பொருள்யாவளவெல்லாம்
வேட்டவர்வேட்டவைவேண்டளவீந்தான். (௪௦௩)

ஈய்ந்தளவில்லதொரின்பநுகர்ந்தே
ஆய்ந்துணர்கேள்வியருந்தவரோடும்
வேய்ந்தனுமந்நகர்வைகினன்மென்னத்
தேய்ந்தனநாள்சிலசெய்ததுரைப்பாம். (௪௦௪)

௨௨-வது கடிமணப்படலம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௧௨௪௯.

---

* காற்கடல்-காலைவீசுங்கடல்.

† வள்ளறனக்கிளையோரென்பது பரதன்முதன் மூவரை என்க.

‡ குசத்துவசன் என்றது சனகற்கிளையானை, அவன் மக்களாகிய மாளவி, ஊர்மிளை, சுதகீர்த்தி என்பாரைப் பரதன்முதலிய மூவரும் வேட்டனரென்க. ஊர்மிளையைச் சனகன்மகளென்பர் வான்மீகரும்.

உ௯-வது பரசுராமப்படலம்.

திருவயோத்திக்கு வரும்வழியில் பரசுராமனைக்கண்டு அவனை
வெற்றிகொண்டதைக் குறித்துக்கூறும் படலம்.

தானுவதொர்வகையேநனிசனகன்றருதயலும்
நானுவிதமுறபோகமுநுகர்கின்றவந்நாள்வாய்
* ஆனுமறைநெறிமாதவமுனிகோசிகனருளிப்
போனான்வடதிசைவாயுயர்பொன்மால்வரைபுக்கான். (க)

அப்போதினின்முடிமன்னவனணிமாநகர்செலவே
இப்போதுநமனிகந்துணையெழுகென்றினிதிசையாக்
கைப்போதநிகர்காவலர்குழுவந்தடிகதுவ
ஒப்போதருதேர்மீதினிலினிதேறினனுரவோன். (உ)

தன்மக்களுமருமக்களுநனிதன்கழறழுவ
மன்மக்களுமயன்மக்களும்வயின்மொய்த்திடமிதிலைத்
தொன்மக்களுமனமுக்குயிர்பிரிவென்பதொர்துயரின்
வன்மைக்கடல்புகவுய்ப்பதொர்வழிபுக்கனனுரவோன். (௩)

முன்னேநெடுமுடிமன்னவன்முறையிற்செலமிதிலை
நன்மாநகருறைவார்மனநனிபின்செலநடுவே
தன்னேர்புரைதருதம்பியர்தழுவிச்செலமழைவாழ்
மின்னேபுரையிடையாளொடுமினிதேகினன்வீரன். (௪)

ஏகும்மளவையின்வந்தனவலமும்மயிலிடமும்
காகம்முதலியமுந்தியதடைசெய்வனகண்டான்
நாகம்மனனிடையிற்குளதிடையூறெனநடவான்
மாகம்மணியணிதேரொடுநின்றானெறிவந்தான். (௫)

நின்றேநெறியுணர்வானொருநினைவாளனையழையா
நன்றேபழுதுளதோநடுவுரைநீநயமென்னக்
குன்றேபுரைதோளானெதிற் † புள்ளின்குறிகொள்வான்
இன்றேவருமிடையூறதுநன்றாய்விடுமென்றான். (௬)

என்னும்மளவினில்வானகமிருள்கீறிடவொளியாய்
மின்னும்படிபுடைவீசியசடையான்மழுவுடையான்
பொன்னின்மலைவருகின்றதுபோல்வானனல்கால்வான்
உன்னுந்தழும்விழியானுருமதிர்கின்றதொருரையான். (௭)

---

* ஆனுமறைநெறி என்பது துவாதசாக்கரமனுவை.
† புள்ளின்குறி-சகுனம்.

கம்பித்தலையெறிநீருறுகலமொத்துலகுலையத்
தம்பித்துயர்திசையானைகடளரக்கடல்சலியா
வெம்பித்திரிதரவானவர்வெருவுற்றிரிதரவோர்
செம்பொற்சிலைதரியாவயின்முகவாளிகடெரிவான். (௮)

விண்கீழுறவென்றோபடிமேல்கீழுறவென்றோ
எண்கீறியவுயிர்யாவையுமியமன்வாயிடவென்றோ
புண்கீறியகுருதிப்புனல்பொழிகின்றனபுரையக்
கண்கீறியகனலான்முனிவியாதென்றயல்கருதேம். (௯)

போரின்மிசையெழுகின்றதொர்மழுவின்சிகைபுகையத்
தேரின்மிசைமலைசூழ்வருகதிருந்திசைதிரிய
நீரின்மிசைவடவைக்கனனெடுவானுறமுடுகிப்
பாரின்மிசைவருகின்றதொர்படிவெஞ்சுடர்படர. (௧௦)

பாழிப்புயமுயர்திக்கிடையடையப்புடைபடரும்
சூழிச்சடைமுடிவிண்டொடவயல்வெண்மதிதோற்ற
ஆழிப்புனலெரிகானிலமாகாயமுமழியும்
ஊழிக்கடைமுடிவிற்றனியுமைகேள்வனையொப்ப. (௧௧)

* அயிர்சுற்றியகடன்மாநிலமடையத்தனிபடரும்
செயிர்சுற்றியபடையானடன்மறமன்னவர்திலகன்
உயிருற்றதொர்மரமாமெனவோராயிரமுயர்தோள்
வயிரப்பணைதுணியத்தொடுவடிவாய்மழுவுடையான். (௧௨)

நிருபர்க்கொருபழிபற்றிடநிலமன்னவர்குலமும்
கருவற்றிடமழுவாள்கொடுகளைகட்டுயிர்கவரா
இருபத்தொருபடிகாலெழுகடலொத்தலையெறியும்
குருதிக்குரைபுனலிற்புகமுழுகித்தனிகுடைவான். (௧௩)

கமையொப்பதொர்தவமுஞ்சுடுசெனலொப்பதொசினமும்
சமையப்பெரிதுடையானெதிர்தளர்வுற்றிடைதவிரும்
அமையத்துயர்பறவைக்கினிதாரும்வகைசீறுச்
சிமையக்கிரியுருவத்தனிவடிவாளிகடெரிவான். (௧௪)

சய்யம்புகநிமிரக்கடறழுவும்படிசமைவான்
மய்யின்னுயர்மலைநூறிய † மழுவாளவன்வந்தான்
அய்யன்றனையரிதிற்றருமரசன்னதுகண்டான்
வெய்யன்வர ‡ நிபமென்னைகொலெனவெய்துறுமெல்லை. (௧௫)

---

* அயிர் - நுண்மணல், நீர் என்பாருமுளர். † மழுவாளவனென்றது பரசுராமனை. ‡ நிபமென்ற தேதுவை.

பொங்கும்படையிரியக்கிளர்புருவங்கடைநெரிய
வெங்கண்பொறிசிதறக்கடிதுருமேறெனவிடையாச்
சிங்கம்மெனவுயர்தேர்வருகுமரன்னெதிர்சென்றான்
அங்கண்ணரசவனும்மிவனாரோவெனுமளவில். (௧௬)

அரைசன்னவனிடைவந்தினிதாராதனைபுரிவான்
விரைசெய்முடிபடிமேலுறவடிமேலுறவிழலும்
கரைசென்றிலனனையானெனமுடிவில்கனல்கால்வான்
முரைசின்குரல்படவீரனதெதிர்நின்றிவைமொழிவான். (௧௭)

இற்றோடியசிலையின்றிறமறிவென்னினியானுன்
பொற்றோள்வலிநிலைசோதனைபுரிவானசையுடையேன்
செற்றோடியதிரடோளுறுதினவுஞ்சிறிதுடையேன்
மற்றோர்பொருளிலையிங்கிதென்வரவென்றனனுரவோன். (௧௮)

அவனன்னதுபகரும்மளவையின்மன்னவனயர்வான்
புவனம்முழுவதும்வென்றொருமுனிவற்கருள்புரிவாய்
சிவனும்மய * னரியும்மலர்சிறமானிடர்பொருளோ
இவனும்மெனதுயிரும்முனதபயம்மினியென்றான். (௧௯)

விளிவார்விளிவதுதீவினைவிழைவாருழையன்றே
களியாலிவனயர்கின்றனவுளவோகனலுமிழும்
ஒளியாய்மழுவுடையாய்பொரவுரியாரிடையல்லால்
எளியாரிடைவலியார்வலியென்னாகுவதென்றான். (௨0)

தனிமாதவமுடையாயிதுபிடிநீயெனநல்கும்
தனிநாயகமுலகேழையுமுடையாயிதுதவிராய்
பனிவார்கடல்புடைசூழ்படிநரபாலரையருளா
முனிவாறினைமுனிகின்றதுமுறையோவெனமொழிவான். (௨௧)

புறனின்றவரிகழும்படிநவின்றலைபுணராத்
திறனின்றுயர்வலியென்னதொரறனின்றருசெயலோ
அறனின்றதனிலைநின்றுயர்புகழோன்றுவதன்றோ
மறனென்பதுமறவோயிதுவலியென்பதுவலியோ. (௨௨)

சலத்தோடியைவிலனென்மகனனையானுயிர்தபுமேல்
உலத்தோடெதிர்தோளாயெனதுறவோவிருகுவேன்
நிலத்தோயுயர்கதிர்வானுறநெடியாயுனதடியேன்
குலத்தோடறமுடியேலிதுகுறைகொண்டனனென்றான். (௨௩)

---

* அரி-இந்திரன், திருமாலென்பாருமுளர், ஸ்ரீராமபிரானேயவனாதலால் அது பொருந்தாதென்றொழிக்க.

என்னாவடிவிழுவாளையுமிகழாவெரிவிழியா
பொன்னார்கலையணிவானெதிர்புகுவானிலையுணராத்
தன்னாலொருசெயலின்மையினினையாவுயிர்தளரா
மின்னாலயர்வுறும்வாளரவெனவெய்துறலுற்றான் (உச)

மானம்முடைமுடிமன்னவன்மதிசோர்வுறன்மதியான்
தானந்நிலையுறவானுறவினையுண்டதுதவிரான்
* ஆனம்முடையுமையண்ணலையக்காலுறுசிலைதான்
ஈனம்முளத்தன்மேனிலைகேணீயெனவுரைப்பான். (உரு)

ஒருகால்வருகதிராமெனவொளிகால்வனுலையா
வருகார்தவழ்வடமேருவின்வலிசால்வனவையம்
அருகாவினைபுரிவானுளனவனாலமைவனதாம்
இருகார்முகமுளயாவையுமேலாதனமேனாள். (உசா)

வேறு.

ஒன்றினையுமையாள்கேள்வனுவந்தனன்மற்றையொன்றை
நின்றுலகளந்தநேமிநெடியமாலெறியிற்கொண்டான்
என்றிதுவுணர்ந்தவிண்ணோரிரண்டினும்வன்மையெய்தும்
வென்றியதியாவதென்றுவிரிஞ்சனைவினவவக்கான். (உஎ)

சீரிதுதேவர்தங்கள்சிந்தனையென்பதுன்னி
வேரியங்கமலத்தோனுமியைவதோர்விசயந்தன்னால்
யாரினுமுயர்ந்த † மூலத்தொருவராமிருவர்தம்மை
மூரிவெஞ்சிலைமேலிட்டுமொய்யமர்மூட்டிவிட்டான். (உஅ)

இருவருமிரண்டுவில்லுமேற்றினருலகமேழும்
வெருவரத்திசைகள்பேரவெங்கனல்பொங்கமென்மேல்
செருமலைகின்றபோழ்திற்றிரிபுரமெரித்ததேவன்
வரிசிலையிற்றதாகமற்றவன்முனிந்துமன்றே. (உகூ)

மீட்டும்போர்தொடங்கும்வேலைவிண்ணவர்விலக்கவல்வில்
நீட்டினன்றேவர்கோன்கைநெற்றியிற்கண்ணன்வெற்றி
காட்டியகரியமாலுங்கார்முகந்தன்னைப்பாரில்
ஈட்டியதவத்தின்மிக்கவிரிசிகற்கீந்துபோனான். (௩0)

இரிசிகனெந்தைக்கீய ‡ வெந்தையுமெனக்குத்தந்த
வரிசிலையிதுநீநொய்தின்வாங்குதியாயின்மன்ன
குரிசில்கணின்னொடொப்பாரில்லையான்குறித்தபோரும்
புரிகிலேனின்னோடின்னம்புகல்வதுகேட்டியென்றான். (௩க)

---

* ஆனம் என்றது ஒரு வாச்சியவிசேடம். † மூலத்தொருவராமிருவ ரென்றது மும்மைப்பெருந்தேவரிருவரை. ‡ எந்தை என்றது சமதக்கினியை.

ஊனவில்லிறுத்தமொய்ம்பைநோக்குவதக்கமன்றால்
* மானவமற்றுங்கேளாய்வழிப்பகையுடையதெம்பால்
ஈனமிலெந்தைசீற்றநீக்கினானென்னமுன்னோர்
† தானவனனையமன்னன்கொல்லயான்சலித்துமன்றோ. (௩௨)

மூவெழுமுறைமைபாரின்முடியுடைவேந்தையெல்லாம்
மேவழுமழுவின்வாயால்வேரறக்களைகட்டன்றோர்
‡ தூவெழுகுருதிவெள்ளத்துறையிடைமுறையினெந்தைக்
காவனகடன்கணேர்ந்தேனருஞ்சினமடங்கிப்போந்தேன். (௩௩)

உலகெலா § முனிவற்கீந்தேனுறுபகையொடுக்கிப்போந்தேன்
அலகின்மாதவங்கள்செய்தேனருவரையிருந்தேனாண்டைச்
சிலையைநீயிறுத்தவோசைசெவியுறச்சீறிவந்தேன்
மலைகுவென்வல்லையாகில்வாங்கிடித்தனுவையென்றான். (௩௪)

என்றனனென்னநின்றவிராமனுமுறுவலெய்தி
நன்றொளிர்முகத்தனாகிநாரணன்வலியினாண்ட
வென்றிவிற்றருகவென்னக்கொடுத்தனன்வீரன்கொண்டத்
தன்றிருஞ்சடையோனஞ்சத்தோளுறவாங்கிச்சொல்லும். (௩௫)

பூதலத்தரசையெல்லாம்பொன்றுவித்தனையென்றாலும்
வேதவித்தாயமேலோன்மைந்தனீவிரதம்பூண்டாய்
ஆதலிற்கொல்லலாகாதம்பிதுபிழைப்பதன்றால்
யாதிதற்கிலக்கமாவதியம்புதிவிரைவினென்றான். (௩௬)

வேறு.

நீதியாய்முனிந்திடேலியாவர்க்கும்
ஆதியானநிந்தனெனலங்கனேமியாய்
வேதியாவிருவதேயன்றி § வெண்மதிப்
பாதியான்பிடித்தவில்பற்றப்போதுமோ. (௩௭)

பொன்னுடைவனைகழற்பொலங்கொடோளினாய்
மின்னுடைநேமியானதன்மெய்ம்மையால்
என்னுளதுலகினுக்கிடுக்கண்யான்றந்த
உன்னுடைவில்லுமுன்னூரத்துக்கீடன்றால். (௩௮)

எய்தவம்பிடைபழுதெய்திடாமலென்
செய்தவம்யாவையுஞ்சிதைக்கவேயெனாக்
கய்யவணெகிழ்தலுங்கணையுஞ்சென்றவன்
மய்யறுதவமெலாம்வாரிமீண்டதே. (௩௯)

---

* மானவனென்பது மனுவின்வழி வந்தானென்பதனை. † தானவனனையமன்னன்- கார்த்தவீரியன். ‡ தூ-ஊனை. § முனிவற்கென்றது-காசிபனை. § வெண்மதிப்பாதியானென்றது-ஒற்றைக்கலைபுனைந்தசிவனை.

எண்ணியபொருளெலாமினிதுமுற்றுக
மண்ணியமணிநிறவண்ணவண்டுழாய்க்
கண்ணியயாவர்க்குங்களைகணாகிய
புண்ணியவிடையெனத்தொழுதுபோயினான். (௪0)

அழிந்தவன்போனபினமலர் * ஐயுணர்
வொழிந்தனனுயிருலைந்துருகுதாதையைப்
பொழிந்தபேரன்பினுற்றெழுதுமுன்புகக்
கழிந்தவான்றுயர்க்கடற்கரைநின்றேறினான். (௪௧)

வெளிப்படுமுணர்விலன்விழுமநீக்கியே
தளிர்ப்புறுமதகரித்தானையானிடை
குளிப்பருந்துயர்க்கடற் † கோடுகண்டவன்
களிப்பெனுங்கரையிலாக்கலனுளாழ்ந்தனன். (௪௨)

பரிவுறுசிந்தையப்பரசுராமன்கை
வரிசிலைவாங்கியோர்வசையகல்விய
ஒருவனைத்தழுவிநின்றுச்சிமோந்துதன்
அருவியங்கண்ணெனுங்கலசமாட்டினான். (௪௩)

பொய்ம்மையிற்சிறுமையிற்புரிந்தவன்றொழில்
மும்மையினுலகினுண்முடிக்கலாவதோ
மெய்ம்மையிற்சிறுவனே ‡ வினைசெய்தோர்களுக்
கிம்மையுமறுமையுமீயுமென்றனன். (௪௪)

பூமழைபொழிந்தனர்புகுந்ததேவருள்
வாமவேல்வருணனைமானவெஞ்சிலை
சேமியென்றுதவித்தன்சேனையார்த்தெழ
நாமநீரயோத்திமாநகரநண்ணினான். (௪௫)

நண்ணினனின்பத்துவைகுநாளிடை
மண்ணுறுமுரசினம்வயங்குதானையவ்
வண்ணலப்பரதனைநோக்கி § யாண்டகை
எண்ணருந்தகையதோர்பொருளியம்புவான். (௪௬)

ஆணையினின்முதுதாதையையகிற்
காணியவிழைவுதோர்கருத்தனுதலாற்
கேணியில்வளைமுரல்கேகயம்புகப்
பூணணிமார்பநீபோதியென்றனன். (௪௭)

---

* ஐயுணர்வென்றது மெய் வாய் கண் மூக்குச்செவி என்பனவற்றை.
† கோடென்றது கரையை. ‡ வினையென்றது சற்கருமத்தை.
§ ஆண்டகை என்றது பரதனை.

ஏவலுமிறைஞ்சிப்போ * யிராமன்சேவடிப்
பூவினைச்சென்னியிற்புனைந்துபோயினான்
ஆவியங்கலனலதில்லையாதலான்
ஓவலினுயிர்ப்பிரிந்துடல்சென்றென்னவே. (௪௮)

உளைவிரிபுரவித்தேருநாசித்தென்றெனும்
வினைமுரானையான்மருங்குபோதப்போய்
இளையவன் றன்னொடுமேழுநாளிடை
களிர்புனற்கேகயநாடெண்ணினான். (௪௯)

ஆனவன்போனபின்னரசர்கோமகன்
ஊனமில்பேராசைக்குநாளிடை
வானவர்செய்தமாதவமுண்டாகலான்
மேனனிகழ்ந்தனவிளம்புவாமரோ. (௫௦)

௨௩-வது. பரசுராமப்படல முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௪௨௦.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

பாலகாண்ட முற்றிற்று.

---

* இராமன் வனத்திற் புகத்திடமாதல் வானவர்செய்த மாதவலாவின் னைங் கூறினர்.

பாலகாண்ட படலவட்டவணை.

தொ.	படலங்களின் பெயர்.	பக்கம்.
௧.	சிறப்புப்பாயிரம்	௫
௨.	ஆற்றுப்படலம்	௭
௩.	நாட்டுப்படலம்	௧௦
௪.	நகரப்படலம்	௧௮
௫.	அரசியற்படலம்	௨௮
௬.	திருவவதாரப்படலம்	௩௦
௭.	கையடைப்படலம்	௪௮
௮.	தாடகைவதைப்படலம்	௫௧
௯.	வேள்விப்படலம்	௬௬
௧௦.	அகலிகைப்படலம்	௭௧
௧௧.	மிதிலைக்காட்சிப்படலம்	௮௧
௧௨.	குலமுறைகிளத்துபடலம்.	௧௦௧
௧௩.	கார்முகப்படலம்	௧௦௫
௧௪.	எழுச்சிப்படலம்	௧௧௪
௧௫.	வரைக்காட்சிப்படலம்	௧௨௪
௧௬.	பூக்கொய்படலம்	௧௩௪
௧௭.	நீர்விளையாட்டுப்படலம்	௧௩௯
௧௮.	உண்டாட்டுப்படலம்	௧௪௪
௧௯.	எதிர்கோட்படலம்	௧௫௩
௨௦.	உலாவியற்படலம்	௧௫௭
௨௧.	கோலங்காண்படலம்	௧௬௫
௨௨.	கடிமணப்படலம்	௧௭௦
௨௩.	பரசுராமப்படலம்	௧௮௪

ஸ்ரீ

ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

இரண்டாவது,

அயோத்தியாகாண்டம்.

தெய்வப்புலமைக்

கம்பநாட்டாழ்வார்

அருளிச்செய்தது.

இஃது

சென்னை இராசதானி வித்தியாசாலைத்

தமிழ்த்தலைமைப் புலமை நடாத்திய

இயற்றமிழாசிரியர்

கோ - இராசகோபால பிள்ளையவர்கள்

மாணாக்கரும்

சென்னை வேப்பேரி எஸ் - பி - ஜி - ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதருமாகிய

திருமயிலை - சண்முகம்பிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு

பிருங்கிமாநகரம்

வேம்புலிமுதலியாரவர்கள் குமாரர்

நமசிவாயமுதலியாரவர்களால்

தமது

சென்னை - சூளை

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

இரண்டாவது,

அயோத்தியாகாண்டம்.

முதலாவது மந்திரப்படலம்.

காப்பு.

வானின்றிழிந்துவரம்பிகந்தமாபூதத்தின்வைப்பெங்கும்
ஊனுமுயிருமுணர்வும்போலுள்ளும்புறத்துமுளனென்ப
* கூனுஞ்சிறியகோத்தாயுங்கொடுமையிழைப்பக்கோற்றுறந்து
கானுங்கடலுங்கடந்திமையோரிடுக்கண்காத்தகழல்வேந்தை. (க)

நூல்.

மண்ணுறுமுரசினமழையினார்ப்புறப்
பண்ணுறுபடர்சினப்பருமயானையான்
கண்ணுறுகவரியின்கற்றைசுற்றுற
எண்ணுறுசூழ்ச்சியினிருக்கையெய்தினான். (உ)

புக்கபின்னிருபெரும்பொருவில்சுற்றமும்
பக்கமும்பெயர்கெனப்பரிவினீக்கினான்
ஒக்கநின்றுலகளித்தியோகினெய்திய
சக்கரத்தவனெனத்தமியனாயினான். (ங)

சந்திரற்குவமைசெய்தாளவெண்குடை
அந்தரத்தளவுநின்றளிக்குமாணையான்
இந்திரற்கிமையவர்குருவையொத்ததன்
மந்திரக்கிழவரைவருகென்றேவினான். (ச)

பூவருபொலன்கழற்பொருவின்மன்னவன்
காவலிலாணையின்கடவுளாமெனத்
தேவருமுனிவருமுணருந்தேவர்கள்
மூவரினல்வராமுனிவந்தெய்தினான். (ரு)

---

* கூனென்றது மந்தரையை, ஆகுபெயர். சிறியகோத்தா என்றது கைகேசியை, கழல்வேந்தை என்றது இராமனை,

குலமுதற்றொன்மையுங்கலையின்குப்பையும்
பலமுதற்கேள்வியும்பயனுமெய்தினார்
நலமுதனலியிலுங்கலுநோக்குவார்
சலமுதலறுத்தருந்தருமந்தாங்கினார். (௬)

வேறு.

உற்றதுகொண்டுமேல்வந்துறுபொருளுணருங்கோளார்
மற்றதுவினையின்வந்ததாயினுமாற்றலாற்றும்
பெற்றியர்பிறப்பின்மேன்மைப்பெரியவாசிரியனாலும்
* கற்றவர்மானநோக்கிற்கவரிமாவனையநீரார். (௭)

காலமுமிடனுமேற்றகருவியுந்தெரியக்கற்ற
நூலுறநோக்கித்தெய்வநனித்தலைக்குணித்தமேலோர்
சீலமும்புகழ்க்குவேண்டுஞ்செய்கையுந்தெரிந்துகொண்டு
† பால்வருமுறுதியாவுந்தலைவற்குப்பயக்குநீரார். (௮)

தம்முயிர்க்குறுதியெண்ணார்தலைமகன்வெகுண்டபோதும்
வெம்மையைத்தாங்கிநீதிவிடாதுநின்றுரைக்கும்வீரர்
செம்மையிற்றிறம்பல்செல்லாத்தேற்றத்தார்தெரியுங்காலம்
மும்மையுமுணரவல்லாரொருமையேமொழியுநீரார். (௯)

வேறு.

நல்லவுந்தீயவுநாடிநாயகற்
கெல்லையின்மருத்துவனியல்பினெண்ணுவார்
ஒல்லைவந்துறுவனவுற்றபெற்றியின்
றொல்லைநல்வினையெனவுதவுஞ்சூழ்ச்சியார். (௧௦)

அறபதினுயிரென்னுமாண்டகைக்
குறுதியிலொன்றிவர்குணர்வென்றன்னலாம்
பெறலருஞ்சூழ்ச்சியர்திருவின்பெட்பினர்
மறிதிரைக்கடலெனவந்துசுற்றினார். (௧௧)

முறைமையினெய்தினர் ‡ முந்தியந்தமில்
அறிவனைவணங்கித்தம்மரசைக்கைதொழு
திறையிடைவரன்முறையேறியேற்றதொற்
றுறையறிபெருமையானருளுஞ்சூடினார். (௧௨)

அன்னவாருளமைந்திருந்தவாண்டையில்
மன்னவனவர்முகமாயினோக்கினான்

---

* மானத்திற்கவரிமாவொடுவமைகூறினார் "மயிர்நீப்பின்வாழாக்கவரிமா" என்றதையிப்பெற்றி நோக்கி, † பாலென்றது ஊழை. ‡ அந்தமிலறிவனென்றது வசிட்டமுனிவனை.

உன்னியதரும்பெறலுறுதியொன்றனை
தென்னுணர்வினையநீரினிதுகேட்கென. (கங)

* வெய்யவன்குலமுதல்வேந்தர்மேலவர்
செய்கையினொருமுறைதிறம்பலின்றியே
வையம்யாவுண்டவாண்மெய்க்கண்மாட்சியால்
அய்யமிலறுபதினாயிரம்மரோ. (கச)

கன்னியர்க்கமைவருங்கற்பின்மாநிலம்
தன்னையித்தகைதரத்தருமங்கைதர
மன்னுயிர்க்குறவதேசெய்துவைகினேன்
என்னுயிர்க்குறவதுஞ்செய்யவெண்ணினேன். (கரு)

விரும்பியமூப்பெனும்வீடுகண்டயான்
இரும்பியலனந்தனுமிசைந்தயானையும்
† பெரும்பெயர்க்கிரிகளும்பெயரத்தாங்கிய
அரும்பொறையினிச்சிறிதாற்றவாற்றலேன். (கசு)

‡ நங்குலக்குரவர்கணவையினீங்கினார்
தங்குலப்புதல்வரே தரணிதாங்கப்போய்
வெங்குலப்புலன்கெடவீடெண்ணினார்
எங்குலப்புறவரென்றெண்ணிநோக்குகேன் (கஎ)

வெள்ளநீருலகினில்விண்ணினுநகரில்
தன்னரும்பகையெலாந்தவிர்த்துநின்றயான்
கள்ளரிற்கரந்துறை § காமமாதியா
உள்ளுறைபகைஞருக்கொதுங்கிவாழ்வெனோ (கஅ)

பஞ்சிமென்றளிரடிப்பாவைகோல்கொள
¶ வெஞ்சினத்தவுணர்தேர்பத்தும்வென்றனேற்
கெஞ்சலில்மனமெனுமிழுதையேறிய
அஞ்சுதேர்வெல்லுமீதருமையாவதோ. (ககூ)

ஒட்டியபகைஞர்வந்துருத்தபோரிடைப்
பட்டவரல்லரேற்பரமஞானம்போய்த்
தெட்டவரல்லரேற்செல்வமீண்டென
விட்டவரல்லரேல்யாவர்வீடுளார். (உ0)

---

* வெய்யவன் குலமுதல் வேந்தரென்றது மனுத்தொடக்கமான வரசரை.
† பெரும்பெயர்க்கிரிகளென்றது குலாசலங்களெட்டினை.
‡ குலக்குரவரென்றது மனுத்தொடக்கமானவரை.
§ காமமாதியாவென்றது காமம் வெகுளிமயக்கங்களை.
¶ பஞ்சின்மென்றளிரடிப்பாவையென்றது கைகேசியை.

* இறப்பெனுமெய்ம்மையையிம்மையாவர்க்கும்
மறப்பெனுமதனின்மேற்கேடுமற்றுண்டோ
துறப்பெனுந்தெப்பமேதுணைசெயாவிடிற்
பிறப்பெனும்பெருங்கடல்பிழைக்கலாகுமோ (உக)

அருஞ்சிறைப்பமை ருந்துறவுமவ்வழி
தெரிஞ்சுறவெனவிருந்தெளிவுமாய்வரும்
பெருஞ்சிறகுளவெனிற்பிரவியென்றுமிவ்
விருஞ்சிறைகடத்தலினினியதியாவதே. (உஉ)

இனியதுபோலுமிவ்வரசையெண்ணுமோ
துனிவருநலனெனத்தொடர்ந்ததோற்கலா
கனிவரும்பெரும்பகைகளையினீங்கியத்
தனியரசாட்சியிற்றாழுமுள்ளமே. (உங)

உம்மையானுடைமையினுலகம்யாவையும்
செம்மையினோம்பிநல்லறமுஞ்செய்தனன்
இம்மையினுதவிநல்லிசைநடாயநீர்
அம்மையுமுதவுதற்கமையவேண்டுமால். (உச)

† இழைத்ததீவினையையுங்கடக்கவெண்ணுதல்
தழைத்தபேரருளுடைத்தவத்தினுக்குமேற்
குழைத்ததோரமுடைக்கோரநீக்கிவே
றழைத்ததீவிடத்தினையருந்தலாகுமோ. (உரு)

கச்சையங்கடகரிக்கழுத்தின்கண்ணுறப்
பிச்சமுங்கவிகையும்பெய்யுமின்னிழல்
நிச்சயமன்றெனினடிதுநாளுண்ட
எச்சிலைநுகருவதின்பமாகுமோ. (உசா)

மைந்தரையின்மையில்வரம்பில்காலமும்
நொந்தனனிராமனென்றுளைவநீக்குவான்
வந்தனனினியவன்வருந்தயான்பிழைத்
துய்ந்தனன்போவதோருறுதியெண்ணினேன் (உஎ)

இறந்திலன்செருக்களத்திராமன்றாதைதான்
அறந்தலைநிரம்பமூப்படைந்தபின்னரும்
துறந்திலனென்பதோர்சொல்லுண்டானபின்
பிறந்திலனென்பதிற்பிறிதுண்டாகுமோ. (உஅ)

---

* இறப்பெனு மெய்ம்மையை மறப்பெனுமதனின்மேல் இம்மை யாவர்க்குங்கேடு மற்றுண்டோ எனக்கூட்டுக

† தவத்திற்கு அருள்சிறந்த வுறுப்பாகலின் "பேரருளுடைத்தவ" மென்றார்.

பெருமகனென்வயிற்பிறக்கச்சீதையாம்
திருமகள்மணவினைதெரியக்கண்டயான்
அருமகள்நிறைகுணத்தவனிமாதெனும்
ஒருமகள்மணமுங்கண்டுவப்பதாயினேன். (உக)

நிவப்புறுநிலனெனுநிரம்புநங்கையுஞ்
சிவப்புறுமலர்மிசைச்சிறந்தசெல்வியும்
உவப்புறுகணவனையுயிரினெய்திய
தவப்பயன்றுய்ப்பதுதருமமன்றம்பிரா. (௩0)

ஆதலாலிராமனுக்கரசைநல்கியிப்
பேதைமைதாய்வரும்பிறப்பைநீக்குவான்
மாதவர்தொடங்கியவனத்தைநண்ணுவேற்
கீடாதுநுங்கருத்தெனவினையகூறினான். (௩க)

வேறு.

திரண்டதோளினனிப்படிச்செப்பலுஞ்சிந்தை
புரண்டுமீதிடப்பொங்கியவுவகையராங்கே
வெருண்டுமன்னவன்பிரிவெனும்விம்முறுநிலையால்
* இரண்டுகன்றினுக்கிரங்குமோராவெனவிருந்தார். (௩உ)

அன்னராயினுமரசனுக்கதுவலதுறுதி
பின்னரில்லெனக்கருதியும்பெருநிலவரைப்பில்
மன்னுமன்னுயிர்க்கிராமனின்மன்னவரில்லை
என்னவுன்னியும்விதியதுவலியினுமிசைந்தார். (௩௩)

இருந்தமந்திரக்கிழவரமைதன்னமுந்தன்பாற்
பரிந்தசிந்தையம்மன்னவன்கருதியபயனும்
பொருந்துமன்னுயிர்க்குறுதியும்பொதுவுறநோக்கித்
தெரிந்துநான்மறைத் † திசைமுகன்றிருமகன்செப்பும் (௩௪)

நிருபநின்குலமன்னவர்நேமிபண்டுருட்டிப்
பெருமையெய்தினர்யாவரேயிராமனைப்பெற்றார்
கருமமேயிதுகற்றுணர்ந்தோய்க்கினிக்கடவ
தருமமும்மிதுதக்கதேநினைத்தனைதகவோய் (௩௫)

புண்ணியந்தொடர்வேள்விகள்யாவையும்புரிந்த
அண்ணலேயினியருந்தவமியற்றவுமடுக்கும்

* ஸ்ரீராமனரசெய்தலானுவகையும், அரசன்பிரிவான்வருந்துதலுமுண்மையின் 'இரண்டுகன்றினுக்கிரங்குமோரா' வென்றமைச்சர்க்குவமைகூறினார். † திசைமுகன் றிருமகனென்றது வசிட்டமுனிவனை.
‡ வேள்விபுண்ணியம் பயத்தலின் "புண்ணியந்தொடர்வேள்வி" என்றார்.

வண்ணமேகலைநிலமகள்மற்றனைப்பிரிந்து
கண்ணிழந்திலளெனச்செயுநீதந்தகழலோன். (௩௬)

புறத்துளாமொருபொருளினிப்புகல்கின்றதெவனோ
அறத்தின்மூர்த்திவந்தவதரித்தானென்பதல்லால்
* பிறத்தியாவையுங்காத்தவைபின்னுறத்துடைக்கும்
திறத்துமூவருந்திருத்திய திருத்துமத்திறலோன். (௩௭)

பொன்னுயிர்த்தபூமடந்தையும்புவியெனுந்திருவும்
இன்னுயிர்த்துணையிவனென நினைக்கின்றவிராமன்
தன்னுயிர்க்கென்கைபுல்லிதுதற்பயந்தெடுத்த
உன்னுயிர்க்கெனல்லன்மன்னுயிர்க்கெலாமுரவோய். (௩௮)

வாரமென்னினிப்பகர்வதுவைகலு † மனையான்
பேரினல்வருமிடையுபெயர்கின்றபயத்தால்
வீரநின்குலமைந்தனைவேதியர்முதலோர்
யாரும்யாஞ்செய்தநல்லறப்பயனெனவிருப்பார். (௩௯)

மண்ணினுநல்லள்மலர்மகள்கலைமகள்கலையூர்
பெண்ணினுநல்லள்பெரும்புகழ்ச்சனகியோநல்லள்
கண்ணினும்நல்லன்கற்றவர்கற்றிலாதவரும்
‡ உண்ணுநீரினுமுயிரினுமவனையேயுவப்பார். (௪௦)

மனிதர்வானவர்மற்றுளாரறங்கள்காத்தளிப்பார்
இனியிம்மன்னுயிர்க்கிராமனிற்சிறந்தவரில்லை
அனையனாதலினரசநிற்குறுபொருளறியிற்
புனிதமாதவமல்லதொன்றில்லெனப்புகன்றான். (௪௧)

மற்றவன்சொன்னவாசகங்கேட்டலுமகனைப்
பெற்றவன்றனும் ¶ பிஞ்ஞகன்பிடித்தவப்பெருவில்
இற்றவன்றனுமெறிமழுவாளவனிழுக்கம்
உற்றவன்றனும்பெரியதோருவகையனானான் (௪௨)

அனையதாகியவுவகையன்கண்கணீரரும்ப
முனிவன்மாமலர்ப்பாதங்கண்முறைமையினிறைஞ்சி
இனிய § சொல்லினையெம்பெருமானருள்வழியின்
தனியனானிலர்தாங்கியதவற்கிதுதகாதோ. (௪௩)

---

* பிறப்பித்து என்றது பிறத்தென விவ்விகுதிதொகுத்தல்பெற்றது.

† தாரகமந்திரமாதலின் "அனையான்பேரினல் வருமிடையுறுபெயர்கின்ற பயத்தால்" என்றார். இடையூறு என்பது குறுக்கும் வழிகுறுக்கல் பெற்றது

‡ உண்ணுநீரென்றது நீரொடுகூடிய சோற்றினை உயிரினும் என்றது பிராணயாமத்தை.

¶ பிஞ்ஞகனென்றது சிவனை, மழுவாளவன் என்றது பரசுராமனை.

§ பாலைக்கு நிலமின்மையின் நானிலமென்றார்.

எந்தைநீயுவந்திதஞ்சொலவெங்குலத்தரசர்
அந்தமில்லரும்பெருமபுகழவனியினிறுவி
முந்துவேள்வியுமுடித்துத்தம் * மிருவினைமுடித்தார்
வந்ததவ்வருளெனக்குமென்றுரைசெய்துமகிழ்ந்தான். (௪௪)

பழுதின்மாதவன்பின்னொன்றும்பணித்திலனிருந்தான்
முழுதுமெண்ணுறுமந்திரக்கிழவர்தம்முகத்தால்
எழுதிநீட்டிய † விங்கிதமிறைமகற்கேறத்
தொழுதகையினன்சுமந்திரன்முன்னின்றுசொல்லும். (௪௫)

உறத்தகும்மரசிராமற்கென்றுவக்கின்றமனத்தைத்
துறத்திநீயென்னுஞ்சொற்சுடுநின்குலத்தொல்லோர்
மறத்தல்செய்கிலாத்தருமத்தைமறப்பதும்வழக்கன்
றறத்தினூஉங்கினிக்கொடிதெனலாவதொன்றியாதே. (௪௬)

புரைசைமாக்கரிநிருபர்க்கும்புரத்துறைவோர்க்கும்
உரைசெய்மந்திரக்கிழவர்க்குமுனிவர்க்குமுள்ளம்
முரைசமார்ப்பநின்முதன்மணிப்புதல்வனைமுறையால்
அரைசனாக்கிப்பின் ‡ னப்புறத்தடுத்தது புரிவாய். (௪௭)

என்றவாசகஞ்சுமந்திரனியம்பலுமிறைவன்
நன்றுசொல்லினைநம்பியைநளிர்முடிசூட்டி
நின்றுநின்றதுசெய்வதுவிரைவினினீயே
சென்றுகொண்டணைதிருமகள்கொழுநனையென்றான். (௪௮)

அலங்கன்மன்னனையடிதொழுதவன்மனமனையான்
விலங்கன்மாளிகைவீதியில்விரைவொடுசென்றான்
தலங்கள்யாவையும்பெற்றனன்றானெனத்தளிர்ப்பான்
பொலன்கொடேரொடுமிராகவன்றிருமனைபுக்கான். (௪௯)

பெண்ணினின்னமுதன்னவடன்னொடும்பிரியா
வண்ணவெஞ்சிலைக்குரிசிலுமருங்கினிதிருப்ப
அண்ணலாண்டிருந்தா $ னழகருநறவெனத்தன்
கண்ணுமுள்ளமும்வண்டெனக்களிப்புறக்கண்டான். (௫௦)

கண்டுகைதொழுதையவிக்கடலிடைக்கிழவோன்
உண்டொர்காரியம்வருகெனவுரைத்தனனெனலும்
§ புண்டரீகக்கட்புரவலன்பொருக்கெனவெழுந்தோர்
கொண்டல்போலவன் கொடிநெடுந்தேர்மிசைக்கொண்டான். (௫௧)

---

* இருவினை நல்வினை தீவினைகளை. † இங்கிதம் குறிப்புமொழி.
‡ அப்புறத்தடுத்தது புரிதல் துறவறநிலையை மேற்கோடலை.
$ அழகினை நறவென்றமையான் அழகினை "அருநற" வென்றார்.
§ புண்டரீகக்கட் புரவலன்: செந்தாமரைக் கண்ணையுடையனாகிய ஸ்ரீ ராமன்.

2

முறையின்மொய்ம்முகிலெனமுரசார்த்திடமடவார்
இறைகழன்றசங்கார்த்திட * விமையவரெங்கள்
குறைமுடிந்ததென்றார்த்திடக்குஞ்சியைச்சூழ்ந்த
நறையலங்கல்வண்டார்த்திடத்தேர்மிசைநடந்தான். (௨௨)

பணைநிரைந்தனபாட்டொலிநிரைந்தனவனங்கள்
கணைநிரைந்தனநாணொலிகறங்கின † நிறைப்பேர்
அணைநிரைந்தனவறிவெனும்பெரும்புனலனையார்
பிணைநிரைந்தெனப்பரந்தனர்நாணமும்பிரிந்தார். (௨௩)

நீளெழுத்தொடர்வாயினுங்குழையொடுநெகிழ்ந்த
‡ ஆளகத்தினோடாமியத்தலத்தினுமலர்ந்த
வாளரத்தவேல்வண்டொடுகெண்டைகண்மயங்கச்
சாளரத்தினும்பூத்தனதாமரைமலர்கள். (௨௪)

மண்டலந்தருமதிகெழுமழைமுகிலனைய
¶ அண்டர்நாயகன்வரைபுரையகலத்துளலங்கல்
தொண்டைவாய்ச்சியர்நிறையொடுநாணொடுந்தொடர்ந்த
$ கெண்டையும்முளரிகளைபயில்வண்டொடுங்கிடந்த. (௨௫)

சரிந்தபூவுளமழையொடுகலையுறத்தாழ்வ
பரிந்தபூவுளபனிக்கடைமுத்தினம்படைப்ப
எரிந்தபூவுளவிளமுலையிழையிடைநுழைய
விரிந்தபூவுளமீனுடைவானின்றும்வீழ்வ. (௨௬)

வள்ளுறைகழித்தொளிர்வனவாணிமிர்மதியம்
தள்ளுறச்சுமந்தெழுதருந்தமனியக்கொம்பில்
புள்ளிநுண்பனிபொடிப்பனபொன்னிடைப்பொதிந்த
எள்ளுடைப்பொரிவிரவினவுள § சிலவிளநீர். (௨௭)

ஆயதழ்வழிநிகழ்தரவாடவரெல்லாம்
தாயைமுன்னியகன்றெனநின்றுயிர்தளிர்ப்பத்
தூயதம்பியுந்தானுமச்சுமந்திரன்றேர்மேல்
போயகங்குளிர்புரவலனிருந்துழிப்புக்கான். (௨௮)

---

* இமையா நாட்டமுடையாரை இமையவரென்றது மரபுவழுவமைதி

† நிறைப்பேரணை நிரைந்தன வறிவெனும் பெரும்புனல் கற்பாகிய பெரிய தோரணையினின்றும் அறிவெனப்படும் பெரும்புனல்.

‡ அளகமென்றது ஆளகமென நீட்டும் வழிநீட்டல் பெற்றது.

¶ அண்டர்நாயகனென்றார் அயர்வருமமரர்கட்கிறைவனாகலின்.

$ கெண்டை கண்ணினை உவமித்தது.

§ சில - இரண்டினை, இதனைச் 'சில்காழல்குல்' என்புழி நச்சினார்க்கினியர் கூறலானுமறிக.

மாதவன்றனைவரன்முறைவணங்கி * வாளுழவன்
பாதபங்கயம்பணிந்தனன்பணிதலுமனையான்
காதல்பொங்கிடக்கண்பனியுகுத்திடக்கனிவாய்ச்
சீதைகொண்கனைத்திருவுறைமார்பகஞ்சேர்த்தான். (௫௯)

நலங்கொண்மைந்தனைத்தழுவினனென்பதென்னளிநீர்
நிலங்கடாங்குறுநிலையினைநிலையிடநினைந்தான்
விலங்கலன்னதிண்டோளையுமெய்த்திருவிருக்கும்
அலங்கன்மார்பையுந்தனதுதோண்மார்புகொண்டளந்தான். (௬௦)

ஆண்டுதன்மருங்கிரீஇயுவந்தன்புறநோக்கிப்
பூண்டபோர் † மழுவுடையவனெடும்புகழ்குறுக
நீண்டதோளையநிற்பயந்தெடுத்தயானின்னை
வேண்டியெய்திடவிரைவதொன்றுளதெனவிளம்பும். (௬௧)

ஐயசாலவுமலசினனரும்பெருமூப்பும்
வெய்யதாயதுவியலிடப்பெரும்பரம்விசித்த
தொய்யன்மாநிலச்சுமையுறுசிறைதுறந்தினியான்
உய்யலாவதோர்நெறிபுகவுதவிடவேண்டும். (௬௨)

‡ உருமைமைந்தரைப்பெறுகின்றதுறுதுயர்நீங்கி
¶ இருமையும்பெறற்கென்பதுபெரியவரியற்கை
தருமமன்னநிற்றந்தயான்றளர்வதுதகவோ
கருமமென்வயிற்செய்யிலென்கட்டுரைகோடி. (௬௩)

மைந்தநங்குலமரபினின்மணிமுடிவேந்தர்
தந்தமக்களேகடைமுறைநெடுநிலந்தாங்க
$ ஐந்தொடாகிய ○ முப்பகைமருங்கறவகற்றி
உய்ந்துபோயினரூழிநின்றெண்ணினுமுலவார். (௬௪)

முன்னையூழ்வினைப்பயத்தினுமுற்றியவேள்விப்
பின்னையெய்தியநலத்தினுமரிதினிற்பெற்றேன்
இன்னம்யானிந்தவரசியலிடும்பையனென்றால்
நின்னையீன்றுளபயத்தினினிரம்புவதியாதோ. (௬௫)

ஒருத்தலைப்பாரத்தொருத்தலைப்பங்குவினூர்தி
எருத்தினீங்குநின்றியல்வாக்குழைந்திடருழக்கும்
வருத்தநீங்கியவ்வாம்பறுதிருவினைமருவும்
அருத்தியுண்டெனக்கையவீதருளிடவேண்டும். (௬௬)

---

* வாளுழவன் ஈண்டு தயரதனை. † மழுவுடையவன் பரசுராமனை.
‡ உருமை உருமைக்கடனை. ¶ இருமை-இம்மை, மறுமைகளை.
$ ஐந்தென்னுந் தொகைக்குறிப்பு, இந்திரியமைந்தனையுமென்க.
○ முப்பகை-காமம், வெகுளி, மயக்கங்களை.

ஆளுநன்னெறிக்கமைவருமமைவினனாகி
நாளு* நங்குலநாயக† னறைவிரிகமலத்
தாளினல்கியகங்கையைத்தந்துதந்தையரை
மீள்விலின்னுலகேற்றினானொருமகன்மேனாள். (கஎ)

மன்னரானவரல்லர்மேல்வானவர்க்கரசாம்
பொன்னின்வார்கழற்புரந்தரன்போலியரல்லர்
பின்னுமாதவந்தொடங்கினோர்பிழைத்தவர்பிற‡ரார்
சொன்மறாமகற்பெற்றவரருந்துயர்துறந்தார். (கஅ)

அனையதாதலினருந்துயர்ப்பெரும்பரமரசன்
வினையினென்வயின்வைத்தனனெனக்கொளவேண்டாம்
புனையுமாமுடிபுனைந்$ திந்தநல்லறம்புரக்க
நினையல்வேண்டும்யானின்வயிற்பெறுவதீதென்றான். (கக)

தாதையப்பரிசுரைசெயத்¶ தாமரைக்கண்ணன்
காதலுற்றிலனிகழ்ந்திலன்கடனிதென்றுணர்ந்தும்
யாதுகொற்றவனேவியதுசெயலன்றோ
நீதியெற்கெனநினைந்துமப்பணிதலைநின்றான். (எ0)

குரிசில்சிந்தையைமனக்கொண்டகொற்றவெண்குடையான்
தருதியிவ்வரமெனச்சொலியுயிருறத்தழுவிச்
சுருதியன்னதன்மந்திரச்சுற்றமுஞ்சுற்றப்
பொருவின்மேருவும்பொருவருங்கோயில்போய்ப்புக்கான். (எக)

நிவந்த§ வந்தணர்நெடுந்தகைமன்னவர்நகரத்
துவந்தமைந்தர்கண்மடந்தையருழையர்பின்றொடரச்
சுமந்திரன்றடந்தேர்மிசைச்சுந்தரத்திரடோள்
அமைந்தமைந்தனுந்தன்னெடுங்கோயில்சென்றடைந்தான். (எஉ)

வென்றிவேந்தரைவருகவென்றவணம்வீற்றிருந்து
பொன்றிணிந்ததோட்டரும்பெற0 விலச்சினைபோக்கி

---

* நங்குலநாயகன் ஆயிரம்மாலியரும்பரஞ்சுடர்.

† நறைவிரி கமலத்தாளி னல்கியகங்கையென்றார் புண்டரீகமென் பதத்திடைப் பிறந்ததென, முற்காண்டத்துக் கூறுதல்நோக்கி.

‡ யாரென்றது ஆரெனமரீஇயது, அது ஈண்டின்மைப்பொருள்குறித்து நின்றது.

$ இந்தநல்லறம் துறவறவொழுக்கினை.

¶ தாமரைக்கண்ணன் செங்கண்மாலை இதனைத் 'தாமரைக்கண்ணா னுலகு' என்புழிப் பரிமேலழகர் கூறலானுமறிக.

§ அந்தணர் அழகியதட்பமாகிய குணமுடையார். இவ்வாறே 'அந்தணரென்போரறவோர்' என்புழிப் பரிமேலழகருரைப்பர், வேதாந்தத்தி னணவுவாரென நச்சினார்க்கினியர் கூறுவர். 0 இலச்சினை முடங்கல்.

நன்றுசித்திரநளிர்முடிகவித்தற்குநல்லீர்
சென்றுவேண்டுவவரன்முறையமைக்கெனச்செப்ப. (௭௩.)

உரியமாதவனுள்ளிதென்றமைந்தனன்விரைந்தோர்
பொருவிறேர்மிசையந்தணர்குழாத்தோடும்போக
நிருபர்கேண்மின்களிராமற்குநெறிமுறைமையினால்
* திருவும்பூமியுஞ்சிந்தையிற்சிறந்தனவென்றான். (௭௪)

இறைவன்சொல்லெனுமின்னறவருந்தினர்யாரும்
முறையினின்றிலர்முகந்துறுகளியிடைமூழ்கி
நிறையுநெஞ்சிடையுவகைபோய்மயிர்வழிசிமிர
† உறையும்விண்ணகமுடலொடுமெய்தினரொத்தார். (௭௫)

ஒத்தசிந்தையருவகையரொருவர்க்கங்கொருவர்
தத்தமக்குற்றவரசெனத்தழைக்கின்றமனத்தர்
முத்தவெண்குடைமன்னனைமுறைமுறைதொழுதார்
அத்தநன்றெனவன்பினோடறிவிப்பதானார். (௭௬)

வேறு.

மூவெழுமுறைமையெங்குலங்கண்முற்றுறப்
‡ பூவெழுமழுவினாற்பொருதுபோக்கிய
சேவகன்சேவகஞ்செகுத்தசேவகற்
காவவிவ்வுலகமீதறனென்றாரரோ. (௭௭)

வேறெலாமன்னரும்விரும்பியின்னது
கூறினாதுமனங்கொண்டகொற்றவன்
ஊறினானுவகையையொளிக்குஞ்சிந்தையான்
மாறுமோரளவைசால்வாய்மைகூறினான் (௭௮)

மகவையினன்பினான்மயங்கியானிது
புகலநீர்புகன்றவிப்பொம்மல்வாசகம்
உகவையின்மொழிந்ததோவுள்ளநோக்கியோ
தகவெனநினைந்ததோதன்மையென்னென்றான். (௭௯)

இவ்வகையுரைசெயவிருந்தவேந்தவை
செவ்வியநின்றிருமகற்குத்தேர்ந்துளோர்
அவ்வவர்க்கவ்வவராற்றவாற்றுறும்
0 எவ்வமிலன்பினையினிதுகேளென (௮0)

---

* திருவும்பூமியுஞ் சிந்தையிற் சிறந்தனவென்றான் செல்வமும் அரசுமென் சிந்தைபோலுஞ் சிறந்தனவென்றான் என்பதன்றி கைகேசி கருத்தின்வண்ணம் அன்னவை சிறந்தன அவள் மகனுக்கென்பதுமொன்று.

† உவகைமிகுதியான் உறையும் விண்ணகமுடலொடு மெய்தினர்க்குவமைகூறினார்.

‡ பூ கூர்மை. 0 எவ்வமிலன்பினை மிகவுஞ்செய்யுங் குற்றமில்லாத எழுமையுந் தொடர்ந்தவன்பு.

தானமுந்தருமமுந்தகவுந்தன்மைசேர்
ஞானமுநல்லவர்ப்பேணுநன்மையும்
மானவவையரின்மகற்குவைகலும்
ஈனமில்செல்வம்வந்தியைகவென்னவே. (௮௧)

ஊருணிநிறையவுமுதவுமாடுயர்
பார்கெழுபழுமரம்பழுத்தற்றாகவும்
கார்மழைபொழியவுங்கழனிபாய்நதி
வார்புனல்பெருகவுமறுக்கின்றார்கள்யார். (௮௨)

பனையவாநெடுங்கரப் * பருமயானையாய்
நினையவாத்தன்மையைநினைந்தமன்னுயிர்க்
கெனையவாறன்பினனிராமனீண்டவற்
கனையவாறன்பினவவையுமென்றனர். (௮௩)

மொழிந்ததுகேட்டலுமொய்த்துநெஞ்சினைப்
பொழிந்தபேருவகையான்பொங்குகாதலான்
கழிந்ததோரிடரினன்களிக்குஞ்சிந்தையான்
வழிந்தகண்ணீரினன்மன்னன்கூறுவான். (௮௪)

செம்மையிற்றருமத்திற்செயலிற்றீங்கின்பால்
வெம்மையினொழுக்கத்தின்மெய்ம்மைமேவினீர்
என்மகனென்பதென்னெறியினீங்கிவன்
நும்மகன் † கையடைநோக்குமூங்கென்றான். (௮௫)

அரைசரைவிடுத்தபின் ‡ றுணைமன்னவன்
புரைதபுநாளொடுபொழுதுபோக்குவான்
உரைதெரிகணிதரையொருங்குகொண்டொரு
வரைபொருமண்டபமருங்குபோயினான். (௮௬)

வேறு.

ஆண்டவன்னிலையாகவறிந்தவர்
பூண்டகாதலர்பூட்டவிழ்கொங்கையர்
நீண்டகூந்தலர்நீள்கலைதாங்கலர்
ஈண்டவோடினரிட்டிடையிற்றிலர். (௮௭)

ஆடுகின்றனர்பண்ணடையின்றியே
பாடுகின்றனர்பார்த்தவர்க்கேகரம்
சூடுகின்றனர்சொல்லுவதோர்கிலர்
மாடுசென்றனர்மங்கையர்நால்வரே. (௮௮)

---

* பருமம் மேற்றவிசு. † கையடை கையிடையடைக்கலப்பொருளை.

‡ ஆனை பாகதச்சிதைவு, இவ்வாறே கண்ணன் வட்டம் எனவருதல் காண்க.

கண்டமாதரைக்காதலினோக்கினான்
கொண்டல்வண்ணனைநல்கியகோசலை
உண்டுபேருவகைப்பொருளன்னது
தொண்டைவாயினிர்சொல்லுமினீண்டென்றான். (௯)

மன்னெடுங்கழல்வந்துவணங்கிடப்
பன்னெடும்பகல்பாரளிப்பாயென
நின்னெடும்புதல்வன்றனை * நேமியான்
தொன்னெடும்முடிசூட்டுகின்றானென்றார். (௧௦)

சிறக்குஞ்செல்வமகற்கெனச்சிந்தையில்
பிறக்கும்பேருவகைக்கடல்பெட்பற
வறக்குமாவடவைக்கனலானதால்
துறக்குமன்னவனென்னுந்துணுக்கமே. (௧௧)

அன்னளாயுமரும்பெறலாரமும்
நன்னிதிக்குவையுந்நனிநல்கித்தன்
துன்னுகாதற்சுமித்திரையோடும்போய்
மின்னுநேமியன்மேவிடமேவினாள். (௧௨)

மேவிமென் † மலராணிலமாதெனும்
தேவிமாரொடுந்தேவர்கள்யாவர்க்கும்
ஆவியும்மறிவும்முதலாயவன்
‡ வாவிமாமலர்ப்பாதம்வணங்கினாள். (௧௩)

என்வயிற்றருமைந்தர்க்கினியருள்
உன்வயிற்றதென்றாளுலகியாவையும்
மன்வயிற்றினடக்கியமாயனைத்
$ தன்வயிற்றினடக்குந்தவத்தினாள். (௧௪)

என்றிறைஞ்சியவ் ¶ விந்திரைகேள்வனுக்
கொன்றுநான்மறையோதியபூசனை
நன்றிழைத்தவணல்லதவர்க்கெலாம்
கன்றுடைப்பசுவின்கடனல்கினாள். (௧௫)

பொன்னுமாமணியும்புனைசாந்தமும்
கன்னிமாரொடுகாசினியீட்டமும்
இன்னயாவையுமீய்ந்தனளந்தணர்க்
கன்னதானமுமாடையுநல்கினாள். (௧௬)

---

* நேமியான் பூமியாளும் தயரதன். † மலராணிலமாதெனும் தேவிமார் பூதேவி, சீதேவி. ‡ வாவி வணங்கினாள் அடியரிதமாகிய தடாகத்தில் மலர்ந்த தாமரைமலரையொத்த திருவடியை வணங்கினார். $ அவனைச் சிற்றுதரத்தின் கண்வைத்திருந்தது முன்னைப்பிறவியிற்செய்த முதுதவமாதலின தன்வயிற்றினடக்குந் தவத்தினாளென்றார். ¶ இந்திரை திருமாமகள்.

நல்கிநாயகனுண்மலர்ப்பாதத்தைப்
புல்லிப்போற்றிவணங்கிப்புரையிலா
மல்லன்மாளிகைக்கோயில்வலங்கொளாத்
* தொல்லைநோன்புகள்யாவுந்தொடங்கினாள். (கஎ)

க-வது-மந்திரப்படலம் முற்றிற்று.

(ஆக திருவிருத்தம்-கஎ.)

உ-வது மந்தரைசூழ்ச்சிப்படலம்.

கடிகமழ்தாரினான்கணிதமாக்களை
முடிவுறநோக்கியோர்முதன்மைகூறிப்பின்
வடிமழுவாளவற்கடந்தமைந்தற்கு
‡ முடிபுனைகடிகைநாண்மொழிமினென்றனன். (க)

பொருந்துநாளினைநின்புதல்வற்கென்றனர்
திருந்தினானன்னசொற்கேட்டசெய்கழல்
பெருந்திண்மால்யானையான்பிழைப்பில்செய்தவம்
வருந்தினான்வருகெனவசிட்டனெய்தினான். (உ)

நல்லியன்மங்கலநாளுநாளையவ்
வில்லியறோளவர்க்கீண்டுவேண்டுவ
ஒல்லையினியற்றிநல்லுதிவாய்மையும்
சொல்லுதிபெரிதெனத்தொழுதுசொல்லினான். (ங)

முனிவனுமுவகையுந்தானுமுந்துவான்
§ மனுகுலநாயகன்வாயின்முன்னினான்
அனையவன்வரவுகேட்டலங்கல்வீரனும்
இனிதெதிர்கொண்டுதன்னிருக்கையெய்தினான். (ச)

வேறு.

ஒல்கலிற்றவத்துத்தமனேதுநூல்
மல்குகேள்வியவள்ளலைநோக்கினான்
புல்குகாதற்புரவலன்போர்வலாய்
நல்குநானிலநாளைநினக்கென்றான். (ரு)

என்றபின்னுமிராமனைநோக்கினான்
ஒன்றுகூறுவதுண்டுறுதிப்பொருள்

---

* தொல்லை தொடங்கினாள் தொன்றுதொட்டுள்ள விரதங்களெல்லாவற்றையும் செய்யத் தொடங்கினார். † மந்தரை கூனி. ‡ முடிபுனை கடிகைநாள் முடிபுனையுஞ் சுபவோரையென்றதன்றி முடிபுனை தலைக்கடியுமோரையென்றிருபொருள்படக் கூறியதாமெனவுங்கொள்க. § மனுகுல நாயகன் ஸ்ரீராமன்.

நன்றுகேட்டுக்கடைப்பிடிநன்றெனத்
துன்றுதாரவற்சொல்லுதன்மேயினன். (சா)

முனிவர்களை வழிபட்டொழுகுதல்.

கரியமாலினுங்கண்ணுதலானினும்
உரியதாமரைமேலுறைவானினும்
விரியும்பூதமோரைந்தினுமெய்யினும்
பெரியரந்தணர்மேனுதியுள்ளத்தால். (எ)

அந்தணாளர் முனியவுமாங்கவர்
சிந்தையாலருள்செய்யவுந்தேவரில்
நொந்துளாரையுநொய்துயர்ந்தாரையும்
மைந்தவெண்ணவரம்புமுண்டாங்கொலோ. (அ)

அனையராதலினையவிவ்வெய்யதீ
வினையினீங்கியமேலவர்தாளினைப்
புனையுஞ்சென்னியையாய்ப்புகழ்ந்தேத்துதி
இனியகூறுகின்றேயினசெய்தியால். (கூ)

ஆவதற்கும்மழிவதற்கும்மவர்
ஏவலிற்கும்விதியுமென்றுலினி
யாவதெப்பொருளிம்மையுமம்மையுந்
தேவரைப்பரவுந்துணைசேர்த்ததே (க0)

இதுமுதல் கக-செய்யுள்காறும் அரசிலக்கணங் கூறுகின்றார்.

* உருளுநேமியுமொண்கவரெஃகமும்
மருளில்வாணியும்வல்லவர்மூவர்க்கும்
தெருளுநல்லறமும்மனச்செம்மையும்
அருளுநீத்தபின்னுவதுண்டாகுமோ. (கக)

சூதுமுந்துறச்சொல்விறமாத்துயர்
நீதிமைந்தநினக்கிலையாயினும்
ஏதமென்பனயாவையுமெய்துதற்
கோதுமூலமதுவெனவோர்தியே. (கஉ)

யாரொடும்பகைகொள்ளிலனென்றபின்
போரொடுங்கும்புகழொடுங்காதுதன்
தாரொடுங்கல்செல்லாததுதந்தபின்
வேரொடுங்கெடல்வேண்டலுண்டாகுமோ. (கங)

---

*உருளுநேமியு—மூவர்க்கும்-சக்ராயுதம் சூலம், வாக்குமுள்ள மும்மைப் பெருந்தேவர் அதாவது பிரமன் முதலிய மூவர்,

கோளுமைம்பொறியுங்குறையப்பொருள்
நாளுங்கண்டுநெடுக்குறுநோன்மையின்
ஆளுகவ்வரசேயரசன்னது
வாளின்மேல்வருமாதவமன்னனே. (கச)

* உமைக்குநாதற்குமோங்கு † புள்ளூர்திக்கும்
இமைப்பி ‡ னாட்டிமொரெட்டுடையானுக்கும்
சமைத்ததோள்வலிதாங்கினராயினும்
அமைச்சர்சொல்வழியாற்றுதலாற்றலே. (கரு)

என்புதோலுடையார்க்குமிலாக்குந்தம்
வன்பகைப்புலன்மாகறமாய்ப்பதென்
முன்புபின்பின்றிமூவுலகத்தினும்
அன்பினல்லதோராக்கமுண்டாகுமோ (கசு)

வையமன்னுயிராகவம்மன்னுயிர்
உய்யத்தாங்குமுடலன்னமன்னனுக்
கய்யமின்றியறங்கடவாதருள்
§ மெய்யுனின்றபின்வேள்வியும்வேண்டுமோ. (கஎ)

இனியசொல்லினனீகையனெண்ணினன்
வினையன்றூயன்விழுமியன்வென்றியன்
நினையுநீதிநெறிகடவானெனில்
அனையமன்னற்கழிவுமுண்டாங்கொலோ. (கஅ)

சீலமல்லனநீக்கிச்செம்பொற் ○ றுலைத்
தாலமன்னதனிநிலைதாங்கிய
ஞாலமன்னற்குநல்லவர்நோக்கிய
காலமல்லதுகண்ணுமுண்டாகுமோ. (கக)

ஓர்வினல்வினையூற்றத்தினுருரை
பேர்விறுெல்விதிபெற்றுளதென்றரோ
தீர்விலன்புசெலுத்தலிற்செவ்வியோர்
ஆர்வமன்னவற்காயுதமாவதே. (உ௦)

¶ தூமகேதுபுவிக்கெனத்தோன்றிய
வாமமேகலைமங்கையரால்வரும்

---

* உமைக்குநாதன்-உருத்திரன். † புள்ளூர்தி-திருமால் ‡ நாட்டமொரெட்டுடையான்-பிரமன். § வாய்மையினும் வேள்விபெரிதன்றென்பார், "மெய்யினின்றபின்வேள்வியும் வேண்டுமோ" என்றார். ○ துலைத்தால்-துலைநா. ¶ தூமகேது-உலகிற்குப்பின்வரும் தீங்கை முன்னறிவிக்கும் காலக்கோளாகிய உற்பாதக்குறி.

காமமில்லையெனிற்கடுங்கேடெனும்
நாமமில்லைநரகமுமில்லையே. (௨௧)

ஏனைநீதியினியன * வையகப்
போனகற்குவிளம்பிப்புலன்கொளீஇ
ஆனவனெடுமாயிரமௌலியான்
தானநண்ணினன்றத்துவநண்ணினான். (௨௨)

நண்ணி † நாகணைவள்ளலைநான்மறைப்
புண்ணியப்புனலாட்டிப்புலமையோர்
எண்ணுநல்வினைமுற்றுவித்தேற்றினான்
வெண்ணிறத்ததருப்பைவிரித்தரோ. (௨௩)

வேறு.

எற்றிடவாண்டகையினிதிருந்துழி
நூற்றடமார்பனுநொய்தினெய்தப்போய்
ஆற்றல்சாலரசனுக்கறிவித்தானவன்
சாற்றுகநகரணிசமைக்கவென்றனன். (௨௪)

ஏவினவள்ளுவரிராமனாளையே
‡ பூமகள்கொழுநனாய்ப்புனையுமௌலியிக்
§ கோநகரணிகெனக்கொட்டும்பேரியத்
தேவருங்களிகொளத்திரிந்துசாற்றினார். (௨௫)

¶ கவியமைகீர்த்தியக்காளைநாளையே
புவியமைமணிமுடிபுனையுமென்றசொல்
செவியமைநுகர்ச்சியவெனினுந்தேவர்தம்
அவியமுதன்னவந்நகருளார்க்கெலாம். (௨௬)

ஆர்த்தனர்களித்தனராடிப்பாடினர்
வேர்த்தனர்தடித்தனர்சிலிர்த்துமெய்ம்மயிர்
போர்த்தனர்மன்னனைப்புகழ்ந்துவாழ்த்தினர்
தூர்த்தனர்நீணிதிசொல்லினார்க்கெலாம். (௨௭)

திணிசுடரிரவியைத்திருத்துமாறுமப்
பணியிடைப்பள்ளியான்பரந்தமார்பிடை
மணியினைவேகம்வகுக்குமாறும்போல்
அணிநகரணிந்தனரருத்திமாக்களே. (௨௮)

---

* வைகப்போனகன் - உலகமுண்டபெருவாயனாகிய விஷ்ணு.
† நாகணைவள்ளல் - சர்ப்பசயனத்தையுடைய இராமமூர்த்தி.
‡ பூமகள் கொழுநன் - நிலமடந்தைக்கிறையாகிய விஷ்ணு.
§ கோநகரென்றார் முத்திநகரமேழினுஞ் சிறந்தமைநோக்கி.
¶ புகழென்றது உரை பாட்டென்றிருவகைப்படுதலின்கவியமைகீர்த்தி என்றார்.

வெள்ளியரியனசெய்யவேறுளர்
கொள்ளைவான்மொழிநிரைக்குழாங்கடோன்றுவ
கள்ளவிழ்கோதையான்செலவுங்காணிய
புள்ளெலாந்திருநகர்புகுந்தபோன்றவே. (௨௧)

மங்கையர்குறங்கெனவகுத்தவாழைகள்
அங்கவர்கழுத்தெனக்கமுகமார்ந்தன
தங்கொளிமுறுவலிற்றாமமான்றன
கொங்கையையேர்த்தனகனககும்பமே. (௩0)

முதிரொளியுயிர்த்தனமுடுகிக்காலையில்
கதிரவன்வேறொருகவின்கொண்டானென
மதிதொடநிவந்தனமகரதோரணம்
புதியனவலர்ந்தன * புதவராசியே. (௩௧)

துனிபுறுசெம்மணித்தூணநீறுதோய்ந்த
வனிதையோர்கூறினன்வடிவுகாட்டின
புனைதுகிலுறைதொறும்பொதிந்துதோன்றின
பனிபொதிகதிரெனப்பவளத்தூண்களே. (௩௨)

முத்தினின்முழுநிலவெறிப்பமொய்ம்மணிப்
பத்தியினிளவெயில்பரப்பநீலத்தின்
தொத்தினையிருள்வரத்தூண்டச் † சோதிட
வித்தகர்விரித்தநாளொத்தவீதியே. (௩௩)

ஆடன்மான்றேர்க்குழாமவணிகாணிய
வீடெனுமுலகின்வீழ்விமானம்போன்றன
ஓடைமாக்கடகளிறுதயமால்வரை
தேடருங்கதிரொடுந்திரிவபோன்றவே. (௩௪)

வளங்கெழுதிருநகர்வைகும்வைகலும்
பளிங்குடைநெடுஞ்சுவரடுத்தபத்தியில்
இளர்ந்தெரிசுடர்மணியிருளைக்கீறலால்
வளர்ந்திலபிறந்திலசெக்கர்வானமே. (௩௫)

பூமழைபுனன்மழைபுதுமென்சுண்ணத்தின்
தூமழைதானத்தின்றூயவெண்மழை
தாமிழைநெரிதலிற்றகாந்தபொன்மழை;
மாமழைநிகர்த்தனமாடவீதியே. (௩௬)

* புதவராசி - கதவின் கூட்டங்கள். † சந்திரன், சுக்கிரன், வெண்ணிறமுடைமையாலும், சூரியன், செவ்வாய், குரு, கேது செந்நிறமுடைமையாலும், புதன், சனி, இராகு கருநிறமுடைமையாலும் "சோதிடவித்தகர் விரித்தநாளொத்த" என்றார்.

காரொடுதொடர்மதக்களிறுசென்றன
வாரொடுதொடர்கழன்மைந்தராமெனத்
தாரொடுநடந்தனபிடிகடாம் * கலைத்
தேரொடுநடக்குமத்தெரிவைமாரினே. (௩௭)

எய்ந்தெழுசெல்வமுமழகுமின்பமுன்
தேய்ந்திவனையதுதெரிகலாமையால்
ஆய்ந்தனர்பெருகவுமமரரிம்பரில்
போந்தவர்போந்திலமென்னும்புந்தியால் (௩௮)

அந்நகரணிவுறுமமலைவானவர்
பொன்னகரியல்பெனப்பொலியுமெல்லிவயில்
இன்னல்செயிராவணனிழைத்ததீமைபோல்
துன்னருங்கொடுமனக்கூனிதோன்றினாள். (௩௯)

தோன்றியகூனியுந்துடிக்குநெஞ்சினாள்
ஊன்றியவெகுளியாளுளைக்குமுள்ளத்தாள்
கான்றெரிநயனத்தாள்கதிக்குஞ்சொல்லினாள்
மூன்றுலகினுக்குமோரிடுக்கண்மூட்டுவாள் (௪0)

தொண்டைவாய்க்கேகயன்றோகைகோயின்மேல்
மண்டினாள்வெகுளியின்மடித்தவாயினாள்
பண்டைநாளி † ராகவன்பாணிவில்லுமிழ்
உண்டையுண்டதனைத்தன்னுள்ளத்துள்ளுவாள். (௪௧)

காற்கடற்படுமணிநளினம்பூத்ததோர்
பாற்கடற்படுதிரைபவளவல்லியே
போற்கடைக்கண்ணளிபொழியப்பொங்கணை
மேற்கிடந்தாடனைவிரைவினெய்தினாள் (௪௨)

எய்தியக்கேகயன்மடந்தையேடவிழ்
கொய்தலர்தாமரைநோற்றநோன்பினால்
செய்தபேருவமைசால்சொம்பொற்சீறடி
கய்களிற்றீண்டினாள் ‡ காலக்கோளனாள். (௪௩)

தீண்டலுமுணர்ந்தவத்தெய்வக்கற்பினாள்
நீண்டகணணர்தருநீங்குகிற்றிலள்
மூண்டெழுபெரும்பழிமுடிக்கும்வெவ்வினை
தூண்டிடக்கட்டுரைசொல்லன்மேயினாள். (௪௪)

---

* கலையென்றது மேகலையை; அது முதற்குறைபெற்றது
† ராகவன்-ரகுமரபிற்பிறந்தவன்.
‡ காலக்கோளனாள்-காலக்கோள்பின்னடக்குந் தீமையை முன்னுணர்த்தும் ஒரு தீக்கோளுக் கொப்பானகூனி.

அணங்குவாள்விடவரா வணுகுமெல்லையும்
குணங்கெடாதொளிவிரிகுளிர்வெண்டிங்கள்போல்
பிணங்குவான்பேரிடர்பிணிக்கநண்ணவும்
உணங்குவாயல்லைநீயுறங்குவாயென்றாள் (௪௫)

வெவ்விடமனையவள்விளம்பவேற்கணாள்
தெவ்வடுசிலைக்கையென்சிறுவர்செவ்வியர்
அவ்வவர்துறைதொறு மறந்திறம்பலர்
எவ்விடரெனக்குவந்தடுப்பதீண்டென்றாள். (௪௬)

பராவரும்புதல்வரைப்பயக்கயாவரும்
உராவருந்துயரைவிட்டுறுதிகாண்பரால்
விராவரும்புவிக்கெலாம்வேதமேயன
இராமனைப்பயந்தவெற்கிடருண்டோவென்றாள். (௪௭)

ஆழ்ந்தபேரன்பினாளனையகூறலும்
சூழ்ந்ததீவினைநிகர்கூனிசொல்லுவான்
வீழ்ந்ததுநின்னலந்திருவும்வீய்ந்தது
வாழ்ந்தனள்கோசலைமதியினாலென்றாள். (௪௮)

அன்னவளவ்வுரையுரைப்பவாயிழை
மன்னவர்மன்னனேற்கணவன்மைந்தனேல்
பன்னரும்பெரும்புகழ்ப்பரதன்பார்தனில்
என்னிதன்மேலவட்கெய்தும்வாழ்வென்றாள். (௪௯)

ஆடவர்நகைபுறவாண்மைமாசுறத்
தாடகையெனும்பெயர்த்தையலால்படக்
கோடியவரிசிலையிராமன்கோமுடி
சூடுவனாளைவாழ்விதெனச்சொல்லினாள். (௫0)

மாற்றமஃதுரைசெயமங்கையுள்ளமும்
ஆற்றல்சால்கோசலையறிவுமொத்தவால்
வேற்றுமையுற்றிலள்வீரன்றாதைபுக்
கேற்றவளிருதயத்திருக்கவேகொலாம். (௫௧)

ஆயபேரன்பெனுமளக்கராத்தெழத்
தேய்விலாமுகமதிவிளங்கித்தேசுறத்
தூயவளுவகைபோய்மிகச் † சுடர்க்கெலாம்
நாயகமனையதோர்மாலைநல்கினாள். (௫௨)

தெழித்தனளுரப்பினள்சிறக்கண்டியுக
விழித்தனள்வைதனள்வெய்துயிர்த்தனள்

† சுடர்க்கெலா நாயகம் . ஞாயிறு.

அழித்தனளழுதனளம்பொன்மாலையால்
குழித்தனணிலத்தைதயக்கொடியகூனியே (௩௩)

வேதனைக்கூனிபின்வெகுண்டுநோக்கியப்
பேதையைப்பித்திநிற்பிறந்தசேயொடும்
நீதுயர்படுகெனாவெடிதுன்மாற்றவள்
தாதியர்க்காட்செயத்தரிக்கிலேனென்றாள். (௩௪)

சிவந்தவாய்ச்சீதையுங் * கரியசெம்மலும்
நிவந்தவாசனத்தினிதிருப்பநின்மகன்
அவந்தனாய்வெறுநிலத்திருக்கலானபோ
தவந்தவாறென்னிதற்குறுதியாதென்றாள். (௩௫)

மறந்திலள்கோசலையுறுதிமைந்தனும்
சிறந்தாற்றிருவினிற்றிருவினிற்றிருவுமெய்தினான்
இறந்திலனிருந்தனனென்செய்தாற்றுவான்
பிறந்திலன்பரதனீபெற்றதாலென்றாள். (௩௬)

சாதமிப்புவியெலாந்தம்பியோடுமிவ்
வாதனேகாக்குமேல்வரம்பில்காலமும்
பரதனுமிளவலும்பதியினீங்கிப்போய்
விரதமாதவஞ்செயவிடுதனன்றென்றாள். (௩௭)

பண்ணுறுகடகரிப்பரதன்பார்மகள்
கண்ணுறுகவினராயினிதுகாத்தவம்
மண்ணுறுமுரசுடைமன்னர்மாலையில்
எண்ணுறப்பிறந்திலனிறத்தனன்றென்றாள். (௩௮)

† பாக்கியம்புரிந்திலாப்பரதன்றன்னைப்பண்
டாக்கியபொலன்கழலரசனாணையால்
தேக்குயர்கல்லதர்கடிதுசேணிடைப்
போக்கியபொருளெனக்கின்றுபோந்ததால் (௩௯)

மந்தரைபின்னரும்வகைந்துகூறுவாள்
அந்தரந்தீர்ந்துலகளிக்குநீரினால்
தந்தையுங்கொடியனற்றாயுந்தீயளால்
எந்தையேபரதனேயென்செய்வாயென்றாள். (௪௦)

அரைசரிற்பிறந்துபின்னரசரில்வளர்ந்
தரைசரிற்புகுந்துபேரரசியானநீ

---

* கரியசெம்மல்-இராமன்

† அரசர்மாலையிற் பிறவாமையாற்பாக்கியம் புரிந்திலாப் பரதனென்றாள்.

கரைசெயற்கருந் துயர்க்கடலில்வீழ்கின்றாய்
உரைசெயக்கேட்கிலையுணர்தியோவென்றான். (௬௧)

கல்வியுமிளமையுங்கணக்கிலாற்றலும்
வில்வினையுரிமையுமழகும்வீரமும்
எல்லையில்குணங்களும்பரதற்கேயது
புல்லிடையுகுத்தமுதேயும்போலென்றான் (௬௨

வேறு.

வாய்கயப்புறமந்தரைவழங்கியவெஞ்சொல்
காய்கனற்றலைநெய்சொரிந்தெனக்கதங்கனற்ற
கேகையர்க்கிறைதிருமகள்கிளரிளவரிகள்
தோய்கயற்கண்கள் * சிவப்புறநோக்கினள்சொல்லும். (௬௩)

வெயின்முறைக்குலக்கதிரவன்முதலியமேலோர்
உயிர்முதற்பொருடிறம்பினுமுரைதிறம்பாதோர்
† மயின்முறைக்குலத்துரிமையைமனுமுதன்மரபைச்
செயிருறப்புலச்சிந்தையாலென்சொனாய்தீயோய். (௬௪)

எனக்குநல்லையுமல்லைநீயென்மகன்பரதன்
தனக்குநல்லையுமல்லையத்தருமமேநோக்கில்
உனக்குநல்லையுமல்லைவந்தூழ்வினைதூண்ட
மனக்குநல்லனசொல்லினைமதியிலாமனத்தோய் (௬௫)

பிறந்திறந்துபோய்ப்பெறுவதுமிழப்பதும்புகழேல்
அறந்திறம்பினுநியாயமேதிறம்பினுநெறியின்
திறந்திறம்பினுஞ்செய்தவந்திறம்பினுஞ்செயிர்தீர்
மறந்திறம்பினும்வரன்முறைதிறப்புதல்வழக்கோ (௬௬)

போதியென்னெதிர்நின்றுநின்புன்பொறிநாவைச்
சேதியாதிதுபொறுத்தனென்புறஞ்சிலரறியின்
நீதியல்லவுநெறிமுறையல்லவுநினைந்தாய்
ஆதியாதலினறிவிலியடங்குதியென்றாள். (௬௭)

அஞ்சிமந்தரையகன்றிலளம்மொழிகேட்டும்
நஞ்சுதீர்க்கினுந்தீர்கிலாததுநலிந்தென்னத்
தஞ்சமேயுனக்குறுபொருளுணர்த்துகைதவிரேன்
வஞ்சிபோலியென்றடியிசைவீழ்ந்துரைவழங்கும். (௬௮)

---

* கண்சிவப்புறல்-சினக்குறிப்பு.

† மயில்முறைக்குலத்துரிமையாவது-மயில்தான் முதற்பொரித்த குஞ்சுக்குச் சிறைமுளைத்தபின் இரண்டாவதற்குச்சிறை முளைப்பது, அதுபோல இராமனுக்குப் பட்டங்கட்டியபின் பரதனுக்குப்பட்டங்கட்டுதல் முறைமையென்பதாம்.

மூத்தவற்குரித்தரசெனுமுறைமையினுகம்
காத்தமன்னனிலிளையனன்றேகடல்வண்ணன்
* ஏத்துநீண்முடிபுனைவதற்கிசைந்தனனென்றால்
† மீத்தருஞ்செல்வப்பரதனைவிலக்குமாறெவனே (௬௯)

அறனிரம்பியவருளுடையருந்தவர்க்கேனும்
பெறலருந்திருப்பெற்றபின்சிந்தனைபிறிதாம்
மறவினைந்துமைவலிகிலராயினுமனத்தால்
இறலுறும்படியியற்றுவரிடையறுவின்னல். (௭0)

புரியுந் ‡ தன்மகனரசெனிற்பூதலமெல்லாம்
விரியுஞ்சிந்தனைக்கோசலைக்குடைமையாமென்றால்
பரியு § நின்குலப்புதல்வற்குமுனக்குமிப்பார்மேல்
உரியதென்னவளுதவியவொருபொருளல்லால். (௭௧)

தூண்டுமின்னலும்வறுமையுந்தொடர்தரத்துயரால்
ஈண்டுவந்தனையிரந்தவர்க்கிருநிதியவளை
வேண்டியீதியோவெள்குதியோவிம்மனேயால்
மாண்டுபோதியோமறுத்தியோவெங்ஙனம்வாழ்தி, (௭௨)

சிந்தைசெய்கையிற்றிகைத்தனையினிச்சிலநாளில்
நிந்தமின்மையுமெளிமையுநிற்கொண்டுதவிர்க்க
உந்தையுன்னையுங்கிளைஞர்மற்றுன்குலத்துள்ளோர்
வந்துகாண்பதுன்மற்றவாள்செல்வமோமதியாய். (௭௩)

காதலுன்பெருங்கணவனையஞ்சியுங்கனிவாய்ச்
சீதைதந்தையுன்றாதையைத்தெறுகின ¶ னிராமன்
மாதுலனவனுந்தைக்குவாழ்வினியுண்டோ
பேதையுன்றுணையாருளர்பழிபடப்பிறந்தார். (௭௪)

மற்றுநுந்தைக்குவான்பகைபெரிதுளமறத்தார்
செற்றபோதிவர்சென்றுதவாரெனிற்செருவில்
கொற்றமென்பதொன்றெவ்வழியுண்டதுகூறாய்
சுற்றமுங்கெடச்சுடுதுயர்க்கடல்விழித்துணிந்தாய். (௭௫)

கெடுத்தொழிந்தனையுனக்கரும்புதல்வனைக்கிளர்நீர்
உடுத்தபாரகமுடையவனொருமகற்கெனவே
கொடுத்தபேரரசவன்குலங்கோமைந்தர்தமக்கும்
அடுத்ததம்பிக்குமாம்பிறர்க்காகுமோவென்றான். (௭௬)

* ஏத்து நீண்முடியென்றார் மனுத்தொடக்கமானவர்புனைந்தமுடியாகலின். † மீத்தருஞ்செல்வம் பெருமிதந்தருஞ்செல்வம் ‡ தன்மகன் சிராமன், § நின்குலப்புதல்வன் பரதன். ¶ இராமன் மாதுலன் சனகன்.

நீயமைந்தரையுவ்வுரைசெப்பலுந்தேவி
தூயசிந்தையுந்திரிந்ததுசூழ்ச்சியினிமையோர்
மாயையும்மவர்பெற்றநல்வரவுண்மையாலும்
ஆயவந்தணரியற்றியவருந்தவத்தாலும். (எஎ)

அரக்கர்பாவமுமல்லவரியற்றியவறமும்
துரக்கநல்லருடுறந்தனளேய்மொழிமடமான்
இரக்கமின்மையன்றோவின்றிவ்வுலகங்களிராமன்
பரக்குந்தொல்புகழமுதினைப்பருகுகின்றதுவே. (எஅ)

அனையதன்மையளாகியகைகயனன்னம்
வினைநிரம்பியகூனியைவிரும்பினணோக்கி
எனையுவந்தனையினியையென்மகனுக்குமனையான்
புனையுநீண்முடிபெறும்படிபுகலுதியென்றாள். (எகூ)

மாழை * யுண்கணியுரைசெயக்கேட்டமந்தரையென்
தோழியல்லளென்றனைவல்லளென்றடிதொழுதாள்
தாழுமன்னிலையென்னுரைதலைநிற்பினுலகம்
ஏழுமேழுமுன்னொருமாற்காக்குவெனென்றாள். (அ0)

நாடியொன்றனக்குரைசெய்வெனளிர்மணிநகையாய்
தோடிவர்க்ததார்ச்சம்பரன்றொலைவுற்றவேலை
ஆடல்வென்றியானருளியவரமவையிரண்டும்
கோடியென்றனளுள்ளமுங்கோடியகொடியாள் (அக)

இருவரத்தினிலொன்றினாலரசுகொண்டிராமன்
பெருவனத்திடை † யேழிருபருவங்கள்பெயர்ந்து
திரிதரச்செய்தியொன்றினாற்செழுநிலமெல்லாம்
ஒருவழிப்படுமுன்மகற்குபாயமீதென்றாள். (அஉ)

உரைத்தகூனியையுவந்தனளுயிருறத்தழுவி
நிரைத்தமாமணியாரமுநிதியமுநீட்டி
நிரைத்தவேலைசூழுலகமென்றொருமகற்கீந்தாய்
தரைக்குநாயகன்றாயினிநீயெனத்தணியா. (அங)

நன்றுசொல்லினைநம்பியைநளிர்முடிசூட்டல்
துன்றுகானகத்திலிராமனைத்துரத்தலிவ்விரண்டும்
அன்றதாமெனிலரசன்முன்னொருயிர்துறந்து
பொன்றிநீங்குதல்புரிவென்யான்போநீயென்றாள். (அச)

* உண்கண் - மையுண்டகண், இதனை "இருநோக்கிவளுண்கண்" என்புழிப் பரிமேலழகர் கூறலானுமறிக.

‡ ஏழிருபருவங்கள் பதினான்காண்டு.

கூனிபோனபின் குலமலர்க்குப்பைநின் றிழிந்தாள்
சோனைவார்குழற் கற்றையிற் சொருகியமாலை
வானவார்மழை நுழைதருமதிபிதிர்ப்பாள்போல்
தேனவாவுறு வண்டினமலமரச் சிதைத்தாள். (௮௫)

விளையுத்தன்புகழ்வல்லியைவேரறுத்தென்னக்
கிளைகொண்மேகலைசிந்தினள்கிங்கிணியோடும்
வளைதுறந்தனண் மதியினின் மறுத்துடைப்பாள்போல்
அளகவாணுதலரும்பெறற்றிலதமுமழித்தாள் (௮௬)

தாவின்மாமணிக்கலன் மற்றுந் தனித்தனிச்சிதறி
நாவிநன்குழலனிலத்தைவரப்பரப்பிக்
காவியுண்கண்களஞ்சனங்கான்றிடக்கலுழாப்
பூவுதிர்ந்ததோர்கொம்பெனப்புவிமிசைப்புரண்டாள். (௮௭)

கவ்விவீழ்ந்தெனநாடகமயிறுயின்றென்னக்
கவ்வைகூர்தரச் * சனகியாங்கடிகமழ்கமலத்
தவ்வைநீங்குமென்றயோத்திவந்தடைந்தவம்மடந்தை
தவ்வையாமெனக்கிடந்தனள்கைகயன்றனையை. (௮௮)

௨-வது. மந்தரைசூழ்ச்சிப்படல முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௧௮௫.

௩-வது. கைகேசிசூழ்வினைப்படலம்.

நாழிகைகங்குலினள்ளடைந்தபின்றை
யாழிசையஞ்சியவஞ்சொலேழைகோயில்
வாழியவென்றயின்மன்னர்துன்னவந்தான்
ஆழிசெங்கைமடங்கலாளியன்னான். (௧)

வாயலின்மன்னர்வணங்கிநிற்பவந்தாங்
கேயினசெய்யுமடந்தைமாரொடேகிப்
பாயறுறந்தபடைத்தடங்கண்மென்றோள்
ஆயிழைதன்னையடைந்தவாழிமன்னன். (௨)

அடைந்தவனோக்கியரந்தையென்கொல்வந்து
தொடர்ந்ததெனத்துயர்கொண்டுசோருநெஞ்சன்
மடந்தையைமானையெடுக்குமானையேபோல்
தடங்கைகள்கொண்டுதழீஇயெடுக்கலுற்றான். (௩)

---

* சனகி-சனகன்புத்திரி சானகி இது தத்திதாந்தபதம்.

நின்றுதொடர்ந்தநெடுங்கைதம்மைநீக்கி
மின்றுவள்கின்றதுபோலமண்ணில்வீழ்ந்தாள்
ஒன்றுமியம்பலணீடுயிர்க்கலுற்றாள்
மன்றலருந்தொடைமன்னனாவியன்னாள். (௪)

அன்னதுகண்டவலங்கன்மன்னனஞ்சி
என்னைநிகழ்ந்ததிஞ்ஞாலமேழில்வாழ்வார்
உன்னையிகழ்ந்தவர்மாள்வருற்றதெல்லாம்
சொன்னபினென்செயல்காண்டிசொல்லிடென்றான். (௫)

வண்டுளர்தாரவன்வாய்மைகேட்டமங்கை
கொண்டநெடுங்கணினாலிகொங்கைகோப்ப
உண்டுகொலாமருளென்கணுன்கணாகில்
* பண்டையவின்றுபரிந்தளித்தியென்றாள். (௬)

கள்ளவிழ்கோதைகருத்துணர்ந்தமன்னன்
வெள்ளநெடுஞ்சுடர்மின்னின்மின்னநக்கான்
உள்ளமுவந்துளசெய்வனொன்றும்லோபேன்
வள்ளலிராமனுன்மைந்தனாணையென்றான். (௭)

‡ ஆன்றவனவ்வுரைகூறவையமில்லாள்
தோன்றியபேரவலந்துடைத்ததுண்டேல்
சான்றிமையோர்குலமாகமன்னநீயன்
றேன்றவரங்களிரண்டுமீதியென்றாள். (௮)

வரங்கொளவித்துணைமன்னுமல்லலெய்தி
இரங்கிடவேண்டுவதீவனேகொளென்பால்
பரங்கெடவிப்பொழுதேபகர்ந்திடென்றான்
§ உரங்கொண்மனத்தவள்வஞ்சமோர்கிலாதான். (௯)

ஏயவரங்களிரண்டினொன்றினாலென்
சேயரசாள்வதுசீதைகேள்வனொன்றால்
போய்வனமாள்வதெனப்புகன்றுநின்றாள்
தீயவையாயினுஞ்சிறந்ததீயாள். (௧௦)

¶ நாகமெனுங்கொடியாடனாவினீந்த
சோகவிடந்தொடரத்துணுக்கமெய்தா

---

* பண்டையவின்றுபரிந்தளித்தியென்றாள்-சம்பரனைத்தடிந்த ஞான்றுபெற்றவரங்களை யிப்போது அன்புகூர்ந்தளிப்பாயென்றாள்,

† வள்ளல்-வரையாதுகொடுப்பவன்.

‡ ஆன்றவனென்றது அகன்றவனென்பதன் மரூஉ.

§ உரங்கொண்மனத்தவள்-பிடிவாதமுடையவள்.

¶ நாகமெனுங்கொடியாளென்றார் தன்னைப்பாலூட்டிவளர்த்தானையேதீண்டிலின்.

ஆகமடங்கலும்வெந்தழிந்தராவின்
வேகமடங்கியவேழமென்னவீழ்ந்தான். (கக)

பூதலமுற்றதனிற்புரண்டமன்னன்
மாதுயரத்தினையாவர்சொல்லவல்லார்
வேதனைமுற்றிடவெந்துவெந்துசொல்லன்
ஊதுலையிற்கனலென்னவெய்துயிர்த்தான். (கஉ)

உலர்ந்ததுநாவுயிரோடலுற்றதுள்ளம்
புலர்ந்ததுகண்கள்பொடித்தபொங்குசோரி
சலந்தலைமிக்கதக்கதென்கொலென்றென்
றலந்தலையுற்றவரும்புலன்களைந்தும். (கங)

மேவிநிலத்திலிருக்குநிற்கும்வீழும்
ஓவியமொப்பருயிர்ப்படங்கியோயும்
பாவியையுற்றெதிர்பற்றியெற்றவெண்ணும்
ஆவிபதைப்பவலக்கணெய்துகின்றான். (கச)

பெண்ணெனவுற்றபெரும்பழிக்குநாணும்
உண்ணிறைவெப்பொடுயிர்த்துயிர்த்துலாவும்
கண்ணிணிரேக்குமயர்க்குமிக்ககைவேல்
புண்ணுழைதைக்கவுழைக்குமானைபோல்வான். (கரு)

கம்பநெடுங்களியானையன்னமன்னன்
வெம்பிவிழுந்தெழும்விம்மல்கண்டுவெய்துற்
றம்பர்நடுங்கினரூழிபேர்வதொத்த
தம்பனகண்ணவளுள்ளமன்னதேயால். (கசு)

அஞ்சலனையனதல்லல்கண்டுமுள்ளம்
நஞ்சிலணங்கிலவென்னநாணமாமால்
வஞ்சனைபண்டுமடந்தைவேடமென்றே
தஞ்செனமாதரையுள்ளலார்கடக்கோர். (கஎ)

இந்நிலைநின்றவடன்னையெய்தநோக்கி
நெய்ந்நிலைவேலவனீதிசைத்ததுண்டோ
பொய்ந்நிலையோர்கள்புணர்த்தவஞ்சமுண்டோ
அந்நிலைசொல்லெனதானையுண்மையென்றான் (கஅ)

இசைத்ததுமில்லையெனக்குவந்துதீயோர்
இசைத்ததுமில்லைமுனிந்தவிவ்வரங்கள்
குசைப்பரியோய்தரினின்றுகொள்வனென்றேல்
வசைத்திறநின்வயின்வைத்துமாள்வனென்றாள். (ககூ)

இந்தநெடுஞ்சொல்லவ்வேலைகூறுமுன்னே
வெந்தகொடும்புணில்வேனுழைந்ததொப்பச்
சிந்தைதிரிந்துதிகைத்தயர்ந்துவீழ்ந்தான்
* மைந்தனலாதுயிர்வேறிலாதமன்னன். (௨௦)

ஆகொடியாயெனுமாவிகாலுமந்தோ
ஓகொடிதேயறமென்னுமுண்மையொன்றும்
சாகவெனுவெழுமெய்தளாடிவீழும்
† மாகமுநாகமுமண்ணும்வென்றவாளான். (௨௧)

நாரியரில்லையிஞ்ஞாலமேழுமென்னக்
கூரியவாள்கொடுகொன்றுநீக்கியானும்
பீரியரெண்ணிடைவீழ்வனென்று பொங்கும்
‡ வீரியர்வீரம்விழுங்கிநின்றவேலான் (௨௨)

கய்யொடுகையைப்புடைக்கும்வாய்கடிக்கும்
பொய்யுரைகுற்றமெனப்புழுங்கிவாடும்
செய்யெரியுற்றெனநெஞ்சழிந்துசோரும்
¶ வய்யகமுற்றுநடந்தவாய்மைமன்னன். (௨௩)

ஒறுப்பினுமந்தரமுண்மையொன்றுமோவா
மறுப்பினுமந்தரமென்றுவாய்மைமன்னன்
பொறுப்பினுமிந்நிலைபோகிலாளைவாளால்
இறுப்பினுமாவதிரப்பதென்றெழுந்தான். (௨௪)

வேறு.

கோண்மேற்கொண்டுங்குற்றமகற்றிக்குறிகொண்டார்
போன்மேலுற்றதுண்டெனினன்றும்பொறையென்றுக்
கான்மேல்வீழ்ந்தான்கந்துகொல்யானைக்களிமன்னர்
மேன்மேல்வந்துமுந்திவணங்குமிடைதாளான். (௨௫)

கொள்ளானின்சேயிவ்வரசன்றன்கொண்டாலும்
நள்ளாதிந்நானிலஞாலந்தனிலென்றும்
உள்ளாரெல்லாமோதவுவக்கும்புகழ்கொள்ளாய்
எள்ளாநிற்கும்வன்பழிகொண்டென்பயனென்றான். (௨௬)

---

* சீராமனைத் தன்னுயிராகக் கருதுபவனாதலின் "மைந்தனலாதுயிர் வேறிலாதமன்னன்" என்றார்.

† மண்ணுலகமும் விண்ணுலகமும் பாதலமும் வாளால்வெற்றிகொண்டவனாதலின் தயரதனை "மாகமுநாகமு மண்ணும்வென்றவாளான்" என்றார்.

‡ "வீரியர் வீரம்விழுங்குகின்றவேலான்" வீரர்களுடைய வீரத்தைவிழுங்கி மேம்பட்டுநின்றவேலையேந்திய அரசன்.

¶ வையகமுற்று நடந்தவாய்மை மன்னன்நிலவுலகமுழுதும் சென்று பரந்தஉண்மையைப்பூண்ட வரசன்.

வானோர்கொள்ளார்மண்ணவருய்யாரினிமற்றென்
ஏனோர்செய்கையாரொடுநீயிவ்வரசாள்வாய்
யானேசொல்லக்கொள்ளவிசைந்தான்முறையாலே
தானேநல்குமுன்மனக்குந்தரையென்றான். (௨௭)

கண்ணேவேண்டுமென்னினுமீயக்கடவேனென்
உண்ணேராவிவேண்டினுமின்றேயுனதன்றோ
பெண்ணேவண்மைக்கைகயன்மானேபெறுவாயேல்
மண்ணேகொண்ணீமற்றையதொன்றுமறவென்றான். (௨௮)

வாய்வந்தேனென்றேனினியானேவதுமாற்றேன்
நோய்தந்தென்னைநோவனசெய்துநுவலாதே
†தாய்தந்தென்னத்தன்னையிரந்தாற்றழல்வெங்கட்
பேய்தந்தீயுநீழதுதந்தாற்பிழையாமோ. (௨௯)

இன்னேயின்னேபன்னியிரந்தானிகல்வேந்தன்
தன்னேரில்லாத்தீயவளுள்ளந்தடுமாறாள்
முன்னேதந்தாயிவ்வரநல்காய்முனிவாயேல்
என்னேமன்னாயாருளர்வாய்மைக்கினியென்றாள். (௩0)

அச்சொற்கேளாவாவிபுழுங்காவயர்கின்றான்
பொய்ச்சொற்கேளாய்மொழிமன்னனன்பொறைகூற
நச்சுத்தீயேபெண்ணுருவன்றோவெனநாணா
‡முச்சத்தார்போற்பின்னுமிரந்தேமொழிகின்றான். (௩௧)

நின்மகனாள்வானீயினிதாள்வாய்நிலமெல்லாம்
உன்வயமாமேயாளுதிதந்தேனுரைகுன்றேன்
என்மகனென்கண்ணென்னுயிரெல்லாவுயிர்கட்கும்
நன்மகனிந்நாடிறவாமைநயவென்றான். (௩௨)

மெய்யேயென்றன்வேரறநூறும்வினைநோக்கி
நையாநின்றேனுவுமுலர்ந்தேனளினம்போல்
கய்யாநின்றென்கண்ணெதிர்நின்றுங்கழிவானேல்
உய்யேனங்காயுன்னபயம்மென்றுயிரென்றான். (௩௩)

இரந்தான்சொல்லுமின்னுரைகொள்ளாண்முனிவெஞ்சாள்
மரந்தானென்னுநெஞ்சினளாள்வசைபாராள்
§சரந்தாவில்லாய்தந்தவரத்தைத்தவிர்கென்றல்
உரந்தானல்லறமாமோவுரையென்றாள். (௩௪)

† தந்தையென்றது தந்தென்ன நின்றது தொகுத்தல்விகாரம்.

‡ முச்சத்தார்போல்-மனமடங்கிய பெரியோரைப்போல.

§ வாளிகளைவிடுகின்ற வில்லையுடையா யென்பார். சரந்தாவில்லாய்-அம்புதாவும் வில்லையேந்திய அரசனே.

கொடியாளின்னகூறினல்கூறக்குலவேந்தன்
முடிசூடாமற்காத்தலுமொய்கானிடைமெய்யே
நெடியானீங்கநீங்குமென்னாவியினியென்னா
இடியேறுண்டமாய்வரைபோன்மண்ணிடைவீழ்ந்தான். (௩௫)

வீழ்ந்தான்வீழாவெந்துயரத்தின்கடல்வெள்ளத்
தாழ்ந்தானாழவரக்கடலுக்கோர்கரைகாணான்
சூழ்ந்தாடன்பஞ்சொற்கொடியாள்சொற்கொடுநெஞ்சம்
போழ்ந்தாளுள்ளப்புன்மையைநோக்கிப்புலர்கின்றான். (௩௬)

ஒன்றாநின்றவாருயிரோடுமுயிர்கேள்வர்
பொன்றாமுன்னம்பொன்றினரென்னும்புகழல்லால்
*இன்றோர்காறுமெல்வளையார்தம்மிறையோரைக்
கொன்றாரில்லைக்கொல்லுதியோநீகொடியாளே. (௩௭)

ஏவம்பாராயினமுறைநோக்காயறமெண்ணாய்
ஆவென்பாயோவல்லைமனத்தாலருள்கொன்றாய்
நாவம்பாலென்னாருயிருண்டாயினிஞாலம்
பாவம்பாராதின்னுயிர்கொள்ளப்படுகின்றாய். (௩௮)

ஏண்பாலோவாநாண்மடமச்சமிவையேதம்
பூண்பாலாகக்காண்பவர்நல்லார்பகம்பேணி
நாண்பாலாரோநங்கையர்தம்பானணுகாரே
ஆண்பாலாரேபெண்பாலாரோடைவம்மா (௩௯)

மண்ணாள்கின்றாகிவலத்தான்மதியால்வைத்
தெண்ணாநின்றார்யாரையுமெல்லாவிகலாலும்
விண்ணோர்காறும்வென்றவெனக்கென்மனைவாழும்
டெண்ணால்வந்ததந்தரமென்னப்பெறுவேனோ. (௪0)

என்றென்றுன்னும்பன்னியிரக்குமிடர்தோயும்
ஒன்றொன்றொவ்வாவின்னலுழக்குமுயிருண்டோ
இன்றிங்றென்னும்வண்ணமயங்குமிடியும்பொன்
குன்றொன்றொன்றோடொன்றியதென்னக்குவிதோளான். (௪௧)

ஆழிப்பொற்றேர்மன்னவனிவ்வாறயர்வெய்திப்
பூழிப்பொற்றோண்முற்றுமடங்கப்புரள்போழ்தில்
ஊழிற்பொய்த்தாலென்னுரையின்றேயுயிர்மாய்வென்
பாழிப்பொற்றார்மன்னவவென்றாள்பசையற்றாள் (௪௨)

---

* இன்றோர்காறும்-இற்றைவரையும்.

* அரிந்தான் முன்னோர் மன்னவன் றேயருமேனி
வரிந்தார்வில்லாய்வாய்மைவளர்ப்பான் வரநல்கிப்
பரிந்தாலென்னாமென் றனள்பாயுங்கனலேபோல்
எரிந்தாறாதேயின் னுயிருண் ணுமெரியன்னாள். (௪௩)

வீய்ந்தாளேயிவ்வெய்யவளென் னாமிடல்வேந்தன்
ஈய்ந்தேனீய்ந்தேனிவ்வரமென் சேய்வனமாள
மாய்ந்தேநான்போய்வானுலகாள்வென் வசைவெள்ளம்
நீய்ந்தாய்நீய்ந்தாய்நின் மகனோடுகெடிதென்றான். (௪௪)

கூறாமுன்னங்கூறுபடுக்குங்கொலைவாளின்
ஏறாமென்னும்வன் றுயராகத்திடைமூழ்கத்
தேறானிச்செய்கைமறந்தான் செயன்முற்றி
ஊறாநின் றசிந்தையினாளுந் துயில்வுற்றாள். (௪௫)

வேறு.

† சேணுலாவியநாளெலாமுயிரொன் றுபோல்வனசெய்துபின்
ஏணுலாவியதோளினானிடரெய்தவொன் றுமிரங்கிலா
வாணிலாநகைமாதராள்செயல்கண்டுமைந்தர்முனிற்கவும்
நாணினாளெனவேகினாளிர்கங்குலாகியநங்கையே. (௪௬)

‡ எண்டருங்கடைசென் றயாமமியம்புகின் றனவேழையால்
வண்டுதங்கியதொங்கன் மார்பன் மயங்கிவிம்மியவாறெலாம்
கண்டுநெஞ்சுகலங்கியஞ்சிறையானகாமர்துணைக்கரம்
கொண்டுதம்வயிறெற்றியெற்றிவிளிப்பபோன் றனகோழியே. (௪௭)

தோய்கயத்துமரத்துமென்சிறைதுள்ளிமீதெழுபுள்ளெலாம்
தேய்கையொத்தமருங்குன்மாதர்சிலம்பினின் றுசிலம்புவ;
$ கேகயத்தரசன்பயந்தவிடத்தையின்னதொர்கேடுசூழ்
மாகயத்தியையுட்கொதித்துமனத்துவைவன்போன் றவே. (௪௮)

சேமமென்பனபற்றியன்புதிருந்தவின் றுயில்செய்தபின்
வாமமேகலைமங்கையோடுவனத்துள்யாருமறக்கிலா
நாமநம்பிநடக்குமென் றுநடுங்குகின் றமனத்தவாய்
யாமுமிம்மணிறத்துமென்பனபோலெழுந்தனயானையே. (௪௯)

---

* அரிந்தான் முன்னோர் மன்னவன் சிபியரசன், 'இதனைபறவைக்கு மாறாகவழங்கினனால்' என இவ்வாசிரியர் முற்கூறலானும் என்பு முரியர் பிறர்க்கு, என்புழிப்பரிமேலழகர் கூறலானுமுணர்க. † சேணுலாவிய நாளெலா முயிரொன்றுபோல்வனயங்களைச் செய்து. ‡ பகலுமிரவுமாமெண் யாமத்துக்கடையாகலின் எண்டருங்கடைசென்றயாம மென்றார். $ அரசனுக்குயிரைநீக்க வரங்கோடலின் கேகயத்தரசன் பயந்த விடத்தை என்றார்.

* சிரித்தபங்கயமொத்தசெங்கணிராமனைத்திருமாலையக்
கரிக்கரம்பொருகைத்தலத்துயர்காப்புநாணணிதற்குமுன்
வரித்ததண்கதிர்முத்ததாகியிம்மண்ணனைத்துநிழற்றமேல்
விரித்தபந்தர்பிரித்ததாமெனமீனொளித்தனவானமே. (௰)

† நாமவிற்கையிராமனைத்தொழுநாளடைந்தநமக்கெலாம்
காமவிற்குடைகங்குன்மாலைகழிந்ததென்பதுகற்பியாத்
தாமொலித்தனபேரியவ்வொலிசாரன்மாரிதழங்கலா
மாமயிற்குலமென்னமுன்னமலர்ந்தெழுந்தனர்மாதரே. (௰௧)

இனமலர்க்குலம்வாய்விரித்திளவாசமாருதம்வீசமுன்
புனைதுகிற்கலைசோரநெஞ்சுபுழுங்கினார்சிலபூவைமார்
மனமனுக்கம்விடத்தனித்தனிவள்ளலைப்புணர்கள்ளவன்
கனவினுக்கிடையூறடுக்கமயங்கினார்சிலகன்னிமார். (௰௨)

‡ சாயடங்கநலங்கலந்துதயங்குதன்குலநன்மையும்
போயடங்கநெடுங்கொடும்பழிகொண்டரும்புகழ்சிந்துமத்
தீயடங்கியசிற்றையாள்செயல்கண்டுசீரியநங்கைமார்
வாயடங்கினவென்னவந்துகுவிந்தவண்குமுதங்களே. (௰௩)

மொய்யராகநிரம்பவாசைமுருங்குதீயின்முழங்கமேல்
வய்யராவியமாரன்வாளியும்வானிலாநெடுவாடையும்
மெய்யராவிடவாவிசோரவெதும்பு $ மாதர்தமின்செவிப்
பய்யராநுழைகின்றபோன்றனபண்கனிந்தெழுபாடலே. (௰௪)

ஆழியான்முடிசூடுநாளிடையானபாவியிதோரிரா
ஊழியாயினவாறெனா § வுயர்போதின்மேலுறைபேதையும்
ஏழுலோகமுமெண்டவஞ்செய்தகண்ணுமெங்கண்மணங்களும்
வாழுநாளிதெனாவெழுந்தனர்மஞ்சுதோய்புய ○ மஞ்சரே. (௰௫)

ஐயுறுஞ்சுடர்மேனியானெழில்காணமூளுமவாவினால்
கொய்யுறுங்குலமாமலர்க்குவைநின்றெழுந்தனர்கூர்மைகூர்
நெய்யுறுஞ்சுடர்வேனெடுங்கண்முகிழ்த்துநெஞ்சினினைப்பொடும்
பொய்யுறங்குமடந்தைமார்குழல்வண்டுபொம்மெனவிம்மவே. (௰௬)

ஆடகந்தருபூண்முயங்கிடவஞ்சியஞ்சியநந்தரால்
ஏடகம்பொதிதார்பொருந்திடயாமபேரியிசைத்தலால்

---

* மலர்ந்ததாமரை மலரையொத்தமையின் செங்கணிராமனென்றார்.
† யாவருக்குமச்சம் விளைக்கும் வில்லாகலின் 'நாமவில் என்றார். அது கோதண்டத்தை. ‡ சாயனமேன்மை என்புழிச்சாயல் கடைக்குறை [illegible]து. $ மாதர்யயலாற் பண்கனிந்தெழுபாடல்இன்செவிப்பையராநுழைகின்ற போன்றன என்றுவமைகூறினார். § உயர்போதின்மேலுறைபேதை மணமிக்க தாமரைமேல் வசிக்குமிலக்குமி. ○ மைந்தர்-மஞ்சர் மரூஉ.

சேடகம்புனைகோதைமங்கையர்சிந்தையிற்செறிதிண்மையால்
ஊடல்கண்டவர்கூடல்கண்டிலர்மைந்யுமைந்தர்களுய்யவே. (௫௭)

தழையொலித்தனவண்டொலித்தனதாரொலித்தனபேரியாம்
முழவொலித்தனதேரொலித்தனமுத்தொலித்தெழுமல்குலார்
இழையொலித்தனபுள்ளொலித்தனயாழொலித்தனவெங்கணும்
மழையொலித்தனபோல்கலித்தமனத்தின்முந்துறுவாசியே (௫௮)

வையமேழுமோரேழுமாருயிரோடுகூடவழங்குமம்
மெய்யன்வீரருள்வீரன்மாமகன்மேல்விளைந்ததோர்காதலால்
நையநையநலம்புலன்களவிந்தடங்கிநடுங்குவான்
தெய்வமேனிபடைத்தசேயொளிபோன்மழுங்கினதீபமே. (௫௯)

வங்கியம்பலதேன்விளம்பினவாணிமுந்தினபாணியின்
பங்கியம்பரமெங்கும்விம்மினபம்பைபம்மினபல்வகைப்
பொங்கியம்பலவுங்கறங்கினநூபுரங்கள்புலம்பவெண்
சங்கியம்பினகொம்பலம்பினசாமகீதநிரம்பவே (௬0)

தூபமுற்றியகாரிருட்பகைதுள்ளியோடிடவுள்ளெழும்
தீபமுற்றவுநீர்த்தகன்றனசேயதாருயிர்தேய்தலால்
பாபமுற்றியபேதைசெய்தபகைத்திறத்தினில்வெய்யவன்
கோபமுற்றிமிகச்சிவந்தனனொத்தனன்குணக்குன்றிலே (௬௧)

மூவராய்முதலாகிமூலமதாகிஞாலமுமாகியத்
* தேவதேவர்பிடித்தபோர்விலொடித்தசேவகர்சேணிலங்
காவன்மாமுடிசூடுபேரெழில்காணலாமெனுமாசைகூர்
பாவைமார்முகமென்னமுன்னமலர்ந்தபங்கயராசியே (௬௨)

இன்னவேலையினேழுவேலையுமொத்தபோலவிரைத்தெழுந்
தன்னமாநகர்மைந்தன்மாமுடிசூடும்வைகலிதாமெனத்
துன்னுகாதலுறப்பவந்தவைசொல்லலாம்வகையெம்மனோர்க்
குன்னலாவனவல்லவென்னினுமுற்றபெற்றியுணர்த்துவாம் (௬௩)

வே று.

குஞ்சரமனையார்சிந்தைகொளிளையார்
பஞ்சினையணிவார்பால்வளைதெரிவார்
அஞ்சனமெனவாளம்புகளிடையே
நஞ்சினையிடுவார்காண்மலர்புனைவார். (௬௪)

வே று.

பொங்கியவுவகைவெள்ளம்பொழிதரக்கமலம்பூத்த
சங்கையின்முகத்தார்நம்பிதம்பியரனையரானார்

* தேவ தேவர்-தேவர்களுக்குத் தேவனாயுள்ள உருத்திரமூர்த்தி.

செங்கயனறவமாந்திக்களிப்பெனச்சிவக்குங்கண்ணார்
குங்குமச்சுவடுநீங்காக்குவவுத்தோட்குமரரெல்லாம். (௬௫)

மாதர்கள்கற்பின்மிக்கார்கோசலைமனத்தையொத்தார்
வேதியர்வசிட்டனொத்தார்வேறுளமகளிரெல்லாம்
சீதையையொத்தாரன்னடிருவினையொத்தாளவ்வூர்
சாதுகைமாந்தரெல்லாந்தயரதன்றன்னையொத்தார். (௬௬)

இமிழ்திரைப்பரவைஞாலமெங்கணும்வறுமைகூர
உமிழ்வதொத்துதவுகாதலுந்திடவந்ததன்றே
குமிழ்முலைச்சீதைகொண்கன்கோமுடிபுனைதல்காண்டான்
அமிழ்துணக்குழுவுகின்றவமரினரச * வெள்ளம். (௬௭)

பாசியல்பவளச்செவ்வாய்ப்பணைமுலைப்பரவையல்குல்
தோகையர்குழாமுமைந்தர்சும்மையுந்துவன்றியெங்கும்
ஏகுமினேகுமென்றென்றிடையிடைநிற்றலல்லால்
போகிலமீளகில்லாபொன்கர்வீதியெல்லாம். (௬௮)

வேந்தரேபெரிதென்பாரும்வீரரேபெரிதென்பாரும்
மாந்தரேபெரிதென்பாருமகளிரேபெரிதென்பாரும்
போந்ததேபெரிதென்பாரும்புகுவதேபெரிதென்பாரும்
தேர்த்ததேதேரினல்லால்யாவரேதெரியக்கண்டார். (௬௯)

குவளையினெழிலும்வேலின்கொடுமையுங்குழைத்துக்கூட்டித்
திவளுமஞ்சனமென்றேய்ந்தநஞ்சினைத்தெரியதீட்டித்
தவளவொண்மதியுள்வைத்ததன்மைசாறடங்கணல்லார்
துவளுநுண்ணிடையாராடுந்தோகையங்குழாத்திற்றொக்கார் (௭௦)

நலங்கிளர்பூமியென்னுநங்கையைநறுந்துழாயின்
அலங்கலான்புணருஞ்செல்வங்காணவந்தடைந்திலாதார்
இலங்கையினிருதரேயிவ்வேழுலகத்துவாழும்
விலங்கலுமாசைநின்றவிடாமதவிலங்கலேயால். (௭௧)

சந்திரர்கோடியென்னத்தரளவெண்கவிகையோங்க
அந்தரத்தன்னமெல்லாமார்த்தெனக்கவரிதுன்ன
இந்திரற்குவமைசாலுமிருநிலக்கிழவரெல்லாம்
வந்தனர்மௌலிசூட்டுமண்டபமரபிற்புக்கார் (௭௨)

முற்பயந்தெடுத்தகாதற்புதல்வனைமுறையினோடும்
இற்பயன்சிறப்பிப்பாரினீண்டியவுவகைதூண்ட

---

* பொருளாற் பன்மையாயினும் வெள்ளம் என்னுஞ்சொல் ஒருமையாதலால் வந்தது என ஒருமை முடிபுதந்து கூறினர்.

அற்புதன் றிருவைச்சேருமருமணங்காணப்புக்கார்
நற்பயன் றவித்தினுய்க்குநான் மறைக்கிழவரெல்லாம் (௭௩)

விண்ணவர்விசும்புதூர்த்தார்விரிதிரையுடுத்தகோல
மண்ணவர்திசைகடூர்த்தார்மங்கலவிசைக்குஞ்சங்கம்
கண்ணகன் முரசினோதை * கண்டவர்செவிகடூர்த்த
எண்ணருங்கனகமாரியெழுதிரைக்கடல்கடூர்த்த. (௭௪)

விளக்கொளிமறைத்தமன்னர்மின்னொளிமகுடகோடி
துளக்கொளிவிசும்பினூருஞ்சுடரையுமறைத்தசூழ்ந்த
அளக்கர்வாய்முத்தமூரன் முறுவலாரணியின் சோதி
வளைக்கலாமென் றவ்வூரோர்கண்ணனையுமறைத்தவன்றே. (௭௫)

ஆயதோரமைதியின்கணையனைமகுடஞ்சூட்டற்
கேயுமங்கலங்களானயாவையுமியைக்கொண்டு
தூயநான் மறைகள் † வேதபாரகர்சொல்லத்தொல்லை
வாயல்கணெருக்கநீங்கமாதவக்கிழவன்வந்தான். (௭௬)

கங்கையேமுதலவாயகன்னியீறானதீர்த்த
மங்கலப்புனலு ‡ நாலுவாரியினீரும்பூரித்
தங்கியின் வினையிற்கேற்றயாவையுமமைத்துவீரச்
சிங்கவாதனமும்வைத்துச்செய்வனபிறவுஞ்செய்தான். (௭௭)

கணிதநூலுணர்ந்தமாந்தர்காலம்வந்தடுத்ததென்னப்
பிணியறநோற்றுநின்றபெரியவன்விரைவினோடி
மணிமுடிவேந்தன் றன்னைவல்லியிற்கொணர்தியென்னப்
பணிதலைநின்றகாதற்சுமந்திரன்பரிவிற்சென்றான். (௭௮)

விண்டொடநிவந்தகோயில்வேந்தர்தம்வேந்தன் றன்னைக்
கண்டிலன்வினவக்கேட்டான்கைகயள்கோயினண்ணி
தொண்டைவாய்மடந்தைமாரிற்சொல்லமற்றவருஞ்சொல்லப்
§ பெண்டிரிற்கூற்றமன்னாள்பிள்ளையைக்கொணர்கவென்றாள். (௭௯)

என்றனளென்னக்கேட்டானெழுதபேருவகைபொங்கப்
பொன்றிணிமாடவீதிபொருக்கெனநீங்கிப்புக்கான்
தன்றிருவுள்ளத்துள்ளேதன்னையேநினையுமற்றக்
குன்றிவர்தோளினானைத்தொழுதுவாய்புதைத்துக்கூறும். (௮0)

கொற்றவர்முனிவர்மற்றுங்குவலயத்துள்ளாருன்னைப்
பெற்றவன் றன்னைப்போலப்பெரும்பரிவியற்றிநின்றார்

---

* கேட்டவரைக் கண்டவரென்றது புமயக்கம். † வேதபாரகர்-வேத பாராயணஞ்செய்பவர். ‡ நாலுவாரி நாற்றிசைக்கடல். § தன்கணவனை உயிர்கொல்லச்சமைந்தவளாகலிற் 'பெண்டிரிற்கூற்றமன்னாள்' என்றார்.

சிற்றவைதானுமங்கேகொணர்கெனச்செப்பினானைப் (௮௧)
பொற்றடமகுடஞ்சூடப்போதுதிவிரைவினென்றான்.

ஐயனுமச்சொற்கேளாவாயிரமௌலியானைக்
கைதொழுதரசவெள்ளங்கடலெனத்தொடர்ந்துசுற்றத்
தெய்வகீதங்கள்பாடத்தேவருமகிழ்ந்துவாழ்த்தத்
தையலாரிரைத்துநோக்கத் * தாரணிதேரிற்சென்றான். (௮௨)

திருமணிமகுடஞ்சூடச்சேவகன்செல்கின்றானென்
றொருவரினொருவர்முந்தக்காதலோடுவகையுந்த
இருவகையுமிரைத்துமொய்த்தாரின்னுயிர்யார்க்குமொன்றாய்
பொருவருந்தேரிற்செல்லப்புறத்திடைக்கண்டார்போல்வார். (௮௩)

துண்ணெனுஞ்சொல்லாள்சொல்லச்சுடர்முடிதுறந்துதூய
மண்ணெனுந்திருவைநீங்கிவழிக்கொளாமுன்னம்வள்ளல்
பண்ணெனுஞ்சொல்லினார்தந்தோளெனும்பணைத்தவேயும்
கண்ணெனுங்காலவேலுமிடைநெடுங்கானம்புக்கான். (௮௪)

சுண்ணமுமலருஞ்சாந்துங்கனகமுந்தூவவந்து
வண்ணமேகலையுநாணும்வளைகளுந்தூவுவாரும்
புண்ணுறவனங்கன்வாளிபுழைத்ததம்புணர்மென்கொங்கை
கண்ணுறப்பொழிந்தகாமவெம்புனல்கழுவுவாரும். (௮௫)

அங்கணனவனிகாத்தற்காமிவனென்னலாமோ
நங்கணன்பிலனென்றுள்ளத்தள்ளுறநடுங்கிநைவார்
செங்கணுங்கரியகோலமேனியுந்தேருமாகி
எங்கணுந்தோன்றுகின்றாரெனைவரோவிராமனென்பார். (௮௬)

இனையராமங்களிரெல்லாமிரைத்தனர்நிரைத்துமொய்த்தார்
‡ முனைவருங்கரமுதூர்முதிஞருமிளைஞர்தாமும்
அனையவன்மேனிகண்டாரன்பினுக்கெல்லைகாணார்
நினைவினர்மனத்தால்வாயானிகழ்ந்ததுநிகழ்த்தலுற்றாம். (௮௭)

உய்ந்ததிவ்வுலகமென்பாரூழிகாண்கிற்பாயென்பார்
மைத்தநீகோடியெங்கள்வாழ்க்கைநாள்யாவுமென்பார்
ஐந்தவித்தரிதிற்செய்ததவமுனக்காகவென்பார்
பைந்துழாய்த்தெரியலாய்க்கோல்வினைபயக்கவென்பார் (௮௮)

‡ உயாருளொண்கணைக்குந்தாமரைநிறத்தையொக்கும்
புயல்மொழிமேகமென்னபுண்ணியஞ்செய்தவென்பார்

* தாரணிதேர் பொன்னரிமாலையாலலங்கரித்ததேர். † முனைவர் முற்றத்துறந்தமுனிவர். ‡ உயாருளொண்கணைக்கும். (க) எல்லா நற்குணங்களினு முயர்ந்தகருணையானது இவனது ஒள்ளியதிருநோக்கத்தையொத்துத் தோன்றும். (உ) தாமரைநிறத்தையொக்கும்.

செயலருந்தவங்கள்செய்திச்செம்மலைத்தந்தசெல்வத்
தயரதற்கென்னகைம்மாறுடையம்யாந்தக்கதென்பார். (௮௯)

வாரணமரற்றவந்துகராவுயிர்மாற்றுநேமி
நாரணனொக்குமிந்தநம்பிதன்கருணையென்பார்
ஆரணமறிதறேற்றாவையனையனுகிநோக்கிக்
காரணமின்றியேயுங்கண்கணீர்கலுழநிற்பார் (௯௰)

நீலமாமுகிலனன்ற * னிறையினோடறிவுநிற்க
சீலமார்க்குண்டுகெட்டேன்றேவரினடங்குவானோ
காலமாக்கணிக்குநுண்மைக்கணக்கையுங்கடந்துநின்ற
மூலமாய்முடிவிலாதமூர்த்தியிம்முன்பனென்பார். (௯௧)

† ஆர்கலியகழ்ந்தோர் ‡ கங்கையவனியிற்கொணர்ந்தோர்முந்தைப்
போர்கெழுபுலவர்க்காகி § யசுரரைப்பொருதுவென்றோர்
பேர்கெழுசிறப்பின்வந்தபெரும்புகழ்நிற்பவையன்
தார்கெழுதிர ○ டோடந்தபுகழினைத்தழுவியென்பார். (௯௨)

வேறு.

சந்தமிவைதாவின்மணியாரமிவையாவும்
சிந்துரமுமிங்கிவைசெறிந்தமதவேழப்
பந்திகள்வயப்பரிபசும்பொனின்வெறுக்கை
மைந்தவறியோர்கொளவழங்கெனநிரைப்பார். (௯௩)

மின்பொருவுதேரின்மிசைவீரன்வருபோழ்தில்
தன்பொருவில்கன்றுதனிதாவிவரல்கண்டாங்
கன்புருகுசிந்தையொடுமாவுருகுமாபோல்
என்புருகிநெஞ்சுருகிநஞ்சுருகிநிற்பார். (௯௪)

சத்திரநிழற்றநிமிர்தானையொடுதானு
அத்திரநிழற்றவருளோடவனியாள்வார்
புத்திரரினிப்பெறுதல்புல்லிதெனநல்லோர்
சித்திரமெனத்தனிதிகைத்துருகிநிற்பார். (௯௫)

கார்மினொடுலாயதெனநூல்களுலுமார்பன்
தேர்மிசைநம்வாயில்கடிதேகுதல்செய்வானே
கூர்கனகராசியொடுகோடிமணியாலும்
தூர்மி ¶ னெடுவீதியினையென்றுசொரிவாரும். (௯௬)

---

* நிறை-விதிவழிநிற்றல். † ஆர்கலியகழ்ந்தோர்-அறுபதினாயிரஞ் சகரர்கள்.

‡ கங்கையை யவனிற்கொணர்ந்தோன்-பகீரதன். § அசுரரைப்பொருதுவென்றோர்-மாந்தாதா முதலியோர். ○ தோள்தந்தபுகழ்-இராமர் தாடகை, பரசுராமர் முதலியோரையும் வென்றதனால் வந்தபுகழ். ¶ நெடுவீதி அரசவீதி.

தாய்கையில்வளர்ந்திலன்வளர்த்ததுதவத்தால்
கேகயன்மடந்தைகிளர்ஞாலமிவனுள
ஈகையிலுவந்தவந்தவவ்வியற்கையிதுவென்றால்
தோகையிவள்பேருவகைசொல்லலரிதென்பார். (கஎ)

பாவமுமருந்துயரும்வேர்பறியுமென்பார்
† பூவலயமின்றுதனியன்றுபொதுவென்பார்
தேவர்பகையுள்ளனவிவ்வள்ளறெறுமென்பார்
ஏவல்செயுமன்னர்தவம்யாதுகொலென்பார். (கஅ)

ஆண்டினையராயினையகூறவடல்வீரன்
தூண்டுபுரவிப்பொருவில்சுந்தரமணித்தேர்
நீண்டகொடிமாடநிரைவீதிநிறையப்போய்ப்
பூண்டபுகழ்மன்னனுறைகோயில்புகலோடும். (கக)

வே று.

ஆங்குவந்தடைந்தவண்ணலாசையின்கவரிவீசப்
பூங்குழன்மகளிருள்ளம்புதுக்களியாடநோக்கி
வீங்கிருங்காதல்காட்டிவிரிமுகக்கமலபீடத்
தோங்கியமகுடஞ்சூடியுவகைவீற்றிருப்பக்காணன் (கOO)

வேத்தவைமுனிவரோடுவிருப்பொடுகெளிக்குமெய்ம்மை
எத்தவையிசைக்குஞ்செம்பொன்மண்டபமினிதினெய்தான்
ஒத்தவையுலகத்தெங்குமுள்ளவையுணர்ந்தாருள்ளம்
பூத்த O வைவடிவையொப்பான்சிற்றவைகோயில்புக்கான். (கOக)

புக்கவன்றன்னைநோக்கிப்புரவலர்முனிவர்யாரும்
தக்கதேதினைந்தான்றாதைதாமரைச்சரணஞ்சூடித்
திக்கினைநிமிர்த்தகோலச்செல்வனேசெம்பொற்சோதி
மிக்குயர்மகுடஞ்சூட்டச்சூடுதல்விழுமிதென்றார். (கOஉ)

ஆயனநிகழும்வேலையண்ணலுமயர்ந்துதேறாத்
தூயவனிருந்தசூழறுவினன்வருதனோக்கி
காடகனுரையான்வாயானனிதுபகர்வேனென்றுத்
தாயெனநினைவான்முன்னேகூற்றெனத்தமியள்வந்தாள். (கOங)

---

* பூவலயமின்று தனியன்று பொதுவென்பதற்கு வட்டமாகிய நிலவுலகம் இன்று தனிமை அவன் பிறவாதமுன் பொதுவென்பதன்றி இற்றைநாள் ஸ்ரீராமனுக்கே நிலவலயமுரித்து யலர்க்கு முரித்தன்றெனக் கொள்ளுமாம்.

† ஐவடிவு-பரத்துவம், வியூகம், விபவம், அந்தரியாமித்துவம், அச்சாவதாரம். பரத்துவம்:- ஸ்ரீவைகுந்தத்தில் எழுந்தருளி யிருத்தல். வியூகம்:- திருப்பாற்கடலிலறிதுயிலமர்ந்திருத்தல். விபவம்: இராமாவதார முதலிய திருவவதாரங்கள். அந்தரியாமித்துவம்:-அடியவர்மனங்களிலிருத்தல். அச்சாவதாரம்:-திருக்கோயிலி லெழுந்தருளியிருத்தல்.

வந்தவடன்னைச்சென்னிமன்னுறவணங்கிவாய்த்த
சிந்துரப்பவளச்செவ்வாய்செங்கையிற்புதைத்துமற்றைச்
சுந்தரத்தடக்கைதானைமடக்குறத்துவண்டுநின்றான்
அந்திவந்தடைந்ததாயைக்கண்டவான்கன்றினன்னான். (௧௦௪)

நின்றவன்றன்னைநோக்கியிரும்பினாலியைந்தநெஞ்சிற்
கொன்றுழல்கூற்றமென்னும்பெயரினிற்கொடுமைபூண்டாள்
இன்றெனக்குணர்த்தலாவதேயதேயென்னினாகும்
ஒன்றுனக்குந்தைமைந்தவுரைப்பதோருரையுண்டென்றாள். (௧௦௫)

எந்தையேயேவநீரேயுரைசெயவியைவதுண்டேல்
உய்ந்தனனடியேனென்னிற்பிறந்தவருளரோவாழி
வந்ததென்றவத்தினாயவருபயன்மற்றொன்றுண்டோ
தந்தையுந்தாயுநீரேதலைநின்றேன்பணிமினென்றான். (௧௦௬)

ஆழிசூழுலகமெல்லாம்பரதனேயாளநீபோய்த்
தாழிருஞ்சடைகடாங்கித்தாங்கருந்தவமேற்கொண்டு
பூழிவெங்கானநண்ணிப்புண்ணியத்துறைகளாடி
ஏழிரண்டாண்டின்வாவென்றியம்பினனரசனென்றாள். (௧௦௭)

இப்பொழுதெம்மனோராலியம்புதற்கெளிதேயாரும்
செப்பருங்குணத்திராமன்றிருமுகச்செவ்விநோக்கில்
ஒப்பதேமுன்புபின்பவ்வாசகமுணரக்கேட்ட
அப்பொழுதலர்ந்தசெந்தாமரையினைவென்றதம்மா. (௧௦௮)

தெருளுடைமனத்துமன்னனேவலிற்றிறம்பவஞ்சி
இருளுடையுலகந்தாங்குமின்னலுக்கியைந்துநின்றான்
உருளுடைச்சகடம்பூண்டவுடையவனுய்த்தகாரே
றருளுடையொருவனீக்கவப்பிணியவிழ்ந்ததொத்தான். (௧௦௯)

மன்னவன்பணியன்றாகினும்பணிமறுப்பனோவென்
பின்னவன்பெற்றசெல்வமடியனேன்பெற்றதன்றோ
என்னினியுறுதியப்பாலிப்பணிதலைமேற்கொண்டேன்
மின்னொளிர்கானமின்றேபோகின்றேன்விடையுங்கொண்டேன். (௧௧௦)

௩-வது. கைகேசிசூழ்வினைப்படல முற்றிற்று.

ஆ- திருவிருத்தம்-௨௯௫.

௪-வது-நகர் நீங்குபடலம்.

என்றுகொண்டினையகூறியடியிணையிறைஞ்சிமீட்டுந்
தன்றுணைத்தாதைபாதமத்திசைநோக்கித்தாழ்ந்து
பொன்றிணிபோதினாளும்பூமியும்புலம்பிநையக்
குன்றினுமுயர்ந்ததோளான்கோசலைகோயில்புக்கான். (௧)

குழைக்கின்றகவரியின்றிக்கொற்றவெண்குடையுமின்றி
* இழைக்கின்றவிதிமுன்செல்லத்தருமம்பின்னிரங்கியேக
மழைக்குன்றமனையான்மௌலிகவித்தனன்வருமென்றென்று
தழைக்கின்றவுள்ளத்தன்னாள்முன்னொருதமியன்சென்றான். (௨)

புனைந்திலன்மௌலிகுஞ்சிமஞ்சனப்புனிதநீரால்
நனைந்திலனென்கொலென்னுமையத்தாளிணைபாதம்
வனைந்தபொற்கழற்கால்வீரன்வணங்கலுங்குழைந்துவாழ்த்தி
நினைந்ததென்னிடையூறுண்டோநெடுமுடிபுனைதற்கென்றாள். (௩)

வேறு.

மங்கையம்மொழிகூறலு † மானவன்
செங்கைகூப்பிநின்காதற்றிருமகன்
பங்கமில்குணத்தெம்பிபரதனே
துங்கமாமுடிசூடுகின்றானென்றான். (௪)

முறைமையன்றென்பதொன்றுண்டுமும்மையின்
நிறைகுணத்தவனின்னினுநல்லனால்
குறைவிலனெனக்கூறினணால்வர்க்கும்
மறுவிலன்பினில்வேற்றுமைமாற்றினாள். (௫)

என்றுபின்னருமன்னவனேவிய
தன்றெனாமைமகனேயுனக்கறன்
நன்றுநும்பிக்குநானிலநீகொடுத்
தொன்றிவாழுதியூழிபலவென்றாள். (௬)

தாயுரைத்தசொற்கேட்டுத்தழைக்கின்ற
தூயசிந்தையத்தோமில்குணத்தினான்
நாயகன்னெனைநன்னெறியுய்ப்பதற்
கேயதுண்டொர்பணியென்றியம்பினான். (௭)

ஈண்டுரைத்தபணியென்னையென்றவட்
காண்டொரேழினோடேழகன்கானிடை

---

* இழைக்கின்றவிதி - நிகழும் ஆதிசங்கற்பம்.

† மானவன் மனுகுலத்திற்றோன்றினான்-சீராமன் இது தத்திதாந்த பதம்.

* மாண்டமாதவரோடுடன்வைகிப்பின்
மீண்டுநீவரல்வேண்டுமென்றனென்றான். (அ)

ஆங்கவ்வாசகமென்னுமனல்குழை.
தூங்குதன்செவியிற்றொடாமுனம்
ஏங்கினாளிளைத்தாடிகைத்தாண்மனம்
வீங்கினாள்விம்மினாள்விழுந்தாளரோ. (௯)

வஞ்சமேமாமகனேயுனைமாநிலம்
தஞ்சமாகநீதாங்கென்றவாசகம்
† நஞ்சமோவினிநானுயிர்வாழ்வனோ
அஞ்சுமஞ்சுமென்றாருயிரஞ்சுமால். (௧௦)

கையைக்கையினெரிக்குந்தன்காதலன்
வைகுமாலிலையன்னவயிற்றினைப்
பெய்வளைத்தளிராற்பிசையும்புகை
வெய்துயிர்க்கும்விழுங்கும்புழுங்குமால். (௧௧)

நன்றுமன்னன்கருணையெனாநகும்
நின்றமைந்தனைநோக்கிநெடுஞ்சுரத்
தென்றுபோவதெனவெழுமின்னுயிர்
பொன்றும்போதுற்றதுற்றதுபோலுமே (௧௨)

அன்பிழைத்தமனத்தரசற்குநீ
என்பிழைத்தனையென்றுநின்றேங்குமால்
முன்பிழைத்தவறுமையின்முற்றினோர்
‡ பொன்பிழைக்கப்பொதிந்தனர்போலவே. (௧௩)

அறமெனக்கிலையோவெனுமாவிநைந்
திறவிடுத்ததென்றெய்வதங்காளெனும்
பிறவுரைப்பதென்கன்றுபிரிந்துழிக்
கறவையொப்பக்கரைந்துகலங்கினாள். (௧௪)

இத்திறத்தினிடருறுவாடனைக்
கைத்தலத்தினெடுத் ¶ தருங்கற்பினோய்
பொய்த்திறத்தினனுக்குதியோபுகல்
மெய்த்திறத்துநம்வேந்தனைநீயென்றான். (௧௫)

---

* மாண்டமாதவர்-தவத்தால் மனந்தூய்மையானவர்.

† காடுசெல்லச் செய்ததாகலின் 'நஞ்சமோ' என்றார்.

‡ பொன்பிழைக்கப் பொதிந்தனர்போல, நடவையிற்செல்வங்கிடைப்பவதனையிழந்தவர்போல, ¶ அருங்கற்பினோய்-கோசலையை.

* பொற்புறுத்தனமெய்ம்மைபொதிந்தன
† சொற்புறுத்தற்குரியனசொல்லினான்
‡ கற்புறுத்தியகற்புடையாடனை
வற்புறுத்திமனங்கொளத்தேற்றுவான். (௧௬)

சிறந்ததம்பிதிருவுறவெந்தையை
மறந்தும்பொய்யிலக்கிவனத்திடை
உறைந்துதீருமுறுதிபெற்றேனிதிற்
பிறந்துயான்பெறும்பேறென்பதியாவதே. (௧௭)

விண்ணுமண்ணுமிவ்வேலையுமற்றும்வே
றெண்ணும்பூதமெலாமிறந்தேகினும்
அண்ணலேவன்மறுக்கவடியனேற்
§ கொண்ணுமோவிதற்குள்ளழியேலென்றான். (௧௮)

ஆகினையவரசன்றனையால்
ஏகலென்பதியானுமுரைக்கிலென்
சாகலாவுயிர்தாங்கவல்லேனையும்
போகினின்னொடுங்கொண்டனைபோகென்றாள். (௧௯)

என்னைநீங்கியிடர்க்கடல்வைகுறும்
மன்னர்மன்னைவற்புறுத்தாதுடன்
துன்னுகானந்தொடரத்துணிவதோ
அன்னையேயறம்பார்க்கிலையாமென்றான் (௨௦)

வரிவிலெம்பியிம்மண்ணரசாயவற்
குரிமைமாநிலமுற்றபின்கொற்றவன்
திருவினீங்கித்தவஞ்செயுநாளுடன்
அருமைநோன்புகளாற்றுதியாமன்றே. (௨௧)

சித்தநீதிகைக்கின்றதென் $ தேவரும்
ஒத்தமாதவஞ்செய்துயர்ந்தாரன்றே
எத்தனைக்குளவாண்டுகளீண்டவை
0 பத்துநாலும்பகலலவோவென்றான் (௨௨)

முன்னர்க்கோசிகனென்னுமுனிவரன்
தன்னருட்டலைத்தாங்கிய ¶ விஞ்சையும்

---

* பொற்பு-அழகு. † சொற்பு சொற்றன்மை. ‡ கற்பு-கணவன்வழி நிற்றல்.

§ ஒன்றுமோ-ஒண்ணுமோ எனமரீஇயது.

$ தேவருந்தவஞ்செய்தே யுயர்ந்தாராகலின் 'தேவருமொத்தமாதவஞ்செய்துயர்ந்தார்' என்றார்.

0 'பத்துநாலுபகலலவோ, தேவமானத்தால்பதினான்குநாளல்லவா, விஞ்ஞை-மந்திரம், விற்றொழில்.

பின்னரெய்தியபேறம்பிழைத்தவோ
இன்னநன்றவர்க்கேயினசெய்தலே. (௨௩)

மாதவர்க்குவழிபாடிழைத்தரும்
போதமுற்றிப்பொருவருவிஞ்சைகள்
ஏதமற்றனதாங்கியிமையவர்
காதல்பெற்றாநன்காவரக்காண்டியால். (௨௪)

மகரவேலைமண்டொட்டவண்டாடுதார்ச்
சகரர்தாதைபணிதலைநின்றுதம்
புகரில்யாக்கையினின்னுயிர்போக்கிய
நிகரின்மாப்புகழ்நின்றதன்றோவெனா (௨௫)

மான்மறிக்கரத்தான்மழுவேந்துவான்
தான்மறுத்திலன்றாதைசொற்றாயையே
ஊனறக்குறைத்தானுரவோனருள்
யான்மறுப்பதென்றெண்ணுவதோவென்றான். (௨௬)

இத்திறத்தவெனைப்பலவாசகம்
உய்த்துரைத்தமகனுரையுட்கொளா
எத்திறத்துமிறக்குமிந்நாடெனா
மெய்த்திறத்துவிளங்கிழையுன்னுவாள். (௨௭)

அவனிகாவல்பரதனதாகுக
இவனிஞ்ஞாலமிறந்திருங்கானிடைத்
தவனிலாவகைகாப்பென்றகைவிலாப்
புவனிநாதற்றொழுதென்றுபோயினான். (௨௮)

போகின்றானைத்தொழுதுபுரவலன்
ஆகமற்றவடன்னையுமாற்றியிச்
சோகந்தீர்ப்பவளென்றுசுமித்திரை
மேகந்தோய்தனிக்கோயிலைமேயினான். (௨௯)

நடத்தகோசலைகேகயநாட்டிறை
மடந்தைகோயிலையெய்தினண்மன்னவன்
கிடந்தபார்மிசைவீழ்ந்தனள்கெட்டுயிர்
உடைந்தபோழ்தினுடல்விழுந்தென்னவே. (௩0)

வேறு.

பிறியாற்பிறிவேதென்னும்பெரியோய்தகவோவென்னும்
நெறியோவடியேந்நிலைநீநினையாநினைவேதென்னும்
வறியோர்தனமேயென்னுந்தமியேன்வலியேயென்னும்
அறிவோவினையோவென்னுமரசேயரசேயென்னும். (௩௧)

இருளற்றிடவுற்றொளிருமிரவிக்கெதிருந்திகிரி
உருளத்தனியுய்த்தொருகோனடையிற்கடைகாணுலகம்
பொருளற்றிடமுற்றுறுமப்பகலிற்புதெற்கென்றோ
அருளக்கருதிற்றிதுவோவரசர்க்கரசேயென்னும். (௩௨)

திரையார்கடல்சூழுலகின்றவமேதிருவின்றிருவெ
நிரையார்கலையின்கடலேநெறியார்மறையின்னிலையே
கரையாவயர்வேனெனைநீகருணாலயனேயெனிநெ
றுரையாவிதுதானழகோவுலகேழுடையாயென்னும். (௩௩)

* மின்னின்றனையமேனிவெறிதாய்விடநின்றதுபோல்
உன்னுந்தகைமைக்கடையாவுறநோபுறநின்றுணரான்
இன்னென்றுரையானென்னேயிதுதான்யாதென்றறியேன்
மன்னன்றகைமைகாணவாராய்மகனேயென்னும் (௩௪)

இவ்வாறழுவாளிரியற்குரல்சென்றிசையாமுன்னம்
ஒவ்வாதொல்லாதென்னுவொளிவாணிருபர்முனிவர்
அவ்வாறறிவாயென்னவந்தான்முனிவன்னவனும்
வெவ்வாளரசன்னிலைகண்டென்னும்வினைவென்றன்ன. (௩௫)

இறந்தானல்லன்னரசன்னிறவாதொழிவானல்லன்
மறந்தானுணர்வென்றன்னவன்கேகயர்கோன்மங்கை
துறந்தாயோர்தன்னைத்துறவாதெழிவாளிவளே
பிறந்தார்பெயருந்தன்மையிறாலறிதற்கெளிதோ. (௩௬)

என்னுவுன்னுமுனிவனிடாலழுவாயெரம்
சொன்னளாகாளெனமுன்னொழுகேகயர்கோன்மகளை
அன்னுயுறையாயரசனயர்வானிலையென்னென்னத்
தன்னுனிகழ்ந்ததன்மைதானேதெரியச்சொன்னான். (௩௭)

சொற்றாள்சொற்றுமுன்னஞ்சுடர்வாளரசர்க்கரசைப்
பொற்றாமரைபோற்கையாற்பொடிசூழ்படிநின்மறழுவிக்
கற்றாயயரேலவளேதருநின்காதற்கரசன்
றெற்றேசெயலின்றொழிநீயென்றென்றிரவாநின்றான். (௩௮)

சீதப்பனிநீரளவித்திண்காலுதவுந்தண்கால்
போதத்தளவேதவழ்வித்தின்சொற்புகலாநின்றான்
ஓதக்கடனஞ்சனையாளுரைநஞ்சொருவாறவியக்
காதற்புலவன்பெயரேபுகல்வானுயிருங்கண்டான். (௩௯)

---

* மின்தோன்றிய வழிநிற்றல்கண்கூடாகமாட்டாமையின் 'மின்னின்றனையமேனி, என்றார்.

காணுலையாவினிநீயொழிவாய்கழிபேரவலம்
* ஆணையகனேயினிநாடாள்வானிடையூறுளதோ
மாணுவுரையாடானேதருமாமழையேயனையான்
பூணுதொழிவானெனில்யாமுளமோபொன்றேலென்றான். (௪௦)

என்றம்முனிவன்றன்னைநினையாவினையேனினியான்
பொன்றும்மளவில்லவனைப்புனைமாமகுடம்புனைவித்
தொன்றும்வனமென்றன்னவண்ணஞ்செய்தென்னுரையும்
குன்றும்பழிபூணுமற்காவாய்கோவேயென்றான். (௪௧)

முனியும்முனியுஞ்செய்கைக்கொடியாண்முகமேமுன்னி
இனியுன்புதல்வற்கரசுமேனையோர்க்கின்னுயிரும்
மனுவின்வழிநின்கணவற்குயிரும்முதவிவசைதீர்
புனிதம்மருவும்புகழேபுனையாய்பொன்னேயென்றான். (௪௨)

மொய்ம்மாண்வினைவேரறவென்றொழிவான்மொழியாமுன்னம்
விம்மாவழுவாளரசன்மெய்யிற்றிரிவானென்னில்
இம்மாவுலகத்துயிரோடினிவாழ்வுகவேனென்சொல்
பொய்ம்மாணுமற்கின்றேபொன்றாதொழியேனென்றாள். (௪௩)

கொழுநன்றுஞ்சும்மெனவுங்கொள்ளாதுலகம்மெனவும்
பழிநின்றுயரும்மெனவும்பாவம்முளதாமெனவும்
ஒழிகின்றிலையன்றியுமொன்றுணர்கின்றிலையானினிமேல்
மொழிகின்றனவென்னென்னாமுனியும்முறையன்றென்பான். (௪௪)

கண்ணோடாதேகணவனுயிரோடிடர்காணாதே
புண்ணோடுங்கனலோவிடமோவென்னப்புகல்வாய்
பெண்ணோதீயோமாயாப்பேயோகொடியாய்நீயிம்
மண்ணோடுன்னோடென்னும்வசையோவலிதேயென்றான். (௪௫)

வாயான்மன்னன்மகனைவனமேகென்னாமுன்னம்
நீயோசொன்னாயவனோநிமிர்கானிடைவெந்நெறியில்
பேயோபுகலோதவிரான்புகழோ † டுயிரைச்சுடுவெந்
தீயோய்நின்போற்றீயாருளரோசெயலென்னென்றான். (௪௬)

தாவின்முனிவன்புகலத்தளராநின்றமன்னன்
‡ நாவினஞ்சம்முடையநங்கைதன்னைநோக்கிப்
பாவிநீயேவெங்கான்படர்வாயென்றென்னுயிரை
ஏவினாயோவவனுமேகினானேயென்றான். (௪௭)

---

* ஆணையகன் - புருடோத்தமனென்னும்பெயர்பற்றி வந்தது.

† புறத்தேசுடுந் தீயைப்போலாதுயிரைச் சென்றுவெதுப்புந் தீயாகலின் 'உயிரைச்சுடுவெந்தீ' என்றார்.

‡ விடத்தைப்பாலின்கணுடைய நாகத்தினின்றும் வேறுபடுத்தற்கு 'நாவினஞ்சமுடைய' என்றார்.

கண்டேனெஞ்சங்கனிவாய்க்கனிவாய்விடாவெனநோன்
உண்டேனதனுனீயென்னுயிரைமுதலோடுண்டாய்
பண்டேயெரிமுன்னுன்னைப்பாவீதேவீயாகக்
கொண்டேனல்லேன்வேறோர்கூற்றந்தேடிக்கொண்டேன். (சஅ)

விழிக்குங்கண்வேறில்லாவெங்கானென்கான்முளையைச்
* சுழிக்கும்வினையாலேகச்சூழ்வாயென்னைப்போழ்வாய்
பழிக்குநாணாய்மாணாப்பாவியினியென்பலவுன்
கழுத்தினாணுன்மகற்குக்காப்பினாணுமென்றான். (சகூ)

இன்னேபலவும்பகர்வானிரங்காதாளைநோக்கிச்
சொன்னேனின்றேயிவளென்றாரமல்லடுறந்தேன்
மன்னனேயாவான்வருமப்பரதன்றனையுமகனென்
றுன்னேன்முனிவாவவனுமாகானுரிமைக்கென்றான். (ருo)

என்னைக்கண்டும்மேகாவண்ணம்மிடையூறுடையான்
உன்னைக்கண்டும்மிலனேயென்றானுயர்கோசலையைப்
பின்னைக்கண்டானனையான்பிரியக்கண்டதுயரம்
தன்னைக்கண்டேதவிர்வான்தளர்வாணிலைபிற்றளர்வான். (ருக)

மாற்றாள்செயலாமென்றுங்கணவன்வரமீந்துள்ளம்.
ஆற்றாதயாந்தானென்றுமறிந்தாளவளும்மவனைத்
தேற்றாநின்றாண்மகனைத்திரிவாவென்றாளரசன்
தோற்றான்மெய்யென்றுலகஞ்சொல்லும்பழிக்குஞ்சோர்வான். (ருஉ)

தன்னாணிலைசான்மெய்ம்மைதழுவாவழுவாவகைநின்
றெள்ளாநிலைகூர்பெருமைக்கிழிவாமென்றா † லுரவோய்
வில்லாணிலைசேரான்பான்மகன்மேன்மெலியினுலகம்
கொள்ளாதன்றேவென்றாள்கணவன்குறையக்குறைவாள். (ருங)

போவாதோழியாவென்றாள்புதல்வன்றன்னைக்கணவன்
சாவாதொழியாவென்றென்றுள்ளந்தளர்வுற்றயர்வாள்
காவாயென்றாண்மகனைக்கணவன்புகழுக்கழிவாள்
ஆவாவுயர்கோசலையாமன்னம்மென்னுற்றனளே. (ருச)

உணர்வானனையாளுரையாலுயர்ந்தானுரைசால்குமரன்
புணரானிலமேவணமேபோவானேயாமென்றே
இணரார்தருதாரரசனிடராலயர்வான்வினையேன்
துணைவாதுணைவாவென்றான்றேன்றால்தோன்றாயென்றான். (ருரு)

---

* சுழிக்கும்வினை - முன்னைவினை என்பதன்றி வரங்கொடுத்தமையாகிய கொடுந் தொழிலுமாம்.

† அறிவுடையானெனப்பட்டுகன்றன்றென்பாள் 'உரவோய்,' என்றூர்.

கண்ணும்நீராயுயிரும்மொழுகக்கழியாநின்றேன்
எண்ணும்நீர்நான் மறையோரெரிமுன்னின்மேற்சொரிய
மண்ணும்நீராய்வந்தபுனலமகனே வினையேற்
குண்ணும்நீராயுதவியுயர்கானடைவாயென்றான் (௫௬)

படைமாணரசைப்பலகாற்பழுவாய்மழுவாலெறிவான்
மிடைமாவலிதானனையான் வில்லாலடுமாவல்லாய்
உடைமாமகுடம்புனையென் றுரையானவுடனேகொடியோன்
சடைமாமகுடம்புனையத்தந்தேனந்தோவென்றான். (௫௭)

கறுத்தாயுருவம்மனமுங்கண்ணுங்கையுஞ்செய்ய
பொறுத்தாய்பொறையேயிறைவன்புரமூன்றெரித்தபோர்வில்
இறுத்தாய்தமியேனென்றோதென்னையிம்மூப்பிடையே
வெறுத்தாயினிநான்வாணாள்வேண்டேன்வேண்டேனென்றான். (

பொன்னின்முன்னம்மொளிரும்பொன்னேபுகழின்புகழே
மின்னின்மின்னும்வரிவிற்குமராமெய்யின்மெய்யே
என்னின்முன்னம்வனநீயடைதற்கெளியேனல்லேன்
உன்னின்முன்னம்புகுவேனுயர்வானகம்யானென்றான். (௫௯)

நெகுதற்கொத்தநெஞ்சம்நேயத்தாலேயாவி
உகுதற்கொத்தவுடலுமுடையேனுன்போலல்லேன்
† தகுதற்கொத்தசனகன்றையல்கையைப்பற்றிப்
புகுதக்கண்டகண்ணாற்போகக்காணேனென்றான். (௬௦)

எற்றேபகர்வேனினியானென்னையுன்னிற்பிரிய
வற்றேயுலகம்மெனினம்வானேவருந்தாதெனினும்
பொற்றேரரசேதமியேன்புகழேயுயிரேயுன்னைப்
பெற்றேனருமையறிவேன்பிழையேன்பிழையேனென்றான். (௬௧

அள்ளற்பள்ளப்புனல்சூழகன்மாநிலமுமரசும்
கொள்ளக்குறையாநிதியின்குவையும்முதலாமெவையும்
‡ கள்ளக்கைகேசிக்கேயுதவிப்புகழ்கைக்கொண்ட
வள்ளற்றனமென்னுயிரைமாய்க்கும்மாய்க்கும்மென்றான். (௬௨)

ஒலியார்கடல்சூழுலகத்துயர்வானிடைநாகரினும்
பொலியாநின்றானுன்னைப்போல்வாருளரோபொன்னே

---

* 'கரிய வேர' என்பவராகலின் கறுத்தாயுருவமென்றும், கண் கைகால்முதலியன செந்தாமரையொப்பவாகலின் மனமுங்கண்ணுங் கையுஞ் செய்யபொறுத்தா யென்றுங்கூறினார்.

† தவவொழுக்கநனி நிரம்பியோகனாகலின் சனகனைத் 'தகுதற்கொத்த' வெனவிசேடித்தார்.

‡ நல்லவள்போற் காட்டிவஞ்சித்தலின் 'கள்ளக்கைகேசி, யென்றார்.

வலியாருடையாரென்றான் * மழுவாளுடையான்வரவும்
சலியாநிலையாயென்றாற்றவிர்வாருளரோவென்றான் (௬௩)

கேட்டேயிருந்தேனெனினுங்கிளர்வானின்றேயடைய
மாட்டேனாகிலன்றோவன்கண்ணேனென்கண்மைந்தா
காட்டேயுறைவாய்நீயிக்கைகேசியையுங்கண்டிந்
நாட்டேயுறைவேனென்றானன்றென்றன்மையென்றான். (௬௪)

மெய்யார்தவமேசெய்துன்மிடன்மார்பரிதிற்பெற்ற
† செய்யாளென்னும்பொன்னும்நிலமாதென்னுந்திருவும்
உய்யாருய்யார்கெடுவேனுன்னைப்பிரியின்வினையேன்
அய்யாகைகேசியைநேராகேனோநானென்றான். (௬௫)

பூணாரணியும்முடியும்பொன்னாசனமுங்குடையுஞ்
சேணார்மார்புந்திருவுந்தெரியக்காணத்திரிவேன்
மாணாமாவற்கலையுமானின்றோலும்மவைநான்
காணாதொழிந்தேனென்றானன்றாய்த்தன்றோகருமம். (௬௬)

என்றாவொன்றொன்றொவ்வாவிசைதந்தரசனுயிரும்
சென்றானின்றோடென்னுந்தன்மையெய்தித்தேய்ந்தான்
‡ மென்றோன்மார்பின்முனிவன்வேய்ந்தேயயரேலவனை
இன்றேகாதவண்ணந்தகைவெனுலகோடென்றான். (௬௭)

முனிவன்சொல்லும்மளவின்முடியுங்கொல்லென்றரசன்
தனிநின்றழறன்னுயிரைச்சிறிதேதகைகானிந்தப்
புனிதன்போனவிவனாற்போகாதொழிவானென்னா
மனிதன்வடிவங்கொண்டமனுவுந்தன்னைமறந்தான். (௬௮)

மறந்தானினைவும்முயிரும்மன்னனென்னாமறுகா
இறந்தான்கொல்லோவரசனென்னாவிடருற்றழிவாள்
துறந்தாய்மதனேயுலகோடெமையும்மென்னாத்துணையாம்
அறந்தானிதுவோவையாவரசர்க்கரசேயென்றாள். (௬௯)

மெய்யின்மெய்யேபுலகின்வேந்தர்க்கெல்லாம்வேந்தே
உய்யும்வகைநின்னுயிரையோம்பாதிங்ஙன்றேம்பில்
வய்யம்முழுதுந்துயரான்மறுகும்முனிவனுடம்
அய்யன்வரினும்வருமாலயரேலரசேயென்றாள். (௭0)

என்றென்றரசன்மெய்யுமிருதாளிணையும்முகமும்
தன்றன்செய்யகையாற்றைவந்திடுகோசலையை

---

* மழுவாளுடையான் பரசுராமன்.
† பொன்னுக்கதி தெய்வமாகலின் செய்யாளென்னுந் திருவு மென்றார்.
‡ மென்றோல் ஈண்டுமான்றோல்.

ஒன்றுந்தெரியாமலுள்ளத்தரசன்மெள்ள
* வன்றிண்சிலைநங்குருசில்வருமேவருமேயென்றான். (௭௧)

வன்மாயக்கைகேசிவாக்காலென்றன்னுயிரை
முன்மாய்விப்பத்துணிந்தாளேனுங் † கூனிமொழியால்
தன்மாமகனுந்தானுந்தரணிபெறுமாறன்றி
என்மாமகனைக்கானேகென்றாளென்றான். (௭௨)

பொன்னார்தோளான்கானேபுகுதப்புகுதறவிரான்
என்னாருயிரோவகலாதொழியாதிதுகோசலைகேள்
முன்னாளொருமாமுனிவன்மொழியுஞ்சாபமுளதென்
றந்நாளுற்றதெல்லாமவளுக்கரசனறைவான்: (௭௩)

வெய்யகானத்திடையேவேட்டைவேட்கைமிகவே
அய்யசென்றுகரியோடரிகடுருவித்திரிவேன்
கய்யார்சிலையுங்கணையுங்கொடு ‡ கார்மிருகம்வருமோர்
செய்யநதியின்கரைவாய்ச்சென்றேமறையநின்றேன். (௭௪)

ஒருமாமுனிவன்மனையோடொளியொன்றிலவாய்நயனம்
இருமாமகனே துணையாய்த்தவமேபுரிபோழ்தினில்வாய்
அருமாமகனேபுனல்கொண்டகல்வான்வருமாறறியேன்
பொருமாகணைவிட்டிடலும்புவிமீதலறிப்புரள. (௭௫)

புக்குப்பெருநீர்நுகரும்பொரு § போதகமென்றொலிமேல்
கைக்கட்கணைசென்றதலாற்கண்ணிற்றெரியக்காணேன்
அக்கைக்கரியின்குரலேயன்றீதென்னவெருவா
மக்கட்குரலென்றயர்வேன்மனம்நொந்தவண்வந்தனனால். (௭௬)

கய்யுங்கடனுந்நெகிழக்கணையோடுருள்வோற்காணா
மெய்யுந்தனுவும்மனனும்வெறிதேகிடமேல்வீழா
அய்யன்னீதான்யாவன்னந்தோவருள்கென்றயரப்
பொய்யொன்றறியாமைந்தன்கேணீயென்னப்புகல்வான். (௭௭)

○ சேலாகியமாமுதல்வன்றிருவுந்தியினீண்மலரின்
மேலாகியநான்முகனால்வேதங்களின்மாமுறையின்
பாலாகியயோனிகளின்பலவாம்வருணந்தருவான்
நாலாகியதாம்வருணந்தனின்முன்னெமைநல்கினனால். (௭௮)

அந்நான்மறையோன்வழியிலருள்காசிபன்மைந்தன்
மின்னார்புரிநூன்மார்பன்விருத்தேசனன்மெய்ப்புதல்வன்

---

* பரசுராமனையென்றவாற்றோன்ற 'வன்றிண்சிலைநங்குரிசி, லென்றார். † கூனி-மந்தரை. ‡ கார்மிருகமென்றது யானையை.
§ போதகம்-யானை. ○ சேலாகியமாமுதல்வன்-மச்சவடிவங்கொண்ட திருமால்.

நன்ஞன்மறைநூறெறியும்காவான்சலபோசனனெனச்
சொன்ஞன்முனிவன்றருசுரோசனன்யானென்ருன். (எக)

இருகண்களுமின்றியதாய்தந்தைக்கும்மீங்கிவர்கள்
* பருகும்புனல்கொண்டகல்வான்படர்ந்தேன்பழுதாயினதால்
இருகுன்றனையபுயத்தாயிபமென்றுணராதெய்தாய்
உருகுந்துயரந்தவிர்நீயூழின்செயலீதென்ருன். (அ௦)

உண்ணீர்வேட்கைமிகவேயுயங்குமெந்தைக்கொருநீ
தண்ணீர்கொடுபோயளித்தென்சாவும்மூரைத்தும்புதல்வன்
விண்மீதடைவான்றொழுதானெனவும்மவர்பால்விளம்பென்
றெண்ணீர்மையினுன் † விண்ணேறெதிர்கொண்டிடவேகினுல்.()

மைந்தன்வரவேநோக்கும்வளமாதவன்பான்மகவோ
டந்தண்புனல்கொண்டணுகவையாவிதுபோதளவாய்
வந்திங்கணுகாதென்னேவந்ததென்றேநொந்தோம்
சந்தங்கமழுந்தோளாய்தழுவிக்கொளவாவெனவே. (அஉ)

அய்யாயானேரரசனயோத்திநகரத்துள்ளேன்
மய்யார் ‡ களபந்துருவிமலைறந்தேவதிந்தேனிருள்வாய்
பொய்யாவாய்மைப்புதல்வன்புனன்மொண்டிடுமோதையின்மேல்
கய்யார்கணைசென்றதலாற்கண்ணிற்றெரியக்காணேன். (அங)

வீட்டுண்டலறுங்குரலால்வேழக்குரலன்றெனவே
ஓட்டந்தெதிராநீயாரெனவுற்றவெலாமுரையா
வாட்டந்தருநெஞ்சினனய்நின்ருன்வணங்காவானேர்
ஈட்டம்மெதிர்வந்திடவேயிறந்தேகினன்விண்ணிடையே. (அச)

அறுத்தாய்கணையாலெனவேயடியேன்றன்னையையா
¶ கறுத்தேயருளாயானேகண்ணிற்கண்டேனல்லேன்
மறுத்தானில்லான்வனமொண்டிடுமோதையினெய்ததலால்
பொறுத்தேயருள்வாயென்னுவிருதாள்சென்னிபுனைந்தேன். (அரு)

வீழ்ந்தாரயர்ந்தார்புரண்டார்விழிபோயிற்றின்றென்ருர்
ஆழ்ந்தார்துன்பக்கடலுள்ளையாவையாவென்ருர்
போழ்ந்தாய்நெஞ்சையென்ருர்பொன்ஞடதனிற்போய்நீ
வாழ்ந்தேயிருப்பத்தரியேம்வந்தேம்வந்தேமினியே. (அசு)

என்றென்றயருந்தவரையிருதாள்வணங்கியானே
இன்றம்புதல்வன்னினிநீரேவும்பணிசெய்திடுவேன்

* பருகும்புனல் - உண்ணீர். † துன்மரணமாகா தூழினடந்தமையால் 'விண்ணேறெதிர்கொண்டிடவேகின, னென்ருர்.

‡ களபம்-யானை. ¶ கறுத்தல்-கோபித்தல்.

ஒன்றார்தளர்வுற்றயர்நீரொழிமின்னிடரென்றிடலும்
வன்றிண்சிலையாய்கேண்மோவெனவேயொருசொல்வகுத்தார். ()

* கண்ணுண்மணிபோன்மகவையிழந்தும்முயிர்காதலியா
உண்ணாவெண்ணியிருந்தாலுலகோரென்னென்றுரையார்
விண்ணின்றலைசேருதும்யாமெம்போல்விடலைபிரியப்
பண்ணும்பரிமாவுடையாயடைவாய்படர்வானென்னா, (௮)

தாவாதொளிருங்குடையாய்தவறிங்கிதுநின்சரணம்
காவாயென்றயதனாற்கடியசாபங்கருதேம்
† ஏமாமகவைப்பிரிந்தின்றெம்போலிடருற்றனைநீ
போவாயகல்வானென்னாப்பொன்னாட்டிடைபோயினரால். (௯)

சிந்தைதளர்வுற்றயர்தல்சிறிதும்முலனாயின்சொல்
மைந்தனுளனென்றதனான்மகிழ்வோடிவண்வந்தனனால்
அந்தமுனிசொற்றமையுமண்ணல்வனமேகுதலும்
என்றன்னுயிர்வீகுதலுமிறையுந்தவறாவென்றான். (௧௦)

இம்மாமொழிதந்தரசன்னிடருற்றிடுபோழ்தினிலச்
‡ செம்மாமயில்கோசலையுந்திகையாவுணர்வோய்வினளாய்
விம்மாநெறியின்விதியின்விளைவுந்தளர்வின்றொடர்வும்
அம்மாதவனும்விரைவோடவலந்தருநெஞ்சினனாய். (௧௧)

வேறு.

உரைசெய்பெருமையுயர்தவத்தோரோங்கல்
புரைசெய்மதகளிற்றான்பொற்கோயின்முன்னர்
முரைசமுழங்கமுடிசூட்டமொய்த்தாண்
டரைசனினிதிருந்தநல்லவையினான் (௧௨)

வந்தமுனியைமுகநோக்கிவாள்வேந்தர்
எந்தைபுகுதற்கிடையூறுண்டாயதோ
அந்தமில்சோகத்தழுதகுரானென்னச்
சிந்தைதெளிந்தோய்தெரியெமக்கிவ்வென்றுரைத்தார். (௧௩)

கொண்டாள்வரமிரண்டுகைகயர்கோன்கொம்பவட்குத்
தண்டாதசெங்கோற்றயாதனுக்தானளித்தான்
ஒண்டார்முகிலைவனம்போகென் § றொருப்படுத்தாள்
எண்டானும்வேறில்லைநீதடுத்தவாறென்றான். (௧௪)

---

* கண்ணிற்குண்மணியறிவிப்பதுபோன்று சீராமனறிவித்தலின் 'கண்ணுண்மணிபோன்மகவை, என்றார்.

† குறிப்பறிந்து செய்யுமகன் ஏவாமகன்

‡ சாயலைநோக்கிச் 'செம்மாமயி, லென்றதென்க.

§ ஒருப்படுத்தல்-உடன்படுத்தல்.

வேந்தன்பணியினாற்கைகேசிமெய்ப்புதல்வன்
பார்தண்மிசைக்கிடந்தபாரளிப்பானாயினான்
ஏந்துதடந்தோளிராமன்றிருமடந்தை
காந்தனொருமுறையேகாடுறைவானாயினான். (௯௫)

வாரார்முலையாருமற்றுள்ளமாந்தர்களும்
ஆராதகாதலரசர்களுமந்தணரும்
* போராதவாய்மைப்பெரியோனுரைசெவியிற்
சாராதமுன்னந்தயரதப்போல்வீழ்ந்தார். (௯௬)

புண்ணுற்றதீயிற்புகையுற்றுயிர்பதைப்ப
மண்ணுற்றயர்ந்துமறுகுற்றுடம்பெல்லாம்
கண்ணுற்றவாரிகடலுற்றதந்நிலையே
விண்ணுற்றதெம்மருங்கும்விட்டழுதபேரோசை. (௯௭)

மாதருங்கலமுஞ்மங்கலமுசித்தித்தம்
கோதையுடைபெயரக் † கூற்றனையகண்சிவப்பப்
பாதமலர்சிவப்பத்தாம்பதைத்துப்பார்சேர்ந்தார்
ஊதையெறியவொசிபூங்கொடியொப்பார். (௯௮)

ஆவாவரசனருளிலனேயாமென்பார்.
காவாவறத்தையினிக்கைவிடுவேம்யாமென்பார்
தாவாதமன்னர்தலைத்தலைவீழ்ந்தேங்கினார்
‡ மாவாதஞ்சாய்த்தமராமரமேபோல்கின்றார். (௯௯)

கிள்ளையொடுபூவையழுதகிளர்மாடத்
துள்ளுறையும்பூசையழுதவுருவறியாப்
பிள்ளையழுதபெரியோரையென்சொல்ல
வள்ளல்வனம்புகுவானென்றுரைத்தமாற்றத்தால். (௧௦௦)

சேதாம்பற்போதனையசெங்கனிவாய்வெண்டளவப்
போதாம்பற்றோன்றப்புணர்முலைமேற்பூந்தரள
¶ மாதாம்பற்றென்னமழைக்கண்ணீராலியுக
காதாம்பற்றுமழலைநங்கைமாரேங்கினார். (௧௦௧)

ஆவுமழுதவதன்கன்றழுதவன்றலர்ந்த
பூவுமழுதபுனற்புள்ளழுதகள்ளொழுகும்
காவுமழுதகளிறழுத § கால்வப்போர்
மாவுமழுதனவம்மன்னவனைமானவே. (௧௦௨)

---

* போராதவாய்மைப்பெரியோன் வசிட்டமுனிவன்.
† கூற்றனையகண் கண்ணின்கொடுமைவிளக்கிற்று
‡ மாவாதம் பெருங்காற்று. ¶ மாதாம்பு அற்றுஎன்னஎனப்பிரிக்க
§ மடல்பெரியதாழை என்றாற்போல் காலவயம் எனவந்தது.

* ஞானீயுமுய்கலானென்றுதேநாயகனைக்
கானீயுமென்றுரைத்தகைகேசியுங்கொடிய
கூனீயுமல்லாற்கொடியார்பிறருளரோ
மெனீயுமின்றிவெறுநீரேயாயினர் (௧௦௩)

தேறுதறிவழிந்தாரெங்குலப்பார்தேரோட
நீறாகிச்சுண்ணம்நிறைந்ததெருவெல்லாம்
ஆறாகியோடினகண்ணீருநெஞ்சம்
கூறாகியோடாதவித்துணையேகுற்றமே. (௧௦௪)

மண்செய்தபாவமுளதென்பார்மாமலர்மேற்
பெண்செய்தபாவமதனிற்பெரிதென்பார்
புண்செய்தநெஞ்சைவிதியென்பார்பூதலத்தோர்
கண்செய்தபாவங்கடலிற்பெரிதென்பார். (௧௦௫)

ஆளான்பரதனரசென்பாரையனினி
மீளானமக்குவிதிகொடிதுகாணென்பார்
† கோளாகிவந்தவாகொற்றமுடிதானென்பார்
மாளாதநம்மின்மனம்வலியாராரென்பார். (௧௦௬)

ஆதியரசனருங்கேகயன்மகண்மேற்
காதன்முதிரக்கருத்தழிந்தானுமென்பார்
சீதைமணவாளன்றன்னோடுந்தீக்கானம்
போதுமதுவன்றேர்புகுதுமெரியென்பார். (௧௦௭)

கய்யானிலந்தடவிக்கண்ணீர்மெழுகுவார்
உய்யாள்போற்கோசலையென்றோவாதுவெய்துயிர்ப்பார்
அய்யா ‡ விளங்கோவேயாற்றுதியோநீயென்பார்
செய்யாழலுற்றதுற்றாரந்நீணகரார். (௧௦௮)

தள்ளூறுவேறில்லைத்தன்மகற்குப்பார்கொள்வான்
எள்ளூறியகருமம்நேர்ந்தாளிவளென்றுக்
கள்ளூறுசெவ்வாய்க்கணிகைகாண்கைகேசி
உள்ளூறுகாதலிவள்போலென்றுள்ளழிந்தார். (௧௦௯)

நின்றதவமியற்றித்தான்றீரநேர்ந்ததோ
அன்றிவ்வுலகத்துளாருயிராய்வாழ்வாரைக்
கொன்றுகளையக்குறித்தபொருளன்றோ
நன்றுவரங்கொடுத்தநாயகற்குநன்றென்பார். (௧௧௦)

---

* ஞானி, கூனி, மேனி இவற்றினீற்றிகரம் நீட்டல்விகாரம்.

† இராமமூர்த்திக்கு முடிசூட்டத்தொடங்கியது காட்டிற்குச் செல்ல நேர்ந்ததால் கோளாகிவந்தவாகொற்றமுடிதான் என்பார். ‡ இளங்கோ-இளையபெருமாள்.

பெற்றுடையமண்ணவளுக்கீய்ந்து * பிறந்துலகம்
முற்றுடையகோவைப்பிரியாதுமொய்த்தீண்டி
எற்றுறைறதும்யாருமுறையவேசின்னுளில்
புற்றுடையகாடெல்லாநாடாகிப்போமென்பார். (கசக)

என்னே † சிருபரியற்கையிருந்தவா
தன்னேரிலாததலைமகற்குத்தாரணியை
முன்னேகொடுத்துமுறைதிறப்பத்தம்பிக்குப்
பின்னேகொடுத்தாற்பிழையாதோமெய்யன்பார். (கசஉ)

கோதைவரிவிற்குமரற்கொடுத்தநில
மாதையொருவர்புணர்வரா ‡ வஞ்சித்த
பேதைசிறுவனைப்பின்பார்த்துசிற்குமா
சீதைபிரியினுந்தீராத்திருவென்பார். (கசங)

உந்தாதுசெய்வார்த்துதவாதுகாலெறிய
நந்தாவிளக்கினடுங்குகின்றநங்கைமார்
○ செந்தாமரைத்தடங்கட்செவ்வியருளோக்கம்
அந்தோபிரிதுமோவாவிதியேயோவென்பார் (கசச)

வேறு.

கேட்டானிளையோன்கிளர்ஞாலம்வரத்தினாலே
மீட்டானளித்தாள்வனந்தம்முன்னிவெம்மைமுற்றித்
தீட்டாதவேற்கட்சிறுதாயெனயாவராலும்
§ மூட்டாதகாலக்கடைத்தீயெனமூண்டெழுந்தான். (கசரு)

கண்ணிற்கடைத்தீயுகநெற்றியிற்கற்றைநாற
விண்ணிற்சுடருஞ்சுடர்தோன்றமெய்ந்நீர்விரிப்ப
உண்ணிற்குமுயிர்ப்பெனுமூதைபிறங்கநின்ற
அண்ணற்பெரியோன் ¶ றனதாதியின்மூர்த்தியொத்தான். (கசசு)

சிங்கக்குருளைக்கிடுதீஞ்சுவையூனைநாயின்
வெங்கட்கடுங்குட்டியையூட்டவிரும்பினாளோ
நங்கைக்கறிவின்றிறம்நன்றிதுநன்றிதென்னாக்
கங்கைக்கிறைவன்கடகக்கைபுடைத்துநக்கான். (கசஎ)

---

* தான்பரம்பரையாகவந்தமையின் 'பிறந்துலகமுற்று முடையகோ, வென்றார்.

† சிருபரெனவெகுளிபற்றிப் பன்மைமப்பாலாற்கூறினர்.

‡ வஞ்சித்தபேதை சிறுவன்-பரதன்.

○ 'செந்தாமரைத்தடங்கண் செவ்வியருளோக்கம்-இராமமூர்த்தியின் கருணைபொழியும் பார்வை.

§ ஊழித்தீயோடிவன் சினத்திற்கு வேற்றுமைதோன்ற மூட்டாதகாலக்கடைத்தீ, என்றார். ¶ தனதாதியின்மூர்த்தி-திருவனந்தாழ்வானை.

சுற்றார்மணியார்வடிவாள்புடைதோன் றவார்த்து
விற்றுங்கிவாளிப்பெரும்புட்டில்புறத்துவீக்கிப்
பற்றார்ந்தசெம்பொற்கவசம்பனிமேருவாங்கோர்
புற்றுமெனவோங்கியதோளொமொர்புபோர்க்க. (௧௧அ)

அடியிற்சுடர்பொற்கழலார்கலிகாணவார்ப்பப்
பொடியிற்றடவுஞ்சிறகாண்பெரும்பூசலோசை
இடியிற்றொடராக்கடலேளுமடுத்திஞ்ஞாலம்
முடியிற்குமுறும்மறைமுழும்மையின்மேன்முழங்க. (௧௧௯)

வானும்நிலனும்முதலீறில்வரம்பில்பூதம்
மேனின்றகீழ்காறும்விரிந்தனவீழ்வபோலத்
தானுந்தனதம்முனுமல்லதுமும்மைஞாலத்
தானும்முயிரும்முடையார்களுடைத்தொதுங்க: (௧௨0)

புவிப்பாவைபரங்கெடப்போருவந்தோரையெல்லாம்
அவிப்பானுமவித்தவராக்கையையண்டமுற்றக்
குவிப்பானுமெனக்கொருகோவினைக்கொற்றமௌலி
கவிப்பானுநின்றேனிதுகாக்குநர்காமினென்றான். (௧௨௧)

விண்ணாட்டவர்மண்ணவர்விஞ்சையர்நாகர்மற்றும்
எண்ணாட்டவர்யாவருநிற்கவோர்மூவராகி
* மண்ணாட்டோர்காக்குநர்வீட்டோர்வந்தபோதும்
பெண்ணாட்டமொட்டேனினிப்பேருலகத்துளென்று. (௧௨௨)

காலக்கதிரோனவெுற்றதோர்வெம்மைகாட்டி
ஞாலத்தவர்கோமகனந்நகரத்துநாப்பண்
மாலைச்சிகரத்தனிமந்தரமேருமுந்தை
வேலைத்திரிகின்றதுபோற்றிரிகின்றவேலை. (௧௨௩).

வேற்றுக்கொடியாள்விளைவித்தவினைக்குவிம்மித்
தேற்றத்தெளியாதயர் † சிற்றவைபாலிருந்தான்
ஆற்றற்றுணைத்தம்பிதன்விற்புயலண்டகோளம்
கீற்றொத்தடையப்பகோணுருமேறகேட்டான். (௧௨௪)

வீற்றுக்கியபொற்கலன்வில்லிடவாரமின்ன
மாறாத்தனிச்சொற்றுளிமாரிவழங்கிவாதான்
காருக்கமிர்ந்துபுகைந்துகனன்றபொங்கும்
ஆறாக்கனலாற்றமோ ‡ ரஞ்சனமேகமென்ன. (௧௨௫)

---

* மண்ணாட்டோர் காக்குநர் வீட்டோர்-பிரமன் மாலரன். † சிற்றவை-சுமத்திரை.

‡ தம்பிசீற்றந்தீ.ளிப்பான்பொருட்டு வருகின்றமையின் 'அஞ்சன மேக;மென்ன, என்றார்.

மின்னொத்தசீற்றக்கனல்விட்டுவிளங்கநின்ற
பொன்னொத்தமேனிப்புயலொத்தடக்கையானை
என்னொத்தவென்னீ * யிமையோரைமுனிந்திலாதாய்
சன்னத்தனாகித்தனுவேந்துதற்கேதுவென்றான். (கஉசு)

மெய்மையைச்சிதைவித்துநின்மெய்ம்முறைநீத்தநெஞ்சம்
மையிற்கரியாளெதிர்நின்னைநன்மௌலிசூட்டல்
செய்யக்கருதித்தடைசெய்குநர்தேவரேனும்
† துய்யைச்சுடுவெங்கனலிற்சுடுவான்றுணிந்தேன். (கஉஎ)

வலக் ‡ கார்முகமென்கையதாகவவ்வானுளோரும்
விலக்காரவர்வந்துவிலக்கினுமென்கைவாளிக்
கிலக்காவெரிவித்துலகேழினோடேழுமன்னர்
குலக்காவலுமின்றுனக்கியான்றரக்கோடியென்றான். (கஉஅ)

இளையானிதுகூறவிராமனியைந்தநீதி
வளையாவருநன்னெறிநின்னறிவாகுமன்றே
உளையாவறம்வற்றிடவூழ்வழுவுற்றசீற்றம்
விளையாதநிலத்துனக்கெங்ஙன்விளைந்ததென்றான். (கஉகூ)

§ நீண்டானதுரைத்தலுநித்திலந்தோற்கநக்குச்
சேண்டான்றொடர்மாநிலம்நின்னதென்றுந்தைசெய்பப்
பூண்டாய்பகையாலிழந்தேவனம்போதியென்றால்
யாண்டோவடியேற்கினிச்சீற்றமடுப்பதென்றான். (கஙo)

நின்கட்பரிவில்லவர்நீள்வனத்துன்னைநீக்கப்
புன்கட்பொறியாக்கைபொறுத்துயிர்போற்றுகேனோ
என்கட்புலமுன்னுனக்கீந்துவைத்திலையென்ற
வன்கட்புலந்தாங்கியமன்னவன்காண்கொலென்றான் (கஙக)

பின்குற்றமன்னும்பயக்கும்மரசென்றல்பேணேன்
முன்கொற்றமன்னன்முடிகொள்கெனக்கொள்ளமூண்ட
தென்குற்றமன்றோவிகன்மன்னவன்குற்றமியாதோ
மின்குற்றொளிரும்வெயிநீக்கொடைமைந்தவேலோய். (கஙஉ)

நதியின்பிழையன்றுநறும்புனலின்மையற்றே
பதியின்பிழையன்றுபயந்துநமைப்புரந்தாள்
மதியின்பிழையன்றுமகன்பிழையன்றுமைந்த
விதியின்பிழைநீயிதற்கென்னைவெகுண்டதென்றான். (கஙங)

---

* இமையோரை முனிந்திலாதாய் (க) தேவர்களை கோபியாதவன் (உ) இமைப்பொழுதாயினுங் கோபமில்லாதிருப்பவன்.

† துய்-பஞ்சினுனி. ‡ கார்முகம்-வில். § நீண்டான். திரிவிக்கிரமன்.

* உதிக்கும்முலையுள்ளுறுதீயெனவூதைபொங்கக்
கொதிக்கும்மனமெங்ஙனமாற்றுவென்கோளிழைத்தாள்
மதிக்கும்மதியாய்முதல்வானவர்க்கும்வலீஇதாம்
விதிக்கும்விதியாகுமென்விற்றொழில்காண்டியென்றான். (௧௫௪)

ஆய்ந்தந்தனவ்வுரைகூறலுமையனின்றன்
வாய்தந்தனகூறுதியோமறைதந்தநாவால்
நீதந்ததன்றேநெறியோர்கணிலாததின்று
தாய்தந்தையென்றுலவர்மேற்சலிக்கின்றதென்னே. (௧௫௫)

† நற்றாதையுநீதனியாகனீவயிற்றிற்
பெற்றாயுநீயேபிறரில்லைப்பிறர்க்குநல்கக்
கற்றாயிதுகாணுதின்கெனக் ‡ கைமறித்தான்
முற்றாமதியம்மிலைந்தான்முனிந்தானையன்னான். (௧௫௬)

வரதன்பகர்வான்வரம்பெற்றவடானிவ்வையம்
சரதம்முடையாளவளென்றனித்தாதைசெப்பப்
பரதன்பெறுவானினியான்படைக்கின்றசெல்வம்
விரதம் $ மிதினல்லதுவேறினியாவதென்றான். (௧௫௭)

¶ ஆன்றான்பகர்வான்பினுமையவிவ்வையமையல்
தோன்றாநெறிவாழ்துணைத்தம்பியைப்போர்தொலைத்தோ
சான்றோர்புகழுந்தவத்தாதையைவாதைகொண்டோ
ஈன்றாளைவென்றோவினியிக்கதந்தீர்வதென்றான் (௧௫௮)

செல்லுஞ்சொல்வல்லானெதிர்தம்பியுந் § தெவ்வர்சொல்லும்
சொல்லுஞ்சுமந்தேனிருதோளெனச்சோம்பியோங்கும்
கல்லுஞ்சுமந்தேன் ○ கணைப்புட்டிலுங்கட்டமைந்த
வில்லுஞ்சுமக்கப்பிறந்தேன்வெகுண்டென்னையென்றான். (௧௫௯)

நன்சொற்கடந்தெனைநாளும்வளர்த்ததாதை
தன்சொற்கடந்தெற்கரசாள்வதுதக்கதன்றால்
என்சொற்கடந்தாலுனக்கியாதுளதீனமென்றான்
தென்சொற்கடந்தான்வடசொற்கடற்கெல்லைதேர்ந்தான். (௧௬௦)

சீற்றந்துறந்தானெதிர்நின்றுதெரிந்துசெப்பும
மாற்றந்துறந்தான்மறைநான்கெனவாங்கல்செல்லா

---

* மனத்துயரை உலையுள்ளுறுதீயோடுவமைகூறினர். † அன்பின்மிகுதியான் நற்றாதையுநீ தனிநாயகனீயென்றான். ‡ கைமறித்தல்-இதுசெய்யற்கவெனத்தடுத்தல்.

$ இதின் நல்லது என்பதன்றி இதின் அல்லதுஎனப் பிரிக்க.

¶ ஆன்றான் ஈண்டு சீராமன், § தெவ்வர்என்றது கைகேசிமுதலாயினோரை.

○ கணைப்புட்டில்-அம்பறாத்தூணி.

ஈற்றெண்டிரைவேலையினம்பிதனாணையாலே
ஏற்றந்தொடங்காக்கடலிற்றணிவெய்திநின்றான் (௧௪௧)

அன்னான்றனையையனுமாதியொடந்தமென்று
தன்னாலுமளப்பருந்தானுந்தன்பாங்கர்நின்ற
* பொன்மானுரியானுந்தழீஇயெனப்புல்லிப்பின்னைச்
சொன்மாண்புடையன்னைசுமித்திரைகோயில்புக்கான். (௧௪௨)

கண்டாள்மகனும்மகனுந்தனகண்கள்போல்வார்
† தண்டாவனஞ்செல்வதற்கேசமைந்தார்கடம்மை
புண்டாங்குநெஞ்சத்தனளாய்ப்படிமேற்புரண்டாள்
உண்டாயதுன்பக்கடற்கெல்லையுணர்ந்திலாதாள். (௧௪௩)

சோர்வாளையோடித்தொழுதேந்தினன்றுன்பமென்னும்
ஈர்வாளைவாங்கமனந்தேற்றுதற்கேற்றசெய்வான்
போர்வாளரசர்க்கிறைபொய்த்தனனுக்கில்லேன்
கார்வானெடுங்கானிறைகண்டிங்ஙன்மீள்வெனென்றான் (௧௪௪)

கான்புக்கிடினுங்கடல்புக்கிடினுங்கவிப்பேர்
வான்புக்கிடினுமெனக்கன்னைமாணயோத்தி
யான்புக்கதொக்குமெனையார்நலிகிற்குமீட்டார்
ஊன்புக்குயிர்புக்குணர்புக்குலையர்க்கவென்றான். (௧௪௫)

தாயாற்றுகிலாடனையாற்றுகின்றார்கடம்பால்
தீயாற்றலகிலார்தனிச்சிந்தையினின்றுசெற்ற
நோயாற்றுகில்லாவுயிர்போலநுடங்கிடையார்
மாயாப்பழியாடரவற்கலையேந்திவந்தார். (௧௪௬)

கார்வானமொப்பான்றனைக்காண்டொறுங்காண்டொறும்போய்
நீராயுகக்கண்ணினுநெஞ்சழிகின்றநீரார்
பேராவிடர்பட்டயலாருறுபீழைகண்டும்
தீராமனத்தாடரவந்தனசீரமென்றார். (௧௪௭)

வாணித்திலவெண்ணகையார்தரவள்ளறம்பி
யாணர்த்திருநாடிழப்பித்தவரீந்தவெல்லாம்
பூணப்பிறந்தானுநின்றானவைபோர்விலோடும்
காணப்பிறந்தேனுநின்றேனவைகாட்டுமென்றான். (௧௪௮)

அன்னானவர்தந்தன § வாதரத்தோடுமேந்தி
இன்னாவிடர்தீர்ந்துடனேகெனவெம்பிராட்டி

---

* பொன்மானுரியான் - பொன்னிறமமைந்த மான்றோலையுடைய உருத்திரமூர்த்தி.

† தண்டகவனமென்றது தண்டாவனமென மரீஇயது

§ ஆதரத்தோடுமேந்தி - விருப்பத்தோடுங் கையிலேந்தி.

சொன்னாலதுவேதுணையாமெனத்தூயநங்கை
பொன்னாரடிபணிந்தாளவளும்புகன்றாள். (௧௪௯)

ஆகாததன்றாலுனக்கவ்வனமிவ்வயோத்தி
* மாகாதலிராமனம்மன்னவன்வையமீந்தும்
போகாவுயிர்த்தாயர்நம்பூங்குழற்சீதையென்றே
ஏகாயினியிவ்வயினிற்றலுமேதமென்றாள். (௧௫௦)

பின்னும்பகர்வாண்மகனேயிவன்பின்செறம்பி
என்னும்படியன்றடியாரினிலேவல்செய்தி
மன்னும்நகர்க்கேயிவன்வந்திடின்வாவதன்றேல்
முன்னம்முடியென்றனள் † பான்முலைசோரநின்றாள். (௧௫௧)

வேறு.

இருவருந்தொழுதனரிரண்டுகென்றரீஇ
வெருவருமாவினிற்றாயும்விம்மினாள்
‡ பொருவருங்குமாரும்போயினர்புறம்
திருவரைத்துகிலொரீஇச்சீரைசாத்தியே (௧௫௨)

தான்புனைசீரையைத்தம்பிசாத்திடத்
தேன்புனைதெரியலான்செய்கைநோக்கினான்
¶ வான்புனையிசையினாய்மறக்கிலாதுநீ
யான்புகல்வினையதோருறுதிகேளெனா. (௧௫௩)

அன்னையரனைவருமாழிவேந்தனும்
முன்னையரல்லர்வெந்துயரின்மூழ்கினார்
என்னையும்பிரிந்தனரிடருறாவகை
உன்னைநீயென்பொருட்டுதவுவாயென்றான். (௧௫௪)

ஆண்டகையம்மொழிபகரவன்பனும்
தூண்டகுதிரைகள்புயர்துளங்கத்துண்ணென
மீண்டதோருயிரிடைவிம்மவிம்முவான்
ஈண்டுனக்கடியனேன்பிழைத்ததியாதென்றான். (௧௫௫)

நீருளவெனினுளமீனுநிலமும்
பாருளவெனினுளயாவும்பார்ப்புறின்
நாருளதனுவுளாய்நானுஞ்சீதையும்
ஆருளரெனினுளேமருளுவாயென்றான். (௧௫௬)

---

* மகாதலிராமன் (க) பெருங்காதலையுடைய சிராமன் (உ) திருமாமகள் விழைதலையுடைய சிராமன். † பான்முலைசோரல் மக்கண்மாட்டுத்தாயர் வைத்த காதன்மிகுதி, ‡ பொருவருங்குமார் ஈடுமெடுப்பு மில்லவர்.
¶ வான்புனையிசையினாய் விண்ணுலகுமட்டும் பரந்த புகழுடையாய்.

பைந்தொடியொருத்திசொற்கொண்டுபார்மகள்
நைந்துயிர்நடுங்கவுநடத்திகானெனா
உய்ந்தனனிருந்தனனுண்மைகாவலன்
மைந்தனென்றினையசொல்வழங்கினாயெனா. (௧௱௭)

மாறினியென்னைநீவனங்கொள்வாயென
ஏறினவெகுளியையாதுமுற்றுற
ஆறினைதவிர்கெனவையவாணையிற்
கூறியமொழியினுங்கொடியதாமென்றான். (௧௱௮)

செய்துடைச்செல்வமோயாதுந்தீர்ந்தெமை
* கைதுடைத்தேகவுங்கடவையோவையா
நெய்துடைத்தடையலர்நேயமாதர்கண்
மைதுடைத்துறைபுகும்வயங்கொள்வேலினாய். (௧௱௯)

உரைத்தபின்னிராமனென்றுரைக்கநேர்ந்திலன்
வரைத்தடந்தோளினான்வதனநோக்கினான்
விரைத்தடந்தாமரைக்கண்ணின்மிக்கநீர்
நிரைத்திடையிடைவிழநெடிதுநிற்கின்றான். (௧௱௰)

அவ்வயினரசவைநின்றுமன்பினன்
எவ்வமிலிருந்தவமுனிவனெய்தினான்
† செவ்வியகுமாருஞ்சென்னிதாழ்ந்தனர்
கௌவையம்பெருங்கடன்முனியுங்கால்வைத்தான். (௧௱௰௧)

அன்னவர்முகத்தினோடகத்தைநோக்கினான்
பொன்னரைச்சீரையின்பொலிவுநோக்கினான்
என்னினியுணர்த்துவதெடுத்ததுன்பத்தால்
தன்னையுமுணர்ந்தில ‡ னுணருந்தன்மையான். (௧௱௰௨)

வாழ்வினைநுதலியமங்கலத்துநாள்
தாழ்வினையதுவரச்சீரைசாத்தினான்
சூழ்வினைநான்முகத்தொருவர்ச்சூழினும்
ஊழ்வினையொருவராலொழிக்கற்பாலதோ. (௧௱௰௩)

வெவ்வினையவடாவிளைந்ததேயுமன்
றிவ்வினையிவன்வயினெய்தற்பாற்றுமன்
றெவ்வினைநிகழ்ந்ததோவேவரெண்ணமோ
செவ்விதினொருமுறைதெரியும்பின்னென்றான். (௧௱௰௪)

---

* கய்துடைத்தல்-விட்டொழிதல்.

† செவ்வியகுமரர்-உலகவர் விழையும் பேரழகினர்.

‡ உணருந் தன்மையான் ஈண்டு வசிட்டமுனிவன்.

* விற்றடக்தாமரைச்செங்கண்வீரனை
உற்றடைந்தையநீயொருவியோங்கிய
† கற்றடங்கானுதியென்னிற்கண்ணகன்
மற்றடந்தானையான்வாழ்கிலானென்றான். (கசுரு)

அன்னவன்பணிதலையேந்தியாற்றுதல்
என்னதுகடனவனிடரைநீக்குதல்
நின்னதுகடனிதுநெறியுமென்றனன்
‡ பன்னகப்பாயலுட்பள்ளிநீங்கினான். (கசுசு)

* வெவ்வரம்பையில்சுரம்விரவென்றானலன்
தெவ்வரம்பனையசொற்றீட்டினானடனக்
கவ்வரமபொருதவேலரசனுய்கிலா
திவ்வரந்தருவனென்றேன்றதுண்டென்றான். (கசுஎ)

ஏன்றனனெந்தையிவ்வரங்களேவினாள்
ஈன்றவள்யானதுசென்னியேந்தினேன்
சான்றெனநின்றநீதடுத்தியோவென்றான்
○ தோன்றியநல்லறநிறுத்தத்தோன்றினான். (கசுஅ)

என்றபின்முனிவனொன்றியம்பநேர்ந்திலன்
நின்றனனெடுங்கணீர்நிலத்துநீர்த்துகக்
குன்றனதோளவன்றொழுதுகொற்றவன்
பொன்றிணிநெடுமதில்வாயில்போயினான். (கசுகூ)

சுற்றியசிரையன்றொடர்ந்ததம்பியன்
முற்றியவுவகையன்முளரிப்போதினும்
குற்றமின்முகத்தினன்கொள்கைகண்டவர்
உற்றதையொருவகையுணர்த்துவாமரோ (கஎ0)

அந்தணருந்தவரவனிகாவலர்
நந்தலி $ னகருளார் ¶ நாட்டுளார்கடம்
சிந்தையென்புகல்வதுதேவருள்ளமும்
வெந்தனர் § மேல்வருமுறுதிவேண்டலார். (கஎக)

ஐயனைக்காண்டலுமணங்கனார்கடாம்
மொய்யிளந்தளிர்களான்முளரிமேல்விழும்

---

* வில்-கோதண்டம். † கற்றடம் கானையுங் காடலையுமென்க.

‡ தேவகாரிய மாகப்பாற்கடற் பரமன் பாப்பணை துறந்தவனாகிய இராமமூர்த்தி பன்னகப்பாயலுட் பள்ளிநீங்கினான். * வெவ்வரம்பையில்என் புழி ஐகாரியை

○ அறத்தை நிறுத்தற்பொருட்டே யவதரித்தலின் தோன்றியநல்லற நிறுத்தத்தோன்றினானென்றார். $ நகருளார்-நகரமாந்தர். ¶ நாட்டுளார்-நாட்டவர். § மேல்வருமுறுதி-இறைவன் இராவண வேட்டையாடித்தம்பதந் தருதல்.

மையலின்மதுகரங்கடியுமாறெனக்
கைகளின்மாதர்நெடுங்கண்கவைற்றினார். (கஎ௨)

தம்மையுமுணர்ந்திலர்தணிப்பிலன்பினால்
அம்மையினிருவினையகற்றவோவன்றேல்
விம்மியபேருயிர்மீண்டிலாமைகொல்
செம்மறன்றாதையிற் * சிலவர்மூர்ந்தினார். (கஎ௩)

விழுந்தனர்சிலர்சிலர்விம்மிவிம்மிமேல்
எழுந்தனர்சிலர்முகத்திழிகண்ணீரிடை
அழுந்தினர்சிலர்பதைத்தளகவல்லியின்
கொழுந்தெரியுற்றெனத்துயரங்கூர்கின்றார். (கஎ௪)

கரும்பனமொழியினர்கண்பனிக்கிலர்
வரம்பறுதுயரினான்மயங்கியேகொலாம்
இரும்பனமனத்தினரென்னநின்றனர்
† பெரும்பொருளிழந்தவர்போலும்பெற்றியார். (கஎ௫)

நெக்கனவுடலுயிர்நிலையினின்றில
இக்கணமிக்கணமென்னுந்தன்மையும்
புக்கனபுறத்தனபுண்ணிற்கண்மலர்
உக்கனநீர்வறந்துதிரவாரியே. (கஎ௬)

இருகையிற்கரிநிகரெண்ணிறந்தவர்
பெருகையிற்பெயர்த்தனர்தலையைப்பேணலர்
ஒருகையிற்கொணாடனருருட்டுகின்றனர்
கரிகையிற்கண்மலர்ருன்றநீக்கினார். (கஎஎ)

சிந்தினவணிமணிசிதறிவீழ்ந்தன
பைந்துணர்மாலையிற்பரிந்தமேகலை
நந்தினர்நகையொளிவிளக்கநங்கைமார்
‡ சுந்தரவதனமுமதிக்குத்தோற்றவே. (கஎ௮)

அறுபதினாயிர § ராசன்தேவியர்
மறுவறுகற்பினர்மழைக்கண்ணீரினர்
சிறுவனைத்தொடர்ந்தனர்திறந்தவாயினர்
எறிதிரைக்கடலெனவிரங்கியேங்கினார். (கஎ௯)

---

* சிலவரென்றது நகரமாந்தரை.

† பெரும்பொருளிழந்தவர்போலும் பெற்றியார், பெரியபொருளையிழந்தவரையொத்த அளவில்லாத துன்பத்தன்மையுடையவராய். ‡ இது காறு மதியம் முகத்துக்குத் தோல்வியெய்த இற்றைஞான்று அது இறைவனீக்கத்தான் வருந்துதலின் சுந்தரவதனமும மதிக்குத்தோற்ற என்றார்:

§ அரசன்தேவியர் பலராதலின் அவரேங்கினமையை மறிதிரைக்கடற்குவமை கூறினார்.

கன்னிநன்மயில்களுங்குயிற்கணங்களும்
அன்னமுஞ்சிறையிழந்தவனிசேர்ந்தன
என்னவீழ்ந்துழந்தன * ரிராமனல்லது
மன்னுயிர்ப்புதல்வரைமற்றும்பெற்றிலார். (க௮௦)

இளையினுநரம்பினுநிரம்புங்கேழன
அளவிறந்துயிர்க்கவிட்டரற்றுந்தன்மையால்
தெளிபடுகுழலினோடியாழ்க்குத்தோற்றன
† இளையவரமுதினுமினியசொற்களே. (க௮க)

புகலிடங்கொடுவனம்போலுமென்றுதம்
மகன்வயினிரங்குறுமகளிர்வாய்களால்
அகன்மதினெடுமனையரத்தவாம்பல்கள்
பகலிடைமலர்ந்ததோர்பழனம்போன்றவே. (க௮உ)

திடருடைக்குங்குமச்சேறுஞ்சார்தரும்
இடையிடைவண்டலிட்டாரமீர்த்தன
மிடைமுலைக்குவடொரீஇமேகலைத்தடங்
கடலிடைப்புகுந்தகட்கலுழியாரரோ. (க௮ங)

தண்டலைக்கோசலைத்தலைவன்மாதரைக்
கண்டனனிரவியுங்கமலவாண்முகம்
‡ விண்டலத்துறையுநல்வேந்தற்காயினும்
உண்டிடருற்றபோதென்னுறுதன. (க௮ச)

தாயருங்கிளைஞருஞ்சார்ந்துளார்களும்
சேயருமணியழிஞ்சிறந்தமாதரும்
காயெரியுற்றனரனையகவ்வையர்
வாயிலுமுன்றிலுமறையமொய்த்தனர். (க௮ரு)

இரைத்தனரிரைத்தெழுந்தேங்கியெங்கணும்
திரைப்பெருங்கடலெனத்தொடர்ந்துபின்செல
உரைப்பதையுணர்கிலனொழிப்பதோர்கிலன்
§ வரைப்புயத்தண்ணறன்மனையைநோக்கினன். (க௮சு)

நன்னெடுநெளிர்முடிசூடநன்மணிப்
பொன்னெடுந்தேரொடும்பவனிபோனவன்

---

* அரசன்சிராமனையல்லது காதற்புதல்வனை வேறுபெற்றிலாமையா னவற்குடலன்னவராகலின் இராமனல்லமு மன்னுயிர்ப்புதல்வரை மற்றும்பெற்றிலா ரென்றார்.

* யாழ்சொற்குத் தோற்றவேனும் சிராமனீக்கத்தான் அமுதினுமினியசொற்கள்யாழ்க்குத் தோற்ற என்றார்.

‡ விண்டலத்துறையுநல்வேந்த னென்பதால்இந்திரனைக்குறிக்கின்றது.

§ வரைப்புயத்தண்ணல் சிராமன்.

துன்னெடுஞ்சீரையுஞ்சுற்றிமீண்டுமப்
பொன்னெடுந்தெருவிடைப்போதன்மேயினான். (௧௮௭)

அஞ்சனமேனியிவ்வழகற்கெய்திய
வஞ்சனைகண்டபின்வகிர்ந்துநீங்கலா
நெஞ்சினும்வலிதுயிர்நினைப்பதென்சில
நஞ்சினும்வலியநந்நலமென்றார்சிலர். (௧௮௮)

மண்கொடுவருமெனவழியிருந்தியாம்
எண்கொடுசுடர்வனத்தெய்தல்காணவோ
* பெண்கொடுவினைசெயப்பெற்றநாட்டினிற்
† கண்கொடுபிறத்தலுங்கடையென்றார்சிலர். (௧௮௯)

‡ முழுவதேபிறந்துலகுடையமொய்ம்பினோன்
உழுவைசேர்கானகத்துறைவன்யானென
எழுவதேயெழுதல்கண்டிப்பதேயிருந்
தழுவதேயழகிதிவ்வன்பென்றார்சிலர். (௧௯௦)

வலங்கடிந்தேழைராயமன்னரை
கலங்கடிந்தறங்கெட ○ நயக்கலீர்களுங்
குலங்கடிந்தான்வலிகொண்டகொண்டலை
நிலங்கடிந்தாளொடுநிகரென்றார்சிலர் (௧௯௧)

திருவரைசுற்றியசீரையாடையன்
பொருவருந்துயரினன்றொடர்ந்துபோகின்றான்
§ இருவரைப்பயந்தவளீன்றசான்றனை
ஒருவனோவிகற்கிவ்வூருறவென்றார்சிலர் (௧௯௨)

முழுக்கலின்வலியநம்மூரிநெஞ்சினை
மழுக்களிற்பிளத்துமென்றோடுவார்வழி
ஒழுக்கியகண்ணினீற்கலுழியூற்றிடை
இழுக்கலில்வழுக்கிவீழ்ந்திடருற்றார்சிலர். (௧௯௩)

பொன்னணிமணியணிமெய்யிற்போக்கினர்
மின்னெனமின்னெனவிளங்குமெய்விலைப்
பன்னிறத்துகிலினைப்பறித்துநீக்கினர்
சின்னநுண்டுகிலினைப்புனைகின்றார்சிலர். (௧௯௪)

---

* கைகேசிசூழ்வினையாற் பெற்றநாடாகலின் பெண்கொடுவினைசெயப்பெற்றநாடென்றார். † அந்தகராய்ப் பிறக்கிலிக் கோலத்தைக்கண்டுவருந்துதலில்லையேயென்பார் கண்கொடுபிறத்தலுங் கடையென்றார் என்றனர் ‡ அரசபரம்பரையின் முற்றோன்றலாகலின் முழுவதே பிறந்துலகுடைய மொய்ம்பினோனென்றார்.

○ நயக்கலீர்கள்விகுதிமேல் விகுதி. § இலக்குவ சத்துருக்கர்களைப் பெற்றமையால் சுமத்திரா தேவிக்கு இருவரைப்பயந்தவள் என்றது காரணப்பெயராய் நின்றது.

நிறைமகவுடையவர்நெறிசெ * லைம்பொறி
குறைமககுறையினுங்கொடுப்பராமுயிர்
முறைமகன்வனம்புகமொழியைக்காக்கின்ற
இறைமகன்றிருமனமிரும்பென்றார்சிலர். (௧௯௫)

வாங்கியமருங்குலார்வைத்தகொங்கையார்
பூங்கொடியொதுங்குவபோலொதுங்கினர்
ஏங்கியகுரலினரிணைத்தகாந்தளில்
தாங்கியசெங்கைதந்தலைகண்மேலுளார். (௧௯௬)

தலைக்குவட்டயன்மதிதவழுமாளிகை
நிலைக்குவட்டிடையிடைநின்றநங்கைமார்
முலைக்குவட்டிழிகணீராலிமொய்த்துக
மலைக்குவட்டகவுறுமயிலின்மாழ்கினார். (௧௯௭)

மஞ்செனவகிற்புகைவழங்குமாளிகை
எஞ்சலில்சாளரத்திரங்குமின்சொலார்
அஞ்சனக்கண்ணினீரருவிசோர்தரப்
பஞ்சரத்திருந்தழுங்கிளியிற்பன்னினார். (௧௯௮)

நன்னெடுங்கண்களினான்றநீர்த்துளி
தன்னெடுந்தாரைகடளத்தின்வீழ்தலால்
மன்னெடுங்குமரன்மாட்டழுங்கிமாடமும்
பொன்னெடுங்கண்குழித்தழுவபோன்றவே. (௧௯௯)

மக்களைமறந்தனர்மாதர்தாயரைப்
புக்கிடமறிந்திலர்புதல்வர்பூசலிட்
டுக்கனருயங்கினருருகிச்சோர்ந்தனர்
துக்கநின்றறிவினைச்சூறையாடவே. (௨௦௦)

காமரங்கனிந்தெனக்கனிந்தமென்மொழி
† மாமடந்தையரெலாமறுகுசேர்தலால்
தேமருநறுங்குழற்றிருவினீங்கிய
தாமரையொத்தனதவளமாடமே. (௨௦௧)

மழைக்குலம்புரைகுழல்விரிந்துமண்ணுற
குழைக்குலமுகத்தியர்குழாங்கொண்டேகினர்
இழைக்குலஞ்சிதறிடவேவுண்டோய்வுறும்
உழைக்குலமுழைப்பனவொத்தொர்பாலெலாம்.; (௨௦௨)

---

* ஐம்பொறிகுறை-கண்முதலியவறிவின்மையை. † மனையினின்றும் வீதியாய்மாதர் வந்தமையான் மாடங்களை திருநீங்கிய தாமரைக்குவமை கூறினார்.

கொடியடங்கின * மனைக்குன்றங்கோமுர
சிடியடங்கின முழக்கிழந்தபல்லியம்
படியடங்கலுமிமிர்பசுங்கண்மாரியால்
பொடியடங்கின மதிற்புறத்துவீதியே. (௨௦௩)

அட்டிலுமிழ்ந்தனபுகையகிற்புகை
நெட்டிலுமிழ்ந்தனநிறைந்தபால்கிளி
வட்டிலுமிழ்ந்தனமகளிர்கான்மணித்
தொட்டிலுமிழ்ந்தனமகவுஞ்சோரவே. (௨௦௪)

ஒளிதுறந்தனமுகமுயிர்துறந்தென
துளிதுறந்தனமுகிற்றொகையுந்தூயநீர்த்
தளிதுறந்தனபரிதானையானையும்
களிதுறந்தனமலர்க்கள்ளுண்வண்டினே. (௨௦௫)

நிழல்பிரிந்தனகுடைநெடுங்கணேழையர்
குழல்பிரிந்தனமலர்குமரர்தாளிணை
கழல்பிரிந்தனசினக்காமன்வாளியும்
அழல்பிரிந்தனதுணைபிரிந்தவன்றிலே. (௨௦௬)

தாரொலிநீத்தனபுரவிதண்ணுமை
வாரொலிநீத்தனமழையின்விம்முறும்
தேரொலிநீத்தனதெருவுந்தெண்டிரை
நீரொலிநீத்தனநீத்தம்போலவே. (௨௦௭)

முழவெழுமொலியிலமுறையின்யாழ்நரம்
பெழவெழுமொலியிலவிமைப்பில்கண்ணினர்
விழவெழுமொலியிலவேறுமொன்றில
அழவெழுமொலியிலவரசவீதியே. (௨௦௮)

தெள்ளொலிச்சிலம்புகள்சிலம்புபொன்மனை
கள்ளொலித்திலாளிர்கலையுமன்னவே
புள்ளொலித்திலபுனல்பொழிலுமன்னவே
கள்ளொலித்திலமலர்களிறுமன்னவே. (௨௦௯)

† செய்மறந்தனபுனல்சிவந்தவாய்ச்சியர்
கைமறந்தனபசுங்குழவிகாந்தெரி
நெய்மறந்தனநெறியறிஞர்யாவரும்
மெய்மறந்தனரொலிமறந்தவேதமே. (௨௧௦)

---

* மனைக்குன்றம்-வீடுகளாகிய மலைகள், மலையையொத்த வீடுகளெனினுமமையும், † ஒலிஉதாத்தம், அநுதாத்தம், சொரிதம். செய்மறந்தன. கைமறந்தன, வேதமறந்தன என உடையவர் தொழிலையுடைமை மேலேற்றிக் கூறினர்.

ஆடினரழுதனரமுதவேழிசை
பாடினரழுதனர்பரிந்தகோதையர்
ஊடினரழுதனருயிரினன்பரைக்
கூடினரழுதனர்குழாங்குழாங்கொடே. (௨௧௧)

நீட்டிலகளிறுகைந்நீரின்வாய்புதல்
பூட்டிலபுரவிகள்புள்ளும்பார்ப்பினுக்
கீட்டிலவிரைபுனிற்றீன்கன்றையும்
ஊட்டிலகறவைகன்றுருகிச்சோர்ந்தவை (௨௧௨)

மாந்தர்தம்மொய்ம்பினின்மகளிர்கொங்கையாம்
* ஏந்தினநீர்களும்வறுமையெய்தின
சாந்தமம்மன்னர்தம்முடியிற்றையலார்
கூந்தலின்வறுமையம்மலரின்கூலமே. (௨௧௩)

வேறு.

ஓடைநல்லணிமுனிந்தனவுயர்களிருச்சி
† சூடைநல்லணிமுனிந்தனதொடர்மனைகொடியின்
ஆடைநல்லணிமுனிந்தனவம்பொன்செயிஞ்சி
பேடைநல்லணிமுனிந்தனமென்னடைப்புறவம். (௨௧௪)

‡ திக்குநோக்கியதீவினைப்பயனெனச்சிந்தை
நெக்குநோக்குவோர்நல்வினைப்பயனெனநேர்வோர்
பக்கநோக்கலென் ○ பருவரலின்பமென்றிரண்டும்
ஒக்கநோக்கியயோகருமருந்துயருழந்தார். (௨௧௫)

ஓவினல்லுயிருயிர்ப்பினோடுடல்பதைத்துலைய
மேவிநல்லபூகெழில்கெடவிம்மனோய்விம்மத்
தாவிலம்பொறிமறுகுறத்தயரதனென்ன
ஆவிநிக்கின்றதொத்ததவ்வயோத்தியாநகரம். (௨௧௬)

உயங்கியந்நகருலைவுறவொருங்குழைசுற்ற
மயங்கியேங்கினர்வயின்வயின்வரம்பிலர்தொடர
$ இயங்குபல்லுயிர்க்கோருயிரெனநின்றவிராமன்
தயங்குபூண்முலைச்சானகியிருந்துழிச்சார்ந்தான். (௨௧௭)

அழுதுதாயரோடருந்தவரந்தணரரசர்
புழுதியாடியமெய்யினர்புடைவந்துபொருமப்

---

* ஏந்தினநீர்களும் சாந்தம் வறுமையெய்தினவென்வினை முடிக்க.
† சூடை-உச்சியிலணியுமொருவகையாபரணம். ‡ திக்கு-இடம்.
○ பருவரலின்பமென்பன துன்பவின்பக் கூறுபாடுகளை.
$ இயங்குபல்லுயிர்க்கோருயிரென நின்றவிராமன் - உலகிற்சஞ்சரிக்கும் எல்லாவுயிர்களிடத்து மந்தரியாமியாயிருக்குமிராமமூர்த்தி.

பழுதுசிலையினுடையினன்வரும்படிபாரா
எழுதுபாவையன்னாண்மனத்துணுக்கமொடெழுந்தாள். (உகஅ)

எழுந்தாங்கையமாமியர்தழுவினரோங்கிப்
பொழிந்தவுண்கணீர்ப்புதுப்புனலாட்டினர்புலம்ப
அழிந்தசிந்தையளன்னமிதின்னதென்றறியாள்
வழிந்தநீர்நெடுங்கண்ணினள்வள்ளலைநோக்கி. (உககூ)

வேறு.

பொன்னையுற்றபொலன்கழலோய்புகழ்
மன்னையுற்றதுண்டோமற்றிவன்றுயர்
என்னையுற்றதியம்பென்றியம்பினள்
மின்னையுற்றநடுக்கத்துமேனியாள். (உஉ0)

பொருவிலெம்பிபுவிபுரப்பான்புகல்
* இருவரானையுமேந்தினெனின்றுபோய்க்
† கருவிமாமழைக்கற்றடங்கண்ணாய்
வருவெனீண்டுவருந்தலைநீயென்றான். (உஉக)

நாயகன்வனநண்ணலுற்றானென்றும்
மேயமண்ணிழந்தானென்றும்விம்மலள்
நீய்வருந்தலைநீங்குவென்யானென்ற
தீயவெஞ்சொல்செவிசுடத்தேம்புவாள். (உஉஉ)

துறந்துபோமெனச்சொற்றசொற்றேறுமோ
உறைந்தபாற்கடற்சேக்கையுடனொரீஇ
‡ அறந்திறம்புமென்றையனயோத்தியில்
பிறந்தபின்பும்பிரிவிலனாயினான். (உஉங)

அன்னதன்மையளையனுமன்னையும்
சொன்னசெய்யத்துணிந்ததுதூயதே
என்னையென்னையிருத்தியென்றானா
உன்னவுன்னவுயிருமிழாநின்றாள். (உஉங)

வல்லரக்கரின்மால்வரைபோய்விழுந்
தல்லரக்கினுருக்கழல்காட்டயற்
கல்லரக்குங்கடுமையவல்லநின்
சில்லரக்குண்டசேவடிப்போதென்றான். (உஉரு)

---

* இருவர் ஈண்டு தந்தைதாயரை. † கருவியென்றது மின்னுமுழக்கு முதலியவற்றின் றொகுதியை. ‡ சீராமனாகத்திருவவதரித்தது பாற்கடற் பரமனாகலானும், அறத்தை நிறுத்தற்பொருட்டுத்தானு முடன்றோன்றினானாகலானும், ஐயனயோத்தியிற் பிறந்தபின்பும் பிரிவிலனென்றதென்க.

பரிவிகந்தமனத்தொடுபெற்றிலா
தொருவுகின்றனையூழியருக்கனும்
எரியுமென்பதியாண்டையதீண்டுநின்
பிரிவினுஞ்சுடுமோபெருங்காடென்றாள். (௨௨௬)

அண்ணலன்னசொற்கேட்டனனன்றியும்
உண்ணிவர்ந்தகருத்துமுணர்ந்தனன்
கண்ணினீர்க்கடல்கைவிடநேர்கிலன்
எண்ணுகின்றனனென்செயற்பாற்றென, (௨௨௭)

அனையவெல்லையகன்மனையெய்தினள்
புனையுஞ்சீரந்துணிந்துபுனைந்தனள்
* நினைவில்வள்ளல்பின்வந்தயனின்றனள்
† பனையினீள்கரம்பற்றியகையினள். (௨௩௮)

ஏழைதன்செயல்கண்டவர்யாவரும்
வீழுமண்ணிடைவீழ்ந்தனர்வீந்திலர்
வாழுநாளுளவென்றபின்மாள்வரோ
ஊழிபேரினுமுய்குநருய்வரே. ௨௨௯)

தாயார்தவ்வையர்தன்றுணைச்சேடியர்
ஆயமன்னியவன்பினரென்றிவர்
தீயின்மூழ்கினரொத்தனர்செங்கணான்
தூயதையலைநோக்கினன்சொல்லுவான். (௨௩௦)

முல்லையுங்கடன்முத்துமெதிர்ப்பினும்
வெல்லும்வெண்ணகையாய்விளைவுன்னுவாய்
அல்லைபோதவமைந்தனையாதலின்
‡ எல்லையற்றவிடர்தருவாயென்றான். (௨௩௧)

கொற்றவன்னதுகூறலுங்கோகிலம்
செற்றதன்னகுதலையள்சீறுவாள்
உற்றுநின்றதுயரமிதொன்றுமே
எற்றுறந்தபினின்பங்கொலாமென்றாள். (௨௩௨)

பிறிதொர்மாற்றம்பெருந்தகைபேசலன்
மறிகிவீழ்ந்தழமைந்தருமாதரும்
செறுவில்வீழ்ந்தநெடுந்தெருச்சென்றனன்
நெறிபெறுமையரிதினினீங்குவான். (௨௩௩)

---

* நினைவில்-நினைக்குமளவினை. † பனையினீள் கரம்பற்றிலாக்கையினள்-தன்னைப்பாணிக்கிரகணஞ் செய்தமையுணர்ந்ததற்கு. ‡சனகியையிலங்கையர்கோன் சிறைவைக்குமென்பதுணர்ந்த எல்லையற்ற படர்தருவாயென்றதென்க.

சீரைசுற்றித்திருமகள்பின்செல
மூரிவிற்கையிளையவன்முன்செலக்
காரையொத்தவன்போம்படிகண்டவவ்
* வூரையுற்றதுணர்த்தவுமொண்ணுமோ. (௨௩௪)

ஆரும்பின்னரழுதலவித்திலர்
சோருஞ்சிந்தையர்யாவருஞ்சூழ்ந்தனர்
வீரன்முன்வனமேவுதும்யாமெனாப்
போரென்றொல்லொலிகைம்மிகப்போயினர். (௨௩௫)

தாதைவாயிற்குறுகினன்சார்தலும்
கோதைவேலவன்றாயரைக்கும்பிடா
ஆதிமன்னனையாற்றுமினீரென்றான்
மாதராரும்விழுந்துமயங்கினர். (௨௩௬)

ஏத்தினர்தம்மகனைமருகியை
வாழ்த்தினரிளையோனைவழுத்தினர்
காத்துநல்குமின்றெய்வதங்காளென்றார்
நாத்தழும்பவரற்றிநடுங்குவார் (௨௩௭)

அன்னதாயரரிதற்பிரிந்தபின்
முன்னர்நின்றமுனிவனைக்கைதொழாத்
தன்னதாருயிர்த்தம்பியுந்தாமரைப்
பொன்னுந்தானுமோர்தேர்மிசைப்போயினான். (௨௩௮)

௪-வது நகர்நீங்குபடல முற்றிற்று.

ஆ திவிருத்தம்-௫௩௩.

௫-வது. தைலமாட்டுபடலம்.

கலி விருத்தம்.

ஏவியகுரிசில்பின்யாவரேகிலார்
மாவியல்தானையம்மன்னை நீங்கலாத்
தேவியரொழிந்தரைர்தெய்வமாநகர்
ஓவியமொழிந்தனவுயிரிலாமையால். (௧)

கைகணீபரந்துகாறொடாக்கண்ணுகும்
வெய்யநீர்வெள்ளத்துமெள்ளச்சேறலால்

* ஊரையுற்றதுணர்த்தவு மொண்ணுமோ-உலகமுழுதாண்டவரசன்
இறந்துபடுதலை யுணர்த்துவது தன்றாலுரைப்பரிதென்றார்.

* உய்யவேழுலகுமொன்றானநீருழல்
தெய்வமீனாத்ததந்செம்பொற்றேரரோ. (௨)

மீன்புகழ்பெறவெயிலொதுங்க † மேதியோ
டான்புகக்கதிரவனந்தம்புக்கனன்
காண்புகக்காண்கிலேனென்றுகல்லதர்
தான்புகமுடேனனென்னாத்தன்மையான். (௩)

‡ பகுத்தவான்மதிகொடுபதுமத்தண்ணலே
வகுத்தவாணுதலியர்வதனராசிபோல்
உகுத்தகண்ணீரினிலொளியுநீங்கின
முகிழ்த்தழகிழந்தனமுளரியீட்டமே. (௪)

அந்தியில்வெயிலொளியழியவானகம்
ஈந்தவில்கைகயன்பயர்தங்கைதன்
மந்தரையுரையெனுங்கடுவின்மட்கிய
சிந்தையினிருண்டதுசெம்மைநீங்கியே. (௫)

பரந்துமீனரும்பியபசலைவானகம்
$ அரந்தையின்முனிவரனறைந்தசாபத்தால்
நிரந்தமிமைப்பிலாநெடுங்கண்ணீடிய
¶ புரந்தரனுருவெனப்பொலிந்ததெங்குமே. (௬)

திருநகர்க்கியோசனையிரண்டுசென்றொரு
விரைசெறிசோலையைவிரைவினெய்தினான்.
இரதநின்றிழிந்தபினிராமனின்றனை
உரைசெறிமுனிவரோடுறையுங்காலையே. (௭)

வட்டமோரோசனைவளைவிற்றாய்கடு
எட்டனையிடவுமோரிடமிலாவகைப்
புட்டகுசோலையின்புறத்துப்போர்த்தென
விட்டது § குரிசிலைவிடாதசேனையே. (௮)

குயின்றீட குலமணிநதியின்கூலத்தில்
பயின்றுயர்வாலுகப்பரப்பில்பைம்புலில்
வயின்றொறும்வைகினரொன்றும்வாய்மடுத்
தயின்றிலர்துயின்றிலரழுதுவிம்மினார். (௯)

---

* சோமுகாசுரனென்பவன் வேதங்களைக் கவர்ந்து கடலிலொளித்த போது அவ்வேதத்தை மீட்டுக்கொண்டு வரமச்சாதவதாரங்கொண்டு அவனுயிர்வாங்கினமையால் உய்யவேழுகமென்றான் நீருழல் தெய்வமீனாத்தது என்றார்: * மாலைக்காலத்தில் ஆவியனமுதலியன மனையின்மீடலுண்மையாகலின் மேதியோடான் புகவென்றார். ‡ பகுத்தவான்மதி அட்டமச்சந்திரன் $ அரந்தையில்முனிவரன் துருவாசன் ¶ புரந்தரன் இந்திரன் § குரிசில்ஸ்ரீராமன்.

* வாவிவிரிதாமரையின் மாமலரின் வாசக்
காவிவிரிமாண்மலர் முகிழ்த்தனையகண்ணார்
ஆவிவிரிபானுரையினுடையனையாக
நாவிவிரிகூழையினநவ்வியர் துயின்றார். (௧௦)

பெரும்பகல்வருந்தினர்பிறங்குமுலைதெங்கின்
குரும்பைகள்பொருஞ்செவிலிமங்கையர்
அரும்பனையகொங்கையயிதம்புனையவுண்கண்
கரும்பனையசெஞ்சொனவில்கன்னியர் துயின்றார். (௧௧)

பூவகிறைந்தபுளினத்திரள்கடோறும்
மாவகிரினுண்கணர்மடப்பிடியின்வைகச்
† சேவகமைந்தசிறுகட்கரிகளென்னத்
‡ தூவகலில்குந்தமறைமைந்தர்கடுயின்றார். (௧௨)

தகவுமிகுதவமுமிவைதழுவவுயர்கொழுநர்
முகமுவரருளுநகர்சிலர்கடுயர்மூடுக
அகவுமிளமயில்களுயிரலசியனவனையார்
மகவுமுலைவருடவிளமகளிர்கடுயின்றார். (௧௩)

§ மாகமணிவேதிகையின்மாதவிசெய்பந்தல்
கேகயநெடுங்குலமெனச்சிலர்கிடந்தார்
பூகவனமூடுபடுகேர்ப்புளினமுன்றில்
தோகையினவன்னநிரையிற்சிலர் துயின்றார். (௧௪)

சம்பகநறும்பொழில்களிற்றருணவஞ்சிக்
கொம்பழுதொசிந்தனவெனச்சிலர்குழைந்தார்
வம்பளவுகொங்கையொடுவாலுகம்வளர்க்கும்
அம்பவளவல்லிகளெனச்சிலரசைந்தார். (௧௫)

குங்குமமலைக்குளிர்பனிக்குழுமியென்னத்
துங்கமுலையிற்றுகளுறச்சிலர் துயின்றார்
அங்கையனையிற்பொலிவழுங்கமுகமெல்லாம்
பங்கயமுகிழ்த்தனவெனச்சிலர்படிந்தார் (௧௬)

தொடுத்தகலிடைச்சிலர் துவண்டனர் துயின்றார்
அடுத்தவடையிற்சிலரழிந்தனரயர்ந்தார்
உடுத்ததுகில்சுற்றொருதலைச்சிலருறைந்தார்
படுத்ததளிரிற்சிலர்பசந்தனரசந்தார். (௧௭)

---

* வாவிவிரிதாமரை-நாண்மலர். † சேவகம்விலங்கின் படுக்கையிடம்.
‡ தூ-(பகைவர்) ஊன். § மாகம்-விண்ணுலகு.

ஏனையருமின்னணமிறங்கினருடங்கா
* மானவனும்மந்திரிசுமந்திரனைவாவென்
றானமில்பெருங்குணமொருங்குடையவுன்றல்
மேனிகழ்வதுண்டவுரைகேளெனவிளம்பும். (கஅ)

வேறு.

பூண்டபோன்பினுரைப்போக்குவதரிதுபோக்கா
தீண்டுநின்றேகல்பொல்லாதெந்தைநீயிரதமின்னே
தூண்டினைமீளநோக்கிச்சுவட்டையோர்ந்தென்னையங்கே
மீண்டனனென்னமீள்வரிதுநின்னைவேண்டிற்றென்றான். (கக)

செவ்வியகுருசில்கூறத்தேர்வலான்செப்புவானவ்
வெவ்வியதாயிநீயவிதியினின்மேலென்போலாம்
இவ்வயினின்னைநீக்கியின்னுயிர்தீர்ந்தின்றேகி
அவ்வயினையகாண்டற்கமைதலாலளியனென்றான். (உ௦)

வேறு.

தேவியுமிளவலுந்தொடரச்செல்வனைப்
பூவியல்கானகம்புகவுய்த்தே † னென்கோ
கோவினையுடன்கொடுகுறுகினேனென்கோ
யாவதுகூறகேனிரும்பினெஞ்சினேன். (உக)

‡ தாருடைமலரினுமொதுங்கத்தக்கிலா
§ வாருடைமுலையொடுமதுகைமைந்தரைப்
பாரிடைச்செலுத்தினேன்பழையநண்பினேன்
தேரிடைவந்தனென்றிதிலேனென்கோ. (உஉ)

வன்புலக்கன்மனமதியில்வஞ்சனேன்
என்புலப்புறவுடைந்திரங்குமன்னன்பால்
உன்புலக்குரியசொல்லுணர்த்தச்செல்கெனோ
தென்புலக்கோமகன்றாதிற்செல்கெனோ. (உங)

காற்றிசைமாந்தருநகரமாக்களும்
தேற்றினர்கொணர்வருஞ்சிறுவன்றன்னையென்
றேற்றினவாசனையய்யவெய்யவென்
கூற்றுறழ்சொல்லினுற்கொலைசெய்வேன்கொலோ. (உச)

* மானவன்-மனுமரபிற்றோன்றினவன் என்னும் பொருள்மேல் நிற்றலால் தத்திதாந்தபதம். † என்கு எதிர்காலத்தில் வந்த தன்மை யொருமைமுற்று.

‡ ஆய்ந்துமாலையாகத் தொடுத்த மலருமிறைவிடக்கப் பாதங்களை வருத்துதலின் 'தாருடையமலரினு மொதுங்கத்தக்கிலா, என்றார். § வாருடைமுலை-கச்சணிந்தமுலை யென்பதன்றி வாருடைகின்ற முலையெனினு மமையும்.

* அங்கிமேல்வேள்விசெய்தரிதிற்பெற்றநின்
சிங்கவேறகன்றதென்றுணர்த்தச்செல்கெனு
எங்கள்கோமகற்கினியென்னிற்கேகயன்
நங்கையேகடைமுறைநள்ளல்போலுமால். (௨௫)

முடிவுறவின்னனமொழிந்தபின்னரும்
அடியுறத்தழுவினனழுங்குபேரரா
இடியுறத்துவளுவதென்னுமின்னலன்
படியுறப்புரண்டனன்பலவும்பன்னினன். (௨௬)

தடக்கையாலெடுத்தவ்வற்றழுவிக்கண்ணநீர்
துடைத்துவேறிருத்திமற்றினையசொல்லினன்
† அடக்குமைம்பொறியொடுகரணத்தப்புறம்
கடக்கும்வாலுணர்வினுக்கணுகுங்காட்சியான். (௨௭)

பிறத்தலென்றுற்றபின்பெறவயாவையும்
திறத் ‡ துளியுணர்வதோர்செம்மையுள்ளத்தாய்
புறத்துறுபெரும்பழிபொதுவின்றெய்தலும்
அறத்திறமறத்தியோவவலமுண்டெனு. (௨௮)

முன்புநின்றிசைநிறீஇமுடிவுமுற்றிய
பின்பு ¶ நின்றுறுதியைப்பயக்கும்பேரறம்
இன்பம்வந்துறுமெனினிடராயிடைத்
துன்பம்வந்துறுமெனிற்றுறக்கலாகுமோ. (௨௯)

சிறப்பெரும்படைக்கலநிறத்தினேருற
மறப்பயன்விளைக்குறும்வன்மையன்றரோ
இறப்பினுந்திருவெலாமிழப்பவெய்தினும்
துறப்பிலாறமெனல்சூரராவதே. (௩௦)

கான்புறஞ்சேறலிலருமைகாண்டலால்
வான்பிறங்கியபுகழ்மன்னர்தொல்குலம்
யான்பிறந்தறத்தினின்றிழுக்கிற்றென்னவோ
ஊன்றுறந்துயிர்குடித்துழலும்வேலினுய். (௩௧)

வினைக்கருமெய்ம்மையன்வணத்துள்விட்டனன்
மனைக்கரும்புதல்வனையென்றன்மன்னவன்

---

* அங்கிமேல் வேள்விசெய்து-யாகாக்கினிமேல் அவிப்பாகஞ்செய்து மகவருவேள்வி.

† அடக்குமைம்பொறியொடு கரணத்தப்புறங் கடக்கும் வாலுணர்வினுக்கணுகுங் காட்சியானென்றார். ஐம்பொறியுங் கரணநான்குங் கடந்த மெய்யுணர்ச்சியுடையார் வாலறிவினுக் கண்மையனுன இராமமூர்த்தி.

‡ உளி மூன்றுவதன் பொருள்படுவதோ ரிடைச்சொல். ¶ ஆன்மாவோடுகூடக் கலந்துளது என்பது தோன்றநின்று என்றார்.

தனக்கருந்தவமது தலைக்கொண்டேகுதல்
எனக்கருந்தவமிதற்கிரங்கலெந்தைநீ (௩௨)

முந்தினை முனிவனையிறைஞ்சிமுற்றுமென்
வந்தனை முதலியமாற்றங்கூறினை
எந்தையையவனொடுமெய்தியீண்டென
சிந்தனையுணர்த்துதியென்றுசெப்புவாய். (௩௩)

முனிவனையெம்பியைமுறையினின்றரும்
புனிதவேதியர்க்குமேலுறைபுத்தேளிர்க்கும்
இனியனவிழைத்தியென்றியம்பியெற்பிரி
தனிமையுந்தீர்த்தியென்றுரைத்திதன்மையால். (௩௪)

வெவ்வியதன்னையால்விளைந்ததீண்டொரு
கவ்வையென்றிறையுந்தன்கருத்திலுக்கலன்
எவ்வருளென்வயின்வைத்ததின்சொலால்
அவ்வருளவன்வயினருளுகென்றியால். (௩௫)

வேண்டினனிவ்வரமென்றுமேலவன்
ஈண்டருளெம்பிரானிறுவியேகினை
பூண்டமர்தவனொடுங்கோயில்புக்கென
தாண்டகைவேந்தனையவலமாற்றிப்பின். (௩௬

ஏழிரண்டாண்டுநீத்தீண்டவந்தனைத்
தாழ்குவன்றிருவடிதளரலீண்டெனச்
சூழிவெங்கடகளிற்றரசர்சொல்லிப்பின்
வாழிமாதவன்சொலான்மனந்தெருட்டுவாய் (௩௭)

முறைமையாலெற்பயந்தெடுத்தமூவர்க்கும்
* குறைவிலாவென்னெடுவணக்கங்கூறிப்பின்
இறைமகன்றுயர்துடைத்திருத்திமாடென்றான்
† மறைகளைமறந்துபோய்வனத்துள்வைகுவான். (௩௮)

ஆள்வினையாண்மையிற்றிறம்பலன்றெனாத்
தாள்முதல்வணங்கியதனித்திண்டேர்வலான்
ஊழ்வினைவசத்துயிர்நிலையென்றுன்னுவான்
‡ வாழ்வினைநோக்கியைவணங்கிநோக்கினான். (௩௯)

---

* குறைவிலாவென்னெடுவணக்கம்-தீர்க்கதெண்டம். † மறையினர் தங்கடந்தானுயினும் தாய்மொழியான்கான் போந்திருத்தலின் 'மறைகளை மறந்துபோய்வனத்துள் வைகுவா,னென்றார்' ‡ வாழ்வினைநோக்கி- இல்வாழ்க்கையின் வழியைநோக்கிய சீதாபிராட்டியை ; அல்லது தன்னை வழிபடுவோர்க்கு வாழ்வினையருள்பவளெனினுமமையும்.

அன்னவள்கூறுவாளரசர்க்கத்தையர்க்
கென்னுடைவணக்கமுன்னியம்பியானுடைப்
பொன்னிறப்பூவையுங்கிளியும்போற்றுகென்
றன்னுமென்றங்கையர்க்குணர்த்துவாயென்றான். (௪௦)

தேர்வலானவ்வுரைகேட்டுத்தீங்குறின்
யார்வலாருயிர்துறப்பெளிதன்றேயெனாப்
போர்வலான்றடுக்கவும்பொருமிவிம்மினான்
சோர்விலானறிவிலாத்துயர்க்குச்சோர்கின்றான். (௪௧)

ஆறினன்போற்சிறிதவலமவ்வழி
வேறிலாவன்பினாய்விடைதந்தீகெனா
* ஏறுசேவகற்றொழுதிளையமைந்தனைக்
கூறுவதியாதெனவினையகூறினான். (௪௨)

உரைசெய்தெங்கோமகற்குறுதியாக்கிய
தரைகெழுசெல்வத்தைத்தவிரமற்றொரு
விரைசெறிகுழலிமாட்டளித்தமெய்யனை
அரைசனென்றின்னமொன்றறையற்பாலதோ. (௪௩)

கானகம்பற்றிநற்புதல்வன்காயுணப்
போனகம்பற்றியபொய்யின்மன்னர்க்கிங்
கூனகம்பற்றியவுயிர்கொடின்னும்போய்
† வானகம்பற்றிலாவலிமைகூடென்றான் (௪௪)

மின்னுடன்பிறந்தவாட்பரதவேந்தற்கு
மன்னுடன்பிறந்திலென்மண்கொண்டாள்கின்ற
தன்னுடன்பிறந்திலென்றம்பிமுன்னவென்
என்னுடன்பிறந்தயான்வலியனென்றியால். (௪௫)

ஆரியனிளவலைநோக்கியையவிச்
சீரியவல்லனசெப்பலென்றபின்
பாரிடைவணங்கினன்பதைக்குநெஞ்சினன்
தேரிடைவித்தகன்சேறன்மேயினான். (௪௬)

கூட்டினன்றேர்ப் ‡ பொறிகூட்டிக்கோன்முறை
பூட்டினன்புரவியப்புரவிபோனெறி
காட்டினன்காட்டித்தன்கல்விமாட்சியால்
ஓட்டினனொருவருமுணர்வுறாமலே. (௪௭)

---

* ஏறுசேவகனீண்டு ஸ்ரீராமன், † வானம்பற்றிலா வலிமை - துறக்கமடையாதிருப்பது. ‡ பொறி-எந்திரம்.

ஐயறன்கற்புந்தன்றகவுந்தம்பியும்
மையறுகருணையுமுணர்வும்வாய்மையும்
செய்யதன்வில்லுமேசேமமாகக்கொண்
டையனும்போயினனல்லினப்பனே. (சஅ)

வேறு.

பொய்வினைக்குதவும்வாழ்க்கையரக்கரைப்பொருந்தியன்னார்
செய்வினைக்குதவுநட்பாற்செல்பவர்தடுப்பதேய்க்கும்
மைவிளக்கியதேயன்னவயங்கிருளரக்கவானம்
கைவிளக்கெடுத்ததென்னவந்ததுகடவுட்டிங்கள். (சகூ)

மருமத்துத்தன்னையூன்றமறக்கொடும்பாவந்தீர்க்கும்
உருமொத்தசிலையினோரையொருப்படுத்துதவிநின்ற
கருமத்தின்விளைவையெண்ணிக்களிப்பொடுகாணவந்த
தருமத்தின்வதனமென்னப்பொலிந்ததுதனிவெண்டிங்கள். (ரு0)

காம்புயர்கானஞ்செல்லுங் * கரியவன்வறுமைநோக்கித்
தேம்பினகுவிந்தபோலுஞ்செங்கழுநீருஞ்சேரைப்
பாம்பினதலையவாகிப்பரிந்தனகுவிந்துசாய்ந்த
ஆம்பலுமென்றபோதுநின்றபோதலர்வதுண்டோ. (ருக)

அஞ்சனக்குன்றமன்னவழகனுமழகன்றன்மேல்
எஞ்சலில்பொன்போர்த்தன்னவிளவலுமிந்துவென்பான்
வெஞ்சிலைப்புருவத்தாடன்மெல்லடிக்கேற்பவெண்ணூற்
பஞ்சிடைப்படுத்தாலென்னவெண்ணிலாப்பரப்பப்போனார். (ருஉ)

சிறுகிலைமருங்குல்கொங்கையேந்தியசெல்வமென்னும்
நெறியிருங்கூந்தனங்கைசீறடிநீர்க்கொப்பூழின்
நறியனதொடர்ந்துசென்று டங்தெனின்வையினீங்கும்
உறவலியன்பினுங்கொன்றுண்டெனவுணர்வதுண்டோ. (ருங)

பரிதிவானவனுங்கீழ்பாற்பருவரைபற்றமுன்னம்
திருவினாயகனுந்தென்பாலயோசனையிரண்டுசென்றான்
அருவிபாய்கண்ணும்புண்ணாயழிகின்றமனமுந்தானும்
துரிதமான்றேரிற்போனான்செய்ததுசொல்லலுற்றாம். (ருச)

கடிகையோரிரண்டுமூன்றிற்கடிமதிலயோத்திகண்டான்
அடியிணைதொழுதானுதிருனிவனையவனுமுற்ற
படியெலாங்கேட்டுநெஞ்சிற்பருவாலுழந்தான்முன்னே
முடிவெலாமுணர்ந்தானந்தோமுடிந்தனன்மன்னனென்றான். (ருரு)

---

* கரியவன்-சீராமன்.

நின்றுயர்பழியையஞ்சிநேர்ந்திலன்றடுக்கவள்ளல்
ஒன்றுநானுரைத்தனோக்கான்றருமத்திற்குறுதிபார்ப்பான்
வென்றவருளரேமேலைவிதியினையெனாவிம்மிப்
பொன்றிணிமன்னன்கோயில்சுமந்திரனோடும்போனான். (௪௬)

தேர்கொண்டுவள்ளல்வந்தானென்றதஞ்சிந்தையுந்த
* ஊர்கொண்டதிங்களென்னமன்னனையுழையர்சுற்றக்
கார்கொண்டமேனியானைக்கண்டிலர்கண்ணில்வற்றா
நீர்கொண்டநெடுந்தேர்ப்பாகனிலைகண்டேநிலையிற்றீர்ந்தார். (௪௭)

இரதம்வந்துற்றதென்றாங்கியாவருமியம்பலோடும்
வரதன்வந்தானென்றுமன்னனுமயக்கந்தீர்ந்தான்
புரைதபுகமலகாட்டம்பொருக்கெனவிழித்துநோக்கி
விரதமாதவனைக்கண்டான்வீரன்வந்தனனோவென்றான். (௪௮)

இல்லையென்றுரைக்கலாற்றானேங்கினன்முனிவனின்றான்
நல்லவன்முகமேநம்பிநடந்திலனென்னுமாற்றம்
சொல்லலுமரசன்சோர்ந்தான்றயருறமுனிவனுமிவ்
வல்லல்காண்கில்லேனென்னாவாங்குநின்றகலப்போனான். (௪௯)

நாயகன்பின்னுந்தன்றேர்ப்பாகனைநோக்கிநம்பி
சேயனோவணியனோவென்றுரைத்தலுமனையான்செய்ய
வேயுயர்கானந்தானுந்தம்பியுமிதிலைப்பொன்னும்
போயினனென்றானென்றபோழ்தத்தேயாவிபோனான். (௫௦)

இந்திரன்முதல்வராயகடவுளர்யாருமீண்டிச்
சந்திரனனையதாங்கோர்மானத்தின்றலையிற்றாங்கி
வந்தனனெந்தைதந்தையெனமனங்களித்துவள்ளல்
உந்தியானுலகினும்பர் † மீள்கிலாவுலகத்துய்த்தார். (௫௧)

உயிர்ப்பிலன்றுடிப்புமில்லனென்றுணர்ந்துருவந்தீண்டி
அயிர்த்தனனோக்கிமன்னற்காருயிரின்மைதேறி
மயிற்குலமனையநங்கைகோசலைமறுகிவீழ்ந்தாள்
வெயிற்சுடுகோடைதன்னிலென்பிலாவுயிரின்வேவாள். (௫௨)

‡ இருந்தவந்தணனோடெல்லாமீன்றவன்றன்னையீனப்
பெருந்தவஞ்செய்தநங்கைகணவனிற்பிரிந்துதெய்வ
மருந்திழந்தவரின்விம்மிமணிபிரியரவின்மாழ்கி
அருந்துணைபிரிந்தவன்றிற்பெடையெனவரற்றலுற்றாள். (௫௩)

* ஊர் - ஊர்கோள்.
† மீள்கிலாப்பதமென்றது ஒளிசூழ்பரமபதம்.
‡ இருந்தவந்தணன் - அயன்.

வேறு.

தானேதானேதஞ்சமிலாதான்றகைவில்லான்
போனான்போனானெங்களைநீத்திப்பொழுதென்னா
வானீர்சுண்டிமண்ணறவற்றிமறுகுற்ற
மீனேயென்னமெய்தடுமாறிவிழுகின்றாள். (௬௪)

ஒன்றேநன்னாட்டெய்க்குவரிந்நாட்டுயிர்காப்பார்
அன்றேமக்கட்பெற்றுயிர்வார்க்கவமுண்டே
இன்றேவந்தீண்டஞ்சலெனாதெம்மகனென்பான்
கொன்றானன்றேதந்தையையென்றாள்குலைகின்றாள். (௬௫)

கோயும்மின்றிகோன்கதிர்வாள்வேலிவையின்றி
மாயுஞ்செல்வமக்கினிலேலோமறமன்னன்
* காயும்புள்ளிக்கர்க்கடநாகங்கனிவாழை
வேயும்போன்றானென்றுமயங்காவிழுகின்றாள் (௬௬)

வடித்தாழ்கூந்தற்கேகயன்மாதேமதியாலே
பிடித்தாய்வையம்பெற்றனைபோராவாமின்னே
முடித்தாயன்றேமந்திரமென்றாண்முகில்வாய்மின்
துடித்தாலென்னமன்னவன்மார்பிற்றுவள்கின்றாள். (௬௭)

அருந்தேரானைச்சம்பரனைப்பண்டமர்வென்றாய்
இருந்தார்வானோருன்னருளாலேயினிதிந்நாள்
விருந்தாகின்றாயென்றனள்வேழத்தரசொன்றைப்
பொருந்தாளன்பிற்சூழ்பிடியென்னப்பிரிவுற்றாள் (௬௮)

வேள்விச்செல்வந்துய்த்திகொன்மெய்ம்மைத்துணையின்மை
சூழிச்செல்வந்துய்துகொகொறேலாமனுநூலின்
வாழிச்செல்வந்துய்திகொன்முன்னென்றனள்வானோர்
கேள்விச்செல்வந்துய்க்கவவிற்றோர்கிளைதந்தாள். (௬௯)

வேறு.

ஆழிவேந்தன்பெருந்தேவியன்னபன்னியழுதரற்றத்
தோழியன்னசுமித்திரையுந்துளங்கியேங்கியுயிர்சோர
ஊழிதிரிவதெனக்கோயிலுலையும்வேறமற்றொழிந்த
மாழையுண்கட்டேவியருமயிலின்குழாத்தின்வந்திரைத்தார். (௭௦)

துஞ்சினானைத்தம்முயிரின்றுணையைக்கண்டார்துணுக்கத்தான்
நஞ்சுகவர்ந்தாலெனவுடலுநடுங்காநின்றாரென்றாலும்

---

* ஞண்டு, பாம்பு, வாழை, வேய் இவை கேடுறுங்காலத்தவற்றின் கருவேநாசமெய்துவித்தலின், காயும் புள்ளிக்கர்க்கடநாகங்கனிவாழைவேயும்போன்றானென்றார். "நண்டுசிப்பிவேய்கதலி நாசமுறுங்காலத்திற்கொண்டகருவழிக்குங்கொள்கைபோல் என்றார் பிறரும்.

அஞ்சியழுங்கிவீழுந்திலராலன்பிற்றருகண்பிறிதுண்டோ
வஞ்சமில்லாமனத்தானைவானிற்றொடர்வான்மனம்வலித்தார். (௭௧)

அளங்கொளளக்கரிரும்பரப்பிலண்டருலகிலப்புறத்தில்
விளங்குமாதர்கற்பினரிவரின்யாவரெனநின்றார்
களங்கநீத்தமதிமுகத்தார்கானவெள்ளங்கால்கோப்பத்
துளங்கலில்லாத்தனிக்குன்றீற்றொக்கமயிலியிற்சூழ்ந்திருந்தார். (௭௨)

கைத்தசொல்லாலுயிரிழந்தும்புதல்வற்பிரிந்துங்கடையோட
மெய்தவெந்தன்றிருவுடம்பைப்பிரியாதரற்றிவிட்டிலரால்
பித்தமயக்காஞ்சுறவெறியும்பிறவிப்பெரியகடல்கடக்க
உய்த்துமீண்டநாவாயிற்றாமும்போவாரொக்கின்றார் (௭௩)

மாதரார்களறுபதினாயிரருமுள்ளம்வலித்திருப்பக்
கோதில்குணத்துக்கோசலையுமிளையமாதுங்குழைந்தேங்கச்
சோதிமணித்தேர்ச்சுமந்திரன்சென்றரசன்றன்மைசொலவந்த
* வேதமுனிவன்விதிசெய்தவினையைநோக்கிவிம்முவான். (௭௪)

செய்யக்கடவசெயற்குரியசிறுவரீண்டையாரல்லர்
எய்தக்கடவபொருளெய்தாதிகவாவென்னவியல்பென்ன
மையற்கொடியாண்மகனீண்டுவந்தான்முடித்துமற்றென்ன
தையற்கடனின்றெடுத்தவனைத்தயிலக்கடலின்றலையுய்த்தான். (௭௫)

தேவிமாரையிவற்குரிமைசெய்யுநாளிற் † செந்தீயின்
ஆவிநீத்திரெனநீக்கியரிவைமார்களிருவரையும்
தாவில்கோயிற்றலையிருத்தித்தண்டார்ப்பரதற்கொண்டணைகென்
றேவினான்மன்னவனாணையெழுதிமுடங்கல்கொடுத்தவரை. (௭௬)

போனாரவருங்கேகயர்கோன்பொன்மாநகரம்புகவெய்த
ஆனாவறிவினருந்தவனுமறமார்பள்ளியதுசேர்ந்தான்
சேனாபதியிற்சுமந்திரனைச்செயற்பாற்குரியசெய்கென்னா
மேனாஞ்சொன்னமாந்தர்க்குவிளைந்ததினிநாம்விளம்புவாம். (௭௭)

மீனீர்வேலைமுரசியம்பவிண்ணோரேத்தமண்ணிறைஞ்சத்
தூநீரொளிவான்புடையிலங்கச்சுடர்த்தேரேறித்தோன்றினான்
வானேபுக்கானரும்புதல்வன்மக்களகன்றார்வருமளவும்
யானேகாப்பனிவ்வுலகையென்பான்போலவெறிகதிரோன். (௭௮)

வருந்தாவண்ணம்வருந்தினார்மறந்தார்தம்மைவள்ளலுமங்
கிருந்தானென்றேயிருந்தார்களெல்லாமெழுந்தாரருளிருக்கும்

---

* வேதமுனிவன் - வசிட்டமுனிவன்.

† செந்தீயினாவி நீத்திரென்றது - சககமனத்தை.

பெருந்தாமரைக்கட்கருமுகிலைப்பெயர்ந்தார்காணார்பேதுற்றார்
பொருந்தாநயனம்பொருந்திமைப்பொன்றச்சூழ்ந்தவெனப்புரண்டார்.

எட்டுத்திசையுமோவெனவெழுவார்விழுவாரிடர்க்கடலுள்
விட்டுநீத்தானைமையென்பார்வெய்யகைகயன்வினையென்பார்
ஒட்டிப்படர்ந்ததண்டகமிவ்வுலகத்துளதன்றேவுணர்வைச்
சுட்டிச்சேர்தலாற்றுதுமோதொடர்ந்துந்தேரின்சுவடென்பார். (௮௦)

தேரின்சுவடுநோக்குவார்திருமாநகரின்மிசைதிரிய
ஊருந்திகிரிக்குறியொற்றியுணர்ந்தாரெல்லாமுயிர்வந்தார்
ஆருமஞ்சலையன்போயயோத்தியடைந்தானெனவசனிக்
காருங்கடலுமொருவழிக்கொண்டார்த்தவென்னக்கடிதார்த்தார். (௮௧)

மானவரவின்வாய்த்தீயவலைவான்றொளைவாளெயிற்றின்வழி
ஆனகடுவுக்கருமருந்தாவருந்துமமுதம்பெற்றுய்ந்து
போனபொழுதிற்புகுந்தவுயிர்பொறுத்தாரொத்தார்பொருவரிய
* வேனின்மதனைமதனழித்தான்மீண்டானென்னவாண்டையார். (௮௨)

ஆறுசெல்லச்செல்லத்தேராழிகண்டாரயலப்பால்
வேறுசென்றநெறிகாணார்விம்மாநின்றவுவகையராய்
மாறியுலகம்வகுத்தநாள்வரம்புகடந்துமண்முழுதும்
ஏறியொடுங்குமெறிகடல்போலெயின்மாநகரமெய்தினார். (௮௩)

புக்காரரசன் † பொன்னுலகம்போனானென்னும்பொருள்கேட்டார்
உக்கார்நெஞ்சமுயிருகுத்தாருற்றதெம்மாலுரைப்பரிதால்
தக்கான்போனான்வனமென்னுந்தகையுமுணர்ந்தார்மிகையாவி
அக்காலத்தேயகலுமோவவதியென்றொன்றுளதானால். (௮௪)

மன்னற்கல்லார்வனம்போனமைந்தற்கல்லார்வாங்கரிய
இன்னற்சிறையினிடைப்பட்டாரிருந்தார்நின்றவருந்தவனும்
உன்னற்கரியபழிக்கஞ்சியன்றேவொழிந்ததியானென்று
பன்னற்கரியபலநெறியும்பகர்ந்துபதைப்பநீக்கினான். (௮௫)

வெள்ளத்திடைவாழ்வடனலையஞ்சிவேலைகடவாத
பள்ளக்கடலின்முனிபணியாற்பையுணரமவைகிடமேல்
வள்ளற்றாதைபணியென்னும் ‡ வானோர்தவத்தால்வயங்கிருளின்
கள்ளிற்போனவரிசிலைக்கைநம்பிசெய்கைநடத்துவாம் (௮௬)

௫ வது தைலமாட்டுபடல முற்றிற்று

ஆ. திருவிருத்தம்-௫௧௧

---

* வேனின்மதனை மதனழித்தான் - சிவனையொப்பானாகிய சீராமன். † பொன்னுலகம்போனான் - துறக்கமடைந்தனன். ‡ வானோர்செய்தவமே அரசன்பணியாற்கானேகச்செய்தலின், வள்ளற்றாதை பணியென்னும் வானோர்தவமென்றார்.

௬-வது. கங்கைப்படலம்.

வெய்யோனொளிதன்மேனியின் விரிசோதியின்மறையப்
பொய்யோவெனுமிடையாளொடுமிளையானொடும்போனான்
மய்யோமரகதமோமறிகடலோமழைமுகிலோ
அய்யோவிவன்வடிவென்பதொரழியாவழகுடையான். (௧)

அளியன்னதொரற்றன்னியகுழலாள்கடலமிர்தின்
தெளிவன்னதொர்மொழியாணிறைதவமன்னதொர்செயலாள்
வெளியன்னதொரிடையாளொடும்விடையன்னதொர்நடையான்
களியன்னமுமடவன்னமுநடமாடுவகண்டான். (௨)

* அஞ்சம்பையுமையன்றனதலகம்பையுமளவா
நஞ்சங்களைவெலவாகியநயனங்களையுடையாள்
துஞ்சுங்களிவரிவண்டுகள்குழலின்படிசுழலும்
கஞ்சங்களைமஞ்சன்கழனகுகின்றதுகண்டாள். (௩)

மாகந்தழுமகரந்தழுமளகந்தருமதியின்
பாகந்தருநுதலாளொடுபவளந்தருமிதழான்
மேகந்தனிவருகின்றதுமின்னோடெனமிளிர்பூண்
நாகந்தனிவருகின்றதுபிடியோடெனநடவா. (௪)

தொளைகட்டியகிளைமுட்டிய † சுருதிச்சுவையமுதின்
கிளைகட்டியகருவீக்கிளரிசையிற்பசைநறவின்
விளைகட்டியின்மதுரித்தெழுகிளவிக்கிளர்விழிபோல்
களைகட்டவர்தளைவிட்டெறிகுவளைத்தொகைகண்டான் (௫)

அருப்பேந்தியகலசத்துணையமுதேந்தியமதமா
மருப்பேந்தியவெனலாமுலைமழையேந்தியகுழலாள்
கருப்பேந்திரமுதலாயினகண்டாளிடர்காணான்
பொருப்பேந்தியதோளானொடுவிளையாடினள்போனாள். (௬)

பன்னந்துகடாளந்தொகுபடர்பந்திகள்படுநீர்
அன்னந்துயில்வதிதண்டலையயனந்துறைபுளினம்
இன்னந்தருமலர்தந்தனசெறிநந்வனதனநன்
பொன்னந்தியநதிகண்டுளமகிழ்ந்தனர்போனார். (௭)

கால்பாய்வனமுதுமேதிகள்கதிர்மேய்வனகடைவாய்
பால்பாய்வனநறைபாய்வனமலர்வாயளிபடரச்

---

* அஞ்சம்பு - மன்மதன் பூவாளியைந்தையும், அவை மா, அசோகு, முல்லை, தாமரை, நெய்தல் என்பன.

† சுருதிச்சுவை - இசைச்சுவை.

சேல்பாய்வனகயல்பாய்வனசெங்கான்மடவன்னம்
போல்பாய்புனன்மடவார்படிநெடுநாடவைபோனார். (அ)

வேறு.

பரிதிபற்றியபல்கலன்முற்றினர்
மருதவைப்பின்வளங்கெழுநாடொரீஇச்
சுருதிகற்றுயர்தோமிலர்சுற்றுறும்
விரிதிரைப்புனற்கங்கையைமேவினார். (௯)

கங்கையென்னுங்கடவுட்டிருநதி
தங்கிவைகுந்தபோதனர்யாவரும்
எங்கள் * செல்கதிவந்ததென்றேமுறா
† அங்கணாயகற்காணவந்தண்மினார். (௧௦)

பெண்ணினோக்குஞ்சுவையிற் ‡ பிறர்பிறக்
கெண்ணிநோக்கியியம்பருமின் பத்தைப்
பண்ணினோக்கும்பாவமுறைதப்பசுங்
கண்ணினோக்கினருள்ளங்களிக்கின்றார். (௧௧)

எதிர்கொடேத்தினரின்னிசைபாடினர்
§ வெதிர்கொள்கோலினராடினர்வீரனைக்
கதிர்கொடாமரைக்கண்ணனைக்கண்ணினால்
மதுரவாரியுண்டெனமாந்துவார். (௧௨)

மனையினீங்கியமக்களைவைகலும்
நினையுநெஞ்சினர்கண்டிலர்நேடுவார்
அனையர்வந்துறவாண்டெதிர்ந்தார்களில்
இனியமாதவப்பள்ளிகொண்டெய்தினார். (௧௩)

பொழியுங்கண்ணிற்புதுப்புனலாட்டினர்
மொழியுமின்சொலின்மொய்ம்மலர்சூட்டினர்
அழிவிலன்பெனுமாரமிர்தூட்டினர்
வழியில்வந்தவருத்தத்தைவாட்டினர். (௧௪)

காயுங்காணிற்கிழங்குங்கனிகளும்
தூயதேடிக்கொணர்ந்தனர்தோன்றனீ
ஆயகங்கையரும்புனலாடினை
¶ தீயையோம்பினைசெய்யுமென்றனர் (௧௫)

---

* செல்கதியென்றார் சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய வந்தமிலின்பத்தழிவில்வீட்டினை. † (௧) அங்கணாயகன் - அவ்விடத்து இராமமூர்த்தி (௨) அழகிய திருக்கண்களையுடையான். ‡ பிறரென்புழி முன்னையது இல்வாழ்வாரை பின்னையது துறவறவொழுக்கமுடையாரை
§ வெதிர்கொள்கோலினர்-முக்கோற்பகவர்.
¶ தீயையோம்-பல்வேள்விசெய்தல்.

மங்கையர்க்குவிளக்கன்னமானையும்
செங்கைபற்றினன்றேவருந்துன்பறப்
* பங்கயத்தயன்பண்டுதன்பாதத்தின்
அங்கையிற்றருங்கங்கையினாடினான். (௧௬)

கன்னிநீக்கருங்கங்கையுங்கைதொழாப்
பன்னிநீக்கரும்பாதகம்பாருளோர்
என்னினீக்குவர்யானுமின்றெற்றந்த
உன்னிநீக்கினெனுய்ந்தனென்யானென்றாள். (௧௭)

வெங்க † நாகக்கரத்தினன்வெண்ணிறக்
கங்கைவார்சடைக்கற்றையன் ‡ கற்புடை
மங்கைகாணநின்றாடுகின்றான்வகிர்த்
திங்கள்சூடியசெல்வனிற்றோன்றினான். (௧௮)

தள்ளுநீர்ப்பெருங்கங்கைத்தரங்கத்தால்
வள்ளிநுண்ணிடைமாமலராளொடும்
‖ வெள்ளிவெண்ணிறப்பாற்கடன்மேலைநாள்
பள்ளிநீங்கியபான்மையிற்றோன்றினான். (௧௯)

வஞ்சிநாணவிடைக்குமடநடைக்
கஞ்சியன்னமொதுங்கவடியன்ன
கஞ்சநீரிலொளிப்பக்கயலுகப்
பஞ்சிமெல்லடிப்பாவையுமாடினாள். (௨௦)

¶ தேவர்தேவன்செறிசடைக்கற்றையுள்
கோவைமாலையெருக்கொடுகொன்றையின்
பூவுநாறலள்பூங்குழற்கூந்தலின்
§ நாவிநாண்மலர்கங்கையுநாறினாள். (௨௧)

நுரைக்கொழுந்தெழுந்தோங்கிநுடங்கலால்
நரைத்தகூந்தலினங்கை ○ மந்தாகினி

---

* பங்கயத்தயன் பண்டுதன்பாதத்தினங்கையிற்றரும் கங்கை. திருவிக்கிரம வடிவங்கொண்டருளிய காலத்தில் உலகினையளக்க மேலேநீட்டிய திருவடிக்கு பிரமன் ஆட்டிய இறைவன்பாதோதகம். † நாகக்கரத்தினன்-யானைபோலு நீண்டகையினன் அல்லது பாம்பணிந்தகையினன். ‡ கற்புடைமங்கைகாணநின்றாடுகின்றான்-கற்பினையுடைய சனகிகாணநீராடுகின்றான். அல்லது மலைமங்கைகாணச் சிற்சபையி லாடுகின்றான் எனவுஞ் சிலேடையாகப் பொருள்கொள்க அல்லது சடாமுடியையுடைய இராமமூர்த்தி கங்கையினீராடுதலால் கங்கையைசூடிய சிவபெருமானைப்போலத்தோன்றினானென்றும் பொருள்கொள்ளலாம் ‖ பாற்கடற்பரமனே சீராமனாகலின், வெண்ணிறப்பாற்கடன் மேலைநாள்பள்ளிநீங்கிய பான்மையிற்றோன்றினானென்றார். ¶ தேவர்தேவன்-சிவபெருமான். § நாவிநாண்மலர் கங்கையுநாறினாளெனத்திணை விரவிச் சிறப்பானுயர்திணை முடிபேற்றது. ○ மந்தாகினி-கங்கை.

உரைத்தசீதைதனிமையையுன்னுவாள்
திரைக்கைநீட்டிச்செவிலியினூட்டினாள். (௨௨)

மங்கைவார் * குழற்கற்றைமழைக்குலம்
தங்குநீரிடைத்தாழ்ந்துகுழைப்பன
கங்கையாற்றொடுங்காளிந்திதன்னொடும்
பொங்குநீர்ச்சுழிபோவனபோன்றவே. (௨௩)

சுழிபட்டோங்கியதுங்கொலியாற்றுத்தன்
† விழியிற்சேலுகள்வானிறவெள்ளத்து
முழுகித்தோன்றுகின்றுண்முதற்பாற்கடல்
அழுவத்தன்றெழுவாளெனவாயினாள். (௨௪)

செய்யதாமரைத்தாள்பண்டுதீண்டலால்
வெய்யபாதகந்தீர்த்துவிளங்குவாள்
அய்யன்மேனியெலாமளைந்தாளினி
வய்யமாநகரத்திடைவைகுமே. (௨௫)

துறைநறும்புனலாடிச்சுருதியோர்
உறையுளெய்தியுணர்வுடையோருணர்
இறைவர்கைதொழுதேத்தெரியோம்பிப்பின்
அறிஞர்காதற்கமைவிருந்தாகினான். (௨௬)

வருந்தித்தான்றரவந்தவமுதையும்
‡ அருந்துநீரென்றமரரையூட்டினான்
விருந்துமெல்லடகுண்டுவிளங்கினான்
திருந்தினார்வயிற்செய்தனதேயுமோ. (௨௭)

ஆயகாலையினுயிரமம்பிக்கு
நாயகன்போர்க்குகனெனுநாமத்தான்
தூயகங்கைத்துறைவிடுந்தொன்மையான்
காயும்வில்லினன்கற்றிரடோளினான். (௨௮)

துடியனாயினன்றோற்செருப்பார்த்தபேர்
அடியனற்சிறந்தன்னநிறத்தினான்
நெடியதானைநெருங்கலினீர்முகில்
இடியினோடெழுந்தாலன்ன $ வீட்டினான். (௨௯)

---

* குழற்கற்றை நீடைக்குழைப்பன கங்கையாற்றொடுங்காளிந்தியொடுநீர்ச்சுழிபோவன போன்றனவென்றுவமைகூறினர். † விழியிற்சேலென்றது விரோதவுவமை. ‡ அருந்துநீரென்றது நீருந்துயினென்பதன்றி அருந்துகின்ற நீர்போலெனினுமாம். $ ஈடு-பெருமை.

கொம்புதுத்தரிகொட்டுமுறைமையன்
பம்பைபம்புபடையினன் * பல்லவத்
தம்பனம்பிக்குநாதனழிகவுள்
தும்பியீட்டம்புரைகிளைசுற்றத்தான். (௫௦)

காழமிட்டகுறங்கினன்கங்கையின்
ஆழமிட்டநெடுமையினானரை
தாழவிட்டசெந்தோலன்றயங்குறச்
சூழவிட்டதொடுபுலிவாலினான் (௫௧)

பற்றொடுத்தன்னபல்சூற்கவடியன்
கற்றொறத்தன்னபோலுங்கழலினான்
அற்றொடுத்தன்னகுஞ்சியனாளியின்
நெற்றொடுத்துநெரிந்தபுருவத்தான் (௫௨)

பெண்ணைவன் † செறும்பிற்பிறங்கிச்செறி
வண்ணவன்மயிர்வார்ந்துயர்முன்கையன்
கண்ணகன்றடமார்பெனுங்கல்லினன்
எண்ணெயுண்டவிருள்புரைமேனியான். (௫௩)

கச்சொடார்த்தகறைக்கதிர்வாளினன்
நச்சராவினடுக்குறநோக்கினன்
பிச்சராமன்னபேச்சினனிந்திரன்
வச்சிராயுதம்போலுமருங்கினான். (௫௪)

ஊற்றமெய்ந்நறவூனொடுமீனுகர்
நாற்றமேயநகையின்முகத்தினான்
சீற்றமின்றியுந்தீயெழநோக்குவான்
கூற்றமஞ்சக்குமுறுங்குரலினான். (௫௫)

‡ சிருங்கிபேரமெனத்திரைக்கங்கையின்
மருங்குதோன்றுநகருடைவாழ்க்கையான்
ஒருங்குதேனொடுமீனுபகாரத்தன்
இருந்தவள்ளலைக்காணவந்தெய்தினான். (௫௬)

சுற்றமப்புறநிற்கச்சுடுகணை
விற்றுறந்தரைவீக்கியவாளொழித்
தற்றநீத்தமனத்தினனன்பினன்
நற்றவப்பள்ளிவாயிலைநண்ணினான். (௫௭)

* பல்லம்-ஓரெண். வப்பிரத்தியம் பெற்றுப் பல்லவமென நின்றது.
† செறும்புபனைமரத்தின்மேலுள்ள பொருக்கு அது இக்காலத்தில் செதும்பெனவழங்கும்.
‡ சிருங்கிபேரம்-குகப்பெருமாள் வாழூர்

கூவாமுன்னமிளையோன்குறுகிநீ
ஆவான்யாரெனவன்பினிறைஞ்சினான்
தேவாநின்கழல்சேவிக்கவந்தனென்
நாவாய்வேட்டுவனடியேனென்றான். (௩௮)

வேறு.

நிற்றியீண்டென்றுபுக்குநெடியவற்றொழுதுதம்பி
கொற்றவநின்னைக்காணக்குறுகினனிமிர்ந்தகூட்டச்
சுற்றமுந்தானுமுள்ளந்தூயவன்றாயினல்லான்
எற்றுநீர்க்கங்கைநாவாய்க்கிறைகுகனொருவனென்றான். (௩௯)

அண்ணலும்விரும்பியென்பாலழைத்திநீயவனையென்றான்
பண்ணவன்வருகவென்னப்பரிவினன்விரைவிற்புக்கான்
* கண்ணனைக்கண்ணினோக்கிக்கனிந்தனனிருண்டகுஞ்சி
மண்ணுறப்பணிந்துமேனிவளைத்துவாய்புதைத்துநின்றான். (௪0)

இருத்திநீயென்றபோதுமிருந்திலனெல்லைநீத்த
அருத்தியன்றேனுமீனுமமுதினுக்கமைவதாகத்
திருத்தினென்கொணர்ந்தேனென்கொல்திருவுளமென்னவீரன்
விருத்தமாதவரைநோக்கிமுறுவலன்விளம்பலுற்றான். (௪௧)

அரியதாமுவப்பவுள்ளத்தன்பினாலமைந்தகாதல்
தெரிதரக்கொணர்ந்தவென்றாலமிர்தினுஞ்சீர்த்தவன்றே
பரிவினிற்றழீஇயவென்னிற்பவித்திரமெம்மனோர்க்கும்
உரியனவினிதினாமுமுண்டனமன்றோவென்றான். (௪௨)

சிங்கவேறனையவீரன்பின்னருஞ்செப்புவான்யாம்
இங்குறைந்தெறிநீர்க்கங்கையேறுதுநாளையாணர்ப்
பொங்குநின்சுற்றத்தோடும்போயுவந்தினிதுனூரில்
தங்கிநீநாவாயோடுஞ்சாருதிவிடியவென்றான். (௪௩)

கார்குலாம்நிறத்தான்கூறக்காதலனுணர்த்துவானிப்
பார்குலாஞ்செல்வநின்னையிங்ஙனம்பார்த்தகண்ணை
ஈர்கிலாக்கள்வனேன்யானின்னலினிருக்கைநோக்கித்
தீர்கிலேனானதையசெய்குவனடிமையென்றான். (௪௪)

கோதைவிற்குரிசிலன்னான்கூறியகொள்கைகேட்டான்
சீதையைநோக்கித்தம்பிதிருமுகநோக்கித்தீராக்
காதலனாகுமென்றுகருணையின்மலர்ந்தகண்ணன்
யாதினுமினியநண்பவிருத்தியீண்டெம்மொடென்றான். (௪௫)

* கண்ணன்-ஸ்ரீராமன் க்ருஷ்ணன் என்றது கண்ணன் எனவந்தது பிராகிருதச் சிதைவு.

திருநகர்தீர்ந்தவண்ணை * மானவதெரித்தியென்னப்
பருவரற்றம்பிகூறப்பரிந்தவன்வையுளெய்தி
இருகணீரருவிசோரக்குகனுமாண்டிருந்தானென்னே
பெருநிலக்கிழத்திதோற்றம்பெற்றிலள்போலுமென்னா. (௪௬)

விரியிருட்பகையையோட்டித்திசைகளைவென்றுமேனின்
றொருதனித்திகிரியுந்தியுயர்புகழ்நிறுவிநாளும்
இருநிலத்தெவர்க்குமுள்ளத்திருத்தனனென்னவீந்த
செருவலிவீரனென்னச்செங்கதிர்செல்வன்சென்றான். (௪௭)

மாலைவாய்நியமஞ்செய்துமரபுளியியற்றிவைகல்
வேலைவாயமிர்தன்னானும்வீரனும்விரித்தநாணல்
மாலைவாய்ப்பாரின்பாயல்வைகினன்வரிவிலேந்திக்
காலைவாயளவுந்தம்பியிமைப்பிலன்காத்துநின்றான். (௪௮)

தம்பியின்குழாத்திற்சுற்றுஞ்சுற்றத்தன்றொடுத்தவில்லன்
வெம்பிவெந்தழியாநின்றநெஞ்சினன்விழித்தகண்ணன்
தம்பிநின்றானைநோக்கித்தலைமகன்றன்மைநோக்கி
அம்பியின்றலைவன்கண்ணீரருவிசோர்குன்றினின்றான். (௪௯)

துறக்கமேமுதலவாயதூயனயாவையேனும்
மறக்குமாநினையலம்மாவரம்பிலதோற்றமாக்கள்
இறக்குமாறிதுவென்பான்போன்முன்னைநாளிறந்தான்பின்னாள்
பிறக்குமாறிதுவென்பான்போற்பிறந்தனன் † பிறவாவெய்யோன். ()

செஞ்செவேசேற்றிற்றோன்றுந்தாமரைதேரிற்றோன்றும்
வெஞ்சுடர்ச்செல்வன்மேனிநோக்கினவிரிந்தவோர்
அஞ்சனநாயிறன்னவையனைநோக்கிச்செய்ய
வஞ்சிவாழ்வதனமென்னுந்தாமரைமலர்ந்ததன்றே. (௫௧)

நாண்முதற்கமைந்தயாவுநயந்தனனியற்றிநாமத்
தோண்முதற்கமைந்தவில்லான்மறையவர்தொடரப்போனான்
ஆண்முதற்கமைந்தகேண்மையன்பனைநோக்கியைய
கோண்முதற்கமைந்தநாவாய்கொணருதிவிரைவினென்றான். (௫௨)

வேறு.

ஏவியமொழிகேளாவிழிபுனல்பொழிகண்ணான்
ஆவியுமுலைகின்றானடியிணைபிரிகிலலான்
காவியின்மலர்காசக்கடன்மழையனையானைத்
தேவியோடடிதாழாச்சிந்தனையுரைசெய்வான். (௫௩)

---

* மானவன் ஈண்டு இளையபெருமாள்.

† பிறவாவெய்யோன். (வினைத்தேவர்போலப்) பிறவாத சூரியன்.

பொய்ம்முறையிலரேமெம்புகலிடம்வனமேயால்
கொய்ம்முறையுறுதாராய்குறைவிலெவ்வலியேமால்
செய்ம்முறைகுற்றேவல்செய்குதடிமடியோமை
இம்முறையுறவென்னவினிதிருநெடிதெம்மூர். (௫௪)

தேனுளதினையுண்டாற் * றேவருநுகர்தற்காம்
ஊனுளதுணைநாயேமுயிருளவிளையாடக்
கானுளபுனலாடக்கங்கையுமுளதன்றோ
நானுளதனையுநீயினிதிருநடவெம்பால் (௫௫)

தோலுளதுகில்போலுஞ்சுவையுளதொடர்மஞ்சம்
போலுளபறண்வைகும்புரையுளகளிவானின்
கானுளசிலைபூணுங்கையுளகடிதோடும்
மேலுளபொருளேனும்விரைவொடுகொணர்வேமால் (௫௬)

ஐயிருபத்தோடைந்தாயிரருளராணை
செய்குநர்சிலைவேடர்தேவரின்வலியாரால்
உய்குதுமடியேமெங்குடிலிடையொருநாணீ
வைகுதியெனின்மேலோர்வாழ்விலைபிறிதென்றான். (௫௭)

அண்ணலுமதுகேளாவகநிறையருண்மிக்கான்
வெண்ணிறநகைசெய்தான்வீரநின்னுழையாமப்
புண்ணியநதியாடிப்பினிதரைவழிபாடுற்
றெண்ணியசிலநாளிற்குறுகுதுமினிதென்றான். (௫௮)

சிந்தனையுணர்கிற்பான்சென்றனன்விரைவோடும்
தந்தனனெடுநாவாய் † தாமரைநயனத்தான்
அந்தணர்தமையெல்லாமருளுதிர்விடையென்று
இந்துவினுதலாளோடிளவலொடினிதேறா. (௫௯)

விடுநிகடிதென்றான்மெய்யுயிரனையானும்
முடுகினனெடுநாவாய்முரிதிரைநெடுநீர்வாய்க்
கடிதினின்மட ‡ வன்னக்கதியதுசெலநின்றார்
இடருறமறையோருமெரியுறுமெழுகானார் (௬௦)

§ பாலுடைமொழியாளும்பகலவனனையானும்
சேலுடைநெடுநன்னீர்சிந்தினவிளையாடத்

---

* வேடராதலின் உளனைத்தேவரு நுகர்தற்காமூனுலவென்றார்.
† புண்டரீகாட்சனென்னும் பெயர்பற்றித் தாமரை நயனத்தானென்றார்.
‡ அன்னக்கதி என்றது அன்னம் விரைந்து நடக்குங்கதியை.
§ பாலுடை மொழியாளென்பதற்கு பால்போலுஞ் சுவையுடைய மொழியாளென் பதன்றிப் பாலுந்தோல்வியெய்து மொழியாளெனினுமாம்.

தோலுடைநிமிர்கோலிற்றுழவிடவெழுநாவாய்
காலுடைநெடுஞெண்டிசென்றதுகடிதம்மா. (௬௧)

சாந்தணிபுளினத்தின்றடமுலையுயர்கங்கை
காந்தினமணிமின்னக்கடிகமழ்கமலத்திற்
சேர்ந்தொளிவிரியுந்தெண்டிரையெனுநிமிர்கையால்
ஏந்தினளொருதானேயேற்றினளினதப்பால். (௬௨)

அத்திசையிற்றையனன்பனைமுகநோக்கிச்
சித்திரகூடத்திற்சென்னெறிபகரென்னப்
பத்தியினுயிரீயும்பரிவினனடிதாழா
* உத்தமவடிவாநாயேனோதுவதுளதென்றான். (௬௩)

நெறியிடுநெறிவல்லேனேடினென்வழுவாமல்
நறியனகனிகாயுநறவிவைதரவல்லேன்
உறைவிடமமைவிப்பனொருநொடிவரையும்மைப்
பிறிகலெனுடனேகப்பெறுகுவெனெனினாயேன். (௬௪)

தீயனவகையாவுந்திசைதிசைசெலநூறித்
தூயனவுறைகானந்துருவினென்வரவல்லேன்
மேயினபொருணாடித்தருகுவென்வினைமுற்றும்
ஏயினசெயவல்லேனிருளினுநெறிசெல்வென். (௬௫)

கல்லுவென்மலைமேலுங்கவலையின் † முதல்யாவும்
செல்லுவெனெறிதூரஞ்செறிபுனறரவல்லென்
வில்லினமுன்னென்றும்வெருவலெனிருபோதும்
மல்லினுமுயர்தோளாய்மலரடிபிரியாதேன் (௬௬)

‡ திருவுளமெனின்மற்றென்சேனையுமுடனேகொண்
டொருவலெனிருபோதுமுறைகுவெனுனராணோர்
மருவலரெனின்முன்னேமாள்குவென்வசையில்லேன்
பொருவருமணிமார்பாபோதுவெனுடனென்றான். (௬௭)

அன்னவனுரைகேளாவமலனுமுரைநேர்வான்
என்னுயிரனையாய்நீயிளவலுனினையானிந்
நன்னுதலவணின்கேணளிர்கடனிலமெல்லாம்
உன்னுடையதுநானுன்றொழிலுரிமையினுள்ளேன். (௬௮)

துன்புளதெனினன்றோசுகமுளததுவன்றிப்
பின்புளதிடைமன்னும்பிரிவுளதெனவுன்னேல்

---

* உத்தமவென்பது யாதினுஞ் சிறந்தானேயென்பதன்றி இருளிற்காப்பாற்படயவனேயெனினுமாம். † முதல்கிழங்கு, வேர். ‡ திருவுளம்கருத்து.

முன்புளெமொருநால்வேமுடிவுளதெனவுன்ஞு
அன்புளவினிநாமோரைவர்களுளராஞேம் (சுக)

படருறவுளனும்பிகானுறைபகலெல்லாம்
இடருறுபகையாபோயானெனவுரியாய்நீ
சுடருறவடிவேலாய்சொன்முறுகடவேல்யான்
வடதிசைவருமந்நாணின்னுழைவருகின்றேன் (எ0)

அங்குளகிளைகாவற்கமைதியினுளனும்பி
இளங்குளகிளைகாவற்கியாருளருரைசெய்யாய்
உன்கிளையெனதன்றோவுறுதுயருறலாமோ
என்கிளையிதுகாவென்னேவலினினிதென்றான். (எக)

* பணிமொழிகடவாதான்பருவரலிகவாதான்
பிணியுடையவனென்னும்பிரிவினன்விடைகொண்டான்
அணியிழைமயிலோடுமையனுமிளையோனும்
திணிமரநிறைகானிற்சேணுறநெறிசென்றார். (எஉ)

சு-வது கங்கைப்படலம் முற்றிற்று.

ஆ திவிருத்தம்-கூகக.

எ-வது. வனம்புகுபடலம்.

பூரியர்புணர்மாதர்பொதுமணமெனமன்னும்
ஈரமுமுளதில்லென்றறிவருமிளவேனில்
ஆரியன்வரலோடுமெமுதளவியசீதக்
காருழுகுறிமானக்காட்டியதவணெங்கும். (க)

வெயிலிளநிலவேபோல்விரிகதிரிடைவீசப்
பயின்மரநிழலினப்பனிபுரைதுளிமேகப்
புயல்தரவிளமென்கால்பூவளவியதெய்த
மயிலினநடமாடும்வழியினியனபோனார். (உ)

மன்றலின்மலிகோதைமயிலியலிளமானே
இன்றுயில்வதிகோபத்தினம்விரிவனவெங்கும்
கொன்றைநகள்சொரிபோதின்குப்பைகொள்குலமாலை
பொன்றிணிமணிமானப்பொலிவனபலகாணாய். (ஙு)

பாணிளமிஞிறுகப்பமெழுபணையாக
நாணினதொகுபீலிகோலினநடமாடல்

* பணிமொழி-பணிவைப்புலப்படுத்திய மொழி.

பூணியலினசாயல்பொலிவதுபலகண்ணில்
காணியவெனலாகுங்களிமயிலவைகாணாய். (ச)

சேர்ந்தொளிவிரிசெவ்வாய்ப்பைங்கிளிசெங்கோலக்
காந்தளின்மலரேறிக்கோதுவகவினாரும்
மாந்தளிர்நறுமேனிமங்கைநின்மடமுன்கை
ஏந்தினவெனலாகுமியல்பினவிவைகாணாய். (ரு)

நெய்ஞ்ஞிறைநெடுவேலின்னினிறமுறுதிறமுற்றிக்
கைஞ்ஞிறைநிமிர்கண்ணாய்கருதினவினமென்றே
மெய்ஞ்ஞிறைவிரிசாயல்கண்டுநின்விழிகண்டும்
மைஞ்ஞறையுமடமானும்வருவனபலகாணாய் (கூ)

பூவலர்குரவோடும்புடைதவழ்பிடவீனும்
மாவலர்சொரிசூழற்றயிலெழமயிலொன்றின்
தூவியின்மணநாறத்துணைபிரிபெடைதானச்
சேவலொடுறவூடித்திரிவதனியல்காணாய். (எ)

† அருந்ததியனையாளேயமிர்தினுமினியாளே
செருந்தியின்மலர்தாங்குஞ்செறியிதழ்வனசோகம்
பொருந்தினகளிவண்டிற்பொதிவனபொன்னூதும்
இருக்கையினெழுதீயொத்தெழுவனவியல்காணாய். (அ)

ஏந்திளமுலையாளேயெழுதருமெழிலாளே
காந்தளின்முகைகண்ணிற்கண்டொருகளிமஞ்ஞை
† பாந்தளிதெனவுன்னிக்கவ்வியபடிபாராய்
தீந்தளவுகள்செய்யுஞ்சிறுகுறுநகைகாணாய் (கூ)

குன்றுறைவயமாவின்குருளையுமிருள்சிந்திப்
பின்றினதெனலாகும்பிடிதருசிறுமாவும்
அன்றலபிறிவொல்லா ‡ வண்டர்தமனையாவின்
கன்றொடுவிளையாடுங்களியனபலகாணாய். (க0)

அகில்புனைகுழன்மாதேயணியிழையெனலாகும்
நகுமலர்நிறைமாலைக்கொம்பர்கணதிதோறும்
o துகில்புரைநறுநீரிற்றோய்வனதுறையாடும்
முகிழிளமுலையாரின்மூழ்குவபலகாணாய். (கக)

* கற்பிற்சிறப்புடையவளாகலின் அருந்ததியொடுவமை கூறினார்.
† கோம்பிக்கொதுங்கி மேயாமஞ்ஞை குஞ்சரங்கோளிழைக்கும்பாம்பெனப் பிறர்கூறலின் களிமஞ்ஞை பாந்தளிதெனவுன்னியென்றார்.
‡ அண்டர் முல்லைநிலமாக்கள்
o நீரின்றூய்மைநோக்கித் துகில்புரைநறுநீரென்றார்.

முற்றுறுமுகைகிண்டிமுயல்கிலசிலதும்பி
விற்றிருநுதன்மாதேயம்மலர்விரிகோங்கின்
சுற்றுறுமலரேறித்துயில்வன * சுடர்மின்னும்
பொற்றகடுறுநீலம்புரைவனபலகாணும். (௧௨)

கூடியநறைவாயிற்கொண்டனவிழிகொள்ளா
மூடியகளிமன்னமுடுகினநெறிகாணா
ஆடியசிறை † மாவண்டந்தரினிசைமுன்னாப்
பாடியபெடைகண்ணுவருவனபலகாணாய். (௧௩)

கன்னியரணிகோலங்கற்றறிகுநரென்னப்
பொன்னணிநிறவேங்கைக்கொம்பர்கள்புதுமென்பூ
அன்னமென்னடையால்நின்னளகநன்னுதலப்பும்
‡ சின்னமென்மலர்மானச்சிந்துவபலகாணாய். (௧௪)

மணங்கிளர்மலர்வாசமாருதம்வரவீசக்
கணங்கிளர்தருசுண்ணங்கல்லுடையனகானத்
தணங்கினுமினியாயுன்னணிவடமுலைமுன்றிற்
சுணங்கினமனைமானத்துறுவனபலகாணாய் (௧௫)

§ அடியிணைபொறைகல்லாவென்றுகொலதரெங்கும்
இடையிடைமலர்சிந்தினமரமிவைகாணாய்
கொடியினொடிளவாசக்கொம்பர்கள்குயிலாயுன்
துடிபுரையிடைநாணித்துவள்வனவவைகாணாய். (௧௬)

வான்புரைவிழியாயுன்மலர்புரையடிமானத்
தாள்புரைதளிர்வைகுந்தகைஞிமிறிவைகாணாய்
கோள்புரையிருள்வாசக்குழல்புரைமழைகாணாய்
தோள்புரையிளவேயின்றொகுதிகளவைகாணாய் (௧௭)

பூநனைசினைதுன்றிப்புள்ளிடையிடைபம்பி
¶ நானிறநளிர்வல்லிக்கொடியுளவிலமல்கி
மானினமயின்மாலைக்குயிலினம்வருகானந்
நீநிகர்தொழிலாடைத்திரைபொருவனபாராய். (௧௮)

என்றனன்மடவாளோடினிதினில்விளையாடிப்
பொன்றிணிதிரடோளான்போயினனெறி ○ போதும்

---

* வண்டுகோங்கிற் றுயில்வதனை சுடர்மின்னும் பொற்றகடுறுநீலம் புரைவனவென்றார்.

† மாவண்டு என்புழிமாகருமை. ‡ சின்னமென்மலர் சின்னப்பூ.

§ அடியிணைபொறுக்கமாட்டா கொல்லென்பார் அடியிணை பொறைகல்லாவென்றார். ¶ நானிறம்-நானாவிதம். ○ போதுஎன்பது ஆகுபெயராய் சூரியனுக்காகியது, போதுகாலம். பொழுதுஎன்பதன் முதனிலை நீண்டு இடை நிலைகெட்டுபோதென்றாகியது என்பாருமுளர், மரூஉ.

சென்றதுகுடபாலத் * திருமலையிதுவன்றே
என்றனன்வினைவென்றோர்மேவிடமெனவேலோடும். (௧௯)

அருத்தியினகம்விம்முமன்பினிநெடுநாளில்
திருத்தியவினைமுற்றிப்பெறன்றனன்னெறிநின்றான்
பரத்துவனெனுநாமப்பரமுனி † பவநோயின்
மருத்துவனனையானைவரவெதிர்கொளவந்தான் (௨௰)

குடையினனிமிர்கோலன்குண்டிகையினனூரிச்
சடையினனுரிமானின்சருமனன்மரநாரின்
உடையினன்மயிர்காலுருவின ‡ னெறிபேணும்
நடையினன்மறைநாலுநடக்விறருநாவான். (௨௧)

செந்தழல்புரிசெல்வன் $ றிசைமுகமுனிசெவ்வே
தந்தனவுயிரெல்லாந்தன்னுயிரெனநல்கும்
அந்தணனுலகேழுமமையெனி ¶ னமரேசன்
உந்தியினுதவாமேயுதவிடுதொழில்வல்லான். (௨௨)

அம்முனிவரலோடுமகனுமலர்தூவி
மும்முறைதொழுதானம்முதல்வனுமெதிர்புல்லி
இம்முறையுருவோ § நானெய்துவதெனவுள்ளம்
விம்மினனிழிகண்ணீர்விழிவழியுகநின்றான். (௨௩)
அகலிடநெடிதாளுமமைதியையதுதீரப்

புகலிடமெமதாகும்புரையிடையிதுநாளில்
தகவிலதவவேடந்தழுவினைவருவானேன்
o இகலடுசிலைவீரவிளையவனொடுமென்றான். (௨௪)

* உற்றுளபொருளெல்லாமுணர்வுறவுரைசெய்தான்
நற்றவமுனியர்தோவிதிதருநவையென்யான்
இற்றதுசெயலுண்டோவினியெனவிடர்கொண்டான்
பெற்றிலடவமந்தோபெருநிலமகளென்றான். (௨௫)

துப்புறழ்துவர்வாயின்றாய்மொழிமயிலோடும்
அப்புறுகடன்ஞாலமாளுதிகடிதென்று
ஒப்பறுமரசுன்னையுயர்வனமுறவேகென்
றெப்பரிசுயிருய்ந்தாவென்றனையவனென்றான். (௨௬)

---

* திருமலை சித்திரகூடம். † பிறவிநோய்க்கு மருத்துவன்றுகலின்பவநோயின் மருத்துவனென்றார். ‡ நெறி - துறவற வொழுக்கத்தை. $ திசைமுகமுனி-பிரமன். ¶ அமரேசன்-அயர்வருமமரர்க்கிறை. § நானென்னுமுளப் பாட்டுத்தன்மை யுயர்த்தற்கண் முன்னிலையிடத்துவந்தது. o இகலடுசிலை-பகைவரைவெல்லுஞ்சிலை. * உற்றுளபொருள்-நடந்தசெய்தி.

அல்லலுமுளவின்பமனுகலுமுளவன்றே
நல்லவுமுளசெய்யுநவைகளுமுளவந்தோ
இல்லையொர்பயனுனின்றிடருறுமிதினென்னைப்
புல்லினனுடனேகொண்டினிதுறைபுனைபுக்கான். (௨௭)

புக்குன்றவிடாநல்கிப் * பூசனைமுறைபேணித்
தக்கனகனிகாயுங்கந்துரைதருமன்பால்
தொக்கநன்முறைகூறித்தூயவனுயிர்போலும்
மக்களினருளுற்றுன்மைந்தருமகிழ்வுற்றார். (௨௮)

வைகினர் † கதிர்நாறுமளவையின்மறையோனும்
‡ உய்குவமிவனோடியாமுடனுறைதலினென்பான்
செய்தனனினிதெல்லாஞ்செல்வனைமுகமுன்னுக்
கொய்குலமலர்மார்பகூறுவதுளதென்றான். (௨௯)

வேறு.

நிறைநீர்மலர்நெடுங்கனிகிழங்குகாய்நேர்ந்த
குறையுந்தீயவைதூயவைகுறைவிலவெம்மோ
டுறையுமிவ்வழியொருங்கினிலுயர்தவமுயல்வார்க்
கிறையுமீதலாதினியதோரிடமரிதின்னும். (௩0)

$ கங்கையாளொடுகரியவளுமகள்கலந்த
சங்கமாதலிற்பிரியலென்றுமரைச்செங்கண்
அங்கநாயகவயனுக்குமரும்பெறற்றீர்த்தம்
எங்கள்போலியர்தரத்ததன்றிருத்திரீண்டென்றான் (௩௧)

பூண்டமாதவனவ்வழிவிரும்பினன்புகல
நீண்டதன்றிதுநிறைபுனலுட்டுகெருவோம்
மாண்டசிந்தையவிவ்வழிவைகுவனென்றால்
ஈண்டயாவருநெருங்குவனென்றனனிராமன். (௩௨)

ஆவதுள்ளதேயையகேளையிரண்டமைந்த
காவதப் ¶ பொழிற்கப்புறங்கழிந்தபின்காண்டி
மேவுகாதலின்வைகுதிவிண்ணினுமினிதால்
தேவர்கைதொழுஞ்சித்திரகூடமென்றுளதால். (௩௩)

என்றுகாதலினேயினனடிதொழுதேத்திக்
கொன்றைவேய்ங்குழற்கோவலர்முல்லையங்குடுமி

* பூசனைமுறைபேணல்-அதிதிகளையுபசரிக்கும் முறையிலுபசரித்தல்.
† கதிர்நாறுமளவை-ஞாயிற்றினுதயபரியந்தம்.
‡ உய்கல்-நிரதிசய இன்பவீடடைதல்.
$ கங்கையாளொடுகரியவளுமகள் கலந்தசங்கம்-கங்காநதியுடன்யமுனையும்சரசுவதியும் சேர்ந்தசங்கமுகம்.
¶ பொழில் பூமி, வனம், சோலையென்றுரைக்கினும் பொருந்தும்.

சென்றுசெங்கதிர்ச்செல்வனுநடுவுறச்சிறுமான்
கன்றுநீர்நுகர் * காளிந்தியெனுநதிகண்டார். (௩௪)

ஆறுகண்டனரகமகிழ்ந்திறைஞ்சிவிரைந்து
நீறுதோய்மணிமேனியர்நெடும்புனல்படிந்தார்
ஊறுமென்கனிகிழங்கினோடுண்டுநீருண்டார்
ஏறியேகுவதெங்ஙனமென்றலுமிளையோன். (௩௫)

வாங்கு † வேய்ங்கழைதுணித்தனன் ‡ மாணையின்கொடியால்
ஓங்குதெப்பமொன்றமைத்தனனும்பரினுலம்போல்
வீங்குதோளண்ணறேவியோடினிதுவீற்றிருப்ப
நீங்கினனந்தநெடுநதியுருகையானீந்தி. (௩௬)

ஆலைபாய்வயலயோத்தியராண்டகைக்கிளையான்
மாலைமால்வரைத்தோளெனுமந்தரந்திரியக்
காலைவேலையைக்கடந்ததுகழிந்தநீர்கடிதின்
மேலைவேலையிற்பாய்ந்ததுமீண்டநீர்வெள்ளம். (௩௭)

அனையாப்புனலேறினக்கரையணைந்தார்
புனையும்வற்கலைபொற்பினர்நெடுநெறிபோனார்
சினையுமூலமும்வேரும்வெந்திருநிலந்தீய்ந்து
நினையுநெஞ்சமுஞ் § சுடுவதோர்நெடுஞ்சுரநேர்ந்தார். (௩௮)

நீங்கலாற்றளல்சனகியென்றென்னவர்நினைய
ஓங்குவெய்யவனுடுபதியெனக்கதிரு[illegible]ர்தான்
தாங்கு ¶ வேங்கடத்துலவைகடைழ்கொண்டுதழைத்த
பாங்குவேங்கனல்பங்கயவனங்களாய்ப்பரந்த. (௩௯)

வறுத்துவித்தியவனையனவல்லயிற்பரல்கள்
பறித்துவித்தியமலரெனக்குளிர்ந்தனபசந்த
இறுத்தெரிந்தனவல்லிகளிளந்தளிரீன்ற
○ கறுத்தவாளரவெயிற்றினுளமுதுகக்களித்த. (௪௦)

குழுமிமேகங்கள்குமுறினகுளிர்துளிகொணர்ந்த
முழுவில்வேடருமுனிவரின்முனிகிலருயிரைத்
தழுவிநின்றனபசியிலபகையிலதணிந்த,
உழுவையின்முலைமானிளங்கன்றுகளுண்ட. (௪௧)

---

* காளிந்திஎனினும் கரியவளெனினும் யமுனை எனினுமமையும்.

† வேய்ங்கழைஒருசாதிமூங்கில்விசேடம். ‡ மாணைஒருசாதக்கொடிவிசேடம் § சுடுவதன் கடுமையுணர்த்த நினையுநெஞ்சமுஞ் சுடுவதோர்நெடுஞ்சுரமென்றார். ¶ வேங்கடம் வேகுங்காடு ○ இருட்டினசருப்பமென்னும்வடமொழிப்பெயர்பற்றிக் கறுத்தவாளராவென்றார்.

கல்லளைக்கிடந்தகடுவெந்தயர்கின்றகதழ்பாம்
பல்லனூற்றிலவலைபுனற்கிடந்தனவனைய
வல்லையுற்றவேய்புற்றெருடுமெரிவனமணிவாழ்
புல்லெயிற்றிளங்கன்னியர்தோளெனப்பொலிந்த. (௪௨)

படர்ந்தெழுந்தபுல்பசுநிறக்கம்பளம்பரப்பிக்
கிடந்தபோன்றன * சேகையந்தோகைகள்கிளர்
மடந்தைமாரெனநாடகம்வயின்றொறுநவின்ற
தொடர்ந்தபாணரிற்பாங்கிசைமுரன்றனதும்பி. (௪௩)

காலமின்றியுங்கனிந்தனகனிநெடுங்கந்தம்
மூலமின்றியுமுகிழ்த்தனநிலனுறமுழுதும்
கோலமங்கையரொத்தனகொம்பர்க † ளின்பச்
சீலமன்றியுஞ்செய்தவம்வேறுமொன்றுளதோ. (௪௪)

எயினர்தங்கிடமிருடிகளிருப்பிடமேய்ந்த
வயின்வயின்றொறுமணிநிறக்கோபங்கண்மலர்ந்த
பயின்மரந்தொறும்பரிந்தனபேடையைப்பயிலும்
குயிலிரங்கினகுருந்தநின்றரும்பினமுருந்தம். (௪௫)

பந்தருட்புரைபாசறைப்பொருள்வயிற்பருவம்
தந்தகேள்வரையுயிருறத்தழுவினர்பிரிந்த
‡ கந்தவோதியர்சிந்தையிற்கொதிப்பதக்கழலோர்
வந்தபோதவர்மனமெனக்குளிர்ந்ததவ்வனமே. (௪௬)

வெளிறுநீங்கியபாலையைமெல்லெனப்போனார்
குளிறுவான்மதிக்குழவிதன்சூல்வயிற்றெளிப்பப்
§ பிளிறுமேகத்தைப்பிடியெனப்பெரும்பனைத்தடக்கைக்
களிறுநீட்டுமெச்சித்திரகூடத்தைக்கண்டார். (௪௭)

௭-வது வனம்புகுபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௭௩௮.

---

* கேகயம்-மயில். † இன்பம் பயக்குமொழுக்க நெறியினுஞ் செய்தவமின்றென்பார் இன்பச்சீலமன்றியுஞ் செய்தவம் வேறுமொன்றுளதோ என்றார்.

‡ இயற்கைமணங்கமழுங் கூந்தலாகலிற் கந்தவோதியரென்றார்.

§ யானைமேகத்தைப் பிடியெனக்கருதினமை கூறலான் மயக்கவணி.

௮-வது சித்திரகூடப்படலம்.

* நினையுந்தேவர்க்குநமக்குமொத்தொருநெறிநின்ற
அனகனங்கணாயிரம்பெயருடையமலன்
சனகன்மாமடமயிற்கந்தச்சந்தனஞ்செறிந்த
கனகமால்வரையியல்பெலாந்தெரிவுறக்காட்டும். (௧)

வாளும்வேலும்விட்டளாயினவனையகண்மயிலே
தாளினேலமுமாலமுந்தொடர்தருசாரல்
நீளமாமலைதுயில்வனநீருண்டகமஞ்சூற்
காளமேகமுநாகமுந்தெரிகிலகாணாய். (௨)

† குருதிவாளெனச்செவ்வரிபரந்தகட்குயிலே
மருவிமால்வரையும்பரிற்குதிக்கின்றவருடை
சுருதிபோற்றெளிமரகதக்கொழுஞ்சுடர்சுற்றப்
பருதிவானவன்பசும்பரிபுரைவனபாராய். (௩)

வடங்கொள்பூண்முலைமடமயிலேமதக்கதமா
அடங்குபேழ்வயிற்றரவுரியமைதொறுந்தொடக்கித்
‡ தடங்கடோறுநின்றுடுவதண்டலையயோத்தி
நுடங்குமாளிகைத்துகிற்கொடிநிகர்ப்பனநோக்காய். (௪)

உவரிவாயன்றிப் ○ பாற்கடலுதவியவமுதே
துவரிநீண்மணித்தடந்தொறுமிடந்தொறுந்துவன்றிக்
கவரிபாணிறவால்புடைபெயர்வனகடிதில்
பவளமால்வரையருவியைப்பொருவியபாராய். (௫)

சலந்தலைக்கொண்டசீயத்தாற்றனிமதக்கதமா
உலந்துவீழ்தலிற்சிந்தினவுதிரத்தின்மடவார்
புலந்தகாலையற்றுக்கனக்குங்குமப்பொதியில்
கலந்தமுத்தென $ வேழமுத்திமைப்பனகாணாய். (௬)

நீண்டமால்வரைமதிபுறநெடுமுடிநிவந்த
தூண்டுமாமணிச்சுடரதன்கற்றையிற்சொருக
மாண்டவானிறவருவியம் ¶ மழவிடைப்பாதன்
காண்டகுஞ்சடைக்கங்கையைநிகர்ப்பனகாணாய். (௭)

---

* தேவரையுமன்றி நம்மையுமொப்பக் கருதிவீற்றிருத்தலின் நினையுந்தேவர்க்கு நமக்கு மொத்தொரு நெறிநின்ற என்றார்.
† குருதிவாளுண்டல செவ்வரிபரந்த கண்ணொடொக்குமென்றார்.
‡ தடங்கள்-ஈண்டுகாடுகள். ○ பாற்கடலுதவியவமுது- திருமாமகள்.
$ முத்துகடோன்றுமிட மிருபதாகலின் வேழமுத்தென்றார்.
¶ மழவிடைப்பாகன்-சிவன்.

தொட்டமாசுணஞ்சுடரொளிமணியொடுந்தூவி
விட்டசென்றன விடாதமழையன வேழம்
வட்டவேங்கையின்மலரொடுந்ததைந்தன வயங்கும்
பட்டநெற்றியிற்சுற்றியபோல்வனபாராய் (௮)

இழைந்தநூலிணைமணிக்குடஞ்சுமக்கின்றதென்ன
குழைந்தநுண்ணிடைக்குவியிளவனமுலைக்கொம்பே
தழைந்தசந்தனச்சோலைதன் செலவினைத்தடுப்ப
நுழைந்துபோகின்றதொக்கின்றமதியினைநோக்காய். (௯)

உருகுகாதலிற்றழைகொண்டுமழலைவண்டோச்சி
முருகுநாறுசெந்தேனினைமுழைநின்றும்வாங்கிப்
பெருகுசூலிளம்பிடிக்கொருபிறைமருப்பியானை
பருகவாயினிற்கையினின்றளிப்பதுபாராய். (௧0)

* அளிக்குநாயகன்மாயைபுக்கடங்கினனெனினும்
களிப்பிலிந்தியத்தியோகியைக்கரக்கிலனதுபோல்
ஒளித்துநின்றுளராயினுமுருத்தெரிகின்ற
பளிக்கறைச்சிலபரிமுகமாக்களைப்பாராய். (௧௧)

ஆடுகின்றமாமயிலினுமழகிய குயிலே
கூடுகின்றிலர்கொடிச்சியர்தம்மனங்கொதிப்ப
ஊடுகின்றனர்கொழுநரையுருகினர்நோக்கப்
பாடுகின்றன † கின்னரமிதுனங்கள்பாராய். (௧௨)

வில்லிவாங்கியசிலையெனப்பொலிநுதல்விளக்கே
வல்லிதாங்கழைதாக்கலில்வழிந்திழிபிரசம்
கொல்லிவாங்கியகுன்றவர்கொடிநெடுங் ‡ கவலை
கல்லிவாங்கியகுழிகளைநிறைப்பனகாணாய். (௧௩)

ஒருவில்பெண்மையென்றுரைக்கின்றவுடலினுக்குயிரே
மருவுகாதலினினிதுடனாடியமந்தி
மருவிநீர்கொடுவீசத்தானப்புறத்தேறிக்
கருவிமாமழையுதிர்ப்பதோர்கடுவனைக்காணாய். (௧௪)

வீறுபஞ்சின்றியமுதநெய்மாட்டிய § விளக்கே
சீறுவெங்கதிர்செறிந்தனபேர்கலதிரியா
மாறின்மண்டிலநிரப்பியமாணிக்கமணிக்கற்
பாறைமற்றொருபரிதியிற்பொலிவனபாராய். (௧௫)

* அளிக்குநாயகன் - திருமால். † கின்னரமிதுனங்களென்ற தொருவகைப்பறவைவிசேடம். ‡ கவலை ஒருகிழங்கின்விசேடம். § புக்ககத்தையும் பிறந்தகத்தையும் விளக்குபவளாகலின் விளக்கேயென்றார்.

* சீலமின்னதென் றருந்ததிக்கருளியதிருவே
நீலவண்டினம்படிந்தெழவளைந்துடனிமிர்வ
சோலைவேங்கையின்கொம்பர்கள்பொன்மலர்தூவிக்
காலினிற்றொழுதெழுவனநிகர்ப்பனகாணாய். (௧௬)

விற்கொள்வாணுதல்விளங்கிழையிளந்தளிர்க்கொழுந்தே
எற்கொண்மால்வரையும்பரினிரும்புனங்காக்கும்
கொற்கொள்வேற்கணார்குரீஇயினத்தெறிகுருவிந்தக்
கற்கள்வானிடைமீனெனவீழ்வனகாணாய் (௧௭)

வரிகொளொண்சிலைவயவர்தம் † கணிச்சியின்மறிந்த
பரியகாரகில்சுடநிமிர்பசும்புகைப்படலம்
அரியவேதியராகுதிப்புகையொடுமளவிக்
கரியமால்வரைக்கொழுந்தெனப்படர்வனகாணாய். (௧௮)

நானநாண்மலர்நறையகினுவிதேனாறும்
‡ சோனைவார்குழற்சுமைபொறாதிடுகிடைத்தோகாய்
வானயாற்றுமீன்மலர்ந்தனவெனப்புனல்வறந்த
கானயாறுகள்கணமணியிமைப்பனகாணாய். (௧௯)

மஞ்சளாவியமாணிக்கப்பாறையின்மறைவ
செஞ்சவேரொடுமரகதப்பாறையிற்றெரிவ
விஞ்சைநாடியர்கொழுநரோடாடினர்விமலப்
பஞ்சளாவியசீறடிச்சுவடுகள்பாராய். (௨௦)

சுழித்தசெம்பொனின்றொளைபுரையுந்தியின்றுணையே
கொழித்தமாமணியருவியோடிழிவனகோலம்
அழித்துமேவியவரம்பையரறல்புரைகூந்தல்
கழித்துநீக்கியகற்பகநறுமலர்காணாய். (௨௧)

அறைகழற்சிலைக் ¶ குன்றவர்கன்புனங்காவற்
பறையெடுத்தொருகடுவனின்றடிப்பதுபாராய்
பிறையையெட்டினன்பிடித்திதற்கிதுபிழையென்னாக்
கறைதுடைக்குறுபேதையோர்கொடிச்சியைக்காணாய். (௨௨)

அடுத்தபல்பகலன்பரிற்பிரிந்தவரென்ப
தெடுத்துநாந்தமக்கியம்புவவெனக்கரிந்திருண்ட

---

* ஒழுக்கத்தையார்க்கு முரைப்பவளாகலின் சீலமின்னதென் றருந்ததிக்கருளியதிருவேஎன்றார். † கணிச்சி-மழுப்படை. ‡ சோனை-விடாமழை.

§ விஞ்சைநாடியர்பஞ்சளாவிய சீறடிமஞ்சளாவிய மாணிக்கப்பாறையாகலின்மறைவவென்றும் மரகதப்பாறையாகலிற் றெரிவவென்றுங் கூறினார்.

¶ குன்றவர்-குறிஞ்சிநிலமாக்கள்.

தொடுத்தமாதவிச்சூழலிற்சூரரமகளிர்
படுத்துவைகிய * பல்லவசயனங்கள்பாராய். (௨௩)

நினைந்தபோதினுமயிர்தொக்குநேரிழைநிறைதேன்
வினைந்தவேங்கையிற்கோங்கினில்வயின்றொறுந்தொடுத்துக்
குனிந்தவூசலிற்கொடிச்சியரெடுத்தவின்குறிஞ்சிக்
கனிந்தபாடல்கேட் † டசுணமாவருவனகாணாய். (௨௪)

இலவமிந்திரகோபமும்புரையிதழினியோய்
அலவுநுண்டுளியருவிநீரரம்பையராடக்
கலவைசாந்துசெங்குங்குமங்கற்பகங்கொடுத்த
பலவுந்தோய்தலிற்பரிமளங்கமழ்வனபாராய். (௨௫)

செம்பொன்னாற்செய்துகுலிகமிட்டெழுதியசெப்போர்
கொம்பர்தாங்கியதெனப்பொலிவனமுலைக்கொடியே
அம்பொன்மால்வரையலர்கதிருச்சிசென்றணுகப்
பைம்பொன்மாமுடிமிலைச்சியதொப்பதுபாராய். (௨௬)

மடந்தைமார்களிற்றிலதமேமணிநிறத்திணிகல்
தொடர்ந்தபாறையில்வேயினஞ்சொரிகதிர்முத்தம்
இடந்தொறுங்கிடந்திமைப்பனவெக்கிளஞ்செக்கர்
படர்ந்தவானிடைத்தாரகைநிகர்ப்பனபாராய். (௨௭)

குழுவுநுண்டொளைவேயினுங்குறிநரம்பெறிவுற்
றெழுவுதண்டமிழ்யாழினுமினியசொற்கிளியே
முழுவதும்மலர்விரியகாண்முருக்கிடைமிடைந்த
பழுவம்வெங்கனல்கதுவியதொப்பனபாராய். (௨௮)

வளைகள்காந்தளிற்பெய்தனவனையகைம்மயிலே
‡ தொளைகொடாழ்தடக்கைநெடுந்துருத்தியிற்றூக்கி
அளவின்மூப்பினருந்தவர்க்கருவிநீர்கொணர்ந்து
களபமால்கரிகுண்டிகைசொரிவனகாணாய். (௨௯)

வடுவின்மாவகிரிவையெனப்பொலிந்தகண்மயிலே
இடுக்கண்ணினரிடருறமூப்பினரேக
நெடுகுகூனல்வானீட்டினவுருகுறுநெஞ்சக்
கடுவன்மாதவர்க் § கருநெறிகாட்டுவகாணாய். (௩௦)

பார்த்தடேரிவைபழிபடப்பரந்த ○ பேரல்குல்
ஏந்துநூன்மணிமார்பினராகுதிக்கியைந்த

---

* பல்லவசயனம் தளிர்ப்படுக்கை. † அசுணமாகேகயப்புள்.
‡ புழைக்கைஎன்றதுபற்றித்தொளைகொடாழ்தடக்கைஎன்றார்,
§ அருநெறிசெல்லற்கரியவழி. ○ பேரல்குல் அன்மொழித்தொகை.

கூர்தன்மென்மயிர்க்குறுகினநெடுஞ்சிறைநகோலிக்
* காந்துகுண்டத்தின்வயங்கெரியெழுப்புவகாணாய். (௩௧)

அலம்புவார்குழலாய்மயிற்பெண்ணொருங்கலமே
நலம்பெய்வேதியர்மார்பினுக்கியைவுறநாடிச்
சிலம்பிபஞ்சினிற்சிக்கறத்தெரிந்தநூ † றேமாம்
பலம்பெய்மந்திகளுடன்வந்துகொடுப்பனபாராய். (௩௨)

தெரிவைமார்க்கொரு ‡ கட்டளையெனச்செய்ததிருவே
பெரியமாக்களிற்பலாக்களிற்பிறங்கியவாழை
அரியமாக்கனிகடுவன்களன்புகொண்டளிப்பக்
கரியமாகிழங்ககழ்ந்தனகொணர்வனகாணாய் (௩௩)

ஐவணக்குரறினைக்கதிரிறுங்கவையவரை
மெய்வணக்குறவேயினமீன்றமெல்லரிசி
பொய்வணக்கியமாதவர்புரைதொறும்புகுந்துன்
கைவணத்தவாய்க்கிள்ளைதந்தளிப்பனகாணாய். (௩௪)

§ இடிகொள்வேழத்தையெயிற்றொடுமெடுத்துடன்விழுங்கும்
கடியமாசுணங்கற்றறிந்தவரெனவடங்கிச்
சடைகொள்சென்னியர்தாழ்விலர்தாமிதித்தேறப்
படிகடாமெனத்தாழ்வரைகிடப்பனபாராய். (௩௫)

அசும்புபாய்வரையருந்தவமுடித்தவர் ○ துணைக்கட்
டசும்புவேய்ந்தவொத்தவர்தமக்குவிண்டருவான்
விசும்புதூர்ப்பனவாவெனவெயிலெனவிளங்கும்
பசும்பொன்மானங்கள்போவனவருவனபாராய் (௩௬)

நெய்கொணீருண்டுநெருப்புண்டுநீண்டமைநிறைந்த
வெல்கொள்வேலெனக்காலனுமறுகுறுங்கண்ணாய்
மெய்கணோக்கின்றபிடிகளைவிரும்பியவேழம்
¶ கய்கணோகிலதாங்கினிற்பனகாணாய். (௩௭)

விடங்கொ § ணோக்கிநின்னஞ்சிடையினைமின்னெனவெருவிப்
படங்கொணாகங்கண்முழைபுகழ்ப்பதைப்பனபாராய்
மடங்கலாளிகளென்னங்கொடுமழையின்முழங்கக்
கடங்கொள்கார்மதக்கைம்மலைபிரிவனகாணாய். (௩௮)

---

* காந்துகுண்டம்கனல்கின்றகுண்டம். † தேமாம்பலம்இனியமாங்கனி. ‡ கட்டளைஉரையாணி. § இடிகொள்வேழத்தையெயிற்றொடுமெடுத்து விழுங்குமாசுணமென்றார் குருசரங்கோளினழக்குடைய பாம்பெனப் பிறரும் கூறலின். ○ துணைக்கட்டசும்பு சடைமுடி. ¶ கைகளென்றது புழைக்கையை § நோக்கியென்றது வினைப்பெயர்.

இனையயாவையுமேந்திழைக்கியம்பினன்காட்டி
அனையமால்வரையருந்தவரெதிர்வரவணங்கி
வினையினீங்கியவேதியர்விருந்தினனானான்
* மனையின்மெய்யெனுமாதவம்புரிந்தவன்மைந்தன். (ஙகூ)

வேறு.

மாவியலுதயமாந் † துளபவானவன்
மேவியபகையிருளவுணர்வீந்துகக்
காவியல்குடவரைக்காலநேமிமேல்
ஏவியதிகிரிபோலிரவியேகினான். (ச0)

சக்கரந் ‡ தானவனுடலிற்றாக்குற
எக்கியசோரியிற்பரந்ததெங்கணும்
செக்கரத்தீயவன்வாயிற்றீர்ந்தவே.
நக்கவான்றனியெயிறொத்ததிந்துவே. (சக)

ஆனனமகளிருக்களித்ததாமரைப்
பூநனிமுகிழ்த்தனபுலரிபோனபின்
மீனெனவிளங்கியவெள்ளியாம்பல்வீ
வானெனமணித்தடமலர்ந்தவெங்குமே (சஉ)

மந்தியுங்கடுவனுமரங்கணோக்கின
தந்தியும்பிடிகளுந்தடங்கணோக்கின
நிந்தையில்சகுந்தங்கணீளநோக்கின
அந்தியைநோக்கினனறிவைநோக்கினான், (சங)

மொய்யுறாநறிமலர்முகிழ்த்தவாஞ்சில
மய்யுறாநறுமலர்மலர்ந்தவாஞ்சில
அய்யனோடிளவற்குமமிழ்தனாளுக்கும்
0 கைகளுங்கண்களுங்கமலப்போன்றவே. (சச)

மாலைவந்தகன்றபின் ¶ மருங்கிலாளொடும்
வேலைவந்துறைவிடமேயதாமெனக்
கோலைவந்துமிழ்சிலைத்தம்பிகோலிய
சாலைவந்தெய்தினான்றவத்தினெய்தினான். (சரு)

நெடுங்கழைக்குறுந்துணிநிறுவிமேனிரைத்
தொடுங்கலினெடுமுகடொழுக்கியூழுற

---

* புகழுடம்பு நிறீஇப் பூதவுடம்பை நீத்தமையான் மனையின் மெய்யெனு மாதவம் என்றார். † துளபவானவன்-திருமால். ‡ தானவன்-காலநேமி. 0 மாலைக்கடன்முடிப்பக் கண்முகிழ்த்துத் தியானித்தலின் கைகளுங் கண்களுங் கமலம்போன்றவென்றார். ¶ மருங்கிலாள்-சனகியை, தவத்தானல்லது வேறொன்றானெய்தப்படுபவனன்மையின் தவத்தினெய்தினானென்றார்.

இடங்கலில்லைவிசித்தேற்றியெங்கணும்
முடங்கவில்வரிச்சுமேல்விரிச்சுமூட்டியே (௪௬)

தேக்கடைப்படலையிற்செறிவுசெய்தபின்
பூக்கிளர்காணலின்புல்லுவேய்ந்துகீழ்
தூக்கியவேய்களிற்சுவருஞ்சுற்றுறப்
போக்கிமண்ணெறிந்தவைபுனலிற்றீற்றியே. (௪௭)

வேறிடமியற்றினன் * மிதிலைநாடிக்கும்
கூறினநெறிமுறைகுயிற்றிக்குங்குமச்
சேறுகொண்டழகுறத்திருத்தித்திண்சுவர்
ஆறிடுமணியொடுங்கனகமப்பியே. (௪௮)

மயிலுடைப்பீலியின்விதானமேல்வகுத்
தயிலுடைச்சுரிகையாலருகுறாக்கறுத்
தெயிலிளங்கழைகளாலியற்றியாறிடு
செயலுடைப்புதுமலர்பொற்பச்சிந்தியே. (௪௯)

இன்னணமிளையவனிழைத்தசாலையிற்
பொன்னிறத்திருவொடுங்குடிபுக்கானரோ
தன்னெடுந்திசைமுகனகத்துநம்மனோர்க்
குன்னருமுயிருளுமொக்கவைகுவான் (௫0)

வேறு.

மாயநீங்கியசிந்தனைமாமறை
தூயபாற்கடல்வைகுந்தஞ்சொல்லலாம்
ஆய † சாலையரும்பெறலன்பினன்.
நேயநெஞ்சின்விரும்பிநிரப்பினன். (௫௧)

மேவுகானமிதிலையர்கோன்மகள்
பூவின்மெல்லியபாதமும்போந்தன
தாவிலெம்பிகைசாலசமைத்தன
யாவையாதுமிலார்க்கியையாதவே. (௫௨)

என்றுசிந்தித்திளையவற்பார்த்திரு
குன்றுபோலக்குவவியதோளினாய்
என்றுகற்றனைநீயிதுபோலென்றான்
துன்றுதாமரைக்கண்பனிசோர்கின்றான். (௫௩)

அடருஞ்செல்வமளித்தவனாணையாற்
படருநல்லறம்பாலித்திரவியிற்

* மிதிலைநாடி-சனகி. † சாலையைமாயைநீங்கிய சிந்தனையோடும்மா மறையோடும் பாற்கடலோடும் வைகுந்தத்தோடு மூவாமைகூறினார்.

சுடருமெய்ப்புகழ்சூடினனென்பதென்
இடருனக்கிழைத்தேனெனநோவென்றான். (௫௪)

அந்தவாய்மொழியையனியம்பலும்
நொந்தசிந்தையிளையவனேக்கினல்
எந்தைகாண்டியிடரினுக்கங்குரம்
முந்திவந்துமுளைத்தன்றேவென்றான். (௫௫)

ஆகசெய்தக்கதில்லையறத்தினின்
றேகலென்பதரிதென்றுமெண்ணினன்
ஓகைகொண்டவனுள்ளிடர்நோக்கினன்
சோகபங்கந்துடைப்பரிதாலென. (௫௬)

பின்னர்தம்பியைநோக்கிப்பெரியவன்
மன்னுஞ்செல்வத்திற்குண்டுவரம்பிதற்
கென்னகேடுண் * டிவ்வெல்லையிலின்பத்தை
உன்னுமேல்வருமூதியத்தோடென்றான். (௫௭)

தேற்றித்தம்பியைத்தேவருங்கைதொழ
ரோற்றிருந்தனனேன்சிலையோனிப்பால்
ஆற்றன்மாதவனைப்பிற்போனவர்
கூற்றினுற்றதுகூறலுற்றாமரோ. (௫௮)

௮-வது சித்திரகூடப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-௭௧௯.

௯-வது. பள்ளியடைப்படலம்.

பொருவிறாதுவர்போயினர்பொய்யிலார்
இரவுநன்பகலுங்கடிதேகினர்
பரதன்கோயிலுற்றார் † படிகாரிரெம்
வரவுசொல்லுதிர்மன்னவற்கேயென்றார். (௧)

தூதர்வந்தனருந்தைசொல்லோடெனக்
காதன்முந்திக்களிக்கின்றசிந்தையான்
போதுகென்னெனப்புக்கவர்கைதொழத்
தீதிலன்கொ ‡ திருமுடியோனென்றான். (௨)

இவ்வெல்லையிலின்பம்-துறவறவொழுக்கினை. †படிகாரிர்-காவலாளர்
‡ திருமுடியோன்-தயரதன்.

வலியனென்றவர்கூறமகிழ்ந்தனன்
இலைகொள்பூணிளங்கோனெம்பிரானொடும்
உலைவில்செல்வத்தனோவெனவுண்டெனத்
தலையினேந்தினன்றாழ்தடக்கைகளே. (௩)

மற்றுஞ்சுற்றத்துளார்க்கும்வரன்முறை
உற்றதன்மைவினாவியுவந்தபின்
இற்றதாகுமெழுதருமேனியாய்
கொற்றவன்றன் * திருமுகங்கொள்கென்றார். (௪)

என்றுகூறலுமேத்தியிறைஞ்சினான்
பொன்றிணிந்தபொருவிறடக்கையால்
நின்று வாங்கியுருகியநெஞ்சினான்
துன்றுநாண்மலர்ச்சென்னியிற்சூடினான். (௫)

சூடிச்சந்தனந்தோய்த்துடைசுற்றுமண்
மூடுதோட்டின்முடங்கனிமிர்த்ததன்
ஈடுநோக்கிவந்தெய்தியதூதர்க்குக்
கோடிமேலுநிதியங்கொடுத்தனன். (௬)

ஆணிலாநகைதோன்றமயிர்புறம்
பூணவானுயர்காதலிற்பொங்கினான்
† தாணிலாமலர்தூவினன்றம்முனைக்
காணலாமெனுமாசைகடாவவே. (௭)

எழுகசேனையென்றேவினனெய்தினன்
தொழுதுகேகயர்கோமகன்சொல்லொடும்
தழுவுதேரிடைத்தம்பியொடேறினான்
பொழுதுநாளுங்குறித்திலன்போயினான். (௮)

யானைசுற்றினதேரிரைத்தீண்டின
மானவேந்தர்குழுவினர்வாளுடைத்
தானைசூழ்ந்தனசங்கமுரன்றன
மீனவேலையின்விம்மினபேரியே. (௯)

கொடிநெருங்கினதொங்கல்குழுமின
வடிநெடுங்கண்மடந்தையரூர்மடப்
பிடிதுவன்றினபூணொலிபேர்ந்தன
இடிதுவன்றினமின்னெனவெங்குமே. (௧௦)

பண்டியங்கள்பரந்தனபல்லியம்
கொண்டியம்பினகொண்டலிற்கோதையில்

* திருமுகம்-முடங்கல். மங்கலவழக்கு † தாணிலா-தாளில் பொருந்தும்படி.

வண்டியம்பினவாளியின்வாவுறுஞ்
* செண்டியங்குபரியுஞ்செறிந்தவே. (௧௧)

தொளைமுகத்திற்சுருதிவிளம்பின
இளைமுகத்தினனும்பரிநேகிட
விளைமுகத்தனல் † வேலையின்மீதுசெல்
வளைமுகத்தனவாசியும்வந்தவே. (௧௨)

‡ வில்லின்வேதியர்வாள்செறிவித்தகர்
மல்லின்மல்லர்சுரிகையின்வல்லவர்
சொல்லும்வேல்குந்தங்கற்றுயர்கொற்றவர்
தொல்லைவாரணப்பாகருஞ்சுற்றினர். (௧௩)

எறிபகட்டினமாடுகளேற்றைமா
குறிகொள்கோழிசிவல்குறும்பூழ்நெடும்
பொறிமயிர்க்கவுதாரிகள்போற்றுறும்
நெறியின்மாக்களுமுந்திநெருங்கினர். (௧௪)

நிறைந்தமாந்தர்நெருங்கினர்நெஞ்சினிற்
பறந்துபோதுங்கொலென்றுபதைக்கின்றார்
பிறந்துதேவருணர்ந்துபெயர்ந்துமுன்
உறைந்தவானுறுவார்களையொக்கின்றார். (௧௫)

ஊனைளைந்தவுடற்குமிராமெனத்
தானைளைந்துதழுவினதண்ணுமை
தேனைளைந்துசெவியுறவார்த்தெனை
¶ வானைளைந்ததுமாகதற்பாடலே. (௧௬)

ஊறுகொண்டமுரசுமிழோதையை
வீறுகொண்டனவேதியர்வாழ்த்தொலி
ஏறுகொண்டெழுமல்லரிடிப்பினை
மாறுகொண்டனவந்திகரேத்தரோ. (௧௭)

ஆறுங்கானுமகன்மலையுங்கடந்
தேறியேழ்பகனீந்திப்பின்னைந்திரத்
தூறுபாகுமடையுடைத்தொண்மூளை
நாறுபாய்வயற்கேசலைநண்ணினன். (௧௮)

---

* செண்டியங்குபரி வையாளியாகச்செல்கின்ற குதிரை. † வேலையின்மீதுசெல்லுகின்ற, அல்லது கடலினுமதிகமாகச்செல்கின்ற எனினுமமையும். ‡ வில்லின்வேதியர் தனுர்வேதம் வல்லார். ¶ வானைளைந்தது சுவர்க்கபுரியந்தம் எட்டியது.

ஏர்துறந்தவயலிளமைந்தர்தோள்
தார்துறந்தனதண்டலைநெல்லினும்
நீர்துறந்தனதாமரைநீத்தெனப்
பார்துறந்தனள் * பங்கயச்செல்வியே (௧௯)

பிதிர்ந்துசாறுபெறுந்துறைமண்டிடச்
சிதிர்ந்துசிந்தியழிந்தனதேங்கனி
முதிர்ந்துகொய்யுநரின்மையின்மூக்குமிழ்த்
துதிர்ந்துலர்ந்தனவொண்மலரீட்டமே. (௨௦)

ஏய்ந்தகாலமிதுவிதற்காமென
ஆய்ந்துமள்ளரரிகுநரின்மையால்
பாய்ந்தகூதப்பசுநறுந்தேறலால்
சாய்ந்தொசிந்துமுளைத்தனசாலியே. (௨௧)

எட்குலாமலரேசியநாசியர்
புட்குலாவயற்பூசற்கடைசியர்
கட்கிலார்களைகாதற்கொழுநரோ
டுட்கலாமுடையாரினுயங்கினார். (௨௨)

ஓதுகின்றிலகிள்ளையுமோதியர்
தூதுசென்றிலவந்திலதோழர்பால்
மோதுகின்றிலபேரிமுழாவிழா
போதுகின்றிலபொன்னணிவீதியே. (௨௩)

பாடனீத்தனபண்டொடர்பண்குழல்
ஆடனீத்தவரங்கொடகன்புனல்
சூடனீத்தனசூடிகைசூளிகை
மாடநீத்தன † மங்கலவள்ளையே. (௨௪)

நகையிழந்தனவாண்முகநாறகிற்
புகையிழந்தனமாளிகைபொங்கழற்
சிகையிழந்தன ‡ தீவிகைதேமலர்த்
தொகையிழந்தனதோகையரோதியே. (௨௫)

அலர்ந்தபைங்கூழகன்குளக்கீழன
மலர்ந்தவாயிற்புனல்வழங்காமையால்
உலர்ந்தவன்கணுலோபர்கடைத்தலை
புலர்ந்துநிற்கும் § பரிசிலர்போலவே. (௨௬)

---

* பங்கயச்செல்வி திருமாமகள். † மங்கலவள்ளை - மங்கலகரமானவள்ளைப்பாட்டு, மங்கலமும் வள்ளைப்பாட்டு என்றுங்கூறுவர். வள்ளை - உலக்கைப்பாட்டு.

‡ தீவிகை - விளக்குகள். § பரிசிலர் - உலோபர்கடைத்தலைநின்றிரப்போர்.

நாவினீத்தருநல்வளந்துன்னிய
பூவினீத்தெனநாடுபொலிவொரீஇத்
தேவினீத்தருஞ்சேணெறிதாவிட
ஆவினீத்தவுடலெனலாயதே (உஎ)

என்றநாட்டினைநோக்கியிடருழந்
தொன்றுமுற்றதுணர்ந்திலனுன்னுவான்
சென்றகேட்பதொர்தீங்குளதாமெனு
நின்றுநின்றநெடிதுயிர்த்தானரோ. (உஅ)

மீண்டுமெய்தியம் * மெய்யெனுநல்லணி
பூண்டவேந்தன்றிருமகன்புந்திதான்
தூண்டுதேரினுமுந்துறத்தூங்குவான்
நீண்டவாயினெடுநகர்நோக்கினன். (உகூ)

அண்டமுற்றுந்திரிந்தயர்ந்தாயமு
துண்டுபோதியென்றெண்கதிர்ச்செல்வனை
விண்டொடர்ந்துவிலக்குவபோல்வன
கண்டிலன்கொடியின்னெடுங்கானமே. (௩0)

ஈட்டுநன்புகழ்க்கீட்டியயாவையும்
வேட்டவேட்டவர்கொண்மின்விரைந்தெனக்
கோட்டிமாக்களைக்கூவுவபோல்வன
கேட்டிலன்முரசின்கிளரோதையே (௩க)

கள்ளமாக்கவர்கண்ணியன்கண்டிலன்
பிள்ளைமாக்களிறும்பிடியீட்டமும்
† வள்ளமாக்கணிதியும்வயிரியர்
கொள்ளமாக்களிற்கொண்டனரேகவே. (௩உ)

காவன்மன்னவன்கான்முளைகண்டிலன்
ஆவுமாவுமழிகவுள்வேழமும்
மேவுகாதனிதியும்வெறுக்கையும்
‡ பூவின்வானவர்கொண்டனர்போகவே. (௩௩)

சூழமைந்தசுரும்புகரம்புந்தம்
§ ஏழமைந்தவிசையிசையாமையான்
மாழையுண்கண்மயிலெனுஞ்சாயலார்
கூழைபோன்றபொருநர்குழாங்களே. (௩௪)

---

* தன்னுயிர்நீத்தும் தன்சொற்கடவாமையின் மெய்யெனுநல்லணி பூண்டவேந்தனென்றார். † வள்ளமாக்கள்-மங்கலபாடகர்கள். ‡ பூசுரரென்னும் பெயர்பற்றிப்பூவின்வானவரென்றார். § ஏழமைந்தவிசை-ஏழாகப் பொருந்திய இசை.

தேருமாவுங்களிறுஞ்சிவிகையும்
ஊரும்பண்டியுமூருநரின்மையால்
யாருமின்றியெழிலழிவீதிகள்
வாரியின்றிய * வாலுகவாற்றினே. (௩௫)

அன்னதன்மையகநகர்நோக்கினன்
பின்னையப்பெரியோர்தம்பெருந்தகை
மன்னன்வைகும்வளநகர்போலுமீ
தென்னதன்மையிளையவனேயென்றான். (௩௬)

வேற்றடங்கலர்விண்ணுறவென்றிடும்
கூற்றடங்கப்பொருநெடுங்கோளினாய்
சேற்றடங்கட்டிருவொடுநீங்கிய
பாற்றடங்கடலொத்ததுபாரென்றான். (௩௭)

குருமணிப்பூணரசிளங்கோளரி
இருகைகூப்பியிறைஞ்சினனெய்திய
தொருவகைத்தன்றுழுதுய † ரூழிவாழ்
திருநகர்த்திருதீர்ந்தனளாமென்றான், (௩௮)

அனையவேலையிலக்கடைத்தோரணை
மனையினீணெடுமங்கலவீதிகள்
‡ நினையுமாத்திரத்தேகியநேமியான்
தனையனுந்தந்தைசார்விடமேவினான். (௩௯)

விருப்பினெய்தினன்வெந்திறல்வேந்தனை
இருப்புநல்லிடமெங்கணுங்கண்டிலன்
அருப்பமன்றிதென்றையுறவெய்தினான்
பொருப்புநாணவுயர்ந்தபுயத்தினான் (௪௦)

ஆயகாலையிலையனைநாடித்தன்
தூயகையிற்றொழுதுறுவான்றனை
கூயளன்னைகுறுகுநீயீண்டெனா
வெய்கோடோளியொருத்திவிளம்பினள். (௪௧)

வந்துதாயையடியில்வணங்கலும்
சிந்தையாரத்தழுவினளதிலர்
எந்தையென்னையரெங்கையரென்றனள்
¶ அந்தமில்குணத்தானுமதாமென்றான். (௪௨)

---

* வாலுகம் - மணற்குன்று. † எழுநகரத்துஞ்சிறந்தமையின் உளழிவாழ்திருநகரென்றார். ‡ நினையுமாத்திரம் - நினைத்தலாகிய காலவளவு. ¶ அந்தமில்குணத்தன் - (க) அழிவற்ற குணத்தினையுடைய பரதாழ்வான். (௨) பிதாவினைக்காணாமையால் அழகழிந்துள்ள எண்ணத்தினையுடையபரதன் எனினுமமையும்.

வேறு.

மூண்டெழுகாதலான் முளரித்தாடொழ
வேண்டினனெய்தினனுள்ளம்விம்முமால்
ஆண்டகைநெடுமுடியரசர்கோமகன்
யாண்டையான்பணித்திரென் றிருகைகூப்பினன். (சரு)

ஆனவனுரைசெயவழிவில்சிந்தையாள்
தானவர்வலிதவகிழித்ததானையத்
தேனமர்தெரியலான்றேவர்கைதொழ
* வானகமெய்தினன்வருந்தனீயென்றாள். (சச)

எறிந்தனகடியசொற்செவியுளெய்தலும்
செறிந்தலர்குஞ்சியானெடிதுவீழ்ந்தனன்
அறிந்திலனுயிர்த்திலனசனியேற்றினன்
மறிந்துயர்மராமரமண்ணுற்றென்னவே. (சரு)

வாயொளிமழுங்கத்தன்மலர்ந்ததாமரை
ஆயலர்கயனங்களருவிசோர்தரத்
தீயெரிசெவியில்வைத்தனையதீயசொல்
நீயலதுரைசெயநினைப்பரோவென்றான். (சசா)

எழுந்தனனேங்கினனிரங்கிப்பின்னரும்
விழுந்தனன்விம்மினன்வெய்துயிர்த்தனன்
அழிந்தனனாற்றினனாற்றியின்னன
மொழிந்தனன்பின்னரு † முருகிற்செவ்வியான். (சஎ)

அறந்தனைவேரறுத்தந்தைக்கொன்றனை
சிறந்தநின்றண்ணளித்திருவைத்தேசழித்
திறந்தனையாமெனிலிறைவநீநியை
மறந்தனையுனக்கிதின்மாசுமேலுண்டோ. (சஅ)

சினக்குறும்பெறிந்தெழுகாமதீயவித்
தினக்குறும்பியாவையுமெற்றியாவர்க்கும்
மனக்குறநெறிசெலும்வள்ளியோய்மறந்
தனக்குறநெறிசெலலொழுக்கின்பாலதோ. (சகூ)

‡ முதலவன்முதலியமுந்தையோர்பழங்
கதையையும்புதுக்கியதலைவன் § கண்ணுடை
நுதலவன் ¶ சிலைவிலினென்மைநூறிய
புதல்வனையெங்கணம்பிரிந்துபோயினாய். (ருo)

* வானகமெய்தினன் - துறக்கமடைந்தான். இது மங்கலவழக்கு.
† முருகிற்செவ்வியான் - பரதன். ‡ முதலவன் - இட்சவாகு. § கண்ணுடைநுதலவன் - சிவன். ¶ சிலைவில் - மலைபோன்றவில்.

செவ்வழியுருட்டியதிகிரிமன்னவ
எவ்வழிமாபினுமிரவலாளர்தாம்
இவ்வழியுலகினிலின்மைகண்டிலேனோர்
அவ்வழியுலகினுமுளர்கோலோவையா. (ருக)

பற்பகனிழற்றுநின்கவிகைபாய்நிழல்
நிற்பனபல்லுயிருணங்கநீநெடுங்
கற்பகநறுநிழல்காதலித்தியோ
மற்பகமலர்ந்ததோண்மன்னர்மன்னனே. (ருஉ)

இம்பர்நின்றேகினையிருக்குஞ்சார்பிழந்
தும்பர்வந்துன்கழலொதுங்கினார்கொலாம்
சம்பரனனையவத்தானைத்தானவர்
* அம்பரத்தினருமுளர்கொலாமையா. (ருங)

இயங்கெழுதானையரிறுத்தமாத்திறை
உயங்கலின்மறையவர்க்குதவியும்பரின்
† அயங்கெழுவேள்வியோடமரர்க்காக்கிய
வயங்கெரிவளர்த்தனைவைகவல்லையோ. (ருச)

எழுயர்மதகளிற்றிறைவவேகினை
வாழியகரியவன்வறியன்கையெனப்
பாழியம்புயத்துநின்பணியினீங்கிலா
ஆழியையினியவற்களிக்கவெண்ணியோ. (ருரு)

பற்றிலதவத்தினிற்பயந்தமைந்தற்கு
முற்றுலகளித்ததுமுறையினெய்திய
கொற்றவன்முடிமணக்கோலங்காணவும்
பெற்றிலபோலுநின் ‡ பெரியகண்களால். (ருசு)

ஆற்றலனின்னனபன்னியாவலித்
தூற்றுறுகண்ணினனுருகுவான்றனைத்
தேற்றினனொருவகைசிறிதுதேறிய
கூற்றுறழ்வரிசிலைக்குரிசில்கூறுவான். (ருஎ)

எந்தையும்யாயுமெம்பிரானுமெம்முனும்
அந்தமில்பெருங்குணத்திராமனாதலால்
வந்தனையவன்கழல்வைத்தபோதலாற்
சிந்தைவெங்கொடுந்துயர்தீர்கலாதென்றான். (ருஅ)

---

* அம்பரம்-துறக்கம். † அயங்கெழுவேள்வி-பரிமேதம்.
‡ பெரியகண்ணென்றார்-முடிமணக்கோலங்காணுங் கண்ணாகலின்.

அவ்வுரைகேட்டலுமசனியேறென
* வெவ்வுரைவல்லவள்மீட்டுங்கூறுவாள்
தெவ்வடுசிலையினாய்தேவிதம்பியென்
றிவ்விருவோரொடுங்கானத்தானென்றாள். (௫௯)

வனத்தினனென்றவளிசைத்தமாற்றத்தை
நினைத்தனனிருந்தனனெருப்புண்டானென
வினைத்திறம்யாதினிவிளைவதின்னமும்
† எனைத்துளகேட்பனதுன்பம்யானென்றான். (௬௦)

ஏங்கினவிம்மலோடிருந்தவேந்தலப்
பூங்கழற்காலவன்வனத்துப்போயது
தீங்கிழைத்ததனினோதெய்வஞ்சீறியோ
ஓங்கியவிதியினோயாதினோவென. (௬௧)

தீயனவிராமனேசெய்யுமேலவை
தாய்செயலல்லவோதலத்துளோர்க்கெலாம்
போயதுதாதைவிண்புக்கபின்னரோ
ஆயதன்முன்னரோவருளுவீரென்றான். (௬௨)

குருக்களையிகழ்தலினன்றுகூறிய
செருக்கினாலன்றொருதெய்வத்தாலுமன்
றருக்கனேயனையவவ்வரசர்கோமகன்
இருக்கவேவனத்தவனேகினானென்றாள். (௬௩)

குற்றமொன்றில்லையேற்கோதித்துவேறுளோர்
செற்றதுமில்லையேற்றெய்வத்தாலன்றேற்
பெற்றவனிருக்கவே ‡ பிள்ளைகான்புக
உற்றதென்பின்னவனுலந்ததென்னென்றான். (௬௪)

வாக்கினால்வரந்தரக்கொண்டுமைந்தனைப்
போக்கினேன்வனத்திடைப்போக்கிப்பாருனக்
காக்கினேனவனதுபொறுக்கலாமையால்
நீக்கினான்றனுயிர் ○ நேமிவேந்தென்றாள். (௬௫)

சூடினமலர்க்கரஞ்சொல்லின்முன்செவி
கூடினபுருவங்கள்குதித்துக்கூத்துநின்
றாடினவுயிர்ப்பினோடழற்கொழுந்துகள்
ஓடினவுமிழ்ந்தனவுதிரங்கண்களே. (௬௬)

---

* வெவ்வுரைவல்லவள்-கைகேசி. † எனைத்து-எத்தனைத்தென்பதன் மரூஉ.

‡ பிள்ளைஈண்டு-இராமனை. ○ நேமிவேந்து-சக்கிரவர்த்தி

துடித்தனகபோலங்கள்சுற்றுந்தீச்சுடர்
பொடித்தனமயிர்த்தொளைபுகையும்போர்த்தது
மடித்ததுவாய்நெடுமழைக்கைம்மண்பக
அடித்தனவொன்றொடொன்றசனியஞ்சவே. (௬௭)

பாதங்கள்பெயர்தொறும்பாருமேருவும்
போதங்கொணெடுந்தனிப்பொருவில் * கூம்பொடு
மாதங்கம்வருகலமறுகிக்கால்பொர
ஓதங்கொள்கடலினின்றலைவபோன்றவே. (௬௮)

அஞ்சினர்வானவரவுணரச்சத்தால்
துஞ்சினரெனைப்பலசொரிமதத்தொளை
எஞ்சினதிசைக்கரியிரவிமீண்டனன்
வெஞ்சினக்கூற்றுந்தன்விழிபுதைத்ததே. (௬௯)

கொடியவெங்கோபத்தாற்கொதித்தகோளரி
கடியவடாவெனக்கருதுகின்றிலன்
† நெடியவன்முனியுமென்றஞ்சிநின்றனன்
இடியுருமனையவெம்மொழியியம்புவான். (௭௰)

மாண்டனனெந்தையென்றம்முன்மாதவம்
பூண்டனனின்கொடும்புணர்ப்பினாலென்றாற்
ஈண்டிலென்வாயதுகேட்டுநின்றயான்
ஆண்டனனேயன்றோவரசையாசையால். (௭௧)

நீயினமிருந்தனையானுநின்றனென்
தீயெனுமாத்திரத்தெற்றகிற்றிலென்
‡ ஆயகன்முனியுமென்றஞ்சினேனலால்
தாயெனும்பெயரெனைத்தடுக்கற்பாலதோ. (௭௨)

மாளவுமுளனொருமன்னன்வன்சொலால்
மீளவுமுளனொருவீரன்மேயபார்
ஆளவுமுளனொருபரதனென்றினால்
கோளலதறநெறிகுறையுண்டாகுமோ. (௭௩)

சுழியுடைத்தாயுடைக்கொடியசூழ்ச்சியால்
வழியுடைத்தாய்வருமரபைமாய்த்தொரு
பழியுடைத்தாக்கினன்பரதன்பண்டெனும்
மொழியுடைத்தாக்கவின்முறைமைவேறுண்டோ. (௭௪)

---

* கூம்பு-பாய்மரம். † நெடியவன்-இராமன்.
‡ ஆயகன்-தாய்போலுயிர்க்குநெஞ்சுடையான்.

வேறு.

நோயீரல்லீர் நுங்கணவன் றன்னுயிருண்டீர்
பேயீரேநீரின்னமிருக்கப்பெறுவீரே
மாயீர்மாயாவன்பழிதந்தீர்முலைதந்தீர்
தாயீரேநீரின்னுமெனக்கென்றருவீரே. (௭௫)

ஒன்றும்பொய்யாமன்னனைவாயாலுயிரோடுந்
தின்றுந்தீராவன்பழிகொண்டுந்திருவெய்தி
என்றுந்நீரேவாழ்வுவந்தீரவனேகக்
கன்றுந்தாயும்போவனகண்டுங்கழியீரே. (௭௬)

இறந்தான்றந்தையீந்தவரத்துக்கிழிவென்று
அறந்தானீதென்றன்னவன்மைந்தனரசெல்லாந்
துறந்தான்றாயின்சூழ்ச்சியின்ஞாலமவனோடும்
பிறந்தானுண்டானென்னுமிதென்றாற்பெறலாமே. (௭௭)

மாளுமென்றேதந்தையையுன்னாவசைகொண்டாள்
கோளுமென்னலாயெனல்கொண்டானதுவன்றேல்
மீளுமன்றேயென்னையுமெய்யேயுலகெல்லாம்
ஆளுமென்றேபோயினன்றோ * வரசாள்வான். (௭௮)

ஓதாநின்றதொல்குலமன்னனுணர்வப்பால்
யாதானுந்தானாகவெனக்கேபணிசெய்வான்
தீதாநின்றசிந்தனைசெய்தானவனென்னப்
போதாதோவென்றாயிவன்கொண்டபுகழம்மா. (௭௯)

உய்யாநின்றேனின்னமுமென்முன்னுடன்வந்தான்
கய்யார்கல்லைப்புல்லடகுண்ணக்கலமெந்தி
வெய்யோனுனின்சாலியின்வெண்சோறமுதென்ன
நெய்யோடுண்ணநின்றதுநின்றார்சிலையாரோ. (௮௰)

வில்லார்தோளான்மேவினன்வெங்கானகமென்ன
† நல்லானன்றேதுஞ்சினனஞ்சேயனையாளைக்
கொல்லேன்மாயேன்வன்பழியாலேகுறைவற்றேன்
அல்லேனோயானன்புடையார்போலழுகின்றேன். (௮௧)

பாரோர்கொள்ளாரியானுயிர்பேணிப்பழிபூணேன்
தீராதொன்றோதுன்பமில்லூரிற்றிருவில்லாள்
ஆரோடென்னினிற்றுரைதந்தாயறமெல்லாம்
வேரோடுங்கேடாகமுடித்தென்வினைவித்தாய். (௮௨)

* அரசாள்வான் என்றது இராமனை. † நல்லான்-தயரதன்.

கொன்றேனானென்றந்தையைமற்றுன்கொலைவாயால்
ஒன்றோகானத்தண்ணலையுய்த்தேனுலகாள்வான்
நின்றேனென்றானின்பிழையுண்டோபழியுண்டோ
என்றேனுந்தானென்புகழ்மாயுமிடமுண்டோ. (௮௩)

கண்ணாலேயென்செய்வினையின்னுஞ்சிலகாண்பார்
மண்ணார்பாராதெள்ளுவர்வாளாபழிபூண்டாய்
* உண்ணாஞ்சங்கொல்லிலதென்னுமுறையுண்டென்
றெண்ணாநின்றேனன்றியிரேனென்னுயிரோடே. (௮௪)

என்றான்பாவிக்கும்பிவயிற்றினிடைவைகித்
தோன்றாந்தீராப்பாதகமற்றென்றுயர்தீரச்
சான்றாந்தானேநல்லறமாகத்தகைஞாலம்
மூன்றுங்காணமாதவம்யானேமுயல்கின்றேன். (௮௫)

சிறந்தார்சொல்லுநல்லுரைசொன்னேன்செயலெல்லாம்
மறந்தாய்செய்தாயாகுதி † மாயாவுயிர்தன்னைத்
துறந்தாயாகிற்றாயையுமாதியுலகத்தே
பிறந்தாயாதியீதலதில்லைபிறிதென்றான். (௮௬)

வேறு.

இன்னணம்வினையனவியம்பியானுமிப்
பன்னருங்கொடுமனைப்பாவிபாடிரேன்
துன்னருந்துயர்கெடத்தூயகோசலை
பொன்னடிதொழுவேனென்றெழுந்துபோயினான். (௮௭)

‡ ஆண்டகைகோசலையருகரெய்தினன்
மீண்டுமண்கிழிதரவீழ்ந்துகேழ்கிளர்
காண்டருதடக்கையிற்கமலச்சீறடி
பூண்டனன்கிடந்தனன்புலம்பினானரோ. (௮௮)

எந்தையெவ்வுலகுளானெம்முன்யாண்டையான்
வந்ததுதமியெனிம்மறுக்கங்காணவோ
சிந்தையினுறுதுயர்தீர்த்திராலெனும்
அந்தரத்தமரருமழுதுசோரவே. (௮௯)

அடித்தலங்கண்டிலென்னையானெனையனைப்
படித்தலங்காவலன்பெயரற்பாலனோ
பிடித்திலிர்போலுநீர்பிழைத்திராலெனும்
பொடித்தலந்தோளுறப்புரண்டுசோர்கின்றான். (௯0)

* உண்ணா ஈறுகெட்டவெதிர்மறை வினையெச்சம்.
† உயிர்நித்தமென்பார் மதம்பற்றி மாயாவுயிரென்றார். ‡ ஆண்டகை பரதன்.

கொடியவர்யாவருங்குலங்கள்வேரற
கொடிகுவென்யானது நுவலுவதெங்ஙனம்
கடியவள்வயிற்றினிற்பிறந்தகள்வனேன்
முடிகுவெனருந்துயர்முடியவென்னுமால். (௧௧)

இரதமொன்றூர்ந்துபாரிருளைநீக்குமவ்
* வரதனிலொளிபெறவளர்ந்ததொல்குலம்
† பரதனென்றொருபழிபடைத்ததென்னுமால்
மரகதமலையெனவளர்ந்ததோளினான். (௧௨)

வாடொடுதானையான்வானில்வைகிடக்
காடொருதலைமகனெய்தக்கண்ணிலா
நாடொருதுயரிடையழுவதேயெனும்
தாடொடுதடக்கையத்தருமமேயனான். (௧௩)

புலம்புறுகுரிசிறன்புலர்வுநோக்கினாள்
குலம்பொறைகற்பிவைசுமந்தகோசலை
நிலம்பொறையாற்றலனெஞ்சந்தூய்தெனச்
சலம்பிறிதுறமனந்தளர்ந்துகூறுவாள். (௧௪)

மய்யறுமனத்தொருமாசுளானலன்
செய்யனேயென்பதுதேருஞ்சிந்தையாள்
கய்கயர்கோமகளிழைத்தகைதவம்
அய்யநீயறிந்திலைபோலுமாலென்றாள். (௧௫)

தாளுறுகுரிசிலத்தாய்சொற்கேட்டலும்
‡ கோளுறுமடங்கலிற்குமுறிவிம்முவான்
நாளுறநல்லறநடுங்கநாவினால்
சூளுறுகட்டுரைசொல்லன்மேயினான். (௧௬)

அறங்கெடமுயன்றவனருளினெஞ்சினன்
பிறன்கடைநின்றவன்பிறரைச்சீறினோன்
மறங்கொடுமன்னுயிர்கொன்றுவாழ்ந்தவன்
துறந்தமாதவர்க்கருந்துயரஞ்சூழ்ந்துளோன். (௧௭)

குரவரைமகளிரைவாளிற்கொன்றுளோன்
புரவலனுறுபொருள்புனைவில்வாரினோன்
விரவலர்வெரிநிடைவிழிக்கமீண்டுளோன்
○ இரவலரருநிதியெறிந்துவௌவினோன். (௧௮)

---

* வரதன் - சூரியன். † பரதனைத் தருமமேயனென்றுவமைமுகத்தாற்கூறினர்.

‡ கோளுறுமடங்கல் வன்மை பொருந்திய சிங்கம் அல்லது தடையுண்ட சிங்கமென்றும் கூறுவர் ○ இரவலர் அருநிதி - ஏழைகள் வெருகஷ்டப்பட்டு பற்பலரிடத்துநின்றுஞ் சேகரிக்கின்றபொருள்.

தழைத்ததண்டுளவினோன் றலைவனல்லனென்
றழைத்தவ னறநெறியந்தணாளரிற்
பிழைத்தவன் பிழைப்பிலாமறைநயைப்பேணலா
திழைத்தவன் பொய்யெனுமிழுதைநெஞ்சினேன். (௯௯)

தாய்பசியுழந்துயிர்தளரத்தான் றனிப்
பாய்பெரும்பாழ்வயி றளிக்கும்பாவியும்
நாயகன்படநடந்தவனுநண்ணுமத்
தீயெரிநரகத்துக்கடிதுசெல்கயான். (௧௦௦)

தாளினிலடைந்தவர் தம்மைத்தற்கொரு
கோளுறவஞ்சினன் கொடுத்தபேதையும்
நாளினுமறமறந்தவனுநண்ணுறும்
மீளருநரகிடைக்கடிதுவீழ்கயான். (௧௦௧)

பொய்க் * கரிகூறினேன் போருக்கஞ்சினேன்
கைகொளுமடைக்கலங்கரந்தவவ்வினேன்
எய்த்திடத்திடர்செய்தோனென் றின்னோர்புகும்
மெய்க்கொடுநரகிடைவிரைவின்வீழ்கயான். (௧௦௨)

† அந்தணருறையுளையனலூட்டினேன்
மைந்தரைக்கொன்றுளோன்வழக்கிற்பொய்த்துளோன்
நிந்தனைதேவரைநிகழ்த்தினேன்புகும்
வெந்துயர்நரகத்துவீழ்கயானுமே. (௧௦௩)

கன்றுயிரோய்ந்துகக்கறந்துபாலுண்டோன்
மன்றிடைப்பிறர்பொருண்மறைத்தவவ்வினேன்
நன்றியைமறந்திடுநயமிலாவினேன்
என்றிவருறுநரகென்னதாகவே. (௧௦௪)

ஆறுதன்னுடன்வருமஞ்சொன்மாதரை
ஊறுகொண்டலைக்கத்தன்னுயிர்கொண்டோடினேன்
சோறுதன்னயலுளோர்பசிக்கத்துய்த்துளோன்
ஏறுமக்கதியிடையானுமேறவே. (௧௦௫)

எஃகெதிர்செருமுகத்தேற்றதெவ்வருக்
‡ கொஃகினனுயிர்வளர்த்துண்ணுமாசையான்
அஃகவிலறநெறியாக்கியான்பொருள்
வெஃகியமன்னன்வீழ்நரகின்வீழ்கயான். (௧௦௬)

---

* கரி-சாக்ஷி. † அந்தணருறையுளை யனலூட்டினேன்-பிரமத்தோஷி.
‡ ஒஃகினன்-அஞ்சினவன்.

அழிவருமரசியலெய்தியாகுமென்
றிழிவருசிறுதொழிலியற்றியாண்டதின்
வழிதருதருமத்தைமறந்துமற்றொரு
பழிவருநெறிபடர்பதகனாகையான். (௧௦௭)

தஞ்செனவொதுங்கினர்தனதுபாருளோர்
எஞ்சலின்மறுக்கினோடிரியல்போயுற
* வஞ்சிசென்றிறுத்தவன் † வாகைமீக்கொள
அஞ்சினமன்னவனாகையானுமே. (௧௦௮)

கன்னியையழிசெயக்கருதினேன்குரு
பன்னியைநோக்கினேன்பருகினேனறை
பொன்னிகழ்களவினிற்பொருந்தினேனென
இன்னவருறுகதியென்னதாகவே. (௧௦௯)

ஊணலவுண்வழிநாயினுண்டவன்
ஆணலன்பெண்ணலனார்கொலாமென
நாணலனரகமுண்டென்னுநல்லுரை
பேணலன்பிறர்பழிபிதற்றியாகயான். (௧௧௦)

மறுவிறொல்குலங்களைமாசிட்டேற்றினேன்
சிறுவிலையெளியவருணவுசிந்தினேன்
நறியனவயலவர்நாவினீர்வர
‡ உறுபதநுங்கியவொருவனாகையான். (௧௧௧)

வில்லினும்வாளினும்விரிந்தவாண்டொழில்
புல்லிடையுகுத்தனென்பொய்ம்மையாக்கையைச்
சில்பகலோம்புவான்செறுநர்சீறிய
இல்லிடையிபேதமேற்கவென்கையால். (௧௧௨)

எற்றவற்கொருபொருளுள்ளதின்றென்று
மாற்றலனுதவலன்வரம்பில்பல்பகல்
ஆற்றினனுழற்றுமோ § ராதனெய்துமக்
கூற்றுறுநரகினோர்கூறுகொள்கயான். (௧௧௩)

பிணிக்குறமுடையுடல்பேணிப்பேணலார்த்
துணிக்குறவயிரவாடக்கைதூக்கிப்போய்
மணிக்குறநகையினமங்கைமார்கண்முன்
தணிக்குறுபகைஞரைத்தாழ்கவென்றலை. (௧௧௪)

---

* வஞ்சி-வட்கார் மேற்செல்வார்புனையுமாலை. † வாகைவெற்றிகொண்டார் புனையுமாலை. ‡ உறுபதம்-உண்ணுமுணவு. இபேதம்மது. § ஆதன் அறிவிலி

கரும்பலர்செந்நெலங்கழனிக்கானநா
டரும்பகைகவர்ந்துணைவாவிபேணினென்
இரும்பலர்நெடுந்தளையீர்த்தகாலொடும்
* விரும்பலர்முகத்தெதிர்விழித்துநிற்கயான். (கக௫)

† தீயனகொடியவள்செய்தசெய்கையை
நாயினேனுணரினன்னெறியினீங்கலாத்
தூயவர்க்கிடரிழைத்துழலுந்தோமுடை
ஆயவர்வீழ்கதியதனில்வீழ்கயான். (கக௬)

வேறு.

தூயவாசகஞ்சொன்ன ‡ தோன்றலைத்
தீயகானகந்திருவினீங்கிமுன்
போயினான்வரக்கண்டபொம்மலான்
ஆயகாதலாலழுதுபுல்லினான். (கக௭)

செம்மைநன்மனத்தண்ணல்செய்கையும்
அம்மைதீமையுமறிதரேற்றினான்.
கொம்மைவெம்முலைகுமுறுபாலக
விம்மல்விம்மநின்றழுதனீங்கினான். (கக௮)

முன்னை ¶ நங்குலமுதலுளோர்கடாம்
பின்னையாவரேநிகர்க்குநீர்மையார்
மன்னர்மன்னவாவென்றுவாழ்த்தினான்
உன்னவுன்னநைந்துருகிவிம்முவான். (கக௯)

உன்னவுன்னநைந்துருகுமன்புகூர்
அன்னைதாளில்வீழ்ந்திளையவண்ணலும்
சொன்னநீர்மையாலழுதுமாழ்கினான்
இன்னவேலைவாய்முனிவனெய்தினான். (க௨0)

வந்தமாதவன்தாளில்வள்ளல்வீழ்ந்
தெந்தையாண்டையானியம்புவீரென
நொந்துமாழ்கினானுவல்வதோர்கிலா
வந்தமாதவனழுதுபுல்லினான். (க௨க)

மருவின்மைந்தனேவள்ளலுந்தையார்
இறுதியெய்தினானேழிரண்டின
திறவர்செய்கடன்செய்துதீர்த்தியென்
றறவன்மேயினானுரையின்மேயினான். (க௨௨)

* இரும்பலர்-பகைவர். † வெள்ளிப்பாட்டு. ‡ தோன்றல்-ஈண்டுபரதன்
¶ நங்குலமுதலுளோர் மனுத்தொடக்கமானவரை.

அன்னைதேவினாளடியிறைஞ்சினான்
பொன்னின்வார்சடைப்புனிதனோடும்போய்த்
* தன்னைநல்கியத்தருமநல்கினான்
பன்னுதொல்லறப்படிவநோக்கினான். (௧௨௩)

மண்ணின்மேல்விழுந்தலறிமாழ்குவான்
அண்ண † லாழியானவனிகாவலான்
எண்ணெயுண்டபொன்னெழில்கொள்மேனியைக்
கண்ணநீரினாற்கழுவியாட்டினான். (௧௨௪)

பற்றியவ்வயின்பரிவின்வாங்கினார்
சுற்றுநான்மறைத்துறைசெய்கேள்வியார்
கொற்றமன்கணைகுமுறமன்னனை
மற்றோர்பொன்னின் ‡ மாமணமேற்றினார். (௧௨௫)

கரைசெய்வேலைபோனகரிகையெடுத்
துரைசெய்பூசலிட்டுயிர்துளங்குற
அரைசவேலைசூழ்ந்தழுதுகைதொழப்
புரைசயானையிற்கொண்டுபோயினார். (௧௨௬)

உந்துபொற்றடந்தேர்வலானொடும்
மந்திரப்பெருந்தலைவர்மற்றுளோர்
தந்திரத்தனித்தலைவர்நண்பினோர்
வந்துசுற்றமுற்றழுதுமாழ்கினார். (௧௨௭)

சங்குபேரியுந்தழுவுசின்னமும்
எங்குமெங்குநின்றிரங்கியேங்குவ
மங்குறோய்நகர்மகளிராமெனப்
பொங்குகண்புடைத்தழுவபோன்றவே. (௧௨௮)

மாவும்யானையும்வயங்குதேர்களும்
கோவுநான்மறைக்குழுவுமுன்செலத்
$ தேவிமாரொடுங்கொண்டுதெண்டிரை
தாவுவார்புனற்சரயுவெய்தினார். (௧௨௯)

எய்தினாலுளோர்மொழிந்தயாவையும்
செய்துதீக்கலந்திருத்திச்செல்வனை
வெய்தினேற்றினார்வீரநந்தைபால்
பொய்யின்மாக் ¶ கடன்கழித்துபோந்தென்றார். (௧௩0)

---

* தன்னையிழந்த வாய்மைகாத்தமையின் தன்னைநல்கியத்தருமநல்கினானென்றார்.

† ஆழியான்-தெய்வீகமான சக்கரத்தினையுடையவன்.
‡ மாமானம்-பெரியவிமானம். § வெள்ளிப்பாட்டு.
$ தேவிமார்-அறுபதினாயிரவரை. ¶ கடன்-உரிமைச்சடங்கு.

என்னும்வேலையிலெழுந்தவீரனை
அன்னதீமையாலரசனின்னையும்
துன்னுதுன்பத்தாற்றுறந்துபோயினான்
முன்னரேயெனமுனிவன்கூறினான். (௧௩௧)

துறந்துபோயினானெனவேதோன்றனீ
பிறந்துபேரறம்பிழைத்ததென்றல்போல்
இறந்துபோயினானிருந்ததாண்டது
மறந்துவேறொருமைந்தனாங்கொலாம். (௧௩௨)

இடிக்கண்வாளராவிடைவதாமெனாப்
படிக்கண்வீழ்ந்தகம்பதைக்குநெஞ்சினான்
தடுக்கலாகலாத்துயரந்தன்னுளே
துடிக்கவிம்மிநின்றழுதுசொல்லுவான். (௧௩௩)

உரைசெய்மன்னன்மற்றுன்னிலென்னில்யார்
இரவிதன்குலத்தெந்தைமுந்தையோர்
* பிரதபூசனைக்குரியபேறிலேன்
அரைசுசெய்யவோவாவதாயினேன். (௧௩௪)

பூவினான்முகன்புதல்வனாதியாம்
தாவின்மன்னர்தந்தருமநீதியால்
தேவராயினார்சிறவனாகியே
† ஆவகான்பிறந்தவத்தனானவா (௧௩௫)

துன்னுதாள்வளஞ்சுமந்த ‡ தாழையில்
பன்னுவான் ; லைப்பதடியாயினேன்
என்னையென்னையேயீன்றுகாத்தவென்
அன்னையாரெனக்கழகுசெய்தவா. (௧௩௬)

என்றுகூறிநொந்திடரின்மூழ்குமத்
துன்றுதாரவற்கிளையதோன்றலால்
அன்றநேர்கடனமைவதாக்கினான்
நின்றனான்மறைநெறிசெய்நீர்மையான். (௧௩௭)

இழையுமாரமுமிடையுமின்னிடக்
குழையுமாமலர்க்கொம்பனார்கடாம்
தழையின்மூண்டகத்தழுவுகானிடை
முழையின்மஞ்ஞைபோலெரியின்மூழ்கினார். (௧௩௮)

---

* பிரதபூசனை-பிரேதசம்ஸ்காரத்தை. † ஆவஎன்றது இரக்கத்தின்கட் குறிப்பு.

‡ தாழை-தெங்கு.

அங்கிரினுங்குளிரவம்புயத்
திங்கள்வாண்முகந்திருவிளங்குறச்
சங்கைதீர்ந்து * தங்கணவர்பின்செலும்
நங்கைமார்புகுமுலகநண்ணினர். (கஙக)

அனையசெய்கையாலரசர்கோமகற்
கினையதன்மையாலியைவசெய்துபின்
மனையுனெய்தினன்மரபின்வாழ்வினை
வினையினெய்துமோர்பணியின்வேலையான். (கச0)

† ஐந்துமைந்துநாளுழியாமென
மைந்தன்வெந்துயர்க்கடலின்வைகினன்
தந்தைதன்வயிற்றரும்மயாவையும்
மூந்துநூலுளோர்முறையின்முற்றினன். (கசக)

முற்றுமுற்றுவித்துதவித்துதவிமும்மைநூல்
சுற்றம்யாவையுந்தொடரத்தோன்றினன்
வெற்றிமாதவன்வினைமுடித்தவன்
கொற்றவேனெவெங்குமரற்கூடினன். (கசஉ)

மன்னரின்றியேவையம்வைகருன்
தொன்மையன்றெனத்துணியுநெஞ்சினர்
அன்னமாநிலத்தறிஞர்தம்மொடும்
முன்னைமந்திரக்கிழவர்முந்தினர். (கசங)

கூ-வது பள்ளியடைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஙக.

க0-வது. ஆற்றுப்படலம்.

வரன்முறைதெரிந்துணர்மறையின்மாதவத்
தருமரைமுனிவனுமாண்டையானென
விரைவின்வந்தீண்டினர்விரகினெய்தினர்
பரதனைவணங்கினர்பரியுநெஞ்சினர். (க)

மந்திரக்கிழவருநகரமாந்தரும்
தந்திரத்தலைவருந்தரணிபாலரும்
அந்தரமுனிவரோடறிஞர்யாவரும்
சுந்தரக்குரிசிலைமரபிற்சுற்றினர். (உ)

---

* தங்கணவர்பின்செலு நங்கைமார்புகுமுலகம் சககனமனடைந்த மாதரடையும் புண்ணிய உலகம் † ஐந்துமைந்துநாள் தசராத்திரி.

சுற்றினரிருந்துழிச்சுமந்திரப்பெயர்
பொற்றடந்தேர்வலான்புலமையுள்ளத்தான்
கொற்றவற்குறுபொருள்குறித்தகொள்கையான்
முற்றுணர்முனிவனைமுகத்துநோக்கினான். (௩)

* நோக்கினாற்சுமந்திரனுவலலுற்றதை
வாக்கினாலன்றியேயுணர்ந்தமாதவன்
காக்குதியுலகுநின்கடனதாமெனக்
கோக்குமானுக்கதுதெரியக்கூறுவான் (௪)

வேதியாருந்தவர்விருத்தர்வேந்தர்கள்
ஆதியர்நின்வயினடைந்தகாரியம்
நீதியுந்தருமமுநிறுவநீயிது
கோதறுகுணத்தினாய்மனத்துட்கோடியால். (௫)

தருமமென்றொருபொருடந்துகாட்டுதல்
அருமையென்பதுபெரிதறிதியையநீ
† இருமையுந்தருவதற்கியைவதீண்டிது
தெருண்மனத்தார்செயுஞ்செயலிதாகுமால். (௬)

வள்ளுறுவயிரவாளரசில்வையகம்
நள்ளுறுகதிரில்லாப்பகலுநாளொடும்
தெள்ளுறுமதியிலாவிரவுந்தேவுடன்
உள்ளுறையுயிரிலாவுடலுமொக்குமே. (௭)

தேவர்தம்முலகினுந்தீமைசெய்துழல்
மாவலியவுணர்கள்வைகுநாட்டினும்
ஏவெவையுலகமென்றிசைக்குமன்னவை
காவல்செய்தலைவரையின்மைகண்டிலம். (௮)

முறைதெரிந்தொருவகைமுடியநோக்குறின்
மறைதவன்வகுத்தனமண்ணில்வானிடை
நிறைபெருந்தன்மையினிற்பசெல்வன
இறைகளையில்லனயாவைகாண்கிலம். (௯)

பூத்தநாண்மலரயனுதிப்புண்ணியர்
ஏத்துவான்புகழினரின்றுகாறுங்
காத்தனர்பின்னொருகளைகணின்மையால்
‡ நீத்தநீருடைகலநீரதாகுமால். (௧௦)

---

* நோக்கினால்குறிப்புப்பார்வையால் † இருமைஇம்மைமறுமை
‡ நீத்தநீருடைகலநீரதென்றது கடலிற்கவிழ்ந்த மரக்கலத்தன்மையை.

உந்தையோவிறந்தனனும்முனீத்தனன்
வந்ததுமன்னைதன்வரத்தின்மைந்தநீ
அந்தமில்பேராசளித்தியன்னது
சிந்தையெமக்கெனத்தெரிந்துகூறினான். (கக)

தஞ்சமிவ்வுலகந்தாங்குவாயெனச்
செஞ்சவேமுனிவரன்செப்பக்கேட்டலும்
நஞ்சினைநுகரெனநடுங்குவாரினும்
அஞ்சினனயர்ந்தனனருவிக்கண்ணினான். (கஉ)

நடுங்கினனாத்தடுமாறிநாட்டமும்
இடுங்கினன்மகளிரினிரங்குநெஞ்சினன்
ஒடுங்கியவுயிரினனுணவுகைதரத்
தொடங்கினனரசவைக்குள்ளஞ்சொல்லுவான். (கங)

மூன்றுலகினுக்குமோர்முதல்வனாய்முதல்
தோன்றினனிருக்கயான்மகுடஞ்சூடுதல்
சான்றவருரைசெயத்தருமமாதலால்
ஈன்றவள்செய்கையினிழுக்குண்டாகுமோ. (கச)

அடைவருங்கொடுமையென்னன்னைசெய்கையை
நடைவருந்தன்மைநீர்நன்றிதென்றிரேல்
இடைவருங்காலமீண்டிரண்டுநீத்தது
கடைவருந்தீநெறிக்கலியினாட்சியோ. (கரு)

வேத்தவையிருந்தநீர்விமலனுந்தியில்
பூத்தவன் * முதலியபுவியுட்டோன்றினார்
மூத்தவரிருக்கவேமுறைமையானிலம்
காத்தவருளரெனிற்காட்டிக்காண்டிரால். (கசு)

நன்னெறியென்னினுநானிந்நானில
இன்னுயிர்ப்பொறைசுமந்திருந்துவாழ்கிலேன்
அன்னவன்றனைக்கொணர்ந்தலங்கன்மாமுடி
தொன்னெறிமுறைமையிற்சூட்டிக்காண்டிரால். (கஎ)

அன்றெனிலவனொடுமரியகானிடை
நின்றினிதிருந்தவநெறியினாற்றுவென்
ஒன்றினியுரைப்பினென்னுயிரைநீக்குவென்
என்றனனென்றபோதிருந்தபேரவை. (கஅ)

ஆன்றபேரரசனுமிருப்பவையனும்
என்றனன்மணிமுடியேந்தல்வேந்தநீ

† முதலுதல்-சிருஷ்டியில் முற்பட்டுநிற்றல்.

வான்றொடர்திருவினைமறுத்திமன்னிளந்
தோன்றல்கள்யாருளர்நின்னிற்றோன்றினார். (க௯)

ஆழியையுருட்டியுமறங்கள்போற்றியும்
வேள்வியையியற்றியும்வளர்க்கவேண்டுமோ
எழினோடேழுலகுமெஞ்சினும்
வாழியநின்புகழென்றுவாழ்த்தினார். (உ0)

குரிசிலுந்தம்பியைக்கூவிக்கொண்டலின்
முரசறைந்திந்நகர்முறைமைவேந்தனைத்
தருதுமீண்டென்பதுசாற்றித்தானையை
விரைவினிலெழுகெனவிளம்புவாயென்றார். (உக)

நல்லவனுரைசெய * நம்பிகூறலும்
அல்லலிலழுங்கியவன்பின்மாநகர்
ஒல்லெனவிரைத்தாலுயிரில்யாக்கையைச்
சொல்லெனுமமிர்தினாற் † றுளித்ததென்னவே. (உஉ)

அவித்தவைம்புலத்தவராதியாயுள
புவித்தலையுயிரெலாமிராமன்பொன்முடி
கவிக்குமென்றுரைக்கவேகளித்ததாலது
செவிப்புலநுகர்வதோர்தெய்வத்தேன்கொலாம். (உ௩)

படுமுரசறைந்தனர்பரதன்றம்முனைத்
கொடிநகர்தருமவற்கொணரச்சேனையை
முடுகுகவென்றசொன்மூரிமாநகர்
உடுபதிவேலையினுதயம்போன்றதே. (உ௪)

எழுந்ததுபெரும்படையேழுவேலையின்
மொழிந்தபேரூழியின்முழங்கிமுந் ‡ தெழ
அழிந்ததுகேகயன்மடந்தையாசைபோய்க்
கழிந்ததுதுயர்நெடுங்காதறூண்டவே. (உ௫)

பண்ணினபகடுதேர்புரவிபண்டியும்
மண்ணினைமறைத்தனவளர்ந்தமாக்கொடி
விண்ணினைமறைத்தனவிரிந்தமாத்துகள்
கண்ணினைமறைத்தனகமலத்தோனையே. (உ௬)

ஈசனிவ்வுலகினையழிக்குநாளெழும்
ஓசையினிமிர்ந்ததொல்லென்பேரொலி

---

* நம்பி ஈண்டு-சத்துருக்கனை. † துளித்தல் ஈண்டு உயிர்பெற்றுக் கண்ணீர்வார்தல் - துளிர்த்தலென்னும் கிராம்யமொழி துளித்ததென நின்றது. துளிர்த்தல் உயிர்பெறுதல்.

காசையில்கரியவற்காண மூண்டெழும்
ஆசையினிமிர்ந்த * தவ்வனிகராசியே. (௨௭)

படியொடுதிருநகர்துறந்துபன்மரம்
செடியொடுகொடுவனநோக்கிச்சீதையாம்
கொடியொடுநடந்தவக்கொண்டலாமெனப்
பிடியொடுநடந்தனபெருங்கைவேழமே. (௨௮)

சேற்றிளமரைமலர்சிறந்தவாமெனக்
காற்றளம்பொலிதருகன்னிமாரொடும்
ஏற்றிளம்பிடிக்குலமிகலிலின்னடை
தோற்றிளமகளிரைச்சுமப்பபோன்றவே. (௨௯)

வேதனைவெயிற்கதிர்தணிக்கமென்மழைச்
சீதநீர்கொடுநெடுங்கொடியுஞ்சென்றன
கோதைவெஞ்சிலையவன்கோலங்காண்கிலா
மாதரினுடங்குவரம்பில்கோடியே. (௩௦)

வெண்மதிமீச்செலமேகமூர்ந்தென
அண்ணல்வெங்கதிரவனளவின்மூர்த்தியாய்
மண்ணிடையிழிந்தொருவழிக்கொண்டாலென
எண்ணருமன்னவர்களிற்றினேகினர். (௩௧)

தேர்மிசைச்சென்றதோர்சிந்துசெம்முகக்
கார்மிசைக்கழிந்ததார்கலியொர்கார்க்கடல்
ஏர்மிசையிவுளிமேலேகிற்றெங்கணும்
பார்மிசைப்படர்ந்ததுபதாதிப்பௌவமே. (௩௨)

தாரையுஞ்சங்கமுந்தாளங்கொம்பொடு
வார்மிசைப்பம்பையுந்துடியுமற்றவும்
பேரியுமியம்பலசென்றபேதைமைப்
பூரியர்குழாத்திடையஞர்போலவே. (௩௩)

தாவருநாண்முதலணியலாற்றகை
மேவருகலங்களைவெறுத்தமேனியர்
தேவருமருள்கொளத்தெரியுங்காட்சியர்
பூவுதிர்கொம்பெனமகளிர்போயினர். (௩௪)

அதிர்கடல்வையகமனைத்துங்காத்தவன்
† விதிவருந்தனிக்குடைமீதிலாப்படை

* அவ்வனிகராசி-அந்தச்சேனையின் பிரிவுகள். அவையாவன, இரதம், கசம், துரகம், பதாதி என்பனவாகிய இவைகள். † விதிவரும் தனிக்குடை-சூரியவங்கிசத்து முதலரசன் காலந்தொட்டு பட்டாபிஷேகவரசர் தலைமீதுபிடிக்கப்பட்டு வருகிற ஒப்பற்றகுடை அது வேதமந்த்ரவழியாய்ப் புனிதப்படுத்தப்பட்ட இயல்பினையுடையதாகலின் அதற்கு விதிவருமென்ற சிறப்படைகொடுத்தனர்.

பொதிபலகவிகைமீன்பூத்ததாகிலும்
கதிர்மதிநீங்கியகங்குல்போன்றதே. (௩௫)

செல்லியசெலவினாற்சிறியதிக்கெனச்
சொல்லியசேனையைச்சுமந்ததேயெனில்
*ஒல்லியல்வேலைநீருடுத்தபாரையோர்
மெல்லியலென்றவர்மெல்லியரேகொலாம் (௩௬)

தங்குசெஞ்சாந்தகில்கலவைசார்கில
குங்குமங்கொட்டிலகோவைமுத்தில
பொங்கிளங்கொங்கைகள்புதுமைவேறில
தெங்கிளநீரெனத்தெரிந்தகாட்சியே. (௩௭)

இன்றுணையவர்முலையெழுதுசாந்தினம்
மன்றலந்தாரினுமறைந்திலாமையால்
துன்றிளங்கொடிமுகிற்றுசுநீங்கிய
குன்றெனப்பொலிந்தனகுவவுத்தோள்களே. (௩௮)

கறையறுகோதையர்நாட்செய்கோலத்தின்
துறையறவஞ்சனந்துறந்தகாட்டங்கள்
குறையறநிகர்த்தனகொற்றமுற்றுவான்
கறையறக்கழுவிய † காலவேலையே. (௩௯)

விரிமணிமேகலைவிரவியார்க்கில
தெரிவையரல்குருரொலியிறேறெனப்
பரிபுரமார்க்கிலாப்பவளச்சீறடி
அரியினமார்க்கிலாக்கமலமன்னவே. (௪௦)

மல்கியேகேகயன்மடந்தைவாசகம்
நல்கியதரிவையர்நுவிற்கேகொலாம்
புல்கியமலர்வடம்பூண்கிலாமையால்
ஒல்கியவொருவகைபொறையுயிர்க்கவே. (௪௧)

கோமகன்பிரிதலிற்கோலநீத்துள
தாமரைச்செல்வியுந்தவத்தைமேவினாள்
காமனுமருந்துயர்க்கடலின்மூழ்கினான்
ஆமெனநிகழ்ந்ததவ்வளவில்சேனையே (௪௨)

மண்ணையும்வானையும்வயங்குதிக்கையும்
உண்ணியநிமிர்கடலொலாக்குமென்பதென்

* ஒல்லியல்வேலைநீர்-ஒலியையியல்பாகவுடைய கடல்.
† காலவேலை-காலன்போன்ற வேலினை,

கண்ணினுமனத்தினுங்கமலத்தண்ணறன்
எண்ணினுநெடிதவனெழுந்தசேனையே. (௪௩)

அலைநெடும்புனலறக்குடித்தலாலகம்
நிலைபெறநிலைநெறிநிறுத்தலானெடு
மலைகளைமண்ணுறவழுத்தலாற்றமிழ்த்
தலைவனைநிகர்த்ததத்தயங்குதானையே. (௪௪)

அறிஞருஞ்சிறிஞருமாதியர்தமாச்
செறிபெருந்தானையுந்திருவுநீங்கலால்
† குறியவன்புனலெலாம்வயிற்றிற்கொண்டநாள்
மறிகடலொத்ததவ்வயோத்திமாநகர். (௪௫)

பெருந்திரைநதிகளும்வயலும்பெட்புறு
மரங்களுமலைகளுமண்ணுங்கண்ணுறத்
திருந்தவிலயோதியாந்தெய்வமாநகர்
அருந்தெருவொத்ததப்படைசெல்லாறரோ (௪௬)

தார்கடாங்கோதைதாந்தாமந்தாந்தகை
ஏர்கடாங்கலவைநீங்கமழ்ந்தின்றென்பரால்
கார்கடாமெனமிகக்கடுத்தகைம்மலை
வார்கடாமல்லத்தம்மன்னன்சேனையே. (௪௭)

ஆளுலாங்கடலினுமகன்றவக்கடல்
தோளுலாங்குண்டலமுதலதொல்லணி
கேளுலாமின்னொளிகிளர்ந்ததில்லையால்
வாளுலாநுதலியர்மருங்குல்போலவே. (௪௮)

மத்தளமுதலியவயங்குபல்லியம்
ஒத்தனசேறலிலுரையிலாமையில்
சித்திரச்சுவர்நெடுஞ்சேனைதீட்டிய
பத்தியைநிகர்த்ததப்படையினீட்டமே. (௪௯)

ஏடறுகோதையர்விழியினெய்தகோல்
ஊடுறவுரந்தொளைத்துயிருணுவகை
ஆடவர்க்கரும்பெருங்கவசமாயது
காடுறைவாழ்க்கையக்கண்ணனன்னவே. (௫௦)

கணங்குழைக்கைகயன்மகளிற்கண்ணிய
சினங்கிடந்தெரிதலிற்றீய்ந்தவேகொலாம்

* தமிழ்த்தலைவன் அகத்தியமுனிவன்.

† குறியவன்-குறுமுனியென்னுந்துணையாகின்றது.

அனங்கனைங்கொடுங்கணைகடந்தவாடவர்
மனங்கிடந்துண்கிலமகளிர்கொங்கையே. (ருக)

இன்னணநெடும்படையேகவேந்தலும்
தன்னுடத்தைத்திருவரைச்சீரைசாத்தினான்
பின்னிளையவனொடுபிறந்ததுன்பொடும்
நன்னெடுந்தேர்மிசைநடத்தன்மேயினான். (ருஉ)

தாயருமருந்தவத்தவருந்தந்தையின்
ஆயமந்திரியருமளவில்சுற்றமும்
தூயவந்தணர்களுந்தொடர்ந்துசூழ்வரப்
போயினன்றிருநகர்ப்புரிசைவாயிலே. (ருங)

மந்தரைக்கூற்றமும்வழிச்செல்வாரொடும்
உந்தியேபோதல்கண்டிளவலேரடியார்த்
தந்தரத்தெற்றுவானழன்றபற்றலும்
சுந்தரத்தோளவன்விலக்கிச்சொல்லுவான். (ருச)

முன்னையர்முறைகெடமுடித்தபாவியைச்
சின்னபின்னஞ்செய்தென்சினத்தைத்தீர்வெனேல்
என்னையின்றென்னையன்றுறக்குமென்றலால்
அன்னையென்றுணர்ந்திலெனையநானென்றான். (ருரு)

ஆதலான்முனியுமென்றையனந்தமில்
வேதனைக்கூனியை * வெகுண்டுமென்னினும்
கோதிலாவருமறைகுலவுநூல்வலாய்
போதுநாமென்றுகொண்டரிதிற்போயினான். (ருசு)

மொய்பெருஞ்சேனையுமூரிஞாலமும்
கய்கலந்தயலொருகடலிற்சுற்றிட
அய்யனுந்தேவியுமிளையவாளியும்
வய்கியசோலையிற்றானும்வைகினான். (ருஎ)

அல்லணைநெடுங்கணீரருவியாடினன்
கல்லணைகிழங்கொடுகனியுமுண்டிலன்
வில்லணைத்துயர்ந்ததோள்வீரன்வைகிய
புல்லணைமருங்கிற்றான்பொடியின்வைகினான். (ருஅ)

ஆண்டுநின் † றாண்டகையடியினேகினான்
ஈண்டியநெறியெனத்தானுமேகினான்
தூண்டிடுதேர்களுந்துரகராசியும்
காண்டகுகரிகளுந்தொடரக்காலினே. (ருகூ)

க௦ - வது ஆற்றுப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கூகஅ.

---

* வெகுண்டும்-டும்மீற்றுத்தன்மைப்பன்மை
† புருடோத்தமனென்னும் பெயர்பற்றி ஆண்டகையென்றார்.

௧௧ - வது. குகப்படலம்.

பூவிரிபொலன்கழற்புனைவிருளையான்
காவிரிநாடன்னகழனிநாடொரீஇத்
தாவரசங்கமமென்னுந்தன்மைய
யாவையுமிரங்கிடக்கங்கையெய்தினான். (௧)

எண்ணருஞ்சுரும்புதம்மினத்துக்கல்லது
கண்ணகன்பெரும்புனற்கங்கையெங்கணும்
அண்ணல்வெங்கரிமதத்தருவிபாய்தலால்
* உண்ணவுங்குடையவுமுரித்தன்றாயதே. (௨)

அடிமிசைத்தூளிபுக்கடைந்ததேவர்தம்
முடியுறப்புலர்ந்ததோர்முறைமைதேர்ந்திலென்
நெடிதுயிர்த்துண்டவுநீந்தநின்றவும்
பொடிமிசைப்புரண்டவும்புரவியீட்டமே (௩)

பாலையேய்நிறத்தொடுபண்டோன்படர்
† ஓலையேய்நெடுங்கடலோடிற்றில்லையால்
மாலையேய்நெடுமுடிமன்னன்சேனையாம்
வேலையேமடுத்ததக்கங்கைவெள்ளமே. (௪)

கான்றலைநண்ணியகாளைபின்படர்
தோன்றலையவ்வழிதொடர்ந்துசென்றன
ஆன்றவருணர்த்தியவக்குரோணிகள்
மூன்றுபத்தாயிரத்திரட்டிமுற்றுமே. (௫)

அப்படைகங்கையையடைந்தவாயிடைத்
துப்புடைக்கடலினீர்சுமந்தமேகத்தை
ஒப்புடையண்ணலோடுற்றவேகொலாம்
இப்படையெடுத்ததென்றெடுத்தசீற்றத்தான். (௬)

குகனெனப்பெயரியகூற்றினாற்றலான்
தொகைமுரட்சேனையைத்துகளினோக்குவான்
நகைமிகக்கண்கள்தீநாறநாசியில்
புகையுறக்குனிப்புறும்புருவப்போர்விலான் (௭)

மையுறவுயிரெலாமிருதிவாங்குவான்
கையுறகவரயில்பிடித்தகாலன்றான்

---

* யானையின்மதத்தை வண்டுகளல்லாமல் மற்றையுயிர்கள் பருகுதலில்லாமையால் உண்ணவுங்குடையவுமுரித்தன்றாயது என்றார்.

† ஓலையேய்-ஒலிமிகுந்த.

யையைறாறுயிரமுருவமாயின
மெய்யுறுதானையான் வில்லின்கல்வியான். (அ)

கட்டியசுரிகையன் கடித்தவாயினன்
வெட்டியமொழியினன் விழிக்குந்தீயினன்
கொட்டியதுடியினன் குறிக்குங்கொம்பினன்
கிட்டியதமரெனக்கிளர்ந்ததோளினான். (௯)

எலியெலாமிப்படையரவம்யானென
ஒலியுலாஞ்சேனையையுவந்துகூயினான்
வலியுலாமுலகினில்வாழும்வள்ளுகிர்ப்
புலியெலாமொருவழிபுகுந்தபோலவே. (௧௦)

மருங்கடைதென்கரைவந்துதோன்றினான்
ஒருங்கடைநெடும்படையொல்லெனார்ப்பினோ
டருங்கடையுகந்தனிலசனிமாமழை
கருங்கடல்கிளர்ந்தெனக்கலந்துசூழவே. (௧௧)

தோன்றினபுளினரைநோக்கிச்சூழ்ச்சியின்
ஊன்றியசேனையும்பரேற்றுதற்
கேன்றனனென்னுயிர்த்துணைவற்கேகுவான்
ஆன்றபேரரசநீரமைதிராமென்றான். (௧௨)

துடியெறிநெறிகளுந்துறையுஞ்சுற்றுற
ஒடியெறியம்பிகள்யாதுமோட்டலிர்
கடியெறிகங்கையின்கரைவந்தோர்களைப்
பிடியெறிபடவெனப்பெயர்த்துங்கூறுவான். (௧௩)

வேறு.

அஞ்சனவண்ணனென்னாருயிர்நாயகனாளாமே
வஞ்சனையாலரசெய்திய * மன்னரும்வந்தாரே
செஞ்சரமென்பன்தீயுமிழ்கின்றனசெல்லாவோ
உய்ஞ்சிவர்போய்விடினாய்க்குகனென்றெனையேசாரோ. (௧௪)

ஆழநெடுந்திரையாறுகடந்திவர்போவாரோ
வேழநெடும்படைகண்டுவிலங்கிடும்வில்லாளோ
தோழமையென்றவர்சொல்லியசொல்லொருசொல்லன்றோ
ஏழைமைவேடனிறந்திலனென்றெனையேசாரோ. (௧௫)

முன்னவனென்றுநினைந்திலன்மொய்புலியன்னானோர்
† பின்னவனின்றனனென்றிலனன்னவைபேசானேல்

---

* மன்னருமென இழித்தலாற்பன்மையிற்கூறினார். † பின்னவன்-பரதன்.

என்னிவனென்னையிகழ்ந்ததிவ்வெல்லைகடந்தன்றோ
மன்னவர்நெஞ்சினில்வேடர்விடுஞ்சரம்வாயாவோ. (கசு)

பாவமுநின்றபெரும்பழியும்பகைநண்போடும்
ஏவமுமென்பவைமண்ணுலகாள்பவரெண்ணாரோ
ஆவதுபோகவென்னாருயிர்த்தோழமைதந்தான்மேல்
போவதுசேனையுமாருயிருங்கொடுபோயன்றோ. (கஎ)

அருந்தவமென் * றுணையாளவிவன்புவியாள்வானோ
மருந்தெனினன்றுயிர்வண்புகழ்கொண்டுபின்மாயேனோ
பொருந்தியகேண்மையுகந்தவர்தம்மொடுபோகாதே
இருந்ததுநன்றுகழிக்குவெனென்கடனின்றோடே. (கஅ)

தும்பியுமாவுமிடைந்தபெரும்படைசூழ்வாரும்
வம்பியலாரிவர்வாள்வலிகங்கைகடந்தன்றோ
வெம்பியவேடருளீர்துறையோடம் † விலக்கீரோ
நம்பிமுன்னேயினிநம்முயிர்மாய்வதுநன்றன்றோ. (ககூ)

போனபடைத்தலைவீரர்தமக்கிரைபோதாவிச்
சேனை ‡ கிடக்கிடுதேவர்வரிற்சிலைமாமேகம்
$ சோனைபடக்குடர்சூறைபடச்சுடர்வாளோடும்
தானைபடத்தனியானைபடத்திரள்சாயேனோ. (உ0)

நின்றகொடைக்கையென்னன்பனுடைக் நெடுஞ்சீரை
அன்றுகொடுத்தவண்மைந்தர்பலத்தையெனம்பாலே
கொன்றுகுவித்தநிணங்கொள்பிணக்குவைகொண்டோடித்
துன்றுதிரைக்கடல்கங்கைமடுத்திடைதாராதோ. (உக)

ஆடுகொடிப்படைசாடியறத்தவரேயாள
¶ வேடுகொடுத்ததுபாரெனுமிப்புகழ்மேவீரோ
நாடுகொடுத்தவென்னாயகனுக்கிவர்நாமாளும்
காடுகொடுக்கிலராகியெடுத்ததுகாணீரோ. (உஉ)

மாமுனிவர்க்குறவாகிவனத்திடையேவாழும்
0 கோமுனியத்தகுமென்றுமனத்திறைகொள்ளாதே
ஏழுனையுற்றிடிலேழுகடற்படையென்றாலும்
ஆழுனையிற்சிறுகூழெனவிப்பொழுதாகாதோ. (உங)

என்பனசொல்லியிரும்பனமேனியரானோர்முன்
வன்பணைவில்லினன்மல்லுயர்தோளினன்வாள்வீரற்

---

* துணை-சீராமன். † விலக்கீர்-முன்னிலைப்பன்மையுடன் பாட்டே வல் வினைமுற்று. ‡ கிடக்கிடு என்றது திசைச்சொல். $ சோனை-விடா மற்சிந்து மழைத்துளி.

¶ வேடு-சொல்லானஃறிணை, 0 கோ-இறைவன்.

கன்பனுநின் றனனின் றதுகண்டரியேறன்ன
முன்பனில்வந்து மொழிந்தனன் மூரியதேர்வல்லான். (௨௪)

வேறு.

* கங்கையிருகரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியினேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலருநறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான். (௨௫)

கற்காணுந் திண்மையான் கரைகாணாக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திரடிண்டோண் மழைகாணு மணிநிறத்தோய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான். (௨௬)

தன்முன்னே யவன்றன்மை தன்றுணைவன் முந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற துருவிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்
என்முன்னே யவற்காண்பென் யானேசென் றெனவெழுந்தான். (௨௭)

என்றெழுந்த தம்பியொடு மெழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான் றிருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகருநறுங்குஞ்சி யெயினர்கோன் றுண்ணென்றான். (௨௮)

வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான். (௨௯)

நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லைத் திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்றான். (௩௰)

உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாங்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்கள் நெறியென்னாத்
தண்டுறையோர் நாவாயி லொருதனியே தான்வந்தான். (௩௧)

வந்தெதிரே † தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்

---

* ஏற்றுதலும் இறக்குதலும் உடைமைபற்றிக் கங்கையிருகரையுடையான் என்றார். † தொழுதானை - வணங்கிய குகனை.

தந்தையினுங்களிகூரத்தழுவினான்றகவுடையோர்
சிந்தையினுஞ்சென்னியினும்வீற்றிருக்குஞ் * சீர்த்தியான். (௩௨)

வேறு.

தழுவினபுளினர்வேந்தன்றாமரைச்செங்கணானை
எழுவினுமுயர்ந்ததோளாயெய்தியதென்னையென்ன
முழுதுலகளித்ததந்தைமுந்தையோர்முறையினின்றும்
வழுவினனதனைநீக்கமன்னனைக்கொணர்வான்வந்தேன். (௩௩

கேட்டனன்கிராதர்வேந்தன்கிளர்ந்தெழுமுயிரனாகி
மீட்டுமண்ணதனில்வீழ்ந்தான்விம்மினனுவகைவீங்கத்
தீட்டருமேனிமைந்தன்சேவடிக்கமலப்பூவில்
பூட்டியகையன்பொய்யிலுள்ளத்தான்புகலலுற்றான். (௩௪)

தாயுரைகொண்டுதாதையுதவியதரணிதன்னைத்
தீவினையென்னநீத்துச்சிந்தனைமுகத்திற்றேக்கி
போயினையென்றபோழ்துபுகழினோய்தன்மைகண்டால்
ஆயிரமிராமர்நின்கேழாவரோதெரியிலம்மா. (௩௫)

என்புகழ்கின்றதேழையெயினனேனிரவியென்பான்
தன்புகழ்க்கற்றை † மற்றையொளிகளைத்தவிர்க்குமாபோல்
மன்புகழ்பெருமைநுங்கண்மரபினோர்புகழ்களெல்லாம்
உன்புகழாக்கிக்கொண்டாயுயர்குணத்துரவுத்தோளாய். (௩௬)

எனவினையன்னமாற்றமியையனபலவுங்கூறிப்
புனைகழற்புலவுவேற்கைப்புளினர்கோன்பொருவில்காதல்
அனையவற்கமைவிற்செய்தானவற்கன்பிலாதார்
நினைவருங்குணங்கொடன்றோவிராமன்மேனிமிர்ந்தகாதல்.

அவ்வழியவனைநோக்கியருடருவாரியன்ன
செவ்வழியுள்ளத்தண்ணறென்றிசைச்செங்கைகூப்பி
எவ்வழியுறைந்தானம்முன்னென்றலுமெயினர்வேந்தன்
இவ்வழிவீரயானேகாட்டுவலெழுகவென்றான். (௩௮)

காரெனக்கடிதுசென்றான்கல்லிடைப்படுத்தபுல்லின்
வார்சிலைத்தடக்கைவள்ளல்வைகியபள்ளிகண்டான்
பார்மிசைப்பதைத்துவீழ்ந்தான்பருவரற்பரவைபுக்கான்
வார் ‡ மணிப்புனலான்மண்ணைமண்ணுநீராட்டுங்கண்ணான். (௩௧)

இயன்றதென்பொருட்டினாலிவ்விடருனக்கென்றபோழ்தும்
அயின்றனைகிழங்குங்காயுமமிர்தெனவரியபுல்லில்

---

* சீர்த்தியான்-பரதன். † மற்றையொளிகள்-திங்கண்முதலியவற்றை
‡ மணிப்புனல்-வற்றாதநீர் எனப் பரிமேலழகர் உரையிற்காண்க.

துயின்றனையெனவுமாவிதுறந்திலென்சுடருங்காசு
குயின்றுயர்மகுடஞ்சூடும்செல்வமுங்கொள்வென்யானே. (௪0)

தூண்டரநிவந்ததோளான்பின்னருஞ்சொல்லுவானர்
நீண்டவன்றுயின்றசூழலிதுவெனினிமிர்ந்தநேயம்
பூண்டவன்றொடர்ந்துபின்னேபோந்தவன்பொழுதுநீத்த
தியாண்டெனவினிதுகேட்டானெயினர்கோனிதனைச்சொன்னான்.

* அல்லையாண்டமைந்தமேனியழகனுமவளுந்துஞ்ச
வில்லையூன்றியகையோடும்வெய்துயிர்ப்போடும்வீரன்
கல்லையாண்டுயர்ந்ததோளாய்கண்கணீர்சொரியக்கங்குல்
எல்லைகாண்பளவுநின்றனிமைப்பிலனயனமென்றான். (௪௨)

என்பதைக்கேட்டமைந்தனிராமனுக்கிளையாரென்று
முன்பொத்ததோற்றத்தேமில்யானென்றுமுடிவிலாத
துன்பத்துக்கேதுவானேனவனதுதுடைக்கின்றான்
அன்பத்துக்கெல்லையுண்டேயழகிதென்னடிமையென்றான். (௪௩)

அவ்விடையண்ணறானுமன்றரும்பொடியின்வைகித்
தெவ்விடைதரகின்றார்க்குஞ்செறிகழற்புளிஞர்கோமான்
இவ்விடைக்கங்கையாற்றினேற்றினையாயினெம்மை
வெவ்விடர்க்கடனின்றேற்றிவேந்தன்பால்விடுத்ததென்றான். ()

நன்றெனப்புளிஞர்வேந்தனண்ணினன்றமரைநாவாய்
சென்றுநீர்தருதிரென்னவந்தனசிவன்சேர் * வெள்ளிக்
குன்றெனக்குனிக்கு † மம்பொற்குவடெனக் ‡ குபேரன்மானம்
ஒன்றெனநாணிப்பல்வேறுருவுகொண்டனையவான. (௪௫)

நங்கையர்நடையினன்னநாணுறுசெலவினவாய்
கங்கையுமிடமிலாமைமிடைந்தனசலந்தவெங்கும்
அங்கொடிங்கிழித்தியேற்றமமைதியினமரர்வையத்
திங்கொடங்கிழித்தியேற்றமிருவினையென்னலான. (௪௬)

வந்தனவரம்பிலவாய்வரிசிலைக்குரிசின்மைந்த
சிந்தனையாவதென்றுசிருங்கிபேரியர்கோன்செப்பச்
சுந்தரவரிவிலானுஞ்சுமந்திரன்றன்னைநோக்கி
எந்தையித்தானைதன்னையேற்றுதிவிரைவினென்றான். (௪௭)

குரிசிலதேவலாலக்குரகதத்தேர்வலானும்
வரிசையின்வழாமைநோக்கிமரபுளிவகையினேற்றக்

* வெள்ளிக்குன்றம்-கயிலை. † அம்பொற்குவடு-சுவணமேரு.
‡ குபேரன்மானம்-குபேரனது புட்பகவிமானம்.

கரிபரியிரதங்காளாள்கணக்கறுகரையில்வேலை
எரிமணிதிரையின்வீசுங்கங்கையாரேற்றிற்றன்றே (சஅ)

இடுபெடுமுழக்கம்பொங்கவினமழை * மகரநீரை
முடிவுறமுகப்பவூழியிறுதியின்மொய்ப்பபோலக்
கொடியொருவங்கம்வேலைகூம்பொடுபடர்வபோல
நெடியகையெடுத்துநீட்டிநீந்தினநெடுங்கைவேழம். (சகூ)

சுங்கமுமகராமீனுந்தரளமுமணியுந்தள்ளி
வங்கநீர்கடலும்வந்துதன்வழிப்படாமானப்
பொங்குவெங்களிறுநூக்கக்கரையொரீஇப்போயிற்றம்மா
கங்கையுமிராமற்கானுங்காதலதென்னமாதோ. (ருo)

கொடிஞ்சொடுதட்டுமச்சுமாழியுங்கோத்தமொட்டும்
நெடுஞ்சுவர்கொடியும்யாவுநெறிவருமுறையினீக்கி
விடுஞ்சுவற்புரவியோடும்வேறுவேறேற்றிச்சென்ற
மடிஞ்சபினுடம்புகூட்டும்வினையெனவயிரத்தேர்கள். (ருக)

நாலிரண்டாயகோடிநவையினுவாய்கண்மீதா
சேறிரண்டனையவாய † கதியொடுநதியிற்சென்ற
பாறிரண்டனையமெய்யபயந்திரண்டனையநெஞ்ச
காறிரண்டனையகாலகடுநடைக்கலினப்பாய்மா. (ருஉ)

ஊடுறநெருக்கியோடத்தொருவர்முன்னொருவர்கிட்டிச்
‡ சூடகத்தளிர்க்கைமாதர்குழுமினர்துவன்றித்தோன்றப்
பாடியலகளிநல்யானைப்பந்தியங்கடையிற்குத்தக்
கோடுகண்மிடைந்தவென்னமிடைந்தனகுவவுக்கொங்கை. (ருங)

பாங்கினுத்தரியமானப்படர்திரைதவழப்பாரின்
வீங்குநீரழுவந்தன்னுள்விழுமதக்கலுழிவெள்ளத்
தோங்கடல்கடலைகடோன்றவொளித்தவனுயர்ந்தகும்பம்
பூங்குழற்கங்கைகங்கைமுலையெனப்பொலிந்தமாதோ. (ருச)

பொலன்குழைமகளிர்நாவாய்ப்போக்கினொன்றொன்றுதாக்க
மலங்கினரிரண்டுபாலுமறுகினர்வெருவிநோக்க
அலங்குநீர்வெள்ளந்தள்ளியழிதரவங்குமிங்கும்
கலங்களின்வெருவிப்பாயுங்கயற்குலநிகர்த்தகண்கள். (ருரு)

இயல்வுறுசெலவினாவாயிருகையுமெயினர்தூண்டத்
துயல்வனதுடுப்புவீசுந்துவலைகண்மகளிர்மென்றா

* மகரநீர்-கடல். † கதி-மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதிஇயல்பாயுள்ளன. ‡ சூடகம்-வளையலில் ஒருவகை.

சுயல்வுறுபரவையல்குலொளிப்புறத்தளிர்ப்பவுள்ளத்
தயர்வுறுமதுகைமைந்தர்க்கயர்வுயிர்ப்பளித்தவம்மா. (ருசு)

இக்கரையிரைத்தசேனையெறிகடன்முகந்துவெஃகி
அக்கரையடையவீசிவறியனவணுகுநாவாய்
புக்கலையாழிநன்னீர்பொறுத்தனபோக்கிப்போக்கி
அக்கணத்துவரிமீளுமகன்மழைநிகர்த்தமாதோ (ருஎ)

அகிலிடுதூபமன்னவாய்மயிற்பீலியார்த்த
முகிளிபமுரண்மாத்தண்கூடம்பெணமுகிலின்வண்ணத்
துகிலொடுதொடுத்தசெம்பொற்றகட்டிடைதொடுத்தமுத்தம்
நகுகொடிகெழுயபாயி * னவ்வெனச்சென்றநாவாய் (ருஅ)

ஆனனக்கமலத்தன்னமின்னன்னவமிர்தச்செவ்வாய்
தேனனைகுழலாரேறுமம்பிகள்சிந்துமுத்தம்
மீனெனவிரிந்தகங்கைவிண்ணெனப்பண்ணைமுற்றி
வானவர்மகளிரூரமானமேநிகர்த்தமாதோ. (ருகூ)

துளிபடத்துழாவுதிண்கோற்றுடுப்பிருகாலிற்றூன்ற
நளிர்புனற்கங்கையாற்றினடந்தெனச்செல்லுநாவாய்
களியுடைமஞ்ஞையன்னகனங்குழைகயற்கண்மாதர்
ஒளிரடிக்கமலந்தீண்டவுயிர்படைத்தனவேயொத்த. (சுO)

மய்யறுவிசும்பின்மண்ணின் † மற்றுமோருலகின்முற்றும்
மெய்வினைதவமேயன்றிமேலுமொன்றுளதோகேழோர்
செய்வினைநாவாயேறித்தீண்டலர்மனத்திற்செல்லும்
‡ மொய்விசும்போடமாகத்தேவரின்முனிவர்போனார். (சுக)

வேறு.

அறுபதினாயிரமக்குரோணியென்
றிறுதிசெய்சேனையுமெல்லைதீர்நகர்
மறுவறுமாக்களுமகளிர்வெள்ளமும்
செறிதிரைக்கங்கையின்கடக்கச்சென்றவே. (சுஉ)

சுழித்துநீர்வருநதியாற்றைச்சூழ்பட
கழித்துநீங்கியதெனக்கள்ளவாசையை
அழித்துவேறவனி § பண்டாண்டவேந்தரை
இழித்துமேலேறினான்றானுமேறினான். (சுங)

---

* நவ்-மரக்கலம். இது வடசொல்-நாவாய் வடசொற்றிரிபு. † மற்றுமோருலகுகண்டு பாதலத்தை ‡ நினைத்தமாத்திரையிற் சேறலின் மனத்திற்செல்லுமொய்விசும்போடமாக என்றார். § தன்புகழான் யாவரையும் வென்றவனாகலின் பண்டாண்டவேந்தரையிழித்து மேலேறினானென்றார்

தன்னை தம்பியுந்தாயார்மூவரும்
சொன்னதேர்வலவனுந்தூயதோழனும்
துன்னினரேறலுந்துழாதுடுப்பெனும்
நன்னயக்காலினுனடத்தன்மேயினுன். (சுச)

வேறு.

சுற்றத்தார்தேவரொடுந்தொழநின்றகோசலையைத்தொழுதுநோக்கி
வெற்றித்தார்க்குரிசிலிவாராரென்றுகுகன்வினவவேந்தர்வைகும்
முற்றத்தானமுதற்றேவி * மூன்றுலகமீன்றுனைமுன்னீன்றுனைப் [ன்.
பெற்றத்தாற்பெருஞ்செல்வம்யான்பிறத்தலாற்றுறந்தபெரியாளென்று

என்றலுமேயடியின்மிசைநெடிதுவீழ்ந்தழுவானையிவன்யாரென்று
கன்றுபிரிகாராவின்றுயருடையகொடிவினவக்கழற்கான்மைந்தன்
இன்றுணைவனிராகவனுக்கிலக்குவற்குமிளையவற்குமெனக்குமித்தான்
குன்றனையதிருநெடுந்தோட்குகனென்பானிந்நின்றகுரிசிலென்றான்.

நைவீரலீர்மைந்தீரினித்துயராலுடிறந்துகாடுநோக்கி
† மெய்வீரர்பெயர்ந்ததுவுநலமாயிற்றுமன்றேவிலங்கற்றிண்டோள்
கைவீரக்களிறனையகாளையிவன்றன்னோடுகலந்து ‡ நீங்கள்
ஐவீருமொருவீராயகலிடத்தைநெடுங்காலமளித்திரென்றான். (கஎ)

அறந்தானையென்கின்றவயனின்றானைநோக்கியையவன்பின்
நிறைந்தானையுரையென்னநெறிதிறம்பாத்தன்மெய்யைநிற்பதாக்கி
இறந்தான்றன்னிளந்தேவியாவர்க்குந்தொழுகுலமாமிராமன்பின்பு
பிறந்தானுமுளனென்னப்பிரியாதான்றனைப்பயந்தபெரியாளென்றான்.

சுடுமையானத்திடைதன்றுணையேகத்தோன்றறுயர்க்கடலினேகக்
கடுமையார்கானகத்துக்கருணையார்கலியேகக்கழற்கான்மாயன்
நெடுமையாலன்றளந்தவுலகெல்லாந் ¶ தன்மனத்தேநினைந்துசெய்யுங்
கொடுமையாலளந்தாளையாரிவரென்றுரையென்னக்குரிசில்கூறும். (கக)

படரெல்லாம்படைத்தாளைப் § பழிவளர்க்குஞ்செவிலியைத்தன்பாழ்த்தபா
குடரிலேநெடுங்காலங்கிடந்தேற்குமுயிர்ப்பாரங்குறைந்துதேய [விக்
உடரெலாமுயிரெலாவெனத்தோன்றுமுலகத்தேயொருத்தியன்றே
இடரிலாமுகத்தானையறிந்திலையே ○ விந்நின்றாளென்னையீன்றான். (எ0)

---

* மூன்றுலகுமீன்றான் மூன்றுலகையுஞ் சிருஷ்டித்தபிரமன். † மெய்வீரர் சிராமலக்குவரை. ‡ நீர்கள் முன்னிலைப்பன்மைபெயர். ¶ தான் பெற்றவரத்தான் அரசரைப்பெற்றமையான் தன்மனத்தேநினைந்து செய்யுங்கொடுமையாலளந்தாளைஎன்றார். § பழிவளர்க்குஞ்செவிலியென்றதுஏகதேசவுருவகம். ○ இந்நின்றாளொருத்தி யென்னை ஈன்றாளென முடிக்க.

வேறு.

என்னக்கேட்டவ்விரக்கமிலாளையும்
தன்னற்கையின்வணங்கினன்றாயென
அன்னப்பேடைசிறையிலதாய்க்கரை
துன்னிற்றென்னவும்வந்ததுதோணியே. (எக)

இழிந்ததாயர்சிவிகையினேறத்தான்
பொழிந்தகண்ணிற்புதுப்பனற்போயினான்
ஒழிந்திலன்குகனும்முட * னேகினான்
கழிந்தனன்பலகாவதங்காலினே. (எஉ)

பரத்தினீக்கும்பரத்துவனென்னும்பேர்
வரத்தின்மிக்குயர்மாதவன்வைகிடம்
அருத்திகூறவணுகினனாண்டவன்
விருத்திவேதியரோடெதிர்மேயினான். (எங)

கக-வது குகப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கஎக

கஉ-வது கிளைகண்டு நீங்குபடலம்.

வந்தமாதவத்தோனையம்மைந்தனும்
தந்தையாமெனத்தாழ்ந்துவணங்கினான்
இந்துமோலியன்னானுமிரங்கினான்
அந்தமில்குணத்தாசிகள்கூறினான். (க)

எடுத்தமாமுடிசூடிநின்பாலியைக்
தடுத்தபேரரசாண்டிலையநீ
முடித்தவார்சடைக்கற்றையைமூசுறா
சுடுத்துநண்ணுதற்குற்றனதியாதென்றான். (உ)

† சினக்கொடுந்திறற்சீற்றவெந்தீயினான்
மனக்கடுப்பினன்மாதவத்தோங்கலை
எனக்கடுத்ததியம்பிலைநீயென்றான்
உனக்கடுத்ததுமன்றுரவோயென்றான். (ங)

‡ மறையின்கேள்வற்குமன்னிளந்தோன்றல்பின்
முறையினீங்கிமுழுநிலங்கொள்கிலேன்

* ஓகினான் திசைச்சொல். † சினம்சீற்றம். ஒருபொருட்பன்மொழி.
‡ மறையின்கேள்வன் ஈண்டுபரத்துவாசனை.

இறைவன்காக்கிலனுமெனில் பாண்டெலாம்
உறைவென்கானத்தொருங்குடனேயென்றான். (௪)

உரைத்தவாசகங்கேட்டலுமுள்ளெழுந்
திரைத்தகாதலிருந்தவத்தோர்க்கெலாம்
குரைத்தமேனியொடுள்ளங்குளிர்ந்ததால்
அரைத்தசாந்துகொண்டப்பியதென்னவே. (௫)

ஆயகாதலொடையனைக்கொண்டுதன்
தூயசாலையுறைவிடந்துன்னினான்
மேயசேனைக்கமைப்பென்விருந்தெனத்
தீயி * னாவுதிசெங்கையினீக்கினான். (௬)

துறந்தசெல்வனினையத்துறக்கந்தான்
பறந்துவந்துபடிந்ததுபல்சனர்
பிறந்து † வேறோருலகுபெற்றாரென
மறந்துவைகினர்முன்னைத்தம்வாழ்வெலாம். (௭)

கந்தவில்லறநந்தினராமென
அந்தரத்தினரம்பையரன்பினர்
வந்துவந்தெதிரேத்தினர்மைந்தரை
இந்துவிற்சுடர்கோயில்கொண்டேகினார். (௮)

கானகன்குரைத்தார்களிர்வானிடை
ஆனகங்கையரும்புனலாட்டினார்
தானமாமணிக்கற்பகந்தாங்கிய
ஊனமின்மலராடையுடுத்தினார். (௯)

கொம்பினின்றுநடங்குறுகொள்கையார்
செம்பொனின் ‡ கலாசிதிருத்தினார்
அம்பரத்தினரம்பையரன்பொடும்
உம்பர்கோனகரின்னமிர்தூட்டினார். (௧௦)

¶ அஞ்சமேத்தவமளியலத்தகப்
பஞ்சமேத்தபரிபுரப்பல்லவ
கஞ்சமேத்தநயனியர்நவ்வியிய்
துஞ்சவத்தனைமைந்தருந்துஞ்சினார். (௧௧)

எந்துசெல்வத்திமையவராமெனக்
கூர்ந்ததெய்வமகளிர்கொண்டாடினார்.

---

* ஆவுதி-வடசொற்சிதைவு. † வேறோருலகு துறக்கம். ‡ கலாசி-கலத்தின் கூட்டம். ¶ அஞ்சமேத்தவமளி-பஞ்சசயனம், அதாவது—இலவம் பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர், அன்னத்தூவி.

*வேந்தராதிசிவிகையின்வீங்குதோள்
மாந்தர்காறும்வரிசைவழாமலே. (கஉ)

மாதர்யாவரும்வானவர்தேவியர்
கோதில்செல்வத்துவைகினர்கொவ்வைவாய்த்
தீதில்செல்வமடந்தையர்சேடியர்
தாதிமாரெனத்தம்பணிகேட்பவே. (கங)

நந்தநந்தவனங்களினுண்மலர்
கந்தமூர்ந்தியகற்பகக்காவினின்
றந்தர்வந்தெனவந்திதன்கைதர
மந்தமந்தமணந்ததுவாடையே (கச)

மான்றளிக்குலநன்மதம்வந்துணைத்
தேன்றளிர்த்தகவளமுஞ்செங்கதிர்
கான்றநெற்றலைக்கற்றையுங்கற்பகம்
ஈன்றளிக்கநுகர்ந்தனயானையே. (கரு)

நாகதர்க்கறநல்குநலத்தநீர்
கரகதக்கரிகாளிமிர்த்துண்டன
மரகதத்தின்கொழுந்தெனவார்ந்தபுல்
குரகதத்தினகுழாங்களுங்கொண்டவே. (கசு)

இன்னரின்னணம்யாவருமிந்திரன்
துன்னுபோகங்கடுய்த்தனர்தோன்றான்
அன்னகாயுங்கிழங்குமுண்டப்பகல்
பொன்னின்மேனிபொடியுறப்போக்கினான். (கஎ)

நீலவல்லிருணீங்கலுநீங்குமம்
மூலமில்கனவிற்றிருமுற்றுற
ஏலுநல்வினைதுய்ப்பவர்க் † கீறசெல்
காலமென்னக்கதிரவன்றோன்றினான். (கஅ)

ஆறரின்றறமாற்றலர்வாழ்வெனப்
பாறிவீந்ததுசெல்வம்பரிந்திலர்
தேறிமுந்தைத்தஞ்சிந்தையராயினார்
மாறிவந்துபிறந்தன்னமாட்சியார். (க௯)

---

* அந்தர்-குறைந்துநின்றது.
† ஈறசெல்காலம்-கடைபோகுங்காலம்.
‡ மாறிவந்து பிறந்தன்னமாட்சியாரென்றுரென்றது பரதன்சேனையை.

வேறு.

காலையென்றெழுந்ததுகண்டுவானவர்
வேலையன்றனிகமேயென்றுவிம்மறச்
சோலையுங்கிரிகளுஞ்சுண்ணமாயெழப்
பாலைசென்றடைந்ததுபரதன்சேனையே. (௨௰)

எழுந்ததுதூளதினெரியும்வெய்யவன்
அழுந்தினனவிப்பரும்வெம்மையாறினன்
பொழிந்தனகரிமதம்பொடிவெங்கானகம்
இழிந்தனவடிகடந்தேறுணுமையே. (௨௧)

வடியுடையயிற்படைமன்னர்வெண்குடை
செடியுடைநெடுநிழல்செய்ததீப்பொதி
படியுடைப்பாலுறைப்பாலைமேலுயர்
கொடியுடைப்பந்தரிற்குளிர்ந்ததெங்குமே. (௨௨)

பெருகியசெல்வநீபிடியென்றான்வயின்
திருகியசீற்றத்தாற்செம்மையாய் * நிறங்
கருகியவண்ணலைக்கண்டகாதலின்
உருகியதளிர்த்தனவுலவையீட்டமே. (௨௩)

வன்றெறுபாலையைமருதமாமெனச்
சென்றதுசித்திரகூடஞ்சேர்ந்ததால்
ஒன்றுரைத்துயிரினு † மொழுக்கநன்றெனப்
பொன்றியபுரவலன்பொருவில்சேனையே. (௨௪)

தூளியின்படலையுந்துரகத்தேரொடு
மூளிருஞ்சினக்கரிமுழங்குமோதையும்
ஆளிருங்குழுவினராரவாரமுங்
கோளிரும்படையிதென்றுணரக்கூறவே. (௨௫)

எழுந்தனனிளையவனேறினிலங்
கொழுந்துயர்ந்தனையதோர்நெடியகுன்றின்மேற்
செழுந்திரைப்பரவையைச்சிறுமைபேசிய
கழுந்துடைவரிசிலைக்கடலைநோக்கினன். (௨௬)

பரதனிப்படைகொடுபோர்கொண்டாண்மறங்
கருதியுட்கிடந்ததோர்கறுவுகாதலான்
விரதமுற்றிருந்தவன்மேல்வந்தானிது
சரதமற்றிலதெனத்தழங்குசீற்றத்தான். (௨௭)

---

* நிறங்கருகிய வண்ணலென்றது பரதனை. † "ஒழுக்க முயிரினு மோம்பப்படும்" என்பவாதலின் உயிரினுமொழுக்க நன்றென்றார்.

குதித்தனன்பாரிடைக்குவடுநீநெறி
மிதித்தனனிராமனை விரைவினெய்தினான்
மதித்திலன் பரதனின்மேல்வந்தான் மதிட்
பதிப்பெருஞ்சேனையின்பரப்பினானென்றான். (உஅ)

கட்டினன் சுரிகையுங்கழலும்பல்கணைப்
புட்டிலும்பொறுத்தனன்கவசம்பூட்டமைத்
திட்டினனெடுத்தனன் வரிவிலேந்தலைத்
தொட்டடிவணங்கிநின் றினையசொல்லினான். (உ௯)

இருமையுமிழந்தவப்பரதனேந்துதேரட்
பருமையுமன்னவன் படைத்தசேனையின்
பெருமையுநின்றொருபின்புவந்தவென்
ஒருமையுங்கண்டினியுவத்தியுள்ளநீ. (௩0)

படரெலாம்படப்படும்பருமயானையின்
திடரெலாமுருட்டினதேருமீர்த்தன
* குடரெலாந்திரைத்தனகுருதியாறுகள்
† கடரெலாமடுப்பனபலவுங்காண்டியால். (௩௧)

கருவியுங்கைகளுங்கவசமார்பமும்
உருவினவுயிரினோடுதிரந்தோய்வில
திரிவனசுடர்க்கணைதிசைக்கையானைகள்
வெருவரச்செய்வனகாண்டிவீரநீ (௩௨)

கோடகத்தேர்படுகுதிரைதாவிய
‡ ஆடகத்தட்டிடையலகையற்றுறு
கேடகத்தடக்கைகள்கவ்விக்கீதத்தின்
நாடகநடிப்பனகாண்டிநாதநீ. (௩௩)

பண்முதிர்களிற்றொடுபரதன்சேனையின்
எண்முதலறுத்துநானிமைப்பினீக்கலால்
விண்முழுதுகுளுக்கவும்வேலையாடையின்
மண்முதுகாற்றவுங்காண்டி § வள்ளனீ (௩௪)

நிவந்தவான்குருதியினீத்தநீந்திமெய்
செவந்தசாதகரொடுசிறுகட்கூளியுங்
கவந்தமுமுலகநின்கையதாயதென்
றுவந்தனகுனிப்பனகாண்டியும்பர்போல். (௩௫)

---

* குடல் குடர், † கடல் கடர் இறுதிநிலைப்போலி. ‡ ஆடகம்-நால்வகைப் பொன்னில் ஒன்று, ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம். § வள்ளல்-வரையாது கொடுப்போன்.

சூழிவெங்கடகரிதுரகராசிகள்
பாழிவன்புயத்திகல்வயவர்பட்டற
வீழிவெங்குருதியாலலைந்தவேலைகள்
ஏழுமொன்றாகிநின்றிரைப்பக்காண்டியால் (௩௬)

ஆளறவலங்குதேரழியவாடவர்
வாளறவரிசிலைதுணியமாக்கரி
தாளறத்தலையறப்புரவிதாளொடுந்
தோளறவடிக்கணைதொடுப்பக்காண்டியால் (௩௭)

தழைத்தவான்சிறையனதசையுங்கவ்வின
அழைத்தவான்பறவைகளலங்குபொன்வடிம்
பிழைத்தவான்பகழிபுக்கிருவர்மார்பிடைப்
புழைத்தவான்பெருவழிபோவக்காண்டியால். (௩௮)

ஒருமகள்காதலினுலகைநோய்செய்த
பெருமகனேவலிற்பரதன்றான்பெறும்
இருநிலமாள்கைவிட்டின்றென்னேவலால்
அருநரகாள்வதுகாண்டியாழியாய். (௩௯)

வையகந்துறந்துவந்தடவிவைகுதல்
எய்தியதுனக்கெனநின்னையீன்றவள்
நைதல்கண்டுவந்தவணவையினோங்கிய
கைகயன்மகள்விழுந்தரற்றக்காண்டியால். (௪௦)

அரஞ்சுடவழனிமிரலங்கல்வேலினாய்
* விரைஞ்சொருநொடியிலிவ்வனிகவேலையை
உரஞ்சுடுவடிக்கணையொன்றில்வென்று † முப்
புரஞ்சுடுமொருவனிற்பொலிவன்யானென்றான். (௪௧)

இலக்குவவுலகமோரேழுமேழுநீ
கலக்குவனென்பதுகருதினாலது
விலக்குவதரிதுவிளம்பல்வேண்டுமோ
‡ புலக்குரித்தொருபொருள்புகலக்கேட்டியால். (௪௨)

நங்குலத்துதித்தவர்நவையுணீங்கினர்
எங்குலப்புறவர்களெண்ணில்யாவரே
தங்குலத்தொருவருக்கருமநீங்கினர்
பொங்குலத்திரளொடும்பொருததோளினாய். (௪௩)

---

* விரைந்து விரைஞ்சு இடைநிலைப்போலி. † முப்புரஞ்சுடுமொருவன் - சிவன், ‡ புலக்குறித்தென்றது மாடக்குச்சித்திரமென்றார்போல.

எனைத்துளமறையவையியம்பற்பாலன
பனைத்திரள்கரக்கரிப்பரதன்செய்கையே
அனைத்திரமல்லனவல்லவல்லது
நினைத்திலையென்வயினேயநெஞ்சினால். (௪௪)

பெருமகனென்வயிற்பிறந்தகாதலின்
வருமெனநினைகையுமண்ணையென்வயின்
தருமெனநினைகையுந்தவிரத்தானையால்
பொருமெனநினைகையும்புலமைப்பாலதோ. (௪௫)

பொன்னொடும்பொருகழற்பரதன்போந்தனன்
தன்னெடும்பெரும்படைநல்கலன்றியே
என்னொடும்பொருமெனவியம்பற்பாலதோ
மின்னொடும்பொருவுறலிளங்கும்வேலினாய். (௪௬)

சேணுயர்தருமத்தின்றேவைச்செம்மையின்
ஆணியையன்னதுநினைக்கலாகுமே
பூணியன்மொய்ம்பினாய்போந்ததீண்டெனைக்
காணியநீயிதுபின்னுங்காண்டியால். (௪௭)

என்றனனிளவலைநோக்கியேகதலும்
நின்றனன்பரதனுநிமிர்ந்தசேனையைப்
பின்றருகென்றுதன்பிரிவில்காதலில்
தன்றுணைத்தம்பியுந்தானுமுந்தினான். (௪அ)

தொழுதுயர்கையினன்றுவண்டமேனியன்
அழுதழிகண்ணினனவலமீதென
எழுதியபடிவமொத்தெய்துவான்றனை
முழுதுணர்சிந்தையான்முடியநோக்கினான். (௪௯)

கார்ப்பொருமேனியக்கண்ணன்காட்டினான்
ஆர்ப்புறுவரிசிலையிளையவையநீ
தேர்ப்பெருந்தானையாற்பரதன்சீறிய
போர்ப்பெருங்கோலத்தைப்பொருந்தநோக்கென. (௫0)

எல்லொடுங்கியமுகத்தினவனின்றனன்
மல்லொடுங்கியபுயத்தவனைதெழும்
சொல்லொடுஞ்சினத்தொடுமுணர்வுசோர்தர
வில்லொடுங்கண்ணணைநீர்நிலத்துவீழவே. (௫க)

கோதறத்தவஞ்செய்துகுறிப்பினெய்திய
நாதனைப்பிரிந்தனனலத்துநீங்கினான்

வேதனைத்திருமகன்மெலிகின்றாள்விடு
தூதெனப்பரதனுந்தொழுதுதோன்றினான். (௫௨)

அறந்தனைநினைந்திலையருளைநீத்தனை
துறந்தனைமுறைமையையென்னுஞ்சொல்லினான்
மறந்தனன்மலரடிவந்துவீழ்ந்தனன்
* இறந்தனன்றாதையையெதிர்கண்டென்னவே. (௫௩)

உண்டுகொலுயிரெனவொடுங்கினானுருக்
கண்டனனின்றனன்கண்ணன்கண்ணெனும்
புண்டரீகம்பொழிபுனலவன்சடா
மண்டிலநிறைந்துபோய்வழிந்துசோரவே. (௫௪)

அயாவுயிர்த்தழுகணீரருவிமார்பிடை
உயாவுறத்திருவுளமுருகப்புல்லினான்
நியாயமத்தனைக்குமோர்நிலயமாகினான்
† தயாமுதலறத்தினைத்தழுவியென்னவே. (௫௫)

புல்லினனின்றவன்புனைந்தவேடத்தைப்
பன்முறைநோக்கினான்பலவுமுன்னினான்
அல்லலினழுங்கினையையவாளுடை
‡ மல்லுயர்தோளினான்வலியனோவென்றான். (௫௬)

அரியவனுரைசெயப்பரதனையநின்
பிரிவெனும்பிணியினாலென்னைப்பெற்றவக்
கரியவள்வரமெனுங்காலனாறனக்
குரிய $ மெய்ந்நிறுவிப்போயும்பரானென்றான். (௫௭)

விண்ணிடையடைந்தனனென்றவெய்யசொல்
புண்ணிடையயிலெனச்செவிபுகாமுனம்
கண்ணொடுமனஞ்சுழல்கறங்குபோலவாய்
மண்ணிடைவிழுந்தனன் ¶ வானினும்பரான். (௫௮)

இருநிலஞ்சேர்ந்தனனிறையுயிர்த்திலன்
உருமினையரவென § வுணர்வினீங்கினான்
அருமையினுயிர்வரவயர்வுயிர்த்தகம்
பொருமினன்பன்முறைபுலம்பினனரோ. (௫௯)

---

* இறந்தனன்றாதை யென்றது பெயரெச்சமுற்று, உண்டான் சாத்தனார்க்குப்போயினா னென்புழிப்போல. † தயா இராமமூர்த்தியும் அறம் பரதாழ்வானுமாகக் கூறினமையால் ஒப்புமைக்கூட்ட வுவமையணி ‡ அரசர்க்குத்தோள் சிறந்தமையின் மல்லுயர்தோளனென்றார் $ மெய்-உருவுடம்பினை. ¶ வானினும் பரனென்றது நிரதிசய இன்பவீட்டுலகமுடையானென்பதனை § உணர்வினீங்கலை உருமினையரவினோடுவமை கூறினார்.

வேறு.

நந்தாவிளக்கனையநாயகனேநானிலத்தோர்
தந்தாய்தனியறத்தின்றாயேதயாநிலையே
எந்தாயிகல்வேந்தரேறேயிறந்தனையே
அந்தோவினிவாய்மைக்காருளரேமற்றென்றான். (௯0)

சொற்பெற்றநோன்பின்றுறையோனருள்வேண்டி
நற்பெற்றவேள்விநவைநீங்கநீயியற்றி
எற்பெற்றாநீபெற்றநின்னுயிர்போய்நீங்கவோ
* கொற்பெற்றவெற்றிக்கொலைபெற்றகூர்வேலோய். (௯௧)

மன்னுயிர்க்குநல்குரிமைமண்பாரநான்சுமக்கப்
பொன்னுயிர்க்குந்தாரோய்பொறையுயிர்த்தவாறிதுவோ
உன்னுயிர்க்குங்கூற்றாயுலகாளவுற்றேனே
மின்னுயிர்க்குந்தீவாய்வெயிலுயிர்க்கும்வெள்வேலோய். (௯௨)

என்பரத்ததாக்கியரசுரிமையிந்தியங்கள்
வெம்பவத்தின்வீயத்தவம்விளைத்தவாறிதுவோ
சம்பரப்பேர்த்தானவனைத்தள்ளிச் † சதமகன்றன்
‡ அம்பரத்தினீங்காவரசளித்தவாழியாய். (௯௩)

வேண்டுந்திறத்தாரும்வேண்டாவரசாட்சி
பூண்டிவ்வுலகுக்கிடர்கொடுத்தபுல்லனேன்
மாண்டுமுடிவதல்லான்மாயாவுடம்பிதுகொண்
டாண்டுவருவதினியார்முகத்தேநோக்கவே. (௯௪)

தேனடைந்தசோலைத்திருநாடுகைவிட்டுக்
கானடைந்தேனென்னத்தரியாதுகாவலநீ
வானடைந்தாயின்னமிருந்தேனான்வாழ்வுகந்தே
ஊனடைந்ததெவ்வருயிரடைந்தவொள்வேலாய். (௯௫)

வண்மைஇயுமானமுமேல்வானவர்க்கும்போக்கிலாத்
திண்மைஇயுஞ்செங்கோனெறியுந்திறம்பாத
உண்மைஇயுமெல்லாமுடனேகொண்டேகினையே
தண்மைஇதகைமதிக்குமீர்தனிக்குடையோய். (௯௬)

என்றெடுத்துப்பற்பலவும்பன்னியிடருழக்குங்
குன்றெடுத்தவொக்குங்குவவுத்தோட் § கோளரியை
வன்றடக்கைத்தம்பியருமற்றுள்ளமன்னவருஞ்
சென்றெடுத்துத்தாங்கினார்மாவசிட்டன்றேற்றினான். (௯௭)

---

* கொல்-சொல்லானஃறிணை. † சதமகனென்றதிந்திரனை. ‡ அம்பரம் துறக்கம், § கோளரியை-சிங்கம்போன்ற இராமமூர்த்தியை.

பன்னரியரோன்பின் பரத்துவனேயா-தியாம்
பின்னுசடையோரும்பே * ருலகமோரேழின்
மன்னவருமந்திரியரெல்லாரும்வந்தடைந்தார்
தன்னுரிமைச்சேனைத்தலைவோருந்தாமடைந்தார். (௬௮)

மற்றும்வாரற்பாலரெல்லாரும்வந்தடைந்தார்
சுற்றுமிருந்தவமைதியினிற்றன்புழக்குங்
கொற்றக்குரிசின்முகநோக்கிக்கோமலரோன்
பெற்றபெருமைத்தவமுனிவன்பேசுவான். (௬௯)

வேறு.

துறத்தலுநல்லறத்துறையுமல்லது
புறத்தொருதுணையிலைப்பொருந்துமன்னுயிர்க்
கிறத்தலும்பிறத்தலுமியற்கையென்பதை
மறத்தியோமறைகளின்வரம்புகண்டநீ. (௭0)

உண்மையில் † பிறவிகளுலப்பில்கோடிகள்
‡ தண்மையில்வெம்மையிற்றழுவினவ்வெனும்
வண்மையைநோக்கியவரியகூற்றின்பால்
கண்மையுமுளதெனக்கருதலாகுமோ. (௭௧)

பெறுவதன்முன்னுயிர்பிரிதல்காண்டியால்
மறுவறுகற்பினில்வையம்யாவையும்
அறுவதினுயிரமாண்டுமாண்டவன்
இறுவதுகண்டவற்கிரங்கல்வேண்டுமோ. (௭௨)

சிலமுந்தருமமுஞ்சிதவில்செய்கையுஞ்
குலமுந்திகிரியுஞ்சொல்லுந்தாங்கிய
$ மூலம்வந்துதவிய ¶ மூவர்க்காயினுங்
காலமென்றொருவலைகடக்கலாகுமோ (௭௩)

கண்முதற்காட்சியகரையினீளத்த
உண்முதற்பொருட்செலாமூற்றமாவன
மண்முதற்பூதங்கண்மாயுமென்றபோ
தென்முதலுயிர்க்குநீயிரங்கல்வேண்டுமோ. (௭௪)

---

* உலகமோரேழ்-எழுதீவுகளாநாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்குகமுகு. † பிரமன்முதல் பிபீலி காந்தங்காறும் என்பார்பிறவிகளுலப்பில் கோடிகள்எனவும் ‡ அப்பிறப்புகள் புண்ணியபாவங்களின் வழிபட்டன் என்பார் தண்மையில் வெம்மையில் தழுவினவெனவும், எல்லாவுயிர்களிடத்தும் இயமன் ஒரு தன்மையன் என்பார் கண்மையு முளதென எனவுங்கூறினர். $ மூலம்-பரமபதநாதனை. ¶ மூவர்-பிரமன், விஷ்ணு, உருத்திரன்

புண்ணியநறுநெயிற்பொருவில்காலமாந்
திண்ணியதிரியினில்விதியென்றீயினால்
எண்ணியவிளக்கவையிரண்டுமெஞ்சினால்
அண்ணலேயவிவதற்கையமாவதோ. (எரு)

இவ்வுலகத்தினுமிடரினேகிடந்
தவ்வுலகத்தினுநரகினாழ்ந்துபின்
வெவ்வினைதுய்ப்பனவிரிந்தயோனிகள்
எவ்வளவிற்செலவெண்ணலாகுமோ. (எசு)

உண்டுகொலிதுவலதுதவிர்செய்வ
தெண்டகுகுணத்தினாய்தாதையென்றலால்
* புண்டரீகத்தனிமுதற்கும்போக்கரு
விண்டுவினுலகிடைவிளங்கினனரோ (எஎ)

அய்யநீயாதொன்றுமவலிப்பாயலை
உய்திறமவற்கினியிதனினூங்குண்டோ
செய்வனவான்முறைதிருத்திச்சேர்ந்தநின்
கய்யினாலொழுக்குதிகடனெலாமென்றான். (எஅ)

† விண்ணுநீர்மொக்குளின்விளியும்யாக்கையை
எண்ணிநீயழுங்குதலிழுதைப்பாலதால்
கண்ணினீருகுத்தலிற்கண்டதில்லைபோய்
மண்ணுநீருகுத்திதாமரைக்கையாலென்றான் (எகூ)

என்றபினேந்தலையேந்திவேந்தரும்
பொன்றிணிந்தனசடைப்புனிதனோடும்போய்ச்
சென்றனர்செறிதிரைப்புனலிற்செய்கென
நின்றனரிராமனுநெறியைநோக்கினான். (அ0)

புக்கனன்புனலின்முழுகிப்போந்தனன்
தக்கநன்மறையவன்சடங்குகாட்டத்தான்
முக்கையினீர்விதிமுறையினீந்தனன்
ஒக்கநின்றுயிர்தொறுமுணர்வுநல்குவான் (அக)

ஆனவன்பிறவுளயாவுமாற்றிப்பின்
மானமந்திரத்தவர்மன்னர்மாதவர்
ஏனையர்பிறர்களுஞ்சுற்றவேகினன்
சானகியிருந்தவச்சாலையெய்தினான். (அஉ)

---

* புண்டரீகத்தனிமுதல் பிரமன்.

† யாக்கை நிலையாமை தோன்ற விண்ணுநீர் மொக்குளின் விளியும்யாக்கையென்றார்.

எய்தியவேலையிற்றமியளெய்திய
வுதயலைநோக்கினன் சாலைநோக்கினன்
கைகளிற்கண்மலர்புடைத்துக்கான்மிசை
ஐயனப்பரதன்வீழ்ந்தரற்றினனரோ. (௮௩)

வெந்துயர்தொடர்தரவிம்மல்விம்மநீர்
உந்தியசிரந்தரமூற்றுமாற்றில
சிந்தியகுரிசிலச்செம்மல்சேந்தகண்
இந்தியங்களிலெறிகடலுண்டென்னவே. (௮௪)

அங்கெடுந்துயருறுமரிய * வீரனைத்
தன்னெடுந்தடக்கையாலிராமன்றாங்கினன்
நன்னெடுங்கூந்தலைநோக்கிநாயகன்
என்னெடும்பிரிவினிலிறந்திட்டானென்றான். (௮௫)

துன்னெனும்நெஞ்சினுளெங்கினுடுவைக்
கண்ணெனுங்கடனெடுங்கலுழிகான்றிட
மண்ணெனுஞ்செவிலிமேல்வைத்தகையினன்
பண்ணெனுங்கிளவியாற்பன்னியேங்கினான். (௮௬)

கன்னகுதிரள்புயக்கணவன்பின்செல
நன்னகரொத்ததுநடந்தகானமும்
மன்னவன்றுஞ்சினனென்றமாற்றத்தால்
அன்னமுந் † துயர்க்கடலடிவைத்தாளரோ. (௮௭)

ஆயவடன்னைநேர்ந்தங்கையேந்தினர்
தாயரின்முனிவர்தந்தருமப்பன்னியர்
தூயநீராட்டினர்துயரநீக்கினர்
நாயகற்சேர்த்தினர்நவையுணீங்கினார். (௮௮)

தேன்றருந்தெரியலச் ‡ செம்மனல்வரை
ஈன்றவர்மூவரோடிருமைநோக்குறுஞ்
சான்றவர்குழாத்தொடுந்தருமநோக்குறுந்
தோன்றல்பாற்சுமந்திரன்றொழுதுதோன்றினான். (௮௯)

வேறு.

எந்தையாண்டையானியம்புவீரென
வந்ததாயர்தம்வயங்குசேவடிச்
சிந்திசின்றனன்சேந்தகண்ணினீர்
முந்தைநான்முகத்தவற்குமுந்தையான். (௯௦)

---

* வீரன் ஈண்டு பரதன். † இதுகாறுந் துயரமென்ப தறியாளாகலின் துயர்க்கடலடிவைத்தா ளென்றார். ‡ செம்மால்-பெருமையிற் சிறந்தோன்.

தாயருந்தலைப்பெய்துதாந்தழீஇ
ஒய்விலன்பினாலுறலோங்கினார்
ஆயசேனையுமணங்கனார்களும்
தீயில்வீழ்ந்துதிமெழுகிற்றேம்பினார். (கக)

பின்னவ்வீரரைப்பெற்றபெற்றியப்
பொன்னனார்களுஞ்சனகன் * பூவையைத்
துன்னிமார்புறத்தொடர்ந்துபுல்லினார்
இன்னல்வேலைபுக்கிழிந்தழுந்துவார். (கஉ)

சேனைவீரருந்திருநன்மாநகர்
மாணமாந்தருமற்றுளோர்களும்
ஏனைவேந்தரும்பிறரும்யாவரும்
கோனையெய்தினார்குறையுஞ்சிந்தையார். (கங)

படஞ்செய்நாகணைப்பள்ளிநீங்கினான்
இடஞ்செய்தொல்குலத்திறைவனாதலால்
தடஞ்செய்தேரினான்றானுநீரினால்
கடஞ்செய்வானெனக்கடலின்மூழ்கினான். (கச)

அன்றுதீர்ந்தபின்னரசவேலையுந்
துன்றுசெஞ்சடைத்தவருஞ்சுற்றமும்
தன்றுணைத்திருத்தம்பிமார்களும்
சென்றுசூழவாண்டிருந்தசெம்மறான். (கரு)

வரதன்றுஞ்சினான்வையமானையால்
சரதநின்னதேமகுடந்தாங்கலாய்
விரதவேடநீயென்சொல்வேண்டுவான்
பரதகூறெனாப்பரிந்துகூறினான். (கசு)

என்றலும்பதைத்தெழுந்துகைதொழா
நின்றுதோன்றலைநெடிதுநோக்கிநீ
அன்றியாவரேயறத்துளோரதர்
பின்றுவாய்கொலாமென்னப்பேசுவான். (கஎ)

மனக்கொன்றுதனவரத்தினின்னையும்
நினக்கொன்றுநிலைநிறுவிநேமியான்
தனக்கொன்றுடருந்தனையனாதலால்
எனக்கொன்றுதவமடுப்பதெண்ணினால். (கஅ)

நோவதாகவிவ்வுலகைநோய்செய்த
பாவகாரியிற்பிறந்தபாவியேன்

* பூவை உவமையாகுபெயராய்ச் சீதைமேல் நின்றது.

சாவதோர்கிலேன் றவஞ்செய்வேனலேன்
யாவனாகியிப்பழிநின்றேறுவேன். (௩௯௯)

நிறையினீங்கியமகளிர்நீர்மையும்
பொறையினீங்கியதவமும்பொங்கருட்
டுறையினீங்கியவறமுந்தொல்லையோர்
முறையினீங்கியவரசின்முந்துமோ. (௪௦௦)

பிறந்து * நீயுடைப்பிரிவினால்பதந்
துறந்துமாதவந்தொடங்குவாயென்றால்
மறந்துநீதியிற்றிறம்பிவாளிற்கொன்
றறந்தின்றாலெனவரசதாள்வேனே. (௪௦௧)

தொகையுலன்பினாலிறைவன்றஞ்சநீ
புகையுங்வெஞ்சுறம்புகுதப்புந்தியால்
வகையில்வஞ்சனாயரசுவெளவயான்
பகைவனேகொலாமிறவுபார்க்கின்றேன். (௪௦௨)

உந்தைதீமையுமூலகுரூதகோய்
தந்ததீவினைத்தாய்செய்தீமையும்
எந்தைநீங்கமீண்டரசுசெய்தெனாச்
சிந்தையாவதுந்தெரியக்கூறினான். (௪௦௩)

சொற்றவாசகத்துணிவுணர்ந்தபின்
இற்றதோவிவன்மனமென்றெண்ணுவான்
வெற்றிவீரயான்விளம்பக்கேளென
முற்றநோகினான்மொழிதன்மேயினான். (௪௦௪)

முறையும்வாய்மையுமுயலுநீதியும்
அறையுமேன்மையோடறனுமாதியாந்
துறையும்யாவையுஞ்சுருதிநூல்விடா
இறைவரேவலாவியைவகாண்டியால். (௪௦௫)

பரவுகேள்வியும்பழுதின்ஞானமும்
விரவுசீலமும்வினையின்மேன்மையும்
உரவிலோய்தொழற்குரியதேவருங்
குரவரேயெனப்பெரிதுகோடியால். (௪௦௬)

அந்தாற்பெறுங்குரவராரெனச்
சிந்தைதேர்வுறத்தெரியநோக்கினால்

---

* நீயுடைப்பதம் மூன்றுசொல் இரண்டுசெந்தியாக்கி முன்னது எழுவாய்த் தொடரும் பின்னது குறிப்பு வினையெச்சத்தொடருமாகக் கொள்க.

தந்தைதாயரென்றிவர்கடாமலால்
எந்தைகூறவேறெவருமில்லையால். (க0எ)

தாய்வரங்கொளத்தந்தையேவலால்
மேயநங்குலத்தருமமேவினேன்
நீவரங்கொளத்தவிர்தனீர்மையோ
ஆய்வரும்புலத்தறிவுமேவினாய். (க0அ)

தனையராயினார்தந்தைதாயரை
வினையினல்லதோரிசையை * வேய்தலோ
நினையலோவிடாநெடியவன்பழி
புனைதலோவையபுதல்வராதரான். (க0கூ)

இம்மைபொய்யுரைத்திவறியெந்தையார்
அம்மைவெம்மைசேர்நரகமாளயான்
கொம்மைவெம்முலைக்குவையின்மைவிவாழ்
செம்மைசேர்நிலத்தரசுசெய்வெனோ. (கக0)

வரனிலுந்தைசொன்மரபினாலுடைத்
தரணிநின்னதென்றியைந்ததன்மையால்
உரனினீபிறந்துரிமையாதலால்
அரசுநின்னதேயாள்கவென்னவே. (ககக)

முன்னர்வந்துதித்துலகமூன்றினும்
நின்னையொப்பிலாநீபிறந்தபார்
என்னதாகில்யானின்றுதந்தனென்
மன்னபோந்து நீமகுடஞ்சூடென. (ககஉ)

மலங்கிவையகம்வருந்துவைகனீ
உலங்கொடோளனக்குறவுசெய்தியோ
கலங்குருவணங்காத்திபோந்தெனைப்
பொலங்குலாவுதாள்பூண்டுவேண்டினான். (ககங)

பசைந்தசிந்தைநீபரிவின்வையமென்
வசஞ்செய்தாலதுமுறைமையோவசைக்
கசைந்தவெந்தையாரருளவன்றநான்
இசைந்தவாண்டெலாமின்றொடேறுமோ (ககச)

வாய்மையென்றுமீதன்றிவையகந்
தூய்மையென்றுமொன்றுண்மைசொல்லுமோ

* வேய்தல்-புனைதல்.

வேறு.

தீய்மைதானதிற்றீர்தலன்றியே
ஆய்மெய்யாகவேமறையலாவதே. (ககரு)

எந்தையேவவாண்டேழொடேழரு
வந்தகாலகான்வனத்துள்வைகநீ
தந்தபாரகந்தன்னைமெய்ம்மையால்
அந்தநாளெலாமாளென்றனையால். (ககசு)

வேறு.

மன்னவனிருக்கவேயுமணியணிமகுடஞ்சூடு
கென்னயானியைந்ததன்றனேயதுமறுக்கவஞ்சி
அன்னதுநினைந்துநீயென்றனையையமறுக்கலாமோ
சொன்னதுசெய்தியையதுயருழந்தயரலென்றான். (ககஎ)

ஒள்ளியோனினையவெல்லாமுணர்த்தலுமுரைக்கலுற்ற
* பள்ளநீர்வெள்ளமன்னபரதனைவிலக்கிப்பண்டு
தெள்ளியோர்குலத்துச்செய்கைசிக்கறச்சிந்தைநோக்கி
வள்ளியோய்கேட்டியென்றுவசிட்டமாமுனிவன்சொன்னான். (ககஅ)

வேறு.

ஙளூகன்புனலுணின்றரியொர்கேழலாய்
† இளையெனுந்திருவினையேந்தினனரோ
உளைவரும்பெருமையோரெயிற்றினுட்புரை
வளரிளம்பிறையிடைமறுவிற்றோன்றவே. (ககக)

வேறு.

ஆதியவமைதியினிறுதியைம்பெரும்
பூதமும் ‡ வெளியொழித்தெவையும்புக்கபின்
நாதனவ்வகன்புனல்கிநண்ணருஞ்
சோதியாந்தன்மையிற்றுயிறன்மேயினான். (கஉ0)

ஏற்றவித்தன்மையினமரர்க்கின்னமு
தூற்றுடைக்கடல்வணனுந்தியுந்திய
§ நூற்றிதழ்க்கமலத்தினெய்தின்யாவையும்
தோற்றுவித்துதவிடமுதல்வன்றோன்றினான். (கஉக)

---

* வெள்ளம் பள்ளத்தடங்கல்போன்று எல்லாநற்குணங்களும் தன்னகத்தடங்கலி னங்ஙனங் கூறினார். மேட்டினின்று பள்ளத்தில் விழும் வெள்ளம் கீழ்மேலாதல்போல் அவனிலை துன்பத்தால் கீழ்மேலாய்நிற்றலிற் பள்ளநீர் வெள்ளமன்ன பரதன் என்றார். † இளை-இளையென்னும் பூப்பிராட்டி. ‡ வெளி-ஆகாயம். § சகத்திரதளமென்னும் வடமொழிப்பெயர் பற்றி நூற்றிதழ்த்தாமரையென்றார்.

அன்றவனுலகினையளிக்கவாகிய
துன்றனிக்குலமுதலுள்ளவேந்தர்கள்
இன்றளவினுமுறைறயிகந்துளாரிலை
ஒன்றளதுரையினமுணரக்கேட்டியால். (க௨௨)

இதவியலியற்றிய * குரவர்யாரினும்
மதவியல்களிற்றினாய்மறவில்விஞ்சைகள்
பதவியவிருமையும்பயக்கப்பண்பினால்
உதவியவொருவனேயுயருமென்பரால். (க௨௩)

என்றலால்யானுனையெடுத்துவிஞ்சைகள்
ஒன்றலாதனபலவுதவிற்றுண்மையால்
அன்றெனாதின்றெனதாணையையநீ
நன்றபோந்தளியுனக்குரியநாடென்றான். (க௨௪)

கூறியமுனிவனைக்குவிந்ததாமரை
சிறியகைகளாற்றொழுதுசெங்கணான்
ஆறிய † சிந்தனையறிஞவொன்றுரை
கூறுவதுளதெனக்கூறன்மேயனான். (க௨௫)

சான்றவராகதன்குரவராகதாய்
போன்றவராகமெய்ப்புதல்வராகதான்
தேன்றருமலருளான்சிறுவசெய்வனென்
றேன்றபின்னவ்வுரைமறுக்குமீட்டதோ. (க௨௬)

தாய்பணித்துவந்தனதந்தைசெய்கென
ஏயவெப்பொருள்களுமிறைஞ்சிமேற்கொளாத்
தீயவப்புலையனிற்செய்கைதேர்கிலா
நாயெனத்திரிவதுநல்லதல்லதோ. (க௨௭)

முன்னுறப்பணித்தவர்மொழியையானெனச்
சென்னியிற்கொண்டதுசெய்வேனென்றதின்
பின்னுறப்பணித்தனைபெருமையோவெனக்
கென்னினிச்செய்வதையுரைசெயீங்கென்றான் (க௨௮)

முனிவனுமுரைப்பதோர்முறைமைகண்டிலெம்
இனியெனவிருந்தனனிளையமைந்தனும்
அனையதேலாள்பவராள்கநாடுநான்
பணிபடர்காடுடன்படர்தன்மெய்யென்றான். (க௨௯)

---

* குரவர்-அரசன், உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன்.
† சிந்தனையடங்கியோனாகலின் ஆறிய சிந்தனை என்றார்.

அவ்வழியிமையவரறிந்துகூடினர்
இவ்வழியிராமனையிவன்கொண்டேகுமேல்
செவ்வழித்தன்றாகுஞ்செயலென்றெண்ணினர்
கவ்வையர்விசும்பிடைக்கழறன்மேயினர். (கநo)

எத்தரும்பெருங்குணத்திராமனிவ்வழி
* போத்தருந்தாதைசொற்புரக்கும்பூட்சியான்
ஆத்தவாண்டேழிரண்டேழுமந்நிலம்
காத்தலுன்கடனிவைகடமையென்றனர். (கநக)

வானவருரைத்தலுமறுக்கற்பாலதன்
றியானுனையிரந்தனனினியென்னுணையால்
ஆனதோரமைதியினளித்திபாரெனாத்
தானவன்றனைமலர்த்தடக்கைபற்றினன். (கநஉ)

ஆமெனிலேழிரண்டாண்டிலை ; நீ
நாமநீர்நெடுநகர்நண்ணிநானிலம்
கோமுறைபுரிகிலையென்னிற்கூரெரிச்
சாமிதுசரதநின்னுணைசாற்றினேன். (கநந)

என்பதுசொல்லியபரதன்யாதுமோர்
துன்பிலவனதுணிவைநோக்கினன்
அன்பினனுருகினனன்னதாகென்றான்
† தன்புகழ்தன்னினும்பெரியதன்மையான். (கநச)

விம்மினன்பரதனும்வேறுசெய்வதொன்
றின்மையினரிதெனவெண்ணியேங்குவான்
செம்மையின்றிருவடித்தலந்தரீகென
எம்மையுந்தருவனவிரண்டுநல்கினன். (கநரு)

அடித்தலமிரண்டையுமழுதகண்ணினன்
முடித்தலமிவையெனமுறையிற்சூடினன்
படிதலத்திறைஞ்சினன்பரதன்போயினன்
பொடித்தலமிலங்குறுபொலங்கொண்மேனியான் (கநசு)

ஈன்றவர்முதலியவெண்ணில்சுற்றமும்
சான்றவர்குழுவொடுதவத்துளோர்களும்
வான்றருசேனையுமற்றுஞ்சுற்றுற
மூன்றுநூல்கிடந்தகோண்முனியும்போயினன். (கநஎ)

---

* மொய்ம்மையில்லானென்பது மடம் போத்தருந்தாதை என்றார்.
† புகழினுங் குணங்கலால் பெரியனாகலின் தன்புகழ் தன்னினும்பெரியதன்மையானென்றார்.

பண்டைநூறெரிபரத்துவனும்போயினன்
மண்டுநீர்நெடுநகர்மாந்தர்போயினர்
விண்டுறைதேவரும்விலகிப்போயினர்
தொண்டறன்றுணையாற்குகனும்போயினன். (கஙஅ)

பாதுகந்தலைக்கொடுபரதன்பைம்புனல்
மோதுகங்கையின்கரைகடந்துமுந்தினன்
போதுகுங்கடிபொழிலயோத்திபுக்கிலன்
ஓதுகங்குலினெடிதுநக்கம்நீங்கினன். (கஙகூ)

†நந்தியம்பதியிடைநாதன்பாதுகம்
செந்தனிக்கோன்முறைசெலுத்தச்சிந்தையான்
இந்தியங்களையவித்திருந்தன்மேயினன்
அந்தியும்பகலுநீராருதகண்ணினன். (கசO)

‡குன்றினிலிருந்தனனென்னுங்கொள்கையான்
நின்றவர்களிவராளேயத்தாலெனுத்
தன்றுணைத்தம்பியுந்தானுந்தையலும்
தென்றிசைநெறியினைச்சேறன்மேயினன். (கசக)

கஉ - வது கிளைகண்டுநீங்குபடலம் முற்றிற்று.

ஆ௲ திருவிருத்தம்-கஉகஉ.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாவது

அயோத்தியாகாண்டம்.

முற்றிற்று.

---

* பண்டைநூல்-முதனூல் அதாவது வேதம். † நந்தியம்பதி-நந்திக்கிராமம் ‡ குன்றுஎண்டு சித்திரகூடத்தை.

அயோத்தியாகாண்டம்.

படலங்களின் அட்டவணை.

௧-வது.	மந்திரப்படலம்.	பக்கம்.	௩
௨. ,,	மந்தரைசூழ்ச்சிப்படலம்	,,	௧௧
௩. ,,	கைகேசிசூழ்வினைப்படலம்.	,,	௨௭
௪. ,,	நகர்நீங்குபடலம்.	,,	௪௨
௫. ,,	தைலமாட்டுபடலம்.	,,	௭௨
௬. ,,	கங்கைப்படலம்.	,,	௮௪
௭. ,,	வனம்புகுபடலம்.	,,	௯௩
௮. ,,	சித்திரகூடப்படலம்.	,,	௧௦௦
௯. ,,	பள்ளியடைப்படலம்	,,	௧௦௭
௧௦. ,,	ஆற்றுப்படலம்	,,	௧௨௫
௧௧. ,,	குகப்படலம்.	,,	௧௩௩
௧௨. ,,	கிளைகண்டுநீங்குபடலம்	,,	௧௪௨

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

மூன்றவது,

ஆரணியகாண்டம்.

தெய்வப்புலமைக்

கம்பநாட்டாழ்வார்

அருளிச்செய்தது.

இஃது

சென்னை இராசதானி வித்தியாசாலைத்

தமிழ்த்தலைமைப் புலமை நடாத்திய

இயற்றமிழாசிரியர்

கோ - இராசகோபால பிள்ளையவர்கள்

மாணாக்கரும்

சென்னை வேப்பேரி எஸ் - பி - ஜி - ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதருமாகிய

திருமயிலை - சண்முகம்பிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு

பிருங்கிமாநகரம்

வேம்புலிமுதலியாரவர்கள் குமாரர்

நமசிவாயமுதலியாரவர்களால்

தமது

சென்னை - சூளை

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

ஹரிஓம்.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

மூன்றாவது.

ஆரணியகாண்டம்.

முதலாவது விராதன்வதைப்படலம்.

காப்பு.

பேதியாதுநிமிர்பேதவுருவம்பிறழ்கிலா
ஓதியோதியுணருந்தொறுமுணர்ச்சியுதவும்
வேதம்வேதியர்விரிஞ்சன்முதலோர் * தெரிகிலா
ஆதிதேவரவரெம்மறிவினுக்கறிவரோ. (௧)

நூல்.

பூத்திருத்தியவ்விருந்தனையமொய்ந்நகையொடும்
சித்திரக்குனிசிலைக்குமரர்சென்றணுகினார்
அத்திரிப்பெயரருந்தவனிருந்தவமைதி
பத்திரப்பழுமரப்பொழிறவன்ற † பழுவம். (௨)

திக்குறுஞ்செறிபரந்தெரியநின்றதிறள்பொற்
கைக்குறுங்கண்மலைபோற்குமரர்காமமுதலா
முக்குறும்பறவெறிந்தவினைவான்முனிவனைப்
புக்கிறைஞ்சினரருந்தவனுவந்துபுகலும். (௩)

குமரர்நீரிவணடைந்துதவுகொள்கையெளிதோ
அமரர்யாவரொடுமெவ்வுலகும்வந்தவளவே
எமரின்யார்தவமுயன்றவர்களென்றருகினன்
தமரெலாம்வரவுகந்தனையதானமுனிவன். (௪)

அன்னமாமுனியொடன்றவனுறைந்தவனரும்
பன்னிகற்பி ‡ னநசூயைபணியாலணிகலன்
துன்னுதூசினொடுசந்திவைசுமந்தசனகன்
பொன்னொடேகியுயர்தண்டகவனம்புகுதலும். (௫)

---

* வெளியிடாவென்றும்பாடம். † பழுவம்-ஆச்சிரமம்.

‡ அநசூயை-அழுக்காறில்லாதவள்.

எட்டொடெட்டுமதமாகரியிரட்டியரிமா
வட்டவெங்கண்வரையாளிபதினாறுவகையின்
கிட்டவிட்டிடைகிடந்தனசெறிந்தவொருகை
தொட்டமுத்தலையயிற்றொகைமிடற்கழுவொடே. (௬)

செஞ்சுடர்ச்செறிமயிர்ச்சுருள்செறிந்தசெனியன்
நஞ்சுதட்டுருவுபெற்றிடைநடந்ததெனமா
மஞ்சுசுற்றியவயங்குகிரிபாதவிசையில்
பஞ்சுபட்டதுபடப்படியின்மேன்முடுகியே. (௭)

புண்டுளங்கியனகண்கள்கனல்பொங்கமழைசூழ்
விண்டுளங்கிடவிலங்கல்குலுங்கவெயிலும்
கண்டுளங்கதிர்குறைந்திடநெடுங்கடல்சுலாம்
மண்டுளங்கவய * வந்தகன்மனந்தளரவே. (௮)

புக்குவாளரிமுழங்குசெவியின்பொறியுறப்
பக்கமின்னுமணிமேருசிகரங்குழைபடச்
செக்கர்வான்மழைநிகர்த்தவெதிருற்றசெருவத்
துக்கவீரருதிரத்தினொளிர்செச்சையினொடே (௯)

படையொடாடவர்கள்பாய்புரவிமால்களிறுதேர்
கடையவாளரிகள்கோளுழுவைநண்ணியவெலாம்
அடையவாரியரவாலசையநேகவிதவந்
தொடையன்மாலைதுயல்வந்துலவுதோள்பொலியவே. (௧௦)

குன்றுதின்றனவெனக்குமுறுகோயமதமா
ஒன்றினொன்றிடையடுக்கினதடக்கையுதவப்
பின்றுகின்றபிலனிற்பெரியவாயினொருபால்
மென்றுதின்றுவிளியாதுவிரியும்பசியொடே. (௧௧)

பன்னகாதிபர்பணாமணிபறித்தவைபகுத்
தென்னவிண்ணவர் † விமானமிடையிட்டரவிடைத்
தன்னுகோளினொடுதாரகைதொடுத்ததழனிச்
சன்னவீரமிடைமின்னுதடமார்பினொடுமே. (௧௨)

பம்புசெக்கரெரியொக்குமயிர்பக்கமெரியக்
கும்பமுற்றவுயர்நெற்றியின்விசித்தொளிகுலா
உம்பருக்கரசன்மால்கரியினோடையெயிறின்
‡ கிம்புரிப்பெரியதோள்வளையொடுங்கினரவே. (௧௩)

---

* அந்தகன்-எல்லாப்பிராணிகளுக்கும் முடிவைச்செய்பவன்.
† விமானம்-தேவரூர்தி. ‡ கிம்புரி-யானைக்கொம்பிற்பூண்.

தங்குதிண் டரியகாளிமைதழைந்துதவழப்
பொங்குவெங்கொடுமையென்பதுபுழுங்கியெழுமா
மங்குபாதகம்விடங்கனல்வயங்கிமிரக்
கங்குபூசிவருகின்றகலிகாலமெனவே. (கச)

செற்றவாளுழுவைவன்செறியதட்டிருகுறச்
சுற்றிவாரணவுரித்தொகுதிநீவிதொடரக்
கொற்றமேவுதிசையானையின்மணிக்குலமுடைக்
கற்றைமாசுணம்விரித்தவரிகச்சொளிரவே. (கரு)

செங்கணங்கவரவின்பொருவில்செம்மணிவிராய்
வெங்கணங்கவலயங்களும்விலங்கவிரவிச்
சங்கணங்கிய * சலஞ்சலமலம்புதவளக்
கங்கணங்களுமிலங்கியகரம்பிரழவே. (கசு)

முந்துவெள்ளிமலைபொன்னின்மலையோடுமுணரப்
பந்துமுந்துகழ்பாடுபடலூடுபடர்வோன்
வந்துமண்ணினிடைவோனெனினும்வானிமையோர்
சிந்தையுள்ளும்விழியுள்ளுமுளனென்றதிறலோன், (கஎ)

பூதமத்தனையுமோர்வடிவுகொண்டுபுதிதென்
றோதவொத்தவுருமத்தனுருமொத்தகுரலன்
காதலித்தயனளித்தகடையிட்டகணிதப்
பாதலக்கமதவெற்பிடைபடைத்தவலியான். (கஅ)

சாரவந்தவல்விலங்கினமரக்கடரையில்
பேரவன்கிரிபிளந்துகவளர்ந்திகல்பெரு
வீரவெஞ்சிலையினோரெதிர்விராதனெனுமக்
கோரவெங்கணுருமேறனகொடுந்தொழிலினன். (க௯)

நில்லுநில்லுமெனவந்துநிணமுண்டகெடுவெண்
பல்லும் † வல்லெயிறுமின்னுபகுவாய்முழைதிறந்
தல்லிபுல்லுமலரன்னமனையாளையொருகைச்
சொல்லுமெல்லையின்முகந்துயர்விசும்புதொடர. (உ0)

காளைமந்தாதுகண்டுகதம்வந்துகதுவத்
தோளின்வெஞ்சிலையிடங்கொடுதொடர்ந்துசுடர்வாய்
வாளிதங்கியவலங்கையவஞ்சனையடா
மீளுகெங்கறியென்பதுவிளம்பவவனும் (உக)

---

* சலஞ்சலம் வலம்புரி ஆயிரம் சூழ்ந்தசங்கு.

† வய்லெயிறு-வக்கிரதந்தம்.

ஆதிநான்முகன்வரத்தினெனதாவியகலேன்
ஏதியாவதுவுமின்றியுலகியாவுமிகலில்
சாதியாதனவுமில்லையுயிர்தந்தனனடா
போதிர்மாதிவளையுந்தியினிதென்றுபுகல. (௨௨)

வீரனுஞ்சிறிதுவெண்முறுவல்வெண்ணிலவுகப்
போரறிந்திலனிவன்றனதுபொற்புமுரணும்
தீருமெஞ்சியெனநெஞ்சினுறுசிந்தைதெரியாப்
பாரவெஞ்சிலையினாணொலிபடைத்தபொழுதே. (௨௩)

இலைகொள்வேலடலிராமனெழுமேகவுருவன்
சிலைகொணாணெடியகோதையொலியேறுதிரைநீர்
மலைகணீடுதலநாகர்பிலம்வானமுதலாம்
உலகமேழுமுருமேறெனவொலித்துரறவே. (௨௪)

வஞ்சகக்கொடியபூசைநெடுவாயின்மறுகும்
பஞ்சரக்கிளியெனக்கதறுபாவையைவிடா
நெஞ்சுளுக்கினனெனச்சிறிதுநின்றுநினையா
அஞ்சனக்கிரியனானெதிரரக்கனழலா. (௨௫)

பேய்முகப்பிணியறப்பபகைஞர்பெட்பினுதிரம்
தோய்முகத்ததுகனத்ததுசுடர்க்குதிரையின்
வாய்முகத்திடைநிமிர்ந்துவடவேலைபருகும்
தீய்முகத்திரிசிகைப்படைதிரித்தெறியவே. (௨௬)

திசையும்வானவருநின்றதிசைமாவுமுலகும்
அசையுமாலமெனவன்னவயின்மின்னிவரலும்
வசையின்மேருமுதன்மால்வரைகளேழின்வலிசால்
விசையவார்சிலையிராமனொருவாளிவிடவே. (௨௭)

இற்றதின்றொடிவ்வரக்கர்குலமென்றுபகலே
வெற்றவிண்ணினிடைநின்றுநெடுமீன்விழுவபோல்
சுற்றமைந்தசுடரெஃகமதிரண்டுதுணியா
அற்றகண்டமவையாசையினதந்தமுறவே. (௨௮)

சூறொடுங்கயிறணிந்திறுதல்கண்டுசிறிதும்
போரொடுங்கிலன்மறங்கொடுபுழுங்கிநிருதன்
பாரொடுங்குறுகரங்கொடு * பருப்பதமெலாம்
வேரொடுங்கடிதெடுத்தெதிர்விசைத்துவிடலும். (௨௯)

வட்டமிட்டகிரியற்றுகவயங்குவயிரக்
கட்டமைந்தகதிர்வாளியெதிரேகடவலால்

* பருப்பதம்-பர்வதமென்பதன்சிதைவு.

விட்டவிட்டமலைமீளவவன்மெய்யில்விசையால்
பட்டபட்டவிடமெங்குமுடலூறுபடலும். (௩௦)

ஓமராமரையொருங்குமுணர்வோருணர்வுறும்
நாமராமவரைநல்லறநிறுத்தநணுகித்
தாமராவணைதுறந்துதரைநின்றவரையோர்
மா * மராமரமிறுத்ததுகொடெற்றவராலும். (௩௧)

எறுசேவகனிரண்டினெடிரண்டுகணையால்
வேறுவேறுதுணிசெய்ததுவிழுத்துவிசையால்
மாறுமாறுநிமிர்தோளிடையுமார்பினிடையும்
ஆறுமாறுமயில்வெங்கணையழுத்தவவனும். (௩௨)

மொய்த்தமுட்டனதுடற்றலைதொளைப்பமுடுகிக்
கய்த்தலத்தினிமிரக்கடிதுகன்றிவிசிறும்
மெய்த்தமெய்ப்பெரியகேழலெனவெங்கும்விசையில்
தய்த்தவக்கணைதெறிப்பமெய்சிலிர்த்துதறவே. (௩௩)

எரியின்வார்கணையிராமன்விடவெங்குநிலையா
துருவியோடமறமோடுதல்செயாவுணர்வினன்
அருவிபாயும்வரைபோல்குருதியாறுபெருகிச்
சொரிய † வேகவலிகெட்டுணர்வுசோர்வுறுதலும். (௩௪)

மெய்வரத்தினன்மிடற்படைவிடப்படுகிலன்
செய்யுமற்றுமிகலென்றுசினவாளுருவிவன்
கய்துணித்துமெனமுந்துகடுகிப்படர்புயத்
தெய்வின்மற்பொருவுதோளிருவரேறநிருதன். (௩௫)

உண்டெழுந்தவுணர்வவ்வயினுணர்ந்துமுடுகித்
தண்டெழுந்தனையதோள்கொடுசுமந்துதழுவிப்
பண்டெழுந்தனதுவன்கதிபதிற்றின்முடுகிக்
கொண்டெழுந்தனன்விழுந்தழிகொழுங்குருதியான். (௩௬)

முந்துவான்முகடுறக்கடிதுமுட்டிமுடுகிச்
சிந்துசோரியொடு ‡ சாரிகைதிரிந்தனனரோ
வந்துமேருவினைநாடொறும்வலஞ்செய்துழல்வோர்
இந்துசூரியரையொத்திருவரும்பொலியவே. (௩௭)

சுவணவண்ணனெடுகண்ணனுறைதோளன்விசைதோ
அவணவிண்ணிடைநிமிர்ந்துபடர்கின்றவனறம்

---

* மராமரம்-ஆச்சாமரம். † வேகவலி-வேகமும் வலியுமென்றுமாம்.
‡ சாரிகை-மண்டலாகாரமானகதி.

சிவணதன்னசிறைநமுன்னவரொடேகுசெலவத்
* துவணனென்னுநெடுமன்னவனுமொத்தனனரோ. (௩௮)

மாதயாவுடையதன்கணவன்வஞ்சன்வினையில்
போதலோடுமலமர்ந்தனள்புலர்ந்துபொடியில்
கோதையோடுமொசிகொம்பெனவிழுந்தனள்குலச்
சீதைசேவல்பிடியுண்டசிறையன்னமனையாள். (௩௯)

பின்னையேதுமுதவுந்துணைபெறாளுரைபெறாள்
மின்னையேயிடைநுடங்கிடவிரைந்துதொடர்வாள்
அன்னையேயனையவன்பினறவோர்கடமைவிட்
டென்னையேநுகர்தியென்றனளெழுந்துவிழுவாள். (௪௰)

அழுதவாய்குழறியாருயிரழுங்கியலையா
எழுதுபாவையனையாணிலையுணர்ந்திளையவன்
தொழுதுதேவிதுயர்கூரவிளையாடறொழிலோ
பழுதுவாழியெனவாழிமுதல்வன்பகர்வுறும். (௪௧)

ஏகநின்றநெறியெல்லைகடிதேறியினிநிற்
போகனன்றெனநினைந்தனனிவன்பொருவிலோய்
சாகவின்றுபொருளன்றெனநகுந்தகைமையோன்
வேகவெங்கழலினுந்தலும்விராதன்விழவே. (௪௨)

தோளிரண்டும்வடிவாள்கொடுதுணித்துவிசையால்
மீளிமொம்பினர்குதித்தலும்வெகுண்டுபுருவத்
தேளிரண்டுநெரியச்சினவுசெங்கணரவக்
கோளிரண்டுசுடருந்தொடர்வதிற்குறுகலும். (௪௩)

புண்ணிடைப்பொழியுயிர்ப்புனல்பொலிந்துவரவும்
விண்ணிடைப்படர்தல்விட்டெழுவிகற்பநினையா
எண்ணுடைக் † குரிசிலெண்ணியிளையோயிவனையிம்
மண்ணிடைக்கடிதுபொத்துதல்வழக்கெனலுமே. (௪௪)

மதநல்யானையனையானிலம்வகிர்ந்தகுழிவாய்
‡ நதமுலாவுநளிநீர்வயினழுந்தநவைதீர்
அதவமாய்நறுநெயுண்டுலகிலன்பர்கருதிற்
றுதவுசேவடியினாலமனுந்துதலுமே. (௪௫)

---

* உவணன் - ஸுபர்ணனென்பதன் சிதைவு; அழகிய சிறகுடையவனென்று பொருள். † குரிசில் - பெருமையிற்சிறந்தோன்; ஆண்பாற்சிறப்புப்பெயர்.

‡ நதம் - மேற்குநோக்கி செல்லுமாறு; ஈண்டு தபதி, நருமதை இரண்டிலொன்றைக் கொள்ளலாம்.

பட்டதன்மையுமுணர்ந்துபடர்சாபமிடமுன்
கட்டவன்பிறவிதந்தகடையானவுடறான்
விட்டுவிண்ணிடைவிளங்கினன்விரிஞ்சனெனவோர்
முட்டைதந்ததனில்வந்தமுதன்முன்னவனினே. (௪௬)

பொறியினொன்றியயல்சென்றுதிரிபுந்தியுணரான்
நெறியினொன்றிநிலைநின்றநினைவுண்டதனினும்
பிறிவிலன்புதனிபண்டுடையபெற்றிதனினும்
அறிவுவந்துதவநம்பனையறிந்துபகர்வான். (௪௭)

வேறு.

வேதங்களறைகின்றவுலகெங்கும்விரிந்தனவுன்
பாதங்களிவையென்னிற்படிவங்களெப்படியோ
ஓதங்கொள்கடலன்றி * யொன்றினோடொன்றொவ்வாப்
பூதங்கடொறுமுறைந்தாலவையுன்னைப்பொறுக்குமோ. (௪௮)

கடுத்தகராங்கதுவநிமிர்கையெடுத்துமெய்கலங்கி
உடுத்ததிசையனைத்தினுஞ்சென்றொலிகொள்ளவுறுதுயரால்
அடுத்தபெருந்தனிமூலத்தரும்பரமேபரமேயென்
றெடுத்தொருவாரணமழைப்பநீயோவன்றேனென்றாய். (௪௯)

புறங்காணவகங்காணப்பொதுமுகத்தினருணோக்கம்
இறங்காததாமரைக்கணெம்பெருமா அனியம்புதியால்
அறங்காத்தற்குனக்கொருவராருமொருதுணையின்றிக்
கறங்காகுமெனத்திரியநீயேயோகடவாய்தான். (௫௦)

துறப்பதேதொழிலாகத்தோன்றினோர்தோன்றியக்கால்
மறப்பரோதம்மையதுவன்றாகின்மற்றவர்போல்
பிறப்பரோவெவர்க்குந்தாம்பெற்றபதம்பெறலரிதோ
இறப்பதேபிறப்பதேயெனும்விளையாட்டினிதுகந்தோய். (௫௧)

பனிநின்றபெரும்பிறவிக்கடல்கடக்கும்படிபற்றி
நனிநின்றசமயத்தோரெல்லாருநன்றென்னத்
தனிநின்றதத்துவத்தின்றகைமூர்த்திநீயாகில்
இனிநின்றமுதற்றேவரென்கொண்டென்செய்வாரே. (௫௨)

ஓயாதமலரயனேமுதலாகவுளராகி
மாயாதவானவர்க்குமற்றொழிந்தமன்னுயிர்க்கும்

---

* பூதங்கள்-பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன. நிலம் நிலையாயிருத்தலும், கந்தமுடையதாதலும்; நீர்-பாய்ந்தோடுதலும், குளிர்ந்தபரிசமுடையதாதலும்; தீ-மேல்நோக்கி எரிதலும், சுடும்பரிசமுடையதாதலும்; விசும்பு-எங்கும் பரவியிருத்தலும், சப்தகுணமுடையதாதலுமாகிய தன்மைவேறுபாடுகளைப்பற்றி ஒன்றினோடொன்றொவ்வாப்பூதங்கள் என்றார்

நீயாகின்முதற்றாதைநெறிமுறையாலீன்றெடுத்த
தாயாவார்யாவரேதருமத்தின்றனிமூர்த்தி. (ருங)

நீயாதிபரம்பரமுநின்னவேயுலகங்கள்
ஆயாதசமயமுநின்னடியவேயயலில்லை
தீயாரினொளித்தியால்வெளிநின்றாற்றீங்குண்டோ
வீயாதபெருமாயைவிளையாட்டும்வேண்டுமோ. (ருச)

தாய்தன்னையறியாதகன்றில்லைதன்கன்றை
யாயுமறியும்முலகின்றாயாகினைய
நீயறிதியெப்பொருளுமவையுன்னைநிலையறியா
மாயையிதுவென்கொலோவாராதேவரவல்லாய். (ருரு)

பன்னலாமென்றலகம்பலபலவுநினையுமால்
உன்னலாற்பெருந்தெய்வமுயர்ந்துளோரொழுக்கன்றே
அன்னவூர்தியைமுதலாமந்தணர்மாட்டருந்தெய்வம்
நின்னலாவில்லாமைநெறிநின்றார்நினையாரோ. (ருசு)

பொருவரியசமயங்கள்புகல்கின்றபுத்தேளிர்
இருவினையுமுடையார்போலருந்தவநின்றியற்றுவார்
திருவுறையுமணிமார்பநினக்கென்னைசெயற்பால
ஒருவினையுமில்லார்போலுறங்குதியாலுறங்காதாய். (ருஎ)

அரவாகிச்சுமத்தியாலயிலெயிற்றினேந்துதியால்
ஒருவாயின்விழுங்குதியாலோரடியாலொளித்தியால்
திருவானநிலமகளையிஃதறிந்தாற்சீறாளோ!
மருவாருந்துழாயலங்கன்மணிமார்பின்வைகுவாள். (ருஅ)

மெய்யைத்தான்சிறிதுணர்ந்துநீவிதித்தமன்னுயிர்கள்
உய்யத்தானாகாதோவுனக்கென்னகுறையுண்டோ
வய்யத்தார்வானத்தார்மழுவாளிக்கன்றளித்த
* அய்யத்தாற்சிறிதையந்தவிர்ந்தாருமுளரையா. (சுகூ)

அன்னமாயருமறைகளறைந்தாய்நீயவையுன்னை
முன்னமாரோதுவித்தாரெல்லாருமுடிந்தாரோ?
பின்னமாயொன்றாதல்பிறிந்தேயோபிறியாதோ!
என்னமாமாயமிவையேனமாய்மண்ணிடந்தாய்!. (சு0)

ஒப்பிறையும்பெறலறியவொருவாமுன்னுவர்துறையும்
அப்புறையுநேர்ந்தடியேனருந்தவத்தாலணுகுறலால்
இப்பிறவிக்கடல்கடந்தேனினிப்பிறவேனிருவினையும்
துப்புறழுநீர்த்தசுடர்த்திருவடியாற்றுடைத்தாய்நீ. (சுக)

* ஐயம்-பிச்சையும் சந்தேகமாதல் "ஐயமே பிச்சையேற்கு மோடறு மானம் பிச்சை" என்பதனாலறிக.

வேறு.

இற்றெலாமியம்பினான்
நிற்றலோடுநீயிவ்வா
றுற்றவாறுணர்த்தெனா
வெற்றியான்விளம்பினான். (சுஉ)

கள்ளமாயவாழ்வெலாம்
விள்ளஞானம்வீசுதாள்
வள்ளல்வாழிகேளெனா
உள்ளவாறுணர்த்தினான். (சுங)

இம்பருற்றிதெய்தினேன்
வெம்புவிற்கைவீரபேர்
தும்புருத் * தனதன்சூழ்
அம்பரத்துளேனரோ. (சுச)

ஆடரம்பைநீடரங்
கூடுகின்றபாடலால்
ஊடுவந்துகூடவிக்
கூடுவந்துகூடினேன். (சுரு)

கரக்கவந்தகாமநோய்
துரக்கவந்ததோமினால்
இரக்கமின்றியேவினான்
அரக்கன்மைந்தனாயினேன். (சுசு)

அன்னயக்கணாதியாய்
இன்னதீருமீகையான்
நின்னதாளினீங்குமென்
றன்னுமெற்குணர்த்தினான். (சுஎ)

வலஞ்செய்திந்தவாறெலாம்
நலிஞ்சுதின்னநாமவேல்
பொலிஞ்சவென்றிபூணுமக்
கிலிஞ்சன்மைந்தனாயினேன். (சுஅ)

அன்றமூலமாதியாய்
இன்றுகாறுமேழையேன்
நன்றுதீதுநாடலேன்
தின்றுதீயதேடினேன். (சுகூ)

† தூண்டகின்றதொன்மைதான்
வேண்டகின்றவேதநூல்
பூண்டகின்பொலங்கொடாள்
தீண்டவின்றதேறினேன். (எ0)

தெறுத்துவந்ததீதெலாம்
அறுத்தவுன்னையாதனேன்
ஒறுத்ததன்மையூழியாய்
பொறுத்தியென்றுபோயினான். ()

தேவுகாதல்சீரியோன்
ஆவிபோயினானெனாப்
பூவுலாவுபூவையோ
டேவலாருமேகினார். (எஉ)

கய்கொள்காலவேலினார்
மெய்கொள் ‡ வேதமெய்யர்வாழ்
மொய்கொள்சோலைமுன்னினார்
வய்கறூனும்வைகினார். (எங)

முதலாவது-விராதன்வதைப்படலம்-முற்றிற்று.

ஆக. திருவிருத்தம்-எங.

---

* தனதன்-சம்பத்தைக்கொடுக்கின்றவன்.

† தூண்டுதல்-உண்டாக்கிவளர்த்தல்.

‡ வேதமெய்யர்-வேதவிதிப்படி நித்திய நைமித்திக கருமங்களிற் சிறிதும் வழுவாது ஒழுகுபவர்.

இரண்டாவது

சரபங்கர் பிறப்பு நீங்குபடலம்.

குரவங்குவிகோங்கலர்கொம்பினொடும்
இரவங்கணுறும்பொழுதேகினரால்
சரவங்கனிருந்துதவங்கருது
மரவங்கிளர்கோங்கொளிர் * வாசவனம். (க)

செவ்வேலவர்சென்றனர்சேரலுறும்
அவ்வேலையினெய்தினனாயிரமாம்
தவ்வாதிரவும்பொலிதாமரையின்
வெவ்வேறலர்கண்ணினன்விண்ணவர்கோன். (உ)

அன்னச்செலவிற்படிமேலயல்சூழ்
பொன்னிற்பொலிவாரணிபூணொளிமேல்
மின்னிற்செறிகற்றைவிரிந்தனபோல்
பின்னிச்சுடரும்பிறழ்பேரொளியான். (௩)

வானிற்பொலிதோகையர்கண்மலர்வண்
கானிற்படர்கட்களிவண்டொடுகார்
மேனித்திரு † நாரதன்வீணையிசைத்
தேனிற்பொலியுஞ்செவிவண்டுடையான். (௪)

அனையின்றுறையைம்பதொடைம்பதுநூல்
வினையின்றொகைவேள்விநிரம்பியமா
முனைவன்முதுதேவரின்மூவரலார்
புனையும்முடிதுன்றுபொலன்கழலான். (௫)

செம்மாமலராணிகர்தேவியொடும்
மும்மாமதவெண்ணிறமுன்னுயர்தாள்
வெம்மாமிசையான்விரிவெள்ளிவிளங்
கம்மாமலையண்ணலையேயனையான். (௬)

தானின்றயனின்றொளிர்தண்கதிரோன்
யானின்றதெனென்றொளியெஞ்சிடமா
வானின்றபெரும்பதம்வந்துருவாய்
மேனின்றெனநின்றொளிர்வெண்குடையான். (௭)

---

* வாசவனம்-வாசனையையுடைய ஆச்சிரமம், வாசஸ்தானமாகிய சோலை எனினும் பொருந்தும்.

† நாரதன் என்பதற்கு ஆத்மஞானத்தை உபதேசிப்பவனென்றும், நரர்களுக்கு உள்ள ஒற்றுமையைப் பிளப்பவனென்றும் இருவகையாகப் பொருள் கொள்ளலாம்.

திசைகட்டியமால்கரிதெட்டமதப்
பசைகட்டினகிட்டினபற்பலபோர்
விசைகட்டழிதானவர்விட்டவர்பேர்
இசைகட்டியவொத்திவர் * சாமரையான் (௮)

தீர்வித்திரிசெங்கதிர்தங்குவதோர்
ஊருற்றதெனப்பொலியொண்முடியான்
போர்வித்தகனேமிபொறுத்தவன்மா
மார்விற்றிருவிற்பொலிமாலையினான். (௯)

செற்றீக்கதிரிற்பொலிசெம்மணியின்
கற்றைச்சுடர்விட்டெரிகஞ்சுகியான்
வெற்றித்திருவின்குளிர்வெண்ணகைபோல்
சுற்றிக்கிளருஞ்சுடர்தோள்வளையான். (௧௦)

பல்லாயிரமாமணிபாடமுறக்
தொல்லாரணிகால்சுடரின்றொகைதாம்
எல்லாமுடனாயெழலானயலே
வில்லாலொளிர்மேகமெனப்பொலிவான். (௧௧)

மானவுலகத்தனின்மன்றல்பொருந்
தேனாறலஞ்செறிதொங்கலினான்
மீனேறுகெடுத்துயர்வென்றியவாம்
வானடியர்கண்ணெனும்வாளுடையான். (௧௨)

வெல்வானசையால்விசையால்விடுகோள்
எல்வான்சுடர்மாலையிராவணன்மேல்
செல்வானுமருந்திறம்பிறழா
வல்வாய்மடியாவயிரப்படையான். (௧௩)

நின்றானெதிரின்றநெடுந்தவனுஞ்
சென்றானெதிர்கொண்டுசிறப்பமையா
என்றானிவணெய்தியவாறெனலும்
பொன்றாதபொலங்கழலோன்புகலும் (௧௪)

நின்னாலியனீதிநெடுந்தவமின்
றென்னாலும்விளம்பரிதென்றுணர்வான்
அந்நான்முகனின்னையழைத்தனனால்
பொன்னார்சடைமாதவபோதுதியால். (௧௫)

---

* சாமரை - சமரமென்னும் மானினது வாலின்மயிராற் செய்யப்பட்டதொரு இராஜ சிந்நம்.

எந்தாயுலகியாவையுமெவ்வுயிரும்
தந்தானுறையுந்நெறிதந்தனனால்
நந்தாதபெருந்தவநாடதனீ
வந்தாயெனினின்னெதிரேவருவான். (கசு)

எல்லாவுலகிற்குமுயர்ந்தமையான்
சொல்லாவகைநீயுணர்தொன்மையையா
னல்லாயுடனேநடநீயெனலும்
அல்லேனெனன * வாலறிவானறைவான். (கஎ)

சொற்பொங்குபெரும்புகழோய்தொழின்மாய்
சிற்பங்களின்வீவணசேர்குவெனே
அற்பங்கருதேனெனருந்தவமோ
† கற்பம்பலசென்றதுகாணுதியால். (கஅ)

சொற்றுந்தரமன்றிது சூழ்கழலாய்
பெற்றும்பெறுகில்லதோர்பெற்றியதே
மற்றென்பலசொல்லிவண்வந்துதவம்
முற்றும்பகலுமுடித்தனனால். (கக)

சிறுகாலையிலாகிலையோதிரியா
குறுகாநெடுகாகுணம்வேறுபடா
உறுகாலகிளர்பூதமெலாமுகினும்
மறுகாநெறியெய்துவென்வானுடையாய் (உ0)

என்றின்னவிளம்பிடுமெல்லையின்வாய்
வன்றிண்சிலைவீரரும்வந்தணுகா
ஒன்றுங்கிளரோதையினுலுணர்வார்
நின்றென்னைகொலின்னதெனநினைவார் (உக)

கொம்பத்தனநாலொளிர்கோள்வயிரக்
கம்பக்கரிநின்றதுகண்டனமால்
இம்பர்த்தலைமாதவர்பாலிவனும்
உம்பர்க்கரசெய்தினனென்றுணரா. (உஉ)

மானேயனையாளொடுமைந்தனையும்
பூநேர்பொழிலின்புறமேகிறுவா
ஆனேறெனவாளரியேறெனத்
தானேயவ்வகன்பொழில்சாருதலும். (உங)

* வால் அறிவான் தத்துவஞானத்தையுடையவர். வால்-தூய்மை.
† கற்பம்-யுகம்.

கண்டாமலையாயிரமுங்கதுவக்
கண்டாமரைபோர்கருணாயிரெனக்
கண்டானிமையோரிறை * காசினியின்
கண்டானருநான்மறையின்கனியை (௨௪)

காணாமனநொந்துகவன்றனனால்
ஆணாதனையந்தணர்நாயகனை
நாணாளும்வணங்கியநான்முடியால்
தாணாகியதோள்கொடவற்றொழுவான். (௨௫)

வேறு.

துவசமார்தொல்மருட்டுன்னாரைச்செற்றுஞ்
    சுருதிப்பெருங்கடலின்சொற்பொருள்கற்பித்தும்
திவசமார்நல்லறத்தின்செந்நெறியினுய்த்துந்
    திருவளித்தும்வீடளித்துஞ் † சிங்காமைத்தங்கள்
கவசமாயாருயிராய்த்தவமாய்க்கண்ணாய்
    கடையிலாஞானமாய்க்காப்பானைகாணா
அவசமாய்ச்சிந்தையழிந்தயலேநின்றா
    னறியாதான்போலவறிந்தவெலாஞ்சொல்வான். (௨௬)

தோய்ந்தும்பொருளனைத்துந்தோயாதுநின்ற
    சுடரேதொடக்கறுத்தோர்சுற்றமேபற்றி
நீய்ந்தவரியநெடுங்கருணைக்கெல்லா
    நிலயமேவேதநெறிமுறையினேடி
ஆய்ந்தவுணர்வினுணர்வேபகையா
    லலைப்புண்டடியேமடிபோற்றவந்நாள்
ஈந்தவாமுதவவெய்தினையேயெந்தா
    யிருநிலத்தவோநின் ‡ னிணையடித்தாமரைதாம். (௨௭)

மேவாதவரில்லைமேவினருமில்லை
    வெளியோடிருளில்லைமேல்கீழுமில்லை
மூவாமையில்லைமூத்தமையுமில்லை
    முதலிடையோடீறில்லைமுன்னொடுபின்னில்லை
தேவாயுங்கிவ்வோநீசென்றநிலையென்றாற்
    சிலையேந்திவந்தெம்மைச்சேவடிகணோவக்
காவாதொழியிற்பழிபெரிதோவன்றேற்
    கருங்கடலிற்கண்வளராய்கைம்மாறுமுண்டோ. (௨௮)

---

* காசினி காஸ்யபீ என்னும் வடசொல்லின் சிதைவு; பரசுராமராற் கச்யபமுனிவருக்கு யக்ஜ்ஞதக்ஷிணையாகக் கொடுக்கப்பட்டதனால் பூமிக்குஇப்பெயர். † சிங்காமை அழியாமை. ‡ இணையடி உபயபாதம்.

நாழிகைவைதீருலகெலாமாக
    நளினத்துநீதந்தநான்முகனார்தாமே
ஊழிபலபலவுநின்றளந்தாலொன்று
    மூலவாப்பெருங்குணத்தவுத்தமனேமேனாள்
தாழிதரையாகத்தண்டயிர்நீராகத்
    தடவரையேமத்தாகத்தாமரைக்கைநோவ
ஆழிகடைந்தமுதமெங்களுக்கேயீந்தா
    யவுணர்கடாநின்னடிமையல்லாமையுண்டோ. (௨௯)

ஒன்றாகிமூலத்துருவம்பலவாகி
    யுணர்வுமுயிரும்பிறிதாகியூழி
சென் * றாசறுங்காலத்தந்நிலையதாகித்
    திறத்துலகந்தானாகிச்செஞ்சவேநின்ற
நன்றாயஞானத்தனிக்கொழுந்தேநங்க
    ணவைதீர்க்குநாயகமேநல்வினையேநோக்கி
நின்றாரைக்காத்தியயர்பேரைக்காய்தி
    நிலையில்லாத்தீவினையுந்தீர்த்தன்றே. (௩௦)

வல்லைவரம்பில்லாதமாயவினைதன்னான்
    மயங்கினரோடெய்திமதிமயங்கிமேனாள்
அல்லையிறையவனீயாதியெனப்பேதுற்
    றலமருவேமுன்னையறப்பயனுண்டாக
எல்லைவலயங்கணின்னுழையென்றந்நா
    ளெரியோனைத்தீண்டி † யெழுவரெனநின்ற
தொல்லைமுதன்முனிவர்சூழுற்றபோதே
    தொகைநின்றவையர்துடைத்திலையோவெந்தாய்! (௩௧)

வேறு.

இன்னபலநினைந்தேத்தினனியம்பாத்
துன்னுதலிடையுளதெனநனிதுணிவான்
தன்னிகர்முனிவனைத்தரவிடையென்னாப்
பொன்னொளிர்நெடுமுடிப்புரந்தரன்போனான். (௩௨)

போனவனகநிலைபுலமையினுணர்வான்
வானவர்தலைவனைவரவெதிர்கொண்டான்
ஆனவனடிதொழவருள்வரவழுதான்
தானடவிடவகைதழுவினனுழைவான். (௩௩)

---

* ஆசறுதல்-முடிதல். † எழுவர்-சப்தருஷிகள் -அத்தரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கௌதமர், காஸ்யபர், ஆங்கிரஸர்.

ஏழையுமிளவலும்வருகெனவினிதா
வாழியவவரொடும்வைத்தனன்மகிழ்வால்
ஊழியின்முதன்முனியுறையுளையணுகா
ஆழியில்விழிதுயிலவனெனமகிழ்வான். (௩௪)

அவ்வயினழகனும்வைகினனிருள்
செவ்வியவறவுரைசெவியினுதவ
கவ்வியின்விழியவளொடுகனியிருளைக்
கவ்வியகிரியொருகடையுறுமளவில். (௩௫)

விலகிடுகிழவினன்வெயில்விரியயில்வாள்
இலகிடுசுடரவனிசையனதிசைதோய்
அலகிடலரியதனவிர்கரநிரையால்
உலகிடுநிறையிருளுறையினையுரிவான். (௩௬)

ஆயிடையறிஞனுமவனெதிரழுவத்
தீயினைநுழைவதொர்தெளிவினையுடையான்
நீய்விடைதருகெனநிருவினனெறியால்
காயெரிவரன்முறைகடிதினினிடுவோன். (௩௭)

வரிசிலையுழவனுமறையுழவனைநீ
புரிதொழிலெனையதுபுகலுதியெனலும்
திருமகடலைவசெய்திருவினையுறயான்
எரிபுகவினைகுவெனருள்கெனவிறைவன். (௩௮)

யான்வருமமைதியினிதுசெயலென்றே
மான்வருதனியுரிமார்பினையெனலும்
மீன்வருகொடியவன்விறலடுமறவோன்
ஊன்வருமுவகையினுரைநனிபுரிவான். (௩௯)

ஆயிரமுகமுளதவமயர்குவெனுன்
நீயிவண்வருதிகொலெனுநிலையுடையேன்
போயினவிருவினைபுகலுறுவிதியால்
மேயினையினியொருவினையிலைவிறலோய். (௪௰)

இந்திரனருளினனிருதிசெய்பகலா
வந்தனன்மருவுதிமலரயனுலகம்
தந்தனனெனவதுசாரலெனுரவோய்
அந்தமிலுயர்பதமடைதலைமுயல்வேன். (௪௧)

ஆதலினிதுபெறவருளெனவுரையாக்
காதலியவளொடுகெதழெரிமூழ்கிப்

போதலைமருவினனொருநெறிபுகலா
வேதமுமறிவருமிகுபொருளுணர்வோன். (௫௨)

தேவருமுனிவருமுறுவதுதெரிவோர்
* மாவருநறுவிரைமலரயன்முதலோர்
ஏவருமறிவினிலிருவினையொருவிப்
போவதுகருதுமவ்வருநெறிபுக்கான். (௫௩)

அண்டமுமகிலமுமறிவருநெறியால்
உண்டவனொருபெயருணர்குநருறுபே
றெண்டவநெடிதெனினிறுதியிலவனைக்
கண்டவருறுபொருள்கருதுவதெளிதே. (௫௪)

உ-வது சரபங்கர்பிறப்புநீங்குபடலம். முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கசஎ.

௩-வது அகத்தியப்படலம்.

அனையவனிறுதியினமைவுநோக்கலின்
இனியவரின்னலினிரங்குநெஞ்சினர்
குனிவருதிண்சிலைக்குமரர் கொம்பொடும்
புனிதனதுறையுணின்றரிதிற்போயினர். (௧)

மலைகளுமரங்களுமணிக்கற்பாறையும்
அலைபுனறிகளுமருவிச்சாரலும்
இலைசெறிபழுவமுமினியசூழலும்
நிலைமிகுதடங்களுமினிதுநீங்கினர். (௨)

பண்டையவயன்றரு † பாலகில்லரும்
முண்டருமோனருமுதலினோர்களைத்
தண்டகவனத்துறைதவத்துளோர்கடாம்
கண்டனரிராமனைக்களிக்குஞ்சிந்தையார். (௩)

கனைவருகடுஞ்சினத்தரக்கர்கரயவோர்
வினைபிறிதின்மையின்வெதும்புகின்றனர்
அனைவருகானகத்தமுதளாவிய
புனைவரவுயிர்வருமுலவைபோல்கின்றார். (௪)

* மா-அழகும் ஒளியுமாம். † பாலகில்லர்-வாலகில்லியர், பகவானது மயிரினின்றுந் தோன்றினவர்.

ஆய்வரும்பெருவலியரக்கர்நாமமே
வாய்வெரீஇயலமருமறுக்கநீங்கினார்
தீய்வருவனத்திடையிட்டுத்தீர்ந்ததோர்
தாய்வரநோக்கியகன்றின்றன்மையார் (௫)

கரக்கருங்கடுந்தொழிலரக்கர்காய்தலில்
பொரற்கிடமின்மையிற்புழுங்கிச்சோருநர்
அரக்கரென்கடலிடையாழ்கின்றாரொரு
மரக்கலம்பெற்றனமறுக்கநீங்கினார் (௬)

தெரிஞ்சுறநோக்கினர்செய்தசெய்தவம்
அருஞ்சிறப்புதவநல்லறிவுகைதர
விரிஞ்சுறப்பற்றியபிறவிவெந்துயர்ப்
பெருஞ்சிறைவீடுபெற்றனையபெற்றியார். (௭)

வேண்டினவேண்டினர்க்களிக்குமெய்த்தவம்
பூண்டுளராயினும்பொறையினாற்றலால்
மூண்டெழுவெகுளியைமுதலினீக்கினார்
ஆண்டுறையரக்கராலலைப்புண்டாரரோ (௮)

எழுந்தனரெய்தினரிருண்டமேகத்தின்
கொழுந்தெனநின்றவக்குரிசில்வீரனைப்
பொழிந்தெழுகாதலிற்பொருந்தினாரவன்
தொழுந்தொறுந்தொழுந்தொறுமாசிசொல்லுவார். (௯)

இனியதோர்சாலைகொண்டேகியிவ்வயின்
கனியுறையென்றவர்கமையகல்கித்தாம்
தனியிடஞ்சார்ந்தனர்தங்கிமாதவர்
அனைவருமெய்தினரல்லல்சொல்லுவான். (௧0)

எய்தியமுனிவரையிறைஞ்சியேத்துவர்
தய்யனுமிருந்தனனருளெனென்றலும்
வய்யகங்காவலன்மைந்தவக்கதோர்
வெய்யவெங்கொடுந்தொழில்விளைவுகேளென. (௧௧)

இரக்கமென்றொருபொருளிலாதநெஞ்சினர்
அரக்கரென்றுளர்சிலரறத்தினீங்கினார்
நெருக்கவும்யாம்படர்நெறியலாநெறி
துரக்கவுமருந்தவத்துறையுணீங்கினேம். (௧௨)

வல்லியம்பலதிரிவனத்துமானென
எல்லியும்பகலுநொந்திரங்கியாற்றலெம்

சொல்லியவறநெறித்துறையுநீங்கினெம்
வில்லியன்மொய்ம்பினாய்வீடுகாண் * குமோ (௧௩)

மாதவத்தொழுகலெமறைகள்யாவையும்
ஓதலெமோதுவார்க்குதவலாற்றலெம்
† மூவெரிவளர்க்கிலெமுறையினீங்கினேம்
ஆதலி † னந்தணரேயுமாகிலேம். (௧௪)

இந்திரனென்னினவனரக்கரேயின
சிந்தையிற்சென்னியிற்கொள்ளுஞ்செய்கையான்
எந்தைமற்றியாருளரிடுக்கணீக்குவார்
வந்தனையாஞ்செயத்தவத்தின்மாட்சியால். (௧௫)

உருளுடைநேமியாலுலகையோம்பிய
பொருளுடைமன்னவன்புதல்வபோக்கிலா
இருளுடைவைகலேமிரவிதோன்றினாய்
அருளுடைவீரநின்னபயம்யாமென்றார். (௧௬)

வேறு.

புகல்புகுந்திலரேற்புறத்தண்டத்தின்
அகல்வரேனுமென்னம்பொடுவீழ்வரால்
தகவிறன்பந்தவிருதிர்நீரெனாப்
பகலவன்குலமைந்தன்பணிக்கின்றான். (௧௭)

வேந்தன்வீயவும்யாய்வரமேவவும்
ஏந்தலெம்பிவருந்தவுமென்னகர்
மாந்தர்வன்றுயர்கூரவும்யான்வனம்
போந்ததென்னுடைப்புண்ணியத்தாலென்றான். (௧௮)

அறந்தவாநெறியந்தணர்தன்மையை
மறந்தபுல்லர்வலிதொலையேனெனின்
இறந்துபோகினுநன்றிதுவல்லது
பிறந்தியான்பெறும்பேறென்பதியாவதோ. (௧௯)

சிவந்தவேதியர்நீவிருந்தியவர்
கவந்தபந்தக்களிநடங்கண்டிட
அமைந்தவில்லுமருங்கணைத்தூணியும்
சுமந்ததோளும்பொறைத்துயர்தீருமால். (௨௦)

ஆவுக்காயினுமந்தணர்க்காயினும்
யாவர்க்கனுமெளியவர்க்காயினும்

---

* கும்-தன்மைப் பன்மை விகுதி, எதிர்காலம் காட்டிற்று. † மூவெரி காருகபத்தியம், ஆகவநீயம் தக்ஷிணாக்கினி என்பவை. ‡ அந்தணர்-ஈண்டு முனிவரை

சாவப்பெற்றவரேதகைவானுறை
தேவர்க்குந்தொழுந்தேவர்களாகுவார். (௨௧)

சூரறுத்தவனுஞ்சுடர்நேமியும்
ஊரறுத்தவொருவனுமோம்பினும்
ஆரறத்தினொடுன்றிநின்றூரவர்
வேரறப்பெண்வெருவன்மினீரென்றான். (௨௨)

உரைத்தவாசகங்கேட்டவர்தோங்கிட
இரைத்தகாதலரேகியவின்னலர்
திரித்தகோலினர் * தேமறைபாடினர்
நிருத்தமாடினர்நின்றுவிளம்புவார் (௨௩)

தோன்றனீமுனியிற்புவனத்தொகை
மூன்றுபோல்வனமுப்பதுகோடியுந்
தேன்றபோதுமெதிரலவென்றவிற்
சான்றுவேதந்தவம் † பெருஞானமே (௨௪)

அன்னதாகலினேயினவாண்டெலாம்
இன்னல்காத்திங்கினிதுறைவாயெனச்
சொன்னமாதவர்பாதந்தொழுதுயர்
மன்னர்மன்னவன்மைந்தனும்வைகினான் (௨௫)

ஐந்துமைந்துமமைதியினண்டவண்
மைந்தர்தீதிலர்வைகினர்மாதவர்
சிந்தையெண்ணியகத்தியற்சேர்கென
இந்துநன்னுதறன்னொடுமேகினர் (௨௬)

விடாகங்களும்வேய்செறிகானமுங்
படருஞ்சின்னெறிபைப்பையநீங்கினர்
சுடருமேனிச்சுதீக்கணனென்னுமவ்
விடரிலானுறைசோலைசென்றெய்தினர். (௨௭)

அருக்கனன்னமுனிவனையவ்வழிச்
செருக்கில்சிந்தையர்சேவடிதாழ்தலும்
இருக்கவீண்டென்றினியனகூறினன்
மருக்கொள்சோலையின்மைந்தரும்வைகினார். (௨௮)

வைகும்வைகலின்மாதவன்மைந்தன்பால்
செய்கையாவையுஞ்செய்திவட் ‡ செல்வநீ

---

* தேமறை. இனிப்பான வேதங்கள், தெய்வத்தன்மையையுடைய வேதமென்றுமாம் † பெருஞானம் ஐயந்திரிபில்லாத உண்மையுணர்வு. ‡ செல்வன் இம்மைமறுமைவீடுகளில் அடையும் பாக்கியங்களைத்தன் அடியார்க்குத் தருபவன்.

எய்தயான்செய்ததெத்தவமென்றனன்
ஐயனும்மவற்கன்பினன்கூறுவான். (௨௯)

சொன்னநான்முகன்றன்வழித்தோன்றினர்
முன்னையொருளுயர்தவமுற்றினார்
உன்னின்யாருளருன்னருளெய்திய
என்னின்யாருளரிற்பிறந்தாரென்றான். (௩௦)

உவமைநீங்கியதோன்றலுரைக்கெதிர்
நவமைநீங்கியநற்றவன்சொல்லுவான்
அவமிலாவிருந்தாகியென்னுலமை
தவமெலாங்கொள்கதக்கிணையாவென்றான். (௩௧)

மறைவலானெதிர்வள்ளலுங்கூறுவான்
இறைவநின்னருளெத்தவத்திற்கெளி
தறைவநீண்டொன்றகத்தியற்காண்பதோர்
குறைகிடந்ததினியெனக்கூறினான். (௩௨)

நல்லதேநினைந்தாயதுநானுமுன்
சொல்லுவான்றுணிகின்றதுதோன்றனீ
செல்லுகாண்டவற்சேருதிசேர்ந்தபின்
இல்லைநின்வயினெய்தலில்லாதவே. (௩௩)

அன்றியுந்நின்வரவினையாதரித்
தின்றுகாறுநின்றேமுறுமாலவற்
சென்றுசேருதிசேருதல்செவ்வியோய்
நன்றுதேவர்க்கும்யாவற்குநன்றனு. (௩௪)

வழியுங்கூறிவரம்பகலாசிகள்
மொழியுமாதவன்மொய்மலர்த்தாடொழாப்
பிழியுந்தேனிற்பிறங்கருவித்திரள்
பொழியுஞ்சோலைவிரைவினிற்போயினார். (௩௫)

வேறு.

ஆண்டகையரவ்வயினடைந்தமையறிந்தான்
ஈண்டுவகைவேலைதுணையேழுலகமெய்த
மாண்டவரதன்சரண்வழங்கவெதிர்வந்தான்
நீண்ட ‡ தமிழாலுலகைநேமியினளந்தான். (௩௬)

பண்டவுணர்மூழ்கினர்படார்களெனவானோர்
எண்டவவெமக்கருள்கெனக்குறையிரந்தார்

‡ தமிழால் உலகை அளத்தல்-தமிழ்ப்பாஷையை உலகமுழுவதும் பரவச்செய்தல்.

கண்டொருகைவாரினன்முகந்துகடலெல்லாம்
உண்டவர்கள்பின்னுமிழ்கவென்றலுமுமிழ்ந்தான். (௩௭)

தூயகடனீரடிசிலுண்டது † தூரந்தான்
ஆயவதலாலமருமெய்யுடையவன்றன்
மாயவினைவாளவுணன்மாயவவன்வன்மைக்
காயமினிதுண்டுலகின்றிடர்களைந்தான். (௩௮)

யோகமுறுபேருயிர்கடாமுலைவுறாமல்
எகுநெறியாதெனமிதித்தடியினேறி
மேகநெடுமாலைதவழ்விந்தையெனும்விண்டோய்
நாகமதுநாகமுறநாகமெனநின்றான். (௩௯)

மூசரவுசூடுமுதலோனுரையின்மூவா
மாசிறவவேகெனவடாதுதிசைமேனான்
நீசமுறவானிநெடுமாமலயநேரா
ஈசனிகராயுலகுசீர்பெறவிருந்தான். (௪0)

உழக்குமறைநாலினுமுயர்ந்துலகமோதும்
வழக்கினுமதிக்கவியினும்மரபினாடி
நிழற்பொலிகணிச்சிமணிநெற்றியுமிழ்செங்கண்
தழற்புரைசுடர்க்கடவுடக்ததமிழ்தந்தான். (௪௧)

விண்ணினினிலத்தினில்விகற்பவுலகிற்பேர்
எண்ணினிலிருக்கினிலிருக்குமெனயாரும்
உண்ணினைகருத்தினையுறப்பெறவென்றலென்
கண்ணினிலெனக்கொடுகளிப்புறுமனத்தான். (௪௨)

இரைத்தமறைநான்கினொ ‡ டியைந்தபிறயாவும்
நிரைத்தநெடுஞானநிமிர்கல்வியெனநாளிட்
டுரைத்துமயனாலுமறியாதபொருணேர்நின்
றுரைக்குதவுமாலெனுமுணர்ச்சியினுவப்பான். (௪௩)

உய்ந்தனரிமைப்பிலருயிர்த்தனர்தவத்தோர்
அந்தணரறத்தினெறினின்றனர்களானு
வெந்திறலரக்கர்விடவேர்முதலறுப்பான்
வந்தனன் § மருத்துவனெனத்தனிவலிப்பான். (௪௪)

எனையுயிராமுதலயாவுமிடைவேவித்
தனுகாரக்கருமைச்சுடுசினத்தின்

---

† தூரத்தல்-வெளிப்படுத்துதல். ‡ இயைந்த பிறயாவும் என்றது, அவ்வேதங்களின் பொருளை யறியக் கருவியாகிய மீமாம்சை புராணம்-நியாயம், தருமசாத்திரம் முதலியவற்றை. § மருத்துவன்-மருந்தின் தன்மை யறிந்து கொடுப்பவன்.

ஆனவனலைக்கடிதவித்துலகளிப்பான்
வானமழைவந்ததெனமூர்ந்துறுமனத்தான். (௪௫)

கண்டனனிராமனைவரக்கருணைக்கூரப்
புண்டரிகவாணயனநீர்பொழியநின்றான்
எண்டிசையுமேழுலகுமெவ்வுயிருமுய்யக்
குண்டிகையினிற்பொருவில்காவிரிகொணர்ந்தான். (௪௬)

நின்றவனைவந்தநெடியோனடிபணிந்தான்
அன்றவனுமன்பொடுதழீஇயழுதகண்ணான்
நன்றுவரவென்றுபலநல்லுரைபகர்ந்தான்
என்றுழைதென்றமிழியம்பியிசைகொண்டான். (௪௭)

வேதியர்கள்வேதமொழிவேறுபலகூறிக்
காதன்மிகநின்றெழில்கமண்டலுவினன்னீர்
மாதவர்கள்வீசிநெடுமாமலர்கடூவப்
போதுமணநாறுகுளிர்சோலைகொடுபுக்கான். (௪௮)

பொருந்தவமலன்பொழிலகத்தினிதுபுக்கான்
விருந்தவனமைத்தபின்விரும்பினன்விரும்பி
இருந்தவமிழைத்தவெனதில்லிடையின்வந்தென்
அருந்தவமுடித்தனையருட்கரசவென்றான் (௪௯)

என்றமுனியைத்தொழுதிராமனிமையோரும்
நின்றதவமுற்றநெடியோரினெடியோரும்
உன்றனருள்பெற்றிலர்களுன்னருள்சுமந்தேன்
வென்றனனனைத்துலகுமேலினிதெனென்றான். (௫௰)

தண்டகவனத்துறைதியென்றுரைதரக்கொண்
டுண்டுவரவித்திசையெனப்பெரிதுவந்தேன்
† எண்டகுகுணத்தினையெனக்கொடுயர்சென்னி
துண்டமதிவைத்தவனையொத்தமுனிசொல்லும். (௫௧)

ஈண்டுறைதியையவினியிவ்வயினிருந்தால்
வேண்டியனமாதவம்விரும்பினமுடிப்பாய்
தூண்டுசினவாளிருதர்தோன்றியுளரென்றால்
மாண்டுகமலைந்தெமர்மனத்துயர்துடைப்பாய். (௫௨)

வாழுமறைவாழுமனுநீதியறம்வாழும்
தாழுமிமையோருயர்வர்தானவர்கடாழ்வார்
ஆழியுழவன்புதல்வவையமிலைமெய்யே
ஏழுலகும்வாழுமினியிங்குறைதியென்றான். (௫௩)

---

* எண்டகுகுணம்-அபஹதபாப்மத்வம், விஜரத்வம், விம்ருத்யுத்வம், விசோகத்வம், விஜகத்சத்வம், அபிபாஸத்வம், ஸத்யகாமத்வம், ஸத்யசங்கல்பத்வம்.

செருக்கடையரக்கர்புரிதீமைசிதைவெய்தித்
தருக்கழிதரக்கடிதுகொல்வதுசமைந்தேன்
வருக்கமறையோயவர்வருந்திசையின்முந்துற்
றிருக்கைநலனிற்கருளென்றனனிராமன். (௫௪)

விழுமியதுசொற்றனையிவ்வில்லிதிவண்மேனாள்
முழுமுதல்வன்வைத்துளதுமூவுலகும்யானும்
வழிபடவிருப்பதிதுதன்னைவடிவாளிக்
குழுவழுவில்புட்டிலொடுகோடியெனநல்கி. (௫௫)

இப்புவனமுற்றுமொருதட்டினிடையிட்டால்
ஒப்புவரவிற்றெனவுரைப்பரியவாளும்
வெப்புருவுபெற்ற * வரன்மேருவரைவில்லாய்
முப்புரமெரித்ததனிமொய்கணையுநல்கா. (௫௬)

ஓங்குமரனோங்கிமலையோங்கிமணலோங்கிப்
பூங்குலைகுலாவுகுளிர்சோலைபுடைவிம்மித்
தூங்குதிரையாறுதவழ்சூழலதோர்குன்றின்
யாங்கருளதாலுறையுள்பஞ்சவடிமஞ்ச. (௫௭)

கன்னியிளவாழைகனியீவகதிர்வாலின்
சென்னெலுளதேனொழுகுபோதுமுளதெய்வப்
பொன்னியெனலாயபுனலாறுமுள † போதா
அன்னமுளபொன்னிவளொடன்பின்விளையாட. (௫௮)

ஏகியினியவ்வயினிருந்துறைதியென்றான்
மேகநிறவண்ணனும்வணங்கிவிடைகொண்டான்
பாகனையசொல்லியொடுதம்பிபரிவிற்பின்
போகமுனிசிந்தைதொடரக்கடிதுபோனான். (௫௯)

௩-வது அகத்தியப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௧௭௬

* அரன்-ஹரன் பிரளயகாலத்தில் எல்லாவற்றையும் ஹரிப்பவன். ஹரித்தல் அழித்தல், * போதா-பெருநாரை.

நான்காவது.

சடாயுகாண்படலம்.

நடந்தனர்காவதம்பலவுநன்னதி
கிடந்தனநின்றனகிரிகள்கேண்மையின்
தொடர்ந்தனதுவன்றினசூழல்யாவையும்
கடந்தனர்கண்டனர்கழுகின்வேந்தையே. (க)

உருக்கியசுவணமொத்துதயத்துச்சிசேர்
அருக்கனவ்வகலிடத்தலங்குதிக்கெலாம்
தெரிப்புறசெறிசுடர்ச்சிகையினாற்சிறை
விரித்திருந்தனனெனவிளங்குவான்றனை. (உ)

முந்தொருகருமலைமுகட்டுமுன்றிலின்
சந்திரனொளியொடுதழுவச்சாத்திய
அந்தமில்கனைகடலமரர்நாட்டிய
மந்தரகிரியெனமயங்குவான்றனை. (ங)

மானிறவிசும்பெழின்மறையத்தன்மணிக்
கானிறச்சேயொளிகதுவக்கண்ணகல்
நீனிறவரையினிற்பவளநீள்கொடி
போனிறம்பொலிந்தெனப்பொலிகின்றான்றனை. (ச)

தூய்மையனிருங்கலைதுணிந்தகேள்வியன்
வாய்மையன்மறவிலன்மதியின்கூர்மையன்
ஆய்மையின்மந்திரத்தறிஞனாமெனச்
சேய்மையினோக்குறுசிறுகணான்றனை. (ரு)

வீட்டிவானவுணரைவிருந்துகூற்றினை
ஊட்டிவீழ்மிச்சிலூனுண்டுநாடொறும்
நீட்டிமேலிந்திரன்சிறுகண்யானையின்
தோட்டிபோற்றேய்ந்தொளிர்துண்டத்தான்றனை. (சு)

கோளிருநாலினோடொன்றுகூடின
ஆளுறுகிரிபோலாரத்தான்றனை
நீளுறுமேருவினெற்றிமுற்றிய
வாளிரவியிற்பொலிமௌலியான்றனை. (எ)

சொம்பங்கமுறநிமிரிசையின்சும்மையை
அற்பங்கமுறவரு * மருணன்செம்மலைச்

* அருணன்-சூரியன் சாரதி.

சிற்பங்கொன்பகலெனக்கடிதுசென்றதிர்
கற்பங்களெனைப்பலகண்டுளான்றனை. (அ)

ஓங்குயர்நெடுவரையொன்றினின்றது
தாங்கலதிருநிலந்தாழ்ந்துதாழ்வுற
வீங்கியவலியினிலிருந்தவீரனை
ஆங்கவரணுகினரயிர்க்குஞ்சிந்தையார். (கூ)

இறுதியைத்தன்வயினிற்றவெய்தினன்
அறிவலியரக்கனுமல்லனுமெனின்
எறுழ்வலிக்கலுழனேயென்னவுன்னியச்
செறிகழல்வீரருஞ்செயிர்த்துநோக்கினர். (௧0)

வனைகழல்வரிசிலைமதுகைமைந்தரை
அனையவன்றானுங்கண்டுயிர்த்துநோக்கினன்
வினையறுநோன்பினரல்லர்வில்லினர்
புனைசடைமுடியினர் * புலவரோவெனா. (௧௧)

புரந்தரன்முதலியபுலவர்யாரையும்
நிரந்தரநோக்குவெனேயியானுமவ்
வரந்தருமிறைவனுமழுவாளனும்
கரந்திலரென்னையானென்றுங்காண்பெனால். (௧௨)

காமனென்பவனையுங்கண்ணிநோக்கினேன்
தாமரைச்செங்கணித்தடக்கைவீரர்கள்
பூமருபொலன்கழற்பொடியினோடுமொப்
பாமெனவறிகிலனர்கொலாமிவர். (௧௩)

உலகொருமூன்றுந்தம்முடைமையாக்குறும்
† அலகறுமிலக்கணமமைந்தமெய்யினர்
மலர்மகட்குவமையாளொடும்வந்தவிச்
சிலைவலிவீரரைத்தெரிகிலேனென. (௧௪)

கருமலைசெம்மலையனையகாட்சியர்
திருமகிழ்மார்பினர்செங்கண்வீரர்தாம்
அருமைசெய்குணத்தினென்றனைவனுழியான்
ஒருவனையிருவருமொத்துளாரரோ. (௧௫)

எனப்பல ‡ நினைப்பினமனத்துளெண்ணுவான்
சினப்படைவீரர்மேற்செல்லுமன்பினன்

---

* புலவர் அறிவுடையவர். † அலகறும்அளவில்லாத,குற்றமற்றவென்றுமாம். ‡ நினைப்பின நினைத்தலையுடையவை. நினைப்பு இனம் எனப்பிரித்து நினைப்புக்களின் கூட்டமென்றுமாம்.

கணப்படைவரிசிலைக்காளையீர்கள்யார்
மணப்படவெனக்குரைவழங்குவீரென்றான்

வினவியகாலையின்மெய்ம்மையல்லது
புனைமலர்த்தாரவர்புகல்கிலாமையால்
கனைகடனெடுநிலங்காவலாழியான்
வனைகழற்றயரதன்மைந்தர்யாமென்றார். (௧௭)

உரைத்தலும்பொங்கியவுவகைவேலையன்
தரைத்தலையிழிந்தவர்த்தழுவுங்காதலன்
விரைத்தடர்ந்தாரினிர்வேந்தர்வேந்தன்றன்
வரைத்தடந்தோளிணைவலியவோவென்றான். (௧௮)

மறக்கமுற்றாதனவாய்மைகாத்தவன்
துறக்கமுற்றானெனமுன்னஞ்சொல்லலும்
இறக்கமுற்றானெனவேக்கமெய்தினான்
உறக்கமுற்றானெனவுணர்வுநீங்கினான். (௧௯)

தழிவினரெடுத்தனர் * தடக்கையான்முகம்
கழுவினரிருவருங்கண்ணினீரினால்
வழுவினவின்னுயிர்வந்தமன்னனும்
அழிவுறுநெஞ்சினனாற்றினானரோ (௨௦)

வேறு.

பரவலருங்கொடைக்குநின்றன்பனிக்குடைக்கும்பொறைக்குநெடும்பண்பு
கரவலருங்கற்பகமுமுடுபதியுங்கடலிடமுங்களித்துவாழப் [தோற்ற
புரவலர்தம்புரவலனேபொய்ப்பகையேமெய்க்கணியேபுகழின்வாழ்வே
இரவலருநல்லறமும்யானுமினியென்படநீத்தேகினாயே. (௨௧)

அலங்காரமெனவுலகுக் † கமுதளிக்குந்தனிக்குடையாயாழிசூழ்ந்த
நிலங்காவலதுகிடக்கநிலையாதநிலையுடையேனையநெஞ்சின்
நலங்காணகடந்தனையோநாயகனேதீவினையேனண்பினின்றும்
விலங்கானேனாதலினால்விலங்கினேனின்னுமுயிர்விட்டிலேனால். (௨௨)

தயிருடைக்குமத்தென்னவுலகைநலிசம்பரனைத்தடிந்தவந்நாள்
‡ அயிர்கிடக்குங்கடல்வலயத்தயலறியநீயுறாவியென்று
செயிர்கிடத்தல்செய்யாததிருமனத்தாய்செப்பினாய்திறம்பாநின்சொல்
உயிர்கிடக்கவுடலைவிசும்பேற்றினாருணர்விறந்தகூற்றினாரே. (௨௩)

---

* தடக்கைமுழந்தாளளவும் நீண்டகை. † அமுதளித்தல் ஈண்டு அருள்வைத்துக்காத்தல். ‡ அயிர் நுண்மணல்.

எழுவதோரிசைபெருகவிப்பொழுதேயொப்பரியவெரியுந்தீயின்
விழுவதெனிற்கமட * மெல்லியலார்தம்மைப்போனிலத்தின்மேல்வீழ்ந்
தழுவதேயானென்னுவறிவுற்றானெனவெழுந்தாங்கவரைநோக்கி
முழுவதேழுலகுடையமைந்தன்மீர்கேண்மினெனமுறையிற்சொல்வான்.

தக்கனளிவயிற்றுதித்தாரைம்பதின்மர்தடங்கொங்கைத்தையலாருள்
தொக்கபதின்மூவரையக்காசிபனும்புணர்ந்தனனத்தோகைமாருள்
மிக்கவதிதிப்பெயராண்முப்பத்துமுக்கோடிவிண்ணோரீந்தாள்
மைக்கருங்கட்டிதியென்பாளதினிரட்டியசுரர்தமைவயிறுவாய்த்தாள். ()

தானவரேமுதலோரைத்தனுப்பயந்தாண்மதியென்பாண்மனிதர்தம்மூ
டானவருணங்களவயவத்தடைவேபயந்தனளால்சுரபியென்பாள்
தேனுவுடன்கந்தருவமற்றுள்ளபிறபயந்தாடெரிக்குங்காலை
மானமுடைக்குரோதவசைகழுதைமரையொட்டைபிறவயிறுவாய்த்தாள்.

மழைபுரைபூங்குழல்விநதைவானிடியினருணனுடன் † வயிநதேயன்
தழைபுரையுஞ்சிறைக்கூகைபாறுமுதற்பெரும்பறவைதம்மையீன்றாள்
இழைபுரையுந்தாம்பிரையூர்க்குருவிசிவல்காடைபலபிறவுமீன்றாள் [லாம்.
கழையெனுமக்கொடிபயந்தாள்கொடியுடனேசெடிமுதலாக்கண்டவெல்

வெருட்டியெழுங்கணபணப்பைவியாளமெலாங்கத்துருவாமின்னுமீன்று
மருட்டிகழுமொருதலையபுயங்கமெலாஞ்சுரதையென்னுமாதுதந்தாள் [லாம்
அருட்டையெனும்வல்லிதந்தாளோந்தியும்பணில்கண்முதலானவெல்
தெருட்டிமொதிளையீந்தாள்செலசரமாகியபலவுந்தெரிக்குங்காலை. (உஅ)

அதிதிதிதிதனுவருட்டைசுதைகழையேசுரபியணிவிநதையான்ற
மதிஇளைகத்துருவுடனேகுரோதவசைதாம்பிரையாமடநலார்கள் (றோள்
விதிமுறையேயிவையனைத்தும்பயந்தனர்கள்விநதைசுதனருணன்மென்
புதுமதிசேர்நுதலரம்பைதனைப்புணரவுதித்தனம்யாம்புவனிமீதே. (உகூ)

அருணன்றன்புதல்வனியானவன்படருமுலகெல்லாம்படர்வேனுழி (டும்
இருண்மொய்ம்புகெடத்தராந்தயாதரிகின்னுயிர்த்துணைவனிமையாரோ
வருணங்கள்வகுத்திட்டகாலத்தேவர்துதித்தேன்கழுகின்மன்னன்
தருணங்கொள்பேரொளியிர்சம்பாதிபின்வருசடாயுவென்றான். (௩0)

ஆண்டவனீதுரைசெய்ய ‡ வஞ்சலித்தமலர்க்கையானபின்னேடும் (நீரார்
மூண்டபெருந்துன்பத்தான்முறைமுறையினிறைமலர்க்கண்மொய்த்த
பூண்டபெரும்புகழ்கிறுவித்தம்பொருட்டான்மேலுலகம்புக்கதாதை
மீண்டனன்வந்தானவனைக்கண்டனரேயொத்தனரவ்விலங்கற்றோளார்.

* மெல்லியலார்-மெல்லிய இயற்கையையுடையவர். அன்பர் இறந்த காலத்து மண்ணில் விழுந்து புரண்டு அழுதல் பெண்களுக்கு இயற்கை; "புனையிழை மகளிர் போலப்புலம்பல்" என்றார் சிந்தாமணியாரும். † வயிநதேயன் விநதையின் மகன். ‡ அஞ்சலித்தல்-கூப்புதல்.

மருவினியகுணத்தவரையிருசிறகாலுறத்தழுவிமக்காணீரே
உரியகடன்வினையேற்குமுதவுவீருடலிரண்டுக்குயிரொன்றானன்
பிரியவுந்தான்பிரியாதேயினிதிருக்குமுடற்பொறையாம்பீழைபாரா
தெரியதனினின்றேபுக்கிறவேனேவித்துயரமறவேனென்றான். (௩௨)

வேறு.

என்றுரைத்தவெருவையரசனைத்
துன்றுதாரவர்நோக்கித்தொழுதுகண்
ஒன்றுமுத்தமுறையுறையாயுக
நின்றுமற்றின்னநீர்மைநிகழ்த்தினர். (௩௩)

உய்விடத்துதவற்குரியானுந்தன்
மெய்விடக்கருதாதுவிண்ணேறினன்
இவ்விடத்தினியெம்பெருமானுனைமைக்
கய்விடிற்பினையார்களைகண்ணுளார். (௩௪)

தாயினீங்கருந்தந்தையிற்றண்ணகர்
வாயினீங்கிவனம்புகுந்தெய்திய
நோயினீங்கினெநுன்னினென்னெங்களை
நீயுநீங்குதியோநெறிநீங்கலாய். (௩௫)

என்றசொல்லரிரந்தழிநெஞ்சினர்
நின்றவீரரைநோக்கினனந்தவன்
அன்றதென்னி * னயோத்தியினையன்மீர்
சென்றபின்னவற்சேர்குவென்யானென்றான். (௩௬)

வேந்தன்விண்ணடைந்தானெனின்வீரர்நீர்
ஏந்துஞாலமினிதளியாதிவட்
போந்ததென்னைபுகுந்தவென்புந்திபோய்க்
காந்துகின்றதுகட்டுரையீரென்றான். (௩௭)

தேவர்தானவர்திண்டிறனுகர்வே
றேவராகவிடரிழைத்தாரெனின்
பூவராவுபொலன்கறைவேலினீர்
சாவராக்கித்தருவெனரசென்றான். (௩௮)

தாதைகூறலுந்தம்பியைநோக்கினன்
சீதைகேள்வனவனுந்தன் † சிற்றவை
மாதரால்வந்தசெய்கைவரம்பிலா
ஓதவேலையொழிவின்றுணர்த்தினன். (௩௯)

* அயோத்தி-சண்டையிடுதற்குக் கூடாதென்பதுபொருள்.
† சிற்றவை-சிறு=அவ்வை, அவ்வை-ஔவை-தாய்.

உந்தையுண்மையனாக்கியுன்சிற்றவை
தந்தசொல்லைத்தலைக்கொண்டுதாரணி
வந்ததம்பிக்குதவியவள்ளலே
எந்தைவல்லதியாவர்வல்லாரெனா. (௪௦)

அல்லித்தாமரைக்கண்ணனையன்புறப்
புல்லிமோந்துபொழிந்தகண்ணீரினன்
வல்லைமைந்தவம்மன்னையுமென்னையும்
எல்லையில்புகழெய்துவித்தாயென்றான். (௪௧)

பின்னரும்மப்பெரியவன்பெய்வளை
அன்னமன்னவணங்கினைநோக்கினான்
மன்னர்மன்னவன்மைந்தவிவ்வாணுதல்
இன்னளென்னவியம்புதியாலென்றான். (௪௨)

அல்லிறுத்தன * தாடகையாதியா
வில்லுறுத்ததிடையெனமேலைநாள்
புல்றுத்ததியாவும்புகன்றுதன்
சொல்லிறுத்தனன்றோன்றல்பின்றோன்றினான். (௪௩)

கேட்டுவந்தனன்கேழ்கிளர்மௌலியான்
தோட்டலங்கவினீர்துறந்தீர்வளம்
நாட்டினீவிருநன்னுதறாளுமிக்
காட்டில்வைகுதிர்காக்குவென்யானென்றான் (௪௪)

இறைவவெண்ணிவகத்தியனீந்துள
தறையுநன்மணியாற்றினகன்கரைத்
துறையுளுண்டொருசூழலச்சூழல்புக்
குறைதுமென்றனனுள்ளத்துறைகுவான். (௪௫)

பெரிதுநன்றப்பெருந்துறைவைகிநீர்
புரிதிர்மாதவம்போதுமின்யானது
தெரிவுறுத்துவெனென்றவர்திண்சிறை
விரியுநீழலிற்செல்லவிண்சென்றனன். (௪௬)

ஆயசூழலறியவுணர்த்தியத்
தூயசிந்தையதோமில்குணத்தினான்
போயபின்னைப்பொருசிலைவீரரும்
ஏயசோலையினிதுசென்றெய்தினார். (௪௭)

* தாடகை-மலைகளில் திரிபவள்.

வார்ப்பொற்கொங்கைமருகியைமக்களை
ஏர்ப்பச்சிந்தனையிட்டவரக்கர்தம்
சீர்ப்பைச்சிக்கறத்தேறினன்சேக்கையில்
* பார்ப்பைப்பார்க்கும்பறவையிற்பார்க்கின்றான். (சஅ)

நான்காவது-சடாயுகாண்படலம்-முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-உஉச.

ஐந்தாவது.

சூர்ப்பணகைப் படலம்.

புவியினுக்கணியாயான்றபொருடந்துபுலத்திற்றாகி
அவியகத்துறைகடாங்கியைந்திணைநெறியளாவிச்
சவியுறத்தெளிந்துதண்ணென்றொழுக்கமுந்தழுவிச்சான்றோர்
கவியெனக்கிடந்தகோதாவிரியினைவீரர்கண்டார் (க)

வண்டுறைகமலச்செவ்விவாண்முகம்பொலியவாசம்
உண்டுறைகுவளையொண்கணொருங்குறநோக்கியூழின்
தெண்டிரைக்கரத்தின்வாரித்திருமலர்தூவிச்செல்வர்க்
கண்டடிபணிவதென்னப்பொலிந்ததுகடவுள்யாறு. (உ)

எழுவுறுகாதலாலிங்கிரைத்திரைத்தேங்கியேங்கிப்
பழுவநாட்குவளைச்செவ்விக்கண்பனிபரந்துசோர
வழுவிலாவாய்மைமைந்தர்வனத்துறைவருத்தநோக்கி
அழுவதுமொத்ததாலவ்வலங்குநீராறுமன்னோ. (ங)

நாளங்கொணளினப்பள்ளிநயனங்களளையநேமி
வாளங்களுறைவகண்டுமங்கைதன்கொங்கைநோக்கும்
நீளங்கொள்சிலையோன்மற்றைநேரிழைநெடியநம்பி
தோளின்கண்மனம்வைத்தன்னசுடர்மணித்தடங்கள்கண்டான். (ச)

ஓதிமமொதுங்கக்கண்டவுத்தமனுழையளாகும்
சீதைதன்னடையைநோக்கிச்சிறியதோர்முறுவல்செய்தான்
மாதவடானுமாண்டுவந்துநீருண்டுமீளும்
போதகநடப்பநோக்கிப்புதியதோர்முறுவல்பூத்தான் (ரு)

வில்லியறடக்கைவீரன்வீங்குநீராற்றின்பாங்கர்
வல்லிகளுடங்கக்கண்டான்மங்கைதன்மருங்குநோக்க
எல்லியங்குவளைக்கானத்திடையிடைமலர்ந்துநின்ற
அல்லியங்கமலங்கண்டாளண்ணறன்வடிவுகண்டாள். (சு)

* பார்ப்பு-இளமைப்பெயர். ''பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை,'' என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

அனையதோர்தன்மையாலவ்வருவிநீராற்றின்பாங்கர்ப்
பனிதருபடிவப் * பஞ்சவடியெனும்பருவச்சோலைத்
தனியிடமதனைநண்ணித்தம்பியாற்சமைக்கப்பட்ட
இனியபூஞ்சாலையெய்தியிருந்தனனிராமனிப்பால். (௭)

வேறு.

நீலமாமணிநிறநிருதர்வேந்தனை
மூலநாசம்பெறமுடிக்குமொய்ம்பினள்
மேலைநாளுயிரொடும்பிறந்துதான்விளை
காலமோர்ந்துடனுறைகடியநோயனாள். (௮)

செம்பராகம்படச்செறிந்தகூந்தலாள்
வெம்பராகுத்தனிவிளைந்தமெய்யினாள்
உம்பரானவர்க்குமொண்டவர்க்குமோதநீர்
இம்பரானவர்க்குமோரிறுதியீட்டுவாள். (௯)

வெய்யதோர்காரணமுண்மைமேயினாள்
வைகலுந்தமியளவ்வனத்துவைகுவாள்
நொய்தினிவ்வுலகெலாநுழையுநோன்மையள்
எய்தினளிராகவனிருந்தசூழல்வாய். (௧௦)

எண்டகுமிமையவரரக்கரெங்கண்மேல்
விண்டனர்விலக்குதியென்னமேலைநாள்
அண்டசத்தருந்துயிறுறந்தவையனைக்
கண்டனடன்னிளைக்கிறுதிகாட்டுவாள். (௧௧)

† சிந்தையினுறைபவற்குருவந்தீர்ந்ததால்
இந்திரற்காயிரநயனமீசற்கு
முந்தியமலர்க்கணோர்மூன்றுநான்குதோள்
உந்தியினுலகளித்தாற்கென்றுன்னுவாள். (௧௨)

கற்றையஞ்சடையவன்கண்ணிற்காய்தலால்
இற்றவனன்றுதொட்டின்றுகாறுந்தான்
நற்றவமியற்றியவ்வரங்கனல்லுருப்
பெற்றனனாமெனப்பெயர்த்துமெண்ணுவாள். (௧௩)

தரங்களினமைந்துதாழ்ந்தழகின்சார்பின்
மரங்களுநிகர்க்கிலமலையம்புல்லிய
உரங்களினுயர்திசையோம்புமானையின்
கரங்களேயிவன்மணிக்கரமென்றுன்னுவாள். (௧௪)

---

* பஞ்சவடி-ஓர்தலம். † சிந்தையினுறைபவற்குருவந்தீர்ந்தது-மனத்திலுறையும் மன்மதனுக்கு உருவம்போயிற்று.

வின்மலைவல்லவன்வீரத்தோளொடும்
கன்மலைநிகர்க்கிலகனிந்தநீலத்தின்
நன்மலையல்லதுநாமமேருவும்
பொன்மலையாதலாற்பொருலாவதென்பாள் (௧௫)

தாளுயர்தாமரைத்தளங்கடம்மொடும்
கேளுயர்நாட்டத்துக்கிரியின்றோற்றத்தான்
தோளொடுதோள்செலத்தொடர்ந்துநோக்குறின்
நீளியவல்லகணெடியமார்பென்றாழ். (௧௬)

அதிகநின்றொளிருமிவ்வழகனுண்முகம்
பொதியவிழ்தாமரைப்பூவையொப்பதோ
கதிர்மதியாமெனிற்கலைகடேயுமம்
மதியெனின்மதிக்குமோர்மறுவுண்டென்பரால். (௧௭)

எவன்செயவினியவிவ்வழகையெய்தினான்
அவன்செயத்திருவுடம் ‡ பலசநோற்கின்றான்
நவன்செயத்தகையவிந்நளினகாட்டத்தான்
தவன்செயத்தவன்செய்ததவனென்கின்றாள். (௧௮)

உடுத்தநீராடையருளுருவச்செவ்வியள்
பிடித்தருநடையினள்பெண்மைநன்றிவன்
அடித்தலந்தீண்டலினவனிக்கம்மயிர்
பொடித்தனநிகர்க்குமாற்புல்லென்றுன்னுவாள். (௧௯)

வாணிலைமருங்குலான்வயங்குசோதியைக்
காணிலனேகொலோகதிரியனாயகன்
சேணெலாம்புல்லொளிசெலுத்திச்சிந்தையின்
நாணலன்மீமிசைநடக்கின்றானென்றாள். (௨௦)

குப்புறற்கரியமாக்குன்றைவென்றுயர்
இப்பெருந்தோளவனிதழுக்கேற்பதோர்
ஒப்பெனவுலகமேலுரைக்கினுள்ளமே
துப்பெனிற்றுப்புடையாதைச்சொல்லுகேன். (௨௧)

நற்கலைமதியுறவயங்குநம்பிதன்
எற்கலைதிருவரையெய்தியேமுற
வற்கலைநோற்றனமாசிலாமணிப்
பொற்கலைநோற்றிலபோலுமாலென்றாள். (௨௨)

தொடையமைநெடுமழைத்தொங்கலாமெனக்
கடைகுழன்றிடைநெரிகரியகுஞ்சியைச்

‡ அலசநோற்கின்றான் வாடத்தவஞ்செய்கின்றான்.

சடையெனப்புனைந்திலனென்னிற்றையலார்
உடையுயிர்யாவையுமுடையுமாலென்றான். (உ௩)

நாறியநகையணிநல்லபுல்லினல்
ஏறியசெவ்வியினியற்றமோவென
மாறகன்முழுமணிக்கரசின்மாட்சிதான்
வேறொருமணியினல்விளங்குமோவென்பாள். (உ௪)

கரந்திலனிலக்கணமெடுத்துக்காட்டிய
பரந்தருநான்முகன்பழிப்புற்றானரோ
இரந்திவனிணையடிப்பொடியுமேற்கிலாப்
புரந்தரனுலகெலாம்புரக்கின்றானென்றாள். (உ௫)

நீத்தமும்பரவையுங்குறுகநெஞ்சிடைக்
கோத்தவன்புணர்விடைக்குளிப்பமீக்கொள
* ஏத்தவம்புரியவொன்றீகலான்பொருள்
காத்தவன்புகழெனத்தேயுங்கற்பினாள். (உ௬)

வான்றனில்வரைந்ததோர்மாதரோவியம்
போன்றனள்புலர்ந்தனள்புழுங்குநெஞ்சினள்
தோன்றலசுடர்மணித்தோளினாட்டங்கள்
ஊன்றினள்பறிக்கவோராற்றம்பெற்றிலள். (உ௭)

நின்றனளிருந்தவனெடியமார்பகம்
ஒன்றுவெனன்றெனினமுதமுண்கினும்
பொன்றுவென்போக்கினியரிதுபோன்மெனாச்
சென்றெதிற்சிர்பதோர்செய்கைதேடுவாள். (உ௮)

எயிறுடையரக்கியெவ்வுயிருமிட்டதோர்
வயிறுடையாளெனமறக்குமாதலால்
குயிலொருடர்குதலையோர்கொவ்வைச்செவ்விவாய்
மயிலொருடரியலியாய்மருவனன்றென. (உ௯)

பங்கயச்செல்வியைமனத்துப்பாவியா
அங்கையினுயமந்திரத்தையாய்ந்தனள்
திங்களிற்சிறந்தொளிர்முகத்தள்செவ்வியள்
பொங்கொளிவிசும்பினிற்பொலியத்தோன்றினள். (௩௰)

வேறு.

பஞ்சியொளிர்விஞ்சு † குளிர்ப்பல்லவமனுங்கச்
செஞ்செவியகஞ்சநிமிர்சீறடியளாகி

---

* ஏத்தவம்புரிய-எல்லாரும்துதிக்கின்ற தருமத்தைச்செய்ய.
† குளிர்பல்லவமனுங்க-குளிர்ந்ததளிர்களும்உப்பாகாமையால்வருந்த

அஞ்சொலிளமஞ்ஞையெனவன்னமெனமின்னும்
வஞ்சியெனநஞ்சமெனவஞ்சமகள்வந்தாள். (௩௧)

பொன்னொழுகுபூவிலுறைபூவையெழில்பூவைப்
பின்னெழில்கொள் * வாளிணைபிறழ்ந்தொளிர்முகத்தாள்
கன்னியெழில்கொண்டதுகலைத்தடமணித் † தேர்
மின்னிழிவதன்மையிதுவிண்ணிழிவதென்ன (௩௨)

கானினுயர்கற்பகமுயிர்த்தகதிர்வல்லி
மேனிநனிபெற்றுவிளைகாமநெறிவாசத்
தேனின்மொழியுற்றினியசெவ்விநனிபெற்றோர்
மானின்விழிபெற்றுமயில்வந்ததெனவந்தாள். (௩௩)

நூபுரமுமேகலையுநூலுமறலோதிப்
பூமுரலும்வண்டுமிலைவபூசலிடுமோசை
தாமுரைசெய்கின்றதொருதையல்வருமென்னாக்
கோமகனுமத்திசைகுறித்தனன்விழித்தான். (௩௪)

விண்ணருளவந்ததொருமெல்லமுதமென்ன
வண்ணமுலைகொண்டிடைவணங்கவருபோழ்தத்
தெண்ணருளியேழைமைதுடைத்தெழுமெய்ஞ்ஞானக்
கண்ணருள்செய்கண்ணனிருகண்ணினெதிர்கண்டான். (௩௫)

பேருழையநாகருலகிற்பிறிதின்வானின்
பாருழையினில்லதொருமெல்லுருவுபாரா
ஆருழையடங்குமழகிற்கவதியுண்டோ
நேரிழையர்யாவரிவர்நேரெனநினைந்தான். (௩௬)

அவ்வயினவாவசதனகத்துடையவன்றன்
செவ்விமுகமுன்னியடிசெங்கையினிறைஞ்சா
வெவ்வியநெடுங்கணயில்வீசியயல்பாரா
கல்வியினொதுங்கியிறைநாணியயனின்றாள். (௩௭)

தீதில்வரவாகதிருநின்வரவுசேயோய்
போதவுளதெம்முழையோர்புண்ணியமதன்றோ
ஏதுபதியேதுபெயர்யாவருறவென்றான்
§ வேதமுதல்பேதையவடன்னிலைவிரிப்பாள். (௩௮)

வேறு.

பூவிலோன்புதல்வன்மைந்தன்புதல்விமுப்புறங்கள்செற்ற
சேவலோன்றுணைவனானசெங்கையோன்றங்கைதிக்கின்

---

* கணைவாள் ஈண்டுகண்கள். † தேர்-அல்குலுக்கு ஒப்பு.
§ வேதமுதல்-வேதங்களால் துதிக்கப்படுமாதிபகவன்.

மாவெலாந்தொலைத்துவெள்ளிமலையெடுத்துலகமூன்றும்
காவலோன்பின்னைகாமவல்லியாங்கன்னியென்றாள் (௩௯)

அவ்வுரைகேட்டவீரனையுறுமனத்தான்செல்கை
செவ்விதன்றிதலாகுஞ்சிறிதென்றுணரச்செங்கண்
வெவ்வுருவமைந்தோன்றங்கையென்றதுமெய்ம்மையாயின்
இவ்வுருவியைந்ததன்மையியம்புதியியல்புனென்றான். (௪௦)

தூயவன்பணியாமுன்னஞ்சொல்லுவாள்சோர்விலாளம்
மாயவல்லரக்கரோடுவாழ்வினைமதிக்கலாதேன்
ஆய்வுருமனத்தேனாகியறந்தலைநிற்பதானேன்
தீய்வினைதீயநோற்றுத்தேவரிற்பெற்றதென்றான் (௪௧)

இமையவர்தலைவனேயுமெளிமையினேவல்செய்யும்
அமைதியினுலகமூன்றுமாள்பவன்றங்கையாயின்
சுமையுறுசெல்வத்தோடுந்தோன்றலைதுணையுமின்றித்
தமியைநீவருதற்கொத்ததன்மையென்றையலென்றான். (௪௨)

வீரனஃதுரைத்தலோடுமெய்யிலாள்விமலயானச்
சீரியரல்லார்மாட்டுச்சேர்கிலென்றேவர்பாலும்
ஆரியமுனிவர்பாலுமடைந்தனெனிறைவீண்டோர்
காரியமுண்மைநின்னைக்காணியவந்தேனென்றாள். (௪௩)

அன்னவளுரைத்தலோடுமையனுமறிதற்கொவ்வா
நன்னுதன்மகளிர்சிந்தைநன்னெறிப்பாலவல்ல
பின்னிதுதெரியுமென்னாப்பெய்வளைத்தோளியென்பாள்
என்னைகாரியத்தைசொல்லஃதியையுமேலிழைபபலென்றான். (௪௪)

தாமுறுகாமத்தன்மைதாங்களேயுரைப்பதென்ப
தாமெனலாவதன்றாலருங்குலமகளிர்க்கம்மா
ஏமுறுமுயிர்க்குநோவேனென்செய்கேன்யாருமில்லேன்
காமனென்றொருவன்செய்யும்வன்மையைக்காத்தியென்றாள். (௪௫)

சேணுறநீண்டுமீண்டுசெவ்வரிசிதரிவெவ்வே
றேணுறமிளிர்ந்துநாளுவிதம்புரண்டிருண்டவாட்கட்
பூணியல்கொங்கையன்னாளம்மொழிபுகறலோடும்
நாணிலணையளெய்யணல்லளுமல்லவென்றான். (௪௬)

பேசலனிருந்தவள்ளலுள்ளத்திதின் * பெற்றியோரான்
பூசல்வண்டரற்றுங்கூர்ந்தற்பொய்மகள்புகன்றவெண்கண்
ஆசைகண்டருளிற்றுண்டோவன்றெனலுண்டோவென்னும்
ஊசலாலுலாவுகின்றாண்மீட்டுமோருரைச்சொல்வாள். (௪௭)

* பெற்றி தன்மை.

எழுதருமேனியாயீண்டெய்தினையறிந்திலாதேன்
முழுதுணர்முனிவரெவல்செய்தொழின்முறையின்முற்றிப்
பழுதருபெண்மையோடிளமையும்பயனின்றேகப்
பொழுதொடுநாளும்வாளாகழிந்தனபோலுமென்றாள். (௪௮)

நிந்தனையரக்கிநீதிநிலையிலாள்வினைமற்றெண்ணி
வந்தனளாகுமென்றவ்வள்ளலுமனத்துட்கொண்டான்
சுந்தரீமரபிற்கொத்ததொன்மையின்றுணிவிற்றென்றால்
அந்தணர்பாவைநீயானரசரில்வந்தேனென்றான். (௪௯)

ஆரணமறையோனெந்தையருந்ததிக்கற்பினெம்மோய்
தாரணிபுரந்தசாலகடங்கர்தமரபின்றையல்
போரணிபொலங்கொள்வேலாய்பெருந்தலையிகழ்தற்கொத்த
காரணமிதுவேயாயினென்னுயிர்காண்பேனென்றாள். (௫௦)

அருத்தியளனையகூறவகத்துறுநகையின்வெள்ளைக்
குருத்தெழுகின்றநீலக்கொண்டலுண்டாட்டங்கொண்டான்
வருத்தநீங்கரக்கர்தம்மின்மானுடர்மணத்தனங்கை
பொருத்தமன்றென்றுசாலப் * புலமையோர்புகல்வரென்றான். (௫௧)

பராவருஞ்சிரத்தையாரும்பத்தியின்பயத்தையோரா
இராவணன்றங்கையென்றதேழமைப்பாலதென்றே
அராவணையமலனன்னாயறிவித்தேன்முன்னந்தேவர்ப்
பாவினினீங்கினேனப்பழிபடுபிறவியென்றாள். (௫௨)

ஒருவனோஉலகமூன்றிற்கோங்கொருதலைவனாங்கில்
ஒருவனோகுபேரனின்னோடுடன்பிறந்தவர்களன்னார்
தருவரேற்கோடுமென்றேற்றமியைவேறிடத்துச்சார
வெருவுவெனங்கையென்றான்வேதத்தினறிவைவென்றான். (௫௩)

காந்தர்ப்பமென்பதுண்டாற்காதலிற்கலந்தசிந்தை
மாந்தர்க்குமடந்தைமார்க்குமறைகளேவகுத்தகூட்டம்
ஏந்தற்பொற்றோளினாயிஃதியைந்தபினெனக்குமூத்த
வேந்தர்க்கும்விருப்பிற்றாகும்வேறுமோருரையுண்டென்றான் (௫௪)

முனிவரோடுடையர்முன்னேமுதிர்ப்பகைமுறைமைநோக்கார்
தனியைநீயாதலான்மற்றவரொடுந்தழுவற்கொத்த
வினையமீதல்லதில்லைவிண்ணுநின்னாட்சியாக்கி
இனியாயன்னர்வந்துன்னேவலினிற்பரென்றாள். (௫௫)

நிருதர்தமருளும்பெற்றேனின்னலம்பெற்றேனின்னோ
டொருவருஞ்செல்வத்தியாண்டுமுறையவும்பெற்றேனென்றோ

* புலமையோர்கணிதவல்லோர்.

திருநகர்தீர்த்தபின்னர்ச்செய்தவம்பயந்ததென்று
வரிசிலைவடித்ததோளான்வாளெயிறிலங்கநக்கான். (௫௬)

விண்ணிடையிம்பர்நாகர்விரிஞ்சனேமுதலோர்க்கெல்லாம்
† கண்ணிடையொளியின்பாங்கர்க்கடிகமழ்சாலைநின்றும்
பெண்ணிடையரசிதேவர்பெற்றநல்வரத்தாற்பின்னர்
மண்ணிடைமணியின்வந்தவஞ்சியேபோல்வாள்வந்தாள். (௫௭)

ஊன்சுடவுணங்குபேழ்வாயுணர்விலியுருவநாறும்
வான்சுடர்ச்சோதிவெள்ளம்வந்திடைவயங்கநோக்கி
மீன்சுடர்விண்ணுமண்ணும்விரிந்தபோரரக்கரென்னும்
கான்சுடமுளைத்தகற்பின்கனலியைக்கண்ணிற்கண்டாள். (௫௮)

மருவொன்றுகூந்தலாளைவனத்திவன்கொண்டுவாரான்
உருவிங்கிதுடையராகமற்றையோர்யாருமில்லை
அரவிந்தமலருணீங்கியடியிணைபடியிற்றோயத்
திருவிங்குவருவாள்கொல்லோவென்றகந்திகைத்துநின்றாள். (௫௯)

பண்புறநெடிதுநோக்கிப்படைக்குநர்சிறுமையல்லால்
எண்பிறங்கழகிற்கெல்லையில்லையாமென்றுநின்றாள்
கண்பிறபொருளிற்செல்லாகருத்தெனினஃதேகண்ட
பெண்பிறந்தேனுக்கென்றாலென்படும்பிறருக்கென்றாள். (௬0)

பொருதிறத்தானைநோக்கிப்பூவையைநோக்கிநின்றாள்
கருதமற்றினிவேறில்லைகமலத்துக்கடவுடானே
ஒருதிறத்துணரநோக்கியுருவினுக்குலகமூன்றின்
இருதிறத்தார்க்குஞ்செய்தவரம்பிவரிருவரென்றாள். (௬௧)

பொன்னைப்போற்பொருவின்மேனிப்பூவைப்பூவண்ணத்தானிம்
மின்னைப்போலிடையாளோடுமேவுமெய்யுடையனல்லன்
தன்னைப்போற்றகையோரில்லாத்தளிரைப்போலடியினாளும்
என்னைப்போலிடையேவந்தாளிகழ்விப்பேனிவளையென்று. (௬௨)

வருமிவண்மாயம்வல்லள்வஞ்சனையரக்கிநெஞ்சம்
தெரிவிலதேறுந்தன்மைசீரியோய்செயலிற்றன்றால்
உருவிதுமெய்யதன்றாலூனுகர்வாழ்க்கையாளை
வெருவினெனெய்திடாமல்விலக்குதிவீரவென்றாள். (௬௩)

ஒள்ளிதினுணர்வுமின்னேயுன்னையாரொளிக்குமீட்டார்
தெள்ளியநலத்தினுன்சிந்தனைதெரிந்ததம்மா
கள்ளவல்லரக்கிபோலாமிவளைநீகாண்டியென்று
வெள்ளியமுறுவன்முத்தம்வெளிப்படவீரனக்கான். (௬௪)

---

† கண்ணிடையொளியின்பாங்கர் - கண்ணினுள்ளசோதியாகிய ஸ்ரீ ராமபிரான் பக்கலில்.

ஆயிடையமுதின்வந்தவருந்ததிக்கற்பினஞ்சொல்
வேயிடைதோளினளும்வீரனைச்சேரும்வேலை
நீயிடைவந்ததென்னைநிருதர்தம்பாவையென்னாக்
காயெரியனையகள்ளவுள்ளத்தாள்கதித்தலோடும். (௬௫)

அஞ்சினளஞ்சியன்னமின்னிடையலசவோடிப்
பஞ்சின்மெல்லடிகளோவப்பதைத்தனள்பருவக்கால
மஞ்சிடைவயங்கித்தோன்றும்பவளத்தின்வல்லியென்னக்
குஞ்சரமனையவீரன் * குவவுத்தோடழுவிக்கொண்டாள். (௬௬)

வளையெயிற்றவர்களோடேவரும்விளையாட்டென்றாலும்
விளைவனதீமையேயாமென்பதையுணர்ந்துவீரன்
உளைவனவியற்றலொல்லையுன்னிலையுணருமாயின்
இளையவன்முனியுநங்கையேகுதிவிரைவினென்றான். (௬௭)

பொற்புடையரக்கிபூவிற்புனலினிற்பொருப்பில்வாழும்
† அற்புடையுள்ளத்தாருமநங்கனுமமரர்மற்றும்
எற்பெறத்தவஞ்செய்கின்றாரென்னைநீயிகழ்வதென்னே
கற்பொறைநெஞ்சினில்லாக்கள்வியைநச்சியென்றாள். (௬௮)

தன்னொடுந்தொடர்விலாதேமென்னவுந்தவிராடானிக்
கன்னெடுமனத்திசொல்லுங்கள்ளவாசகங்களென்னா
மின்னொடுதொடர்ந்துசெல்லுமேகம்போன்மிதிலைவேந்தன்
பொன்னொடும்புனிதன்போயப்பூம்பொழிற்சாலைபுக்கான். (௬௯)

புக்கபின்போயதென்னுமுணர்வினள்பொறையுணீங்கி
உக்கதாமுயிரளொன்றமுயிர்த்திலளொடுங்கிநின்றாள்
தக்கிலண்மனத்துள்யாதுந்தழுவிலன்சலமுங்கொண்டாள்
மைக்கருங்குழலினண்மாட்டன்பினில்வலியனென்பாள். (௭0)

நின்றிலளவனைச்சேருநெறியினைநினைந்துபோனாள்
இன்றிவனாகம்புல்லேனெனினுயிரிழப்பெனென்னாப்
பொன்றிணிசரளச்சோலைப்பளிக்கறைப்பொதும்பர்புக்காள்
சென்றதுபரிதிமேல்பாற்செக்கர்வந்திறுத்ததன்றே. (௭௧)

வேறு.

அழிந்தசிந்தையளாயயர்வாள் ‡ வயின்
மொழிந்தகாமக்கடுங்கனன்மூண்டதால்
வழிந்தநாகத்தின்வன்றொளைவாளெயிற்
றிழிந்தகார்விடமேறுவதென்னவே. (௭௨)

---

* குவவுத்தோள்-திரண்டுயர்ந்ததோள்.

† அன்பு-அற்பெனத்திரிந்தது. ‡ வயின்-இடம்.

தாடகைக்கொடியாடடமார்பிடை
ஆடவர்க்கரசன்னயிலம்புபோல்
பாடவத்தொழின்மன்மதன்பாய்கணை
ஓடவுட்கியுயிருலைந்தாளரோ. (௭௩)

கலையுவாமதியேகறியாகவன்
சிலையின்மாரனைத்தின்னுசினைப்பினாள்
மலையமாருதமாகெடுங்காலவேல்
உலையமார்பிடையூன்றிடவோயுமால். (௭௪)

அலைக்குமாழிபடங்கிடவங்கையால்
மனைக்குலங்களிற்றார்க்குமனத்தினாள்
நிலைக்கும்வானினெடுமதிநிலா
மலைக்கநீங்குமிடுக்கினள்மாந்துவாள். (௭௫)

பூவெலாம்பொடியாகவிப்பூமியுள்
காவெலாமொடிப்பென்னெனக்காந்துவாள்
சேவலோடுறைசெந்தலையன்றிலின்
நாவினால்வலியெஞ்சநடுங்குவாள். (௭௬)

அணவிறிங்களைநுங்கவராவினைக்
கோணர்வெணொடியெனக்கொதித்துன்னுவாள்
* பணையின்மென்முலைமேற்பனிமாருதம்
புணரவாருயிர்வெந்துபுழுங்குமால். (௭௭)

கைகளாற்றன்கதிரிளங்கொங்கைமேல்
ஐயதண்பனியள்ளினளப்பினள்
மொய்கொடியிடைவெந்துமுருங்கிய
வெய்யபாறையில்வெண்ணெய்நிகர்க்குமால் (௭௮)

அளிக்குமெய்யுயிர்கான் † றழலஞ்சினள்
குளிக்குநீருங்கொதித்தெழக்கூசுமால்
விளிக்கும்வேலையைவெங்கணங்கனை
ஒளிக்கலாமிடமியாதெனவுன்னுமால். (௭௯)

வந்துகார்மழைதோன்றினுமாமணிக்
கந்துகாணினுங்கைத்தலங்கூப்புமால்

---

* பணையின்மென்முலை-பெரிய மெல்லியதனங்கள் அல்லது முரசு போன்ற முலையெனினும் பொருந்தும்.

† 'அழலஞ்சினன் குளிக்குநீருங் கொதித்தெழக்கூசும்' என்ற இடத்து, ''ஊருளெழுந்த வுருகெழுசெந்தீக்கு. நீருட்குளித்து முயலாகும்நீருட்குளிப்பினுங் காமஞ்சுடுமே'' என்றது அறியத்தக்கது.

* இந்துகாந்தத்தினீரநெடுங்கலும்
வெந்துகாந்தவெதுப்புறுமேனியாள். (௮௦)

வாமமாமதியும்பனிவாடையும்
காமனுந்தனைக்கண்டுணராவகை
நாமவாளெயிற்றோர்கதநாகம்வாழ்
சேமமால்வரையின்முழைசேருமால். (௮௧)

அன்னகாலையழன்மிகுதென்றலும்
முன்னின்மும்மடியாய்முலைவெந்துக
இன்னவாசெய்வதென்றறியாதிளம்
பொன்னின்வார்தளிரிற்புரண்டாளரோ; (௮௨)

வீரன்மேனிவெளிப்படவெய்யவள்
கார்கொண்மேனியைக்கண்டனளாமெனச்
சோரும்வெள்குந்துணுக்கெனுமவ்வுருப்
பேருங்கால்வெம்பிணியிடைப்பேருமால். (௮௩)

ஆகக்கொங்கையிணையனென்றஞ்சன
மேகத்தைத்தழுவும்மவைவெந்தன
போகக்கண்டுபுலம்புமப்புன்மையாள்
மோகத்துக்கோர்முடிவுமுண்டாங்கொலோ. (௮௪)

ஊழிவெங்கனலுற்றனளொத்துமவ்
வேழையாவியிறந்திலளென்பரால்
ஆழியானையடைந்தனள்பின்னையும்
வாழலாமெனுமாசைமருந்தினே. (௮௫)

வஞ்சனைக்கொடுமாயைவளர்க்குமென்
னெஞ்சுபுக்கெனதாவத்தைநீக்கெனும்
அஞ்சனக்கிரியேயருளாயெனும்
நஞ்சநக்கினள்போலநடுங்குவாள். (௮௬)

†காவியோகயலோவெனுங்கண்ணிணைத்
தேவியோதிருமங்கையிற்செவ்வியாள்
பாவியேனையும்பார்க்குங்கொலோவெனும்
ஆவியோயினுமாசையோய்விலாள். (௮௭)

மாண்டகற்புடையாண்மலர்மாமகள்
ஈண்டிருக்குநல்லாண்மகனென்னுமால்

---

† இந்துகாந்தம்-சந்திரனது பிரகாசம். இந்தபிரகாசத்தினாலே நீர்காலும் கல்லுக்குச் சந்திரகாந்தக்கல் என்று பெயர்.

† காவியோகயலோ ஓகாரமிரண்டும் ஐயவினைப்பொருளன.

வேண்டகிற்பினல்லான்வரமெய்யிடைத்
தீண்டகிற்பதன்றேதெறுங்காமமே. (அஅ)

ஆன்ற * காதலஃதுறவெய்துழி
மூன்றுலோகமுமூடுமரக்கராம்
என்றகாரிருணீக்கவிராகவன்
தோன்றினானெனவெய்யவன்றோன்றினான். (அகூ)

வேறு.

விடியல்காண்டலினீண்டுதனுயிர்கண்டவெய்யாள்
படியிலாண்மருங்குள்ளளவெனையவன்பாரான்
கடிதினோடினெடுத்தொல்லைக்கரந்தவள்காதல்
வடிவினானுடன்வாழ்வதேவாழ்வெனமதியா. (கூ0)

வந்துநோக்கினள்வள்ளல்போயொருமணித்தடத்தான்
சந்திநோக்கினனிருந்ததுகண்டனடம்பி
இந்துநோக்கியநுதலியைக்காத்தயலிருண்ட
கந்தநோக்கியசோலையிலிருந்ததுகாணாள். (கூக)

தனியிருந்தனள்சமைந்தென்சிந்தனைதாழ்வுற்
றினியிருந்தெனக்கென்னுவதில்லெனவெண்ணாத்
துனியிருந்தவன்மனத்தினடோசையைத்தொடர்ந்தாள்
கனியிரும்பொழில்காத்தயலிருந்தவன்கண்டான். (கூஉ)

நில்லடீஇயெனக்கடுகினன்பெண்ணெனநினைந்தான்
வில்லெடாதவள்வயங்கெரியாமெனவிரிந்த
சில்லலோதியைச்செங்கையிற்றிருகுறப்பற்றி
ஒல்வயிற்றுதைத்தொளிகினர்சுற்றுவாளுருவி. (கூங)

ஊக்கித்தாங்கிவிண்படர்வெம்மென்றருக்கெழுவாளை
நூக்கிநொய்தினின்வெய்திழையேலெனநுவலா
மூக்குங்காதும்வெம்முரண்முலைக்கண்களுமுறையால்
போக்கிப்போக்கியசினத்தொடும்புரிகுழல்விட்டான். (கூச)

அக்கணத்தவள்வாய்திறந்தாற்றியவமலை
இக்கணத்தினுஞ்சென்றதுதேவர்தஞ்செவியும்
புக்கதுற்றதுபுகல்வதென்மூக்கெனும்புழையூ
டுக்கசோரியினீரமுற்றுருகியதுலகம். (கூரு)

கொலைதுமித்துயர்கொடுங்கதிர்வாளினக்கொடியாள்
முலைதுமித்துயர்மூக்கினைநீக்கிய † முறைமை

* காதல் எல்லாப்பொருளையும் நுகர்தற்குச்செல் லும் வேட்கை.

† மூத்தம் எனப்பாடமுமுண்டு, முகூர்த்தம் மூத்தம் என வடசொற் சிதைவு.

மலைதுமித்தெனவிராவணன்மணியுடைமகுடத்
தலைதுமித்தற்குநாட்கொண்டதொத்ததோர்தனமை. (௯௬)

அதிரமாநிலத்தடிபதைத்தரற்றியவரக்கி
கதிர்கொள்காலவேற்கரன்முதனிருதர்வெங்கதப்போர்
எதிரிலாதவரிறுதியினிமித்தமாவெழுந்தாண்
முதிரமாரிபெய்கார்நிறமேகமொத்துயர்ந்தாள். (௯௭)

உயரும்விண்ணிடைமண்ணிடைவிழுங்கிடந்துழைக்கும்
அயருங்கைகுலைத்தலமருவாருயிர்சோரும்
பெயருபெண்பிறந்தேன்பட்டபிழையெனப்பிதற்றும்
துயருமஞ்சிமுன்றொடர்ந்திலாத்தொல்குடிப்பிறந்தாள். (௯௮)

ஒற்றுமூக்கினையுலையுறுதீயெனவுயிர்க்கும்
எற்றுங்கையினைநிலத்தினிலினைத்தடங்கொங்கை
பற்றும்பீர்க்குமெய்வெயர்க்குந்தன்பருவலிக்காலால்
சுற்றுமோடுமேபோய்ச்சோரிநீர்சொரிதரச்சோரும். (௯௯)

ஊற்றுமிக்கநீருவியினொழுகியகுருதிச்
சேற்றுவெள்ளத்துட்டிரிபவடேவருமிரியக
கூற்றமுட்குந்தன்குலத்தினோர்பெயரெலாங்கூறி
ஆற்றகிற்கிலாள்பற்பலபன்னிநின்றழைத்தாள். (௪௦௦)

வேறு.

நிலையெடுத்துநெடுநிலத்துநீயிருக்கத் * தாபதர்கள்
சிலையெடுத்துத்திரியுமிதுசிறிதன்றோதேவரெதிர்
தலையெடுத்துவிழியாமைசமைப்பதேதழலெடுத்தான்
மலையெடுத்ததனிமலையேயிவைகாணவாராயோ. (௪௦௧)

புலிதானேபுறத்தாகக்குட்டிகோட்படாதென்ன
ஒலியாயுலகுரைக்குமுரைபொய்யோவூழியினும்
சலியாதமூவருக்கும்வானவர்க்குந்தானவர்க்கும்
வலியானேயான்பட்டவலிகாணவாராயோ. (௪௦௨)

ஆர்த் † தானைக்கரசுந்தியமரர்கணத்தொடுமடர்ந்த
போர்த்தானையிந்திரனைப்பொருதலைப்போர்தொலைத்து
வேர்த்தானையுயிர்கொண்டுமீண்டானைவெரிந்பண்டு
பார்த்தானேயான்பட்டபழிவந்துபாராயோ. (௪௦௩)

காற்றினையும்புனலினையுங்கனலினையுங்கடுங்காலக்
கூற்றினையும்விண்ணினையுங்கோளினையும்பணிகோடற்

---

* தாபதர்.தாபஸரென்ற வடசொல்லின்றிரிபு; தவஞ்செய்பவரென்று பொருள். † ஆனைக்கரசு-ஐராவதம்.

காற்றினைநீயிண்டிருவர்மானுடவர்க்காற்றுது
மாற்றினையோவுன்வலத்தைச்சிவன்றடக்கை * வாள்கொண்டாய்.()

உருப்படிவமன்மதனையொத்துளரேயாயினுமுன்
† செருப்படியிற்பொடியொவ்வாமானுடரைச்சீறுதியோ
நெருப்படியிற்பொடிசிதறநிறைந்தமதத்திசையானை
மருப்பொடியப்பொறுப்பிடியத்தோணிமிர்த்தவலியோனே. (கoரு)

தேனுடையநறுந்தெரியற்றேவரையுந்தெறுமாற்றல்
தானுடையவிராவணற்குந்தம்பியர்க்குந்தவிர்ந்ததோ
வூனுடையவுடம்பினராயெங்குலத்தோர்க்குணவாய
மானுடவர்மருங்கேபுக்கொடுங்கினதோவலியம்மா. (கoசு)

மரனேயுநெடுங்கானின்மறைந்துறையுந்தாபதர்கள்
உரனேயோவடலரக்கரோய்வேயோவுற்றெதிர்ந்தார்
அரனேயோவயனேயோவரியேயோவெனுமாற்றற்
கரனேயோயான்பட்ட ‡ கையறவுகாணாயோ. (கoஎ)

இந்திரனுமலரயனுமிமையவரும்பணிகேட்பச்
சுந்தரிபல்லாண்டிசைப்பவுலகேழுந்தொழுதேத்தச்
சந்திரன்போற்றனிக்குடைக்கீழ்நீயிருக்குஞ்சவைநடுவே
வந்தடியேனுனதுமுகங்காட்டவல்லேனோ. (கoஅ)

உரநெரிந்துவிழவென்னையுதைத்துருட்டிமூக்கரிந்த
நரனிருந்துதோள்பார்க்கநானிடந்துபுலம்புவதோ
கரனிருந்தவனமன்றோவிவைபடவுங்கடவேனோ
அரனிருந்தமலையெடுத்தவண்ணாவோவண்ணாவோ (கoகூ)

நசையாலேமூக்கிழந்துநாணமிலாநான்பட்ட
வசையாலேநினதுபுகழ்மாசுண்டதாகாதோ
திசையானைவிசைகலங்கச்செருச்செய்துமருப்பொசித்த
இசையாலேநிறைந்தபுயத்திராவணவோவிராவணவோ. (கக0)

கானமதினிடையிருவர்காதொடுமூக்குடனரிய
மானமதாற்பாவியேனிவண்மடியக்கடவேனோ
தானவரைக்கருவறுத்துச்சதமகனைத்தளையிலிட்டு
வானவரைப்பணிகொண்ட § மருகாவோமருகாவோ. (ககக)

ஒருகாலத்துலகேழுமுருத்தெரியத்தனுவொன்றால்
திருகாதசினந்திருகித்திசையானைத்துஞ்செலநூறி

---

* சிவபிரானிடமிராவணன்பெற்ற வாளுக்குச் சந்திரஹாஸமெனப் பெயர். † செருபடியுத்தபூமி. செருப்பினடியிலுள்ள எனச்சிலேடை.

‡ கையறவு துன்பம். § மருகன் மருமகன்; இங்கேஉடன்பிறந்தான் மகன்.

இருகாலிற்புரந்தரனையிருந்தளையினிடுவித்த
மருகாவோமானுடர்வலிகாணவாராயோ. (௧௧௨)

கல்லீரும்படைத்தடக்கையடற்கரதூடணர்முதலா
அல்லீருஞ்சுடர்மணிப்பூணரக்கர்குலத்தவதரித்தீர்
கொல்லீரும்படைக் * கும்பகருணனைப்போற்குவலயத்துள்
எல்லீருமுறங்குதிரோயானழைத்தல்கேளீரோ. (௧௧௩)

என்றின்னபலபன்னியிகலரக்கியழுதிரங்கிப்
† பொன்றுன்னும்படியகத்துப்புரள்கின்றபொழுதகத்து
நின்றந்தியகத்துநிறைதவத்தின்குறைமுடித்து
வன்றிண்கைச்சிலைநெடுந்தோண்மரகதத்தின்மலைவந்தான். (௧௧௪)

வந்தானையிடைநோக்கிவயிறலைத்துமழைக்கண்ணீர்
செந்தாரைக்குருதியொடுசெழுநிலத்தைச்சேறாக்கி
அந்தோவுன்றிருமேனிக்கன்பிழைத்தவன்பிழைபால்
எந்தாயான்பட்டபடியிதுகாணென்றெதிர்வீழ்ந்தாள். (௧௧௫)

விரிந்தாயகூந்தலாள்வெய்யவினையாதானும்
புரிந்தாளென்பதுதன்பொருவரியதிருமனத்தால்
தெரிந்தானின்றினையானேயிவளைநெடுஞ்செவியொடுமூக்
கரிந்தானென்பதுமுணர்ந்தானவளைநீயாரென்றான். (௧௧௬)

அவ்வுரைகேட்டலரக்கியறியாயோநீயென்னைத்
தெய்வுரையென்றோருலகுமில்லாதசீற்றத்தான்
வெவ்விலைவேலிராவணனும்விண்ணுலகமுதலாக
எவ்வுலகுமுடையானுக்குடன்பிறந்தேன்யானென்றாள். (௧௧௭)

தாமிருந்தகையரக்கர்புகலொழியத்தவமியற்ற
யாமிருந்தநெடுஞ்சூழற்கென்செயவந்தீரெனலும்
வேமிருந்தையெனக்கனலும்வெங்காமவெம்பிணிக்கு
மாமருந்தேநெருநலினும்வந்திலனோயானென்றாள். (௧௧௮)

செங்கயல்போற்கருநெடுங்கட்டேமருதாமரையுறையும்
நங்கையிவரெனநெருநடந்தவரோநாமென்னக்
கொங்கைகளுங்குழைக்காதுங்கொடிமூக்குங்குலைத்தழித்தால்
அங்கணரசேயொருவர்க்கழியாதோவழகென்றாள். (௧௧௯)

மூரன்முறுவலனிளையமொய்ம்பினோன்முகநோக்கி
வீரவிரைந்தனையிவடன்விடுகாதுங்கொடிமூக்கும்

---

* கும்பகருணன் குடம்போன்ற காதினையுடையான்.

† பொன்றுன்னும்படி அழகுவிளங்கும் பூமி, இலக்குமியாகிய பிராட்டியிருக்குமிடமென்று கூறலுமமையும்.

ஈரநினைந்திவளிழைத்தபிழையென்னென்றிறைவினவச்
சூரநெடுந்தகையவனையடிவணங்கிச்சொல்லுவான். (௧௨0)

* தேட்டந்தான்வாளெயிற்றிற்றின்னவோதீவினையோர்
கூட்டந்தான்புறத்துளதோகுறித்தபொருளறிந்திலமால்
நாட்டந்தானெரியுமிழநல்லாண்மேற்பொல்லாதாள்
ஓட்டந்தாளரிதினிவளுடன்றெழுந்தாளெனவுரைத்தான். (௧௨௧)

ஏற்றவளை ‡ வரிசிலையோனியம்பாமுனிகலாக்கி
சேற்றவளைதன்கணவனருகிருப்பச்சினந்திருகிச்
சூற்றவளைநீருழக்குந்துறைசெழுநீர்வளநாடா
§ மாற்றவளைக்கண்டக்காலழலாதோமனமென்றாள். (௧௨௨)

பேடிப்போர்வல்லரக்கர்பெருங்குலத்தையொருங்கவிப்பான்
தேடிப்போந்தனமின்றுநீமாற்றஞ்சிலவிளல்பி
வீடிப்போகாதேயிம்மெய்வனத்தைவிட்டகல
ஓடிப்போவென்றுரைத்தவுரைகடந்தாற்கவளுரைப்பாள். (௧௨௩)

நரைதிரையென்றில்லாதநான்முகனேமுதலமரர்
கரையிறந்தோரிராவணற்குக்காணிருங்குடியென்றால்
விரையுமிதுநன்றன்றுவேறாகயானுரைக்கும்
உரையுளதுநமக்குறுதியுணர்வுளதேலென்றுரைப்பாள். (௧௨௪)

ஆக்கரியமூக்குங்கையரியுண்டாளென்றுரை
நாக்கரியுந்தயமுகனார் ○ நாகரிகரல்லாமை
மூக்கரிந்துநுங்குலத்தைமுதலரிந்தீரினியுமக்குப்
போக்கரிதிவ்வழகையெல்லாம்புல்லிடையேயுகுத்தீரே (௧௨௫)

வான்காப்போர்மண்காப்போர்மாநகர்வாழுலகந்
தான்காப்போரினித்தங்கடலைகாத்துநின்றுங்கள்
ஊன்காக்கவுரியார்யாரென்னையுயிர்நீர்காக்கின்
யான்காப்பெனல்லாலவ்விராவணனருளரென்றாள். (௧௨௬)

காவற்றிண்கற்பமைந்தார்தம்பெருமைதாங்கழறார்
ஆவற்பேரன்பினலைகின்றேனுமன்றோ
தேவர்க்கும்வலியான்றன்றிருத்தங்கையாளிவளீண்
டேவர்க்கும்வலியாளென்றிளையானுக்கியம்பீரோ. (௧௨௭)

---

* தேட்டந்தான்-தேடிவந்ததுதான் ஓட்டந்தாள்-ஓடிவந்தாள்.
‡ வரிசிலையோன் ஈண்டு இலக்குமணன். § மாற்றவள்-சக்களத்தியை
○ நாகரிகம்-கண்ணோட்டம் "பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம்வேண்டுபவர்" என்புழிநாகரிகம்-கண்ணோட்டமென்றார், பரிமேலழகியாரும்.

மாப்போரிற்புறங்காப்பேன்வான்சுமந்துசெலவல்லேன்
* தூப்போலக்கனிபலவுஞ்சுவையுடையதரவல்லேன்
காப்போரைக்கைத்தேன்னீர்கருதியதுதருவேனிப்
பூப்போலுமெல்லியலாற்பொருளென்றேபுகல்வீரால் (௧௨௮)

குலத்தாலுநலத்தாலுங்குறித்தனவேகொணர்தக்க
வலத்தாலுமதியாலும்வடிவாலுமடத்தாலும்
நிலத்தாரும்விசும்பாருநேரிழையாரென்னைப்போல்
சொலத்தானிங்குரியாரைச்சொல்லீரோவல்லீரேல் (௧௨௯)

† போக்கினீரென்னுசி ‡ போய்த்தென்னீர்பொறுக்குவீரேல்
ஆக்குவனோர்நொடிவரையினழகமைவெனருள்கூரும்
பாக்கியமுண்டெனினதனாற்பெண்மைக்கோர்பழுதுண்டோ
மேக்குயருநெடுமூக்குமடந்தையர்க்குமிகையன்றோ. (௧௩௦)

விண்டாரேயல்லாரோவேண்டாதார்நான்வேண்டின்
உண்டாயகாதலினென்னுயிரென்பதுமதன்றோ
கண்டாரேகாதலிக்குங்கட்டழகும்விடமன்றோ
கொண்டாரேகொண்டாடுமுருப்பெற்றாற்கொள்ளீரோ. (௧௩௧)

சிவனுமலர்த்திசைமுகனுந்திருமாலுந்தெறுகுலிசத்
தவனுமடுத்தொன்றாகிநின்றன்னவுருவோனே
புவனமனைத்தையுமொருதன்பூங்கணையாலுயிர்வாங்கும்
அவனுமுனக்கிளையானோயிவனேபோலருளிலனேல். (௧௩௨)

வேறு.

பொன்னுருவப்பொருகழலீர்புழைகாணமூக்கரிவான்பொருள்வேறுண்
இன்னுருவமிதுகொண்டிங்கிருந்தொழியுநம்மருங்கேயேகாளப்பால் [டோ
பின்னிவளையயலொருவர்பாராரென்றேயரிந்தீர்பிழைசெய்தீரோ
அன்னதனையரிந்தன்றேவன்பிரட்டிபூண்டதுநானறிவிலேனே. (௧௩௩)

வெப்பழியாநெடுவெகுளிவேலரக்கர்தறிந்துவெகுண்டுநோக்கின்
அப்பழியாலுலகனைத்துநம்பொருட்டாலழிந்தனவாமறத்தைநோக்கி
ஒப்பழியச்செய்கிலாருயர்குலத்துததோன்றிறனுணர்ந்துநோக்கி [றான்.
இப்பழியைத்துடைத்துதவியினிதிருத்திரென்றொடுமென்றிறைஞ்சிநின்

நாடறியத்துயரிழைத்தநவையரக்கிநின்னன்னைதன்னைநல்கும்
தாடகையையுயிர்கவர்ந்தசரமிருந்ததன்றியுநான்றவமேற்கொண்டு [தேன்
தோடகையத்துறுமலர்த்தாரிகலரக்கர்குலந்தொலைப்பான்றோன்றிநின்
போடகலப்புல்லொழுக்கைவல்லரக்கியென்றிறைவன்புகலும்பின்னும்.

---

* தூ-தசை "தூயதூற்றைறம்பகைதசையுந்தூவே." என்பதுபிங்கலந்தை.
† போக்கினீர்-அரிந்தீர். ‡போய்த்தென்-அதனால்போயதென்னை,

தரையளித்ததனிநேமித்தயரதன்றன்புதல்வரியாந்தாய்சொற்றாங்கி
விரையளித்தகான்புகுந்தேம்வேதியருமாதவரும்வேண்டநீண்ட
கரையளித்தற்கரியபடைக்கடலரக்கர்குலந்தொலைத்துக்கண்டாய்பண்டை
* வரையளித்தகுலமாடநகர்புகுவேமிவைதெரியமனக்கொளென்றான். ()

நெறித்தாரைசெல்லாதநிருதரெதிர்நில்லாதேநெடியதேவர்
மறித்தாரீண்டிவரிருவாமானுடவரென்றுதுவல்லையாகின
† வெறித்தாரைவேலரக்கர்விறலியக்கர்முதலினர்நீயிடலோரென்று
குறித்தாரையாவரையுங்கொணருதியேனின்னெதிரேகோறுமென்றான்.

கொல்லலாமாயங்கள்குறித்தனவேகொள்ளலாங்கொற்றமுற்ற
வெல்லலாமற்றியற்றும்வினையெலாங்கடக்கலாமேல்வாய்நீங்கிப்
பல்லெலாமுறத்தோன்றும்பகுவாயளென்றுதுபார்த்தியாயின்
செல்லெலாஞ்சுரந்தளிக்குநீர்நாடகேளென்றுநிருதிகூறும். (கஙஅ)

காம்பறியுந்தோளாளைகைவிடேனெனினும்யான்மிகையோகள்வர்
ஆம்பொறியிலடரக்கரவரோடேசெருச்செய்வானமைந்தீராயின்
தாம்பொரியிற்பலமாயத்தரும்பொறிகளறிந்தவற்றைத்தடுப்பெனன்றே
பாம்பறியும்பாம்பின்காலெனமொழியும்பழமொழியும்பார்த்திலீரோ. ()

உளங்கோடலுனையிழைத்தாளுளளொருத்தியென்னுதியேனிருதரோடும்
களங்கோடற்குரியசெருக்கண்ணியக்காலொருமூவேங்கலந்தகாலை
‡ குளங்கோடுமென்றிதுவுமுறகோளேயென்றணருங்குறிக்கோளில்லா
இளங்கோவோடனையிருத்திவிருகோளுஞ்சிறைவைத்தாற் கிளையேனெ
ன்றான்.

பெருங்குலாவுறுநகர்க்கேயேகுநாள்வேண்டுமுருப்பிடிம்பெனன்றேல்
அருங்கலாமுற்றிருந்தானெனினுமீங்கிளையவன்றானரிந்தநாசி
ஒருங்கிலாவிவளோடுமுறைநவேனேவென்பானேவிறைவவொன்றும்
மருங்கிலாதவளோடுமென்றேநீநெடுங்காலம்வாழ்ந்ததென்பாய் (கசக)

என்றவண்மேலிளையவன்றானிலங்கிலைவேல் கடைக்கணியாவிவளையீண்டு
கொன்றுகளைநேமென்றானடிதலைக்குமருனென்கொல்கோவேயென்ன
நன்றதுவேயாமன்றேபோகாளேலாகவெனநாதன்கூற
ஒன்றுமிவரெனக்கிரங்காருயிரிழப்பெனிற்கிலெனவரக்கியுன்னு (கசஉ)

எற்றநெடுங்கொடிமூக்குமிருகாதுமுலையிரண்டுமிழந்தும்வாழ
ஆற்றவனேவஞ்சனையாலுமையுள்ளபரிசறிவானமைந்தன்றோ
காற்றினிலுங்கனலினிலுங்கடியானைக்கொடியானைக்கரனையுங்கள் [ள்
கூற்றுவனையிப்பொழுதேகொணர்கின்றேனென்றுசலங்கொண்டுபோனாள்

இ-வது சூர்ப்பணகைப்படலம் முற்றிற்று.

ஆ- திருவிருத்தம்-ஙசுஎ.

---

* வரைதல்-எழுதுதல் இனிவரை-மலையெனக்கொண்டு மலைபோன்ற குலமாடமென்னலுமமையும். † வெறிதாரைவேல் அரக்கர்-கோபாவேசத்தையும் கூர்மை பொருந்திய வேலாயுதத்தையுமுடைய அரக்கருள்ளும் வெறிதார் ஐவேலரக்கர் எனப்பிரித்து வாசனைபொருந்திய வெற்றி மாலையையணிந்த அழகிய வேலினையுடையரெனப்பொருள் கோடலுமாம் ‡ குளங்கோடும் குளம்பறித்துவிடுவோம் அதாவது அவ்வரக்கரது தலைகொள்ளுவோம்என்றபடி இளைத்தல்தளர்தல்.

ஆறவது

கரன்வதைப்படலம்.

இருந்தமாக்கரன்றாளிணையின்மிசை
* சொரிந்தசோரியள்கூந்தலடும்பெனத்
தெரிந்தமூக்கினள்வாயினள்செக்கர்மேல்
விரிந்தமேகமெனவிழுந்தாளரோ. (க)

அழுங்குநாளிதென்றந்தகனுணையால்
தழுங்குபேரியெனத்தனித்தேங்குவான்
முழங்குமேகமுடித்தவெந்தீயினால்
புழுங்குநாகமெனம்புரண்டாளரோ. (உ)

வாக்கிக்கொக்கப்புகைமுந்துவாயினான்
நோக்கிக்கூசலர்நுன்னையுத்தன்மையை
ஆக்கிப்போனவரார்கொலென்றவனன்
மூக்கிற்சோரிமுழீஇக்கொண்டகண்ணினான். (ங)

இருவர்மானுடர்தாபதரேந்திய
வரிவில்வாட்கையர்மன்மதன்மேனியார்
தருமநீரர்தயரதன்காதலர்
† செருவினேருநிருதரைத்தோமவார். (ச)

ஒன்றுநோக்கலருன்வலியோங்கதன்
நின்றுநோக்கிநிறுத்துநினைப்பினார்
வென்றிவேற்கைநிருதரைவேரறக்
கொன்றுநீக்குதுமென்றுணர்கொள்கையார். (ரு)

மண்ணினோக்கருவானினின்மற்றினில்
எண்ணிநோக்குறின்யாவர்க்குநோக்கலாப்
பெண்ணினோக்குடையாளொருபேதையன்
கண்ணினோக்கியுரைப்பருங்காட்சியாள். (சு)

கண்டுநோக்கருங்காரிகையாடனைக்
கொண்டுபோவலிலங்கையர்கோக்கென
விண்டுமேல்விழுந்தேனைவெகுண்டவர்
துண்டமாக்கினர்மூக்கெனச்சொல்லினாள். (எ)

---

* அரக்கியின் செம்பட்டமயிர்க்கும் அரத்தத்துக்கும் செவ்வானமும் அவள்கரியமேனிக்கு மேகமும் உவமை சொரிந்தஎன்பதைக கூந்தலொடும் தும்பெனத்தெரிந் தஎன்பதைவாயொடுங்கூட்டுக.

† செருவில்போரில்சொருவில் என்றும் பிரிக்கலாம்.

கேட்டனென்னுரைகண்டிலன்கேடினர்
தோட்டநூங்கிற்றொளையுறமூக்கினைக்
காட்டெனாவெழுந்தாளெதிர்கண்டவர்
நாட்டந்தீயவுலகைநடுக்குவான். (௮)

எழுந்துநின்றலகேழுமெறிந்துகப்
பொழிந்தகோபக்கனலுகப்பொங்குவான்
கழிந்துபோயினர்மானுடரென்னுங்கால்
அழிந்ததோவிவ்வரும்பழியென்னுமால். (௯)

வருகதேரெனாமாத்திரைமாடுளோர்
இருகைமால்வரையேழொடேழனார்
ஒருகையாலுலகேந்துமுரத்தினார்
தருகவிப்பணியெம்வயிற்றாவென்றார் (௧௦)

சூலம்வாண்மழுத்தோமரஞ்சக்கரம்
காலபாசங்கதைபொருங்கையினார்
வேலைஞாலம்வெருவுறுமார்பினார்
* ஆலகாலந்திரண்டன்னவாக்கையார். (௧௧)

வெம்புகோபக்கனலர்விலக்கினார்
நம்பியெம்மடிமைத்தொழினன்றெனா
உம்பர்மேலின்றுருத்தனைபோதியோ
இம்பர்மேலினியாமுளேமோவென்றார். (௧௨)

நன்றுசொல்லினிர்நாணிச்சிறார்கண்மேல்
சென்றுபோர்செயிற்றேவர்சிரிப்பரால்
கொன்றுசோரிகுடித்தவர்கொள்கையை
வென்றுமீளுதிர் † மெல்லியலோடென்றான். (௧௩)

என்னலோடும்விரும்பியிறைஞ்சினார்
சொன்னநாணிலி ‡ யந்தகன்றூதென
அன்னவள்பிற்படர்வாரெனவாயினார்
மன்னன்காதலர்வைகிடநண்ணினார். (௧௪)

துமிலப்போர்வல்லரக்கர்குச்சுட்டினாள்
அமலத்தொல்பெயராயிரத்தாழியான்
விமலப்பாதநினைவினிருந்தவக்
கமலக்கண்ணனைக்கையினிற்காட்டினாள். (௧௫)

---

* ஆலகாலம்-நிறத்துக்கும் கொடியசெயலுக்கும் உவமை.
† மெல்லியல்-பண்புத்தொகைபுறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.
‡ அரக்கர் குழுமுழுதும் அழிதற்கு இச்சூர்ப்பணகையே காரணமாக விருத்தல்பற்றி 'அந்தகன்றூதெனவன்னள்' என்றார்.

ஏற்றுவாம் * பிடித்தேந்துதுமென்குநர்
பற்றுவாநெடும்பாசத்தினென்குநர்
முற்றுவாமிறைசொன்முறையாலெனாச்
சுற்றினார்வரைசூழ்ந்தன்னதோற்றத்தார். (கசு)

ஏத்துவால்மையிராமனிளவலைக்
காத்திதையலையென்றுதன்கற்பகம்
பூத்ததன்னபொருவிறடக்கையால்
ஆத்தகா[illegible]னருவரைவாங்கினான். (கஎ)

வாங்கிவாளொடுவாளிபெய்புட்டிலும்
தாங்கித்தாமரைக்கண்ணனச்சாலையை
நீங்கியிவ்வழிசேர்மினடாவென
வீங்குதோளன்மலைதலைமேயினான். (கஅ)

மழுவும்வாளிவயங்கொளிமுச்சிகைக்
கழுவுங்காலவெந்தீயன்னகாட்சியார்
எழுவினீடடக்கையெழுநான்கையும்
தழுவும்வாளிகளாற்றலஞ்சார்த்தினான். (க௯)

மரங்கள்போனெடுவாளொடுதோள்விழ
† உரங்களானடர்ந்தார்க்குரவோன்விடும்
சரங்களோடினதைக்கவவர்கடம்
சிரங்களோடினதீயவரோடினர். (உ0)

ஒளிருவேற்கரற்குற்றதுணர்த்தினான்
குளிருகோபவெங்கோளரிமாவடக்
களிறெலாம்படக்கைதலைமேலுறப்
பிளிறியோடும்பிடியன்னபெற்றியார். (உக)

அங்கரக்கரவிந்தழிந்தாரெனப்
பொங்கரத்தம்விழிவழிபோந்துக
வெங்கரப்பெயரோன்வெகுண்டான்விடைச்
சங்கரற்குந்தடுப்பருந்தன்மையான். (உஉ)

அழையென்றேரெனக்காக்கு ‡ வென்மோர்படை
உழையரோடியொருநொடியோகன்மேல்
மழையன்மாமுரசெற்றுதிர்வல்லென்றான்
முழையின்வாளரியஞ்சமுழங்குவான். (உங)

---

* பிடித்து-இடைநிலத்தீவகம். † உரம்-ஊக்கம், மார்பு, வலி எனப் பலபொருள்குறிக்கும் ஒருசொல் உரவோன் - வலிமையையுடையோன் ஒருதாமாகிய வுரவோர்" என்னும் புறப்பாட்டினும் இப்பொருட்டாதல் காண்க. ‡ வென்-வெற்றி

பேரியோசைபிறத்தலும்பெட்புறு
மாரிமேகம்வரம்பிலவந்தெனத்
தேரின்சேனைதிரண்டனதேவர்தம்
ஊருநாகருலகுமுலைந்தவே. (௨௪)

போர்ப்பெரும்பணைபொம்மென்முழக்கமா
நீர்த்தரங்கநெடுந்தடந்தோள்களா
ஆர்த்தெழுந்திறுதியினார்கலி
கார்க்கருங்கடல்கால்கிளர்ந்தென்னவே. (௨௫)

காடுதுன்றுவிசும்புகரந்தென
நீடியெங்குநிமிர்ந்தநெடுங்கொடி
ஓடுமெங்கள்பசுவென்றுவந்தெழுந்
தாடுகின்றவலகையினாடவே. (௨௬)

தறியினீங்கியதாழ்தடக்கைத்துணை
குறிகொளாமதவேழக்குழுவனார்
செறியும்வாளொடுவாளிடைதேய்த்துகும்
பொறியிர்கானெங்கும்வெங்கனல்பொங்கவே. (௨௭)

* முருடிரண்டுமுழங்குறத்தாக்கொலி
உருடிரண்டெழுந்தோரொலியுட்புக
அருடிரண்டவருக்கன்றன்மேல்வழங்
கிருடிரண்டுவந்தீண்டியதென்னவே. (௨௮)

தலையின்மாசுணந்தாங்கியதாரணி
நிலைநிலாதுமுதுகைநெளிப்புற
உலைவிலேழுலகத்தினுமோங்கிய
மலையெலாமொடுதொக்கென்னவே. (௨௯)

வேறு.

வல்லியக்குழாங்களோமழையினீட்டமோ
ஒல்லியத்தொகுதியோவோங்குமோங்கலோ
அல்லமற்றரிகளினனிகமேயெனப்
பல்பதினாயிரம்படைக்கைவீரரே. (௩0)

0 ஆலிகள்பூண்டனவரிகள்பூண்டன
மீளிகள்பூண்டனவேங்கைபூண்டன
ஞாளிகள்பூண்டனநரிகள்பூண்டன.
கூளிகள்பூண்டனகுதிரைபூண்டன (௩௧)

* முருடு-பத்தல், பத்தருமாம்.

o ஏற்றினமார்த்தனவேனமார்த்தன
காற்றினமார்த்தனகழுதையார்த்தன
தோற்றினமாத்திரத்துலகுசூழ்வரும்
பாற்றினமார்த்தனபணிலமார்த்தன. (௩௨)

o தேரினத்துவன்றினிசிறுகட்செம்முகக்
காரினத்துவன்றினகாலிற்கால்வரு
தாரினங்குழுமினதடையில்கூற்றன்ன
பேரினங்கடலெனப்பெயருங்காலையே. (௩௩)

மழுக்களுமயிற்களும்வயிரவாட்களும்
எழுக்களுந்தோமரத்தொகெயுமீட்டியும்
முழுக்களுமுசுண்டியுந்தண்டுமுத்தலைக்
கழுக்களுமுலக்கையுக்காலபாசமும். (௩௪)

குந்தமுங்குலிசமுங்கோலும்பாலமும்
அந்தமில்சாபமுஞ்சரமுமாழியும்
வெந்தொழில்வலயமும்விளங்குசங்கனு
பந்தமுங்கப்பணப்படையும்பாசமும் (௩௫)

ஆதியினருக்கனுமனலுஞ்மசுறும்
சோதியசோரியுந்துவுந்துன்னிய
ஏதிகண்மிடைந்தனவிமையவர்க்கெலாம்
வேதனைகொடுத்தனவாகைவேய்ந்தன. (௩௬)

ஆயிரமாயிரங்களிற்றினுற்றலா
மாயிருஞாலத்தைவிழுங்கும்வாயினர்
தீயெரிவிழியினர்நிருதர்சேனையின்
நாயகர்பதின்மரோடடுத்தால்வரே (௩௭)

ஆறினோடாயிரமமைந்தவாயிரம்
கூறினவொருபடைகுறித்தவம்படை
ஏறினவேழினதிரட்டியென்பரால்
ஊறினசெனையின்றொகுதியுன்னுவார் (௩௮)

உரத்தினருருமெனவுறாறும்வாயினர்
கரத்தெரிபடையினர்கமலத்தோன்றரும்
வரத்தினர்மலையெனமழைதுயின்றெழு
சிரத்தினர்தருக்கினர்செருக்குஞ்சித்தையார். (௩௯)

---

o (௩௧-௩௨ ௩௩) கருத்து;- இரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைப் படையும் ஒன்றுசேர்ந்தனவென்பதாம்.

விண்ணளவிடநிமிர்ந்துயர்ந்தமேனியர்
கண்ணளவிடவருமார்பர்காலினால்
மண்ணளவிடுநெடுவேலத்தர்வானவர்
எண்ணளவிடவருஞ்செருவென்றேறினர். (௪0)

இந்திரன்முதலினோரெறிந்தமாப்படை
சிந்தினதெரித்துகச் * செறிந்ததோளினர்
அந்தகனடிதொழுதடங்குமாணையார்
வெந்தழலுருவுகொண்டனையமேனியார். (௪௧)

சூலமும்பாசமுந்தொடர்ந்தசெம்மயிர்ச்
சாலமுந்தறுகணுமெயிறுந்தாங்கினர்
ஆலமும்வெளிதெனுநிறத்தராற்றலால்
காலனுங்காலனென்றயிர்க்குங்காட்சியார். (௪௨)

கழலினர்தாரினர் † கவசமார்பினர்
நிழலுறுபூணினர்நெறித்தநெற்றியர்
அழலுறுகுஞ்சியரமரைவேட்டுவெந்
தழலுறுமனத்தினரொருமையெய்தினர். (௪௩)

மருப்பிருமதக்களிற்றமரர்மன்னனும்
விருப்புறுமுகத்தெதிர்விழிக்கின்வெந்நிடும்
எருந்பொருவிலவுறுமுலகமூன்றினும்
செருப்பருத்தினவுறுசிகரத்தோளினர். (௪௪)

குஞ்சரங்குதிரைபேய்குரங்குகோளரி
வெஞ்சினக்கரடிநாய்வேங்கையாளியென்
றஞ்சுறக்கனல்புரைமுகத்தரார்கலி
நஞ்சுதொக்கெனப்புரைநயனத்தார்களும். (௪௫)

எண்கையரெழுகையரேழுமெட்டுமாய்க்
கண்கனல்சொரிதருமுகத்தர் ‡ காலினர்
வண்கையில்வளைத்துயிர்வாரிவாயிலிட்
டுண்கையினுவகையருலப்பிலார்களும். (௪௬)

இயக்கரிற்பரித்தனவுணரிட்டன
$ மயக்குறுத்தமரரைவலியின்வாங்கின
துயக்கில்கந்தர்ப்பரைத்துரந்துவாரின
நயப்புறுசித்தரைநலிந்துவவ்வின. (௪௭)

---

* செறிந்த என்றற்கு வன்மைபொருந்திய எனவும் மிகுந்த எனலும் பொருந்தும்.

† கவசம்-இருப்புச்சட்டை. § காலினர்-கால்களையுமுடையவர்; காற்றின்தன்மையுடையவர்கள் என்றும் பொருள்கோடலாம்.

$ மயக்குறுத்தல்-மாயைப்போர்புரிந்து மயங்கச்செய்தல்.

கொடிதழைகவிகைவான் றொங்கல்குஞ்சரம்
படியுறபதாகைமீவிதானம்பல்வகை
இடையிலாதெங்கணுமிசையமீமிசை
மிடைதலினுலகெலாம்வெயிலிழப்பவே (௪௮)

எழுவரோடெழுவராமுலகமேழொடேழ்
தழுவியவென்றியர்தலைவர்தானையர்
மழுவினர்வாளினர்வயங்குசூலத்தர்
உழுவையொடரியெனவுடற்றுசீற்றத்தார். (௪௯)

வில்லினர்வாளினரிதழின்மீதிடும்
பல்லினர்மேருவைப்பறிக்குமாற்றலர்
புல்லினர்திசைதொறும்புரவித்தேரினர்
சொல்லினமுடிக்குறந்துனிவினெஞ்சினர். (௫௰)

* தூடணன்றிரிசிராத்தோன்றலாதியர்
கோடணைமுரசினங்குளிருசேனையர்
ஆடவருயிர்கவரலங்கல்வேலினர்
பாடவர்நிலையினர்பலருஞ்சுற்றினர். (௫௧)

ஆன்றமைமெறிபடையழுவத்தார்கலி
வான்றொடர்மேருவைவளைத்ததாமென
ஊன்றினதேரினனுயர்ந்ததோளினன்
தோன்றினன்யாவருந்துணுக்கமெய்தவே. (௫௨)

அசும்புறுமதகரிபுரவியாடகத்
தசும்புறுசயந்தனமாக்கர்தாடர
விசும்புறுதூளியான்வெண்மைமேயின
பசும்பரிபுகலவன்பைம்பொற்றேரரோ. (௫௩)

வனந்துகள்பட்டனமலையின்வானுயர்
கனந்துகள்பட்டனகடல்கடேர்ந்தன
இனந்தொகுதூளியாலிசைப்பதென்னினிச்
சினந்தொகுநெடுங்கடற் † சேனைசெல்லவே. (௫௪)

நிலைமிசைவிசும்பிடைநெருக்கலாநெடு
மலைமிசைமலையினம்வருவபோன்மலைத்
தலைமிசைத்தலைமிசைதாவிச்சென்றனர்
கொலைமிசைநஞ்செனக்கொதிக்குநெஞ்சினர். (௫௫)

---

* தூஷணன்-கரனுடைய தம்பி திரிசிரா மூன்றுதலைகளையுடையவன்
† சேனைநால்வகைப்படைக்கும்பொதுப்பெயராயினும் ஈண்டு சினமி
குதிபற்றிக்காலாட்படைமாத்திரையாய் நின்றது.

வந்ததுசேனைவெள்ளம்வள்ளியோன்மருங்குமாய
பங்கமாவினையமாளப்பற்றறுபெற்றியோர்க்கும்
உந்தருநிலையதாகியுடனுறைந்துயிர்கடம்மை
அந்தகர்க்களிக்குநோய்போலரக்கிமுன்னாகவம்மா. (௫௬)

தூரியக்குரலின்யானின்முழங்கிற்கணைத்துணுக்கங்கொள்ள
வார்சிலையொலிஞ்சியுறமெலாமறுக்கங்கொள்ள
ஆர்கலியாப்பினுட்கியசைவுறவரக்கர்சேனை
போர்வனத்திருந்தவீராருறைவிடம்புக்கதன்றே (௫௭)

வாய்புலர்ந்தழிந்தமெய்யின்வருத்தத்தவழியில்யாண்டும்
ஓய்விலகிமிர்ந்துவீங்குமுயிர்ப்பினவுலைந்தகண்ண
நீயவர்சேனைவந்துசேர்ந்தமைதெரியச்சென்று
வேய்தெரிந்துரைப்பபோன்றபுள்ளொடும்விலங்குமம்மா. (௫௮)

தூளியின்படலைவந்துதொடர்வுறமாமுந்துறும்
தாளிடையொடியுமோசைசடசடவொலிப்பக்கானத்
தாளிபுமரியுஞ்சியிரிதருமலக்கணோக்கி
மீளிமொய்ம்பினருஞ்சேனைமேல்வந்ததுளதென்றன்னு. (௫௯)

மின்னின்றசிலையன்வீரக்கவசத்தன்விசித்தவாளன்
பொன்னின்றவடிம்பின்வாளிப்புட்டிலன்புகையுநெஞ்சன்
நின்னின்றுகாண்டியான்செய்நிலையெனவிரும்பிநோரா
முன்னின்றபின்வந்தோனைநோக்கினன்மொழிவுற்றான். (௬0)

நெறிக்கொண்மாதவர்க்குமுன்னேநேர்தனநிருதராவி
பறிக்குவென்யானேயென்றபழமொழிபழுதுறாமே
வெறிக்கொள்பூங்குழலினாளைவீரநீவேண்டினேன்யான்
குறிக்கொடுகாத்தியின்னேகொல்வெனிக்குழுவையென்னு. (௬௧)

மரன்படர்கானமெங்குமதர்படிவந்தசேனை
கரன்படையென்பதெண்ணிக்கருநிறக்கமலக்கண்ணன்
சரன்படர்புட்டில்கட்டிச்சாபமுந்தரித்தான் * றன்னா
உரன்படர்தோளின் † மீளாக்கவசமிட்டுடைவாளார்த்தான். (௬௨)

மீளருஞ்செருவின்விண்ணுமண்ணுமென்மேல்வந்தாலும்
நாளுலந்தழியுமென்றோனுனக்குறைப்பதென்னே

---

* தன்னாவுரம்-எவராலும் வெல்லமுடியாத வலிமை.

† மீளாக்கவசம் ஸ்ரீராமபிரானுடலினின்றும் பிறர்கணையால் பெயர்த்துவிடமுடியாத வலியகவசம்.

ஆளியின்றுப்பினாயிவ்வமரெனக்கருளிநின்றன
தோளினைத்தின்னுகின்றசோம்பினைத்துடைத்தியென்றான். (சந)

என்றனனிளையவீரனிசைத்திலனிராமனோர்ந்தும்
குன்றனதோளினாற்றலுள்ளத்தினுணரக்கொண்டான்
அன்றியுமண்ணவானைமறக்கிலனங்கைகூப்பி
நின்றனனிருந்தாள்கண்ணீர்நிலனுறப்புலர்கின்றாள்பால். (சச)

குறையுறுமதியம்பூத்தகொம்பனாள்குழைந்துசோரத்
தழையுறுசாலைநின்றந்தனிச்சிலைதரித்தமேரு
மழையெனமுழங்குகின்றவாளெயிற்றரக்கர்காண
முழையினின்றெழுந்துசெல்லுமடங்கலின்முனிந்துசென்றான். (சரு)

தோன்றியதோன்றறன்னைச்சுற்சுட்டினள்காட்டிச்சொன்னாள்
வான்றொடர்மூங்கிறந்தவயங்குவர்நீயிதென்னத்
தான்றொடர்குலத்தையெல்லாந்தொலைக்குமாசமைந்துநின்றான்
என்றவந்தெதிர்த்தவீரனிவனிகலிராமனென்ன. (சசு)

கண்டனன்கனகத்தேர்மேற்கதிரவன்கலங்கிநீங்க
விண்டனினின்றவென்றிக்கரனெனும்விலங்கற்றோளான்
மண்டமர்யானேசெய்திம்மானுடன்வலியைநீக்கிக்
கொண்டனன்வாகையென்றுபடைஞரைக்குறித்துச்சொன்னான். (சஎ)

மானுடனொருவன்வந்தவலிகெழுசேனைக்கம்மா
காளிடமில்லையென்னுங்கட்டுரைகலந்தகாலை
யானுடைவென்றியென்னும்யாவருங்கண்டீர்நீர்
ஊனுடையிவனையானேயுண்குவெனுயிரையென்றான். (சஅ)

அவ்வுயிரைகேட்டவர்தானகம்பனென்றமைந்தகல்விச்
செவ்வியானொருவனையசெப்புவென்செருவிற்சால
வெவ்வியராதனன்றேவீரரிலாண்மைவீர
இவ்வயினுளவாந்தீயநிமித்தமென்றியம்பலுற்றான். (சகூ)

வேறு.

குருதிமாமழைசொரிந்தனமேகங்கள்குமுறிப்
பருதிவானவனூர்வளைப்புண்டதுபாராய்
கருதுவீரநின்கொடிமிசைக்காக்கையின்கணங்கள்
பொருதுவீழ்வனபுலம்புவநிலம்படப்புரள்வ. (எ0)

வாளின்வாய்களையீவளைக்கின்றனவயவர்
தோளுநாட்டமுமிடந்துடிக்கின்றனதுங்கி
மீளிமொய்ம்பரினிவுளிவீழ்கின்றனவிரவி
ஞாளியோடுநின்றுளைக்கின்றநரிக்குலம்பலவால். (எக)

பிடியெலாமதம்பெய்திடப்பெருங்கவுள்வேழம்
ஒடியுமான்மருப்புலகமுங்கம்பிக்குமுயர்வான்
இடியும்வீழ்ந்திடுமெருந்திடும்பெருந்திசையெவர்க்கும்
முடியின்மாலைகள் புலாலொடுமுழுமுடைநாறும். (எஉ)

இனையவாகலின்மானுடனொருவனென்றிவனை
நினையலாவதொன்றன்றதுநீதியாநின்ற
வினையெலாஞ்செய்துவெல்லலாந்தன்மையனல்லன்
புனையும்வாகையாய்பொறுத்தியென்றுரையெனப்புகன்றான். (எங)

உரைத்தவாசகங்கேட்டலுமுலகெலாமுலையச்
சிரித்துநின்றவன்சேவகத்தேவரைத்தேய
அரைத்தவம்பியாமலங்கெழிற்றோளமர்வேண்டி.
இரைத்துவீங்குவமானுடற்கெளியவோவென்றான். (எச)

என்னுமாத்திரத்தெறிபடையிடியெனவிடியா
மன்னர்மன்னவன்மதலையைவளைந்தனவளைத்த
மின்னும்வாளுளைமடங்கலைமுனிந்தனவேழம்
துன்னிஞலெனச்சுடுசினத்தரக்கர்தந்தொகுதி. (எரு)

வளைந்தகாலையில்வளைந்தனவிராமன்கைவரிவில்
விளைந்தபோரையுமாவதும்விளம்புதும்விசையால்
புளைந்தபாய்பரிபுரண்டனபுகர்முகப்பூட்கை
உளைந்தமால்வரையுருதுடிமடவொடிந்தென்ன. (எசு)

சூலமற்றனவற்றனசுடர்மழுத்தொகைவாள்
மூலமற்றனவற்றனமுரட்டண்டு § பிண்டி
பாலமற்றனவற்றனபகழிவெம்பகுவாய்
வேலுமற்றனவற்றனவில்லொடுபெல்லம். (எஎ)

தொடிதுணிந்தனதோளொடுதோமரந்துணிந்த
அடிதுணிந்தனகடக்களிறச்சொடுநெடுந்தேர்
கொடிதுணிந்தனகுரகதந்துணிந்தனகுலமா
முடிதுணிந்தனமுளையொடுதுணிந்தனமுசலம். (எஅ)

கருவிமாவொடுகரர்மதக்கைம்மலைக்கணத்தோ
டுருவிமாதிரத்தேர்டினசுடுசரமுதிரம்
அருவிமாரியிற்றேங்கினதவனியிலரக்கர்
திருவின்மார்பகந்திறந்தனதுறந்தனசிரங்கள். (எகூ)

ஒன்றுபத்துநூறாயிரங்கோடியென்றுணராத்
துன்றுபத்தியவிராகவன்சுடுகரந்துரப்பச்

---

§ பிண்டிபாலம்-பீலித்தண்டு. எஃகம் என்பனவாம்.

சென்றுபத்திரத்தலையெனமலைதிரண்டென்னக்
கொன்றுபத்தியிற்குவித்தனபிணப்பெருங்குன்றம். (௮0)

காடுகொண்டகாருலவைகள்கதழெரிகதுவச்
சூடுகொண்டனவெனத்தொடர்குருதிமீத்தோன்ற
ஆடுகின்றனவறுகுறையயிலம்புவிண்மேல்
ஓடுகின்றனவுயிரையுந்தொடர்வனவொத்த. (௮௧)

கைகள்வாளொடுகேளம்படக்கழுத்தறக்கவசம்
மெய்கள்போழ்படத்தாள்விழவெருவிடநிருதர்
செய்யமாத்தலைசிந்தினதிசையுறச்சென்ற
தையலார்நெடுவிழியெனக்கொடியனசரங்கள். (௮௨)

மாரியாக்கியவடிக்கணைவரைபுரைநிருதர்
பேரியாக்கையின்பெருங்கரைவயின்ஞெறும்பிறங்க
ஏரியாக்கினயாறுகளியற்றினநிறையச்
சோரியாக்கினபோக்கினவனமெனுந்தொன்மை. (௮௩)

அலைமிதந்தனகுருதியின்பெருங்கடலரக்கர்
தலைமிதந்தனநெடுந்தடிமிதந்தனதடக்கை
மலைமிதந்தனவாம்பரிமிதந்தனவயப்போர்ச்
சிலைமிதந்தனகொடியொடுமிதந்தனதேர்கள். (௮௪)

ஆயகாலையினனல்விழித்தார்த்திகலரக்கர்
தீயவார்கணைமுதலியவடுசினப்படைகள்
மேயமால்வரையொன்றினைவளைத்தனமேகம்
தூயதாரைகள்சொரிவனவாமெனச்சொரிந்தார். (௮௫)

சொரிந்தபல்படைதுணிபடத்துணிபடச்சரத்தால்
அரிந்துபோந்தனசிந்திடத்திசைதிசையகற்றி
நெரிந்துபார்மகண்முதுகிறவனமுற்றுநிறைய
விரிந்தசெம்மயிர்க்கருந்தலைமலையெனவீழ்த்தான். (௮௬)

கவந்தபந்தங்கள்களித்தனகுளித்தகைம்மலைகள்
சிவந்தபாய்ந்தவெங்குருதியிற்றிருகியசினத்தால்
நிவந்தவெந்தொழினிருதர்தநெடுநிணந்தெவிட்டி
உவந்தன்கழுதுயிர்சுமந்துலுக்கியதும்பர். (௮௭)

மருடருங்களிவஞ்சனை § வளையெயிற்றரக்கர்
கருடனஞ்சுறுகண்மணிகாகமுங்கவர்ந்த
இருடரும்புரத்திழுதையர்பழுதறற்கெளிதே
அருடருந்திறத்தறனன்றிவலியதுண்டாமோ. (௮௮)

§ வளையெயிறு-வளைந்தபற்கள், வக்கிரதந்தங்கள்.

வேறு.

பல்லாயிரமிருள்கீறியபகலோனெனவொளிரும்
வில்லாளனைமுனியாவெயிலயிலாமெனவிழியாக்
கல்லார்மழைகணமாமுகில்கடைநாள்விடுவனபோல்
எல்லாமொருதொடையாவுடனெய்தார்வினைசெய்தார். (அகூ)

எறிந்தாரெனவெய்தாரெனநினைந்தாரெனவெறிய
அறிந்தாரெனவறியாவகையயில்வாளியினறுத்தான்
செறிந்தாரையும்பிரிந்தாரையுஞ்செறுத்தாரையுஞ்சினத்தால்
மறிந்தாரையும்வலித்தாரையுமடித்தான்சிலைபிடித்தான். (கூ0)

வானத்தனகடலின்புறவலயத்தனமதிசூழ்
மீனத்தனமிளிர்குண்டலமிதுனத்தனமிடல்வெங்
கானத்தனமலையத்தனதிசைசுற்றியகரியின்
தானத்தனகாகுத்தனசரமுந்தியசரமே. (கூக)

மண்மேலனமலைமேலனமழைமேலனமதிதோய்
விண்மேலனநெடுவேலையின்மேல்கீழனமிடலோர்
புண்மேலனகுருதிப்பொழிதிரையாறுகள்பொங்கத்
திண்மேருவைக்குமார்பினையுருவித்திரிசரமே. (கூஉ)

பொலந்தாரினரனலின்சிகைபொதிகண்ணினரெவரும்
வலந்தாங்கியவடிவெம்படைவிடுவார்சரமழையால்
உலந்தாருடல்கடலோடுறவுலவாருடலுற்றார்
அலந்தார்நிசிசரராமெனவிமையோரொரமோர்த்தார். (கூங)

ஈரற்செறிகமலத்தனவிரதத்திரள்புளினம்
வீரக்கரிமுதலைக்குலமிதக்கின்றனருதிக்கும்
பாரக்குடர்மிடைபாசடைபடர்கின்றனபலவாம்
மூரித்திரையுதிரக்கடன்முழுகிக்கழுதெழவே. (கூச)

அழைத்தார்சிலரயர்ந்தார்சிலராழ்ந்தார்சிலர்கழிந்தார்
உழைத்தார்சிலருயிர்த்தார்சிலருருண்டார்சிலர்புரண்டார்
குழைத்தாழ்திரைக்குருதிக்கடல்குளித்தார்சிலர்கொலைவாய்
மழைத்தாரைகள்படப்பாரிடைமடித்தார்சிலருடைந்தார். (கூரு)

உடைந்தார்களைநகைசெய்தனருருடேரினருடனாய்
அடைந்தார்படைத்தலைவீரர்கள்பதினால்வருமயில்வாள்
மிடைந்தார்நெடுங்கடற்றானையர்மிடல்வல்லிசர்விரிநீர்
கடைந்தார்வெருவுறமீதெழுகவோமெனக்கொடியார். (கூசு)

நாகத்தினியொருவில்லியைகளிர்முப்புரர்முன்னான்
மாகத்திடைவளைவுற்றனரெனவள்ளலைமதியார்

ஆகத்தெழுகனல்கண்வழியுகவுற்றெதிரழன்றார்
மேகத்தினைநிகர்வில்லியையவளைத்தார்செருவிளைத்தார். (௯௭)

எய்தார்பலரெறிந்தார்பலர்மழுவோச்சினரெழுவால்
பெய்தார்புலர்புடைத்தார்பலர்கிடைத்தார்பலர்பொருப்பாப்
பெய்தார்மழைபிதிர்த்தாரெரிபிறைவாளெயிற்றரக்கர்
வைதார்பலர்தெழித்தார்பலர்மலையாமெனவளைத்தார். (௯௮)

தேர்பூண்டனவிலங்கியாவையுஞ்சிலைபூண்டெழுகொலையால்
பார்பூண்டனமதமாகரிபலிபூண்டனபரிமாத்
தார்பூண்டனவுடல்பூண்டிலதலைவெங்கெதிர்தழிவந்
தூர்பூண்டனபிரிந்தாலெனவிரிந்தாருயிலைந்தார். (௯௯)

* மால்பொத்தினமறடோருடன்மழைபொத்தினவழிசெம்
பால்பொத்தினநதியிற்கினர்படிபொத்தினபடர்வான்
மேல்பொத்தினகுழுவிண்ணவர்விழி † பொத்தினர்விரைவெங்
கால்பொத்தினர்கமன்றாதுவர்கடிதுற்றுயிர்கவர்வார். (௪௦௦)

பேயேறினசெருவேட்டெழுபித்தேறினர்பிலவாய்
காயேறினதலைமேனெநறியேறினவெரிகால்
வாயேறினவடிவாளியின் ‡ வானேறினர்வந்தார்
தீயேறிகலரியேறெனமுகிலேறெனச்செறிந்தார். (௪௦௧)

தலைசிந்தினவிழிசிந்தினதழல்சிந்தினதரைமேல்
மலைசிந்தினபடிசிந்தினவரிசிந்துரமழைபோல்
சிலைசிந்தினகணைசிந்தினதிசைசிந்தினதிசையோ
டிலைசிந்தினபொறிசிந்தினவுயிர்சிந்தினவுடலம். (௪௦௨)

வேறு.

படைப்பெருந்தலைவரும்படைத்ததேர்களும்
உடைத்தடம்படைகளுமொழியவுற்றெதிர்
விடைத்தடர்ந்தெதிர்ந்தவர்வீரன்வாளியால்
முடைத்தவெங்குருதியின்கடலின்மூழ்கினார். (௪௦௩)

சுற்றுறநோக்கினர்தொடர்ந்தசேனையில்
அற்றிலதலையெனுமாக்கைகண்டிலர்
தெற்றினரெயிறுகடிழிகினார்சினம்
முற்றினரிராமனைமுடுகுதேரினார். (௪௦௪)

ஏழிருதேரும்வந்திமைப்பின்முன்பிடைச்
சூழ்வனகணைகளிற்றுணியநூறினான்

* மால்-தப்பிப்பிழைக்க வழிகாணாது கொண்டமயக்கம்.
† பொத்துதல்-மூடுதல். ‡ வானேறினர்-இறந்தனர்.

ஆழியும்புரவியுமாளுமற்றவை
ஊழிவெங்காலெறியோங்கலொத்தவே. (௧௦௫)

அழிந்தனதேரவரவனிகீண்டுக
இழிந்தனர்வரிசிலையெடுத்தகையினர்
ஒழிந்திலர்சரங்களையுருமினேறெனப்
பொழிந்தனர்பொழிகனல்பொடிக்குங்கண்ணினர். (௧௦௬)

நூறியசரமெலா நுறுங்கவாளியால்
ஈறுசெய்தவர்சிலையேழொடேழையும்
ஆறினொடாறுமோரிரண்டுமெம்பினன்
கூறுசெய்தமத்தொழிற்கொதிப்பைநீக்கினன். (௧௦௭)

வில்லிழந்தனைவரும்வெகுளிமீக்கொளக்
கல்லுயர்நெடுவரைகடிதினேந்தினர்
ஒல்லையினுருத்துயர்விசும்பினோங்கிநின்
றெல்லுயர்பொறியுகவெறிதன்மேயினர். (௧௦௮)

○ கலைகளின்பெருங்கடல்கடந்தகல்வியான்
இலைகொள்வெஃபகழியேழிரண்டுவாங்கினன்
கொலைகொள்வெஞ்சிலையொடுபுருவங்கோட்டினன்
மலைகளுந்தலைகளும்வீழ்ந்தமண்ணினே. (௧௦௯)

படைத்தலைத்தலைவர்கள்படலும்பல்படை
புடைத்தடர்ந்தெதிரழல்புரையுங்கண்ணினர்
கிடைத்தனரரக்கர்கள்கீழுமேலுமாய்
அடைத்தனர்திசைகளையமரரஞ்சினர். (௧௧௦)

முழங்கினபெரும்பணைமூரிமால்கரி
முழங்கிவரிசிலைமுடுகுநாணொலி
முழங்கினசங்கொடுபுரவிமுற்றுற
முழங்கினவரக்கர்தமுகிலினார்ப்பரோ (௧௧௧)

வேறு.

வெம்படைநிருதர்வீசவிண்ணிடைமிடைந்தவீரன்
அம்பிடையறுக்கச்சிந்தியற்றனபடுமென்றஞ்சி
உம்பருமிரியல்போனாருலகெலாமுலைந்துசாய்ந்த
கம்பமிறிசையினின்றகளிறுங்கண்ணிமைத்தவன்றே. (௧௧௨)

வேறு.

அத்தலைத்தானையனளவிலாற்றலன்
முத்தலைக்குரிசில்பொன்முடியன்முக்கணன்

○ கலைகள்-தநுர்வேதமுதலிய நூல்கள்.

கைத்தலைச்சூலமேயனையகாட்சியான்
வைத்தலைப்பகழியான்மழைசெய்வில்லினன். (௧௧௩)

அன்னவனவெறுவாழியூழியீ
தென்னவந்தெங்கணுமிரைத்தசேனையுள்
தன்னிகர்வீரனுந்தமியன்வில்லினன்
துன்னிருளிடையதோர்விளக்கிற்றோன்றினன். (௧௧௪)

ஓங்கொளிவாளினனுருமினார்ப்பினன்
வீங்கியகவசத்தன்வெய்யகண்ணினன்
ஆங்கவனணிக்கெதிரணிகளாகலோர்
தாங்கினனிராமனுஞ்சரத்தின்றானையால். (௧௧௫)

தாளிடையற்றனதலையுமற்றன
தோளிடையற்றனதொடையுமற்றன
வாளிடையற்றனமழுவுமற்றன
கோளிடையற்றனகுடையுமற்றன. (௧௧௬)

கொடியொடுகொடிஞ்சினப்புரவிக்கூட்டறப்
படியிடைபடிந்தனபருத்ததேர்பல
கெடியவன்கடகரிபுரண்டகெற்றியின்
இடியொடுமுறிந்துவீழ்சிகரமென்னவே. (௧௧௭)

அற்றனசிரமெனவறிதநேற்றலர்
கொற்றவெஞ்சிலைச்சரங்கோத்துவாங்குவார்
இற்றவரிறுதவரெழுந்துவிண்ணினைப்
பற்றினமழையெனப்படைவழங்குவார். (௧௧௮)

கேடகத்தடக்கையர்கிரியின்றோற்றத்தர்
ஆடகக்கவசத்தர்கவந்தமாடவே
பாடகத்தரம்பையர்மருளப்பல்வித
நாடகத்தொழிலினைநடிப்பவொத்தவே. (௧௧௯)

கவரிவெண்குடையெனுநுரையகைம்மலை
சவறருசுறவமாழ்சுழியதண்டுறைப்
பவளப்படுமணிக்குவிகும்பண்ணைய
உவரியைப்புதுக்கினவுதிரயாறரோ. (௧௨௦)

‡ சண்டவெங்கடுங்கணைதடியத்தான்சில
திண்டிறல்வளையெயிற்றரக்கர்தேவராய்

‡ சண்டவெங் கடுங்கணை-வேகம்பொருந்திய கொடியபாணங்கள்.நம ன்போன்ற கொடிய கணைகளுமாம்.

வண்டெழல்புரிகுழன் மடந்தைமாரொடும்
கண்டனர்தம்முடைக்கவந்தநாடகம். (௧௨௧)

ஆய்வளை மகளிரோடமரிட்டத்தர்
தூயவெங்கடுங்கணை துணித்த தங்கடோள்
பேயொருதலைகொளப்பிணங்கிவாய்களின்
நாயொருதலைகொளநகையுற்றார்சிலர். (௧௨௨)

தெரிகணைமூழ்கலிற்றிறந்தமார்பினர்
இருவினைகடந்துபோயும்பொய்தினார்
நிருதர்தம்பெரும்படைநெடிதுநின்றவன்
ஒருவனென்றுள்ளத்தினாலைவுற்றாரரோ. (௧௨௩)

கைக்கரியன்னவன்பகழிகண்டவர்
மெய்க்குலம்வேரொடுந்துணிந்துவீழ்ந்தன
மைக்கருமனத்தொருவஞ்சன்மாண்பிலன்
பொய்க்கரிகூறியகொடுஞ்சொல்போன்றவே. (௧௨௪)

அஞ்சிறை * யறுபதமடைந்தகீடத்தைத்
தஞ்செனத்தன்மயமாக்குந்தன்மைபோல்
வஞ்சகத்தரக்கரைவளைத்துவள்ளறான்
செஞ்சரத்தூய்மையாற்றேவராக்கினான். (௧௨௫)

வலங்கொள்போர்மானுடன்வலிந்துகொன்றமை
அலங்கல்வேலிராவணற்கறிவிப்பாமெனச்
சலங்கொள்போராக்கர்தமுருக்கடாங்கின
இலங்கையினுற்றவக்குருதியாறரோ. (௧௨௬)

சூழ்ந்ததார்நெடும்படைபகழிசுற்றறப்
போழ்ந்துயிர்குடித்தலிற்புரளப்பொங்கினான்
தாழ்ந்திலன்முத்தலைத்தலைவன்சோரியின்
ஆழ்ந்ததேரம்பரத்தோட்டியார்க்கின்றான். (௧௨௭)

ஊன்றியதேரினானுருமின்வெங்கணை
வான்றொடர்மழையெனவாய்மையாவர்க்கும்
சான்றெனநின்றவத்தருமமன்னவன்
தோன்றறன்றிருவுருமறையத்தூவினான். (௧௨௮)

தூவியசரமெலாந்துணியவெங்கணை
ஏவினனிராமனுமேவியேழிரு
பூவியல்வாளியாற்பொலங்கொடேரழித்
தாவிவெம்பாகனையழித்துமாற்றினான். (௧௨௯)

---

* அறுபதம்-சினையாகுபெயராய் அறுகாற்பறவையை யுணர்த்திற்று.

அன்றியுமக்கணத்தமரரார்த்தெழப்
பொன்றெரிவடிம்புடைப்பொருவில்வாளியால்
வன்றொழிறியவன்மகுடமாத்தலை
ஒன்றொழித்திரண்டையுமுருட்டினனரோ. (கஙo)

தோழிந்தவ்வழித்திரிசிராவெனும்
பேரழிந்ததனினுமறம்பிழைத்திலன்
வாரழிந்துமிழ்சிலைவானநாட்டிழிக்
காரிழிந்தாலெனக்கணைகள்சிந்தினான். (கஙக)

எற்றியநுதலினனிருண்டகார்மழை
தோற்றியவில்லொடுந்தொடரமீமிசைக்
காற்றிடையழிந்தெனக்கார்முகத்தையும்
மாற்றரும்பகழியாலறுத்துமாற்றினான். (கஙஉ)

வேறு.

வில்லிழந்தனனென்னினும்விழித்தவாண்முகத்தின்
எல்லிழந்திலனிழந்திலன்வெய்யகதமிடிக்கும்
சொல்லிழந்திலன்றோள்வலியிழந்திலன்சொரியும்
கல்லிழந்திலனிழந்திலன்கறங்கெனத்திரிதல். (கஙங)

ஆளிரண்டுநூறுளவனவந்தரத்தொருவன்
மூளிரும்பெருமாயவெஞ்செருமுயல்வானைத்
தாளிரண்டையுமிரண்டுவெங்கணைகளாற்றடிந்து
தோளிரண்டையுமிரண்டுவெங்கணைகளாற்றுணித்தான். (கஙச)

அற்றதாளொடுதோளினனயிலெயிறிலங்கப்
பொற்றைமாமுழைப்புலாலுடைவாயினன்புகுந்து
பற்றவாதரிப்பான்றனைநோக்கினன்பரியான்
கொற்றவார்சிலைச்சரங்கொடுதலையையுங்குறைத்தான். (கஙரு)

திரிசிராவெனுஞ்சிகரமண்சேர்தலுஞ்செறிந்த
நிருதரோடினர்தூடணன்விலக்கவுநில்லார்
பரிதிவாளினர்கேடகத்தடக்கையர்பரந்த
குருதிநீரிடைவார் † கழற்கொழுங்குடர்தொடக்க. (கஙசு)

கணத்தின்மேனின்றவானவர்கைபுடைத்தார்த்தார்
பணத்தின்மேனிலங்குழியுறக்கால்கொடுபதைத்தார்
கிணத்தின்மேல்விழுந்தழுந்தினர்சிலர்சிலர்சிவந்த
பிணத்தின்மேல்விழுந்துருண்டனருயிர்கொடுபிழைப்பார். (கஙஎ)

---

† கழல்-வீரர்காலில் அணிகின்ற அணி

வேய்ந்தவாளொடுவேலிடைமிடைத்தனவெட்ட
ஓய்ந்துளார்சிலருலந்தனருதிரநீர்யாற்றில்
பாய்ந்துகால்பறித்தழுந்தினர்சிலர்சிலர்பயத்தால்
நீந்தினார்நெடுங்குருதியங்கடல்புக்குநிலையார். (கஙஅ)

கச்சும்வாளுந்தங்காறொடர்ந் * தீர்வனகாணார்
அச்சமென்பதொன்றுருவுகொண்டாலெனவழிவார்
உச்சவீரனகைச்சுடுசரநிருதர்நெஞ்சுருவத்
தச்சுநின்றனகண்டனரவ்வழித்தவிர்ந்தார். (கஙகூ)

மண்டியோடினர்சிலர்நெடுங்கடகரிவயிற்றில்
புண்டிறந்தமாமுழையிடைவாளொடும்புகுவார்
தொண்டைநீங்கியகவந்தத்தைத்துணைவநீயெம்மைக்
கண்டிலேலெனெனப்புகலெனக்கைதலைக்கொள்வார். (கசO)

அனையராகியவரக்கரையாண்டொழிற்கமைந்த
வினையநீங்கியமனித்தரைவெருவன்மினன்ன
நினையுநானுமக்குரைப்பதுமுண்டெனநின்றே
துனையும்வார்ப்பரித்தேரினன்றூடணன்சொன்னான். (கசக)

வச்சையாமெனும்பயமனத்துண்டெனவாழும்
கொச்சைமாந்தரைக்கோல்வளைமகளிருங்கூசார்
நிச்சயம்மெனுங்கவசந்தானிலைநிற்பதன்றி
அச்சமென்னுமீதாருயிர்க்கருந்துணையாமோ. (கசஉ)

† பூவராவுவேற்புரந்தரனோடுதான்பொன்றா
மூவரோடுதான்முன்னின்றுமுட்டியமுனையில்
ஏவரோடினரிராக்கதர்நுமக்கிபிடந்தோடும்
தேவரோடுகற்றறிந்துளிராமெனத்திகைத்தீர். (கசங)

இக்கொர்மானுடற்கித்தனைவீரர்களிடைந்தீர்
உங்கைவாளொடுபோய்விழுந்தார்புகலுற்றீர்
கொங்கைமார்பிடைக்குறிப்புறக்களிப்புற்றுங்கொழுங்கண்
நங்கைமார்களைப்புல்லுதிரோநலநுகர்வீர். (கசச)

செம்புகாட்டியகண்ணிணைபாலெனத்தெளிந்தீர்
வெம்புகாட்டிடைநுழைதொறும்வெரிநுறப்பாய்ந்த
கொம்புகாட்டுதிரோதடமார்பிடைக்குளித்த
அம்புகாட்டுதிரோகுலமங்கையர்க்கம்மா. (கசரு)

---

* ஈர்தல்-இழுத்தலும் பிளத்தலுமாம்.

† பூவராவுவேல்-இலைபோலும் அராவுவேல், பொலிவுற்ற அராவிய வச்சிராயுதமுமாம்.

ஏக்கமின்றிதன்மேலுமுண்டேயிகன் மனிதன்
ஆக்குவெஞ்சமத்தாண்மையவ்வமரர்க்குமரிதாத்
தாக்கரும்புயத்துங்குலத்தலைமகன் றங்கை
மூக்கொடன்றியும்முதுகொடும்போம்பழிமுயன் றீர். (கசச)

ஆரவாழ்க்கையின்வனிகராயமைதிரோவயில்வேல்
* வீரவாட்கொடுவேன் மடுத்துழுதிரோவெறிபோர்த்
தீரவாழ்க்கையிற்றெவ்வரைச்செருவிடைப்பறித்த
வீரவாட்கையிரொங்ஙனம்வாழ்திரோவிளம்பீர். (கசரு)

என்றுதானுந்தன்னெறிகடற்சேனையுமிறைநீர்
நின்றுகாண்டிரென்னெடுஞ்சிலைவலியெனநேராச்
சென்றுதாக்கினன்றேவருமருள்கொண்டுதிகைத்தார்
கன்றுகாத்தியென்றிராமனுமெதிர்செலநடந்தான். (கசசு)

ஊடறுப்புண்டமொய்படக்கையொடுமுயர்ந்த
கோடறுப்புண்டகுஞ்சரங்கொடிஞ்சொடுகொடியின்
காடறுப்புண்டகாலியதேர்கதிர்ச்சாலி
சூடறுப்புண்டவெனக்கழுத்தறுப்புண்டதுரகம். (கசஎ)

துருவியோடினவுயிர்நிலைசுடுசரந்துரந்த
கருவியோடினகச்சையுங்கவசமுங்கழல
அருவியோடினவெனவழிகுருதியாறொழுக
உருவியோடினகேடகத்தட்டொடுமுடலம். (கசஅ)

ஆய்ந்தகங்கபத்திரங்கள்புக்கரக்கராதாவி
தோய்ந்ததோய்விலாப்பிறைமுகச்சரஞ்சிரந்துமித்த
காய்ந்தவெஞ்சரநிருதர்தங்கவசமார்புருவப்
பாய்ந்தவஞ்சகரிதயமும்பிளந்தனபல்லம். (கசக)

தாடணன்விடுசுடுசரம்யாவையுந்துணிய
மாடுநின்றவர்வழங்கியபடைகளுமாற
ஆடல்கொண்டனனளப்பரும்பெருவலியரக்கர்
கூடிநின்றவக்குரைகடல்வருதன்படக்குறைத்தான். (கரு௦)

ஆர்த்தெழுந்தனர்வானவராருவமைரமத்தோ
டீர்த்தெழுந்தனகுருதியின்பெருநதியிராமன்
தூர்த்தசெஞ்சரந்திசைதொறுந்திசைதொறுந்தொடர்ந்து
போர்த்தவெஞ்சினத்தரக்கரைப்புரட்டினபுவியில். (கருக)

தோன்றுமால்வரைத்தொகையெனத்துவன்றியபிணச்சே
ருன்றபாழ்வயிற்றலகையைப்புகல்வதெனமர்வேட்

* வீரவாட்-கொடுவெழுமடுத்துழுதிரோ எனப் பிரதியந்தரம்.

னென்றினரெலாமுலைந்தனரொல்லையிலொழிந்தார்
கான்றவின்னுயிர்க்காலனுங்கவர்ந்துமெய்ம்மறந்தான். (௧௫௪)

களிறுதேர்பரிகடுத்தவர்முடித்தலைகவந்தம்
ஒளிறுபல்படைத்தங்குலத்தரக்கர்த * முடலம்
வெளிறுசேர்பிணம்பிறங்கியவடுக்கலின்மீதாக்
குளிருதேர்கடிதோட்டினன்றூடணன்கொதித்தான். (௧௫௫)

அறங்கொளாதவராக்கைகளடுக்கியவடுக்கல்
பிறங்கிநீண்டனகணிப்பிலபெருங்கடுவிசையால்
கறங்குபோன்றுளதாயினும்பிணப்பெருங்கட்டத்
திறங்குமேறுமத்தேர்பட்டதியாதெனவுரைப்பாம். (௧௫௬)

அரிதினெய்தினனையந்துகொய்யுளைப்பரிமா
உருளுமாழியதொருதனித்தேரினனுலகத்
திருளைநீக்கியவிந்துவிற்பொலிகின்றவிராமன்
தெருளும்வார்கணைக்கூற்றெதிராவிசென்றன்ன. (௧௫௭)

சென்றதேவரையுஞ்சிலையுடைமலையெனத்தேர்மேல்
நின்றதூடணன்றன்னையுநோக்கிய † நிமலன்
நன்றுநன்றுநின்னிலையெனவருளினைநயந்தான்
என்றகாலத்தவ்வெய்யவன்பகழிமூன்றெய்தான். (௧௫௮)

தூரவட்டவெண்டிசைகளைத்தனித்தனிசுமக்கும்
பாரவட்டினோடிரண்டினிலொன்றுபார்புரக்கப்
பேரவிட்டவனுதலணியோடையிற்பிறழும்
வீரபட்டிகைபட்டனவிண்ணவர்வெருவ. (௧௫௯)

எய்தகாலமும்வலியுநல்லெனநினைந்திராமன்
செய்த ‡ சேயொளிமுழுவலன்கடுங்கணைதெரிந்தான்
கொய்தினங்கவனெறிற்பரித்தேர்படநூறிக்
கையின்வெஞ்சிலையறுத்தொளிர்கவசமுங்கடிந்தான். (௧௬௦)

தேவரார்த்தெழமுனிவர்கடிசைதொறுஞ்சிலம்பும்
ஓவிவ்வாழ்த்தொலிநாற்கடன்முழக்கெனவோங்கக்
காவடாவிதுவல்லையேனீயெனக்கணையொன்
றேவினனவனெயிறுடைநெடுந்தலையிழந்தான். (௧௬௧)

வேறு.

தம்பிதலையற்றபடியுந்தயரதன்சேய்
அம்புபடையைத்துணிபடுத்ததுமறிந்தான்

---

* உடலம்-உறுப்புகளறுபடாமல் வீழ்ந்திறந்த சரீரம்.
† நிமலன்-மலரகிதன். ‡ சேயொளி - செம்மையொளி.

வெம்புபடைவிற்கைவிசயக்கரன்வெகுண்டான்
கொம்புதலைகட்டியகுலக்கரிகடுப்பான். (கசஉ)

அந்தகனுமுட்கிடவரக்கர்கடலோடும்
சிந்துரம்வயப்புரவிதேர்திசைபரப்பி
இந்துவைவளைக்குமெழிலிக்குலமெனத்தான்
வந்துவரிவிற்கைமதயானையைவளைத்தான். (கசங)

அடங்கலில்கொடுந்தொழிலரக்கரவ் ‡ வநந்தன்
படங்கிழிதரப்படிதனிற்பலவிதப்போர்
கடங்கலுழ்தடங்களிறுதேர்பரிகடாவித்
தொடங்கினர்கெடுத்தகையும்வெங்கணைதூர்த்தான். (கசச)

துடித்தனகடக்கரிதுடித்தனபரித்தேர்
துடித்தனமுடித்தலைதுடித்தனதொடித்தோள்
துடித்தனமணிக்குடர்துடித்தனதசைத்தோல்
துடித்தனகழற்றுணைதுடித்தனவிடத்தோள். (கசரு)

வாளின்வனம்வேலின்வனம்வார்சிலைவனந்திண்
தோளின்வனமென்றிவைதுவன்றிநிருதப்பேர்
ஆளின்வனநின்றதனையம்பின்வனமென்னும்
கோளின்வனவன்குழுவினிற்குறைபடுத்தான். (கசசா)

தானுருவுகொண்டதருமந்தெரிசரந்தான்
மீனுருவுமேருவைவிலங்குருவுமேலாம்
வானுருவுமண்ணுருவும்வாளுருவிவந்தார்
ஊனுருவுமென்னுமிதுணர்த்தவுமுரித்தோ. (கசஎ)

அன்றிடைவளைந்தவர்குலங்களொட்டங்கச்
சென்றலைவுறும்படிதெரிந்துகணைசிந்த
மன்றிடைநலிந்துவலியோர்களெளியோரைக்
கொன்றனர்நுகர்ந்தபொருளிற்கடிதுகொன்ற. (கசஅ)

கடுங்கரனெனப்பெயர்படைத்தகழல்வீரன்
அடங்கலுமரக்கரழிவுற்றிடவழன்றான்
ஒடுங்கலினிணக்குருதியோதமதினுள்ளான்
நெடுங்கடலின்மந்தரமெனத்தமியனின்றான். (கசகூ)

செங்கணெரிசிந்தவரிவிற்பகழிசிந்தப்
பொங்குகுருதிப்புணரியுட்புகையுநெஞ்சன்
கங்கமொடுகோகமிடையைக்கடலினோடும்
வங்கமெனலாயதொருதேரின்மிசைவந்தான். (கரு0)

‡ அநந்தன் - அந்தமில்லாதவன்.

செறுத்திறுதியிற்புவனிதீயவெழுதீயின்
மறத்தின்வயிரத்தொருவன்வந்தனுகுமுந்தைக்
கறுத்தமணிகண்டர்கடவுட்சிலைகரத்தால்
இறுத்தவனும்வெங்கணைதெரிந்தனனெதிர்ந்தான். (கஎக)

தீயுருவகால்விசையசெவ்வியனவெவ்வாய்
ஆயிரம்வடிக்கணையரக்கர்பதிசெய்தான்
தீயுருவகால்விசையசெவ்வியனவெவ்வாய்
ஆயிரம்வடிக்கணையிராமனுமறுத்தான். (கஎஉ)

ஊழியெரியிற்கொடியபாய்பகழியொன்பான்
ஏழுலகினுக்குமொருநாயகனுமெய்தான்
சூழ்சுடர்வடிக்கணையவற்றெதிர்தொடுத்தே
ஆழிவரிவிற்கரனுமன்னவையறுத்தான். (கஎ௩)

கள்ளவமர்மாயவினைகல்வியின்விளைத்தான்
வள்ளலுருவைப்பகழிமாரியின்மறைத்தான்
உள்ளமுலைவுற்றமரரோடினரொளித்தார்
வெள்ளெயிறிதழ்ப்பவளவீரனும்வெகுண்டான். (கஎ௪)

வேறு.

முடிப்பெனின்றொருமொய்கணையாலெனத்
தொடுத்துநின்றுயர்தோளுறவாங்கினான்
பிடித்ததிண்சிலைபேரகல்வானிடை
இடிம்பினோசைபடக்கடிதிற்றதே. (கஎ௫)

வெற்றிகூறியவானவர்வீரன்வில்
இற்றபோதுதுணுக்கமுற்றேங்கினார்
மற்றோர்வெஞ்சிலையின்மைமனக்கொளா
அற்றதாலெம்வலியெனவஞ்சினார். (கஎ௬)

என்னுமாத்திரத்தேந்தியகார்முகம்
சின்னமென்றுந்தனிமையுஞ்சிந்தியான்
மன்னர்மன்னவன்செம்மன்மரபினால்
பின்னுறத்தன்பெருங்கரநீட்டினான். (கஎஎ)

கண்டுநின்றுகருத்துணர்ந்தானென
அண்டர்நாதன்றடக்கையினத்துணை
பண்டுபோர்மழுவாளியைம்பண்பினால்
கொண்டவில்லைவருணன்கொடுத்தனன் (கஎ௮)

---

‡ கள்ளவமர்-உருமறைந்துநின்றுசெய்யும்போர்.

கொடுத்தவில்லையக்கொண்டனிறத்தினான்
எடுத்துவாங்கிவலங்கொண்டிடக்கையில்
பிடித்தபோதுநெறிபிழைத்தோர்க்கெலாம்
துடித்தவாவிடக்கண்ணுந்தோளுமே. (௧௭௯)

எற்றிநாணிமையாமுனெடுத்தது
கூற்றினாருங்குணிக்கக்குனித்தெதிர்
ஆற்றினானவனுழியந்தேர்சரம்
ஆற்றினானும்பொடிபடநூறினான். (௧௮௦)

எந்திரத்தடந்தேரழிந்தாணிழந்
தந்தரத்திடையார்த்தெழுந்தம்பெலாம்
சுந்தரத்தனிவில்லிதன்றோளினும்
மந்தரத்தின்மழையின்வழங்கினான். (௧௮௧)

தாங்கிநின்றதயாதராமனும்
தூங்குதூணியிடைச்சுடுசெஞ்சரம்
வாங்கிநின்றவலக்கையொளிர்வாளியால்
வீங்குதோளொடுபோர்மிசைவீழ்த்தினான். (௧௮௨)

வலக்கைவீழ்தலுமற்றைக்கையால்வெற்றி
உலக்கைவானத்துருமெனவோச்சினான்
* இலக்குவற்முன்வந்தவிராமனும்
விலக்கினானொருவெங்கதிர்வாளியால். (௧௮௩)

விராவருங்கடுவெள்ளெயிற்றிற்றபின்
அராவழன்றதனையதன்னாற்றலால்
மராமரங்கையில்வாங்கிவந்தெய்தினான்
இராமனங்கோர்தனிக்கணையேவினான். (௧௮௪)

வரமரக்கன்படைத்தலின்மாயையின்
உரமுடைத்தன்மையாலுலகேழையும்
பரமுருக்கியபாவத்தினால்வலக்
கரமெனக்கரன்கண்டமுற்றானரோ. (௧௮௫)

ஆர்த்தெழுந்தனராடினர்பாடினர்
தூர்த்தமைந்தனர்வானவர்தூய்மலர்
† தீர்த்தனும்பொலிந்தான்கதிரோன்றிசை
போர்த்தமென்பனிபோக்கியதென்னவே. (௧௮௬)

---

* இலக்குவற்குமுன்வந்த போர்க்கோலங்கொண்ட இளையபெருமாளைத்தடுத்து நிறுத்திவிட்டுவந்த என்றும் இலக்குவற்குமுன்னே பிறந்தோனென்னலுமியையும்.

† தீர்த்தன்-பரிசுத்தன், ஆலோசனைக்காரன்,நியமிப்பவன்.மேன்மையுடையவன்.

முனிவர்வந் துமுறைமுறைமொய்ப்புற
இனியசிந்தையிராமனுமேகினன்
அனிகவெஞ்சமத்தா ருயிர்போகத்தான்
தனியிருந்தவுடலன்னதையல்பால் (கஅஎ)

விண்ணினீங்கியவெய்யவர்மேனியில்
புண்ணினீரும்பொடிகளும் * போயுக
அண்ணல்வீரனைத்தம்பியுமன்னமும்
கண்ணினீரினிற்பாதங்கழுவினர். (கஅஅ)

மூத்தமொன்றின்முடித்தவர்மொய்புணீர்
நீத்தமோடிநெடுந்திசைசேருறக்
கோத்தவேலைக்குரலெனவானவர்
ஏத்தவீரனினிதிருந்தானரோ. (கஅகூ)

இங்குநின்றதுரைத்துயிராவணன்
தங்கைதன்கைவயிறுதகர்த்தனள்
கங்குலன்னரகனைத்தழீஇநெடும்
பொங்குவெங்குருதிப்புரண்டாளரோ. (ககூ0)

ஆக்கினேன்மனத்தாசையவ்வாசையென்
மூக்கினோடுமுடியமுடிந்திலேன்
வாக்கிலுங்கள்வாழ்வையுநாளையும்
போக்கினேன்கொடியேனென்றுபோயினள். (ககூக)

அலங்கல்வேற்கையரக்கரை ‡ யாசறக்
குலங்கள்வேரறுப்பான்குறித்தானுயிர்
கலங்குறுநறவன்போர்நெடுங்காலென
இலங்கைமாநகர்நொய்திற்சென்றெய்தினள். (ககூஉ)

௫-வது கரன்வதைப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௫௫௯.

---

* போயுக-நீங்க. † மூத்தம்-முகூர்த்தம்.

‡ அரக்கரை பாவத்தைப்போக்கித் தேவராக்குந் தன்மையையுடைய ராமபாணத்துக்கு இரையாக்கக் குறித்தானென்பார் 'ஆசற' என்றார்.

ஏழாவது

மாரீசன்வதைப்படலம்.

இரைக்குநெடும்பணையரக்கிறந்ததனைமறந்தனள்போலிராமன்றங்க
வரைப்புயத்தினிடைக்கிடந்தபேராசைமனங்கவற்றவாற்றாளாகித்
திரைப்பரவைப்போகழித்திண்ணகரிற்கடிதோடிச்சீதைதன்மை
உரைப்பெனெனச் *சூர்ப்பணகைவரவிருந்தானிருந்தபரிசுரைத்துமன்றே

நிலையிலாவுலகினிடைநிற்பனவுநடப்பனவுநெறியினீந்த
மலரின்மேனான்முதற்கும்வகுப்பரிதுநுனிப்பதொருவரம்பிலாற்றல்
உலைவிலாவகையுழந்ததருமமெனநினைந்தவெலாமுதவுந்தச்சன்
புலனெலாந்தெரிப்பதொருபுனைமணிமண்டபமதனிற்பொலியமன்றே ()

பண்டலங்குதிசைக்களிற்றின்பணைமருப்பினிணையொடியப்படர்ந்தபொற்
விண்டலங்களுறவீங்கியோங்குதயமால்வரையின்விளங்கமீதில் [றோள்
குண்டலங்கள்குலவரையைவலம்வருவானிரவிகொழுங்கதிர்சூழ்கற்றை
மண்டலங்கள்பன்னிரண்டுமோலந்தாய்ப்பொலிந்தவெனவயங்கமன்றே()

புலியினதளுடையானும்பொன்னாடைபுனைந்தானும்பூவினானும்
நலியும்வரத்தாரல்லர்தேவரினிங்கியாவரினிநாட்டலாவார்
மெலியுமிடைத்தடிக்குழலைவேயனைத்தோட்சேயரிக்கண்வென்றிமாதர்
வலியநெடும் † புலவியினும்வணங்காதமகுடநிரைவயங்கமன்றே. (௪)

வாளுலா ‡ முழுமணிகள்வயங்கொளியின்[illegible]ழங்கவயிரக்குன்றத்
தோளெலாம்படிசுமந்தவிடவரவின்படநிரையிற்றோன்றவான்ற
காளெலாம்புடைதயங்கநாமநீரிலங்கையிற்றான்வாரியிட்ட
கோளெலாங்கிடந்தநெடுஞ்சிறையன்னநிறையாரக்குலவமன்றே. (௫)

வேறு.

ஆர்வரும்பெருவலியரக்கராதியோர்
நாயகர்களிர்மணிமகுடநண்ணலால்
தேய்வுறத்தேய்வுறப்பெயர்ந்துசெஞ்சுடர்
ஆய்மணிப்பொலன்கழலடிநின்றார்ப்பவே. (௬)

---

* சூர்ப்பணகை-சூர்ப்பணகா என்றவடசொல் ஆவீறுஐயாயிற்று;இப்பெயர் சூர்ப்பம் நகம் எனப்பிரித்து முறம்போன்ற (வடிவமுடைய) நகமுள்ளவளென்று எதப்பொருள்படும். இது அவளுக்கு வடிவுபற்றிவைக்கப்பட்ட காரணக்குறியாகிய இயற்பெயர்.

† புலவியாவது-ஆடவரும் மகளிரும் இன்பநிலையில் அவ்வின்பத்தை மிகுவிக்கும்பொருட்டு ஒருவரோடொருவர் கோபித்தல்.

‡ முழுமணி-உத்தமவிலக்கணம் நிறைந்த இரத்தினம், ஒளிநிரம்பி இரத்தினம்.

மூவகையுலகினுமுதல்வர்மூர்த்தையோர்
ஓவலருதவியபரிசினோங்கல்போல்
தேவருமவுணருமுதலினோர்திசை
தூவியநறுமலர்க்குப்பைதுன்னவே. (எ)

இன்னபோதிவ்வழிநோக்குமென்பதை
உன்னலற்கரதலஞ்சுமந்தவுச்சியர்
மின்னவிர்மணிமுடிவிஞ்சைவேந்தர்கள்
துன்னினர்முன்றமுறைறதுறையிற்சுற்றவே. (அ)

மங்கையர்திறத்தொருமாற்றங்கூறினும்
தங்களையாமனத்தாழுஞ்சென்னியர்
அங்கையுமுள்ளமுங்குவிந்தவாக்கையர்
சிங்கவேறனைத்திறற்சித்தர்சேரவே. (கூ)

அன்னவனமைச்சரைநோக்கியாண்டொரு
நன்மொழிபகரினுநடுங்குஞ்சிந்தையர்
என்னைகொல்பணியெனவிறைஞ்சுகின்றனர்
கின்னரர்பெரும்பயங்கிடந்தநெஞ்சினர். (க0)

பிரகரநெடுந்திசைப்பெருந்தண்டேந்திய
கரதலத்தண்ணலைக்கண்ணினோக்கிய
நரகினராமெனநடுங்குநாவினர்
உரகர்கடம்மனமுலைந்துசூழவே. (கக)

திசையுறுகரிகளைச்செற்றுதேவனும்
வசையுறக்கைலையைமறித்துவாளெலாம்
அசையுறப்புரந்தரனடர்த்ததோள்களின்
இசையினைத்தும்புருவிசையினேர்ந்தவே. (கஉ)

சேனுயர்நெறிமுறைதிறம்பலின்றியே
பாணிகள்பணிசெயப்பழுதில்பண்ணிடை
வீணையினரம்பிடைவிளைத்ததேமறை
வாணியினாதன்செவியின்வார்க்கவே. (கங)

வேறு.

மேகமென்றுருத்திகொண்டுவிண்ணவர்தருவும்விஞ்சை
நாகமுஞ்சுரந்ததீந்தேம்புனலொடுமனாவிகவ்வித்
தோகையர்துகிலிற்றோயுமென்பதோர்துணுக்கத்தோடும்
ஓதரமகரவேலைக்காவலன்சிந்தமன்றே. (கச)

நறைமலர்த்தாதுந்தேனுநளிர்நெடுமகுடகோடி
முறைமுறையறையச்சிந்திமுரிந்துகுமணியுமுத்தும்

தறையிடையுகாதமுன்னந்தாங்கினன் றழுவிவாங்கித்
துறைதொறுந்தொடர்ந்துநின்று ‡ சமீரணன் றுடைப்பமன்னோ. ( )

வேறு.

மின்னுடைவேத்திரக்கையர்மெய்புகத்
துன்னெடுங்கஞ்சுகத்துகிலர்சோர்வுலர்
பொன்னொடுவெள்ளியும்புரந்தராதியர்க்
கின்னியன்முறைமுறையிருக்கையீயவே. (கசு)

சூலமேமுதலியதுறந்துசுற்றிய
சேலையாற்சிறியவாய்புதைத்துச்செங்கையின்
தோலுடைநெடும்பணைதுவைக்குந்தோறெலாம்
காலன்வந்திசைக்குநாட்கடிகைகூறவே. (கஎ)

நயனங்களர்காணநெய்யளாவிகந்தலில்
வியங்கருப்பூரமென்பஞ்சின்மீக்கொளீஇக்
கயங்களின்மரைமலர்க்காடுபூத்தென
வயங்கெரிக்கடவுளும்விளக்கமாட்டவே. (கஅ)

அதிசயமளிப்பதற்கருணநிந்துகற்
புதிதலர்கற்பகத்தருவும்பொய்யிலாக்
கதிர்கெடுமணிகணங்கறவையான்களும்
நிதிகளுமுறைமுறைநின்றுநீட்டவே. (க௯)

குண்டலமுதலியகுலங்கொள்பேரணி
மண்டியபேரொளிவயங்கவீசலால்
உண்டுகொரலிவினியுலகமேழினும்
எண்டிசைமருங்கினுமிருளின்றென்னவே. (உ0)

கங்கையேமுதலியதீர்த்தகன்னியர்
கொங்கைகள்சுமந்திடைகொடியினொல்கிடச்
செங்கையினரிசியுமலருஞ்சிந்தினர்
மங்கலமுறைமுறைகூறிவாழ்த்தவே. (உக)

ஊருவிற்றோன்றியவுயிர்பெய்யோவியம்
காரினிற்செருக்கியகலாபமஞ்ஞைபோல்
வார்விசிக்கருவியோர்வகுத்தபாணியின்
நாரியருநடநடிப்பநோக்கியே. (உஉ)

இருந்தனனுலகங்களிரண்டுமொன்றுந்தன்
அருந்தவமுடைமையினளவிலாற்றலின்

‡ சமீரணன் நன்றாகசஞ்சரிப்பவன் அதாவது வாயுதேவன்.

பொருந்தியவிராவணன்புருவக்கார்முகக்
கருந்தடங்கண்ணியர்கண்ணின்வெள்ளத்தே. (உங)

சூர்ப் பணகை இராவணனரன்மனையின் வடக்குக் கோபுரவாயிலில் வருதல்.

தங்கையுமவ்வழித்தலையிற்றூங்கிய
செங்கையள்சோரியின்றாரைசேர்திழி
கொங்கையண்மூக்கினள்குழையில்காதினள்
மங்குலினொளிபடத்திறந்தவாயினள். (உச)

* முடிமிடைவாயிலின்முறையிட்டார்கலிக்
கடையுகக்கடலொலிகாட்டக்காந்துவான்
குடதிசைச்செக்கரிற்சேர்ந்தகூந்தலாள்
வடதிசைவாயிலின்வந்துதோன்றினள். (உரு)

இதுமுதல் பத்தொன்பது கவிகளில், அவளது நிலையைக்கண்டு அரக்கர்துயருறுதலைக் கூறுகிறார்.

தோன்றலுந்தொன்னகரரக்கர்தோகையர்
என்றெதிர்வயிறலைத்திரங்கியேங்கினார்
மூன்றுலகுடையவன்றங்கைமூக்கிலள்
தான்றனியவள்தரிக்குவல்லரோ. (உசா)

பொருக்கெனநோக்கினர்புகல்வதோகிலர்
அரக்கருமிரைத்தனரசனியாமெனக்
கரத்தொடுகரங்களைப்புடைத்துக்கண்களை
நெருப்பெழவிழித்துவாய்மடித்துநிற்கின்றார். (உஎ)

இந்திரன்மேலதோவுலகமீன்றபேர்
அந்தணன்மேலதோவாழியானதோ
சந்திரமௌலிபாற்றங்குமேகொலோ
அந்தரமென்றுநின்றழல்கின்றார்சிலர். (உஅ)

செப்புறற்குரியவர்தெவ்வர்யாருளர்
முப்புறத்துலகமுமடங்கமூடிய
இப்புறத்தண்டத்தோர்க்கியைவதன்றிது
† அப்புறத்தண்டத்தோரஃமென்றார்சிலர். (உகூ)

என்னையேயிராவணன்றங்கையென்றபின்
அன்னையேயென்றடிவணங்கலன்றியே

---

* முடிமிடைவாயிலின் பல அரசர்களுடைய கிரீடங்கள் நெருங்கிய இராவணனது அரண்மனைவாயிலில். சிகரங்கள்நெருங்கிய கோபுரவாயிலின் என்றும் பொருள்படும்.

† அப்புறத்தண்டம்-பகிரண்டம், வெளியண்டம்.

உன்னவேயொண்ணுமோவொருவராலிவள்
தன்னையேயரிந்தனடாவென்றார்சிலர். (௩௰)

போரிலான்புரந்தரனேவல்பூண்டனன்
ஆருலாநேமியானாற்றறோற்றுப்போய்
நீரினானெருப்பினான்பொருப்பினானினி
ஆர்கொலாமீதெனவறைகின்றார்சிலர். (௩௧)

சொர்பிறந்தார்க்கிது துணியவொண்ணுமே
இற்பிறந்தார்தமக்கிசையவசெய்திலன்
* கற்பிறந்தானெனக்கரன்கொலாமிவன்
† பொற்பிறந்தாக்கினன்புகன்றென்றார்சிலர். (௩௨)

தத்துருசிக்கைதயர்தனருந்தேவரில்
பித்துறவல்லரேபிழைப்பில்சூழ்ச்சியார்
முத்திறத்துலகையுமுடிக்கவெண்ணுவார்
இத்திறம்புணர்த்தனரென்கின்றார்சிலர். (௩௩)

இனியொரு ‡ கற்பமுண்டென்னினன்றியே
வினைகழல்வழங்குவார்வீரர்வல்லரோ
பனிவருங்கானிடைப்பழிப்பிலேனுன்புடை
முனிவர்வெகுளியின்முடிபென்றார்சிலர் (௩௪)

கரையறுதிருநகர்க்கருங்கணங்கைமார்
நிறைவளைத்தளிர்க்கைகணெரித்துநோக்கினர்
பிறையுறு[illegible]ாலெனநிலையிற்பின்றய
உரையினரொருவர்முன்னொருவரோடினர். (௩௫)

முழவினில்வீணையின்முரளியாழினில்
தழுவியகுழலினிற்சங்கிற்றாரையில்
எழுகுரலின்றியேயென்றுமில்லதோர்
அழுகுரல்பிறந்ததவ்விலங்கைக்கன்றரோ. (௩௬)

கள்ளுடைவள்ளமுங்களித்ததும்பியும்
உள்ளமுமொருவழிக்கிடக்கவோடினர்
வெள்ளமுநாணுறவிரிந்தகண்ணினார்
தள்ளுறுமருங்கினர்தழீஇக்கொண்டேகினர். (௩௭)

நாந்தகவுழவரைநாட்டுந்தண்டத்தர்
காந்தியகனத்தினர்புலவி § கைம்மிகச்

---

* கற்புபதிவிரதாதருமம். † பொற்புபொலிவு
‡ கற்பம்காலத்தின் ஒருபேரெல்லை. § கைம்மிகமிகவும்அதிகப்பட, எல்லைமிக.

சேர்ந்தகணை திகழுஞ்சிவந்துநீருக
வேந்தனுக்கிளையவாடாளின்வீழ்ந்தனர். (௧௮)

பொற்றலைமரகதப்பூகவேர்வுறச்
சுற்றியமணிவடந்தூங்குமூசலின்
முற்றியவாடலின்முனிவுற்றேங்கினர்
சிற்றிடையலமரத்தெருவுசேர்கின்றார் (௧௯)

எழுவெனமலையெனவெழுந்ததோள்களைத்
தழுவிவளைத்தளிர்நெகிழ்த்தாமரை
முழுமுகத்திருகயன்முத்தினலிகள்
பொழிதரச்சிலருளர்பொருமிவிம்முவார். (௨0)

வேறு.

நெய்ந்நிலையவேலரசனொருநரையில்லான்
இந்நிலையுணர்ந்தபொழுதெந்நிலையனென்று
மைந்நிலைநெடுங்கண்மழைவானிலையுதாகப்
பொய்ந்நிலைமருங்கினர்புலம்பினர்புரண்டார். (௨௧)

மனத்தலைவருங்கணவரின்சுவைமறந்தார்
கனத்தலைவருங்குழலொசிந்துகலைசோர
நனைத்தலையகொங்கைகடதும்பிடநடந்தார்
அனத்திளமங்கையரழுங்கியயர்கின்றார். (௨௨)

அங்கையினரன்கயிலைகொண்டதிறலையன்
தங்கைநிலையிங்கிதுகொலென்றுதளர்கின்றார்
கொங்கையிணைசெங்கையின்மலைந்துகுலைகோதை
மங்கையர்கணங்கையெதிர்வந்துவிழுகின்றார். (௨௩)

இலங்கையில்விலங்குமிவையெய்தலிலவென்றும்
வலங்கையிலிலங்குமயின் * மன்னனுளனென்ன
நலங்கையிலகன்றதுகொனம்பியெனநைந்தார்
கலங்கலினிலங்கணிணைவாரிகலுழ்கின்றார். (௨௪)

சூர்ப்பணகை இராவணனயிழல் விழுந்துபுரளுதல்.

என்றினையவன்றுயரிலங்கைநகரெய்த
நின்றவரிருந்தவரோடோடுநெறிதேடக்
குன்றினடிவந்துபடிகொண்டதெனமன்னன்
பொன்றிணிகருங்கழல்விழுந்தனள்புரண்டாள். (௨௫)

* மன்-பெருமை அதனையுடையவன், மன்னன்.

இதுமுதல் ௩-கவிகள் அப்பொழுதுலகத்திலுண்டான
குழப்பத்தைக்கூறும்.

மூடினதிருட்படலமுலகுமுற்றச்
சேடனும்வெருக்கொடுசிரக்குலைவெளித்தான்
ஆடின * குலக்கிரியருக்கனுமயிர்த்தான்
ஓடினதிசைக்கரிகளும்பருமொளித்தார். (௪௬)

விரிந்தவலயங்கண்மிடைதோள்படரமீதிட்
டெரிந்தநயனங்களெயிறின்புறமெரிப்ப
நெரிந்தபுருவங்களிடைநெற்றியினைமுற்றத்
திரிந்தபுவனங்கள்வினைதேவருமயிர்த்தார். (௪௭)

தென்றிசைநமன்றனொடுதேவர்குலமெல்லாம்
இன்றிறுதிவந்ததுநமக்கெனவிருந்த
நின்றுயிர்நடுங்கியுடல்விம்மிநிலைநில்லார்
ஒன்றுமுரையாடவிலரும்பரினொடிம்பர். (௪௮)

இராவணன் சூர்ப்பணகையை இதுசெய்தவர் யார் என்றல்

மடித்தபிலவாய்கடொறும்வந்துபுகைமுந்தத்
துடித்ததொடர்மீசைகள்சுறுக்கொளவுயிர்ப்பக்
கடித்தகதிர்வாளெயிறுமின்கனலமேகத்
திடித்தவுருமொத்துரறியாவர்செயலென்றான். (௪௯)

சூர்ப்பணகை விடை கூறுதல்.

கானிடையடைந்துபுவிகாவல்புரிகின்றார்
மீனுடைநெடுங்கொடியினோனனையர்மேல்கீழ்
ஊனுடையுடம்புடைமையொருவமையொவ்வா
மானுடர்தடிந்தனர்கள்வாளுருவியென்றாள். (௫௰)

இராவணன் கோபித்து நடந்ததை விவரமாகக் கூறுஎன்றல்.

செய்தனர்கண்மானுடரெனத்திசையனைத்தும்
எய்தநகைவந்தெரிசிந்தினகணெல்லாம்
நொய்தவர்வலித்தொழிலுவன்றமொழியொன்றோ
பொய்தவிர்பயத்தையொழிபுக்கபுகலென்றான். (௫௧)

இதுமுதல் ஆறுகவிகள் ஒருதொடர் சூர்ப்பணகை
விவரமாகக் கூறும் விடை.

மன்மதனையொப்பர்மணிமேனிவடமேருத்
தன்னெழிலழிப்பர்திரடோளின்வலிதன்னால்

---

* குலகிரிகள்-கைலாசம், இமயம், மந்தரம், விந்தியம், நிஷதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பன.

என்னதனையிப்பொழுதிசைப்பதுலகேழின்
நன்மதனழிப்பரொரிமைப்பி * னனிவில்லான். (௫௨)

வந்தனைமுனித்தலைவர்பாலுடையர்வானத்
திந்துவின்முகத்தரெறிநீரிலெழுநாளக்
கந்தமலரைப்பொருவுகண்ணர்கழல்கையர்
அந்தமிறவத்தொழிலராரவரையொப்பார் (௫௩)

வற்கலையர்வார்கழலர்மார்பினணிநூலர்
விற்கலையர்வேதமுறைநாவர்நனிமெய்யர்
உற்கலையருன்னையொர்துகட்டனையுமுன்னார்
சொற்கலையெனத்தொலைவிறூணிகள்சுமந்தார். (௫௪)

† ஆறுபுலனஞ்சினமரக்கரையெனச்சென்
றேறநெறியந்தணரியம்பவுலகெல்லாம்
வேறுமெனுநுங்கள்குலம்வேரொடுமடங்கக்
கோறுமெனமுந்தையொருசூளுறவுகொண்டார். (௫௫)

மாருளரேயிருவரோருலகின்வாழ்வார்
வீருளரேயவரின்வில்லதனின்வல்லார்
ஆரொருவரன்னவரையொப்பவர்களையா
ஓரொருவரேயிறையவர்மூவரையுமொப்பார். (௫௬)

தராவலயநேமியுழவன்றயரதப்பேர்
பாராவருநலத்தொருவன் ‡ மைந்தர்பழியில்லார்
விராவருவனத்தவன்விளம்பவுறைகின்றார்
இராமனுமிலக்குவனுமென்பர்பெயரென்றாள். (௫௭)

இதுமுதல் நான்குகவிகள் இராவணன் தன்னைவெறுத்தல்.

மருந்தனையதங்கைமணிநாசிவடிவாளால்
அரிந்தவருமானுட § ரரிந்துமுயிர்வாழ்வார்
விருந்தனையவாளொடும்விழித்திறையும்வெள்கா
இருந்தனனிராவணனுமின்னுயிர்கொடின்னும். (௫௮)

கொற்றமறுமுற்றிவ்வியாலரசுகொண்டேன்
உற்றபயன்மற்றிதுவொல்காவுரையிறந்தேன்
முற்றவுலகத்துமுதல்வீரர்முடியெல்லாம்
அற்றபொழுதத்திதுபொருந்துமெனலாமே. (௫௯)

---

* நனி-விசேடித்த உரிச்சொல். † ஆறுபுலன் "மக்கள்தாமே யாறறிவுயிரே" என்றதொல்காப்பியத்தால் மக்களெனப்படுவார் ஐம்பொறியுணர்வேயன்றிமனமென்பதோரறிவுமுடையராதலுணர்க.

‡ மைந்து-இளமை, வலிமை, அழகு; அதனையுடையவர், மைந்தர்.

§ அறிந்து முயிர்வாழ்வாரென்றும் பாடம்.

மூளுமுளதாயபழியென்வயின்முடித்தோர்
ஆளுமுளவாமவரதாருயிருமுண்டாம்
வாளுமுளதோதவிடமுண்டவன்வழங்கும்
நாளுமுளதோளுமுளநானுமுளனன்றே. (௬0)

இது ராவணன் தன்மனத்தை முன்னிலைப்படுத்திக் கூறுவது.

* புத்துறவுறப்பழிபுகுந்ததெனநாணித்
† தத்துறவதென்னைமனனேதளரலம்மா
எத்துயருனக்குளதினிப்பழிசுமக்கப்
பத்துளதலைப்பகுதிதோள்கள்பலவன்றே (௬௧)

இராவணன் கரன்முதலியோர் அவர்களைக்
கொன்றிலரோ ? என்றல்.

என்றுரைசெயாநகைசெயாவெரிவிழிப்பான்
வன்றுணையிலாவிருவர்மானுடரைவாளால்
கொன்றிலர்களாநெடியகுன்றுடையகானில்
நின்றகரனேமுதலினோர்நிருதரென்றான். (௬௨)

வேறு.

அதற்குச்சூர்ப்பணகை விடைகூறத் தொடங்கல்.

அற்றவனுரைத்தலோடுமெழுதிழியருவிக்கண்ணள்
எற்றியவயிற்றள்பாரினிடைவிழுந்தேங்குகின்றாள்
சுற்றமுந்தொலைந்ததையநொய்தெனச்சுமந்தகையள்
உற்றதுதெரியும்வண்ணமொருவகையுரைக்கலுற்றாள். (௬௩)

சூர்ப்பணகை செய்திகூறல்.

சொல்லென்றென்வாயிற்கேட்டார்தொடர்ந்தெழுசேனையோடும்
கல்லென்றவொலியிற்சென்றார்கரன்முதற்காளைவீரர்
எல்லொன்றுகமலச்செங்கணிராமனென்றிசைத்தவேந்தல்
வில்லொன்றிற்கடிகைமூன்றிலேறினர்விண்ணிலென்றாள். (௬௪)

அதுகேட்டு இராவணன் சோகமுங்கோபமும் ஒருங்குஅடைதல்.

தாருடைத்தானையோடுந்தம்பியர்தமியன்செய்த
போரிடைமடிந்தாரென்றவுரைசெவிபுகாமுன்னம்
காரிடையுருமின்மாரிகனலொடுபிறக்குமாபோல்
நீரொடுநெருப்புக்கான்றனநெடுங்கண்களெல்லாம் (௬௫)

---

* புதுமை + உறவு—புத்துறவு; பண்புப்பெயர் ஈறுபோய்த் தன்னொற்று இரட்டிற்று இனி புத்துற-புதுமையாக, உற-மிகவும், பழிபுகுந்தது என்றலுமொன்று.

† தத்துறவது-அலைவது.

இராவணன் சூர்ப்பநகையை நீஅவருக்குச்செய்த
குற்றம் என் - என்றல்.

ஆயிடையெழுந்தசீற்றத்தழுந்தியதுன்பமாழித்
தீயிடையுகுக்குநெய்யிற்சீற்றத்திற்கூற்றஞ்செய்ய
நீயிடையிழைத்தகுற்றமென்னைகொன்னினையின்னே
வாயிடையிதழுமூக்கும்வலிந்தவர்கொய்யவென்றான். (௬௬)

அதற்கவள்கூறும் விடை.

என்வயினுற்றகுற்றம்யாவர்க்குமெழுதொணாத
தன்மையனிராமனோடுந்தாமரைதவிரப்போந்தாள்
மின்னவயின்மருங்குல்கொண்டாள்வேய்வயின்மென்றோள்கொண்டாள்
பொன்வயின்மேனிகொண்டாள்பொருட்டினாற்புகுந்ததென்றான். (௬௭)

ஆரவளென்னலோடுமரக்கியுமையவாழ்ந்த
தேரவடிரண்டகொங்கைவெம்பொன்செய்குலிகச்செப்பு
பாரவள்பாதந்தீண்டப்பாக்கியம்படைத்ததம்மா
பேரவள்சீதையென்றவடிவெலாம்பேசலுற்றான். (௬௮)

இதுமுதல் ௧௧-கவிகள் சூர்ப்பணகை பலவாற்றல்
சீதையை வருணித்தல்.

காமரமுரலும்பாடல்கள்ளெனக்கனிந்தவின்சொற்
றேமலர்நிறைந்தகூந்தற்றேவர்க்குமணங்காமென்னத்
தாமரையிருந்த * தையல்சேடியாந்தரமுமல்லள்
யாமுரைவழங்குமென்பதேழைமைப்பாலதன்றோ. (௬௯)

மஞ்சொக்குமளகவோதிமழையொக்கும்வடித்தகூந்தல்
பஞ்சொக்குமடிகள்செய்யபவளத்தின்விரல்களைய
அஞ்சொற்களமுதிலள்ளிக்கொண்டவள்வதனமைதீர்
கஞ்சத்தினளவிற்றேனுங்கடலினும்பெரியகண்கள் (௭௦)

ஈசனார்கண்ணின்வெந்தானென்னுமிதுழுதைச்சொல்லிவ்
வாசகாரோதியானைக்கண்டனன்வல்லவாற்றால்
பேசலாந்தகைமைத்தல்லாப்பெரும்பிணிபிணிப்பநீண்ட
ஆசையாலழிந்துதேய்ந்தானநங்கனவ்வுருவமம்மா. (௭௧)

தெவ்வுலகத்துங்காண்டிசிரத்தினிற்பணைத்தினோர்கள்
அவ்வுலகத்துங்காண்டியலைகடலுலகிற்காண்டி
வெவ்வுலையுற்றவேலைவாளினையென்றகண்ணாள்
இவ்வுலகத்தாளங்கம்யாவர்க்குமெழுதொணாதாள். (௭௨)

* தையல் - அழகு; அதனையுடையாளுக்குப் பண்பாகுபெயர்.

தோளையேசொல்லுகேனோசுடர்முத்துலவுகின்ற
வாளையேசொல்லுகேனோவல்லவைவழுத்துகேனோ
மீளவுந்திகைப்பதல்லாற்றனித்தனிவிளம்பலாற்றேன்
நாளையேகாண்டியன்றேநானுனக்குரைப்பதென்னோ. (எங)

வில்லொக்குநுதலென்றாலும்வேலொக்கும்விழியென்றாலும்
பல்லொக்குமுத்தென்றாலும்பவளத்தையிதழென்றாலும்
சொல்லொக்கும்பொருளொவ்வாவாற்சொல்லலாமுவமையுண்டோ
நெல்லொக்கும்புல்லென்றாலுநேருரைத்தாகவற்றே. (எச)

இந்திரன்சசியைப்பெற்றானிமூன்றுமதனத்தோன்றன்
தந்தையுமுமையைப்பெற்றான்றாமரைச்செங்கணானும்
செத்திருமகளைப்பெற்றான்சீதையைப்பெற்றாய்நீயும்
அந்தரம்பார்க்கினன்மையவர்க்கில்லையுனக்கேயையா. (எரு)

பாகத்திலொருவன்வைத்தான்பங்கயத்திருந்தபொன்னை
ஆகத்திலொருவன்வைத்தானந்தணனாவில்வைத்தான்
மேகத்தின்மின்னைமுன்னேவென்றநுண்ணிடையைநீயும்
மாகத்தோள்வீரபெற்றாலெங்ஙனம்வைத்துவாழ்தி. (எசு)

பிள்ளைபோற்பேச்சினாளைப்பெற்றபின்பிழைக்கலாற்றாய்
கொள்ளைபோகின்றசெல்வமவளுக்கேகொடுத்தியைய
வள்ளலேயுனக்குநல்லேன்மற்றுநின்மனையில்வாழும்
கிள்ளைபோன்மொழியார்க்கெல்லாங்கேடுசூழ்கின்றேனன்றே. (எஎ)

தேர்தந்தவல்குற்சீதைதேவர்தமுலகினிம்பர்
வார்தந்தகொங்கையார்தம்வயிறுதந்தாளுமல்லள்
தார்தந்தகமலத்தாளைத்தருக்கினர்கடையச்சங்க
நீர்தந்ததனைவெல்வானிலந்தந்துசிரம்பிற்றன்றே. (எஅ

மீன்கொண்டோடும்வேலைமேகலையுலகமேத்தத்
தேன்கொண்டோடுங்கூந்தற்சிற்றிடைச்சீதையென்னும்
மான்கொண்டோடுநீயுன்வாள்வலியுலகங்காண
யான்கொண்டோடும்வண்ணமிராமனைத்தருதியென்பால். (எக)

தருவதுவிதியேயென்றாற்றவம்பெரிதுடையரேனும்
வருவதுவருநாளன்றிவந்துகைகூடவற்றோ
ஒருபதுமுகமுங்கண்ணுமுருவமுமார்புந்தோள்கள்
இருபதும்படைத்தசெல்வமெய்துவதினிநீயெந்தாய் (அ0)

சூர்ப்பநகை இவளையெடுக்கையிலிது செய்யப்பட்டேன்என்றல்.

இன்னவடன்னையுன்பாலுய்ப்பலென்றெடுக்கலுற்ற
என்னையவ்விராமன்றம்பியிடைபுகுந்திலங்குவாளால்

முன்னைமூக்கரிந்துவிட்டான்முடிக்கதெதன்வாழ்வுமுன்னின்
சொன்னபினுயிரைநீப்பான்றுணிந்தனெனென்னச்சொன்னான். ()

அதுகேட்டு இராவணன் மிக்ககாமமடைதல்.

கோமமுமறனுமானக்கொதிப்புமென்றினையவெல்லாம்
பாபநின்றிடத்துநில்லாப்பெற்றிபோற்பற்றுவிட்ட
நீபமொன்றொன்றையுற்றுவென்னலாஞ்செயலிற்புக்க
தாபமுங்காமநோயுமாருயிர்கலந்தவன்றே. (அஉ)

இதுமுதல் 85-கவிகள் இராவணனது காயவேதனையைக்கூறும்.

கரனையுமறந்தான்றங்கைமூக்கினைக்கடிந்துநின்றான்
உரனையுமறந்தானுற்றபழியையுமறந்தான்வெற்றி
அரனையுங்கொண்டகாமனம்பினுன்முன்னைப்பெற்ற
வரனையுமறந்தான்கேட்டமங்கையைமறந்திலாதான். (அங)

சிற்றிடைச்சீதையென்னுநாமமுஞ்சிந்தைதானும்
உற்றிரண்டொன்றாய்நின்றுவொன்றொழித்தொன்றையுன்ன
மற்றொருமனமுமுண்டோமறக்கலாம்வழிமற்றியாதோ
கற்றனர் * ஞானமின்றேறகாமத்தைக்கடக்கலாமோ. (அச)

மயிலுடைச்சாயலாளைவஞ்சியாமுன்னநீண்ட
எயிலுடையிலங்கைநாதனிதயமாஞ்சிறையில்வைத்தான்
அயிலுடையரக்கனுள்ளமவ்வழிமெல்லமெல்ல
வெயிலுடைநாளினுற்றவெண்ணெய்போல்வெதும்பிற்றன்றே. ()

விதியதுவலியினானுமேலுளவினையினானும்
பதியுறுகேவேர்துகுறுநியபயத்தினானும்
கதியுறுபொறியின்வெய்யகாமநோய்கல்விநோக்கா
மதியிலிமறையச்செய்ததீமைபோல்வளர்ந்ததன்றே. (அசு)

பொன்மயமானநங்கைமனம்புகப்புண்மைபூண்ட
தன்மையோவரக்கன்றன்னையயர்த்ததோர்தகைமையாலோ
மன்மதன்வாளிதூவிகலிவதோர்வலத்தனானன்
வன்மையைமாற்றுமாற்றல்காமத்தேவநிந்ததன்றே. (அஎ)

இராவணன் சபையைவிட்டுத் தன்மனையிலுள்ளே செல்லுதல்.

எழுந்தனனிருக்கைநின்றுண்டேமுலகத்துளோரும்
மொழிந்தனராசியோசைமுழங்கினசங்கமெங்கும்
பொழிந்தனபூவின்மாரிபோயினர்புறத்தோரெல்லாம்
அழிந்தழில்சிந்தையோடுமாடகக்கோயில்புக்கான். (அஅ)

---

* ஞானமானது-முத்திநிலையையும் மற்றைப் பிரபஞ்சநிலைகளையும்சந்தேகவிபரீதங்களின்றி உள்ளபடியறிதல்.

இனி இராவணனது காயநோய்முதிர்ச்சி.

பூவினால்வேய்ந்துசெய்தபொங்குபேரமளிகொங்கைத்
தேவியார்குழுவுநீங்கச்சேர்த்தனன்சேர்தலோடும்
காவிநாறேறுதிங்கள்விசயனமுங்குயமும்புக்குப்
பாவியாக்கொடுத்தவெம்மைபயப்பயப்பரந்ததன்றே. (அகூ)

வேறு.

நூக்கலாகலாதகாதனூறுநூறுகோடியாய்ப்
பூக்கவாசவாடைவீசுசீதநீர்பொதிந்தமென்
சேக்கைவீகரிந்துதிக்கயங்களெட்டைவென்றதோள்
ஆக்கைதீயவுள்ளையவாவிவேவதாயினான். (கூ0)

தாதுகொண்டசீதமேவுசந்துசந்தமென்றளிர்ப்
போதுகொண்டடித்தபோதுபொங்குதீமருந்தினால்
வேதுகொண்டதென்னமேனிவெந்துவெந்துவிம்முதீ
ஊதுவன்றுருத்திபோலுயிர்த்துயிர்த்துயங்கினான். (கூக)

தாவியாதுநீதெனாதுதையலாளைமெய்யுறப்
பாவியாதபோதிலாதபாவிமாழைபானல்வேல்
காவியானகண்ணிமேனிகாணலூனுமாசையால்
ஆவிசாலநொந்துநொந்தழுங்குமானுமாயினான். (கூஉ)

பரங்கிடந்தமாதிரம்பரித்தபாழியானையின்
கரங்கிடந்தகொம்பொடிந்திரங்கவென்றகாவலன்
மரங்குடைந்ததும்பிபோலநங்கன்வாளிவந்துவந்
துரங்குடைந்துநொந்துநொந்துலைந்தொதுங்கினான். (கூங)

கொன்றைதன்றுகோதையோடோர்கொம்புவந்தெனெஞ்சிடை
நின்றதுண்டுகண்டதென்றழிந்தழுங்குநீர்மையான்
மன்றறங்கலங்கன்மாரன்வாளிபோலமல்லிகைத்
தென்றல்வந்தெதிர்ந்தபோதுசிந்துவானுமாயினான். (கூச)

இராவணன் மாளிகையை விட்டு ஒருசோலையை யடைதல்.

அன்னகாலையங்குநின்றெழுந்தழுங்குசிந்தையான்
இன்னவாறுசெய்வெனென்றொரெண்ணிலானிரங்குவான்
பன்னுகோடிதீபமாலைபாலையாழ்பழித்தசொற்
பொன்னனாரெடுக்கவங்கோர்சோலையூடுபோயினான். (கூரு)

வேறு.

அந்தச்சோலையின் வருணனை.

மாணிக்கம்பனசம்வாழைமரகதம்பிவரந்தேமா
ஆணிப்பொன்வேங்கைகோங்கமரவிந்தந்தராகம்பூகம்

சேணுயக்குலஞ்சாலங்குருவிந்தந்தென்னம்வெள்ளி
பாணித்தென்பளிங்குகாகம்பாடலம்பவளமன்றோ. (கசசு)

அந்த ஒருமண்டபத்தில் ஒருபடுக்கையிற்சேர்தல்.

வானுறநிவந்தசெங்கேழ்மணிமரந்துவன்றிவான
மீனெடுமலர்கடம்மில்வேற்றுமைதெரிதறேற்ரு
தேனுகுசோலைகாப்பட்செம்பொன் மண்டபத்துளாங்கோர்
பானிறவமளிசேர்ந்தான்பையுளுற்றுயங்கினைவான். (கசஎ)

அந்தப்பறவைகள்இராவணனுக்கஞ்சி மௌனமாயிருத்தல்.

கனிகளின்மலரின்வந்தகள்ளுண்டுகளிகளன்ன
வனிதையர்மழலையின்சொற்கிள்ளையுங்குயிலும்வண்டும்
இனியனமிழற்றின்றவியாவையுமிலங்குவேந்தன்
முனியுமென்றவிந்தவாயமூங்கையர்போன்றவன்றே. (கசஅ)

வசந்தகாலம் வருதல்

பருவத்தால்வாடைவந்தபசும்பனியசங்கபாணம்
உருவிப்புக்கொளித்தபுண்ணிற்குளித்தலுமுளைந்துவிம்மி
இருந்தான்யாதடாவென்றியம்பினதியம்பலோடும்
வெருவிப்போய்ச்சிசிரநீங்கிவேனிலவந்திறுத்ததன்றே. (கசக)

இராவணனது தாபம் தணிவு பெறாமை.

வண்பனிமாரூந்தியமலைகளுங்குளிரவாழும்
மென்பனியெரிந்ததென்றல்வேனிலைவிளம்பலாமோ
அன்பெனும்விடமுண்டாரையார்றலாமருந்துமுண்டோ
இன்பமுந்துன்பந்தானுமுள்ளத்தோடியைந்தவன்றே. (ச00)

அவன் சரத்காலத்தைக் கொணரக் கட்டளையிடுதல்

மாதிரந்திறதிகாறுந்தன்மனத்தெழுந்த * மையல
வேதனைவெப்பஞ்செய்யவேனிலும்வெதுப்புங்காலை
யாதிதிங்கிதனின்முன்னைச்சிசிரமன்றிதனைநீக்கிக்
கூதிரம்பருவந்தன்னைக்கொணருதிர்விரைவினென்றான். (ச0க)

அதுவும் தபிக்கவே அவன் யெல்லாப்பருவத்தையும்ஒழிக்கவேன்றல்.

கூதிர்வந்தடைந்தகாலைகொதித்தனகுவவுத்திண்டோள்
சீதமுஞ்சுடுமோமுன்னைச்சிசிரமேகொணிதென்றான்
ஆதியாயஞ்சுமன்றேயருளலதியற்றவென்ன
யாதுமிங்கிருதவாகாதியாவையுமகற்றுமென்றான். (ச0உ)

* மையல்வேதனைமோகத்துன்பம்

இருதுவொன்று மில்லாத அச்சமயத்து நிலைமையின் வருணனை.

என்னனுமிருதுவெல்லாமேஇனயாவுந்தத்தம்
பன்னரும்பருவஞ்செய்யாயோகிபோற்பற்றுநீத்த
பின்னருமுலகமெல்லாம்பிணிமுதற்பாசம்வீசித்
துன்னருந்தவத்தினெய்துந் * துறக்கம்போற்றோன்றிற்றன்றே. ()

தாபம் ஒழியாமை.

கூலத்தாருலகமெல்லாங்குளிப்பொடுவெதுப்புநீங்க
நீலத்தாரரக்கன்மேனிநொய்யின்றியெறிந்ததன்றே
காலத்தால்வருவதொன்றோகாமத்தாற்கனலும்வெந்தீச்
சீலத்தாலவிவதன்றிச்செய்யத்தானுவதுண்டோ. (௧௦௪)

தாபந்தணியாத அவன் சந்திரனைக்கொணர்களென்றல்.

காரமுண்டெழுந்தமேகந்தாமரைவளையகானு
சாரமுண்டிருந்தசீதசந்தனத்தளிர்மென்றாதோ
டாரமுண்டிருந்துஞ்சிந்தையயர்கின்றனயகின்றரை
ஈரமுண்டென்பரோடியிந்துவைக்கொணர்மினென்றான். (௧௦௫)

சந்திரன் வருதல்.

வெஞ்சினத்தரக்கனுண்டவியனகர்மீதுபோதும்
நெஞ்சிலனொதுங்குகின்றகிறைமதியோனைநோக்கி
அஞ்சலைவருதிகின்னையழைத்தனனறசனென்னச்
சஞ்சலந்துறந்துதானச்சந்திரனுதிக்கலுற்றான். (௧௦௬)

சந்திரோதயவருணனை சந்திரன் இராவணனை வருத்துதல்.

அயிருறக்கலந்தநன்னீராழிநின்றாழிநீத்துச்
செயிருறக்கலந்ததாண்டோந்தேய்வுவந்துற்றபோது
வயிரமுற்றுடைந்துசென்றோர்வலியவற்செல்லுமாபோல்
உயிர்தெறத் † காலனென்பானுத்தனனுதயஞ்செய்தான். (௧௦௭)

பராவருங்கதிர்களெங்கும்பரப்பிமீப்படர்ந்துவானில்
தாரதலத்தெவரும்பேணுவவனையேசலிக்குநீரால்
அராவினைதுயிலுமண்ணல்காலமோர்ந்தற்றநோக்கி
இராவணனுயிர்மேலுய்த்ததிகிரியுமென்னலானான். (௧௦௮)

அருகுருபாலின்வேலையமுதெலாமளைந்துவாரிப்
பருகினன்பரந்துபாய்ந்தநிலாச்சுடர்ப்பனிமென்கற்றை
நெறியுறுபுருவச்செங்கணரக்கற்கொருப்பிணுப்பண்
உருகியவெள்ளியள்ளிவீசினுலொத்ததன்றே. (௧௦௯)

---

* துறக்கம் முத்தியுலகம். சுவர்க்கம். † காலன்காலத்தை அறிவிப்பவன்.

மின்னிலர்திரிந்ததன்னவிழுநிலாமிதிலைசூழ்ந்த
செந்நெலங்கழனிநாடன்றிருமகள்செவ்விகேளா
நன்னலர்தொலைந்துசோருமரக்கனைநாளுந்தோலாத்
* துன்னலவொருவன்பெற்றபுகழெனச்சுட்டதன்றே. (கக0)

சூரியனையேன் கொணர்ந்தீரென்றல்.

கருங்கழற்காலனஞ்சுங்காவலன்கருத்துநோக்கித்
தருங்கதிர்ச்சிதயாக்கைச்சந்திரற்றருதிரென்ன
முருங்கியதணலின்மூரிவிடத்தினைமுகக்குஞ்சீற்றத்
தருங்கதிருக்கன்றன்னையாரழைத்தீர்களென்றான். (ககக)

ஏவளாளர் சந்திரனே என்றல்.

அவ்வழிச்சிலதரஞ்சியாதியாயருளில்லாரை
இவ்வழித்தருதுமென்பதியம்பலாமியல்பிற்றன்றால்
செவ்வழிக்கதிரோரென்றுந்தேரின்மேலன்றிவாரான்
வெவ்வழித்தெனினுந்திங்கள்விமானத்தின்மேலதென்றார். (ககஉ)

வேறு.

இராவணன் சந்திரனென்றறிந்து அவனை வெறுக்கத் தொடங்கல்.

பணைந்தாழல்குற்பனிமொழியார்க்கன்புபட்டார்படுங்காமக்
குணந்தான்முன்னமரியாதான்கொதியாநின்றான்மதியாலே
தணந்தாமரையின்றனிப்பகைஞனென்னுந்தன்மையொருதானே
உணர்ந்தானுணர்வுற்றவன்மேலிட்டுயிர்தந்துய்க்கவுரைசெய்வான்.

தேயாநின்றாய்மெய்வெளுத்தாயுள்ளங்கறுத்தாய்நிலைதிரிந்து
காயாநின்றாயொருநீயுங்கண்டார்சொல்லக்கேட்டாயோ
பாயாநின்றமலர்வாளிபறியாநின்றாரின்மையால்
ஓயாநின்றேனுயிர்காத்தற்குரியார்யாவருபெதியே (ககச)

ஆற்றாராகிற்றம்மைக்கொண்டடங்காரோவென்னுருயிர்க்குக்
கூற்றாய்நின்றகுலச்சனகிகுவளைமலர்ந்ததாமரைக்குத்
தோற்றாயதனைகக்கரிந்தாய்மெலிந்தாய்வெதும்பத்தொடங்கினாய்
மாற்றார்செல்வங்கண்டழிந்தால்வெற்றியாக † வற்றாமோ. (ககரு)

இராவணன் சூரியனையும் பகலையும் வரவழைத்தல்.

என்னப்பன்னியிடருழவாவிரவோடிவனைக்கொண்டகற்றி
முன்னைப்பகலும்பகலோனும்வருகவென்றான்மொழியாமுன்
உன்னற்கரியவுபெதியுமிரவுமொழிந்தவொருநொடியில்
பன்னற்கரியபகலவனும்பகலும்வந்துபரந்தவால். (ககசு)

* துன்னலன்-சேராதவன். † வற்று-வல்லது; பண்படிக்குறிப்புமுற்று.

இதுமுதல் ௧௩-கவிகள் அவ்வுதய காலவருணனை.

இருக்கின்மொழியாரெரிமுகத்தினீந்தநெய்யினவிர்செம்பொன்
உருக்கியனையகதிர்பாயவனல்போல்விரிந்ததுயர்கமலம்
அருக்கனெய்தவமைந்தடங்கிவாழாவடாதபொருளெய்திச்
செருக்கியிடையேதிருவிழந்தசிறியோர்போன்றசேதாம்பல். (௧௧௭)

நாணிநின்றவொளிமழுங்கிநடுங்காநின்றவுடம்பினளாய்ச்
சேணினின்றுபுறஞ்சாய்ந்துகங்குற்றூரம்பின்செல்லப்
பூணின்வெய்யோனொருதிசையேபுகுதப்போவான்புகழ்வேந்தர்
ஆணைசெல்லநிலையழிந்தவரசர்போன்றானல்லாண்டான். (௧௧௮)

வேறு.

மணந்தபேரன்பரைமலரின்சேக்கையுள்
புணர்ந்தவரிடையொருவெகுளிபொங்கலாற்
* கணங்குழைமகளிர்கள்கங்குனீங்கிட
உணர்ந்திலர்கனவினுமூடறீர்ந்திலர். (௧௧௯)

தள்ளுறுமுயிரினர்தலைவர்நீங்கலால்
நள்ளிரவிடையுறநடுக்கநீங்கலர்
கொள்ளையினலர்தருகுவளைநாண்மலர்
கள்ளுகுவனவெனக்கலுழுங்கண்ணினார். (௧௨௦)

அணைமலர்ச்சேக்கையுளாடறீர்ந்தனர்
பணைகளைத்தழுவியபவளவல்லிபோல்
இணைமலர்க்கைகளினிறுகலின் † னுயிர்த்
துணைவரைத்தழுவினர்துயில்கின்றார்சிலர். (௧௨௧)

அளியினங்கடர்தொறமார்பவாய்கதிர்
ஒளிபடவுணர்ந்திலவுறங்குகின்றன
தெளிவிலவின்றுயில்விளையுஞ்சேக்கையுள்
களிகளைநிகர்த்தனகளிநல்யானையே. (௧௨௨)

விரிந்துறைதுறைதொறும்விளக்கம்யாவையும்
எரிந்தெழுதஃகலவொளியிழந்தன
அருந்துறைநிரம்பியவுயிரினன்பரைப்
பிரிந்துறைதருங்குலப்பேதைமாரினே. (௧௨௩)

‡ புனைந்திதழுரிஞ்சுறுபொழுதுபல்லியும்
வனைந்திலவைகறைமலருமாமலர்

* கணம்-கூட்டம். † உயிர்த்துணைவர் - உயிர்போன்ற துணைவரென உவமத்தொகை. ‡ புனைதல்-அழகுசெய்தல் "பொன்னியற்புனைதோட்டியால்" என்புழி இப்பொருட்டாதல் காண்க. (புறநானூறு ௧௪-வதுபாட்டு.)

நனந்தலைபமளியிற்றுயிலுநங்கைமார்
அனந்தரினெடுங்கணோடொத்தவாமரோ. (௧௨௪)

இச்சையிற்றுயில்வதற்கியாவர்கண்களும்
நிச்சயம்பகலுந்தமிமைகணீக்கலர்
பிச்சையுமிடுதுமென்றுணர்வுபேணலர்
வச்சையர்நெடுமனைவாயிலானவே. (௧௨௫)

நஞ்சுறுபிரிவினைநாளினீளமோர்
தஞ்சுரவிடுவதோர்தயாவுதாங்கலால்
வெஞ்சிறைநீங்கியவினையினுநெர
நெஞ்சுநக்களித்தனநேமிப்புள்ளெலாம். (௧௨௬)

நாண்மதிக்கல்லதுநடுவணெய்திய
ஆணையினீக்கலாவரிற்பாய்வன
‡ மாண்வினைபயன்படாமாந்தர்வாயில்சேர்
பாணரிற்றளர்ந்தனபாடற்றும்பியே. (௧௨௭)

அருமணிச்சாளரமதனினூடுபுக்
கெரிகதிரின்றுயிலெழுப்பிபேற்றவும்
மருளொடுதெருளுறுகிலையர்மங்கையர்
தெருளுறமெய்ப்பொருடெளிந்திலாரினே. (௧௨௮)

ஏவலின்வன்மையையெண்ணறேற்றலர்
நாவலரியற்றியநாளினுமனால்
காவலினினிதுணர்கணிதமாக்களும்
கூவுறுகோழியுந்துயில்வுகொண்டவே. (௧௨௯)

இனையனயுலகினினிகழுமெல்லையில்
கனைகழலரக்கனுங்கண்ணினேக்கினன்
நினைவுறுமனத்தையுநெருப்பிற்றீக்குமால்
அனையவத்திங்களேயாகுமாலென்றான். (௧௩௦)

ஏவலர் சூரியனே என்றுணர்த்தல்.

திங்களோவன்றிதுசெல்வசெங்கதிர்
பொங்குளைப்பச்சையம்புரவித்தேரதால்
வெங்கதிர்சுடுவதேயன்றிமெய்யுறத்
தங்குதண்கதிர்சுடத்தகாதென்றார்சிலர். (௧௩௧)

---

‡ மாண்வினை-பாடலின் தன்மையையுணர்ந்து கேட்டு மகிழ்தலும் பாணர்க்கு வேண்டியபடி கொடுத்துப் பெருமையையடைதலுமாகிய செயல்களாம்.

வேறு.

இராவணன் இளம்பிறையைக் கோணர்க என்றல்.

நீலச்சிகரக்கிரியன்னவனின்றவெய்யோன்
ஆலத்தினும்வெய்யனகற்றியரற்றுகின்ற
வேலைக்குரலைத்தவிர்கென்றுவிலக்கிமேலை
மாலைப்பிறைப்பிள்ளையைக்கூவுதிர்வல்லையென்றான். (௧௩௨)

சொன்னானிருதர்க்கிறையம்மொழிசொல்லலோடும்
அந்நாளினிரம்பியவம்மதியாண் * டொர்வேலை
முந்நாளினிளம்பிறையாகிமுளைத்ததென்றால்
எந்நாளுமருந்தவமன்றியியற்றலாமோ. (௧௩௩)

இராவணன்பிறையைப் பழித்தல்

குடபாலின்றுளைத்ததுகண்டகுணங்கடியோன்
வடவாவனலன்றெனின்மண்பிடர்வைத்தபாம்பின்
விடவாளெயிறன்றெனினென்னைவெகுண்டமாலை
அடவாளுருவிக்கொடுதோன்றியதாகுமன்றே. (௧௩௪)

தாதுண்சடிலத்தலைவைத்ததுதண்டரங்கம்
மோதுங்கடலிற்கிடைமுந்துபிறந்தபோதே
ஓதுங்கடுவைத்தன்மிடற்றினொளித்ததக்கோன்
ஈதுங்கடுவாமெனவெண்ணியவெண்ணமன்றே. (௧௩௫)

உருமொக்கவுலந்துயிர்நுங்கியதிங்களோடித்
திருமிச்சிறுமின்பிறைதீமைகுறைந்ததில்லை
கருமைக்கறைநெஞ்சினினஞ்சுகலந்தபாம்பின்
பெருமைச்சிறுமைக்கொருபெற்றிகுறைந்ததுண்டோ. (௧௩௬)

இராவணன் இருளைத் தருக என்றல்.

கன்னக்கனியும்மிருடன்னையுங்காண்டுமென்றே
முன்னைக்கதிர்நன்றிதகற்றுதிர்முன்புசான்ற
என்னைச்சுடுமென்னினிவ்வேழுலகத்தும்வாழ்வோர்
பின்னைச்சிலருய்வரென் † றங்கொருபேச்சுமுண்டோ. (௧௩௭)

அந்தகாரவருணனை.

ஆண்டப்பிறைநீங்கலுமெய்தியதந்தகாரம்
நீண்டற்கெளிதாய்ப்பலதேய்ப்பனதேய்கலாகி
வேண்டிற்கரபத்திரத்தீர்த்துவிழுத்தலாகிக்
காண்டற்கினிதாய்ப்பலகந்துதிரட்டலாகி. (௧௩௮)

---

* ஒருவேலை-ஒருபுறத்தில், எல்லை. † அங்கு-அசை.

முருடேர்த்துருட்டற்கெளிதென்பதென்முற்றுமுற்றிப்
பொருடேங்கில்கேள்விச்சுடர்புக்குவழங்கலின்றிக்
குருடேங்கிதென்னக்குறிக்கொண்டுகண்ணோட்டங்குன்றி
அருடீர்ந்தநெஞ்சிற்கரிதென்பதவ்வந்தகாரம். (௧௩௯)

இராவணன் இருளைப்பழித்தல்.

விள்ளாதுசெறிந்திடைமேலுறவோங்கி * யெங்கும்
நள்ளாதிருளந்தகன்ஞாலம்விழுங்கலோடும்
எள்ளாதுலகியாவையும்யாவரும்வீயுமென்ப
துள்ளாதுமிழ்ந்தான்விடமுண்டவொருத்தனென்றான். (௧௪௦)

வேலைத்தலைவந்தொருவன்வலியால்விழுங்கும்
ஆலத்தினடங்குவதன்றிதறிந்துணர்ந்தேன்
ஞாலத்தொடுவிண்முதல்யாவையுநாவினக்கும்
காலக்கனல்கார்விடமுண்டுகெறுத்ததன்றே. (௧௪௧)

இராவணன் சீதையை உருவெளித்தோற்றத்திலே கண்டு
கூறும் வார்த்தை.

அம்புமனுநழையாக்கனவந்தகாரத்
தும்பர்மழைகொண்டயலொப்பரிதாயதுப்பின்
கொம்பர்குரும்பைக்குலங்கொண்டதுதிங்கடாங்கி
வெம்புந்தமியேன்முன்விளக்கெனத்தோன்றுமன்றே. (௧௪௨)

மருளூடுவெந்தமயக்கோமதிமற்றுமுண்டோ
தெருளாதிதென்றேதிணிமையிழைத்தாலுமொவ்வா
இருளூடிருகுண்டலங்கொண்டிருண்டநீலச்
சுருளோடும்வந்தோர்சுடர்மாமதிதோன்றுமன்றே. (௧௪௩)

† புடைகொண்டெழுகொங்கையுமல்குலும்புல்லிநிற்கும்
இடைகண்டிலமல்லதெல்லாவுருவுந்தெரிந்தாம்
விடநுங்கியகண்ணுடையாரிவர்மெல்லமெல்ல
மடமங்கையராயென்மனத்தவராயினரே. (௧௪௪)

பண்டேயுலகேழினுமுள்ளபடைக்கணாரைக்
கண்டேனிவர்போல்வதொர்பெண்ணுருக்கண்டிலேனால்
உண்டேயெனின்வேறினியெங்கையுணர்த்திநின்ற
வண்டேறுகோதைமடவாரிவராகுமன்றே. (௧௪௫)

இராவணன் சூர்ப்பணகையை யழைக்கவென்றல்.

பூண்டிப்பிணியானுறுகின்றதுதான்பொறாதாள்
தேண்டிக்கொடுவந்தனள்செய்வதொர்மாறுமுண்டோ

---

* எங்கும் நள்ளாது யாதோரிடத்தையும் விட்டிடாமல்.
† புடை-பக்கம், திரட்சியுமாம்.

காண்டற்கினியாளுருக்கண்டவட்கேட்கு * மாற்றால்
ஈண்டிப்பொழுதேவிரைந்தெங்கையைக்கூவுகென்றான். (கசசு)

சூர்ப்பணகை இராவணனிடத்து வருதல்.

என்றானெனலுங்கடிதேகினர்கூவுமெல்லை
வன்றானிருதக்குலம் † வேரறமாய்த்தலசெய்வாள்
ஒன்றாதகாமக்கனலுட்டெறலோர்நோசி
பொன்றாழ்குழைதன்னொடும்போக்கினள்போய்புகுந்தாள். (கசள)

இராவணன் அவளைநோக்கி இவள் சீதைதானா எனவினவல்.

பொய்ந்நின்றநெஞ்சிற்கொடியாள்புகுந்தாளைநோக்கி
நெய்ந்நின்றகூர்வாளவனேருறநொக்குநங்காய்
மைந்நின்றவாட்கண்மயினின்றெனவந்தென்முன்னர்
இந்நின்றவளாங்கொலியம்பியசீதையென்றான். (கசஅ)

அவன் தனது உருவெளிதோற்றத்தின்படி இராமனென்றல்.

செந்தாமரைகண்ணொடுஞ்செங்கனிவாயினோடும்
சந்தார்தடக்தோளொடுந்தாழ்தடக்கைகளோடும்
அந்தாரகலத்தொடுமஞ்சனக்குன்றமென்ன
வந்தானிவனாகுமவ்வல்விலிராமனென்றாள். (கசக)

சூர்ப்பணகையை நோக்கி நமது காக்ஷிமாறு படுவதேன் என்றல்.

பெண்பாலுருநானிதுகண்டதுபேதைநீயீண்
டெண்பாலுமிலாததொராணுருவென்றியென்னே
கண்பாலுறுமாயைகவற்றுதல்கற்றநம்மை
மண்பாலவரேகொல்விளைப்பவர்மாயையென்றான். (கருo)

அவள் இராவணனை நோக்கி நீகண்டபெண்ணுரு
உருவெளித்தோற்றமே என்றல்.

ஊன்றாமுணர்வப்புறமொன்றினுமோடவின்றி
ஆன்றாமுளதாநெடிதாசைகனற்றநின்றாய்க்
கேன்றானெதிரேவிழிநோக்குமிடங்கடோறும்
தோன்றாமனையாளிதுதொன்னெறித்தாகுமென்றாள். (கருக)

நீ இராமனைக்கண்டது என்னே எனற்கு அவள் விடைகூறல்.

அன்னாளதுகூறவரக்கனுமன்னதாக
நின்னாலவ்விராமனைக்காண்குறுநீரெனென்றான்
எந்நாளவனென்னையித்தீர்வருமின்னல்செய்தான்
அந்நாண்முதல்யானுமயர்த்திலனாகுமென்றாள். (கருஉ)

---

* ஆறு-வழி. ஆற்று - தலைக்கடைவாயில். † வேரறமாய்த்தல்-நிர்மூலமாக்குதல், சந்ததியுமறத்தொலைத்தல்.

சீதையைக்கவர்ந்து வரும்படி சூர்ப்பணகை இராவணனுக்குக்கூறுதல்.

ஆமாமதடுக்குமெனக்கையொடாவிகைய
வே * மால்வினையேற்கினியென்விதிவாகுமென்னக்
கோமானுலகுக்கொருநீகுறைகின்றதென்னே
பூமாண்குழலாடனைவௌவுதிபோதியென்றாள். (௧௫௩)

இராவணன் காம நோயால் மரணவத்தைப் படுதல்.

என்றாளகன்றாளவரக்கனுமீடழிந்தான்
ஒன்றானுமுணர்ந்திலனாவியுலைந்துசோர்ந்தான்
நின்றாருநடுங்கினர்நின்றனநாளினாலே
பொன்றாதுளனாயினனத்துணைபோலுமன்றே. (௧௫௪)

இராவணன் தனது வெப்பந்தீர்தற் பொருட்டுச் சந்திரகாந்தமண்டபஞ் செய்யச்சொல்லல்.

இறந்தார்பிறந்தாரெனவின்னுயிர்பெற்றமன்னன்
மறந்தானுணர்ந்தானவண்மாடுநின்றாரைநோக்கிக்
கறந்தாலெனநீர்தருசந்திரகாந்தத்தாலே
சிறந்தார்மணிமண்டபஞ்செய்கெனச்செப்புகென்றான். (௧௫௫)

தெய்வதச்சன் சந்திரகாந்தமண்டப மியற்றல்.

வந்தானெடுவோனுறைதச்சன்மனத்துணர்ந்தான்
† சிந்தாவினையன்றியுஞ்செய்வினையானுஞ்செய்தான்
அத்தாமநெடுங் ‡ தறியாயிரத்தாலமைந்த
சந்தார்மணிமண்டபந்தாமரையோனுநாண. (௧௫௬)

காந்தமமுதின்றுளிகால்வனகாலமீனின்
வேந்தனொளியன்றியுமேலொடுகீழ்விரித்தான்
பூந்தென்றல்புகுந்துறைசாளரமும்புனைந்தான்
ஏந்துமணிக்கற்பகச்சீதளக்காவிழைத்தான். (௧௫௭)

இராவணன் மண்டபங்காணவருதல்.

ஆணிக்கமைபொற்கைம்மணிச்சுடரார்விளக்கம்
சேணுற்றிருள்சீப்பவத்தெய்வமடந்தைமார்கள்
பூணிற்பொலிவார்புடையேந்திடப்பொங்குதோளான்
மாணிக்கமானத்திடைமண்டபங்காணவந்தான். (௧௫௮)

---

* மால்வினையேற்கு-வேட்கைச்செயலையுடைய எனக்கு, பெரிய தீவினையையுடைய எனக்கு. † சிந்தாவினை-மாநஸ்கர்மம்; மனத்தால் நினைத்தவளவில் நிருமித்தல்; குறைவற்றவேலை. ‡ தறியாலமைந்தமண்டபம் ஆயிரக்கால்மண்டபம்.

இராவணனதுபரிசாரகப் பெண்களின் முகவொளி.

அல்லாயிரகோடியடுக்கியதொத்ததேனும்
நல்லார்முகமாதளிர்வானிலவீன்றநாமப்
பல்லாயிரகோடிபனிச்சுடரீன்றதிங்கள்
எல்லாமுடனுயிருளோடியிரிந்ததன்றே. (௧௫௯)

அம்மண்டபத்தைச்சூழ்ந்த சோலையிலுள்ள கற்பக விருக்ஷங்களின் காந்திவிசேடம்.

பொற்புற்றனமாமணியொன்பதும்பூவினின்ற
கற்பத்தருவின்கதிர்நாணிழற்கற்றைநாற
அற்பற்றழியப்பகலாக்கியதாலருக்கன்
நிற்பத்தெளிகின்றதுநீள்சுடர்மேன்மையன்றே. (௧௬௦)

இராவணன் மண்டபத்தினுட்புகுதல்.

ஊன்றேசைமுதற்பொறியாவையுமொன்றியொன்று
தேறாநிலையுற்றதோர்சிந்தையன்செய்கையோரான்
வேறாயபிறப்பிடைவேட்கைவிசித்தநீர்ப்ப
மாறேருடலுற்றெனமண்டபம்வந்துபுக்கான். (௧௬௧)

வேறு.

இராவணன் அந்தப் பூம்பள்ளியையடைதல்.

தண்டலிறவஞ்செய்வோர்தாம்வேண்டியதரவோதல்கும்
மண்டலமகரவேலையமுதொவேந்தனென்னப்
பண்டருசுரும்புசேரும்பசுமரமுயிர்த்தபைம்பொற்
றண்டளிர்மலரிற்செய்தசீதளச்சேக்கைசார்ந்தான். (௧௬௨)

அங்குத்தென்றற்காற்று வீசுதல்.

கோரிழைமகளிர்கூந்தனிறைநறைவாசநீந்தி
வேரியஞ்சரளச்சோலைவேனிலான்விருந்துசெய்ய
ஆர்கலியமுவந்தமருந்தெனவொருவராவி
நீரினுமுதவற்கொத்ததென்றல்வந்திறுத்த * தன்றே. (௧௬௩)

அத்தென்றலுக்கு இராவணன் வருந்துதல்.

சாளரத்தூடுவந்துதவழ்தலுந்தரித்ததேற்றான்
நீளரத்தங்கள்சிந்திநெருப்புகநோக்குநீரான்
வாழ்மனைபுகுந்ததாண்டோர்மாசுணம்வரக்கண்டன்ன
கோளுறக்கொதித்துவிம்மியுழையரைக்கூவிச்சொன்னான். (௧௬௪)

---

* அன்றே-ஈற்றசை; அப்பொழுதேயெனினுமாம்.

இராவணன்வாயில் காவலரையழைத்து வரச்சொல்லுதல்.

கூவலினுயிர்த்தசின்னீருலகினைக்குப்புத்தென்னத்
தேவரினொருவனென்னையின்னலுஞ்செய்யத்தக்கான்
ஏவினன்றிவந்திங்கிவ்வழியெய்திற்றென்னுக்
காவலினுழையர்தம்மைக்கொணருதிர்கடிதினென்றான். (கசு௫)

வாயில்காவலனொருவன் இராவணனுக்குச் சமாதானங்கூறல்.

அவ்வழியுழையரோடியாண்டவற்கொணர்தலோடும்
வெவ்வழியமைந்தசெங்கண்வெருவுறநோக்கிவெய்யோன்
செவ்வழிதென்றலோர்க்குத்திருத்தினைநீகொலென்ன
இவ்வழியிருந்தகாலைத்தடையவற்கில்லையென்றான். (கசுசு)

(இங்கே ஒருசெய்யுள் விடுபட்டுப்போனதென்று தெரிகிறது; அது இவ்வார்த்தையைக் கேட்டவுடன் இராவணன் பரிசனங்களைநோக்கிதேவர்கள் தம்தம் இச்சைப்படி வந்து தந்தமக்குவேண்டியபடி செய்வதானல் எனது கட்டளையும் வலிமையும் என்னபயனுடையன ? பலதிசைகளிலுமுள்ள காற்றுக்களையெல்லாம் நீங்கள் இக்கணமே ஓடிப்பிடித்து வந்து சிறையிடுங்கள் என்று கட்டளையிட்டான் என்னுங் கருத்துடையது.)

இராவணன் ஏவலரைநோக்கி மந்திரிகளை யழைக்கவென்றல்.

காற்றினேன்றன்னைவாளா முனிதலிற்கண்டதில்லை
கூற்றுவந்தென்னையின்னேகுறுகுமாற்குறித்தவாற்றால்
வேற்றருங்கருங்கட்சிதைமெய்யருள்புனையேனென்றால்
ஆற்றலாலடுத்ததென்னுமமைச்சரைக்கொணர்திரென்றான். (கசுஎ)

ஏவலர் அழைக்க அமைச்சர் விரைந்துவருதல்.

ஏவினசிலதரோடியேயெனுந்துணையினெங்கும்
கூவினர்கூவலோடுங்குறுகினர்கொடித்திண்டேரார்
மாவினர்சிவிகைமேலர்மும்மதக்களிற்றர்வையத்
தேவரும்வானந்தன்னிற்றேவரும்திகைத்துசிந்த. (கசுஅ)

மந்திரிகளுடன் ஆலோசித்து இராவணன் மாரீசனிடஞ்செல்லுதல்.

வந்த † மந்திரியரோடுமோசறமனத்தினெண்ணிச்
சிந்தையினினைந்தசெய்யுஞ்செய்கையன்றெளிவினெஞ்சன்
அந்தரஞ்செல்வதாண்டோர்விமானத்திலாருமின்றி
இந்தியமடக்கினின்றமாரீசனிருக்கைசேர்ந்தான். (கசுகூ)

மாரீசன் இராவணனை எதிர்கொண்டுபசரித்தல்.

இருந்தமாரீசனந்தவிராவணனெய்தலோடும்
பொருந்தியபயத்தன்சிந்தைபொருமுற்றவெருவுகின்றான்

† மந்திரி-மந்த்ரீயென்ற வடசொல்லின்றிரிபு; ஆலோசனை யுடையவனென்றபொருள்படும். மந்திரம்-ஆலோசனை.

கருந்தடமலையன்னானையெதிர்கொண்டுகடன்கள்யாவும்
திருந்தியசெய்துசெவ்வித்திருமுகநோக்கிச்செப்பும். (கஎ0)

வேறு.

மாரீசன் இராவணனை நீவந்தகாரியம் என் என்றல்.

சந்தமலர்த்தண்டேற்பகநீகற்றலைவற்கும்
அந்தகனுக்குமஞ்சவடுக்குமரசாள்வாய்
இந்தவனத்தென்னின்னவிருக்கைக்கெளியோரின்
வந்தகருத்தென்சொல்லுதியென்றான்மருள்கின்றான். (கஎக)

இராவணன் கூறும் விடை.

ஆனதனைத்துமாவிதரித்தேனயர்கின்றேன்
போனதுபொற்புமேன்மையுமற்றென்புகழோடும்
யானதுனக்கின்றெங்ஙனுரைக்கேனினிதென்னா
வானவருக்குநாணதடுக்கும்வகைமன்னோ. (கஎஉ)

வன்மைதரித்தோர்மானுடர்மற்றங்கவர்வாளால்
நின்மருகிக்குநாசியிழக்குநிலைநேர்ந்தார்
என்மரபுக்குநின்மரபுக்குமிதன்மேலோர்
புன்மைதெரிப்பின்வேறினியெற்றேபுகல்வேலோய். (கஎங)

திருகுசினத்தார்முதிர்மலைந்தார்சிறியோர் * நாள்
பருகினரென்றால்வென்றநலத்தின்பழியன்றோ
இருகைசுமந்தாயினிதினிருந்தாயிகல்வேலுன்
மருகருலந்தாரொருவன்மலைந்தான்வரிவில்லால். (கஎச)

வெப்பழியாதென்னெஞ்சுமுலந்தேன்விளிகின்றேன்
ஒப்பழிவென்றேபோர்செயலொல்லேனுடன்வாழும்
துப்பழிசெவ்வாய்வஞ்சியைவெளவத்துணைகொண்டிட்
டிப்பழிநின்றேற்றீரியவந்தேனிவணென்றான். (கஎரு)

அதுகேட்ட மாரீசன் உடன்படாது மறுத்துக் கூறத்தொடங்குதல்

இச்சொலனைத்துஞ்சொல்லியரக்கனெரிகின்ற
† கிச்சினுருக்கிட்டெய்த்தனனென்னக்கிளராமுன்
சிச்சியெனத்தன்மெய்ச்செவிபொத்தித்தெருமந்தான்
அச்சமகற்றிச்செற்றமனத்தோடறைகின்றான். (கஎசு)

மாரீசன் எதிர்மறுத்துக் கூறும்வார்த்தை.

மன்னுநீநின்வாழ்வைமுடித்தாய்மதியற்றாய்
உன்னுனன்றீதாழ்வினையென்றேயுணர்கின்றேன்

* நாள்பருகுதல்-ஆயுளையொழித்தல். † கிச்சு-நெருப்பு.

இன்னாநெஞ்சனேனுமுரைப்பலிதமென்னாச்
சொன்னானன்றேயன்னவனுக்குத்துணிவெல்லாம். (கஎஎ)

அற்றகரத்தோடுன்றலைநீயேயனன்முன்றில்
பற்றினையுய்த்தாய்பற்பலகாலம்பசிகூர
உற்றுயிருள்ளேதேயவுலந்தாயுழையன்றோ
பெற்றனைசெல்வம்பின்னதிகழ்ந்தாற்பெறலாமோ. (கஎஅ)

திறத்திறனாலோசெய்தவமுற்றித்திருவுற்றாய்
மறத்திறனாலோசொல்லுதசொல்லாய்மறைவல்லோய்
அறத்திறனாலேயெய்தினையன்றோவதுநீயும்
புறத்திறனாலேபின்னுமிழக்கப்புகுவாயோ. (கஎகூ)

* நாரங்கொண்டார்நாடுகவர்ந்தார்நடையல்லா
வாரங்கொண்டார்மற்றொருவர்க்காய்மனைவாழும்
தாரங்கொண்டாரென்றிவர்தம்மைத்தருமந்தான்
ஈருங்கண்டாய் † கண்டகருய்ந்தாரெவரையா. (கஅ௦)

அந்தாமுற்றா ‡ னகலிகைபொற்பாலழிவுற்றான்
இந்திரனொப்பாரெத்தனையோர்தாமிழிவுற்றார்
செந்திருவொப்பாரெத்தனையோர்நின்றிருவுண்பார்
மந்திரமற்றாருற்றதுரைத்தாய்மதியற்றாய். (கஅக)

செய்தாயேனுந்தீவினையோடும்பழியல்லால்
எய்தாதெய்தாதெய்தினிராமனுலகீன்றான்
வைதாலன்னவாளிகள்கொண்டும்வழியோடும்
கொய்தானன்றேகொற்றமுடித்தன்குழுவெல்லாம். (கஅஉ)

என்றாலென்னேயெண்ணலையேநீகரனென்பான்
நின்றானைக்குமேலுளனென்னுநிலையம்மா
தன்றானைக்குற்றாரொடுமாளத்தனுவொன்றால்
கொன்றான்முற்றுங்கொல்லமனத்திற்குறிகொண்டான். (கஅங)

வெய்யோர்யாரேவீரவிராதன்றனைவெய்யோர்
ஐயோபோனானம்பொடுமும்பர்க்கவனென்றால்
உய்வார்யாரேநம்மினெனக்கொண்டுணர்தோறும்
நய்யாநின்றேனீயிதுரைத்துநலிவாயோ. (கஅச)

---

* நாரம்-ஈண்டு அன்பு. † கண்டகர்-முட்போன்றவர்; பிறர்க்குஉபத்திரவஞ் செய்பவரென்றபடி. ‡ அகலிகை-அஹல்யா என்னும் வடமொழியின் திரிபு; இச்சொல்லுக்கு அழகில்லாமை யில்லாதவளென்று பொருள், மிக்க அழகுடையவளென்று கருத்து; ஹல்யம்-அழகின்மை.

மாண்டார்மாண்டார்நீயினிமாள்வார்தொழில்செய்ய
வேண்டாவேண்டாசெய்கெனினுய்வான் விதியுண்டோ
ஆண்டாராண்டாரெத்தனையென்கோவறநோனூர்
ஈண்டாரீண்டார்நின் றவரெல்லாமிலரன்றே. (கஅரு)

எம்பிக்கும்மென்னென்னைதனக்குமிறுதிக்கோர்
அம்புய்க்கும்போர்வில்லிதனக்குமயனிற்கும்
தம்பிக்குநம் * மாண்மைதவிர்க்தேசயநிற்கும்
கம்பிக்கும்மென்னெஞ்சவனென்றேகவல்கின்றேன். (கஅசு)

நின்றுஞ்சென்றும்வாழ்வனயாவுநிலையாவால்
பொன்றும்மென்றும்மெய்ம்மையுணர்ந்தாம்புலையாடற்
கொன்றும்முன்னுமென்னுரைகொள்ளாயுயர்செல்வத்
தென்றும்மென்றும்வைகுதியையாவினியென்றான். (கஅஎ)

வேறு.

அதுகேட்டு இராவணன் மாரீசன்மேற் கோபித்தல்.

கங்கைசடைவைத்தவனொடுங்கைலைவெற்போர்
அங்கையினெடுத்தவெனதாடெழின்மணித்தோள்
இங்கொர்மனிதற்கெளியவென்றனையெனத்தன்
வெங்கணெரியப்புருவமீதுறவிடைத்தான். (கஅஅ)

நிகழ்ந்ததைநினைத்திலையெனைஞ்சினிலையஞ்சா
திகழ்ந்தனையெனக்கிளையகங்கைமுகமெங்கும்
அகழ்ந்தனையதொப்புறவமைத்தவரையையா
புகழ்ந்தனை † தனிப்பிழைபொறுத்தனனிதென்றான். (கஅக)

மாரீசன்மீண்டும் உறுதிமொழிகூறல்.

தன்னைமுனிவுற்றதறுகட்டகவிலோனைப்
பின்னைமுனிவுற்றிடுமெனத்தவிர்தல்பேணு
துன்னைமுனிவுற்றனகுலத்தொடுமுனிவுற்றாய்
என்னைமுனிவுற்றிலையிதென்னெனவிசைத்தான். (ககo)

எடுத்தமலையேநினையினீசனிகல்வில்லாய்
வடித்தமலையேயிதுவலித்திடெனவாரிப்
பிடித்தமலைநாணிடைபிடித்தொருவன்மேனூள்
ஒடித்தமலையும்பர்முகடுற்றமலையன்றே (கககு)

யாதுமறியாயுமைகொளாயிகலிராமன்
கோதைபுனையாமுனுயிர்கொள்ளபமென்றே

---

* ஆண்மை-பௌருஷம். † தனி பிழை-ஒருகுற்றம்; ஒப்பற்ற (பெரும்) பிழையென்றும் பொருள் கொள்ளலாம்.

பேதைமதியாலிஃதொர்பெண்ணுருவமென்றாய்
சீதையுருவோநிருதர்தீவினையதன்றோ. (௧௯௨)

உஞ்சுபிழையாயுறவினோடுமெனவுன்னு
நெஞ்சுபறைபோதுமதுநீநினையகில்லாய்
அஞ்சுமெனதாருயிரறிந்தருகுநின்றார்
நஞ்சுநுகர்வாரையிதுநன்றெனலுநன்றோ. (௧௯௩)

ஈசன்முதன்மற்றுமிமையோருலகுமற்றைத்
தேசமுதன்முற்றுமொரிமைப்பினுயிர்தின்ப
* கோசிகனமைத்தகடவுட்படைகொதிப்போ
டாசிலகணிப்பிலவிராமனருணிற்ப. (௧௯௪)

ஆயிரமடற்கையுடையானைமழுவாளால்
ஏயெனுமிமைப்பினுயிர்செற்றவெதிரில்லோன்
மேயவிறன்முற்றுவரிவெஞ்சிலையினோடும்
தாயகன்வலித்தகைமையாமுறுதகைத்தோ. (௧௯௫)

வேதனைசெய்காமவிடமேவிடமெலிந்தாய்
நீதுரைசெய்தாயினையசெய்கைசிதைவன்றோ
மாதுலனுமாய்மரபின்முந்தையுறவந்தேன்
ஈதுரைசெய்தேனதனையெந்தைதவிர்கென்றான். (௧௯௬)

இராவணன் மாரீசனைச்சினந்து கூறல்.

என்னவுரையத்தனையுமெத்தனையுமெண்ணச்
சொன்னவனையேசினவரக்கர்பதிசொன்னான்
அன்னையுயிர்செற்றவனையஞ்சியுறைகின்றாய்
உன்னையொருவற்கொருவனென்றுணர்கைநன்றோ. (௧௯௭)

திக்கயமொளிப்பநிலைதேவர்கெடவானம்
புக்கவரிருக்கைபுகைவித்துலகம்யாவும்
† சக்கரநடத்துமெனையோதயரதன்றன்
மக்கணலிகிற்பரிதுநன்றுவலியன்றோ. (௧௯௮)

மூவுலகினுக்கு ‡ மொருநாயகமுடித்தேன்
மேவலர்கிடைக்கினிதன்மேலினியதுண்டோ
ஏவல்செயகிற்றியெனதாணைவழியெண்ணிக்
காவல்செயமைச்சர்கடனீகடவதுண்டோ. (௧௯௯)

---

* கோசிகன்-கௌசிகனென்ற வடசொல்லின் விகாரம்; குசிகனது குலத்திற்பிறந்தவனென்று பொருள்படும்; குசனே குசிகனெனவும் வழங்கப்படுவன். † ஆஜ்ஞையைச் சக்கரமென்றல் கவிசமயம். ‡ ஒருநாயகம்-ஏகாதிபத்தியம்.

மறத்தனையெனப்பெறினுநின்னைவடிவாளால்
ஒறுத்தென மனக்குறைமுடிப்பதொழிகல்லேன்
வெறுப்பனகிளத்தலுமித்தொழிலைவிட்டென்
குறிப்பின்வழிநிற்றியுயிர்கொண்டுழலிலென்றான். (உ00)

வேறு.

மாரீசன் ஆய்ந்து அடங்குதல்.

அரக்கனஃதுரைத்தலோடுமறிந்தனனடங்கிநெஞ்சம்
தருக்கினர்கெடுவரன்றேதத்துவநிலையிற்றன்றே
செருக்கினிற்றீர்துமென்பார்தம்மினுஞ்செருக்கரென்று
உருக்கியகெம்பினுற்றநீரெனவுரைக்கலுற்றான். (உ0க)

மாரீசன் இராவணனுக்கு இணங்கிக்கூறும் வார்த்தை.

உன்வயினுறுதிநோக்கியுண்மையினுணர்த்தினேன்மற்
றென்வயினுறுதிநோக்கியச்சத்தாலிசைத்தேனல்லேன்
நன்மையுந்தீமையன்றோநாசம்வந்துற்றபோது
புன்மையினுற்றநீராய்செய்வதுபுகறியென்றான். (உ0உ)

இராவணன் மாரீசனைநோக்கி சீதையைத்தருக என்றல்.

என்றலுமெழுந்துபுல்லியேறியவெகுளிநீங்கிக்
குன்றெனக்குவிந்ததோளாய்மாரவேள்கொதிக்குமம்பால்
பொன்றலினிராமனம்பாற்பொன்றலேபுகழுண்டன்றே
தென்றலைப்பகைமையைச்செய்தசீதையைத்தருதியென்றான். (உ0ங)

மாரீசன் அதற்குயான் செய்யவேண்டுவது என்?என்றல்.

ஆண்டையானனையகூறவரக்கரோரிருவரோடும்
பூண்டவென்மானந்தீரத்தவவனம்புக்கபோழ்தில்
தூண்டியசரங்கள்பாயத்துணைவர்பட்டுருளவஞ்சி
மீண்டயான்சென்றுசெய்யும்வினையென்சொல்விளம்புகென்றான். ()

சீதையைமாயையால் வஞ்சித்து கவரவேண்டும் என்றல்.

ஆயதாங்கனையகூறவரக்கர்கோனையநொய்துன்
தாயையாருயிருண்டானையான்கொலச்சமைந்துநின்றேன்
போயையாபுணர்ப்பதென்னேயென்பதுபொருந்திற்றன்றே
மாயையால்வஞ்சித்தன்றேவௌவுதலவளையென்றான். (உ0ரு)

மாரீசன்போர்வெற்றியால் சீதையைக்கொள்ளுதலேசிறப்பு என்றல்.

புறத்தினியுரைப்பதென்னே * புரவலன்றேவிதன்னைத்
திறத்துழியன்றிவஞ்சித்தெய்துதல்சிறுமைத்தாகும்

---

* புரவலன் - அரசர்குலத்தான், சக்ரவர்த்திகுமாரன், காத்தற்றொழிற் கடவுளாகிய திருமாலின் அம்சமானவன்.

அறத்துளதொக்குமன்றேயமர்த்தளிவென்றுகொண்டுன்
மறத்துறைவளர்த்திமன்னவென்னமாரீசன்சொன்னான். (௨0௬)

அதிதநீதியன்றென்று இராவணன்காரணங்காட்டல்.

ஆனவனுரைக்கரக்கர்கோனவரைவெல்லத்
தானையும்வேண்டுமோவென்றடக்கைவாடக்கதன்றோ
ஏனையரிறக்கிற்றானுக்கமியளாயிறக்குமன்றே
மானவளாதலாலேமாயையின்வலித்துமென்றான். (௨0௭)

மாரீசன் சிந்தைப்படுதல்.

தேவியைத்தீண்டாமுன்னமிவன்றலைசரத்திற்சிந்திப்
போம்வகைபுணர்ப்பனென்றுபுந்தியாற்புகல்கின்றேற்கும்
ஆம்வகையாயிற்றில்லையார்விதிவிளைவையோர்வார்
ஏவதுசெய்வதல்லாவில்லைவேறென்றெண்ணா. (௨0௮)

மாரீசன் மாயமானாதற்கு உடன்படுதல்.

என்னமாமாயம்யான்மற்றியற்றுவதியம்புகென்றான்
பொன்னின்மானாகிப்புக்குப் * பொன்னைமால்புணர்த்துகென்ன
அன்னதுசெய்வேனென்னாமாரீசனமைந்துபோனான்
மின்னும்வேலரக்கர்கோனும்வேறொருநெறியிற்போனான். (௨0௯)

வேறு.

இது கவிக்கூற்று.

மேனாளவன்வில்வலிகண்டமையால்
தானாகவமைந்துசமைந்திலனால்
மானாகுதியென்றவன்வாய்மொழியால்
போனான்மனமுஞ்செலும்புகல்வாம். (௨௧0)

மாரீசனது மனநிலை.

வெஞ்சுற்றநினைக்குமுவீரரைவே
றஞ்சுற்றுமறுக்குறுமாழ்குழிநீர்
நஞ்சுற்றுறுமீனினடுக்குறுமால்
நெஞ்சுற்றதொர்பெற்றிநினைப்பரிதால். (௨௧௧)

மாரீசன் இராமனுள்ள இடத்தையடைதல்.

அக்காலமும்வேள்வியினன்றிவனோ
டெக்காலுமகலிந்துமொரீறுபெறான்
முக்காலின்முடிந்திடுவான்முயல்வான்
புக்கானவ்விராகவன்வைகுபுனம். (௨௧௨)

* பொன்-பொன்னிறமானவள்; பொன்போல் அருமையானவள்; திருமகளின் அம்சமானவள்.

மாரீசன் பொன்மானுருவங் கொண்டு எதிர்வரல்.

தன்மானமிலாத தயங்கொளிசால்
மின்வானமுமண்ணும் விளங்குவதோர்
பொன்மானுருவங்கொடுபோயினனால்
நன்மானனையாடனை * நாடுறுவான். (௨௧௩)

அந்தமானைமான்கள் பலவுந்தொடர்தல்.

கலைமான்முதலாயின கண்டவெலாம்
அலைமானுறுமாசையின் வந்தனவால்
நிலையாமனவஞ்சனை நேயமிலா
† விலைமாதர்கண் யாரும் விழுந்தெனவே. (௨௧௪)

அப்பொழுது சீதை மலர்கொய்துவருதல்.

பொய்யாமெனவோதுபுறஞ்சொலினால்
கையாவிடைநோவநடந்தனளால்
வைதேகிதன் ‡ வால்வளைமென்கையெனும்
கொய்யாமலரான் மலர்கொய்துறுவாள். (௨௧௫)

சீதை மாயமானைக்காணுதல்.

உண்டாகியகேடுடையார் துயில்வாய்
எண்டானுமியைந்தியையாவுருவம்
கண்டாரெனலாம்வகைகண்டனளால்
பண்டாருமுறாவிடர்பாடுறுவாள். (௨௧௬)

சீதை அந்தமானினிடத்து விருப்பங்கொள்ளல்.

காணாவிதுகைதவமென்றுணராள்
¶ பேணாதநலங்கொடுபேணினளால்
வாணாளையிராவணன்மாளுதலால்
வீணாளினறம்புவிமேவுதலால். (௨௧௭)

அதனைப்பிடித்துத்தரச்சொல்லும் பொருட்டுச்சீதை
இராமனிடம் வருதல்.

நெற்றிப்பிறையாண்முனநின்றிடலும்
முற்றிப்பொழிகாதலின்முந்துறுவாள்
பற்றித்தருகென்பெனெனப்பதையா
0 வெற்றிச்சிலைவீரனைமேவினளால். (௨௧௮)

---

* நாடுறு, உறு-துணைவினை.

† விலைமாதர்-தமது மெய்யின்பத்தைப் பொருட்கு விலைப்படுத்தும் மகளிர். ‡ வால் வெண்மையும் ஒண்மையுமாம்.

¶ பேணாதநலம்-விரும்பத்தகாத அழகு; பாராட்டத்தகாத ஆசை என்றும் பொருள்கொள்ளலாம். 0 வெற்றிச்சிலை-விசயகோதண்டம்.

அந்த மானைக்குறித்துச் சீதை இராமனிடம் பிரஸ்தாபித்தல்.

ஆணிப்பொனிஞ்இயதாய்கதிரால்
சேணிற்சுடர்கின்றது * திண்செவிகால்
மாணிக்கமயத்தொருமானுளதால்
காணத்தகுமென்றனள்கைதொழுவாள். (௨௧௧)

இராமன் அதனைப்பார்க்க விரும்புதல்.

இம்மானிநிலத்தினிலில்லையெனு
எம்மானிதெனச்சிறிதெண்ணல்செயான்
செம்மானவள்சொற்கொடேமலரோ
அம்மானுமருத்தியனுயினனால். (௨௨0)

அப்பொழுது இலக்ஷுமணன் ஒன்றுகூறத்தொடங்கல்.

ஆண்டங்கிளையோனுரையாடினனால்
வேண்டும்மெனலால்விளைவன்றிதெனுன்
பூண்டுஞ்சுபொலங்கொடியோயதுதாம்
காண்டும்மெனும்வள்ளல்கருத்துணர்வான். (௨௨௧)

இலக்ஷுமணனதை மாயமானென்றல்.

காயங்கனகம்மணிகால்செவிவால்
பாயும்முருவோடிதுபண்பெனலால்
மாய்ம்மெனலன்றிமனக்கொளவே
ஏயும்மிறையையுறவென்றளவே. (௨௨௨)

இராமன் அதனை மறுத்துக்கூறல்.

நில்லாவுலகின்னிலைநேர்மையினால்
வல்லாருமுணர்ந்திலர்மன்னுயிர்தாம்
பல்லாயிரகோடிபரந்துளவால்
இல்லாதனவில்லைவிளங்குமரா. (௨௨௩)

என்னென்றுநினைத்ததிழைத்துளநாம்
கன்னங்களின்வேறுளகாணுதுமால்
பொன்னின்னெளிமேனிபொருந்தியவேழ்
அன்னங்கள்பிறந்ததறிந்திலையோ. (௨௨௪)

அவ்வளவிற் சீதை அதுபோய்விடுமே எனவருந்தல்.

முறையும்முடிவும்மிலமொய்யுயிரென்
றிறைவன்னிளையானுடியர்பினனால்
பறையுந்துணையன்னதுபன்னெறிபோய்
மறையும்மெனவேழைவருந்தினளால் (௨௨௫)

---

* திண்செவி † நெறித்தகாது.

வேறு.

இராமன்சென்றந்தமானைக்காணுதல்.

அனையவள்கருத்தையுன்னாவஞ்சனுக்குன்றமன்னான்
புனையிழைகாட்டிதென்றுபோயினான்பொருந்தசிந்தைக்
கனைகழற்றம்பிபின்புசென்றனன்கடக்கவொண்ணா
வினையெனவந்துநின்றமானெதிர்விழித்ததன்றே. (௨௨௬)

இராமன் அந்தமானைக்கொண்டாடுதலும் அதன்மூலகாரணமும்.

நோக்கியமானைநோக்கி * நுதியிழைமதியினானும்
தூக்கிலன்றிதென்றான தன்பொருள்சொல்லலாகும்
† சேக்கையினரவுநீங்கிப்பிறந்ததுதேவர்செய்த
பாக்கியமுடைமையன்றோவன்னதுபழுதுபோமோ. (௨௨௭)

இராமன் இலக்குயணனுக்கு அந்தமானின் அழகையெடுத்துக்காட்டல்.

என்னொக்குமென்னலாகுமிளையவவிதனைநோக்காய்
தன்னொக்குமுவமையல்லாற்றனையொக்குமுவமையுண்டோ
பன்னக்கதரளமொக்கும்பசும்புன்மேற்படருமென்னா
மின்னொக்குஞ்செம்பொன்மேனிவெள்ளியின்விளங்கும்புள்ளி. ()

வரிசிலைமறைவிலோனேமானிதன்வடிவையுற்ற
அரிவையர்மைந்தர்யாரேயாதரங்கூர்கிலாதார்
உருகியமனத்தவாகியூர்வனபறப்பயாவும்
விரிசுடர்விளக்கங்கண்டவிட்டில்போல்வீழ்வகாணாய். (௨௨௯)

இலக்குமணன் அந்தமானைப்பற்றிப் பராமுகமாகக்கூறல்.

ஆரியனனையகூறவன்னதுதன்னைநோக்கிச்
‡ சீரியதன்றிதென்றுசிந்தையிற்றெளிந்ததம்பி
காரியமென்னையீண்டிக்கண்டதுகனகமானால்
வேரியந்தெரியல்வீரமீள்வதேமேன்மையென்றான். (௨௩0)

சீதை இராமனை அதைப் பிடித்துத்தரும்படி வேண்டுதல்.

அற்றவன்பகராமுன்னமநகனையழகியாளும்
கொற்றவன்மைந்தமற்றைக்குழைவுடையுழையைவல்லை
பற்றினைதருதியாயிற்பதியிடையவதியெய்தப்
பெற்றுழியினிதுண்டாடப்பெறற்கருந்தகைமைத்தென்றாள். (௨௩௧)

இராமன் அதனைப்பிடிக்கஉடன்படுதலை இலக்குமணன்தடுத்துக்கூறல்.

ஐயநுண்மருங்குநங்கையஃதுரைசெய்யவையன்
செய்வெனென்றமையநோக்கித்தெளிவுடைச்செம்மல்செப்பும்

---

* நுதி-நுட்பம் [கூர்மை. † சேக்கையினரவு-படுக்கையாகிய ஆதிசேடன். ‡ சீரியதன்று-நன்மை விளைப்பதன்று.

வெய்யவல்லரக்கர்வஞ்சம்விரும்பினார்வினையிற்செய்த
கைதவமானெனண்ணல்காணுதிகடையினென்றான். (உருஉ)

இராமன் இதனைப்பிடிக்கத்தொடங்குதலிற் குற்றமில்லை என்றல்.

மாயமேன்மடிவாமன்றேவாளியின்மடிந்தபோது
காய்சினத்தவரைக்கொன்றுகடன்கழித்தோமுமாதும்
தூயதேற்பற்றிக்கோடுஞ்சொல்லியவிரண்டினுன்றும்
தீயதேயுரைத்தியென்றான்றேவரையிடுக்கண்டீர்ப்பான். (உருங)

இலக்குமணன் ஆராய்ச்சியின்றி வேட்டையாடச் செல்லல் தகுதி யன்றெனல்

பின்னின்றானினையரென்றுமுணர்கிலம்பிடித்தமாயம்
என்னென்றுந்தெளிதறேற்றும்யாவதீதென்றுமோராம்
முன்னின்றார்முறையினின்றார்முனிந்துளவேட்டமுற்றல்
பொன்னின்றவயிரத்தோளாய்புகழுடைத்தாமன்றென்றான். (உருச)

இராமன் அதனைமறுத்துக்கூறல்.

பகையுடையரக்கரென்றும்பலரென்றும்பயிலுமாயம்
மிகையுடைத்தென்றும்பூண்டவிரதத்தைவிடுதுமென்றல்
நகையுடைத்தாகுமன்றேயாதலினன்றீதென்னாத்
* தகையுடைத்தம்பிக்கங்காட்சதுமுகன்றுதைசொன்னான். (உருரு)

இலக்குமணன் நான்சென்று பிடித்துக்கொண்டு வருவேனென்றல்.

அடுத்தவுமெண்ணிச்செய்தலண்ணலேயமைதியன்றே
விடுத்திதன்பின்னின்றார்கள்பலருளரெனினும்வில்லால்
தொடுத்தவெம்பகழிதூவித்தொடர்ந்தனென்விரைந்துசென்று
படுக்குவெனதுவன்றாயிற்பற்றினென்கொணர்வெனென்றான். ()

சீதை இராமனைநோக்கி நீபிடித்துத்தருவாயல்லைபோலுமென்றல்

ஆயிடையன்னமன்னாளமுதுகுத்தனையசெய்ய
வாயிடை † மழலையின்சொற்கிளியினிற்குழறிமாழ்கி
நாயகீயேபற்றிநல்கலைபோலுமென்னாச்
சேயரிக்குவளைமுத்தஞ்சிந்துபுசிதறிப்போனாள். (உருஎ)

இராமன் மானைப்பிடித்தற்குச் செல்லத்தொடங்கல்.

போனவள்புலவிநோக்கிப்புரவலன்பொலன்கொடாராய்
மானிதுகானேபற்றிவல்லையின்வருவெனன்றே
கானியன்பயிலன்றனைக்காத்தனையிருத்தியென்றா
வேனகுசரமும்வில்லும்வாங்கினன்விரையலுற்றான். (உருஅ)

---

* தகை-யோக்கியதை, தக்க நற்குண நற்செய்கைகளை யுடைமை.
† மழலை - நிரம்பாமென் சொல்.

அங்ஙனமே இலக்குமணன் சீதையைக்காத்துநிற்றல்.

முன்னமுமகவாய்வந்தமூவரினொருவன்போனான்
அன்னமாரீசனென்றேயயிர்த்தனெனிதனையைய
இன்னமுங்காண்டிவாழியேயெனவிருகைகூப்பிப்
பொன்னனாள்புக்கசாலைகாத்தனன்புறத்துநின்றே. (௨௩௯)

இராமன்மானைத்தொடர்தல்

மந்திரத்திளையோன்சொன்னவாய்மொழிமனத்துக்கொள்ளான்
சந்திரற்குவமைசான்றமதனத்தான் சலத்தைநோக்கிச்
சிந்துரபவளச்செவ்வாய்முறுவலன்சிகரச்செவ்விச்
சுந்தரத்தோளினனம்மானினைத்தொடரலுற்றான். (௨௪௦)

அந்தமான் மிக்கவிரைவாய்ஓடுதல்.

* மித்ததுமெல்லமெல்லவெறித்ததுவெருவிமீதிற்
குதித்ததுசெவியைநீட்டிக்குரபதமுரத்தைக்கூட்டி
உதித்தெழுமுதையுள்ளமென்றிவையுருவச்செல்லும்
கதிக்கொருகல்விவேறேகாட்டியதொத்ததன்றே. (௨௪௧)

இராமன் மிக்கவிசையோடு அந்தமானைத்தொடர்தல்.

நீட்டினனுலகமூன்றுநின்றெடுத்தளந்தபாதம்
மீட்டொருமுறைத்தற்கம்மாவேறுமோரண்டமுண்டோ
ஓட்டினன்றொடர்ந்ததன்னையொழிவறநிறைந்ததன்மை
காட்டினனன்றியன்றக்கடுமையார்கணிக்கற்பாலார். (௨௪௨)

அந்தமான் ஓடும்வகை.

குன்றிடையிவருமேகக்குழுவிடைக்குதிக்குங்கூடச்
சென்றிடினகலுந்தாழிற்றீண்டலாகதகைமைத்தாகும்
† நின்றதேபோலநீங்குநிதிவழிநேயநீட்டும்
மன்றலங்கோதைமாதர்மனமெனப்போயிற்றம்மா. (௨௪௩)

இராமன் அதனைமாயமானென்று கருதுதல்.

காயம்வேறாகிச்செய்யுங்கருமம்வேறாகிற்றன்றே
ஏயுமேயென்னின்முன்னமெண்ணமேயிளவற்குண்டே
ஆயுமேலுறுதல்செலலாமரக்கரானவர்கள்செய்த
மாயமேயாயதோகான்வருந்தியதென்றான்வள்ளல். (௨௪௪)

வேறு.

இராமன் மனபோக்கையறிந்து மாரீசன்தப்பியோடி யுய்யமுயலுதல்.

பற்றுவானினியல்லன்பகழியால்
செற்றுவானிற்செலுத்தலுற்றனென

* வாயுவேக மனோவேகங்களைக் காட்டிலும் வேகமாய் ஓடிற்று அந்த மான் என்பது கருத்து. † நின்றதே போல நீங்கும் என்றது வரையில் தன்மை நவிற்சியணி.

மற்றமாயவரக்கன்மனக்கொளா
உற்றவேகத்தினும்பரிஞெங்கினன். (உ௪௫)

இராமன் அம்புதொடுத்தல்.

அக்கணத்தினிலையனும்வெய்யதன்
சக்கரத்திற்றகைவரிதாயதோர்
செக்கர்மேனிப்பகழிசெலுத்தினன்
புக்கதேயம்புகின்னுயிர்போக்கேஞ. (உ௪௬)

மாரீசன் கதறிக்கொண்டு வுழுந்திறத்தல்.

நெட்டிலைச்சரம்வஞ்சனைநெஞ்சுறப்
பட்டதப்பொழுதேபகுவாயினல்
அட்டதிக்கினுமப்புறமும்புக
விட்டழைத்தொருகுன்றெனவீழ்ந்தனன். (உ௪எ)

அதுகண்டு இராமன் இலக்குமணனைக்குறித்துக் கொண்டாடுதல்

வெய்யவன்றனுருவொடுவீழ்தலும்
செய்யதன்றெனச்செப்பியதம்பியை
ஐயன்வல்லனென்றுருயிர்வல்லனன்
உய்யவந்தவன்வல்லனென்றுன்னினன். (உ௪அ)

இறந்துவிழுந்த வடிவத்தைப்பார்த்து இராமன் மாரீசனென்றறிதல்

ஆசைநீளத்தாற்றினன்வீழ்ந்தவந்
நீசன்மேனியைநின்றுடனேக்கினன்
மாசின்மாதவன்வேள்வியின்வந்தமா
ரீசனேயிவனென்பதுந்தேறினன். (உ௪௯)

இவன்கதறியதாலால் சீதைவருந்துவளேஎன்று இராமன் சிந்தித்தல்.

உழைத்தவாளியுரம்புகப்புல்லியோன்
இழைத்தமாயையினென்குரலாலிசைத்
தழைத்ததுண்டதுகேட்டயர்வெய்யதுமால்
மழைக்கணேழையென்றுள்ளம்வருந்தினன். (உ௫0)

இலக்குமணன்சிதைக்குத்தேறுதல்சொல்லக் கூடுமென்றுஇராமன்கருதல்

மாற்றமின்னதுமாயமாரீசனென்
றேற்றமுன்னுணர்ந்தானெனினென்னுடை
ஆற்றநேருமறிவினனுதலான்
தேற்றுமாலிளையோனெனத்தேறினன். (உ௫௧)

இராமன் சிந்தையோடுதிரும்புதல்.

மாள்வதேபொருளாகவந்தானலன்
சூழ்வதோர்பொருளுண்டிவன்சொல்லினல்
மூள்வதேதமதுமுடியாமுனம்
மீள்வதேநலனென்றவன்மீண்டனன். (உ௫உ)

எ-வது மாரீசன்வதைப்படலம்முற்றியது.

ஆக திருவிருத்தம். ௫௬.

எட்டாவது

சடாயுநீத்தபடலம்.

கவிக்கூற்று பிராட்டியின்செய்தியைக் கூறத்தொடங்குவோமென்றல்.

சங்கடுத்ததனிக்கடன்மேனியாற்
கங்கடுத்தநிலமையறைந்தனம்
கொங்கடுத்தமலர்க்குழற்கொம்பனாட்
கிங்கடுத்ததகைமையியம்புவாம். (க)

பாயமானின் கூக்குரல்கேட்டபிராட்டி வருந்தியது.

எயிறலைத்துமுழைதிறந்தேங்கிய
செயிர்தலைக்கொண்டசொற்செவிசேர்தலும்
குயிறலைத்திடையுற்றதொர்கொள்கையால்
வயிறலைத்துவிழுந்துமயங்கினாள். (உ)

பிடித்துகவ்வுழையெனப்பேதையேன்
முடித்தனென் * முதல்வாழ்வெனமொய்குழல்
கொடிப்படிந்ததெனநெடுங்கோளரா
இடிக்குடைந்ததெனப்புரண்டேங்கினாள். (ங)

சீதை இலக்குமணனை வெறுத்துக்கூறல்.

குற்றம்வீந்தகுணத்தினெங்கோமகன்
மற்றைவாளரக்கன்புரிமாயையால்
இற்றுவீழ்ந்தனனென்னவுமென்னயல்
நிற்றியோவிளையோயொருநீயென்றாள். (ச)

வேறு.

இலக்குமணன் சீதைக்குத்தேறுதல்கூறல்.

எண்மையாருலகினிலிராமற்கேற்றமோர்
திண்மையாருளரெனல்செப்பற்பாலதோ
பெண்மையாலுரைசெயப்பெறுதிராலென
† உண்மையானவைவட்குணரக்கூறினான். (ரு)

ஏழுமேகடலுலகேழுமேழுமே
சூழுமேழ்மலையவைதொடர்ந்தசூழல்வாய்
வாழுமேழையர்சிறுவலிக்குவானமர்
தாழுமேயிராகவன்றனிமைமதையலீர். (சு)

* கொழுநனோடுகூடி வாழும் வாழ்க்கையினும் சிறப்புடைய வாழ்வு வேறு குலமகளிர்க்கு இன்றாதலால் அத்தலைமை விளங்க 'முதல்வாழ்வு, எனப்பட்டது.

† உண்மையான்-ந்யாயவாதி.

பாரெனக்கனலெனப்புனலெனப் * பகாப்
பேரெனத்திசையெனமுனியிற்பெருமால்
காரெனக்கரியவக்கமலக்கண்ணனை
யாரெனக்கருதியிவ்விடரினாழ்கின்றீர். (எ)

இடைந்துபோய்ச்சிசரற்கிராமனெவ்வம்வந்
தடைந்தபோதழைக்குமேயழைக்குமாமெனின்
மிடைந்தபேரண்டங்கண்மேலகீழன
உடைந்துபோமயன்முதலுயிருந்தீயுமால். (அ)

மாற்றமென்பகர்வதுமண்ணும்வானமும்
போற்றலன்றிரிபுரமெரித்தபுங்கவன்
ஏற்றிநின்றெய்தவில்லிற்றதெம்பிரான்
ஆற்றலினமைவதோராற்றலுண்மையோ. (கூ)

காவலனீண்டுநீர்கருதிற்றெய்துவேல்
மூவகையுலகுமுடியுமுந்துள
தேவருமுனிவருமுதலசெவ்வியோர்
ஏவரும்வீந்துளாரறமுமெஞ்சுமால். (க0)

பரக்கவென்பகர்வதுபகழிபண்ணவன்
துரக்கவங்கதுபடத்தொலைந்துசோர்கின்ற
அரக்கனவ்வுரையெடுத்தாற்றினானதற்
கிரக்கமுற்றிரங்கலிரிருத்திரீண்டென்றான். (கக)

சீதை இலக்குமணனை மீளவும்பழித்தல்.

என்றவனியம்பலுமெடுத்தசீற்றத்தள்
கொன்றனவின்னலள்கொதிக்குமுள்ளத்தள்
நின்றநின்னிலையிதுநெறியிற்றன்றென
லன்றறுகண்ணினள்வயிர்த்துக்கூறுவாள். (கஉ)

சீதை நெருப்பில்விழுந்து இறப்பேனென்றல்.

ஒருபகல்பழகினருயிரையீவரால்
பெருமகனுலைவுறுபெற்றிகேட்டுநீ
வெருவலைநின்றனைவேறென்யானினி
எரியிடைவீழ்ந்துயிரிறப்பலீண்டெனா. (கங)

---

* பகாப்பேர்-என்றது இடைவிடாமல் சஞ்சரிப்பது என்றபொருளைத்தந்து' வாயுவுக்கு ஒருகாரணக்குறியாம்; ஸதாகதி, ஸமீரணன், பகவநன் என்ற வாயுவின் வடமொழிப்பெயர்கள் இப்பொருள்படுவனவாதலால், பகாப்பேர் என்பது அவற்றின்மொழிபெயர்ப்பாய் வந்ததொரு பெயரெனக்கொள்க. பகா-பகாமல் ஈறுகெட்டஎதிர்மறைவினையெச்சம், பெயர் என்ற வினை, பேர் எனமருவிற்று. பகர்பேர்' என்றுபாடமோதி மற்றுஞ் சொல்லப்படுகிற பேர், அதாவது இங்குக் கூறப்படாத காற்று என்பாருமுளர்.

இலக்குமணன் சீதையை வணங்கிவிலக்குதல்.

தாமரைவனத்திடைதாவுமன்னம்போல்
தூமவெங்காட்டெரிதொடர்கின்றுடனைச்
சேமவிற்குமரனும்விலக்கிச்சிறடிப்
பூமுகநெடுநிலம்புல்லிச்சொல்லுவான். (கச)

இலக்குமணன் செல்லவுடன்பட்டுக் கூறுந்தணிவுரை.

துஞ்சவுதென்னைநீர்சொற்றசொல்லையான்
அஞ்சுவென்மறுக்கிலெனவலந்தீர்ந்தினி
* இஞ்சிருமடியனேனேகுகின்றனென்
வெஞ்சினவிதியினைவெல்லவல்லமோ. (கரு)

இலக்குமணன் விடைபெறுதல்.

போகின்றேனடியனேன்பொருந்திவந்துகே
டாகின்றதரசன்றனாணைநீர்மறுத்
தேகென்றிரிருக்கின்றீர்தமியிரென்றுபின்
வேகின்றசிந்தையான்விடைகொண்டேகினான். (கசு)

அப்பொழுது இலக்குமணன் அடைந்த சிந்தை.

இருப்பனேலெரியிடையிறப்பராலிவர்
பொருப்பனையானிடைப்போவெனேயெனின்
† அருப்பமில்கேடுவந்தடையுமாருயிர்
விருப்பனேகென்செயலென்றுவிம்மினான். (கஎ)

இலக்குமணன் ஒருவாறு துணிதல்.

அறந்தனாலழிவிலதாகினுக்கலாம்
இறந்துபாடிவர்க்குறுமிதனினிவ்வழி
துறந்துபோமிதனையேதுணிவென்றொல்வினைப்
பிறந்துபோந்திதுபடும்பேதையேனென. (கஅ)

சடாயு பாதுகாக்குமென்றுசொல்லி இலக்குமணன்செல்லல்.

போவதுபுரிவல்யான்புகுந்ததுண்டெனின்
காவல்செயெருவையின்றலைவன்கண்ணுறும்
ஆவதுகாக்குமென்றறிவித்தவ்வழித்
தேவர்செய்தவத்தினாற்செம்மலேகினான். (கக)

---

* இங்கு என்பது இஞ்சு எனத்திரிந்தது' எதுகைநோக்கியதோர் போலிவழக்கு. † அருப்பம்-அரண் "வீங்கு சிறைவியலருப்பம் (புறநானூறு-கள) இனி, அருப்பம்-அருமையுமாம் "அடிநிலை தளர்க்கு மருப்பமுமுடைய" (மலைபடுகடாம் உ௨௨)

இராவணன் சந்நியாசிவேடங்கொண்டு சீதையிடத்தில் வருதல்.

இளையவனேகலுமிறவுபார்க்கின்ற
வளையெயிற்றிராவணன்வஞ்சமுற்றுவான்
முளைவரித் * தண்டொருமூன்றமுப்பகைத்
தளையரிதவத்தவர்வடிவுந்தாங்கினான். (உ0)

ஊணிலனாமெனவுலர்ந்தமேனியன்
சேணெறிவந்ததோர்வருத்தச்செய்கையன்
பாணியினடத்திடைப்படிக்கின்றானென
வீணையினிசைபடவேதம்பாடுவான். (உக)

பூப்பொதியவிழ்ந்தனநடையன்பூதலம்
தீப்பொதிந்தாமெனமிதிக்குஞ்செய்கையன்
காப்பருநடுக்குறுங்காலன்கையினன்
மூப்பெனும்பருவமுமுனியமுற்றினான். (உஉ)

தாமரைக்கண்ணொடேர்தவத்தின்மாலையன்
ஆமையினிருக்கையன்வளைந்தவாக்கையன்
நாமநூன்மார்பினனணுகினானரோ
தூமனத்தருந்ததியிருந்தசூழல்வாய். (உங)

இராவணன் பர்ணசாலைவாயிலில்வந்து இதில் உள்ளார் யார்என்றல்

தோமறுசாலையின்வாயிறுன்னினான்
நாமுதற்குழறிடாநடுங்குசொல்லினான்
யாவிரிவ்விருக்கையுளிருந்துளீரென்றான்
தேவருமருள்கொளத்தெரிந்தமேனியான். (உச)

சீதை இராவணமுனியை எதிர்கொள்ளுதல்.

தோகையுமிவ்வழித்தோமில்சிந்தனை
சேகறுநோன்பினரென்னுஞ்சிந்தையாள்
பாகியல்கிளவியாள்பவளக்கொம்பர்போன்
றேகுமினீண்டெனவெதிர்வந்தெய்தினாள். (உரு)

இராவணன் சீதையைப்பார்த்தல்.

வெற்பிடைமதமெனவியர்க்குமேனியன்
அற்பினற்றிரைபுரளாசைவேலையன்
பொற்பினுக்கணியினைப்புகழின்சேக்கையைக்
கற்பினுக்கரசியைக்கண்ணினோக்கினான். (உசு)

* தண்டொருமூன்று-அரசு, புரசு, மூங்கில் என்னும் மூன்றுவகைக் கோல்களையும் ஒன்றாகமுறுக்கிச் சேர்த்தது திரிதண்டமாம்.

சீதையைக் கண்டவளவிலே இராவணன் வேட்கைநோய் விஞ்சிப்படும்அவத்தை.

தூங்கலினுருவினைச்சொல்லினும்பரும்
ஓங்கியவழகினளுருவங்காண்டலும்
ஏங்கினன்மனநிலையாதென்றுன்னுவாம்
வீங்கினமெலிந்தனவீரத்தோள்களே. (உஎ)

புனமயிற்சாயலினெழிலிற்பூநறைச்
சுனைமடுத்துண்டிசைமுரலுந்தும்பியின்
இனமெனக்களித்துளதென்பதென்னவன்
மனமெனக்களித்தது * கண்ணின்மாலையே. (உஅ)

சேயிதழ்த்தாமரைச்சேக்கைதீர்ந்திவண்
மேயவண்மணிநிறமேனிகாணுதற்
கேயுமேயிருபதிங்கிமைப்பினாட்டங்கள்
ஆயிரமில்லையென்றல்லலெய்தினான். (உகூ)

† அரைகடையிட்டமுக்கோடியாயுவும்
புரைதபுதவத்தின்யான்படைத்தபோதுமே
நிரைவளைமுன்கையிந்நின்றநங்கையின்
கரையறநன்னலக்கடற்கென்றுன்னினான். (௩௦)

தேவருமவுணருந்தேவிமாரொடும்
கூவல்செய்தொழிலினர் ‡ குடிமைசெய்திட
மூவுலகமுமிவர்முறையினாளயான்
ஏவல்செய்துய்குவெனினியென்றுன்னினான். (௩க)

உளைவுறுதுயர்முகத்தொளியிதாமெனின்
முளையெயிறிலங்கிடுமுறுவலென்படும்
தளையவிழ்குழலிவட்கண்டுதந்தவென்
இளையவட்களிப்பெனென்னரசென்றெண்ணினான். (௩உ)

அம்முனிவனுக்குச் சீதைவருகவென்று உபசாரமொழிகூறல்.

¶ ஆண்டையானையனவுன்னியாசைமேல்
மூண்டெழுசிந்தனைமுறையிலோன்றனைக்
காண்டலுங்கண்ணினீர்துடைத்தகற்பினாள்
ஈண்டெழுந்தருளுகென்றினையகூறினாள். (௩௩)

---

* கண்களிருபதாதலின், கண்ணின்மாலை எனப்பட்டது.

† அரைகடையிட்டமுக்கோடி - அரையென்னும் எண்ணைக்கடையில் எழுதப்பட்ட மூன்றுகோடி என்க.

‡ குடிமை பரம்பரையாச்செய்யுமடிமை.

¶ ஆண்டையான் - அவ்விடத்தான்.

சீதைதந்த ஆசனத்தில் அம்முனிவன் வீற்றிருந்தல்.

எத்தினனெய்தலுமிருத்திரீண்டென
வேத்திரத்தாசனம்விதியினல்கினாள்
மாத்திரிதண்டயல்வைத்தவஞ்சனும்
பூத்தொடர்சாலையினிருந்தபோழ்தினே. (௩௪)

அப்பொழுது சராசரங்கள் அஞ்சிநடுங்கல்.

ஒடுங்கினமலைகளுமரனுநாவவிர்
தடங்கினபறவையும்விலங்குமஞ்சின
படங்குறைந்தொதுங்கினபாம்பும்பாதகக்
கடுந்தொழிலரக்கனைக்காணுங்கண்ணினே. (௩௫)

அம்முனிசீதையைநோக்கி இப்பர்ணசாலைக்குரியவர்யார் என்றல்.

இருந்தவன்யாவதிவ்விருக்கையிங்குறை
அருந்தவன்யாவனீர்யாரையென்றலும்
விருந்தினரிவ்வழி * விரகிலாரெனப்
பெருந்தடங்கண்ணவள்பேசன்மேயினாள். (௩௬)

அதற்குச் சீதை விடைகூறுதல்.

தயரதன்றொல்குலத்தலைவன்றம்பியோ
டுயர்குலத்தன்னைசொலுச்சியேந்தினான்
அயர்விலதிவ்வழியுறையுமன்னவன்
பெயரினைத்தெரிகுதிர்பெருமையீரென்றாள். (௩௭)

அம்முனிவன் சீதையை நீர் யார்மகள் என்றல்.

கேட்டனென்கண்டிலென்கெழுவுகங்கைநீர்
காட்டிடையொருமுறைநண்ணினேன்மலர்
வாட்டடங்கண்ணிநீர்யாவன்மாமகள்
காட்டிடையரும்பகல்கழிக்கின்றீரென்றான். (௩௮)

அதற்குச் சீதை விடைகூறுதல்.

அனகமாநெறிபடரடிகணும்மலால்
நினைவதோர்தெய்வம்வேறிலாதநெஞ்சினான்
சனகன்மாமகள்பெயர்சனகிகாகுத்தன்
மனைவியானென்றனண்மறுவில்கற்பினாள். (௩௯)

சீதை யம்முனிவனை நீர் எங்குநின்று வருகிறீர் என்றல்.

அவ்வழியவனையனவுரைத்தவாயிழை
வெவ்வழிவருந்தினிர்விளைந்தமூப்பினிர்

* விரகிலார்-தம்மை இத்தன்மையாரென்று அறிந்தில்லாதவர். விரகு-அறிவு "விரகறியாளர்" (புறப்பாட்டு-உசுக.)

இவ்வழியிருவினைகடக்கவெண்ணினிர்
எவ்வழிநின்றுமிங்கெய்தினீரென்றாள். (௪௰)

அதற்கவன் கூறும்விடை.

இந்திரற்கிந்திரனெழுதலாகலாச்
சுந்தரனான்முகன்மரபிற்றோன்றினான்
அந்தரத்தோடுமெவ்வுலகுமாள்கின்றான்
மந்திரத்தருமறைநவைகுநாவினான். (௪௧)

ஈசனுண்டிருந்தபேரிலங்குமால்வரை
ஊசிவேரோடும்பறித்தெடுக்குமூற்றத்தான்
* ஆசைகள்சுமந்த † பேரளவில்யானைகள்
பூசல்செய்மருப்பினைப்பொடிசெய்தோளினான். (௪௨)

நிற்பவர்கடைத்தலைநிறைந்ததேவரே
சொற்பகுமற்றவன்பெருமைசொல்லுங்கால்
கற்பகமுதலியநிதியங்கையன
பொற்பகமானநீரிலங்கைப்பொன்னகர். (௪௩)

மேனகைதிலோத்தமைமுதலவேழையர்
வானகந்துறந்துவந்தவன்றன்மாட்சியால்
ஊனமிலடைப்பைகால்வருடலொண்செருப்
பானவைமுதற்றொழிலவாதாகுமே. (௪௪)

சந்திரனிரவியென்பவர்களாமவன்
சிந்தனைவழிநிலைதிரிவர்தேசுடை
இந்திரன்முதலியவமரரீண்டவன்
கந்தடுகோயிலின்காவலாளரே. (௪௫)

பொன்னகரத்தினும்பொலங்கொளுநர்தம்
தொன்னகரத்தினுந்தொடர்ந்தமாநிலத்
தென்னகரத்தினுமினியவீண்டவன்
நன்னகரத்தனநவையிலாதன. (௪௬)

தாளுடைமலருளான்றந்தவந்தமில்
நாளுடைவாழ்க்கையனரிபாகத்தன்
வாளுடைத்தடக்கையன்வாரிவைத்தவெங்
கோளுடைச்சிறையினன்குணங்கண்மேன்மையான். (௪௭)

வெம்மைதீரொழுக்கினன் விரிந்தகேள்வியன்
‡ செம்மையோன் மன்மதன் திகைக்குஞ்செவ்வியன்

---

* ஆசைகள்-திக்குகள். † பேரளவில்யானை மிகப்பெரியயானை.
‡ செம்மை-நடுவுநிலைமை. ஒருமன்கோலன்னசெம்மைதாங்கி (மதுரைக்காஞ்சி-௪௯௧.)

எம்மையோரனைவருமிறைவரென்றெனும்
மும்மையோர்பெருமையுமுற்றும்பெற்றியான். (உஅ)

அனைத்துலகினுமழகமைந்தநங்கையர்
எனைப்பலரவன்றனதருளினிச்சையோர்
நினைத்தவருருகவுமுதவகோகிலன்
மனக்கினியானொருமாதவர்நாடுவான். (உக)

ஆண்டையானரசுவீற்றிருந்தவந்நகர்
வேண்டியான்சில்பகலுறையவேண்டினேன்
நீண்டனெனிருந்தவற்பிரிந்தநெஞ்சினேன்
மீண்டனெனென்றனன்வினையமுன்னுவான். (௩௦)

அம்முனியைநோக்கிச் சீதைநீவிர்அரக்கநரில்
வாழ்வான் ஏனென்றல்.

வேதமும்வேதியருளும்வெஃகலாச்
சேதனைமன்னுயிர்தின்னுந்தீவினைப்
பாதகவரக்கர்தம்பதியின்வைகுதற்
கேதுவென்னுடலமுமிதையென்றெண்ணுவீர். (௩க)

வனத்திடைமாதவர்மருங்குறைவகலிர்
புனத்திருநாட்டிடைப்புனிதரூர்புக
நினைத்திலிரறநெறிநினைக்கிலாதவர்
இனத்திடைவைகினிரென்செய்தீரென்றாள். (௩உ)

வேறு.

அதற்கம்முனிவன் விடைகூறுதல்.

மங்கையஃதுரைத்தல்கேட்டவரம்பிலான்மறுவீற்றீர்ந்தார்
வெங்கண்வாளரக்கரென்னவெருவலமெய்ம்மைநோக்கின்
திங்கள்வாண்முகத்தினுயத்தேவரிற்றீயரல்லர்
எங்கள்போலியர்க்குநல்லார்நிருதரேபோலுமென்றான். (௩௩)

சீதைதீயவரைச் சேர்ந்தவரும் தீயவரேஎன்றல்.

சேயிழையன்னசொல்லத்தீயவர்ச்சேர்தல்செய்தார்
தூயவரல்லர்சொல்லிற்றொன்கனறிதொடர்ந்தோரென்றாள்
மாயவல்லரக்கர்வல்லர்வேண்டுருவரிக்கவென்ப
தாயவளறிதறேற்றாளாகவினையலொன்றெண்ணாள். (௩௪)

அதற்கு இராவணன் கூறும்சமாதானம்.

அயிர்த்தனளாகுமென்றோருரையுறவகத்துக்கொண்டான்
பெயர்த்ததுதுடைக்கவெண்ணிப்பிறிதுறப்பேசலுற்றான்
மயக்கறுமுலகமூன்றின்வாழ்பவர்க்கனையவல்லோர்
இயற்கையிற்றிரியினல்லாவியற்றலாதெறிபென்னென்றான். (௩௫)

சீதை இனிராமனால் அரக்கர்அழிய உலகு இன்புறும்என்றல்.

திறந்தெரிவஞ்சனச்சொற்செப்பலுஞ்செப்பமிக்காள்
அறந்தருவள்ளலீண்டிங்கருந்தவமுயலுகாலுள்
மறந்தலைதிரிந்தவாழ்க்கையரக்கர்தம்வருக்கத்தோடும்
இறந்தனர்முடிவர்பின்னரிடரிலையுலகமென்றாள். (ருசு)

அதற்கு இராவணன் மனிதர் அரக்கரைகொல்லவல்லவரோ என்றல்.

மானவனுரைத்தலோடுமானுடரரக்கர்தம்மை
மீனெனமிளிருங்கண்ணாய்வேறவெல்வரென்னின்
யானையினினத்தையெல்லாமிளமுயல்கொல்லும்பின்னும்
கூனுகிர்மடங்கலேற்றைக்குருளைமான்கொல்லுமென்றான். (ருஎ)

அதற்குச் சீதை, விராதன், கரன்முதலியோரை
இராமன்கொன்றதைநீர் அறியீரோஎன்றல்.

மின்றிரண்டனைய * பங்கிவிராதனும்வெகுளிபொங்கக்
கன்றியமனத்துவென்றிக்கரன்முதற்கணக்கிலோரும்
பொன்றியபூசலொன்றுங்கேட்டிலிர்போலுமென்றாள்
அன்றவர்க்கடுத்ததுன்னிமழைக்கணீரருவிசோர்வாள். (ருஅ)

மற்றும்சீதை அரக்கரனைவரும் விரைவில் அழிவர் என்றல்,

வாளரிவள்ளரன்னாவிலங்கைமாநிருதரெல்லாம்
கேளொடுமெறியுமாறும்வானவர்கிளருமாறும்
காளையேகாண்டிரன்றேநவைவிருணர்கிலீரோ
மீளருந்தருமந்தன்னைவெல்லுமோபாவமென்றாள். (ருகூ)

அதுகேட்டு இராவணன் கோபங்கொள்ளுதல்.

தேனிடையமுதளாயவன்னமென்சிலசொன்மாலை
தானுடைச்செவிகளூடேதவழுறத்தளிர்த்துவீங்கும்
ஊனுடையுடம்பினானுமுருகெழுமானமூன்ற
மானுடர்வலியரென்றமாற்றத்தாற்சீற்றம்வைத்தான். (சo)

இராவணனது கோபவார்த்தை.

சீறினனுரைசெய்வானச்சிலைவலிப்புல்லியோர்கட்
கீறொருமனிதன்செய்தானென்றெடுத்தியம்பினாயேல்
தேறுதிராளரேயவ்விருபதுதிண்டோள்வாடை
வீறியபொழுது † பூளைவீயெனவீவனன்றே. (சக)

மேருவைப்பறிக்கவேண்டின் விண்ணினைபிடிக்கவேண்டி
னீரினைக்கலக்கவேண்டினெருப்பினையவிக்கவேண்டின்

* பங்கி-ஆண்மயிர். † பூளை-ஓர்செடி;இலவம்பஞ்சுமாம்.

பாரினையெடுக்கவேண்டிற்பலவினைசிலசொல்லேழாய்
யாரெனக்கருதிச்செர்ன்னாயிராவணற்கரிதென்னென்றான். (கூஉ)

அதற்குச்சீதைகூறுந்தக்க சமாதானவார்த்தை.

அரண்டருதிரடோள்சாலவுளவெனினாற்றலுண்டோ
கரண்டகீரிலங்கைவேந்தைச்சிறைவைத்தகழற்கால்வீரன்
திரண்ட * தோள்வனத்தையெல்லாஞ்சிறியதோர்பருவந்தன்னில்
இரண்டுதோளொருவனன்றோமழுவினாலெறிந்தானென்றாள். (கூங)

இராவணன் பெருங்கோபங்கொண்டு
மாயைத்துறவிவேடத்தை விடுத்தல்.

என்றிவளுரைத்தலோடுமெரிந்தனநயனந்திக்கிற்
சென்றனதிண்டோள்வானந்தீண்டினமகுடந்திண்கை
ஒன்றோடொன்றடித்தமேகத்துருமெனவெயிற்றினொளி
மென்றனவெகுளிபொங்கவிட்டதுமாயவேடம். (கூச)

சீதைசங்கித்துமளவில் அவன்தன் உருவங்காட்டல்.

இருவினைதுறந்தமேலோரல்லன்கொலிவனென்றெண்ணி
அரிவையுமையமெய்தாவாரிவன்றானென்றோன்றும்
தெரிவருநிலையளாகத்தீவிடத்தரவந்தானே
உருகெழுசீற்றம்பொங்கிப்பணம்விரித்துயர்ந்ததொத்தான். (கூரு)

அப்பொழுதுசீதை அஞ்சிநடுநடுங்கிய நிலைமை.

ஆற்றவெந்துயரத்தினாளாண்டுற்றவலக்கணோக்கின்
ஏற்றமென்னினைக்கலாகுமெதிரெடுத்தியம்பலாகும்
மாற்றமொன்றில்லைசெய்யும்வினையில்லைவரிக்கலாகாக்
கூற்றம்வந்துற்றகாலத்துயிரெனக்குலைவுகொண்டாள். (கூசா)

இராவணன் சீதையை வெருட்டிப்பேசுதல்

விண்ணவரேவல்செய்யவென்றவென்வீரம்பாராய்
மண்ணிடைப்புழுவின்வாழுமானுடர்வலியரென்றாய்
பெண்ணெனப்பிழைத்தாயன்றேலுன்னையான்பிசைந்துதின்ன
எண்ணுவெனெண்ணிற்பின்னையென்னுயிரிழப்பெனென்றான். (கூஎ)

உடனேஇராவணன்அவளைச்சமாதானப்படுத்தித்
தன்கருத்தைப் புலப்படுத்தல்.

குலைவுறலன்னமுன்னம்யாரையுங்கும்பிடாவென்
தலைமிசைமகுடமென்னத்தனித்தனியினிதுதாங்கி
அலகில்பூணரம்பைமாதாடிமுறையேவல்செய்ய
உலகமீரேழுமாளுஞ்செல்வத்துளுறைதியென்றான். (கூஅ)

* தோள்வனம்-தோளின்தொகுதி.

அதுகேட்டவுடனே சீதை இராவணனை நிந்தித்தல்.

செவிகளைத்தளிர்க்கையாலேசிக்குறச்செமஞ்செய்தாள்
கவினும்வெஞ்சிலைக்கைவென்றிக்காகுத்தன்கற்பினேனைப்
புவியிடையொழுக்கநோக்காப்பொங்கெரிப்புனிதரீயும்
* அவியைநாய்வேட்டதென்னவென்சொனாயரக்கவென்றாள். (௬௯)

சீதை இராவணனை அதட்டிப்பேசுதல்

புன்னுனைநீரினெய்தாப்போதலேபுரிந்துநின்ற
இன்னுயிரிழத்தலஞ்சியிற்பிறப்பழிதலுண்டே
மின்னுயிர்த்துருமிற்சீறும்வெங்கணைவிரவாமுன்னம்
உன்னுயிர்க்குறுதிநோக்கினொளித்தியாலோடியென்றாள். (௭0)

உன்கணவனம்பு என்னையாதுஞ் செய்யமாட்டாது
என்று இராவணன் கூறுதல்.

என்றவளுரைக்கநின்றவிரக்கமிலரக்கனெய்த
உன்றனைக்கணவனம்பவ்வுயர்திசைசுமந்தவோங்கல்
வன்றிறன்மருப்பினாற்றன்மடித்தவென்மார்பின்வந்தால்
குன்றிடைதொடுத்துவிட்டபூங்கணைகொல்லதென்றான். (௭௧)

இராவணன் மீண்டும் இன்சொற்கூறிச் சீதையைவணங்குதல்.

அணங்கினுக்கணங்கனாய்நின்றனைசெயோகத்துப்பொங்க
உணங்கியவுடம்பினேனுக்குயிரினையுதவி † யும்பாக
கணங்குழைமகளிர்க்கெல்லாம்பெரும்பதங்கைக்கொளென்று
வணங்கினனுலகந்தாங்குமலையினும்வலியதோளான். (௭௨)

வேறு

அப்பொழுது பிராட்டி அலறிக்கதறல்.

தறைவாயவனுந்தடிதாழுதலும்
கறைவாள்படவாவிகலங்கினள்போல்
இறைவாவிளையோயெனவேங்கினளால்
பொறைதானுயிர்போவதுபோற்புகல்வாள். (௭௩)

இராவணன்சீதையைத் தரையுடனே பெயர்த்தெடுத்தல்.

ஆண்டாயிடைதீயவ ‡ னாயிழையைத்
தீண்டாலெனுமேலுரைசிந்தைசெயாத்
துண்டாமெனலாமுயர்தோள்வலியாற்
கீண்டானிலம்யோசனைகீழொடுமேல். (௭௪)

---

* அவி-ஹவிஸ் என்றவட சொல்லின் சிதைவு மந்திரபூர்வமாக அக்கினியில் ஓமஞ்செய்யப்படும் நெய்முதலிய தேவருணவு. † உம்பர்கணங்குழை மகளிர்க்கெல்லாம் பெரும்பதம் என்றது எல்லாத்தேவர்களையும் வென்று திரிலோகாதிபத்தியத்தைக்கைக் கொண்ட தனக்குஉரியவளாதலை.
‡ ஆயிழைதேர்ந்தெடுத் தணிந்தசிறந்தஆபரணங்களை யுடையவள்.

இராவணன் சீதையைத் தரையோடு எடுத்துத் தேரில்
வைத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாக எழுதல்.

கொண்டானுயர்தேர்மிசைகோல்வளையாள்
கண்டாடனதாருயிர்கண்டிலளால்
மிண்டானுருமின்னின்மயங்கினளால்
விண்டான்வழியாவெழுவான்விரைவான். (எரு)

பிராட்டி சோபித்துப் புலம்பலுறல்.

விடுதேரெனவெங்கனல்வெந்தழியும்
கொடிபோல்புரள்வாள்குலைவாளயர்வாள்
துடியாவிழுவாயெராவெழுவாள்
கடிதாவறனேயிதுகாவெனுமால். (எசு)

சீதை பல்பொருள்களையும் நோக்கி இரங்கிக்கூறும் மொழிகள்.

மலையேமரனேமயிலேகுயிலே
கலையேபிணையேகளிறேபிடியே
நிலையாவுயிரேநிலைதேறினர்போய்
உலையாவலியாருழைநீருரையீர். (எஎ)

செஞ்சேவகனுர்நிலைநீர்தெரிவீர்
மஞ்சேபொழிலேவனதேவதைகாள்
அஞ்சேலெனநல்குதிரேலடியேன்
உஞ்சாலதுதானிழிபோவுரையீர். (எஅ)

நிருதாதியர்வேறநீண்முகில்போல்
சரதாரைகள்வீசினிர்சார்கிலிரோ
வரதாவிளையோய்மறுவேதுமிலாப்
பரதாவிளையோய்பழிபூணுதிரோ. (எக)

கோதாவரியேகுளிர்வாய்குழைவாய்
மாதாவனையாய்மனனேதெளிவாய்
ஓதாதுணர்வாருழையோடினைபோய்
நீதான்வினையேனிலைசொல்லலையோ. (அ0)

முந்துஞ்சுனைகாண்முழைவாழரிகாள்
இந்தந்நிலனேடுமெடுத்தநகா
லந்துந்தலையத்துமலைந்துலையச்
சிந்தும்படிகண்டுசிரித்திடுவீர். (அக)

வேறு.

இராவணன் சீதைவார்த்தையைப் பரிகசித்தல்.

என்றின்னபலவும்பன்னியிரியலுற்றாற்றுவாளைப்
பொன்றுன்னுபுணர்மென்கொங்கைப்பொலங்குழாய்போரிலென்னை

கொன்றுன்னைமீட்பர்கொல்லம்மானுடர்கொள்கவென்று
வன்றிண்கையெறிந்துநக்கான்வாழ்க்கைநாள்வறிதுவீழ்வான். (அஉ)

சீதை இராவணனைநோக்கி நீ வல்லவனாயின் தேரைச் செலுத்தாதே என்றல்.

வாக்கினாலன்னான்சொல்லமாயையால்வஞ்சமானொன்
றாக்கினையாக்கியுன்னையாருயிருணனுங்கூற்றைப்
போக்கினாய்புகுந்துகொண்டுபோகின்றாய்பொருதுநின்னைக்
காக்குமாகாண்டியாயிற்கடவலுன்றேரையென்றாள். (அங)

மற்றும் சீதை இராவணனைநோக்கி நீ அச்சத்தாலேயே வஞ்சனைசெய்தாய் என்றல்.

மீட்டுமொன்றுரைசெய்வாணீவீரனேல்விரைவின்மற்றுன்
கூட்டராமரக்கர்தம்மைக்கொன்றங்கைகொங்கைமூக்கும்
வாட்டினார்வனத்திலுள்ளார்மானுடரென்றவார்த்தை
கேட்டிமிம்மாயஞ்செய்ததச்சத்தின்கிளர்ச்சியன்றோ. (அச)

மனிதரோடு பொருதல் எனக்கிழிவன்றோ ? என்று இராவணன் கூறல்.

மொழிதருமளவினங்கைகேளிதுமுரணில்யாக்கை
இழிதருமனிதரோடேயான்செருவேற்பலென்றால்
விழிதருவெற்றியான்றன்வெள்ளிவெற்பெடுத்ததோட்குப்
பழிதருமதனிற்சாலப்பயின்றரும்வஞ்சமென்றான். (அரு)

சீதை இராவணனைநிந்தித்தல்

பாவையுமதனைக்கேளாத்தங்குலப்பகைஞர்தம்பால்
போவதுகுற்றம்வாளிற்பொருவதுநாணம்போலாம்
ஆவதுகற்பினாரைவஞ்சிக்குமாற்றலேயாம்
ஏவமென்பழிதானென்னையிரக்கமிலரக்கர்க்கென்றாள். (அசு)

அச்சமயத்தில் சடாயுவந்து எதிர்த்தல்.

என்னுமவ்வேலையின்கணெங்கடாபோவதென்று
நின்னிலென்றிடித்தசொல்லனெருப்பிடைப்பரப்புக்கண்ணன்
மின்னெனவிளங்கும்வீரத்துண்டத்தன்மேருவென்னும்
பொன்னெடுங்குன்றம்வானின்வருவதேபோலுமெய்யான். (அஎ)

பாழிவன்கிரிகளெல்லாம்பறித்தெழுந்தொன்றோடொன்று
பூழியினுதிரவிண்ணிற்புடையுறக்கிளர்ந்துபொங்கி
ஆழியுமுலகுமொன்றாயழிதாமுழுதும்வீசும்
ஊழிவெங்காற்றிதென்னவிருசிறையூதைமோத. (அஅ)

வேறு.

சாகைவன்றலையொடுமரமுந்தாழமேல்
மேகமும்விண்ணின்மீச்செல்லமீமிசை
மாகவெங்கலுழனும்வருகின்றானென
நாகமும்படமொளித்தொதுங்கினையவே. (௯)

யானையும்யாளியுமுதலயாவையும்
கானொடுமரத்தொடேதுறுகல்லினை
மேனிறைந்திருசிறைவீச்சினேறலால்
வானமுங்கானமுமாறுகொள்ளவே. (கo)

* உத்தமன்றேவியையுலகொடோங்குதேர்
வைத்தனையேகுவதெங்குவானிலோ
டித்தனைதிசையையுமறைப்பெனீண்டெனாப்
பத்திரச்சிறைகளைவிரிக்கும்பண்பினான். (கக)

வந்தனனெருவையின்மன்னன்மாண்பிலான்
எந்திரத்தேர்செலவொழிக்குமெண்ணினான்
சிந்துரக்கால்சிரஞ்செக்கர்சூடிய
கந்தரக்கைலையைநிகர்க்குங்காட்சியான். (கஉ

வேறு.

சடாயு சீதைக்கு அபயங்கூறல்.

ஆண்டெற்றவணங்கினையஞ்சலெனாத்
தீண்டெற்றிலனென்றுணர்சிந்தையினான்
மூண்டெற்றெழுவெங்கதமுற்றிலனால்
மீண்டெற்றுரையாடலைமேயினனால். (கங)

சடாயு இராவணனைநோக்கிக்கூறுங் கோபவார்த்தைகள்.

கெட்டாய்கிளையோடுநின்வாழ்வையெலாம்
சுட்டாயிதுவென்னதொடங்கினைநீ
பட்டாயெனவேகொடுபத்தினியை
விட்டேகுதியால்விளிகின்றிலையால். (கச)

பேதாய்பிழைசெய்தனைபே † ருலகின்
மாதாவனையாளைமனக்கொடுநீ
யாதாகநினைத்தனையெண்ணமிலாய்
ஆதாரநினக்கினியாருளரோ. (கரு)

உய்யாமன்மலைந்துமராருயிரை
மெய்யாகவிராமன்விருந்திடவே

---

* உத்தமன்-புருஷோத்தமன். † உலகின்மாதா-லோகமாதா.

கய்யாரமுகந்துகொடந்தகனுர்
அய்யாபுதிதுண்டதறிந்திலேயோ. (௯௬)

கொடுவெங்கரிகொல்லியவந்ததன்மேல்
விடுமுண்டைகடாவவிரும்பினையே
அடுமென்பதுணர்ந்திலையாயினும்வன்
கடுவுண்டுயிரின்னிலைகாணுதியோ. (௯௭)

எல்லாவுலகங்களுயிர்திரனும்
அல்லாதவர்மூவருமந்தகனும்
புல்வாய்ப்புலிகண்டதுபோல்வரலால்
வில்லாளரைவெல்லுமிடுக்குளரோ. (௯௮)

இம்மைக்குறவோடுமிறந்தழியும்
வெம்மைத்தொழிலிங்கிதன்மேலிலையால்
அம்மைக்கருமாககரந்தருமால்
எம்மைக்கிதமாகவிதெண்ணினைநீ. (௯௯)

முத்தேவரின்மூலமுதற்பொருளாம்
அத்தேவரிம்மானிடராதலினல்
எத்தேவரொடெண்ணுவதெண்ணமிலாப்
பித்தேறினையாதல்பிழைத்தனையால். (௧௦௦)

புரம்பற்றியபோர்விடையோனருளால்
வரம்பெற்றவுமற்றுளவிஞ்சைகளும்
உரம்பெற்றனவாவனவுண்மையிதேனுன்
சரம்பற்றியசாபம்விடுத்தனையே. (௧௦௧)

வானுள்பவன்மைந்தன்வளைத்தவிலான்
தானேவரினின்றுதடுப்பரிதால்
நானேயவனுய்ப்பெனிநன்னுதலைப்
போநீகடிதென்றுபுகன்றிடலும் (௧௦௨)

இராவணன் மறுத்துக்கூறும் வார்த்தைகள்.

கேட்டானிருதர்க்கிறைகேழ்கிளர்தன்
வாட்டாரைநெருப்புகவாய்மடியா
ஒட்டாயினிநீயுரைசெய்குநரைக்
காட்டாய்கடிதென்றுகனன்றுரையா. (௧௦௩)

வரும்புண்டரம்வாளியின்மார்புருவிப்
பெரும்புண்டிறவாவகைபேருதிநீ
இரும்புண்டநீர்மீள்கினுமென்னுமையிற்
கரும்புண்டசொன்மீள்கிலள்காணுதியால். (௧௦௪)

வேறு.

அதுகேட்டுச் சீதைமிகவும்வருந்த சடாயு அவட்கு உறுதிகூறல்

என்னும்மளவிற்பயமுன்னினிரட்டியெய்த
அன்னம்மயர்கின்றதுநோக்கியரக்கன்யாக்கை
சின்னம்முறுமிப்பொழுதேசிலையேந்திரங்கள்
மன்னன்மகன்வந்திலனென்றுவருந்தலன்னை. (௧0௫)

முத்துக்கனபோன்முகத்தாவிமுலைக்கண்வீழத்
தத்துற்றயரேறலைதாலபலத்தினேனும்
கொத்தொப்பனசொண்டிவன்கொண்டனவென்றவாசை
பத்திற்குமின்றே * பலியீவதுபார்த்தியென்றான். (௧0௬)

சடாயுவுக்கும் இராவணனுக்கும் நடந்தபோரைக் கூறுதல்.

இடிப்பொத்தமுழக்கினிருஞ்சிறைவீசியெற்றி
முடிப்பத்திகளைப்படியிட்டுமுழங்குதுண்டம்
கடிப்பக்கடிதுற்றவன்காண்டகுநீண்டவீணைக்
கொடிப்பற்றியொடித்துயர்வானவராசிகொண்டான். (௧0௭)

அக்காலையரக்கரைக்குருக்கன்னகண்ணன்
எக்காலமுமின்னதொரீடழிவுற்றிலாதான்
நக்கானுலகேழுநடுங்கிடநாகமன்ன
கைக்கார்முகத்தோடுகடைப்புருவங்குனித்தான். (௧0௮)

சண்டப்பிறைவாளெயிற்றான்சரதாரைமாரி
மண்டச்சிறகாலடித்தான்சிலவள்ளுகிரால்
கண்டப்படுத்தான்சிலகாலனுங்காணவுட்கும்
துண்டப்படையாற்சிலதுண்டதுண்டங்கள்கண்டான் (௧0௯)

மீட்டும்மனுகாநெடுவெங்கணைநந்தநாகம்
வாட்டுங்கழலுழனெனவன்றலைபத்தின்மீதும்
நீட்டுந்நெடுமூக்கெனுநேமியன்சேமவிற்கால்
கோட்டும்மளவின்மணிக்குண்டலங்கொண்டெழுந்தான். (௧௧0)

எழுந்தான்றடமார்பினிலேழிஞெடேழுவாளி
அழுந்தாதுகழன்றிடப்பெய்தெடுத்தார்த்தரக்கன்
பொழிந்தான்புகர்வாளிகண்மீளவும்போர்ச்சடாயு
விழுந்தானெனவஞ்சினர்விண்ணவர்வெய்துயிர்த்தார். (௧௧௧)

புண்ணிற்புதுநீர்பொலியப்பொழிபுள்ளின்வேந்தன்
மண்ணிற்கரனேமுதலோருதிரத்தின்வாரி

* பலி-தேவர்க்குஇடும்உணவு.

கண்ணிற்கடலென் றுநுகர்ந்ததுகான் றுமீள
விண்ணிற்பொலிகின் றதொர்வெண்ணிறமேகமென்ன (௧௧௨)

ஒத்தானுடனேயுயிர்தானுருத்தானவன்றான்
பத்தோடுபத்திநெடும்பத்தியிற்றத்திமூக்கால்
கொத்தாகத்தாற்குடையாச்சிறையாற்புடையா
முத்தாரமார்பிற்க * வசத்தையுமூட்டறுத்தான். (௧௧௩)

அறுத்தானையரக்கனுமைம்பதொடைம்பதம்பு
செறித்தான்றடமார்பிற்செறித்தலுந்தேவரஞ்சி
வெறித்தார்வெறியாமுனிராவணன்வில்லைப்பல்லால்
பறித்தான்பறவைக்கிறைவிண்ணவர்பண்ணையார்ப்ப. (௧௧௪)

எல்விட்டவெள்ளிக்கைலைப்பொருப்பீசனோடு
மல்விட்டதோளாலெடுத்தான்சிலைவாயின்வாங்கி
வில்விட்டுயர்ந்தநெடுமேகமெனப்பொலிந்தான்
சொல்விட்டவன்றான்வலியாருளர்சொல்லவல்லார் (௧௧௫)

மீளாசிறத்தாயிரங்கண்ணவன்விண்ணினோடை
வாளாலொறுத்தான்சிலைவாயிடைநின்றுவாங்கித்
தாளாலிறுத்தான்றழல்வண்ணன்றடக்கைவில்லைத்
தோளாலிறுத்தான்றனைத்தாதைதனன்பிற்றோழன். (௧௧௬)

ஞாலம்படைப்பான்றனதாற்றலுக்கேற்றநல்வில்
மூலம்மொடிப்புண்டதுகண்டுமுனிந்தநெஞ்சன்
ஆலம்மிடற்றான்புரமட்டதொரம்புபோலும்
சூலம்மெடுத்தானெறிந்தான்மறந்தோற்றிலாதான் (௧௧௭)

ஆற்றானிவனென்றுணராதெனதாற்றல்காணென்
றேற்றானொருவைக்கிறைமுத்தலையெஃமார்பின்
மேற்றானிதுசெய்பவர்யாரெனவிண்ணுளோர்கள்
தோற்றாதுநின்றார்தமதோள்புடைகொட்டியார்த்தார். (௧௧௮)

† பொன்னோக்கியர்தம்புலநோக்கிய * புன்கணோரும்
இன்னோக்கியரில்வழியெய்தியநல்லிருந்தும்
தன்னோக்கியநெஞ்சுடையோகியர்தம்மைசார்ந்த
மென்னோக்கியர்நோக்குமுமாமெனமீண்டதவ்வேல். (௧௧௯)

வேகம்முடன்வேலிழந்தான்படைவேறெடாமுன்
மாகம்மறையும்படிநீண்டவயங்குமான்றேர்ப்

---

* கவசத்தையு மூட்டறுத்தான் கவசத்தின் பூட்டுகளைத் துணித்தான்.
† புன்கண்-வாடியகண். பொருளின்மை துன்பத்துள் துன்பமாதலால் வறியவர் புன்கணோர் எனப்பட்டனர்.

பாகன்றலையைப்பறித்துப்படர்கற்பினாள்பால்
மொகம்படைத்தானுளைவெய்தமுகத்தெறிந்தான். (௧௨௦)

எறிந்தானதுநோக்கியிராவணனெஞ்சினாற்றல்
அறிந்தான்முனிந்தாண்டதொராடகத்தண்டுவாங்கிப்
பொறிந்தாங்கெரியின்சிகைபொங்கியெழப்புடைத்தான்
மறிந்தானெருவைக்கிறைமால்வரைபோலமண்மேல். (௧௨௧)

மண்மேல்விழுந்தான்விழலோடும்வயங்குமான்றேர்க்
கண்மேலொளியுந்தொடராவகைதான்கடாவி
விண்மேலெழுந்தானெழமெல்லியலாளும்வெந்தீப்
புண்மேனுழையத்துடிக்கின்றனள்போற்புரண்டாள். (௧௨௨)

கொழுந்தேயனையாள்குழைந்தேங்கியகொள்கைகண்டான்
அழுந்தேலவலத்திடையஞ்சலையன்னையென்று
எழுந்தானுயிர்த்தானடவெங்கினிப்போவதென்று
விழுந்தானவன்றேர்மிசைவிண்ணவர்பண்ணையார்ப்ப (௧௨௩)

பாய்ந்தானவன்பன்மணித்தண்டுபறித்தெறிந்தான்
ஏய்ந்தார்கதித்தேர்ப்பரியெட்டினொடெட்டுமெஞ்சித்
தேய்ந்தாசறவீசியத்திண்டிறற்றுண்டவாளால்
காய்ந்தான்கவர்ந்தானுயிர்காலனுங்கைவிதிர்த்தான். (௧௨௪)

திண்டோழித்தாங்கவன்றிண்புறஞ்சேர்ந்ததூணி
விண்டான்மறைப்பச்செறிகின்றனவில்லிலாமை
மண்டாரமர்தான்வழங்காமையின்வச்சைமாக்கள்
பண்டாரமொக்கின்றனவள்ளுகிராற்பறித்தான் (௧௨௫)

* மாச்சிச்சிரம்பாய்ந்தவன்மார்பினுந்தோள்கண்மேலும்
ஓச்சிச்சிறகாற்புடைத்தான்கடித்தானுலையா
மூச்சிற்றவிராவணனும்முடிசாய்ந்திருந்தான்
போச்சித்தனைபோலுநின்னாற்றலெனப்புகன்றான். (௧௨௬)

அவ்வேலையினேமுனிந்தான்முனிந்தாற்றலன்ன
வெவ்வேலரக்கன்விடலாம்படைவேறுகாணான்
இவ்வேலையினேயிவனின்னுயிருண்பனென்னாச்
செவ்வேபிழையாநெடுவாளுறைநீர்த்தெறிந்தான். (௧௨௭)

வலியின்றலைதோற்றிலன்மாற்றருந்தெய்வவாளால்
நலியுந்தலையென்றஃதன்றியும்வாழ்க்கைநாளும்

---

* மாச்சிச்சிரம்-மிக்கவிநோதம், மகாசித்ரம், பெரிய சிச்சிலிக்குருவி என்று பொருள் கூறுதலும் ஈண்டுபொருந்தும் பெருங்கழுகு என்பதும் பொருந்தும் சிச்சிரமென்பது; கழுகென்னும் பொருளதாதற்கு மேற்கோள் கிடைத்திலது

மெலியுங்கடைசென்றுளதாகலின் விண்ணின்வேந்தன்
குலிசம்மெறியச்சிறையற்றதொர்குன்றின்வீழ்ந்தான். (கஉஅ)

சடாயுவிழுந்ததைக்கண்ட பிராட்டிபட்ட துயரம்கூறல்.

விரிந்தார்சிறைகீழுறவீழ்ந்தனன்மண்ணின்விண்ணோர்
இரிந்தாரிழந்தாணையென்னமுனிக்கணங்கள்
பரிந்தார்படர் * விண்டுவினாட்டவர்பைம்பொன்மாரி
சொரிந்தாரதுநோக்கியசீதைதுளக்கமுற்றாள். (கஉகூ)

வெள்கும்மரக்கன்னெடுவிண்புகவார்த்துமிக்கான்
தொள்கின்றலையெய்திமானெனச்சோர்ந்துநைவாள்
உள்கும்முயிர்க்கும்முயங்கும்மொருசார்வுகாணாள்
கொள்கொம்பொடியக்கொடிவீழ்ந்ததுபோற்குலைந்தாள். (கநO)

வேறு.

வன்றுணையுளனெனவந்தமன்னனும்
பொன்றினனெனக்கினிப்புகலென்னென்கின்றாள்
இன்றுணைபிரிந்திரிந்தின்னலெய்திய
அன்றிலம்பெடையெனவரற்றினாளரோ. (கநக)

பின்னவனுரையினைமறுத்துப்பேதையேன்
அன்னவன்றனைக்கடிதகற்றினேன்பொரு
மன்னவன்சிறையறமயங்கினேன்பொரு
மன்னவன்சிறையறமயங்கினேன்விதி
இன்னமுமெவ்வினையியற்றுமோவெனா. (கநஉ)

அல்லலுற்றேனைவந்தஞ்சலென்றவிந்
நல்லவன்றோற்பதேநாகன்வெல்வதே
வெல்வதும்பாவமோவேதம்பொய்க்குமோ
இல்லையோவறமெனவிரங்கியேங்கினாள். (கநந)

† நாணிலேனுரைகொடுநடந்தநம்பிமீர்
நீணிலையறநெறிநின்றோர்க்கெலாம்
ஆணியையுந்தையர்க்கமைத்தவன்பனைக்
காணியவும்மெனக்கலங்கிவிம்மினாள். (கநச)

கற்பழியாமையென்கடமையாயினும்
பொற்பழியாவலம்பொருந்தும்போர்வலான்
விற்பழியுண்டதுவினையினேன்வந்த
இற்பழியுண்டதென்றிரங்கியேங்கினாள். (கநரு)

---

* விண்டுவினாட்டவர்-நித்தியசூரிகள்.

† நாணுவது-செய்யத்தகாதவற்றில் உள்ளமொடுங்குதல்; இலச்சை. தகாதகாரியத்தில் முயலும்படி இராமனைத் தான் தூண்டியதுமன்றி இலக்குமணனையும் தன்னைப் பிரிந்து செல்லும்படி தகுதியில்லாது ஏவியதனால் 'நாணிலேன்' என்று தன்னைத்தானே பழித்துக் கொண்டாள்.

எல்லியல்விசும்பிடையிருந்தரேயியாய்
சொல்லியலாய்நெறிதொடர்ந்ததோழமை
கல்லியலருங்கடன்கழித்தநம்பியைப்
புல்லுதியோவெனப்பொருமிப்பொங்கினுள். (கரு௬)

அப்போழுது இராவணன் சீதையுடனேவிரைந்து அப்பாற்செல்லுதல்

எங்குவாடன்மையுமிறகிழந்தவன்
ஆங்குறுதன்மையுமரக்கனேக்கினன்
வாங்கினன்றேரிடைவைத்தமண்ணெடும்
வீங்குதோண்மீக்கொடுவிண்ணினேகினன். (கரு௭)

அப்பொழுது சீதை மூர்ச்சித்துத் தரையிற்கிடத்தல்.

விண்ணிடைவெய்யவனேகும்வேகத்தால்
கண்ணெடுமனமவைசுழன்றகற்பினுள்
உண்ணிறையுணர்வழிந்தொன்றுமோர்ந்திலள்
மண்ணிடைத்தன்னையுமறந்துசாம்பினுள். (கரு௮)

இராவணன் அப்பாற் செல்லுதலைக்கண்டசடாயு இரங்கல்

ஏகினனரக்கனுமெருவைவேந்தனும்
மோகவெந்துயர்சிறிதாறிமூர்ச்சியா
மாகமேனேக்கினன்வஞ்சன்வல்லையில்
போகுதல்கண்டகம்புலர்ந்துசொல்லுவான். (கரு௯)

வந்திலர்மைந்தர்நம்மருகிக்கெய்திய
வெந்துயர்துடைத்தனரென்றுமெய்ப்புகழ்
தந்திலர்விதியினர்தருமவேலியைச்
சிந்தினர்மேலினிச்செயலென்னேகொலோ. (கசo)

வெற்றியருளரெனின்மின்னினுண்ணிடைப்
பொற்றொடிக்கிந்நிலைபுகுதற்பாலதோ
உற்றதையின்னதென்றுணரகிற்றிலேன்
சிற்றவைவஞ்சனைமுடியச்செய்ததோ. (கசக)

பஞ்சணைபாம்பணையாகப்பள்ளிசேர்
அஞ்சனவண்ணனேயிராமனுதலால்
வெஞ்சினவரக்கனல்வெல்லற்பாலனே
வஞ்சனையிழைத்தனன்கள்ளமாயையால். (கசஉ)

வேறவரக்கரைவென்றவம்பழி
தீருமென்சிறுவனுந்தீண்டவஞ்சமால்
ஆரியன்றேவியையரக்கனன்மலர்ப்
பேருலகளித்தவன்பிழைப்பில்சாபத்தால். (கசங)

பருஞ்சிறையின்னனபன்னியுன்னுவான்
அருஞ்சிறையுற்றனளாமெனுமனம்
பொருஞ்சிறையிற்றதேர்பூவைகற்பெனும்
இருஞ்சிறையிருதெனவிடருநீங்கினன். (கசச)

சடாயுசோர்ந்து துயில்கொள்ளல்.

அருஞ்சிறைகுருதியாலழிந்துசோர்வுற
வஞ்சியைமீட்கிலேனென்னுமானமும்
செஞ்சவேமக்கள்பாற்சென்றகாதலும்
நெஞ்சுறத்துயின்றன * னுணர்வுநீங்கலான். (கசரு)

இராவணன் சீதையைக்கொண்டுபோய்
அசோகவனத்திற் சிறைவைத்தல்.

வஞ்சியையரக்கனும்வல்லைகொண்டுபோய்ச்
செஞ்சவேதிருவுருத்தீண்டவஞ்சுவான்
நஞ்சியலரக்கியர்நடுவணாயிடைச்
சிஞ்சுபவனத்திடைச்சிறைவைத்தானரோ. (கசசு)

இலக்குமணன் செய்தியைக்கூறத் தொடங்கல்.

இந்நிலையினையவன்செயலியப்பினும்
பொன்னிலமானின்பின்றொடர்ந்துபோகிய
மன்னிலையறிகென மங்கையேவிய
பின்னிளையவனிலைபேசுவாமரோ. (கசஎ)

சீதையின் தனிமைக்காக இலக்குமணன் சிந்தித்தல்.

ஒருமகடனிமையையுன்னியுள்ளுறும்
பருவரன்மீதிடப்பதைக்குநெஞ்சினன்
பெருமகன்றனைத்தனிபிரிந்துபேதுறும்
திருநகர்நீருமப்பரதன்செய்கையான். (கசஅ)

இலக்குமணன் இராமனைக் காணுதல்.

தெண்டிரைக்கலமெனவிரைவிற்செல்கின்றான்
புண்டரீகத்தடங்காடுபூத்தொரு
கொண்டல்வந்திழிந்தெனக்கோலத்தான்றனைக்
கண்டனன்மனமெனக்களிக்குக்கண்ணினான். (கசகூ)

இராமன் இலக்குமணனைக் காணுதல்.

தண்ணெனுமவ்வுரைதொடரத்தோகையும்
பெண்ணெனும்பேதைமைமயக்கப்பேதினல்

---

* உணர்வு நீங்கலான் என்றது எப்பொழுதும் நிலைகுலையாத நல்லறிவுடையானென்ற இயல்பை விளக்குவதோடு இப்பொழுது உயிரொழிந்திலனென்ற செய்தியையும் விளக்கும்.

உண்ணிறைகோருமென்றாசலாடுமெக்
கண்ணனுமிளவலைக்கண்ணுற்றனரோ. (௧௫௦)

வேறு.

இலக்குமணன் வருதலின் காரணத்தினை
இராமன் உள்ளபடி ஆலோசித்தல்.

புன்சொற்சடர்தபகுவாயரக்கனுரைபொய்யெனுதுபுகல்வாள்
வன்சொற்கடந்துமடமங்கையேவுநிலைதேரவந்தமருளே
தன்சொற்கடந்துதளர்கின்றநெஞ்சமுடையேன்மருங்குதனியே
என்சொற்கடந்துமனமுந்தளர்ந்தவிளவீரன்வந்தவியல்பே. (௧௫௧)

இராமன் இலக்குமணனைத்தழுவிவந்தகாரணத்தை வினவல்.

என்றன்னியென்னைவிதியார்முடிப்பதெனவெண்ணிநின்றவிறையைப்
பொன்றன்னுவிற்கையவீரன்வந்துபுனைதாளிறைஞ்சுபொழுதில்
மின்றன்னுநூலின்மணிமார்பழுந்தவிரைவோடுபுல்லியுருகா
நின்றன்னிவந்தநிலையென்கொலென்று *நெடியோன்விளம்பலொடிவான்.

இலக்குமணன்தான்வந்த காரணங்கூறல்.

இல்லாநிலத்தினிசையாதவெஞ்சொலெழவஞ்சியேவமுறையால்
வல்வாயரக்கனுரையாகுமென்னமதியாண்மறுக்கமுறுவாள்
நில்லாதுமற்றிதறிபோதியென்னநெடியோய்புயத்தின்வலியென்
சொல்லான்மனத்தினடையாள்சினத்தின்முனிவோடுநின்றுதவள்வாள். ()

ஏகாதுநிற்றியெனின்யானெருப்பினிடைவீழ்வெனென்றுமுடுகா
மாகானகத்தினிடையோடலோடுமனமஞ்சிவஞ்சவினையேன்
போகாதிருத்தினிறவாதிருக்கைபுணராவெனக்கொடுணரா
ஆகாதிறக்கையறனன்றெனக்கொடிவண்வந்ததென்னவமலன். (௧௫௪)

* நடந்தசெயலைக்குறித்து இராமன் சிந்தித்தல்.

சாவாதிருத்தலிலளானதுற்றதஃதோதடுக்கமுடியா
ஆவாவலக்கனுறுவாளுரைத்தபொருளோவகத்தினடையாக்
காவாநிலத்தின்வருமேதமற்றதொழியாதுகைக்கொடகலப்
போவார்பிரிக்கமுயல்வார்புணர்த்தபொருளாமிதென்றுதெருளா. (௧௫௫)

இராமன் இலக்குமணனைநோக்கிச் சில கூறல்.

வந்தாய்திறத்தினுளதன்றுகுற்றமடவாண்மறுக்கமுறுவாள்
சிந்தாகுலத்தொடுரைசெய்தசெய்கையதுநீருமென்றுதெளிவாய்
முந்தேதடுக்கவொழியாதெடுத்தவினையேன்முடித்தமுடிவால்
அந்தோகெடுத்ததெனவுன்னியுன்னியழியாதவுள்ளமழிவான். (௧௫௬)

---

* நெடியோன்-மூத்தவன், இனி திருக்கலியாண குணகணங்களாற் பெரியவனும், திரிவிக்கிரமாவதாரத்தில் நீண்டு வளர்ந்தவனும் நெடிய விசுவரூபமுடையவனுமாம்.

இனித்தாமதஞ்செய்யலாகாதென்று இராமன்விரைந்து பர்ணசாலைக்கு மீளுதல்.

பாணிக்கநின்றுபயனாவதென்னைபயில்பூவையன்னகுயிலைக்
காணிற்கரந்ததுயர்தீருமன்றியயலில்லையென்றுகடுகிச்
சேணுற்றகன்றநெறியூடுசென்றுசிலைவாளியன்னவிசைபோய்
ஆணிப்பசும்பொன்னையாளிருந்தவவிர்சோலைவல்லையணுகா. (கருஎ)

வேறு.

அந்தச்சீதையைக் காணாமல் இராமன்வருந்தல்.

ஓடிவந்தனன்சாலையின்சோலையினுதவும்
தோடிவர்ந்தபூஞ்சுரிகுழலாடனைக்காணான்
கூடுதன்னுடையதுபிரிந்தாருயிர்குறியா
நேடிவந்ததுகண்டிலதாமெனநின்றான். (கருஅ)

கைத்தசிந்தையன்கனங்குழையணங்கினைக்காணா
துய்த்துவாழ்தரவேறொருபொருளிலானுதவ
வைத்தமாநிதிமண்ணொடுமறைந்தனவாங்கிப்
பொய்த்துளோர்கொளத்திகைத்துநின்றானையும்போன்றான். (கருகூ)

அப்பொழுது உலகத்திலுண்டான் குழப்பத்தைக்கூறல்.

மண்சுழன்றதுமால்வரைசுழன்றதுமதியோர்
எண்சுழன்றதுசுழன்றதவ்வெறிகடலேழும்
விண்சுழன்றதுவேதமுஞ்சுழன்றதுவிரிஞ்சன்
கண்சுழன்றதுசுழன்றதுகதிரொடுமதியும். (கசு0)

அறத்தைச்சீறுங்கொலருளையேசீறுங்கொலமரர்
திறத்தைச்சீறுங்கொன்முனிவரைச்சீறுங்கொறீயோர்
மறத்தைச்சீறுங்கொலென்கொலோமுடிவென்றுமறையின்
நிறத்தைச்சீறுங்கொனெடுந்தகையோவெனநடுங்கா. (கசுக)

நீலமேனிநன்னெடியவன்மனநிலைதிரிய
மூலகாரணத்தவனொடுமுடிவுறமுற்றும்
காலமாமெனக்கடையிடுகணிக்கரும்பொருள்கள்
மேலகீழுறக்கீழனமேலுறும்வேலை. (கசுஉ)

சீதையைக்கொண்டுபோனவனைத் தொடர்வோம் என்று இலக்குமணன் கூறல்.

தேரினாழியுந்தெரிந்தனந்தீண்டுதலஞ்சிப்
பாரினோடுகொண்டகழ்ந்ததும்பார்த்தனம்பயனின்
றொருந்தன்மையீதென்னென்பதுரனிலாதவர்போல்
தூரம்போதன்முன்றொடர்துமென்றிளையவன்றொழலும். (கசுங)

அதற்கு இராமன் உடன்பட இருவரும்தேர்ச்சுவட்டின்வழியேசெல்லல்.

ஆமதேயினியமைவதென் றமலனுமெய்யில்
தாமவார்கணைப்புட்டிலு முதலியதாங்கி
வாமமால்வரைமரனிலைமடிதரவயவர்
பூமிமேலவன்றேர்சென்றநெடுநெறிபோனார். (ககச)

தரையில்தேர்ச்சுவடு மறைந்தமைகண்டு இராமன் திகைத்தல்.

மண்ணின்மேலவன்றேர்சென்றசுவடெலாமாய்ந்து
விண்ணினோங்கியதொருநிலைமெய்யுறவெந்த
புண்ணினூடுறுவேலெனமனமிகப்புழுங்கி
எண்ணினுமினிச்செய்வதென்னிலவலேயென்றான். (ககரு)

தேர்சென்ற தென்திசையைநோக்கிச் செல்வோமென்று
இலக்குமணன்-கூறல்

தெற்குநோக்கியதெனும்பொருடெரிந்தததிண்டோர்
மற்குநோக்கியதிரள்புயத்தண்ணலேவானம்
விற்குநோக்கியபகழியினெடிதன்றவிம்மி
நிற்குநோக்கிதென்பயத்ததென்றிளையவனேர்ந்தான். (ககசு

அங்ஙனம் தெற்கே செல்லும்வழியில்வீணைக்
கொடிவிழுந்து கிடக்கக்காணுதல்.

ஆகுமன்னதேகருமமென்றத்திசைநோக்கி
ஏகியோசனையிரண்டுசென்றாரிடையெதிர்ந்தார்
மாகமால்வரைகால்பொரமறிந்ததுமானப்
பாகவீணையின்கொடியென்றுகிடந்ததுபார்மேல். (ககஎ)

கண்டுசங்கிக்கையில் இராமன் ஒன்று கூறலுறல்.

கண்டுகண்டகரோடுமக்காரிகைபொருட்டால்
அண்டராதியர்க்காரமர்விளைந்ததென்றயிர்த்தார்
துண்டவாளினிற்சுடர்க்கொடிதுணிந்ததென்றுணராப்
புண்டரீகக்கண்புனல்வரப்புரவலன்புகல்வான். (ககஅ)

சடயுபோர் செய்திருப்பாரென்று இராமன் கூறல்.

நோக்கினாலையநொய்திவணெய்தியநுந்தை
மூக்கினாலிதுமுறித்தமைமுடிந்ததான்மொய்ம்பின்
தாக்கினனெடுத்ததுதெரிகிலந்தமியன்
யாக்கைதேம்பிடுமெண்ணரும்பருவங்களிறந்தான். (கக௯)

ஆயின்விரைவிற்செல்வோம்என்று இலக்குமணன் கூறல்.

நன்றுசாலவுநடுக்கருமிடுக்கினனும்
சென்றுகூடலாம்பொழுதெலாந்தடுப்பதுதிடனால்

வென்றுமீட்கினுமீட்குமால்வேறுறவெண்ணி
நின்றுதாழ்ந்தொருபயனிலையென்றலுநெடியோன். (௩௭0)

இராமலக்ஷ்மணர் அப்பாற் செல்லுகையில்
வில்முறிந்து கிடந்ததைக் காணுதல்.

தொடர்வதேநலமாமெனப்படிமிசைச்சுற்றி
படருங்காலெனக்கறங்கெனச்செல்லுவார்பார்த்தார்
மிடல்கொள்வெஞ்சிலைவிண்ணிடுவின்முறிந்தென்னக்
கடலின்மாயிர்திரையெனக்கிடந்ததுகண்டார். (௩௭௧)

இராமன் அவ்வில்லின் வலிமையையும் அதைத்
துணித்தவனது ஆற்றலையும் வியந்துகூறல்.

சிலைகிடந்ததாலிலக்குவதேவர்நீர்கடைந்த
மலைகிடந்தெனவலியதேவடிவினுன்மதியின்
* கலைகிடந்தெனக்காட்சியனிதுகடித்தொடித்தான்
நிலைகிடந்தவாநோக்கெனநோக்கினனின்றான். (௩௭௨)

அவர்கள்பின்னுஞ் செல்லுகையில் சூலத்தையும்
அம்பறாத் தூணிகளையுங் காணுதல்,

நின்றுபின்னருநெடுநெறிகடந்துறநிமிரச்
சென்றுநோக்கினர்திரிசிகைத்திருநெடுஞ்சூலம்
ஒன்றுபல்கணைமழையுறுபுட்டிலோரிரண்டு
குன்றுபோலவட்கிடந்தனகுறுகினருற்றார். (௩௭௩)

அவர்கள்மற்றுஞ் செல்லுகையில் கவசங்கிடக்கக்காணுதல்,

மறித்துஞ்சென்றனர்வானிடைவயங்குறவழங்கி
எறிக்குஞ்சோதிகள்யாவையுந்தொக்கனவெனலாம்
நெறிக்கொள்கானகமறைதரநிருதர்கோனெஞ்சின்
பறித்துவீசியகவசமுங்கிடந்ததுபார்த்தார். (௩௭௪)

குதிரைகளும் சாரதியும் இரத்தவெள்ளமும்கிடக்கக் கண்டு
சடாயுவிழுந்துகிடக்குமிடத்துக்கு அருகில் வருதல்.

கான்கிடந்ததுமறைதரக்கால்வயக்கலிமாத்
தான்கிடந்துழிசாரதிகிடந்துழிசார்ந்தார்
ஊன்கிடந்ததோளுதிரமுங்கிடந்துளதுலகின்
வான்கிடந்ததுபோல்பவன்கிடந்துழிவந்தார். (௩௭௫)

அவர்கள் குண்டலங்களையும் மற்றும்பல அணிகளையுங் காணுதல்.

கண்டலங்குதங்கைத்தலம்விதிர்த்தனர்கவினுர்
விண்டலந்துறந்திறுதியின்விரிகதிர்வெய்யோன்

* கலை-சந்திரன், பங்கு.

மண்டலம்பலமண்ணிடைக்கிடந்தனமணியின்
குண்டலம்பல * குலமணிப்பூண்களின்குவியல். (கஎசு)

இராமன்தம்பியைநோக்கிசடாயுடன்பலர்பொருதனர்போலுமென்றல்

தோளணிக்குலம்பலவுளகுண்டலத்தொகுதி
வாளிமைப்பனபலவுளமணிமுடிபலவால்
† நாளனைத்தையுங்கடந்தனன்றமியனத்தாதை
யாளிபோல்பவர்பலருளர்பொருதனரினையோய். (கஎஎ)

அதற்கு இலக்குமணன் பொருதவன் இராவணன்போலும் என்றல்.

திருவினாயகனுரைசெயச் ‡ சுமித்திரைசிங்கம்
தருவினீளியதோள்பலதலைபலவென்றால்
பொருதுதாதையையித்தனைநெறிக்கொடுபோனான்
ஒருவனேயவனிராவணனுமெனவுரைத்தான். (கஎஅ)

இராமன் சடாயுவிழுந்துகிடத்தலைக் காணுதல்.

மடலுணொட்டியதாரினையோன்றனைமதியா
மிடலுணொட்டங்கடியுகநோக்கினன்விரைவான்
உடலுணொட்டியகுருதியம்பரவையினும்பர்க்
கடலுணொட்டியவரையெனத்தாதையைக்கண்டான். (கஎகூ)

இராமன் சடாயுவின்மேல் விழுந்துபுலம்பல்.

துள்ளியோங்குசெந்தாமரைநயனங்கள்சொரியத்
தள்ளியோங்கியவமலன்றன்றனியுயிர்த்தந்தை
வள்ளியோன்றிருமேனியிற்றழனிறவண்ணன்
வெள்ளியோங்கலிலஞ்சனமலையெனவீழ்ந்தான். (கஅ0)

இராமன் மூர்ச்சித்துத் தெளிந்து புலம்ப லுறுதல்.

உயிர்த்திலன்னெருநாழிகையுணர்விலன்கொல்லென்
றயிர்த்ததம்பிபுக்கங்கையினெடுத்தனனருவிப்
புயற்கலந்தநீர்தெளித்தலும்புண்டரீகக்கண்
வயர்த்துப்பைப்பயவயர்வுதீர்ந்தினையனபேசும். (கஅக)

வேறு.

சடாயுவைக்குறித்து இராமன் புலம்பல்.

தந்தாதையரைத்தனயர்கொலைநேர்ந்தார்
முந்தாரேயுள்ளார்முடிந்தான்முனையொருவன்

---

* குலமணி-உயர்ந்தசாதியிரத்தினம்.

† நாளனைத்தையுங் கடந்தனன்-என்றது மிகமுதிர்ந்த மூப்புடையவ ரென்றவாறு.

‡ சுமித்திரை-நல்லதோழன் போன்றவனென்று பொருள்.

எந்தாயோவெற்காகநீயுமிறந்தனையோ
அந்தோவினையேனருங்கூற்றமானேனே. (௧௮௨)

பின்னுறுவதோராதேபேதுறுவேன்பெண்பாலாள்
தன்னுருவநீர்ப்பான்றனியுறுவதோராதே
உன்னுறவுநீர்த்தாயோருறவுமில்லாதேன்
என்னுறவான்வேண்டியிடருறுவேனென்றாயே. (௧௮௩)

மாண்டேனேயன்றேமறையோர்குறைமுடிப்பான்
பூண்டேன்விரதமதனுனுயிர்பொறுப்பேன்
நீண்டேன்மரம்போலநின்றொழிந்தபுன்றொழிலேன்
வேண்டேனிம்மாமாயப்புன்பிறவிவேண்டேனே. (௧௮௪)

என்றாரம்பற்றண்ணலென்றாயைச்சான்றோயைக்
கொன்றானுநின்றான்கொலையுண்டுநீகிடந்தாய்
வன்றாட்சிலையேந்திவாளிக்கடல்சுமந்து
நின்றேனுநின்றேனெடுமரம்போனின்றேனே. (௧௮௫)

சொல்லுடையாரென்போலினியுளரோதொல்வினையேன்
இல்லுடையாள்காணவிறகுடையாயெண்ணிலாப்
பல்லுடையாயுன்னைப்படையுடையான்கொன்றகல
வில்லுடையேனின்றேன்விறலுடையேனல்லேனே. (௧௮௬)

அங்ஙனம்புலம்புகையில் சடாயுசிறிது மூர்ச்சைதெளிதல்.

அன்னபலபலவும்பன்னியழுமயங்கும்
தன்னேரிலாதானுந்தம்பியுமத்தன்மையனாய்
உன்னவுணர்வுசிறிதுண்முளைப்பப்புள்ளரசும்
இன்னவுயிர்ப்பானிருவரையுநோக்கினான். (௧௮௭)

சடாயு இராமலக்ஷ்மணரைக்கண்டதனால் மகிழ்தல்.

உற்றதுணராதுயிருலையவெய்துயிர்ப்பான்
கொற்றவனைக்கண்டான்றனுள்ளங்குளிர்ப்புற்றான்
இற்றவிருசிறகுமின்னுயிருமேழுலகும்
பெற்றனனேயொத்தான்பெயர்த்தேன்பழியென்றான். (௧௮௮)

சடாயு அவர்களை அருகில்அழைத்து உச்சிமோத்தல்.

பாக்கியத்தாலின்றென்பயனில்பழியாக்கை
போக்குகின்றேன்கண்ணுற்றேன்புண்ணியரேவம்மினென்று
தாக்கியரக்கன்மகுடத்தலைதுமித்த
மூக்கினாலுச்சிமுறைமுறையேமோக்கின்றான். (௧௮௯)

சடாயு இரங்கிக்கூறும்வார்த்தை.

வஞ்சனையால்வந்தவரென்பதென்னுடைய
நெஞ்சகமேமுன்னேநினைவித்ததானாலும்
அஞ்சொன்மயிலையருந்ததியைநீங்கினிரோ
எஞ்சலிலாவாற்றலிருவீருமென்றுரைத்தான். (௧௪௦)

வேறு.

அப்பொழுது இலக்குமணன் நடந்தசெய்தியைத்
தான் அறிந்தவரையில் கூறுதல்.

என்றவனியம்பலுமிளையகோமகன்
ஒன்றுமாண்டுறுபொருளொழிவுறாவகை
வன்றிறன்மாயமான்வந்ததாதியா
நின்றதுநிகழ்ந்ததுநிரப்பினனரோ. (௧௪௧)

சடாயு அவர்கட்குத்தேறுதல் வார்த்தைகூறத்தொடங்கல்.

* ஆற்றலோனவ்வுரையறையவாணையால்
ஏற்றுணர்ந்தெண்ணியவ்வெருவைவேந்தனும்
மாற்றருந்துயரவர்மனக்கொளாவகை
தேற்றுதனன்றெனவினையசெப்புவான். (௧௪௨)

சடாயு தேறுதல்கூறல்.

† அதிசயமொருவராலமைக்கலாகுமோ
துதியறுபிறவியினின்பதுன்பந்தான்
விதிவயமென்பதைமேற்கொளாவிடின்
மதிவலியான்விதிவெல்லவல்லமோ. (௧௪௩)

தெரிவுறுதுன்பம்வந்தூன்றச்சிந்தையை
யெரிவுசெய்தொழியுமதிழுதைநீரதால்
பிரிவுசெய்துலகெலாம்பெறுவிப்பான்றலை
அரிவுசெய்விதியினார்க்கரிதுண்டாகுமோ. (௧௪௪)

அலக்கணுமின்பமுமணுகுநாளிவை
விலக்குவமென்பதுமெய்யிற்றாகுமோ
இலக்கமுப்புரங்களையெய்தவில்லியார்
தலைக்கலத்திரந்ததுதவத்தின்பாலதோ. (௧௪௫)

பொங்குவெங்கோளராவிசும்பூத்தன
வெங்கதிர்ச்செல்வனைவிழுங்கிநீங்குமால்
அங்கண்மாஞாலத்தைவிளக்குமாய்கதிர்த்
திங்களுமொருமுறைவளருந்தேயுமால். (௧௪௬)

---

* ஆற்றல்-வல்லமை, புத்திபலமுமாம். † அதிசயம்-புதுமை, அதிகமுமாம்.

அந்தரம்வருதலுமனையதீர்தலும்
சுந்தரத்தோளினீர்தொன்மைநீரவால்
மந்திரவிமையவர்குருவின்வாய்மொழி
இந்திரனுற்றனவெண்ணவொண்ணுமோ. (௧௯௭)

தடைக்கரும்பெருவலிச்சம்பரப்பெயர்க்
கடைத்தொழிலவுணனூற்குலிசக்கையினன்
படைத்தனன்பழியதுபகழ்வில்வலாய்
துடைத்தனனுந்தைதன்குவவுத்தோளினால். (௧௯௮)

வேறு.

பிள்ளைச்சொற்கிளியனளைப்பிரிவுறலுற்றபெற்றி
தன்னுற்றவறமுந்தேவர்துயர்முந்தர்ததேயால்
கள்ளப்போரரக்கரென்னுங்களையினைக்களைந்துவாழ்தி
புள்ளிற்கும்புலனில்பேய்க்குந்தாயன்னபுலவுவேலோய். (௧௯௯)

வடுக்கண்வார்கூந்தலாளையிராவணன்மண்ணினோடும்
எடுத்தனனேகுவானையெதிர்ந்தெனதாற்றல்கொண்டு
தடுத்தனெனவனெல்லாந்தவத்தான்றன்றவாளால்
படுத்தனனிங்குவீழ்ந்தேனிதுவின்றுபட்டதென்றான். (௨௦௦)

அது கேட்டவுடனே இராமன்கொண்டகோபம்.

கூறினமாற்றஞ்சென்றுசெவித்தொளைகுறுகாமுன்னம்
ஊறினவுதிரஞ்செங்கணுயிர்த்தனவுயிர்ப்புச்செந்தீ
ஏறினபுருவமேன் * மேலிரிந்தனசுடர்களெங்கும்
கீறினதண்டகோளங்கிழிந்தனதிரிகளெல்லாம். (௨௦௧)

அப்பொழுது பிரபஞ்சத்திலுண்டான தடுமாற்றம்.

† மண்ணகந்திரியநின்றமால்வரைதிரியமற்றைக்
கண்ணகன்புனலுங்காலுங்கதிரொடுந்திரியக்காவல்
விண்ணகந்திரியமேலைவிரிஞ்சனுந்திரியவீரன்
எண்ணரும்பொருள்களெல்லாமென்பதுதெரிந்ததன்றே. (௨௦௨)

இராமன் கோபாவேசத்தோடு சிலகூறத்தொடங்கல்.

குறித்தவெங்கோபம்யார்மேற்கொள்ளுறுங்கொல்லென்றஞ்சி
வெறித்துநின்றுலகமெல்லாம்விம்முறுகின்றவேலைப்
பொறிப்பிதிர்படலைச்செந்தீப்புகையொடுபொடிப்பப்பொம்மென்
றெறிப்பதோர்முறுவலோன்றவிராமனுமியம்பலுற்றான். (௨௦௩)

* மேலிழிந்தனவென்றும்பாடம். † அப்பொழுது மண்ணகந்திரிதல் முதலியவற்றின் அநுமானத்தால் ஸர்வம் விஷ்ணுமயம்ஜகத் என்றபடி உலகமுழுவதும் எம்பெருமானது சொரூபமாகவேயிருக்குமியல்பு அறியப்பட்டதென்க.

இராமன்கூறும் கோபவார்த்தை.

பெண்டனியொருத்திதன்னைப்பேதைவாளரக்கன்பற்றிக்
கொண்டனனேகநீயிக்கோளுறக்குலுங்கல்செல்லா
எண்டிசையிறுதியானவுலகங்களிவற்றையின்னே
கண்டவானவர்களோடுங்களையுமாறின்றுகாண்டி. (௨௦௪)

தாரகையுதிருமாறுந்தனிக்கதிர்பிதிருமாறும்
பேரகல்வானமெங்கும்பிறங்கெரிபிறக்குமாறும்
நீரொடுநிலனுங்காலுநின்றவுங்கிடந்தயாவும்
வேரொடுமிழியுமாறும்விண்ணவர்விளியுமாறும். (௨௦௫)

இக்கணமொன்றினின்றவேழினோடேழுசான்ற
மிக்கனபோன்றதோன்றுமுலகங்கள்விளியுமாறும்
திக்குடையண்டகோளப்புறத்தவுந்தீர்துநீரின்
மொக்குளினுடையுமாறுங்காணெனமுனியும்வேலை. (௨௦௬)

அப்பொழுது சூரியன்மறைய யாவும்அஞ்சுதல்.

வெஞ்சுடர்க்கடவுண்மீண்டுமேருவின்மறையலுற்றான்
எஞ்சலிறிசையினின்றயானையுமிரியல்போய
துஞ்சினவுலகமெல்லாமென்பதென்றுணிந்தநெஞ்சின்
அஞ்சினனிளையகோவுமயலுளோர்க்கவதியுண்டோ. (௨௦௭)

சடாயு இராமனுக்குக்கூறும் தணிவுரை.

இவ்வழிநிகழும்வேலையெருவைகட்கிறைவன்யாதும்
செவ்வியோய்முனியல்வாழிதேவருமுனிவர்தாமும்
வெல்வலிவீரநின்னால்வெல்லுமென்றேமுற்றுய்வார்
எவ்வலிகொண்டுவெல்வாரிராவணன்செயலையென்றான். (௨௦௮)

நாட்செய்தகமலத்தண்ணல்வினைநவையிலாற்றல்
தோட்செய்தவீரமென்னிற்கண்டனைசொல்லுமுண்டோ
தாட்செய்தகமலத்தானேமுதலினர்தலைபத்துள்ளாற்
காட்செய்கின்றார்களன்றியறஞ்செய்கின்றார்கள்யாரே. (௨௦௯)

தெண்டிரையுலகந்தன்னிற்செறுநர்மாட்டேவல்செய்து
பெண்டிரின்வாழ்வரன்றேயிதுவன்றேதேவர்பெற்றி
பண்டுலகளந்தோனல்கப்பாற்கடலமுதமந்நாள்
உண்டிலராயினிந்நாளன்னவர்க்குய்தலுண்டோ. (௨௧௦)

வம்பிழைகொங்கைவஞ்சிவனத்திடைத்தமியள்வைகக்
கொம்பிழைமானின்பின்போய்க்குலப்பழிகூட்டிக்கொண்டீர்
அம்பிழைவரிவிற்செங்கையயன்மீராயுங்காலை
உம்பிழையென்பதல்லாலுலகஞ்செய்பிழையுமுண்டோ. (௨௧௧)

ஆதலான்முனிவராயல்லையருந்ததியனையகற்பிற்
காதலாயோரநீக்கித்தேவர்தங்கருத்துமுற்றி
வேதநூன்முறையின் * யாவும்விதியுளிநிறுவிவேறும்
தீதுளதுடைத்தியென்றான்சேவடிக்கமலஞ்சேர்வான். (உகஉ)

இராமன் உலகத்தாற்மேற்கொண்ட கோபந்தணிதல்.

புயனிறவண்ணனுண்டப்புண்ணியன்புகன்றசொல்லைத்
தயரதன்பணியிதென்னச்சிந்தையிற்றழுவிநின்றான்
அயலினிமுனிவதென்னையரக்கரைவருக்கந்தீர்க்கும்
செயலினிச்செயவென்றெண்ணிக் † கண்ணியசீற்றந்தீர்த்தான். ()

பின்பு சடாயு உயிர்நீத்தல்.

ஆயபின்னமலன்றானுமையநீயமைதியென்ன
வாயிடைமொழிந்ததன்றிமற்றொருசெயலுமுண்டோ
போயதவ்வரக்கனெங்கேபுகலெனப்புள்ளின்வேந்தன்
ஓய்வினனுணர்வுந்தேயவுரைத்திலனுயிருந்தீர்ந்தான். (உகச)

சடாயு பரமபத மடைதல்.

சீதங்கொண்மலருளோனுந்தேவருமென்பதென்னே
வேதங்கள்காணகிலாமைவெளிநின்றமறையும்வீரன்
பாதங்கள்கண்ணிற்பார்த்தான்படிவங்கொணெடியபஞ்ச
பூதங்கள்விளியுநாளும்போக்கிலாவுலகம்புக்கான். (உகரு)

அப்பொழுதனைவருமிரங்கி சடாயுவைநன்குமதித்தல்.

வீடவனெய்தும்வேலைவிரிஞ்சனேமுதலமேலோர்
ஆடவர்க்கரசனோடுதம்பியுமழுதுசோரக்
காடமர்மரமுமாவுங்கற்களுங்கரைந்துசாய்ந்த
சேடரும்பாரினோர்க்குங்காஞ்சிரஞ்சேர்ந்தவன்றே. (உகசு)

பின்பு இராமன் தம்பியைநோக்கிக்கூறிய இரங்கன்மொழி.

அறந்தலைநின்றிலாதவரக்கனினாண்மைதீர்ந்தேன்
துறந்தனென்றவஞ்செய்கேனோதுறப்பெனோவுயிரைச்சொல்லாய்
பிறந்தனென்பெற்றநின்றபெற்றியார்பெற்றதாதை
இறந்தனனிருந்தேன்யானென்செய்கேனினையவென்றான். (உகஎ)

இலக்குமணன் அரக்கரையழித்தலே செய்தற்பாற்றென்றல்

என்றலுமிளையகோவவ்விறையினையிறைஞ்சியாண்டும்
வென்றியாய்விதியின்றன்மைபழியிலவிளைந்ததொன்றோ
நின்றினிநினைவதென்னைநெருக்கியவ்வரக்கர்தம்மைக்
கொன்றபினன்றோவெய்யகொடுந்துயர்குளிப்பதென்றான். (உகஅ)

---

* யாவும் என்றது உலகாளுதல் வேள்விசெய்தல் முதலியவற்றைக் குறிக்கும்.

† கண்ணுதல்-கருதுதல்.

எந்தைநீயம்பிற்றென்னையெண்மையனுகியேழைச்
சந்தவார்குழலினாளைத்துறந்தனைதணிதியேனும்
உந்தையையுயிர்கொண்டானையுயிருண்ணுமுற்றமில்லாச்
சிந்தையையாகிநின்று * செய்தவஞ்செய்கையென்றான். (உகக)

இராமன் இனிசடாயுவுக்குச் சரமக்கிரியைசெய்வோமென்றல்.

அவ்வழியிளவல்கூறவறிவறிவனுயர்வுநீங்கி
இவ்வழியினையவெண்ணினேழைமைப்பாலதென்று
வெவ்வழிபொழியுங்கண்ணீர்விலக்கினன்விளிந்ததாதை
செவ்வழியுரிமையாவுந்திருத்துவஞ்சிறவவென்றான். (உஉ0)

சடாயுவுக்கு இராமன் அந்திமக்கிரியைசெய்தல்.

இந்தனமெனையவென்னக்காரகிலிட்டுத்தோமில்
சந்தனங்குவித்துவேண்டுந்தருப்பையுந்திருத்திப்பூவும்
சிந்தினன்மணலின்வேதிதிர்தரவியற்றித்தெண்ணீர்
தந்தனன்றாதைதன்னைத்தடக்கையாலெடுத்துச்சார்வான். (உஉக)

ஏந்தினனிருகைதன்னுலேற்றினனீமந்தன்மேல்
சார்ந்தொருமலருநீருஞ்சொரிந்தனன்றலையின்சாரல்
காந்தெரிகனலமூட்டிக்கடன்முறைகடவாவண்ணம்
நேர்ந்தனனிரம்புநன்னூன்மந்திரநெறியின்வல்லான். (உஉஉ)

இளித்தனகளித்தமேனிதாமரைக்கெழுவுசெம்பூத்
துளித்தனவனையவென்னத்துன்னிச்சார்வெள்ளக்கண்ணன்
குளித்தனன்கொண்டலாற்றக்குளித்தபின்கொண்டகன்னீர்
அளித்தனனரக்கர்ச்செற்றநீற்றத்தானவலந்தீர்ந்தான் (உஉங)

மீட்டினியுரைப்பதென்னேவிரிஞ்சனேமுதலமோகீழ்
காட்டியவுமர்களெல்லாமருந்தினகளித்தபோலாம்
† பூட்டியகைகளாலப்புள்ளினுக்கரசைக்கொன்கென்
றாட்டியகன்னீரையனுண்டநீரொத்ததன்றே. (உஉச)

சூரியாஸ்தமனவருணனை.

பல்வகைத்துறையும்வேதப்பலிக்கடன்பலபூமுற்றி
வெல்வகைக்குமரனின்றவேலையின்வேலைசார்ந்தான்
தொல்வகைக்குலத்தின்வந்தான்றன்பத்தாற்புனலுந்தோய்ந்து
செல்வகைக்குரியவெல்லாஞ்செய்குவானென்னவெய்யோன். ()

அ-வது. சடாயுவுயிர்நீத்தபடலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-க0ஙக.

---

* செய்தவம் சிறந்ததவம், செய்தற்குரியதவம், அன்றி செவ்விய தவமுமாம். † பூட்டியகைகள் சேரவைத்த கைகள், சேர்ந்கை.

அயோமுகிப்படலம்.

இராமலக்குமணர் ஒருமலையிற்சேர்தலும் இருள்மிகுதலும்.

அந்திவந்தணுகும்வேலையவ்வழியவருநீங்கிச்
சிந்துரச்சென்னித்தாண்டோர்மைவரைச்சேர்கைகொண்டார்
இந்திரற்கடங்கல்செல்லாவிராக்கதரெழுந்ததென்ன
வெய்துயர்க்கூற்றமாயவிரியிருள்வீங்கிற்றன்றே (௧)

அவர்கள் அல்லிரவில் மிகப்பரிதபித்தல்.

தேனுகவருவிசிந்தித்தெருமாலுறவபோலக்
கானமுமலையுமெல்லாங்கண்ணினீருகுக்குங்கங்குல்
மானமுஞ்சினமுந்தாதைமரணமுமைந்தர்சிந்தை
ஞானமுந்துயருந்தம்முண்மலையெனநலிந்தவன்றே. (௨)

மெய்யுறவுணர்வுசெல்லாவறிவினைவினையினாக்கும்
பொய்யுறுபிறவிபோலப்போக்கரும்பொங்குகங்குல்
செய்யுறுநெருப்பின்வீங்கிமிர்தரவுயிர்ப்புநீளக்
கய்யறவுறுகின்றாராற்காணலாங்கரையிற்றன்றே. (௩)

இராமபிரான் அவ்விரவுமுழுவதுஞ் சிறிதுந்துயில்கோள்ளாமை.

யாமதுதெறிதறேற்றுமின்னைச்சனகியென்னும்
காமருதிருவைநீத்தோமுகமதிகாண்கிலாதோ
தேமருதெரியல்வீரன்கண்ணெனத்தெரிந்தசெய்ய
தாமரைகங்குல்போதுங்குவியலாத்தன்மையென்னே. (௪)

பெண்ணியற்றீபமன்னபேரெழிலாட்டிமாட்டு
நண்ணியபிரிவுசெய்த * நவையிலாநவையினுள்ளத்
தெண்ணியதறிதரேற்றுமிமைத்திலவிராமனென்னும்
புண்ணியன்கண்ணும்வன்றொட்டம்பிகண்போன்றவன்றே. (௫)

சந்திரோதயம்.

வண்டுளர்கோதைச்சீதைவாண்முகம்பொலியவானிற்
கண்டனென்னென்றவீரற்காங்கொருகாதல்காட்டத்
தண்டமிழ்த்தென்றலென்னுங்கோளராத்தவழுஞ்சாரல்
விண்டலம்விளங்குஞ்செவ்விவெண்மதிவிரிந்ததன்றே. (௬)

நிலவு இராமனை வருந்துதல்.

களியுடையநங்கக்கள்வன்கரந்துறைறகங்குற்காலம்
வெளிபடுத்துலகமெங்கும்விளக்கியநிலவின்வெள்ளம்

---

* நவையென்றது சீதையைப் பிரிந்தவருத்தம் தான் காப்பாற்றவேண்டியதருமபத்தினியைப் பிரிந்ததனால் வருந்துவது நியாயமே யென்பதை விளக்கநவையிலாவென்றஅடைமொழி அதற்குக்கொடுக்கப்பட்டது.

களியிருட்பிழம்பென்றீண்டுநெஞ்சொடுகலந்ததாகத்
தொளையெயிற்றாண்டலுற்றதாமெனச்சுட்டதன்றே. (எ)

இராமன் சீதையைநினைத்து வருந்துதல்.

இடம்படுமானத்துன்பமிருடரவெண்ணிற்றீர்ந்தான்
விடம்பரந்தனையதாயவெண்ணிலாவெதுப்பவீரன்
படம்பரந்தனையவல்குற்பால்பரந்தனையவின்சொற்
றடம்படுகண்ணினாடன்றனிமையைநினையலுற்றான். (அ)

வேறு.

மடித்தவாயன்வயங்குமுயிர்ப்பினன்
துடித்துவீங்கியொடுங்குறுதோளினன்
பொடித்ததண்டளிர்ப்பூவொடுமால்கரி
ஒடித்தகொம்பனையாடிறத்துன்னுவான். (கூ)

வாங்கும்வில்லன் * வரும்வருமென்றிரு
பாங்குநீணெறிபார்த்தனனோவெனும்
வீங்கும்வேலைவிரிதிரையாமென
ஓங்கியோங்கியொடுங்குமுயிர்ப்பினான். (க0)

தன்னினைந்திலனென்பதுசாலுமே
மின்னினைந்தவிலங்குமெயிற்றினான்
நின்னிலென்றுநெருங்கியபோதவள்
என்னினைந்தனளோவெனவெண்ணுமால். (கக)

கஞ்சகாணுநகைநெடுநோக்கத்தின்
வஞ்சவாயின்மதியெனமட்குவாள்
வெஞ்சினஞ்செயரக்கர்தம்வெம்மையை
அஞ்சினான்கொலென்றையுறுமாலென்பான். (கஉ)

பூண்டமானமும்போக்கருங்காதலும்
தூண்டநின்றிடைதோமுறுமாருயிர்
மீண்டுமீண்டுவெதுப்பவெதும்பினான்
வேண்டுமோவெனக்கின்னமும்வில்லென்பான்: (கஙு)

வில்லைநோக்கிநகுமிகவீங்குதோட்
கல்லைநோக்கிநகுங்கடைக்கால்வரும்
சொல்லைநோக்கித்துணுக்கெனுந்தொன்மறை
எல்லைநோக்கினர்யாவருநோக்குவான். (கச)

* வரும் வரும் என்ற அடுக்கு - தன்னை மீட்பதற்குஇராமன் வருவது நிச்சயமென்ற கருத்தை விளக்கிற்று.

கூதிர்வாடைவெங்கூற்றினைநோக்கினன்
வேதவேள்விதிமுறைமேவிய
சீதையென்வயிற்றீர்ந்தனளோவெனும்
* போதகம்மெனப்பொம்மெனுயிர்ப்பினான். (கரு)

நின்றுபல்லுயிர்காத்தற்குநேர்ந்தயான்
என்றனைக்குலமங்கையொரேந்திழை
தன்றுயர்க்குத்தகவிலனாயினேன்
நன்றுநன்றென்வலியெனநாணுமால். (கசு)

சாயுந்தம்பிதிருத்தியதண்டளிர்
தீயுமங்கவைதீர்கெனுஞ்செவ் † விருந்
தாயுமாவிபுழுங்கவழுங்குமால்
வாயுநெஞ்சுபுலரமயங்குவான். (கஎ)

பிரிந்தவேதுகொல்பேரபிமானங்கொல்
தெரிந்ததில்லைதிருமலர்க்கண்ணிமை
பொருந்தவாயிரங் ‡ கற்பங்கள்போக்குவான்
இருந்துகண்டிலன்கங்குலினீறரோ. (கஅ)

வென்றிவேற்கையிளவலைமேலெலாம்
ஒன்றுபோலவுலப்பிலநாள்கடாம்
நின்றுகாண்டியன்றேநெடுங்கங்குலான்
இன்றுநீள்வதற்கேதுவெனென்னுமால். (ககூ)

சந்திரோபாலம்பனம் (சந்திரனைப்பழித்தல்.)

நீண்டமாலைமதியினைநித்தமும்
மீண்டுமீண்டுமெலிந்தனைவெள்குவாய்
பூண்டபூணவள்வாண்முகம்போதர
ஈண்டுசாலவிளங்கினையென்னுமால். (உ0)

நீணிலாவினிசைநிறைதன்குலத்
தாணியாயபழிவரவன்னது
நாணிநாடுகெடந்தனனுங்கொலோ
சேணுலாந்தனித்தேரவனென்னுமால். (உக)

சுட்டகங்குனெடிதெனச்சோர்கின்றான்
முட்டமைந்தநெடு § முடக்கோனொடு

---

* போதகம்-யானைக்கன்று; பருவப்பெயராகாமல் யானையென்ற மாத்திரமாய் நின்றது. † விருந்து-புதுமை. ‡ கற்பம் பிரமனாயுள்.

§ சூரியன் சாரதியான அருணன் தொடையில்லாதவனாதலால் முடக்கோன் எனப்பட்டான். இதுபற்றி இவனுக்கு வடமொழியில் அநூரு என்று ஒருபெயர். இவன் கருடனது தமையன்.

கட்டிவாளரக்கன்கதிரோனையும்
இட்டனன்கொலிருஞ்சிறையென்னுமால். (உஉ)

துடியினேரிடைதோன்றலனாமெனிற்
கடியகாரிருட்கங்குலின்கற்பம்போய்
முடிவுமாகின்முடியுமிம்மூரிநீர்
நெடியமானிலமென்னநினைக்குமால். (உங)

திறத்திறைதன * செய்தவத்தோருற
ஒறுத்துளாலத்துயிர்தமையுண்டுழல்
மறத்தினர்கள்வலிந்தனர்வாழ்வரேல்
அறத்தினுலினியாவதெனென்னுமால். (உச)

மன்மதன்செயலைக் கூறுதல்.

தேனின்றெய்வத்திருநெடுகோட்சிலை
பூநின்றெய்யும்பொருகணைவீரனும்
மேனின்றெய்யவிமலனைநோக்கினன்
தானுந்தேர்கிலனுய்த்தமோறவான். (உரு)

உழந்தயோகத்தொருமுதல்கோபத்தால்
இழந்தமேனியுமெண்ணியிரங்கினன்
கெழுந்தகைக்கொருவன்மைகிடக்குமேல்
பழந்துயர்க்குப்பரிவுறும்பான்மையால். (உசு)

இரவுகழிதல்.

நீலமாயநிறத்தனினைப்பிடைச்
சூலமாகத்தொலைவுறுமெல்லையின்
மூலமா † மலர்முன்னவன்முற்றுறும்
காலமாமெனக்கங்குல்கழிந்ததே. (உஎ)

வேறு.

இராமன் வருத்தம்.

வெள்ளஞ்சிலம்புபாற்கடலின்விரும்புர்துயிலைவெறுத்தளியும்
கள்ளுஞ்சிலம்பும்பூங்கோதைகற்பின்கடலிற்படிவாற்குப்
புள்ளுஞ்சிலம்பும்பொழில்சிலம்பும்புனலுஞ்சிலம்பும்புனைகோலம்
உள்ளுஞ்சிலம்புஞ்சிலம்பாவாலுயிருண்டாகும்வகையுண்டோ. (உஅ)

மயிலும்பெடையுமுடன்றிரியமானுங்கலையுமருவிவரப்
பயிலும்பிடியும் ‡ கடகரியும்வருவதிரிவபார்க்கின்ருன்

---

* திறத்திறையினவென்றும் பாடம். † மலர்முன்னவன் முற்றுறுங் காலம்-பிரமகற்பம். இது இங்கு மீக்கநீட்சிக்கு உவமைகூறப்பட்டது.

‡ கடகரி-மதம்பிடித்தயானை; கடம்-கன்னம்; அதிலுண்டாகும் மதத்துக்கு இலக்கணை.

குயிலுங்கரும்புஞ்செழுந்தேனுங்குழலும்யாழுங்கொழும்பாகும்
அயிலுமமுதஞ்சுவைநீத்தமொழியைப்பிரிந்தாலழியானோ. (௨௯)

சூரியோதயம்.

முடிகாட்டியகோட்டுதயத்துமுற்றவுற்றான்முதுகங்குல்
விடிகாட்கண்டுக்கிளிமிழற்றுமென்சொற்கேளாவீரற்காண்
டடிகாட்செந்தாமரையொதுங்குமன்னமிலவளால்யானடைத்த
கடிகாட்கமலத்தெனவவிழ்த்துக்காட்டுவான்போற்கதிர்வெய்யோன். (௩௦)
பொழிலைநோக்கும்பொழிலுறையும்புள்ளைநோக்கும்பூங்கொம்பின்
எழிலைநோக்குமிளமயிலினியல்பைநோக்குமியல்பானுள்
குழலைநோக்கிக்கொங்கையிணைக்குவட்டைநோக்கியக்குவட்டின்
தொழிலைநோக்கித்தன்னுடையதோளைநோக்கிநாள்கழிப்பான். (௩௧)

இராமலக்ஷ்மணர் தேடிச்செல்லுதல்.

அன்னகாலையிளவீரனடியின்வணங்கிநெடியோயப்
பொன்னைநாடாதிண்டிருத்தல்பொருளோவென்னப்புகழோனும்
சொன்னவரக்கனிருக்குமிடந்தெரிவியறிதுந்தொடர்ந்தென்ன
மின்னுஞ்சிலையார்மலைதொடர்ந்தவெயில்வெங்கானம்போயினரால். (௩௨)

வேறு.

ஆகைசுமந்தநெடுங்கரியன்னார்
* பாசிலைதன்றுவனம்பலபின்னாக்
காசறுகுன்றினொடாறுகடந்தார்
யோசனையொன்பதொடொன்பதுசென்றார். (௩௩)
மட்படிசெய்ததவத்தினின்வந்த
கட்படிகோதையைநாடினர்காணார்
உட்படிகோபமுயிர்ப்பொடுபொங்கப்
புட்படியுங்குளிர் † கார்ப்பொழில்புக்கார். (௩௪)

சூரியனஸ்தமனம்.

ஆரியர்சிந்தையலக்கணறிந்தான்
காரியையெங்கணுநாடினனாடிப்
பேருலகெங்குமுழன்றனன்பின்னை
மேருவைவெங்கதிர்மீளமறைந்தான். (௩௫)

எங்குமிருள்மூடுதல்.

அரண்டருகுஞ்செறியஞ்சனபுஞ்சம்
முரண்டனபோலிருளெங்கணுமூந்தத்
தெருண்டறிவில்லவர்சிந்தையின்மூந்தி
இருண்டனமாதிரமெட்டுமிரண்டும். (௩௬)

* பாசிலை-பண்புப்பெயர் ஈறுபோய் ஆதிநீண்டது.
† கார்பொழில்-பெரியசோலை; மேகந்தவழும்சோலையுமாம்.

அவ்விருவரும் அந்த ஓர்பளிக்கறையில்தங்குதல்.

* இளிக்கறையின்சொலியையந்தனபூவை
கிளிக்கறையும்பொழில்கிஞ்சுகவேலி
ஒளிக்கறைமண்டிலமொத்துளதாங்கோர்
பளிக்கறைகண்டதில்வைகல்பயின்றார். (௩௭)

இராமன் கட்டளைப்படி இலக்குமணன் நீர்கோணரச்செல்லுதல்.

அவ்விடையெய்தியவண்ணலிராமன்
வெவ்விடைபோலிளவீரனைவீர
இவ்விடைநாடினைநீர்கொணர்கென்றான்
தெவ்விடைவில்லவனுந்தனிசென்றான். (௩௮)

அயோமுகி இலக்குமணனைக்கண்டு காமுறுதல்.

எங்கணுநாடினனீரிடைகாணான்
சிங்கமெனத்தமியன்றிரிவானை
அங்கவனத்து † அயோமுகியான
வெங்கணரக்கிவிரும்பினள்கண்டாள். (௩௯)

நன்மதியோர்புகன்மந்திரநாமச்
சொன்மதியாவரவிற்றொடர்கிற்பான்
தன்மதனோடுதன்வெம்மைதணித்தான்
மன்மதனுமிவனென்னுமனத்தாள். (௪0)

அழுந்தியசிந்தையரக்கியலக்கண்
எழுந்துயர்காயலின்வந்தெதிர்நின்றாள்
புழுங்குமென்னோவொடுபுல்லுவனென்றி
விழுங்குவெனோவெனவிம்மலுழன்றாள். (௪௧)

இரந்தனெனெய்தியபோதிசையாது
கரந்தனனேனனிகொண்டுகடந்தென்
‡ முரஞ்சினின்மேவிமுயங்குவெனென்று
விரைந்தெதிர்வந்தனடயினும்வெய்யாள். (௪௨)

அயோமுகியின்தன்மை.

உயிர்ப்பினெருப்புமிழ்கின்றனவொன்ற
எயிற்றின்மலைக்குலமென்றினிதுண்ணும்
வயிற்றுவயக்கொடுமோசுணம்வீசு
கயிற்றினிசைத்தமுலைக்குழிகண்ணாள். (௪௩)

---

* இளி-ஏழிசைகளிலொன்று. † அயோமுகிஎன்ற வடமொழிப்பெயர்இரும்பினாலாகியது போன்ற முகமுடையளென்றுபொருள்படும் முஞ்சு என்பது முரஞ்சஎன எதுகைநோக்கித் திரிந்தது. முரஞ்சுகுகை.

பற்றியகோளரியாளிபணிக்கண்
தெற்றிய * பாதசிலம்புசிலம்ப
இற்றனயாவையுமீறுறுமந்நாள்
முற்றியஞாயிறுபோலுமுகத்தாள். (௪௪)

ஆழிவறக்கமுகக்கவமைந்த
† மூழையெனப்பபொலிமொய்ம்பிலவாளாள்
கூழைபுறத்துவிரிந்ததொர்கொட்பால்
ஊழிநெருப்பினுருத்தனையொப்பாள். (௪௫)

தடிதடவத்தலைபலதழுவத்தாள்
நெடிதடையக்குடர்கெழுமுநிணத்தூண்
படிதடவப்பலபாவமிசைக்கும்
கடிதடவத்தினளுருமுகறிப்பாள். (௪௬)

இவையிறையொப்பனபென்னவிழிப்பாள்
அவைகுளிரக்கடிதழலுமெயிற்றாள்
குவைகுலையக்கடல்குவியவளைப்பாள்
நவையில்புவித்திருநாணநடப்பாள். (௪௭)

நீளரவெச்சரிதாழ்கைநிரைத்தாள்
ஆளரவப்புலியாரமணைத்தாள்
யாளினைப்பலதாலியிசைத்தாள்
கோளரியைக்கொடுதாழ்குழையிட்டாள். (௪௮)

இலக்குமணன் அயோமுகியைக் காணுதல்.

நின்றனளாவசயினீர்கலுழுங்கண்
குன்றிநிகர்ப்பகுளிர்ப்பவிழிப்பாள்
மின்றிரிகின்றவெயிற்றின்விளக்கால்
கன்றிருளிற்றிரிகோளரிகண்டான். (௪௯)

இலக்குமணன் அவளை யரக்கி என்றறிதல்.

பண்டையினாசியிழந்துபதைக்கும்
திண்டிறலாளொடுதாடகைசிராள்
கண்டகராயவரக்கர்கணத்தோர்
ஒண்டொடியாமிவளென்பதுணர்ந்தான். (௫௦)

இலக்குமணன் அயோமுகியை நீயாரென்றுவினவல்.

பாவியராமிவர்பண்பிலர்நம்பால்
மேவியகாரணம்வேறிலையென்பான்

---

* பாதசிலம்பு தரித்தாள் என்றும் பாடம். † மூழை முழையென்பதன் நீட்டல் மூழையென்றே கொண்டு அகப்பையென்று கூறினுமாம் மூழை முகலையுமாம்.

மாவியல்கானின்வயங்கிருள்வந்தாய்
யாவளடீயுரைசெய்கடிதென்றான். (௫௧)

அயோமுகிதான் வந்தகாரணத்தைக் கூறுதல்.

பேசினனங்கவள்பேசறநாணன்
ஊசலுழன்றழிசிந்தையளுந்தான்
நேசமிலன்பினளாயினுநின்பால்
ஆசையின்வந்தவயோமுகியென்றாள். (௫௨)

பின்னுமுரைப்பவள்பேரெழில்வீரா
முன்னமொருத்தர்தொடாமுலையோடும்
பொன்னின்மணித்தடமார்புபுணர்ந்தென்
இன்னுயிரைக்கடிதீகுதியென்றாள். (௫௩)

அவன் வேண்டுகையை இலக்குமணன் மறுத்தல்.

ஆறியசிந்தையளஃதுரைசெய்யச்
சீறியகோளரிகண்கள்சிவந்தான்
மாறிலவார்கணையிவ்வுரைவாயில்
கூறிடினின்னுடல்கூறிடுமென்றான். (௫௪)

அயோமுகி தலையேற்கைகூப்பி மீண்டு மிலக்குமணனை வேண்டுதல்.

மற்றவனவ்வுரைசெப்பமனத்தால்
செற்றிலள்கைத்துணைசென்னிபின்வைத்தாள்
கொற்றவநீயெனைவந்துயிர்கொள்ளப்
பெற்றிடி* னின்றுபிறந்தனெனென்றாள். (௫௫)

வெங்கதமில்லவள்பின்னருமேலோய்
இங்குசுறும்புணருதியேனுன்
அங்கையினுலெனையஞ்சலையென்றால்
கங்கையினீர்கொணர்வென்கடிதென்றாள். (௫௬)

இலக்குமணன் அயோமுகியை அச்சமுறுத்தல்.

சுமித்திரைசேயவள்சொன்னசொலன்ன
சமித்திலனின்னிருகாதொடுநாசி
துமிப்பதன்முன்பகலென்பதுசொல்ல
இமைத்திலனின்றனளின்னநினைந்தாள். (௫௭)

---

* பிறந்து வெகுநாளாயும்: பிறப்பெடுத்தற்குப் பயனாக இலக்குமணனைக்கூடாது: காலம் வீணேகழித்தமையாற் கீழ்ச்சென்ற காலங்களைப் பிறவாத நாளாகவேவைத்து அவனைக்கூடப்பெறும் அந்த நாளையேதான் புதிதாகப்பிறந்த நாளாகக்கருதி 'இன்றுபிறந்தனென்' என்றாள். இனி காமநோயால் இறந்ததுபோன்றுள்ள தனது உயிரை இவ்வீரனுடையசேர்க்கையாலேயே பெறுவதாக இவள் நினைத்தமையால் பிழைத்தது 'பிழைத்தது புநர்ஜன்மம்' என்றபடி 'இன்றுபிறந்தனென்' என்றாளுமாம்.

அயோமுகி இலக்குமணனை எடுத்துச்செல்லக் கருதுதல்.

எடுத்தனளேகினளென்முறை தன்னுள்
அடைத்திவன்வெம்மையகற்றியபின்னை
உடற்பமொடுடனேயுறாண்மை
திடத்திதுவேகலனென்றயல்சென்றாள். (௫௮)

அயோமுகி இலக்குமணனை எடுத்துச் செல்லுதல்.

மோகனையென்பதுமுந்திமுயன்றாள்
மாகநெடுங்கிரிபோலியைவெளவா
ஏகினளும்பரினிற்றுவொடேகும்
மேகமெனும்படிநொய்தினின் வெய்யாள். (௫௯)

மந்தரம்வேலையில்வந்ததும்வானத்
தந்திரனூர்பிடியென்னலுமானாள்
வெந்திறல்வேல்கொடுசூரடும்வீரச்
சுந்தரனூர்தருதோகையுமொத்தாள். (௬௦)

அயோமுகி இலக்குமணனைத் தழுவுதல்.

ஆங்கவண்மார்பொடுகையினடங்கிப்
பூங்கழல்வார்சிலைமீளிபொலிந்தான்
வீங்கியவெஞ்சினவீழ்மதவெம்போர்
ஓங்கலுரிக்குமுருத்திரனொத்தான். (௬௧)

இலக்குமணன் வராததுகண்டு இராமன் தேடத் தொடங்குதல்.

இப்படியேகினளன்னவளிப்பால்
அப்பிடைதேடிநடந்தவெனுவித்
துப்புடைமால்வரைதோன்றலனென்று
* வெப்புடைமெய்யுடைவீரன்விரைந்தான். (௬௨)

இராமன் இலக்குமணனைப்பற்றிப் பலவாறு சிந்தித்துவருந்துதல்.

வேறு.

வெய்தாகியகானிடைமேவருநீ
ரைதாதலினேவயலொன்றுளதோ
நொய்தாய்வரவேகமுநொய்திலனால்
எய்தாதொழியானிது வென்னை கொலாம். (௬௩)

நீர்கண்டனையிவ்வழிநேடினைபோய்ச்
சார்கொண்டெனவித்துணைசார்கிலனால்
வார்கொண்டணிகொங்கையைவெளவினர்பால்
போர்கொண்டனனோபொருளுண்டிதெனா. (௬௪)

---

* வெப்பு விரகதாபமும். தாகதாபமும், தம்பியைக்காணுமையா லா னதாபமும்.

அஞ்சொற்கிளியன்னவணங்கினைமுன்
வஞ்சித்தவிராவணன்வௌவினனே
நஞ்சிற்கொடியானடலைத்தொழிலால்
துஞ்சுற்றனனேவிதியின்றுணிவால் (சுரு)

வரிவிற்கையெனாருயிர்வந்திலனால்
தருசொற்கருதேனொருதையலையான்
பிரிவுற்றனனென்பதொர்பீழைபெருந்
தெரிவுற்றிடவாவியிழந்தனனே. (சுசு)

உண்டாகியகாரிருளோடொருவென்
கண்டானயல்வேறொருகண்ணிலனால்
புண்டானுறுநெஞ்சுபுழுங்குறுவென்
உண்டாணிலெனெங்ஙனநாடுகெனோ. (சுஎ)

தள்ளாவினையென்றனியாருயிராய்
உள்ளாயொருநீயுமொளித்தனையோ
பிள்ளாய்பெரியாய்பிழைசெய்தனையால்
கொள்ளாவுலகுன்னையிதோகொடிதே. (சுஅ)

பேராவிடர்வந்தனபேர்க்கவலாய்
தீராவிடர்தந்தனைதெவ்வர்தொழும்
வீராவெனையிங்ஙன்வெறுத்தனையோ
வாராய்புறமித்துணைவைகுதியோ. (சுகூ)

என்னைத்தருமெந்தையையென்னையரைப்
பொன்னைப்பொருகின்றபொலன்குழையாள்
தன்னைப்பிரிவேனுளனாவதுதான்
உன்னைப்பிரியாதவுயிர்ப்பலவோ. (எ0)

பொற்றோடிவர்கின்றபொலங்குழையாள்
தற்றேடிவருந்துதவம்புரிவேன்
நிற்றேடிவருந்தகிரப்பினையோ
வெற்றேடினைவந்தவிளங்களிறே. (எக)

இன்றேயிறவாதொழியேனெமரோ
பொன்றாதொழியார்புகல்வாருளரோ
ஒன்றாகியவுன்கிளையோரையெலாம்
கொன்றாய்கொடியாயிதுவுங்குணமோ. (எஉ)

மாந்தாமுதன்மன்னவர்தம்வழியில்
வேந்தாகைதுறந்தபின் * மெய்யுறவோர்

---

* 'மெய்யுறவோர் என்றது தந்தைதாய்முதலிய உள்ளன்புடைய சுற்றத்தாரை. தேகபந்துக்களென்ற பொருளில் மெய்யுறவோர் என்றுமாம்.

தந்தாமொழியத்தமியேனுடனே
போந்தாயெனைவிட்டனைபோயினையோ. (எங)

என்றாவுரையாவெழும்வீழுமிருந்
தன்றாருணர்வோய்வுறுமொன்றலவால்
மின்றாதிடியாதிருள்வாள்வினைவீ
தென்றாவெனுமென்றனிநாயகனே. (எச)

நாடும்பலசூழல்கடோறநடந்
தோடும்பெயர்சொல்லியுளைந்துயிர்போய்
வாடும்வகைசோருமயங்குறுமால்
ஆடுங்களுமாமதயானையனான். (எரு)

காமையாளொடுமென்னுயிர்காவலினின்
றிமையாதவனைத்துணைதாழ்வுறுமோ
சுமையாவுலகூடுழெறல்வினையேன்
அமையாதுகொல்வாழ்வறியேனெனுமால். (எசு)

இராமன் தற்கொலை செய்யத்துணிதல்.

அறப்பாலுளதேலவன்முன்னவனாய்ப்
பிறப்பானுறின்வந்துபிறக்கவெனா
மறப்பால்வடிவாள்கொடுமென்னுயிரைத்
துறப்பானுறுகின்றதொடர்ச்சியின்வாய். (எஎ)

இலக்குமணன் அயோமுகியை அங்கபங்கப்படுத்தல்.

பேர்ந்தானெனமோனையினிற்பிரியா
ஈர்ந்தானவணாசிபிடித்திளையோன்
சோர்ந்தாளிடுபூசல்செவித்தொளையில்
சேர்ந்தார்தலுமேதிருமாறெருளா. (எஅ)

வேறு.

இராமன் அக்குரலால் அரக்கியென்று துணிதல்.

பரற்றருகானகத்தரக்கர்பல்கழல்
முரற்றருவெஞ்சபமுரல்கின்றுறெதிர்
உரற்றியவோசையன்றெருத்தியூறுபட்
டரற்றியகுரலவளரக்கியேகொலாம். (எகூ)

இராமன் ஆக்கினே யாஸ்திரத்தையெடுத்து விடமுயலுதல்.

அங்கியினெடும்படைவாங்கியக்கது
செங்கையிற்கரியவன்றிரிக்குமெல்லையில்
பொங்கிருளப்புறத்துலகம்புக்கது
கங்குலும்பகலெனப்பொலிந்துகாட்டிற்றே. (அ0)

நெடுவரைபொடிபடசிவந்தமாமரம்
ஒடிவுறநிலமகளுலையலுங்கெலாம்
சடசடவெனுமொலிதழைப்பத்தாக்குமா
முடுகினனிராமன்வெங்காலின்மும்மையான். (அக)

இலக்குமணன்வந்த இராமனை வருந்தாதேயென்று சொல்லிக் கிட்ட இராமன் மகிழ்தல்.

ஒருங்குயர்த்துலகின்மேலூழிப்பேர்ச்சியுள்
கருங்கடல்வருவதேயனையகாட்சித்தன்
பெருந்துணைத்தம்முனைநோக்கிப்பின்னவன்
வருந்தலைவருந்தலைவள்ளியோயெனு. (அஉ)

வந்தனனடியனேன்வருந்தல்வாழிநின்
* அந்தமிலுள்ளமென்றறியக்கூறுவான்
சந்தமென்றளிர்புரைசரணஞ்சார்ந்தனன்
சிந்தினநயனம்வந்தனையசெய்கையான். (அங)

ஊற்றுறுகண்ணினீரொழுகநின்றவன்
ஏற்றிளங்கன்றினைப்பிரிவுற்றெங்கணும்
ஆற்றலினுற்றுவதரிதினெய்திய
பாற்றிளம்பான்முலையாவின்பான்மையான். (அச)

இராமன் இலக்குமணனைநோக்கி மனநெகிழ்தல்.

தழுவினன்புன்முறைதாரைக்கண்ணினீர்
கழுவினனுண்டவன் † கனகமேனியை
வழுவினையாமெனமனக்கொடேங்கினேன்
எழுவெனமலையெனவிலையந்ததோளினாய். (அரு)

என்னையக்கெய்தியதியம்புவாயென
அன்னவனஃதெலாமறியக்கூறலும்
இன்னலுமுவகையுமிரண்டுமெய்தினான்
தன்னலாதொருபொருடனுக்குமேலிலான், (அசு)

இராமன் இலக்குமணனைத் தேற்றுதல்.

ஆய்வுறுபெருங்கடலகத்துளேயவன்
பாய்திரைவருதொறும்பரிதற்பாலனும்
தீவினைப்பிறவிவெஞ்சிறையிற்பட்டயாம்
நோயுறுதுயரெனநடுங்கனேன்மையோ. (அஎ)

---

* அந்தமில் உள்ளம்-மயக்கமற்ற மனம், அழிவற்றமனமெனினுமாம்.
† கனகமேனி-சுவணவண்ணன்.

இராமன் இலக்குமணனைப் புனைந்து கூறுதல்.

*மூவகையமாருமுலகமூம்மையும்
மேவரும்பகையெனக்காகமேல்வரின்
ஏவரேகடப்பவரெம்பிநீயுளை
யாவதேவலியினியாணும்வேண்டுமோ.* (௮)

*பிரிபவர்யாவரும்பிரிகபேரிடர்
வருவனயாவையும்வருகவார்கழற்
செருவலிவீரநிற்றீருமல்லது
பருவடலென்வயிற்பயிலற்பாலதோ.* (௯)

இராமன் இலக்குமணனை நோக்கி அரக்கியைக் கோல்

லாமையைப்பற்றி வினவல்.

*வன்றொழில்வீரபோர்வலியரக்கியை
வென்றபோர்மீண்டனனென விளம்பினாய்
புன்றொழிலனையவள்புகன்றசீற்றத்தால்
கொன்றிலைபோலுமாற்கூறுவாயென்றான்.* (௧௦)

இலக்குமணன் மறுமொழிகூறல்.

*தொளைபடுமூக்கொடுசெவிதுமித்துகத்
தலைவயினிலொடுதடிந்துநீக்கிய
அளவையிற்பூசலிட்டாற்றினளென
இளையவன்விளம்பினின்றிருகைகூப்பினான்.* (௧௧)

இராமன்இலக்குமணனைத்தழுவுதல்.

*தொல்லிருடனைக்கொலத்தொடர்கின்றானையும்
கொல்லலாசியைக்கொய்துநீக்கினாய்
வல்லைநீ * மனுமுதன்மரபினாயெனப்
புல்லினனுவகையிற்பொருமிவிம்முவான்.* (௧௨)

இராமலக்குமணர் நீர்பருகி ஒருமலையில் தங்குதல்.

*போருந்துயரறப்பேர்ந்துளோரென
வீரனுந்தம்பியும்விடிவுகோக்குவார்
வாருணநினைந்தனர்வானநீரினால்
† தாரணித்தக்கொருகிரியிற்றங்கினார்.* (௧௩)

---

* மனு-சூரியனது மகன்; இவனே இச்சூரியகுலத்து அரசர்க்கெல்லாம் முதல்வன்; வைவசுவதமநுவெனப் பிரசித்திபெற்றவன்.

† தாரணித்தல்-உடம்புதரித்தல்

இராமன் பள்ளிகொள்ளல்.

கல்லகல் * வெள்ளிடைக்கானகத்துள
பல்லவமலர்கொடுபடுத்தபாயலின்
எல்லையிறுயரினோடிருந்துசாய்ந்தனன்
மெல்லடியிளையவன்வருடவீரனே. (௧௪)

இராமன் விரகவேதனையால் வருந்துதல்.

மயிலியல்பிரிந்தபின்மானநோயினால்
அயில்விலனொருபொருளவலமெய்தலால்
துயில்விலனென்பதுசொல்லற்பாலதோ
உயிர்கெடிதுயிர்ப்பிடையூசலாடுவோன். (௧௫)

இராமன் விரகதாபத்தால் வருந்திக்கூறல்.

மானவன்மெய்யிறைமறக்கலாமையின்
ஆனதோவன்றெனினரக்கர்மாயமோ
கானகமுழுவதுங்கண்ணினோக்குங்கால்
சானகிவுருவெனத்தோன்றுந்தன்மையே. (௧௬)

கருங்குழற்சேயரிக்கண்ணிற்கற்பினோர்க்
கருங்கலமருங்குவர்திருப்பவாசையால்
ஒருங்குறத்தழுவுவானொன்றுங்காண்கிலேன்
மருங்குல்போலானதோவடிவுமெல்லவே. (௧௭)

புண்டரிகப்புதுமலரிற்றேன்பொதி
தொண்டையஞ்சேயொளித்துவர்த்த † வாயமு
துண்டனனீண்டவளுழையனல்லனால்
கண்டுயிலன்றியுங்கனவுண்டாகுமோ. (௧௮)

மண்ணினும்வானினுமற்றைமூன்றினும்
எண்ணினும்பெரியதோரிடர்வந்தெய்தினால்
தண்ணறுங்கருங்குழற்சனகன்மாமகள்
கண்ணினுங்கொடியதோகொடியகங்குலே (௧௯)

சந்திரோபாலம்பனம்.

அப்புடையலங்குமீனமருமார்கலி
‡ உப்புடையிந்துவென்றுதித்த $ வூழித்தீ

---

* வெள்ளிடை-மேல்மறைவில்லாத இடம்.

† வாயமுது உண்ணல்-அதரபானம் பருகல்.

‡ உப்பு-அழகு. $ வூழித்தீ-பிரளயகாலத்தில் கடலினின்று வெளிக்கிளம்பி உலகத்தையழிக்கும் வடவாமுகாக்கினி.

வெப்புண்டவிரிகதிர்விரிப்பமெய்யெலாம்
கொப்புளம்பொடித்ததோகொதிக்கும்வானமே. (சுOO)

சூரியோதயம்.

இன்னனவின்னனபன்னியீடழி
மன்னவர்மன்னவன்மதிமயங்கினன்
அன்னதுகண்டனனல்கினனெனத்
துன்னியசெங்கதிர்ச்செல்வன்றோன்றினன். (சுOக)

கூ-வது. அயோமுகிப்படலம் முற்றிற்று.

ஆட திருவிருத்தம்-ககருஎ.

பத்தாவது

கவந்தன் படலம்.

இராமலக்ஷ்மணர் சீதையைத் தேடிச்செல்லுதல்.

நிலம்பொறையிலதெனநிமிர்ந்த * கற்பினள்
நலம்பொறைகூர்தருமயிலைநாடிய
அலம்புருபறவையுமழுவவாமெனப்
புலம்புறவிடியலிற்கடிதுபோயினர். (க)

வேறு.

இராமலக்ஷ்மணர்நடுப்பகலில் கவந்தவனமடைதல்.

ஐயைந்தடுத்தயோசனையினிரட்டியடவிபுடைபடுத்த
வையந்திரிந்தார்கதிரவனும்வானிறப்பண்வந்துற்றான்
எய்யுஞ்சிலக்கையிருவருஞ்சென்றிருந்தேநீட்டியெவ்வுயிரும்
கையின்வளைத்துவயிற்றடக்குங்கவந்தன்வனத்தின்கணுற்றார். ()

வேறு.

அக்கவந்தன் கையில் அகப்பட்டவற்றின் றன்மை.

எறுப்பினங்கடையுறயானையேமுதல்
உறுப்புடையுயிரெலாமுலைந்துசாய்ந்தன
வெறிப்புறநோக்கினவெருவுகின்றன
பறிப்பருவலையிடைப்பட்டபான்மைய (ங)

மாபுளிநிறுத்திலன்புரக்குநாண்டிலன்
உரனிலானொருவனுட்டுயிர்கள்போல்வன

---

* கற்பு-கணவனையே தெய்வமென்றுணர்தல்.

வெரிவுவசிந்துவகுவிவவிம்மலோ
டிரிவனமயங்குவவியல்புநோக்கினர். (௪)

‡ மால்வரையுருண்டனவருவமாமரம்
கால்பறிந்திடுவனகானயாறுகள்
மேலுளதிசையொடுவெளிசரப்பன
சூன்முதிர்மேகங்கள்சுருண்டுவீழ்வன. (௫)

இராமலக்ஷ்மணர் கவந்தன்கையில் அகப்படுதல்.

நாற்றிசைப்பரவையுமிறுதிநாளுறக்
காற்றிசைத்தெழுவெழுந்தலைகைக்கால்பரந்
தேற்றிசைதுறந்துவந்திடுங்குகின்றன
போற்றிசைசுற்றியகரத்துப்புக்குளார் (௬)

இராமலக்ஷ்மணர் கவந்தன்கைகளை அரக்கர்சேனையென்று
கருதிமகிழ்தல்.

தேமொழிதிறத்தினாலரக்கர்சேனைவந்
தேமுறவளைந்ததென்றுவகையெய்தினர்
கோமிமால்வரைவரநெருக்குகின்றதே
யாமெனலாயகைம்மதிட்குளாயினர். (௭)

இது அரக்கர்சேனையாதலால் அரக்கநகரநகிலுள்ளதுபோலுமென்று
இராமன் இலக்குமணனுக்குக் கூறுதல்.

இளவலைநோக்கினனிராமனேழையை
யுளைவுசெயிராவணனுறையுமூருமிவ்
வளவையதாகுதலறிதியையநம்
கிளர்பெருந்துயரமுங்கீண்டதாமென. (௮)

அரக்கர்சேனையன்றென்று இலக்குமணன்கூறுதல்.

முற்றியவரக்கர்தமுழங்குதானைமேல்
எற்றியமுரசொலியேங்குஞ்சங்கிசை
பெற்றிலதாகலிற்பிறிதொன்றுமெனச்
சொற்றனனிளையவன்றொழுதுமுன்னினான். (௯)

இலக்குமணன் இதுபெருநாகமாயிருக்கலாமென்று குறித்தல்.

தெள்ளியவமுதெழத்தேவர்வாங்கிய
வெள்ளெயிற்றரவந்தான்வேறோர்நாகந்தான்
தன்னருவாலொடுதலையினல்வளைத்
துன்னுறக்கவர்வதேயொக்குமூழியாய். (௰)

இக்குறியிட்ட மேன் மூன்றுகவிகளும் ஒரு தொடர்.

இருவரும் கவந்தனெதிரிற் செல்லுதல்.

என்றிவைவிளம்பிடவிளவல்வாசகம்
நன்றெனநினைந்தனனடந்தநாயகன்
ஒன்றிரண்டியோசனையுள்புக்கோங்கரு
ணின்றெனவிருந்தவக் * கவந்தனேர்சென்றார். (௧௧)

கவந்தனது தோற்றங்கூறல்.

வெயிற்சுடரிரண்டினைமேருமால்வரை
குயிற்றியவாமெனக்கொதிக்குங்கண்ணினன்
எயிற்றிடைக்கிடையிருகாதமீட்டிய
வயிற்றிடைவாயெனுமகரவேலையான். (௧௨)

ஈண்டியபுலவரோடவுண † ரிந்துவைத்
தீண்டியநெடுவரைத்தெய்வமத்தினைப்
பூண்டுயர்வடமிருபுடையும்வாங்கலின்
நீண்டெனக்கிடந்தனநிமிர்ந்தகையினான். (௧௩)

தொகைக்கனற்கருமகன்றுருத்தித்தூம்பெனப்
புகைக்கொடிகனலொடுபொடிக்குமூக்கினான்
டகைத்தகைநெடுங்கடற்பருகும்பாவகன்
சிகைக்கொழுந்திதுவெனத்திருகுநாவினான். (௧௪)

புரண்டுபோம்பிடைவரவெருவிப்புக்குறை
அரண்டனைநாடியோராருவிமால்வரை
முரண்டொகுமுழைநுழைமுழுவெண்டிங்களை
இரண்டுகூறிட்டெனவிலங்கெயிற்றினான். (௧௫)

ஓதநீர்மண்ணிவைமுதலவோதிய
பூதமோரைந்தினிற்பொருந்திற்றன்றியே
வேதநூன்வரன்முறைவிதிக்குமப்பெரும்
பாதகத்திரண்டுயிர்படைத்தபண்பினான். (௧௬)

வெய்யவெங்கதிர்களைவிழுங்குவெவ்வராச்
செய்தொழிலிலைதுயில்செவியின் ‡ றொள்ளையான்

---

* வயிற்றுக்குள் தலையடங்கியமைபற்றி கவந்தம்போலத் தோற்றமுடையவனாயிருந்ததனால் இவனுக்குக் கவந்தனென்று பெயர். கவந்தமென்ற வடசொல்லின் திரிபு இதற்கு-தலையற்றதும் தொழிலுடன் கூடியதுமான உடல் என்று பொருள். † இந்துவைத்தீண்டிய நெடுவரை-சந்திரனை அடைதூணாகக்கொண்ட பெரியமலை; உயர்ச்சியாற் சந்திரமண்டலத்தையளாவிய மலையென்றலும் ஒன்று. ‡ தொள்ளை-தொளை. தொளை-துளை.

பொய்கிளர்வன்மையிற்புரியும்புன்மையோர்
வைகுறுகரங்கயுகரும்வயிற்றினன். (கஎ)

முற்றியவுயிரெலாமுருங்கவாரித்தான்
பற்றியகரத்தினன் பணைத்தபண்ணையிற்
றற்றியபுகுதருந்தோற்றத்தால்யமன்
கொற்றவாய்தற்செயல்குறித்தவாயினன். (கஅ)

ஓலமார்கடலெனமுழங்குமோதையான்
ஆலமேயெனவிருண்டழன்றவாக்கையான்
நீலமாநேமியிற்றலையைநீக்கிய
காலநேமியிற்பெருங்கவந்தக்காட்சியான். (கக)

இராமலக்ஷ்மணர் கவந்தனைக்காணுதல்.

தாக்கியதனைப்பில்காலெறியத்தன்னுடை
மேக்குயர்கொடுமுடியிழந்தமேருநேர்
ஆக்கையினிருந்தவன் றன்னையவ்வழி
நோக்கினரிருவருநுணங்குகேள்வியார். (உ0)

இராமலக்ஷ்மணர் கவந்தன்வாயைக் காணுதல்.

நீர்புகுநெடுங்கடலடங்குநேமிசூழ்
பார்புகுநெடும்பகுவாயைப்பார்த்தனர்
சூர்புகலரியதோராக்கர்தொன்மதில்
ஊர்புகுவாயிலோவிதுவென் றன்னினார். (உக)

இலக்ஷ்மணன் கவந்தனைப் பூதமென்றுகருதிக் கவலைகொண்டு
இராமனிடங்கூறல்.

அவ்வழியிளையவனமர்ந்துநோக்கிய
வெவ்வியதொருபெரும்பூதம்வில்வளாய்
வவ்வியதன்கையின்வளைத்துவாய்ப்பெயும்
செய்வதெனிவணெனச்செம்மல்சொல்லுவான். (உஉ)

இராமன் இலக்ஷ்மணனை நோக்கிக்கூறல்.

* பாரிடமேயிதுபரவைசுற்றுறும்
† பாரிடமரிதெனப்பரந்தமெய்யது
பாரிடம்வலம்வரப்பாக்தகையது
‡ பாரிடர்தெடுத்தமாவனையபாழியாய். (உங)

---

* பாரிடம்-பூதம். † பாரிடம் என்பது பரு இடம் என்று பிரிந்து அகவிடம் என்றபொருள்படும். ‡ பாரிடம் பூமி.

தோகையும்பிரிந்தனளெந்தைதுஞ்சினன்
வேகவெம்பழிசுமந்துழலவேண்டலேன்
ஆதலின்யானினியிதனுக்காமிட
மேகுதியீண்டுநின்றிளவலேயென்றான். (௨௪)

ஈன்றவரிடர்பரவெம்பிதுன்புறச்
சான்றவர்துயருறப்பழிக்குஞ்சார்வுமாய்த்
தோன்றலினென்னுயிர்துறந்தபோதலால்
ஊன்றியபெரும்பழிதுடைக்கவொண்ணுமோ. (௨௫)

இல்லியல்புடையநீரளித்தவின்சொலாம்
வல்லியிவ்வரக்கர்தம்மனையுளாளெனச்
சொல்லிநன்மலையெனச்சுமந்ததூணியென்
வில்லினென்செல்வனேமிதிலைவேந்தன்பால். (௨௬)

தலையவிழ்கோதையைத்தாங்கலாற்றலென்
இளைபுரிந்தளித்தன்மேலிவர்ந்தகாதலேன்
உளனெனவுரைத்தலினும்பரானென
விளைதனன்றாதலின்விளிதனன்றென்றான். (௨௭)

வேறு.

இலக்குமணன் மறுமொழி.

ஆண்டானின்னனபன்னிடவையற்கிளைவீரன்
ஈண்டியானுன்பின்னேகியபின்னிவ்விடர்வந்து
மூண்டான்முன்னேயாருயிரோடுமுடியாதே
மீண்டபோதற்காமெனினன்றென்வினையென்றான். (௨௮)

என்றானென்னுப்பின்னுமிசைப்பானிடர்தன்னை
வென்றான்றேவீரர்களாவார் * விரவாரின்
தன்றாய்தந்தைதம்முனெனுந்தன்மையர்முன்னே
பொன்றானென்றானீங்குவதன்றேபுகழம்மா. (௨௯)

மானேயன்னுடன்றொடுதம்முன்வரையாரும்
கானேவைகக்கண்டுயில்கொள்ளாதயல்வாத்தற்
காணுனென்னேயென்றவர்முன்னேயவரின்றித்
தானேவந்தானென்றலின்வேறோர்தவறுண்டோ (௩௦)

என்றாயுன்முன்னேவியயாவுமிசையின்னல்
பின்றாதெய்திப்பேரிசையாளற்கழிவுண்டேல்
பொன்றாமுன்னம்பொன்றுதியென்றானுரைபொய்யா
நின்றாலன்றோநிற்பதுவாய்மைநிலையம்மா. (௩௧)

* விரவார்-தன்னோடு கலவாதவர்; எனவே பகைவர்.

எற்பெற்றாளும்யானுமெனைத்தோர்வகையாலு
நிற்பெற்றாட்குநிற்கினைப்புப்பிழையாமல்
நற்பொற்றோளாய்நல்லவர்பேணாநனிநிற்குஞ்
சொற்பெற்றான்மற்றாருயிர்பேணித்துறவேமால். (௩௨)

ஓதுங்காலப்பல்பொருண்முற்றுற்றொருவாத
வேதஞ்சொல்லுந்தேவரும்வீயுங்கடைவீயாய்
* மாதங்கந்தின்றாய்ந்திவ்வனத்தின்றலைவாழும்
பூதங்கொல்லப்பொன்றுதிபோலும்பொருளுண்டோ. (௩௩)

கேட்டார்கொள்ளார்கண்டவர்பேணார்கிளர்போரில்
தோட்டார்கோதைச்சோர்குழறன்னைத்துவளாமல்
மீட்டானென்னும்பேரிசைகொள்ளான்செருவெல்ல
மாட்டான்மாண்டானென்றபின்மேலும்வசையுண்டோ. (௩௪)

தணிக்குந்தன்மைத்தன்றெனினன்றித்தகைவாளால்
கணிக்குத்தன்மைத்தல்லவிடத்திற்கனல்பூதம்
பிணிக்குங்கையும்பெய்யிலவாயும்பிழையாமல்
துணிக்கும்வண்ணங்காணுதிதுன்பந்துறவென்றான். (௩௫)

இராமலக்ஷ்மணர் கவந்தனிடத்தில் ஒருவரினும் ஒருவர் முற்பட்டுச் செல்லுதல்.

என்றுமுன்னேசொல்லுமினங்கோ † விறையோற்கு
முன்னேசெல்லமுன்னவன்றானினுமுந்தத்
தன்னேரில்லாந்தம்பிதடுப்பான்பிறரில்லை
யன்றேகண்டாரும்பருவெய்துற்றழுதாரால். (௩௬)

வேறு.

யாரென்று கவந்தன்கேட்க இருவருங்கோபங்கொள்ளுதல்.

இனையராகியவிருவருமுகத்திருகண்போற்
கனையும்வார்கழல்வீரர்சென்றணுகலுங்கவந்தன்
வினையினெய்தியவீரர்நீர்யாவர்கொலென்ன
நினையுநெஞ்சினரிமைத்திலருருத்தனர்நின்றார். (௩௭)

இராமலக்ஷ்மணர் கவந்தனது தோள்களை வெட்டித்தள்ளுதல்.

அழிந்துளாராலரிகழ்ந்தனரென்னையென்றழன்றான்
பொழிந்தகோபத்தன்புதுப்பொறிமயிர்ப்புறம்பொடிப்ப
விழுங்குவேனெனவீங்கலும்வின்னுறவீரர்
எழுந்ததோள்களைவாள்களாலரிந்தனரிட்டார். (௩௮)

---

* மாதங்கம் யானை; மதங்கமுனிவரிடத்தினின்று உண்டானதென்றபொருள். † இறையோன் கடவுள் இதற்கு (யாவர் மனத்திலுந்) தங்கு இறைவனென்று பொருள்; இறுத்தல்-தங்குதல் இறைமையுடையோனென்றுமாம் இறைமை-தலைமை.

கைகளற்று கவந்தனது தோற்றம்.

கைகளற்றுகுருதியாறொழுகியகவந்தன்
மெய்யின்மேற்கொடுகிழக்குறப்பெருகதிவிரவும்
சையமாநெடுந்தாழ்வரைத்தனிவரைதன்னோ
டையம்நீங்கியபேரெழிலுவமையனானான். (௩௯)

அரக்கவுருவை யொழித்துக் கவந்தன்
நல்லுருப்பெற்று ஆகாயத்தில்விளங்குதல்.

ஆழநாயகனம்மை யிற்றீண்டியவதனால்
மூளுஞ்சாபத்தின்முந்தியதீவினைமுடித்தான்
தோளும்வாங்கியதோமுடையாக்கையைத்துறவா
நீளநீங்கியபறவையின்விண்ணுறநிமிர்ந்தான். (௪0)

கவந்தன் ஆகாயத்தி னின்று இராமனைத்துதித்தல்.

விண்ணினின்றவன் * விரிஞ்சனேமுதலினர்யார்க்கும்
கண்ணினின்றவனிவனெனக்கருத்துறவுணர்வான்
எண்ணிலன்னவன்குணங்களைவாய்திறந்திசைத்தான்
† புண்ணியம்பயக்கின்றழியரியதெப்பொருளே. (௪௧)

வேறு.

ஈன்றவனோவெப்பொருளுமெல்லைதீர்நல்லறத்தின்
சான்றவனோதேவர்தவத்தின்றனிப்பயனோ
மூன்றுகடவாய்மூளைத்தெழுந்தமூலமோ
தோன்றியிருவினையென்சாபத்திடர்தொடைத்தாய். (௪௨)

‡ மூலமேயில்லாமுதல்வனேநீமுயலும்
கோலமேயார்க்குந்தெரிவரியகொள்கைத்தால்
ஆலமோவாலினடையோவடைகிடந்த
பாலனோவாதிப்பரனோபகராயே. (௪௩)

காண்பார்க்குங்காணப்படுபொருட்குங்கண்ணாகிப்
பூண்பாய்போல்நிற்றியால்யாதொன்றும்பூணாய்
மாண்பாலுலகையயிற்றொளித்துவாங்குதியால்
ஆண்பாலோபெண்பாலோவப்பாலோவெப்பாலோ. (௪௪)

---

* விரிஞ்சன்-பூதங்களைப் படைக்கிறவனென்றும் (அன்னப்)பறவையால் தாங்கப்படுகிறவனென்றும்அவையவப்பொருள். † புண்ணியமாவது பகவானுடைய அநுக்கிரகம். ‡ மூலமேயில்லா முதல்வனே யாவும்உன்னிடத்தினின்றுதோன்றினவேயன்றி நீ ஒன்றினின்றுந்தோன்றாதவன் என்பது கருத்து.

ஆதிப்பிரமனுநீயாதிப்பரமனுநீ
ஒதியுறபொருளுக்கப்பாலுண்டாயினுநீ
சோதிச்சுடர்ப்பிழம்புநீயென்றுசொல்லுகின்ற
வேதமுறைசெய்தால்வென்காரோவேறுள்ளார். (௪௫)

எண்டிசையுந்திண்சுவராவேழேழ்நிலைவகுத்த
வண்டப்பெருங்கோயிற்கெல்லாமழகுடைய
மண்டலங்கண்மூன்றின்மே * லென்றுமலராத
புண்டரிகமொட்டின்பொருட்டேபுரையம்மா. (௪௬)

மண்பாலமரர்வரம்பருங்காணாத
வெண்பாலுயர்ந்தவெரியோங்குநல்வேள்வி
யுண்பாய்நீயூட்டுவாய்நீயிரண்டுமொக்கின்ற
பண்பாரறிவார்பகராய் † பரமேட்டி (௪௭)

நிற்குநெடுநீத்தநீரின்முளைத்தெழுந்த
மொக்குளேபோலமுரணிற்றவண்டங்கள்
ஒக்கவுயர்ந்துனுளேதோன்றியொளிக்கின்ற
பக்கமறிதற்கெளிதோபரம்பரனே. (௪௮)

நின்செய்கைகண்டுநினைந்தனவோநீண்மறைகள்
உன்செய்கையன்னவைதான்சொன்னவொழுக்கினவோ
என்செய்தேன்முன்னமறஞ்செய்கையெய்தினார்
பின்செல்வதில்லாப்பெருஞ்செல்வநீதந்தாய். (௪௯)

மாயப்பிறவிமயனீக்கிமாசிலாக்
காயத்தைநல்கித்துயரின்கரையேற்றிப்
பேயொத்தேன்பேதப்பிணக்கறுத்தவெம்பெருமான்
காயொத்தேனென்னகலனிழைத்தேனென்றான். (௫௦)

ஆகாயத்தில் திவ்வியசரீரத்தோடு நின்றகவந்தனைஇராமன்காணுதல்.

என்றான்கினிதியம்பியின்றறியக்கூறுவனேல்
ஒன்றாதுதேவருறுதிக்கெனவுன்னாத்
தன்றாயைக்கண்ணுற்றகன்றனையதன்மையனாய்
நின்றானைக்கண்டானெறிநின்றார்கோர்நின்றான். (௫௧)

* என்று மலராத-எப்பொழுதும் மலராத, சூரியனால் மலராததுமாம் என்று-சூரியன்: பெயர்ச்சொல்.

† பரமேஷ்டி-பரமே எல்லாவுலகத்தினுஞ் சிறந்ததாகிய பரமபதத்தில், ஸ்தி-இருப்பவனென்பது பொருள்.

இராமன் இலக்குமணனுக்குக் கவந்தனைச் சுட்டிக்காட்ட அவன் கவந்தனை நீயாரென்று வினவல்.

பாராயினை யவனே பட்டவிவன்வேறேயோர்
பேருளன்றானுமொளியோங்கும்பெற்றியனாய்
சோராகாயத்தின்மிசைநிற்கின்றானீயிவனை
யாராமெனவவனுமார்கொலோநீயென்றான். (௫௨)

வே று.

கவந்தன் வரலாறு கூறுதல்.

சந்தப்பூணலங்கல்வீரதனுவெனுநாமத்தேனோர்
கந்தர்ப்பன்சாபத்தாலிக்கடைப்படுபிறவிகண்டேன்
வந்துற்றீர்மலர்க்கைதீண்டமுன்னுடைவடிவம்பெற்றேன்
எந்தைக்குமெந்தைநீரேயிசைப்பதுகேண்மினென்றான். (௫௩)

கவந்தன் இராமலக்ஷ்மணரை நோக்கி உங்களுக்குத் துணை வேண்டும் என்றல்.

கணையுலாஞ்சிலையினீரைக்காக்குநரின்மையேனும்
இணையிலாடன்னைநாடற்கேயனசெய்தற்கேற்கும்
புணையிலாதவற்குவேலைபோக்கரிதன்னதேபோற்
றுணையிலாதவர்க்குமின்னுபகைப்புலந்தொலைத்துநீக்கல். (௫௪)

பழிப்பறுநிலைமையாண்மைபகர்வதென்பதுமபீடத்
துழிப்பெருந்தகைமைசான்றவர்தணனுயிர்த்தவெல்லாம்
அழிப்பதற்கொருவனானவண்ணலுமறிதிரன்றே
ஒழிப்பருந்திறல்பல்பூதகணத்தொடுமுறையுமுண்மை. (௫௫)

கவந்தன் சீதையைத்தேட நல்லுபாயஞ் சொல்லுதல்.

ஆயதுசெய்கையென்பதறத்துறைநெறியினெண்ணித்
தீயவர்ச்சேர்க்கிலாதுசெவ்வியோர்ச்சேர்த்துச்செய்தல்
தாயினுமுயிர்க்குநல்குஞ்சவரியைத்தலைப்பட்டன்னா
*ளேயதோர்நெறியினெய்தி * யிரலையின்குன்றமேறி.* (௫௬)

கதிரவன்சிறுவனாயகனகவாணிறத்தினானை
எதிரெதிர்தழுவிநட்பினினிதமர்ந்தவனினீண்ட

---

* இரலையின் குன்றம்-ருசியமுக பருவதம். ருச்யமுகம் என்னும் வடமொழிபெயர்க்கு-கலைமான்கள் ஒலியாமல் வாழப்பெறும் மலை என்று பொருள். அப்பெயர்க்கு ஞாபகமாக அதில் ருசியம் என்னும் முதல்மொழியின் பொருளை மாத்திரம்எடுத்துக்கொண்டு அம்மலையை இரலையின்குன்றம் என்று குறித்தார். இது நாமைகதேசே நாமக்கிரகணத்தின் பாற்படும்- இரலை-கலைமான்.

வெதிர்பொருந்தோளினுனைநாடுதல்விழுமிதென்றான்
அதிர்கழல்வீரர்தாமுமன்னதேயமைவதானார். (௫எ)

கவந்தன் செல்ல இராமலக்ஷ்மணர் அன்றிரவில்
மதங்காச்சிரமம் அடைதல்.

ஆனவன்றொழுதுவாழ்த்தியந்தரமெழுந்துபோனான்
மானவக்குமார்தாமுமத்திசைவழிக்கொண்டேகிக்
கானமுமலையுநீங்கிக்கங்குல்வந்திறத்தகாலை
யானையினிரட்டையென்னமதங்கனதிருக்கைசேர்ந்தார். (௫அ)

௧௦-வது. கவந்தன்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-௧௧௭௧.

பதினொராவது

சவரிபிறப்பு நீங்குபடலம்.

மதங்காச்சிரம வர்ணனை

கண்ணியதருதற்கொத்தகற்பகதருவுமென்ன
உண்ணியநல்குஞ்செல்வமுமுறாநறுஞ்சோலைஞாலம்
எண்ணியவின்பமன்றித்துன்பங்களில்லையான
புண்ணியம்புரிந்தோர்வைகுந்துறக்கமேபோன்றதன்றே. (௧)

இராமன் சவரியைக் கண்டு க்ஷேமம் விசாரித்தல்.

அன்னதாமிருக்கைநண்ணியாண்டுநின்றளவில்காலத்
தன்னையேநினைந்துநோற்குஞ் † சவரியைத்தலைப்பட்டன்னாட்
கின்னுரையருளித்தீதின்றிருந்தனைபோலுமென்றான்
முன்னிவற்கிதுவென்றெண்ணலாவதோர்மூலமில்லான். (௨)

சவரி இராமனுக்கு விருந்துசெய்துபசரித்தல்.

ஆண்டவனன்பினேத்தியழுதிழியருவிக்கண்ணள்
மாண்டதென்மாயப்பாசம்வந்ததுவரம்பில்காலம்
பூண்டமாதவத்தின்செல்வம்போயதுபிறவியென்பாள்
வேண்டியகொணர்ந்துநல்கவிருந்துசெய்திருந்தவேலை. (௩)

பிரமன்முதலியோர் தன்னைத் தத்தம் உலகிற்கு வரும்படி
அழைத்தனரென்று சவரிகூறுதல்.

ஈசனுங்கமலத்தோனுமிமையவர்யாருமெந்தை
வாசவன்றானுமீண்டுவந்தனர்மகிழ்ந்துநோக்கி

† சவரி-இவள்மதங்கரது சிஷ்யர்களுக்கு உபசாரஞ்செய்துகொண்டு அவ்வாச்சிரமத்திலேயே வசித்து வந்த துறவறம் பூண்ட ஓர் தவப்பெண்.

ஆசறுதவத்திற்கெல்லையணுகியதிராமற்காய
பூசனைவிரும்பியெம்பாற்போதுதியென்றுபோனார். (௫)

சவரிஇராமனைப்புகழ இராமன் அவளைநோக்கிமுகமன்கூறல்

இருந்தனனெனக்கைநீயீண்டெய்துதியென்னுந்தன்மை
பொருந்திடவின்றுதானென்புண்ணியம்பூத்ததென்ன
அருந்தவத்தரசிதன்னையன்புறநோக்கிநங்கள்
வருந்துறுதுயரந்தீர்த்தாயம்மனைவாழியென்றார். (௬)

சவரி அவர்களுக்குச் சுக்கிரீவனுள்ள விடத்துக்குச் செல்லும் வழியைக்கூறுதல்.

அனகனுமிளையகோவுமன்றவணுறைந்தபின்றை
வினையறுகோன்பினளுமெய்ம்மையிறேக்கிவெய்ய
துனைபரித்தேரோன்மைந்தனிருந்தவத்துளக்கில்குன்ற
நினைவரிதாயற்கொத்தநெறியெலாநினைந்துசொன்னாள். (௭)

சவரி கூறினவற்றை இராமன் கேட்டல்.

வீட்டினுக்கமைவதானமெய்ந்நெறிவெளியிற்றாகக்
காட்டுறுமறிஞரென்னவன்னவள்கழறிற்றெல்லாங்
கேட்டனனென்பமன்றேகேள்வியாற்செவிகண்முற்றுந்
தோட்டவருணர்வினுண்ணுமமுதத்தின்சுவையாய்நின்றான். (௮)

சவரிமுத்தியடைய இராமலக்ஷ்மணர் அப்பாற்செல்லுதல்.

பின்னவளுமன்றுபெற்றயோகத்தின்பெற்றியாலே
தன்னுடலுறந்துதானத்தனிமையினினிதுசார்ந்தா
ளன்னதுகண்டவீரரதிசயமளவின்றெய்திப்
பொன்னடிக்கழல்களார்ப்பப்புகன்றமாநெறியிற்போனார். (௯)

இராமலக்ஷ்மணர் பம்பைப் பொய்கையை யடைதல்.

தண்ணெனுங்கானுங்குன்றுந்திசைகளுந்தவிரப்போனார்
மண்ணிடைவைகறோறும்வரம்பிலாமாக்களாடக்
கண்ணியவினைகளென்னுங்கட்டழல்கதுவலாலே
புண்ணியமுருகிற்றன்னபம்பையாம் * பொய்கைபுக்கார். (௧௦)

௧௧-வது சவரிபிறப்பு நீங்குபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௨௦௫

ஆரணியகாண்டம்.

முற்றுப்பெற்றது.

* பொய்கை-மானிடராக்காத நீர் நிலை.

ஆரணியகாண்டம்

படலங்களின் அட்டவணை.

க - வது.		விராதன்வதைப்படலம்	-	-	பக்கம்.	ங
உ.	,,	சரபங்கர் பிறப்புநீங்குபடலம்	-	-	,,	கஉ
ங.	,,	அகத்தியப்படலம்	-	-	,,	கஅ
ச.	,,	சடாயுகாண்படலம்	-	-	,,	உக
ரு.	,,	சூர்ப்பணகைப்படலம்	-	-	,,	ஙஉ
சு.	,,	கரன்வதைப்படலம்	-	-	,,	ரு0
எ.	,,	மாரீசன்வதைப்படலம்	-	-	,,	எச
அ.	,,	சடாயுவுயிர்நீத்தபடலம்	-	-	,,	கக0
கூ.	,,	அயோமுகிப்படலம்	-	-	,,	கசஉ
க0.	,,	கவந்தன்படலம்	-	-	,,	கருசு
கக.	,,	சவரிபிறப்புநீங்குபடலம்	-	-	,,	கசுரு

ஸ்ரீ

ஸ்ரீமத்வாவராமுநயேநம:

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

நான்காவது,

கிட்கிந்தாகாண்டம்.

தெய்வப்புலமைக்

கம்பநாட்டாழ்வார்

அருளிச்செய்தது.

இஃது

சென்னை இராசதானி வித்தியாசாலைத்

தமிழ்த்தலைமைப் புலமை நடாத்திய

இயற்றமிழாசிரியர்

கோ - இராசகோபால பிள்ளையவர்கள்

மாணாக்கரும்

சென்னை வேப்பேரி எஸ் - பி - ஜி - ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதருமாகிய

திருமயிலை - சண்முகம்பிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு

பிருங்கிமாநகரம்

வேம்புலிமுதலியாரவர்கள் குமாரர்

நமசிவாயமுதலியாரவர்களால்

தமது

சென்னை - சூளை

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

ஹரிஓம்

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ மத் கம்ப ராமாயணம்.

நான்காவது

கிட்கிந்தாகாண்டம்.

முதலாவது - பம்பாநதிப்படலம்.

தனியன்.

தரலாற்றுங்கவிச்சக்கரவர்த்திசெய்யுடாளுமுடைமைநோக்கி
* வரலாற்றுமுறையின்மும்மைத்தமிழுணர்ந்தமுதியோருமற்றனோரும்
முரலாற்றுங்கடற்பாரிற்கம்பருத்திரமுதசொன்மொழிபவன்றேற்
கெரலாற்றுமால்சங்கமொக்குமெனின்யாம்வேறொப்பியம்பலாமால்.

காப்பு.

மூன்றுருவெனக்குணமும்மையாமுதற்
றோன்றுருவெவையுமிம்முதலைச்சொல்லுதற்
கேன்றுருவமைந்தவுமிடையினின்றவர்
சான்றுருவுணர்வினுக்குலகந்தாயினான். (௧)

நூல்.

இதுமுதலிருபத்தொரு பாடல் பம்பையின்வருணனை.

தேன்படிமலரதுசெங்கண்வேங்கைமாத்
தான்படிகின்றதுதெளிவுசான்றது
மீன்படிமேகமும்படிந்துவேலைநீர்
வான்படிந்துலகிடைக்கிடந்தமாண்பது. (௨)

ஊர்ந்தநுண்பளிங்கெனத்தெளிந்தவீர்ம்புனல்
பேர்த்தொளிர்நவமணிபடர்ந்த † பித்திகை
சேர்ந்துழிச்சேர்ந்துழிநிறத்தைச்சேர்தலான்
ஓர்ந்துணர்வில்லவருள்ளமொப்பது. (௩)

குவான்மணித்தடத்தொறும்பவளக்காலிவர்
கவானரசன்னமும்பெடையுங்காண்டலில்
தவாநெடுங்கோளொடுந்தயங்குமீனொடும்
உவாமதியுலப்பிலவுதித்ததொப்பது. (௪)

---

* வரலாற்று முறையாவது அகத்தியன் வழிவந்த அருந்தமிழ்க் கலைகளை முதுமொழிப் பெரும்புலவர் மாட்டேப்புலமை நிரம்புங்காறும் பயிறல்.
† பித்திகை-கரை,

ஓதநீருலகமுமுயிர்கள்யாவையும்
வேதபாரகரையும்விதிப்பவேட்டான்
சீதம்வீங்கு * வரியைச்செருக்கும்வாறொரு
காதிகாதலன் றருகடலினன்னது. (௫)

எற்பொருநாகர்தமிருக்கையீதெனத்
இற்பதோர்காட்சியதெளினுங்கீழுறக்
கற்பகமனையவுக்கவிஞர்நாட்டிய
சொற்பொருளாமெனத்தோன்றல்சான்றது. (௬)

களவிலன்னமேமுதலகண்ணகன்
தளமலர்ப்புள்ளொடுதயங்கவின்னதோர்
இளவியென்றறிவருங்கிளர்ச்சித்தாதலான்
வளநகர்க் † கூலமேபோலுமாண்பது. (௭)

அரிமலர்ப்பங்கயத்தன்னமெங்கணும்
புரிகுழல்புக்கிடம்புகல்கிலாமையாம்
திருமுகநோக்கலமிறந்துதீர்துமென்
றெரிபுகுவனவெனத்தோன்றுமீட்டது. (௮)

காசடைவிளக்கியகாட்சித்தாயினும்
மாசடைபேதைமையிடைமயக்கலான்
ஆசடைநல்லுணர்வனையதாமெனப்
பாசடைவயின்றொறும்பரந்தபண்பது. (௯)

களிப்படாமனத்தவன்காணிற்கற்பெனும்
இளிப்படாமொழியவள்விழியின்கேளெனத்
துளிப்படாநயனங்கடுளிப்பச்சோருமென்
‡ றொளிப்படாதாயிடையொளிக்குமீனது. (௧௦)

கழைபடுமுத்தமுங்கலுழிக்கார்மத
மழைபடுதாளமுமணியும்வாரிநேர்
இழைபடர்ந்தனையநீருவியெய்தலான்
குழைபடுமுகத்தியர்கோலமொப்பது. (௧௧)

பொங்குவெங்கடகரிபொருவினுடலின்
கங்குலினெதிர்பொருகலவிப்பூசலின்
அங்கணொர்தலசியவிலையினுய்வனை
மங்கையவர்வடிவெனவருந்துமெய்யது. (௧௨)

விண்டொடர்நெடுவரைத்தேனும்வேழத்தின்
வண்டொடர்நறுமதமழையுமண்டலான்

* உவரி-கடல். † கூலம்-கடைவீதி. ‡ ஒளிப்படாது-விளங்காமல்.

உண்டவர்பெருங்களியுறவிளைஞியர்
தொண்டையங்கனியிதழ்த்தோன்றல்சான்றது. (௧௩)

ஆரியமுதலியபதினெண்பாடையிற்
* பூரியரொருவழிபுகுந்தபோன்றன
ஓர்கிலகிளவிகளொன்றொடொப்பில
சோர்விலவிளம்புபுட்டுவன்றுகின்றது. (௧௪)

தானுயிருறத்தனிதழுவும்பேடையை
ஊனுயிர்பிரிந்தெனப்பிரிந்தவோதிமம்
வானரமகளிர்தம்வயங்குநூபுரத்
தேனுகுமழலையைச்செவியினேற்பது. (௧௫)

ஈறிடலரியமால்வரைநின்றீர்த்திழி
ஆறிடுவிரையகிலாரமாதியா
ஊறிடவொண்ணகருரைத்தவொண்டளச்
சேறிடு † பாணியிற்றிகழுநோரது. (௧௬)

வேறு.

நவ்விநோக்கியரிதழ்நிகர்குமுதத்துநறுந்தேன்
வவ்வுமாந்தரிற்களிமயக்குறுவன ‡ மகரம்
எவ்வநீங்கியபிறப்பினோடிறப்பிலையென்னக்
கவ்வுமீனொடுமுழுகுவவெழுவன $ கரண்டம். (௧௭)

கவளயானையன்னாற்கந்தக்கடிநறுங்கமலத்
தவளையீகிலமாவதுசெய்துமென்றருளித்
திவளவன்னங்கடிருநடைகாட்டுவ,செங்கண்
குவளைகாட்டுவதுவரிதழ்காட்டுவகுமுதம். (௧௮)

பெய்கலன்களினிலங்கொளிமருங்கொடுபிறழ
வய்கலும்புனல்குடைபவர்வானரமகளிர்
¶ செய்கையன்னங்களேந்தியசேடியரென்னப்
பொய்கையன்னங்களேந்தியபூங்கொம்பர்பொலிய. (௧௯)

எலுநீர்நிழலிடையிடையெறித்தலிற்படிகம்
போலும்வார்புனல்புகுந்துளவாமெனப்பொங்கி
ஆலுமீன்கணமஞ்சினவலம்வரவஞ்சிக்
§ கூலமாமரத்திருஞ்சிறைபுலர்த்துவகுரண்டம். (௨௰)

அங்கொர்பாகத்தினஞ்சனமணிநிழலடையப்
பங்குபெற்றொளிர்பதுமராகத்தொளிபரப்பக்

---

* பூரியர்-இழிஞர். மிக்கோருமாம். † பாணி நீர். ‡ மகரம்-ஓர்மீன்.
$ கரண்டம்-நீர்க்காகம். ¶ செய்கையன்னம்-அன்னப்பாவை.
§ கூலம் - கரை.

கங்குலும்பகலுமெனப்பொலிவெய்துகரைய
மங்கைமார்தடமுலையெனப்பொலிவன * வாளம். (உக)

வலிநடத்தியவாளெனவாளைகள்பாய
நிலைநடத்தியதிரைதொறுமுருள்வனநீர்நாய்
கலிநடைக் † கழைக்கண்ணுளரெனநடங்கவினப்
பொலிவுடைத்தெனத்தேரைகள்புகழ்வனபோலும். (உஉ)

இராமன்பம்பையைக்கண்டு சானகியைநினைந்து புலம்புதல்.

அன்னதாகியவகன்புனற்பொய்கையையணுகிக்
கன்னியன்னமுங்கமலமுமுதலியகண்டான்
தன்னினீங்கியதளிரியற்குருகினன்றளர்வான்
உன்னுநல்லுணர்வொடுங்கிடப்புலம்பிடலுற்றான். (உங)

வேறு.

வரியார்மணிக்கால்வாளமேமடவன்னங்காளெனைநீய்கத்
தரியாணடந்தாளில்லலேற்றளர்ந்தபோதுந்தகவேயாம்
எரியாநின்றவாருயிருக்கிரங்கிலீதிசையன்றோ
பிரியாதிருந்தேற்கொருமாற்றம்பேசிற் ‡ பூசல்பெரிதாமோ. (உச)

வண்ணநறுந்தாமரைமலரும்வாசக்குவளைநாண்மலரும்
புண்ணினெரியுமொருநெஞ்சம்பொதியுமருந்திற்றரும்பொய்காய்
கண்ணுமுகமுங்காட்டுவாய்வடிவுமொருகாற்காட்டாயோ
உண்ணுமென்னினஃதுதவாது $ லோவினருமுயர்ந்தாரோ. (உரு)

விரிந்தகுவளைசேதாம்பல்விரைமென்கமலங்கொடிவள்ளை
தரங்கங்கெண்டைவராலாமையென்றித்தகையதமைநோக்கி
மருந்தினனையாளவயங்களவைநிற்கண்டேன்வல்லரக்கன்
அருந்தியகல்வான்சிந்தினவோவாவியுரைத்தியாமன்றே. (உசா)

ஓடாநின்றகளிமயிலேசாயற்கொதுங்கியுள்ளழிந்து
கூடாதாரிற்றிரிகின்றநீயுமாகங்குளிர்ந்தாயோ
தேடாநின்றவென்னுயிரைத்தெரியக்கண்டாய்சிந்தையுவந்
தாடாநின்றாயாயிரங்கணுடையாய்க்கொளிக்குமாறுண்டோ. (உஎ)

§ அடையீரெனினுமொருமாற்றமறிந்ததுரையீரன்னத்தின்
பெடையீரொன்றும்பேசீரோபிழையாதாற்குப்பிழைத்தீரோ
நடைநீரழியச்செய்தாரேநவிலாதார்நனியவரோ
கொடையீர்பனைதானுமைநோக்கிரிவக்குன்றேனைமுனிவீரோ. (உஅ)

* வாளம்- சக்ரவாளப்பறவை கழிக்கூத்தர்.
‡ பூசல்- இரைசல். $ உலோவினர் - உலோபகுணமுடையார்.
§ அடையீரெனினும்-அடைகாத்திருப்பவராயினும்,

பொன்பால்பொருவும்விரையல்லிபூல்லிப்பொலிந்தபொலந்தாது
தன்பாற்றழுவுங்குழல்வண்டு * தமிழ்ப்பாட்டிசைக்குந்தாமரையே
என்பாலில்லையப்பாலோவிருப்பாரல்லர்விருப்புடைய
உன்பாலில்லையென்றக்காலொளிப்பாரோடுமுறவுண்டோ. (௨௯)

ஒருவாசகத்தைவாய்திறந்திட்டுதவாய்பொய்கையுள்ளோடுங்கும்
திருவாயனையசேதாம்பற்கயலேகிடந்தசெங்கிடையே
வெருவாவெதிர்நின்றமுதுயிர்க்கும்வீழிச்செவ்விக்கொழுங்கனிவாய்
தருவாயவ்வாயின்னமிழ்தந்தண்ணென்மொழியுந்தாராயோ. (௩௦)

அலக்கணுற்றேற்குற்றதவற்கடைவுண்டொன்றோகொடிவள்ளாய்
மலர்க்கொம்பனையமடைச்சிதைகாதேமற்றொன்றில்லையால்
பொலக்குண்டலமுங்கொடுங்குழையும்புனைதாழ்முத்தின்பொற்றோடும்
விலக்கிவந்தாய்விளம்பாதேயின்னும்பூசல்விரும்புதியோ. (௩௧)

பஞ்சுபூத்தவிரற்பதுமம்பவளம்பூத்தவடிவாளென்
னெஞ்சுபூத்ததாமரையினிலயம்பூத்தாணிறம்பூத்த
மஞ்சுபூத்தமலர்பூத்தகுழலாள்கண்போன்மணிக்குவளாய்
கஞ்சுபூத்ததாலென்னநகுவாயென்னைகலிவாயோ. (௩௨)

வேறு.

என்றயாவுயிர்க்கின்றவனேடவிழ்
கொன்றையாவிப்புறத்திவைகூறியான்
பொன்றயாதும்புகல்கிலேபோலுமால்
வன்றயாவிலியென்னவருந்தினான். (௩௩)

வாரனித்தலைமாப்பிடிவாயிடைக்
காரனிக்கலுழிக்கருங்கைம்மலை
நீரளிப்பதுநோக்கினனின்றனன்
பேரளிக்குப்பிறந்தவில்லாயினான். (௩௪)

இளையோனிராமனை நீராடிநெடியோற்றேழுகென்றல்.

ஆண்டவள்ளலையன்பெனுமாரனி
பூண்டதம்பிபொழுதுகழிந்ததால்
ஈண்டரும்பினறேய்ந்துன்னிசையென
நீண்டவன்கழறாழ்கெடியோயென்றான். (௩௫)

ஸ்ரீராமன்பம்பையின்மூழ்குதல்,

அரசுமவ்வழிநின்றரிதெய்தியத்
திரைசெய்தீர்த்தமுஞ்செய்தவவுண்மையால்
வரைசெய்மாமதவாரணநாணுற
விரைசெய்பூம்புனலாடினமேயினான். (௩௬)

* தமிழ்ப்பாட்டு-இனிமையானபாட்டு.

நீத்தநீரினெடியவன்மூழ்கலும்
தீத்தகாமத்தெறுகதிர்த்தீயினால்
* காய்த்திரும்பைக்கருமகக்கம்மியன்
தோய்த்ததண்புனலொத்ததத்தோயமே. (௧௭)

வேறு.

சூரியனத்தமித்தல்.

ஆடினானன்னமாயருமறைகள்பாடினான்
நீடுநீர்முன்னைநாளெறிமுறையி † னேமிதாள்
சூடினான்முனிவர்தந்தொகுதிசேர்சோலைவாய்
மாடுதான்வைகினானெரிகதிரும்வைகினான். (௧௮)

சந்திரனுதித்தல்.

அந்தியாள்வந்துதானணுகவங்கணுகுறாச்
சந்தவார்கொங்கையாடனிமைதனிநாயகன்
சிந்தியாநொந்துதேய்பொழுதுதெறுசீதநீர்
இந்துவானுந்துவானெரிகதிரினானென. (௧௯)

வேறு.

அனைத்துயிரு மொடுங்கல்

பூவொடுங்கினவிரவுபுள்ளொடுங்கினபொழில்கள்
மாவொடுங்கினமானுமிலையொடுங்கினகிளிகள்
நாவொடுங்கினமயில்கணடமொடுங்கினகுயில்கள்
கூவொடுங்கினபிளிறுகுரலொடுங்கினகளிறு. (௨0

அனைத்துயிருமுறங்கல்.

மண்டுயின்றனநிலையமலைதுயின்றனமறுவில்
பண்டுயின்றனவிரவுபணிதுயின்றனபகரும்
விண்டுயின்றன † கழுதும்விழிதுயின்றனபழுதில்
கண்டுயின்றலநெடியகடறுயின்றனகளிறு. (௨௧)

இரவுநீங்குதல்.

பொங்கிமுற்றியவுணர்வுபுணர்தலும்புகையினூடு
பங்கமுற்றனையவினைபரிவுறும்படிமுடிவில்
கங்குலிற்றதுகமலமுகமெடுத்ததுகடலின்
வெங்கதிர்க்கடவுளெழ § விமலன்வெந்துயரினெழ. (௨௨)

---

* காய்த்து-காய்ச்சு. எதுகைநயனோக்கிச் சகாரந்தகரமாகின்றதென்ப
† நேமி-ஈண்டு சந்தியாகாலத்தையுடைய சூரியனென்று பொருள்.
† கழுது-பிசாசு. § விமலன்-அழுக்கில்லாதவனான இராமன்.

பம்பைக்கரையினின்றும் இராமனுமிளையோனுஞ்
சீதையை நாடிப்போதல்.

காலையேகடிதுவரவேகினர்கடல்கவினு
சோலையேமலைதழுவுகானநெறிதொலைய
ஆலையெய்துழனியகளுடாரார்கலியமிழ்து
போலவேயுரைசெய்புனமானைநாடுதல்புரிஞர், (௪௧)

௧ - பம்பர்நதிப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௪௪.

இரண்டாவது.

அநுமப்படலம்.

இராமனுமிளையோனும் வானரரிருந்தமலையேறுதலு மவரஞ்சுதலும்.

எய்தினர்சவரிநேடிதேயமால்வரையெளிதின்
நொய்தினேறினரதனிலோன்மைசேர் * கவியரசு
செய்வதோர்கிலனிவர்கடெவ்வராமெனவெருவி
உய்துமாமெனவிரைவினோடினன்மலைமுழையின். (௧)

காலின்மாமதலையிவர்காண்மினோகறுவுடைய
வாலியேவலின்வரவினர்கடாம்வரிசிலையர்
நீலமால்வரையனையர்நீதியாயவினைதியென
† மூலமோர்சிலர்மறுகியோடினர்முழையதனின். (௨)

தாரனீலனைமருவுதாமமாருதியைமுதல்
வீரரோடிரவிசுதன்மேருமால்வரையைநிகர்
பாரமாமலையிலொருபாகமோடுதல்புரிய
ஆரமார்பருமதனினுகுமாறுறல்கருதி. (௩)

மானைநாடுதல்புரிஞர்வாலியேவலின்வருதல்
ஆனவாறெனமறுகியாவிசோர்நிலையர்தொடர்
ஏனைவானரர்சிலருமேகிமாமுழையின்முழு
ஞானநாதரையறிவினுடிமாருதிமொழியும். (௪)

அவ்விடத்தவர்மறுகியஞ்சிநெஞ்சழியமைதி
வெவ்விடத்தினைமறுகுதேவர்தானவர்வெருவல்
‡ தவ்விடத்தினிதருளுந்தாழ்சடைக்கடவுளென
இவ்விடத்திடையிருமினஞ்சலென்றிடையுதவி. (௫)

---

* கவியரசு சுக்ரீவன். † மூலம்-காரணம். ‡ தவ்விடத்து கொண்டவிடத்து.

அஞ்சனைக்கொருசிறுவனஞ்சனக்கிரியனைய
மஞ்சனைக்குறுகியொரு * மாணவப்படிவமொடு
வெஞ்சினத்தொழிலர்தவமெய்யர்கைச்சிலையரென
நெஞ்சயிர்த்தயன்மறையநின்றுகற்பினினினையும். (௬)

† தேவருக்கொருதலைவராமுதற்றேவரெனின்
மூவர்மற்றிவரிருவர்மூரிவிற்கரரிவரை
யாவரொப்பவருலகின்யாதிவர்க்கரியபொருள்
கேவலத்திவர்நிலைமைதேர்வதெக்கிழமைகொடு. (௭)

சிந்தையிற்சிறிதுதுயர்சேர்வுறத்தெருமரலின்
நொந்தையர்தனரனையர்நோவுயச்சிறியரலர்
அந்தரத்தமரரலர்மானுடப்படிவர்மயர்
சிந்தனைக்குரியபொருடேடுதற்குறுநிலையர். (௮)

தருமமுந்தகவுமிவர்தனமெனுந்தகையரிவர்
கருமமும்பிறிதொர்பொருள்கருதியன்றதுகருதின்
அருமருந்தனையதிடையழிவுவந்துளததனை
இருமருங்கினுநெடிதுதருவுகின்றனரிவர்கள். (௯)

கதமெனும்பொதுமையிலர்கருணியின்கடலனையர்
இதமெனும்பொருளலதொரியல்புணர்ந்திலரிவர்கள்
‡ சதமனஞ்சுறுநிலையர்தருமனஞ்சுறுசரிதர்
மதனனஞ்சுறுவடிவர்மறலியஞ்சுறுவிறலர். (௧௦)

வேறு.

என்பனபலவுமெண்ணியிருவரையெய்தநோக்கி
அன்பினனுருகுகின்றவுள்ளத்தனார்வத்தோரை
முன்பிரிந்தனையர்தம்மைமுன்னினானென்னநின்றான்
தன்பெருங்குணத்தாற்றன்னிற்றானலதொப்பிலாதான். (௧௧)

தன்கன்றுகண்டவன்னதன்மையதறுகட்பேழ்வாய்
மின்கன்னுமெயிற்றுக் § கோண்மாவேங்கையென்றினையவேயும்
பின்சென்றுகாதல்கூரப்பேழ்கணித்திரங்குகின்ற
என்கன்றுகின்றவெண்ணிற்பற்பலவிவரையம்மா. (௧௨)

மயின்முதற்பறவையெல்லாமணிநிறத்திவர்கண்மேனி
வெயிலுறற்கிரங்கிமீதாவிருஞ்சிறைப்பந்தர்வீசி
எயில்வகுத்தெய்துகின்றவினமுகிர்கணங்களெங்கும்
பயில்வுறத்திவலைசிந்திப்பயப்பயத்தழுவும்பாங்கர். (௧௩)

---

* மாணவப்படிவம் பிரமசாரியுருவம். † தேவர்க்கொரு தலைவராகிய முதற்றேவராவார் அயனரியதினென்பார். ‡ சதமன் இந்திரன். சதமன்யுவென்பது சதமனெனநின்றது. § கோண்மாவேங்கை கொலையினையுடைய பெரிய வேங்கை.

காயெரிகனலுங்கற்கள்களுடைமலர்களேபோல்
தூயசெங்கமலபாதந்தோய்தொறுங்குழைந்ததோன்றும்
போயினதிசைகடோறுமரனொடுபுல்லுமெல்லாம்
சாய்வுறுந்தொழுவபோலிங்கிவர்களோதருமமாவார். (௧௪)

துன்புனைத்துடைத்துமாயத்தொல்வினைதன்னைநீக்கித்
தென்புலத்தன்றமீளாநெறியுய்க்குந்தேவரோதாம்
என்பெனக்குருகின்றதிவர்கின்றதளவில்காதம்
அன்பினுக் * கவதியில்லையடைவென்கொலறிதறேற்றேன். (௧௫)

இவ்வழியெண்ணியாண்டவ்விருவருமெய்தலோடும்
செவ்வழியுள்ளத்தானுந்தெரிவுறவெதிர்சென்றெய்திக்
கவ்வையின்றாகநுங்கள்வரவெனக்கருணையோனும்
எவ்வழிநீங்குயோய்நீயாரெனவிளம்பலுற்றான். (௧௬)

அனுமான் தன்வரலாறுகூறல்.

மஞ்செனத்திரண்டகோலமேனியமகளிர்க்கெல்லாம்
நஞ்செனத்தகையவாகிநளிரிரும்பனிக்குத்தேம்பாக்
கஞ்சமொத்தலர்ந்தசெய்யகண்ணையான் † காற்றின்வேந்தற்
கஞ்சனைவயிற்றில்வந்தேனுமமுமநுமனென்றான். (௧௭)

இம்மலையிருந்துவாழுமெரிகதிர்ப் ‡ பரிதிச்செல்வன்
செம்மலுக்கேவல்செய்வேன்றேவநும்வரவுநோக்கி
விம்மலுற்றனையானேவவினவியவந்தேனென்றான்
எம்மலைக்குலமுந்தாழவிசைசுமந்தெழுந்ததோளான். (௧௮)

மாற்றமஃதுரைத்தலோடும்வரிசிலைக்குரிசின்மைந்தன்
தேற்றமுற்றிவனினூங்குச்செவ்வியோரின்மைதேறி
ஆற்றலுநிறைவுங்கல்வியமைதியுமறிவுமென்னும்
வேற்றுமையிவனோடில்லையாமெனவிளம்பலுற்றான். (௧௯)

இராமனிளையவனிடமனுமான்சொல்லாற்றலை
வியந்துகூறல்

இல்லாதவுலகத்தெங்குமிங்கிவனிசைகள்கூரக்
கல்லாதகலையும்வேதக்கடலுமேயென்னும் § காட்சி
சொல்லாலேதோன்றிற்றன்றேயார்கொலிச்சொல்லின்செல்வன்
வில்லார்தோளிளையவீரவிரிஞ்சனோவிடைவல்லானோ. (௨௦)

§ மாணியாம்படிவமன்றுமற்றிவன்வடிவமைந்த
ஆணியிவ்வுலகுக்கெல்லாமென்னலாமாற்றற்கேற்ற

---

* அவதி-எல்லை † காற்றின்வேந்தன்-வாயுதேவன். ‡ பரிதிச்செல்வன் செம்மல் சூரியகுமாரனான சுக்கிரீவன். § காட்சி-அற்புதம் § மாணி-பிரமசாரி.

சேணுயர்பெருமைதன்னைச்சிக்கறத்தெளிந்தேன்பின்னர்க்
காணுதிமெய்ம்மையென்றுதம்பிக்குக்கழறிக்கண்ணன். (௨௧)

மற்றுமிவ்வுலகத்துள்ளமுனிவர்வானவர்களாரிச்
சொற்றிறமுடையார்மற்றைச்சுருதியின்றொகுதியாவும்
முற்றறிதருமிம்மாணிமொழிக்கெதிர்முதல்வராய
பெற்றியிர்மூவர்க்கேயும்போற்றலரிதுமன்றே. (௨௨)

அனுமனைச் சுக்கிரீவனைக்காட்டென வீராமன்கேட்டல்

எவ்வழியிருந்தானசொன்னகவிக்குலத்தரசன்யாங்கள்
அவ்வழியவனைக்காணு * மருத்தியாலணுகவந்தேம்
இவ்வழிநின்னைநிற்றவெமக்குநீயின்சொலன்ன
செவ்வழியுள்ளத்தோனைக்காட்டுதிதெரியவென்றான். (௨௩)

அவ்வாறுயிற் சுக்கிரீவன்தவச்செல்வ நல்லதென்றல்.

மாதிரப்பொருப்போடோங்கிவரம்பிலாவுலகின்மற்றிப்
† பூதரப்புயத்துவீரர்நும்மொக்கும்புனிதர்யாரே
ஆதரித்தவனைக்காண்டற்கணுகினிரென்னினன்றன்
நீதவித்தமையைச்செய்தவச்செல்வநன்றே. (௨௪)

இரவிதன்புதல்வன்றன்னை ‡ யிந்திரன்புதல்வனென்னும்
¶ பரிவிலன்சீறப்போந்துபருவரற்கொருவனாகி
அருவியங்குன்றினொன்றேடிருந்தனனவன்பாற்செல்வம்
வருவதோரமைவின்வந்தீர்வரையினும்வளர்ந்ததோளீர். (௨௫)

அஞ்சினார்க்கபயஞ் மளித்தலே சிறந்ததென்னல்.

ஓங்கலிலுலகம்யாவுமுவந்தனவுதவிவேள்வி
தொடங்கினமற்றுமுற்றத்தொல்லறந்துணிவரன்றேல்
கொடுங்குலப்பகைஞனாகிக்கொல்லியவந்தகூற்றை
அஞ்சினர்க்கபயநல்குமதனினுநல்லதுண்டோ. (௨௬)

எம்மையேகாத்திரென்றற்கெளிதரோவிமைப்பிலதோர்
தம்மையேமுதலிட்டான்றசராசரஞ்சமைந்தவாற்றல்
மும்மையேயுலகுங்காக்குமுதல்வர்நீர்முருகர்செவ்வி
உம்மையேபுகல்புக்கேமுக்கி § தின்வருமுறுதியுண்டோ. (௨௭)

யாரெனவிளம்புகேனெங்குலத்தலைவற்கும்மை
வீரநீர்பணித்திரென்றான்மெய்ம்மையின்வேலிபோல்வான்
வார்கழலிளையவீரன்மரபுளிவாய்மையாதும்
சோர்விலனிலைமையெல்லாந்தெரிவுறச்சொல்லலுற்றான். (௨௮)

---

* அருத்தி-விருப்பம். † பூதரம்-மலை ‡ இந்திரன்-புதல்வன் வாலி.
¶ பரிவு - அன்பு § இதின்-இதனினும்.

இதுமுதல் நான்குபாடல் இளையோனநுமானுக்கு இராமன் வரலாறுரைத்தல்.

சூரியன் மரபிற்றோன்றிச்சுடர்நெடுநேமியாண்ட
ஆரியனமரர்க்காகியசுரரையாவியுண்ட
வீரியன்வேள்விசெய்துவிண்ணுலகோடுமாண்ட
காரியன்கருணையன்னகண்ணனக்கவிகைமன்னன். (௨௯)

புயறருமதத்திண்கோட்டுப்புகர்மலைக்கிறையையீர்ந்து
மயறருமவுணர்யாருமடித்தரவரிவிற்கொண்ட
இயறரும்புலமைச்செங்கோன்மனுமுதல்யாருமொவ்வாத்
தயரதன்கனகமாடத்தடமதிலயோத்திவேந்தன். (௩0)

அன்னவன்சிறுவனுமிவ்வாண்டகையன்னையேவத்
தன்னுடையுரிமைச்செல்வந்தம்பிக்குத்தகவினல்கி
நன்னெடுங்கானஞ்சேர்ந்தானுமமுமிராமனென்பான்
இந்நெடுஞ்சிலைவலானுக்கேவல்செய்யடியன்யானே. (௩௧)

இராயனடிகளில் அநுமான்வணங்குதல்.

என்றவன்றோற்றமாதியிராவணனிழைத்தமாயப்
புன்றொழிலுறுதியாகப்புகுந்துளபொருள்களெல்லாம்
ஒன்றுமாண்டொழிவுறாமலுணர்த்தினனுணர்தக்கேட்டு
நின்றவக்காலின்மைந்தனெடிதுவந்தடியிற்றாழ்ந்தான். (௩௨),

அநுமான் றன்னை வானரரிலொருவனென்றல்.

தாழ்தலுந்தகாதசெய்ததென்னைநீதருமமன்றால்
கேழ்கிளர்மன்றவலாளாவென்றனனென்னக்கேட்ட
பாழியந்தடந்தோள்வீரமாருதிபதுமச்செங்கண்
ஆழியாயடியேன்றானு * மரிக்குலத்தொருவனென்றான். (௩௩)

அநுமான் றன்னுருவெய்திநிற்றல்.

மின்னுருக்கொண்டவில்லோர்வியப்புறவேதநன்னூல்
பின்னுருக்கொண்டதென்னும்பெருமையாம்பொருளுந்தாழப்
பொன்னுருக்கொண்டமேருபுயத்திற்குமுவமைபோதாத்
தன்னுருக்கொண்டுநின்றான்றருமத்தின்றனிமைதீர்ப்பான். (௩௪)

கண்டிலனுகமுன்றுங்காலினுற்கடந்துகொண்ட
புண்டரீகக்கணாழிப்புரவலன்பொலன்கொள்சோதி
குண்டலவதனமென்றாற்கூறலாந்தகைமைத்தன்றால்
பண்டைநூற்கதிரோன்சொல்லப்படித்தனன்படிவமம்மா. (௩௫)

---

* அரி-குரங்கு.

அனுமனுருவினைக் கண்டவிராமன் வியப்பெய்தியுரைத்தல்.

தாட்படாக்கமலமன்னதடங்கணான்றம்பிக்கம்மா
கேட்படாநின்றநீக்கிக்கிளர்படாதாகியென்றும்
நாட்படாமறைகளாலுநவைபடாஞானத்தாலும்
கோட்படாப் * பதமேயையகுரக்குருக்கொண்டதென்றான். (௩௬)

சுக்கிரீவன்றன்மை சொல்லரிதென்னல்.

நல்லனநிமித்தம்பெற்றேனம்பியைப்பெற்றேனம்பால்
இல்லையேதுன்பமானதின்பமுமெய்திற்றின்னும்
வில்லினாயினைப்போலாங்கவிகுலக்கும்சில்வீரன்
சொல்லினாலேவல்செய்வானவனிலைசொல்லறபாற்றோ. (௩௭)

அனுமன்விடைபெற்றுச் செல்லுதல்.

என்றகமுவந்துகோலமுகமலர்ந்தினிதினின்ற
குன்றுறழ்தோளினானைநோக்கியக்குரக்குசியம்
சென்றவன்றன்னையின்னேகொணர்கின்றேன்சிறுதுபோது
வென்றியிரிருத்தியென்றுவிடைபெற்றுவிரைவிற்போனான். (௩௮)

௨-வது அனுமப்படல முற்றிற்று.

ஆ படலம் ௨-க்கு திருவிருத்தம் - ௮௧.

மூன்றாவது.

நட்புக்கோட்படலம்.

வேறு.

போனமர்தரமணிப்புயநெடும்புகழினான்
ஆனதன்பொழுதினத்தரசன்மாடணுகினான்
யானுமுன்குலமுமிவ்வுலகுமுய்ந்தனமென
மானவன்குணமெலாநினையுமாமதியினான். (௧)

வாலியைக்கொல்லுங் காலன் வந்தானென்றல்.

மேலவன்றிருமகற்குரைசெய்தான்விரைசெய்தார்
வாலியென்றளவிலாவலியினானுயிர்தெறக்
காலன்வந்தனனிடர்க்கடல்கடந்தனமென
ஆலமுண்டவனினின்றருநடம்புரிகுவான். (௨)

* பதம்-பதத்திலுள்ளபொருள்.

இதுமுதற் கங-பாடல்கள் இராமசரிதத்தினை அனுமான்சுக்கிரீவற் குணர்த்தல்.

மண்ணுளார்விண்ணுளார்மாறுளார்வேறுளார்
எண்ணுளாரிசையுளாரியலுளாரிசையுளார்
கண்ணுளாராயினர்பலகையுளார்மழிநெடும்
புண்ணுளாராருயிர்கமிழ்தமேபோலுளார். (௩)

* சூழிமால்யானையார்தொழுகழற்றயரதன்
பாழியாலுலகெலாமொருவழிப்படரவாழ்
ஆழியான்மைந்தர்பேரறிவினாரழகினார்
ஊழியாரெளிதினிற்கரசுதந்துதவுவார். (௪)

நீதியார்கருணையின்னெறியினார்நெறியிற்
பேதியாநிலைமையாரெவரினும்பெருமையார்
போதியாதனவிலாவுணர்வினார்புகழினார்
காதிசேய்தருகடற்கடவுள்வெம்படையினார். (௫)

வேலிகக்கினவுதாடகைவிளிந்துருளவிற்
கோலியக்கொடுமையான்புதல்வரைக்கொன்றுதன்
காலியற்பொடியினானெடியகற்படிவமாம்
† ஆலிகைக்கரியபேருருவளித்தருளினான். (௬)

கல்லுறுப்பமையுநம்பியரின்முன்பவனயர்
தெல்லுறுப்பெரியபேரெழுசுடர்க்கடவுடன்
பல்லிறுத்தவன்வலிக்கமைதிரியம்பகமெனும்
வில்லிறுத்தருளினான்மிதிலைபுக்கனையநாள். (௭)

‡ உளைவயப்புரவியானுதவுற்றொருசொலால்
அளவில்கற்புடையசிற்றவைபணித்தருளலால்
வளையுடைப்புணரிசூழ்மகிதலத்திருவெலாம்
இளையவற்குதவித்தலையெழுந்தருளினான். (௮)

○ தெவ்விராவகைநெஞ்சிகைவிராமழுவினான்
அவ்விராமனையுமாவலிதொலைத்தருளினான்
இவ்விராகவன்வெகுண்டெழுவிராவனையனும்
வெவ்விராதனைவிராவகைதுடைத்தருளினான். (௯)

கரன்முதற்கருணையற்றவர்கடற்படையொடும்
சிரமுகச்சிலைகுனித்துதவுவார்திசையுளார்
பரமுகப்பகைதுமித்தருளுவார்பரமராம்
அரன்முதற்றலைவருக்கதிசயத்திறலினார். (௧௦)

---

* சூழி-முகபடாம். † ஆலிகை-அகலிகை ‡ உளை-புறமயிர் ○ தெவ்-பகை.

ஆயமாளுகர்தாழியானேயலால்
காயமாளுயினுன்யாவனேகாவலா
நீயமானேர்தியானேருமாரீசனுர்
மாயமாளுயினுன்மாய * மாளுயினுன். (கக)

உக்கவர்தமுருடற்பகைதுறந்துயர்பதம்
புக்கவர்தமுநமக்குரைசெயும்புரையவோ
திக்கவர்தரநெடுந்திரள்கரஞ்சினவுதோள்
அக்கவர்தனுகினேந்தமரர்தாழ்சவரிபோல். (கஉ)

முனேவரும்பிறருமேன்முடிவரும்பகலெலாம்
இனேயர்வந்துறவொன்றியறவம்புரிகுவார்
வினேயெனுஞ்சிறைதுறந்துயர்பதம்விரவிஞர்
எனேயரொன்றுரைசெய்கேனிரவிதன்சிறுவனே. (கங)

மாயையான்மதியிலாநிருதர்கோன்மனேவியைத்
தீயகாநெறியினுய்த்தனனவட்டேவொர்
நீயையாதவமிழைத்துடைமையாநெமெனம்
ஐயையாவுடையையாலுறவினேத்துணிகுவார். (கச)

தந்திருந்தனரருட்டகைநெடும்பகைஞனும்
இந்திரன்சிறுவனுக்கிறுதியின்றிசைதரும்
புந்தின்பெருமையாய்போதரொன்றுரைசெய்தான்
மந்திரங்கெழுமுதுன்மரபுணர்ந்துதவுவான். (கரு)

சுக்கிரீவன் இராமனேயடைதல்.

அன்னவாமுறையெலாமறிவினுலுணர்குவான்
உன்னேயேயுடையவெற்கரியதெப்பொருளரோ
பொன்னேயேபொருவுவாய்போதெனப்போதுவான்
தன்னேயேயனேயவன்சரணம்வந்தனுகினுன். (கசு)

வேறு.

கண்டனனென்பமன்னேகதிரவன்சிறுவன்காமர்
குண்டலந்துறந்தகோலவதனமுங்குளிர்க்குங்கண்ணும்
புண்டரிகங்கள்பூத்துப்புயறழீஇப்பொலிந்ததிங்கள்
மண்டலமுதயஞ்செய்தமரகதக்கிரியனுனே. (கஎ)

நோக்கினுனெடிதுநின்றுனெடிவருங்கமலத்தண்ணல்
ஆக்கியவுலகமெல்லாமன்றுதொட்டின்றுகாறும்
பாக்கியம்புரிந்தவெல்லாம் † குவிந்திருபடிவமாகி
மேக்குயர்தடந்தோள்பெறுவீரராய்விளேந்தவென்பான். (கஅ)

* மான்-மகான். † குவிந்து ஒன்றுகி.

தேறினனமார்க்கெல்லாந் * தேவாரந்தேவரன்றே
மாறியிப்பிறப்பில்வந்தார்மானுடராகிமன்னோ
ஆறுகொள்சடிலத்தானுமயனுமென்றிவர்களாதி
வேறுளகுழுவையெல்லாமானுடம்வென்றதன்றே. (௧௯)

இராமன் சுக்கிரீவனைஇருக்கப்பணித்தல்.

எனநினைந்தினையவெண்ணியிவர்கின்றகாதலோதக்
கனைகடற்கரைநின்றேறக்கண்ணிணைகளிப்பநோக்கி
அனகனைக்குறுகினனவ்வண்ணலுமருத்திகூரப்
புனைமலர்த்தடக்கைநீட்டிப்போந்தினிதிருத்தியென்றான். (௨௦)

சுக்கிரீவராமர்கள் சந்திரசூரியரை ஒத்தாரென்னல்.

தவாவலியரக்கரென்னுந் † தகாவிருட்பகையைத்தள்ளிக்
குவாலறநிறுத்தற்கேற்றகாலத்தின்கூட்டமொத்தார்
அவாமுதலறுத்தசிந்தையனகனுமரியின்வேந்தும்
உவாவுறவந்துகூடுமுடுபதியிரவியொத்தார். (௨௧)

தவமு முயற்சியும் கல்வியு ஞானமு மொத்தாரென்னல்.

கூட்டமொத்திருந்தவீரர்குறித்ததோர்பொருட்குமுன்னாள்
ஈட்டியதவமும்பின்னர்முயற்சியுமியைந்ததொத்தார்
மீட்டும்வாளரக்கரென்னுந்தீவினைவேரின்வாங்கக்
கேட்டுணர்கல்வியோடுஞானமுங்கிடைத்ததொத்தார். (௨௨)

சுக்கிரீவன்யானே தவமுடையேனென்றல்.

ஆயதோரவதியின்கணருக்கன்சேயரசைநோக்கித்
தீயவினைதீயநோற்றாரென்னின்யார்செல்வநின்னை
நாயகமுலகுக்கெல்லாமென்னலாநலமிக்கோயை
மேயினன்விதியேநல்கின்மேவலாகாதென்னென்றான். (௨௩)

இராமன்சவரியா லுன்னையுணர்ந்தெய்தினே னென்னல்.

மய்யறுதவத்தின்வந்தசவரியிம்மலையினீவந்
தெய்தினையிருந்ததன்மையியம்பினள்யாங்களுற்ற
‡ கய்யறுதுயரநின்னாற்கடப்பதுகருதிவந்தேம்
அய்யநிற்றீருமென்னவரிகுலத்தரசன்சொல்வான். (௨௪)

சுக்கிரீவன் யானுனக்கபய மென்றல்.

முரணுடைத்தடக்கையோச்சிமுன்னவன்பின்வந்தேனை
உருணிலைப்புரத்தின்காறுமுலகெங்குந்தொடரவிக்குன்

* தேவாரந்தேவர்-தலைவராகிய பரமபதநாதர்.
† தகா-தகுதியற்ற. ‡ கையறுதுயரம்-பிரிதற்றுன்பம்.

றாணுடைத்தாகியுய்ந்தேனாருயிர்துறக்கலாற்றேன்
* சரணுனைப்புகுந்தேனென்னைத்தாங்குதருமமென்றான். (உரு)

என்றவக்குரக்குவேந்தையிராமனுமிரங்கிநோக்கி
உன்றனக்குரியவின்பதுன்பங்களுள்ளமுன்னாள்
சென்றனபோக்கிமேல்வந்துறுவனதீர்ப்பலன்ன
நின்றனவெனக்குநிற்கு † நேரெனமொழியுநேரா. (உசு)

இராமன் சுக்கிரீவனை நீயே யென்தோழனென்றல்.

மற்றினியுரைப்பதென்னேவானிடைமண்ணினின்னைச்
‡ செற்றவரென்னைச்செற்றார்தீயரேயெனினுமுன்னோ
டுற்றவரெனக்குமுற்றாருன்கிளையெனதென்காதற்
சுற்றமுன்சுற்றநீயேயின்னுயிர்த்துணைவனென்றான். (உஎ)

அம்மொழிகேட்டனைவருமகிழல்.

ஆர்த்ததுகுரக்குச்சேனையஞ்சனைச்சிறுவன்மேனி
போர்த்தனபொடித்தரோமப்புளகங்கள்பூவின்மாரி
தூர்த்தனர்விண்ணோர்மேகஞ்சொரிந்தன § வநகன்சொன்ன
வார்த்தையெக்குலத்துளோர்க்குமறையினுமெய்யென்றன்றோ. (உஅ)

ஆண்டெழுந்தடியிற்றாழ்ந்தவஞ்சனைச்சிங்கம்வாழி
தூண்டிரட்டடந்தோண்மைந்ததோழனுநீயும்வாழி
ஈண்டுநுங்கோயிலெய்தியினிதினிருக்கைகாண
வேண்டுநும்மருளென்னென்றான்வீரனும்விழுமிதென்றான். (உகூ)

இராமனுமிளையோனுஞ் சோலைபுகுதல்.

ஏகினனிரவிசேயுமிருவருமரிகளேறும்
ஊகவெஞ்சேனைசூழவறந்தொடர்ந்துவந்துவாழ்த்த
நாகமுநரந்தக்காவுநளினவாவிகளுநண்ணிப்
போகபூமியையுமேசும்புதுமலர்ச்சோலைபுக்கார். (௩௦)

ஆரமுமகிலுந்துன்றியவிர்பளிக் ‖ கறையளாவி
நாரநின்றனபோற்றோன்றிநவமலர்த்தடங்களோடும்
பாரமுமருங்குந்தெய்வத்தருவுநீர்ப்பண்ணையாடும்
சூரரமகளிரூசறுவன்றியசும்மைத்தன்றே. (௩௧)

வேறு.

அயர்வில்கேள்விசாலறிஞர்வேலைமுன்
பயல்வில்கல்வியார்பொலிவில்பான்மைபோல்

---

* சரண்-அடைக்கலம். † நேரென-சமானமென்று. ‡ செற்றவர்-சீறினோர்கொன்றோருமாம். § அநகன்-பாவமில்லாதவன், ‖ அறை-பாறை.

குயிலுமாமணிகுழுவுசோதியால்
வெயிலும்வெள்ளிவெண்மதியுமேம்படா. (௩௨)

ஏயவன்னதாமினியசோலைவாய்
மேயமைச்தருங்கவியின்வேந்தனும்
தூயபூவணைபொலிந்துதோன்றினர்
ஆயவன்பினேடளவளாவுவார். (௩௩)

இராமன் நீராடிக் கந்தமூலபலாதியருந்தல்.

கனியுங்கந்தமுங்காயுந்தூயநன்
இனியயாவையுங்கொணரயாரினும்
புனிதன்மஞ்சனத்தொழில்புரிந்துபின்
* இனிதிருந்துநல்விருந்துமாயினுன். (௩௪)

இராமன் சுக்கிரீவனை நீயுமனைவியைப்பிரிந்தவனேவெனல்

விருந்துமாகியம்மெய்ம்மையன்பினே
டிருந்துநோக்கிநின்றிறைவன்சிந்தியாப்
பொருந்துநன்மனைக்குரியபூவையைப்
பிரிந்துளாய்கொலோநீயும்பின்னென்ருன். (௩௫)

அனுமான் சுக்கிரீவன் சரிதமுரைத்தல்.

என்றவேலையினெழுந்துமாருதி
குன்றுபோலநின்றிருகைகூப்பினுன்
நின்றநீதியாய்நெடிதுகேட்டியால்
ஒன்றுநானுனக்குரைப்பதுண்டெனு. (௩௬)

இதுமுதல்-௩௯ பாடல்களால் வாலியின் வரலாறுணர்த்தல்.

நாலுவேதமாநவையிலார்கலி
வேலியன்னதோர்மலையின்மேலுளான்
† சூலிதன்னருட்டுறையின்முற்றினுன்
வாலியென்றுளான்வரம்பிலாற்றலான். (௩௭)

கழறுதேவரோடவுணர்கண்ணினின்
றுழலுமந்தரத்துருவுதேயமுன்
அழலுங்கோளராவகடுதேய்விடச்
சுழலும்வேலையைக்கடையுந்தோளினுன். (௩௮)

நிலனுநீருமாய்நெருப்புங்காற்றுமென்
றுலவில்பூதநான்குடையவாற்றலான்
அலையின்வேலைசூழ்கிடந்தவாழிமா
மலையினின்றுயிம்மலையின்வாவுவான். (௩௯)

---

* இனிதருந்தி-என்றும்பாடம். † சூலி-சிவபெருமான்.

கிட்டினார்பொரக்கிடைக்கினன்னவர்
பட்டநல்வரம் * பாகமெய்துவான்
எட்டுமாதிரத்திறுதிகாணுமுற்
றட்டமூர்த்திதாள்பணியுமாற்றலான். (௪௰)

கால்செலாதவன்முன்னர்க்கந்தவேள்
வேல்செலாதவன்மார்பின்வென்றியான்
வால்செலாதவாயலதிராவணன்
கோல்செலாதவன்குடைசெலாதரோ (௪௧)

மேருவேமுதற்கிரிகள்வேறொரோடும்
பேருமேயவன் † பேருமேனெடும்
காரும்வானமுங்கதிருநாகமும்
ஆருமேயவன்பெரியதோள்களால். (௪௨)

பார்கிடந்தவெம்பன்றிபண்டைநாள்
நீர்கடைந்தபேராமைநேருளான்
‡ மார்பிடந்த § மாவெனினுமற்றவன்
தார்கிடந்ததோடகையவல்லதோ. (௪௩)

படர்ந்தநீணெடுந்தலைபரப்பிமீ
தடர்ந்துபாரம்வந்துறவநந்தனுங்
கிடந்துதாக்குமிக்கிரியைமேயினான்
நடந்துதாங்குமிப்புவனநாளெலாம். (௪௪)

கட ○ லுளைப்பதுங்கால்சலிப்பதும்
மிடலருக்கர்தேர்மீதுசெல்வதும்
தொடரமற்றவன்சுழியினெற்றலான்
அடலின்வெற்றியாயயலினாவவோ. (௪௫)

வெள்ளமேழுபத்துளதுமேருவைத்
தள்ளலானதோளரிகடானையான்
உள்ளமின்றியவ்வுயிரையஞ்சலால்
வள்ளலேயவன்வாழவாழுமால். (௪௬)

மழையிடிப்புறுவயவெஞ்சியமா
முழையிடிப்புறுமுரண்வெங்காலுமென்
றழைதுடிப்புறச்சார்வுறாதவன்
விழைவிடத்தின்மேல்விளிவையஞ்சலால். (௪௭)

---

* பாகம்-பாதி. † பேருமேல்-அசைவானானால். ‡ மார்பிடந்த-இரணியன் மார்பைப்பிளந்த. § மா-சிங்கம். ○ உளைப்பது-ஒலிப்பது.

மெய்க்கொள்வாலினான்மிடலிராவணன்
தொக்கதோளுறத்தொடர்படுத்தநாள்
புக்கிலாதவெம்பொழியாத்தநீர்
உக்கிலாதவேறுலகம்யாவதோ. (௪௮)

இந்திரன்றனிப்புதல்வனின்னளிச்
சந்திரன்றழைத்தனையதன்மையான்
அந்தகன்றனக்கரியவாணையான்
முந்திவந்தனனிவதினின்மொய்ம்பினாய் (௪௯)

அன்னவன்னெனமக்கரசனாகவே
பின்னவன் * னிளம்பதமியற்றநாள்
முன்னவன்குலப்பகைஞன்முட்டினான்
மின்னெயிற்றவாளவுணன்மேன்மையான். (௫௦)

முட்டிநின்றவன்முரணுரத்தினேர்
ஒட்டவஞ்சிநெஞ்சலையவோடினான்
வட்டமண்டலத்தரிதுவாழ்வெனா
எட்டரும்பெரும் † பிலனுளெய்தினான். (௫௧)

எய்துகாலையப்பிலனுளெய்தியான்
கொய்தினக்கவற்கொணர்வெனுண்மையாய்
செய்திகாவனீசிறிதுபோழ்தெனா
வெய்தினெய்தினான்வெகுளிமேயினான். (௫௨)

எகிவாலியு ‡ மிருதுவேழொடேழ்
வேகவெம்பிலத்தடவிவெம்மையான்
மோகவென்றிமேன்முயல்பின்வைகிடச்
சோகமெய்தினன்றனைதுளக்கினான். (௫௩)

அழுதமுங்குறமிவனையன்பினில்
தொழுதிரந்துநின்றொழிலிதாதலால்
எழுதுவென்றியாயரசுசெய்கெனாப்
பழுதிதென்றனன்பரியுநெஞ்சினான். (௫௪)

என்றுதானுமவ்வழியிரும்பிலம்
சென்றுமுன்னவற்றேடுவேனவற்
கொன்றுளான்றனைக்கொலவொணாதெனிற்
பொன்றுவேனெனாப்புகுதன்மேயினான். (௫௫)

---

* இளம்பதம்-இளவரசு. † பிலம்-பாதாளம்.
‡ இருதுவேழொடேழ்-இரண்டேகால்வருடம்.

தடுத்துவல்லவர்தணிவுசெய்துநோய்
எடுத்தவேலையோரிவையவிஞவியைய்
தடுத்தகாவலு * மரிகளாணையால்
கொடுத்ததுண்டிவன்கொண்டனன்கொலாம். (௫௬)

அன்னநாளின்மாயாவியப்பிலத்
தின்னவாயினூடெய்துமென்னையாம்
பொன்னின்மால்வரைப்பொருப்பொழித்துவே
றுன்னுகுன்றெலாமுடனடுக்கினேம். (௫௭)

சேமமவ்வழிச்செய்துசெங்கதிர்க்
கோமகன்றனைக்கொண்டுவந்தியாம்
மேவுகுன்றின்மேல்வைகும்வேலைவாய்
ஆவியுண்டன † னவனையன்னவன். (௫௮)

ஒளித்தவன்னுயிர்க்கள்ளையுண்டுளம்
களித்தவாலியுங்கடிதினெய்தினன்
விளித்துநின்றவேறுரைபெருணிருந்
தளித்தவாறுகன்றிளவலாரெனு. (௫௯)

வால்விசைத்துவான்வளிமியிர்த்தெனக்
கால்விசைத்தவன்கடிதி ‡ னெற்றலும்
நீனிறத்துவிண்ணெடுமுகட்டவும்
வேலைபுக்கவும்பெரியவெற்பெலாம். (௬௰)

ஏறினனவனெவருமஞ்சுறச்
சீறினனெடுஞ்சிகரமெய்தினன்
வேறிலாதவன்புதல்வமெய்ம்மையால்
ஆறினனும்வந்தடிவணங்கினன். (௬௧)

வணங்கியண்ணநின்வரவிலாமையான்
உணங்கியுன்வழிப்படரவுன்னுவேற்
§ கிணங்கரின்மையாவிறைவநும்முடைக்
கணங்கள்காவலுன்கடன்மையென்றனர். (௬௨)

ஆணையஞ்சிவ்வரசையெய்திவாழ்
நாணிலாதவென்னவையைநல்குவாய்
பூணுலாவுதோளிணைபொருமெனக்
○ கோணினனெடுங்கொடுமைகூறினன். (௬௩)

* அரிகளாணையால்-வானரங்களின் கட்டளையால்.
† அவனை-அம்மாயாவியை. ‡ எற்றலும்-அடித்தலும். § இணங்கர்-சகாயிகள்.
○ கோணினன்-வணங்கினன் கோபித்தானென்றுமாம்.

அடல்கடந்ததோளவனையஞ்சிவெங்
குடல்கலங்கியெங்குலமொடுங்கமுன்
கடல்கடைந்தவெங்கரதலங்களால்
உடல்கடைந்தனனிவனுலைந்தனன். (௬௪)

இவனுலைந்துலைந்தெழுகடற்புறத்
தவனியுங்கடந்தெயிலடைந்தனன்
கவனமொன்றிலான்கால்கடாயென
அவனிவேலையேழரியின்வாலினான். (௬௫)

என்றுகாண்மகனியம்ப * வீசனும்
நன்றுநன்றெனாநனிதொடர்ந்துபின்
சென்றவாலிமுன்சென்றசெம்மலான்
அன்றவாவுதற்கறிந்தனன்கொலாம். (௬௬)

இராமன் வாலிசுக்கிரீவர்களின் போரினையுரையெனவுரைத்தல்.

இனையவாலியந்திளவறன்றனும்
வினையும்வார்கழற்கருணைவள்ளல்பின்
பினையவீரர்செய்தமையியம்பெனப்
புனையும்வாகையான்புகறன்மேயினான். (௬௭)

நக்கரக்கடற்புறத்துநண்ணுநாள்
செக்கர்மெய்த்தனிச்சோதிசேர்கலாச்
சக்கரப்பொருப்பிற்றலைக்குமப்
பக்கமுற்றவன்கடிதுபற்றினான். (௬௮)

பற்றியஞ்சலன்பழியின்வெஞ்சினம்
முற்றிநின்றதன்முரண்வலிக்கையால்
எற்றுவானெடுத்தெழுதலும்பிழைத்
† தற்றமொன்றுபெற்றிவனகன்றனன். (௬௯)

எந்தைமற்றவனெயிறதுக்குமேல்
அந்தகற்குமோரரணுமில்லையால்
இந்தவெற்பின்வந்திவனிருந்தனன்
முந்தையுற்றதோர்சாபமுண்மையால். (௭௰)

உரிமையென்றிவற்குரியதாரமாம்
அருமருந்தையுமவன்விரும்பினான்
இருமையுந்துறந்திவனிருந்தனன்
கருமமிங்கிதேகடவுளென்றனன். (௭௧)

* ஈசனும்-இராமனும். † அற்றம்-மறைவு.

வேறு.

வாலிசரிதங்கேட்ட விராமன் கோபமெய்தல்.

பொய்யிலாதவன்வரன்முறையிம்மொழிபுகல
அய்யனுயிரம்பெயருடையமலர்க்குமமலன்
வய்யநங்கியவாயிதழ்துடித்தது மலர்க்கண்
செய்யதாமரையாம்பலம்போதெனச்சிவந்த. (எ௨)

திறத்துமாமறையய * ஞைடைம்முகன்பிறர்தேடிப்
புறத்தகத்துணரரியதன்பொலனடிக்கமலம்
உறச்சிவப்பவித்தரையிசையுறலறமாக்கல்
மறத்தைவீட்டுதலன்றியேபிறிதுமற்றுண்டோ. (எ௩)

ஈரநீங்கியசிற்றவைசொற்றனனென்ன
ஆரம்வீங்குதோட்டம்பிக்குத்தன்னரசுரிமைப்
பாரமீந்தவன் † பரிவிலனொருவன்றனிளையோன்
தாரம்வெளவினனென்றசொற்றரிக்குமாறுளதோ. (எ௪)

வாலியைக்கொன்ற ரசுந்தாரமு மளிப்பேனென்றல்.

உலகமேழினேடேழும்வந்தவனுயிர்க்குதவி
விலகுமென்னினும்வில்லுடைவாளியின்வீட்டித்
‡ தலைமையோடுநின்றாரமுமுனக்கின்றுதருவேன்
புலமையோயவனுறைவிடங்காட்டென்றுபுகன்றான். (எ௫)

சுக்கிரீவாதியர் மந்திராலோசனை செய்தல்.

எழுந்துபேருவகைக்கடற்பெருந்திரையிரைப்ப
அழுந்துதுன்பத்துக்கரைகண்டனனனையான்
விழுந்ததேயினிவாலிதன்வலியெனவிரும்பா
மொழிந்தவீரற்கியாமெண்ணுவதுண்டெனமொழிந்தான். (எ௬)

அனுமான் தேற்றங்கூறல்.

அனையவாண்டுரைத்தனுமனேமுதலியவமைச்சர்
நினைவுங்கல்வியுநீதியுஞ்சூழ்ச்சியுநிறைந்தார்
எனையரன்னவரோடும்வேறிருந்தனனிரவி
தனையனவ்வழிச்சமீரணன்மகனுரைதருவான். (எ௭)

உன்னினேனினதுள்ளத்தினுள்ளத்தையுரவோய்
அன்னவாலியைக்காலனுக்களிப்பதோ ○ ராற்றல்
இன்னவீரர்பாலில்லையென்றயிர்த்தனையினியான்
சொன்னகேட்டவைகடைப்பிடிப்பாயெனச்சொன்னான். (எ௮)

---

* ஐம்முகன்.உருத்திரன், † பரிவிலன்-அன்பிலன்.
‡ தலைமையோடு-அரசுரிமையுடன். ○ ஆற்றல்-வன்மை.

திருமாலே இராமனெனல்.

சங்குசக்கரக்குறியுள தடக்கையிற்றாளில்
எங்குமித்தனையிலக்கணம் யாவர்க்குமில்லை
செங்கண்விற்கரத்திராமனத்திருநெடுமாலே
இங்குதித்தனனீண்டறநிறுத்துதற்கின்னும். (௭௧)

செறுக்கும்வன்றிறற்றிரிபுரத்தீயெழச்சினவிக்
கறுக்கும்வெஞ்சினக்காலன்றன் * காலமுங்காலால்
அறுக்கும்புங்கவனுண்டபேராடகத்தனிவில்
இறுக்குந்தன்மையம்மாயவற்கன்றியுமெளிதோ. (௮௦)

என்னையீன்றவனிவ்வுலகியாவையுமீன்றான்
தன்னையீன்றவற்கடிமைசெய்தவமஃதையா
உன்னையீன்றவற்குறுபதமுளதெனவுரைத்தான்
இன்னதோன்றலையவனிதற்கேதுவுண்டிறையோய். (௮௧)

துன்புதோன்றியபொழுதுடன்றோன்றுவனெவர்க்கும்
முன்புதோன்றலையறிதற்குமுடிவெனென்றியம்ப
அன்புசான்றெனவுரைத்தனனையவென்யாக்கை
என்புதோன்றலவுருகினவெனிற்பிறிதெவனோ. (௮௨)

மராமரத்தாலிராமன் வலியையளந்து காண்டியெனல்.

பிறிதுமன்னவன்பெருவலியாற்றலைப்பெரியோய்
அறிதியென்னினுண்டேழுமஃதருமரங்கள்
செறியினின்றனவேழினொன்றுருவவிற்கொடியோன்
† பொறிகொள்வெஞ்சரம்போவதுகாணெனப்புகன்றான். (௮௩)

நன்றுநன்றெனநன்னெடுங்குன்றமுநாணும்
தன்றனைத்தனிமாருதித்தோளிணைதழுவிச்
சென்று ‡ செம்மலைக்குறுகியான்செப்புவதுளதால்
ஒன்றுனக்கெனவிராமனுமுரைத்தியஃதென்றான். (௮௪)

ஏகவெண்ணுயிர்நெறியெனவினிதுகொண்டேகி
மாகநீண்டனகுறுகிடநிமிர்த்தனமரங்கள்
ஆகவைந்தினோடிரண்டினொன்றுருவநின்னம்பு
போகவேயென்றன்மனத்திடர்போமெனப்புகன்றான். (௮௫)

மறுவிலானதுகூறலும்வானவர்க்கிறைவன்
முறுவல்செய்தவன்முன்னியமுயற்சியையுன்னி
எறுழ்வலித்தடந்தோள்களாற்சிலையைநாணேற்றி
அறிவினாலளப்பரியவற்றருகுசென்றணைந்தான். (௮௬)

௩-வது நட்புக்கோட்படலம் முற்றிற்று.

ஆக படலம் ௩-க்கு திருவிருத்தம்-௧௬௬.

* காலம்-ஆயுள். † பொறிகொள்-பெயரெழுதப்பெற்ற.
‡ செம்மல்-இராமன்.

நான்காவது

மராமரப்படலம்.

இதுமுதல் ௬-பாடல்கள் மராமரவருணனை.

ஊழிபேரினும்பேர்விலவுலகங்களுலைந்து
தாழுங்காலத்துந்தாழ்விலதயங்குபேரிருள்சூழ்
ஆழிமாநிலந்தாங்கியவரும்பெருங்கிரிகள்
ஏழுமாண்டுசென்றொருவழிநின்றெனவியைந்த. (௧)

கலைகொண்டோங்கியமதியமுங்கதிரவன்றானும்
தலைகண்டோடுதற்கருந்தவத்தொடங்குறுஞ்சாரல்
மலைகண்டோமென்பதல்லதுமலர்மிசையயற்கும்
இலைகண்டோமெனத்தெரிப்பருந்தரத்தனவேழும். (௨)

ஒக்கநாளெலாமுழல்வனவுலைவிலவாக
மிக்கதோர்பொருளுளதெனவேறுகண்டிலமால்
திக்கும்வானமுஞ்செறிந்தவத்தருநிழற்சிதம்
புக்குநீங்கலிற்றளர்விலவிரவிதேர்ப்புரவி. (௩)

நீடோள்களுங்கோள்களுமென்னமேனிமிர்ந்து
மாடுதோற்றவமலரெனப்பொலிகின்றவனப்ப
ஓடுமாச்சுடர்வெண்மதிக்குட்கறுப்புயர்ந்த
கோடுதேய்த்தலிற்களங்ககுற்றுமன்னகுறிய. (௪)

நீதரும்பெருஞ் * சாகைகடழைக்கின்றசெயலால்
வேதமென்னவுந்தகுவனவிசும்பினுமுயர்ந்த
ஆதியண்டமுன்பளித்தவனுனுலகினங்கவனூர்
ஓதிமந்தனிப்பெடையொடும்புடையிருந்துறைவ. (௫)

நாற்றமல்குபோதடைகனிகாய்முதலனை
வீற்றுமண்டலத்தியாவையும்வீழ்கிலயாண்டும்
காற் † றலம்பினுங்கலிநெடுவானிடைக்கலந்த
ஆற்றின்வீழ்ந்துபோயலைகடற்பாய்தருமியல்ப. (௬)

அடியநான்மறையந்தணனடத்துக்கப்பால்
முடியின்மேற்சென்றமுடியனவாதலின்முடியா
நெடியமாலெனுநிலையனநீரிடைக்கிடந்த
படியின்மேனின்றமேருமால்வரையினும்பழைய. (௭)

* சாகை-கிளை. † அலம்பினும்-வீசினும்.

வன்ன * விந்திரன்மைந்தற்குந் † தம்பிக்கும்வயிர்த்த
உள்ளமேயெனவொன்றினொன்றுள்வயிர்ப்புடைய
தெள்ளுநீரிடைக்கிடந்தபார்சுமக்கின்றசேடன்
வெள்ளிவெண்படங்குடைந்துகீழ்போகியவேர். (௮)

சென்றுதிக்கினையளந்தனபணைகளிற்சேர்வர்
என்றுமிற்குமென்றிசைப்பன்விருசுடர்திரியும்
குன்றினுக்குயர்ந்தகன்றனவொன்றினுங்குறுகா
ஒன்றினுக்கொன்றினிடைநெடிதியோசனையுடைய. (௯)

இராமன் வின்னாணெறிதல்.

ஆயமாமரமனைத்தையுநோக்கினின்றமலன்
தூயவார்கணைதுரப்பதோராதரந்தோன்றச்
சேயவானமுந்திசைகளுஞ்செவிடுறத்தேவர்க்
கேய்விலாததோர்பயம்வரச்சிலையைநாணெறிந்தான். (௧௦)

ஒக்கநின்றதெவ்வுலகமுமங்கங்கேயோசை
பக்கநின்றவர்க்குற்றதுபகர்வதெப்படியோ
திக்கயங்களுமயங்கினதிசைகளுந்திகைத்த
புக்கயன்பதிசலிப்புறவொலித்ததப்பொருவில். (௧௧)

‡ அரிந்தமன்சிலைநாணொடிதார்த்தலுமமரர்
இரிந்துநீங்கினர்கற்பந்தினிறுதியென்றயிர்த்தார்
பரிந்ததம்பியேபாங்குநின்றுண்மற்றைப்பல்லோரர்
புரிந்ததன்மையையுரைசெயிற்பழியவர்ப்புணரும். (௧௨)

இராமன் மராமரத்திலம்பெய்தல்.

எய்தல்காண்டுங்கொலின்னமென்றரிதின்வந்தெய்திப்
பொய்யின்மாருதிமுதலினோர்புகழ்வுறும்பொழுதில்
மொய்கொள்வார்சிலைநாணினைமுறையுறவாங்கி
வெய்யவாளியையாளுடைவில்லியும்விட்டான். (௧௩)

ஏழுமாமரமுருவிக்கீழுலகமென்றிசைக்கும்
ஏழுமூடுபுக்குருவிப்பின்னுடனடுத்தியன்ற
ஏழிலாமையான்மீண்டதவ்விராகவன்பகழி
ஏழுகண்டபினுருவுமாலொழிவதன்றின்னும். (௧௪)

ஏழுவேலையிமுலகமேலுயர்ந்தனவேழுப்
ஏழுகுன்றமுமிருடிகளெழுவரும்புரவி
ஏழுமங்கையரெழுவருநடுங்கினரென்ப
ஏழுபெற்றதோவிக்கணைக்கிலக்கமென்றெண்ணி. (௧௫)

---

* இந்திரன்மைந்தன்-வாலி † தம்பி-சுக்ரீவன். ‡ அரிந்தமன்-நாராயணன்.

அன்னதாயினுமறத்தினுக்காருயிர்த்துணைவன்
என்னுந்தன்மையைநோக்கினரியாவருமெவையும்
பொன்னின்வார்கழற்புனைநிறத்தாமரைபூண்டு
சென்னிமேற்கொளூஉவருக்கன்சேயிவையிவைசெப்பும். (௧௬)

வேறு.

மெய்யநீவானுநீமற்றுநீமலரின்மேல்
அய்யனீயாழிநீ * யாழிவாழமலனீ
செய்யதீவினைதெறுந்தேவுநீயாயினேன்
உய்யவந்துதவினாயுலகமுண்டவினாய். (௧௭)

என்னெனக்கரியதெப்பொருளுமெற்கெளிதலால்
உன்னையித்தலைவிடுத்துதவினார்விதியினார்
அன்னையொப்புடையவுன்னடியருக்கடியன்யான்
மன்னவர்க்கரசவென்றுரைசெய்தான்வசையிலான். (௧௮)

ஆடினார்பாடினாரங்குமிங்குங்கலந்
தோடினாருவகையின்னறவையுண்டுணர்விலார்
நேடினும்வாலிகாலனையெனாநெடிதுநாள்
வாடினார்தோளெலாம்வளர † மற்றவரெலாம். (௧௯)

துந்துபியினுடலைக்காண்டல்.

அண்டமுமகிலமுமடையவன்றனவிடைப்
பண்டுவெந்தனநெடும்பசைவறந்திடினும்வான்
மண்டலந்தொடுவதம்மலையின்மேன்மலையெனக்
கண்டனன்றுந்துபிக்கடலனானுடலரோ. (௨௦)

‡ தென்புலக்கிழவனூர் § மகுடமோதிசையின்வாழ்
வன்புலக்கரிமடித்ததுகொலோமகரநீர்
என்புலப்புறவுலர்ந்ததுகொலோவிதுவெனா
அன்புலப்பரியநீயுரைசெயாயெனவவன். (௨௧)

௪-வது. மராமரப்படலம் முற்றிற்று.

ஆ. படலம் -௪-க்கு திருவிருத்தம் ௪௮௭.

---

* ஆழி-கடல். † மற்றவர்-ஏனையவானரவீரர்.
‡ தென்புலக்கிழவன்-யமன். § மகிடம்-எருமைக்கடா.

ஐந்தாவது.

துந்துபிப்படலம்.

துந்துபிப்பெயருடைச்சுடுசினத்தவுணன்மீ
திந்துவைத்தொடநிமிர்ந்தெழு * மருப்பிணையினான்
மந்தரக்கிரியெனப்பெரியவன்மகரநீர்
சிந்திடக்கருநிறத்தரியினைத்தேடுவான். (௧)

அங்குவந்தரியெதிர்த்தமைதியென்னென்றலும்
பொங்குவெஞ்செருவினிற்பொருதியென்றுரைசெயக்
கங்கையின்கணவனைக்கறைமிடற்றிறைவனே
உங்கள்வெங்கதவலிக்கொருவனென்றுரைசெய்தான் (௨)

கதிதுசென்றவனுமக்கடவுடன்கைலையைக்
கொடியகொம்பினின்மடுத்தெழுதலுங்குறுகிமுன்
கொடிதினின்குறையெனென்றலுநவன்றனனரோ
முடிவில்வெஞ்செருவெனக்கருள்செய்வான்முயல்கெனா. (௩)

மூலமேவீரமேமுடினாயோடுபோர்
ஏலுமேதேவர்பாலேகெனாவேவினான்
சாலநாள்போர்செய்வாயாதியேற்சாருபோர்
வாலிபாலேகெனாவானுளோர்வானுளான். (௪)

அன்னவன்விடவுவந்தவனுவர் † தரிகடம்
மன்னவன்வருகபோர்செய்கெனாமலையினைச்
சின்னபின்னம்படுத்தெய்தலுஞ்சினவியென்
முன்னவன்முன்னர்வந்தனையவன்முனைதலும். (௫)

இருவருந்திரிவுறும்பொழுதினின்னவர்களென்
றொருவருஞ்சிறிதுணர்ந்திலர்களெவ்வுலகினும்
வெருவருந்தகைவிலார்விழுவர்பின்றெழுவரால்
மருவருந்தகையர்தானவர்கள்வானவர்கடாம். (௬)

தீயெழுந்ததுவிசும்புறநெடுந்திசையெலாம்
போயெழுந்ததுமுழக்குடனெழுந்ததுபுகை
தோயநன்புணரியுஞ்சுடர்தடங்கிரிகளும்
சாயழிந்தனவடித்தலமெடுத்திடுதலால். (௭)

புயலும்வானகமுமப்புணரியும்புணரிசூழ்
அயலும்வீழ்தூளியாலறிவருந்தகையவாம்

---

* மருப்பிணையினான் - இரண்டு கொம்புடையவன்.

† அரிகடம்மன்னவன் - வானரவரசன்.

மயனின்மாமகனும்வாலியுமறத்துடலினர்
இயலுமாமதியமீராறும்வர்தெய்தவே. (௮)

அற்றதாகியசெருப்புரிவுறும்மளவினிற்
கொற்றவாலியுமவன்குவவுதோள்வலியொடும்
பற்றி * யாசையினெடும்பணைமருப்பிணைபறித்
தெற்றினனவனும்வானிடியினின்றாறினன். (௯)

தலையின்மேலடிபடக்கடிதுசாய்கெடிதுதான்
உலையவாய்முழைதிறந்துதிரவாறொழுகமா
மலையின்மேலுருமிடித்தென்னவான்மண்ணெனும்
குலையமாதிசைகளுஞ்செவிடலக்குத்தினன். (௧0)

† கவரியிங்கிதுவெனக்காதலங்கொடுதிரித்
திவர்தலுங்குருதிபட்டிசைதொறுந்திசைதொறும்
துவரணிந்தனவெனப்பொசிதுதைந்தனதுணைப்
பவர்நெடும்பணைமதப்பகையின்வன்கரிகளே. (௧௧)

புயல்கடந்திரவிதன் ‡ புகல்கடந்தயலுளோர்
இயலுமண்டிலமிகந்தெனையவுந்தவிரமேல்
வயிரவன்காதலத்தவன்வலித்தெறியவன்
றுயிரும்விண்படரவிவ்வுடலுமிப்பரிசரோ. (௧௨)

முட்டிவான்முகடுசென்றளவியிம்முடையுடற்
கட்டிமால்வரையைவந்துறுதலுங்கருணையான்
இட்டசாபமுமெனக்குதவுமிவ்வியல்பினிற்
பட்டவாமுழுவதும்பரிவினுலுரைசெய்தான். (௧௩)

வேறு.

கேட்டனனமலனுங்கிளந்தவாறெலாம்
வாட்டொழிலிளவலையிதனைமைந்தநீ
ஓட்டெனவவன்கழல்விரலினுந்தினன்
மீட்டதுவிரிஞ்சனூடுற்றுமீண்டதே. (௧௪)

ஆயிடையரிக்குலமசனியஞ்சுற
வாய்திறந்தார்த்ததுவள்ளலோங்கிய
தூயகற்சோலையிலிருந்தசூழல்வாய்
நாயகவுணர்த்துவதுண்டொன்றென. (௧௫)

௫-வது. துந்துபிப்படலம் முற்றிற்று.

ஆ படலம் ௫-க்கு திருவிருத்தம் உ0உ.

* ஆசை-திக்கு. † கவரி-எருமைக்கடா. ‡ புகல்-இருப்பிடம்.

ஆறவது

கலன்காண் படலம்.

இவ்வழியாமியைந்திருந்ததோரிடை
வெவ்வழியிராவணன்கொணரமேலைநாள்
செவ்வழிநோக்கினின்றேவியேகொலாம்
* கவ்வையினரற்றினள்கழிந்தசேணுளாள். (௧)

உழையரினுணர்த்துவதுளவதென்றுன்னியோ
† குழைபொருகண்ணினாள்குறித்ததோர்நிலம்
மழைபொருகண்ணிணைவாரியோடுதன
இழைபொதிந்திட்டனள்யாங்களேற்றனம். (௨)

வைத்தனமிவ்வழிவள்ளனின்வயின்
உய்த்தினதந்தபோதுணர்தியாலெனக்
கைத்தலத்தன்னவைகொணர்ந்துகாட்டினன்
நெய்த்தலைப்பால்கலந்தனையநேயத்தான். (௩)

தெரிவுறநோக்கினன்றெரிவைமெய்யணி
எரிகனலெய்தியமெழுகின்யாக்கைபோல்
உருகினனென்கிலமுயிருங்கூற்றமாய்ப்
பருகினனென்கிலம்பகர்வதென்கொலாம் (௪)

நல்குவதென்னினிநங்கைகொங்கையைப்
புல்கியபூணுமக்கொங்கைபோன்றன
அல்குலினணிகளுமல்குலாயின
பல்கலன்பிரவுமப்படிவமானவே. (௫)

விட்டபேருணர்வினைவிளந்தவென்கெனோ
அட்டனவுயிரையவ்வணிகளென்கெனோ
கொட்டினசாந்தெனக்குளிர்ந்தவென்கெனோ
சுட்டனவென்கெனோயாதுசொல்லுகேன். (௬)

மோந்திடநறுமலரானமொய்ம்பினின்
ஏந்திடவுத்தரியத்தையேய்ந்தன
சாந்தமுமாயொளிதழுவப்போர்த்தலால்
பூந்துகிலாயவப்பூவைபூண்களே. (௭)

ஈர்த்தனசெங்கணீர்வெள்ளம்யாவையும்
போர்த்தனமயிர்ப்புறம்புளகும்பொங்குதோள்

* கவ்வை-ஓசை. † குழை-காதணி.

வேர்த்தனனென்கெனோவெதும்பினானென்கோ
தீர்த்தனையவ்வழியாதுசெப்புகேன். (அ)

விடங்கரந்தனையதோர்வெம்மைமீக்கொள
நெடும்பொழுதுணர்வினுயிர்ப்புநீங்கிய
தடம்பெருங்கண்ணனைத்தாங்கினான்றனை
துடம்பினிற்செறிமயிர்சுறுக்கென்றேறவே. (௯)

தாங்கினனிருத்தியத்துயரந்தாங்கலா
தேங்கியநெஞ்சினனிரங்கிவிம்முவான்
வீங்கியதோளினாய் * வினையினேனுயிர்
வாங்கினெனிவ்வணிவருவித்தேனெனா. (௧0)

அயனுடையண்டத்தினப்புறத்தையும்
மயர்வறநாடியென்வலியுங்காட்டியுன்
உயர்புகழ்த்தேவியையுதவற்பாலனால்
துயருழன்றயர்தியோசுருதிநூல்வலாய். (௧௧)

திருமகளனையவத்தெய்வக்கற்பினாள்
வெருவரச்செய்துளவெய்யவன்புயம்
இருபதுமீரைந்துதலையுமேவினான்
ஒருகணைக்காற்றுமோவுலகமேழுமே (௧௨)

ஈண்டுநீயிருந்தனேழொடேழெனாப்
பூண்டபெருலகங்கள்வலியிற்புக்கிடை
தேண்டியவ்வரக்கனைத்திருக்கித்தேவியைக்
காண்டியானிவ்வழிக்கொணருங்கைப்பணி. (௧௩)

ஏவல்செய்துணைவரேம்யாங்களீங்கிவன்
† தாவரும்பெருவலித்தம்பிநம்பினின்
சேவகமிதுவெனிற்சிறுகநோக்கியென்
மூவகையுலகுமின்மொழியின்முந்துமோ. (௧௪)

பெருமையோராயினும்பெருமைபேசிலார்
கருமமேயல்லதுபிறிதென்கண்டது
தருமநீயல்லதுதனித்துவேறுண்டோ
அருமையேதுனக்குநின்றவலங்கூர்தியோ. (௧௫)

முளரிமேல்வைகுவான்முருகற்றந்தவத்
தளிரியல்பாகத்தான்றடக்கையாழியான்
அளவியொன்றுவரேயன்றியையயில்
இளவியர்தனித்தனிக்கிடைப்பரோ ‡ துணை. (௧௬)

---

* வினையினேன்-பாவியாகியயான் † தாவரும்-கெடுதலற்ற.
‡ துணை-உனக்கொப்பு.

என்னுடைச்சிறுகுறைமுடித்தலீண்டொரீஇப்
பின்னுடைத்தாயினுமாகப்பேதுறு
மின்னிடைச்சனகியைமீட்டுமீடுமால்
பொன்னுடைச்சிலையினாய்விரைந்துபோயென்றான். (௧௭)

* எரிகதிர்க் † காதலனினையகூறலும்
அருவியங்கண்டிறந்தன்பினோக்கினான்
திருவுறைமார்பனுந்தெளிவுதோன்றிட
ஒருவகையுணர்வுவந்துரைப்பதாயினான். (௧௮)

விலங்கெழிற்றோளினாய்வினையினேனுமிவ்
‡ விலங்குவிற்கரத்தினுமிருக்கவேயவள்
கலன்கழித்தனளிதுகற்புமேவிய
பொலன்குழைத்தெரிவையர்புரிந்துளோர்கள்யார். (௧௯)

வாணெடுங்கண்ணியென்வரவுநோக்கயான்
தாணெடுங்கிரியொடுந்தடங்கடம்மொடும்
பூணொடும்புலம்பியிப்பொழுதுபோக்கினேன்
நாணொடுஞ்சிலைசுமந்துழலநாணிலேன். (௨௦)

ஆறுடன்செல்பவரஞ்சொன்மாதரை
வேறுளார்துயர்செயில்விலக்கிவெஞ்சமத்
தாறுறத்தம்முயிருகுப்பரென்பதும்
தேறினன்றுயரநான்றீர்க்ககிற்றிலேன். (௨௧)

கருங்கடறொட்டனர்கங்கைதந்தனர்
பொரும்புலிமானொடும்புனலூட்டினர்
பெருந்தகையென்குலத்தரசர்பின்னொரு
திருந்திழைதுயரநான்றீர்க்கநோற்றிலேன். (௨௨)

இந்திரற்குரியதோரிடுக்கண்டீர்த்திகல்
அந்தகற்கரிய § போரவுணற்றேய்த்தனன்
எந்தைமற்றவனின்வந்துதித்தயானுளேன்
வெந்துயர்க்கொடும்பழிவில்லிற்றாங்கினேன். (௨௩)

விரும்பெழிலெந்தையார்மெய்ம்மைவீயுமேல்
வரும்பழியென்றலான்மகுடஞ்சூடலேன்
$ கரும்பழிசொல்லியைப்பகைஞன்கைக்கொளப்
பெரும்பழிசூடினேன்பிழைத்ததென்னரோ. (௨௪)

---

* எரிகதிர்-சூரியன். † காதலன்-மகன். ‡ இலங்குவிற்கரத்தனும்என்றும்பாடம். ○ தேறி-உணர்ந்து. § போரவுணன்-போர்புரிந்த சம்பராசுரன். $ கரும்பழி-கரும்பினை இனிமையில்லாததாகச் செய்கின்ற,

என்னகொர்தின்னனபன்னி ‡ யீடழிந்
துன்னருந்துயரத்துச்சோர்கின்றான்றனைப்
பன்னருங்கதிரவன்புதல்வன்பையுள்பநூர்த்
தன்னவெந்துயரொனுமனக்கர்நீக்கினான். (௨௫)

அய்யநீயாற்றலிறாற்றினேனல.
துய்யனேயெனக்கினுறுதிவேறுண்டோ
வையகத்திப்பழிதீரமாய்வது
செய்வனின்குறைமுடித்தன்றிச்செய்கலேன். (௨௬)

என்றனனிராகவனினையகாலையில்
வன்றிறன்மாருதிவணங்கினானெடுங்
குன்றிவர்தோளிறைய்கூறவேண்டுவ
தொன்றுளத்தனைநீயுணர்ந்துகேளென. (௨௭)

கொடுந்தொழில்வாலியைக்கொன்றகோமகன்
கடுங்கதிரோன்மகனுக்கிக்கைவளர்
நெடும்படைகூட்டினாலன்றிநேடரி
தடும்படையரக்கர்தமிருக்கையானையாய். (௨௮)

வானதோமண்ணதோமாறவெற்பதோ
ஏனைமாநகர்தமிருக்கைப்பாலதோ
தேனுளதெரியலாய்தெரிவதன்றவர்
ஊர்நமக்குற்றுழியுறுதலுண்மையால். (௨௯)

எவ்வுலகங்களுமிமைப்பினெய்துவர்
வவ்வுவரவ்வழிமகிழ்ந்தயாவையும்
வெவ்வினைவந்தெனவருவர்மீள்வரால்
அவ்வவருறைவிடமறியற்பாலவோ. (௩0)

ஒருமுறையேபரந்துலகம்யாவையும்
திருவுறைவேறிடந்தேரவேண்டுமால்
வரன்முறைநாடிடவாம்பின்றாலுல
கருமையுண்டளப்பருமாணுவேண்டுமால், (௩௧)

எழுபத்தாகியவெள்ளத்தெம்படை
ஊழியிற்கடலெனவுலகம்போர்க்குமால்
ஆழியைக்குடிப்பினுமயன்செயண்டத்தைக்
கீழ்மடுத்தெடுப்பினுங்கிடைத்தசெய்யுமால். (௩௨)

ஆதலாலன்னதேயமைவதாமென
நீதியாய்நினைந்தனனெனநிகழ்த்தினான்

‡ ஈடழிந்து-நிலைகெட்டு.

சாதுவாமென்றவத்தனுவின்செலவனும்
போதுநாம்வாலிபாலென்னப்போயினர். (௩௩)

வேறு.

வெங்கணாளியேறுமீளிமாவும்வேககாகமும்
சிங்கவேறிரண்டொடுந்திரண்டவன்னசெய்கையார்
தங்குசாலமூலமார்தமாலமேலமாலைபோல்
பொங்குநாகமுந்துவன்றுசாரலூடுபோயினர் (௩௪)

உழையுலாநெடுங்கண்மாத * ரூசலூசலல்லவேல்
தழையுலாவுசந்தலர்ந்தசாரல்சாரலல்லவேல்
மழையுலாவுமூன்றிலல்லமன்றனுறுசண்பகக்
குழையுலாவுசோலைசோலையல்லபொன்செய்குன்றமே. (௩௫)

அறங்கணாறுமேனியாரரிக்கணங்களோடுமங்
கிறங்குபோதுமேறுபோதுமீறிலாதவோசையால்
கறங்குவார்கழற்கலன்கலிப்பமுந்துகண்முகிழ்த்
துறங்குமேகநன்குணர்ந்துமாகமீதுலாவுமே. (௩௬)

நீடுநாகமூடுமேகமோடநீருமோடநேர்
ஆடுநாகமோடமானயானையோடவாளிபோம்
மாடுநாகநீடுசாரல்வாளையோடும்வாவியூ
டோடுநாகமோடவேங்கையோடும் † யூகமோடவே. (௩௭)

மருண்டமாமலைத்தடங்கள்செல்லலாவவல்லமால்
தெருண்டிலாமதத்தயானைசீறிநின்றுசிந்தலால்
இருண்டகாரகிற்றடத்தொடித்துலர்ந்தசந்துவந்
துருண்டபோதழிந்ததேனெழுக்குபே ‡ ரிழுக்கினே. (௩௮)

○ மினன்மணிக்குலந்துவன்றிவில்லலர்ந்துமண்குலாய்
அனல்பரப்பவொப்பமீதிமைப்பவர்தவிப்பபோல்
புனல்பரப்பவொப்பிருந்தபொன்பரப்புமென்பரால்
இனையவிற்றடக்கைவீரரேகுகின்றகுன்றமே. (௩௯)

மருவியாடும்வாவிதோறும்வானயாறுபாயும்வந்
திருவியார்தடங்கண்மீனினேறுபாயுமாறுபோல்
அருவிபாயுமொன்றியொன்றினைபாயுமேனவிற்
குருவிபாயுமோடிமந்திகோடுபாயுமாடெலாம். (௪0)

---

* ஊசலல்லவேல்-ஊசல். ஊசலல்லாகன. † யூகம்-கருங்குரங்கு.
‡ இழுக்கு-வழுக்கல். ○ மினன்மணி-ஒளிவிடுமணி.

தேனிழுக்குசாரல்வாரிசெல்லமீதுசெல்ல * நாள்
மீனிழுக்குமன்றிவானவில்லிழுக்கும்வெண்மதிக்
கூனிழுக்குமற்றுலாவுகோளிழுக்குமென்பரால்
வானிழுக்குமேலவாயமன்றனூறுகுன்றமே. (சுக)

அன்னதாயகுன்றினூறுசென்றவீரரைத்தொடைத்
துன்னலாயடோசனைக்குழும்பரோரியிம்பரில்
† பொன்னினுடிழிந்ததன்னவாலிவாழ்பொருப்பிடம்
துன்னினூர்கள்செய்வதென்னையென்றுநின்றுசொல்லுவார். (சுஉ)

கூ-வது கலன்காண்படலம் முற்றிற்று.

ஆ படலம் கூ-க்கு திருவிருத்தம்-உசுசு.

ஏழாவது.

வாலிவதைப்படலம்.

அவ்விடத்திராமனீயழைத்துவாலியானதோர்
‡ வெவ்விடத்தின்வந்துபோர்விளைக்கு 0 மேல்லைவேறுநின்
றெவ்விடத்துணிந்தமைந்ததென்கருத்திதென்றனன்
$ தெவ்வடக்கும்வென்றியானுநன்றிதென்றுநிந்தியா. (க)

வார்த்தையன்னதாகவானியக்குதேரினுன்மகன்
நீர்த்தரங்கவேலையஞ்சநீலமேகநாணநேர்
வேர்த்துமன்னுளோரிரிந்துவிண்ணுளோர்கள்விம்மமேல்
ஆர்த்தவோசையீசனுண்டவண்டமுற்றுமுண்டதே. (உ)

இடித்துரப்பிவந்துபோரெதிர்த்தியேலடர்ப்பனென்
றடித்தலங்கள்கொட்டிவாய்மடித்தடுத்தலங்குதோள்
புடைத்துநின்றுளைத்தபூசல்புக்கதென்பமிக்கிடந்
துடிப்பவங்குறங்குவாலிதிண்செவித்தொளைக்கணே (ங)

வேறு.

§ மாற்பெருங்கடகரிமுழக்கம்வாளரி
ஏற்பதுசெவித்தலத்தென்னவோங்கிய
ஆர்ப்பொலிகேட்டனனமளிமேலொரு
பாற்கடல்கிடந்ததேயனையபான்மையான் (ச)

---

* நாள்மீன் நட்சத்திரம் † பொன்னினுடிழிந்தன் சுவர்க்கமே வந்திருந்தாற்போன்ற. ‡ எவிடமென்பது - எவ்விடவென்ருயது. 0 எல்லை-சமயம். $ தெவ்-பகை. மால்-மதயக்கம்

உருத்தனன்பொரவெதிர்ந்திளவலுற்றமை
வரைத்தடந்தோளினான்மனத்தினெண்ணினான்
சிரித்தனனவ்வொலிதிசையினப்புறத்
* திரித்ததவ்வுலகமொரேழொடேழையே. (௫)

எழுந்தனன்வல்விரைந்திறுதியூழியிற்
கொழுந்திரைக்கடல்கிளர்ந்தனையகொள்கையான்
அழுந்தியதக்கிரியருகின்மால்வரை
விழுந்தனதோள்புடைவிசித்தகாற்றினே. (௬)

போய்ப்பொடித்தனமயிர்ப்புறத்தவெம்பொறி
காய்ப்பொடுற்றெழுவடகனலுங்கண்கெடத்
தீப்பொடித்தனவிழிதேவர்நாட்டினும்
மீப்பொடித்தனபுகையுயிர்ப்புவீங்கவே. (௭)

கைக்கொடுகைத்தலம்புடைப்பக்காவலின்
திக்கயங்களுமதச்செருக்குச்சிந்தின
உக்கனவுருமினமுலைந்தவும்பரும்
நெக்கனநெரிந்தனநின்றகுன்றமே. (௮)

வந்தனென்வந்தனெனென்றவாசகம்
† இந்திரிமுதற்றிசையெட்டுங்கேட்டன
சந்திரன்முதலியதாரகைக்குழாம்
சிந்தினமணிமுடிசிகரந்தீண்டவே. (௯)

வீசினகாற்றின்வேர்பறிந்தவெற்பினம்
ஆசையையுற்றனவண்டப்பித்திகை
பூசினவெண்மயிர்பொடித்தவெம்பொறி
கூசினனந்தகன்குலைந்ததும்பரே. (௧௦)

கடித்தவாயெயிறுகுகனல்கள்கார்விசும்
பிடித்தவாயுருமுகுமினத்திற்சிந்தின
‡ தடித்துவீழ்வனவெனத்தகர்ந்துசிந்தின
வடித்ததோள்வலயத்தின்வயங்குகாசரோ. (௧௧)

ஞாலமுநாற்றிசைப்புனலுநாகரும்
மூலமுமுற்றிடமுடிவிற்றீக்குமக்
காலமுமொத்தனன்கடலிற்றான்கடை
ஆலமுமொத்தனனெவருமஞ்சவே. (௧௨)

ஆயிடைத்தாரையென்றமிழ்திற்றோன்றிய
வேயிடைத்தோளினாளிடைவிலக்கினாள்

* இரித்தது-அசைந்து விலக்கச்செய்தது. † இந்திரி-கிழக்கு.
‡ தடித்து-மின்னல்.

வாயிடைப்புகைவரவாலிகண்வரும்
தீயிடைத்தன்னெடுங்கூந்தறீகின்றாள். (௧௩)

விலக்கலைவிடுவிடுவிளித்தனானுரம்
கலக்கியக்கடல்கடைந்தமுதுகண்டென
உலக்கவின்னுயிர்குடித்தொல்லைமீள்குவல்
மலைக்குலமயிலென மடந்தைகூறுவாள். (௧௪)

கொற்றவநின்பெருங்குவவுத்தோள்வலிக்
கிற்றையனல்லனு * வீடுண்டேகுவான்
பெற்றிலன்பிறந்திலன்பெயர்த்தும்போர்செயற்
குற்றதுநெடுந்துணையுடைமையாலென்றாள். (௧௫)

மூன்றெனமுற்றியமுடிவில்பேருல
கேன்றுடனுற்றனவெனக்குநேரெனத்
தோன்றினுந்தோற்றவைதொலையுமென்றலின்
சான்றளவன்னவைதையல்கேட்டியால். (௧௬)

மந்தரநெடுவரைமத்துவாசுகி
அந்தமில்கடைகயிறடைகலாழியான்
சந்திரன்றூணெதிர்தருக்கின் † வாங்குநர்
இந்திரன்முதலியவமரரேனையோர். (௧௭)

பெயர்வுறவலிக்கவு ‡ மிடுக்கில்பெற்றியார்
அயர்வுறலுற்றதைநோக்கியானது
தயிரெனக்கடைந்தவர்க்கமுதந்தந்தவும்
மயிலியற்குயின்மொழிமறக்கலாவதோ. (௧௮)

ஆற்றினெனமரருமவுணர்யாவரும்
தோற்றனரெனையவர்சொலற்பாலதோ
கூற்றுமென்பெயர்சொலக்குலையுமாரினி
மாற்றவற்காகிவந்ததிருமாண்பினோர். (௧௯)

பேதையரெதிர்குவரெனினும்பெற்றுடை
ஊதியவரங்களுமுராமுமுன்றிற்
பாதியுமென்னதாற்பகைப்பதெங்ஙனம்
நீதுயரொழிகெனநின்றுகூறினான். (௨0)

அன்னதுகேட்டவளரசவாயவற்
கின்னுயிர்நட்பமைந்திராமனென்பவன்

* ஈடுண்டேகுவான்-தோற்றோடுபவன். † வாங்குநர்-கடைவோர்.
‡ மிடுக்கு-சாமர்த்தியம்.

உன்னுயர்கோடலுக்குடன்வந்தானெனத்
துன்னியவன்பினர்சொல்லினரென்றான். (உ௧)

இதுமுதல் ரு-வதுபாடல் இராமனறம்பிழையாதவனெனத்
தாரைக்கு வாலிகூறுதல்.

உழைத்தவல்லிருவினைக்கூறுகாண்கிலா
தழைத்தயருலகினுக் * கறத்தினாறெலாம்
இழைத்தவற்கியல்பலவியம்பியென்செய்தாய்
பிழைத்தனைபாவியுன்பெண்மையாலென்றான் (உஉ)

இருமையுநோக்குறுமியல்பினற்கிது
பெருமையோவிங்கிதிற்பெறுவதென்கொலோ
அருமையினின்றுயிரளிக்கு † மாறுடைத்
தருமமேதவிர்க்குமோதன்னைத்தானரோ. (உ௩)

ஏற்றபேருலகெலாமெய்தியீன்றவள்
மாற்றவளேவமற்றவடன்மைந்தனுக்
காற்றருமுவகையாலளித்தவையனைப்
போற்றலையின்னனபுகறற்பாலையோ. (உ௪)

நின்றபேருலகெலாநெருக்கிநேரினும்
வென்றிவெஞ்சிலையலாற்பிறிதுவேண்டுமோ
தன்றுணையொருவருந்தன்னில்வேறிலான்
புன்றொழிற்குரங்கொடுபுணருநட்பனோ. (உ௫)

தம்பியரல்லதுதனக்குவேறுயிர்
இம்பரினிலதெனவெண்ணியேய்ந்தவன்
எம்பியும்யானுமுற்றெதிர்ந்தபோரிடை
அம்பிடைதொடுக்குமோவருளினாழியான் (உ௬)

இருத்திநீயிறையவணிமைப்பில்காலையில்
உருத்தவனுயிர்குடித்துடன்வந்தாரையும்
கருத்தழித்தெய்துவென்கலங்கலென்றனன்
விரைக்குழல்பினனுரைவிளம்பவஞ்சினான். (உ௭)

வேறு.

ஒல்லைச்செருவேட்டுயர்வல்புயவோங்கலும்பர்
எல்லைக்குமப்பாலிவர்கின்றவிரண்டினோடும்
மல்லற்கிரியின்றலைவந்தனன்வாலிகீழ்பால்
தொல்லைக்கிரியின்றலைதோற்றியஞாயிறென்ன (உ௮)

---

* அறத்தினாறெலாம் இழைத்தவற்கு - தருமமார்க்கமனைத்துஞ் செய்த விராமற்கு.

† ஆறுடை-வழியினையுடைய.

நின்றானெதிர்யாவருநெஞ்சுநடுங்கியஞ்சத்
தன்றோள்வலியாற்றகைமால்வரைசாலும்வாலி
குன்றாவெந்துற்றனன் * கோளவுணன்குறித்த
வன்றாணிடைத்தோன்றியமாநரசிங்கமென்ன. (உக)

ஆர்க்கின்றபின்னோன்றனைநோக்கினன்றானுமார்த்தான்
வேர்க்கின்றவானத்துருமேறுவெறித்துவீழப்
போர்க்கின்றதெல்லாவுலகும்பொதிர்வுற்றபூசல்
கார்க்குன்றமன்னானிலந்தாவியகாலினென்ன. (௩௦)

அவ்வேலையிராமனுமன்புடைத்தம்பிக்கைய
செவ்வேசெலநோக்குதிதானவர்தேவர்நிற்க
எவ்வேலையெம்மேகமெக்காலொடெக்காலவெந்தீ
வெவ்வேறுலகத்திவர்மேனியையமானுமென்றான். (௩க)

வள்ளற்கிளையான்பகர்வானிவன்றம்முன்வாழ்நாள்
கொள்ளக்கொடுங்கூற்றுவனைக்கொணர்ந்தான்குரங்கின்
எள்ளற்கரும்போரஃதிசைகலனென்னுமின்னல்
உள்ளத்தினூன்றவுணர்வுற்றிலனென்றுமென்றான். (௩உ)

இளையோன் இராமனிடஞ் சுக்ரீவனை இகழ்ந்துரைத்தல்.

ஆற்றாதபின்னும்பகர்வானறத்தாறழுங்கத்
தேற்றாதுசெய்வார்களைத்தேறுதல்செவ்விதன்றால்
மாற்றானெனத்தம்முனைக்கொல்லியவந்துநின்றான்
வேற்றார்கடிறத்திவன்றஞ்சமென்வீரவென்றான். (௩௩)

அத்தாவிதுகேளெனவாரியன்கூறுவானிப்
பித்தாயவிலங்கினொழுக்கினைப்பேசலாமோ
எத்தாயர்வயிற்றினும்பின்பிறந்தார்களெல்லாம்
ஒத்தாற்பரதன்பெரிதுத்தமனாதலுண்டோ. (௩௪)

விற்றாங்குவெற்பன்னவிலங்கெழிற்றோளமெய்ம்மை
உற்றார்சிலரல்லவரேபலரென்பதுண்மை
பெற்றாருழைப்பெற்றபயன்பெறும்பெற்றியல்லால்
அற்றார்நவையென்றலுக்காகுநரார்கொலென்றான். (௩ரு)

வாலி சுக்ரீவயுத்தம்.

வீரத்திறலோரிவையின்னவிளம்பும்வேலை
தேரிற்றிரிவான்மகனிந்திரன்செம்மலென்றிப்
பாரிற்றிரியும்பனிமால்வரையன்னபண்பார்
மூரித்திசையானையிரண்டெனமுட்டினாரே. (௩௬)

---

* கோளவுணன் - கொலைத்தொழிலினையுடைய இரணியன்.

குன்றோடுகுன்றொத்தனர்கோளரிக்கொற்றவல்லே
றொன்றோடுசென்றொன்றெதிருற்றனவேயுமொத்தார்
நின்றார்திரிந்தார்நெடுஞ்சாரிகைலந்திரிந்த
வன்றோட்குயவன்றிரிமட்கலத்தாழியென்ன. (௩௭)

தோளோடுதோடேய்த்தலிற்றொன்னிலந்தாங்கலாற்றாத்
தாளோடுதாடேய்த்தலிற்றந்தழற் * பிறங்கல்
வாளோடுமின்னோடுவபோனடுவானினோடும்
கோளோடுகோளுற்றனவொத்தடர்த்தாற்கொதித்தார். (௩௮)

தந்தோள்வலிமிக்கவர்தம்மொருதாய்வயிற்றின்
வந்தோர் மடமங்கைபொருட்டுமலைக்கலுற்றார்
† சிந்தோடரியொண்கட்டிலோத்தமைகாதல்செற்ற
சுந்தோபசுந்தப்பெயர்த்தொல்லையினோருமொத்தார். (௩௯)

கடலொன்றினொடொன்றுமலைக்கவுங்காவன்மேருத்
திடலொன்றினொடொன்றமர்செய்யவுஞ்சீற்றமென்ப
துடல்கொண்டிரண்டாகியுடற்றவுங்கண்டிலநேர்
மிடலிங்கவர்வெந்தொழிற்கொப்புரைவேறுகாணேம். (௪0)

ஊகங்களினாயகர்வெங்கணுமிழ்ந்ததீயான்
மேகங்களெரிந்தனவெற்புமெரிந்ததிக்கின்
நாகங்களொடுங்கினநானிலமுங்குலைந்த
மாகங்களைநண்ணியவிண்ணவர்போய்மறைந்தார். (௪௧)

விண்மேலினரோநெடுவெற்பின்முகட்டினாரோ
மண்மேலினரோபுறமாதிரவீதியாரோ
கண்மேலினரோவெனயாவருங்காணநின்றார்
புண்மேலிரத்தம்பொடிப்பக்கடிப்பார்புடைப்பார். (௪௨)

ஏழொத்துடனாந்திசையெட்டொடிரண்டுமுட்டும்
ஆழிக்கிளரார்கலிக் ‡ கைம்மடங்கார்பினோசை
பாழித்தடந்தோளினுமார்பினுங்கைகள்பாய
ஊழிக்கிளர்காரிடியொத்ததுகுத்துமோதை. (௪௩)

வெவ்வாயெயிற்றான்மிடல்வீரர்கடிப்பமேச்சென்
றவ்வாயெழுசோரியதாரைகடோறும்வீச
எவ்வாயுமெழுந்தகொழுஞ்சுடர்மீன்கள்யாவும்
செவ்வாயைநிகர்த்தனசெக்கரையொத்தமேகம். (௪௪)

* பிறங்கல் மலை † சிந்தோடு கெடலும்பின்னிடுகின்ற.
‡ ஐம்மடங்கு ஐந்துபங்கு.

வேறு.

வெந்தவல்லிரும்பிடைநெடுங் * கூடங்கள்வீழ்ப்பச்
சிந்தியெங்கணுஞ்சிதருவபோற்பொறிதெறிப்ப
இந்திரன்மகன்புயங்களுமிரவிசேயுரனும்
சந்தவன்னெடுந்தடக்கைகடாக்கலிற்றகர்வ. (௪௫)

உரத்தினான்மடுத்தூன்றுவர்பாதமிட்டுதைப்பர்
கரத்தினால்விசைத்தெற்றுவர்கடிப்பர்நின்றிடிப்பர்
மரத்தினாலடித்துரப்புவர்பொருப்பினம்வாங்கிச்
சிரத்தின்மேலெறிந்துறக்குவர்தெழிப்பர்தீவிழிப்பர். (௪௬)

எடுப்பவர்பற்றியுற்றொருவனையொருவர்விட்டெறிவர்
கொடுப்பவர்வந்துறங்குத்துவர்கைத்தலங்குளிப்பக்
கடுப்பினிற்பெருங்கறங்கெனச்சாரிகைபிறங்கத்
தடுப்பர்பின்றுவரொன்றுவர்தழுவுவர்விழுவர். (௪௭)

வாலினாலுரம்வரிந்தனர்நெறிந்துகவலிப்பர்
காலினானெடுங்கால்பிடித்துடற்றுவர்கழல்வர்
வேலினாலறவெறிந்தனவிறல்வலி † யுகிரால்
தோலினாலுடனெடுவரைமுழையெனத்தொளைப்பர் (௪௮)

மண்ணகத்தனமலைகளுமரங்களுமற்றும்
கண்ணகத்தினிற்றோன்றியயாவையுங்கையால்
எண்ணகப்பறித்தெறிதலினெற்றலினிற்ற
விண்ணகத்தினைமறைத்தனமறிகடல்வீழ்ந்த. (௪௯)

வெருவிச்சாய்ந்தனர்விண்ணவர்வேறென்னைவிளம்பின்
ஒருவர்க்காண்டமொருவருந்தோற்றிலருடன்று
செறுவிற்றுய்த்தலிற்செங்கனல்வெண்மயிர்செல்ல
மூரிபுற்கானிடையெரிபரந்தனவெனமுனைவார். (௫0)

அன்னதன்மையராற்றலினமர்புரிபொழுதின்
வன்னெடுந்தடந்திரள்புயத்தடுதிறல்வாலி
சொன்னதம்பியைத் ‡ தும்பியையரிதொலைத்தென்ன
கொன்னகங்களிற்கரங்களிற்குலைந்துகமலைந்தான். (௫௧)

இராமன்சுக்கிரீவனை நும்மையறிந்துகொள்ளக் கொடிப்பூச்சூடிச் செல்லெனல்.

மலைந்தபோதி § னைந்திரவிசேயையன்மாடணுகி
உலைந்தசிந்தையோடுணங்கினன்வணங்கிடவுள்ளம்

* கூடங்கள்சம்மட்டிகள், † உகிரால்நகத்தால்.
‡ தும்பியையானையை. § இனைந்துவருந்தி.

குலைந்திடேலுமைவேற்றுமைதெரிந்திலங்கொடிப்பூ
மிலைந்துசெல்கெனவிடுத்தனனெதிர்த்தனன்மீட்டும். (ருஉ)

தயங்குதாரகைநிரைதொகுத்தணிந்தனபோல
வயங்குசென்னியன்வயப்புலிவானவல்லேற்றோ
டியங்குமார்ப்பினனொல்லைவந்தடுதிறல்வாலி
பயங்கொளப்புடைத்தெற்றினன்குத்தினன்பலகால். (ருங)

* அயிர்த்தசிந்தையனந்தகன்குலைகுலைந்தஞ்சச்
செயிர்த்துநோக்கினன்சினத்தொடுசிறுநகைசெய்யா
வயிர்த்தகையினுங்காலினுங்கதிர்மகன்மயங்க
உயிர்த்தலந்தொறும்புடைத்தனனடித்தனனுதைத்தான். (ருச)

கக்கினனுயிருயிர்ப்பொடுஞ்செவிகளிற்கண்ணின்
உக்கதாங்கெரிப்படலையோடுதிரத்தினொழுக்கம்
திக்குநோக்கினன்செங்கதிரோன்மகன்செருக்கிப்
புக்குமீக்கொடுநெருக்கினனிந்திரன்புதல்வன். (ருரு)

வாலிமீதிராமன் அம்பெய்தல்.

எடுத்துப்பாரிடையெற்றுவாம்பற்றியென்றிளவல்
† கடித்தலத்தினுங்கழுத்தினுந்தன்னிருகரங்கள்
மடுத்துமீக்கொண்டவாலிமேற்கோலொன்றுவாங்கித்
தொடுத்துநாணொடுதோளிறுத்திராகவன்றுரந்தான். (ருசா)

காரும்வார்சுவைக்கதலியின்கனியினைக்கழியச்
சேருஞ்சூசியிற்சென்றதுநின்றதென்செப்பின்
நிருநீர்தருநெருப்பும்வன்காற்றுங்கீழ்நிமிர்ந்த
பாருஞ்சார்வலிபடைத்தவனுரைத்தையப்பகழி. (ருஎ)

அலங்குதோள்வலியழிந்தனன்றம்பியை ‡ யருளான்
வலங்கொள்பாரிடையெற்றுவானுற்றபோர்வாலி
கலங்கிவல்விசைக்கால்கிளர்ந்தெறிவுறக்கடைக்கால்
விலங்கன்மேருவும்வேர்பறிந்தாமெனவீழ்ந்தான். (ருஅ)

சய்யம்வேரொடுமுருமுறச்சாய்ந்தெனச்சாய்ந்தான்
வய்யமீதிடைக்கிடந்தபோரடுதிறல்வாலி
வெய்யவன்றருமதலையைமிடல்கொடுகெவரும்
கய்நெகிழ்ந்தனனெகிழ்ந்திலன்கடுங்கணைகவர்தல். (ருகூ)

வெற்றிவீரனதடுகணையவன்மிடலுரத்து
டுற்றதப்புறத்துருதமுனுறுவலிக்கரத்தால்

* அயிர்த்த-சந்தேகித்த. † கடித்தலம்-இடுப்பினிடம். ‡ அருளான்-காவானாய்.

பற்றிவாலினும்காலினும்பிணித்தகப்படுத்தான்
கொற்றவெங்கொடு * மறலியுஞ்சிரதலங்குலைந்தான். (௬0)

எழுந்துவான்முகடிடித்துகப்படுப்பலென்றிவரும்
உழுந்துபேர்வுழி இத்திசைதிரித்திறுப்பலென்றுறுக்கும்
விழுந்துபாரினைவேரொடும்பறிப்பலென்றோரும்
அழுந்துமிச்சரமெய்தவனார்கொலென்றயிர்க்கும். (௬௧)

எற்றுங்கையினைநிலத்தொடுமெரிப்பொறிபறப்பச்
சுற்றுநோக்குறுஞ்சுடுசரத்தைத்துணைக்கரத்தால்
பற்றிவாலினுங்காலினும்வலியுறப்பறிப்பான்
† உற்றருமையினுலைவுறுமலையெனவுருளும். (௬௨)

தேவரோவெனவயிர்க்குமத்தேவரிச்செயலுக்
காவரோவவர்க்காற்றலுண்டோவெனுமயலோர்
யாவரோவெனநகைசெயுமொருவனேயிறைவர்
மூவரோடுமொப்பான்செயலாமெனமொழியும். (௬௩)

நேமிதான்கொலோநீலகண்டன்னெடுஞ்சூலம்
ஆமிதாங்கொலோவன்றெனிற்குன்றுருவயிலும்
நாமவிந்திரன்வச்சிரப்படையுமென்னடுவட்
போமெனாக் ‡ துணைபோதுமோயாதெனப்புழுங்கும். (௬௪)

வில்லினாற்றாப்பரிதிவ்வெஞ்சரமெனவியக்கும்
சொல்லினானெடுமுனிவரோதுண்டினாரென்னும்
பல்லினாற்கடிப்புறும்பலகாலுந்தன்னுரத்தைக்
கல்லியார்ப்பொடுபெறிக்குமப்பகழியைக்கண்டான் (௬௫)

சரமெனும்படிதெரிந்ததுபலபடச்சலித்தென்
உரமெனும்பதமுயிரொடுமுருவியவொன்றைக்
கரமிரண்டினும்வாலினுங்காலினுங்கழற்றிப்
பரமனின்னவன்பெயரறிகுவெனெனப்பறிப்பான். (௬௬)

ஓங்கரும்பெருந்திறலுடைமனத்தனுள்ளத்தன்
வாங்கினான்மற்றன்வாளியையாளிபோல்வாலி
ஆங்குநோக்கினனமரருமவுணரும்பிறரும்
வீங்கினார்கடோள்வீரரையார்வியவாதார். (௬௭)

மோடுதெண்டிரைமுரிதருகடலெனமுழங்கி
ஈடுபேருலகிறந்துளதாமெனற்கெளிதோ

* மறலி-யமன். † உற்றருமையின்-முயன்றுமுடியாமையின்
‡ துணைபோதுமோ-கூர்போதுமானதோ.

காமோனெவிலங்கல்கள்கடந்தக்கடலின்
ஊடுபோதலுற்றதனையொத்துயர்ந்துளதுதிரம். (௬௮)

வாலிமார்பிலிரத்தங்கண்ட சுக்கிரீவன்வருந்தி மயக்கிவிழுதல்.

வாசத்தாரவன்மார்பெனுமலைவழுங்கருவி
ஓசைச்சோரியைநோக்கினனுடன்பிறப்பென்னும்
பாசத்தாற்பிணிப்புண்டவத்தம்பியும்பசுங்கண்
நேசத்தாரைகள்சொரிதரநெடுநிலஞ்சேர்ந்தான். (௬௯)

பறித்தவாளியைப்பருஉவலித்தடக்கையாற்பற்றி
இறப்பனென்றுகொண்டெழுந்தனன் மேருவையிறுப்போன்
முறிப்பெனென்னினுமுறிவதன்றுமெனமொழியாப்
பொறித்தநாமத்தையறிகுவனோக்கினன்புகழோன். (௭௦)

வேறு.

மும்மைசாலுலகுக்கெல்லா * மூலமந்திரத்தைமுற்றும்
தம்மையேதமர்க்குநல்குந்தனிப்பெரும்பதத்தைத்தானே
இம்மையேயெழுமைநோய்க்குமருந்தினையிராமனென்னும்
செம்மைசேர்நாமந்தனைக்கண்களிற்றெரியக்கண்டான். (௭௧)

இல்லறந்துறந்தநம்பியெம்மனோர்க்காகத்தங்கள்
வில்லறந்துறந்தவீரன்றோன்றலால்வேதநூலிற்
சொல்லறந்துறந்திலாதசூரியன்மரபுந்தொல்லை
நல்லறந்துறந்ததென்னாநகைவரநாணுட்கொண்டான் (௭௨)

வெள்கிடமகுடஞ்சாய்க்கும்வெடிபடச்சிரிக்குமீட்டும்
உள்கிடுமிதுவுந்தானோரோங்கறமோவென்றுன்னும்
முள்கிடுங்குழியிற்புக்கமூரிவெங்களிநல்யானை
தொள்கொடுங்கிடந்ததென்னத்துயருழன்றழிந்துசோர்வான். (௭௩)

இராமன் வாலியெதிரே வருதல்.

இறைதிறம்பினனுலென்னேயிழிந்துளோரியற்கையென்னின்
† முறைதிறம்பினனுலென்றுமொழிகின்றமுகத்தான்முன்னர்
மறைதிறம்பாதவாய்மைமன்னவர்க்குமுன்னஞ்சொல்லும்
துறைதிறப்பாமற்காக்கத்தோன்றினுன்வந்துதோன்ற (௭௪)

இராமனைப் பார்த்து வாலியுரைத்தல்.

கண்ணுற்றான்வாலிநீலக்கார்முகில்கமலம்பூத்து
மண்ணுற்றுவரிவில்லேந்திவருவதேபோலுமாலைப்
புண்ணுற்றதனையசோரிப்பொறியொடும்பொடிப்பநோக்கி
எண்ணுற்றாயென்செய்தாயென்றேசுவானியம்பலுற்றான். (௭௫)

* மூலமந்திரம்-தாரகமந்திரம். † முறை-நீதி.

வாய்மையுமரபுங்காத்துமன்னுயிர்துறந்தவள்ளற்
றாயவன்மைந்தனேநீபரதன்முன்றோன்றினாயே
தீமைதான்பிறரைக்காத்துத்தான்செய்தாற்றீங்கன்றாமோ
தாய்மையுமன்றிநட்புந்தருமமுந்தழுவிநின்றாய். (எசு)

குலமிதுகல்வியீதுகொற்றமீதுற்றுநின்ற
நலமிதுபுவனமூன்றுநாயகமுன்னதன்றே
வலமிதிவ்வுலகந்தாங்கும்வண்மையீதென்றாற்றிண்மை
அலமரச்செய்யலாமோவறிந்திருந் * தயர்ந்துளார்போல். (எஎ)

கோவியற்றருமமுங்கள்குலத்துதித்தோர்கட்கெல்லாம்
ஓவியத்தெழுதவொண்ணாவுருவத்தாயுடைமையன்றோ
ஆவியைச்சனகன்பெற்றவன்னத்தையமிழ்தின்வந்த
தேவியைப்பிரிந்தபின்னைத்திகைத்தனைபோலுஞ்செய்கை. (எஅ)

அரக்கரோரழிவுசெய்துகழிவரேலதற்குவேறோர்
குரக்கினத்தரசைக்கொல்லமனுநெறிகூறிற்றுண்டோ
இரக்கமெங்குகுத்தாயென்பாலெப்பிழைகண்டாயப்பா
பரக்கழியிதுநீபூண்டாற்புகழையார்பரிக்கற்பாலார். (எகூ)

ஒலிகடலுலகந்தன்னினூர்தருகுரங்கின்மாடே
கலியதுகாலம்வந்துபரந்ததோகருணைவள்ளால்
மெலியவர்பாலதேயோவொழுக்கமும்விழுப்பந்தானும்
வலியவர்மெலிவுசெய்தாற்புகழன்றன்றிவசையுமுண்டோ. (அ0)

கூட்டொருவரையும்வேண்டாக்கொற்றவபெற்றதாதை
பூட்டியசெல்வமாங்கேதம்பிக்குக்கொடுத்துப்போந்து
நாட்டொருகருமஞ்செய்தாயெம்பிக்கிவ்வரசைநல்கிக்
காட்டொருகருமஞ்செய்தாய் ‡ கருமந்தானிதின்மேலுண்டோ. ()

அறைகழலலங்கல்வீரராயவர்புரிவதாண்மைத்
துறையெனலாயிற்றன்றேதொன்மையினன்றாற்கெல்லாம்
இறைவனீயென்னைச்செய்ததீதெனிலிலங்கைவேந்தன்
முறையலசெய்தானென்றுமுனிதியோமுனிவிலாதாய். (அஉ)

இருவர்போரெதிருங்காலையிருவருநல்லுற்றாரே
ஒருவர்மேற்கருணைதூண்டியொருவர்மேலொளித்துநின்று
வரிசிலைகுழையவாங்கிவாயம்புமருமத்தெய்தல்
தருமமோபிறிதொன்றாமோதகுகிலதென்னும்பக்கம். (அங)

---

* அயர்ந்துளார்-மறந்தார். † பரக்கழி-நிந்தை. இது திசைச்சொல்.
‡ கருமம்-பாவம்.

வேறு.

வீரமன்று * விதியன்றுமெய்ம்மையின்
வாரமன்றுநின்மண்ணினுக்கென்னுடல்
பாரமன்றுபகையன்றுபண்பொழிந்
தீரமன்றிதுவென்செய்தவாறுநீ. (அச)

இருமைநோக்கிநின்றியாவர்க்குமொக்கின்ற
அருமையாற்றலன்றோவறங்காக்கின்ற
பெருமையென்பதிதென்பிழைபேணல்விட்
டொருமைநோக்கியொருவற்குதவலோ. (அரு)

செயலைச்செற்றபகைதெறுவான்றெரிந்
தயலைப்பற்றித்துணையமைந்தாயெனின்
புயலைப்பற்றுமப்பொங்கரிபோக்கியோர்
முயலைப்பற்றுவதெனமுயற்சியோ. (அசு)

காரியந்தகளநிகரிறந்தொன்மை
ஊரியன்றமதிக்குளதாமெனச்
சூரியன்மரபுக்குமோர்தொன்மறு
† ஆரியன்பிறந்தாக்கினையாமரோ. (அஎ)

மற்றொருத்தன்வலிந்தறைகூவவந்
துற்றவென்னையொளித்துயிருண்டநீ
‡ இற்றையிற்பிறர்க்கும்மிகலேதெறு
நிற்றிபோலுங்கிடந்தநிலத்தரோ. (அஅ)

நூலியற்கையுநுங்குலத்துந்தையர்
போலியற்கையுஞ்சீலமும்போற்றலை
வாலியைப்படுத்தாயலை § மன்னற
வேலியைப்படுத்தாய்விறல்வீரனே. (அகூ)

தாரமற்றொருவன்கொளத்தன்கையிற்
பாரவெஞ்சிலைவீரம்பழிப்பதே
நேருநன்றுமறைந்துநிராயுதன்
மார்பினெய்யவோவில்லிகல்வல்லதே, (கூ0)

என்றுதானுமெயிறுபொடிபடத்
தின்றுகான்றுவிழிவழித்தீயுக
அன்றவாலியனையனகூறினன்
நின்றவீரனினையநிகழ்த்தினன். (கூக)

---

* விதிநியாயம். † ஆரியன் - அழகனுகியநீ.
‡ இற்றையில் - இன்றுமுதல். § மன்னறவேலி - இராசநீதியாகியவேலி

இராமன் வாலியைத்தான் கொலைபுரிந்தது நியாயமெனவுரைத்தல்.

பிலம்புக்காய்நெடுநாள்பெயராயெனாப்
புலம்புற்றான்வழிபோதலுற்றான்றனைக்
குலம்புக்கான்றமுதியர்குறிக்கொணீ
அலம்பொற்றாரவனையரசென்றலும். (௧௨)

வானமாளவென்றம்முனைவைத்தவன்
தானுமாளக்கிளையினிறத்தடிந்
தியானுமாள்வெனிருந்தரசாள்கிலென்
ஊனமானவுரைபகர்ந்தீரென. (௧௩)

பற்றியான்றபடைத்தலைவீரரும்
முற்றுணர்ந்தமுதியருமுன்பரும்
எற்றநும்மரசெய்துவையாமெனக்
கொற்றநன்முடிகொண்டதக்கோதிலான். (௧௪)

வந்தவுன்னைவணங்கிமகிழ்ந்தனன்
எந்தையென்கனினைத்தவாற்றலிற்
றந்தவன்னரசென்றுதருக்கிலான்
முந்தையுற்றது * சொற்றமுனிந்துநீ. (௧௫)

கொல்லலுற்றனையும்பியைக் † கோதவற்
றில்லையென்பதுணர்ந்துமிரங்கலை
அல்லல்செய்யேலுனக்கபயம்பிழை
புல்லலென்னவும்புல்லலைபொங்கினாய். (௧௬)

உற்றமுற்றுடையானுனக்காரமர்
தோற்றுமென்றுதொழுதுயர்கையனைக்
கூற்றமுன்னைக்கொடுப்பனென்றெண்ணினாய்
காற்றிசைக்கும்புறத்தையுநண்ணினான். (௧௭)

அன்னதன்மையறிந்துமருளலை
பின்னவனிவனென்பதும்பேணலை
வன்னிதானிடுசாபவரம்புடைப்
பொன்மலைக்கவனண்ணலிற்போகலை. (௧௮)

‡ ஈரமாவதுமிற்பிறப்பாவதும்
வீரமாவதுங்கல்வியின்மெய்ந்நெறி
வாரமாவதுமற்றொருவன்புணர்
தாரமாவதைதாங்குந்தருக்கதோ. (௧௯)

* சொற்ற-உரைத்தன. † கோது-குற்றம். ‡ ஈரம்-இரக்கம்.

மறந்திறம்பல்வலியமெனுமனம்
புறந்திறம்பவெளியவர்ப் * பொங்குதல்
அறந்திறம்பலருங்கடிமங்கையர்
திறந்திறம்பறெளிவுடையோர்க்கெலாம். (௧00)

தருமமின்னதெனுந்தகைத்தன்மையும்
இருமையுந்தெரிந்தெண்ணலையெண்ணினால்.
அருமை † யும்பிதன்னாருயிர்த்தேவியைப்
பெருமைநீங்கினையெய்தப்பெறுதியோ. (௧0௧)

ஆதலானுமவனெனக்காருயிர்க்
காதலானெனலானுசிறக்கட்டனென்
‡ எதிலாருமெளியரென்றுரையும்
தீதுதீர்ப்பதென்சிந்தைக்கருத்தரோ. (௧0௨)

பிழைத்ததன்மையிதுவெனப்பேரெழில்
தழைத்தவீரனுரைசெயத்தக்கிலா
இழைத்தவாலியியல்பலவித்துணை
விழைத்திறத்தொழிலென்னவிளம்புவான். (௧0௩)

அய்யநுங்களருங்குலக்கற்பினைப்
பொய்யின்மங்கையர்க்கேய்ந்தபுணர்ச்சிபோல்
செய்திலன்னெனமைத்தேமலர்மேலவன்
எய்தினெய்தியதாகவியற்றினான். (௧0௪)

மணமுமில்லைமறைநெறிவந்தன
குணமுமில்லைக்குலமுதற்கொத்தன
உணர்வுசென்றுழிச்செல்லுமொழுக்கலால்
திணமுசெய்யுமிணங்கியநேமியாய். (௧0௫)

பெற்றிமற்றிதுபெற்றதொர்பெற்றியிற்
குற்றமுற்றிலெனீயதுகோடியால்
வெற்றியுற்றதொர்வெற்றியினாயெனாச்
சொற்றசொற்றகைக்குற்றதுசொல்லுவான். (௧0௬)

கலங்கோடேவரிற்றோன்றிகவையறக்
கலங்கலாவறநன்னெறிகாண்டலின்
விலங்கலாமைவிளங்கியதாதலான்
§ அலங்கலார்க்கிதடுப்பதன்றுமவரோ. (௧0௭)

* பொங்குதல்-சீறுதல். † உம்பி-உன் தம்பி
‡ எதிலார்-பகைவர். § அலங்கலார்-இரக்கமுடையார்.

பொறியின்யாக்கையதோபுலனேக்கிய
அறிவின்மேலதன்றேவறத்தாறுதான்
நெறியு * நோன்மையைநேர்கின்றுணர்ந்தநீ
பெறுதியோபிழையுற்றுறுபெற்றிதான். (க0அ)

மாபெற்றியிடங்கர்வலித்திடக்
† கோடுபெற்றியகொற்றவற்கூயதோர்
பாடுபெற்றவுணர்வின்மயத்தினல்
வீடுபெற்றவிலங்கும்விலங்கரோ (க0கூ)

சிந்தைநல்லறத்தின்வழிச்சேர்தலால்
பைங்தொடித்திருவின்பரிவாற்றுவான்
வெந்தொழிற்றிறல்வீடுபெற்றெய்திய
‡ எந்தையும் $ மெருவைக்கரசல்லனே. (கக0)

நன்றுதீதென்றியறெரிநல்லறி
வின்றிவாழ்வதன்றேவிலங்கின்னிடை
நின்றநன்னெறிநீயறியாநெறி
ஒன்றுமின்மையுன் ¶ வாய்மையுணர்த்துமால். (ககக)

தக்கவின்னதகாதனவின்னவென்
றொக்கவுன்னலராயினுயர்ந்துள
மக்களும்விலங்கேமனுவின்னெறி
புக்கவேலவ்விலங்கும்புத்தேளிரே. (ககஉ)

காலனற்றல்கடிந்தகணிச்சியான்
பாலினற்றியபத்திபயத்தலான்
மாலினற்றருவன்பெரும்பூதங்கள்
நாலினற்றலுமாற்றுழிநண்ணினய். (ககங)

மேவருந்தருமத்துறைமேவினர்
ஏவரும்பவத்தாலிழிந்தோர்களும்
தாவருந்தவரும்பலதன்மைசால்
தேவரும்முளர்தீமைதிருந்தினர். (ககச)

இனையதாதலினெக்குலத்தியாவர்க்கும்
வினையினல்வருமேன்மையுங்கீழ்மையும்
அனையதன்மையறிந்துமழித்தனை
o மனையின்மாட்சியென்றுமனுநீதியான். (ககரு)

---

* நோன்மை-தவத்திறம். † கோடு-சங்கு.
‡ எந்தையும்-எனது சிறியதந்தையும். $ எருவை-கழுகு.
¶ வாய்மை-சொல். o மனையின்மாட்சி-இல்லறதருமம்.

வேறு.

அவ்வுரையமயக்கேட்டவரிகுலத்தரசுமாண்ட
செவ்வியோயனையதாகச்செருக்களத்துருத்தெய்யாதே
வெவ்விய * புளிஞரென்னவிலங்கியேமறைந்துவில்லால்
எவ்வியதென்னையென்றானிலக்குவனியம்பலுற்றான் (ககசு)

முன்புநின்றம்பிவந்துசரண்புகமுறையிலோயைத்
தென்புலத்துய்ப்பனென்றுசெப்பினன்செருவினீயும்
அன்பினையுயிருக்காகியடைக்கலமியானுமென்றி
என்பதுகருதிடண்ணன்மறைந்துநின்றெய்ததென்றான். (ககள)

கவிகுலத்தரசுமன்னன்கட்டுரைமனத்திற்கொண்டான்
அவியுறுமனத்தனாகியறத்திறனழியச்செய்யான்
புவியிடையண்ணலென்பதெண்ணினன்பொருந்திமுன்னே
செவியுறுகேள்விச்செல்வன்சென்னியையிறைஞ்சிச்சொன்னான். ()

தாயெனவுயிர்க்குநல்கித்தருமமுந்தகவுஞ்சால்பும்
நீயெனநின்றநம்பிநெறியினிநோக்குநேர்மை
நாயெனநின்றவெம்பாணவைய றவுணரலாமே
தீயெனபொறுத்தியென்றான்சிறியனசிந்தியாதான். (ககக)

இரந்தனன்பின்னுமெந்தையாவதுமெண்ண † தேற்றாக்
குரங்கெனகருதிநாயேன்கூறியமனத்துக்கொள்ளேல்
அறந்தைவெம்பிறவியென்னேய்க்கருமருந்தனையவையா
வரந்தருவள்ளாலொன்றுகேளெனமறுத்துஞ்சொல்வான். (கஉ0)

வேறு.

ஏவுகூர்வாளியாலெய்துநாயடியனேன்
ஆவிபோம்வேலைவாயறிவுதந்தருளினாய்
மூவர்நீமுதல்வனீமுற்றுநீ மற்றுநீ
பாவநீதருமநீபகையுநீயுறவுநீ (கஉக)

புரமெலாமெரிசெய்தோன்முதலினோர் ‡ பொருவிலா
வரமெலாமுருவியென்வசையிலாவலிமைசால்
உரமெலாமுருவியென்னுயிரெலாநுகருநின்
சரமலாற்பிறிதுவேறுளதரோதருமமே. (கஉஉ)

§ மாவலச்சூலியார்வாழ்த்துநர்க்குயர்வரம்
ஓவலற்றுதவனின்னொருதனிப்பெயரியம்
பாவலிப்புடைமையாலாகுமப்பொருளையாம்
தேவநிற்கண்டவெற்கரிதெனோதேரினே (கஉங)

---

* புளிஞர்-வேடர். † தேற்றா-தெளிவிலாத. ‡ பொருவிலா-ஒப்பற்ற.
§ இப்பாடல் சிலவேடுகளின்மாத்திரங் காணப்படுகின்றது.

யாவருமெவையுமாயிருதுவும்பயனுமாய்ப்
பூவுநல் * வெறியுமொத்தொருவரும்பொதுமையாய்
ஆவனியாவதென்றறிவினாருளினர்
தாவரும்பதமெனக்கருமையோதனிமையோ. (கஉ௪)

உண்டெனுந்தருமமேயுருவமாயுடையநிற்
கண்டுகொண்டேனினிக்காணவென்கடவெனோ
பண்டொடின்றளவுமேயென்பெரும்பழவினைத்
தண்டமேயடியனேற்குறுபதந்தருவதே. (கஉ௫)

வேறு.

மற்றினியுதவியுண்டோவானினுமுயர்ந்தமானக்
கொற்றவநின்னையென்னைக்கொல்லியகொணர்ந்துதொல்லைச்
சிற்றினக்குரங்கினோடுந்தெரிவுறச்செய்தசெய்கை
வெற்றரசெய்தியெம்பி † வீட்டரசெனக்குவிட்டான். (கஉ௬)

ஒவியவுருவநாயேனுளதொன்றுபெறுவதுன்பால்
பூவிய ‡ னறவமாந்திப்புந்திவேறற்றபோது
தீவினையியற்றமேனுமெம்பிமேற்சீறியென்மேல்
ஏவியபகழியென்னுங்கூற்றினையேவலென்றான். (கஉ௭)

இன்னுமொன்றிரப்பதுண்டாலெம்பியையும்பிமார்கள்
தன்முனைக்கொல்வித்தானென்றிகழ்வரேற்றடுத்திதக்கோய்
முன்முனேமொழிந்தாயன்றேயிவன்குறைமுடிப்பதையா
பின்னவன்வினையின்செய்கையதனையும்பிழைக்கலாமோ. (கஉ௮)

மற்றிலேனெனினுமாயவரக்கனைவாலிற்பற்றிக்
கொற்றவநின்கட்டூர்துகுரக்கியற்றொழிலுங்காட்டப்
பெற்றிலேன்கடந்தசொல்லிற்பயனிலைபிறிதொன்றேனும்
முற்றமுசெய்கென்றாலுமுரியனிவ்வநுமனென்றான். (கஉ௯)

அனுமனென்பவனையாழியையநின்செய்யசெங்கைத்
தனுவெனநினைதிமற்றென்றம்பிநின்றம்பியாக
நினைதியோர்துணைவரின்றோரனையவரிலைநீயீண்டவ்
வனிதையைநாடிற்கோடிவானினுமுயர்ந்ததோளாய். (கஙா0)

என்றவர்க்கியம்பிப்பின்னரிருந்தனனிளவறன்னை
வன்றனைத்தடக்கைநீட்டிவாங்கினன்றழுவிமைந்த
ஒன்றுனக்குரைப்பதுண்டாலுறுதியஃதுணர்ந்துகோடி
குன்றினுமுயர்ந்ததோளாய்வருந்தலையென்றகூறும். (கஙாக)

* வெறி-மணம். † வீட்டரசு-முத்தித்தானங்களுளுயர்ந்த பரமபதம்.
‡ நறவமாந்தி-கட்குடித்து.

மறைகளுமுனிவர்யாருமலர்மிசையயனுமற்றைத்
துறைகளின்முடிவுஞ்சொல்லுந்துணிபொரு * டுணிவிற்றாக்கி
அறைகழலிராமனாகியறநெறிநிறுத்தவந்த
இறையொருசங்கையின்றியெண்ணுதியெண்ணமிக்கோய். (கஉங)

† நிற்கின்றசெல்வம்வேண்டிநெறிநின்றபொருள்களெல்லாம்
கற்கின்றவிவன்றனுமங்கருதுவவிவனைக்கண்டாய்
பொற்குன்றமனையதோளாய்பொதுநின்றதலைமைநோக்கின்
எற்கொன்றவலியேசாலுமிதற்கொன்றுமேதுவேண்டா. (கஙங)

கைதவமியற்றியாண்டுங்கழிப்பருங்கணக்கிறீமை
வைகலும்புரிந்துளாரும் ‡ வானுயர்நிலையைவள்ளல்
எய்தவர்பெறுவரென்றாலிணையடியிறைஞ்சியேவல்
செய்தவர்பெறுவதையர்செப்பலாஞ்சீர்மைத்தாமோ. (கஙச)

அருமையென்விதியினாரேயுதவுவானமைந்தகாலை
இருமையுமெய்தினாய்மற்றினிச்செயற்பாலதெண்ணின்
திருமறுமார்பனேவல்சென்னியிற்சேர்த்திச்சிந்தை
ஒருமையினிறுவிமும்மையுலகினுமுயர்தியன்றே. (கஙரு)

மதவியல்குரக்குச்செய்கைமயர்வொடுமாற்றிவள்ளல்
உதவியையுன்னியாவியுற்றிடத்துதவுகிற்றி
பதவியையெவர்க்குநல்கும்பண்ணவன்பணித்தயாவும்
§ சிதைவிலசெய்துநொய்திற்றீர்வரும்பிறவிதீர்தி. (கஙசு)

அரசியற்பாரம்பூரித்தயர்த்தனையிகழாதையன்
மரைமலர்ப்பாதநீங்காவாழுதிமன்னரென்பார்
எரியனற்குரியாரென்றேயெண்ணுதியெண்ணம்யாவும்
புரிதிசிற்றடிமைகுற்றம்பொறுப்பரென்றெண்ணவேண்டா. (கஙஎ)

என்னவித்தகையவாயவுறுதிகள்யாவுமேங்கும்
பின்னவற்கியம்பிநின்றபேரெழிலானைநோக்கி
மன்னவர்க்கரசன்மைந்தமற்றிவன்சுற்றத்தோடும்
உன்னடைக்கலமென்றுந்தியுயர்கரமுச்சிவைத்தான். (கஙஅ)

வைத்தபின்னுரிமைத்தம்பிமாமுகநோக்கிவல்லே
உய்த்தனைகொணர்தியுன்றனோங்கருமகனையென்ன
அத்தலையவனையேவியழைத்தலினணைந்தானென்ப
கைத்தலத்துவரிநீரைக்கலக்கினான்பயந்தகாளை. (கஙகூ)

---

* தூணிவிலெனற்பாலது துணிவிலென்றாயது.
† நிற்கின்றசெல்வம் - இடையிலழியாத பரமபதச்செல்வம்
‡ வானுயர்நிலை - வானத்திலுயர்ந்தவிடம். § சிதைவில்-சிதைவிலவாக.

சுடருடைமதியமென்னத்தோன்றினன்றோன்றியாண்டும்
இடருடையுள்ளத்தோரையெண்ணினுமுணர்ந்திலாதான்
மடருடைநறுமென்சேக்கைமலையன்றியுதிரவாரிக்
கடலிடைக்கிடந்தகாதற்றுணைதனைக்கண்ணிற்கண்டான். (கசO)

கண்டனன்கலுழிநீருங்குருதியுங்காலமாலைக்
குண்டலமலம்புகின்றகுவவுத்தோட்குரிசிறிங்கள்
மண்டிலமுலகில்வந்துகிடந்ததம்மதியின்மீதா
விண்டலந்தன்னினின்றோர் * மீன்விழுந்தென்னவீழ்ந்தான். ()

எந்தையேயெந்தையேயிவ்வெழுதிரைவளாகத்தியார்க்கும்
சிந்தையாற்செய்கையாலோர்தீவினைசெய்திலாதாய்
நொந்தனையதுதானிற்கநின்முகநோக்கிக்கூற்றம்
வந்ததேயன்றோவஞ்சாதாரதன்வலியைத்தீர்ப்பார். (கசஉ)

தறையடித்ததுபோற்றீராத்தகையவித்திசைகடாங்கும்
கறையடிக்கழிவுசெய்த † கண்டகனெஞ்சமுன்றன்
நிறையடிக்கோலவாலினிலைமையையுன்னுந்தோறும்
பறையடிக்கின்றவந்தப்பயமறப்பறந்தவன்றே. (கசந)

குலவரைநேமிக்குன்றமென்றவானுயர்ந்தகோட்டின்
தலைகளுநின்பொற்றோளிற்றழும்பினிற்றவிர்ந்தவன்றே
மலைகொளுமரவுமற்றுமதியமும்பலவுந்தாங்கி
அலைகடல்கடையவேண்டினாரினிக்கடைவரையா. (கசச)

பஞ்சின்மெல்லடியாள்பாலன்பாதுகமல்லயாவும்
அஞ்சலித்தறியாச்செங்கையாணையாயமரர்யாரும்
எஞ்சலிருந்தாருன்னாலின்னமுதீந்தநீயோ
துஞ்சினை † வள்ளியோர்கணின்னின்யார்சொல்லற்பாலார். (கசரு)

ஆயனபலவும்பன்னியழுங்கினன்புழுங்கிநோக்கித்
தீயுறுமெழுகிற்சிந்தையலம்வருஞ்செங்கண்வாலி
நீயினியயர்வாயல்லையென்றுதன்னெஞ்சிற்புல்லி
நாயகனிராமன்செய்தநல்வினைப்பயனிதென்றான். (கசசு)

தோன்றலுமிறத்தலுந்துகளறத்துணிந்துநோக்கின்
மூன்றுலகத்தினோர்க்குமூலத்தேமுடிந்தவன்றே
யான்றவமுடைமையாலிவ்விறுதிவந்திசைந்ததியார்க்கும்
சான்றெனநின்றவீரன்றான்வந்துவீடுதந்தான். (கசஎ)

* மீன் - நட்சத்திரம். † கண்டகன் - கண்டிராவணன்.
‡ [illegible]யோர்-கொடையாளர்

பாலமைதவிர்நீயென்சொற்பற்றுதியென்னினைய
மேலொருபொருளுமில்லாமெய்ப்பொருள்வில்லுந்தாங்கிக்
கால்தரைதோயநின்றுகட்புலக்குற்றதம்மா
மால்தரும்பிறவிநோய்க்குமருந்தெனவணங்குமைந்த. (கசஅ)

என்னுயிர்க்கிறுதிசெய்தானென்பதை * யிறையுமெண்ணா
துன்னுயிர்க்குறுதிசெய்தியிவற்கமருற்றதுண்டேல்
பொன்னுயிர்த்தொளிரும்பூணாய்போதுநிலைமைநோக்கி
மன்னுயிர்க்குறுதிசெய்வான்மலரடிசுமந்துவாழ்தி. (கசகூ)

என்றனனினையவாயவுறுதிகள்யாவுஞ்சொல்லித்
தன்றுணைத்தடக்கையாரத்தனயனைத்தழுவிச்சாலக்
குன்றினுமுயர்ந்ததிண்டோட்குரக்கினத்தரசன்கொற்றப்
பொன்றிணிவயிரப்பைம்பூட்புரவலன்றன்னைநோக்கி. (கருo)

நெய்யடைநெடுவேற்றானைநீனிறநிருதரென்னும்
துய்யடைக்கனலியன்னதோளினன்றொழிலுந்தூயன்
பொய்யடையுள்ளத்தார்க்குப்புலப்படாப்புலவமற்றுன்
* கய்யடையாகுமென்றவ்விராமற்குக்காட்டுங்காலை (கருக)

தன்னடிதாழ்தலோடுந்தாமரைத்தடங்கணானும்
பொன்னுடைவாளைநீட்டிநீயிதுபொறுத்தியென்றான்
என்னலுமுலகமேழுமேத்தினவிறந்துவாலி
அந்நிலைதுறந்துவானுக்கப்புறத்துலகனானான். (கருஉ)

கய்யவணெகிழ்தலோடுங்கடுங்கணைகாலவாலி
வெய்யமார்பகதுட்டங்காலுருவிமேக்குயரமீப்போய்த்
துய்யநீர்க்கடலுட்டோய்ந்துதூய்மலரமரர்சூட்ட
அய்யன்வெங்விடாதகொற்றத் ‡ தாவம்வந்தடைந்ததன்றே. (கருங)

எ-வது. வாலிவதைப்படலம் முற்றிற்று.

ஆ- படலம் எ-க்கு திருவிருத்தம்-கருங.

---

* இறையும்-சிறிதும். † கையடை-அடைக்கலம்.
‡ ஆவம்-அம்புக்கூடு.

எட்டாவது

அரசியற்படலம்.

வாலியுமேகினான்விண்வரம்பிலாவாற்றலோடும்
பாலியாமுன்னர்நின்றபரிதிச்சேய்செங்கைபற்றி
ஆலிலைப்பள்ளியானுமங்கதனோடும்போனான்
வேல்விழித்தாரைகேட்டாள்வந்தவன்மேலின்வீழ்ந்தாள்.

குங்குமங்கொட்டியன்னகுவிமுலைக் * குவட்டுக்கொக்கப்
பொங்குவெங்குருதிபோர்ப்பப்புரிகுழல்சிவப்பப்பொற்றோள்
அங்கவனலங்கன்மார்பிற்புரண்டனளகன்றசெக்கர்
வெங்கதிர்விசும்பிற்றோன்றுமின்னெனத்திகழுமெய்யாள். (௨)

வேய்ங்குழல்விழிகொணல்யாழ்வீணையென்றினையாண
எங்கினளிரங்கிவிம்மியுருகினளிருகை † கூப்பித்
தாங்கினடலையிற்சோர்ந்துசரிந்துதாழ்குழல்கடள்ளி
ஓங்கியகுரலாற்பன்னியினையனவுரைக்கலுற்றாள். (௩)

வேறு.

வரைசேர்தோளிடநாளும்வைகுவேன்
கரைசேரா ‡ விடர்வேலைகாண்கலேன்
உரைசேராருயிரேயென்னுள்ளமே
அரைசேயானிதுகாணவஞ்சினேன். (௪)

துயராலேதொலையாதவென்னையும்
§ பயிராயோபகையாதபண்பினாய்
செயிர்தீராய்விதியானதெய்வமே
உயிர்போனாலுடலாருமுய்வரோ (௫)

நறிதாநல்லயிர்துண்ணாநல்கலின்
பிறியாவின்னுயிர்பெற்றபெற்றிதாம்
அறியாரோநமனாதன்றெனின்
சிறியாரோவுபகாரஞ்சிந்தியார் (௬)

அணங்கார்பாகனையாசைதோறுமுற்
றுணங்காவொண்மலர்கொண்டுனன்பொடும்
இணங்காக்காலமிரண்டொடொன்றினும்
வணங்காதித்துணைவைகவல்லையோ. (௭)

* குவடு-மலை. † கூப்பி-சேர்த்து.
‡ இடர்வேலை-துக்கசமுத்திரம். § பயிராயோ-அழையாயோ.

வரையார்தோள்பொடியாடவைகுவாய்
தரைமேலாயுறுதன்மையீதெனக்
கரையாதேனிடுபூசல்கண்டுமொன்
றுரையாயென்வயினூனம்யாவதோ. (அ)

நய்யாநின்றனெனுனிருந்திங்ஙன்
மெய்வானோர்திருநாடுமேவினாய்
அய்யாநீயெனதாவியென்பது
பொய்யோபொய்யுரையாதபுண்ணியா. (௯)

செருவார்தோளநின்சிந்தையுளெனெனின்
* மருவார்வெஞ்சரமெனையும்வௌவுமால்
ஒருவேனுள்ளுளையாகினாய்தியால்
இருவேமுள்ளிருவேமிருந்திலேம். (௧௦)

எந்தாய்நீயமிழ்தீயயாமெலாம்
உய்ந்தேமென்றுபகாரமுன்னுவார்
நந்தாநாண்மலர்சிந்திநண்பொடு
வந்தாரோவெதிர்வானுளோரெலாம். (௧௧)

ஓயாவாளியொளித்துநின்றெய்வான்
ஏயாவந்தவிராமனென்றுளான்
வாயாலேயினனென்னின்வாழ்வெலாம்
ஈயாயோவமிழ்தேயுமீகுவாய். (௧௨)

சொற்றேன்முந்துறவன்னசொற்கொளாய்
அற்றானன்னதுசெய்கலானென
உற்றாயும்பியை † யூழிகாணுநீ
இற்றாய்நானுனையென்றுகாண்கெனோ. (௧௩)

நீருமேருவுநீநெருக்கினால்
மாறோர்வாளியுன்மார்பையீர்வதோ
தேறேன்யானிதுதேவர்மாயமோ
வேறோர்வாலிகொலாம்விளிந்துளான். (௧௪)

தகைநேர்வண்புகழ்நின்றுதம்பியார்
பகைநேர்வாருளரானபண்பினால்
உகநேர்சிந்திபுலர்ந்தழிந்தவால்
மகனேகண்டிலையோநம்வாழ்வெலாம். (௧௫)

அருமந்தற்றமகற்றும்வில்லியார்
ஒருமைந்தற்குமடாததன்னினார்

* மருவார்-பகைவர். † ஊழி-அழிவு.

தருமம்பற்றியதக்கவர்க்கெலாம்
கருமங்கட்டளையென்றல் * கட்டதோ. (௧௬)

என்றாளின்னனபன்னியின்னலோ
டொன்றாளுணர்வேதுமுற்றிலாள்
நின்றாளந்நிலைநோக்கிநீதிசால்
வன்றாண்மால்வரையன்னமாருதி (௧௭)

மடவாராலிமடந்தைமுன்னர்வாழ்
இடமேவும்படியேவிவாலிபால்
கடன்யாவுங்கடைகண்டுகண்ணனோ
டுடனாவுற்றவெலாமுணர்த்தலும். (௧௮)

அகம்வேரற்றகவீசருக்கனார்
புகமேலைக்கிரிபுக்கபோழ்தினின்
நகமேயொத்தகுரக்குநாயகன்
முகமேயொத்ததுமூரிமண்டிலம். (௧௯)

மறைந்தான்மாலையருக்கன்வள்ளியோன்
உறைந்தான்மங்கைதிறத்தையுன்னுவான்
குறைந்தானெஞ்சிகுறைந்தழுங்குவான்
நிறைந்தார்கங்குலின்வேலைநீங்கினான். (௨௦)

புதல்வன்பொன்மகுடம் † பொறுக்கலான்
முதல்வன்பேருவகைக்குமூர்த்துவான்
வும்பூமகள்சேரவொண்மலர்க்
கதவஞ்செய்யகரத்தினீக்கினான். (௨௧)

அதுகாலத்தவருட்குநாயகன்
மதிசாறம்பியைவல்லையேவினான்
கதிரோன்மைந்தனையையகைகளான்
விதியான்மௌலியிலைச்சுவாயென்றான். (௨௨)

அப்போதேயருணின்றவண்ணலும்
மெய்ப்போர்மாருதிதன்னைவீரநீ
இப்போதேகொணரின்னசெய்வினைக்
கொப்பாம்யாவையுமென்றுணர்த்தலும். (௨௩)

‡ மண்ணுந்நீர்முதன்மங்கலங்களும்
எண்ணும்பொன்முடியாதும்யாவையும்

* கட்டதோ-பொய்யோ. † பொறுக்கலான்-தரித்தலால்.
‡ மண்ணும்-அபிடேகிக்கின்ற.

நண்ணும்வேலையினம்பிதம்பியிம்
திண்ணஞ்செய்வனசெய்துசெம்மலே. (௨௪)

மறையோராசிவழங்கவானுளோர்
நறைதோய்நாண்மலர்தூவநன்னெறிக்
கிறையோன்றன்னிளையோனவ்வேந்தலைத்
துறையோர்நூன்முறைமௌலிசூட்டினான். (௨௫)

பொன்மா * மௌலிபுனைந்துபொய்யிலான்
தான்மணக்கழுமுழும்வேலையின்
நன்மார்பிற்றழுவுற்றநாயகன்
சொன்னான்முற்றியசொல்லினெல்லையான். (௨௬)

வேறு.

ஈண்டுநின்றேகிநீநின்னியல்பமையிருக்கையெய்தி
வேண்டுவமரபினெண்ணிவிதிமுறையியற்றிவீர
பூண்டபேரரசுக்கேற்றயாவையும்புரிந்துபோரில்
மாண்டவன்மைந்தனோடும்வாழ்திநற்றிருவின்வைகி. (௨௭)

வாய்மைசாலறிவின்வாய்த்தமந்திரமாந்தரோடும்
தீமைதீரொழுக்கின்வந்ததிறத்தொழின்மறவரோடும்
தூய்மைசால் † புணர்ச்சிபேணித்துகளறுதொழிலையாகிச்
சேய்மையோடணிமையின்றித்தேவரிற்றெரியநிற்றி. (௨௮)

புகையுடைத்தென்னினுண்டுபொங்கனலங்கென்றுன்னும்
மிகையுடைத்துலகநூலோர்வினயமும்வேண்டற்பாற்றே
பகையுடைச்சிந்தையார்க்கும்பயனுறுபண்பிற்றீரா
நகையுடைமுகத்தையாகியின்னுரைநல்குநாவால் (௨௯)

தேவருமருடர்கொத்தசெயிரறுசெல்வமஃதுன்
காவலுக்குரியதென்றாலன்னதுகருதிக்காண்டி
ஏவருமினியநண்பரயலவர்விரவாரென்றிம்
மூவகையியல்பிற்றாகுமுனைவர்க்குமுலகமூன்றின். (௩௦)

செய்வனசெய்தல்யாண்டுந்தீயனசிந்தியாமல்
வெய்யனவந்துபோதும்வசையிலவினியகூறல்
மெய்யனவழங்கல்யாவுமேவினவெஃகலின்மை
உய்வனவாக்கித்தம்மோடுயர்வறவுயர்ந்ததோனாய் (௩௧)

சிறியரென்றிகழ்ந்து ‡ நொய்வுசெய்வனசெய்யன்மற்றிந்
நெறியிகழ்ந்தியானோர்தீமையிழைத்தலானுணர்ச்சிநீண்டு

* மௌலி-மகுடம். † புணர்ச்சிபேணி-கலந்தாலோசித்து.
‡ நொய்வு-இகழ்வு.

சூரியதாமேனியாயகூனியாற்குவவுத்தோளாய்
வெறியனவெய்திநொய்தின்றெந்துயர்க்கடலின்வீழ்ந்தேன். (௩௨)

மங்கையர்பொருட்டாலெய்துமாந்தர்க்குமரணமென்றல்
சங்கையின்றுணர்திவாலிசெய்கையாற்சாலுமின்னும்
அங்கவர்திறத்தினானேயல்லலும்பழியுமாதல்
எங்களிற்காண்டியன்றேயிதற்குவேறேதியாதோ. (௩௩)

நாயகனல்லனம்மைநனிபயந்தெடுத்துநல்கும்
தாயெனவினிதுபேணத்தாங்குதிதாங்குவாரை
ஆயதுதன்மையேனுமறவரம்பிகவாவண்ணம்
தீயனவந்தபோது * சுடுதியாற்றீமையோரை. (௩௪)

இறத்தலும்பிறத்தலுமென்பனவிரண்டும்யாண்டும்
திறத்துளிநோக்கிற்செய்தவினைதரத்தெரிந்தவன்றே
புறத்தினியுரைப்பதென்னேபூவின்மேற்புனிதற்கேனும்
அறத்தினதிறுதிவாழ்நாட்கிறுதியஃதுறுதியென்ப. (௩௫)

ஆக்கமுங்கேடுந்தாஞ்செயறத்தொடுபாவமாய
நோக்கிவேறுண்மைதேரார்பொருவரும்புலமைநூலோர்
தாக்கினவொன்றோடொன்றுதருக்குருஞ்செருவிற்றக்கோய்
பாக்கியமின்றிமற்றும்பாவத்தைப்பற்றலாமோ. (௩௬)

இன்னவைதகைமையென்பவியல்புளிமரபினெண்ணி
மன்னரசியற்றியென்கண்வருவழிமாரிக்காலம்
பின்னுறமுறையினுன்றன்பெருங்கடற்சேனையோடும்
† துன்னுதிபோதியென்றான்சுந்தரனவனுஞ்சொல்வான் (௩௭)

சூரங்குறையிருக்கையென்னுங்குற்றமேகுற்றமல்லால்
அரங்கெழுதுறக்கநாட்டுக்கரசெனலாமதன்றே
மரங்கிளரருவிக் ‡ குன்றம்வள்ளனீமனத்தினெம்மை
இரங்கியபணியாமெய்தவிருத்தியாற்சிலநாளெம்பால். (௩௮)

§ அரிந்தமநின்னையண்மியருளுக்குமுரியேமாகிப்
பிரிந்துவேறெய்துஞ்செல்வம்வெறுமையிற்பிறிதொன்றாமால்
கருந்தடங்கண்ணினாளைநாடலாங்காலங்காறும்
இருந்தருடருதியெம்மோடென்றடியிணையின்வீழ்ந்தான். (௩௯)

ஏந்தலுமிதனைக்கேளாவின்னிளமுறுவ ¶ னாற
வேந்தமையிருக்கையெம்போல்விரதியர்விழைதற்கொவ்வா

* சுடுதி-தண்டித்தி. † துன்னுதி அடைவாய். ‡ குன்றம்-குன்றத்தில்
§ அரிந்தம-நாராயணனே. ¶ நாற-தோன்ற.

போந்தவணிருப்பினெம்மைப்போற்றவேபொழுதுபோமால்
சேர்ந்தனைநிற்கமுன்பவ்வரசியற்றருமந்தீர்தி. (௪0)

ஏழிரண்டாண்டியான்போந்தெரிவனத்திருக்கவென்றேன்
வாழியாயரசர்வைகும்வலநகர்வைக * லொல்லேன்
பாழியந்தடந்தோள்வீரபார்த்திலைபோலுமன்றே
யாழிசைமொழியோடன்றியானுறையின்பமென்றோ. (௪௧)

† தேவுவேறாக்கன்வைத்தசேமத்துளிருப்பத்தான்றன்
ஆவிபோற்றுணைவரோடுமளவிடற்கரியவின்பம்
மேவினனிராமனென்றலையவிவ்வெய்யமாற்றம்
பூவகையுலகமுற்றுங்காலத்துமுற்றவற்றோ. (௪௨)

இல்லறந்துறந்திலாதோரியற்கையையிழந்துபோரின்
வில்லறந்துறந்துவாழ்வேனென்கின்னமேன்மையில்லாச்
சில்லறம்புரிந்துநின்றதீமைகடருமாறு
நல்லறந்துறந்தநோன்பினவையறநோற்பலென்றான். (௪௩)

அரசியற்குரியயாவுமாற்றுழியாற்றியான்ற
திரைசெயற்குரியசேனைக்கடலொடுந் ‡ திங்கணான்கின்
§ விரைசுகவென்பானின்னைவேண்டினன்வீரவென்றான்
உரைசெயற்கெளிதுமாகியரிதுமாமொழுக்கினின்றான். (௪௪)

மறித்தொருமாற்றங்கூறான்வானுயர்கொற்றத்தன்னான்
குறிப்பறிந்தொழுகன்மாதோகோதிலாதவென்னா
நெறிப்படர்கண்கள்பொங்கிநீர்வாரநெடிதுதாழ்ந்து
பொறிப்பருந்துன்பமுன்னாக்கவிக்குலத்தரசன்போனான். (௪௫)

வாலிகாதலனுமாண்டுமலரடிவணங்கினானை
நீலமாமேகமன்னநெடியவனருளினோக்கிச்
சீலநீயுடையையாதலிவன்சிறுதாதையென்னா
மூலமேதந்தநுந்தையாமெனமுறையினிற்றி. (௪௬)

என்னமற்றினையகூறியேகவற்றொடரவென்றான்
பொன்னடிவணங்கிமற்றைப்புகழுடைக்குரிசில்போனான்
பின்னர்மாருதியைநோக்கிப்பேரெழில்வீரநீயும்
அன்னவனரசுக்கேற்றதாற்றுதியறிவினென்றான். (௪௭)

பொய்த்தலிலுள்ளத்தன்புபொழிகின்றபுணர்ச்சியானும்
இத்தலையிருந்தானேயினவெனக்குத்தக்க

* ஒல்லேன்-கூடாதவனாக இருக்கின்றேன். † தேவி-சானகி.
‡ திங்கள்-மாதம். § விரைசுக-நெருங்குக.

கைத்தொழில்செய்வனென் றுகழலிணைவணங்குங்காலை
மெய்த்தலைநின்றவீரனிவ்வுரைவிளம்பிவிட்டான். (௪௮)

நிரம்பினானொருவன்காத்தநிறையரசிறுதிநின்ற
வரம்பிலாததனைமற்றோர்தலைமகன்வலியிற்கொண்டால்
* அரும்புவாநலனுந்தீங்குமாகலினையநின்போற்
பெரும்பொறையறிவினோரானிலையினைப்பெறுவதம்மா. (௪௯)

† ஆன்றவற்குரியதாயவரசினைநிறுவியப்பால்
என்றனக்குரியதாயதானகருமமுமியற்றற்கொத்த
சான்றவர்நின்னினில்லையாதலாற்றருமந்தானே
போன்றநீயானேவேண்டவத்தலைபோதியென்றான். (௫௰)

ஆழியானனையகூறவாணையீதாகினஃதே
வழியாய்ப்புரிவனென்றுவணங்கிமாருதியும்போனான்
சூழிமால்யானையன்னதம்பியுந்தானுந்தொல்லை
ஊழிநாயகனும்வேறோருயர்தடங்குன்றமுற்றார். (௫௧)

ஆரியனருளிற்போயவ்வகன்மலையகத்தனான
சூரியன்மகனுமானத்துணைவருங்கிளையுஞ்சுற்றத்
தாரையைவணங்கியன்னாடாயெனத்தந்தைமுந்தைச்
சீரியன்சொல்லேயென்னச்செவ்விதினரசுசெய்தான். (௫௨)

வளவரசெய்திமற்றைவானரவீரர்யாரும்
இளைஞரினுதவவாணைகிளர்திசையளப்பக்கேளோ
டளவிலவாற்றலாற்றவன்மையங்கதன்றங்கள்செல்வத்
திளவரசியற்றவேலியினிதினிருந்தானிப்பால். (௫௩)

‡ வள்ளலுமவணின்றேகிமதங்கனதிருக்கையான
வெள்ளவான்குடுமிக்குன்றத்தொருசிறைமேவிமெய்ம்மை
அள்ளுறுகாதற்றம்பியன்பினாலமைக்கப்பட்ட
எள்ளலில்சாலையெய்தியினிதினிருந்தகாலை. (௫௪)

அ-வது அரசியற்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-சருக.

---

* அரும்புவ-தோன்றுவ. † ஆன்றவர்-உயர்ந்தோர்.
‡ வள்ளல்-வரையாது கொடுப்போன்.

ஒன்பதாவது.

கார்காலப்படலம்.

இதுமுதல் ௫0-பாடல்கள் மழைக்கால வருணனை.

மாவியல்வடதிசைநின்றுவானவன்
ஓவியமேயெனவொளிக்கவின்குலாம்
தேவியைநாடியமுந்தித்தென்றிசைக்
கேவியதூதெனவிரவியேகினான். (க)

* பையணைப்பஃறப்பாந்தளேந்திய
மொய்நிலத்தகளியின்முழங்குநீர்நெயின்
வெய்யவன்விளக்கமாமேருப்பொன்றிரி
மய்யெடுத்தொத்ததுமழைத்தவானமே. (உ)

† நண்ணுதலருங்கடனஞ்சநுங்கிய
கண்ணுதல்கண்டத்தின்காட்சிகாணலாய்
விண்ணகமிருண்டதுவெயிழுன்வெங்கதிர்
தண்ணியமெலிந்தனதழைத்தமேகமே. (௩)

நஞ்சினினளிர்நெடுங்கடலினங்கையர்
அஞ்சனநயனத்தினவிழ்ந்தகூந்தலின்
வஞ்சனையரக்கர்தம்வடிவிற்செல்கையின்
நெஞ்சினினிருண்டதுநீலவானமே. (௪)

நாட்களினளிர்கடனாகாவுற
வேட்கையிற்பருகியமேகமின்னுவ
வாட்கைகண்மயங்கி செருவின்வார்மதப்
‡ பூட்கைகணிறைந்தபுண்டிறப்பபோன்றவே. (௫)

நீனிறப்பெருங்கரிநிறைத்தநீர்த்தெனச்
சூனிறமுகிற்குலந்துவன்றிச்சூழ்திரை
மானிறநெடுங்கடல்வாரிமூரிவான்
மேனிரைத்துளதெனமுழக்கமிக்கதே. (௬)

அரிப்பெரும்பெயரவன்றுதலினோணி
விரிப்பவுமொத்தனவெற்புமீதுதீ
எரிப்பவுமொத்தனவேசிலாசைகள்
சிரிப்பவுமொத்தனதெரிந்தமின்னெலாம். (௭)

---

* பையணை விடப்பையினையுடைய பாம்பாகிய அணை இஃதாகுபெயர்.
† நண்ணுதலரும்-அருகிலடைதற்கரிய. ‡ பூட்கை யானை.-மூரிபெரிய

* மாதிரக்கருமகன் மாரிக்கார்மழை
யாதினுமிருண்டவிண்ணிருந்தைக்குப்பையின்
கூதிர்வெங்காலனடுத் துருத்திக்கோளமைத்
தூதுவெங்கனலுமிழுலையுமொத்ததே. (அ)

பிரிந்துறை மகளிரும்பிலத்தபாந்தளும்
எரிந்துயிர்நடுங்கிடவிரவியின்கதிர்
அரிந்தனவாமெனவசனிகாலென
விரிந்தன திசைதொறுமிசையின்மின்னெலாம். (கூ)

சூடின மணிமுடித்துகளின் விஞ்சையர்
கூடுறைநீக்கியகுருதிவாட்களும்
ஆடவர்பெயர்தொறுமாசையானையின்
ஓடைகளொளிபிறழ்வனவுமொத்ததே. (கூ0)

எண்வகைநாகங்கடிசைகளெட்டையும்
கண்ணினாவளைத்தனையமின்னகக்
† கண்ணுன் மெய்வடிவெனக்கருகிக்கார்விசும்
புண்ணிறையுயிர்ப்பென ‡ வூதைபொங்கவே. (கக)

தலைமையுங்கீழ்மையுந்தவிர்தலின்றியே
மலையினுமரத்தினுமற்றுமுற்றினும்
விலைநினைந்துளவழிவிலங்கும்வேசையர்
உலைவுறுமனமெனவுலாயதூதையே. (கஉ)

அழுங்குறுமகளிர்த § மன்பர்த்தீர்ந்தவர்
புழுங்குறுபுணர்முலைகொதிப்பப்புக்குலாய்க்
கொழுங்குறைத்தசையெனவீர்ந்துகொண்டது
விழுங்குறுபேயெனவாடைவீங்கிற்றே. (கங)

ஆர்த்தெழுதுகள்விசும்படைத்தலாலுமின்
கூர்த்தெழுவாளெனப்பிறழுங்கோட்பினும்
தார்ப்பெரும்பணையின்விண்டழுங்குதாவினும்
போர்ப்பெருங்களமெனப்பொலிந்ததம்பரே. (கச)

இன்னகைச்சனகியைப்பிரிந்தவேந்தன்மேல்
மன்மதன்மலர்க்கணைவழங்கினனெனப்
பொன்னெடுங்குன்றின்மேற்பொழிந்ததாரைகள்
மின்னெடுந்துவன்றினமேகராசியே. (கரு)

---

* கருமகன்-தொழிலாளி, அவன் கொல்லன்
† கண்ணுதன்மிடறெனக்கருகி என்றும்பாடம்.
‡ ஊதை-ஒருவகைக் காற்று. § அன்பர்-நாயகர்.

கல்லிடைப்படுந்துளித்துவலைகாரிடு
வில்லிடைச்சரமெனவிசையின்வீழ்ந்தன
* செல்லிடைப்பிறந்தசெங்கனலிற்சிந்தின
எல்லிடைமணிசிதர்ந்தழலியற்றல்மேல். (கசு)

† மள்ளர்கண்மறுபடைமானயானைமேல்
வெள்ளிவேலெறிவனபோன்றமேகங்கள்
தள்ளருந்துளிபடத்தகர்ந்துசாய்கிரி
புள்ளிவெங்கடகரிபுரள்வபோன்றவே. (கஎ)

வானிடுதனுநெடுங்கருப்புவின்மழை
மீனெடுங்கொடியவன்பகழிவீழ்துளி
தானெடுஞ்சார்துணைபிரிந்ததன்மையர்
ஊனுடையுடம்பெலாமூழ்கலொத்தவே. (கஅ)

‡ தீர்த்தனுங்கவிகளுஞ்செறிந்துகம்பலை
பேர்த்தனரினியெனப்பேசிவானவர்
ஆர்த்தெனவார்த்தனமேகமாய்மலர்
தூர்த்தனவொத்தனதுளிவெள்ளமே. (ககூ)

வண்ணவிற்கரதலத்தரக்கன்வாளினன்
விண்ணிடைக்கடிதுகொண்டேகும்வேலையில்
பெண்ணினிற்கருங்கலமனையபெய்வளை
கண்ணெனப்பொழிந்ததுகாலமாரியே. (உ0)

சிரஞ்சுடர்மதிபுனைதேவன்விண்டொடர்
புரஞ்சுடவிடுசரம்புரையுமின்னினம்
அரஞ்சுடப்பொறிசிமிர § யிழிளுடைவர்
உரஞ்சுடவுளைந்தனபிரிந்துளோர்க்கெலாம். (உக)

பொருடரப்போயினர்ப்பிரிந்தபொய்யுடற்
குருடருதேர்மிசையுயிர்கொண்டுய்த்தலான்
மருடருபிரிவினோய் $ மாசுணங்கெடக்
கருடனைப்பொருவினகாலமாரியே. (உஉ)

முழங்கினமுறைமுறைமூரிமேகநீர்
வழங்கினமிடைவனமானயானைகள்
தழங்கினபொழிமதத்திவலைதாழ்தரப்
புழுங்கினவெதிரெதிர்பொருவபோன்றவே. (உங)

* செல்-மேகம். † மள்ளர்-போர்வீரர். ‡ தீர்த்தன்-தூயவன். ஈண்டு ராமன்மேற்று. § அயில்-வேலாயுதம். $ மாசுணம்-பாம்பு.

விசைகொடுமொருதமறிந்துவீசலால்
அசைவுறுசிறுதுளியப்புமாரியின்
இசைவுறவெய்வன விலையவாயிருந்
திசையொடுதிசைசெருச்செய்தசெய்தவே. (௨௪)

விழைவுறுபொருடரப்பிரிந்தவேந்தர்வர்
துழையுறவுயிருறவுயிர்க்குமாதரின்
மழையுறமாமுகைமலர்ந்துதோன்றின
குழையுறப்பொலிந்தன * உலவைக்கொம்பெலாம். (௨௫)

வேறு.

பாடலம்வறுமைகூரப்பாலைவன்பசுமைகூரக்
கோடல்கள்பெருமைகூரக்குவலயஞ்சிறுமைகூர
ஆடினமயில்கள்பேசாதடங்கின குயில்களன்பர்த்
தேடுறத்தளர்ந்தார்போன்றுந்திருவுறக்கிளர்ந்தார்போன்றும். (௨௬)

கானிறச்சுரும்பும்வண்டுமணியணியுஞ்சாரற்
றேனுகமலர்ந்துசாய்ந்தசேயிதழ்க்காந்தட்செம்பூ
வேனிலைவென்றதம்மாகாரெனவியந்துநோக்கி
மானிலக்கிழத்திகைகண்மறித்தனபோன்றமன்றே. (௨௭)

வாளெயிற்றரவம்போலவன்றலைகான்றமானத்
தாளுடைக்கோடறம்மைத்தழீஇயனகாதலங்க
மீளலவலையுமன்னவிலைழவன வுணர்வுவீந்த
கோளரவென்னப்பின்னியவற்றொடுங்குழைந்துசாய்ந்த. (௨௮)

எள்ளிடவிடனுமின்றியெழுந்தனவிலங்கு † கோபம்
தன்னுறத்தலைவர்தம்மைப்பிரிந்தவர்தழீஇயதமக்
கள்ளுடையோதியார்தங்கலவியிற்பலகாற்கான்ற
வெள்ளடைத்தம்பற்குப்பைசிதர்ந்தெனவிரிந்தமாதோ. (௨௯)

தீங்கனிநாவலோங்குஞ்சேணுயர்குன்றிற்செம்பொன்
வாங்கினகொண்டுபோரின்மண்டுமொல்யாறுமான
வெங்கையின்மலருங்கொன்றைவிரிந்தனவீயுமீர்த்துத்
தாங்கினகலுழிசென்றுதலைமயக்குறுவதம்மில். (௩௦)

கன்னெடுங்கார்தட்போதினறைவிரிகடுக்கைமென்பூத்
துன்னியகோபத்தோடுந்தோன்றியதோற்றந்தும்பி
இன்னிசைமுரல்வநோக்கியிருநிலமலர்க்கையேந்திப்
பொன்னொடுங்காசையிட்டுக்கொடுப்பதேபோன்றவன்றே. (௩௧)

* உலவைக்கொம்பு-பட்டமரக்கிளை.

† கோபம்-இந்திரகோபம்-பட்டுப்பூச்சியென்ப.

கிளைத்துணைமழலைவண்டுகின்னரநிகர்த்தமின்னும்
துளிக்குரன்மேகம்வள்ளார்தூரியந்துவைப்பபோன்ற
வளைக்கையர்போன்றமஞ்ஞைதோன்றிகளரங்கின்மாடே
விளக்கினமொத்தகாண்போர்விழியொத்தவிளையின்மென்பூ. (௩௨)

பேடையு * ஞிமிறும்பாயப்பெயர்வுழிப்பிறக்குமோசை
ஊடுறத்தாக்குந்தோறுமொல்லொலிபிறப்பநல்லார்
ஆடியற்பாணிக்கொக்குமாரியவமிழ்தப்பாடற்
கோடியதாளங்கொட்டன்மலர்ந்தகூதாளமொக்க. (௩௩)

வழைதுறுகானயாறுமாநிலக்கிழத்திமக்கட்
குழைதுறுமலைமாக்கொங்கைசுரந்தபாலொழுக்கையொத்த
விழைவுறுவேட்கைநாலும்வேண்டினர்க்குதவவேண்டிக்
குழைதொறுங்கனகந்தூங்குகற்பகநிகர்த்தகொன்றை. (௩௪)

பூவியல்புறவமெங்கும்பொறிவரிவண்டுபோர்ப்பத்
தீவியகளியவாகிச்செருக்கியகாமச்செவ்வி
ஒவியமரன்கடோறுமுரைத்தறவுரிஞ்சியொன்கேழ்
நாவியசெவ்விநாறக்கலையொடும்புலந்தநவ்வி. (௩௫)

வேறு.

தேரினன்னெடுந்திசைசெலச்செருக்கழிந்தொடுங்கும்
கூரயிற்றருங்கண்ணெனக்குவிந்தனகுவளை
மாரனன்னவர்வரவுகண்டுவெக்கின்றமகளிர்
† மூரன்மென்குரு ‡ முறுவலொத்தரும்பினமுல்லை. (௩௬)

களிக்குமஞ்ஞையைக்கண்ணுளரினமெனக்கண்ணுற்
றளிக்குமன்னரிற்பொன்மழைவழங்கினவருவி
வெளிக்கண்வந்தகார்விருந்தெனவிருந்துகண்டுள்ளம்
களிக்குமங்கையர்முகமெனப்பொலிந்தனகமலம். (௩௭)

சரதநாண்மலரியாவையுங்குடைந்தனதடவிச்
சுரதநூறெரிவிடரெனத்தேன்கொண்டுதொகுப்ப
பரதநூன்முறைநாடகம்பயனுறப்பகுப்பான்
இரதமீட்டுறுங்கவிஞரைப்பொருவினதேனீ. (௩௮)

நோக்கினானமைநோக்கழிகண்டநுண்டநுண்மருங்குற்
றூக்கணங்கருஞ்சீதைக்குத்தரக்கருந்துன்பம்
ஆக்கினானமதுருவினென்றரும்பெறலுவகை.
வாக்கினானுரையாமெனக்களித்தனமான்கள். (௩௯)

---

* ஞிமிறு-ஆண்வண்டு. † மூரல் - நகையினையுடைய.
‡ முறுவல் - பற்கள்.

நீடுநெஞ்சுறநோயத்தானெடிதுறப்பிரிந்து
வாடுகின்றனமருளுறுகாதலின்மயங்கிக்
கூடுகென்னநித்தடந்தொறுங்குடைந்தபடிவுற்
றாடுகின்றனகொழுங்கரைப்பெறவினவன்னம். (௪0)

காரெனும்பெயர்க்கரியவன்மார்பினிற்கதிர்முத்
தாரமென்னவும்பொலிந்தனவளக்கருமளக்கர்
நீர்முகந்தமாமேகத்தினருகுறநிரைத்துக்
கூறும்வெண்ணிறத்திறத்தனபறப்பன * குரண்டம். (௪௧)

மருவிநீங்கல்செல்லாநெடுமாலையவானிற்
பருவமேகத்தினருகுறக்குருகினம்பறப்ப
இருவினையகனிவனெனத்தேமறைதெரிக்கும்
ஒருவன்மார்பினிலுத்தரீயத்தையுமொத்த. (௪௨)

உறவெதுப்புறுங்கொடுந்தொழில்வேனிலானுழியத்
திறநினைப்பருங்காரெனுஞ்செவ்வியோன்சேர
நிறமனத்துறுகுளிர்ப்பினினெடுநிலமடந்தை
புறமயிர்த்தலம்பொடித்தனபோன்றனபசும்புல். (௪௩)

தேனவாமலர்த்திசைமுகன்முதலினர்தெளிந்தோர்
ஞானநாயகனவையுறநோக்கினானல்கக்
கானம்யாவையும்பரப்பியகண்ணெனச்சனகன்
மானைநாடிநின்றழைப்பனபோன்றன † மஞ்ஞை. (௪௪)

செஞ்சேவலவர்செறிசிலைக்குரிசிலரிருண்ட
குஞ்சிசேயொளிகதுவுறப்புதுநிறங்கொடுக்கும்
பஞ்சிபோர்த்தமெல்லடியெனப்பொலிந்தனபதுமம்
வஞ்சிபோலியர்மருங்கெனநுடங்கினவல்லி (௪௫)

நீயிரன்னவர்குதலையாதலினேடிப்
போயதையலைத்தருதிரென்றிராகவன்புகலத்
தேயமெங்கணுந்திரிந்தனபோந்திடைத்தேடிக்
‡ கூயவாய்க்குரல்குறைந்தபோற்குறைந்தனகுயில்கள். (௪௬)

பொழிந்தமாநிலம்புற்றரக்குமட்டியபுனிற்று
எழுந்தவாம்பிகளிடறினசெறிதயிரேய்ந்த
மொழிந்ததேனுடைமுகிழ்முலையாய்ச்சியர்முழவிற்
பிழிந்தபால்வழிநுரையெனப்பொருவுவ § பிடவம். (௪௭)

---

* குரண்டம்-வெண்கொக்கு. † மஞ்ஞை-மயில்.
‡ கூய - அழைத்த. § பிடவம்-ஒருமலர்.

வேங்கைநாறினகொடிச்சியர்வடிக்குழல்விரைவண்
டேங்கநாகமுநாறினநுளைச்சியரைம்பால்
ஆங்குராண்முல்லைநாறினவாய்ச்சியரோதி
ஞாங்கருற்பலமுழத்தியர் • பித்திகைநாற. (௪௮)

தேரைக்கொண்டபோல்குலாடிருமுகக்காணான்
ஆரைக்கண்டுயிராற்றுவானல்லுணர்வழிந்தான்
மாரற்கெண்ணினில்பல்லாயிரமலர்க்கணைவகுத்த
காரைக்கண்டனன்வெந்துயர்க்கொருகரைகாணான். (௪௯)

அளவில்காரெனுமப்பெரும்பருவம்வந்தணைந்தால்
தளர்வதென்மதுதவம்புரிவோருக்குந்தகுமால்
இளவிதேனினுமமிழ்தினுமினித்தவெள்வளைதோள்
வளவியுண்டவன்வருந்துமென்றலதுவருத்தோ. (௫௦)

கார்வானங்கண்ட ராமன் காதலியை நினைந்து வருந்துதல்.

காவியுங்கருங்குவளையுநெய்தலுங்காயாம்
பூவையும்பொருவானவன்புலம்பினன்றளர்வான்
ஆவியுஞ்சிறிதுண்டுகொலாமெனவயிர்த்தான்
தூவியன்னமன்னாடிநடத்திவையிவைசொல்லும். (௫௧)

வேறு.

வாரேர்முலையாளைமறைக்குநர்வாழ்
ஊரேயறியேனுயிரோவொழிவேன்
† நீரேயுடையாயருணின்னிலையோ
காரேயெனதாவிகலக்குதியோ. (௫௨)

வெப்பார்தெமின்னினெயிற்றுறவெகுண்
டெப்பாலும்விசும்பினிருண்டெழுவாய்
அப்பாதகவஞ்சவரக்கரையே
ஒப்பாயுயிர்கொண்டல ‡ தோவலையோ. (௫௩)

அயிலேவிழியார்விளையாரமிழ்தின்
குயிலேமொழியார்க்கொணராய்கொடியாய்
துயிலேனொருவேனுயிர்சோர்வுணர்வாய்
மயிலேயெனைநீவலியாடுதியோ. (௫௪)

மழைவாடையொடாடிவலித்துயிர்மேல்
நுழைமாய்மலர்வாய் § நொடியாய்கொடியே
இழைவாணுதலாளிடைபோலிடையே
குழைவாயெனதாவிகுழைக்குதியோ (௫௫)

• பித்திகை-கடத்தல். † நீர்சலமும், நெகிழ்ந்த குணமும்.
‡ ஓவலையோ-ஒழியாயோ. § நொடியாய்பேசுவாயாக.

விழையேன்விழைவானவைமேன்மையினின்
றிழையேனுணர்வேனவையின்மையினல்
பிழையேனுயிரோடுபிரிந்தனரால்
உழையேயவரெவ்வுழையாருரையாய் (ருசு)

பயில்பாடகமெல்லடியஞ்சனையார்
செயிரேதுமிலாரொடுதீருதியோ
அயிராதுடனேயகல்வாயலையோ
உயிரேகெடுவாயுறவோர்கிலையோ. (ருஎ)

ஒன்றைப்பகராய்குழலுக்குடையாய்
வன்றைப்புறநீள்வயிரத்தினையே
கொன்றைக்கொடியாய்கொணர்கின்றிலையே
என்றைக்குறவாகவிருந்தனையே. (ருஅ)

வேறு.

குராவரும்பனையகூர்வாளெயிற்றுவெங்குருளைநாகம்
விராவுவெங்கடுவிற்கொல்லுமெல் * விணர்முல்லைவெய்தின்
உராவருந்துயரமூட்டியோய்வறமலைவதொன்றோ
இராவணகோபமிற்கவிந்திரகோபமென்றோ. (ருகூ)

ஓடைவாணுதலினுனையொளிக்கலாமுபாயமுன்னி
நாடிமாரீசனுரோராடகக்கவியாணர்
வாடையாய்க்கூற்றிருமுருவினைமாற்றிவந்தார்
கேடுசூழ்வார்க்குவேண்டுமுருக்கொளக்கிடைத்தவன்றே. (சு0)

அருவினையரக்கரென்னவர்தரமதனின்யாரும்
வெருவாமுழங்குகின்றமேகமேயின்னுகின்றாய்
தருவலென்றிரங்கினுயோதாமரைமறந்தனையல்
உருவினைக்காட்டிக்காட்டியொளிக்கின்றாயொளிக்கின்றாயால். (சுக)

உண்ணிறைந்துயிர்க்கும்வெம்மையுயிர்சுடவுடலையுள்ளம்
புண்ணுறவாளிதூர்த்தல்பழுதினிப்போதிமாரா
எண்ணுறுகல்வியுள்ளத்திளையவனின்னேயுன்னைக்
கண்ணுறுமாயிற்பின்னையாரவன்சீற்றங்காப்பார். (சுஉ)

வில்லும்வெங்கணையும்வீரர்வெஞ்சமத்தஞ்சினார்மேல்
புல்லுவவல்லவாற்றல்போற்றலர்குறித்தல்போலாம்
அல்லுநன்பகலுநீங்காயநங்கநீயருளிற்றீர்ந்தாய்
செல்லுமென்றெளிவந்தோமேற்செத்தலுஞ்சீர்மைத்தாமோ. (சுங)

* இணர்-கொத்து.

என்னவித்தகையபன்னியீடழிந்திரங்குகின்ற
தன்னையொப்பானைநோக்கித் * தகையழிந்தயர்ந்ததம்பி
நின்னையொத்தகையையாகநினைந்தனைநெடியோயென்னாச்
சென்னியிற்சுமந்தகையன்றேற்றுவான்செப்பலுற்றான். (சுச)

வேறு.

காலநீளிதுகாருமாரியும்வந்ததென்றகவர்ச்சியோ
நீலமேனியரக்கர்வீரநினைந்தழுங்கியநேர்மையோ
வாலிசேனைமடந்தைவைகிடகாடவாரலதாமையோ
சாலுநல்லுணர்கேள்விவீரதளர்ந்ததென்னைதவத்தினாய் (சுரு)

மறைதுளங்கினுமதிதுளங்கினும்வானுமாழ்கடல்வையமும்
நிறைதுளங்கினுநிலைதுளங்குறநிலைமைநின்வயினிற்குமோ
பிறைதுளங்குவவனையபேரெயிறுடைய † பேதையர்பெருமைநின்
இறைதுளங்குறபுருவமென்சிலையிடைதுளங்குறவிசையுமோ. (சுசு)

அனுமனென்பவனளவறிந்தனமறிஞனங்கதனாதியோர்
எளையரென்பதொரிறுதிகண்டிலமெழுபதென்றெனுமியல்பினார்
வினையின்வெந்துயர்விரவுதிங்களும்விரைவுசென்றனவெளிதினின்
தனுவெனுந்திருநுதலுவந்தனள் ‡ சாரதம்வன்றுயர்தவிர்தியே. ()

மறையறிந்தவர்வரவுகண்டுமைமவலியும்வஞ்சகர்வழியொடும்
குறையவென்றிடர்களைவெனென்றனைகுறைமுடிந்ததுவிதியினால்
இறைவவங்கவரிறுதிகண்டினிதிசைபுனைந்திமையவர்கடாம்
உரையுமும்பருமுதவிநின்றருளுணர்வழிந்திடலுறுதியோ. (சுஅ)

காதுகொற்றநினக்கலாமைபிறர்க்கெவ்வாறுகலக்குமோ
வேதனைக்கிடமாதல்வீரதையன்றுபேதைமையாமரோ
போதுபிற்படலுண்டிதோர்பொவிளன்றியின்றுபுணர்த்தியேல்
யாதுனக்கியலாததென்னதவருந்தலென்னவியம்பினான். (சுகூ)

சொற்றதம்பியுரைக்குணர்ந்துயிர்சோர்வொடுங்கியதொல்லையோன்
இற்றவின்னலியக்கமெய்திட § வைகல்பற்பலவேகமேல்
உற்றுநின்றவினைக்கொடும்பிணியொன்றின்மேலுடனொன்றுராய்
மற்றும்வெம்பிணிபற்றினாலெனவந்தெதிர்ந்ததுமாரியே. (எ0)

வேறு.

நிறைந்தனநெடுங்குளநெருங்கினதரங்கம்
குறைந்தனகருங்குயில்குளிர்ந்தவுயர்குன்றற்

---

* தகையழிந்து நிலைமைகெட்டு. † பேதையர் அறிவிலிகளான அசுரர்.
‡ சாரதம்-உண்மை. § வைகல்-நாள்.

மறைந்தனதடந்திசைவருந்தினர்பிரிந்தார்
உறைந்தன * வகன்றிலுட † னன்றிலுயிரொன்றி. (எக)

பாசிழைமடந்தையர்பழிப்பிலகலல்குற்
றூசுதொடருசனிவெம்மைதொடீர்வுற்றே
வீசியதுவாடையெரிவெந்தவிரிபுண்வீழ்
ஆசிலயில்வாளியெனவாசைபுரிவார்மேல். (எ௨)

வேலைநிறைவுற்றனவெயிற்கதிர்வெதும்பும்
சீலமழிவுற்றபுனலுற்றுருகுசெப்பின்
காலமறிவுற்றுணர்தல் ‡ கன்னலளவல்லால்
மாலைபகனுற்றதெனவோர்வரிதுமாதோ. (எ௩)

நெற்கிழியநெற்பொதிநிரம்பினநிரம்பாச்
சொற்கிழியநற்கிளிகடோகையவர்தூய்மின்
பற்கிழிமணிப்படர்திரைப்பரதர்முன்றில்
பொற்கிழிவிரித்தனசினைப்பொதுள்வபுன்னை. (எ௪)

நிறங்கருகுகங்குல்பகனின்றநிலைநீங்கா
அறங்கருதுசிந்தைமுனியந்தணரிஞலிப்
பிறங்கருநெடுந்துளிபடப்பெயர்வில்குன்றின்
உறங்கலில்விலங்கலிலநின்றவுயர்வேழம். (எ௫)

சந்தினடையிற்படலைவேதிகைதடந்தோ
றந்தியிடவிற்புகைநுழைந்தகுளிரன்னம்
மந்தியினுற்றமுழைவன்கடுவ ¶ னெங்கத்
திந்தியமவித்ததனியோகரினிருந்த. (எ௬)

ஆசில்சுனைவாலருவியாயிழையரைம்பால்
வாசமணநாறலிலவானமணிவன்கால்
ஊசல்வறிதானவிதஞெண்மணிகள்விண்மேல்
வீசலிலவானினெடுமாரிதுளிவீச. (எ௭)

கருந்தலையதண்சினையனகதைமடல்காதல்
தருந்தகையபோதுகிளையிற்புடைதயங்கப்
பெருந்தகையபொற்சிறையொடுங்கியுடல்பேரா
திருந்தகுருகின்பெடைபிரிந்தவர்களென்ன. (எ௮)

---

* அகன்றில்ஒருசாதிப்பறவை. † அன்றில்ஒருசாதிப்புள்.
‡ கன்னல்நாழிகைவட்டில். ¶ அங்கத்திந்திரியமவித்த உடலிலுள்ள பஞ்சேந்திரியங்களை ஒடுக்கிய.

*பதங்கமுழ †வொத்தவிசைபண்ஞிமிறுபன்ன
விதங்களினடித்திடுவிகற்பவழிமேவும்
மதங்கியரையொத்தமயில்வைகுமரமூலத்
தொதுங்கினமழைக்குலமுழக்க. (௭௯)

விளக்கொளியகிற்புகைவிழுங்கமணிமென்கோம்
பிளைக்குமிடைமங்கையருமைந்தர்களுமேறத்
தளத்தகுமலர்த்தவிசிகந்துநகுசந்தின்
றுளைத்துயிலுவந்துதுயில்வுற்றகுளிர்தும்பி. (௮0)

தாமரைமலர்த்தவிசசிந்துதகையன்னம்
மாமரநிரைத்தொகுபொதும்பருழைவைகத்
தேமரனடிக்கிதணிடைச்செறிகுரம்பைத்
தாமருவெயிற்றியரொடன்பர்துயில்வுற்றார். (௮௧)

வள்ளிபுடைசுற்றியுயர்சிற்றிலைமரந்தோ
றெள்ளருமறிக்குருளொடண்டர்களிருந்தார்
கள்ளரிஞெளித்துழனெடுங்கழுதொடுங்கி
முள்ளெயிறுதின்றுபசியுழ்கிடவிருந்த. (௮௨)

சரம்பயினெடுந்துளிசிமிர்ந்தபுயல்சார
உரம்பெயர்வில்வன்கரிகரந்துறவொடுங்கா
வரம்பகனெடும்பிரசம்வைகல்பலவைகும்
முரம்பினினிரம்பலமுழைஞ்சிடைநுழைந்த (௮௩)

இத்தகையமாரியிடைதுன்னியிருளெய்த
மைத்தகுமணிக்குறுநகைச்சனகன்மான்மேல்
உய்த்தவுணர்வத்தினனெருப்பிடையுயிர்ப்பான்
வித்தகனிலக்குவனைமுன்னினன்விளம்பும். (௮௪)

வேறு.

மழைக்கருமின்னெயிற்றரக்கன்வஞ்சனை
இழைப்பருங்கொங்கையுமெதிர்வுற்றின்னலின்
உழைத்தனளுலைந்துயிருலக்குமொன்றினும்
பிழைப்பரிதெனக்குமிதென்னபெற்றியோ. (௮௫)

தூறிறச்சுரேசுரந்துணிதூங்கிட
வானுறப்பிறங்கியவயிரத்தோளொடும்
யானுறக்கடவதேயிதுவுமிந்நிலை
வேனிறத்துற்றதொத்துழியும்வீகிலேன். (௮௬)

---

* பதங்கம்-விட்டுவிட்டொலிக்குமொருவகைப்பறவை, சில்வீடுமாம்
† ஒத்த-அடிக்க.

தெரிகணைமலரொடுந்திறந்தநெஞ்சொடும்
அரியவன்றுயரொடும்யானும்வைகுவேன்
எரியுமின்மினிமணிவிளக்கினின்றுணைக்
குரீஇயினம்பெடையொடுந்துயில்வகூட்டினுள். (அஎ)

வானகமின்னினுமழைமுழங்கினும்
யானகமெலிகுவேனெயிற்றராவெனக்
கானகம்புகுந்தியான்முடித்தகாரியம்
மெனகுங்கீழ்நகுமினியென்வேண்டுமோல். (அஅ)

மறந்திருந்துய்கலேன்மாரியீதெனின்
இறந்துவிண்சேர்வது * சரதமிப்பழி
பிறந்துபின்றீர்வலோபின்னரன்னது
துறந்துசென்றுறுவலோதுயரின்வைகுவேன். (அகூ)

ஈண்டுநின்றரக்கர்தமிருக்கையாமினிக்
காண்டலிற்பற்பலகாலங்காண்டுமோல்
வேண்டுவதன்றிதுவீரநோய்தெற
மாண்டனனென்றதுமாட்சிப்பாலதால். (கூ0)

† செப்புருக்கனையவிம்மாரிச்சீகரம்
வெப்புறப்புரஞ்சுடவெந்துவீவதோ
அப்புருக்கொண்டவாணெடுங்கணுபிழை
திப்புருக்குமுதவாய்நுகர்ந்துதுய்த்தயான். (கூக)

நெய்யடைதீயெதிர்நிறுவிநிற்கவள்
கய்யடையென்றவச்சனகன்கட்டுரை
பொய்யடையாக்கிய ‡ பொறியிலேனொடு
மெய்யடையாதினிவிளிதனன்றரோ. (கூஉ)

தேற்றுவாய்நீயுளையாகத்தேறிநின்
றாற்றுவேனுளனாகவாய்வளை
தோற்றுவாளல்லளித்துன்பமாரினி
மாற்றுவார்துயர்க்கொருவரம்புண்டாகுமோ. (கூங)

விட்டபோர்வாளிகள்விரிஞ்சன்விண்ணையும்
சுட்டபோதிமையவர்முதலதொல்லையோர்
பட்டபோதுலகமுமுயிரும்பற்றறக்
கட்டபோதல்லதுமயிலைக்காண்டுமோ. (கூச)

* சரதம்-உண்மை. † செப்புருக்கனைய-செம்புருகினாற்போன்ற.
‡ பொறி-அறிவு.

தருமமென்றொருபொருடன்னையஞ்சியான்
றெருமருகின்றதுசெறுநர்தேவரோ
டொருமையின்வீந்தனரென்னுமஃகுதலால்
உருமெனவொலிபடு * முரவிலோயென்றான். (கூ௬)

இளவலுமுரைசெய்வானெண்ணுநாளினும்
உளவலகூடிருமிறதியுற்றதால்
களவுசெய்தவ † ருரைகாணுங்காலமீ
தளவியலாகியதாணையாழியாய். (கூ௬)

திரைசெயத்திண்கடலமிழ்தஞ்செங்கணான்
உரைசெயத்தரினுமத்தொழிலுவந்திலன்
வரைமுதற்கலப்பைகண்மாடுநாட்டித்தன்
குரைமலர்த்தடக்கையாற்கடைந்துகொண்டனன். (கூ௭)

மனத்தினினுலகெலாம்வகுத்துவாய்ப்பெயும்
நினைப்பினனுயினுநேமியானெடு
மெனைப்பலபடைக்கலமேந்தியாரையும்
வினைப்பெருஞ்சூட்சியிற்பொருதுவெல்லுமால். (கூ௮)

கண்ணுடைநுதலினன் ‡ கணிச்சிவானவன்
விண்ணிடைப்புரஞ்சுடவெகுண்டமேலைநாள்
எண்ணியசூழ்ச்சியுமீட்டிக்கொண்டவும்
அண்ணலேயொருவராலறியற்பாலவோ. (கூ௯)

ஆகுநர்யாரையுந்துணைவராக்கிப்பின்
ஏகுறுநாளிடையெய்தியெண்ணுவ
சேகறப்பன்முறைதெருட்டிச்செய்தபின்
வாகையென்றொருபொருள்வழுவற்பாலதோ. (௪00)

அறத்துறைதிறம்பினரரக்கராற்றலர்
மறத்துறைநமக்கெனவலிக்கும்வன்மையோர்
திறத்துறைநன்னெறிதிறம்பலுண்டெனின்
புறத்தினியார்திறம்புகழும்வாகையும். (௪0க)

பைந்தொடிக்கிடர்களைபருவம்பையவே
வந்தடுத்துளதினிவருத்தநீங்குவாய்
அந்தணர்க்காகுநாமரக்கர்க்காகுமோ
சுந்தரத்தனுவலாய்சொல்லுநீயென்றான். (௪0௨)

* உரவிலோய் - வலியவில்லினையுடையாய்.
† உறை - இருப்பிடம். ‡ கணிச்சி மழு.

உறுதியஃதேயெனவுணர்ந்தவூழியான்
இறுதியுண்டேகொலிம்மாரிக்கென்பதோர்
தெறுதுயருழந்தனன்றேயத்தேய்வுசென்
றறுதியையடைந்தப்பருவமாண்டுபோய். (௧0௩)

மள்கலில்பெருங்கொடைமருவிமண்ணுளோர்
உள்கியபொருளெலாமுதவியற்றபோ
தெள்கலிலிரவலர்க்கீவதின்மையால்
வெள்கியமாந்தரின்வெளுத்தமேகமே. (௧0௪)

தீவினைநல்வினையென்னத்தேற்றிய
பேர்வினைப்பொருடனையறிந்துபெற்றதோர்
ஆய்வினைமெய்யுணர்வணுகவாசறு
மாயையின்மாய்ந்ததுமாரிப்பேரிருள். (௧0௫)

மூனமர்தொலைவுறமுரசவிந்தபோல்
கோளமைக்கொண்முகில்குமுறலோவின
நீளடுகணையெனத்துளியுநீங்கின
வாளுறையுற்றெனமறைந்தமின்னெலாம். (௧0௬)

தடுத்தாணெடுந்தடங்கிரிகடாழ்வரை
அடுத்தநீரொழிந்தனவருவிதூங்கின
உடுத்தநூலுத்தரியத்தொடெய்திகின்
றுடுத்தவாளிறத்துகிலொழிந்தபோலுமே. (௧0௭)

மேகமாமலைகளின்புறத்துவீதலால்
* மாகயாறியாவையும்வாரியற்றன
வாகையாற்றகவழந்தழிவினன்பொருள்
போகவாறொழுகலான்செல்வம்போன்றவே. (௧0௮)

கடந்திறந்தெழுகளிறனையகார்முகில்
இடந்திறந்தேகலிற்பொலிந்ததிர்துவும்
கடந்திறனவில்வுறுநங்கைமார்முகம்
படந்திறந்துருவலிற்பொலியும்பான்மைபோல். (௧0௯)

பாசிழைமடந்தையர் ‡ பகட்டுவெம்முலை
பூசியசாந்தினைப்புலர்த்துகுங்குமம்
மூசினமுயங்குசேறொழியமொண்டுற
வீசியநறுமலர்விண்டுவாடையே. (௧௧0)

---

* மாகயாறு-ஆகாயவழி. † கடம்-மத்தாரை.
‡ பகட்டு-தோற்றம்.

மன்னவன் றலைமகன்வருத்தமாற்றுவான்
அந்நெறிப்பருவம்வந் தணுகிற்றாகலால்
பொன்னினைநாடியபோதுமென்பபோல்
அன்னமூர் திசைதிசையகன் றவிண்ணினின்வாய். (கக௧)

தஞ்சிறையொடுக்கின தழுவுமின்னல
நெஞ்சுறுபயனிலநினைப்புநீண்டன
மஞ்சுறுநெடுமழைபிரிந்தமாமயில்
அஞ்சினமிதிலைநாட்டன்னமன்னவாய். (கக௨)

வஞ்சனைதீவினைமறந்தமாதவர்
நெஞ்செனத்தெளிந்தனநீரநீர்தொறும்
பஞ்செனச்சிவக்குமென்பாதப்பேதையர்
அஞ்சனக்கண்ணெனப்பிறழ்ந்தவாடன்மீன். (கக௩)

வாடியமடந்தையர்வதனமொத்தன
தாடொகமலர்ந்தனமுதிர்ந்ததாமரை
கூடினர்துவரிதழ்க்கோலங்கொண்டன
சேடுறுநறுமுகைவிரிந்தசெங்கிடை. (கக௪)

கல்வியிற்றிகழ் * கணக்காயர்கம்பலை
பல்விதச்சிறாஅரெனப்பகர்வபல்லரி
செல்விறுத்தல்லதொன்றுரைத்தல்செய்கலா
நல்லறிவாளரினவிந்தநாவெலாம். (கக௫)

செறிபுனற்பூந்துகிறிரைக்கையாற்றிரைத்
துறுதுணைக்கான்மடுத்தொத்தவோதநீர்
எறுழ்வலிக்கணவனையெய்தியாறெலாம்
முறுவலிக்கின்றனபோன்றமுத்தெலாம். (கக௬)

சொன்னிறைகேள்வியிற்றொடர்ந்தமாந்தரின்
இன்னிறப் † பசலையுற்றிருந்தமாதரின்
தன்னிறம்பயப்பயநீங்கித்தள்ளரும்
பொன்னிறம்பொருந்தினபூகத்தாறெலாம். (கக௭)

பயின்றுடல்குளிர்ப்பவும்பழனநீத்தவண்
இயன்றனலவிளவெயிலேந்தமெய்யன
வயின்றொறும்வயின்றொறுமடித்தவாயன
துயின்றனவிடங்கர்மாத்தடங்கடோறுமே. (கக௮)

---

* கணக்காயர்-உபாத்தியாயர்.

† பசலை-மகளிர்மாட்டுக்காமமிக்க காலத்துக்காணுமொருவகை நிறம்.

கொஞ்சுறுங்கிளிநெடுங்குதலைகூடின
அஞ்சிறையறுபதமளகவோளிய
எஞ்சலில்குழையனவிடைநுடங்குவ
வஞ்சிகள்பொலிந்தனமகளிர்மாலைபோல். (௧௧௯)

அளித்தனமுத்தினந்தோற்பமானனார்
○ வெளித்தெதிர்விழிக்கவும்வெள்கிமேன்மையால்
ஒளித்தனவாமெனவொடுங்குகண்ணன
குளித்தனமண்ணிடைக்கூனனந்தெலாம். (௧௨௦)

மழைப்படப்பொதுளியமருதத்தாமரை
தழைபடப்பேரிலைப்புரையிற்றங்குவ
விழைபடப்பெடையொடுமெள்ளி * னள்ளிகள்
புழையடுத்தொடுங்கின † வச்சைமாக்கள்போல். (௧௨௧)

௯-வது. கார்காலப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௫௭௪.

பத்தாவது

கிட்கிந்தைப்படலம்.

அன்னகாலமகலுமளவினில்
முன்னவீரனிளவலைமொய்ம்பினோய்
சொன்னவெல்லையினுங்குமத் ‡ தூங்கிய
மன்னன்வந்திலனென்செய்தவாறரோ. (௧)

பெறலருந்திருப்பெற்றுதவிப்பெருந்
திறனினைந்திலன்சீர்மையிற்றீர்ந்தனன்
அறமறந்தனனன்புகிடக்கநம்
மறனறிந்திலன்வாழ்வின்மயங்கினான். (௨)

நன்றிகொன்றருநட்பினைநாரறத்
தொன்றுமெய்ம்மைசிதைத்துரைபொய்த்துளாற்
கொன்றுநீக்குதல்குற்றத்தி § னீங்குமால்
சென்றுமற்றவன்சிந்தையைத்தேர்குவாய். (௩)

○ இளிங்கெதிர் விழிக்கலமென்று வெள்கியே. என்றும்பாடம்.
* நள்ளிகள்-நண்டுகள். † வச்சைமாக்கள் உலோபிகள்.
‡ தூங்கிய-தாமதஞ்செய்த. § நீங்கும்-கழியும்.

வெம்புகண்டகர்விண்புகவேரறுத்
இம்மர்நல்லறஞ்செய்யவெடுத்தவிற்
கொம்புமுண்டருங்கூற்றமுமுண்டுங்கள்
அம்புமுண்டென்றுசொல்லுநம்மாணையே. (௪)

நஞ்சமன்னவரைநலிந்தாலது
வஞ்சமன்றுமனுவழக்காதலான்
* அஞ்சிலம்பதிலொன்றறியாதவன்
நெஞ்சினின்றுநிலாவநிறுத்துவாய். (௫)

ஊருமாளுமரசுநுஞ்சுற்றமும்
நீருமாளுதிரென்பதுநேர்ந்தநாள்
வாரும்வாரலிராமெனின்வானரப்
பேருமாளுமெனும்பொருள்பேசுவாய். (௬)

இன்னுநாடுதுமிங்கிவர்க்கும்வலி
துன்னினாரையெனத்துணிந்தாரெனின்
† உன்னைவெல்லவுலகொருமூன்றினும்
நின்னலாற்பிறரின்மைநிகழ்த்துவாய். (௭)

நீதியாதிநிகழ்த்தினைநின்றது
வேதியாதபொழுதுவெகுண்டவன்
சாதியாதவர்சொற்றரத்தக்கனை
போதியாதியென்றான்புகழ்ப்பூணினான். (௮)

ஆணைசூடியடிதொழுதாண்டிறை
‡ பாணியாதுபடர்வெரிந்பாழ்படாத்
தூணிபூட்டித்தொடுசிலைதொட்டருஞ்
சேணினீங்கினன்சிந்தையுணீங்கலான். (௯)

மாறுநின்றமரனுமலைகளும்
நீறுசென்றுநெடுநெறிநீங்கிட
வேறுசென்றனன்மென்மையனாயினும்
§ ஆறுசென்றிலனாணையினேகுவான். (௧௦)

விண்ணுறத்தொடர்மேருவின்சீர்வரை
மண்ணுறப்புக்கழுந்தினமாதிரம்
கண்ணுறத்தெரிவுற்றதுகட்செவி
உண்ணிறக்கழற்சேவடியூன்றலால். (௧௧)

* அஞ்சியல்லதொன்றாரறிவாரவர் என்றும் அஞ்சிலம்பதில் என்றும் பாடம். † உன்னை-என்றதிலக்குமணனை. ‡ பாணியாது காலதாமதஞ் செய்யாமல். § ஆறு-வழி.

வெம்புகானிடைப்போகின்றவேகத்தால்
உம்பர்தோயுமராமரத்தூடுசெல்
அம்பிற்சென்றனன்றடல்வாலிதன்
தம்பிமேற்செலு * மானவன்றம்பியே. (கஉ)

மாடுவென்றியொர் † மாதிரயானையின்
சேடுசென்றசெடிலொருதிக்கின்மா
நாடுகின்றதுநண்ணரியகால்பிடித்
தோடுகின்றதுமொத்துளனாயினான். (கங)

உருக்கொளொண்கிரியொன்றினின்ஞான்றினைப்
‡ பொருக்கவெய்தினன்பொன்னொளிர்மேனியான்
அருக்கன்மாவுதயத்தினின்றத்தமாம்
பருப்பதத்தினையெய்தியபண்பினால். (கச)

தன்றுணைத்தவையன்றனிவாளியிற்
சென்றுசேணுயர்கிட்கிந்தைசேர்ந்தவன்
குன்றினின்றொருகுன்றினிற்குப்புறும்
பொன்றுளங்குளைச் § சீயமும்போன்றனன். (கரு)

கண்டவானரங்காலனைக்கண்டபோல்
மண்டியோடினவாலிமகற்கையா
கொண்டசீற்றத்தினையோன்குறுகினான்
சண்டவேகத்தினுலென்றுசாற்றலும். (கசு)

அன்னதோன்றலுமாண்டொழிலான்வர
வின்னதென்றறிவான்மருங்கெய்தினான்
மன்னன்மைந்தன்மனக்கருத்துட்கொளாப்
பொன்னின்வார்கழற்றூதையிற்போயினான். (கஎ)

நளினியற்றியநாயகக்கோயிலுள்
தளமலர்த்தகப்பள்ளியிற்றாழ்குழல்
இளமுலைச்சியரேந்தடிதைவர
விளைதுயிற்குவிருந்துவிரும்புவான். (கஅ)

தெள்ளியோருதவப்பெருஞ்செல்வமாம்
கள்ளினாலதிகங்களித்தான்கதிர்ப்
புள்ளிமாசெடுப்பொன்வரைபுக்கதோர்
வெள்ளிமால்வரையென்னவிளங்குவான். (க௯)

* மானவன்-போர்வீரன். † மாதிரம்-திக்கு.
‡ பொருக்க-விரைவாக. § சீயம்-சிங்கம்.

* சிந்துவாரத்தருநறைதேக்கவில்
சந்தமாமயிற்சாயலர்தாழ்குழற்
கந்தமாமலர்க்காடுகெடாவிய
மந்தமாருதம்வந்துறலைகுவான். (உ0)

தித்தியாநின்றசெங்கிடைவாச்சியர்
முத்தவாண்முகைமுள்ளெயிற்றூறுதேன்
பித்துமாலும்பிறவும்பெருக்கலான்
மத்தவாரணமென்னமயங்கினான். (உக)

மகுடகுண்டலமேமுதன்மண்டலத்
துகுநெடுஞ்சுடர்க்கற்றையுலாவலால்
பகலவன்சுடர்பாய்பனிமால்வரைத்
தகமலர்ந்துபொலிந்துதயங்குவான். (உஉ)

கிடந்தனன்கிடந்தானைக் † கிடைத்திரு
தடங்கைகூப்பினன்றாரைமுன்னாட்டந்த
மடங்கல்வீரனம்மாற்றம்விளம்புவான்
தொடங்கினானவனைத்துயினீக்குவான். (உ௩)

எந்தைகேளவ்விராமற்கிளையவன்
சிந்தையுண்ணெடுஞ்சீற்றத்திருமுகம்
தந்தளிப்பத்தடுப்பரும்வேகத்தன்
வந்தனனுன்மனக்கருத்தியாதென்றான். (உச)

இனையமாற்றமிசைத்தனனென்பதோர்
நினைவிலாநெடுஞ்செல்வநெருக்கவும்
நனைநறுந்துளிநஞ்சுமயக்கவும்
தனையுணர்ந்திலன்மெல்லணைதங்கினான். (உ௫)

ஆதலோடுமரசிளங்கோளரி
யாதுமுன்னின்றியற்றுவதின்மையால்
கோதில்சிந்தையநுமனைக்கூவுவான்
‡ போதமேயினன்போதகமேயனான். (உ௬)

மந்திரத்தனிமாருதிதன்னொடும்
வெந்திறற்படைவீரர்விராய்வர
அந்தரத்தின்வந்தன்னைதன்கோயிலை
இந்திரற்குமகன்மகனெய்தினான். (உ௭)

* சிந்துவாரத்தருநறை - அரும்நறை சிந்துஆரத்துஎன்று கொண்டு கூட்டுக. † கிடைத்தது-அடைந்தது.
‡ போத-போக. $ இந்திரற்குமகன் மகன்-அங்கதன்.

எய்திமேற்செயத்தக்கதென்னென்றலும்
செய்திர்செய்தற்கருநெடுந்தீயன
நொய்திலன்னவைநீக்கவுநோக்குதிர்
உய்திர்போலுமுதவிகொன்றீரெனா. (௨௮)

மீட்டுமொன்றுவிளம்புகின்றாள்படை
கூட்டுமென்றுமைக்கொற்றவன்கூறிய
நாட்டிறம்பி * னுந்நாட்டிறம்பும்மெனக்
கேட்டிலீரினிக்காண்டிர்கிடைத்திரால். (௨௯)

வாலியாருயிர்காலனும்வாங்கவிற்
கோலிவாலியசெல்வங்கொடுத்தவர்
போலுமாலும்புறத்திருப்பாரிது
சாலுமாலுங்கடன்மையினோர்க்கெலாம். (௩0)

தேவிநீங்கவத்தேவரிற்சீரியன்
ஆவிநீங்கினன்போலயர்வானது
† பாவியாதுபருகுதிர்போலுனும்
காவிநாண்மலர்க்கண்ணியர்காதனீர். (௩௧)

திறம்பினீர்மெய்சிதைத்திருதவியை
திறம்பொலீஇருங்கடவினைநேர்ந்ததால்
மறஞ்செய்வானுறின்மாளுதிர்மற்றினிப்
புறஞ்செய்தாவதெனென்கிறபோதின்வாய். (௩௨)

கோளுறுத்தற்கரியகுரக்கினம்
நீளெழுத்தொடருநெடுவாயிலைத்
தாளுறுத்தித்தடவரைதந்தன
மூளுறுத்தியடுக்கினமொய்ம்பினால். (௩௩)

சிக்குறக்கடைசேமித்தசெய்கைய
தொக்குறத்தமரத்ததுவன்றின
புக்குறக்கிப்புடைத்துமெனப்புறம்
மிக்கிறத்தனவெற்புமிறத்தன. (௩௪)

காக்கவோகருத்தென்றுகதத்தினால்
பூக்கமூரற்புரவலர்புங்கவன்
தாக்கணங்குறைதாமரைத்தாளினால்
நூக்கினனக்கதவினைநொய்தினின். (௩௫)

---

* நுந்நாள்-உமது வாழ்நாள். † பாவியாது-கருதாது.
‡ தாக்கணங்கு-வீரலட்சுமி.

காவன்மாமதிலுங்கதவுங்கடி
மேவும்வாயிலடுக்கியவெற்பொடும்
தேவுசேவடிதீண்டலுந்தீண்டரும்
பாவமாமெனப்பற்றழிந்திற்றவால். (௩௬)

நொய்தினேன்கதவும்முதுவாயிலும்
செய்தகன்மதிலுந்திசையோசனை
அய்யிரண்டினளவடியற்றுக
வெய்துநின்றருக்கும்வெருக்கொள. (௩௭)

பரியமாமதிலும்படர்வாயிலும்
சரியவீழ்ந்ததடித்திலிடித்தலை
நெரியநெஞ்சுபிளக்கநெடுந்திசை
இரியலுற்றனவிற்றிலவின்னுயிர். (௩௮)

பகரவேயுமரிதுபரித்தெழு
புகரில்வானரமஞ்சியபூசலான்
* சிகரமால்வரைசென்றுதிரிந்துழீஇ
மகரவேலையையொத்ததுமாநகர். (௩௯)

வானரங்கள்வெருவிமலையொரீஇக்
கானொருங்குபடரவக்கார்வரை
மீனெருங்கியவானகமீனெலாம்
போனபின்பொலிவற்றதுபோன்றதே. (௪௦)

அன்னகாலையினண்டகையாழியான்
பொன்னினன்னகர்வீதியிற்புக்கனன்
சொன்னதாரையைச்சுற்றினர்நின்றவர்
என்னசெய்குவதெய்தினனென்றனர். (௪௧)

அனையனுள்ளமுமாய்வளையாயலாம்
மனையின்வாயில்வழியினைமாற்றினான்
நினையும்வீரனந்நெறிநோக்கலன்
வினையமீதென்றநுமன்விளம்பினான். (௪௨)

நீரெலாமயனீங்குமினேர்ந்தியான்
வீரனுள்ளம்விளக்குவலென்றலும்
பேரநின்றனர்யாவரும்பேர்கலாத்
தாரைசென்றனடார்குழலாரொடும். (௪௩)

உரைசெய்வானரவீரருவந்துறை
அரைசர்வீதிகடந்தகன்கோயிலைப்

* சிகரமால்வரை-கொடுமுடிகளையுடைய பெரியமலை.

புரைசையானையன்னான்புகலோடுமெவ்
விரைசெய்வார்குழற்றாரைவிலக்கினாள். (௪௪)

விலங்குமெல்லியல்வெண்ணகைவெண்மதி
இலங்குநுண்ணிடையேந்திளமென்முலைக்
குலங்கடோகைமகளிர்குழாத்தினால்
வலங்கொள்வீதிநெடுவழிமாற்றினாள். (௪௫)

வில்லும்வாளுமணிதொறுமின்னிட
மெல்லரிக்குரன்மேகலையார்த்தெழப்
பல்வகைப்புருவக்கொடிபம்பிட
* வல்லியாயம்வலத்தினில்வந்ததே. (௪௬)

வேறு.

ஆர்க்குநூபுரங்கள்பேரியல்குலாந்தடந்தேரொத்த
வேற்கண்வெம்புருவம்போர்வின்மெல்லியர்வளைந்தபோது
பெர்க்கருஞ்சீற்றம்பேரமுகம்பெயர்ந்தொதுங்கிற்றல்லால்
பார்க்கவுமஞ்சினானப்பணையினுமுயர்ந்ததோளான். (௪௭)

தாமரைவதனஞ்சாய்த்துத்தனுநெடுந்தரையினூன்றி
மாமியர்குழுவின்வந்தானுமெனமைந்தனிற்பப்
பூமியிலணங்கனார்தம்பொதுவிடைப்புகுந்துபொற்றோள்
தூமனநெடுங்கட்டாரைநெங்குவாளினையசொன்னாள். (௪௮)

அந்தமில்காலநோற்றவாற்றலுண்டாயினன்றி
இந்திரன்முதலினோராலெய்தலாமியல்பிற்றன்றே
மைந்தநின்பாதங்கொண்டெம்மனைவரப்பெற்றுவாழ்ந்தேம்
உய்ந்தனம்வினையுந்தீர்ந்தேமுறுதிவேறிதினாங்குண்டோ. (௪௯)

† வெய்தினீவருதனோக்கிவெருவுறுஞ்சேனைவீர
செய்திதானுணர்கிலாதுதிருவுளந்தெரித்தியென்றான்
அய்யநீயாழிவேந்தனடியிணைபிரிகலாதாய்
எய்தியதென்னையென்றாளிசையினுமினியசொல்லாள். (௫௦)

ஆர்கொலோவுரைசெய்தாரென்றருள்வரச்சீற்றமஃகாப்
பார்குலாமுழுவெண்டிங்கள்பகல்வந்தபடிவம்போலும்
ஏர்குலாமுகத்தினாளையிறைமுகமெடுத்துநோக்கித்
தார்குலாமலங்கன்மார்பன்றாயரைநினைந்துலைந்தான். (௫௧)

‡ மங்கலவணியைநீக்கிமணியணிதுறந்துவாசக்
கொங்கலர்கோதைமாற்றிக்குங்குமஞ்சாந்தங்கொட்டாப்

---

* வல்லியாயம்-மடவார்கூட்டம். † வெய்தில்-விரைவாக.
‡ மங்கலவணி-மங்கலசூத்திரம்.

பொங்குமெம்முலைகள்பூகக்கழுத்தொடுமறையப்போர்த்த
நங்கையைக்கண்டவள்ளனயனங்கள்பணிப்பநின்றான். (௫௨)

இனையராமென்னையீன்றவிருவருமென்னவந்த
நினைவினானயர்ப்புச்சென்றநெஞ்சினனெடிதுநின்றான்
வினவினாட்கெதிரோர்மாற்றம்விளம்பவும்வேண்டுமென்றப்
புனைகுழலாட்குவந்தகாரியம்புகல்வதானான். (௫௩)

சேனையும்யானுந்தேடித்தேவியைத்தருவனென்று
மானவற்குரைத்தமாற்றமறந்தனனருக்கன்மைந்தன்
ஆனவனமைதிவல்லையறியெனவருளின்வந்தேன்
மேனிலைபனையான்செய்கைவிளைந்தவாவிளம்புகென்றான். (௫௪)

* சீறுவாயல்லையையசிறியவர்தீமைசெய்தால்
ஆறுவாய்நீயலான்மற்றாருளரயர்ந்தானல்லன்
வேறுவேறுலகமெங்குந்தூதரைவிடுத்தவெல்லை
ஊறுமாநோக்கித்தாழ்த்தானுதவிமாறுதவியுண்டோ. (௫௫)

ஆயிரகோடிதூதரிக்கணமழைப்பவானை
போயினர்புகுதுநாளும்புகுந்ததுபுகல்புக்கோர்க்குத்
தாயினுநல்லநீரேதணிதிராற்றருமஃதால்
தீயனசெய்யாராயின்யாவரேசெறுநராவார். (௫௬)

அடைந்தவர்க்கபயநீவிரருளியவளவில்செல்வம்
தொடர்ந்துநும்பணியிற்றீர்ந்தாலதுவுந்தொழிலேயன்றோ
மடந்தைதன்பொருட்டால்வந்தவாளமர்க்களத்துமாண்டு
கிடந்திலரென்னிற்பின்னுநிற்குமோகேண்மையம்மா. (௫௭)

செம்மைசேருள்ளத்தீர்கள்செய்தபேருதவிதீரா
வெம்மைசேர்பகையுமாற்றியரசுவீற்றிருக்கவிட்டீர்
உம்மையேயிகழ்வரென்னினெளிமையாயொழிவதொன்றோ
இம்மையேவறுமையெய்தியிருமையுமிழப்பரன்றே. (௫௮)

ஆண்டுபோர்வாலியற்றன்மாற்றியதம்பொன்றாயின்
வேண்டுமோதுணைவர்நும்பால்வில்லினுமிக்கதுண்டோ
தேண்டுவார்த்தேடுகின்றீர்தேவியையதனைச்செவ்வே
பூண்டுநின்றுய்தற்பாலார்நுங்கழல்புகுந்துளோரும். (௫௯)

என்றவனுரைத்த † மாற்றம்யாவையுமினிதுகேட்டு
நன்றுணர்கேள்வியாளனருள்வரநாணுட்கொண்டான்
நின்றனனிற்றலோடுநீத்தனன்முனிவென்றன்னா
வன்றுணைவயிரத்திண்டோண்மாருதிமருங்கின்வந்தான். (௬௦)

* சீறுவாயல்லை-கோபங்கொள்ளாதே. † மாற்றம்-சொல்.

வந்தடிவணங்கிநின்றமாருதிவதனநோக்கி
அந்தமில்கேள்விநீயுமயர்த்தனையாகுமன்றே
முந்தினசெய்கையென்றான்முனிவினுமுளைக்குமன்பான்
எந்தைகேட்டருளுகென்னாவியம்பினனியம்பவல்லான். (௬௧)

சிதைவகல்காதற்றாயைத்தந்தையைக்குருவைத்தெய்வப்
பதவியந்தணரையாவைப்பாலரைப்பாவைமாரை
* வதைபுரிகுநர்க்குமுண்டாமாற்றலாமாற்றன்மாயா
உதவிகொன்றார்க்கென்றேனுமொழிக்கலாமுபாயமுண்டோ. (௬௨)

அய்யநும்மோடுமெங்களரிக்குலத்தரசனோடும்
மெய்யுறுகேண்மையாகமேலைநாள்விளைவதாய
செய்கையென்செய்கையன்றோவன்னதுசிதையுமாயின்
உய்வகையெவர்க்குமுண்டோவுணர்வு † மாசுண்டதன்றோ. (௬௩)

தேவருந்தவமுஞ்செய்யுநல்லறத்திறமுமற்றும்
யாவருநீரேயென்பதென்வயிற்கிடந்ததெந்தாய்
ஆவதுநிற்கச்சேரு ‡ மரணுண்டோவருளுண்டன்றே
மூவகையுலகுங்காக்குமொய்ம்பினீர்முனிவுண்டானால். (௬௪)

மறந்திலன்கவியின்வேந்தன்வயப்படைவருவிப்பாரைத்
திறந்திறமேவியன்னான்செம்மையிற்சிறியனானான்
அறந்துணைநமக்குத்தான்றன்வாய்மையையழிக்குமாயின்
பிறந்திலனன்றேயன்றோநரகமும்பிழைப்பதன்றால். (௬௫)

§ உதவாமலொருவன்செய்தவுதவிக்குக்கைம்மாறாக
மதவானையனையமைந்தமற்றுமுண்டாகவற்றோ
சிதையாதசெருவிலன்னான்முன்சென்றுசெறுநர்மார்பின்
உதையானேலுதையுண்டாவியுலையானேலுலகின்மன்னோ. (௬௬)

ஈண்டினிநிற்றலென்பதனியதோரியல்பிற்றன்றால்
வேண்டலரறிவரேனுங்கேண்மைதீர்வினையிற்றாமால்
ஆண்டகை ○ யாளிமொய்ம்பினையநீரளித்தசெல்வம்
காண்டியாலுன்முன்வந்தகவிக்குலக்கோனோடென்றான். (௬௭)

மாருதிமாற்றங்கேட்டமலைபுரைவயிரத்தோளான்
தீர்வினைசென்றுநின்றசீற்றத்தான்சிந்தைசெய்தான்
ஆரியனருளிற்றீர்ந்தாரல்லர்வந்தடுத்தசெல்வம்
பேரிதாகச்செய்தசிறுமையாலென்னும்பெற்றி. (௬௮)

---

* வதைபுரிகுநர் - கொலைபுரிவோர் † மாசுண்டது அழுக்கடைந்தது.
‡ அரண்காவல். § உதவாமல் தானொன்றுஞ் செய்யாமல்.
○ யாளி-சிங்கம். யானையாளியுமாம்.

அனையதுகருதிப்பின்னரரிக்குலத்தவனைநோக்கி
வினையொருமாற்றமின்னேநிகழ்த்துவதுளதுநின்பால்
இனையனவுரைத்தற்கேற்றவெண்ணுதியிலைநீயென்று
வனைகழல்வயிரத்திண்டோண்மன்னிளங்குமரன்சொல்வான். (சுகூ)

தேவியைக்குறித்துச்செய்தசிற்றமுமானத்தீயும்
ஆவியைக்குறித்துநின்றதையனையதனைக்கண்டேன்
கோவியற்றருமநீங்கக்கொடுமையோடுறவுகூடிப்
பாவியர்க்கேற்றசெய்கைகருதுவல்பழியும்பாரேன். (எ௦)

ஆயினுமென்னையானேயாற்றிநின்றாவியுற்று
நாயகன்றனையுந்தேற்றநாள்பலகழிந்தவன்றேல்
தீயுமிவ்வுலகமூன்றுந்தேவரும்வீவரொன்றோ
வீயுநல்லறமும்போகாவிதியதுவிலக்கற்பாலார். (எக)

உன்னைக்கண்டெங்கோன்றன்னையுற்றிடத்துதவும்பெற்றி
என்னைக்கண்டன்னதோர்ந்திந்நாளிடைநெடிதுவைகித்
தன்னைக்கொண்டிருந்தேதாழ்த்தானன்றெனிற்றனுவொன்றாலே
மின்னைக்கண்டளையாடன்னைநாடுதல்விலக்கற்பாற்றோ. (எஉ)

ஒன்றுமோவானமின்றியுலகமும்பதினாலுள்ள
வென்றிமாக்கடலுமேழும்மலையுள்ளவெண்ணவேயாய்
நின்றதோரண்டத்துள்ளேயெனினதுநெடியதொன்றோ
அன்றுநீர்சொன்ன * மாற்றந்தாழ்வித்தறுமமன்றால். (எங)

தாழ்வித்தீரல்லீர்பன்னாடருக்கியவரக்கர்தம்மை
வாழ்வித்தீரிமையோர்க்கின்னல்வருவித்தீர்மரபிற்றீராக்
கேள்வித்தீயாளர்துன்பங்கிளர்வித்தீர்பாவந்தன்னை
மூள்வித்தீர்முனியாதானைமுனிவித்தீர்முடிதிரென்றான். (எச)

தோன்றலஃதுரைத்தலோடுமாருதிதொழுதுசொல்லை
ஆன்றநூலறிஞபோயபொருண்மனத் † தடைப்பாயல்லை
என்றதுமுடியேமன்னிறத்துமித்திறத்துக்கெல்லாம்
சான்றெனவறவோய்போர்துன்றம்முனைச்சார்தியென்றான். (எரு)

முன்னுநீசொல்லிற்றன்றோமுயன்றதுமுயற்சிதானும்
இன்னுநீயிசைத்தசெய்வானியைந்தனமென்றுகூறி
அன்னதோரமைதியான்றனருள்சிறிதறிவானேக்கிப்
பொன்னின்வார்சிலையினனுமாருதியோடும்போனான். (எசு)

* மாற்றம்-சொல். † அடைப்பாயல்லை-வையாதே.

அயில்விழிக்குமுதச்செவ்வாய்ச்சிலைநுதலன்னப் * போக்கின்
மயிலியற்கொடித்தேரல்குன்மணிநகைத்திணிவேய்மென்றோட்
குயின்மொழிக்கலசக்கொங்கைமின்னிடைக்குமிழோமூக்கின்
புயலியற்கூந்தன்மாதர்குழாத்தொடுந்தாரைபோனாள். (௭௭)

வல்லமந்திரியரோடுவாலிகாதலனுமைந்தன்
அல்லியங்கமலமன்னவடிபணிந்தச்சந்தீர்ந்தான்
வில்லியுமவனைநோக்கிவிரைவினென்வரவுவீர
சொல்லுதிநுந்தைக்கென்றானன்றெனத்தொழுதுபோனான். (௭௮)

போனபின்றாதைகோயில்புக்கவன்பொலங்கொள்பாதம்
தானுறப்பற்றிமுற்றுந்தைவந்ததடக்கைவீரன்
மானவற்கிளையோன்வந்துன்வாசலின்புறத்தான்சீற்றம்
மீனுயர்வேலைமேலும்பெரிதிதுவிளைந்ததென்றான். (௭௯)

அறிவுற்றுமகளிர்வெள்ளமனைவருமவனைப்பற்றிப்
பிறிவற்றமயக்கத்தான்மூர்துற்றதோர்பெற்றியோரான்
செறிபொற்றாரலங்கல்வீரசெய்திலங்குற்றநம்மைக்
கறுவுற்றபொருளுக்கென்னோகாரணங்கண்டதென்றான். (௮0)

இயைந்தாளெல்லைநீசென்றெய்தலைசெல்வமெய்தி
வியந்தனையுதவிகொன்றாய்மெய்யிலையென்னவீங்கி
உயர்ந்ததுசீற்றமற்றதுற்றதுசெய்கைதானும்
நயந்தெரியநுமன்வேண்டகல்கினனம்மையின்னும். (௮௧)

வருகின்றவேகநோக்கிவானரவீரர்வானைப்
பொருகின்றநகரவாயிற்பொற்கதவடைத்துக்கார்க்குன்
றருகொன்றுமில்லாவண்ணம் † வாங்கினரடுக்கிமற்றும்
தெரிகின்றசினத்தீபொங்கச்செருச்செய்வானமைந்துநின்றார். (௮௨)

ஆண்டகையதனைநோக்கியம்மலர்க்கமலத்தாளிற்
றீண்டினன்றீண்டாமுன்னந்தெற்கொடுவடக்குத்தெய்வ
நீண்டகன்மதிலுங்கொற்றவாயிலுநிரைத்தகுன்றும்
கீண்டனதகர்ந்துபின்னைப்பொடியொடுங்கெழீஇயவன்றே. (௮௩)

அந்நிலைகண்டதிண்டோளரிக்குலத்தனிகமம்மா
எந்நிலையுற்றதென்கேன்யாண்டுபுக்கொளித்ததென்கேன்
இந்நிலைகண்டவன்னையேந்திழையாயத்தோடு
மின்னிலைவேலினானைவழியெதிர்விலக்கிநின்றாள். (௮௪)

* போக்கு-நடை. † வாங்கினர்-எடுத்து.

மங்கையர்மேனிநோக்கான்மைந்தனுமனத்துவந்து
பொங்கியசீற்றம்பற்றிப்புகுந்திலன்பொருமிநின்றான்
நங்கையுமினிதுகூறிநாயகநடந்ததென்னோ
எங்கள்பாலென்னச்சொன்னாளண்ணலுமினையசொன்னான். (அரு)

அதுபெரிதறிந்தவனையன்னவன்சீற்றமாற்றி
விதிமுறைமறந்தானல்லன்வெஞ்சினச்சேனைவெள்ளம்
கதுமெனக்கொணருந்தூதுகல்லதர்செல்லவேவி
எதிர்முறையிருந்தானென்றாளிதுவிங்குப்புகுந்ததென்றான். (அசு)

சொற்றனுமருக்கன்றோன்றல்சொல்லுவான்மண்ணின்விண்ணின்
நிற்குரியார்கள்யாவரையவர்சினத்தினேர்ந்தால்
விற்குரியாரித்தன்மைவெகுளியின்விரைவினெய்தின்
எற்குரையாதுநீரிதியற்றியதென்கொலென்றான். (அஎ)

உணர்த்தினேன்முன்னர்நீயஃதுணர்ந்திலையுணர்விற்றீர்ந்தாய்
புணர்ப்பதொன்றின்மைநோக்கிமாருதிக்குரைப்பான்போனேன்
* இணர்த்தொகையீன்றபொற்றாரெறுழ்வலித்தடந்தோளெந்தாய்
கணத்திடையவனைநீயுங்காணுதல்கருமமென்றான். (அஅ)

உறவுண்டசிந்தையானுமுரைசெய்வானொருவர்க்கின்னம்
பெறலுண்டேயவராலீண்டியான்பெற்றபேருதவியுற்ற
திறலுண்டோவென்னிற்றீர்வானிறந்தபேரிடரையெல்லாம்
† நறவுண்டுமறந்தேன்காணநாணுவன்னமைந்தவென்றான். (அகூ)

ஏயினவிதுவலான்மற்றேழைமைப்பாலதென்றோ
தாயிவண்மனைவியென்னுந்தெளிவன்றேற்றருமமென்னும்
தீவினையர்திறென்றுமன்றியுந்திருக்குநீங்கா
மாயையின்மயங்குகின்றுமயக்கின்மேன்மயக்கும்வைத்தாம். (கூ0)

தெளிந்துதீவினையைத்தீர்ந்தோர்பிறவியைத்தீர்வரென்றே
விளிந்திலாவுணர்வினோரும்வேதமும்விளம்பவேயும்
கெளிந்துறைபுழுவைநீக்கிநறவுண்டுநிறைகின்றேனால்
‡ அளிந்தகத்தெரியுந்தீயைநெய்யினாலவிக்கின்றாரில். (கூக)

தன்னைத்தானுணரத்தீருந்தகையறுபிறவியென்ப
தென்னைத்தான்மறையுமற்றதுறைகளுமிரைத்தவெல்லாம்
முன்னைத்தான்றன்னையோராமுழிப்பிணியழுக்கின்மேலே
பின்னைத்தான்பெறுவதம்மாநறவுண்டுதிகைக்கும்பித்தோ. (கூ[illegible])

---

* இணர்த்தொகை-கொத்தின்கூட்டம். † நறவுண்டு-கட்குடித்து.
‡ அளிந்து-கனிந்து.

அளித்தவரஞ்சுநெஞ்சினடைந்தவரறிவமூழ்கிக்
குளித்தவரின்பதுன்பங்குடைந்தவர்குடைந்தவேரி
ஒளித்தவருண்டுமீண்டிவ்வுலகெலாமுணரவோடிக்
களித்தவரெய்திநின்றகதியொன்றுகண்டதுண்டோ. (௯௩)

செற்றதும்பகைஞர்நட்டார்செய்தபேருதவிதானும்
கற்றதுங்கண்கூடாகக்கண்டதுங்கலைவலாளர்
சொற்றதுமானம்வந்துதொடர்ந்ததும்படர்ந்ததுன்பம்
உற்றதுமுணராராயி * னிறுதிவேறிதனினுண்டோ. (௯௪)

வஞ்சமுங்களவும்பொய்யுமயக்கமுமரபில் † கொட்பும்
தஞ்சமென்றோரைநீக்குந்தன்மையுங்களிப்புந்தாக்கும்
கஞ்சமெல்லணங்குந்தீருங்கள்ளினாலருந்தினோரை
நஞ்சமுங்கொல்வதல்லானரகினைநல்காதன்றே. (௯௫)

கேட்டனனறவாற்கேடுவருமெனக்கிடைத்தவச்சொல்
காட்டியதனுமனீதிக்கல்வியாற்கடந்ததல்லால்
மீட்டினியுரைப்பதென்னேவிரைவின்வந்தடைந்தவீரன்
மூட்டியவெகுளியானுன்முடிவதற்கையமுண்டோ. (௯௬)

அய்யநானஞ்சினேனிந்நறவினினரியகேடு
கய்யினாலன்றியேயுங்கருதுதல்கருமமன்றால்
‡ வெய்யதாமதுவையின்னும்விரும்பினேனென்னின்வீரன்
செய்யதாமரைகளன்னசேவடிசிதைக்கவென்றான். (௯௭)

என்றுகொண்டியம்பியண்ணற்கெதிர்கொளற்கியைந்தவெல்லாம்
நன்றுகொண்டின்னுநீயேநணுகெனவவனையேவித்
தன்றுணைத்தேவிமாருந்தமரொடுந்தழுவத்தானும்
நின்றனனெடியவாயிற்கடைத்தலைநிறைந்தசீரான். (௯௮)

உரைத்தசெஞ்சாந்தும்பூவுஞ்சுண்ணமும்புகையுமூழின்
நிரைத்தபொற்குடமுந்தீபசாலமுநிகழ்ந்தமுத்தும்
குரைத்தெழுவிதானத்தோடுதொங்கலுங்கொடியுஞ்சங்கும்
இரைத்துமிழ்முரசுமுற்றுமியங்கினவீதியெல்லாம். (௯௯)

தூயதிண்பளிக்கிற்செய்தசுவர்களிற்றலத்திற்சுற்றில்
நாயகம்மணியிற்செய்தநனிநெடுந்தூணினுப்பண்
சாயைபுக்குறலாற்கண்டோரயர்வுறக்கைவிலோடும்
ஆயிரமைந்தர்வந்தாருளரெனப்பொலிந்ததவ்வூர். (௧00)

அங்கதன்பெயர்த்தும்வந்தாண்டடியிணைதொழுதானைய
எங்கிருந்தானுங்கோமாவென்றலுமெதிர்கோளெண்ணி

---

* இறுதி-அழிவு. † கொட்பு-சுழற்சி. அது-தலைச்சுற்று.
‡ வெய்யதாம்-கொடிதாகிய.

மங்குறோய்கோயில்கொற்றக்கடைத்தலைமருங்குநின்றான்
சிங்கவேறனையவீரசெய்தவச்செல்வனென்றான். (௪0௧)

சுண்ணமுந்தாசும்வீசிச்சூடகத்தொடிக்கைமாதர்
கண்ணகன்கவரிக்கற்றைறக்காலுறக்கலைவெண்டிங்கள்
விண்ணுறவளர்ந்ததென்னவெண்குடைவிளங்கவீர
வண்ணவிற்கரத்தான்முன்னர்க்கவிகுலத்தரசன்வந்தான். (௪0௨)

அருக்கியமுதலவாயவருச்சனைக்கமைந்தயாவும்
முருக்கிதழ்மகளிரேந்தமுரசினமுகிலினார்ப்ப
இருக்கினமுனிவரோதவிசைதிசையளப்பயாணர்த்
திருக்கிளர்செல்வனோக்கித்தேவருமருளச்சென்றான். (௪0௩)

வெம்முலைமகளிர்வெள்ளமீனெனவிளங்கவிண்ணிற்
சும்மைவான்மதியக்குன்றிற்றோன்றியதெனவுந்தோன்றிச்
செம்மலையெதிர்கொளண்ணலித்திருவொடுமலர்ந்தசெல்வன்
அம்மலையுதயஞ்செய்த * தாதையுமனையனானான். (௪0௪)

வேறு.

தோற்றியவரிகுலத்தரசைத்தோன்றலும்
ஏற்றெதிர்நோக்கினனெழுந்ததவ்வழி
சீற்றமங்கதுதனைத்தெளிந்தசிந்தையால்
ஆற்றினன்றருமத்தினமைதியுன்னுவான். (௪0௫)

எழுவினுமலையினுமெழுந்ததோள்களால்
தழுவினரிருவருந்தழுவித்தையலார்
குழுவொடும்வீரர்தங்குழாத்தினோடும்புக்
கொழிவிலாப்பொற்குழாத்துறையுளெய்தினார். (௪0௬)

அரியணையமைந்ததுகாட்டியையவீண்
டிருவெனக்கவிகுலத்தரசனேவலும்
திருமகடலைமகன் † புல்லிற்சேரவெற்
குரியதோவிஃதெனமனத்தினுன்னுவான். (௪0௭)

கல்லணைமனத்தினையுடைக்கைகேசியால்
எல்லணைமணிமுடிதுறந்தவெம்பிரான்
புல்லணைவைகயான்பொன்செய்பூந்தொடர்
மெல்லணைவைகவும்வேண்டுமோவென்றான். (௪0௮)

என்றவனுரைத்தலுமிரவிகாதலன்
நின்றனன்விம்மினன்மலர்க்கணீருகக்

---

* தாதை-சூரியன் † புல்லில்-தருப்பாசனத்தில்.

குன்றெனவுயர்ந்தவக்கோயிற் * குட்டிம
வான்றலத்திருந்தனன் மனுவின்கோமகன். (௧௦௯)

மைந்தருமுதியருமகளிர்வெள்ளமும்
அந்தமிலேனைக்கிளைஞரழுதகண்ணினர்
இந்தியமவித்தவரெனவிருந்தனர்
நொந்தனர்தளர்ந்தனர்நுவல்வதோர்கிலர். (௧௧௦)

மஞ்சனவிதிமுறைமரபினாடினை
எஞ்சலினின்னமிழ்தருந்தினையாமெலாம்
உஞ்சனமினியெனவரசறைத்தலும்
அஞ்சனவண்ணனுக்கனுசன்கூறுமால். (௧௧௧)

வருத்தமும்பழியுமேவயிறுமீக்கொள
அருத்துமென்றாலெமக்கினியதியாவதோர்
அருத்தியுண்டாயினுமவலத்தான்றழீஇக்
கருத்துவேறற்றபினமிழ்துங்கைக்குமால். (௧௧௨)

மூட்டியபழியெனுமுருங்குதீயவித்
தாட்டினைகங்கைநீரரசன்றேவியைக்
காட்டினையெனினெனைக்கடலினாமிழ்
தூட்டினையாற்பிறிதுயிருமில்லையால். (௧௧௩)

பச்சிலைகிழங்குகாய்பரமனுங்கிய
† மிச்சிலைநுகர்வதுவேறுதானென்று
நச்சிலேனச்சினேனாயினாயுண்ட
எச்சிலையதுவிதற்கேதுவில்லையால். (௧௧௪)

அன்றியுமொன்றுளதையயானினிச்
சென்றனென்கொணர்ந்திடைதிருத்தினாலது
நன்றனைக்கோமகனுகர்வதாதலான்
இன்றிறைதாழ்த்தலுமினிதன்றாமென்றான். (௧௧௫)

வானரவேந்தனுமினிதின்வைகுதற்
மானவர்தலைமகனிடரின்வைகவே
ஆனதுகுரக்கினத்தெமர்கட்காமெனா
மேனிலையழிந்துயிர்விம்மினானரோ. (௧௧௬)

எழுந்தனன்பொருக்கெனவிரவிகான்முளை
விழுந்தகண்ணீரினன்வெறுத்தவாழ்வினன்
அழிந்தயர்சிந்தையனனுமற்கண்டொன்று
மொழிந்தனன்வான்முறைதபோதன்முன்னுவான். (௧௧௭)

* குட்டிமவன்றலம்-கற்படுத்ததரை.
† மிச்சில்-உண்டமிகுதி-எச்சிலென்ப.

பொயினனுதரிற்புகுதுஞ்சேனையை
நீயுடன்கொணருதிநெறிவலோயென
ஏயினனனுமனையிருத்தியீண்டென
நாயகனிருந்துழிக்கடிதுநண்ணுவான். (௧௧௮)

அங்கதனுடன்செலவரிகண்முன்செல
மங்கையருள்ளமும்வழியும்பின்செலச்
சங்கையிலிலக்குவற்றழுவித்தம்முனிற்
செங்கதிரோன்மகன்கடிதுசென்றனன். (௧௧௯)

ஒன்பதிறையிரகோடி * பூகந்தன்
முன்செலப்பின்செலமருங்குமொய்ப்புற
மன்பெருங்கிளைஞருமருங்குசுற்றுற
மின்பொருபூணினன்செல்லும் † வேலையில். (௧௨0)

கொடிவனமிடைந்தன ‡ குமுறுபேரியின்
இடிவனமிடைந்தனபணிலமேங்கின
தடிவனமிடைந்தனதயங்குபூணொளி
பொடியெழுந்தனபடிவானம்போர்த்ததே. (௧௨௧)

பொன்னினின்முத்தினிற்புனைமென்றூசினின்
மின்னினின்மணியினிற்பளிங்கின்வெள்ளியிற்
பின்னினவிசும்பினும்பெரியபெட்புறத்
துன்னினசிவிகைவெண்கவிகைசுற்றின. (௧௨௨)

வீரனுக்கிளையவன்விரும்புஞ்சேவடி
பாரினிற்சேறலிற்பரிதிமைந்தனும்
தாரினிற்பொலங் § கழறழங்கத்தாரணித்
தேரினிற்சேன்றனன்சிவிகைபின்செல. (௧௨௩)

எய்தினன்மானவனிருந்த ¶ மால்வரை
யெய்தினிற்சேனைபின்பொழியகோன்கழல்
அய்யவிற்குமானுக்தானுமங்கதன்
கய்தொடர்ந்தயல்செலக்காதன்முன்செல. (௧௨௪)

கண்ணியகணிப்பருஞ்செல்வக்காதல்விட்
டண்ணலையடிதொழவணையுமன்பினல்
கண்ணியகவிக்குலத்தரசனொடொறும்
புண்ணியற்றெருழுகழற்பாதன்போன்றனன். (௧௨௫)

---

* பூகம்-குரங்கு. † வேலை-சமயம். ‡ குமுறும்-இரைகின்ற. § கழற ழங்க-கழல் முழங்க. ¶ மால்வரை-பெருமலை.

பிறிவருந்தம்பியும்பிரியப்பேருல
கிறுதியிற்றெனவிருந்தவேந்தலை
அறைமணித்தாரினோடாரம்பார்தொடச்
செறிமலர்ச்சேவடிமுடியிற்றீண்டவே. (௧௨௬)

தீண்டலுமார்பிடைத்திருவுசோவுற
நீண்டபொற்றடக்கையானெடிதுபுல்லினான்
மூண்டெழுவெகுளிபோயொளிப்பமுன்புபோல்
ஈண்டியகருணைதந்திருக்கையேவியே. (௧௨௭)

அயலினிதிருத்திநின்னரசுமாணையும்
இயல்பினினியைந்தவேயினிதின்வைகுமே
புயல்பொருதடக்கைநீபுரக்கும்பல்லுயிர்
வெயிலிலதேகுடையெனவிளம்பினான். (௧௨௮)

பொருளுடையவ்வுரைகேட்டபோழ்துவான்
உருளுடைத்தேரினோன்புதல்வனூழியின்
இருளுடையுலகினுக்கிரவியன்னநின்
* அருளுடையேற்கவையரியவோவென்றான். (௧௨௯)

பின்னரும்விளம்புவான்பெருமையோய்நினை
தின்னருளுதவியசெல்வமெய்தினேன்
மன்னவநின்பணிமறுத்துவைகியென்
† புன்னிலைக்குரக்கியல்புதுக்கினேனென்றான். (௧௩௦)

பெருந்திசையனைத்தையும்பிசைந்துநேடினேன்
தருந்தகையமைந்துமத்தன்மைசெய்திலேன்
திருந்திழைதிறத்தினுற்றெளிந்தசிந்தைநீ
வருந்தினையிருப்பயான்வாழ்வின்வைகினேன். (௧௩௧)

இனையனயானுடையியல்புமெண்ணமும்
நினைவுமென்றலினிநின்றியான்செயும்
வினையுநல்லாண்மையும்விளம்பவேண்டுமோ
வனைகழல்வரிசிலைவள்ளியோயென்றான். (௧௩௨)

திருவுறைமார்பனுந்தீர்ந்ததேயும்வர்
தொருவருங்காலமுன்னுரிமையோருரை
தருவினைத்தாகையிற்றாழ்விற்றாகுமோ
பரதனீயினையனபகரற்பாலையோ. (௧௩௩)

ஆரியன்பின்னருமமைந்துநன்குணர்
மாருதியெவ்வழிமருவினானெனச்

* அருள்-தயவு. † புன்னிலை-இழிந்தசெயல்.

சூரியன்கான்முளைதோன்றுமாலவன்
நீரறும்பரவையினெடிதுசேனையான். (௧௩௪)

கோடியோராயிரங்குறித்தகோதிறா
தோடினநெடும்படைகொணரலுற்றவால்
நாடறக்குறித்ததுமின்றுநாளையவ்
* வாடலந்தானையோடவனுமெய்துமால் (௧௩௫)

ஒன்பதினாயிரகோடியுற்றது
நின்பெருஞ்சேனையந்நெடியசேனைக்கு
நன்பெயரவதிநாளைநண்ணிய
பின்செயத்தக்கதுபேசற்பாற்றென்றான். (௧௩௬)

விரும்பியவிராமனும்வீரநிற்கதோர்
அரும்பொருளாகுமோவுமைதிநன்றெனப்
பெரும்பகலிறந்ததுபெயர்திநின்படை
பொருந்துதியெனவவன்றொழுதுபோயினான். (௧௩௭)

அங்கதற்கினியனவருளியையபோய்த்
தங்குதியுந்தையோடென்றுதாமரைச்
செங்கணான்றம்பியுந்தானுஞ்சிந்தையின்
மங்கையுமவ்வழியன்றுவைகினான். (௧௩௮)

சேயுயர்கீர்த்தியான்கதிரின்செம்மல்பாற்
போயதுமவ்வயிற்புகுந்தயாவையும்
ஒய்வுறாதுணர்த்தெனவுணர்த்தினானரோ
வாய்மையாவுணர்வுறவலியமொய்ம்பினோன். (௧௩௯)

அன்றவணிறுத்தன † னலரிகீட்டிசைப்
பொன்றிணிநெடுவரைபொலிவுறாதமுன்
வன்றிறற்றாதுவர்கூவவானரக்
குன்றுறழ்நெடும்படையடைந்தகூறவாம். (௧௪௰)

௧௰-வது. கிட்கிந்தைப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௭௧௪.

---

* ஆடல்-வெற்றி அலலதுபோர். † அலரி-சூரியன்.

பதினொன்றாவது
தானைகாண்படலம்.

சதவலிவருதல்.

ஆனையாயிரமாயிரத் * தெறுழ்வலிக்கமைந்த
வானராதிபராயிருடன்வரவகுத்த
கூனன்மாக்குரங்கையிரண்டாயிரகோடித்
தானையோடுமெச்சதவலியென்பவன்சார்ந்தான். (க)

சுசேடணன் வருதல்.

ஊன்றிமேருவையெடுக்குறுமிடுக்கினுக்குரிய
தேன்றெரிந்துண்டுதெளிவுறுவானரச்சேனை
† ஆன்றபத்துநூறாயிரகோடியோடமையத்
தோன்றினன்வந்துசுசேடணனெனும்பெயர்த்தோன்றல். (உ)

உரோமை தந்தைவருதல்.

ஈறில்வேலையையிமைப்புறுமளவினிற்கலக்கிச்
சேறுகாண்குறுந்திறல்கெழுவானரச்சேனை
ஆறெணாயிரகோடியதுடன்வரவமிழ்தம்
மாறிலாமொழியுருமையைப்பயந்தவன்வந்தான். (ங)

கேசரி வருதல்.

ஐம்பதாயநூறாயிரகோடியெண்ணமைந்த
மொய்ம்புமால்வரைபுரைநெடுவானரமொய்ப்ப
இம்பர்ஞாலத்தும்வானத்துமெழுதியசீர்த்தி
‡ கம்பனைத்தந்தகேசரிகடலெனநடந்தான். (ச)

இடும்பன்வருதல்.

மண்கொள்வாளெயிற்றேனத்தின்வலியெனவயிரத்
திண்கொண்மால்வரைமயிர்ப்புறத்தனவெனத்திரண்ட
கண்கொளாயிரகோடியினிரட்டியிற்கணித்த
எண்கினீட்டங்கொண்டெறுழ்வலியிடும்பன்வந்திறுத்தான். (ரு)

கவாட்சன்வருதல்.

முனியுமாமெனினருக்கனைமுரணறமுருக்கும்
தனிமைதாங்கியவுலகையுஞ்சலம்வரிற்குமைக்கும்
குனியமாக்குரங்கீண்டியதாயிரகோடி
அனிகமுன்வரவான்பெயர்க்கண்ணன்வந்தடைந்தான். (சு)

* எறுழ்வலி-மிக்கவலி. † ஆன்ற-மிகுந்த. ‡ கம்பனை-அனுமானை.

பனசன் வருதல்.

தனிவருத்தடங்கிரியெனப்பெரியவன்சலத்தால்
நினையுநெஞ்சிறவுருமெனவுறுக்குறுநிலையன்
பனசனென்பவன்பன்னிரண்டாயிரகோடிப்
புனிதவெஞ்சினவானரப்படைகொண்டுபுகுந்தான். (எ)

நீலன் வருதல்.

இடியுமாக்கடன்முழக்கமும்வெருக்கொளவிசைக்கும்
முடிவில்பேருறுக்குடையனவிசையனமுரண
கொடியகூற்றையுமொப்பனப்பனபதிற்றைந்துகோடி
நெடியவானரப்படைகொண்டுபுகுந்தனனீலன் (அ)

ததிமுகன் வருதல்.

மாகரத்தனவுரத்தனவலியனநிலைய
வேகரத்தவெங்கண்ணுமிழ்வெயுலனமலையின்
* ஆகரத்தினும்பெரியனவாறைந்துகோடி
சாகரத்தொடுந்ததிமுகனென்பவன்சார்ந்தான். (கூ)

கயன் வருதல்.

இனைத்துவேறொருமாநிலம்வேண்டுமென்றிரங்க
முனைத்தமுப்பதினாயிரகோடியின்முற்றும்
வினைத்தவெஞ்சினத்தரியினம்வெருவுறவிரித்த
அனைக்கரோமமெக்கயனெனும்பெயரான்வந்தடைந்தான் (௧0)

சாம்பன் வருதல்.

ஆயிரத்தறுநூறுகோடியிற்கடையமைந்த
பாயிரப்பெரும்படைகொண்டுபாரவையிற்றிரையிற்
றூயுருத்துடனேவரத்தடக்கவேரையை
எயுருப்புயச்சாம்பனென்பவனும்வந்திறுத்தான். (௧௧)

துன்முகன் வருதல்.

வகுத்ததாமரைமலரயனிசிசரர்வாணாள்
உகுத்தீயெனப்பொருவரும்பெருவலியுடையான்
பகுத்தபத்துநூறாயிரப்பத்தியினிரட்டி
தொகுத்தகோடிவெம்படைகொண்டுதுன்முகன்றொடர்ந்தான் (௧௨)

துமிந்தன் வருதல்.

கோடிகோடிநூறாயிரவெண்ணெணக்குவிந்த
நீடுவெஞ்சினத்தரியினமிருபுடைநெருங்க

* ஆகாரம்-உருவம்.

மூடுமும்பருமிம்பரும்பூழியின்மூழ்கத்
தோடிவர்ந்ததார்க்கிரிபுரைதுமிந்தனுந்தொடர்ந்தான். (கங)

மயிந்தனும் மற்கசனும் கோழகனும் வருதல்.

இயைந்தபத்துநூறாயிரப்பத்தெனுங்கோடி
உயர்ந்தவெஞ்சினவானரப்படையொடுமொருங்கே
சயந்தனக்கொருவடிவெனத்திறல்கொடுதழைத்த
மயிந்தன்மற்கசகோமுகன் றன்னொடும்வந்தான். (கச)

குமுதன் வருதல்.

* கறங்குபோல்வனகாற்றினுங்கூற்றினுங்கடிய
பிறங்குதெண்டிரைக்கடல்புடைபெயர்ந்தெனப்பெயர்வ
மறங்கொள்வானரமொன்பதுகோடியெண்வகுத்த
திறங்கொள்வெஞ்சினப்படைகொடுகுமுதனுஞ்சேர்ந்தான். (கரு)

பதுமுகன் வருதல்.

ஏழினேழுநூறாயிரகோடியென்றிசைந்த
பாழிவன்னெடுந்தோள்கிளர்படைகொண்டுபரவை
யூழிபேரினுமுலைவிலவுலகினிலுயர்ந்த
பூழிவிண்புகப்பதுமுகனென்பவன்புகுந்தான். (கசு)

இடபன் வருதல்.

ஏழுமேழுமென்றுரைக்கின்றவுலகங்களெவையும்
தாழுங்காலத்துந்தாழ்விலாத்தடவரைக்குலங்கள்
சூழுந்தோற்றத்தவலிகொடொள்ளாயிரகோடிப்
பாழிவெம்புயத்தரியொடுமிடபனும்படர்ந்தான். (கஎ)

தீர்க்கபாதனும் வினதனும் சரபனும்வருதல்.

தீர்க்கபாதனும்வினதனுஞ்சரபனுந்திரைக்கும்
ஆர்க்கருங்கடற்குயர்ந்துளவைம்முகத்தனீகம்
ஆர்க்குமெண்ணருங்கோடிகொண்டண்டமும்புறமும்
போர்க்கும்பூழியின்மறைதரமுறையினிற்புகுந்தார். (கஅ)

அனுமான் வருதல்

கய்யஞ்சாயுதமுடையவக்கடவுளைக்கண்டு
மெய்யஞ்சாதவன்மாதிரஞ்சிறிதெனவிரிந்த
வய்யஞ்சாய்தரத்திரிதருவானரச்சேனை
அய்யஞ்சாயிரகோடிகொண்டநுமன்வந்தடைந்தான். (ககூ)

* கறங்கு-காற்றாடி.

நளன் வருதல்.

* நொய்திற்கூடியசேனைநூறாயிரகோடி
எய்தத்தேவருமென்கொலோமுடிவென்பதெண்ணி
மய்யற்சிந்தையாலந்தகன்மறுக்குற்றுமயங்கத்
தெய்வத்தச்சன்மெய்த்திருநெடுங்காதலன்சேர்ந்தான். (௨0)

கும்பனுஞ்சங்கனும் வருதல்.

கும்பனுங்குலச்சங்கனுமுதலினர்குரங்கிற்
றம்பெரும்படைத்தலைவர்கடரவந்ததானை
இம்பரின்றவர்க்கெண்ணரிதிராகவனுமத்
தம்பெனுந்துணைக்குரியமாறுரைப்பரிதளவே. (௨௧)

வானரசேனையின் மிகுதியுரைத்தல்.

தோயினூழியோரேழுநீர்சுவறிவெண்டுகளாம்
சாயினண்டமுமேருவுமொருங்குடன்சாயும்
ஏயின்மண்டலமெள்ளிடவிடமின்றிபிரியும்
காயின்வெங்கனற்கடவுளுமிரவியுங்கரியும். (௨௨)

வானரசேனையை அளவிடமுடியாதெனல்.

எண்ணினான்முகரெழுபதினாயிரர்க்கியலா
உண்ணினண்டங்களோர்பிடியுண்ணவுமுதவா
கண்ணினோக்குறிற்கண்ணுதலானுக்குங்கதுவா
மண்ணின்மேல்வந்தவானரச்சேனையின்வரம்பே. (௨௩)

வானரசேனையின் ஆற்றல்கூறல்.

ஒடிக்குமேல்வடமேருவைவேரொடுமொடிக்கும்
இடிக்குமேனெடுவானகமுகட்டையுமிடிக்கும்
பிடிக்குமேற்பெருங்காற்றையுங்கூற்றையும்பிடிக்கும்
குடிக்குமேற்கடலேழையும்குடங்கையிற்குடிக்கும். (௨௪)

சேனாதிபதிகள் தொகைகூறுதல்.

ஆறுபத்தெழுகோடியர்வானரர்க்கதிபர்
கூறுதிக்கினுக்கப்புறங்குப்புறற்குரியார்
மாறில்கொற்றவனினைத்தனமுடிக்குறும்வலியர்
ஊறுமிப்பெருஞ்சேனைகொண்டெளிதின்வந்துற்றார். (௨௫)

சேனாதிபதிகள் சுக்கிரீவனை வணங்குதல்

எழுமாகடற்பரப்பினும்பரப்பெனவிசைப்பச்
சூழும்வானரப்படையொடவ்வீரரும் † துவன்றி

---

* நொய்தில்-விரைவில். † துவன்றி-நெருங்கி.

ஆழிமாபரித்தேரவன்காதலனடிகள்
வாழிவாழியென்றுரைத்தலர் தூவினர்வணங்கி. (௨௬)

சுக்கிரீவன் இராமனை வானரசேனைகளைக் காணுமாறு வேண்டுதல்.

அனையதாகியசேனைவந்திறுத்தலுமருக்கன்
தனையனெய்தினிற்றயாதன்புதல்வனைச்சார்ந்தான்
நினையுமுன்னம்வந்தடைந்ததுநின்பெருஞ்சேனை
வினையின்கூற்றுவகண்டருணீயெனவிளம்ப. (௨௭)

சேனைகளைக்காண மலைச்சிகரத்தில் ஏறுதல்.

அய்யனும்முவந்தகமெனமுகமலர்ந்தருளித்
தய்யலாள்வரக்கண்டனனுமெனத்தளிர்ப்பான்
எய்தினனங்கொர்நெடுவரைச்சிகரத்தினிருக்கை
வெய்யவன்மகன்பெயர்த்துமச்சேனையின்மீண்டான். (௨௮)

சுக்கிரீவன் வானரப்படைகளை அழைத்துவருதல்.

அஞ்சொடையிரண்டியோசனையகலத்ததாகிச்
* செஞ்சவடதிசைநின்றுத்தென்றிசைசெல்ல
எஞ்சலில்பெருஞ்சேனையையெழுகெனவேவி
வெஞ்சினப்படைவீரரையுடன்கொண்டுமீண்டான். (௨௯)

வந்தசேனையைக் காணுமாறு சுக்கிரீவனுரைத்தல்.

மீண்டிராமனையடைந்திகல்வென்றிவேல்வீர
காண்டிநீயெனவரன்முறைதெரிவுறக்காட்டி
ஆண்டிருந்தனனுர்த்துளைத்தெழுந்ததையன்றே
ஈண்டுசேனைபாலெறிகடனெறிபடர்ந்தென்ன. (௩௦)

எட்டுத்திக்கையுமிருநிலப்பரப்பையுமிமையோர்
வட்ட † விண்ணையுமறிகடலனைத்தையுமறையத்
தொட்டுமேலெழுந்தோங்கிய தூளியிற்பூழி
அட்டிச்செம்பியனிறைகுடமொத்ததவ்வண்டம் (௩௧)

அத்தியொப்பெனினன்னவையுணர்ந்தவருளரால்
வித்தகர்க்கினியுரைக்கலாமுவமைவேறியாதோ
பத்திரட்டிகண்பகலிரவொருவலர்பார்ப்பார்
எத்திறத்தினுமவுகண்டிலர்முடிவென்றே. (௩௨)

விண்ணிற்றீம்புனலுலகத்தினுகரின்வெற்றி
எண்ணிற்றன்னலதொப்பிலனெனநின்றவிராமன்

* செஞ்சவே-நேரே. † விண்-சுவர்க்கம்.

கண்ணிற்சிந்தையிற்கல்வியின்ஞானத்திற்கருதி
அண்ணற்றம்பியைநோக்கின்னுரைசெய்வதானான். (௩௩)

அடல்கொண்டோங்கியசேனைக்குநாமுநம்மறிவான்
உடல்கண்டோமினிமுடிவுளகாணுமாறுளதோ
மடல்கொண்டோங்கியவலங்கலாய்மண்ணிடைமாக்கள்
கடல்கண்டோமென்பர்யாவரேமுடிவுறக்கண்டார். (௩௪)

* ஈசன்மேனியையீரைந்துதிசைகளையீண்டிவ்
வாசில்சேனையையைம்பெரும்பூதத்தையறிவைப்
பேசும்பேச்சினைச்சமயங்கள்பிணக்குறும் † பிணக்கை
வாசமாலையாயாவரேமுடிவெண்ணவல்லார். (௩௫)

இன்னசேனையைமுடிவுறவிருந்திவணோக்கிப்
பின்னைக்காரியம்புரிதுமேனுள்பலபெயரும்
முன்னைச்செய்கைமேலொருப்படலுறவதேயுறுதி
என்னவீரனைக்கைதொழுதிளையவன்விளம்பும். (௩௬)

யாவதெவ்வுலகத்தினினீங்கிவர்க்கியற்றல்
ஆவதாகுவதரியதொன்றுளதெனலாமே
தேவ ‡ தேவியைத்தேடுவதென்பதுசிறிதால்
பாவந்தோற்றதுதருமமேயென்றதிப்படையால். (௩௭)

‖ தரங்கநீரெழுதாமரைநான்முகன்றந்த
வரங்கொள்பேருலகத்தினின்மற்றைமன்னுயிர்கள்
உரங்கொண்மால்வரையுயிர்படைத்தெழுந்தனவொக்கும்
குரங்கின்மாப்படைக்குறையிடப்படைத்தனன்கொல்லாம். (௩௮)

ஈண்டுதாழ்க்கின்றதென்னினியெண்டிசைமருங்கும்
§ தேண்டுவார்களைவல்லையிற்செலுத்துவதல்லால்
நீண்டநூல்வலாயென்றனனிளையவனெடியோன்
பூண்டதோரவன்காதலற்கொருமொழிபுகலும். (௩௯)

௧௧-வது. தானைகாண்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௭௫௩.

---

* ஈசன்-கடவுள். † பிணக்கு-விரோதம். ‡ தேவ-தேவனே.
‖ தரங்கம்-அலை. § தேண்டுவார்-தேடுவோர்.

பன்னிரண்டாவது

நாடவிட்டபடலம்.

இராமன் சுக்கிரீவனைப்பார்த்து நின்சேனைக் களவில்லையென்றல்.

வகையுமானமுமாறெதிர்ந்தாற்றுறு
பகையுமின்றிநிரைத்துபரந்தெழு
தகைவில்சேனைக்கமைதிசமைந்ததோர்
தொகையுமுண்டுகொலோவெனச்சொல்லினான். (௧)

எற்றவெள்ளமெழுபதினிற்றவென்
றாற்றலாள றிவினமைந்ததோர்
மாற்றமுண்டதுவல்லதுமற்றமோர்
தோற்றமென்னிதற்கெண்ணிமுன்சொல்வரோ. (௨)

நீலன் தாற்றலைவியத்தல்.

ஆறுபத்தெழுகோடியனீகருக்
கேறுகொற்றத்தலைவரிவர்க்குமுன்
கூறுசேனைப்பதிகொடுங்கூற்றையும்
நீறுசெய்திடுநீலனென்றோதினான். (௩)

சுக்கிரீவனை இராமன் ஆகவேண்டியகாரியத்தினைச் செய்யெனல்.

என்றுரைத்தவெரிகதிர்மைந்தனை
வென்றிவிற்கையிராமன் விருப்பினான்
நின்றினிப்பலபேசியென்னோநெறி
சென்றிழைப்பனசிந்தனைசெய்கென்றான். (௪)

சுக்கிரீவன் அனுமனைப்பார்த்துரைத்தல்.

அவனு * மண்ணலநுமனையையநீ
புவனமூன்றுநின்றாதையிற்புக்குழல்
தவனவேகத்தையோர்கிலைதாழ்த்தனை
கவனமாக்குரங்கின்செயல்காட்டியோ. (௫)

எகியேரிழைதன்னையிருந்துழீஇ
னாகநாடுகானிலனோடுக
போகபூமிபொருந்திடவல்லநின்
வேகமீண்டுவெளிப்படவேண்டுமால். (௬)

---

* அண்ணல்-பெருமை.

சுக்ரீவன் இராவணநகரந் தென்றிசையிலெனக்கூறக்கேட்டேனெனல்

தென்றிசைக்கணிராவணன்சேணகர்
என்றிசைக்கின்றதென்னறிவின்னணம்
வன்றிசைக்கினிமாருதிநீயலால்
வென்றிசைக்குரியார்பிறர்வேண்டுமோ (௭)

பிறர்கூறுமாறே யானுநினைக்கின்றேனெனல்.

வள்ளறேவியைவஞ்சித்துவெளவிய
கள்ளவாளரக்கன்செலக்கண்டது
தெள்ளியோயதுதென்றிசையென்பதோர்
உள்ளமும்மெனக்குண்டெனவுன்னுவாய். (௮)

அங்கதனுடன் இரண்டுவெள்ளஞ் சேனையோடேகென
அனுமனுக்கிசைத்தல்.

தாரைமைந்தனுஞ்சாம்பனுந்தாமுதல்
வீரர்யாவருமேம்படுமேன்மையாற்
சேர்கவின்றொடுந்திண்டிறற்சேனைகள்
பேர்கவெள்ளமிரண்டொடும்பெற்றியால். (௯)

மேற்கிற் சுசேடணனும் வடக்கில் சதவலியும் கிழக்கில்
வினதனும் செல்கஎன்றல்.

குடதிசைக்கட்சுசேடணன்குபேன்வாழ்
வடதிசைக்கட்சதவலிவாசவன்
இடதிசைக்கண்வினதன்விறற்றரு
படையொடேற்றுப்படர்கெனப்பண்ணினன். (௧௦)

ஒருமாதத்திற்குள் வருதிரென்றல்.

வெற்றிவானரவெள்ளமிரண்டொடும்
சுற்றியோடித் * துருவியொருமதி
முற்றுறுதமுன்முற்றுதிரிவ்விடை
கொற்றவாகையினீரெனக்கூறினன். (௧௧)

விந்தமலைக்குச் செல்லுங்களெனல்.

ஈண்டுநின் † றிறந்தீரைந்துநூறெழில்
தூண்டுசோதிக்கொடுமுடிதோன்றலால்
நீண்டநேமிகொலாமெனநேர்தொழ
வேண்டும்விந்தமலையினைமேவுவீர். (௧௨)

நருமதைக்குச் செல்லுங்களெனல்.

தேடியவ்வழிதீர்ந்தபின்றேவரும்
ஆடுகின்றதறுபதமைந்தினை

* துருவி-தேடி. † இறந்து-கடந்து.

பாடுகின்றதுபன்மணிபாயிருள்
நாடுகின்றாருமறைதாநாடுவீர். (கங)

ஏமகூடமெய்துதிரேனல்.

* வாமமேகலைவானரமங்கையர்
காமப்பூசற்களியிசைக்கள்ளினால்
தூமமேனியசுணங்குயில்வுறும்
ஏமகூடமெனுமலையெய்துவீர். (கச)

தொய்தினம்மலைநீங்கிறுமரோடும்
பொய்கையின்கரைபிற்படப்போதிரால்
செய்யபெண்ணுக்கரியபெண்ணைச்சில
வைகதேடிக்கடிதுவழிக்கொள்வீர். (கரு)

தண்டகம்புதுங்களேனல்.

தாங்குவாரிற்றருவளர்சந்தனம்
வீங்குவேலிவிதர்ப்பமுமெல்லென
நீங்குநாடுநெடியனபிற்படத்
தேங்குவார்புனற்றண்டகஞ்சேர்திரால். (கசு)

முண்டகத்துறையென்னுஞ்சோலைக்குச்செல்லுதிரேனல்.

பண்டகத்தியன்வைகியதாப்பகர்
தண்டகத்ததுதாபதர்தம்மையுட்
கண்டகத்துயர்தீர்வதுகாண்டிரால்
முண்டகத்துறையென்றொருமொய்ம்பொழில். (கஎ)

ஞாலநல்லறத்தோருன்னுநற்பொருள்
போலநின்றுபொலிவதுபூம்பொழில்
சீலமங்கை யர்வாயெனத்தீங்கனி
காலமின்றிக்கனிவதுகாண்டிரால். (கஅ)

நயனநன்கிமையார்துயிலார்நனி
அயனமில்லையருக்கனுக்கல்வழி
சயனமாதர்கலவித்தலைதரும்
பயனுமின்பமுநீரும்பயக்குமால். (கக)

பாண்டுகிரிக் கேதுங்களேனல்.

ஆண்டிறந்துபின்னந்தரத்திந்துவைத்
தீண்டுகின்றதுசெங்கதிர்ச்செல்வனும்
ஈண்டுறைந்தலதேகலனென்பது
பாண்டுவின்மலையென்னும்பருப்பதம். (உO)

* வாமம்-அழகு.

வேறு.

கோதாவியடையுங்கள் எனல்.

முத்தீர்த்துப்பொன்றிரட்டிமணியுருட்டிமுதூர்த்தமுன்றிலாயர்
மத்தீர்த்துமானீர்த்துமலையீர்த்துமானீர்ந்துவருவதியார்க்கும்
* புத்தீர்த்திட்டலையாமற்புலவர்காடுதவுவதுபுனிதமான
அத்தீர்த்தமன்கோதாவிரியென்பரம்மலையினருகிற்றம்மா. (௨௧)

சுவணம் புகுதிரெனல்.

அவ்வாறுகடந்தப்பாலநத்தாறேயெனத்தெளிந்தவருளிஞறும்
வெவ்வாறுமெனக்குளிர்ந்துவெயிலியங்காவகையியங்கும்விரிபூஞ்சோலை
எவ்வாறுமுறத்துவன்றியிருளோடமணியிமைப்பதிமையோர்வேண்டத்
தெவ்வாறுமுகத்தொருவன்றனிக்கிடந்தசுவணத்தைச்சேர்திர்மாதோ. ()

சூரியகாந்தி சந்திரகாந்தி கோங்கணதுலிந்தங்களை யடைதிரெனல்.

சுவணத்தைக்கடந்தப்பாற்சூரியகாந்தகமென்னத்தோன்றிமாதர்
கவனுமிழ்கல்வெயிலியங்குங்கனவரையுஞ்சந்திரகாந்தகமுங்காண்பீர்
அவணவைநீத்தேகியபின்னகனுபலகடந்தாலாந்தனென்பான் [தோ
உவணபதிக்கொளித்துரையுங்கொங்கணமுங்குலிந்தமுஞ்சென்றதிர்மா

அருந்ததிகிருயை யடைதிரெனல்.

அரனதிகனுலகளந்தவரியதிகனென்றுரைக்குமறிவிலோர்க்குப்
பரகதிசென்றடைவரிய † பரிசேபோற்புகலரியபண்பிற்றுமால் (லாம்
சுரகதியினயலதுவான்றோய்குடுமிச்சுடர்த்தொகையதொழுதோர்க்கெல்
வானதிகர்தருந்தகைவருத்தியாநெடுமேலையைவணங்கியப்பால். (௨௪)

மரகதகிரியை யெய்துதிரெனல்.

அஞ்சிவருஞ்வெஞ்சுரனுமாறுமகன்பெருஞ்சுனையுமகிலேலாங்கார
மஞ்சிவருநெடுங்கிரியும்வளகாடும்பிற்படப்போய்வழிமேற்சென்றால்
நஞ்சுவருமிடற்றரவுக்கமிழ்துகனிகொடுத்தாயைக்கலுழனண்ணும்
எஞ்சின்மரகதப்பொருப்பையிறைஞ்சியதன்புறஞ்சாரவேகிர்மாதோ (௨௫)

வெங்கட மடைகிரெனல்.

வடசொற்குந்தென்சொற்கும்வரம்பாகுநான்மறையுமற்றைநூலும்
இடைசொற்றபொருட்கெல்லாமெல்லையதாய்நல்லறத்துக்கீறாய்வேறு
புடைசுற்றுந்துணையின்றிப்புகழ்பொதிந்தமெய்யேபோர்பூத்துநின்ற
உடைசுற்றுந்தண்சாரலோங்கியவேங்கிடத்திற்சென்றுறுதிர்மாதோ (௨௬)

வேங்கடத்து ஞானியரைப் புகழ்தல்.

இருவினையுமிடைவிடாவெவ்வினையுமியற்றுதேயிமையோரேத்தும்
திருவினையுமிடுபெதக்தேர்சிறுமையையுமுறையொப்பத்தெளிந்துநோக்கிக்

* புத்து-ஒருநரகம். † பரிசேபோல்-தன்மைபோல.

கருவினையதிப்பிறவிக்கென்றுணர்ந்தங்கதுகளையுங்கடையின்ஞானத்
தருவினையின்பெரும்பகைராண்டுளரீண்டிருந்துமடிவணங்கற்பாலார். ()

வேங்கடத்தின் தன்மை.

சூதகற்றூர்திருமறையோர்துரையாடுநிறையாறுஞ்சுருதித்தொன்னூல்
மாதவத்தோருறைவிடனுமழையுறங்குமணித்தடனும்வானமாதர்
கீதமொத்தவின்னரங்களின்னரம்புவருடுதொறுங்கிளக்குமோதை
போதகத்தின்மழக்கன்றும்புலிப்பறழுமுறங்கிடனும்பொருந்திற்றம்மா. ()

தொண்டைநாட்டின்வழி காவிரியிங்கு மெய்துதிரெனல்.

* கோடுறுமால்வரையதனைக்குறுகுதிரோலுங்கெடியகோடுமைநீங்கி
வீடுறுதிராதலான்விலங்குதிரப்புறத்தணீர்மேவுதொண்டை
காடுறுதிருற்றதனைநாடியதற்பின்னையவைநளிர்நீர்ப்பொன்னிச்
சேடுறுதண்புனற்றெய்வத்திருநதியினிருகரையுஞ் சேர்திர்மாதோ (உக)

சோணாடுமேலை நாடு தமிழ்நாடுகளிற் புகுதிரெனல்.

துக்கமுற்றூர்மனமென்னத்துறைகெழுநீர்ச்சோணாடுகடந்தாற்றொல்லை
மறக்கமுற்றூனதனயலேமறைந்துறைவரவ்வழிநீர்வல்லையேகி
உறக்கமுற்றூர்கனவுற்றூரெனுமுணர்வினோடுமொதுங்கிமணியாலோங்கர்
பிறக்கமுற்றமலைநாடொடியகன்லமிழ்நாட்டிற்பெயர்திர்மாதோ. (ஙO

மயேந்திரமுங்கடலுங் காண்டிரென்றல்.

தென்றமிழ்நாட்டகன்பொதியிற்றிருமுனிவன்றமிழ்சங்கஞ்சேர்கிற்றிரேல்
என்றுமவனுறைவிடமாமாதலானம்மலையையிடத்திட்டேகிப் (கக
பொன்றிணிந்தபுனல்பெருகும்பொருநையெனுந்திருநதிபின்னொழியநாக
கன்றுவளர்தடஞ்சாரன்மயேந்திரமாநெடுவரையுங்கடலுங்காண்டிர். (ஙக)

அனுமானை இராமன் தனியேயழைத்து சீதை இலக்கணமுரைத்தல்.

ஆண்டுகடந்தப்புறத்துமெப்புறத்துமொருதிங்களவதியாகத்
தேண்டியிவண்வந்தடைதிர்விடைகொடீர்கடிதென்னச்செப்புமேலை
நீண்டவனுமாருதியைநிறையருளாலுறநோக்கிநீதிவல்லோய்
காண்டியெனுற்குறிகேட்டியெனவேறுகொண்டிருந்துகழறலுற்றான். ()

வேறு.

சீதையின் பாதவருணனை.

பாற்கடற்பிறந்தசெய்யபவளத்தைப்பஞ்சியூட்டி
மேற்படமதியஞ்சூட்டிவிளங்குறநிரைத்தமெய்ய
காற்றகைவிரல்களையகமலமும்பிறவுங்கண்ட
எற்பிலவென்பதன்றியிணையடிக்குவமையென்றே. (ஙங)

---

* கோடு-சிகரம்.

புறவடித்திறம் புகறல்.

தீமெயாயுணர்தியையகிரைவளைமகளிர்க்கெல்லாம்
வாய்மையாலுவமையாகமதியறிபுலவர்வைத்த
ஆமையாமென்றபோதுமல்லனசொல்லினாலும்
யாமயாழ்மழலையாடன்புறவடிக்கிழுக்கமன்றோ. (௩௪)

கணைக்காற்றிறமுரைத்தல்.

வனைவாராலரியகோதைபேதைமென்கணைக்கான்மெய்ய
கினைவாராலரியவின்னநேர்படப்புலவர்போற்றும்
சினைவாரற்பகழியாவநெற்சினையென்னுஞ்செப்பம்
எனைவாரற்பகருமீட்டயானுரைத்தின்பமென்றோ. (௩௫)

தொடைத்திறஞ்சொல்லல்.

* அரம்பையென்றற்குமாதர்குறங்கினுக்கமைந்தவொப்பின்
வரம்பையுங்கடந்தபோதுமற்றுரைவகுக்கலாமோ
நரம்பையுமமிழ்தாறநவையுநன்னீர்ப்பண்ணைக்
கரும்பையுங்கடந்தசொல்லாள்கவாற்கிதுகருதுகண்டாய். (௩௬)

கடிதடத்திறங்கட்டுரைத்தல்.

வாராழிக்கலசக்கொங்கைவஞ்சிபோன்மருங்குலாடன்
தாராழிக்கலைசாரல்குறடங்கடற்குவமைதக்கோய்
பாராழிபிடரிற்றங்கும்பார்தனும்பனிவெண்றோங்கும்
ஓராழித்தேருங்கண்டவுனக்குநானுரைப்பதென்றோ. (௩௭)

இடைத்திறம் இசைத்தல்.

† சட்டகந்தன்னைநோக்கியாரையுஞ்சமைக்கத்தக்காள்
இட்டிடையிருக்குந்தன்மையியம்பக்கேட்டுணர்தியென்னின்
கட்டுரைத்துவமைகாட்டக்கட்பொறிகதுவாமையிற்
றொட்டவெற்குணரலாமற்றுண்டெனுஞ்சொல்லுமில்லை. (௩௮)

வயிற்றின்திறம்வகுத்தல்.

ஆலிலைப்படிவர்திட்டமையநுண்பலகைநொய்ய
பால்கிறத்தட்டம்வட்டக்கண்ணடிபலவுமின்ன
போலுமென்றுரைத்தபோதும்புனைந்துரைபொதுமைபார்க்கின்
ஏலுமென்றிசைக்கினேலாவிதுவயிற்றியற்கையின்னும். (௩௯)

நாபியின்றிறத்தை நவிலுதல்.

சிக்கலில்சிற ‡ குதாளிநந்தியின்றிரட்பூச்சேர்ந்த
பொங்குபொற்றொளையென்றாலும்புல்லிதுபுதுமைத்தாமால்

* அரம்பை-வாழை. † சட்டகம்-வடிவம்.
‡ குதாளி-ஒருவகைத்தாளி.

அங்கவளுந்தியொக்குஞ்சுழியெனக்கணித்ததுண்டால்
கங்கையைநோக்கிச்சேறிகடலினுநெடிதுகற்றோய். (௪௦)

உரோமரேகைத்திறம் உரைத்தல்.

மயிரொழுக்கெனவொன்றுண்டால்வல்லிசேர்வயிற்றின்மற்றென்
உயிரொழுக்கதற்குவேண்டுமுவமையொன்றுரைக்கவேண்டின்
செயிரில்சிற்றிடையாயுற்றசிறுகொடிநுடக்கந்தீரக்
குயிலுறுத்தமையவைத்தகொள்கொம்பென்றுணர்ந்துகோடி. (௪௧)

வயிற்றிலுள்ளமூன்றிரேகைகளைக்குறித்துரைத்தல்.

* அல்லிமூன்றிடுமென்றஞ்சியரயிந்தத்துறந்தாட்கம்பொன்
வல்லிமூன்றளவாற்கோலவயிற்றின்மற்றவையுமார
வில்லிமூன்றுலகின்வாழுமாதருந்தொற்றமெய்ம்மை
சொல்லிமூன்றியவாம்வெற்றிவரையெனத்தோன்றுமன்றே. (௪௨)

தனபாரத்திறஞ்சாற்றல்.

செப்பென்பென்கலசமென்பென்செவ்விளநீருந்தேர்வென்
† துப்பொன்றதிரள்சூதென்பன்சொல்லுவென்றும்பிக்கொம்பைத்
தப்பின்றிப்பகலின்வந்தசக்கரவாகமென்பென்
ஒப்பொன்றுமுலகிற்காணேன்பலநினைந்துலைவெனின்னும். (௪௩)

தோட்டிறஞ்சொல்லல்,

கரும்புகண்டாலும்மாலைக்காம்புகண்டாலுமாவி
அரும்புகண்டாரைசோரவழுங்குவேனறிவதுண்டோ
சுரும்புகண்டானுங்கோதைதோணினைந்துவமைசொல்ல
இரும்புகண்டனையநெஞ்சமெனக்கிலையிசைப்பதென்றே. (௪௪)

முன்கைகளின் தன்மைகூறுதல்

முன்கையேயொப்பதொன்றுமுண்டுமூன்றுலகத்துள்ளும்
என்கையேயிழுக்குமன்றேயியம்பினுங்காந்தளொன்றல்
வன்கையாழ்மணிக்கையென்றன்மற்றொன்றையுணர்த்தலன்றி
நன்கையாடக்கையாமோநலத்தின்மேனலமுண்டாமோ, (௪௫)

கைகளின்தன்மை ஒப்பற்றதெனல்.

எலக்கொண்டென்ற ‡ பிண்டியிளந்தளிர்கிடக்கயாணர்
காலைக்கற்பகத்தின்காமர்குழைபங்கமலமென்பூ
நூலொக்குமருங்குலாடனூபுரம்புலம்புங்கோலக்
காலுக்குத்தோலையுமென்றூர்கைக்கொப்புவைக்கலாமோ. (௪௬)

---

* அல்லி-அகவிதழ். † துப்பு-தூய்மை.
‡ பிண்டி-அசோகு.

நகங்களின்தன்மைகூறல்.

வெள்ளியமுறுவற்செவ்வாய்விளங்கிழையிளம்பொற்கொம்பின்
* வள்ளுகிர்க்குவமைகம்மான்மயர்வறவகுக்கலாமோ
எள்ளுதிர்நீரேமுக்கையென்றுகொண்டிவறிப்பின்னும்
கிள்ளைகண்முருக்கின்பூவைக்கிழிக்குமஃதழிக்கலாமோ. (௪௭)

கழுத்தின்தன்மைகழறுதல்

அங்கையுமடியுங்கண்டாலரவிந்தமிணையுமாபோல்
செங்களிசிதறிநீலஞ்செருக்கியதெய்வவாட்கண்
மங்கைதன்கழுத்தைநோக்கிவளரிளங்கமுகும்வாரிச்
சங்கமுமிணையாயினவையென்றுதுணிதிதக்கோய். (௪௮)

அதரமுறுந்திறமறைதல்.

பவளமுங்கிடையுங்கொவ்வைப்பழனும்பைங்குமுதப்போதும்
துவளிலவங்கங்கோபமுருக்கென்றித்தொடக்கஞ்சாலத்
தவளமென்றுரைக்கும்வண்ணஞ்சிவந்துதேன்றதும்புமாகின்
குவளையுண்கண்ணிவண்ணவாயதுகுறியுமஃதே. (௪௯)

வாயின்திறம்வகுத்தல்.

சிவந்ததோரமிழ்தமில்லைத்தேனில்லையுளவென்றாலும்
கவர்ந்தபோதன்றியுள்ளநினைப்பவோர்களிப்புநல்கா
பவர்ந்தவாணுதலினுடன்பவளவாய்க்குவமைபாவித்
துவக்போதுவந்தவண்ணமுரைத்தபோதுரைத்ததாமோ. (௫0)

பற்களின்தன்மைபகர்தல்.

முல்லையுமுருந்துமுத்துமுறவலென்றுரைத்தபோது
சொல்லையுமமிழ்தம்பாலுந்தேனுமென்றுரைக்கத்தோன்றும்
அல்லதொன்றுவதில்லையமிழ்திற்குமுவமையுண்டோ
வல்லையேலறிந்துகோடிமாறிலாவாறுசான்றோய். (௫௧)

மூக்கின்திறமுரைத்தல்

ஓதியுமெள்ளுந்தொள்ளைக்குமிழுமூக்கொக்குமேற்ற
சோதிசெம்பொன்னுமின்னுமணியும்போற்றுளங்கித்தோன்று
எதுவுமில்லைவல்லாரெழுதுவார்க்கெழுதவொண்ணா
நீதியைநோக்கிநீயேநினைதியானெடிதுகாண்பாய். (௫௨)

காதின்தன்மைகழறுதல்.

† வள்ளைகத்தரிகைவாமமயிர்வினைக்கருவியென்னப்
பிள்ளைகளுரைத்தவொப்பைப்பெரியவருரைக்கிற்பித்தாம்

* வள்ளுகிர்-கூரியநகம். † வள்ளை-ஒருகொடி.

வெள்ளைவெண்டோடுசெய்தவிழுத்தவம்விளைந்ததென்றே
உள்ளுதியுலகுக்கெல்லாமுவமைக்குமுவமையுண்டோ. (௩௨.)

கண்களின்திறங்கள்கூறுதல்

பெரியவாய்ப்பரவையொவ்வாபிறிதொன்றுமினைந்துபேச
உரியவாயொருவருள்ளத்தடங்குவவல்லவுண்மை
தெரியவாயிரக்கானோக்கிற்றேவர்க்குந்தெய்வமென்னக்
கரியவாய்வெளியவாகும்வாட்டடங்கண்களம்மா. (௩௪)

புருவங்களின் தன்மைகூறுதல்

கேளாக்குமன்றியொன்றுகிளத்திறற்கீழ்மைத்தாமே
கோளொக்குமென்னினல்லாற்குறியொக்கக்கூறிற்றன்றால்
வாளொக்கும்வடிக்கணுடன்புருவத்துக்குவமைவைக்கின்
தாளொக்க † வளைந்துநிற்பவிரண்டில்லையநங்கசாபம். (௩௫)

முகம்நெற்றிஇவைகளையுரைத்தல்.

கண்ணுநளினநாணுமுகத்தினைநுதலைநாடிப்
பண்ணும்பன்னியாற்றுமதியெனும்பண்பதாகி
முன்னாளின்முளைவெண்டிங்கண்முறைநாளுங்குறைவேயாகி
என்னாளும்வளர்ந்ததென்னினிறையொக்குமியல்பிற்றே. (௩௬)

பின்னுமுகத்தின்திறங்கூறுதல்.

வனைபவரில்லையன்றேவனத்துறைம்வர்தபின்னை
அனையனவெனினுந்தாந்தமழகுக்கோரழிவுண்டாகா
வினைசெயக்குழன்றவல்லவிதிசெயவிளைந்தநீலம்
புனைமணிப்பவளமின்னும்புதுமையாமுவமைபூணு. (௩௭)

முகத்தின் தன்மையுரைத்தல்.

கொண்டலின்குழவியாம்பல்குனிசிலைவள்ளைகொற்றக்
கெண்டையொண்டரளமென்றிக்கேணமையகிடந்ததிங்கண்
மண்டிலவதனமென்றுவைத்தனன்விதியேநீயப்
புண்டரீகத்தையுற்றபொழுதுபொருந்தித்தேர்வாய். (௩௮)

கூந்தலின்திறங்கூறுதல்.

காரினைக்கழித்துக்கட்டிக்கள்ளினோடாவிகாட்டிப்
பேரிருட்பிழம்புதோய்ந்துநெறிவுறீஇப்பிறங்குகற்றைச்
சோர்குழற்றொகுதிச்சூழல்சும்மைசெய்தனையதம்மா
நேர்மையைப்பருமைசெய்தநிறைநறுங்கூந்தனீத்தம். (௩௯)

† வளர்ந்தே என்றும்பாடம்.

* புல்லிதழ்கமலத்தெய்வப்பூவிற்குமுண்டுபொற்பின்
எல்லைசூழ்மதிக்குமுண்டாங்களங்கமென்றுரைக்குமேதம்
அல்லவுஞ்சிறிதுகுற்றமகன்றிலவன்னமன்ன
நல்லியலாளுக்கெல்லாநலனன்றிப்பிறிதுண்டாமோ. (௬௰)

திரிமகளினுஞ் சீதை இலக்கணநிரம்பினவளெனல்.

மங்கையர்க்கோதிவைத்தவிலக்கணம்வண்ணவாசப்
பங்கயத்தவட்குமையாயிரம்பலபற்றிநோக்கின்
செங்கயற்கருங்கட்செவ்வாய்த்தேவரும்வணங்குந்தெய்வக்
கொங்கையைக்குயிலுக்கொன்றுங்குறைவிலகுறியுமஃதே. (௬௧)

சொல்லின்தன்மைசொல்லுதல்.

குழல்படைத்தியாழைச்செய்துகுயிலொடுகிளியுங்கூட்டி
மழலையும்பிறவுந்தந்துவடித்தகைம்மலரின்மேலான்
இழைபொருமுலையினாடனின்சொற்களியையச்செய்தான்
பிழையிலனுவமைகாட்டப்பெற்றிலன்பெறுங்கொலின்னும். (௬௨)

மொழிக்குவமையிலையெனல்.

வானின்றவுலகமூன்றும்வரம்பின்றிவளர்ந்தவேனும்
நாவின்றசுவைமற்றொன்றோவமிழ்தன்றிநல்லதில்லை
மீனின்றகண்ணினாடன்மென்மொழிக்குவமைவேண்டின்
தேனொன்றோவமிழ்தமொன்றோவவைசெவிக்கின்பஞ்செய்யா. (௬௩)

நடத்திறங்கூறுதல்.

பூவருமழலையன்னம்புனைமடப்பிடியென்றின்ன
தேவருமருளத்தக்கசெலவினவெனவுந்தேரேன்
பாவருங்கிழமைத்தொன்மைப்பருணிதர்தொடுத்தபத்தி
நாவரும்கிளவிச்செல்விநடைவருநடையனல்லோய். (௬)

நிறத்தின்தன்மைகூறுதல்,

என்னிறமுரைக்கேன்மாவினிளநிறமுதிருமற்றைப்
பொன்னிறங்கருக்குமென்றால்மணிநிறமுவமைபோதா
மின்னிறநாணியெங்கும்வெளிப்படாவொளிக்கும்வேண்டின்
தன்னிறந்தானேயொக்குமலர்நிறஞ்சமழ்க்குமன்றே

எம்மங்கையும் இவட்கொப்பன்றெனல்,

மங்கையரவளையொப்பார்மற்றுளரில்லையென்னும்
† சங்கையிலுள்ளந்தானேசான்றெனக்கொண்டுசான்றோய்
அங்கவணிலமையெல்லாமளந்தறிந்தருகுசார்ந்து
திங்கள்வாண்முகத்தினாட்குச்செப்பெனப்பின்னுஞ்செப்பும். (௬௬)

* புல்லிதழ்-புறவிதழ். † சங்கையில்-சந்தேகமற்ற

வேறு

கன்னிமாடத்திடைக்கண்டதுகூறெனல்.

முன்னைநான்முனியொடும்முதியநீர்மிதிலைவாய்ச்
சென்னிநீண்மாலையான்வேள்விகாணியசெல
அன்னமாடுறையுளுக்கருகுநின்றனையக்
கன்னிமாடத்திடைக்கண்டதுங்கழறுவாய். (சுஎ)

சனகன்சபையில் கண்டதை யுரையெனல்.

* சூழிமால்யானையின்றுனைமருப்பிணையெனக்
கேழிலாவனமுலைக்கிரிசுமந்திடைவதோர்
வாழிவான்மின்னிளங்கொடியின்வந்தாளையன்
றூழியானரசவைக்கண்டதும்மறைகுவாய் (சுஅ)

வில்லிறுத்தவன்வேறொருவனேல்உயிர்விடுவேனென்றதையுரையெனல்

வரைசெய்தாள்வில்லிறுத்தவன்மாமுனியொடும்
விரசினனல்லனேல்விடுவல்யானுயிரெனக்
கரைசெயாவேலையிற்பெரியகற்பினொடின்
துரைசெய்தாளஃதெலாமுணரநீயுரைசெய்வாய். (சுகூ)

வனத்துக்குவந்து துன்பந்தரிதியோ வென்றெனதனையுரையெனல்.

முன்புகாநிகிலாமுளிநெடுங்கானிலே
என்பினேபோதுவாய்சினைதியோவேழைநீ
இன்பமாயாருயிர்க்கினிமையாயினையினித்
துன்பமாய்முடிதியோவென்றதுஞ்சொல்லுவாய். (எ0)

யானலாதனவெலா மினியவோவெனக் கேட்டதையுரையெனல்.

ஆனபோரரசிழந்தடவிசேர்வாயெனக்
இயானலாதனவெலாமினியவோவினியெனு
மீனுலாநெடுமலர்க்கண்கணீர்விழவிழுந்
தானிலாவுயிரின்வந்தயர்வதும்முறைசெவ்வாய். (எக)

மதிற்கதவுகடத்தற்கு முன்னரே காண்மெங்ஙனென்றதையுரையெனல்.

† மல்லல்மாநகர்துறந்தேகுநாண்மதிதொடும்
கல்லின்மாமதின்மணிக்கடைகடந்திடுதன்முன்
எல்லைதீர்வரியவெங்கானம்யாதோவெனச்
சொல்லினளஃதெலாமுணரநீசொல்லுவாய். (எஉ)

* சூழி-முகபடாம் † மல்லல்-வளம்

மோதிரமளித்தல்.

இனையவாறுரைசெயாவினிதினேகுதியென
வனையுமாமணிநன்மோதிரமளித்தறிஞரின்
வினையெலாமுடிகெனவிடைகொடுத்துதவலும்
புனையும்வார்கழலினனருளொடும்போயினன். (௭௩)

சீதையைத்தேட வானரவீரர் போதல்.

அங்கதக்குரிசிலோட்டுசினைத்துழவராம்
வெங்கதத்தலைவரும்விரிகடற்படையொடும்
பொங்குவிற்றலைவரைத்தொழுதுமுன்போயினார்
செங்கதிர்ச்செல்வனைப்பணிவுறுஞ்சென்னியார். (௭௪)

க௨-வது. நாடவிட்டப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் அ௨௭.

பதின்மூன்றாவது.

பிலநீங்குபடலம்.

போயினார்போயபின்புறநெடுந்திசைகடோ
றேயினானிரவிகாதலனுமேயினபொருட்
காயினாரவரையங்கன்னகாளவதியிற்
றூயினாருலகினைத்தகைநெடுந்தானையார். (௧)

குன்றிசைத்தனவெனக்குவவுதோள்வலியினார்
மின்றிகைத்திடுமிடைக்கொடியைநாடினர்வீராய்
வன்றிசைப்படருமாறொழியவண்டமிழுடைத்
தென்றிசைச்சென்றுளார்திறனெடுத்துரைசெய்வாம். (௨)

வானரர் விந்தபர்வதமடைதல்.

சிந்துராகத்தொடுந்திரண்மணிச்சுடர்செறிந்
தந்திவானத்தினின்றவிர்தலானரவினோ
டிந்தியாறெய்தலானிறைவன்மாமௌலிபோல்
விந்தைநாகத்தின்மாடெய்தினார்வெய்தினால். (௩)

சீதையை விந்தத்திற்றேடுதல்.

அந்நெடுங்குன்றமோடவிர்மணிச்சிகரமும்
பொன்னெடுங்கொடுமுடிப்புரைகளும்புடைகளும்

கன்னெடுந்தாழ்வரைநாடினர் * கவையிலார்
பன்னெடுங்காலமாமென்னவோர்பகலிடை. (௪)

மல்லன்மாஞாலமோர்மறுவுறுவகையின்ச்
† சில்லலோதியையிருந்துறைவிடந்தேடுவார்
புல்லினருலகினைப்பொதுவிலாலகையினால்
எல்லைமாகடல்களையாகுமாவெய்தினார் (௫)

விண்டுபோயிழிவர்மேனியிர்வர்விண்படர்வர்வேர்
உண்டமாமரனினம்மலையும்வாயுறையுநீர்
மண்டுபாரதனின்வாழுயிர்களம்மதியினார்
கண்டிலாதனவயன்கண்டிலாதனகொலாம். (௬)

வேறு.

வானரர்நருமதைநதியையடைதல்.

ஏகினார்யோசனையேழொடேழுபார்
சேகரத்தென்றிசைக்கடிதுசெல்கின்றார்
மேகமாலையினொடும்விரவிமேதியின்
னாகுசேர்நருமதையாறுநண்ணினார். (௭)

வானரர்நருமதைக்கரைகளிலுந் துறைகளிலுந்தேடுதல்.

அன்னமாடிடங்களுமமரர்நாடியர்
துன்னியாடிடங்களுந்துறக்கமேயவர்
முன்னியாடிடங்களுஞ் ‡ சுரும்புமூசுதேன்
பன்னியாடிடங்களும்பாரந்துசுற்றினார். (௮)

பெறலருஞ் § தெரிவையைநாடும்பெற்றியார்
அறன்றுன்னூர்தலுமளகவண்டுசூழ்
நிறைநறுந்தாமரைமுகமுகிழ்த்தில
முறுவலுங்காண்பரான்முழுதுங்காண்கிலார் (௯)

செருமதயாக்கையர்திருக்கில்சிந்தையர்
தருமதயாவிலைதழுவுந்தன்மையர்
பொருமதயானையும்பிடியும்புக்குழல்
நருமதையாமெனுநதியைநீங்கினார். (௧௦)

வானரர் ஏமகூடமலையையடைதல்.

தாமகூடத்திரைத்தீர்த்தசங்கமும்
காமகூடப்பெருந்திசையைநல்கிய

* கவையிலார்-குற்றமிலாதார். † சில்லலோதி-தகட்டணி நீத்தகூந்தல்.
‡ சுரும்புமூசும-வண்டுகள்மொய்க்கும். § தெரிவை-சனகி.

வாமகூடச்சுடர்மணிவயங்குறும்
ஏமகூடத்தடங்கிரியையெய்தினர். (கக)

இதுமுதல் ௫-பாடல் ஏமகூடத்திறமுரைத்தல்.

மாடுறுகிரிகளுமானுமற்றவும்
சூடுறுபொன்னெனப்பொலிந்துதோன்றுறப்
பாடுறுசுடரொளிபரப்புகின்றது
வீடுறுமுலகினும்விளங்குமெய்யது (கஉ)

பறவையும்பல்வகைவிலங்கும்பாடமைந்
துறைவனகனகநுண்பூழியொட்டலான்
நிறைநெடுமேருவைச்சேர்ந்தநீரவாய்ப்
பொறைகெடும்பொன்னொளிமுழுதும்போர்ப்பது. (கங)

பரவியகனகநுண் * பராகம்பாடுற
எரிசுடர்ச்செம்மணியீட்டத்தோடிழி
அருவியுநதிகளுமலங்குதீயிடை
உருகுபொன்பாய்வபோன்றொழுகுகின்றது. (கச)

விஞ்சையர்பாடலும்விசும்பின்வெள்வளைப்
பஞ்சின்மெல்லடியினாரடற்பாணியும்
குஞ்சரமுழக்கமுங்குமுறுபேரியின்
மஞ்சினமுற்றலும்வயங்குமாண்பது. (கரு)

இதுமுதல் ௫-பாடல் அவ்வேமகூடத்தில் சீதையைத்தேடுதல்.

அனையதுநோக்கினரமிர்தமாமயில்
இனையவேலிராவணனிருக்கும்வெற்பெனும்
நினைவினருவர்துயர்ந்தோங்குநெஞ்சினர்
சினமிகக்கனற்பொறிசிந்துசெங்கணார். (கசு)

இம்மலைகாணுதுமேழைமானையச்
செம்மலைநீக்குதுஞ்சிந்தைத்தீவினை
விம்மலுற்றுவகையின்விளங்குமுள்ளத்தார்
அம்மலையேறினாரச்சநீங்கினார். (கஎ)

இரிந்தனகரிகளும்யாளியீட்டமும்
விரிந்த † கோளரிகளும்வெருவிநீங்கின
திரிந்தனரெங்கணுந்திருவைக்காண்கிலார்
பரிந்தனசிந்தனைபரிகின்றுமென. (கஅ)

ஐம்பதிற்றிரட்டிகாவதத்தினுலகன்
றும்பரைத்தொடுவதொத்துயர்விளங்கிய

* பராகம்-பொடி. † கோளரி-சிங்கம்.

செம்பொனற்கிரியையோர்பகலிற்றேடினார்
கொம்பினைக்கண்டிலர்குப்புற்றேகினார். (௧௯)

வெள்ளமோரிரண்டென விரிந்தசேனையைத்
தெள்ளுநீருலகெலாந்தெரிந்துதேடினார்
என்னருமகேந்திரத்தெம்பிற்கூடுமென்
றுள்ளினாருயர்நெடுமோங்கலீங்கினார். (௨0)

வானரர் பாலைவனமடைதல்.

மாருதிமுதலியவயிரத்தோள்வயப்
போர்கெழுவீரரேகுழுமிப்போகின்றார்
நீரெனும்பெருமர்நெறியினீங்கலால்
சூரியன்வெருவுமோர்சுரத்தைநண்ணினார். (௨௧)

இதுமுதன் மூன்றுபாடல் பாலைத்திறம்.

புள்ளடையாவிலங்கரிதுபுல்லொடும்
கள்ளடைமரனிலகல்லுந்தீர்தக
வுள்ளிடையரவநுண்பொடியொடொட்டலின்
வெள்ளிடையல்லதொன்றரிதவ்வெஞ்சுரம். (௨௨)

நன்புலனடக்குறவுணர்வுநாமறப்
பொன்பொலியாக்கைகள்புழுங்கிப்பொங்குவார்
தென்புலந்தங்கெரிநரகிற்சிந்திய
* என்பில்பல்லுயிரெனவெம்மையெய்தினார். (௨௩)

நீட்டியகாவினர்நிலத்திற்நீண்டுதோ
றாட்டியவெம்மையாலுலையுங்காலினர்
காட்டினுங்காய்ந்ததங்காயந்தீதலால்
சூட்டகன்மேலெழுபொரியிற்றுள்ளினார். (௨௪)

வானரர் பிலவழியடைதல்.

ஓதுங்கலாநிழலினைக்காண்கிலாதுயிர்
யிதுங்கலாமுடலினர்முடிவில் † பிழையார்
பதங்கடீப்பருகிடப்பதைக்கின்றார்பல
விதங்கொளாநெடும்பிலவழியின்மேவினார். (௨௫)

பிலத்தினுட் புகுதல்.

மிச்செலவரிதினிவிளியினல்லது
நீச்செலவொழியவுந்தடுக்குந்திண்பில

* என்பில்பல்லுயிர்-சதும்பற்ற பலவகைக்கீடமாதியவுயிர். கீடம்புழு
† பிழையார்-துன்பத்தினார்.

வாய்ச்செலனன்றெனமனத்தினெண்ணினர்
போய்ச்சிலவறிதுமென்றதனிற்போயினர். (உசு)

பிலத்தினுட்புரைக்குட்புகுதல்.

அக்கணத்திப்பிலத்தர்தமெய்தினர்
திக்கினுலகுறச்செறிந்ததேங்கிருள்
எக்கியகதிரவற்கஞ்சியேமுறப்
புக்கதேயனையதோர்புரைபுக்கெய்தினர். (உ௭)

இருட்டினுல் மூச்சுமுட்டுதல்.

எழுகிலர்காலெடுத்தேகுமெண்ணிலர்
வழியுளதாமெனுமுணர்வுமாற்றினர்
இழுகியநெய்யெனுமிருளினேகத்துள்
முழுகியமெய்யன * வுயிர்ப்புமுட்டினர். (உ௮)

வானரர் அனுமனைத் தம்மைக்காக்கவேண்டுதல்.

நின்றனர்செய்வதோர்நிலைமைநோக்கலர்
பொன்றினராமெனப்பொருமும்புந்தியர்
வன்றிறன்மாருதிவல்லையோவெமை
இன்றுகாக்கவென்றிரந்துகூறினர். (உ௯)

அனுமான்தன்வாலை வானரரைப்பிடிக்கச்செய்துகையாற்
தடவிப்போதல்.

உய்வுறுத்துவென்மனமுலையிருழின்வால்
மெய்யுறப்பற்றுதிர்விடுகிலீரென
அய்யனக்கணத்தினின்றகலுநீணெறி
கய்யினிற்றடவிவெங்காவினேகினன். (௩௦)

பன்னிரண்டியோசனைபடர்ந்தமெய்யினன்
மின்னிரண்டனையகுண்டலங்கள்வில்லிடத்
துன்னிருடொலைத்திடத் † துருவியேகினன்
பொன்னெடுங்கிரிநிகர்பொலிந்ததோளினன். (௩௧)

பிலத்துளோருநகராங்காணுதல்.

கண்டனர் ‡ கடிநகர்கமலத்தோண்கதிர்
மண்டலமறைந்துறைந்தனையமாண்பது
விண்டலநாணுறவிளங்குகின்றது
புண்டரிகத்தவள்வதனம்போன்றது. (௩௨)

* உயிர்ப்பு-சுவாசம். † துருவி-ஆராய்ந்து. ‡ கடி-ஒளி.

இதுமுதலைந்துபாட்டில்நகர்வருணனை.

கற்பகக்கானதுகமலக்காடது
பொற்பெருங்கோபுரப் * புரிசைபுக்கது
அற்புதவமருமெய்தலாவது
சிற்பமுமயன்மனம்வருந்திச்செய்தது. (௩௩)

இந்திரநகரமுநிகரிலாதது
மந்திரமணியினிற்பொன்னின்மண்ணினின்
அந்தரத்திழிசுடரவையின்றாயினும்
உந்தருமிருளொர்ந்தொளிரநின்றது. (௩௪)

புவிபுகழ்சென்னிபோமலன்றோள்புகழ்
கவிகடமனையெனக்கனகராசியும்
சவியுடைத்துசுமென்சாந்துமாலையும்
அவிரிழைக்குப்பையுமளவிலாதது. (௩௫)

பயில்குரற்கிண்கிணிபரந்தபாவையர்
இயல்புடைமைந்தரொன் † றியக்கிலாமையால்
துயிலவுநோக்கவுந்துணையதன்றியும்
உயிரிலாவோவியமென்னவொப்பது. (௩௬)

அமிழ்துலையினியயடுத்தவுண்டியம்
தமிழ்நிகர்நறவமுந்தணிதண்டேறலும்
இமிழ்கனிப்பிறக்கமும்பிறவுமின்னன
கமழ்வுறத்தோன்றியகணக்கில்கொட்பது (௩௭)

வேறு.

இஃதிராவணநகரமெனவானரர்கருதிச்செல்லுதல்

கன்னிநெடுமாநகரமன்னதெதிர்கண்டார்
இந்நகரவாயிகலிராவணனதென்
றுன்னியுரையாடினருவந்தனர்வியந்தார்
பொன்னினெடுவாயிலதனூடுநனிபுக்கார். (க௮)

அந்நகரினுள் மனிதர்முதலிய எவ்வுயிருமில்லாமைகாணுதல்.

புக்கநகரத்தினிதுநாடினர்புகுந்தார்
மக்கள்கடைதேவர்தலைவானுலகின்வையத்
தொக்கவுறைவோருருவமோவியமலான்மற்
றெக்குறியினுள்ளவுமெதிர்ந்திலர்திரிந்தார். (௩௯)

* புரிசை-மதில். † இயக்கிலாமையால்-சஞ்சாரமின்மையால்.

வாவியுளபொய்கையுளவாசமணாறும்
காவுமுளகாவிவிழியார்மொழிகளென்னக்
கூவுமினமென்குயில்கள்பூவைகிளிகோலத்
தூவிமடவன்னமிவையுள்ளசுவடில்லை. (௪0)

அந்நகரினை மாயாசாலமோ அல்லதுசுவர்க்கமோவென அவர்நினைதல்.

ஆயநகரத்தினியல்புள்ளுறவுநின்றார்
மாயைகொலெனக்கருதிமற்றுநினைவுற்றார்
தீயபிலனுட்பிறவிசென்றவிவையொன்றோ
தூயதுறக்கமெனநெஞ்சுதுணிவுற்றார். (௪௧)

என்செய்வதேன் வானரர்மயங்குதல்.

இறந்திலமிதற்குரியதெண்ணியிலமேது
*மறந்தில * மயிர்ப்பினொடிமைப்புளமயக்கம்*
பிறந்தவர்செயற்குரியசெய்தல்பிழையின்றால்
திறந்தருவதென்னெனவிசைத்தனர்திகைத்தார். (௪௨)

சாம்பன் இது இராவணனமைத்த தந்திரமெனல்.

சாம்பனவனொன்றுரைசெய்வானெழுசலத்தால்
காம்பனையதோளியையொளித்தபடுகள்வன்
நாம்புகவமைத்தபொறிநன்றுமுடிவின்றால்
ஏம்பலினிமேலவிதியான்முடியுமென்றான். (௪௩)

அனுமன் சீற்றங்கொண் டுரைத்தல்.

இன்றுபிலனீதிடையினேறரிதெனிற்பார்
நின்றுசகரர்க்கதிகமாகிநனிசேறும்
அன்றதெனின்வஞ்சனையரக்கரையடங்கக்
கொன்றெழுதுமஞ்சலெனமாருதிகொதித்தான். (௪௪)

அந்நகருள் சடையோடுகூடிய் மாதொருத்தி இருக்ககாண்டல்

மற்றவருமற்றதுமனக்கொளவலித்தார்
உற்றனர்புரத்திடையவ்வொண்சுடரினுள்ளோர்
நற்றவமனைத்துமுருநண்ணியொளிபெற்ற
கற்றைவிரிபொற்சடையினாளையெதிர்கண்டார். (௪௫)

அவள்நாசிநுனி விழியுடையளாயிருத்தல்.

† மருங்கலசவற்கலைவரிந்துவரிவாளம்
பொருங்கலசமொக்குமுலைமாசுபுடைபூசிப்
பெருங்கலைமதித்திருமுகத்தள்பிறழ்செங்கேழ்
கருங்கயல்களிப்புறவுமூக்கினுதிகண்ணாள். (௪௬)

---

* அயிர்ப்பினொடு-சந்தேகத்துடன்.
† மருங்கு-இடை-அலச-வருந்த-வற்கலை-மரவுரி- வரிந்து-கட்டி.

அவள் திருப்பின்றிறமுரைத்தல்.

தேரனையவல்குல்செறிதிண்கதலிசெப்பும்
ஊருவினொடொப்புறவொடுக்கியுறவொல்கும்
நேரிடைசலிப்பநனிதித்திநிமிர்கொங்கைப்
பாரமுளொடுக்குளவுயிர்ப்பிடைபரிப்ப. (சஎ)

அவள்கரங்கள் தொடையிற் பொருந்தியிருத்தலுரைத்தல்.

தாமரைமலர்க்குவமைசால்புறுதளிர்க்கைப்
பூமருவுபொற்செறிகுறங்கிடைபொருந்தக்
காமமுதலுற்றபகைகாறளரவாசை
நாமமறியப்புலனுநல்லறிவுபுல்க. (சஅ)

அவள்விழிகளில் கருணையிருக்கக்காண்டல்.

செறிந்துநிமிர்கற்றைநசிறையோதிநெடுநீலம்
செறிந்தசடையுற்றநுதலத்தினெறிசெல்லப்
பறித்துவினைபற்றறமனப்பெரியபாசம்
பிறிந்துபெயரக்கருணைகண்வழிபிறங்க. (சகூ)

அவளைச் சீதையென வானரர் கருதல்.

இருந்தனளிருந்தவளையெய்தினரிறைஞ்சா
அருந்ததியெனத்தகையசீதையவளாகப்
பரிந்தனர்பதைத்தனர்பணித்தகுறிபண்பிற்
றெரிந்துணர்திமற்றிவள்கொறேவியெனலோடும். (ரு0)

சங்குமணிமுத்துமணியானுல் இவளுஞ்சானகியாகலாமெனல்.

எக்குறியொடெக்குணமெடுத்திவணுரைக்கேன்
இக்குறியுடைக்கொடியிராமன்மனையாளோ
** அக்கின்மணிமுத்தமணியாரமதினேர்நின்*
றொக்குமெனிஞெக்குமெனமாருதியுரைத்தான். (ருக)

அப்பெண் இவரைநீவிர் யாவரெனல்.

அன்னபொழுதின்கணவணங்குமறிவுற்றாள்
முன்னனையர்சேறன்முறையன்றெனமுனிந்தாள்
துன்னரியபொன்னகரியின்னுறைவிரல்லீர்
என்னவரவியாவருரைசெய்மெனவிசைத்தாள். (ருஉ)

வானரர்தாம் வந்தசெயலுரைத்தல்.

வேதனையரக்கரொருமாயைவிளைவித்தார்
சீதையையொளித்தனர்மறைத்த † புரைதேர்வுற்

---

* அக்கின்மணி-சங்குமணி-கவடியுமாம். † புரை-வீடு, இடமுமாம்.

றேதமிலறத்துறைநிறுத்தியவிராமன்
றாதருலகிற்றிரிதுமென்றுமுறைசொன்னார். (௫௩)

அதுகேட்டு மகிழ்ந்தவவள் நும்வரவு நல்வரவாகஎன்றல்.

என்றலுமிருந்தவளெழுந்தனளிரங்கிக்
குன்றனையதாயதொருபேருவகைகொண்டாள்
நன்றுவரவாகநடனம்புரிவலென்று
நின்றனணெடுங்கணிணைநீர்கலுழிகொள்ள. (௫௪)

அவள்இராமன் எவ்விடத்தானெனலும் மாருதிகூறுதலும்.

எவ்வுழையிருந்தனனிராமனென * யாணர்ச்
செவ்வுழைநெடுங்கணவள்செப்பிதலோடும்
அவ்வுழைநிகழ்ந்ததனையாதியினொடந்தம்
வெவ்விழைவில்சிந்தைநெடுமாருதிவிரித்தான் (௫௫)

பாத்யாதியளித் துபசரித்தல்.

கேட்டவளுமென்னுடையகேடறவமின்னே
காட்டியதுவீடெனவிரும்பிகனிகானீர்
ஆட்டியமிழ்தன்னசுவையின்னடிசிலன்போ
டூட்டிமனனுள்குளிரவின்னுரையுரைத்தாள். (௫௬)

அனுமனவளைவணங்கி இந்நகர்த்தலைவர் யாவர்நின்பெயர்யாது எனவினவுதல்.

மாருதியுமற்றவண்மலர்ச்சரண்வணங்கி
யாரிநகருக்கிறைவர்யாதுநி † னியற்பேர்
பார்புகழ்தவத்தினைபணித்தருளுகென்றான்
சோர்குழலுமற்றையவனுற்றபடிசொன்னாள். (௫௭)

அயன்மனுக்காக அமைத்ததிந்நகரமெனல்

நுண்முகநுனித்தநெறிநூறுவரவொய்தாய்
மேன்முகநிமிர்த்துவெயில்காலொடுவிழுங்கா
‡ மான்முகமுகத்தவன் மயன்செய்ததவத்தால்
நான்முகனளித்துளதிமாநகரநல்லோய். (௫௮)

அரம்பையருளொருத்தியை அவன்விருப்பத்திற் கிணங்கியாளிவண் சேர்த்தேனெனல்.

அன்னதிதுதானவரம்பையருளாங்கோர்
நன்னுதலினுண்முலைநயந்தனனநல்லாள்

---

* யாணர் - அழகிய. † இயற்பெயர்-நாமகரணகாலத்திட்டு வழங்கும் பெயர் அல்லது வழங்கும் பெயருமாம்.
‡ மான்முகமுகத்தவன், மானின்முகம்போலு முடையவன்.

என்னுயிரனுளவளையானவனிரப்பப்
பொன்னுலகினின்றியல்பிலத்திடைபுணர்த்தேன். (௯௯)

அவனுமவளுந்தானு மிங்கிருந்தேமெனல்.

புணர்ந்தவளுமன்னவனுமன்றில்விழைபோகத்
துணர்ந்திலர்செம்பகலிம்மாநகருறைந்தார்
கணங்குழையினுளொரோயர்காதலொருவாதுற்,
றிணங்கிவருபாசமுடையேனுடனிருந்தேன். (க0)

அவளைத்தேடிக்கொண்ட விந்திரன்மயனைக் கொன்றரம்பையைச் சீறினனெனல்.

இருந்துபலநாள்கழியுமெல்லையினின்வல்லோய்
திருந்திழையைநாடிவருதேவரிறைசீறிப்
பெருந்திறலினானையுயிருண்டபிழையென்றம்
முருந்துநிகர்மூரனகையாளையுமுனிந்தான். (கக)

இந்திரனிந்நகருக்கென்னைக் காவலாக்கினனெனல்.

முனிந்தவளையுந்தமுறைமுற்றுமொழிகென்னக்
கனிந்துவர்வாயவளுமென்னையிவள் * கன்னல்
இனிந்தைமுடிவுற்றதெனவண்ணலுமிதெல்லாம்
நினைந்திவனிருத்திநகர்வானினதென்றான். (கஉ)

இந்திரனிந்நகரவழிவை யிருளாமாறு சபித்தானெனல்.

என்றனனிருத்தியிருளாகநெறியென்ன
ஒன்றுரைசெனக்குமுடிவென்றுரைசெயாமுன்
வன்றிலவ்வானரமிராமனருள்வந்தால்
அன்றுமுடிவாகுமிடரென்றனனகன்றான். (கங)

யான் உம்மைக்காணுமாறு தவஞ்செய்தேனெனல்.

உண்ணவுளபூசவுளசூடவுளவொன்றோ
வண்ணமணியாடையுளமற்றுமுளபெற்றேன்
அண்ணலவைவிட்டுமையடைந்திடுதல்வேண்டி
எண்ணரியபல்பகலிருந்தவமிழைத்தேன். (கச)

சுவர்க்கம்புகமார்க்க முளதேல் நினையுங்களெனல்.

அய்யிருபதோசனையமைந்தபிலமையா
மெய்யுளதுமேலுலகமேறநெறிகூறு
உய்யுநெறியுண்டுதவுவீரெனினுபாயம்
செய்யும்வகையுண்டெனினினைத்திர்சிறிதென்றான். (கரு)

* கன்னல்-நினைவால்.

அனுமான்வளைவணங்கி நினக்கிச்சுவர்க்க மளிப்பலெனல்.

* அன்ன குறித்தரிவைகூறவநுமானும்
மன்னுபுலன்வென்றவருமாதவண்மலர்த்தாள்
சென்னியின்வணங்கினனிவானவர்கள்சேரும்
பொன்னுலகமீகுவனினக்கெனல்புகன்றான். (சுசு)

வானரர் அனுமானைப்பிரத்தினீங்க வழிதேடெனல்.

முழைத்தலையிருட்கடலின்மூழ்கிமுடிவேமைப்
பிழைத் † துயிருயிர்க்கவருள்செய்தபெரியோனே
இழைத்திசெயலாயவினையென்றனரிரந்தார்
வழுத்தரியமாருதியுமன்னதுவலிப்பான். (சுஎ)

அஞ்சலிரோன்றனுமன் விசுவரூபங் கொள்ளுதல்.

நடுங்கன்மினெனச்சோலைநவின்றுநகைகாற
மடங்கலினெழுந்துமழையேறரியவானத்
தொடங்கலில்பிலந்தலைதிறந்துலகொடொன்ற
நெடுங்கைகள்சுமந்துநெடுவானுறநிமிர்ந்தான். (சுஅ)

அனுமன் ஆதிவராகத்தை யொத்தானெனல்.

எருத்துறுசுடர்ப்புயமிரண்டுமெயிறென்ன
மருத்துமக ‡ னிப்படியிடந்துறவளர்ந்தான்
கருத்துநிமிர்கண்ணினெதிர்கண்டவர்கலங்க
உருத்துலகெடுத்த § கருமாவினையுமொத்தான். (சுகூ)

அனுமனுயர்ந்து வாமனன்சேவடியையொத்தானெனல்.

மாவடிவுடைக்கமலநான்முகன்வகுக்கும்
ஆவடிவுடைச்சுடர்கொள்விண்டலைதொலைக்கும்
மூவடிகுறித்துமுறையீரடிமுடித்தான்
பூவடிவுடைப்பொருவில்சேவடிபுரைத்தான். (எ0)

பிலத்தின்மேற்றட்டை அனுமன்கடலிலெறிந்து கர்ச்சித்தானெனல்.

எழிருபதோசனையிடந்துபடியின்மேல்
○ ஊழுறவெழுந்தெனையும்பருமொடுங்கப்
பாழிநெடுவன்பிலனுணின்றுபடர்மேல்பால்
ஆழியினெறிந்தநுமன்மேகமெனவார்த்தான். (எக)

அனைவரும் பிலத்தினின்றும்வெளிப்படுத்தல்.

இன்றுமுளமேல்கடலியக்கில்பிலநீவா
நின்றுநிலைபெற்றனதுநீணுதலியோடும்

---

* அன்னது-சுயம்பிரபைகூற. என்றுமபாடம்.† உயிருயிர்க்க-உயிருண்டாக
‡ இப்படியிடந்துற-இப்பூமியிளக்க. § கருமா-பன்றிப்பொதுப்பெயர்.
○ ஊழுற-சோராக.

குன்றபுரைதோளவரெழுந்துநெறிகொண்டார்
பொன்றிணிவிசும்பினிடைநன்னுதலிபோனாள். (௭௨)

பிலத்துளிருந்த பெண்ணின்பெயர் சுயம்பிரபையெனல்.

* மேருவரைமாமுலையண்மென்சொலினன்விஞ்சு
மாருதியினைப்பலவுவந்துமகிழ்வுற்றே
ஏருறுசுயம்பிரபையேமைநெறியெய்தத்
தாருவளர்பொற்றலனிடைக்கடிதுசார்ந்தாள். (௭௩)

வானரர் சக்கரதீர்த்தக்கரையையடைதல்.

மாருதிவலித்தகைமைபேசி † மறவோரும்
பாரிடைநடந்துபகலெல்லைபடரப்போய்
நீருடையபொய்கையெனுநேமியிடைநின்றார்
தேருடைநெடுந்தகையுமேலைமலைசென்றான். (௭௪)

௧௩-வது பிலநீங்குபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௦௪௧.

பதினான்காவது

ஆறுசெல்படலம்.

வானரருறங்குங்காலத்தில் அரக்கன்வருதல்

கண்டார்பொய்கைக்கண்ணகன்னீர்க்கரைகாமுற்
றண்டார்தேனுமொண்கனிகாயுமொருசூழல்
கொண்டாரன்றேவின்றுயில்குன்றிற்குறியெய்தித்
துண்டார்வென்றித்தானவன்வந்தான்றகைவில்லான். (௧)

அவ்வரக்கனுருவத்திற மாதியவுரைத்தல்.

மலையேபோல்வான்மால்கடலொப்பான்மறமுற்றக்
கொலையேயொப்பான்கூற்றைநிகர்ப்பான்கொடுமைக்கோர்
நிலையேபோல்வானீர்மையிலாதானியிர்திங்கட்
கலையேபோலுங்காலவெயிற்றான்கனல்கண்ணான். (௨)

வேறு.

‡ கருவிமாமழைகடாவிமீ
துருவமேனிசென்றுலவியொற்றலால்

* இந்த ௭௩-ம் பாடல் பலபிரதிகளிற் காணப்படவில்லை.
† மறவோர்-வானவீரர்.
‡ கருவிமாமழை-உலகபாலனத்திற்குபகர்ணமாகவுள்ள சிறந்தமேகம்.

பொருவின்மாரிமேலொழுதிபொற்பினால்
அருவிபாய்தருங்குன்றமேயனான். (௩)

வானவர்க்குமற்றவர்வலிக்குநேர்
தானவர்க்குமேயரியதன்மையான்
ஆனபுட்கலன்மகனோடாடவே
றேனயர்க்குமொன்றெண்ணவொண்ணுமோ. (௪)

அரக்கன் வானரரைச் சமீபித்தல்.

பிறங்குபங்கிபான்பெயரும்பெட்பினிற்
கறங்குபோன்றுளான்பிசையுங்கையினான்
அறங்கொள்சிந்தையார்நெறிசலோய்வினால்
உறங்குவார்கள்ரவர்தொல்லையெய்தினான். (௫)

அரக்கன்என்துளத்தநகிலெய்தினாரியாவரெனஅங்கதன்மார்பிலறைதல்

பொய்கையென்னதென்றுணர்ந்தும்புல்லியோர்
எய்தினார்கள்யாரிதுவெனாவெனா
அய்யனங்கதனலங்கன்மார்பினிற்
கய்யின்மோதினான்காலனேயனான் (௬)

அங்கதன்வனை இராவணனென்க்கருதி அடித்தலுமவனிறத்தலுங்கூறல்.

மற்றிமைந்தனுமுறக்கமாறினான்
இற்றிவன்கொலாமிலங்கைவேந்தனா
வெற்றினானைநேரெற்றினானவன்
முற்றினானிகற்காதிமூர்த்தியான். (௭)

வானரதுறக்க நீங்குதல்.

இடியுண்டாங்கனோலோங்கலிற்றதொத்
தடியுண்டான்றளர்ந்தலறிவீழ்தலும்
தொடியின்றோள்விசைத்தெழுந்துசுற்றினார்
பிடியுண்டாரெனத்துயிலும்பெற்றியார் (௮)

அனுமனங்கதனை இவன்யாவனெனலு மவனறியேனென்லும்.

யார்கொலாமிவனிழைத்ததென்னெனாத்
தரைசேயினைத்தனிவினயினான்
* மாருதேயன்மற்றவனும்வாய்மையால்
ஆரியாதெரிந்தறிகிலேனென்றான். (௯)

சாம்பவன்பேயர் துமிரனெனல்

யானிவன்றனைத்தெரியவெண்ணினேன்
துரிவர்தவேற்றமிரனென்னும்பே

* மாருதேயன்-வாயுகுமாரன்.

ரானிவ்வாழ்புனற்பொய்கையாளுமோர்
தானவன்னெனச்சாம்பன்சாற்றினான். (௪௦)

பின்னநூறங்கா திருத்தல்.

வேறுமெய்துவாருளர்கொலாமெனாத்
தேறியின்றுயிற்செலவுதீர்ந்துளார்
வீறுசெஞ்சுடர்க்கடவுள்வேலைவாய்
* நாறுநாண்மலர்ப்பெண்ணைகாடுவான். (௪௧)

வானரர் பெண்ணையையடைதல்.

† புண்ணைவெம்முலைப்புளினமேய்தடத்
துன்னவாம்பலின்னமிழ்தமூறவாய்
வண்ணவெண்ணகைத்தானவாண்முகப்
பெண்ணைகண்ணினார்பெண்ணைகாடுவார். (௪௨)

பெண்ணையிற் சீதையைத்தேடுதல்.

துறையுந்தோகைநின்றாடுஞ்சூழலும்
குறையுஞ்சோலையுங்குளிர்ந்தசாரனீர்ச்
சிறையுந்தெள்ளுபூந்தடமுந்தெண்பளிக்
கரையுந்தேடினாறிவின்கோடியார். (௪௩)

அணிகொழித்துவந்தெவருமாடினார்
பிணிகொழித்தவெம்பிறவிவேரின்வன்
றுணிகொழித்தருஞ்சுழிகடோறுநன்
மணிகொழித்திடுந்துறையின்வைகினார். (௪௪)

வானரர் தசனவநாடடைதல்.

ஆடு ‡ பெண்ணைநீராறுமேறினார்
காடுநண்ணினார்மலைகடந்துடார்
வீடுநண்ணினாரென்னவீசு § நீர்
§ நாடுநண்ணினார்நாடுநண்ணினார். (௪௫)

வானரர் விதர்ப்பநாடு புகுதல்.

§ தசன்வப்பெயர்த்தானசண்பகத்
¶ தசனவப்பிரந்தகனகாவொடரீஇ
உசனவப்பெயர்க்கவியுதித்தபேர்
இசைவிதர்ப்பநாடெளிதினெய்தினார். (௪௬)

* நாறுநாள்-உதிக்குங்காலத்தில். † புண்ணை-ஒப்பின்மையால் சக்ர வாகப்புள்வருந்துகின்ற. ‡ பெண்ணை-உத்தரபினாகி. § நீர்நாடு-தசனவமென்னுநாடு. § நாடுநண்ணினார்-தேடுதலுக்காக வந்தவர்கள்.
¶ சாரசண்பகம்-வரிசையாகிய சண்பகமரங்களுடன்.

விதர்ப்பநாட்டில் முனிவர்வேடங்கொண்டு வானரர் சீதையைநாடுதல்

* வைதருப்பமண்டலனில்வர்துபுக்
செய்தருப்பமத்தனையுமெய்தினார்
மெய்தருப்பைநூல்பிறழுமேனியார்
செய்தவத்துளார்வடிவிற்றேடினார். (கஎ)

வானரர் தண்டகாரணியம் எய்துதல்.

அன்னதன்மையாலறிஞர்நாடியச்
செக்நெல்வேலிசூழ்திருநன்னாடொரீஇத்
தன்னையெண்ணுமத்தகைபுகுந்துளார்
துன்னுதண்டகங்கடிதுதுன்னினார். (கஅ)

சீதையை தண்டகத்திற்றேடிக்காணாது முண்டகத்துறை யெய்துதல்.

உண்டகத்துளாருறையுமைம்பொறிக்
கண்டகர்க்கருங்காலனாயினார்
தண்டகத்தையுந்தடவியேகினார்
† முண்டகத்துறைகடிதுமுற்றினார். (க௯)

முண்டகத்துறைத்தன்மை.

அளவனீரெலாமமரர்மாதரார்
கொள்ளைமாமுலைக்கலவைகோதையிற்
கள்ளுநாறலிற்கமலவேலிவாழ்.
புள்ளுவீனுணப்புலவுதீர்தலால். (உ0)

குஞ்சரங்குடைந்தொழுகுகொட்பதால்
விஞ்சைமன்னர்பால்விரகமங்கைமார்
கஞ்சவீணையினடத்துபாடலான்
அஞ்சுவார்கணீருருவியாறரோ. (உக)

கமுகவார்நெடுங்கணகலூசலிற்
குமுதவாயினார்குயிலையேசுவார்
சமுகவாளியுந்தனுவும்வாண்முகத்
தமுதபாடலார்மருவியாடுவார். (உஉ)

இனையவாயவொண்டுறையையெய்தினார்
நினையும்வேலைவாய்நெடிதுதேடுவார்
வினையவார்குழற்றிருவைமேவலார்
புனையுகோயினார்கடிதுபோயினார். (உங)

---

* வைதருப்பம்-விதர்ப்பசம்பந்தம்.
† முண்டகத்துறை-ஒருதீர்த்தம்; சிலர் கடற்றுறையென்ப.

வானரர் பாண்டுகிரியெய்தல்.

நீண்டமேனியானெடியதாளினின்
றீண்டுகங்கைவந்திழிவதென்னலாய்ப்
பாண்டுவெம்மலைபடர்விசும்பினைத்
தீண்டுகின்றதண்சிகரமெய்தினர். (௨௪)

பாண்டுகிரித்தன்மை.

இருளுறத்துமீதெழுந்துதெண்ணிலா
மருளுறத்துவண்சுடர்வழங்கலால்
அருளுறத்திலாவடலரக்கன்மேல்
உருளுறத்ததிண்கயிலையொத்தலால். (௨௫)

வேறு

சீதையையங்குத் தேடிக்காணாது வருந்துதல்.

விண்ணுறநிவந்தசோதிவெள்ளியங்குன்றமேவிக்
கண்ணுறநோக்கலுற்றார்களியுறக்கனிந்தகாமர்ப்
பண்ணுறுகிளவிச்செவ்வாய்ப்படையுறுநோக்கினாளை
எண்ணுறுதிறத்துங்காணாரிடருறுமனத்தரெய்த்தார். (௨௬)

வானரர் கோதாவிரியடைதல்.

ஊதைபோல்விசையன்வெங்கணுழுவைபோல்வயவரோங்கல்
ஆதியையகன்றுசெல்வாரரக்கனால்வஞ்சிப்புண்ட
சீதைபோகின்றாள்கூந்தல்வழீஇவந்துபுவனஞ்சேர்ந்த
கோதைபோற்கிடந்தகோதாவிரியினைக்குறுகிச்சென்றார். (௨௭)

கோதாவிரித்திறம்.

எழுகின்றகிரியிற்றாழ்கின்றமணிநீர்யாறு
தொழுகின்றசனகன்வேள்விதொடங்கியசுருதிச்சொல்லால்
உழுகின்றபொழுதினீன்றவொருமகட்கிரங்கினாலும்
அழுகின்றகலுழிமாரியாமெனப்பொலிந்ததன்றே. (௨௮)

ஆசில்பெருலகிற்காண்போர் * ளவைநூலெனலுமாகிக்
காசொடுகனகந்தூவிக்கவினுறக்கிடந்தகான்யா
றேசில்போரரக்கன்மார்பினிடைபறித்தெருவைவேந்தன்
வீசியவடகமீக்கோளீதெனவிளங்கிற்றன்றே. (௨௯)

வானரர் சுவணகத்துறையெய்துதல்.

அந்நதிமுழுதுநாடியாய்வுளமயிலையாண்டும்
† சந்நிதியுற்றிலாதார்செடிதுபின்றவிரச்சென்றார்
இன்னதீதிலாததீதென்றியாவையுமெண்ணுங்கோளார்
சொன்னதீவினைகடீர்க்குஞ்சுவணகத்துறையிற்புக்கார். (௩௰)

---

* அளவைநூல்-ஏற்றநூல். அளக்குநூலுமாம், † சந்நிதி-சமுகம்.

வானரர் துலிந்தங்கடந்துபோதல்.

சுரும்பொடுதேனும்வண்டுமுன்னமுர்துவன்றிப்புள்ளும்
கரும்பொடுசெந்நெற்காடுங்கமலவாவிகளுமல்கிப்
பெரும்புனன்மருதஞ்சூழ்ந்தகிடக்கைபின்கிடக்கச்சென்றார்
குரும்பைநீர்முரஞ்சுஞ்சோலைக்குலிந்தமும்புறத்துக்கொண்டார். ()

அருந்ததிமலையை வானரரடைதல்.

கொங்கணமேழுநீங்கிக்குடகடற்றரளக்குப்பைச்
சங்கணிபாணனெய்தறண்புனறவிரவேலித்
திங்களின்கொழுந்துசுற்றுஞ்சிமயநீள்கோட்டுத்தேவர்
அங்கைகள்கூப்பநின்றவருந்ததிக்கருகானார். (௩௨.)

வானரர்வேங்கிடகிரியெய்துதல்.

அருந்ததிக்கருகுசென்றாண்ட * ழகினுக்கழகுசெய்தாள்
இருந்ததிக்குணர்திலாதாரேகினாரிடையர்மாதர்
பெருந்ததிக்கருந்தேன்மாறுமரகதப்பெருங்குன்றெய்தி
இருந்ததிற்றீர்ந்துசென்றார்வேங்கடத்திறுத்தகாலை. (௩௩)

முனிவருமறைவலோருமுந்தைநாட்சிந்தைமூண்ட
வினைவருநெறியைமாற்றுமெய்யுணர்வோரும்விண்ணோர்
எனைவருமமரர்மாதர்யாவருஞ்சித்தரென்போர்
அனைவருமருவிநன்னீர்நாளும்வந்தாடுகின்றார். (௩௪)

வேறு.

பெய்தவைம்பொறியும்பெருங்காமமும்
வைதவெஞ்சொலின்மங்கையர்வாட்கணின்
எய்தவைம்பெருவாளியினெண்ணறச்
செய்தவம்பலசெய்குநர்தேவரால். (௩௫)

வலங்கொ † ணேமிமழைநிறவாணவன்
அலங்குதாளிணைதாங்கியவம்மலை
விலங்கும்வீடுறுகின்றனமெய்ந்நெறிப்
புலன்கொள்வார்கட்கனையதுபொய்க்குமோ. (௩௬)

ஆயகுன்றினையெய்தியருந்தவம்
மேயசெல்வரைமேவினர்மெய்ந்நெறி
நாயகன்றனைநாளும்வணங்கிய
தூயநற்றவர்பாதங்கள்சூடினார். (௩௭)

---

* அழகினுக்கழகுசெய்தாள்-சீதை. † நேமி-சக்கரத்தினையுடைய.

வானரர்வேங்கடத்திற் சீதையைக்காணாது தண்டகநாடு புகுவான் பார்ப்பனவேடமெய்துதல்.

சூடியாண்வச்சுரிகுழற்றோகையைத்
தேடிவார்புனற்றெண்டிரைத்தண்டக
நாடெண்ணுகின்றார்மறைநாவலர்
வேடமேயினர்வேண்டுருமேவுவார். (௩௮)

தொண்டைநாட்டின் றன்மை.

குன்றுசூழ்ந்தகடத்தொடுங்கோவலர்
முன்றில்சூழ்ந்தபடப்பையுமொய்புனல்
சென்றுசூழ்ந்தகிடக்கையுந்தெண்டிரை
மன்றுசூழ்ந்தபரப்புமருங்கெலாம். (௩௯)

சூலடிப்பலவின்சுளைதூங்குதேன்
கோலடிப்பவெரீஇக்குலமள்ளரேர்ச்
சாலடித்தருஞ்சாலியின்வெண்முளை
தோலடிக்கிளையன்னந்துவைப்பன. (௪௦)

செருகுறுங்கணிற்றேங்குவளைக்குலம்
அருகுறங்கும்வயன்மருங்காய்ச்சியர்
இருகுறங்குபிறங்கியவாழையிற்
குருகுறங்குங்குயிலுந்துயிலுமால். (௪௧)

தெருவினார்ப்புறம்பல்லியந்தேர்மயில்
கருவிமாமழையென்றுகளிப்புறு
பொருநர்தண்ணுமைக்கன்னமும்போகிலா
மருவினார்க்குமயக்கமுண்டாங்கொலோ. (௪௨)

* தேரைவன்றலைத்தெங்கிளம்பாளையை
நாரையென்றிளங்கெண்டைநடுங்குவ
தாரைவன்றலைத்தண்ணிளவாம்பலைச்
சேரையென்றுபுலம்புவதேரையே. (௪௩)

நள்ளிவாங்குகடையிளநவ்வியர்
வெள்ளிவால்வளைவீசியவெண்மணி
புள்ளிநாரைசினைபொரியாமையென்
றுள்ளியாமைமுதுகினுடைப்பரால் (௪௪)

சேட்டிளங்கவென்சிறுபுன்னையிற்
கோட்டதேம்பலவின்கனிக்கூன்சுளை

---

* தேரைவன்றலை-முற்றியழகிய வலியதலையையுடைய.

தோட்டமைந்தபொதும்பரித்றூங்குதேன்
ஈட்டமென்னச்சென்றீயினமொய்ப்பன. (௪௫)

செல்வரென்றும்வடகலைதென்றமிழ்ச்
சொல்வரம்பினரென்றுஞ்சுளிபடக்
கொல்வரென்றுங்கொடேப்பனரென்றுமவ்
* வில்வரம்பிலிறைவனையேத்துவார். (௪௬)

வானரர் சோழநாடேபுதுதல்.

அன்னதண்டகநாடுகடந்தகன்
பொன்னிநாடுபொருவிலரெய்தினர்
செந்நெலுங்கரும்புங்கமுகுஞ்செறிந்
தின்னல்செய்யுநெறியரிதேகுவார். (௪௭)

சோழநாட்டின் றன்மைகூறல்.

கொடுறுதாங்கியவாய்க்குழுநாரைவாழ்
தடறுதாங்கியகூனிளந்தாழையின்
மிடறுதாங்கும்விருப்புடைத்தீங்கனி
இடறுவார்நறுந்தேனினிழுக்குவார். (௪௮)

குழுவுமீன்வளர் † குட்டமெனக்கொளா
எழுவுபாடலிமிழ் ‡ கருப்பேந்திரத்
தொழுகுசாறகன் கூனையினூழ்முறை
முழுகிநீர்க்கருங்காக்கைமுளைக்குமே. (௪௯)

பூநெருங்கியபுள்ளுறுசோலைகள்
தேனெருங்குசொரிதலிற்றேர்வில
மீனெருங்குறும்வெள்ளம்வெரீஇப்பல
வானரங்கண்மரங்களின்வைகுமால். (௫௦)

தாறுநாறுவதாழைகடாழையின்
சோறுநாறுவதும்பிழிமாங்கனி
நாறுநாறுவநாறுவளர்க்குறும்
சேறுநாறுவசெங்கழுநீரரோ. (௫௧)

வானரர்தென்றமிழ் நாடேய்துதல்.

அனையபொன்னியகன்புனனாடொரீஇ
மனையின்மாட்சிகுலாமலைமண்டலம்
வினையினீங்கியபண்பினர்மேயினர்
இனையதென்றமிழ்நாடுசென்றெய்தினர். (௫௨)

---

* வில்வரம்பினர்க்கிதேனுமீட்டதே எனவும் பாடம்.
† குட்டமெனக்கொளா-குளமென்றுநினைத்து.
‡ கருப்பேந்திரம்-கரும்பாலை.

அத்திருத்தகுநாட்டினையண்டர்நா
டொத்திருக்குமென்றாலுரையொக்குமோ
எத்திறத்தினுமேழுலகும்புகழ்
முத்துமுத்தமிழுந்தந்துமுற்றமோ. (ருக)

தென்றமிழ்நாட்டினுஞ் சீதையைக்காணாது வருந்திச்செல்லுதல்.

என்றதென்றமிழ்நாட்டினையெங்கணும்
சென்றுநாடித்திரிந்துதிருந்தினர்
பொன்றவாரிற்பொருந்தினர்போயினர்
துன்றலோதியைக்கண்டிலர்துன்பினர். (ருச)

வன்றிசைக்களிறன்னமகேந்திரக்
குன்றிசைத்ததுவல்லையிற்கூடினர்
தென்றிசைக்கடற்சீகரமாருதம்
நின்றிசைக்குநெடுநெறிநீங்கினர். (ருரு)

கஉ-வது. ஆறுசெல்படலம் முற்றிற்று.

ஆ-ட திருவிருத்தம்-கருக.

பதினைந்தாவது

சம்பாதிப்படலம்.

மழைத்தவிண்ணகமெனமுழங்கிவானுற
விழைத்தவெண்டிரைக்கரமெடுத்திலங்கையாள்
உழைத்தடங்கண்ணியென்றுரைத்திட்டேழின்வந்
தழைப்பதேகடுக்குமவ் * வாழிநோக்கினர். (க)

மற்றைவானரரு மகேந்திரமெய்தல்.

விரிந்துநீரெண்டிசைமேவிமேன்மையால்
பொருந்துதிர்மகேந்திரத்தென்றபோக்கிய
அருந்துணைக்கவிகளாமளவில்சேனையும்
பெருந்திரைக்கடலெனப்பெரிதுகூடிற்றே. (உ)

யாவருமவ்வெயினெறிதினெய்தினர்
பூவருபொலங்குழற்பொருவில்கற்புடைத்
தேவியைக்காண்கிலார்செய்வதோர்கிலார்
காவியல்குழறிடாவில்கின்றாரரோ. (ங.)

* ஆழிநோக்கினர்-கடல்கண்டார்.

அற்றதுகாள்வரையவதியாட்சியும்
உற்றிலமிராகவனுயிரும்பொன்றுமால்
கொற்றவனுணையுங்குறித்துநின்றனம்
இற்றதாகுஞ்செயலினியென்றெண்ணினர். (௪)

அருந்தவம்புரிதுமோவன்னதன்றெனின்
* மருந்தரு † கடுங்கடுவுண்டுமாய்துமோ
திருந்தியதியாததுசெய்துதீர்துமென்
றிருந்தனர்தம்முயிர்க்கிறுதியெண்ணுவார். (௫)

கரைபொருகனைகடல்கனகமால்வரை
நிரைதவன்றியவெனநெடிதிருந்தவர்க்
குரைசெயும்பொருளுளதெனவுணர்த்தினன்
அரைசிளங்கோளரியயருஞ்சிங்கையான். (௬)

நாடிகாக்கொணருதுகளினைத்தாளைவான்
மூடியவுலகினைமுற்றுமுட்டியென்
றூடவர்திலகனுக்கன்பினுரெனப்
‡ பாடவம்விளம்பினம்பழியின்மூழ்குவான். (௭)

செய்துமென்றமைந்ததுசெய்துதீர்திலம்
எய்துசென்றுற்றதுநுவலகிற்றிலம்
எய்தும்வந்தென்பந்தா § றிறையுங்கண்டிலம்
உய்துமென்றுவிதோருரிமைத்தாகுமோ. (௮)

அங்கதனுயிர் விடுவேனெனல்.

எந்தையுமுனியுமெம்மிறையிராமனும்
சிந்தனைவருந்துமச்செய்கைகாண்குறேம்
§ நுந்துவெனுயிரினைநுணங்குகேள்வியீர்
புந்தியினன்னதுபுகல்விராமென்றான். (௯)

சாம்பன் மறுத்தல்.

விழுமியதுரைத்தனைவிசயம்வீற்றிருந்
தெழுவொடுமலையொடுமிகலுந்தோளினாய்
அழுதுமோவிருந்துநம்மன்புபாழ்படத்
தொழுதுமோசென்றெனச்சாம்பன்சொல்லினன். (௧௦)

மீண்டினியொன்றுநாம்விளம்பமிக்கதென்
மாண்டுறுவதுநலமெனவலித்தனம்

---

* மருந்தரும்-பிரதிவிஷமான மருந்தற்ற. † கடுங்கடு-கொடியவிஷம்.
‡ பாடவம்-சாமர்த்தியம். § இறையும் சிறிதும். § நுந்தவன்-விடுகின்றேன்.

ஆண்டகையரசிளங்குமரவன்னது
வேண்டலினின்னுயிர்க்குறுதிவேண்டுமோல். (கக)

அங்கதன் நீவிரிறக்கயான்போதல் தகுமோவெனல்.

என்றவனுரைத்தலுமிருந்தவாலிசேய்
குன்றுறழ்ந்தெனவளர்குவவுத்தோளினீர்
பொன்றிநீர்மடியயான்போவனேலது
நன்றதோவுலகமுநயக்கற்பாலதோ. (கஉ)

சான்றவர்பழியுரைக்கஞ்சித்தன்னுயிர்
போன்றவர்மடிதரப்போந்துளானென
ஆன்றபெருகுலவோரறைதன்முன்னம்யான்
வான்றொடர்குவெனெனமறித்துங்கூறுவான். (கங)

வேறு.

எல்லாம்மிறுதியாய்க்குமெந்தைக்கும்யாவரேனும்
சொல்லவுங்கூடுங்கேட்டாற்றுஞ்சவுமடுக்குங்கண்ட
வில்லியுமிளையகோவும்வீவதுதிண்ணமச்சொல்
மல்லனீரயோத்திபுக்கால்வாழ்வரோபரதன்மற்றோர் (கச)

பரதனும்பின்னுளோனும்பயந்தெடுத்தவருமூவரும்
சரதமேமுடிவர்கெட்டேன்சனகியென்றுலகஞ்சாற்றும்
விரதமாதவத்தின்மிக்கவிளக்கினுறுகத்தியார்க்கும்
கரைதெரிவிலாததுன்பம்விளைந்தவாவெனக்கலுழ்ந்தான். (கரு)

பொருப்புறழ்வயிரத்திண்டோட்பொருசினத்தாளிபோல்வான்
* தரிப்பிலாதுரைத்தமாற்றந்தடுப்பருந்தகைத்ததாய
நெருப்பையேவிளைத்தபோலநெஞ்சமுமறுகக்கேட்டு
விருப்பினாலவனைநோக்கிவிளம்பினனெண்கின்வேந்தன் (கசு)

வேறு.

சாம்பன் சமாதானமுரைத்தல்.

நீயுநின்றாதையுநீங்கநின்குலத்
தாயம்வந்தவரொடுந்தனயரில்லையால்
ஆயதுகருதினமன்னதன்றெனின்
நாயகரிறுதியுநவிலற்பாலதோ. (கஎ)

ஏகுநீயவ்வழியெய்தியிவ்வழி
தோகையைக்கண்டிலாவகையுஞ்சொல்லியெஞ்

---

* தரிப்பிலாது-சகிக்கமாட்டாமல்.

* சாகையுமுணர்த்துநிதவிர்திசோகம்போர்
வாகையாயென்றனன்வரம்பிலாற்றலான். (கஅ)

அனுமன் நும்மொழி சரியன்றெனல்.

அவனவையுரைத்தபின்னநுமன்சொல்லுவான்
புவனமூன்றினுமொருபுடையிற்புக்கிலம்
தவனமாண்டவரெனத்தருக்கிலாரெனக்
கவனவேகத்துநீர்கழிதிரோவென்றான். (கக)

பின்னருங்கூறுவான்பிலத்தில்வானத்தில்
பொன்வரைக்குடியிற்புறத்துளண்டத்தில்
நன்னுதற்றேவியைக்காண்கிலாமெனிற்
சொன்னநாளவதியையிறைமன்சொல்லுமோ. (உ0)

நாடிலேநலமென்னுநாடியத்
தோடலர்குழலிதன்றுயரிற்சென்றமர்
வீடியசடாயுவைப்போலவீடுதல்
பாடவமல்லது † பழியிற்றுமென்றான். (உக)

வானரரெதிரே சம்பாதிவ்ருதல்.

என்றலுங்கேட்டனனெருவைவேந்தன்றன்
பின்றுணையாகியபிழைப்பில்வாய்மையான்
பொன்றினனென்றசொற்புலம்புநெஞ்சினன்
குன்றெனநடந்தவர்க்குறுகன்மேயினன். (உஉ)

முறையுடையெம்பியார்முடிந்தவாறெனப்
பறையிநெஞ்சினன்பதைக்குமேனியன்
இறையுடைக்குலிசவேலெறிகலாதமுன்
சிறையுடைமலையெனச்செல்லுஞ்செய்கையான். (உங)

மிடலுடையெம்பியைவீட்டும்வெஞ்சினப்
படையுளராயினர்போலும்பாரெனு
உடலினைவழிந்துபோயுவகிநீருகக்
கடலினைப்புரையுறுமருவிக்கண்ணினன். (உச)

உழுங்கதிர்மணியணியுமிழுமின்னினன்
மழுங்கியநெடுங்கணின்வழங்குமாரியான்
புழுங்குவானமுங்கினன்புடவியாரென
முழங்கிவந்திழிவதோர்முகிலும்போல்கின்றான். (உரு)

---

* சாகையும்-மரணத்தையும். † பழியிற்றும்-இதுபழியாகும்.

வள்ளியுமரங்களுமலையுமண்ணுறத்
தெள்ளுநுண்பொடிபடககடிதுசெல்கின்றான்
தள்ளுவன்கால்பொரத்தரணியிற்றனி
வெள்ளியம்பெருமலைபொருவுமேனியான். (உசு)

சம்பாதியை அரக்கனென வனுமன்கருதுதல்.

எய்தினனிருந்தவரிரியல்போயினார்
அய்யனம்மாருதியழலுங்கண்ணினான்
கய்தவநிசிசரக்கள்ள * வேடத்தை
உய்திகொலினியெனவுருத்துமுன்னின்றான். (உஎ)

வெங்கதம்வீசியமனத்தன்விம்மலன்
பொங்கியசோரிநீர்பொழியுங்கண்ணினான்
சங்கையிற் † சழக்கிலனென்னுந்தன்மையை
இங்கிதவகையினாலெய்தநோக்கினான் (உஅ)

சம்பாதி சடயுவைக்கொன்றவ ரியாவருரைமினென்றல்.

நோக்கினனின்றனனுணங்குகேள்வியான்
வாக்கினாலொருமொழிவழங்கலாதமுன்
றாக்கருஞ்சடாயுவைத்தருக்கினாலுயிர்
நீக்கினரியாரதுசிறப்புவீரென்றான். (உகூ)

சம்பாதி தனது வ்ரலாறுரைத்தல்.

உன்னைநீயுள்ளவாறுரைப்பினுற்றதைப்
பின்னையா ‡ னிரப்புதல்பிழைப்பின்றாதலால்
என்னமாருதியெதிரருவைவேந்தனும்
தன்னையான்தன்மையைச்சாற்றன்மேயினான். (௩0)

மின்பிறந்தாலெனவிளங்கெயிற்றினாய்
என்பிறந்தார்க்கிடையெய்தலாதவென்
பின்பிறந்தான்றுணைபிரிந்தபேதையேன்
முன்பிறந்தேனெனமுடியக்கூறினான். (௩க)

இராவணன்வாளால் சடாயுவிறந்தானெனல்.

கூறியவாசகங்கேட்டுக்கோதிலான்
ஊறியதுன்பத்தினுவரியுட்புகா
ஏறினனுணர்த்தினனிகலிராவணன்
வீரியவாளிடைவிளிந்ததாமென்றான். (௩உ)

---

* வேடத்தை-வேடத்தினையுடையாய். † சழக்குகை-தவமாகியவஞ்சனை.
‡ நிரப்புதல்-தெரிவித்தல்.

சம்பாதி வருந்துதல்.

அவ்வுரைகேட்டலுமசனியேற்றினான்
* தவ்வியகிரியெனத்தரையின்வீழ்ந்தனன்
வெவ்வுரையிராவுயிர்பதைப்பவிம்மினான்
இவ்வுரையிவ்வுரையெடுத்தியம்பினான். (௫௩)

வேறு.

இளையாநின்சிறகின்றிவெந்துகத்
தளையானேனுயிர்போதறக்கதோ
வளையாநேமியன்வன்மைசால்வலிக்
கிளையானேயிதுவென்னமாயமோ. (௫௪)

மலரோனின்றளன்மண்ணும்விண்ணுமுண்
டலையாநீடறமின்னுமுண்டரோ
நிலையார்கற்பமுநின்றதின்றநீ
இலையானாயிதுவென்னதன்மையோ. (௫௫)

உடனேயண்டமிரண்டுமுய்ந்துயிர்த்
திடனுள்வந்திருவோருமெய்தினோம்
விடநீயேதனிச்சென்றவீரமும்
கடனேவெங்கலுழற்குமேன்மையோய். (௫௬)

ஒன்றுமூன்றுலகத்துலோரையும்
வென்றானென்னினும்வீரநிற்குநேர்
நின்றானேயவ்வரக்கனின்னையும்
கொன்றானேயிதுவென்னகொள்கையோ. (௫௭)

என்றென்றேங்கியிரங்கியின்னலாற்
பொன்றுந்தன்மைபுகுந்தபோதவற்
† கொன்றுஞ்சொற்கொடுணர்ச்சிநல்கினான்
வன்றிண்டோள்வரையன்னமாருதி. (௫௮)

தேற்றத்தேறியிருந்தசெங்கணான்
கூற்றொப்பான்கொலைவாளரக்கனோ
டேற்றுப்போர்செய்த ‡ தென்னிமித்தெனக்
காற்றின்சேயிதுகட்டுரைக்குமால். (௫௯)

சடாயுஇராவணனோடு பொருதற்குக் காரணங்கூறல்.

எங்கோமானவ்விராமனில்லுளாள்
செங்கோலான்மகள்சீதைசெவ்வியாள்

---

* தவ்விய-மோதிய. † அவற்கொன்றுஞ்சொல்கொண்டு - அச்சாம்பாதிக் கேற்ற வசனத்தினால். ‡ என்னிமித்தென-யாதுகாரணத்தாலென,

வெங்கோல்வஞ்சன் வினைத்தமாயையால்
தங்கோனைப்பிரிவுற்றதன்மையாள். (௪௦)

கொண்டேகுங்கொலைவாளரக்கனைக்
கண்டானும்பியறங்கடக்கிலான்
வண்டார்கோதையைவைத்துநீங்கெனத்
திண்டேரானெதிர்சென்றுசீறினான். (௪௧)

சீறித்தீயவனோடுதேரையும்
கீறித்தோள்கள்கிழித்தழித்தபின்
தேறித்தேவர்கடேவன்றெய்வவான்
வீறப்பொன்றினன்மெய்ம்மையோனென்றான். (௪௨)

விளித்தானன்னதுகேட்டுமெய்ம்மையோய்
தெளித்தாடத்தகுநீர்த்தன்மாட்டுயிர்
அளித்தானேயதனன்றானென்றெனக்
களித்தான்வாரிகலுழ்ந்தகண்ணினான். (௪௩)

பைந்தாரெங்களிராமன்பத்தினி
செந்தான்வஞ்சிதிறத்திறந்தவன்
மைந்தாவெம்பிவரம்பில்சீர்த்தியோ
டெய்ந்தானல்லதுலந்ததுண்மையோ. (௪௪)

அறமன்னானுடனெம்பியன்பினோ
டுறவுன்னாவுயிரொன்ற * வோவினான்
பெறவொண்ணாததோர்பெற்றிபெற்றவற்
கிறவென்னாமிதினின்பமியாவதோ. (௪௫)

என்றென்றேங்கியிரங்கி † யின்புனற்
சென்றங்காடுதல்செய்துதீர்ந்தபின்
வன்றிண்டோள்வலிமாறிலாதவன்
துன்றுந்தாரவர்க்கின்னசொல்லினான். (௪௬)

வாழ்வித்தீரெனைரெனைமைந்தர்வந்துநீர்
ஆழ்வித்திரலிர்துன்பவாழியால்
கேழ்வித்தீவினைகீறினீரிருள்
போழ்வித்தீருரைபொய்யினீங்கினீர். (௪௭)

சம்பாதி அனைவரும் இராமநாமமுரைத்த ரென்சிறைமுளைத்ததெனல்.

எல்லீரும்மவ்விராமநாமமே
சொல்லீரென்சிறைதோன்றுஞ்சோர்விலா

---

* ஓவினான்-நீங்கினான். † இன்புனல் சென்றங்காடுதல்செய்து-சகோதரனது மரணாசௌசமொழிய இனியநீரிற் குளித்து.

நல்லீரப்பயனன்னாநல்லசொல்
வல்லீர்வாய்மைவளர்க்கும்மாண்பினீர். (௪௮)

வானரர் இராமநாமோச்சாரணம்புரிதலும் இறகுவளர்தலும்.

என்றானன்னதுகாண்டும்யாமெனா
நின்றார்நின்றழிநீலமேனியான்
நன்றாநாமநவின்றுநல்கினார்
வன்றோளான்சிறைவானந்தாயவே. (௪௯)

சிறைபெற்றான்றிகழ்கின்றமேனியான்
முறைபெற்றாமுலகெங்கும்மோடினான்
நிறைபெற்றாவிநெருப்புயிர்க்கும்வான்
உறைபெற்றாலெனலாமுறப்பினான். (௫௦)

தெருண்டான்மெய்ப்பெயர்செப்பலோடும்பத்
துருண்டானுற்றபடத்தையுன்னினார்
மருண்டார்வானவர்கோனைவாழ்த்தினார்
வெருண்டார்சிந்தைவியந்துவிம்முவார். (௫௧)

வானரர் நின்பூருவசரித முரையெனல்.

அன்னானைக்கடிதஞ்சலித்துநீ
முன்னாளுற்றதுமுற்றுமோதெனச்
சொன்னார்சொற்றதுசிந்தைதோய்வுறத்
தன்னாலுற்றதுதான்விளம்புவான். (௫௨)

வேறு.

சம்பாதி தனதுபிறப்புமுதலிய உரைத்தல்.

தாயெனத்தகையாண்பீர்சம்பாதிசடாயுவென்போஞ்
சேயொளிச்சிறையவேகக்கழுகினுக்கரசுசெய்வோம்
பாய்திரைப்பரவைஞாலம்படரிருள்பருகும்பண்பின்
ஆய்கதிர்க்கடவுட்டேராருணனுக்கமைந்தமைந்தர். (௫௩)

ஆயுயரும்பர்காகோண்டுமென்றறிவுதள்ளி
மீயுயர்விசும்பினூடுமேக்குறச்செல்லும்வேலை
காய்கதிர்க்கடவுட்டேரைக்கண்ணுற்றங்கண்ணுறாமுன்
றீயையுந்தீக்குந்தெய்வச்செங்கதிர்ச்செல்வன்சீறி. (௫௪)

மூந்தியவெம்பிமேனிமுருங்கழன்முடுகும்வேலை
எந்தைநீகாத்தியென்றான்யானிருஞ்சிறையுமேந்தி
வந்தனென்மறைதலோடுமற்றவன்மறையப்போனான்
வெந்துமெய்யிறகுதீர்ந்துவிழுந்தனென்விளிகிலாதேன். (௫௫)

மண்ணிடைவிழுந்தவென்னைவானிடைவயங்குவள்ளல்
கண்ணிடைநோக்கியுற்றகருணையான்சனகன்காதற்

பெண்ணிடையிட்டின்வந்தவானரரிராமரர்மன்பேரை
எண்ணிடையுற்றகாலத்திறகுபெற்றெழுதியென்றான். (ருசு)

தாழ்ந்தமாதவத்தி * லோகசாரங்கனுரையுஞ்சாரல்
வீழ்ந்தனென்சிறைகடியவெவ்வுயிர்த்துளமுமெய்யும்
போழ்ந்தனதுன்பமூன்றவுயிர்ப்பொறைபோற்றகில்லா
தாழ்ந்தனெனாழ்ந்தவென்னையருந்துதவனெதிர்ந்துதேற்றி. (ருஎ)

கற்றிலார்போலவுள்ளக்களிப்பினாலமரர்காப்பூ
டெற்றிடக்கருதிமீப்போயாதபத்துனைதுமேனி
முற்றழன்முருங்கமண்ணைமுயங்கினையினியென்சின்னாள்
மற்றுநின்னுயிரையோம்பாதிகழ்வதுமாலைத்தன்றால். (ருஅ)

களித்தவர்கெடுதறிண்ணெஞ்சனகியைக்கபடன்வெளவி
ஒளித்தவாய்துருவியுற்றவானரரிராமநாமம்
விளித்திடச்சிறைவந்தோங்கும்வெவ்வுயிர்த்துயரலென்றன்
றளித்தனனதனாலாவியாற்றினேனாற்றன்மொய்ம்பீர். (ருகூ)

அன்றியுமலருள்வைகுமயனைநேர்முனிவன்வாய்மை
நன்றிகொளீசற்காண்பானனுகலும்வினையேனுற்ற
தொன்றொழிவுறுமற்கேட்டதியோகத்தினுணர்ச்சிபேணிப்
பொன்றுதலொழிமின்யானேபுகல்வதுகேண்மினென்றான். (சு0)

தசரதராமன்றேவர்தவத்தினாற்றும்சொற்றுங்கிக்
கசரததுரகமின்றிக்கானிடையிறுத்தகாலை
வசைதருமிலங்கைவேந்தன்வெளவியதிருவைநாடித்
திசைதிரிகவிகளுற்றாற்சிறகுபெற்றெழுதியென்ன. (சுக)

எம்பியுமிடரின்வீழ்வானேயதுமறுக்கவஞ்சி
அம்பரத்தியங்குமானைக்கழுகினுக்கரசனானன்
நம்பிமீரென்றன்மைநீரிவணடைந்தவார்த்தை
உம்பருமுவக்கத்தக்கீருணர்த்துமினுணரவென்றான். (சுஉ)

என்றலுமிராமன்றன்னையேத்தினரிறைஞ்சியெந்தாய்
புன்றொழிலரக்கன்மற்றத்தேவியைக்கொண்டுபோந்தான்
தென்றிசையென்னவுன்னித்தேடிநாம்வந்துமென்றார்
நன்றுநீர்வருந்தல்வேண்டாநானிதுநவில்வலென்றான். (சுங)

இராவணன் சீதையைக்கொண்டு சென்று
சிறைவைத்தானென்று சம்பாதிகூறியது.

பார்கொன்றுகுதலையாளைப்பாதகவரக்கன்பற்றிப்
போகின்றபொழுதுங்கண்டேன்புக்கனனிலங்கைபுக்கு

* லோகசாரங்கன்-ஒருதவசியின்பெயர்.

வேகின்றவுள்ளத்தானை வெஞ்சிறையகத்து வைத்தான்
ஏகொன்றிற்காண்டிரந்திலிருந்தனளிறைவியின்னும். (௬௪)

யோசனையொருநூறுண்டாலொலிகடலிலங்கையவ்வூர்
பாசவெங்கரத்துக்கூற்றுங்கட்புலன்பரப்பவஞ்சும்
நீசனவ்வரக்கன்சீற்றநெருப்புக்குநெருப்புநீங்கள்
ஏசறுங்குணத்தீர்சேறலெப்பரிசியைவதென்றான். (௬௫)

நால்முகத்தொருவன்மற்றைநாரியோர்பாகனிற்க
பால்முகப்பரவைப்பள்ளிப்பரம்பன்பணியென்றாலும்
காலனுக்கேயுஞ்சேறலரிதிதுகடலின்றன்மை
மேலுமக்குறுவதெண்ணிச்செல்லுமின்விளிவினாளீர். (௬௬)

எல்லீருஞ்சேறலென்பதெளிதன்றவ்விலங்கைமூதூர்
வல்லீரேலொருவரேகிமறைந்தவணொழுகிவாய்மை
சொல்லீரேதுயரைநீக்கித்தோகையைத்தெருட்டிமீடிர்
அல்லீரேலென்சொற்றேறியுணர்த்துமினழகற்கம்மா. (௬௭)

நாக்குநரின்மையாலக்கழுக்கினமுழுதுங்கன்றிச்
சேக்கைவிட்டிரியல்போகித்திரிதருமதனைத்தீர்ப்பான்
போக்கெனக்கடுத்தநண்பீர்நல்லதுபுரிமினென்று
மேக்குறவிசையிற்சென்றான்சிறையினால்விசும்புபோர்ப்பான். (௬௮)

௧௫-வது. சம்பாதிப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௦௨௪.

பதினாறாவது.

மகேந்திரப்படலம்.

பொய்யுரைசெய்யான் * புள்ளரசென்றேபுகலுற்றார்
கய்யுறைநெல்லித்தன்மையினெல்லாங்கரைகண்டாம்
உய்யுரைபெற்றாரல்லவையெல்லாமுறவெண்ணிச்
செய்யுமினென்றேசெய்வகைநொய்திற்செயவல்லீர். (௧)

சூரியன்வெற்றிக்காதலனோடுஞ்சுடர்விற்கை
ஆரியனைச்சென்றேதொழுதுற்றதுறைகிற்பீர்
சீருதன்முற்றுந்தேருதல்கொற்றச்செயலம்மா
வாரிகடப்போர்யாவரெனத்தம்வலிசொல்வார். (௨)

---

* புள்ளரசு-கழுகு அரசு.

மாளவலித்தேமென்றுமிமாளாவசையொடு
மீளவுமுற்றேமன்னவைதீரும்வெளிபெற்றேம்
காளநிறத்தோடொப்பனவிங்கோர்கடறுவுற்
றுளகலத்தீராளுயினெம்மாருயிரம்மா. (௩)

நீலன்முதற்பேர்போர்கெழுகெழுகொற்றநெடுவீரர்
சாலவுரைத்தார்வாரிகடக்குந்தகவின்மை
வேலைகடப்பன்மீளமிடுக்கின்றெனவிட்டான்
வாலியளிக்கும்வீரவயப்போர்வசையில்லான். (௪)

வேதமனைத்துந்தேர்தரவொட்டாவொருமெய்யன்
பூதலமுற்றுமீரடிவைத்துப்பொலிபோழ்தியான்
மாதிரமெட்டுஞ்சூழ்பறைவைத்தேவரமேரு
மோதவிளைத்தேதானுலைவுற்றேன்விறன்மொய்ம்பீர். (௫)

ஆதலினிப்போர்கலிகுப்புற்றகழிஞ்சி
மீதுகடத்தித்தீயவருட்கும்வினையொடும்
சீதைதனைத்தேராவாமுற்றுந்திறனின்றென்
றோதியிஅத்தா * னாலுமுகத்தானுதவுற்றான். (௬)

யாமினியிப்போதாரிடர்துய்த்திங்கினியாரைப்
போமெனவைப்பேமென்பதுபுன்மைப்புகழன்றே
கோமுதல்வர்க்கேறியகொற்றக்குமராநம்
நாமநிறுத்திப்பேரிசைதைக்குநவையில்லோன். (௭)

ஆரியன்முன்னர்ப்போதுறவுற்றவதனாலும்
காரியமெண்ணிச்சோர்வறமுற்றுங்கடனாலும்
மாருதியொப்பார்வேறிலையென்னாவயன்மைந்தன்
சீரியன்மற்றோனாண்மைதெரிப்பானிவைசெப்பும். (௮)

மேலைவிரிஞ்சன்வீயினும்வீயா † மிகைநாளீர்
நூலைநயத்துநுண்ணிதுணர்ந்தீர்துவமக்கீர்
காலனுமஞ்சுங்காய்சினமொய்ம்பூர்கடனின்றீர்
ஆலநுகர்ந்தானன்னவயப்போரடர்கிற்பீர். (௯)

வெப்புறுசெந்தீநீர்வளியாலும்விளியாதீர்
செப்புறுதெய்வப்பல்படையாலுஞ்சிதையாதீர்
ஒப்புறினொப்பார்நும்மலதில்லீரொருகாலே
குப்புறினண்டத்தப்புறமேயுங்குதிகொள்வீர். (௧௦)

* நாலுமுகத்தானுதவுற்றான்-சாம்பவன்.
† மிகைநாளீர்-அதிகமானநாளுடையீர்.

கல்லவுமொன்ருேதியவுகாடிகவைதிரச்
சொல்லவும்வல்லீர்காரியநீரேதுணிவுற்றீர்
வெல்லவும்வல்லீர்மீளவும்வல்லீர் * மிடலுண்டேல்
கொல்லவும்வல்லீர்தோள்வலியென்றுங்குறையாதீர். (கக)

மேருகிரிக்குமீதுறநிற்கும்பெருமெய்யீர்
மாரிதுணிக்குந்தாரை † யிடிக்கும்வரவல்லீர்
பாரையெடுக்குங்கோன்மைவலத்தீர்பழியற்றீர்
சூரியனைச்சென்ருெண்கையகத்தூர்தொடவல்லீர் (கஉ)

அறிந்துதிறத்தாறெண்ணியறத்தாரழியாமை
மறிந்துருளப்போர்வாலியைவெல்லு ‡ மதிவல்லீர்
பொறிந்திமையாக்கோன்வச்சிரபாணம்புகவூழ்க
எறிந்துழிமற்ருேர்புன்மயிரெனுமிழவாதீர். (கங)

போர்முனைதிர்ந்தான்மூவுலகேனும்பொருளாகா
ஓர்வில்வலங்கொண்டொல்கவில்வீரத்துயர்தோளீர்
பாருலகெங்கும்பேரிருள்சீக்கும்பகலோன்முன்
தேர்முனடந்தே § யாரியநூலுந்தெரிவுற்றீர். (கச)

நீதியினின்றீர்வாய்மையமைந்தீர்நினைவானும்
மாதர்நலம்பேணுதவளர்ந்தீர்மறையெல்லாம்
ஓதியுணர்ந்தீரேழ்கடந்தீருலகினும்
ஆதியன்ருனேயெனயாதுமறைகின்றீர். (கரு)

அண்ணலமைந்தற்கன்புசிறந்தீரதனுனே
கண்ணியுணர்ந்தீர் கருமமநுமக்கேகடனென்னத்
திண்ணிதமைந்தீர்செய்துமுடிப்பீர்சிதைவின்ருல்
புண்ணியமொன்றேயென்றுநிலைக்கும்பொருள்கொண்டீர். (கசு)

அடங்கவும்வல்லீர்காலமதன்றேலமர்வந்தால்
மடங்கன்முனிந்தாலன்னவலத்தீர்மதிகாடித்
தொடங்கியதொன்ருேமுற்றுமுடிக்குந்தொழிலல்லால்
இடங்கெடவெவ்வாயூறிடைத்தாலிடையாதீர். (கஎ)

ஈண்டியகொற்றத்திந்திரனென்பான்முதல்யாரும்
பூண்டொடக்குனன்னெறிசாபப்பொறையானும்
பாண்டிதர்நீரேயஃதினியுய்க்கும்படிவல்லீர்
வேண்டியபோதேவேண்டியதுய்க்கும்வினைவல்லீர். (கஅ)

---

* மிடலுண்டேல்- எதிரிகள் போர்வன்மை யுடையவர்களானுல்,
† இடிக்கும்-சந்திலும். ‡ மதி-புத்திசாலித்தனம்,
§ ஆரியநூலும்-தேவபாடைநூல்களும்.

எருமினேகியெம்முயிர்நல்கியிசைகொள்ளீர்
ஓகைகொணர்ந்தும்மன்னேயுமின்னற்குறையில்லாச்
சாகரமுற்றுந்தரவிடுநீரிக்கடருவும்
வேகமமைந்தீரென்றுவிருஞ்சன்மகன் * விட்டான். (கக)

சாம்புனியம்பத்தாழ்வதனத்தாமரைநாப்பண்
ஆம்பல்விரிந்தாவன்னகிரிப்பானறிவாளன்
கூம்பலொடுஞ்சேர்க்கைக்கமலத்தன்குலமெல்லாம்
† எம்பல்வரத்தன்சிந்தைதெரிப்பானிவைசொன்னன். (உ0

வேறு.

இலங்கையையிடந்துவேரோடிவ்வயிற்றருகென்றாலும்
விலங்கினர்தம்மையெல்லாம்வேரொடும்விளியநூறிப்
பொலன்குழைமயிலேக்கொண்டுபோகதனம்புகன்றிட்டாலும்
கலங்கலீருரைத்தமாற்றமுடிக்குவல்கடிதுகாண்டிர். (உக)

யோசனையொன்றிநூறுமுள்ளடியீள்ளதாக
ஈசன்மண்ணளந்தசேய்ப்பவிருங்கடலினிதுதாவி
வாசவன்முதலோர்வந்துமலேயினுமிலங்கைவாழும்
நீசரையெல்லாநூறிநினைத்ததுமுடிப்பல்பின்னும். (உஉ)

நீயிரேநினையின்முன்னேநெடுந்திரைப்பரவையேழும்
தாயுலகனைத்தும்வென்றுதையலேத்தருதற்கொத்தீர்
போயிதுபுரிதியென்றுபுலமைதீர்புன்மைகாண்டற்
கேயினிரொன்னிலென்னிற்பிறந்தவர்யாவரின்னும். (உங)

முற்றுநீருலகமுற்றும்விழுங்குவான்முழங்கிமுந்நீர்
உற்றதேயெனினுமண்டமுடைந்துபோயுயர்ந்ததேனும்
இற்றைநும்மருளுமெங்கோனேவலுமிரண்டுபாலும்
கற்றைவார்சிறைகளாகக்கலுழனிற்கடப்பல்காண்டிர். (உச)

இலங்கைசெல்வான் அனுமான் மயேந்திரத்தினுச்சியிலேய்துதல்.

ஈண்டினிதுறையின்யானேயெறிகடலிலங்கையெய்தி
மீண்டிவண்வருதல்காறும்விடைதம்மின்விரைவினென்ன
ஆண்டவருவந்துவாழ்த்தவலர்மழையமரர்தூவச்
சேண்டொடர்சிமயத்தெய்வமகேந்திரத்தும்பர்சென்றான். (உரு)

அனுமன் பேருருவெய்திநிற்றல்.

பொருவருவேலேதாவும்புந்தியான்புவனந்தாய
பெருவடிவுயர்ந்தமாயோன்மேக்குறப்பெயர்ந்ததாள்போல்

---

* விட்டான்-சொல்லிமுடித்தான். † எம்பல்வர-இன்பமுடையனவாக.
‡ விலங்கினர்-பகைவர்.

உருவறிவடிவினும்பரோங்கினனுவமையாலும்
திருவடியென்னுந்தன்மையாவர்க்குந்தெரியநின்றான். (உசு)

பார்நிழல்பரப்பும்பொற்றேர்வெயிற்கதிர்ப்பரிதிமைந்தன்
போர்நிழல்பரப்புமேலோர்புகழெனவுலகம்புக்குத்
தார்நிழல்பரப்புந்தோளான்றடங்கடறாவாமுன்னம்
நீர்நிழலுவரிதாவியிலங்கைமேற்செல்லநின்றான். (உஎ)

பருவாயமடங்கல்வைகும்படர்வரைமுழுதுமூழ்க
உருவாயவிடங்கொளுகத்தொத்தவால்சுற்றியூழின்
நெருவாயசிகரகோடிநெரிவனதெரியநின்றான்
மகவாமைமுதுகிற்றோன்றுமந்தரமெனலுமானான். (உஅ)

மின்னெடுங்கொண்டறுளின்வீக்கியகழலினார்ப்பத்
தன்னெடுந்தோற்றம்வானோர்கட்புலத்தெல்லைதாவ
வன்னெடுஞ்சிகரகோடிமகேந்திரமண்டந்தாங்கும்
பொன்னெடுந்தூணின்பாதச்சிலையெனப்பொலிந்துநின்றான். (உகூ)

கசு-வது மகேந்திரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சுஉகுரு.

கிட்கிந்தாகாண்டம் முற்றிற்று.

ஆஞ்சநேயர்திருவடிகளேசரணம்.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

கிட்கிந்தாகாண்டம்.

படலங்களின் அட்டவணை.

௧-வது.	பம்பாநதிப்படலம்	பக்கம்.	௩
௨. ,,	அனுமப்படலம்	,,	௯
௩. ,,	நட்புக்கோட்படலம்	,,	௧௪
௪. ,,	மராமரப்படலம்	,,	௨௬
௫. ,,	துந்துபிப்படலம்	,,	௨௯
௬. ,,	கலன்காண்படலம்	,,	௩௧
௭. ,,	வாலிவதைப்படலம்	,,	௩௬
௮. ,,	அரசியற்படலம்	,,	௫௬
௯. ,,	கார்காலப்படலம்	,,	௬௩
௧௦. ,,	கிட்கிந்தைப்படலம்	,,	௭௮
௧௧, ,,	தானைகாண்படலம்	,,	௯௬
௧௨. ,,	நாடவிட்டபடலம்	,,	௧௦௨
௧௩. ,,	பிலநீங்குபடலம்	,,	௧௧௩
௧௪. ,,	ஆறுசெல்படலம்	,,	௧௨௪.
௧௫. ,,	சம்பாதிப்படலம்	,,	௧௩௨
௧௬. ,,	மகேந்திரப்படலம்	,,	௧௪௧

ஸ்ரீமத்வரவரமுநயே நம:

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

ஐந்தாவது

சுந்தரகாண்டம்.

தெய்வப்புலமைக்

கம்பநாட்டாழ்வார்

அருளிச்செய்தது.

இஃது

சென்னை இராஜதானி வித்தியாசாலைத்

தமிழ்த்தலைமைப் புலமை நடாத்திய

இயற்றமிழாசிரியர்

கோ - இராஜகோபால பிள்ளையவர்கள்

மாணாக்கரும்

சென்னை வேப்பேரி எஸ் - பி - ஜி - ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதருமாகிய

திருமயிலை - சண்முகம்பிள்ளையவர்களால்

பரிசோதித்ததை,

பிருங்கிமாநகரம்.

வேம்புலி முதலியாரவர்கள் குமாரர்

நமசிவாயமுதலியாரவர்களால்

தமது

சென்னை - சூளை,

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

சுந்தரகாண்டம்.

படலங்களின் அட்டவணை.

க - வது.	கடறாவுபடலம்.	பக்கம்	க
உ. ,,	ஊர்தேடுபடலம்.	,,	கங.
ங. ,,	காட்சிப்படலம்.	,,	சஉ
ச. ,,	நிந்தனைப்படலம்.	,,	ருக
ரு. ,,	உருக்காட்டுபடலம்.	,,	சுஉ
சு. ,,	சூளாமணிப்படலம்.	,,	எசு
எ. ,,	பொழிலிறுத்தபடலம்.	,,	அசு
அ. ,,	கிங்கரர்வதைப்படலம்.	,,	கூச
கூ. ,,	சம்புமாலிவதைப்படலம்.	,,	க0க
க0. ,,	பஞ்சசேனாபதிகள்வதைப்படலம்.	,,	க0எ
கக. ,,	அட்சகுமாரன்வதைப்படலம்.	,,	ககரு
கஉ. ,,	பாசப்படலம்.	,,	கஉக
கங. ,,	பிணிவீட்டுப்படலம்.	,,	கஉங
கச. ,,	இலங்கையெரியூட்டுப்படலம்.	,,	கசரு
கரு. ,,	திருவடிதொழுதபடலம்.	,,	கருங.

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத் கம்பராமாயணம்.

ஐந்தாவது

சுந்தரகாண்டம்.

முதலாவது - கடறவுபடலம்.

காப்பு.

அலங்கலிற்றோன்றும்பொய்ம்மையரவெனப்பூதமைந்தும்
விலங்கிய * விகாரப்பாட்டின்வேறுபாடுற்றவீக்கம்
கலங்குவதெவரைக்கண்டாலவரென்பர்கைவிலேந்தி
இலங்கையிற்பொருதாரன்றேமறைகளுக்கிறுதியாவார். (க)

நூல்.

† ஆண்டகையாண்டவ்வானோர்துறக்கநாடருகர்கண்டான்
ஈண்டிதுதான்கொல்வேலையிலங்கையென்றையமெய்தா
வேண்டருவிண்ணுடென்னுமெய்ம்மைகண்டுள்ளமீட்டான்
காண்டருதோகையும்பரில்லெனக்கருத்துட்கொண்டான். (உ)

---

* விகாரப்பாட்டின் வேறுபாடு—அறுவகை விகாரப்படுதலுடைய தேவமனுஷ்ய திரியக்ஸ்தாவர வேறுபாடு. அவையாவன, வேறுபடவொன்றிலே பிறத்தல், பிறந்துள வாதல், வேறுபட வளர்தல், வளர்ந்தபெலொன்றாய் விளைந்தமைத்தல், மாறுபடத் தேய்தல், அறமாய்தல்.

† ஆண்டகை—ஆண்மையிற் சிறந்தவரான ஸ்ரீ ஆஞ்சநேயரை, இப்பாட்டால் தேவருலகளவு உயரமும் அவ்வுலகுமுழுதும் பார்க்கும்பார்வையுமுடையரானார் சிறிய திருவடியென்க. சிறிய திருவடி எனினும் ஆஞ்சநேயரெனினும் அநுமானெனினும் ஒக்கும்.

கண்டனனிலங்கைமூதூர்க்கடிபொழிற்கனகநாஞ்சில்
மண்டிலமதிலுங்கொற்றவாயிலுமணியிற்செய்த
வெண்டளக்கனகமாடவீதியும்பிறவுமெல்லாம்
அண்டமுந்திசைகளெட்டுநடுங்கத் * தோள்கொட்டியார்த்தான். (௩)

வன்றந்தவரிகொளுகம்வயங்கனலுமிழும்வாய
பொன்றந்த † முழைகடோறும்புறத்துராய்ப்புரண்டுபோவ
நின்றந்தமில்லானூன்றநெரிந்துகீழழுந்திநீலக்
குன்றந்தன்வயிறுகீறிப்பிதுங்கினகுடர்கண்மான. (௪)

புகலருமுழையுட்டுஞ்சும்பொங்குளைச்சீயம்பொன்றி
உகலருங்குருதிகக்கியுள்ளுறநெரிந்தவூழின்
அகலிரும்பரவைநாணவரற்றறுகுரலவாகிப்
பகலொளிகரப்பவானைமறைத்தனபறவையெல்லாம். (௫)

மொய்யுறுசெவிகடாவிமுதுகுறமுறைகாறள்ள
மய்யுறுவிசும்பினூடுநிமிர்ந்தவாலதியமஞ்சின்
மெய்யுறத்தழீஇயமெல்லெனபிடியொடும்வெருவலோடும்
கய்யுறமரங்கள்சுற்றிப்பிளிறினகளி ‡ நல்யானை. (௬)

பொன்பிறழ்சிமயக்கோடுபொடியுறப்பொறியுஞ்சிந்த
மின்பிறழ்குடுமிக்குன்றம்வெரிநுறவிரியும்வேலை
புன்புறமயிரும்பூவாக்கட்புலம்புறத்துநாறு
வன்பறழ்வாயிற்கவ்விவல்லிய $ மிரிந்தமாதோ. (௭)

தேக்குறுசிகரக்குன்றந்திரிந்துமெய்ந்நெரிந்துசிந்தத்
தூக்குறுதோலர்வாளர்துரிதத்தினெழுந்தமேற்றம்
தாக்குறுசெருவினோரார்தாளறவீசத்தாவி
மேக்குறவிசைத்தாரென்னப்பொலிந்தனர்விஞ்சைவேந்தர். (௮)

தாரகைசுடர்கண்மேகமென்றிவைதவிரத்தாழ்ந்து
பாரிடையழுந்துகின்றபடர்நெடும்பனிமாக்குன்றம்
கூருகிர்க்குவவுத்தோளான்கூம்பெனக்குமிழிபொங்க
ஆர்கலியழுவத்தாழுங்கலமெனலாயிற்றன்றே. (௯)

தாதுகுநறுமென்சந்தங்குங்குமங்குலிகந்தண்ணென்
போதுகுபொலன்றூதென்றித்தொடக்கத்தயாவும்பூசி
மீதுறுசுனைநீராடியருவியோடலகின்வீழ்வ
ஒதியகுன்றங்கீண்டுகுருதிநீர்சொரிந்தாலொத்த. (௧௦)

---

* தோள்கொட்டியார்த்தான் என்றது தான் காணப்போகிறவூரை அந்த மயேந்திரகிரியினின்றே கண்டதனாலென்க.

† முழைகள்-பிலத்துவாரங்கள். ‡ நல்-நலம்-சுகம். $ இரிதல்-ஓடல்.

கடலுறுமத்திதென்னக்கருவரைதிரியுங்காலை
மிடலுறுபுலன்கள்வென்றமெய்த்தவர்விசும்பினுற்றார்
திடலுறுகிரியிற்றாந்தஞ்செய்வினைமுற்றிமுற்றா
துடலுறுபாசம்வீசாதும்பர்செல்வாருமொத்தார். (௧௧)

வெயிலியற்குன்றங்கீண்டுவெடித்தலுநடுக்கமெய்தி
மயிலியற்றேவிமார்கடழீஇக்கொளப்பொலிந்தவானோர்
அயிலெயிற்றரக்கனள்ளத்திரிந்தநாளணங்குபுல்லக்
கயிலையினிருந்ததேவைத்தனித்தனிக்கடுத்தல்செய்தார். (௧௨)

ஊறியநறவுமுற்றகுற்றமுமுணர்வையுண்ணச்
சீறியமனத்தர்தெய்வமடந்தையரூடறீர்வுற்
றாறினரஞ்சுகின்றாரன்பரைத்தழுவியும்பர்
ஏறினரிட்டுநீத்தபைங்கிளிக்கிரங்குகின்றார். (௧௩)

இத்திறநிகழும்வேலையிமையவர்முனிவர்மற்றை
முத்திறத்துலகத்தாருமுறைமுறைவிரைவின்மொய்த்தார்
தொத்துறுமலருஞ்சாந்துஞ்சுண்ணமுமணியுந்தூவி
வித்தகசேறியென்றார்வீரனும்விரைவதானான். (௧௪)

குறுமுனிகுடித்தவேலைகுப்புறுங்கொள்கைத்தாதல்
வெறுவிதுவிசயம்வைகும்விலங்கற்றோளலங்கல்வீர
சிறுவிதென்றிகழற்பாலையல்லைநீசேறியென்னா
உறுவலித்துணைவர்சொன்னாரொருப்பட்டான்பொருப்பையொப்பான். ()

* இலங்கையினளவிற்றன் † றாலிவ்வுருவெடுத்ததோற்றம்
விலங்கவுமுளதன்றென்றுவிண்ணவர்வியந்துநோக்க
அலங்கறாழ்மார்பன்முன்றாழ்ந்தடித்துணையழுத்தலோடும்
பொலன்கெழுமலையுந்தாளும்பூதலம்புக்கமாதோ. (௧௬)

வால்விசைத்தெடுத்துவன்றாண்மடக்கிமார்பொடுக்கி ‡ மானத்
தோல்விசைத்துணைகள்பொங்கக்கழுத்தினைச்சுருக்கித்தூண்டும்
கால்விசைத்தடக்கைநீட்டிக்கட்புலங்கதுவாவண்ணம்
மேல்விசைத்தெழுந்தானுச்சிவிரிஞ்சனாடுரிஞ்சவீரன். (௧௭)

ஆயவனெழுதலோடுமரும்பணைமரங்கடாமும்
வேயுயர்குன்றும்வென்றிவேழமும்பிறவுமெல்லாம்
நாயகன்பணியிதென்னாநளிர்கடலிலங்கைதாமும்
பாய்வனவென்னவானம்படர்ந்தனவெழுவமான. (௧௮)

---

* இலங்கையின் என்பதில் இன்சாரியை. † ஆல் அதிசயக்குறிப்பு.
‡ மானத்தோள் என்றும் பாடம்.

இசையுடையண்ணல்சென்றவேகத்தாலெழுந்தகுன்றும்
பசையுடை * மரனுமாவும்பல்லுயிர்க்குலமும்வல்லே
திசையுறச்சென்றுசென்றுசெறிகடலிலங்கைசேரும்
விசையிலவாகத்தள்ளிவீழ்ந்தனவென்னவீழ்ந்த. (க௯)

மாவொடுமரனுங்கல்லும்வல்லியுமியாவுமற்றும்
போவதுபுரிந்தவீரன்விசையினாற்புணரிபொங்கத்
தாவினகீழுமேலுந்தூர்த்தனசுருதியன்ன
சேவகன்சீருமுன்னஞ்சேதுவுந்தெரிந்தமாதோ. (உ0)

கீண்டது † வேலைநன்னீர்கீழுறக்கிடந்தநாகர்
வேண்டியவுலகமெங்கும்வெளிப்படமணிகண்மின்ன
ஆண்டகையதனைநோக்கியரவினுக்கரசர்வாழ்வும்
காண்டகுதவத்தனேனியானெனக்கருத்துட்கொண்டான். (உக)

வெய்தின்வான்சிறையினானீர்வேலையைக்கிழியவீசி
நொய்தினாரமுதங்கொண்டநோன்மையேநவலுநாகர்
உய்துநாமென்பதென்னேயுறுவலிக்கலுழனூழின்
எய்தினானென்றஞ்சிமறுக்கமுற்றிரியல்போனார். (உஉ)

துள்ளியமகரமீன்கடுடிப்பறச்சுறவுதூங்க
ஒள்ளியபனைமீன்றுஞ்சுந்திவலையவூழிக்காலின்
வள்ளுகிர்வீரன்செல்லும்விசைபொருமறுகிவாரி
தள்ளியதிரைகண்முந்துற்றிலங்கைமேற்றவழ்ந்தமாதோ. (உ௩)

இடுக்குறுபொருள்களென்னுமெண்டிசைசுமந்தயானை
நடுக்குறவிசையிற்செல்லுநாயகன்றூதனாகம்
எடுக்குறுகாலவன்காற்றிடியொடுமொடியவந்நாள்
முடுக்குறக்கடலிற்செல்லு ‡ முத்தலைக்கிரியுமொத்தான். (உ௪)

கொட்புறுபுரவித்தெய்வக்கூர்நுதிக்குலிசத்தாற்கும்
கட்புலங்கதுவலாகாவேகத்தாற்கடலுமண்ணும்
உட்பதங்கூட்டியண்டமுறவுளசெலவினொற்றைப்
புட்பகவிமானந்தானவ்விலங்கைமேற்போவதொத்த. (உ௫)

விண்ணவரேத்தவேதமுனிவரார்வியந்துவாழ்த்த
மண்ணவரிறைஞ்சச்செல்லுமாருதிமறமுட்கூர

---

* மரனும்-மரங்களும். † கடலுக்கு நன்னீர்மையாவது வற்றாதிருத்தல்.

‡ முத்தலைக்கிரி-திருவடி தோள்களிரண்டும் தலை ஒன்றும் கூட மூன்று சிகரத்தையுடைய ஒரு மலையையும் ஒத்தானெனவுமாம்.

அண்ணல்வாளரக்கன்றன்னையமுக்குவாமின்னமென்னாக்
கண்ணுதலொழியச்செல்லுங் * கைலையங்கிரியுமொத்தான். (௨௬)

† மாணியாம்வேடந்தாங்கிமலரயற்கறிவுமாண்டோர்
ஆணியாயுலகுக்கெல்லாமறம்பொருணிரப்புமண்ணல்
சேணுயர்நெடுநொடீர்ந்ததிரிதலைச்சிறுவன்றன்னைக்
காணியவிரைவிற்செல்லுங்கனகமால்வரையுமொத்தான். (௨௭)

மழைகிழித்துதிரமீன்கண்மறிகடல்பாயவானம்
குழைவுறத்திசைகள்கீறமேருவுங்குலுங்கக்கோட்டின்
முழையுடைக்கிரிகண்முற்றமுடுக்குவான்முடிவுக்காலத்
தழிவுறக்கடுக்கும்வேகத்தாதையுமனையனானான். (௨௮)

தடக்கைநாலைந்துபத்துத்தலைகளுமுடையான்றானே
அடக்கியைம்புலன்கள்வென்றதவப்பயனறுதலோடும்
கெடக்குறியாகமாகங்கிழக்கெழுவழக்குநீங்கி
வடக்கெழுந்திலங்கைசெல்லும்பரிதிவானவனுமொத்தான். (௨௯)

புறந்துறலஞ்சிவேறோரரணம்புக்குறைதல்போக்கி
மறத்தொழிலரக்கர்வாழுமாநகர்மனுவின்வந்த
திறத்தகையிராமனென்னுஞ்சேவகற்பற்றிச்செல்லும்
அறத்தகையரசன்றிண்போராழியுமனையனானான். (௩0)

கேழுலாமுழுநிலாவிற்கிளரொளியிருளைக்கீறப்
பாழிமாமேருநாணவிசும்புறப்படர்ந்ததோளான்
ஆழிசூழுலகமெல்லாமருங்கனன்முருங்கவுண்ணும்
ஊழிநாள்வடபாற்றோன்றுமுவாமுழுமதியுமொத்தான். (௩௧)

அடலெலாந்திகிரிமாயற்கமைந்தனனாற்றல்காட்டக்
குடலெலாமவுணர்சிந்தக்குன்றெனக்குறித்துநின்ற
திடலெலாந்தொடர்ந்துசெல்லச்சேண்விசும்பொதுங்கத்தெய்வக்
கடலெலாங்கலங்கத்தாவுங்கலுழனுமனையனானான். (௩௨)

நாலிரண்டுலகமூன்றுநடுக்குறவடுக்கிநாகர்
மேலின்மேனின்றகாறுஞ்சென்றகூலத்தின்விண்டு
காலினாலளந்தவானமுகட்டையுங்கடக்கக்கால
வாலினாலளந்தானென்றுவானவர்மருளச்சென்றான். (௩௩)

விளித்துப்பின்வேலைதாவும்வீரன்வால்வேதமெய்க்கும்
அளித்துப்பினநுமனென்னுமறந்துணைபெற்றதாயும்

---

* வெள்ளிமலை சிறந்தாலெப்பு. † மாணி-பிரமசாரி.

களித்துப்புன்றொழின்மேனின்றவரக்கர்கண்ணுறுவ * ராமென்
றொளித்துப்பின்செல்லுங்காலபாசத்தையொத்ததன்றே. (௩௪)

மேருவைமுழுதுஞ்சூழ்ந்துமீதுற்றவேகநாகம்
கார்நிறத்தண்ணலேவக்கலுழன்வந்துற்றகாலை
சோர்வுறுமனத்ததாகிச்சுற்றியசுற்றுநீங்கிப்
பேர்வுறுகின்றவாறுமொத்ததப்பிறங்குபேர்வால். (௩௫)

குன்றொடுகுணிக்குங்கொற்றக்குவவுத்தோட்குரக்குச்சீயம
சென்றுறுவேகத்திண்காலெறிதரத்தேவர்வைகும்
மின்றொடர்வானத்தானவிமானங்கள்விசையிற்றம்மின்
ஒன்றொடொன்றுடையத்தாக்கிமாக்கடலுற்றமாதோ. (௩௬)

வலங்கையின்வயிரவேதிவைத்தவன்வைகுநாடும்
கலங்குவதேகுவான்றன்கருத்தென்கொலென்னுங்கற்பான்
விலங்கையிலெயிற்றுவீரன்முடுக்கியவேகம்வெய்யோன்
இலங்கையினளவன்றென்னாவிம்பர்நாடிரிந்ததிப்பால். (௩௭)

ஒசனையுலப்பிலாதவுடம்பமைந்துடையவென்னத்
தேசமுநூலுஞ்சொல்லுந்திமிங்கிலகிலங்களோடும்
ஆசையையுற்றவேலைகலங்கவன்றண்ணல்யாக்கை
வீசியகாலின்வீந்துமிதந்தனமீன்களெல்லாம். (௩௮)

பொருவருமுருவத்தன்னான்போகின்றபொழுதுவேகம்
தருவனதடக்கைதள்ளாநிமிர்ச்சியதம்முளொப்ப
ஒருவருங்குணத்துவள்ளலோருயிர்த்தம்பியோடும்
இருவருமுன்னர்ச்சென்றாலொத்தவவ்விரண்டுபாலும். (௩௯)

வேறு.

இந்நாகமன்னானெறிகாலெனவேகும்வேலை
† இந்நாகமாவிற்செறிகீட்டிசைக்காவல்செய்யும்
கைந்நாகமந்நாள்கடல்வந்ததொர்காட்சிதோன்ற
மைந்நாகமென்னுமலைவானுறவந்ததன்றே. (௪௰)

மீயோங்குசெம்பொன்முடியாயிரமின்னிமைப்ப
ஒயாவருவித்திரளுத்தரியத்தையொத்த
தீயோருளராகியதாலவர்தீமைதீர்ப்பான்
‡ மாயோன்மகாக்கடனின்றெழுமாண்பதாகி. (௪௧)

* ஆம்-சாரியை.

† திக்குநாகம்திந்நாகமெனக்கடைக்குறைபாய்மரீஇயதுதொகுத்தலெனவுமாம்.

‡ மாயோன்-ஆச்சரியகுண சேஷ்டிதனான எம்பெருமான்.

நூலேந்துகேள்விநுகராப்புலநோக்கலுற்றார்
போலேந்துநின்றதனியான்மெய்பொறாதுநீங்கக்
காலாழ்ந்தழுந்திக்கடல்புக்குழீஇக்கச்சமாகி
மாலேந்தவோங்குநெடுமந்தரமேயுமான. (௬௨)

தள்ளற்கருநற்சிறைமாடுதழைப்பொடோங்க
என்னற்கருநன்னிறமெல்லையிலாதபுல்ல
வள்ளற்கடலைக்கெடநீக்கிமருந்துவௌவி
உள்ளூற்றெழுமோருவணத்தரசேயுமொத்த. (௬௩)

ஆன்றாநெடுநீரிடையாதியொடந்தமாகித்
தோன்றாதுநின்றானருடோன்றிடமுந்துதோன்று
மூன்றாமுலகத்திடைமுற்றுயிராயமற்றும்
ஈன்றானையீன்றசுவணத்தனியண்டமென்ன. (௬௪)

இந்நீரினென்னைத்தருமெந்தையையெய்தியன்றிச்
செந்நீர்மைசெய்யேனெனச்சிந்தனைசெய்துநொய்தின்
அந்நீரில்வந்துமுதலந்தணனாதிநாளம்
முந்நீரின்மூழ்கித்தவமுற்றிமுளைத்தவாபோல். (௬௫)

பூவாவிடையூறுபுகுந்தபொறாதநெஞ்சின்
கோவாமுனிசீறிடவாரிகுளித்தவெல்லாம்
மூவாமுதனாயகன்மீளமுயன்றவந்நாள்
தேவாசுரர்வேலையில்வந்தெழுதிங்களென்ன. (௬௬)

நிறங்குங்குமமொப்பனநீணிறம்வாய்த்தநீரின்
இறங்கும்பவளக்கொடிசுற்றினசெம்பொனேய்ந்த
பிறங்குஞ்சிகரப்படர்முன்றிறொறும்பிணவோ
டுறங்கும்மகரங்களுயிர்ப்பொடுணர்ந்துலாவ. (௬௭)

கூன்சூன்முதி * ரிப்பிகுரைக்கநிரைத்தபாசி
வான்சூழ்மழையொப்பவயங்குபளிங்குமுன்றி
றான்சூலநாளிற்றகைமுத்தமுயிர்த்தசங்கம்
மீன்சூழ்வருமம்முழுவெண்மதிவீறுகீற. (௬௮)

பல்லாயிரமாயிரங் †காசினம்பாடிமைக்கும்
கல்லார்சிமயத்தடங்கைத்தலநீண்டுகாட்டத்
தொல்லார்கலியுட்புகமூழ்கிவயங்குதோற்றத்
தெல்லாமணியீட்டமுகந்தெழுகின்றதென்ன. (௬௯)

---

* இப்பிகுரைத்தலே மேககர்ச்சிதமாகவும், பாசியே மேகமாகவும், பளிங்குப் பாறையே நிலாப்பரவின ஆகாயமாகவும், முத்துக்களேநட்சத்திரங்களாகவும், சங்கே பூரணச்சந்திரனாகவும், சுக்கிலபட்சத்தாகாயம்போல் மலைவந்ததென்க.

† காசினம் - இரத்தினவகை.

மனையிற்பொலிமாகநெடுங்கொடிமாலையேய்ப்ப
வினையிற்றிரள்வெள்ளருவித்திரடேங்கிவீழ
நினைவிற்கடலூடெழலோடுமுணர்ந்துநீங்காச்
சுனையிற்பனைமீன்றிமிலோடுதொடர்ந்துதுள்ள. (௫௰)

கொடுநாலொடிரண்டுகுலப் * பகை † குற்றமூன்றும்
சுடுஞானம்வெளிப்படவுய்த்ததுயக்கிலார்போல்
விடநாகமுழைத்தலைவிம்மலுழன்றுநீங்க
நெடுநாள்பொறையுற்றவுயிர்ப்புநிமிர்ந்துநிற்ப. (௫௧)

எழுத்தோங்கிவிண்ணொடுமண்ணொக்கவிலங்குமாடி
உழுந்தோடுகாலத்திடையும்பரினிம்பரெங்கும்
கொழுந்தோடிநின்றகொழுங்குன்றைவியந்துநோக்கி
அழுங்காமனத்தண்ணலிதென்கொலெனாவுயிர்த்தான். (௫௨)

நீர்மேற்படராநெடுங்குன்றுநிமிர்ந்துநிற்றல்
சீர்மேற்படராதெனச்சிந்தையுணர்ந்துசெல்வான்
வேர்மேற்படவன்றலைகீழ்ப்படநூக்கிவிண்ணோர்
ஊர்மேற்படரக்கடிதும்பரின்மீதுயர்ந்தான். (௫௩)

உந்தாமுனலைந்துயர்வேலையொளித்தகுன்றும்
சிந்தாகுலமுற்றதுபின்னருந் † தீர்விலன்பால்
வந்தோங்கியாண்டோர்சிறுமானுடவேடமாகி
எந்தாயிதுகேளெனவின்னவிசைத்ததன்றே. (௫௪)

வேற்றுப்புலத்தோனெனலைய்விலங்கலெல்லாம்
மாற்றுச்சிறையென்றரிவச்சிமாணவோச்ச
வீற்றுப்படநூறியவேலையின்வேலையுய்த்துக்
காற்றுக்கிறைவனெனைக்காத்தனன்புகாக்க. (௫௫)

அன்னானருங்காதலனாதலினன்புதூண்ட
என்னாலுனக்கீண்டுசெயற்கரிதாயதின்மை
பொன்னார்சிகரத்திவையாறினைபோதியேனும்
உன்னாலுயர்ந்தேனுயர்விற்குமுயர்ந்ததோளாய். (௫௬)

கார்மேகவண்ணன் § பணிபூண்டருங்காலின்மைந்தன்
தேர்வான்வருகின்றதுசீதையைத்தேவருய்யப்
பேர்வானயல்சேறியிதிற்பெரும்பேறிலென்ன
நீர்வேலையுமென்னையுரைத்ததுநீதிநின்றாய். (௫௭)

---

* பகை-ஆறு காமக்குரோத லோபமோக மதமாச்சரியங்களை.
† குற்றமூன்று-ஐயம், திரிபு, அறியாமை.
‡ தீர்வில்-விடுதலில்லாத. § பணி-கட்டளை.

நற்றாயினுநல்லனெனக்கிவனென்றுநாடி
இற்றே * யிறையெய்தினையேய்ந்தது † கோடியென்றால்
பொற்றாரகன்மார்பதம்மில்லுழைவந்தபோதே
உற்றார்செயன்மற்றுமுண்டோவெனவுற்றுரைத்தான். (௫௮)

உரைத்தானுரையாலிவனூறிலனென்பதுன்னி
விரைத்தாமரைவாண்முகவிட்டுவிளங்குவீரன்
சிரித்தானளவேசிரித்துத்திசைசெல்லநோக்க
வரைத்தாணெடும்பொற்குடுமித்தலைமாடுகண்டான். (௫௯)

வருந்தேனதுவென்றுனைவானவன்வைத்தகாதல்
அருந்தேனினியாதுமென்னாசைசிரப்பினல்லால்
பெருந்தேன் ‡ பொழிசாரனின்னன்புபிணித்தபோதே
இருந்தேனுகர்ந்தேனிதினூஉங்கினியீவதுண்டே. (௬௦)

o முன்பிற்சிறந்தா ¶ ரிடையுள்ளவர்காதன்முற்றப்
§ பின்பிற்சிறந்தார்குணநன்றிதுபெற்றயாக்கைக்
கென்பிற்சிறந்தாயதொரூற்றமுண்டென்னலாமே
அன்பிற்சிறந்தாயதொர்பூசனையார்கணுண்டே. (௬௧)

ஈண்டியான்கடிதேகியிலங்கைவிலங்கலெய்தி
ஆண்டானடிமைத்தொழிலாற்றலினாற்றலுண்டேல்
மீண்டியானுகர்வென்னல்விருந்தெனவேண்டிமெய்ம்மை
பூண்டானவன்கட்புலம்பிற்படமுந்துபோனான். (௬௨)

செவ்வான்கதிருங்குளிர்திங்களுந்தேவர்வைகும்
வெவ்வேறுவிமானமுமீனொடுமேகமற்றும்
எவ்வாயுலகத்தவுமீண்டியிருந்ததம்மின்
ஒவ்வாதனவொத்திடவூழிவெங்காலுமொத்தான். (௬௩)

$ நீர்மாக்கடன்மேனிமிர்கின்றநிமிர்ச்சிநோக்காப்
பார்மேற்றவழ்சேவடிபாய்நடவாப்பதத்தே
தேர்மேற்குதிகொண்டவனித்திறன்சிந்தைசெய்தான்
ஆர்மேற்கொலென்றெண்ணியருக்கனுமையமுற்றான். (௬௪)

வாளொத்தொளிர்வாலெயிறூழின்மருங்கிமைப்ப
நீளொத்துயர்வாலின்விசும்புநிரம்புமெய்யன்
கோளொத்தவன்மேனிவிசும்பிருகூறுசெய்த
நாளொத்ததுமேலொளிகீழிருளுற்றஞாலம். (௬௫)

---

* இறை - கொஞ்சம். † கோடி - அங்கீகரிக்கிறது. ‡ மொழிசாரனின் - என்றும் பாடம், o முதல்வள்ளல்கள் - இல்லையென்னாமற்கொடுப்பவர். ¶ இடைவள்ளல்கள் - வேண்டக்கொடுப்பவர். § கடைவள்ளல்கள் - புகழக்கொடுப்பவர்.

$ நீர்—ஈண்டு ஊற்றுநீர், ஆற்றுநீர், மேகநீர் ஆக மூந்நீரென்க.

மூன்றுற்றதலத்திடைமுற்றியதுன்பம்வீப்பான்
என்றுற்றுவந்தான்வலிமெய்ம்மையுணர்த்துநீயென்
றான்றுற்றவானோர்குறைநேரவரக்கியாகித்
தோன்றுற்றுநின்றாள்சுரசைப்பெயர்ச்சிந்தைதூயாள். (சுசு)

பேழ்வாயொராரக்கியுருக்கொடுபெட்பினோங்கிக்
கோழ்வாயரியின்குலத்தாய்கொடுங்கூற்றுமுட்க
வாழ்வாயெனக்காமிடமாய்வருவாய்கொலென்னா
* நீழ்வாய்விசும்பின்றனதுச்சிநெருங்கிநின்றாள். (சுஎ)

தீயேயெனலாயபசிப்பிணிதீர்த்தல்செய்வாய்
ஆயேவிரைவுற்றெனையண்மினைவண்மையாள
நீயேயினிவந்தெனிணங்கொள்பிணங்கெயிற்றின்
வாயேபுகுவாய்வழிமற்றிலைவானினென்றாள். (சுஅ)

பெண்பாலொருநீபசிப்பீழையொறுக்கநொந்தாய்
உண்பாயெனதாக்கையையானுதவற்குநேர்வல்
விண்பாலவர்நாயகனேவலிழைத்துமீண்டால்
நண்பாலெனச்சொல்லியநல்லறிவாளனக்கான். (சுகு)

காய்ந்தேழுலகங்களுங்காணநின்யாக்கைதன்னை
ஆய்ந்தேபசிதீர்வெனினாணையென்றன்னள்சொன்னாள்
ஓர்ந்தானுமிகழ்ந்தொருவேலினதூழில்பேழ்வாய்
சேர்ந்தேகுகின்றேன்வலையாமெனிற்றின்னியென்றான். (எ0)

அக்காலையரக்கியுமண்டமநந்தமாகப்
புக்காணிறையாதபுழைப்பெருவாய்திறந்தா
விக்காதுவிழுங்கநின்றாளதுநோக்கிவீரன்
திக்காரவள்வாய்சிறிதாம்வகைசேணினீண்டான். (எக)

நீண்டானுடனேசுருங்காநிமிர்வாள்வயிற்றின்
ஊண்டானெனவுற்றாருயிர்புயிராதமுன்னர்
மீண்டானதுகண்டனர்விண்ணுறைவோர்களெம்மை
ஆண்டான்வலனென்றலக்தூஉய்நெடிதாசிசொன்னார். (எஉ)

மின்மேற்படர்நோன்மையனாயுடல்வீங்கிநீங்கத்
தன்மேனியளாயவடாயினுமன்புதாழ
என்மேன்முடியாதனவென்றினிதேத்திநின்றாள்
பொன்மேனியனுநெடிதாசிபுனைந்துபோனான். (எங

கீதங்களிசைத்தனர்கின்னரர்கீதநின்ற
பேதங்களியம்பினர்பேதையராடல்பின்னர்ப்
பூதங்கடொடர்ந்துபுகழ்ந்தனபூசுரேசர்
வேதங்களியம்பினர்தென்றல்விருந்துசெய்த. (எச)

* நீள்—நீழ், என்பதினைவெதுகை.

மந்தாரமூந்துமகரந்தமணந்தவாடை
செந்தாமரைவாண்முகத்திற்செறிவேர்சிதைப்பத்
தந்தாமலகத்திடைவிஞ்சையர்பாணிதள்ளும்
கந்தாரவீணைக்களிசெஞ்செவிக்காதுநுங்க. (எ௫)

வே று.

வெங்கார்கிறப்புணரிவேறேயுமொன்றைப்
பொங்கார்கலிப்புனறரப்பொலிவதேபோல்
இங்கார்கடத்திரெனவென்றெழுந்தாள்
அங்காரதாரைபெரிதாலாலயன்றுள். (எசு)

* காதக்கடுங்குறிகணக்கிறுதிகண்ணுள்
பாதச்சிலம்பிரைவிலேவலையொலிபம்ப
வேதக்கொழுஞ்சுடரைநாடிநெறிமேறுள்
ஓதத்தின்மேவுமதுகைடவரையொத்தாள். (எஎ)

துண்டப்பிறைத்துணையெனச்சுடரெயிற்றுள்
கண்டத்திடைக்கறையுடைக்கடவுள்கைம்மா
முண்டத்துரித்தவுரியாண்முளரிவந்தான்
அண்டத்தினுக்குறையமைத்தபிலவாயாள். (எஅ)

நின்றுணிமிர்ந்தலைநெடுங்கடலினீர்தன்
வன்றுளலம்பமுடிவான்முகடுவௌவ
அன்றுய்திறத்தவனறத்தையருளோடும்
தின்றுளொருத்தியிவளென்பதுதெரிந்தான். (எகூ)

பேழ்வாயகத்தலதுபேருலகமூடும்
நீழ்வானகத்தினிடையேகுநெறிநேரா
வாழ்வானனுக்கனவளாழ்பிலவயிற்றைப்
போழ்வானினைத்தினையவாய்மொழிபுகன்றுன். (அ0)

சாயாவரந்தழுவிஞய்தழியபின்னும்
ஓயாதுவந்தவிசைகண்டுணரகில்லாய்
வாயாலளந்துநெடுவான்வழியடைத்தாய்
நீயாரையென்னையிவணின்றநிலையென்றுன். (அக)

பெண்பாலெனக்கருதுபெற்றியொழியுற்றுல்
விண்பாலவர்க்குமுயிர்வீடுறுதன்மெய்யே
கண்பாலடுத்தவுயிர்காலன்வருமேனும்
உண்பானருத்தியதொழிப்பரியதென்றுள். (அஉ)

---

* காதவழி தூரத்திலுள்ள எப்பொருளாயினும் அப்பொருளினிழலை யிழுக்கும் அளவுமுடியுள்ள கண்ணுளென்பதனுலே சாயாக்கிராஹி-நிழலையிழுக்கிறவள்ளென்றும் அவளுக்கொருபெயர்.

திறந்தாளெயிற்றையவளண்ணலிடைசென்றான்
அறந்தானரற்றியதயர்த்தமரரெய்த்தார்
இறந்தானெனக்கொடொரிமைப்பதனின்முன்னம்
பிறந்தானெனப்பெரியகோளரிபெயர்ந்தான். (௮௩)

* கள்வாயரக்கிகதறக்குடர்கணத்தில்
கொள்வார்தடக்கையின்விசும்பைமிசைகொண்டான்
முள்வாழ்பொருப்பிலமுழைபெய்திமிகநொய்தின்
உள்வாளரக்கொடழுதிண்கலுழனொத்தான். (௮௪)

சாகாவரத்தலைவரிற்றிலகமன்னான்
ஏகாவரக்கிகுடர்கொண்டுடனெழுந்தான்
மாகாலசைப்பவடமண்ணினுறவாலோ
டாகாயமுற்றகதலிக்குவமையானான். (௮௫)

ஆர்த்தனர்கள்வானவர்கடானவரழுங்கா
வேர்த்தனர்விரிஞ்சனும்வியந்துமலர்வெள்ளம்
தூர்த்தனனகன்கைலையிற்றலைவிலோனும்
பார்த்தனன்முனித்தலைவராசிகள்பகர்ந்தார். (௮௬)

மாண்டாளரக்கியவள்வாய்வயிறுகாறும்
கீண்டானிமைப்பினிடைமேருகிரிகீழா
நீண்டான்வயக்கதிரினைப்பினொடிதென்னாப்
பூண்டானருக்கனுயர்வானின்வழிபோனான். (௮௭)

சொற்றார்கள்சொற்றதொகையல்லதுணையொன்றோ
முற்றாமுடிந்தநெடுவானினிடைமுந்நீர்
இற்றாவியெற்றெனினும்யானினியிலங்கை
உற்றால்விலங்குமிடையூறெனவுணர்ந்தான். (௮௮)

ஊறுகடிதூறுவனவூறிலறமுன்னாத்
தேறிலியரக்கர்புரிதீமையவைதீர
வேறுவகையாண்டையவிராமனெனவெல்லாம்
மாறுமதின்மாறுபிறிதில்லெனவலித்தான். (௮௯)

வேறு.

தசும்புடைக்கனகநாஞ்சிற்கடிமதிறரித்துநோக்கான்
அசும்புடைப்பிரசத்தெய்வக்கற்பகநாட்டையண்மி
விசும்பிடைச்செல்லும்வீரன்விலங்கிவேறிலங்கைமூதூர்ப்
பசுஞ்சுடர்ச்சோலைத்தாங்கோர்பவளமால்வரையிற்பாய்ந்தான். (௯0)

---

* கள்வாய்—கள்ளை ஒழுகவிடுகிறவாய் என உருபும் முடிக்குஞ்சொல்லுந் தொக்க தொகை.

மேக்குறச்செல்வோன்பாயவிலங்கிநீரிலங்கைவெற்பு
நூக்குறத்தங்குமிக்குந்தள்ளுறநுடங்குநோன்மை
போக்கினுக்கிடையூறாகப்புயலொடுபொதிந்தவாடை
தாக்குறத்தளர்ந்துசிந்துங்கலமெனத்தக்கதன்றே. (௩௧)

மண்ணடியுற்றுமீதுவானுறவரம்பின்றன்மை
எண்ணடியுற்றகுன்றத்தவத்துநின்றெய்தநோக்கி
விண்ணிடையுலகமென்னுமெல்லியன்மேனிநோக்கக்
கண்ணடிவைத்ததன்னவிலங்கையைத்தெரியக்கண்டான். (௩௨)

நன்னகரதனைநோக்கிநளினக்கைமறித்துநாகர்
பொன்னகரிதனையொக்குமென்பதுபுல்லி * தம்மா
அந்நகரிதனினன்றேயண்டத்தைமுழுதுமாள்வான்
இந்நகரிருந்துவாழ்வானிதுவதற்கேதுவென்றான். (௩௩)

மாண்டதோர்நலத்திற்றாமென்றுணர்த்துதல்வாய்மைத்தன்றால்
வேண்டியவேண்டினெய்திவெறுப்பின்றிவிழைந்ததுய்க்கும்
† ஈண்டரும்போகவின்பமீறிலதியாண்டுக்கண்டாம்
ஆண்டதுதுறக்கமஃதேயருமறைத்துணிவுமம்மா. (௩௪)

உட்புலனெழுநூறென்பர்யோசனையுலகமூன்றில்
தெட்புறுபொருள்களெல்லாமிதனுழைச்செறிந்தவென்றால்
நுட்புலனுணங்குகேள்விநுழைவிலரெனினுநோக்கும்
கட்புலன்வரம்பிற்றாமேகாட்சியுங்கரையிற்றாமே. (௩௫)

௧-வது கடறாவுபடலம் - முற்றிற்று.

(ஆக திருவிருத்தம்-௩௫.)

௨-வது ஊர்தேடுபடலம்.

பொன்கொண்டிழைத்துமணியைக்கொடுபொதிந்த
மின்கொண்டமைத்தவெயிலைக்கொடுசமைத்த
என்கொண்டியற்றியவெனத்தெரிகிலாத
வன்கொண்டல்விட்டுமதிமுட்டுவனமாடம். (௧)

நாகாலயங்களொடுநாகருலகுந்தம்
பாகார்மருங்குதுயில்வெண்ணவுயர்பண்ப
ஆகாயமஞ்சவசன்மேருவையணுக்கும்
மாகால்வழங்குசிறுதென்றல்வரநின்ற. (௨)

---

* அம்மா—அசை, அதிசயக்குறிப்பாவதோரிடைச்சொல்.
† ஈண்டரும்—கிடைக்கவரிதான.

மாகாரின்மின்கொடிமடக்கினடுக்கி
மீகாரமெங்கணுநறுந்துகள்விளக்கி
ஆகாயகங்கையினையங்கையினினள்ளிப்
பாகாயசெஞ்சொலவர்வீசுபடுகாரம். (௩)

வேறு.

பஞ்சியூட்டியபாட்டிசைக்கிண்கிணிப்பதுமச்
செஞ்செவிச்செழும்பவளத்தின்கொழுஞ்சுடர்சிதறி
மஞ்சினஞ்சனநிறமறைத்தரக்கியர்வடித்த
அஞ்சலோதியோடுவமையவர்க்குறுமுவமை. (௪)

நானநாண்மலர்க்கற்பகநறுவிரைநாறப்
பானம்வாயுறவெறுத்ததாளாறுடைப்பறவை
தேனவாவிரைச்செழுங்கழுநீர்த்துயில்செய்ய
வானயாறுதம்மரமியத்தலந்தொறுமடுத்த. (௫)

குழலும்வீணையும்யாழுமென்றினையனகுழைய
மழலைமென்மொழிகிளிக்கிருந்தளிக்கின்றமகளிர்
சுழலுநன்னெடுந்தடமணிச்சுவர்தொறுந்துவன்றும்
நிழலுந்தம்மையுமெய்ம்மைநின்றறிவருநிலைய. (௬)

இனையமாடங்களிந்திரற்கமைவரவெடுத்த
மனையின்மாட்சியவென்னினச் * சொல்லுமாசுண்ணும்
அனையதாமெனினரக்கர்தந்திருவுக்குமளவை
நினையலாமன்றியுவமையுமன்னதாநிற்கும். (௭)

மணிகளொத்துணைபெரியவுமாறிருமார்பின்
அணியுங்காசினுக்ககன்றனவுளவெனலரிதால்
திணியுநன்னகர்த்திருமனைதெய்வமாதச்சன்
துணிவின்வந்தனன்றொட்டழகிழைத்தவத்தொழில்கள். (௮)

வாழுமன்னுயிர்யாவையுமொருவழிவாழ
ஊழிநாயகன்றிருவயிறொத்துளவிவ்வூர்
ஆழியண்டத்தினருக்கன்றனலங்குதேர்ப்புரவி
ஏழுமல்லனவீண்டுளகுதிரையுமெல்லாம். (௯)

மரமடங்கலுங்கற்பகமனையெலாங்கனகம்
அரமடந்தையர்சிலதியராக்கியர்க்கமரர்
உரமடங்கிவந்துழையராயுழல்பவரொருவர்
தரமடங்குவதன்றிதுதவஞ்செய்ததவமால். (௧0)

* தோஷமில்லாதசொற்களைத்தோஷமுள்ளபொருள்மேல் ஆரோபிக்க லாகாதென்பார் சொல்லுமாசுண்ணுமென்றார்.

போரியைந்தனதோற்றவென்றிகழ்தலிற்புறம்போய்
நேரியன்றவன்றிசைதொறுநின்றமாநிற்க
ஆரியந்தனியைங்கரக்களிறுமோராழிச்
சூரியன்றனித்தேருமேயிந்நகர்தொகாத. (கக)

தேவரென்பவர்யாருமித்திருநகர்க்கிறைவற்
கேவல்செய்கிலாரேவரேயெண்வகையுருவின்
மூவர்தம்மினுமதிகனென்றுலவன்முயலும்
தாவின்மாதவமல்லதுபிறிதொன்றுதருமோ. (கஉ)

தழங்குபேரியினார்கலிதகைநெடுங்களிறு
முழங்குமோதையுமூரிநீர்முழக்கொடுமுழங்கும்
கொழுங்குழற்புதுக்குதலையர்நூபுரக்குரலின்
வழங்குமப்பெருந்துழனிகள்வயின்றொறுமறையும். (கங)

மரகதத்தினுமற்றுளமணியினும்வனைந்த
குரகதத்தடந்தேரினமவைபயில் * கொட்டில்
இரவிவெள்கநின்றிமைக்கின்றவியற்கையவென்றால்
நாகமொக்குமானன்னெடுந்துறக்கமிந்நகர்க்கு. (கச)

திருகுறுஞ்சினத்தரக்கருங்கருநிறந்தீர்ந்தார்
அருகுபோகின்றதிங்களுமறுவற்றதழகைப்
பருகுமிந்நகர்த்துன்னொளிபாய்தலிற்பசும்பொன்
உருகுகின்றதுபோன்றுளதுலகுசூழுவரி. (கரு)

அண்டமுற்றவும்வீங்கிருளகற்றுநின்றலரி
கண்டவாற்றினிக்கடிநகர்நெடுமனைக்கதிர்கள்
உண்டவாற்றினென்றுரைப்பரிதொப்பிடிற்றன்மூன்
விண்டவாய்ச்சிறுமின்மினியென்னவும்விளங்கா. (கசு)

† தேனுஞ்சாந்தமுமான்மதஞ்செறிநறுஞ்சேறும்
வானநாண்மலர்க்கற்பகமலர்களும்வயமாத்
தானவாரியுநீரொடுமொத்தவிற்றமீஇய
மீனுந்தானுமோர்வெறிமணங்கமழுமாம்வேலை. (கஎ)

தெய்வத்தச்சனைப்புகழ்துமோசெங்கண்வாளரக்கன்
மெய்யொத்தாற்றியதவத்தையேவியத்துமோவிரிஞ்சன்
அய்யப்பாடிலாவரத்தையேமதித்துமோவறியாத்
‡ தொய்யற்சிந்தையாம்யாவையையாதென்றுதுதிப்பாம். (கஅ)

---

* கொட்டில்-சாலைகள், காடிகாறு. † தேன்-நண்டு அத்தர். ‡ தொய்யல்-வைதல்.

வேறு.

வானுங்நிலனும்பெறுமாறினிமற்றுமுண்டோ
கானும்பொழிலும்மிவைசெங்கனகத்தினாலும்
ஏனம்மணியாலுமியற்றியவேனும்யாவும்
தேனும்மலருங்கனியுந்தரச்செய்தசெய்கை. (கக)

வேறு.

நீரும்வையமுநெருப்புமேனிமிர்நெடுங்காலும்
வாரிவானமும்வழங்கலவாகுந்தன்வளர்ச்சி
ஊரினிந்நெடுங்கோபுரத்துயர்ச்சிகண்டுணர்ந்தால்
மேருவெங்ஙனம்விளர்க்குமோமுழுமுற்றும்வெள்ளி. (உ0)

முன்னம்யாவருமிராவணன்முனியுமென்றெண்ணிப்
பொன்னின்மாநகர்மீச்செலான்கதிரெனப்புகல்வார்
கன்னியாரையிஞெளியினிற்கண்வழுக்குறுதல்
உன்னிநாடொறும்விலங்கினன்போதலையுணரா. (உக)

தீயசெய்குநர்தேவராலனையவர்சேரும்
வாயிலல்லதோர்வரம்பமைக்குவமெனமதியாக்
காயமென்னுமக்கணக்கறுபதத்தையுங்கடக்க
வயுநன்மதிலிட்டனன்கைலையையெடுத்தான். (உஉ)

கறங்குகால்புகாகதிரவனொளிபுகாமறலி
மறம்புகாதினிவானவர்புகாரென்கைவம்பே
* திறம்புகாலத்துள்யாவையுஞ்சிதையினுஞ்சிதையா
அறம்புகாதிந்தவணிமதிட்கிடக்கைநின்றகத்தின். (உ௩)

கொண்டவான்றிரைக்குரைகடலிடையதாய்க்குடுமி
எண்டவாவிசும்பெட்டநின்றிமைக்கின்றவெழிலால்
பண்டைநாகணைப்பள்ளியானுந்தியிற்பயந்த
அண்டமேயுமொத்திருந்ததவ்வகனகரமைதி. (உ௪)

பாடுவார்பலரென்னின்மற்றவரினும்பலரால்
ஆடுவார்கண்மற்றவரினும்பலருள † ரமைதி
கூடுவாரிடையின்னியங்கொட்டுவார்முட்டில்
வீடுகாண்குறுந்தேவரால்விழுநடங்காண்பார். (உ௫)

வானமாதரோடிகலுவர்விஞ்சையர்மகளிர்
ஆனமாதரோடாடுவரியக்கியரவரைச்
சேனைவார்குழலரக்கியர்தொடர்குவர்தொடர்ந்தால்
ஏனைநாடியராருநடக்கிரியையாய்ந்திருப்பார். (உ௬)

---

* திறம்புகாலம்—அழியுங்காலம். † அமைதிகூடுதலாவது—கல்யாணம் உற்சவங்கள் முதலானவை நடக்கிற இடங்களில் ஒருசேரக்கூடுதல்.

* இழையுமாலையுமாடையுஞ்சாந்தமுமேந்தி
உழையரென்னநின்றுதவுவநிதியங்களொருவர்
விழையும்போகமேயிங்கிதுவாய்கொடுவிளம்பின்
குழையுநெஞ்சினனினையினுமாசென்றுகொள்ளும். (உஎ)

பொன்னின்மால்வரைமேன்மணிபொழிந்தனபொருத்தி
உன்னுநான்முகத்தொருவனின்றாழ்முறையுரைக்கப்
பன்னிநாள்பலபணியுழன்றரிதினிற்படைத்தான்
சொன்னவானவர்தச்சனுமிந்நகர்துதிப்பான். (உஅ)

மகரவீணையின்மந்திரகீதத்தின்மறைந்த
சகரவேலையினார்கலிதிசைமுகன்றடவும்
சிகரமாளிகைத்தலந்தொறுந்தெரிவையர்நிவந்த
அகருதூபத்தினழுந்தினமுகிற்குலமனைத்தும். (உகூ)

பளிக்குமாளிகைத்தலந்தொறுமிடந்தொறும்பசுந்தேன்
துளிக்குங்கற்பகத்தண்ணறுஞ்சோலைகடோறும்
அளிக்குந்தேறலுண்டாடுநர்பாடுநராகிக்
களிக்கின்றாரலாற்கவல்கின்றாரொருவரைக்காணேன். (௩0)

தேறன்மாந்தினர்தேனிசைமாந்தினர்செவ்வாய்
ஊறன்மாந்தினரின்னுரைமாந்தினரூடல்
கூறன்மாந்தினரனையவர்த்தொழுதெழுகோபத்
தாறன்மாந்தினரரக்கியர்க்குயிரன்னவரக்கர். (௩க)

எறித்தகுங்குமத்திளமுலையெழுதியதொழில்கள்
கழுத்தமேனியிற்பொலிந்தனரூடலிற்கனன்று
மறித்துநோக்கியர்மலரடிமஞ்சுளப்பஞ்சி
குறித்தகோலங்கள்பொலிந்தனவரக்கர்தங்குஞ்சி. (௩உ)

† விளரிச்சொல்லியவர்வாயினன்வேலையுண்மிடைந்த
பவளக்காடெனப்பொலிந்ததுபடைநெடுங்கண்ணால்
குவளைக்கோட்டகங்கடுத்ததுகுளிர்முகக்குழுவான்
முளரிக்கானமுமானதுமுழங்குநீரிலங்கை. (௩௩)

வேறு.

எழுந்தனர்திரிந்துவைகுமிடத்ததாயின்றுகாறும்
கிழிந்திலதண்டமென்னுமிதனையேகிளப்பதல்லால்
அழுந்திநின்றவதென்னேயலருளோனாதியாக
ஒழிந்தபேருயிர்களெல்லாமரக்கருக்குறையும்போதா. (௩ச)

---

* இழை-ஆபரணம். † விளரி-விளரிப்பண்.

காயத்தாற்பெரியர்வீரங்கணக்கிலருலகங்கல்லும்
ஆயத்தார்வரத்தின்றன்மையளவற்றாறிதறேற்றும்
மாயத்தார்நகர்க்கெங்கேனும்வரம்புமுண்டாமேமற்றோர்
தேயத்தார்தேயஞ்சேறசெறுவிலோர்தெருவின்சேறல். (கரு)

கழலிலாக்காலுங்காலவயிலிலாக்கையுங்காந்தும்
அழலிலாக்கண்ணுமில்லாவாடவரில்லையன்னார்
குழலுலாங்களிவண்டார்க்குங்குஞ்சியாற்பஞ்சிகுன்றா
மழலையாழ்க்குதலைச்செவ்வாய்மாதருமில்லைமாதோ. (கசு)

கள்ளூறக்கனிந்த * பங்கியரக்கரைக்கதைத்தகாதல்
புள்ளூறத்தொடர்வமேனிபுலாலூறக்கடிதுபோவ
வெள்ளூறப்பெயிற்றசெய்யதலையனகரியமெய்ய
உள்ளூறக்களித்தகுன்றினுயர்ச்சியவோடையானை. (கஎ)

வள்ளிநுண்மருங்குலன்னவானவர்மகளிருள்ளம்
தள்ளுறப் † பாணிதள்ளாநடம்புரிதடங்கண்மாதர்
வெள்ளிவெண்முறுவலொன்ற ‡ மடந்தையர்வெள்குகின்றார்
கள்ளிசையரக்கர்மாதர்களியிடுகுரலைகாண்பார். (கஅ)

ஒறுத்தலோசிற்சமற்றெம்முயர்படைக்கொருங்கிவ்வூர்வந்
திறுத்தலுமெளிதாமற்றும்யாவர்க்குமியக்கமுண்டே
கறுத்தவாளரக்கிமாருமரக்கருங்கழித்துவீசி
வெறுத்தபூண்வெறுக்கையாலேதாருமிவ்வீதியெல்லாம். (கசு)

வடங்களுங்குழையும்பூணுமாலையுஞ்சாந்தும்யானைக்
கடங்களுங்கலினமா § விலாழியுங்கணக்கிலாத
இடங்களுமிடங்கடோறும்யாற்றொருமெடுத்தவெல்லாம்
அடங்கியதென்னிலென்னேயாழியினாழ்ந்ததுண்டோ. (௪0)

விற்படைபெரிதென்கோயான்வேற்படைமிகுமென்கோயான்
மற்படையுளதென்கோயான்வாட்படைவலிதென்கோயான்
கற்பணந்தண்டுபிண்டிபாலமென்றினையகாந்தும்
நற்படையுடைத்தென்கோயானுயகற்குரைக்குநாளில். (௪க)

என்றனனிலங்கைநோக்கியினையனபலவுமெண்ணி
நின்றவாளரக்கர்வந்துநேரினுநேர்வரென்னத்
தன்றகையனையமேனிசுருக்கியச்சாலச்சாரற்
குன்றிடையிருந்தான்வெய்யோன்குரைகடல்குளிப்பதானன். (௪உ)

* பங்கி-உரோமம். † பாணி-இசைப்பாட்டு. ‡ மடந்தையர்-மூடத்தன்மையுள்ளவர், மடம்-அறியாமையாகலால் மடந்தையரென்றதுதற்குறிப்பு. § விலாழி-வாய்நுரை.

வேறு.

எய்வினை * யிறுதியிற்செல்வமெய்தினன்
ஆய்வினைமனத்திலானறிஞர்சொற்கொளான்
வீவினைநினைக்கிலாதொருவன்மெய்யிலான்
தீவினையெனவிருள்செறிந்ததெங்குமே. (௬௩)

கரித்தமூன்றெயிலுடைக்கணிச்சிவானவன்
எரித்தலையந்தணரிழைத்தயானையை
உரித்தபேருரிவையாலுலகுக்கோருறை
புரித்தனனுமெனப்பொலியும்பொற்பதே. (௬௪)

அணங்கரவரசர்கோனளவிலாண்டெலாம்
பணங்களின்றலைதொறுமுயிர்த்தபாய்விடம்
உணங்கலிலுலகெலாமுறையினுண்டுவெந்
திணங்கெரிபுகையொடுமெழுந்ததென்னவே. (௬௫)

வண்மைநீங்காநெடுமரபின்வந்தவன்
பெண்மைநீங்காதகற்புடையபேதையைத்
திண்மைநீங்காதவன்சிறைவைத்தானெனும்
வெண்மைநீங்கியபுகழ்விரிந்ததென்னவே. (௬௬)

அவ்வழியவ்விருள்பரந்தவாயிடை
எவ்வழிமருங்கினுமரக்கரேகினார்
செவ்வழிமந்திரத்திசையராயினும்
வெவ்வழியிருடரமிதித்துமீச்செல்வார். (௬௭)

இந்திரன்வளநகர்க்கேகுவாரிகற்
சந்திரனுலகினைச்சார்குவார்கலித்
தந்தகனுறையுளையணுகுவாரியல்
வெந்தொழிலரக்கனதேவன்மேயினார். (௬௮)

பொன்னகர்மடந்தையர்விஞ்சைப்பூவையர்
பன்னகவனிதையரியக்கர்பாவையர்
முன்னினபணிமுறைமாறமுந்துவார்
மின்னினமிடைந்தெனவிசும்பின்மீச்செல்வார். (௬௯)

தேவருமவுணருஞ்செங்கணாகரும்
மேவருமியக்கரும்விஞ்சைவேந்தரும்
யாவரும்விசும்பிருளிரியவீண்டினார்
தாவரும்பணிமுறைதழுவுந்தன்மையார். (௭௦)

† சித்திரப்பத்தியிற்றேவர்சென்றனர்
இத்துணைதாழ்ந்தனமுனியுமென்றுதம்

---

* இறுதி—கேடு. † கண்ணிமையாமையால் சித்திரப்பத்தி என்றார்.

முத்தினாரங்களுமுடியின்மாலையும்
உத்தரீயங்களுமிரியவோடுவார். (௫௧)

நீண்டருந்தீவினைநீக்கத்தீர்ந்துபோய்
மாண்டறவுலர்ந்ததுமாருதிப்பெயர்
ஆண்டகைமாரிவந்தளிக்கவாயிடை
ஈண்டறமுளைத்தெனமுளைத்ததிந்துவே. (௫௨)

வந்தனனிராகவன்றூதன்வாழ்ந்தனன்
எந்தையேயிந்திரனுமென் * றேமுறு
அந்தமில்கீட்டிசையளகவாணுதற்
சுந்தரிமுகமெனப்பொலிந்துதோன்றிற்றே. (௫௩)

கற்றைவெண்கவரிபோற்கடலின்வெண்டிரை
சுற்றுநின்றலமரப்பொலிந்துதோன்றிற்றால்
இற்றதெம்பகையெனவிழுந்தவிந்திரன்
கொற்றவெண்குடையெனக்குளிர்வெண்டிங்களே. (௫௪)

தெரிந்தொளிர்திங்கள்வெண்குடத்தினாற்றிரை
முரிந்துயர்பாற்கடன்முகந்துமூரிவான்
சொரிந்ததேயாமெனத்துள்ளிமீனொடும்
விரிந்ததுவெண்ணிலாமேலுங்கீழுமே. (௫௫)

† அருந்தவன்சுரபியேயாதிவானமா
விரிந்தபேருதயமேமடிவெண்டிங்களா
வருந்தலின்முலைகதிர்வழங்குதாரையாச்
சொரிந்தபாலொத்ததுநிலவின்றோற்றமே. (௫௬)

எண்ணுடையநுமன்மேலிழிந்தபூமழை
மண்ணிடைவீழ்கிலமறித்தும்போகில
அண்ணல்வாளரக்கனையஞ்சியாய்சுதிர்
விண்ணிடைத்தங்கினபோன்றமீனெலாம். (௫௭)

எல்லியினிமிரிருட்குறையுமவ்விருள்
கல்வியநிலவின்வெண்முறியுங்கள்வன
புல்லியபகையெனப்பொருவபோன்றன
மல்லிகைமலர்தொறும்பொதிந்தவண்டெலாம். (௫௮)

வீசுறுபசுங்கதிர்க்கற்றைவெண்ணிலா
ஆசறவெங்கணுநுழைந்தளாயது
‡ காசுறுகடிமதிலிலங்கைக்காவலூர்த்
தூசுறையிட்டதுபோன்றுதோன்றிற்றே. (௫௯)

---

* ஏமுறு—சந்தோழமாகி. † அருந்தவன்—ஈண்டுவசிட்டர். ‡ காசு—ரத்னங்கள்.

இகழ்வரும்பெருங்குணத்திராமனெய்ததோர்
பகழியின்செலவெனவநுமன்பற்றினால்
அகழ்புகுந்தரண்புகுந்திலங்கையன்னவன்
புகழ்புகுந்துலாயதோர்பொலிவும்போன்றதே. (௬0)

அவ்வழியநுமனுமணுகலாம்வகை
எவ்வழியென்பதையுணர்வினெண்ணினான்
செவ்வழியொதுக்கினன்றேவரேத்தப்போய்
வெவ்வழியரக்கரூர்மேவன்மேயினான். (௬௧)

வேறு.

ஆழியகழாகவரிதாயமரர்வாழும்
ஏழுலகின்மேலைவெளிகாறுமுகடேறிக்
கேழறியபொன்கொடுசமைத்தகிளர்வெள்ளத்
தாழிதிரிநாளுமுழலையாமதிலையுற்றான். (௬௨)

கலங்கலில்கடுங்கதிர்கண்மீதுகடிதேகா
அலங்கலயில்வஞ்சகனையஞ்சியெனினன்றால்
இலங்கைமதிலிங்கிதனையேறலரிதென்றே
விலங்கியகல்கின்றனன்விரைந்தெனவியந்தான். (௬௩)

தெவ்வளவிலாதவிறைசேறலுளதென்றால்
அவ்வளவதன்றரணமண்டமிடையாக
எவ்வளவிலுண்டுவெளியீறுமதுவென்றே
வெவ்வளவரக்கனைமனக்கொளவியந்தான் (௬௪)

மடங்கலரியேறுமதமால்களிறுநாண
நடந்துதனியேபுகுதுநம்பிநனிமூதூர்
அடங்கரியதானையயிலந்தகனதானைக்
கடுத்திறலின்வாயினையவாயிலெதிர்கண்டான். (௬௫)

மேருவைநிறுத்திவெளிசெய்ததுகொல்விண்ணோர்
ஊர்புகவமைத்தபடிகால்கொலுலகேழும்
சோர்விலநிலைக்கநடுவிட்டதொருதாணோ
நீர்புகுகடற்குவழியோவெனநினைந்தான். (௬௬)

ஏழுலகின்வாழுமுயிர்யாவையுமெதிர்ந்தால்
ஊழின்முறையன்றியுடனேபுகுதலுண்டே
வாழியரியங்குவழியீதெனவகுத்தால்
ஆழியுளவேழினளவன்றுபகையென்றான். (௬௭)

வெள்ளமொருநூறொடொருநூறுமுடைவீரக்
கள்ளவினைவெவ்வலியரக்கரிருக்கையும்

முள்ளெயிறும்வாளுமுறமுன்னமுறைநின்றார்
என்னரியகாவலினையண்ணலுமெதிர்ந்தான். (௬௮)

சூலமழுவாளொடயிறோமரமுலக்கை
காலவறிவிற்பகழிகற்பணமுசண்டி
கோல்கணையநேமிகுலிசஞ்சுரிகைகுந்தம்
வாலமுதலாயுதம்வலித்தனர்வலத்தார். (௬௯)

அங்குசநெடுங்கவணயிற்சிலைவழங்கும்
வெங்குசைசயபாசமுதல்வெய்யபயில்கையார்
செங்குருதியன்னசெறிகுஞ்சியர்சினத்தோர
பங்குனிமலர்ந்தொளிர் * பலாசவனமொப்பார். (௭0)

அளக்கவரிதாகியகணக்கொடயனிற்கும்
விளக்கினமிருட்டனைவிழுங்கிவெளிகால
உளக்கடியகாலனமமைமுட்குமணிவாயில்
இளக்கமில்கடற்படையிருக்கையையெதிர்ந்தான். (௭௧)

எவ்வமரரெவ்வுண † ரெவ்வருளரென்னே
கவ்வைமுதுவாயிலினெங்கடைகடப்பார
தெவ்வரிவர்சேமமிதுசேவகனும்யாமும்
வெவ்வமர்தொடங்கிடினொய்விளையுமென்றான். (௭௨)

கருங்கடல்கடப்பதரிதன்றுநகர்காவற்
பெருங்கடல்கடப்பதரிதெண்ணமிறைபேரின்
அருங்கடன்முடிப்பதரிதாமமர்கிடைக்கின்
நெருங்கமர்கிடக்குநெடுநாளெனநினைந்தான். (௭௩)

வாயில்வழிசேரலரிதன்றியும்வலத்தோர்
ஆயிலவர்வைத்தவழியேகலழ ‡ கன்றால்
காய்கதிரியக்கின்மதிலைக்கடிதுதாவிப்
போயிநகர்புக்கிடுவெனென்றொரயல்போனான். (௭௪)

வேறு.

நாணுளுந்தானல்கியகாவனனி $ மூதூர்
வாணுளந்நாள்போவதின்மேலேவழிநின்றாள்
தூணுமென்னுந்தோளுடையானைசசுடரோனைக்
காணுவந்தகட்செவியென்னக்கனல்கண்ணாள். (௭௫)

---

* பலாசவனம்-செம்முருக்கவனம். † எவர்—எவ்வரெனவிரித்தல் விகாரம்.

‡ அன்று—ஒருமைமுடிபு, அல்ல பன்மைமுடிபு, என்பதுணர்க.

$ மூதூர்வாழ்நாளன்னள் என்றும் பாடம் பெரியவரிலே வர்த்திக்கிறகாலத்தில் அந்நாள் என்றும் அவ்வூருக்கு ஆயுள்போன்றவள் என்றும் ஆகவே இவள் முடிந்தால் அவ்வூரும் முடிந்தழியுமென்பது கருத்து.

எட்டுத்தோளானாறுமுகத்தானுலகேழும்
தொட்டுப்பேருஞ்சோதிநிறத்தாள்சுழல்கண்ணாள்
முட்டிப்பேரின் * மூவுலகத்தைமுதலோடும்
கட்டிச்சீறுங்காவல்வலத்தாள் † கமையில்லாள். (எசு)

பாராநின்றாளெண்டிசைதோறும்பலரப்பால்
வாராநின்றாரோவெனமாரிமழையேபோல்
ஆராநின்றானூபுரமச்சந்தருதாளாள்
வேராமெய்யாண்மின்னினிமைக்குமிளிபூணாள். (எஎ)

வேல்வாள்சூலம்வெங்கதைபாசம் ‡ விளிசங்கம்
கோல்வாள்குந்தங்கொண்டகரத்தாள்வடகுன்றம்
போல்வாடிங்கள்போழினெயிற்றாள்புகைவாயில்
கால்வாள்காணிற்காலனுமுட்குங்கதமிக்காள். (எஅ)

$ அஞ்சுவணத்தினுடையுடுத்தாளரவெல்லாம்
¶ அஞ்சுவணத்தின்வேகமிகுத்தாளருளில்லாள்
§ அஞ்சுவணத்தினுத்தரியத்தாளலையாரும்
0 அஞ்சுவணத்தின்முத்தொளிராரத்தணிகொண்டாள். (எகூ)

சிந்தாரத்தின்செச்சையணிந்தாடெளிநூல்யாழ்
அந்தாரத்தினேர்வருசொல்லாளறைதும்பி
கந்தாரத்தினின்னிசைபாடிக்களிகூரும்
மந்தாரத்தின்மாலையலம்புமகுடத்தாள். (அ0)

எல்லாமுட்குமாழியிலங்கையிகன்மூதூர்
நல்லாளவ்வூர்வைகுறையொக்குநயனத்தாள்
நில்லாய்நில்லாயென்றுரைநோவாணிலையாமுன்
வல்லேசென்றாண்மாருதிகண்டான்வருகென்றான். (அக)

ஆகாசெய்தாயஞ்சலைபோலுமறிவில்லாய்
சாகாமூலந்தின்றுழல்வார்பாற்சலமென்னும்
பாகாரிஞ்சிப்பொன்மதிறாவிப்பதையாதே
போகாவென்றாள்பொங்கனலென்னப்புகைகண்ணாள். (அஉ)

களியாவுள்ளத்தண்ணன்மனத்திற்கதமூழ்க
விளியாநின்றேநீதிநலத்தின்வினையோர்வான்
அளியாலிவ்வூர்காணுநலத்தினணைகின்றேன்
எளியேனுற்றால்யாவதுனக்கிங்கிழவெனறான். (அங)

---

* மூவுலகத்தை-இராவணனுடைய உட்கோட்டையான மூன்றரணையும்.
† கமை-பொறுமை. ‡ விளி-ஒலிக்கின்ற. $ அஞ்சுவண்ணத்தின்-பஞ்சவர்ணங்களுள்ள. ¶ அஞ்சஉவணத்தின்-பயப்படும்படியான கருடனைப்போல. § அம்சுவணத்தின்-அழகான சுவர்ணத்தாலான. 0 அம்சுவள்நத்தின்-நீரிலுள்ள நல்ல பிரகாசமுடைய சங்கிலுண்டான.

என்னாமுன்னமேகெனவேகாதெதிர்மாற்றம்
சொன்னாயேநீயாவனடாதொல்புரமாட்டான்
அன்னாரேனுமஞ்சுவரெய்தற்களியுற்றால்
உன்னாலெய்துமூர்கொலிவ்வூரென்றுநக்காள். (௮௪)

நக்காளைக்கண்டையன்மனத்தோர்நகைகொண்டான்
நக்காய்நீயார்யார்சொலவந்தாயுனதாவி
உக்காலேதாமோடலையென்றாளினியிவ்வூர்
புக்காலன்றிப்போகிலெனென்றான்புகழ்கொண்டான். (௮௫)

வஞ்சங்கொண்டான்வானரமல்லன்வருகாலன்
துஞ்சுங்கண்டாலென்னையிவன்சூழ்திரையாழி
நஞ்சங்கொண்டகண்ணுதலைப்போனகுகின்றான்
நெஞ்சங்கண்டேகல்லெனநின்றேநினைவுற்றாள். (௮௬)

கொல்வாமன்றேற்கோளுறுமிவ்வூரெனல்கொண்டாள்
வெல்வாய்நீயேவென்றியெனத்தன்விழிதோறும்
வல்வாய்தோறும்வெங்கனல்பொங்கமதில்வாயில்
செல்வாயென்னாமூவிலைவேலைச்செலவிட்டாள். (௮௭)

தடித்தாமென்னத்தன்னெதிர்செல்லுந்தழல்வேலைக்
கடித்தானுகம்விண்ணின்முரிக்குங்கருளன்போல்
ஒடிததான்கையாலும்பருவப்பவுயர்காலம்
பிடித்தாணெஞ்சந்துண்ணெனவெண்ணம்பிழையாதான். (௮௮)

இற்றுச்சூலநீறெழுகாலத்தெரியொப்பாள்
மற்றுத்தெய்வபல்படைகொண்டுமலைவாண்மேல்
உற்றுக்கையாலாயுதமெல்லாமொழியாமல்
பற்றிக்கொள்ளாவிண்ணிலெறிந்தான்பழியோர்வான். (௮௯)

வழங்குந்தெய்வப்பல்படைகாணுமலைவான்மேல்
முழங்கும்மேகமென்னவுரப்பிமுதிர்கின்றாள்
கழங்கும்பந்துங்குன்றுகொடாடுங்கரமோச்சித்
தழங்குஞ்செந்தீச்சிந்தவடித்தா * டகவில்லாள். (௯௦)

அடியாமுன்னமங்கையனைத்துமொருகையால்
பிடியாவன்னேபெண்ணிவள்கொல்விற்பிழையென்னா
ஒடியாநெஞ்சத்தோரடிகொண்டானுயிரோடும்
இடியேறுண்ட † நாகமெனப்பாரிடைவீழ்ந்தாள். (௯௧)

விழுந்தாணொந்தாள்வெங்குருதிச்செம்புனல்வெள்ளத்
தழுந்தாநின்றாளன்முகனார்தம்மருளன்றி

* தகவில்லாள்-புத்தியில்லாதவள். † நாகம்-மலை.

எழுந்தாள்யாரும்யாவையுமெல்லாவுலகத்தும்
தொழுந்தாள்வீரன்றூதுவன்முன்னின்றிவைசொன்னாள். (௬௨)

வேறு.

ஐயகேள்வையநல்குமயனருளமைதியாக
எய்தியிம்மூதூர்காப்பெனிலங்கைமாதேவியென்பேர்
செய்தொழிலிழுக்கியுள்ளந்திகைத்திந்தச்சிறுமைசெய்தேன்
உய்தியென்றளிதியாயினுணர்த்துவலுண்மையென்றாள். (௬௩)

எத்தனைகாலங்காப்பல்யானிந்தமூதூரென்று
* முத்தனைவினவினேற்குமுரண்வலிக்குரங்கொன்றுன்னைக்
கைத்தலமதனாற்றீண்டிக்காய்ந்தவன்றெனக்காண்டி
சித்திரநகரம்பின்னைச்சிதைவதுதிண்ணமென்றான். (௬௪)

அன்னதேமுடிந்ததையவறமவெல்லும்பாவந்தோற்கும்
என்னுமீதியம்பவேண்டுந்தகையதோவினிமற்றுன்னால்
உன்னியவெல்லாமுற்றுமுனக்குமுற்றாததுண்டோ
பொன்னகர்புகுதியென்னாப்புகழ்ந்தவளிறைஞ்சிப்போனாள். (௬௫)

வீரனும்விரும்பிநோக்கிமெய்ம்மையேவினையுமஃதென்
றாரியன்கமலபாதமகத்துறவணங்கியாண்டப்
பூரியரிலங்கைமூதூர்ப்பொன்மதிறாவிப்புக்கான்
சீரியபாலின்வேலைசிறுபிரைதெறித்ததன்னான். (௬௬)

† வான்றொடர்மணியிற்செய்தமையறுமாடகோடி
ஆன்றபேரிருளைச்சீத்துப்பகல்செய்தவழகைநோக்கி
ஊன்றியவுதயத்துச்சியொற்றைவாலுருளைத்தேரோன்
தோன்றினன்கொல்லோவென்னாவறிவனுந்துணுக்கங்கொண்டான்.

மொய்ம்மணிமாடமூதூர்முழுதிருளகற்றுந்தானே
மெய்ம்மையேயுணரினாணுமிகையெனவிலங்கிப்போனான்
இம்மதிலிலங்கைநாப்பணையதுமேற்றன்பாலெய்து
மிம்மினியல்லனோவவ்வெயிற்கதிர்வேந்தனென்றான். (௬௮)

பொசிவுறுபசும்பொற்குன்றிற்பொன்மதினடுவட்பூத்து
வசையறவிளங்குஞ்சோதிமணியினாலமைந்தமாடத்
தசைவிலவிலங்கைமூதூராரிருளின்மையாலே
‡ நிசிசரராயிற்றம்மாநெடுநகர்சிருதரெல்லாம். (௬௯)

என்றனணியம்பிவீதியேகுதலிழுக்கமென்னாத்
தன்றகையனையமேனிசுருக்கிமாளிகையின்சாரல்

---

* முத்தனை—பிரமனை. † வான்றொடர்மணி-வானிலேசெல்லுகிறதினாலே அந்தரமணி, விண்மணியென்று சூரியனுக்குப்பெயர்.
‡ நிசிசரர்-இராக்காலத்திலும் சஞ்சரிக்கிறவர்கள்.

சென்றனனென்பமன்னோதேவருக்கமுதமீந்த
குன்றெனவயோத்திவேந்தன் புகழெனக்குவவுத்தோளான். (௪00)

ஆத்துறுசாலைதோறுமானையின் கூடந்தோறும்
மாத்துறுமாடந்தோறுமவாசியின் பந்திதோறும்
காத்துறுகடைகடோறுங்கருங்கடல்கடந்தகாலால்
பூத்தொறுமவாவிச்செல்லும்பொறிவரிவண்டிற்போனான். (௪0௧)

பெரியநாளொளிகொணாவிதமணிப்பித்திப்பத்தி
சொரியுமாநிழல்களாங்குச்சுற்றலாற்காலின்றோன்றல்
கரியனாய்வெளியனாகிச்செய்யனாய்க்காட்டுங்காண்டற்
கரியனாயெளியனாய்த்தன்னகத்துறையழகனேபோல். (௪0௨)

கானகமயில்களென்னக்களி * மடவன்னமென்ன
ஆனனகமலப்போதுபொலிதரவரக்கர்மாதர்
தேனுகுசரளச்சோலை † தெய்வநீராற்றிற்றெண்ணீர்
வானவர்மகளிராட்டமஞ்சனமாடுவாரை. (௪0௩)

ஈட்டுவார்தவமலான்மற்றீட்டினாலியைவதின்மை
காட்டினார்விதியாரஃதுகாண்கிற்பார்க்காண்மினம்மா
பூட்டுவார்முலைபொறாதபொய்யிடைநையப்பூநீர்
ஆட்டுவாரமராமாதராடுவாரரக்கர்மாதர். (௪0௪)

‡ இலக்கணமரபிற்கேற்றவெழுவகைநரம்பினல்யாழ்
அலத்தகத்தளிர்க்கைநோவவளந்தெடுத்தமைந்தபாடல்
கலக்குறமுழங்கிற்றென்றுசேடியர்கன்னிமார்கள்
மலர்க்கையான்மாடத்தும்பர்மழையின்வாய்பொத்துவாரை. (௪0௫)

சந்தப்பூம்பந்தர்வேய்ந்ததமனியவரங்கிற்றத்தம்
சிந்தித்ததுவுந்தெய்வமணிவிளக்கொளிருஞ்சேக்கை
வந்தொத்துந்துரிதமாக்கள்விளயபிதநெறிவழாமை
கந்தர்ப்பமகளிராடுநாடகங்காண்கின்றாரை. (௪0௬)

திருத்தியபளிக்குவேதித்தெள்ளியவேல்களென்னக்
கருத்தியல்புரைக்குமுண்கட்கருங்கயல்செம்மைகாட்ட
வருத்தியகொழுநர்தம்பால்வரம்பின்றிவளர்ந்தகாம
வருத்தியபயிர்க்குநீர்போலருநறவருந்துவாரை. (௪0௭)

கோதறுங்குவளைநாட்டங்கொழுநர்கணாட்டங்கொள்ளத்
தூதுளங்கனியைவென்றதுவர்த்தவாய்வெண்மைதோன்ற
மாதருமைந்தர்தாமுமொருவர்மேலொருவர்வைத்த
காதலங்கள்ளுண்டார்போன்முறைமுறைகளிக்கின்றாரை. (௪0௮)

---

* மடவன்னம்-முக்தபருவமுள்ள அம்சம். † தெய்வநீர்-தெய்வத்தன்மை.
‡ இலக்கணமரபு—இலக்ஷணக்ரமம்.

* விற்படர்பவளப்பாதத்தலத்தகமெழுதிமேனி
பொற்பளவில்லாவாசப்புனைநறுங்கலவைபூசி
அற்புதவடிக்கண்வாளினஞ்சனமெழுதியந்தில்
கற்பகங்கொடுக்கவாங்கிக்கலன்றெரிந்தணிகின்றாரை. (௧௦௯)

புலியடுமெதுகைமைந்தர்புதுப்பிழையுயிரைப்புக்கு
நலிவிடவமுதவாயானச்சுயிர்த்தயிற்கணல்லார்
மெலிவுடைமருங்குன்மின்னினலமரச்சிலம்புவிம்மி
ஒலிபடவுதைக்குந்தோறுமயிர்புளகுதிக்கின்றாரை. (௧௧௦)

உள்ளுடைமயக்காலுண்கண்சிவந்துவாய்வெண்மையூறித்
துள்ளிடைப்புருவங்கோட்டித்துடிப்பவேர்பொடிப்பத்தூய
வெள்ளிடைமருங்குலார்தம்மதிமுகம்வேறொன்றாகிக்
கள்ளிடைத்தோன்றநோக்கிக்கணவரைக்கவல்கின்றாரை. (௧௧௧)

ஆலையின்மலையின்சாரன்முழையினிலமுதவாரிச்
சோலையிற் † றுவசரில்விற்சோனகர்மனையிற்றூய
வேலையிற்கொளவொண்ணதவேற்கணார்குமுதச்செவ்வாய்
வாலெயிற்றூறுதீந்தேன்மாந்தினர்மயங்குவாரை. (௧௧௨)

நலனுறுகணவர்தம்மைநவையுறப்பிரிந்துநல்கு
முலையுறுகலவைதீயமுள்ளிலாமுளரிச்செங்கேழ்
மலர்மிசைமலர்பூத்தென்னமலர்க்கையால்வதனந்தாங்கி
உலவருமுயிரினோடுநெடிதிரிந்துயிர்க்கின்றாரை. (௧௧௩)

ஏதியங்கொழுநர்தம்பாலெய்தியசலத்தர்வைகும்
தாதியங்கமளிச்சேக்கையுயிரிலாவுடலிற்சார்வார்
மாதுயர்க்காதறாண்டவழியின்மேல்வைத்தகண்ணார்
தூதியர்முறுவனோக்கியுயிர்வந்துதுடிக்கின்றாரை (௧௧௪)

சங்கொடுசிலம்புநூலும் ‡ பாதசாலகமுந்தாழப்
பொங்குபன்முரசமார்ப்பவில்லுறைதெய்வம்பேணிக்
கொங்கலர்கூந்தற்செவ்வாயரம்பையர்பாணிகொட்டி
மங்கலகீதம்பாடமறிப்பலிவகுக்கின்றாரை. (௧௧௫)

இழைதொடர்வில்லும்வாளுமிருளொடுமலையயாணர்க்
§ குழைதொடர்நயனக்கூர்வேல்குமரர்நெஞ்சுருவக்கோட்டி
முழைதொடர்சங்கம்பேரிமுகிலெனமுழங்கமூரி
மழைதொடர்மஞ்ஞையென்னவிழாவொடுவருகின்றாரை. (௧௧௬)

பள்ளியின்மைந்தரோடுமூடியபண்புநீங்கி
ஒள்ளியகலவிப்பூசலுடற்றுதற்குருத்தநெஞ்சர்

---

* விற்படர்-ஒளிபரவுவதான. † துவசர்—சாணார். ‡ பாதசாலகம்—பாதசரம்.
§ குழை—குண்டலமணிந்தகாதென்க.

மெள்ளவேயிமையைநீக்கியஞ்சனவிழுதுவேய்ந்த
கள்ளவாணெடுங்கணென்னும்வாளுறைகழிக்கின்றாரை. (௧௧௭)

ஓவியமனையமாதருடினருணர்வோடுள்ளம்
மேவியகரணமற்றுங்கொழுநரோடொழியயாணர்த்
தூவியம்பேடையென்னமின்னெனத்துவளவேகி
ஆவியுந்தாமுமேசென்றருங்கதவடைக்கின்றாரை. (௧௧௮)

* கின்னரமிதுனம்பாடவெண்மழைகிழித்துத்தோன்று
மின்னெனத்தளம்வேய்ந்தவெண்ணிறவிமானமூர்ந்து
பன்னகமகளிர்சுற்றிப்பலாண்டிசைபரவப்பண்ணைப்
பொன்னகர்வீதிதோறும்புதுமனைபுகுகின்றாரை. (௧௧௯)

கோவையுங்குழையுமின்னக்கொண்டலின்முரசமார்ப்பத்
தேவர்வந்தாசிகூறமுனிவர்சோபனங்கள்செப்பப்
பாவையர்குழாங்கள்சூழப்பாட்டொடுவானநாட்டுப்
பூவையர்பலாண்டுகூறப்புதுமணம்புணர்கின்றாரை. (௧௨0)

இயக்கியரரக்கிமார்களுகியரெஞ்சில்விஞ்சை
முயற்கறைமலராத்திங்கண்முகத்தியர்முதலினோரை
மயக்கறநாடியேகுமாருதிமலையின்வைகும்
கயக்கமிறுயிற்சிக்கும்பகருணனைக்கண்ணிற்கண்டான். (௧௨௧)

வேறு.

ஓசனையேழகன்றுயர்ந்தவும்பரின்
வாசவன்மணிமுடிகவித்தமண்டபம்
ஏசறவிளங்கியதிருளெயெண்வகை
† ஆசையினிலைகெடவலைக்கலான்றது. (௧௨௨)

அன்னதனடுவணோரமளிமீமிசைப்
பன்னகவரசெனப்பரவைதானெனத்
துன்னிருளொருவழிதொக்கதாமென
உன்னருந்தீவினையுருக்கொண்டென்னவே. (௧௨௩)

முன்னியகலைகடன்முழுகிமூவகைத்
தன்னியல் ‡ கதியொடுதழுவித்தாதகு
மன்னெடுங்கற்பகவனத்துள்வைகிய
இன்னிளந்தென்றல்வந்திழுகியேகவே. (௧௨௪)

வானவர்மகளிர்கால்வருடமாமதி
ஆனனங்கண்டமண்டபத்துளாய்கதிர்க்

---

* கின்னரமிதுனம்-இரட்டைக்கின்னரம். † ஆசையினிலைகெட-திக்குகளினும்நிலை யில்லாமற்போக.

‡ கதிமூன்று அதாவது மந்தகதி, தீவிரகதி, அதிதீவிரகதி.

கானகுகாந்தமீக்கான்றகாமர்நீர்
தூங்கிறநறுந்தளிமுகத்திற்றோற்றவே. (௧௨௫)

மூசியவுயிர்ப்பெனுமுடுகுவாதமும்
வாசலின்புறத்திடைநிறுவிவன்மையான்
நாசியினளவையினடத்தக்கண்டவன்
கூசினன்குதித்தனன்விதிர்த்தகையினான். (௧௨௬)

பூழியின்றொகைவிசும்பணவப்போய்ப்புகும்
கேழில்வெங்கிளர்கிடையுயிர்ப்புக்கேடிலா
வாழியவுலகெலாந்துடைக்குமாருதம்
ஊழியின்வரவுபார்த்துழல்வதொத்ததே. (௧௨௭)

பகையெனமதியினைப்பகுத்துப்பாடுற
வகையில்பேழ்வாய்மடுத்தருந்துவானெனப்
புகையொடுமுழங்குபேருயிர்ப்புப்பொங்கிய
நகையிலாமுழுமுகத்தெயிறுநாறவே. (௧௨௮)

தடைபுகுமந்திரந்தகைந்தநாகம்போல்
இடைபுகலரியதோருறக்கமெய்தினான்
கடையுகமுடிவெனுங்காலம்பார்த்தயல்
புடைபெயராநெடுங்கடலும்போலவே. (௧௨௯)

வேறு.

ஆவதாகியதன்மையவரக்கனையரக்கர்
கோவெனாநின்றகுணமிலியிவனெனக்கொண்டான்
காவனாட்டங்கள்பொறியுகக்கனலெனக்கனன்றான்
ஏவனோவிவன்மூவரினொருவனாமீட்டான். (௧௩௦)

குறுகிநோக்கிமற்றவன்றலையொருபதுங்குறித்த
இறுகுதிண்புயமிருபதிங்கிவனிலனென்னா
மறுகியேறியமுனிவெனும்வடவைவெங்கனலை
அறிவெனும்பெரும்பரவையம்புனலினாலவித்தான். (௧௩௧)

அவித்துநின்றவனாயினுமாகவென்றங்கை
கவித்துநீங்கிடச்சிலபகவென்பதுகருதாச்
செவிக்குத்தேனெனவிராகவன்புகழினைத்திருத்தும்
கவிக்குநாயகனனையவனுறையுளைக்கடந்தான். (௧௩௨)

மாடகூடங்கண்மாளிகையோளிகைமகளிர்
ஆடரங்குக * ளம்பலந்தேவராலயங்கள்
பாடல்வேதிகைபட்டிமண்டபமுதற்பலவும்
நாடியேகினனிராகவன்புகழெனுநலத்தான். (௧௩௩)

* அம்பலம்-பொதுச்சாவடி.

மணிகொள் * வாயிலுட்சாளரத்தாள்களின்மலரில்
கணிகொளுளத்திற்காலினும்புகையினுங்கலக்கும்
நுணுகும்வீங்குமற்றவனிலையாவரோநுவல்வார்
அணுவின்மேருவினுழியானெனச்செலுமநுமன். (௧௫௪)

எந்தலிவ்வகையெவ்வழிமருங்கினுமெய்திக்
காந்தண்மெல்விரன்மடந்தையர்யாரையுங்காண்பான்
வேந்தர்வேதியர்மேலுளோர்கீழுளோர்விரும்பப்
போந்தபுண்ணியன்கண்ணகன்கோயிலுட்புக்கான். (௧௫௫)

பளிக்குவேதிகைப்பவளத்தின்கூடத்திற்பசுந்தேன்
துளிக்குங்கற்பகப்பந்தரிற் † கருநிறத்தோரை
வெளித்துவைகுவதரிதெனவவருருமேவி
ஒளித்துவாழ்கின்றதருமமன்னன்றனையுற்றான். (௧௫௬)

உற்றுநின்றவனுணர்வைத்தன்னுணர்வினாலுணர்ந்தான்
குற்றமில்லதோர்குணமுளனிவனெனக்கொண்டான்
செற்றநீங்கியமனத்தினனொருசிறைசென்றான்
பொற்றைமாடங்கள்கோடியோர்நொடியிடைப்புக்கான். (௧௫௭)

முந்தரம்பையர்முதலினர்முழுமதிமுகத்துச்
சிந்துரம்பயில்வாய்ச்சியர்யாரையுந்தெரிந்து
மந்திரம்பலகடந்தவன்மனத்தின்முன்செல்வான்
இந்திரன்சிறையிருந்தவாயிலின்கடையெதிர்ந்தான். (௧௫௮)

எதியேந்தியதடக்கையர்பிறையெயிறிலங்க
மூதுரைப்பெருங்கதைகளும்பிதிர்களுமொழிவார்
ஓதிலாயிரமாயிரமுணர்விலியரக்கர்
காதுவெஞ்சினக்களியினர்காவலைக்கடந்தான். (௧௫௯)

முக்கணோக்கினன்முதன்மகனறுவகைமுகனும்
திக்குநோக்கியபுயங்களுஞ்சிலகரந்தனையான்
ஒக்கநோக்கியர்குழாத்திடையுறங்குகின்றானைப்
புக்குநோக்கினன்புகைபுகாவாயிலும்புகுவான். (௧௬௦)

வளையும்வாளெயிற்றரக்கனேகணிச்சியான்மகனோ
அளையில்வாளரியனையவன்யாவனோவறியேன்
இளையவீரனுமேந்தலுமிருவரும்பலநாள்
உளையவுள்ளபோரிவனொடுமுளதெனவுணர்ந்தான். (௧௬௧)

இவனையின்றுணையுடையபோரிராவணனென்னே
புவனமூன்றையும்வென்றதோர்பொருளெனப்புகறல்

---

* வாயில்-இல்வாய் முன்றில்-இல்முன் எனப்போல், † கருநிறத்தோரைஒளித்தெ னக்கூட்டி கருநிறத்தோருக்குப் பயந்து மறைந்துவைகியதருமம்எனக்கொள்க.

சிவனைநான்முகத்தொருவனைத்திருநெடுமாலாம்
அவனையல்லவர்நிகர்ப்பவரென்பதுமறிவோ. (கசஉ)

என்றுகைம்மறித்திடைநின்றுகாலத்தையிகப்ப
தன்றுபோவதென்றாயிரமாயிரத்தடங்காத்
துன்றுமாளிகையோளிகரிசறத்துருவிச்
சென்றுதேடினனிந்திரசித்தினைத்தீர்ந்தான் (கசங)

அக்கன்மாளிகைகடந்துபோய்மேலதிகாயன்
தொக்ககோயிலும்பொருநர்களில்லமுந்துருவித்
தக்கமந்திரத்தலைவர்கண்மனைகளுந்தாவிப்
புக்குநீங்கினனிராகவன்கழலெனப்புகழோன். (கசச)

இன்னராமிரும்பெரும்படைத்தலைவர்களிருக்கைப்
பொன்னின்மாளிகையாயிரகோடியும்புக்கான்
* கன்னிமாநகர்ப்புறத்தகன்கரந்துறைகாண்பான்
சொன்னமூன்றினுநடுவணாத்தகழியைத்தொடர்ந்தான். (கசரு)

தனிக்கடக்களிறெனவொருதுணையிலான்றூய
பனிக்கடற்பெருங்கடவுடன்பரிபவந்துடைப்பான்
இனிக்கடப்பதன்றேழ்கடல்கிடந்ததென்றிசைத்தான்
கனிக்கடற்கதிர்தொடர்ந்தவனகழியைக்கண்டான். (கசசா)

பாழிநன்னெடுங்கிடங்கெனப்பகர்வரேற்பல்லோர்
ஊழிகாலநின்றுலகெலாங்கல்லினுமுலவா
ஆழிவெஞ்சினத்தரக்கனையஞ்சியாழ்கடல்கள்
எழுமிந்நகர்சுலாயதுகொலாமெனவிசைத்தான். (கசஎ)

ஆயதாகியவகன்புனலகழியையடைந்தான்
தாயவேலையினிருமடிவிசைகொடுதாவிப்
போயகாலத்தும்போக்கரிதென்பதுபுகன்றான்
நாயகன்புகழ்கடந்தபேருலகெலாநடந்தான். (கசஅ)

வேறு.

மேக்குநால்வகைமேகமுங்கீழ்விழத்
தூக்கினாலன்னதோயத்ததாய்த்துயர்
ஆக்கினான்படையன்னவகழியை
வாக்கினாலுரைவைக்கலுமாகுமோ. (கசகூ)

ஆனைமும்மதமும்பரியாழியும்
வானமங்கையர்குங்குமவாரியும்
நானமாதர்நறக்குழலாவியும்
தேனுமாரமுந்தேய்வையுநாறுமால். (கரு0)

* கன்னி-அழியாத.

உன்னுநாரைமகன்றிபுதாவுளில்
அன்னங்கோழிவண்டானங்களாழிப்புள்
கின்னரங்குரண்டங்கிலுக்கஞ்சிரல்
சென்னங்காகங்குணாலஞ் * சிலம்புமே. (௧௫௧)

நலத்தமாதர்நறையகிறைவியும்
அலத்தகக்குழம்புஞ்செறிந்தாடிய
விலக்கணக்கரியோடிளமென்னடைக்
குலப்பிடிக்குமோருடல்கொடுக்குமால். (௧௫௨)

நறவுநாறியநாணறுந்தாமரை
துறைகடோறுமுகிழ்த்தனதோன்றுமால்
சிறையினெய்தியசெல்விமுகத்தினோ
† டுறவுதாமுடையாரொடுங்கார்களோ. (௧௫௩)

பளிங்குசெற்றிக்குயிற்றியபாயொளி
விளிம்பும்வெள்ளமுமெய்தெரியாதுமேல்
தெளிந்தசிந்தையருஞ்சிறியார்களோ
டளிந்தபோதறிதற்கெளிதாவரோ (௧௫௪)

நீலமேமுதனன்மணிநித்திலம்
மேலகீழபல்வேறொளிவீசலால்
பாலின்வேலைமுதற்பலவேலையும்
கால்கலந்தனவோவெனக்காட்டுமே. (௧௫௫)

அன்னவேலையகழியையார்கலி
என்னவேகடந்திஞ்சியும்பிற்படத்
துன்னருங்கடிமாநகர்துன்னினான்
பின்னரெய்தியதன்மையும்பேசுவாம். (௧௫௬)

கரியநாழிகைபாதியிற்காலனும்
வெருவியோடுமரக்கர்தம்வெம்பதி
ஒருவனே ‡ யொருபன்னிருயோசனைத்
தெருவுமும்மைநூறாயிரந்தேடினான். (௧௫௭)

வேறு.

வேரியுமடங்கின $ நெடுங்கடல்விளம்பும்
§ பாரியுமடங்கினதடங்கியதுபாடல்
காரியமடங்கினர்கள்கம்மியர்கண்மும்மைத்
தூரியமடங்கினதொடங்கியதுறக்கம். (௧௫௮)

---

* சிலம்பும்-ஒலிக்கும். † உறவு-ஒப்பு. ‡ ஒரு-ஒப்பற்ற.
$ நெடுங்கடல் என்றதனானே நீண்டவீதிகளெல்லாம் ஜனசந்தடி அடங்கின என்க.
§ பாரித்தல் - பரவுதல்—பாரி முதனிலைத்தொழிற்பெயர்.

இறங்கினநிறங்கொள்பரியேமமுறவெங்கும்
கறங்கினமறங்கொளெயில்காவலர்துடிக்கண்
பிறங்கினர்நறுங்குழலரன்பர்பிரியாதோர்
உறங்கினர்பிணங்கியெதிரூடினவரல்லார். (௧௪௯)

வடந்தருகடங்கொள்புயமைந்தர்கலவிப்போர்
கடந்தனரிடைந்தனர்களித்தமயில்போலும்
மடந்தையர்கடந்தனமுகட்டிடைமயங்கிக்
கிடந்தனர்நடந்ததுபுணர்ச்சிதருகேதம். (௧௫௦)

வாமநறையின்றுறைமயங்கினர்மறந்தார்
காமநறையின்றிறதுகர்ந்தனர்களித்தார்
பூமனறைவண்டறையலங்கமளிபுக்கார்
தூமநறையின்றுறைபயின்றிலர்துயின்றார். (௧௫௧)

பண்ணிமையடைத்தபலகட்பொருநர்பாடல்
விண்ணிமையடைத்தனவிளைந்ததிருள்வீணைத்
தண்ணிமையடைத்தனதழங்கிசைவழங்கும்
கண்ணிமையடைத்தனவடைத்தனகபாடம். (௧௫௨)

விரிந்தனநரந்தமுதல்வெண்மலர்விளாகத்
துரிஞ்சவருதென்றலுயிரின்புடையுலாவச்
சொரிந்தனகருங்கண்வருதுள்ளிதருவெள்ளம்
எரிந்தனபிரிந்தவர்தமெஞ்சுதலினெஞ்சம். (௧௫௩)

இளக்கரிழுதெஞ்சவிழுமெண்ணருவிளக்கைத்
துளக்கியதுதென்றல்பகைசோரவுயர்வோரின்
அளக்கரொடளக்கரியவாசையுறவீசா
விளக்கினம்விளக்குமணிமெய்யுறவிளக்கம். (௧௫௪)

நித்தநியமத்தொழிலராய்நிறையுஞானத்
துத்தமருறங்கினர்கள்யோகியர்துயின்றார்
மத்தமதவெங்களிறுறங்கினமயங்கும்
பித்தருமுறங்கினரினிப்பிறரிதென்னும். (௧௫௫)

ஆயபொழுதம்மதிலகத்தரசர்வைகும்
தூயதெருவொன்றொடொருகோடிதிருவிப்போய்த்
தீயவனிருக்கையயல்செய்தவகழிஞ்சி
மேயதுகடந்தனன் * வினைப்பகையைவென்றான். (௧௫௬)

வேறு.

போரியற்கையிராவணன்பொன்மனை
சீரியற்கைநிரம்பியதிங்களாத்

* வினைப்பகை—தீவினைச்செய்கைகளான காமக்குரோதங்கள்.

தாரகைக்குழுவிற்றழுவித்தொடர்
நாரியர்க்குறைவாமிடநண்ணினன். (௧௬௭)

முயற்கருங்கறைநீங்கியமொய்மதி
அயர்க்கும்வாண்முகத்தாரமுதன்னவர்
இயக்கர்மங்கையர்யாவருமீண்டினர்
நயக்குமாளிகைவீதியைநண்ணினன். (௧௬௮)

தழைந்தமொய்யொளிபெய்மணித் * தாழ்தொறும்
இழைத்தநூலினுமின்னிளங்காலினும்
நுழைந்துநொய்தினின்மெய்யுறநோக்கினன்
விழைந்தவெவ்வினைவேரறவீசினன். (௧௬௯)

அத்திரம்புனையானையரக்கன்மேல்
வைத்தசிந்தையர்வாங்குமுயிர்ப்பினர்
பத்திரம்புரைநாட்டம்பதைப்பறச்
சித்திரங்களெனவிருந்தார்சிலர். (௧௭௦)

வள்ளல்வெஞ்சரமாரனையஞ்சியோ
மெள்ளவேகனவின்பயன்வேண்டியோ
கள்ளமென்கொலறிந்திலங்கண்முகிழ்த்
துள்ளமின்றியுறங்குகின்றார்சிலர். (௧௭௧)

பழுதின்மன்மதன்வெங்கணைபன்முறை
உழுதகொங்கையருசலுயிர்ப்பினர்
அழுதுசெய்வதென்றுணையரக்கனை
எழுதலாங்கொலென்றெண்ணுகின்றார்சிலர். (௧௭௨)

ஆவதொன்றருளாயெனதாவியைக்
கூவுகின்றிலைகூறலைசென்றெனப்
பாவைபேசுவபோற்கண்பணிப்புறப்
† பூவையோடும்புலம்புகின்றார்சிலர். (௧௭௩)

ஈரத்தென்றலிழுகமெலிந்துதம்
பாரக்கொங்கையைப்பார்த்தனர்பாதகன்
வீரத்தோள்களின்வீக்கநினைந்துயிர்
சோரச்சோரதுளங்குகின்றார்சிலர். (௧௭௪)

நக்கசெம்மணிநாறியநாணிழல்
பக்கம்வீசுறுபள்ளியிற்பல்பகல்
ஒக்கவாசையுலக்கவுலந்தவர்
செக்கர்வான்றருதிங்களொத்தார்சிலர். (௧௭௫)

* தாழ்தொறும்—தாழ்க்கோல் "திறவுகோல்" செல்லுமிடங்களெல்லாம்.
† பூவை—நாகணவாய்ப்புள்.

வாளினாற்றெளிகற்பகவல்லியர்
தோளினாற்றியதூங்கமளித்துயில்
நாளினாற்செவியிற்புகநாமயாழ்த்
தேளினாற்றிகைப்பெய்துகின்றார்சிலர். (௧௭௬)

கவ்வுதீக்கணைமேருவைக்கால்வளைத்
தெவ்வினான்மலையேந்தியவேந்துதோள்
வவ்வுசாந்துதம்மாமுலைவெளவிய
செவ்விகண்டுகுலாவுகின்றார்சிலர். (௧௭௭)

கூடிநான்குயர்வேலையுநோக்கின்
றாடினான்புகழங்கைநரம்பினால்
நாடினாற்பெரும்பண்ணுநயப்புறப்
பாடினான்பெயர்பாடுகின்றார்சிலர். (௧௭௮)

இனையதன்மையியக்கியரெய்திய
மனையொராயிரமாயிரகோடியாம்
அனையவன்குலத்தாயிழையாரிடம்
நினைவினெய்தினனீதியினெய்தினான். (௧௭௯)

வேறு.

எரிசுடர்மணியின்செங்கேழிளவெயிலிடைவிடாது
விரியிருள்பருகிநாளும்விளக்கின்றிவிளங்குமாடத்
தரிவையர்குழுவுநீங்கவாசையும்தாமுமேயாய்
ஒருசிறையிருந்துபோனவுள்ளத்தேடுவாரும். (௧௮0)

நகையெரிக்கற்றைநெற்றிநாவிதோய்ந்தனையவோதி
புகையெனத்தும்பிசுற்றப்புதுமலர்பொங்குசேக்கை
பகையெனவேகியான்றபளிங்குடைச்சீதப்பள்ளி
மிகையொடுங்காத * காமவிம்மலின்வெதும்புவாரும். (௧௮௧)

† சவிபடுதகைசால்வானந்தானொருமேனியாகக்
குவியுமீனாரமாகமின்கொடிமருங்குலாகக்
கவிரொளிச்செக்கர்க்கற்றையோதியாமழையுண்கண்ணா
அவிர்மதிர்நெற்றியாகவந்திவாணோக்கின்றாரும். (௧௮௨)

பானலுண்கண்ணும்வண்ணப்படி ‡ முறைமாறப்பண்ணைச்
சோனைபோன்றளிகள்பம்புஞ்சுரிகுழற்கற்றைசோர
மேனிமிர்ந்தெழுந்தமாடவெண்ணிலாமுன்றினண்ணி
வானமீன்கையின்வாரிமணிக்கழங்காடுவாரும். (௧௮௩)

உழையுழைபரந்தவானயாற்றுநின்றும்பர்நாட்டுக்
குழைமுகத்தாயந்தந்தபுனல்குளிர்ப்பிலவென்றாடி

* காமவிம்மல்-காமமிகுதி. † சவி-சூரியன். ‡ முறைமாறல்-தமது நிலைகுலைதல்.

இழைதொடுத்திலங்குமாடமிடைதடுமாறவேறி
மழைபொதுத்தொழுகுநீரான்மஞ்சனமாடுவாரும். (கஅச)

பன்னகவரசர்செங்கேழ்ப்பணமணிவலிதிறப்பற்றி
இன்னுயிர்க்கணவனீந்தாணுமெனவிருத்திவிஞ்சை
மன்னவர்முடியும்பூணுமாரமும்பணையமாகப்
பொன்னணிபலகைசூதுதுயில்கிலர்பொருகின்றாரும். (கஅரு)

தென்னகுருடமுட்பாடல்சித்தியரிசைப்பத்தீஞ்சொற்
பன்னகமகளிர்வன்வார்த் * தண்ணுமைபாணிபேணப்
பொன்னகர்த்தாளப்பந்தர்கற்பகப்பொதும்பர்பொற்றோள்
இன்னகையரம்பைமாரையாடல்கண்டிருக்கின்றாரும். (கஅசு)

ஆணியிற்கிடந்தகாதலகஞ்சுடவருவியுண்கண்
சேணுயருறக்கந்தீர்ந்தசிந்தையர்செய்வதோரார்
வீணையுங்குழலுந்தத்தமிடறும்வேற்றுமையுந்தீர்ந்த
பாணிகளளந்தபாடலமிழ்துகப்பாடுவாரும். (கஅஎ)

தண்டலைவாழையன்னகுறங்கிடையல்குற்றட்டில்
கொண்டபூந்துகிலுங்கோவைகலைகளுஞ்சோரக் † கூர்ங்கள்
உண்டலமந்தகண்ணேடேசலிட்டுலாவுகின்ற
குண்டலந்திருவில்வீசக்குரவையிற்குழற்றுவாரும். (கஅஅ)

நச்செனக்கொடியநாகக்கன்னொடுகுருதிநக்கிப்
பிச்சரிற்பிதற்றியல்குற்பூந்துகில்கலாபம்பீறிக்
குச்சரித்திறத்திறைகைகளங்கொளக்குழுக்கொண்டுண்டிச்
சச்சரிப்பாணிகொட்டிக்கிறைதடுமாறுவாரும். (கஅகூ)

தயிர்திறத்துறுகளுள்ளந்தள்ளுறவறிவுதள்ளிப்
பயிர்வுறத்தெய்வமென்மேற்படிந்ததுபார்மினென்று
உயிருயிர்த்திரண்டுகையுமுச்சிமேலுயரநீட்டி
மயிர்சிலிர்த்துடலுங்கூசிவாய்விரித்தொடுங்குவாரும். (ககூ0)

இத்திறத்தரக்கிமார்களிருங்கோடியீட்டப்
பத்தியருறையுந்தெய்வப்படர்நெடுந்தெருவும்பார்த்தான்
சித்தியருறையுமாடத்தெருவும்பின்றேகச்சென்றான்
‡ உத்திசைவிஞ்சைமாதருறையுளோர்முறையினுற்றான். (ககூக)

வேறு.

வளர்ந்தகாதலர்மகரிகைநெடுமுடியரக்கரைவரககாணார்
தளர்ந்தசிந்தைதம்மிடையினுநுடங்கிடவுயிரொடுதடுமாறிக்
களந்தவாநெடுங்கருவியிற்கைகளிற் § செயிரியர்கலைக்கண்ணால்
அளந்தபாடல்வெவ்வரவுதஞ்செவிபுகவலமாலுறுகின்றார். (ககூஉ)

---

* தண்ணுமைபாணிபேணல்-மத்தளங்களை கைகளாலே முழக்கல்.
† கூர்ங்கள்-மிகவும் மயக்கமுள்ளமது. ‡ உத்திசை-அப்புறமானதிக்கு.
§ செயிரியர்-பாடகர்கள்.

புரியுநன்னெறிமுனிவரும்புலவரும்புகலிலாப்பொறைகூர
எரியும்வெஞ்சினத்திகலடுகொடுந்திறலிராவணற்கெஞ்ஞான்றும்
பரியுநெஞ்சினரிவரெனவயிர்த்ததோர்பகைகொடுபனித்திங்கள்
சொரியும்வெங்கதிர்துணைமுலைக்குவைசுடக்கொடிகளிற்றுடிக்கின்றார். ()

சிறுகாலங்களூழிகளாம்வகைதிரிந்துசிந்தனைசிந்த
முறுகுகாதலின்வேதனையுழப்பவர்முயங்கினர்முலைமுன்றில்
இறுகுசாந்தமுமெழுதுநற்குறிகளுமின்னுயிர்ப்பொறையா
மறுகுவாட்கண்கள்சிவப்புறநோக்கினர்வயிர்த்தனருயிர்க்கின்றார். (௧௯௪)

ஆயவிஞ்சையர்மடந்தையருறைவிடமாறிரண்டமைகோடி
தூயமாளிகைநெடுந்தெருததுருவிப்போய்த்தொலைவின்மூன்றுலகிற்கும்
நாயகன்பெருங்கோயிலைநண்ணுவான்கண்டனனளிர்திங்கள்
மாயநந்தியவாண்முகத்தொருதனிமயன்மகளுறைமாடம். (௧௯௫)

கண்டுகண்ணொடுகருத்தொடுகடாவினன்காரணங்கடைநின்ற
துண்டுவேறொருசிறப்பெங்கணாயகற்குயிரினுமுரியாளைக்
கொண்டுபோந்தவன்வைத்ததோருறையுள்கொல்குலமணிமனைக்கெல்லாம்
விண்டுவின்றடமார்பினின்மணியொத்ததிதுவெனவியப்புற்றான். (௧௯௬)

அரம்பைமேனகைதிலோத்தமையுருப்பசியாதியர்மலர்க்காமன்
சரம்பெய்தூணிபோற்றளிரடிதாந்தொடச்சாமரைபணிமாறக்
கரும்பையுஞ்சுவைகைப்பித்தசொல்லியர்காமரங்கனியாழின்
நரம்பினின்னிசைசெவிபுகநாசியிற்கற்பகவிரைநாற. (௧௯௭)

விழைவுநீங்கியமேன்மையோராயினுங்கீழ்மையோர்வெகுளுற்றால்
பிழைகொணன்மைகொல்பெறுவதென்றையுறுபீழையாற்பெருந்தென்றல்
உழையர்கூவப்புக்கேதெனப்பெயர்வதோருசலினுளதாகும
பழையம்யாமெனப்பண்பிலசெய்வரோபரிணிதர்பயனோர்வார். (௧௯௮)

இன்னதன்மையினெரிமணிவிளக்கங்களெழில்கெடப்பொலிகின்ற
தன்னதின்னொளிதழைப்புறத்துயிலுறுதையலைத்தகவில்லான்
அன்னளாகியசானகியிவளெனவயிர்த்தகத்தெழுவெந்தீ
துன்னுமாருயிருடலொடுசுடுவதோர்துயருழந்திவைசொன்னான். (௧௯௯)

எற்புவான்றொடர்யாக்கையாற்பெறும்பயனிகந்தனெனிதுநிற்க
* அற்புவான்றளையிற்பிறப்பதனொடுமிகழ்ந்துதன்னருந்தெய்வக்
கற்புநீங்கியகனங்குழையிவளெனிற்காகுத்தன்புகழோடும்
பொற்பும்யானுமிவ்விலங்கையுமாக்கரும்பொன்றுதுமின்றென்றான். (௨௦௦)

மானுயர்திருவடிவினளவளிவண்மாறுகொண்டனள்கூறின்
தானியக்கியோதானவர்தையலோவையுறுந்தகையாளாள்

* அன்பு—அற்பெனத்திரிந்தது.

கானுயர்த்தாரிராமன்மேனோக்கியகாதல்காரிகையார்க்கு
மீனுயர்த்தவன்மருங்குதான்மீளுமோவினைந்துமிகையென்றான். (௨௦௧)

இலக்கணங்களுஞ்சிலவுளவென்னினுமெல்லைசென்றிறக்கில்லா
அலக்கணெய்துவதணியதுண்டென்றெடுத்தறைகுவதிவள்யாக்கை
மலர்க்கருங்குழல்சோர்ந்துவாய்வெரீஇச்சிலமாற்றங்கள்பறைகின்றாள்
உலக்குமிங்கிவள்கணவனுமழிவுமிவ்வியனகர்க்குளதென்றான். (௨௦௨)

என்றுணர்ந்துநின்றேமுறுமிந்நிலைநிற்கவித்திறனென்னைப்
பின்றுசிந்தையன்பெயர்ந்தனனெடுமனைபிற்படப்பெருமேருக்
குன்றுகுன்றியதகையுறவோங்கியகொற்றமாளிகைதன்னில்
சென்றுபுக்கனனிராவணற்கெடுப்பருங்கிரியெனத்திரடோளான். (௨௦௩)

நிலந்துடித்தனநெடுவரைபொடித்தனநிருதர்தங்குலமாதர்
பொலந்துடிக்கமைமருங்குல்போற்கண்களும்புருவமும்பொற்றோளும்
வலந்துடித்தன * மாதிரந்துடித்தனதடித்தின்றிமதிவானம்
கலந்திடித்தனவெடித்தனபூரணமங்கலகலசங்கள். (௨௦௪)

புக்குநின்றுதன்புலன்கொடுநோக்கினன்பொருவருந்திருவுள்ளம்
நெக்குநின்றனனீங்குமந்தோவிந்தநெடுநகர்த்திருவென்னா
எக்குலங்களின்யாவரேயாயினுமிருவினையெல்லோர்க்கும்
ஒக்குமூழ்முறையல்லதுவலியதொன்றில்லெனவுணர்வுற்றான். (௨௦௫)

நாற்பெருங்கடனுணங்கியகேள்வியனோக்கினனியனென்றாள்
வேர்பெருங்கடல்புடைபரந்தீண்டியவெள்ளிடைவியன்கோயில்
பாற்பெருங்கடற்பன்மணிப்பஃறிரைப்பரப்புடைப்படர்வேலை
மாற்பெருங்கடல்வதிந்ததேயனையதோர்வளப்பினன்றுயில்வானை. (௨௦௬)

குழவிஞாயிறுகுன்றிவர்ந்தனையனகுருமணிநெடுமோலி
இழைகளோடுநின்றிளவெயிலெறித்திடவிரவெனும்பொருள்வீய
முழைகொண்மேருவின்பொருட்டிடைக்கனகனைமுருக்கியமுரட்சீயம்
தழைகொடோளொடுதலைபலபரப்பிமுன்றுயில்வதோர்தகையானை. (௨௦௭)

ஆயபொற்கலத்தாய்வளையரம்பையராயிரரணிநின்று
தூயபொற்கவரித்திரளியக்கிடச்சுழிபடுபசுங்காற்றின்
வீயகற்பகத்தேன்றுளிவிராயனவீழ்தொறுநெடுமேனி
தீயநற்றொடிச்சீதையைநினைதொறுமுயிர்த்துயிர்தேய்வானை. (௨௦௮)

குழந்தைவெண்மதிக்குடுமியனெடுவரைகுலுக்கியகுலத்தோளைக்
கழிந்துபுக்கிடைகரந்தன † நங்கன்வெங்கடுங்கணைபலபாய
உழந்தவெஞ்சமத்துயர்திசையானையினொளிமருப்புற்றிற்ற
பழந்தழும்பினுக்கிடையிடையேசிலபசும்புண்களசும்பூற. (௨௦௯)

* மாதிரம்-திசை. † அநங்கன்-தேகமில்லாதவன், மன்மதன்.

சாந்தளாவியகலவைமேற்றவழ்வுறுதண்டமிழ்ப்பசுந்தென்றல்
எந்துகாமவெங்கனலினுக்குமிழுதட்டுருத்தியினுயிர்ப்பேறக்
காந்தண்மென்விரற்சனகிமென்மனமுதற்கரணங்கள் கடிதோடப்
பாந்தணீங்கியமுழையெனக்குழைவுறுநெஞ்சுபாழ்பட்டானை. (௨௧௦)

வேறு.

கொண்டபேருக்கமுளத்திசைதொறுங்குறித்துமேனாள்
மண்டியசெருவின்வீரத்தோள்களால்வாரிவாரி
உண்டதுதெவிட்டிப்பேழ்வாய்க்கடைகடோறொழுகிப்பாயும்
அண்டர்தம்புகழிற்றோன்றும்வெள்ளியிற்றமைதியானை. (௨௧௧)

வெள்ளிவெண்சேக்கைவெந்துபொரியெழவெதும்புமேனி
புள்ளிவெண்மொக்குளென்னப்பொடித்துவேர்கொதித்துப்பொங்கக்
கள்ளவிழ்மாலைத்தும்பிவண்டொடுங்கரிந்துசாம்ப
ஒள்ளிணர்மாலைதீயவுயிர்க்கின்றவுயிர்ப்பினானை. (௨௧௨)

தேவியனேமியானிற்சிந்தைமெய்த்திருவினைகப்
பூவியலமளிமேலாப்பொய்யுறக்குறங்குவானைக்
காவியங்கண்ணிதன்பாற்கண்ணியகாதனீரின்
ஆவியையுயிர்ப்பென்றோதுமம்மியிட்டரைக்கின்றானை. (௨௧௩)

மிகுந்தகைநினைப்புமுற்றவுருவெளிப்பட்டவேலை
நகுந்தகைமுகத்தன்காதனடுக்குறுமெய்யன்வார்தேன்
உகுந்தகைமொழியாண்முன்னமொருவகையுறையுளுள்ளே
புகுந்தனளன்றோவென்றுமயிர்புறம்பொடிக்கின்றானை. (௨௧௪)

மென்றொழிற்கலாபமஞ்ஞைவேட்கைமீக்கூருமேனும்
குன்றொழித்தொருமாக்குன்றினரிதிற்சேர்கொள்கைபோல
வன்றொழிற்கொற்றப்பொற்றோண்மணந்தருமயிலேயன்னார்
ஒன்றொழித்தொன்றினேகவரியதோரொழுக்கினானை. (௨௧௫)

வேறு.

தழுவாநின்றகருங்கடன்மீதுதயகிரியிற்சுடர்தயங்க
எழுவாலென்னமின்னிமைக்குமாரம்புரளுமியல்பிற்றாய்
முழுவானவராயுலகமொருமூன்றுங்காக்கு * முதற்றேவர்
மழுவாணேமிகுலிசத்தின்வாய்மைதுடைத்தமார்பானை. (௨௧௬)

வேறு.

தோடுழுதண்டார்வண்டுந்திசையானைமதந்துதைந்தவண்டுஞ்சுற்றி
மாடுழுதநறுங்கலவைவயக்களிற்றின்சிந்தூரத்தைமாறுகொள்ளக்

* முதற்றேவரென்றது ஈண்டு (நான்முகனிவனுக்குறவாகலால்) உருத்திரன், விஷ்ணு, இந்திரனை என்க.

கோவெழுதமார்பானைக்கொலையுழுதவடிவேலின்கொற்றமஞ்சித்
தாடொழுதபகைவேந்தர்முடியுழுததழும்பிருந்தசரணத்தானை. (உ௧எ)

வேறு.

கொண்டதோருருவமாயன்குறளினுங்குறுகநின்றான்
திண்டலைபத்துந்தோள்களிருபதுந்தெரியநோக்கிக்
கண்டனன்காண்டலோடுங்கருத்தின்முன்காலச்செந்தீ
விண்டனகண்கள் * கீண்டுவெடித்தனகீழுமேலும். (உ௧அ)

வேறு.

தோளாற்றலென்னாகுமேனிற்குஞ்சொல்லென்னும்
வாளாற்றகண்ணாளைவஞ்சித்தான்மணிமுடியென்
தாளாற்றலாலிடித்துத்தலைபத்துந்தகர்த்தென்றன்
ஆளாற்றல்காட்டேனலடியேனாய்முடியேனே. (உ௧௯)

நடித்துவாழ்தகைமையதோவடிமைதானன்னுதலைப்
பிடித்தவாளரக்கனூர்யான்கண்டும்பிழைப்பரோ
ஒடித்துவான்றோளனைத்துந்தலைபத்துமுதைத்துருட்டி
முடித்திவ்வூர்முடித்தான்மேன்முடிவதெலாமுடிந்தொழிக. (உ௨0)

என்றாக்கியெயிறுகடித்திருகாலும்பிசைந்தெழுந்து
பின்றாக்கியுணாந்துரைப்பானேமியோன்பணியன்றால்
ஒன்றாக்கியொன்றிழைத்தலுணர்வுடைமைக்குரித்தன்றால்
பின்றாக்கினிதுசாலப்பிழையாகுமெனப்பெயர்ந்தான். (உ௨௧)

ஆலம்பார்த்துண்டவன்போலாற்றலமைந்துளரெனினும்
சீலம்பார்க்குறியோர்களென்னாதுசெய்பவோ
மூலம்பார்க்குறினுலகைமுற்றுவிக்குமுறைதெரினும்
காலம்பார்த்திறைவேலைகடவாதகடலொத்தான். (உ௨௨)

இற்றைப்போர்ப்பெருஞ்சீற்றமென்னோடுமுடிந்திடுக
கற்றைப்பூங்குழலாளைச்சிறைவைத்தகண்டகனை
முற்றப்போர்முடித்ததொருகுரங்கென்றான்முனைவீரன்
கொற்றப்போர்ச்சிலைத்தொழிற்குக்குறைவுண்டாமெனக்குறைந்தான்

அந்நிலையான்பெயர்ந்துரைப்பானவ்வளைக்கையணியிழையார்
இந்நிலையானுடன்றுயில்வாருளரல்லரிவணிலையும்
புன்னிலைகாமத்தாற்புலர்கின்றநிலைபூவை
நன்னிலையினுளளென்னுநலனெனக்குநல்குமால். (உ௨௪)

என்றெண்ணியீண்டினியோர்பயனில்லையெனநினையாக்
குன்றன்னதோளவன்றன்கோமனைபிற்படப்பெயர்ந்தான்

* கீழ்கீண்டு—மேல்வெடித்தன எனக்கூட்டுக.

நின்றெண்ணியுன்னுவானந்தோவிந்நெடுநகரம்
பொன்றன்னுமணிப்பூணரிலரென்னப் * பொருமுவான். (௨௨௫)

கொன்றானோகற்பழியாக்குலமகளைக்கொடுந்தொழிலால்
தின்றானோவப்புறத்தேசெறித்தானோசிறையறியேன்
ஒன்றானுமுணரகிலேன்மீண்டினிப்போயென்னுரைக்கேன்
பொன்றாதபொழுதெனக்குக்கொடுந்துயரம்போகாதால். (௨௨௬)

கண்டுவருமென்றிருக்குங்காகுத்தன்கவிகுலத்தோன்
கொண்டுவருமென்றிருக்கும்யானிழைத்தகோளிதுவால்
† புண்டரிகநயனத்தான்பாலின்னம்போவேனோ
‡ விண்டவரோடுடன்வீயாதியான்வாளாவிளிவேனோ. (௨௨௭)

$ கண்ணியநாள்கழிந்துளவாற்கண்டிலெனாற்கனங்குழையை
விண்ணடைதுமென்றுரையாண்டிருந்திவிரைந்தயான்
எண்ணியதுமுடிக்ககிலேன்யான்முடியாதிருப்பேனோ
புண்ணியமென்றொருபொருளென்னுழைநின்றும்போயதால். (௨௨௮)

ஏழுநூறுசனைசூழ்ந்தெயில்கிடந்ததிவ்விலங்கை
வாழு § மாமன்னுயிர்யான்காணாதமற்றில்லை
ஊழியான்பெருந்தேவியொருவரையும்யான்காணேன்
ஆழிதாயிடராழியிடையேவீழ்ந்தழிவேனோ. (௨௨௯)

வல்லரக்கன்றனைப்பற்றிவாயாறுகுருதியுகக்
கல்லரக்குங்கரதலத்தாற்காட்டென்றுகாண்கேனோ
எல்லரக்குமயினுதிவேலிராவணனுமிவ்வூரும்
மெல்லரக்கினுருக்கியுகவெந்தழலால்வேய்கேனோ. (௨௩௦)

வானவரேமுதலோரைவினவுவெனேல்வல்லரக்கன்
தானொருவனுளனாகவுரைசெய்யுந்தருக்கிலரால்
ஏனையர்களெங்குரைப்பாரெவ்வண்ணந்தெரிகேனோ
ஊனழியநீங்காதவுயிர்சுமந்தவுணர்வில்லேன். (௨௩௧)

எருவைக்குமுதலாயசம்பாதியிலங்கையிலத்
திருவைக்கண்டனனென்றானவனுரையுஞ்சிதைந்ததால்
¶ கருவைக்குநெடுநகரைக்கடலிடையேகரையாதென்
உருவைக்கொண்டின்னமுநானுளனாகியுழல்கேனோ. (௨௩௨)

வடித்தாய்பூங்குழலாளைவானறியமண்ணறியப்
பிடித்தானிவ்வடலரக்கனெனுமாற்றம்பிழையாதால்

---

* பொருமுவான்-துக்கிக்கலானார், † புண்டரிகநயனத்தான்-தாமரைக்கண்ணன்,
‡ விண்டவர்-விட்டவர், $ கண்ணியநாள்-கெடுவுசெய்தனுப்பினகாலவளவு,
§ மாமன்னுயிர்-பெருமையும் சரமும் நிலைமையும் அசரமுமான உயிர்களில்,
¶ கரு-தெய்வக்கம்மாளன்.

எடுத்தாழியிலங்கைதனையிருங்கடலினிட்டிவனை
முடித்தாலேயான்முடிதன்முறைமன்றவென்றுணர்வான். (௨௧௩)

என்னுறையுமொழியாமல்யாண்டையுளுமுளனாய்த்தன்
உள்ளுறையுமழகனைப்போலெம்மருங்குமுலாவினான்
புள்ளுறை * யுய்யானத்தையுறநோக்கியயல்போவான்
கள்ளுறையுமலர்ச்சோலையயலொன்றுகண்ணுற்றான். (௨௧௪)

ஊர்தேடு படலம் - முற்றிற்று.

(ஆக திருவிருத்தம்-௩௧௦.)

௩ - வது காட்சிப்படலம்.

பிராட்டியைக்கண்டது.

மாடுநின்றவம்மணிமலர்ச்சோலையைமருவித்
தேடியவ்வழிகாண்பெனேற்றீருமென்சிறுமை
ஊடுசெண்டிலெனெனிற்பின்னருரியதொன்றில்லை
வீடுவேன்மற்றிவ்விலங்கன்மேலிலங்கையைவீட்டி. (௧)

என்றுசோலைபுக்கெய்தினனிராகவன்றூதன்
ஒன்றுவானவர்பூமழைசொரிந்தனருவந்தார்
அன்றவாளரக்கன்சிறையவ்வழிவைத்த
துன்றலோதிதன்னிலையினைச்சொல்லுவான்றுணிந்தாம். (௨)

வன்மருங்குல்வாளரக்கியர் † நெருக்கவங்கிருந்தார்
கன்மருங்கெழுந்தென்றுமோர்துளிவரக்காணா
நன்மருந்துபோனலனறவுணங்கியநங்கை
மென்மருங்குல்போல்வேறுளவங்கமுமெலிந்தாள். (௩)

துயிலெனக்கண்களிமைத்தலுமுகிழ்த்தலுந்துறந்தாள்
வெயிலிடைத்தந்தவிளக்கெனவொளியிலாமெய்யாள்
மயிலியற்குயின்மழலையாண்மானிளம்பேடை
அயிலெயிற்றுவெம்புலிக்குழாத்தகப்பட்டதன்னாள். (௪)

விழுதல்விம்முதன்மெய்யுறவெதும்புதல்வெருவல்
எழுதலேங்குதலிரங்குதலிராமனையெண்ணித்
தொழுதல்சோருதறுளங்குதறுயருழந்துயிர்த்தல்
அழுதலன்றிமற்றயலொன்றுஞ்செய்குவதறியாள். (௫)

* உய்யானம்—தோப்பு, சோலை. † நெருக்க—கண்டு வருத்தப்படுதல்,

தழைத்தபொன்மூலத்தடங்கடந்தருவிபோய்த்தாழப்
புழைத்தபோலநீர்நிரந்தரம்பொழிகின்றபொலிவால்
இழைக்குநுண்ணியமருங்குலாளிணைநெடுங்கண்கள்
மழைக்கணென்பதுகாரணக்குறியெனவகுத்தாள். (௬)

அரியமஞ்சினேடஞ்சனமுதலிவையதிகம்
கரியகாண்டலுங்கண்ணினீர்கடல்புகக்கலுழ்வாள்
உரியகாதலினொருவரோடொருவரையுலகில்
பிரிவெனுந்துயருருவுகொண்டாலனபிணியாள். (௭)

துப்பினற்செய்தகைகொடுகால்பெற்றதுளிமஞ்
சொப்பினன்றனைநினைதொறுநெடுங்கண்களுகுத்த
அப்பினனைந்தருந்துயருயிர்ப்புடையாக்கை
வெப்பினற்புலர்ந்தொருநிலையுறாதமென்றுகிலாள். (௮)

* அரிதுபோகவோவிதிவலிகடத்தலென்றஞ்சிப்
பரிதிவானவன்குலத்தையும்பழியையும்பாராச்
சுருதிநாயகன்வரும்வருமென்பதோர்துணிவால்
கருதி † மாதிரமனைத்தையுமளக்கின்றகண்ணாள். (௯)

கமையிஞடிருமுகத்தயல்கதுப்புறக்கவ்விச்
சுமையுடைக்கற்றைநிலத்திடைக்கிடந்ததூமதியை
அமையவாயிற்பெய்துமிழ்கின்றவயிலெயிற்றரவிற்
குமையுறத்திரண்டொருசடையாகியகுழலாள். (௧௦)

ஆவியந்துகில்புனைவதொன்றன்றிவேறறியாள்
தூவியன்னமென்புனலிடைத்தோய்கிலாமெய்யாள்
தேவுதெண்கடலமிழ்துகொண்டநங்கவேள்செய்த
ஓவியம்புகையுண்டதேயொக்கின்றவுருவாள். (௧௧)

கண்டிலன்கொலாமனவலுங்கனைகடனடுவண்
உண்டிலங்கையென்றுணர்ந்திலருலகெலாமொறுப்பான்
கொண்டிறந்தமையறிகிலாமெனக்குழையாப்
புண்டிறந்ததினெரிநுழைந்தாலெனப்புகைவாள். (௧௨)

மாண்டுபோயின ‡ னெருவைகட்கரசன்மன்மற்றோர்
யாண்டையென்னிலையறிவுறுப்பார்களிப்பிறப்பில்
காண்டலோவரிதென்றென்றுவிம்முறுங்கலங்கும்
மீண்டுமீண்டுபுக்கெரிநுழைந்தாலெனமெலிவாள். (௧௩)

என்னைநாயகனிளவலையெண்ணலாவினையேன்
சொன்னவார்த்தைகேட்டறிவிலளெனத்துறந்தானே

* அரிது-விதிவலிநடத்தல் தானேசெல்லமாட்டாமையாற்போக அரிவென்றும் தன்னாலொன்றுஞ் செய்யக்கூடாமையால் விதிவலிகடப்பதென்றுங் கூறினாளென்க,
† மாதிரம்-திக்கு. ‡ எருவைகட்கரசன்-சடாயு,

முன்னையூழ்வினைமுடிந்ததோவென்றென்றுமுறையால்
பன்னவாய்புலர்ந்துணவுதேய்ந்தாருயிர்பதைப்பாள். (க௪)

அருந்துமெல்லடகாரிடவருந்துமென்றழுங்கும்
விருந்துகண்டபோதென்னுறுமோவென்றுவிம்மும்
மருந்துமுண்டுகொல்யான்கொண்டநோய்க்கென்றுமயங்கும்
இருந்தமாநிலஞ்செல்லரித்திடவுமாண்டெழாதாள். (க௫)

வன்கண்வஞ்சனையரக்கரித்துணைப்பகல்வையார்
என்பரமினிச்செய்த்தக்கதென்றுதீர்ந்தானோ
* தன்குலப்பொறைதன்பொறையெனத்தணிந்தானோ
என்கொலெண்ணுவேனென்னுமங்கிராப்பகலில்லாள். (க௬)

பெற்றதாயருந்தம்பியும்பெயர்த்தும்வந்தெய்திக்
கொற்றமாநகர்கொண்டிறந்தார்களோகுறித்துச்
சொற்றவாண்டெலாமுறைந்தன்றியந்நகர்துன்னான்
உற்றதுண்டெனப்படருழந்துருதநோயுறுவாள். (க௭)

மூரனெனத்தகுமொய்ம்பினோர்முன்பொருதவர்போல்
வரனுமாயமும்வஞ்சமும்வரம்பிலவல்லார்
பொரநிகழ்ந்ததோர்பூசலுண்டாமெனப்பொருமாக்
கரனெதிர்ந்ததுகண்டனளாமெனக்கவல்வாள். (க௮)

வேறு.

தெம்மடங்கியசேணிலங்கேகயர்
தம்மடந்தையுன்றம்பியதாமென
மும்மடங்குபொலிந்தமுகத்தினன்
வெம்மடங்கலையுன்னிவெதும்புவாள். (க௯)

மெய்த்திருப்பதமேவென்றபோதினும்
இத்திருத்துறந்தேகென்றபோதினும்
சித்திரத்தினலர்ந்தசெந்தாமரை
ஒத்திருந்தமுகத்தினையுன்னுவாள். (௨௦)

தேங்குகங்கைத்திருமுடிச்செங்கணான்
வாங்குகோலவடவரைவார்சிலை
† ஏங்குமாத்திரத்திற்றிரண்டாய்விழ
வீங்குதோளினைநினைந்துமெலிந்துளாள். (௨௧)

இன்னலம்பரவேந்தற்கியற்றிய
பன்னலம்பதினாலாயிரம்படை

* தன்குலப்பொறை-தணித்தானோ-உலகையாளுகிறது தன்குலப்பொறை ஆகலால் இப்போதான் வேறாரில்லாமைப்பற்றித் தன்சுமையென்று போயினனோவென்று கருத்து, † ஏங்குமாத்திரத்து-தூக்கிக்குமளவில்.

மன்னன்மூன்றிற்களப்படக்கால்வளை
வின்னலம்புகழ்த்தேற்றிவெதும்புவாள். (௨௨)

ஆழநீர்க்கங்கையம்பிகடாவிய
ஏழைவேடனுக்கெம்பிநின்றம்பிநீ
தோழன்மங்கைகொழுந்தியெனச்சொன்ன
வாழிநண்பினையுன்னிமயங்குவாள். (௨௩)

மெய்த்ததாதைவிரும்பினனீட்டிய
கைத்தலங்களைக்கைகளினீக்கிவே
றுய்த்தபோது * தருப்பையிலொண்பதம்
வைத்தவேதிகைச்செய்திமனக்கொள்வாள். (௨௪)

உரங்கொடேமலர்ச்சென்னியுரிமைசால்
வரங்கொள்பொன்முடிதம்பிவனைந்திலன்
திரங்குசெஞ்சடைகட்டியசெய்வினைக்
கிரங்குமேங்குவதெண்ணியிரங்குவாள். (௨௫)

பரித்தசெல்வமொழியப்படருநாள்
அருத்திவேதியர்க்கான்குலமீந்தவர்
கருத்தினாசைக்கரையின்மைகண்டிறை
சிரித்தசெய்கைநினைந்தழுஞ்செய்கையாள். (௨௬)

மழுவின்வாளினன்மன்னரை † மூவெழு
பொழுதினூறிப்புலவுறுபுண்ணினீர்
முழுகினான்றவமொய்ம்பொடுமூரிவில்
தழுவுமேன்மைநினைந்துயிர்சாம்புவாள். (௨௭)

ஏகவாளியவ்விந்திரன்காதன்மேல்
போகவேவியதுகண்பொடித்தநாள்
காகமுற்றுமோர்கண்ணிலவாக்கிய
வேகவென்றியைத்தன்றலைமேற்கொள்வாள். (௨௮)

வெவ்விராதனைமேல்வரும் ‡ தீவினை
வவ்வியமாற்றருஞ்சாபமுமாற்றிய
அவ்விராமனையுன்னித்தன்னாருயிர்
செவ்விராதுணர்வோய்ந்துடறேம்புவாள். (௨௯)

வேறு.

இருந்தனடிரிசடையென்னுமின்சொலில்
திருந்திழையொழியமற்றிருந்ததீவினை

---

* தருப்பையில் என்பது அசம்ஹியப்படாமல் பரிசுத்தமுள்ளதை யெடுக்கிறது போல் எடுத்து அம்மிமேல் வைத்த குணத்தைமனக் கொள்வாளென்க.

† மூவெழுபொழுதின்-இருபத்தொரு வம்சத்தளவும். ‡ தீவினை என்றது—ஆகாமிய கர்மங்களனைத்தும்.

அருந்திறலரக்கியரல்லுநன்றுறப்
பொருந்தலுந்துயினறைக்களிபொருந்தினர். (௯௰)

ஆயிடைத்திரிசடையென்னுமன்பினாள்
தாயினுமினியவடன்னைநோக்கினாள்
தூயைநீகேட்டியென்றுணைவியாமெனா
மேயதோர்கட்டுரைவிளம்பன்மேயினாள். (௯௧)

நலந்துடிக்கின்றதோநான்செய்தீவினைச்
சலந்துடித்தின்னமுந்தருவதுண்மையோ
பொலந்துடிமருங்குலாய்புருவங்கண்முதல்
வலந்துடிக்கின்றிலவருவதோர்கிலேன். (௯௨)

முனியொடுமிதிலையின்முதல்வன்முந்துநாள்
துனியருபுருவமுந்தோளுநாட்டமும்
இனியனதுடித்தனவீண்டுமாண்டென
நனிதுடிக்கின்றனவாய்ந்துநல்குவாய். (௯௩)

மறந்தனெனிதுவுமோர்மாற்றங்கேட்டியால்
அறந்தருசிந்தையென்னாவிநாயகன்
பிறந்தபார்முழுவதுந்தம்பியேபெறத்
துறந்துகான்புகுந்தநாள் * வலந்துடித்ததே. (௯௪)

நஞ்சனையான்வனத்திழைக்குநாளிடை
வஞ்சனையால்வலந்துடித்தவாய்மையால்
எஞ்சலவீண்டுதாமிடந்துடித்ததால்
அஞ்சலென்றிரங்குதற்கடுப்பதியாதென்றாள். (௯௫)

என்றலுந்திரிசடையியைந்தசோபனம்
நன்றிதுநன்றெனாநயந்தசிந்தையாள்
உன்றுணைக்கணவனையுறுதலுண்மையால்
† அன்றியுங்கேட்டியென்றறைதன்மேயினாள். (௯௬)

உன்னிறம்பசப்புறவுயிருயிர்ப்புற
இன்னிறத்தேனிசையினியநண்பினால்
மின்னிறமருங்குலாய்செவியின்மெல்லெனப்
பொன்னிறத்தும்பிவந்தூதிப்போயதால். (௯௭)

ஆயதுதேரினுன்னாவிநாயகன்
ஏயதூதுவந்தெதிர்தலுண்மையால்
தீயதுதீயவர்க்கெய்தறிண்ணமென்
றாயதுகேளெனாமறித்துங்கூறுவாள். (௯௮)

* வலந்துடித்தல் பெண்களுக்குக் கெடுதியையும் புருஷர்களுக்கு நன்மையையும் பயக்கும். † அன்றியுமென்றது தனக்குத் தோற்றினகுறிகளை.

துயிலிலவாதலிற்கனவுதோன்றல
அயில்விழியொருகனவமைந்துநோக்கினேன்
பயில்வனபழுதிலபழுதிறுடென
வெயிலிலு * மெய்யனவுரைத்தன்மேயினாள். (௫௯)

எண்ணெய்பொன்முடிதொறுமிழுகியீறிலாத்
திண்ணெடுங்கழுதைபேய்பூண்டதேரின்மேல்
அண்ணலவ்விராவணனரத்தவாடையன்
நண்ணினன்றென்புலனவையில்கற்பினாய். (௬௦)

மக்களுஞ்சுற்றமுமற்றுளோர்களும்
புக்கனரப்புலம்போந்ததில்லையால்
சிக்கறநோக்கினென்றீயவின்னமும்
மிக்கனகேட்கெனவிளம்பன்மேயினாள். (௬௧)

ஆண்டகையிராவணன்வளர்க்குமவ்வனம்
† ஈண்டனவிறந்தவாலினங்கொள்செஞ்சிகை
தூண்டருமணிவிளக்கழலுந்தொன்மனை
தீண்டதால்வானவேறெறியக்கிளைழநாள். (௬௨)

பிடமதம்பிறந்தனபிறங்குபேரியும்
இடியெனமுழங்குமாலிரட்டலின்றியே
‡ தடியுடைமுகிற்குலமின்றித்தாவில்வான்
வெடிபடவதிருமாலுதிருமீனெலாம். (௬௩)

விற்பகலின்றியேயிரவுவிண்டற
எற்பகவெரிந்துளதென்னத்தோன்றுமால்
மற்பகமலர்ந்ததோண்மைந்தர்சூடிய
கற்பகமாலையும்புலவுகாலுமால். (௬௪)

திரியுமாலிலங்கையுமதிலுந்திக்கெலாம்
எரியுமாற் $ கந்தர்ப்பநகரமெங்கணும்
தெரியுமான்மங்கலகலசஞ்சிந்தின
விரியுமால்விளக்கினைவிழுங்குமாலிருள். (௬௫)

தோரணமுறிந்தனதுணியச்சூழிமால்
வாரணமுறியுமால்வலத்தவாணமருப்
பாரணமந்திரத்தறிஞர்நாட்டிய
பூரணகுடத்துநீர்நறவுபொங்குமால். (௬௬)

விண்டொடர்மதியினைப்பிளந்து ¶ மீனெழும்
புண்டொடர்குருதியிற்பொழியும்போர்மழை

* வெய்யன வென்றும் பாடம். † ஈண்ட-மரக்கூட்டத்துடனே. ‡ தடி-மின்னல்.
$ கந்தர்ப்பநகரம்-மன்மதபுரம் பெண்குறி.
¶ மீன் எழும் எனில்கடலிலுள்ள மீன்கள் துள்ளுமென ஆம். மின்னெழும் எனப்பாடமாயின் மின்னல் விளங்குமென பொருள்கொள்க.

தண்டொடுதிகிரிவாளனுமென்றின்னன
மண்டமர்புரியுமாலாழிமாறுற. (௪௭)

மங்கையர்மங்கலத்தாலிமற்றையோர்
அங்கையின்வாங்கினரெவருமன்றியே
கொங்கையின்வீழ்ந்தனகுறித்தவாற்றினால்
இங்கிதனற்புதமின்னுங்கேட்டியால். (௪௮)

மன்னவன்றேவியம்மயன்மடந்தைதன்
பின்னவிழோதியும் * பிறங்கிவீழ்ந்தன
துன்னிருஞ்சுடர்சுடச்சுறுக்கொண்டேறின
இன்னலுண்டெனுமிதற்கேதுவீதென. (௪௯)

என்றனளியம்பிவேறிசைப்பக்கேட்டியால்
இன்றிவணிப்பொழுதியைந்ததோர்கள
வன்றனைக்கோளரியிரண்டுமாறிலாக்
குன்றிடையுழுவையங்குழுக்கொண்டிண்டியே. (௫௰)

வரம்பிலாமதகரியுறையுமவ்வனம்
நிரம்புறவிளைந்தனநெருக்கிநேர்ந்தன
குரம்பறுபிணம்படக்கொன்றமாறிலாப்
புரம்புகவிருந்ததோர்மயிலும்போயதால். (௫௧)

ஆயிரந்திருவிளக்கமையமாட்டிய
சேயொளிவிளக்கதொன்றேந்திச் † செய்யவள்
நாயகன்றிருமனைநின்றுநண்ணுதல்
மேயினள்வீடணன்கோயின் ‡ மென்சொலாய். (௫௨)

பொன்மனைபுக்கவப்பொருவில்போதினில்
என்னைநீயுணர்த்தினைமுடிந்ததில்லென
அன்னையேயதன்குறைகாணென்றாயிழை
இன்னமுந்துயில்கெனவிருகைகூப்பினாள். (௫௩)

§ இவ்விடையண்ணலவ்விராமனேவிய
வெவ்விடையனையபோர்வீரத்தூதனும்
அவ்விடையெய்தினனரிதினோக்குவான்
நொவ்விடைமடந்தைதன்னிருக்கைநோக்கினான். (௫௪)

அவ்வயினரக்கியரறிவுற்றம்மவோர்
செவ்வையிறுயினமைச்செகுத்ததீதென
எவ்வயின்மருங்கினுமெழுந்தனீங்கினர்
வெவ்வயின்மழுவெழுச்சூலவெங்கையார். (௫௫)

---

* பிறங்கி-சுழன்று, † செய்யவள்-ராஜலட்சுமி. ‡ மென்சொலாய் - மிருதுபாஷி.
§ இவ்விடையென்பதற்கு பிராட்டியும் திரிசடையும் பேசிக்கொண்டிருக்கிற இத்தருணத்திலென்று கொள்க.

வயிற்றிடைவாயினர்வளைந்தநெற்றியின்
குயிற்றியவிழியினர்கொடியநோக்கினர்
எயிற்றினுக்கிடையிடையானையாளிபேய்
துயிற்கொள்வெம்பிலனெனத்தொட்டவாயினர். (௯௬)

ஒருபதுகையினரொற்றைச்சென்னியர்
இருபதுதலையினரிரண்டுகையினர்
வெருவருதோற்றத்தர்விகடவேடத்தர்
பருவரையெனமுலைபலவுநாற்றினர். (௯௭)

சூலம்வாள்சக்கரந்தோட்டிதோமரம்
காலவேல்கற்பணங்கற்றகையினர்
ஆலமேயுருவுகொண்டனையமேனியர்
* வாலமேதரித்தவன்வெருவும்வண்மையர். (௯௮)

கரிபரிவேங்கைமாக்கரடியாளிபேய்
அரிநரிநாயெனவணிமுகத்தினர்
வெரிநுறுமுகத்தினர்விழிகண்மூன்றினர்
புரிதருகொம்மையர்புகையும்வாயினர் (௯௯)

எண்ணினுக்களவிடலரியவீட்டினர்
கண்ணினுக்களவிடலரியகாட்சியர்
பெண்ணெனப்பெயர்கொடுதிரியும்பெற்றியர்
துண்ணெனத்துயிலுணர்ந்தெழுந்துசுற்றினர். (௱)

ஆயிடையுரையழிந்தழகன்றேவியும்
தீயினையவர்முகநோக்கித்தேம்பினள்
நாயகன்றூதனும்விரைவினண்ணினன்
ஒய்விலதுயர்மாப்பிணையினும்பரான். (௱௧)

அரக்கியரயின்முதலேந்துமங்கையர்
நெருக்கியகுழுவினர்துயிலுநீங்கினர்
இருக்குநர்பலரிதற்கேதுவென்னெனாப்
பொருக்கெனவவரிடைப்பொருந்தநோக்கினன். (௱௨)

விரிமழைக்குலங்கிழித்தொளிருமின்னெனக்
கருநிறத்தரக்கியர்குழுவிற்கண்டனன்
உருநிறத்தொருதனிக்கொண்டலூழியான்
இருநிறத்துற்றவெற்றியைந்தகாந்தத்தை. (௱௩)

தொடற்கருமரக்கியர்காவல்சுற்றுளாள்
மடக்கொடிச்சீதையாமாதரேகோலாம்

*. வால்அம்-சத்தஜலம்.

கடற்றுணைநெடியதன்கண்ணினீர்ப்பெருந்
தடத்திடையிருந்ததோரன்னத்தன்மையாள். (சுச)

வீடினதன்றறன்யானும்வீகலேன்
தேடினென்கண்டனென்றேவியேயென
ஆடினன்பாடினனண்டமீண்டும்பாய்ந்
தோடினனுலாவினனுவகைத்தேனுண்டான். (சுரு)

எள்ளருமுருவினவ்விலக்கணங்களும்
வள்ளறன்னுரையொடுமாறுகொண்டில
* கள்ளவாளரக்கனற்கமலக்கண்ணனார்
உள்ளுறையுயிரினையொளித்துவைத்தவா. (சுசு)

மூவகையுலகையுமுறையினீக்கிய
பாவிதன்னுயிர்கொள்வானிழைத்தபண்பிதால்
ஆவதேயையமிலரவினீங்கிய
தேவனேயவனிவள்கமலச்செல்வியே. (சுஎ)

மாசுண்டமணியனாள்வயங்குவெங்கதிர்த்
தேசுண்டதிங்களுமென்னத்தேய்ந்துளாள்
காசுண்டகூந்தலாள்கற்புங்காவலும்
ஏசுண்டதில்லையாலறத்துக்கீறுண்டோ. (சுஅ)

புனைகழலிராகவன்புயத்தையோபுகழ்
வனிதையர்திலகத்தின்மனத்தின்மாண்பையோ
வினைகழலரசின்வண்மைவீக்கிடும்
சனகர்தங்குலத்தையோயாதைச்சாற்றுகேன். (சுகூ)

தேவரும்பிழைத்திலர்தெய்வவேதியர்
ஏவரும்பிழைத்திலரறமுமீறின்றால்
யாவதிங்கினிச்செயலரியதெம்பிராற்
காவவென்னடிமையும்பிழைத்தின்றுமன்றே. (எ0)

† கேழிலாணிறையிறைகீண்டதாமெனின்
ஆழியான்முனிவெனுமாழிமீக்கொள
ஊழியினிறுதிவந்துறுமென்றுன்னினேன்
வாழியருலகினிவரம்பினுளெலாம். (எக)

வெங்கனன்முழுகியும்புலன்கள்வீக்கியும்
நுங்குவவருந்துவநீக்கினோற்றவர்
எங்குளர்குலனில்வந்தில்லின்மாண்புடை
நங்கையர்மனத்தவநவிலற்பாலதே. (எஉ)

* அரக்கனென்றது-இழிவுகுறிப்பு, கமலக்கண்ணனாரென்றது-உயர்வுகுறிப்பு.
† கேழ்இலாள்-ஒப்பில்லாத.

பேணநோற்றதுமனைப்பிறவிபெண்மைபோல்
நாணநோற்றுயர்ந்ததுநங்கைதோன்றலால்
மாணநோற்றீண்டிவளிருந்தவாறெலாம்
காணநோற்றிலனவன்கமலக்கண்களால். (௭௩)

முனிபவராக்கியர்முறையினீங்கினர்
இனியவடானலாதியாருமில்லையால்
தனிமையும்பெண்மையுந்தவமுமின்னதே
வனிதையர்க்காகநல்லறத்தின்மாண்பெலாம். (௭௪)

தருமமேகாத்ததோசழக்கன்றன்வினைக்
கருமமேகாத்ததோகற்பின்காவலோ
அருமையேயருமையேயாரிதாற்றுவார்
ஒருமையேயெம்மனோர்க்குரைக்கற்பாலதே. (௭௫)

செல்வமோவதுவவர்தீமையோவிது
அல்லினும்பகலினுமமராட்செய்வார்
ஒல்லுமோவொருவர்க்கீதுறுகண்யாதினி
வெல்லுமோதீவினையறத்தைமெய்ம்மையால். (௭௬)

என்றிவைவினையனவெண்ணிவண்ணவான்
பொன்றிணிநெடுமரப்பொதும்பர்புக்கவண்
நின்றனனவ்வழிநிகழ்ந்ததென்னெனின்
குன்றுபூஞ்சோலைவாயரக்கன்றோன்றினான். (௭௭)

௩ - வது - காட்சிப்படலம் - முற்றிற்று.

(ஆ திருவிருத்தம்-௪௦௭.)

௪ - வது நிந்தனைப்படலம்.

பிராட்டி ராவணனைத் தூஷித்தல்.

சிகரவன்குடுமிநெடுவரையெவையுமொருவழிதிரண்டனவெனை
மகரிகைவயிரகுண்டலமலம்புந்திண்டிற்றோன்புடைவயங்கச்
சகரவேலையினீர்தழுவியகதிரிற்றலைதொறுந்தலைதொறுந்தயங்கும்
வகையபன்மகுடமிளவெயிலெறிப்பக்கங்குலும்பகல்படவந்தான். (௧)

* உருப்பசியுடைவாளெடுத்தனடொடரமேனகைவெள்ளடையுதவச்,
செருப்பினைத்தாங்கித்திலோத்தமைசெல்ல வரம்பையர்குழாம்புடைசுற்றக்,
கருப்புரஞ்சார்துங்கலவையுமலருங்கலந்துமிழ்பரிமளகந்தம், மருப்புடைப்
பொருப்போர்மாதிரக்களிற்றின்வரிக்கைவாண்மூக்கிடைமடுப்ப. (௨)

* ஊரு-தொடை, தொடையிற்பிறந்தவள், ஊருவசி.

நானெய்விளக்கநாலிருகோடிநங்கையரங்கையிலெடுப்ப
மேனிவெக்கெழுந்தமணியுடையணியின்விரிகதிரிருளெலாம்விழுங்கக்
கான்முதற்றொடர்ந்தநூபுரஞ்சிலம்பக்கிண்கிணிகலையொலிப்பப்
பானிறத்தன்னக்குழாம்படர்ந்தென்னப்பற்பலமழலையும்பகர. (௩)

அந்தரம்புகுந்ததுண்டெனமுனிவுற்றருந்துயினீங்கினானண்டைச்
சந்திரவதனத்தருந்ததியிருந்ததண்ணறுஞ்சோலையின்றனையோ
மந்திரம்யாதோயாரொடேபோமோவென்றுமாமனமறுக்குறலால்
இந்திரன்முதலோரிமைப்பிலாநாட்டமுகிழ்த்தனருயிர்ப்பவிந்திருப்ப. (௪)

நீணிறக்குன்றினெடிதினிற்றாழ்ந்தநீத்தவெள்ளருவியினிமிர்ந்த
பானிறப்பட்டின்மாலையுத்தரியம்பண்புறப்பசும்பொனாரத்தின்
மானிறப்புடவியுடையுறப்பாந்தவளர்கதிரிளவெயில்பொருவச்
சூனிறக்கொண்மூக்கிழித்திடைதுடிக்குமின்னெனமார்பினூறுளங்க. (௫)

தோடொறுந்தொடர்ந்தமகரிகைவயிரக்கிம்புரிவலயமாச்சுடர்கள்
நாடொறுஞ்சுடறுங்கலிகெழுவிசும்பினொளாடுகோளினைநக்கத்
தாடொறுந்தொடர்ந்ததழங்குபொற்கழலின் றகையொளிநெடுநிலந்தடவக்
கேடொறுந்தொடர்ந்தமுறுவல்வெண்ணிலவின்முகமலரிரவினுங்கிளர. ()

தன்னிறத்தோடுமாறுதந்திமைக்குநீவியந்தழைபடவுடுத்த
பொன்னிறத்தூசுகருவரைமருங்கிற்றழுவியபுதுவெயில்பொருவ
மின்னிறக்கதிரிற்சுற்றியபசும்பொன்விரற்றலைவயிரொளிக்காசின்
கன்னிறக்கற்றைநெடுநிழல்பூத்தகற்பகமுழுவனங்கவின. (௭)

* சன்னவீரத்தகோவைவெண்டாளமூழியினிறுதியிற்றனித்த
பொன்னெடுவரையிற்றோற்றியகோளுநாளுமொத்திடையிடைபொலிய
மின்னொளிமௌலியுதயமால்வரையின்மீப்படர்வெங்கதிர்ச்செல்வர்
பன்னிருவரினுமிருவரைத்தவிர்வுற்றுதித்ததோர்படியொளிபரப்ப. (௮)

பயிலெயிற்றிரட்டைப்பணைமருப்பொடியப்படியினிற் † பரிபவஞ்சுமந்த
மயிலடித்தொழுக்கினனையமாமதத்தமாதிரக்காவன்மால்யானை
கயிலையிற்றிரண்டமுரண்டொடர்தடந்தோட்கனகனதுயர்வரங்கடந்த
அயிலெயிற்றரியின்சுவடுதன்கரத்தாலனைந்தமாக்கரியினின்றஞ்ச. (௯)

அங்கயற்கருங்கணியக்கியர்துபக்கிலரம்பையர்விஞ்சையர்க்கமைந்த
மங்கையர்நாகமடந்தையர்சித்தர்நாரியரரக்கியர்முதலாக்
குங்குமக் ‡ கொங்கைக்குவிமுலைக்கனிவாய்க்கோகிலந்துயர்ந்தமென்குதலை
மங்கையரீட்டமால்வரைதழீஇயமஞ்ஞையங்குழுவெனமயங்க. (௧௰)

---

* சன்னவீரம்-கழுத்திலணிவதொருவகைமாலை இக்காலத்து முந்நூலென்ப.
† பரிபவம்-துன்பம், ‡ கொங்கு வாசனை, ஐ-சாரியை என்க.

தொளையுறுபுழைவேய்த்தூக்கிசைக்கானத்துயலுறுவொருசிலைபடா
இளையவர்மிடறுமின்கிலையிசைப்பக்கின்னரர்முறைநிறுத்தெடுத்த
கிளையுறுபாடல் * சில்லரிப்பாண்டிறழுவியமுழவொடுகெழுமி
அளையுறுமரவும்முதுவாயுகுப்பவண்டுமும்மையமுமளப்ப. (கக)

அன்னபூஞ்சதுக்கஞ்சாமரை † யுக்கமாதியாம்வரிசையிற்கமைந்த
உன்னரும்பொன்னின்மணியினிற்புனைந்தவிழைக்குலமுழைக்குலமனைய
மின்னிடைச்செவ்வாய்க்குவிமுலைப்பணைத்தோள்வீங்குதேரல்குலார்தாங்கி
நன்னிறக்காரின்வரவுகண்டுவக்குநாடகமயிலெனநடப்ப. (கஉ)

தந்திரிநெறியிற்றூக்குறுகருவிதூக்கினமொழுவிதச்சுதியின்
முத்துறுகுணிலோடியையவுறுகுறட்டிற்சில்லரிப்பாண்டிலின்முறையின்
மந்திரகீதத்திசைப்பதந்தொடாவகையுறுகட்டளைவழாமல்
அந்தரவானத்தரம்பையர்கரும்பிற்பாடலாரருகுவந்தகவ. (கங)

அந்தில்வே ‡ ளநங்கனழல்படத்தூர்ந்தவயின்முகப்பகழிவாயறுத்த
வெந்துறுபுண்ணின்வேனுழைந்தாங்குவெண்மதிப்பசுங்கதிர்விரவ
மந்தமாருதம்போய்மலர்தொறும்வாரிவயங்குநீர்மம்மரின்வருதேன்
சிந்துறண்டொளியின்சீகரத்திவலையுருக்கியசெம்பெனத்தெரிப்ப. (கச)

இழைபுரைமருங்குலிறுமிறுமெனவுமிறுகலாவனமுலையிரட்டை
$ உழைபுகுசெப்பினொளிதாமறைத்தவுத்தரியத்தினமொல்கிக்
குழைபுகுகமலங்கோட்டினர்நோக்குங்குறுநகைக்குமுதவாய்மகளிர்
மழைபுரைதடங்கட்செங்கடையீட்டமார்பினுந்தோளினுமலைய. (கரு)

மாலையுஞ்சாந்துங்கலவையும்பூணும்வயங்குநுண்டேசொடுகாசும்
சோலையின்றொழுதிக்கற்பகத்தருவுதிகளுங்கொண்டுபின்றொடரப்
பாலின்வெண்பரவைத்திரைகருங்கிரிமேற்பரந்தெனச்சாமரைபதைப்ப
வேலைநின்றுயருமுயலில்வெண்மதியின்வெண்குடைமீதுறவிளங்க. (கசு)

ஆர்தருமகிழியருவரையிலங்கையடிபெயர்ந்திடுதொறுமழுந்தி
நேர்தரும்பரவைப்பிறழ்திரைதவழ்ந்துநெடுந்தடந்திசைதொறுமிரச்
சார்தருங்கடுவினையிறுடைப்பகுவாயநந்தனுந்தலைதடுமாற
மூரிநீராடையிருநிலமடந்தைமுதுகுளுக்குற்றனண்முரல. (கஎ)

கேடகத்தோடுமழுவெழுச்சூலமங்குசங்கற்பணங்கிடுகோ
டாடகச்சுடர்வாளயில்சிலைகுலிசமுதலியவாயுதமனைத்தும்
தாடகைக்கிரட்டியெறுழ்வலிக்கமைந்தகைமையர்தடவரைபொறுக்கும்
சூடகத்தடக்கைச்சுடுசினத்தடுபோரரக்கியர்தலைதொறுஞ்சுமப்ப. (கஅ)

---

* சில்லரி-தாளம் பாண்டில்-பிரமதாளம், † உக்கம்-விசிறி.
‡ அநங்கன்-உருவமில்லாதவன்; மன்மதன், $ உழை-ஏழனுருபு; கச்சினிடத்தென்க.

விரிதளிர்முகைபூக்கொம்படைமுதல்வேரிவையெலாமணிபொனால்விரிந்த
தருவுயர்சோலைதிசைதொறுங்கரியத்தழலுமிழுயிர்ப்புமுன்றவழத்
திருமகளிருந்ததிசையறிந்திருந்துந்திசைப்புறஞ்சிந்தையன்கெடுத்த
தொருமணிநேடும்பதப்பஃறலையரவினுழைதொறுழைதொறுமுலாவ. (கக)

இனையதோர்தன்மையெறுழ்வலியரக்கரோர்தல்வந்தெய்துகின்றுழை
அனையதோர்தன்மையஞ்சனைச்சிறுவன்கண்டனனமைவுறநோக்கி
வினையமுஞ்செயலுமேல்விளைபொருளுமிவ்வழிவிளங்குமென்றெண்ணி
வினைகழலிராமன்பெரும்பெயரோதியிருந்தனன்வந்தயன்மறைந்தே. (உ0)

ஆயிடையரக்கனரம்பையர்குழுவுமல்லவும்வேறயலகல
மேயினன்பெண்ணின்விளக்கெனுந்தகையாளிருந்துழியாண்டவன்வெருவி
போயினவுயிராளாமெனநடுங்கிப்பொறிவரியெறுழ்வலிப்புகைக்கட் [ப்
காய்சினவுழுவையின்னியலந்தகலையிளம்பிணையெனக்கரைந்தாள். (உக)

வேறு.

கூசியாவிகுலைவுறுவாளையும்
ஆசையாலுயிராசழிவானையும்
காசில்கண்ணிணைசான்றெனக்கண்டனன்
ஊசலாடியுளையுமுளத்தினான். (உஉ)

வாழிசானகிவாழியிராகவன்
வாழிநான்மறைவாழியரந்தணர்
வாழிநல்லறமென்றுறவாழ்த்தினான்
ஊழிதோறும்புதிதுறுங்கீர்த்தியான். (உ௩)

அவ்விடத்தருகெய்தியரக்கன்றான்
எவ்விடத்தெனக்கின்னருளீவது
நொவ்விடைக்குயிலேநுவல்கென்றனன்
வெவ்விடத்தையமிழ்தெனவேண்டுவான். (உச)

ஈசற்காயினுமீடழிவுற்றிறை
வாசிப்பாடழியாதமனத்தினான்
ஆசைப்பாடெமக்காணுமடர்த்திடக்
கூசிக்கூசியினையனகூறினான். (உ௫)

இன்றிறந்தனநாளையிறந்தன
என்றிறந்தருந்தன்மையிதாலெனைக்
கொன்றிறந்தபின்கூடுதியோகுழை
சென்றிறங்கிமறந்தருசெங்கணாய். (உ௬)

உலகமொன்றொடிரண்டொருங்கோம்புமென்
அலகில்செல்வத்தரசியலாணையில்

திலகமேயுன்றிறத்தநங்கன்றரு
கலகமல்லதெளிமையுங்காண்டியோ. (௨௭)

பூந்தண்வார்குழற்பொற்கொழுந்தேபுகழ்
ஏந்துசெல்வமிகழ்ந்தனையின்னுயிர்க்
காந்தன்மாண்டிலன்காடுகடந்துபோய்
வாழ்ந்தவாழ்வதுமானுடர்வாழ்வன்றே. (௨௮)

நோற்கின்றார்களுநுண்பொருணுண்ணிதின்
பார்க்கின்றாரும்பெறும்பயன்பார்த்தியேல்
வார்க்குன்றாமுலையென்சொன்மௌலியால்
ஏற்கின்றாரொடேனுறையின்பமால். (௨௯)

* பொருளும்யாழும்விளரியும்பூவையும்
மருளுநாளுமழலைவழங்குவாய்
தெருளுநான்முகன்செய்ததுன்சிந்தையின்
அருளுமின்மருங்கும்மரிதாக்கியோ. (௩௦)

ஈண்டுநாளுமிளமையுமீண்டில
மாண்டுமாண்டுபிறிதுறுமாலைய
வேண்டுநாள்வெறிதேவிளிந்தாலினி
யாண்டுவாழ்வ்விடருழன்றாழ்தியோ. (௩௧)

இழவெனக்குயிர்க்கெய்தினுமெய்தக
குழைமுகத்திநின்சிந்தனைகோடினால்
பழகவிற்புறம்பண்பிலைகாமத்தோ
டழகினுக்கினியாருளராவரே. (௩௨)

† பெண்மையும்மழகும்பிறழாமனத்
திண்மையும்முதல்யாவையுஞ்செய்யவாய்க்
கண்மையும்பொருந்திக்கருணைப்படர்
வண்மையென்கொல்சனகரின்மாண்டவா. (௩௩)

வீட்டுங்காலத்தலறிய ‡ மெய்க்குரல்
கேட்டுங்காண்டற்கிருத்திகொல்கிள்ளைநீ
நாட்டுங்கானெடுநல்லறத்தின்பயன்
ஊட்டுங்காலத்திகழ்வதுறுங்கொலோ. (௩௪)

தக்கதென்னுயிர்வீடெனிற்றாழ்கிலா
தொக்கசெல்வமுலையுமொருத்திநீ

---

* பொருள்—பிள்ளை, † பெண்ணுக்குள்ள நற்குணங்களெல்லா முன்னிடத்திலே யிருந்தும் தாக்ஷண்ணியமும் ஈகையுமில்லையென்கிறான் என்றல்லெனக்குஉயிர்பலித வேணுமென்கை, பலி-பச்சை.

‡ மாரீசன்-ராமன்குரலாக ஆலட்சமணா யென்றது மெய்க்குரல்.

புக்குயர்ந்ததெனும்புகழ்போக்கிவே
றுக்கதென்னுமுறுபழி * கோடியோ. (௧௫)

தேவர்தேவியர்சேவடிகைதொழும்
தாவின்மூவுலகின்றனிநாயகம்
மேவுகின்றதுநுன்கண்விலக்கினை
யாவரேழையர்நின்னினிலங்கிழாய். (௧௬)

குடிமைமூன்றுலகுஞ்செயுங்கொற்றத்தென்
அடிமைகோடியருளுதியாலெனு
முடியின்மீதுமுகிழ்த்துயர்கையினன்
படியின்மேல்விழுந்தான்பழிபார்க்கலான். (௧௭)

வேறு.

காய்ந்தனசலாகையன்னவுரைவந்துகதுவாமுன்னம்
தீய்ந்தனசெவிகளுள்ளந்திரிந்ததுசிவந்தசோரி
பாய்ந்தனகண்களொன்றும் † பரிந்திலளுயிர்க்கும்பெண்மைக்
கேய்ந்தனவல்லாவெய்யமாற்றங்களினையசொன்னாள். (௧௮)

மல்லடுதிரடோள்வஞ்சன்மனம்பிறிதாகும்வண்ணம்
கல்லொடுந்தொடர்ந்தநெஞ்சங்கற்பின்மேற்கண்டதுண்டோ
இல்லொடுந்தொடர்ந்தமாதர்க்கேய்வனவல்லவெய்ய
சொல்லிதுதெரியக்கேட்டிதரும்பெனக்கனன்றுசொன்னாள். (௧௯)

மேருவையுருவல்வேண்டின்விண்பிளந்தேகல்வேண்டின்
நீரெழுபுவனம்யாவுமுற்றுவித்திடுதல்வேண்டின்
‡ ஆரியன்பகழிவல்லதறிந்திருந்தறிவிலாதாய்
சீரியவல்லசொல்லித்தலைபத்துஞ்சிந்துவாயோ. (௨௦)

அஞ்சினையாதலானன்றாரியனற்றநோக்கி
மஞ்சனைமானொன்றேவிமாயையான்மறந்துவந்தாய்
உய்ஞ்சனைபோதியாகின்விடுதியுன்குலத்துக்கெல்லாம்
நஞ்சினையெதிர்ந்தபோதுநோக்குமேநினதுநாட்டம். (௨௧)

பத்துளதலையுந்தோளும்பலபலபகழிதூவி
வித்தகவில்லினாற்குத்திருவிளையாடற்கேற்ற
சித்திரவிலக்கமாகுமல்லதுசெருவிலேற்கும்
சத்தியைபோலின்மேனாள்சடாயுவாற்றரையின்வீழ்ந்தாய். (௨௨)

தோற்றனைபறவைக்கன்றுதுள்ளுநீர்வெள்ளஞ்சென்னி
ஏற்றவன்வாளால்வென்றாயன்றெனினிறத்தியன்றே

* கொள்தி-கோடி.

† பரிந்திலள் என்றது—அவள்பேசுகிறது பெண்கள்போலன்று ஆண்கள்போல் பேசுகிறாளென்க, தன்வுயிர்க்குப்பரிந்திலளெனவுமாம்; ‡ ஆரியன்-ஸ்ரீராமன்.

கோற்றகோன்புடையவாழ்நாள்வாமிவைதுனித்தவெல்லாம்
கூற்றினுக்கன்றேவீரன்சரத்திற்குங்குறித்ததுண்டோ. (௪௩)

பெற்றுடைவாளுநாளும்பிறந்துடையுரனும்பின்னும்
மற்றுடையெவையுந்தந்தமலரயன்முதலோர்வார்த்தை
விற்றொடையிராமன்கோத்துவிடுதலும்விலக்குண்டெல்லாம்
இற்றிடைந்திருதன்மெய்யேவிளக்கின்முன்னிருளுண்டாமோ. (௪௪)

குன்றுநீயெடுத்தநாடன்சேவடிக்கொழுந்தாலுன்னை,
வென்றவன்புரங்கள்வேவத்தனிச்சரந்துரந்தமேரு
என்றணைக்கணவனுற்றற்குரனிலாதிற்றுவீழ்ந்த
அன்றெழுந்துயர்ந்தவோசைகேட்டிலைபோலுமம்மா. (௪௫)

வேறு.

மலையெடுத்தெண்டிசைகாக்குமாக்களை
நிலைகெடுத்தேனெனுமாற்றநேருநீ
சிலையெடுத்திளையவனிற்கச்சேர்ந்திலை
தலையெடுத்தின்னமுமகளிற்றாழ்தியோ. (௪௬)

* ஏழைநின்னொளித்துறையின்னதாமென
வாழியெங்கோமகனறியவந்தநாள்
ஆழியுமிலங்கையுமழியத்தாழுமோ
ஊழியுந்தீயுமுன்னியிரோடோயுமே. (௪௭)

வெஞ்சினவரக்கரைவிளித்துவீயுமோ
வஞ்சனைநீசெயவள்ளல்சீற்றத்தால்
எஞ்சவிலுலகெலாமெஞ்சுமெஞ்சுமென்
றஞ்சுகின்றேனிதற்கறனுஞ்சான்றரோ. (௪௮)

அங்கண்மாஞாலமும்விசும்புமஞ்சவாழ்
வெங்கணுய்புன்றொழில்விலக்கிமேற்கொளாய்
செங்கண்மானுன்முகன்சிவனென்றேகொலோ
எங்கணுயகனையுநினைந்ததேழைநீ. (௪௯)

மானுயரிவரென்னமனக்கொண்டாயெனின்
† கானுயர்வரைநிகர்கார்த்தவீரியன்
தானொருமனிதனாற்றளர்ந்துளானெனின்
தேனுயர்தெரியலான்றன்மைதேர்தியால், (௫௦)

இருவரொன்றிகழ்ந்தனையென்னின்யாண்டெல்லை
ஒருவனன்றேயுலகழிக்குமூழியான்
செருவருங்காலையென்மெய்ம்மைதேர்தியால்
பொருவருந்திருவிழந்தாயம்பொன்றுவாய். (௫௧)

---

* ஏழை என்டு அறிவில்லாதவன், † கானுயர்—கார்த்தவீரியன்—விருக்ஷசாதிகளைப் போற் கைகளும் மலைபோற் கார்த்தவீரியனுமாகக் கொள்க.

பொற்கணன்றம்பியென்றினையபோர்த்தொழில்
விற்கொணனைபொருவுதோளவுணர்வேறுளார்
நற்கணார்நல்லறந்துறந்தநாளினும
இற்கணலிறந்திலர்றந்துநீங்கினார்.   (௫௨)

வேறு.

* பூவிலோனாதியாகப்புலன்கள்போநெறியிற்போகாத்
தேவரோவவுணர்தாமோநிலைநின்றவினையிற்றீர்ந்தார்
ஏவலெவ்வுலகஞ்செய்யச்செல்வநிற்கிசைந்தவென்றால்
பாவமோமுன்னிசெய்ததருமமோதெரியப்பாராய்.   (௫௩)

† இப்பெருஞ்செல்வநின்கணீந்தபேரீசன்யாண்டும்
அப்பெருஞ்செல்வந்துய்ப்பானின்றுமாதவத்தினன்றே
ஒப்பருந்திருவுநீங்கியுறவொடுமுலக்கவுன்னித்
தப்புதியறத்தையேழாய்தருமத்தைத்காமியாதே.   (௫௪)

மறந்திறம்பாததோலாவலியினொனிஜுமாண்டார்
அறந்திறம்பினருமக்கட்கருடிறம்பினருமன்றே
பிறந்திருந்துழலும்பாசப்பிணக்குடைப்பிணியிற்றீர்ந்தார்
துறந்தரும்பகைகண்மூன்றுந்துடைத்தவர்பிறர்யார்சொல்லாய்.   (௫௫)

தென்றமிழுரைத்தோன்முன்னுடைதிர்முனிவர்யாரும்
புன்றொழிலரக்கர்க்காற்றேநோற்கிலம்புகுந்தபோதே
கொன்றருணின்னலன்னார்குறைவது ‡ சாதங்கோவே
என்றனர்யானேகேட்டேனீயிதறிகையவசெய்தாய்.   (௫௬)

உன்னையுங்கேட்டுமற்றுன் னூற்றமுமுடையநாளும்
பின்னையிவ்வரக்கர்சேனைப்பெருமையுமுனிவர்பேணிச்
சொன்னபினுங்கைமூக்குமும்பியர்தோளுந்தாளும்
சின்னபின்னங்கள்செய்தவத்தனைநீசிந்தியாயோ.   (௫௭)

ஆயிரந்தடக்கையானின்னைநான்குகரமும்பற்றி
வாய்வழிகுருதிசோரக்குத்திவான்சிறையில்வைத்த
தூயவன்வயிரத்தோள்கணித்தவன்றொலைந்தமாற்றம்
நீயறிந்திலையோவேறுநெறியறிந்திலாதநீசா.   (௫௮)

கடிக்கும்வல்லரவுங்கேட்குமந்திரங்களிக்கின்றேயை
அடைக்குமீதடாதென்றுன்றவேதவோடறிவுகாட்டி
இடிக்குநரில்லையுள்ளாரெண்ணியதெண்ணியுன்னை
முடிக்குநரென்றபோதுமுடிவன்றிமுடிவதுண்டோ.   (௫௯)

---

* பூவிலோன் பூவேவீடாகவுடைய பிரமன். † இப்பெருஞ்செல்வநின்கணீந்த தேரீசன் யாண்டுமப்பெருஞ் செல்வந்துய்ப்பானின்று மாதவத்தினன்றே எனப்பாடபேதமும் உண்டு. ‡ சாதம்—சத்தியம்.

வேறு.

என்றறத்துறைகேட்டலுமிருபதுநயனம்
மின்றிறப்பனவொத்தனவெயில்விடுபெருவாய்
குன்றிறத் * தெழித்துரப்பிலன்குறிப்பதென்காமன்
தன்றிறத்தையுங்கடந்ததுசீற்றத்தின்றகைமை. (௪௰)

வளர்ந்தநாணினன்மாதிரமனைத்தையுமறைவித்
தளர்ந்ததோளினனல்லெரிகண்ணினனிவளைப்
பிளந்துதின்பெனென்றுடன்றனன்பெயர்ந்தனன்பெயரான்
கிளர்ந்தசீற்றமுங்காதலுமெதிரெதிர்கிடைப்ப. (௪௧)

அன்னகாலையினநுமனுமருந்ததிக்கற்பின்
என்னையாளுடைநாயகன்றேவியையென்முன்
சொன்னநீசன்கைதொடுவதன்முன்றுகைத்துழக்கிப்
பின்னைநின்றதுசெய்குவேனென்பதுபிடித்தான். (௪௨)

தனியினின்றனன்றலைபத்துங்கடி † துகத்தாக்கிப்
பனியின்வேலையிலிலங்கையைக்கீழுறப்பாய்ச்சிப்
புனிதமாதவத்தணங்கினைச்சுமந்தனன்போவான்
இனிதினென்பதுநினைந்தனன்காயபிலைசர்திருந்தான். (௪௩)

ஆண்டவாளரக்கன்கனன்றண்டத்தையழிப்பான்
மூண்டகாலவெந்தீயெனமுற்றியசீற்றம்
நீண்டகாதனீர்நீத்தத்தின்வீவுறுநிலையின்
மீண்டுநின்றொருதன்மையாலிவையிவைவிளம்பும். (௪௪)

வேறு.

கொல்வெனென்றுடன்றேனுன்னைக்கொல்கிலன்குறித்துச்சொன்ன
சொல்லுளவவற்றுக்கெல்லாங்காரணந்தெரியச்சொல்லின்
ஒல்வதீதொல்லாதீதென்றெனக்குமொன்றுலகத்துண்டோ
வெல்வதுந்தோற்றலுநும்விளையாட்டின்விளைந்தமேனுள். (௪௫)

ஒன்றுகேளுரைக்கசிற் ‡ கோருயிரெனவுரியோன்றன்னைக்
கொன்றுகோளிழைத்தானீநின்னுயிர்விடற்கூற்றங்கூடும்
என்றனாருயிருநீங்குமென்பதையையவெண்ணி
அன்றுநான்வஞ்சஞ்செய்ததாரெனக்கமரினேர்வார். (௪௬)

மானென்பதறிந்துபோனமானுடராவார்மீண்டி
யானென்பதறிந்தால்வாரரேழைமையெண்ணிநோக்கல்
தேனென்பதறிந்தசொல்லாய்தேவர்தாம்யாவரோயென்
கோனென்பதறிந்தபின்னைத்திறம்புவார்குறையினல்லால். (௪௭)

* தெழித்து-அதட்டி, † உக-உதிர, ‡ ஓர்-ஒப்பற்ற.

வென்றொருவிருப்பயார்க்குமேலவர்விளிவிலாதோர்
என்றொருமிருப்பவன்றேயிந்திரனேவல்செய்ய
ஒன்றுதவுலகமூன்றுமுணர்கின்றவொருவன்யானே
மென்றேளாயிதற்குவேறோர்காரணம்விரிப்பதுண்டோ. (௬௮)

மூவருந்தேவர்தாமுமுரணாகமுற்றுங்கொற்றம்
பாவைநின்பொருட்டினாலோர்பழிபெறப்பயன்றீர்நோன்பின்
ஆவியின்மனிதர்தம்மையஞ்சிலேனவரையீண்டுக்
கூவிநின்றேவல்கொள்வென்காணுதிகுதலைச்சொல்லாய். (௬௯)

சிற்றியற்சிறுமையாற்றல்சிறுதொழின்மறவரோடே
முற்றிய * தாவில்வீரமுனிவெங்கணைவிளையாதேனும்
இற்றையிற்பகலினெய்தியிருவரையொருகையாலே
பற்றினென்கொணருந்தன்மைகாணுதிபழிப்பிலாதாய். (௭௦)

பதவியமனிதரேனும்பைந்தொடிநின்னைத்தந்த
உதவியையுணரநோக்கினுயிர்கொலைக்குரியரல்லர்
சிதைவுறலவர்க்குவேண்டிற்செய்திறன்றேர்ந்ததெண்ணின்
இதனினக்கீதேயாகினியற்றுவல்காண்டியின்னும். (௭௧)

பன்னீரயோத்திநண்ணிப்பரதனேமுதலினோராண்
ஒன்னவர்தம்மையெல்லாமுயிர்குடித்தூழிசதீயின்
வெள்ளநீர்மிதிலையோரைவேரறுத்தெளிதினெய்திக்
கொள்வெனின்னுயிருமென்னையறிந்திலைகுறைந்தாளாய். (௭௨)

ஈதுரைத்தழன்றுபொங்கியெதிர்கதிர்வாளைநோக்கித்
தீதுயிர்க்கிழைக்குநாளுந்திங்களோரிரண்டிற்றேய்ந்த
தாதலினின்றதெண்ணென்றறிந்தவாறறிவாயென்னாப்
போதரிக்கண்ணினாளையகத்துவைத்தரப்பிப்போனான். (௭௩)

அஞ்சுவித்தானுமொன்றாலறிவுறத்தேற்றியானும்
வஞ்சியிற்செவ்வியாளைவசித்தென்பால்வருவீரன்றால்
நஞ்சுமக்காவெனென்னாநகையிலாமுகத்துப்பேழ்வாய்
வெஞ்சினத்தரக்கிமார்க்குவேறுறவுணர்த்திப்போனான். (௭௪)

போயினனரக்கன்பின்னைப்பொங்கராநுங்கிக்கான்ற
தூயவெண்மதியையொத்ததோகையைத்தொடர்ந்துசுற்றித்
தீயவல்லரக்கிமார்கடெழீஇத்தெழித்துரப்பிச்சிந்தை
மேயினவண்ணமெல்லாம்விளம்புவருடன்றுமிக்கார். (௭௫)

வேறு.

† முன்முன்னின்றார்கண்கனல்சிந்தமூண்டுகுற்றார்
மின்மின்னென்னுஞ்சூலமும்வேலுமிலையோச்சிக்

* தா இல்—வருத்தமில்லாத. † முன்முன் ஒருத்திக்கு முன்னே ஒருத்தி [illegible]னவுமாம்.

கொன்மின்கொன்மின்கொன்றுகுறைத்துக்குடாராத்
தின்மின்றின்மினென்றுதெழித்தார்சிலரெல்லாம். (எசு)

* வையந்தந்தான்முகன்மைந்தன்மகன்மைந்தன்
ஐயன்வேதமாயிரம்வல்லோனறிவாளன்
மெய்யன்புன்பால்வைத்துளதல்லால்வினைவென்றோன்
செய்யும்புன்மையாதுகொலென்றார்சிலரெல்லாம். (எஎ)

மண்ணிற்றீயமானுயர்தத்தம்வழியோடும்
பெண்ணிற்றீயோய்நின்முதன்மாயும்பிணிசெய்தாய்
புண்ணிற்கோலிட்டாலனசொல்லிப்பொதுநோக்கால்
எண்ணிக்காணாய்மெய்ம்மையுமென்றார்சிலரெல்லாம். (எஅ)

புக்கவழிக்கும்போந்தவழிக்கும் † புகழ்வெந்தீ
ஒக்க ‡ விதைப்பாயுற்றனையன்றோவுணர்வில்லாய்
இக்கணமிற்றாய்முந்தினமெல்லாமினிவாழாய்
சிக்கவுரைத்தேமென்றுதெழித்தார்சிலரெல்லாம். (எகூ)

சொல்வானுற்றோர்பெற்றிமையாதுங்குறையாதான்
வெல்வானக்கோன்றின்னுமின்வம்மென்பவர்மெய்யும்
வல்வாய்வெய்யோனேவலுமெல்லாமனம்வைத்தான்
நல்லாணல்லகண்கள்கலுழ்ந்தேநகுகின்றான். (அ0)

இன்னோரன்னவெய்தியகாலத்திடைநின்றாள்
முன்னேசொன்னேன்கண்டகனாவின்முடிவம்மா
பின்னேவாளாபேதுறவீரேற்பிழையென்றாள்
அன்னோனன்றென்றாரவரெலலாமறிவுற்றார். (அக)

அறிந்தாளன்னமுச்சடையென்பாளவள்சொல்லப்
பிறிந்தார்சிற்றமன்னனையஞ்சிப்பிறிதில்லா
செறிந்தாராயதீவினையன்னார்தெறலெண்ணார்
நெறிந்தாரோவிப்பேதையுமாவிநிலைநின்றாள். (அஉ)

ச - வது - நிந்தனைப்படலம் - முற்றிற்று.

(ஆ திருவிருத்தம்-ச அக.)

———

* வையத்-மைந்தன்-உலகத்தைத்தந்தவன் பிரமன், அவன் மைந்தன் புலத்தியன், அவன் மைந்தன்விச்சிரவாகு அவன் தநயன் இராவணன்.

† புகைவெந்தீ என்றும் பாடம், புகைநிறைவெப்பமுள்ள நெருப்பு. புகழ்வெந்தியென்றும் பாடமாயின் இருதலத்துப் புகழைபும் அரக்கராகிய நெருப்பிலே வீழ்த்தினையென்க, ‡ விதைத்தல்-வளரச்செய்தல்.

ரு - வது. உருக்காட்டுப் படலம்.

சிறியதிருவடிதம்வடிவைப் பிராட்டிக்குக் காட்டுதல்.

---

* காண்டற்கொத்தகாலமுமீதேதெறுகாவல்
தூண்டற்கொத்தசிந்தையினருந்துயிலில்லார்
வேண்டத்துஞ்சாரென்றொருவிஞ்சைவினைசெய்தான்
மாண்டற்குற்றாராமெனவெல்லாமயர்வுற்றார். (க)

துஞ்சாதாருந்துஞ்சுதல்கண்டாகியராற்றாள்
நெஞ்சாலொன்றுமுய்வழிகாணாணுகின்றாள்
அஞ்சாநின்றாள்பன்னெடுநாளுமழிவுற்றாள்
எஞ்சாவன்பாலின்னபகர்ந்தாங்கிடருற்றாள். (உ)

வேறு.

† கருமேகநெடுங்கடல்காரனையான்
தருமேதனியேனைதாருயிர்தான்
உருமேறுறழ்வெஞ்சிலைநாணொலிதான்
வருமேயுரையாய்வலியார்வலியே. (ங)

கல்லாமதியேகதிர்வாணிலவே
செல்லாவிரவேசிறுகாவிருளே
எல்லாமெனையேமுனிவீர்நினையா
வில்லாளனையாதும்விளித்திலிரோ. (ச)

தழல்வீசவுலாய்வருவாடைதழீஇ
அழல்வீரெனதாவியறிந்திலிரோ
நிழல்வீரையனோடுடனீர்நெடுநாள்
உழல்வீர்கொடியீருரையாடிலிரோ. (ரு)

வாராதொழியானெனுமுண்மையினால்
‡ ஓராயிரகோடியிடர்க்குடையேன்
தீராவொருநாள்வலிசேவகனே
நாராயணனேதனிநாயகனே. (சு)

தருவொன்றியகானடைவாய்தவிர்நீ
வருவென்கிலநாளினின்மாநகர்வாய்
இருவென்றனையின்னருடானிதுவேல்
ஒருவென்றனியாவியையுண்ணுதியோ. (எ)

பேணும் § முணர்வேயுயிரேபெருநாள்
நாணின்றுழல்வீர்தனிநாயகனைக்

---

* காணச்சமையமிடையாமையைக்குறித்தகாலமுமென்றார்- அருமைச்சிறப்பு
† கருமேகத்தினுநெடுங்கடலினுமுள்ள கருநிறத்தை ஒத்தவனெனவுமாம்.
‡ ஓராயிரகோடி-அளவிறந்தகோடி. §-உணர்வே-மனதே.

காணுந்துணையுங்கழிவீரலிர்நான்
பூணும்பழியோவொருந்துவதோ. (அ)

முடியாமுடிமன்னன்முடிந்திடவும்
படியேழுநொடிந்துயர் * பாவிடவும்
மடியாநெறிவந்துவனம்புகுதும்
கொடியார்வருமென்றகுலாவுவதோ. (க)

என்றென்றயிர்விம்மியிருந்தழிவாள்
மின்றன்னுமருங்குல்விளங்கிழையாள்
ஒன்றென்னுயிருண்டெனினுண்டிடர்யான்
பொன்றும்பொழுதேபுகழ்பூணுமெனு. (க0)

வேறு.

பொறையிருந்தாற்றியென்னுயிரும்போற்றினேன்
அறையிருங்கழலவற்காணுமாசையால்
நிறையிரும்பல்பகனிருதர்நீணகர்
சிறையிருந்தேனையப்புனிதன்றீண்டுமோ. (கக)

உன்னினர்பிறரெனவுணர்ந்துமுய்ந்தவர்
† சொன்னனசொன்னனசெவியிற்றூங்கவும்
மன்னுயிர்காத்திருங்காலம்வைகினேன்
என்னின்வேறரக்கியர்யாண்டையார்கொலோ. (கஉ)

சொற்பிரியாப்பழிசுமந்துதூங்குவேன்
நற்பிறப்புடைமையுநாணுநன்றரோ
கற்புடைமடந்தயர்கதையுளோர்கடாம்
இற்பிரிந்துய்ந்தவர்யாவர்யானலால். (கங)

பிறர்மனையெய்தியபெண்ணைப் ‡ பேணுதல்
திறனலதென்றுயிர்க்கிறைவன்றீர்ந்தனன்
புறனலரவனுறப்போதுபோக்கியான்
அறலலதியற்றிவேறென்கொண்டாற்றுகேன். (கச)

எப்பொழுதிப்பெரும்பழியினெய்தினேன்
அப்பொழுதேயுயிர்துறக்குமாணையேன்
ஒப்பரும் $ பெருமறுவுலகமோதயான்
துப்பழிந்துய்வதுதுறக்கந்தன்னவோ. (கரு)

அன்பழிசிந்தையராயவாடவர்
வன்பழிசுமக்கினுஞ்சுமக்கவானுயர்
தன்பழிபெரும்புகழ்க்குலத்துட்டோன்றினேன்
என்பழிதுடைப்பவரென்னின்யாவரே. (கசு)

---

* பாவிடவும்—பாவவும், † சொன்னன சொன்னன—சொல்லுமவைகளெல்லாம்,
‡ பேணுதல்-ஈண்டு வேண்டல், $ பெருமறு—பெரியகுற்றம்.

வஞ்சனைமானின்பின்மன்னைப்போக்கியென்
* மஞ்சனைவைதுபின் வழிக்கொள்வாயெனு
நஞ்சனையானகரும்புகுந்தநங்கையான்
உய்ஞ்சனெனிருத்தலுமுலகங்கொள்ளுமோ. (௧௭)

வல்லியன்மறவர்தம்வலிதீர்பவர்
வெல்லினும்வெல்கபோர்விளிந்துவீடுக
இல்லியலறத்தையானிறந்துவாழ்ந்தபின்
சொல்லியவென்பழியவரைச்சுற்றுமோ. (௧௮)

வருந்தலின்மானமாவனையமாட்சியர்
பெருந்தவமடந்தையர்முன்புபேதையேன்
கருந்தனிமுகிலினைப்பிரிந்துகள்வரூர்
இருந்தவளிவளெனவேசநிற்பெனோ. (௧௯)

அற்புதனரக்கர்தம் † வருக்கமாசற
விற்பணிகொண்டருஞ்சிறையின்மீட்டநாள்
இற்புகத்தக்கிலையென்னின்யானுடைக்
கற்பினையெப்பரிசிழைத்துக்காட்டுகேன். (௨௰)

ஆதலானிறத்தலேயறத்தி ‡ னாறெனுச்
சாதல்காப்பவருமென்றவத்திற்சாம்பினார்
ஈதலாதிடமும்வேறில்லையென்றொரு
போதுலாமாதவிப்பொதும்பரெய்தினாள். (௨௧)

கண்டனன்றுமனுங்கருத்துமெண்ணினான்
கொண்டனன்றுணுக்கமெய்திண்டக்கூசுவான்
அண்டர்நாயகனருட்டூதன்யானெனாத்
தொண்டைவாய்மயிலினைத்தொழுதுதோன்றினான். (௨௨)

அடைந்தனெனடியனேனிராமனாணையால்
குடைந்துலகனைத்தையுநாடுங்கொட்பினால்
மிடைந்தவருலப்பிலர்தவத்தைமேவலான்
மடந்தைநின்சேவடிவந்துநோக்கினேன். (௨௩)

ஈண்டுநீயிருந்ததையிடரின்வைகுறும்
§ ஆண்டகையறிந்திலனதற்குக்காரணம்
வேண்டுமேயரக்கர்தம்வருக்கம்வேரொடு
மாண்டிலவீதலான்மாறுவேறுண்டோ. (௨௪)

* மஞ்சனை—புத்திரபாவமான இளையபெருமானை.

† வருக்கம்-கூட்டம். ‡ ஆறு-ஒழுங்கு. § ஆண்டகை—வேறுண்டோ புருஷோத்தமரான ஸ்ரீராமன் நீ இருக்குமிடம் தெரிந்தால் ராக்ஷதர்கள் அழிந்துபோவார்கள் அவர் தெரியாதிருத்தலால் இவர்கள் சாவாதிருக்கிறார்கள். சாவாதிருக்கின்றதே அவர்தெரிந்திலரென்பதற்குக் காரணமென்க.

ஐயுறலுனதடையாளமாரியன்
மெய்யுறவுணர்த்தியவுரையும்வேறுள
கையுறுசெல்வியங்கனியிற்காண்டியால்
செய்யுறுவிளக்கஞ்செய்நினையல்லேலென்றான். (௨௫)

வேறு.

என்றவனிறைஞ்சநோக்கியிரக்கமுமுனிவுமெய்தி
நின்றவனிருதனல்லனென்றிநின்றபொறிகளைந்தும்
வென்றவனல்லனாகின்விண்ணவனாகவேண்டும்
நன்றுணர்வுரையன்றாயனவையிலன் * போலுமென்னா. (௨௬)

அரக்கனேயாகவேறோர்மரனேயாகவன்றிக்
குரக்கினத்தலைவனேதானாகுககொடுமையாக
இரக்கமேயாகவந்திங்கெம்பிரானாமஞ்சொல்லி
உருக்கினனுணர்வைத்தந்தானுயிரிதினுதவியுண்டோ. (௨௭)

எனநினைத்தெய்தநோக்கியிரங்குமெனுள்ளங்கள்ளம்
மனனகத்துடையராயவஞ்சகர்மாற்றமல்லன்
நினைவுடைச்சொற்கள்கண்ணீர்நிலம்புகப்புலம்பாநின்றான்
வினவுதற்குரியனென்னாவீரநீயாவனென்றாள். (௨௮)

ஆயசொற்றலைமேற்கொண்டவங்கையனன்னைநின்னைத்
தூயவன்பிரிந்தபின்புதேடியதுணைவன்றொல்லைக்
காய் † கதிர்ச்செல்வன்மைந்தன்கவிக்குலமவற்றுக்கெல்லாம்
நாயகன்சுக்கிரீவனென்றுளனவையிற்றீர்ந்தான். (௨௯)

மற்றவன்முன்னோனந்நாளிராவணன்வலிதன்வாலின்
இற்றுகக்கட்டியெட்டுத்திசையினுமெழுந்துபாய்ந்த
வெற்றியன்றேவர்வேண்டவேலையை ‡ விலங்கன்மத்தில்
சுற்றியநாகந்தேயவமுதெழக்கடைந்ததோளான். (௩௦)

அன்னவன்றன்னையுங்கோனம்பொன்றாலாவிவாங்கிப்
பின்னவற்கரசுநல்கித்துணையெனப்பிடித்தானங்கள்
மன்னவன்றனக்குநாயேன்மந்திரத்துள்ளேன்வானின்
நன்னெடுங்காலின்மைந்தனாமமுமநுமனென்றான். (௩௧)

எழுபதுவெள்ளங்கொண்டவெண்ணனவுலகமெல்லாம்
தழுவிநின்றெடுப்பவேலைதனித்தனிக்கடக்குந்தாள
குழுவினவுங்கோன்செய்யக்குறித்ததுகுறிப்பினுன்னி
வழுவிலசெய்தற்கொத்தவானரம்வானினீண்ட. (௩௨)

துப்புறுபாவையேழுஞ்சூழ்ந்தபாரேழுமாழ்ந்த
ஒப்புறுநாகர்நாடுமும்பரினிம்பர்காறும்

* போலும்—அசை. † கதிர்ச்செல்வன்மைந்தன்-ஈண்டு சுக்கிரீவன்.
‡ விலங்கல்—மலை, ஈண்டு மந்தரகிரியை.

இப்புறந்தேடிநின்னையெதிர்ந்திலனெனினண்டத்
தப்புறம்போயுந்தேடவதியினமைந்தபோன. (௧௩)

புன்றொழிலரக்கன்கொண்டுபோந்தநாள்பொதிந்ததூசின்
குன்றினெம்மருங்கினிட்டவணிகலக்குறியினாலே
வென்றியானடியன்றன்னைவேறுகொண்டிருந்துகூறித்
தென்றிசைசேறியென்றானவனருள்சிதைவதாமோ. (௧௪)

கொற்றவற்காண்டுக்காட்டிக்கொடுத்தபோதடுத்ததன்மை
பெற்றியினுணர்தற்பாற்றோவுயிர்நிலைபிறிதுமுண்டோ
இற்றைநாளளவுமன்னவன்றுகீயிழித்துநீத்த
மற்றைநல்லணிகள் * காணுன்மங்கலங்காத்த † மன்றே. (௧௫)

ஆயவன்றன்மைநிற்கவங்கதன்வாலிமைந்தன்
ஏயவன்றென்பால்வெள்ளமிரண்டினோடெழுந்துசேனை
மேயினபடர்ந்துநீரவனையவன்விடுத்தானென்னைப்
பாய்புனலிலங்கைமூதூர்க்கென்றனன்பழியையவென்றான். (௧௬)

எய்தவனுரைத்தலோடுமெழுந்துபேருவகையேற
வெய்துறலொடுங்குமேனிவானுறவிம்மியோங்கி
உய்தல்வந்துற்றதோவென்றருவிநீரொழுகுகண்ணாள்
அய்யசொலையன்மேனியெப்படிக்கறிதியென்றாள். (௧௭)

‡ படியெடுத்துரைத்துக்காட்டும் § படித்தன்றுபடிவம்பண்பின்
முடிவுளவுமமெல்லாமிலக்கணமொழியுமுன்னர்த்
துடியிடையடையாளத்தின்றொடரவைதொடர்தியென்னா
அடிமுதன்முடியின்காறுமறிவுறவநுமன்சொல்வான். (௧௮)

வேறு.

சேயிதழ்த்தாமரையென்றசேணுளோர்
ஏயினதான்றனையெளியதில்லையால்
நாயகன்றிருவடிகுறித்துநாட்டுறின்
பாய்திரைப்பவளமுங்குவளைப்பண்பினும். (௧௯)

தளங்கெழுகற்பகமுகிழுந்தண்டுறை
இளங்கொடிப்பவளமுங்கிடக்கவென்னலை
துளங்கொளிவிரற்கெதிருதிக்குஞ்சூரியன்
இளங்கதிரொக்கினுமொக்குமேந்திழாய். (௨0)

சிறியவும்பெரியவுமாகித்திங்களோ
மறுவிலவபத்துளவல்லமற்றினி
எறிசுடர்வயிரமோதிரட்சியெய்தில
அறிகிலெனுகிர்க்கியானுவமமாவன. (௨௧)

---

* காண்-முன்னிலையசை. † மன்றே-அசை. ‡ படி-ஒப்பு. § படி-விதம், தன்மை.

பொருந்திலகிலனெனப்போந்துகானிடை
வருந்தினனெனினது நூலைமாறுகொண்
டிருந்ததுநின்றதுபுவனம்யாவையும்
ஒருங்குடன்புணர்வஃதுரைக்கற்பாலதோ. (௬௨)

தாங்கணைப்பணிலமும்வளையுந்தாங்கரா
வீங்கணைப்பள்ளியானெனினும்வேறினிப்
பூங்கணைக்காற்கொருபரிசுதான்பொரும்
ஆங்கணைக்காவமோவாவதன்னையே. (௬௩)

அறங்கிளர்பறவையினரசனுடெழிற்
பிறங்கெருத்தனையனபெயரும்பெற்றுடை
மறங்கிளர்மதகரிக்காமு * நாணின
குறங்கினக்குவமையிவ்வுலகிற்கூடுமோ, (௬௪)

வலஞ்சுழித்தொழுகுநீர்வழங்குகங்கையின்
பொலஞ்சுழியென்றலும்புன்மைபூவொடு
நிலஞ்சுழித்தெழுமணியுந்திநேரினி
† இலஞ்சியம்போலும்வேறுவமையாண்டரோ. (௬௫)

பொருவருமரகதப்பொலன்கொண்மால்வரை
வெருவுறவிரிந்துயர்விலங்கலாகத்தைப்
பிரிவறநோற்றிலளென்னிற்பின்னையத்
திருவினிற்றிருவுளார்யாவர்தெய்வமே. (௬௬)

நீடுறுகீட்டிசைநின்றயானையின்
கோடுறுகரமெனச்சிறிதுகூறலாம்
தோடுறுமலரெனச்சுறும்புசுற்றறாத்
தாடொடுதடக்கைவேறுவமைசாலுமே. (௬௭)

பச்சிலைத்தாமரைபகல்கண்டாலெனக்
கைச்செறிமுகிழுகிர் ‡ கனகனென்பவன்
வச்சிரயாக்கையைவகிர்ந்தவன்றொழில்
நிச்சயமன்றெனினையநீங்குமோ. (௬௮)

திரண்டிலவொளியிலதிருவின்சேர்வில்
முரண்டருமேருவின்முரியமூரிநாண்
புரண்டிலபுகழிலபொருப்பென்றொன்றுபோன்
றிரண்டில்புயல்களுக்குவமமேற்குமோ. (௬௯)

கடற்படுபணிலமுங்கன்னிப்பூகமும்
மிடற்றினுக்குவமையென்றுரைக்குமெல்லியோர்

---

* நாணினது என்பது நாணினவெனக் கடைக்குறையாயிற்று.

† இலஞ்சி-மகிழம், ‡ கனகன்-இரணியன்.

உடற்படவொண்ணுமோவுரகப்பள்ளியான்
இடத்துறைசங்கமொன்றிருக்கவெங்களால். (௰)

அண்ணறன்றிருமுகங்கமலமாமெனின்
கண்ணினுக்குவமைவேறியாதுகாட்டுகேன்
தண்மதியாமெனவுரைக்கத்தக்கதோ
வெண்மதிபொலிந்ததுமெலிந்துதேயுமால். (௰௧)

வேறு.

ஆரமுமகிலுநீவியகன்றதோளமலன்செவ்வாய்
நாரமுண்டலர்ந்தசெங்கேழ்நளினமென்றுரைக்கநாணும்
ஈரமுண்டமுதமூறும்ன்னுரையியம்பாதேனும்
மூரல்வெண்முறுவல்பூவாப்பவளமோமொழியற்பாற்றே. (௰௨)

வேறு.

முத்தங்கொல்லோமுழுநிலவின்முறியின்றிறனோமுறையமுதச்
சொத்தின்றுள்ளிவெள்ளியினந்தொடுத்தகொல்லோதுறையறத்தின்
வித்துமுளைத்த * வங்குரங்கொல்வேறேசிலகொன்மெய்முகிழ்த்த
தொத்தின்றொகைகொல்யாதென்றுபல்லுக்குவமைசொல்லுகேன். (௰௩)

வள்ளாநிலத்திந்திரநீலத்தெழுந்தகொழுந்துமாகதத்தின்
விள்ளாமுழுமாநிழற்பிழம்பும்வேண்டவேண்டுமேனியதோ
தள்ளாவோதிகோபத்தைத்சவ்வவந்துசார்ந்ததுவும்
கொள்ளாவள்ளறிருமூக்கிற்குவமைபின்னுங்குணிப்பாமோ. (௰௪)

பணிக்கச்சுரத்துக்கான்முதலோர்கவந்தப்படையும்பல்பேயும்
தனிக்கைச்சிலையும்வானவருமுனிவர்குழுவுந்தனியறனும்
இனிக்கட்டழிந்தரக்கர்குலமென்னுஞ்சுருதியீரிரண்டும்
† குனிக்கக்குனித்தபுருவத்துக்குவமநீயேகோடியால். (௰௫)

வருநாட்டோன்றுந்தனிமறுவும்வளர்வுந்தேய்வும்வாளரவம்
ஒருநாட்கவ்வுமுறுகோளு ‡ மிறப்பும்பிறப்புமொழிவுற்றால்
இருநாட்பகலினிலங்குமதியலங்கலிருளினெழிினிழற்கீழ்ப்
பெருநாணிற்பினவனெற்றிப்பெற்றிற்றகப்பெறுமன்றே. (௰௬)

நீண்டுகுழன்றுநெய்த்திருண்டுநெறிந்துசெறிந்துநெடுநீலம்
பூண்டுபுரிந்துசரிந்துகடைசுருண்டுபுகையுநறும்பூவும்
வேண்டுமல்லவெனத்தெய்வவெறியேகமழுநறுங்குஞ்சி
ஈண்டுசடையாயினதென்றன்மழையென்றுரைத்தவிழிபண்றே. (௰௭)

புல்லலேற்றதிருமகளும்பூவும்பொருந்தப்புவியேழும்
எல்லையேற்றநெடுஞ்செல்வமெதிர்ந்தஞான்றுமஃதின்றி

* அங்குரம்-முளை, † குனிக்க-கூத்தாட, ‡ இறப்பும் பிறப்பும் ஈண்டு அஸ்தமிக்கிறதும் உதயமாகிறதும்.

அல்லலேற்றகானகத்துமழியாநடையையிழிவான
மல்லலேற்றினுளதென்றுன்மத்தயானைவருந்தாதோ. (இ௮)
இன்னமொழியவம்மொழிகேட்டெரியினிட்டமெழுகென்னத்
தன்னையறியாதயர்வாளைத்தரையின்வணங்கிநாயகனார்
சொன்னகுறியுண்டடையாளச்சொல்லுமுளவாலவைதோகை
அன்னநடையாய்கேட்கென்னவறியவறைவானாயினான். (இ௯)

வேறு.

நடத்தலரிதாகுநெறிநாள்கள்சிலதாயர்க்
கடுத்தபணிசெய்திவணிருத்தியெனவச்சொற்
குடுத்ததுகிலோடுமுயிருக்கவுடலோடும்
எடுத்தமுனிவோடுமயனின்றதுமிசைப்பாய். (௧௦)

நீண்டமுடிவேந்தனருளேந்தி * நிறைசெல்வம்
பூண்டதனைநீங்கிநெறிபோதலுறுநாளின்
ஆண்டநகரானையொடுவாயிலகலாமுன்
யாண்டையதுகானனவிசைத்ததுமிசைப்பாய். (௧௧)

எள்ளரியதேர்தருசுமந்திரனிசைப்பாய்
வள்ளன்மொழிவாசகமனத்துயர்மறந்தாள்
கிள்ளையொடுபூவைகள்கிளத்தல் † கிளவென்றும்
பிள்ளையொடுதன்றிறமுணர்த்துதிபெயர்த்தும். (௧௨)

மீட்டுமுரைவேண்டுவனவில்லையெனமெய்ப்பேர்
தீட்டியதுதீட்டரியசெய்கையதுசெவ்வே
நீட்டிதெனநேர்ந்தனனெநெடியகையால்
காட்டினனொராழியதுவாணுதலிகண்டாள். (௧௩)

இறந்தனர்பிறந்தபயனெய்தினர் ‡ கொலென்கோ
மறந்தனரறிந்துணர்வுவந்தனர்கொலென்கோ
துறந்தவுயிர்வந்திடைதொடர்ந்ததுகொலென்கோ
திறந்தெரிவதென்னைகொலிநன்னுதலிசெய்கை. (௧௪)

இழந்தமணிபுற்றரவெதிர்ந்ததெனலானாள்
பழந்தனமிழந்தனபடைத்தவரையொத்தாள்
குழந்தையையுயிர்தலமலடிக்குவமைகொண்டாள்
உழந்துவிழிபெற்றதொருயிர்ப்பொறையுமொத்தாள். (௧௫)

வாங்கினண்முலைக்குவையில்வைத்தனள்சிரத்தால்
தாங்கினண்மலர்க்கண்மிசையொத்தினடடந்தோள்

* நிறைசெல்வம்-மகதைசுவரியம் † கிள-சொல்லுக ‡ கொல்-ஈ-ம் அசைகள் என்னை கொல்-எப்படியோ எனவுமாம்.

வீங்கினண்மெலிந்தனள்குளிர்ந்தனள்வெதுப்போ
டேங்கினளுயிர்த்தனளிதின்னதெனலாமே. (சுசு)

மோக்குமுலைவைத்துறமுயங்குமொளிர்நன்னீர்
நீக்கிநிறைகண்ணிணைத்தும்பநெடுநீள
நோக்குறுவலக்கருதுமொன்றுநுவல்கில்லாள்
மேக்குமிமிர்விம்மலள்விழுங்கலுறுகின்றாள். (சுஎ)

ஈண்டவிழிநேரிழைதன்மின்னிறமெல்லாம்
பூண்டதொளிர்பொன்னனையபொம்மனிறமெய்யே
ஆண்டகைதன்மோதிரமடுத்தபொருளெல்லாம்
தீண்டளவில்வேதிகைசெய்தெய்வமணிகொல்லோ. (சுஅ)

இருந்துபசியாலிடருழந்தவர்களெய்தும்
அருந்துமமுதாகியதறத்தவரைபண்ணும்
விருந்துமெனலாகியதுவீயுமுயிர்மீளும்
மருந்துமெனலாகியதுவாழிமணியாழி. (சுகூ)

இத்தகையளாகியுயிரேமுறவிளங்கும்
முத்தநகையாள்விழியினாலிமுலைமுன்றில்
தத்தியுகமென்குதலைத்தள்ளவுயிர்தந்தாய்
உத்தமவெனாவினையவாசகமுரைத்தாள். (எ0)

வேறு.

மும்மையாமுலகந்தந்தமுதல்வற்குமுதல்வன்றாதாய்ச்
செம்மையாலுயிர்தந்தாய்க்குச்செயலென்னாலெளியதுண்டே
அம்மையாயத்தனாயவப்பனேயருளின்வாழ்வே
இம்மையேமறுமைதானுநல்கினையிசையோடென்றாள். (எக)

பாழியபணைத்தோள்வீரதுணையிலேன்பரிவுதீர்த்த
வாழியர்வள்ளலேயான்மறுவிலாமனத்தேனென்னின்
ஊழியோர்பகலாயோதும்யாண்டெலாமுலகமேழும்
ஏழும்வீவுற்றஞான்றுமின்றெனவிருத்தியென்றாள். (எஉ)

மீண்டுரைவிளம்பலுற்றாள்விழுமியகுணத்தோய்வீரன்
யாண்டையானிளவலோடுமெவ்வழியெய்திற்றென்னை
ஆண்டகையடியேன்செய்கையார்சொலவறிந்ததென்றாள்
தாண்டிரட்டடந்தோளானுமுற்றதுசோறலுற்றான். (எங)

உழைக்குலத்தியமாயவுருவுகொண்டுறுதல்செய்தான்
மழைக்கருநிறத்துமாயவரக்கன்மாரீசனென்பான்
இழைத்தடமார்பத்தண்ணலெய்யப்போய்வையஞ்சேர்வான்
அழைத்ததவ்வோசையுன்னைமயக்குதற்கரக்கன்சொல்ல. (எச)

இக்குரலிளவல்கேளாதொழிகெனவிறைவனிட்டான்
மெய்க்குரல்சாபம்பின்னைவிளைத்ததுவிதியின்மெய்ம்மை
பொய்க்குரலென்றபோவாம்பொருள்பின்னர்ப்பயக்குமென்பான்
கைக்குரல்வரிவில்லானுமிளையவன்வரவுகண்டான். (எ௫)

கண்டபினிளையவீரன்முகத்தினாற்கருத்தையோர்ந்து
புண்டரீகக்கண்ணனுமுற்றதுபுகலக்கேட்டான்
வண்டுறைசாலைவந்தானின்றிருவடிவுகாணான்
உண்டுயிரிருந்தானின்னலுழப்பதற்கேதுவொன்றோ. (எ௬)

தேண்டிநேர்கண்டேன்வாழிநீதிலனெங்கோனாகம்
பூண்டமெய்யுயிரேபோகப்பொய்யுயிர்போலநின்ற
ஆண்டகைநெஞ்சினின்றமகன்றிலையழிவுண்டாமோ
ஈண்டுநீயிருந்தாயாண்டங்கெவ்வுயிர்விடுமிராமன். (எஎ)

அந்நிலையாயவண்ணலாண்டுநின்றன்னைநின்னைத்
துன்னிருங்கானும்யாறுமலைகளுந்தொடர்ந்துநாடி
இன்னுயிரின்றியேகுமியந்திரப்படிவமொப்பான்
தன்னுயிர்புகழ்க்குவிற்றசடாயுவைவந்துசார்ந்தான். (எஅ)

வந்தவன்மேனிநோக்கிவானுயர்துயரின்வைகி
எந்தைநீயுற்றதன்மையியம்பெனவிலங்கைவேந்தன்
சுந்தரிநின்னைச்செய்தவஞ்சனைசொல்லச்சொல்ல
வெந்தனவுலகமென்ன *நிமிர்ந்ததுசீற்றவெந்தீ. (எக)

சீறியிவ்வுலகமூன்றுந்தீந்துகச்சினவாயம்பால்
நூறுவெனென்றுகைவிஞேக்கியகாலைநோக்கி
ஊறொருசிறியோன்செய்யமுனிதியோவுலகையுள்ளம்
ஆறுதியென்றுதாதையாற்றலிற்சீற்றமாறி. (அ0)

எவ்வழியேகியுற்றான்யாண்டையானுறையுள்யாது
செவ்வியோய்கூறுகென்னச்செப்புவானுற்றசெவ்வி
மெவ்வியல்விதியின்கோட்பால்வீடினன்கழுகின்வேந்தன்
எவ்வியவரிவிற்செங்கையிருவருமிடரின்வீழ்ந்தார். (அக)

அயர்த்தவரிதிற்றேறியாண்டொழிற்றாதைக்காண்டுச்
செயத்தகுகடன்மையாவுந்தேவருமருளச்செய்தார்
கயத்தொழிலரக்கன்றன்னைநாடிநாங்காண்டுமென்னாப்
புயற்றொடுகுடுமிக்குன்றுங்கானமுங்கடிதுபோனார். (அ௨)

அவ்வழிநின்னைக்காணாதயர்த்தவரிதிற்றேறிச்
செவ்வழிநயனஞ்செல்லுநெடுவழிசேறுசெய்ய
வெவ்வழலுற்றமெல்லென்மெழுகெனவழியுமெய்யன்
இவ்வழியினையபன்னியறிவழிந்திரங்கலுற்றான். (அ௩)

* நிமிர்ந்தது-மேன்மேலாயிற்று.

வேறு.

கன்மத்தைஞாலத்தவராருளரோகடப்பார்
பொன்மொய்த்ததோளான்மயல்கொண்டுபுலன்கள்வேறாய்
நன்மத்தைநாகத்தயல்சூடியநம்பனேபோல்
உன்மத்தனானானினையொன்றுமுணர்ந்திலாதான். (௮௪)

போதாயினபோதுனதண்புனலாடல்பொய்யோ
சீதாபவளக்கொடியன்னவட்டேடியென்கண்
நீதாருகிற்றில்லையேனெருப்பாதியென்னாக்
கோதாவிரியைச்சினங்கொண்டனன்கொண்டலொப்பான். (௮௫)

குன்றேகடிதோடினைகோமளக்கொம்பரன்ன
என்றேவியைக்காட்டுதிகாட்டலையென்னினிவ்வம்
பொன்றேயமையும்முனுடைக்குலமுள்ளவெல்லாம்
இன்றேபிளவாவெரியாக்கரியாக்கவென்றான். (௮௬)

* பொன்மானுருவாற்சிலமாயைபுணர்க்கவன்றே
† என்மானகல்வுற்றனளிப்பொழுதென்கணென்னா
‡ நன்மான்களைநோக்கிநுந்நாமமுமாய்ப்பெனின்றே
வின்மாண்கொலைவாளியினென்றுவெகுண்டுநின்றான். (௮௭)

வேறுற்றமனத்தவனின்னதோர்விம்மனோவ
ஆறுற்றநெஞ்சிற்றனதாருயிராயதம்பி
கூறுற்றசொல்லென்றுளகோதறுநன்மருந்தால்
தேறுற்றுயிர்பெற்றியல்புஞ்சிலசொல்லலுற்றான். (௮௮)

வந்தானிளையானெடுவானுயர்தேரின்வைகும்
நந்தாவிளக்கின்வருமெங்குலநாதன்வாழும்
சந்தார்தடங்குன்றினிற்றன்னுயிர்க்காதலோனும்
செந்தாமரைக்கண்ணனுநட்டனர்தேவருய்ய. (௮௯)

உண்டாயதுமுற்றதுமுற்றுமுணர்த்தியுள்ளம்
புண்டானெனநோயுறவிம்முறுகின்றபோழ்தின்
வண்டானிழந்திட்டனனேந்திழையாங்கள்காட்டக்
கண்டானுயர்வேதமும் $ போதமுங்காண்கிலாதான். (௯௦)

தனியின்றநஞ்சொற்றொடர்த்தன்மையதன்மைதன்னைத்
துணிகொண்டிலங்குஞ்சுடர்வேலவன்றாயநின்கண்
அணிகண்டுழியேயமிழ்தந்தெளித்தாலுமாறாப்
பிணிகொண்டதுபண்டதுண்டாயினும்பேர்ப்பதன்றால். (௯௧)

---

* பொன்மானுருவால்-பொன்மான்வடிவுகொண்டு † என்மான்-எனதுமானனை சீதை. ‡ நன்மான்-நல்லமான்கள். $ போதம்-ஞானம்.

அயர்வுற்றரிதிற்றெளிந்தம்மலைக்கப்புறத்தோர்
உயர்பொற்கிரியுற்றுளன்வாலியென்றோங்கலொப்பான்
துயருற்றவிராவணன்வாலிடைப்பண்டுதூங்க
* மயர்வுற்றபொருப்பொடுமால்கடறாவிவந்தான். (கஉ)

ஆயானையோரம்பினிலாருயிர்வாங்கியன்பிற்
றாயான்வயினவ்வரசீந்தவன்சுற்றசேனை
மேயான்வருவானெனவிட்டனன்மேவுகாலும்
ஏயானிருந்தானிடைதிங்களிரண்டிரண்டும். (கங)

பிற்கூடியசேனைபெருந்திசைபின்னவாக
விற்கூடுநுதற்றிருமின்னிடைமேவவேவித்
தெற்கூடுருவங்கடிதேவினன்சேர்ந்ததென்ன
முற்கூடியகூறினன்காலமோர்மூன்றும்வல்லான். (கச)

வேறு.

அன்பினனிவ்வுரையுணர்த்தவாரியன்
வன்பொறைநெஞ்சினன்வருத்தமுன்னுவான்
என்புறவுருகினனிரங்கியேங்கினன்
துன்பமுமுவகையுஞ்சுமந்தவுள்ளத்தான். (கரு)

நையுறுசிந்தையனயனவாரியின்
தொய்யல்வெஞ்சுழியிடைச்சுழிக்குமேனியள்
ஐயநீயளப்பருமளக்கர்நீந்தினை
எய்தியதெப்பரிசியம்புவாயென்றாள். (கசு)

சுருங்கிடையுன்றொருதுணைவன்றாயதாள்
ஒருங்குடையுணர்வினாரோய்வின்மாயையின்
பெருங்கடல்கடந்தனர்பெயரும்பெற்றிபோல்
கருங்கடல்கடந்தனென்காவினாலென்றான். (கஎ)

இத்துணைச்சிறியதோரெண்ணில்யாக்கையை
தத்தினைகடலதுதவத்தினாயதோ
சித்தியினியன்றதோசெப்புவாயென்றாள்
முத்தினுகிலவினுமுறவன்முற்றினான். (கஅ)

சுட்டினனின்றனன்றொழுதகையினன்
விட்டுயர்தோளினன்விசும்பின் † மேக்குயர்
எட்டருநெடுமுகடெய்திநீளுமேல்
முட்டுமென்றுருவொடுவளர்ந்தமூர்த்தியான். (ககூ)

செவ்வழிப்பெருமையென்றுரைக்குஞ்செம்மைதான்
வெவ்வழிப்பூதமோரைந்தின்மேலதோ

* மயர்வு-இங்கு கலந்திருத்தல், † மேக்கு—மேலே.

அவ்வழித்தன்றெனினநுமன்பாலதோ
எவ்வழித்தாகுமென்றெண்ணுமீட்டதே. (௧00)

ஒத்துயர்கனகவான்கிரியினோங்கிய
மெய்த் * துறுமரந்தொறுமின்மினிக்குலம்
மொய்த்துளவாமெனமுன்னும்பின்னரும்
தொத்தினதாரகைமயிரின்சுற்றெலாம். (௧0௧)

கண்டலமறிவொடுகடந்தகாட்சியன்
விண்டலமிருபுடைவிளங்குமெய்ம்மையக்
குண்டலமிரண்டுமெக்கோளின்மாச்சுடர்
மண்டிலமிரண்டொடுமாறுகொண்டவே. (௧0௨)

எணிலவொருகுரங்கீதென்றெண்ணலா
ஆணியையநுமனையமையநோக்குவாள்
சேணுயர்பெருமையோர்திறத்ததன்றெனு
நாணுறுமுலகெலாமளந்தநாயகன். (௧0௩)

எண்டிசைமருங்கினுமுலகம்யாவினும்
தண்டலிலுயிரெலாந்தன்னைநோக்கின
அண்டமென்றதினுறையமரர்யாரையும்
கண்டனன்றானுந்தன்கமலக்கண்களால். (௧0௪)

எழுந்துயர்நெடுந்தகையிரண்டுபாதமும்
அழுந்துறவழுத்தலினிலங்கையாழ்கடல்
விழுந்ததுநிலமிசைவிரிந்தவெண்டிரை
தழைந்தனபுரண்டனமீனந்தாமெலாம். (௧0௫)

வஞ்சியம்மருங்குலம்மறுவில்கற்பினாள்
கஞ்சமும்புரைவனகழலுங்கண்டிலாள்
துஞ்சினாரக்கரென்றுவக்குஞ்சூழ்ச்சியாள்
அஞ்சினெனிவ்வுருவடங்குவாயென்றான். (௧0௬)

முழுவதுமிவ்வுருக்காணமுற்றிய
குழுவிலதுலகினிக்குறுகுவாயென்றாள்
எழுவினுமெழிலிலங்கிராமன்றோள்களைத்
தழுவினளாமெனத்தளிர்க்குந்தன்மையாள். (௧0௭)

ஆண்டகையநுமனுமருளதாமெனா
மீண்டனன்விசும்பெனும்பதத்தைமீச்செல்வான்
காண்டலுக்குரியதோருருவங்காட்டினான்
ஈண்டருவிளக்கனாளினையசொல்லினான். (௧0௮)

* துறு—நெருங்கின.

வேறு.

இடந்தாயுலகைமலையோடுமெடுத்தாய்விசும்பையிவைசுமக்கும்
படந்தாழரவையொருகரத்தாற்பறித்தாயெனினும்பயனின்றால்
நடந்தாயிடையேயென்றாலுநாணுநினக்குநளிர்கடலைக்
கடந்தாயென்றாலென்னாகுங்காற்றாமன்னகடுமையாய். (௧0௯)

ஆழிநெடுங்கையாண்டகைதன்னருளும்புகழுமழிவின்றி
ஊழிபலவுநிலைநிறுத்தற்கொருவனீயேயுளையானாய்
* பாழிநெடுந்தோள்வீரநின்பெருமைக்கேற்பப்பகையிலங்கை
ஏழுகடற்குமப்புறத்ததாகாதிருந்ததிழிபன்றோ. (௧௧0)

அறிவுமீதேயுருவீதேயாற்றலீதேயரும்புலத்தின்
செறிவுமீதேசெயலீதேதேற்றமீதேதேற்றத்தின்
நெறியுமீதேநினைவீதேநீதியீதேநினக்கென்றால்
வெறியன்றோகுணங்களான்விரிஞ்சன்முதலாமேலானோர். (௧௧௧)

மின்னேரெயிற்றுவல்லரக்கர்வீக்கநோக்கிவீரற்குப்
பின்னேபிறந்தானல்லதோர்துணையிலாதபிழைநோக்கி
உன்னாநின்றேயுடைகின்றேனொழிந்தேனையமுயிருயிர்த்தேன்
என்னேநிருதரொன்னாவரிவனேயெங்கோன்றுணையென்றால். (௧௧௨)

மாண்டேனெனினும்பழுதன்றேயின்றேமாயச்சிறைநின்றும்
மீண்டேனென்னையொறுத்தாரைக்குலங்களோடும்வேரறுத்தேன்
பூண்டேனெங்கோன்பொலன்கழலும்புகழேயன்றிப்புன்பழியும்
தீண்டேனென்றுமனமகிழ்ந்தாடிருவின்முகத்துத்திருவன்னாள். (௧௧௩)

† அண்ணற்பெரியோனடிவணங்கியறியவுரைப்பானருந்ததியே
வண்ணக்கடலினிடைக்கிடந்தமணலிற்பலரால்வானரத்தின
எண்ணற்கரியபடைத்தலைவரிராமற்கடியார்யானவர்தம்
பண்ணைக்கொருவனெனப்போந்தேனேவக்கடவபணிசெய்வேன். (௧௧௪)

வெள்ளமேழுபத்துளதால்வீரன்சேனையிவ்வேலைப்
பள்ளமொருகைநீரள்ளிக்குடிக்கச்சாலும்பான்மையதோ
கள்ளவரக்கர்கடியிலங்கைகாணாதொழிந்தாலன்றோ
உள்ளதுணையுமுளதாவதறிந்துபின்னுமுளதாமோ. (௧௧௫)

வாலியிளவலவன்மைந்தன்மயிந்தன்றுமிந்தன்வயக்குமுதன்
நீலனிடபன்குமுதாக்கன்பனசன்சாபநெடுஞ்சாம்பன்
காலனனையதன்மருடன்காம்பன்கவயன்கவயாக்கன்
ஞாலமறியுநற்சங்கன்வினதன்றுயிர்தனளனென்பான். (௧௧௬)

---

* பாழி-விசாலமான. † அண்ணற்பெரியோன்-உருவாலும் அறிவாலும் பெருமையுள்ள அநுமார்.

தம்பன் றாமத்தனிப்பெயரோன் றதியின்வதனன் சதவலியென்
நிம்பருலகோடெவ்வுலகுமெடுக்குமிடுக்கரிராமன்கை
அம்பினுதவுபடைத்தலைவரவரைநோக்கினிவ்வரக்கர்
வம்பின்முலையாயுறையிடவும்போதார்கணக்குவரம்புண்டோ. (கசஎ)

ரு - வது - உருக்காட்டுப்படலம் - முற்றிற்று.
(ஆக திருவிருத்தம்-சு0சு.)

சு - வது. சூளாமணிப் படலம்.

வேறு.

உண்டுதுணையென்னவெளிதோவுலகினம்மா
புண்டரிகைபோலுமிவளின்னல்புரிகின்றான்
அண்டமுதலாயகனதாவியனையானைக்
கொண்டகல்வதேகருமமென்றுணர்வுகொண்டான். (க)

கேட்டியடியேனுரைமுனிந்தருளல்கேளார்
வீட்டியிடுமேலவனைவேறல்வினையன்றால்
ஈட்டியினியென்பலவிராமனெதிர்நின்னைக்
காட்டியடிதாழ்வெனிதுகாண்டியிதுகாலம். (உ)

பொன்றிணிபொலன்கொடியென்மென்மயிர்பொருந்தித்
துன்றியபுயத்தினிதிருக்கதுயர்விட்டாய்
இன்றுயில்விளக்கவொரிமைப்பினிறைவைகும்
குன்றிடையுனைக்கொடுகுதிப்பே * னிடைகொள்ளேன். (ங)

அறிந்திடையரக்கர்தொடர்வார்களுளராமேல்
முறிந்துதிரநுறியெதிரொன்னினைமுடிப்பேன்
செறிந்தகுழனின்னிலைமைகண்டுநெடியோன்பால்
வெறுங்கைபெயரேனொருவராலும்விளியாதேன். (ச)

இலங்கையொடுமேருதிகொலென்னினுமிடர்ந்தென்
வலங்கொளொருகைத்தலையில்வைத்தெதிர்தடுப்பான்
விலங்கினரைநூறிவரிவெஞ்சிலையினோர்தம்
பொலன்கொள்கழறாழ்குவெனிதன்னைபொருளன்றால். (ரு)

அருந்ததியுரைத்தியழகற்கருகுசென்றான்
† மருந்தினையதேவிநெடுவஞ்சர்சிறைவைப்பில்
பெருந்துயரினோடுமொருவீடுபெறலில்லா
திருந்தனளெனப்பகரினென்னடிமையென்னும். (சு)

* இடைகொள்ளேன்-நடுவேதங்கேன், † மருந்து—தேவாமிர்தம்.

புண்டொடர்வகற்றியபுயத்தினொடுபுக்கேன்
விண்டவர்வலத்தையும்விரித்துரைசெய்கேனோ
கொண்டுவருகிற்றிலெனுயிர்க்குறுதிகொண்டேன்
கண்டுவருகிற்றிலெனெனக்கழறுகேனோ. (௭)

இருக்குமதில்சூழ்கடியிலங்கையையிமைப்பின்
உருக்கியெரியாவிகலரக்கரையுமொன்றா
முருக்கிநிருதக்குலமுடித்துவினைமுற்றிப்
பொருக்கவகல்கென்னினுமதின்றுபுரிகின்றேன். (௮)

* இந்துநுதனின்னொடிவணெய்தியகல்வீரன்
சிந்தையுறுவெந்துயர்தவிர்த்துதெளிவோடும்
அந்தமிலரக்கர்குலமற்றவியநூறி
நந்தவில்புவிக்கணிடர்பிற்களைதனன்றால் (௯)

வேறினிவிளம்பவுளதன்றுவிதியாலிப்
பேறுபெறவென்கணருடந்தருளுபின்போய்
ஆறுதயரஞ்சொலிளவஞ்சியடியன்றோள்
ஏறுகடிதென்றுதொழுதின்னடிபணிந்தான். (௧௦)

வேறு.

ஏயான்மொழியெய்தவிளம்பிய
தாயின்முன்னியகன்றனையான்றனை
ஆயதன்மையரியதன்றாமெனத்
தூயமென்சொலினையனசொல்லினாள். (௧௧)

அரியதன்றுநின்னாற்றலுக்கேற்றதே
தெரியவெண்ணினைசெய்வதுஞ்செய்தியே
உரியதன்றெனவோர்கின்றதுண்டதென்
பெரியபேதைமைச்சின்மதிப்பெண்மையால். (௧௨)

வேலையின்னிடையேவந்துவெய்யவர்
கோலிவெஞ்சரநின்னொங்கோத்தபோ
தாலமன்னவர்க்கல்லையெற்கல்லையால்
சாலவுந்தமொறுந்தணிமையோய். (௧௩)

அன்றியும்பிறிதுள்ளதொன்றாரியன்
வென்றிவெஞ்சிலைமாசுணும்வேறினி
நன்றியென்பதம்வஞ்சித்தாய்களின்
நின்றவஞ்சனைநீயுநினைத்தியோ. (௧௪)

கொண்டபோரினுங்கொற்றவன்விற்றொழில்
அண்டரோவருநோக்கவென்னுக்கையைக்

---

* இந்து—வண்டு அஷ்டமிசந்திரன்.

கண்டபோரரக்கன்விழிகாகங்கள்
உண்டபோதன்றியானுளெனுவெனோ. (கரு)

வெற்றிநாணுடைவில்லியர்விற்றொழில்
முற்றநாணிலரக்கியர்மூக்கொடும்
அற்றநாணினராயினபோதன்றிப்
பெற்றநாணமும்பெற்றியதாகுமோ. (க௬)

பொற்பிறங்கலிலங்கைபொருந்தலர்
எற்புமால்வரையாகிலதேயெனின்
இற்பிறப்புமொழுக்குமிழுக்கமில்
* கற்பும்யான்பிறர்க்கெங்ஙனங்காட்டுகேன். (கஎ)

அல்லன்மாக்களிலங்கையதாகுமோ
எல்லை † நீத்தவுலகங்கள்யாவுமென்
சொல்லினுற்சுடுவேனது தூயவன்
வில்லினாற்றற்குமாசென்றுவீசினேன். (கஅ)

வேறுமுண்டுரைகேளதுமெய்ம்மையோய்
ஏறுசேவகன்மேனியல்லாலிடை
ஆறுமைம்பொறிநின்னையுமாணெனக்
கூறுமிவ்வுருத்தீண்டுதல்கூடுமோ. (க௯)

தீண்டுவானெனினித்தனைச்சேண்பகல்
ஈண்டுமோவுயிர்மெய்யினிமைப்பின்முன்
மாண்டுதீர்வனென்றேநிலம்வன்மையால்
கீண்டுகொண்டெழுந்தேகினன்கீழ்மையான். (உ0)

மேவுசிந்தையின்மாதரைமெய்தொடின்
தேவுவன்றலைசிந்துகதீதெனப்
பூவின்வந்தபுராதனனேபுகல்
சாவமுண்டெனதாருயிர்தந்ததால். (உக)

அன்னசாவமுளதெனவாண்மையான்
மின்னுமௌலியன்மெய்ம்மையன்வீடணன்
கன்னி ‡ யென்வயின்வைத்தகருணையாள்
சொன்னதுண்டதுணுக்கமகற்றுவான். (உஉ)

ஆயதன்மையினுனுமதன்றெனின்
மாய்வென்மன்றவறம்வழுவாதென்றும்
நாயகன்வலியெண்ணியுநாணுடைத்
தூய்மைகாட்டவுமித்தனைதாங்கினேன். (உங)

---

* கற்பும்—கலங்காநிலைமையும். † நீற்ற என்றும்பாடம். ‡ என்வயின்—என்னிடத்தே

ஆண்டெனின்றமரக்கனகழ்ந்துகொண்
டண்டுவைத்ததிளவலியற்றிய
நீண்டசாலையொடுநிலைநின்றது
காண்டியையரின்மெய்யுணர்கண்களால். (௨௪)

நீர்விலேனிதொருபகலுஞ்சிலை
வீரன்மேனியைமானுமிவ்வீங்குநீர்
காரநாண்மலர்ப்பொய்கையைகண்ணுவென்
சோருமாருயிர்காக்குந்துணிவினல். (௨௫)

ஆதலானதுகாரியமன்றைய
வேதநாயகன்பாலினிமீண்டனை
போதல்காரியமென்றனள்பூவையக்
கோதிலானுமினையனகூறினன். (௨௬)

நன்றுநன்றிவ்வுலகுடைநாயகன்
தன்றுணைப்பெருந்தேவிதவத்தொழில்
என்றுசிந்தைகளித்துவந்தேத்தினன்
நின்றசங்கையிடரொடுநீங்கினன். (௨௭)

* இருளுஞாலமிராவணனலிது
தெருளுநீயினிச்சில்பகறங்குறின்
மருளுமன்னவற்கியான்சொலும்வாசகம்
அருளுவாயென்றடியினிறைஞ்சினன். (௨௮)

இன்னுமீண்டொருதிங்களிருப்பல்யான்
நின்னைநோக்கிப்பகர்ந்ததுநீதியோய்
பின்னையாவிபிடிக்கின்றிலேனந்த
மன்னனுணையிதனைமனக்கொணீ. (௨௯)

ஆரந்தாழ்திருமார்பற்கமைந்ததோர்
தாரந்தானலனேனுந்தயாவெனும்
ஈரந்தானகத்தில்லனென்றாலுந்தன்
வீரங்காத்தலைவேண்டென்றுவேண்டுவாய். (௩0)

ஏத்தும்வென்றியினையவற்கீதொரு
வார்த்தைகூறுதிமன்னருளாலெனைக்
காத்திருந்தவற்கேகடனென்றிடை
கோத்தவெஞ்சிறைவீடென்றுகூறுவாய். (௩௧)

திங்களொன்றினென்செய்தவந்தீர்த்ததால்
இங்குவந்திலனேயெனின்யாணர்நீர்க்

---

* இராவணனாலே அஞ்ஞானாந்தகாரத்திலே மூழ்கிக்கிடக்கிற இந்த இலங்கை முதலான எல்லாவுலகங்களும் இனியுன்னாலே தெளிவுபெறும் என்பது கருத்தென்று அனவில்பிராட்டி சொல்லுகிறாள்.

கங்கையாற்றங்கரையடியேற்குந்தன்
செங்கையாற்கடன்செய்கென்றுசெப்புவாய். (௧௨)

சிறக்குமாமியர்மூவர்க்குஞ்சீதையாண்
டிறக்கின்றுதொழுதாளெனுமின்னசொல்
அறத்தினாயகன்பாலருளின்மையால்
மறக்குமாயினுநீமறவேலையா. (௧௩)

வந்தெனைக்கரம்பற்றியவைகல்வாய்
இந்தவிப்பிறவிக்கிருமாதரைச்
சிந்தையாலுந்தொடேனென்றசெவ்வரம்
தந்தவார்த்தைதிருச்செவிசாற்றுவாய். (௧௪)

ஈண்டுநானிருந்தின்னுயிர்மாயினும்
மீண்டுவந்துபிறந்துதன்மேனியைத்
தீண்டலாவதோர்தீவினைதீர்வரம்
வேண்டினாடொழுதென்றுவிளம்புவாய். (௧௫)

அரைசுவீற்றிருந்தாளவுமாய்மணிப்
புரைசையானையின்வீதியிற்போகவும்
விரைசுகோலங்கள்காணவிதியிலேன்
உரைசெய்தென்னையென்னூழ்வினையுன்னுவேன். (௧௬)

தன்னைநோக்கியுலகந்தளர்தற்கும்
அன்னைநோய்க்கும்பரதனங்காற்றுறும்
இன்னனேய்க்குமங்கேகுவதன்றியே
என்னைநோக்கியிங்கெங்ஙனமெய்துமோ. (௧௭)

வேறு.

எந்தையாய்முதலியகிளைஞர்யார்க்குமென்
வந்தனைவிளம்புதிகவியின்மன்னனைச்
சுந்தரத்தோளனைத்தொடர்ந்துகாத்துப்போய்
* அந்தமினெடுநகர்க்கரசனாக்கென்பாய். (௧௮)

இத்திறமினையனவிளம்பவின்னுநீர்
தத்துறலொழிந்திலீர்தையலீரொரு
எத்திறத்தேதுவுமியைந்தவின்னுரை
ஒத்தனதெரிவுறவுணர்த்தினாளரோ. (௧௯)

வேறு.

வீவாய்நீயிவண்மெய்யஃதே
ஒய்வானின்னுயிருய்வானும்
போய்வானந்நகர்புக்கன்றோ
வேய்வான்மௌலியுமெய்யன்றே. (௨௰)

*அந்தமில் - பகைவரால் முடிவு பெறுதலில்லாத.

கைத்தோடுஞ்சிறைகற்போயை
வைத்தோனின்னுயிர்வாழ்வாளும்
பொய்த்தோர்விலைவிகளபோவாராம்
இத்தோடொப்பதியாதுண்டே. (௪௧)

நல்லோய்நின்னைநலிந்தோரைக்
கொல்லேமொழுயிர்கொண்டங்கே
எல்லோருஞ்செலவெங்கோனும்
வில்லோடுஞ்செலவேண்டாவோ. (௪௨)

நீந்தாவின்னலினீந்தாமே
தேய்ந்தாருந்தபெருஞ்செல்வம்
ஈய்ந்தானுக்குனையீயாதே
ஓய்ந்தாலெம்மினுயாந்தார்யார். (௪௩)

நன்றாய்நல்வினைநல்லோரைத்
தின்றார்தங்குடர்பேய்தின்னக்
கொன்றாலல்லதுகொள்ளேனு
டென்றானுக்கிவையேலாவோ. (௪௪)

மாட்டாதார்சிறைவைத்தோனை
மீட்டாமென்கிலமீள்வார்மேல்
காட்டார்நல்லவர்நன்றாலும்
கேட்டாரிவ்வுரைகேட்பாரோ. (௪௫)

பூண்டாள்கற்புடையாள்பொய்யாள்
தீண்டாவஞ்சகர்தீண்டாமுன்
மாண்டாளென்றுமனந்தேறி
மீண்டால்வீரம்விளங்காதோ. (௪௬)

கெட்டேநீயுயிர்கேதத்தால்
விட்டாயென்றிடின்மெல்லம்பால்
* ஒட்டாரோடலகோரேழும்
சுட்டானுந்தொலையாவன்றே. (௪௭)

முன்னேகொல்வான்மூவுலகும்
பொன்னேயோங்கியபோர்வில்லான்
என்னேயின்னிலையீதென்றால்
பின்னேசெம்மைபிடிப்பானே. (௪௮)

கோளாளுருயிர்கோளோடும்
மூளாவெஞ்சினமூற்றாகா
மீளாவேலயல்வேறுண்டோ
மாளாதோபுவிவானேடும். (௪௯)

* ஒட்டார்-சத்துருக்கள். ஒட்டு-சிநேகம்.

தாழித்தண்கடறம்மோடும்
ஏழுக்கேழுலகெல்லாமன்
றூழிக்கையவனம்பர்மா
ஊழித்தீயெனவுண்ணாவோ. (௧0)

படுத்தான்வானவர்பற்றாரைத்
தடுத்தான்றீவினைதக்கோரை
எடுத்தானல்வினையெந்நாளும்
கொடுத்தானென்றிசைகொள்ளாயோ. (௧௧)

சின்னாணீயிடர்தீராதாய்
இன்னாவைகலினெல்லோரும்
கன்னாள்காணுதனன்றன்றோ
உன்னானல்லறமுண்டானால். (௧௨)

* புளிக்குங்கண்டகர்புண்ணீருள்
குளிக்கும்பேய்குடையுந்தோறும்
ஒளிக்குந்தேவருவர்துள்ளம்
களிக்குங்கல்வினைகாணாயோ. (௧௩)

வேறு.

ஊழியினிறுதியினுறுமெறிந்தெனக்
கேழிளர்சுடுகணைகிழித்தபுண்பொழி
தாழிருங்குருதியிற்றரங்கவேலைகள்
ஏழுமொன்றாகநின்றிரைப்பக்காண்டியால். (௧௪)

சூலியம்பெருவயிறலைத்துச்சோர்வுறும்
ஆலியங்கண்ணியராறுத்துநீத்தன
வாலியுங்கடப்பருவனப்பவானுயர்
தாலியம்பெருமலைதயங்கக்காண்டியால். (௧௫)

விண்ணினீளியநெடுங் † கழுதும்வெஞ்சிறை
எண்ணினீளியபெரும்பறவையீட்டமும்
புண்ணினீர்புணரியிற்படிந்தபூவையர்
கண்ணினீராற்றினிற்குளிப்பக்காண்டியால். (௧௬)

கரம்பயின்முரசினங்கறங்கக்கைதொடர்
நரம்பினுமிமிழிசைநவிலநாடகம்
அரம்பையராடியவரங்கினொண்டொழிற்
குரங்குகண்முறைமுறைகுனிப்பக்காண்டியால். (௧௭)

* புளிக்கும்-எல்லாரும் வெறுக்கத்தக்க, † கழுது—பசாசு.

புரையுறுபுன்றொழிலரக்கர்புண்பொழி
திரையுறுகுருதியாறீர்ப்பச்செல்வன
வரையுறுபிணம்பெருப்பிறக்கமண்டின
கரையுறுநெடுங்கடறூர்ப்பக்காண்டியால். (௮)

வினையுடையரக்கராமிருந்தைவெந்துகச்
சனகியென்றொருதழனடுவட்டங்கலான்
அனகன்கையமபெனுமளவிலூதையால்
கனகநீடிலங்கைநின்றுருகக்காண்டியால். (௯)

தாக்கிகலிராவணன்றலைபிற்றுவின
பாக்கியமனையசின்பழிப்பின்மேனியை
நோக்கியகண்களைநுதிகொண்மூக்கினால்
காக்கைகளகவர்ந்துகொண்டுண்ணக்காண்டியால். (௧0)

மேலுறவிராவணற்கழிந்துவெள்கிய
கீழுறுதிசைக்கரிதிரிந்துநிற்பன
வாலுறவனையவன்றலையைவவ்வலில்
காலுறுகணைகடிந்திடுவகாண்டியால். (௧௧)

நீர்த்தெழுகணைமழைவழங்கநீலவான்
வேர்த்ததென்றிடையிடைவீசுந்தூசுபோல்
போர்த்தெழுபொலன்கொடியிலங்கைப்பூழியோ
டார்த்தெழுகழுதிரைத்தாடக்காண்டியால். (௧௨)

நீணிறவரக்கர்தங்குருதிநீத்தநீர்
வேலைமிக்காற்றொடுமீளவேலைசூழ்
ஞாலமுற்றங் * கடையுகத்துநச்சுறக்
காலனும்வெருத்துயிர்காலக்காண்டியால். (௧௩)

அணங்கிளமகளிரொடரக்கராறு
மணங்கிளர்கற்பகச்சோலைவாவிவாய்ப்
பிணங்குறவான்முறைபிடித்துமாலைய
கணங்கொடுகுரக்கினங்குளிப்பக்காண்டியால். (௧௪)

செப்புறலென்பலதெய்வவாளிகள்
இப்புறத்தரக்கரைமுருக்கியேகின
முப்புறத்துலகையுமுடிக்கமூட்டலான்
அப்புறத்தரக்கருமவியக்காண்டியால். (௧௫)

ஈண்டொருதிங்களிவ்விடரின்வைகுதல்
வேண்டுவதன்றுநான்விரைவின்வீரனைக்
காண்டலேகுறைவுபின்காலம்வேண்டுமோ
† ஆண்டகையினியொருபொழுதுமாற்றுமோ. (௧௬)

* கடையுகத்து-உகாந்தகாலத்திலே. † ஆண்டகை-புருஷசிரேஷ்டர்.

ஆவியுண்டென்றமீதுண்டென்னாருயிர்ச்
சேவகன்றிருவுருதீண்டத்தீண்டலாப்
பூவிலைதளிரிலைபொரிந்துவெந்திலாக்
காவிலைகொடியிலைநெடியகாவெலாம். (௬௭)

சோகம்வந்துறுவதுதெளிவுதோய்ந்தன்றே
மேகம்வந்திடித்துவந்துருமுவீழ்கினும்
ஆகமும்புயங்களுமழுந்தவைந்தலை
நாகம்வந்தடாப்பினுமுணர்வுநாறுமோ. (௬௮)

மத்துறுதயிரெனவந்துசென்றிடை
தத்துறுமுயிரொடுபுலன்கடள்ளுறும்
பித்தநின்பிரிவினிற்பிறந்தவேதனை
எத்தனையுளவவையெண்ணுமீட்டவோ. (௬௯)

இந்நிலையுடையவன்றரிக்குமென்றியேல்
மெய்ந்நிலையுணர்ந்துழீஇமிடைந்ததீதெனின்
பொய்ந்நிலைகாண்டியான்புகன்றயாவுமுன்
கைந்நிலைநெல்லியங்கனியிற்காட்டுகேன். (௭௦)

தீர்த்தனுங்கவிக்குலத்திறையுந்தேவிநின்
வார்த்தைகேட்டுவப்பதன்முன்னர்மாக்கடல்
தூர்த்தனவிலங்கையைச்சூழமாக்குரங்
கார்த்ததுகேட்டுவந்திருத்தியன்னைநீ. (௭௧)

எண்ணருப்பெரும்படைநாளையிந்நகர்
நண்ணியபொழுததுநடுவணங்கைநீ
விண்ணுறக்கருளன்மேல்விளங்கும்விண்டுவின்
கண்ணனையென்னெடு * வெரிநிற்காண்டியால். (௭௨)

அங்கதன்றோண்மிசையிளவலம்மலை
பொங்குவெங்கதிரெனப்பொலியப்போர்ப்படை
இங்குவந்துறக்குநீயிடருமையமும்
சங்கையுநீங்குதிதனிமைநீங்குவாய். (௭௩)

† குராவருங்குழலியிக்குறித்தநாளினை
விராவருநெடுஞ்சிறைமீட்கிலாவெனின்
பராவருப்பழியொடும்பாவம்பற்றுதற்
கிராவணனவனிவனிராமனென்றனன். (௭௪)

வேறு.

ஆவிம்மொழியாவிலகேட்டறிவுற்றாள்
ஓகைகொண்டுகளிக்குமனத்தளுடர்ந்தாள்

---

* வெரிநில் - முதுகின்மேல். † குரா - குராவமலர்கள்.

போகைகன்றிலனென்பதுபுந்தியின்வைத்தான்
தோகையுஞ்சிலவாசகமின்னசொன்னாள். (௭௫)

சேறியையவிரைந்தனதீயவையெல்லாம்
வேறியானினியொன்றும்விளம்பலென்மேலோய்
கூறுகின்றனமுன்குறியுற்றனகோமாற்
கேறுமென்றவைசொல்லெனவின்னவிசைப்பாள். (௭௬)

நாகமொன்றியால்வரையின்றலைமேனாள்
ஆகம்வந்தனையள்ளுகிர்வாளினலைந்த
காகமொன்றைமுனிந்தயல்கல்லெழுபுல்லால்
வேகவெம்படைவிட்டதுமெல்லவிரிப்பாய். (௭௭)

அங்கதஞ்சிநடுங்கியயன்பதியண்மி
இங்குநின்வரவென்னவெனக்கனல்வெய்த
மங்கைபங்கனொடெண்டிசையுஞ்செலமற்றோர்
தங்கடங்களிடங்கண்மறுத்தமை * தைப்பாய். (௭௮)

இந்திரன்றருமைந்தனுறுந்துயர்யாவும்
அந்தரத்தினினின்றவர்கண்டினியந்தோ
எந்தைதன்சரணன்றியோர்தஞ்சமுமின்றால்
வந்தவன்சரண்வீழ்கெனவுற்றதும்வைப்பாய். (௭௯)

அய்யனின்சரணஞ்சரணென்றவனஞ்சி
வய்யம்வந்துவணங்கிடவள்ளன்மகிழ்ந்தே
வெய்யவன்கணிரண்டொடுபோகெனவிட்ட
தெய்வவெம்படையுற்றுளதன்மைதெரிப்பாய். (௮௦)

எந்தைநின்சரணஞ்சரணென்றவிதன்னால்
முந்துநின்குறையும்பொறைதந்தனமுந்துன்
சந்தமொன்றகொடித்திரள்கண்கடமக்கே
வந்தொர்நன்மணிசிற்கெனவைத்ததும்வைப்பாய். (௮௧)

வேகம்விண்டுசெயர்தன்வணங்கிவிசும்பில்
போகவண்டர்கள்கண்டவர்கொண்டுபொழிந்தார்
† நாகனம்பனிளங்கிளைநன்குணராத
பாகுதங்கியவென்றியினின்சொல்பணிப்பாய். (௮௨)

என்றொரின்னுயிர்மென்கிளிக்கியார்பெயரீகேன்
மன்னவென்றலுமாசறுகைகயன்மாதென்
அன்னைதன்பெயராகெனவன்பினொடன்றாட்
சொன்னமெய்ம்மொழிசொல்லுதிமெய்ம்மைதொடர்ந்தோய். ()

---

* தைப்பாய்-தெரியச்சொல்லு. † பருவதராசன்பின்னையென்றது மேருமலை போல்வார் இளையபெருமானென்க.

என்றுரைத்தினிதித்தனைபேரடையாளம்
ஒன்றுணர்த்துவதில்லெனவெண்ணியுணர்ந்தான்
தன்றிருத்துகிலிற்பொதிவுற்றதுதானே
வென்றதச்சுடர்மேலொடுகேழுறமெய்யால். (௮௪)

வாங்கினுடன்மலர்க்கையினன்னதுமுன்னா
ஏங்கினனவ்வநுமனுமென்கொலிதென்னா
வீங்கினன்வியந்தானுலகேழும்விழுங்கித்
தூங்குகாரிருண்முற்றுமிரிந்ததுசுற்றும். (௮௫)

மஞ்சலங்கொளியோனுமிம்மாநகர்வந்தான்
அஞ்சலன்னெனவெங்கணரக்கரயிர்த்தார்
சஞ்சலம்விரிசக்கரவாகமுடன்றூழ்
கஞ்சமும்மலர்வுற்றனகாந்தினகாந்தம். (௮௬)

கூந்தன்மென்மழைகொண்முகின்மேலெழுகோளின்
வேந்ததன்னதுமெல்லியறன்னெழின்மேனி
சேர்ந்ததந்தமில்சேவகன்சேவடியென்னக்
காந்துகின்றதுகாட்டினன்மாருதிகொண்டான். (௮௭)

சூடையின்மணிகண்மணியொப்பனதொன்னாள்
ஆடையின்கணிருந்ததுபேரடையாளம்
நாடிவந்தெனதின்னுயிர்நல்கிய * நம்பா
கோடியென்றுகொடுத்தனண்மெய்ப்புகழ்கொண்டாள். (௮௮)

தொழுதுவாங்கினன்சுற்றியதுசினன்முற்றப்
பழுதுறுவகைபந்தனைசெய்தனன்வந்தித்
தழுதுமும்மைவலங்கொடிறைஞ்சினன்போ
டெழுதுபாவையுமேத்தினளேகினனிப்பால். (௮௯)

௬ - வது - சூளாமணிப்படலம் - முற்றிற்று.
(ஆக திருவிருத்தம்-௬௯௫.)

---

௭ - வது. பொழிலிறுத்தபடலம்.

அசோகவனத்தையழித்தது.

நெறிக்கொடுவெடக்குறசினைப்பினிமிர்ந்தான்
பொறிக்குலமலர்ப்பொழிலிடைக்கடிதுபோவான்
சிறத்தொழின்முடித்தகறிதெனத்தெரிந்தான்
மறித்துமோர்செயற்குரியகாரியமதித்தான். (௧)

* நம்பா-ஆணில்சிரேஷ்டன்.

ஈனமுறுபற்றலரையெற்றியெயின்மூதூர்
மீனநிலயத்தினுகவிசிவிழிமானை
மானவன்மலர்க்கழலின்வைத்துமிலெனென்றால்
ஆனபொழுதெப்பரிசினானடியனாவேன். (உ)

வஞ்சனையரக்கனைநெருக்கிநெடுவாலால்
அஞ்சினுடனஞ்சுதலைதோளுறவசைத்தே
வெஞ்சிறையில்வைத்துமிலென்வென்றுமிலெனென்றால்
தஞ்சமொருவர்க்கொருவரென்றறகுமன்றோ. (ங)

கண்டநிருதக்கடல்கலக்கினன்வலத்தில்
திண்டிறலரக்கனுமிருக்கவொர்திறத்தின்
* மண்டவுதரத்தவண்மலர்க்குழல்பிடித்துக்
கொண்டுசிறைவைத்திடுதலிற்குறைவதுண்டோ. (ச)

மீட்டுமினியெண்ணும்வினைவேறுமுளதன்றால்
ஒட்டியிவ்வரக்கரையுலைத்துரிமையெல்லாம்
காட்டுமிதுவேகருமமன்னவர்கடும்போர்
மூட்டும்வகையாவது † கோலென்றுமுயல்கின்றான். (ரு)

இப்பொழிலினைக்கடிதிருக்குவெனிறுத்தால்
அப்பெரியபூசல்செவிசார்தலுமரக்கர்
வெப்புறுசினத்தரெதிர்மேல்வருவர்வந்தால்
துப்புறமுருக்கியுயிருண்பலிதருதால். (சு)

வந்தவர்கள்வந்தவர்கண்மீள்கிலர்மடிந்தால்
வெந்திறலரக்கனும்விலக்கருவலத்தால்
முந்துமெனினன்னவன்முடித்தலை ‡ முசித்தென்
சிந்தையுறுகோபமுமவித்தினிதுசெல்வேன். (எ)

என்றுநினையாவிரவிசந்திரனியங்கும்
குன்றமிருதோளினையதனனுருவுகொண்டான்
அன்றல்கெயிற்றிடைகொளேனமெனலானான்
துன்றுகடிகாவினையடிக்கொடுதகைத்தான். (அ)

முடிந்தனபிளந்தனமுரிந்தனநெரிந்த
மடிந்தனபொடிந்தனமறிந்தனமுறிந்த
இடிந்தனதகர்ந்தனவெரிந்தனகரிந்த
ஒடிந்தனவொசிந்தனவுதிர்ந்தனபிதிர்ந்த. (கூ)

வேரொடுமெறிந்தசிலவெந்தசிலவிண்ணில்
காரொடுமெறிந்தசிலகாலினொடுவேலைத்
தூரொடுமெறிந்தசிலதும்பியொடுவானோர்
ஊரொடுமெறிந்தசிலவுக்கசிலநெக்க. (க0)

* மண்டோதரி-இராவணன் மனைவி. † கோல்-சை. ‡ முசித்து-இருசி.

சோனைமுதன்மற்றவைசுழற்றியதிசைப்போர்
ஆனைநகரக்குளகுமானவடிபற்று
யோனிமிரவிட்டனவிசும்பின்வழிமீப்போய்
வானவர்களைநதனவனத்தையுமடித்த. (கக)

அலைந்தனகடற்றிரையரக்கர்கண்மாடம்
குலைந்துகவிழ்ந்தனகுலக்கிரிகளோடு
மலைந்துபொடியுற்றனமயங்கிநெடுவானத்
துலைந்துவிழுமீனினொடுவெண்மலருதிர்ந்த. (கஉ)

முடக்குநெடுவேரொடுமுகந்துலகமுற்றும்
கடக்கும்வகைவீசின களித்ததிசையானை
மடப்பிடியினுக்குதவமையினிமிர்கைகளைத்
திடுக்கியனவொத்தனவெயிற்றினிடைஞாலம. (கங)

விஞ்சையுலகத்தினுமியக்கர்மலைமேலும்
துஞ்சுதலிலவானவர்துறக்கநகரத்தும்
பஞ்சியடிவஞ்சியர்கண்மொய்த்தனர்பறித்தார்
நஞ்சமனையானுடையசோலையினறும்பூ. (கச)

பொன்றிணிமணிப்பருமரன்றிசைகள்போவ
மின்றிரிவவொத்தனவெயிற்கதிருமொத்த
ஒன்றினொடுமொன்றிடைபுடைத்ததிராழின்
தன்றிரளொழுகவிழுதாரகையுமொத்த. (கரு)

புள்ளினொடுவண்டுமிஞிறுங்களிகொள்பூவும்
கன்னுமுலைகயுந்தளிர்களோடினியகாயும்
வெள்ளநெடுவேலையிடைமீனினமிழுங்கித்
துள்ளினமரன்படநெரிந்தனதுடித்த. (கசு)

தாவியமலர்த்தொகைசுமந்துதிசைதோறும்
பூவின்மணநாறவபுலால்கமழ்விலாத
தேவியர்களோடுமுயர்தேவரினிதாடும்
ஆவியெனலாயதிரையாகலிகளமமா. (கஎ)

இடந்தமணிவேதியுமிறுத்தகடிகாவும்
தொடர்ந்தனதுரந்தனபடிந்துநெறிதூரக்
கடந்துசெலவென்பதுகடந்தவிருகாலால்
நடந்துசெலலாகுமனைவாரியதுகன்னீர். (கஅ)

வேனில்விளையாடுசுடரோனினொளிமழுங்க
வானினிடைவீசியவரும * பணைமரத்தால்
தானவர்கணமாளிகைதகர்ந்துபொடியாய
வானவிடியாவொடியுமால்வரைகண்மான. (ககூ)

* பணை-கிளை.

எண்ணிறருகோடிகளெறிந்தனசெறிந்தே
* தண்ணமழைபோலிடைதழைந்ததுசலத்தால்
அண்ணலதுமானடலிராவணனதந்நாள்
விண்ணுமொருசோலையுளதாமெனவிதித்தான். (உ0)

தேனுறைதுளிப்பநிறைபுட்பலசிலம்பப்
பூநிறைமணித்தருவிசும்பினிடையேபோய்
மேன்முறைநெருக்கவொளிவாளொடுவில்வீச
வானிடைநடாயநெடுமானமெனலான. (உக)

சாகநெடுமொப்பனைதழைத்தனதனிப்போர்
† நாகமனையானெறியமேனிமிர்வநாளு
மாகநெடுவானிடையிழிந்துபுனல்வாரும்
மேகமெனலாயநெடுமாகடலின்வீழ்வ. (உஉ)

வேறு.

ஊனமுற்றிடைமண்ணினுதித்தவர்
ஞானமுற்றுபுநண்ணினர்வீடெனத்
தானகற்பகத்தண்டலைவிண்டலம்
போனபுக்கனமுன்னுறைபொன்னகர். (உங)

மணிகொள்குட்டிமமட்டித்துமண்டபம்
துணிபடுத்தயல்வாவிகடூர்த்தொளிர்
திணிசுவர்த்தலஞ்சிந்திச்செயற்கரும்
பணிபடுத்துயர்குன்றம்படுத்தரோ. (உச)

வேங்கைசெற்று ‡ மராமரம்வேர்பறித்
தோங்குகற்பகம்பூவொடொடித்துராய்ப்
பாங்கர்சண்பகப்பத்திபறித்தயல்
மாங்கனிப்பனைமட்டித்துமாற்றியே. (உரு)

சந்தனங்கடகர்ந்தனதாள்பட
இந்தனங்களின்வெந்தெரிசிந்திட
முந்தனங்கவசந்தன்முகங்கெட
நந்தனங்கள்கலங்கிநடுங்கவே. (உசு)

சாமரங்களிவண்டுகலங்கிட
மாமரங்கண்மடிந்தனமண்ணொடு
தாமரங்கவரங்குகுகர்ந்துகப்
பூமரங்களெரிந்துபொரிந்தவே. (உஎ)

குழையுங்கொம்புங்கொடியுங்குயிற்குலம்
விழையுந்தண்டளிர்ச்சூழலுமென்மலர்ப்

* தண்ணம்—குளிர்ந்தநீர். † நாகம் அனையான்-மலையையும் யானையையுமொத்த திருவடி. ‡ மராமரம்-கடப்பமரங்கள்.

* புழையும்வாசப்பொதும்பும்பொலன்கொடேன்
மழையும்வண்டுமெயிலுமடிந்தவே. (உஅ)

பவளமாக்கொடிவீசினபன்மழை
துவளுமின்னெனச்சுற்றிடச்சூழ்வரை
திவளும்பொற்டனைமாமரஞ்சேர்ந்தன
† கவளயானையிணுடையிற்கார்ந்தவே. (உகூ)

பறவையார்த்தெழுபோசையும்பன்மரம்
இறலெடுத்தவிடிக்குரலோசையும்
அறவொர்த்தெழுமோசையுமண்டத்தின்
புறநிலத்தையுங்கைம்மிகப்போயதே. (கூ0)

பாடலம்படர்கோங்கொடும்பன்னிசைப்
பாடலம்பனிவண்டொடுபஃறிரைப்
பாடலம்புயர்வேலையிற்பாய்ந்தன
பாடலம்பெறப்புள்ளினம்பாற்றவே. (கூக)

வண்டலம்புகலாற்றின்மராமரம்
வண்டலம் ‡ புனலாற்றின்மடிந்தன
விண்டலம்புகநீங்கியமென்புனல்
விண்டலம்புகநீண்மரம்வீழ்ந்தவே. (கூஉ)

தாமரைத்தடம்பொய்கைசெஞ்சந்தனம்
தாமரைத்தனவொத்ததுகைத்தலின்
காமரக்களிவண்டொடுங்கள்ளொடும்
காமரக்கடல்பூக்கடல்கண்டவே. (கூகூ)

$ சிந்துவாரந்திசைதொறுஞ்சென்றன
¶ சிந்துவாரப்புரைதிரைசேர்ந்தன
§ தந்துவாரம்புதவொடுதோரணத்
தந்துவாரந்துகள்படச்சாய்ந்தவே. (கூச)

○ கந்தவாகத்துநாண்மலர்நாறின
() நந்தவானத்துநாண்மலர்நாறின
❖ சிந்தவாகந்திரிந்துகச்செம்மணி
⊕ சிந்தவானந்திரிந்ததிரைக்கடல். (கூ௫)

* புழையாவது—மலரினதுகாம்பு பொதிந்தன்னஇடம். † கவளம்-யானையுணவு, ‡ புனலாறு-நீராறு உப்பங்கழி. $ சிந்துவாரம்—நொச்சிமரங்கள். ¶ சிந்து—கடலினது, வாரம்—கரையிலும், § தந்து—எரிதல், வார்-நீண்ட, அம்-அழகிய, தம்-அந்த (அரக்கருடைய) துவாரம்-வாயிலும். நம்—அக்கதவுகளையுடையனவான எனவுமாம், ○ கந்தவானம்-அசோகவனம் () நந்தவான—அதிகமாக ஆகாயத்திலேபோய். ❖ சிந்தவானம்-கீழைப்பெய்கிற அவ்வானம். ⊕ சிந்தவானத்து-பெரும்படி [illegible] [illegible] கலந்த.

புல்லும்பொற்பணைப்பன்மணிப்பொன்மரம்
கொல்லுமிப்பொழுதேயெனுங்கொள்கையால்
எல்லிவிட்டுவிளக்கியவிந்திரன்
வில்லுமொத்தனவிண்ணுறவீசின. (௨௬)

ஆனைத்தானமுமாடலரங்கமும்
பானத்தானமும்பாய்பரிப்பந்தியும்
ஏனைத்தாரணிதேரொடுமிற்றன
கானத்தார்தருவண்ணல்கடாவவே. (௨௭)

மயக்குபொற்குலவல்லிகள்வாரிசேர்
இயக்குறத்திசைதோறுமெறிந்தன
வெயிற்கதிர்க்கற்றையற்றுறவீழ்ந்தன
புயற்கடற்றலைபுக்கனபோல்வன. (௨௮)

பெரியமாமரமும்பெருங்குன்றமும்
இரியவீசலினிர்நெடும்பொன்மதில்
நெரியமாடநெருப்பெழநீறெழ
இரியல்போனவிலங்கையுமெங்கணும். (௨௯)

வேறு.

தொண்டையங்கனிவாய்ச்சீதைதயக்கினளென்னைச்சுட்டாய்
விண்டவரனவர்தம்முன்னேவிரிபொழிலிறுத்துவீசக்
கண்டனனின்றுவென்றகாணுமேலரக்கன்காய்தல்
உண்டெனவெருவினன்போலொளித்தனனுடுவின்கோமான். (௩0)

காசறுமணியும்பொன்னுங்காந்தமுங்கருல்வதாய
மாசறுமரங்களாகக்குயிற்றியமதனச்சோலை
ஆசைகடோறுமையன்கைகளாலள்ளியள்ளி
வீசியவிளக்கலாலேவிளங்கினவுலகமெல்லாம். (௩௧)

கதறினவெருவியுள்ளங்கலங்கினவிலங்குகண்கள்
குதறினபறவைவேலைகுளித்தனகுளித்திலாத
பதறினபதைத்தவானிற்பறந்தனபறந்துபார்வீழ்ந்
துதறினசிறையமீளவொடுக்கினவுலர்ந்துபோன. (௩௨)

தோட்டொளிர்துதைந்ததெய்வமரந்தொறுந்தொடுத்தபுட்டம்
கூட்டொடுந்துறக்கம்புக்குன்றெனக்குவவுத்திண்டோள்
சேட்டகன்பரிதிமார்பன்சிறியர்தீண்டறன்றால்
மீட்டவன்கருணைசெய்தார்பெறும்பதம்விளம்பலாமே. (௩௩)

பொய்ம்முறையரக்கர்காக்கும்புன்றுறைபுதுமென்சோலை
விம்முறுமுள்ளத்தன்னமிருக்குமவ்விருக்கமொன்றும்

மும்முறையுலகமெல்லாமுற்றுறமுடிவதான
அம்முறையயன்வைகுமாலெனநின்ற * தம்மா. (௪௪)

உறசுடர்ச்சூடைக்காசவ்வுயிரிணையுயிரொப்பானுக்
கறிகுறியாகவிட்டாளாதலான்வறியளந்தோ
† செறிகுழற்சீதைக்கென்றோர்சிகாமணிதெரிந்துவாங்கி
எறிகடலீவதென்னவெழுந்தனனிரவியென்பான். (௪௫)

தாழிரும்பொழில்களெல்லாந்துடைத்தொருதமியனின்றான்
எழினொடேழுநாடுமளந்தவனெனலுமானான்
ஆழியினடுவணின்றவருவரைக்காசுமொத்தான்
ஊழியினிறுதிக்காலத்துருத்திரமூர்த்தியொத்தான். (௪௬)

இன்னநிகழும்வேலையரக்கியரெழுந்துபொங்கிப்
பொன்மலையென்னநின்றபுனிதனைப்புகன்றுநோக்கி
அன்னையீதென்னமேனியார்கொலென்றச்சமுற்றார்
நன்னுதறன்னைநோக்கியறிதியோநங்கையென்றார். (௪௭)

தீயவர்தீயசெய்தறீயவர்தெரியினல்லால்
தூயவர்துணிதலுண்டேநம்முடைச்சூழலெல்லாம்
ஆயமானெய்தவம்மானிளையவனரக்கர்செய்த
மாயமென்றுரைக்கவேவுமெய்யெனமையல்கொண்டேன். (௪௮)

என்றனளரக்கிமார்கள்வயிறலைத்திரியல்போகிக்
குன்றமுமுலகும்வானுங்கடல்களுங்குலையவோட
நின்றதோர்சமித்தங்கண்டானீக்குவலிதனையென்னாத்
தன்றடைக்கைகணீட்டிப்பற்றினன்றாதையொப்பான். (௪௯)

கண்கொளவரிதுமீதுகால்கொளவரிதுதிண்கால்
எண்கொளவரிதிராவுமிருள்கொளவரிதுமாக
விண்கொளநிவந்தமேருவெள்குறவெதும்பியுள்ளம்
புண்கொளவுயர்ந்ததிப்பார்பொறைகொளவரிது ‡ போலாம். (௫௦)

பொங்கொளிநெடுநாளீட்டிப்புதியபால்பொழிவதொக்கும்
திங்களைநக்குகின்றவிருளெலாம்வாரித்தின்ற
அங்கைபத்திரட்டியான்றன்னாணையாலழகுமானப்
பங்கயத்தொருவன்றானேபசும்பொனாற்படைத்ததம்மா. (௫௧)

தூணெலாஞ்சுடருங்காசுசுற்றெலாமுத்தஞ்சொன்னம்
பேணலாமணியின்பத்திப்பிடரெலாமொளிகள்விம்மச்
சேணெலாம்விரியுங்கற்றைச்சேயொளிச்சொல்வற்கேயும்
பூணலாமெம்மனோராற்புகழலாம்பொதுமைத்தன்றே. (௫௨)

---

* அம்மா-அசை. † செறிகுழல்-சிறையிருத்தலாலே சடையாகச்செறிந்த கூந்தலெனலாம், ‡ போல் ஐயத்தில்வந்த அசை.

வெள்ளியங்கிரியைப்பண்டவ்வெந்தொழிலரக்கன்வேரோ
டள்ளினனென்னக்கேட்டானத்தொழிற்கழிவுதோன்றப்
புள்ளிமாமேருவென்னும்பொன்மலையெடுப்பான்போல
வள்ளுகிர்த்தடக்கைதன்னுன் மண்ணின்றும்வாங்கியண்ணல். (ருங)

விட்டனனிலங்கைதன்மேல்விண்ணுறவிரிந்தமாடம்
பட்டனபொடிகளான பகுத்தனபாங்குநின்ற
சுட்டனபொறிகள்பின்னைத்துளங்கினரரக்கர்தாமும்
கெட்டனர்வீரரம்மாபிழைப்பரோகேடுசூழ்ந்தார். (ருச)

நீரிடுதுகிலரச்சர்நெருப்பிடுநெஞ்சர்நெக்குப்
பீரிடு * முருவர்தெற்றிப்பிணங்கிடுதாளர்பேழ்வாய்
ஊரிடுபூசலாரவுளைத்தனரோடியுற்றார்
பாரிடு † பழுவச்சோலைபாரிக்கும் ‡ பருவத்தேவர். (ருரு)

அரிபடுசீற்றத்தான்றனருகுசென்றடியின்வீழ்ந்தார்
கரிபடுதிசையினீண்டகாவலாய்காவலாற்றேம்
கிரிபடுகுவவுத்திண்டோட்குரங்கிடைகிழித்துவீச
எரிபடுதுகிலினெய்தினிற்றதுகடிகாவென்றார். (ருசு)

சொல்லிடவெளியதன்றாற்சோலையைக்காலிற்கையின்
புல்லொடுதுகளுமின்றிப்பொடிபடநூறிப்பொன்னல்
வில்லிடுவோமந்தன்னைவேரொடுவாங்கிவீசச்
சில்லிடமொழியத்தெய்வவிலங்கையுஞ்சிதைந்ததென்றார். (ருஎ)

ஆடகத்தருவிண்சோலைபொடிபடுத்தரக்கர்காக்கும்
தேடருமோமம்வாங்கியிலங்கையுஞ்சிதைத்ததம்மா
$ கோடரமொன்றேசன்றிதிராக்கதர்கொற்றஞ்சொற்றல்
மூடருமொழியாரென்னமன்னனுமுறுவல்செய்தான். (ருஅ)

தேவர்கள்பின்னுமன்னவதனுருச்சுமக்குந்திண்மைப்
பூவலயத்தையன்றேபுகழ்வதுபுலவர்போற்றும்
மூவரினொருவனென்றுபுகல்கினுமுடிவிலாத
ஏவமக்குரங்கையையகாணுதியின்னேயென்றார். (ருகூ)

மண்டலங்கிழிந்தவாயின்மறிகடன்மோழைமண்ட
எண்டிசைசுமந்தமாவுந்தேவருமிரியல்போகத்
தொண்டைவாயரக்கிமார்கள்சூல்வயிறுடைந்துசோர
அண்டமும்பிளந்துவிண்டதாமெனவநுமனார்த்தான். (சு0)

எ - வது - பொழிலிறுத்தபடலம் - முற்றிற்று.

(ஆ திருவிருத்தம்-எருரு.)

---

* உருவர்-உடம்புகளுடனே. † பழுவச்சோலை-அடர்ந்தசோலை. ‡ பருவத்தேவர் காலதேவதைகள், சோலையின் பருவம் தெரிந்து பாலிக்குந்தேவரென்க. $ கோடரம்—குரங்கு.

௮ - வது. கிங்கரர்வதைப்படலம்.

அருவரைமுழையின்முட்டுமசனியினிடிப்புமாழி
வெருவருமுழக்குமீசனவில்லிறுமொலியுமென்னக்
குருமணிமகுடகோடிமுடித்தலைகுலுங்கும்வண்ணம்
இருபதுசெவியினூடுநுழைந்ததவ்வெழுந்தவோசை. (௧)

புல்லியமுறுவறோன்றப்பொருமையுஞ்சிறிதுபொங்க
எல்லையிலாற்றன்மாக்களெண்ணிறந்தாரையேவி
வல்லையினகலாவண்ணம்வானையும்வழியைமாற்றிக்
கொல்லலீர்குரங்கைநொய்திற்பற்றுதிர்கொணர்திரென்றான். (௨)

சூலம்வாண்முசலங்கூர்வே * றோமரந்தண்டுபிண்டி
† பாலமேமுதலாவுள்ளபடைக்கலம்பரித்தகையர்
ஆலமேயனையமெய்யரகவிடமழிவுசெய்யும்
காலமேலெழுந்தமூரிக்கடலெனக்கடிதுசெல்வார். (௩)

நானிலமதனிலுண்டுபோரெனநவிலினச்சொல்
தேனினுங்களிப்புச்செய்யுஞ்சிந்தையர்தெரித்துமென்னின்
கானினும்பெரியவோசைகடலினும்பெரியகீர்த்தி
வானினும்பெரியர்மேனிமலையினும்பெரியர் ‡ மாதோ. (௪)

திருகுறுஞ்சினத்துத்தேவர்தானவரென்னுந்தெவ்வர்
இருகுறும்பெறிந்துநின்றவிசையினர்வசையென்றெண்ணிப்
பொருகுறும்பென்றுவென்றுபுணர்வதுபூவுண்வாழ்க்கை
ஒருகுறுங்குரங்கென்றெண்ணிநெடிதுநாணுழக்குநெஞ்சர். (௫)

கட்டியவாளரிட்டகவசத்தர்கழலர்திக்கைத்
தட்டியதோளர்மேகந்தடவியகையர்வானை
எட்டியமுடியர்தாளாலிடறியபொருப்பரீட்டிக்
கொட்டியபேரியென்னமழையெனக்குமுறுஞ்சொல்லார். (௬)

வானவரெறிந்ததெய்வவடுபடைவடுக்கண்மற்றைத்
தானவர்துரந்தவேதித்தழும்பொடுதயங்குந்தோளர்
யானையும்பிடியும்வாரியிடுங்கியவாயரீன்ற
கூனவெண்பிறையிற்றோன்றுமெயிற்றினர்கொதிக்குங்கண்ணர். (௭)

சக்கரமுலக்கைதண்டுதாரைவாள் § பரிகஞ்சங்கு
முற்கரமுசுண்டிபிண்டிபாலம்வேல்சூலமுட்கோல்
பொற்கரங்குலிசம்பாசம்புகர்மழுவெழுப்பொற்குந்தம்
விற்கருங்கணைவிட்டேறுகழுக்கடையெழுக்கன்மின்ன. (௮)

---

* தோமரம்-எறியாயுதம், † பாலமே என்பதில்-இடைச்சொல். ‡ மாது.ஓ-அசைகள். § பரிகம்-வளைதடி.

பொன்னின்றகளுஞ்தெய்வப்பூணினர்பொருப்புத்தோளர்
மின்னின்றபடையுங்கண்ணும்வெயில்விரிக்கின்றமெய்யர்
என்னென்றார்க்கென்னென்றுரெய்தியதறிந்திலாதார்
முன்னின்றார்முதுகுநீயப்பின்னின்றார்முகிகுகின்றார். (௯)

வெய்துறபடையின்மின்னார்வில்லினர்வீசுகாலர்
மய்யுறவிசும்பிற்றேன்றமேனியர்மடிக்குப்வாயர்
கய்பரந்துலகுபொங்கிக்கடையுகமுடியுங்காலைப்
பெய்யவென்றெழுந்தமாரிக்குவமைசால்பெருமைபெற்றார். (௧௦)

பணியுறசெயலைசிந்தியோமமுப்பறித்ததம்மா
தனியொருகுரங்குபோலாநன்றாநந்தருக்கென்கின்றார்
இனியொருபழிமற்றுண்டோவிதனினென்றிரைத்துப்பொங்கி
முனிவுறமனதிற்றுவிமுந்துறமுகிகுகின்றார். (௧௧)

எற்றுறமுரசம்வின்னுணேறுவிட்டெடுத்தவார்ப்பும்
சுற்றுறகழலுஞ்சங்குந்தெருதெழித்துறப்புஞ்சொல்லும்
உற்றுடன்றொன்றுயோங்கியொலித்தெழுந்தூழிப்பேர்வில்
நற்றிரைகடல்களோடுமேழைகளைநாவடக்க. (௧௨)

தெருவிடமில்லென்றெண்ணிவானிடைச்செல்கின்றாரும்
புருவமுஞ்சிலையுங்கோட்டிப்புகையுயிர்த்தயிர்க்கின்றாரும்
ஒருவரினொருவர்முந்திமுறைமறந்தருக்கின்றாரும்
விரிவிலதிலங்கையென்றவழிபெறார்விளிக்கின்றாரும். (௧௩)

வாளுறைவிதிர்க்கின்றாரும்வாயினைமடிக்கின்றாரும்
தோளுறத்தட்டிக்கல்லைத்துகள்படத்துகைக்கின்றாரும்
தாள்பெயர்த்திடம்பெறாதுதருக்கினர்நெருக்குவாரும்
கோள்வளையெயிறுதின்றுதீயெனக்கொதிக்கின்றாரும். (௧௪)

வேறு.

அனைவருமலையெனநின்றாளவுறுபடைகள்பயின்றார்
அனைவருமரிஞுயர்ந்தாரகலிடநெளியநடந்தார்
அனைவரும்வரனினமைந்தாரசனியினணிகளணிந்தார்
அனைவருமமரரைவென்றாரசரரையுயிரையயின்றார். (௧௫)

* குறங்கினகவசருமின்போல்குழைகழலாகருங்கண்போர்
முறங்கினபொழுதினுடைந்தார்முதுகிடைமுறவுபயின்றார்
இறங்கின † நிருதிமுதல்வன்பேரிசைகெடவளைகையெறிந்தார்
தெறுகுரரின்மையர்வன்றேடினவுறவுலகுதிரிந்தார். (௧௬)

வரைகளையிடறுமினென்றான்மறிகடல்பருகுமினென்றான்
இரவிலையவிழவிடுமென்றானெழுமழைபிழியுமினென்றான்

* குறங்கினகவசம் - அரைச்சட்டை. † நிருதிமுதல்வன் - சங்கரிதிபதும் மிதிகளுக்கு பாத்தியனான குபேரன்.

அரவினதாசனையொன்றோதரையினொடறையுமினென்றால்
தரையினையெடுமெடுமென்றொலொருவரதமைதல்சமைந்தார். (௧௭)

தூளியினிமிர்படலம்போயிமையவர்விழிதுறவெம்போர்
மீளியினினமெனவன்றாள்விஸ்ரபுலிகிளையெனவிண்டோய்
ஆளியினணியெனவன்றேலலைகடல்விடமெனவஞ்சா
வாளியின்விசைகொடுதிண்கார்வரைவருவனவெனவந்தார். (௧௮)

பொறிதரவிழியயிரொன்றோபுகையுகவியிலொளிமின்போல்
செறிதரவுருமதிர்கின்றார்திசைதொறும்விசைகொடுசென்றார்
எறிதருகடையுகவன்காலிடறிடவுருமினினம்போய்
மறிதரமழையகல்விண்போல்வடிவழிபொழிலைவளைந்தார். (௧௯)

வயிரொலிவளையொலிவன்கார்மழையொலிமுரசொலிமண்பால்
உயிருலைவுறவிருப்போருருமொலிசெவியினுணர்ந்தான்
வெயில்விரிகதிரவனும்போய்வெருவிடவெளியிடைவிண்டோய்
கயிலையின்மலையெனநின்றானவயவர்வருதொழில்கண்டான். (௨0)

இதவியலிதுவெனமுந்தேயியைவுறவினிதுதெரிந்தான்
பதவியலறிவுபயந்தாலதினலபயனுளதுண்டோ
சிதவியல்கடிபொழிலொன்றோசிதறியசெயறருதிண்போர்
உதவியலினிதினுவந்தானெவரினுமதிகமுயர்ந்தான். (௨௧)

இவனிவனிவனெனநின்றாரிதுவெனமுதலியெதிர்ந்தார்
பவனனின்முடுகிநடந்தார்பகலிரவுறமிடைகின்றார்
புவனியுமலையும்விசும்பும்பொருவருநகருமுடன்போர்
துவனியிலதிர * விடம்போற்சுடர்விடுபடைகடுரந்தார். (௨௨)

மழைகளுமறிகடலும்போய்மதமறமுரசமறைந்தார்
முழைகளினிதழ்கடிறந்தார்முதுபுகைகதுவமுனிந்தார்
பிழையிலபடவரவின்றோள்பிடருறவடியிடுகின்றார்
கழைதொடர்வனமெரியுண்டாலெனவெறிபடைஞர்கலந்தார். (௨௩)

அறவனுமதனையறிந்தானருகினினழகினமைந்தார்
இறைவினினுதவுநெடுந்தாருயர்மரமொருகையினேந்தான்
உறவருதுணையெனவன்றேவுதவியவதனையுவந்தான்
நிறைகடல்கடையுநெடுந்தாண்மலையெனநடுவணிமிர்ந்தான். (௨௪)

பருவரைபுரைவனவன்றோள்பனிமலையருவிநெடுங்கால்
சொரிவனபலவெனமண்டோய்துறைபொருகுருதிசொரிந்தார்
ஒருவரையொருவர்தொடர்ந்தாருயர்தலையுடையவருண்டார்
அருவரைநெறியவிழும்போரசனியுமனையவனறைந்தான். (௨௫)

* விடம்போற்சுடர்விடுதல்-விஷாக்கினிபோல் சுவலித்தல்.

* பறைபுரைவிழிகள்பறிந்தார்படியிடைநெடிதுபடிந்தார்
பிறைபுரையெயிறுமிழந்தார்பிடரொடுதலைகள்பிளந்தார்
குறைவுயிர்சிதறநெரிந்தார்குடரொடுகுருதிகுழைந்தார்
முறைமுறைபடைகளெறிந்தார்முடையுடன்மறியமுறிந்தார். (உ௬)

புடையொடுவிடுகனலின்காய்பொறியிடைமயிர்கள்புகைந்தார்
தொடையொடுமுதுகுதுணிந்தார்சுழிபடுகுருதிசொரிந்தார்
படையிடையொடியநெடுந்தோள்பறிதரவயிறுதிறந்தார்
இடையிடைமலையின்விழுந்தாரிகல்பொரமுடுகியெழுந்தார். (உ௭)

புடைபடவிருளின்மிடைந்தார்பொடியிடைநெடிதுபுரண்டார்
விதைபடுமுயிரர்விழுந்தார்விளிவொடுவிழியுமிழந்தார்
கதையொடுமுதிரமலைந்தார்கணைபொழிசிலையர்கலந்தார்
உதைபடவுரனுநெரிந்தாருதரொடுகுருதியுமிழ்ந்தார். (உ௮)

அயலயன்மலையொடடைந்தானடுபகையளகையடைந்தார்
வியலிடமறையவிரிந்தார்மிசையுலகடையமிடைந்தார்
புயறொடுகடலின்விழுந்தார்புடைபுடைசிதைவொடுசென்றார்
உயர்வுறவிசையினெறிந்தானுடலொடுமுலகுதுறந்தார். (உ௯)

வேறு

பற்றித்தாளொடுதோள்பறித்தெறிந்தனன்பாரின்
இற்றவெஞ்சிறைவெற்பினமாமெனக்கிடந்தார்
கொற்றவாலிடைக்கொடுந்தொழிலரக்கரையடங்கச்
சுற்றிவீசலிற்பம்பரமாமெனச்சுழன்றார். (௩0)

வாள்களிற்றனவிற்றனவரிசிலைவயிரத்
தோள்களிற்றனவிற்றனசுடர்மழுச்சூலம்
நாள்களிற்றனவிற்றனநகையெயிற்றீட்டம்
தாள்களிற்றனவிற்றனபடையுடைத்தடக்கை. (௩௧)

தெறித்தவன்றலைதெறித்தனசெறிசுடர்க்கவசம்
தெறித்தபைங்கழல்தெறித்தனசிலம்பொடுபொலந்தார்
தெறித்தபன்மணிதெறித்தனபெரும்பொறித்திறங்கள்
தெறித்தகுண்டலந்தெறித்தனகண்மணிசிதறி. (௩௨)

உக்கபற்குலையுக்கனதுவக்கெலும்புதிர்வுற்
றுக்கமுற்கரமுக்கனமுசுண்டிகளுடைவுற்
றுக்கசக்கரமுக்கனவுடறிறந்துயிர்கள்
உக்கற்பணமுக்கனவுயர்மணிமகுடம். (௩௩)

---

* பறை—அகன்றவாயுள்ள தோட்பறை அதாவது ஒருதோளிலே சேரமார்பினும் இடக்கையினுங்கொண்டு கொட்டுகிற ஓர்வகை; வாச்சியம்.

தாள்களாற்பலர்தடக்கைகளாற்பலர்தாக்கும்
தோள்களாற்பலர்சுடர்விழியாற்பலர்தொடரும்
கோள்களாற்பலர்குத்துகளாற்பலர்தத்தம்
வாள்களாற்பலர்மரங்களினாற்பலர்மடிந்தார். (௩௫)

ஈர்க்கப்பட்டனர்சிலர்சிலரிடிப்புண்டுபட்டார்
பேர்க்கப்பட்டனர்சிலர்சிலர்பிடியுண்டுபட்டார்
ஆர்க்கப்பட்டனர்சிலர்சிலரடியுண்டுபட்டார்
பார்க்கப்பட்டனர்சிலர்சிலர்பயமுண்டுபட்டார். (௩௬)

ஓடிக்கொன்றனன் * சிலவரையுடனுடன்றோறும்
கூடிக்கொன்றனன்சிலவரைக்கொடிநெடுமரத்தால்
சாடிக்கொன்றனன்சிலவரைப்பிணந்தொறுந்தடவி
தேடிக்கொன்றனன்சிலவரைக்கறங்கெனத்திரிவான். (௩௭)

முட்டினார்படமுட்டினான்முறைமுறைமுடுகிக்
கிட்டினார்படக்கிட்டினான்கிரியெனநெருங்கிக்
கட்டினார்படக்கட்டினான்கைகளின்மெய்யின்
தட்டினார்படத்தட்டினான்மலையெனத்தகுவான். (௩௮)

மறக்கினுங்கொல்லுமுணரினுங்கொல்லுமால்விசும்பின்
பறக்கினுங்கொல்லும்படரினுங்கொல்லுமின்படைக்கை
திறக்கருங்கழலரக்கர்கணெரிதொறும்பொறிகள்
பிறக்கநின்றெரிபடைகளைத்தடக்கையாற்பிசையும். (௩௯)

சேறும்வண்டலுமூளையுநிணமுமாய்த்திணிய
நீறுசேர்நெடுந்தெருவெலாநித்தமாய்நிரம்ப
ஆறுபோல்வருங்குருதியவ்வநுமனுலைப்புண்
டூறில்வாய்தொறுமுமிழ்வதேயொத்ததவ்விலங்கை. (௩௯)

கருதுகாலினுங்கையினும்வாலினிற்கட்டிச்
சுருதியேயனைமாருதிமரத்திடைதுரப்பான்
நிருதரெந்திரத்திடுகரும்பாமெனநெரிவார்
குருதிசாறெனப்பாய்வதுகுரைகடற்கூனில். (௪௦)

எடுத்தரக்கரையெறிதலுமவருடலெற்றக்
கொடித்திண்மாளிகையிடிந்தனமண்டபங்குலைந்த
தடக்கையானைகண்மறிந்தனகோபுரந்தகர்ந்த
பிடிக்குலங்களும்புரவியுமவிந்தனபெரிய. (௪௧)

தத்தமாடங்கடம்முடலாற்சிலர்தகர்த்தார்
தத்தமாதரைத்தங்கழலாற்சிலர்சமைத்தார்
தத்தமாக்களைத்தம்படையாற்சிலர்தடித்தார்
எற்றிமாருதிதடக்கைகளால்விசித்தெறிய. (௪௨)

* சிலவரை-சிலரை.

ஆடன்மாக்களிற்னையவனரக்கியக்கருளி
வீடுநோக்கியேசெல்கென்றுசிலவரைவிட்டான்
கூடினார்க்கவருயிரெனச்சிலவரைக்கொடுத்தான்
ஊடினார்க்கவர்யனைதொறுஞ்சிலவரையுய்த்தான். (௬௩)

தருவெலாமுடநெற்றியெலாமுடல்சதுக்கத்
துருவெலாமுடனுவரியெலாமுடனுள்ளூாக்
கருவெலாமுடல்காயமெலாமுடலரக்கர்
தெருவெலாமுடறேயமெலாமுடல்சிதறி. (௬௪)

ஊனெலாமுயிர்கவருறுங்காலனேய்ந்துலந்தான்
தானெலாரையுமாருதிசாடுகைதவிரான்
மீனெலாமுயிர்மேகமெலாமுயிர்மேன்மேல்
வானெலாமுயிர்மற்றுமெலாமுயிர்சுற்றி. (௬௫)

ஆகவிச்செறுவிளைவுறுமமைதியினரக்கர்
மோகமுற்றனராமெனமுறைமுறைமுனிந்தார்
மாகமுற்றவுமாதிரமுற்றவும்வளைந்தார்
மேகமொத்தனர்மாருதிவெய்யவனொத்தான். (௬௬)

அடலரக்கருமார்த்தலினலைத்தலினயரப்
புடைபெருத்துயர்பெருமையிற்கருமையிற்பொலிவின்
மிடலயிற்படைமீனெனவிலங்கலிற்கலங்கும்
கடனிகர்த்தனர்மாருதிமந்தரங்கடுத்தான். (௬௭)

கரதலத்தினுங்காலினும்வாலினுங்கதுவ
நிரைமணித்தலைநெரிந்துகச்சாய்ந்துயிர்நீப்பார்
சுரர்களெக்குறவமுதுகொண்டெழுந்தகாலெடாடரும்
உரகரொத்தனராநுமனுங்கலுழனையொத்தான். (௬௮)

மானமுற்றதம்பகையினன்முனிவுற்றுவளைந்த
மீனுடைக்கடலுலகினினுளவெலாமிடைந்த
ஊனறக்கொன்றுதுகைக்கவுமொழிவிலாநிருதர்
ஆனையொத்தன * ராளரியொத்தனனநுமன். (௬௯)

எய்தவெற்றினவெறிந்தனவீர்த்தனவிகலின்
பொய்தகுத்தினபொதுத்தனதொளைத்தனபோழ்ந்த
கொய்தசுற்றினபற்றினகுடைந்தனபொலிந்த
அய்யன்மற்பெரும்புயத்தனபுண்ணளப்பரிதாள். (௭0)

கார்க்கருந்தடங்கடல்களுமழைமுகிற்கண்ணும்
வேர்க்கவெஞ்செருவிளைத்தெழும்வெள்ளெயிற்றரக்கர்
போர்க்குழாம்படிபூசலினையனைப்புகழ்வுற்
றார்க்கும்விண்ணவ † ரமலையேயுயர்ந்ததன்றமரில். (௭௧)

* ஆளரி—நரசிங்கம். † அமலை-சத்தம்.

மேவும்வெஞ்சினத்தரக்கர்கண்முறைமுறைவிசையால்
ஏவும்பல்படையெத்தனைகோடிகளெனினும்
தூவுந்தேவருமகளிருமுனிவருஞ்சொரிந்த
பூவும்புண்களுந்தெரிந்திலமாருதிபுயத்தில். (௩௨)

பெயர்க்குஞ்சாரிகைகறங்கெனத்திசைதொறும்பெயர்வின்
உயர்க்கும்விண்மிசையோங்கலின்மண்ணின்வந்துறலின்
அயர்த்துவீழ்ந்தனரழிந்தனரரக்கராயுள்ளார்
வெயர்த்திலன்மிசை * யுயிர்த்திலனல்லறவீரன். (௩௩)

எஞ்சலக்கணத்தறிந்திலமிராவணனேவ
நஞ்சமுண்டவராமெனவநுமன்மேனடந்தார்
துஞ்சினால்லதியாவருமறத்தொடுந்தொலைவுற்
றஞ்சினாரில்லையரக்கரில்வீரர்மற்றியாரோ. (௩௪)

வந்தகிங்கர † ரேயெனுமாத்திரைமடிந்தார்
நந்தவானத்துநாயகரோடினர்நடுங்கிப்
பிந்துகாலினர்கையினர்பெரும்பயம்பிடரின்
உந்தவாயிரம்பிணக்குவைமேல்விழுந்துலைவார். (௩௫)

விரைவினுற்றனர்விம்மலுற்றியாதொன்றும்விளம்பார்
கரதலத்தினாற்பட்டதுங்கட்டுரைக்கின்றார்
தரையினிற்கிலர்திசைதொறுநோக்கினர்சலிப்பார்
அரைசன்மற்றவரலக்கணேயுரைத்திடவறிந்தான். (௩௬)

இறந்துநீங்கினரோவென்றனாணையையிகழ்ந்து
துறந்துநீங்கினரோவன்றிவெஞ்சமர்தொலைந்தார்
மறந்துநீங்கினரோவென்கொல்வந்ததென்றுரைத்தான்
திறஞ்செருக்குறவாய்தொறுநெருப்புமிழ்கின்றான். (௩௭)

வேறு.

சலந்தலைக்கொண்டனராயதன்மையார்
அலந்திலர்செருக்களத்தஞ்சினாரலர்
புலந்தெரிபொய்க்கரிபுகலும்புன்கணார்
குலங்களினவிந்தனர்குரங்கினாலென்றார். (௩௮)

ஏவலினெய்தினரிருந்தவேண்டிசைத்
தேவரைநோக்கினனானுஞ்சிந்தையான்
யாவதென்றறிந்திலிர் ‡ போலுமாலென்றான்
மூவகையுலகையும்விழுங்கமுள்கின்றான். (௩௯)

* உயிர்த்திலன்—மூச்சுவிடுதலுமிலன். † ஏயெனுமாத்திரை-உம்மென்னுமளவில். ‡ போலும்-ஆல், அசைகள்.

மீட்டவருரைத்திலர்பயத்தின்விம்முவார்
தோட்டலரினமலர்த்தொங்கன்மோலியன்
வீட்டியதாக்கரையென்னும்வெவ்வுரை
கேட்டதோகண்டதோகிளத்துவீரென்றான். (சு0)

கண்டனமொருபுடைநின்றுகண்களால்
தெண்டிரைக்கடலெனவளைந்தசேனையை
மண்டலந்திரிந்தொருமரத்தினலடி
உண்டதக்குரங்கினமொழிவதன்றென்றார். (சுக)

அ - வது - கிங்கரர்வதைப்படலம் - முற்றிற்று.

(ஆக திருவிருத்தம்-அகசு.)

கூ - வது. சம்புமாலிவதைப்படலம்.

கூம்பினகையனின்றகுன்றெனக்குவவுத்திண்டோட்
பாம்பிவர்தறுகட்சம்புமாலியென்பவனைப்பாரா
வாம்பரித்தானையோடுவளைத்ததன்மறனைமாற்றித்
தாம்பினிற்பற்றித்தந்தென்மனச்சினந்தணித்தியென்றான். (க)

ஆயவன்வணங்கிவீரமளக்கருமளக்கர்முன்னர்
நீயிதுமுடித்தியென்றுநேர்ந்தனைநினைவினெண்ணி
வயினையென்னப்பெற்றாலென்னின்யாருயர்ந்தாரென்னாப்
போயினனிலங்கைவேந்தன்போர்ச்சினம்போவதொப்பான். (உ)

தன்னுடைத்தானையோடுந்தயமுகன்றருகென்றேய
மன்னுடைச்சேனையோடுந்தாதைவந்தீந்தவாளின்
மின்னுடைப்பரவையோடும் * வேறுளோர்சிறப்பின்விட்ட
பின்னுடையனிகத்தோடும்பெயர்ந்தனன்பெரும்போர்பெற்றான். ()

உருமொத்தமுழக்கிற்செங்கண்வெள்ளெயிற்றோடைநெற்றிப்
பருமித்தகிரியிற்றோன்றும்வேழமும்பதுமத்தண்ணல்
நிருமித்தவெழிலிமுற்றிற்றென்னலாநிலையநேமி
சொரிமுத்தமாலைசூழுந்துகிற்கொடித்தடந்தேர்சுற்ற. (ச)

காற்றினைமருங்கிற்கட்டிக்கால்வகுத்துயிருங்கூட்டிக்
கூற்றினையேற்றியன்னகுலப்பரிகுழுவக்குன்றின்
தூற்றினினெழுப்பியாண்டுத்தொகுத்தெனச்சுழல்வைபங்கண்ண
வேற்றினப்புலியேறென்னவியந்தெழும்பதாதியீட்டம். (டு)

---

* வேறுளோர்-இவனுக்குச்சரியான ராக்ஷத ராஜர்கள்.

தோமரமுலக்கைகூர்வாள்சுடர்மழுக்குலிசந்தோட்டி
தாமரந்தின்றகூர்வேறழலொளிவட்டஞ்சாபம்
காமர்தண்டெழுக்கள்காந்துங்கற்பணங்காலபாசம்
மாமரம்வலயம்வெங்கோன்முதலியவயங்கமாதோ. (௬)

எத்தியவயில்வேல் * குந்தமெழுக்கழுமுதலவேந்திக்
குதறியதிளைப்பமீதிரகுழுவினமழைமாக்கொண்டல்
பொத்துகுபொருவினன்னீர்சொரிவனபோவபோலச்
சித்திரப்பதாகையீட்டந்திசைதொறுஞ்செறிவசெல்வ. (௭)

பல்லியந்துவைப்பநன்மாப்பணிலங்கண்முரலப்பொன்றேர்ச்
சில்லிகளிடிப்பவாசிசிரித்திடச்செறிபொற்றாரும்
வில்லுகின்றிசைப்பயானைமுழக்கம்விட்டார்ப்பவிண்டோய்
ஒல்லொலிவானிற்றேவருரைதெரிவொழிக்கமன்றோ, (௮)

மின்னகுகிரிகள்யாவுமேருவின்விளங்கித்தோன்றத்
தொன்னகர்பிறவுமெல்லாம்பொலிந்தனதுறக்கமென்ன
அன்னவன்சேனைசெல்லவார்கலியிலங்கையாய
பொன்னகர்தகர்ந்துபொங்கியார்த்தெழுதூளிபோர்க்க. (௯)

ஆயிரமைந்தொடைந்தாமாழியந்தடந்தேரத்தேர்க்
கேயினவிரட்டியானையானையினிரட்டிபாய்மா
போயினபதாதிசொன்னபுரவியினிரட்டிபோலாம்
தீயவன்றடந்தேர்சுற்றித்தெற்றெனச்சென்றசேனை. (௧௦)

விண்மறைக்கிழவர்நாளுவிஞ்சையர்வரத்தின்மிக்கார்
வன்மறக்கண்ணராற்றல்வரம்பிலாவயிரத்தோளார்
தொன்மறக்குலத்தர் † தூணிதூக்கியபுறத்தர்மார்பின்
கன்மறைத்தொளிருஞ்செம்பொற்கவசத்தர்கடுந்தோட்கள். (௧௧)

பொருதிசையானையூரும்புனிதனைப்பொருவும்பொற்பர்
சரிபடைத்தொழிலுமற்றையங்குசத்தொழிலுந்தொக்கார்
கிருதியிற்பிறந்தவீரர்நெருப்பிடைபரப்புங்கண்ணர்
பரிதியிற்பொலியுமெய்யர்படுமதக்களிற்றின்பாகர். (௧௨)

ஏர்கெழுதிசையுஞ்சாரிபதினெட்டுமியல்பினெண்ணிப்
போர்கெழுபடையுங்கற்றவித்தகப்புலவர்போரில்
தேர்கெழுமறவர்யானைச்சேவகர்சிரத்திற்செல்லும்
தார்கெழுபுரவியென்னுந்தம்மனந்தாவப்போனார். (௧௩)

அந்நெடுந்தானைசுற்றவமரரையச்சஞ்சுற்றப்
பொன்னெடுந்தேரிற்போனான்பொருப்பிடைநெருப்பிற்பொங்கிற்
தன்னெடுங்கண்கள்காந்தத்தாழ்பெருங்கவசமார்பின்
மின்னிடவெயிலும்வீசவில்லிடுமெயிற்றுவீரன். (௧௪)

---

* குந்தம்-எறியீட்டி. † தூணி-அம்பறாத்தூணி.

நந்தனவனத்துணின்றநாயகன்றூதன்றானும்
வந்திலரரக்கரென்னுமனத்தினன்வழியைநோக்கிச்
சந்திரன்முதலவானமீனெலாந்தழுவநின்ற
இந்திரதனுவிற்றோன்றுந்தோரணமிவர்ந்துநின்றான். (௧௫)

கேழிருமணியும்பொன்னும்விசும்பிருள்கிழித்துவீங்க
ஊழிருங்கதிர்களோடுந்தோரணத்தும்பர்மேலான்
சூழிருங்கதிர்களெல்லாந்தோற்றிடச்சுடருஞ்சோதி
ஆழியினவெட்டோன்றுமருக்கனேயனையனானான். (௧௬)

செல்லொடுமேகஞ்சிந்தத்திரைக்கடல்சிலைப்புத்தீரக்
கல்லளைகிடந்தநாகமுயிரொடுவிடமுங்காலக்
கொல்லியலரக்கர்நெஞ்சிற்குடிபுகவச்சம்வீரன்
வில்லெனவிடிக்கவிண்ணோர்நடுக்குறவீரனார்த்தான். (௧௭)

நின்றனதிசைக்கண்வேழநெடுங்களிச்செருக்குநீங்கத்
தென்றிசைநமனுமுள்ளந்துணுக்கெனச்சிந்திவானில்
பொன்றலின்மீன்களெல்லாம்பூவெனவுதிரப்பூவும்
குன்றமும்பிளக்கவேலைதுளக்குறக்கொட்டினான்றோள். (௧௮)

அவ்வழியரக்கரெல்லாமலைநெடுங்கடலினார்த்தார்
செவ்வழிச்சேறலாற்றார்பிணைப்பெருங்குன்றந்தெற்றி
வெவ்வழிகுருதிவெள்ளம்புடைமிடைந்துயர்ந்துவீங்க
எவ்வழிச்சேறுமென்றார்தமருடம்பிடறிவீழ்வார். (௧௯)

ஆண்டுநின்றரக்கன்வெவ்வேறணிவகுத்தனிகந்தன்னை
மூண்டிருபுடையுமுன்னுமுறைமுறைமூசவேவித்
தூண்டினன்றானுந்திண்டேர்தோரணத்திருந்ததோன்றல்
வேண்டியதெதிர்ந்ததென்னாவீங்கினன்விசயத்திண்டோள். (௨0)

அய்யனுமமைந்துநின்றானூழியானளவினுமம்
நெய்சுடர்விளக்கிற்றோன்றுநெற்றியேநெற்றியாக
மொய்ம்மயிர்ச்சேனைபொங்கமுரணயிலுகிர்வாண்மொய்த்த
கய்களேகைகளாகக்கடைக்கூழைதிருவாலாக. (௨௧)

வயிர்கள்வால்வளைகள்விம்மவரிசிலைப்பமாயப்
பயிர்களார்ப்பெடுப்பமூரிப்பல்லியங்குமறப்பற்றிச்
செயிர்கொள்வாளரக்கர்சீற்றஞ்செருக்கினர்படைகள்சிந்தி
வெயில்கள்போலொளிகள்வீசவீரன்மேற்கடிதுவிட்டார். (௨௨)

வேறு.

கருங்கடலரக்கர்தம்படைக்கலங்கரத்தால்
பெருங்கடலுறப்புடைத்திறத்துகப்பிசைந்தான்

விரிந்தனபொறிக்குலநெருப்பெனவெருண்டாண்
டிருந்தவன்கிடந்ததொரெழுத்தெரிந்தெடுத்தான். (௨௩)

இருந்தனனெழுந்தனனிழிந்தனனுயர்ந்தான்
திரிந்தனன்புரிந்தனனெனநனிதெரியார்
விரிந்தவர்குவிந்தவர்விலங்கினர்கலந்தார்
பொருந்தினர்நெருங்கினர்களப்படப்புடைத்தான். (௨௪)

* எறிந்தனவெய்தனவிடியுருமேன்மேல்
செறிந்தனபடைக்கலமிடக்கையிற்சிதைத்தான்
முறிந்தனதெறுங்கரிமுடிந்தனதடந்தேர்
மறிந்தனபரிநிரைவலக்கையினமலைந்தான். (௨௫)

இழந்தனநெடுங்கொடியிழந்தனவிருங்கோ
டிழந்தனநெடுங்கரமிழந்தனவியன்றாள்
இழந்தனமுழங்கொலியிழந்தனமதம்பா
டிழந்தனபெருங்கதமிருங்கவுளியானை. (௨௬)

நெரிந்தனதடஞ்சுவர்நெரிந்தனபெரும்பார்
நெரிந்தனநுகம்புடைநெரிந்தனவதன்கால்
நெரிந்தனகொடிஞ்சில்கணெரிந்தனவியன்றார்
நெரிந்தனகடும்பரிநெரிந்தனநெடுந்தேர். (௨௭)

ஒடிந்தனவுருண்டனவுலந்தனபுலந்த
இடிந்தனவெரிந்தனநெரிந்தனவெழுந்த
மடிந்தனமறிந்தனமுறிந்தனமலைபோல்
படிந்தனமுடிந்தனகிடந்தனபரிமா. (௨௮)

வெருண்டனர்வியந்தனர்விழுந்தனரெழுந்தார்
மருண்டனர்வயங்கினர்மறிந்தனரிறந்தார்
உருண்டனருலைந்தனருழைத்தனர்பிழைத்தார்
சுருண்டனர்புரண்டனர்தொலைந்தனர்மலைந்தார். (௨௯)

வேறு.

கரிகொடுகரிகளைக்களப்படப்புடைத்தான்
பரிகொடுபரிகளைத்தலத்திடைப்படுத்தான்
வரிசிலைவயவரைவயவரின்மடித்தான்
நிரைமணித்தேர்களைத்தேர்களினிரைத்தான். (௩௦)

மூளையுமுதிரமுமுழங்கிருங்குழம்பாய்
மீளிருங்குழைபடக்கர்விழுந்தழுந்தத்
தாளொடுந்தலையுகத்தடநெடுங்கிரிபோல்
தோளொடுநிருதரைவாளொடுந்துகைத்தான். (௩௧)

* எறிந்தன-எறிந்தசஸ்திரங்களும், எய்தன-எய்த அஸ்திரங்களும்.

மல்லொடுமலைமலைத்தோளரைவளைவாய்ப்
பல்லொடுநெடுங்காப்பகட்டொடும்பருந்தான்
வில்லொடுமயிலொடும்வெயிலொடும்விளிக்கும்
சொல்லொடுமுயிரொடுநிலத்தொடுந்துகைத்தான். (கஉ)

* புகைநெடும்பொறிபுகுந்திசைதொறும்பொலிந்தான்
சிகைநெடுஞ்சுடர்விடுந்தேர்தொறுஞ்சென்றான்
தகைநெடுங்கரிதொறும்பரிதொறுஞ்சரித்தான்
நகைநெடும்படைதொறுந்தலைதொறுநடந்தான். (கங)

வென்றிவெம்புரவியின்வெரிநினும்விரவார்
மன்றலந்தாரணிமார்பினுமணித்தேர்
ஒன்றினின்றொன்றினுமுயர்மதமழைதாழ்
குன்றினுங்கடையுகத்துருமெனக்குதித்தான். (கச)

பிரிவருமொருபெருங்கோலெனப்பெயரா
இருவினைதுடைத்தவரறிவெனவெவர்க்கும்
வருமுலைவிலைக்கெனமதித்தனர்வழங்கும்
தெரிவையர்மனமெனச்சுறங்கெனத்திரிந்தான். (கரு)

அண்ணலவ்வரியினுக்கடியவரவன்சீர்
நண்ணுவரெனும்பொருணவையறத்தெரிப்பான்
மண்ணினும்விசும்பினுமருங்கினும்வலித்தார்
கண்ணினு † மனத்தினுந்தனித்தனிக்கலந்தான். (கசு)

கொடித்தடந்தேரொடுங்குரகதக்குழுவை
அடித்தொருதடக்கையினிலத்தினிட்டரைத்தான்
இடித்துநின்றதிர்கதத்தெயிற்றுவன்பொருப்பைப்
பிடித்தொருதடக்கையினுயிருகப்பிழிந்தான். (கஎ)

கறுத்தெழுநிறத்தினரெயிற்றினர்கயிற்றார்
செறுத்தெரிவிழிப்பவர்சிகைக்கழுவலத்தார்
மறுத்தெழுமறலிகளிவரெனவதிந்தார்
ஒறுத்தருத்திரனெனத்தனித்தனியுதைத்தான். (கஅ)

சக்கரந்தோமரமுலக்கைதண்டயில்வாள்
மிக்கெனதேர்பரிகுடைகொடிவிரவி
உக்கனகுருதியம்பெருந்திரையுருட்டிப்
புக்கனகடலிடைநெடுக்காப்பூட்கை. (ககூ)

---

* புகைநெடும்பொறிபுகுந்திசைதொறுமென்பது-தனக்குக்கோபமுண்டாஇட மெல்லாஞ்சென்று விளங்கினானென்க.

† மனத்தினும் மென்பதனால் மனோவேகத்தினும் அதிகமாய்அவ்விடங்க ளெல்லாம்கலந்தானெனவுமாம்.

எட்டினவிசும்பினையெழுப்படவெழுந்த
முட்டினமலைகளைமுயங்கின திசையை
ஒட்டினவொன்றையொன்றூட்டித்துதைந்து
தட்டுமுட்டாடின தலையொடுதலைகள். (௪௦)

வேறு.

கானேகாவல்வேழக்கணங்கள்கதவாளரிகொன்ற
வானேயெய்தத்தனியேநின்றமதமால்வரையொப்பான்
தேனேபுரைகண்கனலேசொரியச்சீற்றஞ்செருக்கினான்
தானேயானான்சம்புமாலிகாலன்றன்மையான். (௪௧)

காற்றிற்கடியகலினப்புரவிநிருதர்களத்துக்கார்
ஆற்றுக்குருதிநிணத்தோடடுத்தவள்ளற்பெருங்கொள்ளைச்
சேற்றிற்சொல்லாத்தேரினாழியாழுநிலைதேரா
நீற்றுச்செல்லும்வெளியோவில்லையளியன்விரைகின்றான். (௪௨)

* ஏதியொன்றாற்றேருமஃதாலெளியோருயிர்கோடல்
நீதியன்றாலுடன்வந்தாரைக்காக்குநிலையில்லாய்
சாதியன்றேறபிறிதென்செய்தியவர்பின்றனிநின்றாய்
போதியென்றான்பூத்தமரம்போற்புண்ணாற்பொலிகின்றான். (௪௩)

நன்றானன்றன்கருணையென்னாநெருப்புநகக்கான்
பொன்றாவாரிதொருவனென்றால்போலுமெனையென்னா
வன்றிண்சிலையின்வயிரக்காலால்வடித்திண்சுடர்வாளி
ஒன்றுபத்துநூறுநூறாயிரமுமுறைதப்பித்தான். (௪௪)

செய்திசெய்திசிலைகைக்கொண்டால்வெறுங்கைதிரிவோரை
நொய்தின்வெல்வதரிதோவென்னாமுறுவலுகநக்கான்
அய்யனங்குமிங்குங்காலாலழியுமழையென்ன
எய்தவெய்தபகழியெல்லாமெழுவால்வழுவித்தான். (௪௫)

முற்றமுனிந்தானிருதன்முனியாமுன்னும்பின்னுஞ்சென்
றுற்றபகழியுறாதுமுறியாவுதிர்கின்றதையுன்னாச்
சுற்றுநெடுந்தேரோட்டித்தொடர்ந்தான்றொடருந்துறைகாணான்
வெற்றவெழுவைமழுவாயம்பாலறுத்துவீழ்த்தினான். (௪௬)

சலித்தானையன்கையாலெய்யுஞ்சரத்தையுகச்சாடி
ஒலித்தாரமரர்கண்டாரார்ப்பத்தேரினுட்புக்குக்
கலித்தான்சிலையைக்கையால்வாங்கிக்கழுத்தினிடையிட்டு
வலித்தான்பகுவாய்மடித்தமலைபோற்றலைமண்ணிடைவீழ. (௪௭)

---

* ஏதியொன்றுதேரொன்றென்றதனால் ஒரே அடிக்குத்தான்காணும்ஓடிப்போ வென்றகருத்து.

குதித்துத்தேருங்கோல்கொள்ளாளும்பரியுங்குழம்பாக
மிதித்துப்பெயர்த்துநெடுந்தோரணத்தைவீரன்மேற்கொண்டான்
கதித்துப்பழித்துக்கழிந்தார்பெருமைகண்டுகணத்தஞ்சி
உதித்துப்புலர்ந்ததோல்போலுருவத்தமரரோடினார். (௪௮)

பிரிந்துபுலம்புமகளிர்காணக்கணவர்பிணம்பற்றி
விரிந்தகுருதிப்போரீர்த்துமனைகடொறும்வீச
இரிந்தஇலங்கையெழுந்தஅழுகையின்றிங்கிவனாலே
சரிந்ததரக்கர்வலியென்றெண்ணியநமுந்தளிர்த்ததால். (௪௯)

புக்காரமரர்பொலந்தாராக்கன்பொருவில்பெருங்கோயில்
விக்காநின்றார்விளம்பலாற்றார்வெருவிவிம்முவார்
நக்கானரக்கனடுங்கவென்றானையாமெல்லாம்
உக்கார்சம்புமாலியுலந்தானென்றேகுரங்கென்றார். (௫௦)

என்னுமளவினெரிந்துவீங்கியெழுந்தவெகுளியான்
உன்னவுன்னவுதிரக்குமிழிவிழியூடுமிழ்கின்றான்
சொன்னகுரங்கையானைபிடிப்பன்கடிதுதொடர்கென்னா
அன்னதுணர்ந்தசேனைத்தலைவரைவரறிவித்தார். (௫௧)

௯-வது சம்புமாலிவதைப்படலம் - முற்றிற்று.

(ஆ. திருவிருத்தம்-௮௪௭.)

௧௦-வது. பஞ்சசேனாபதிகள் வதைப்படலம்.

* சிலந்தியுண்பதோர்குரங்கின்மேற்சேறியேற்றிறலோய்
கலந்தபோரிடைக்கட்புலன்கடுங்கனல்கதுவ
உலந்தமால்வரையருவியாறொழுக்கற்றவொக்கப்
புலந்தமாமதம்பூக்குமன்றேதிசைப்பூட்கை. (௧)

இலங்குவெஞ்சினத்தஞ்சிறையெழும்வலிக்கலுழன்
உலங்கின்மேலுருத்தன்னநீகுரங்கின்மேலுருக்கின்
அலங்கன்மாலைநின்புயமினைந்தல்லுநன்பகலும்
குலுங்கும்வன்றுயர்நீங்குமால்வெள்ளியங்குன்றம். (௨)

உறுவதென்கொலோவானிழிவென்பதொன்றுடையார்
பெறுவதியாதொன்றுங்காண்கிலர்கேட்கிலர்பெயர்ந்தார்
சிறுமையீதொப்பதியாதுநீகுரங்கின்மேற்சேறின்
முறுவல்பூக்குமன்றேநின்றமுவர்க்குமுகங்கள். (௩)

* சிலம்பி-நூல்நூற்கிற ஒருவகைச்செந்து அதை எட்டுக்காற்பூச்சியுமென்பர்.

அன்றியும்முனக்காளின்மைதோன்றுமாலரச
வென்றியில்லவர்மெல்லியோர்தமைச்செலவிட்டாய்
நன்றியின்றொன்றுகாண்டியேலெமைச்செலநயத்தி
என்றுகைதொழுதிறைஞ்சினரரக்கனுமிசைந்தான். (௪)

உலகமூன்றிற்குமுதன்மைபெறவொருவெனவுயர்ந்தார்
திலகமண்ணுறவணங்கினர்கோயிலிற்றீர்ந்தார்
அலகிறோபர்கரியொடாண்மிடைந்தபேரரக்கர்
தொலைவிலாதனகதுமெனவருகெனச்சொன்னார். (௫)

ஆனைமேன்முரசறைந்தனர்வள்ளுவரமைந்தார்
* பேனவேலையிற்புடைபரந்ததுபெருஞ்சேனை
சோனைமாமழைமுகிலெனப்போர்ப்பணைதுவைப்ப
மீனவானிடைமின்னெனப்படைக்கலமிடைந்த. (௬)

தானைமாக்கொடிமழைபொதுத்துயர்நெடுந்தாள
மானமாற்றருதிமுனியாளுலந்து
போனமாற்றலர்புகழெனக்கால்பொரப்புரண்ட
வானயாற்றுவெண்டிரையெனவாம்பிலபரந்த. (௭)

விரவுபோர்க்கழல்விசித்தினர்வெரிநுற்றுவிளங்கச்
சரமொடேக்கினபுட்டிலுஞ்சாத்தினர்சமையக்
கருவிபுக்கனாரக்கர்மாப்பல்லணங்கவினப்
புரவியிட்டதேர்பூட்டினபருமித்தபூட்கை. (௮)

ஆறுசெய்தனவானையின்மதங்களவ்வாற்றைச்
சேறுசெய்தனதேர்களின்சில்லியச்சேற்றை
நீறுசெய்தனபுரவியின்குரமற்றைநீற்றை
வீறுசெய்தனவப்பரிக்கலினமாவிலாழி. (௯)

வழங்குதேர்களினிப்பொடுவாசியினார்ப்பும்
முழங்குவெங்களிற்றதிர்ச்சியுமொய்கழலொலியும்
தழங்குபல்லியத்தமலையுங்கடையுகத்தாழி
முழங்குமோதையின்மும்மடங்கெழுந்ததுமுடுகி. (௧0)

ஆழித்தேர்த்தொகையைம்பதினாயிரமஃதே
சூழிப்பூட்கைக்குத்தொகையவற்றிரட்டியின்றொகைய
வூழிக்காற்றன்னபுரவிமற்றவற்றினுக்கிரட்டி
பாழித்தோணொடும்படைக்கலப்பதாதியின்பகுதி. (௧௧)

கூய்த்தருந்தொறுந்தருந்தொறுந்தானைவெங்குழுவின்
நீத்தம்வந்தியங்கிடமிடனின்றிநெருங்கக்
காய்த்தமைந்ததெங்கதிர்ப்படையொன்றொன்றுகதுவித்
தேய்த்தெழுந்தனபொறிக்குலமழைக்குலந்தீய. (௧௨)

* பேனம்—நுரை.

பண்மணிக்குலம்யானையின்புடைதொறும்பரந்த
ஒண்மணிக்குலமழையிடையுருமெனவொலிப்பக்
கண்மணிக்குலங்கனலெனக்காந்துவகதுப்பின்
தண்மணிக்குலமழையெழுகதிரெனத்தழைப்ப. (௧௩)

தொக்கதாம்படைசுரிகுழன்மடந்தையர்தொடிக்கை
மக்கடாயர்மற்றியாவருந்தடுத்தனர்மறுகி
ஒக்கவேகுதுங்குரங்கினுக்குயிர்தரவொருவர்
புக்குமீண்டிலரென்றழுதிரங்கினர்புலம்பி. (௧௪)

கய்பரந்தெழுசேனையங்கடலிடைக்கலந்தார்
செய்கைதாம்வருந்தேரிடைக்கதரெனச்சொல்வார்
மெய்கலந்தமாநிகர்வருமுவமையையென்றார்
அய்வரும்பெரும்பூதமோரைந்துமொத்தமைந்தார். (௧௫)

முந்தியம்பலகறங்கிடமுறைமுறைபெற்றிகள்
சிந்தியம்புறுகொடுஞ்சிலையுறுமெனத்தெறிப்பார்
வந்தியம்புறுமுனிவர்க்குமமரர்க்குமவலியர்
இந்தியம்பகையாயவையைந்துமொத்தியைந்தார். (௧௬)

வாசவன்வயக்குலிசமும்வருணன்றன்கயிறும்
ஏசிறென்றிசைக்கிழவன்றனெரிமுளையெழுவும்
ஈசன்வன்றனிச்சூலமுமென்றிவையொன்றும்
ஊசிபோல்வதோர்வடுச்செயாநெடும்புயமுடையார். (௧௭)

சூர்தடிந்தவன்மயிலிடைப்பறித்தவன்றோகை
பார்பயந்தவனன்னத்தினிறகிடைப்பறித்த
மூரிவெஞ்சிறகிடையிட்டுத்தொடுத்தன்முறுக்கி
* வீரசூடிகைநெற்றியினயலிட்டுவிசித்தார். (௧௮)

பொன்றிணிந்ததோளிராவணன்மார்பொடும்பொருத
அன்றிழந்தகோடரிந்திடுமழகுறுகுழையர்
நின்றவன்றிசை † நெடுங்களியானையினெற்றி
மின்றிணிந்தனவோடையின்வீரபட்டத்தர். (௧௯)

வேறு.

நீதிநெடுங்கிழவனைநெருக்கிநீணகர்ப்
பதியொடும்பெருந்திருப்பறித்தபண்டைநாள்
விதியொடுமன்னவன்விழுந்துவெந்திடப்
‡ பொதியொடும்வாரிரபொலன்கொன்பூணினார். (௨௰)

---

* வீரசூடிகை-வீரத்தினாலே உச்சிக்கொண்டையிலே சேர்த்துக்கட்டுகிற இறகுகள் மயில்வாலும் அன்னத்திறகுமென்க.

† நெடுங்களி—அதிகமதமயக்கங்கொண்ட திக்கஜங்களென்க.

‡ பொதி—பொதியப்படுதல்.

இந்திரனிசையிழந்தேகுவானிகற்
றந்திமுன்கடாவினன்முடுகத்தாமதன்
மந்தரவாலடிபிடித்துவல்லேயேல்
உந்துதியெனவலிந்தவூற்றத்தார். (உக)

பானிறத்தந்தனன்பணியனுஙின்
கோனினைதலைமன்னவுலகங்கூறலும்
நீனிறதராவணமுனிவுநீகருவான்
காலினைக்காலினிறகையிறகட்டினர். (உஉ)

மலேகளைநகுந்தடமார்பர்மால்கடல்
அலேகளைநகுநெடுந்தோளரந்தகன்
கொலேகளைநகுநெடுங்கொலேபர்கொல்லனு
துலேகளைநகுமனுமிழுங்கண்ணினர். (உங)

தோல்கிளர்திசைதொறுமுலகைச்சுற்றிய
சால்கிளர்முழங்கெரிதழங்கியேறினும்
கால்கிளர்ந்தோங்கினுங்காலங்கையுற
மால்கடல்கிளரினுஞ்சரிக்குமவனமையார். (உச)

இவ்வகையனைவருமெழுந்தரனையர்
மொய்கிளர்தோரணமதனைமுற்றினர்
* கய்யொடுகையுறவணியுங்கட்டினர்
அய்யனுமவர்நிலையமையநோக்கினன். (உரு)

அரக்கராற்றலுமளவிலசேனையின்
தருக்கமம்மாருதிதனிமைத்தன்மையும்
பொருக்கெனநோக்கியபுரந்தராதியர்
இரக்கமுமவலமுந்துளக்குமெய்தினர். (உசு)

இற்றனரரக்கரிப்பகலுளேயெனுக்
கற்றுணர்மாருதிகளிக்குஞ்சிந்தையான்
முற்றுறச்சுலாவியமுடிவிறானையைச்
சுற்றுறநோக்கித்தன்றோளைநோக்கினன். (உஎ)

புன்றலைக்குரங்கிதுபோலுமாலமர்
வென்றதுவிண்ணவர்புகழைவேரொடும்
தின்றவல்லரக்கரைத்திருகித்தின்றதால்
என்றனரயிர்த்தனர்சிருதரெண்ணிலார். (உஅ)

ஆயிடையநுமனுமமரர்கோனகர்
வாயினின்றவ்வழிகொணர்ந்துவைத்தமாச்
சேயொளித்தோரணத்தும்பர்ச்சேணெடு
மீயுயர்விசும்பையுங்கடக்கவீங்கினன். (உக)

---

* கையொடுகையுறுதல்—வகுப்போடுவகுப்புச்சேர்ந்துநிற்றல்.

வீங்கியவீரனைவியந்துநோக்கிய
நீங்கியலரக்கருந்திருகினார்சினம்
வாங்கியசிலையினர்வழங்கினார்படை
ஏங்கியசங்கினமிடித்தபேரியே. (௧௦)

எறிந்தனரெய்தனரெண்ணிறந்தன
பொறிந்தெழுபடைக்கலமரக்கர்போக்கினார்
செறிந்தனமயிர்ப்புறந்தினவுதீர்வுறச்
சொரிந்தனவெனவிருந்தையன்றாங்கினான். (௧௧)

உற்றுடன்றரக்கருமுருத்துடற்றினர்
செற்றுறநெருக்கினர்செருக்குஞ்சிந்தையர்
மற்றையர்வரும்பரிசிவரைவல்விரைந்
தெற்றுவனெனவெழுவனுமனேந்தினான். (௧௨)

ஊக்கியபடைகளுமுருத்தவீரரும
தாக்கியபரிகளுந்தடுத்ததேர்களும்
மேக்குயர்கொடியிடைமேகமாலைபோல்
தூக்கியகரிகளும்புரளநூக்கினான். (௧௩)

வார்மதக்கரிகளின்கோடுவாங்கிமாத்
தேர்படப்புடைக்குமத்தேரின்சில்லியால்
வீரரையுருட்டுமவ்வீரர்வாளினால
தாருடைப்புரவியைத்துணியத்தாக்குமால். (௧௪)

இரண்டுதேரிரண்டுகைத்தலத்துமேந்திவே
றிரண்டுமால்யானைபட்டுருளவெற்றுமால்
இரண்டுமால்யானையையிரண்டினேந்திவே
றிரண்டுபாலினும்வரும்பரியையெற்றுமால். (௧௫)

மாயிருநெடுவரைவாங்கிமண்ணினிட்
டாயிரந்தேர்படவரைக்குமாலழித்
தாயிரங்களிற்றையோர்மரத்தினாலடித்
தேயெனுமாத்திரையெற்றிமுற்றுமால். (௧௬)

உதைக்கும்வெங்கரிகளையுழக்குந்தேர்களை
மிதிக்கும்வன்புரவியைத்தேய்க்கும்வீரரை
மதிக்கும்வல்லெழுவினாலரைக்குமண்ணிடைக்
குதிக்கும்வன்றலையிடைக்கடிக்குங்குத்துமால். (௧௭)

விசையின்மான்றேர்களுங்களிறும்விட்டகன்
றிசையுமாகாயமுஞ்செறியச்சிந்துமால்
குசைகொள்பாய்பரியொடுங்கொற்றவேலொடும்
பிசையுமாலரக்கரைப்பெருங்கரங்களால். (௧௮)

நீயுறுபொறியிடைச்செங்கண்வேங்கைமா
மீயுறத்தடக்கையால்வீரன்வீசுதோ
ருய்பெருங்கொடியனகடலினூழ்வன
பாயுடைநெடுங்கலம்படுவபோன்றவே. (௩௯)

தாரொடுமுருளொடுந்தடக்கையாற்றனி
வீரன்விட்டெறிந்தனகடலின்வீழ்வன
வாரியினெழுஞ்சுடர்க்கடவுள்வானவன்
தேரினைநிகர்த்தனபுரவித்தேர்களே. (௪0)

மீயுறவிண்ணிடைமுட்டிவீழ்வன
வாய்பெருந்திரைக்கடலழுவத்தாழ்வன
ஓய்வனபுரவிவாயுதிரங்கால்வன
வாயிடையெரியுடைவடவைபோன்றவே. (௪௧)

வரிந்துறவல்லிதிற்சுற்றிவாலினால்
விரிந்துறவீசலிற்கடலின்வீழ்குநர்
திரிந்தனர்செறிகயிற்றரவினூற்றிரி
அருந்திரன்மந்தரமனையராயினார் (௪௨)

வீரன்வன்றடக்கையாலெடுத்துவீசிய
வார்மதகரியினிற்றேரின்வாசியின்
மூரிவெங்கடல்புகக்கடிதின்மூர்ந்தன
ஊரின்வெங்குருதியாறீர்ப்பவோடின. (௪௩)

பிறக்கடையெயிற்றினபிலத்தின்வாயின
கறைப்புனல்பொறிகளோடெழுங்கண்ணின
உறைத்தபுபடையினவுதிர்ந்தயாக்கைகள்
மறைத்தனமகரதோரணத்தைவானுற. (௪௪)

குன்றுளமாமுளகுலங்கொள்பேரொழு
ஒன்றலபலவுளவுயிருண்பானுள
அன்றினர்பலருளரையன்கையுள
பொன்றுவதல்லதுபுறத்துப்போவரோ. (௪௫)

முழுமுதற்கண்ணுதன்முருகன்றாதைகை
மழுவெனப்பொலிந்தொளிர்வயிரவான்றனி
எழுவினிற்பொலஞ்சுழலரக்கரீண்டிய
குழுவினைக்களப்படக்கொன்றுநீக்கினான். (௪௬)

வேறு.

உலந்ததுதானையுலந்தனருட்பர்
அலைந்தலையுற்றதவ்வாழியிலங்கை
கலந்தழுங்குரலின்கடலோதை
வலந்தருதோளவரைவரும்வந்தார். (௪௭)

ஈர்த்தெழுசெம்புனலெக்கரிழுக்கத்
தேர்த்துணையாழியழுந்தினர்சென்றார்
ஆர்த்தனராயிரமாயிரம்பால்
தூர்த்தனரஞ்சனைதோன்றலுநின்றான். (சஅ)

எய்தகடுங்கணையாவையுமெய்தா
னொய்தகலும்படிகைகளனூறுப்
பொய்தகடொன்றுபொருந்தினெடுந்தேர்
செய்தகடும்பொறியொன்றுசிதைத்தான். (சகூ)

உற்றுறுதேர்சிதையாமுனுயர்ந்தான்
முற்றினவீரனைவானின்முனிந்தான்
பொற்றிரணீளெழுவொன்றுபொறுத்தான்
எற்றினனஃதவன்வில்லினினேற்றான். (ருo)

முறிந்தது * மூரிவிலம்முறியேகொ
டெறிந்தவரக்கனொர்வெற்பையெடுத்தான்
அறிந்தமனத்தவனவ்வெழுவேகொ
டெறிந்தவரக்கனையின்னுயிருண்டான். (ருக)

ஒழிந்தவர்நால்வருமூழியுருத்த
கொழுந்துறுதீயெனவெய்துறகொட்பர்
பொழிந்தனர்வாளிபுகைத்தனகண்கள்
விழுந்தனசோரியவ்வீரன்மணித்தோள். (ருஉ)

ஆயிடைவீரனுமுள்ளமழன்றான்
மாயவரக்கர்வலத்தையுணர்ந்தான்
தீயெரியுய்ப்பதொர்கட்செலவிட்டான்
தீயவரச்சிலையைப்பொடிசெய்தார். (ருங)

தொடுத்ததொடுத்தசரங்கடொரந்த
அடுத்தகன்மார்பினழுந்தியகன்ற
விடற்கெழிலான்வியதேரொடுநொய்தின்
எடுத்தொருவன்றனைவிண்ணினெறிந்தான். (ருச)

எய்ந்தெழுதேரிமிழ்விண்ணினையெல்லாம்
நீந்தியதோடிநிமிர்ந்ததுவேகம்
ஓய்ந்ததுவீழ்வதன்முன்னுயர்பாரில்
பாய்ந்தவன்மேலுடன்மாருதிபாய்ந்தான். (ருரு)

மதித்தகளிற்றினின்வாளரியேறு
கதித்ததுபாய்வதுபோற்கதிகொண்டு
குதித்தனன்மால்வரைமேனிகுழம்ப
மிதித்தனன்வெஞ்சினவீரருள்வீரன். (ருசு)

---

* மூரிவில்—பெரியவில்.

மூண்டசினத்தவர்மூவர்முனிந்தார்
தூண்டியதேரர்சரங்கடுரந்தார்
வேண்டியவெஞ்சமம்வேறுவிளைப்பார்
யாண்டினியேகுதியென்றெதிர்சென்றார். (ருஎ)

திரண்டுயர்தோளிணையஞ்சனைசிங்கம்
அரண்டருவிண்ணுறைவார்களுமஞ்ச
முரண்டருதேரவையாண்டொருமூன்றின்
இரண்டுமிரண்டுகையிற்கொடெழுந்தான். (ருஅ)

தூங்கியபாய்பரிசூதருலந்தார்
வீங்கியதோளவர்விண்ணின்விசைத்தார்
ஆங்கதுகண்டவர்போயகலாமுன்
ஓங்கியமாருதியொல்லையினுற்றான். (ருகூ)

காணிமிர்வெஞ்சிலைகையினிறுத்தான்
ஆனவர்தூணியும்வாளுமலைத்தான்
ஏனையவெம்படையில்லமரெஞ்சார்
வானிடைநின்றுயர்மல்லின்மலைந்தார். (கூ0)

வெள்ளையெயிற்றர்கறுத்துயர்மெய்யர்
பிள்ளவிரித்தபிலப்பெருவாயர்
கொள்ளவுருத்தடர் * கோளரவொத்தார்
ஒள்ளிகல்வீரனருக்கனையொத்தான். (கூக)

தாம்பெனவாலின்வரிந்துயர்தாளோ
டேம்பலிலாரிருதோள்களிறுத்தான்
பாம்பெனநீங்கினர்பட்டனர்வீழ்ந்தார்
ஆம்பனெடும்பகைபோல்பவனின்றான். (கூஉ)

நின்றனனேனையனின்றதுகண்டான்
குன்றிடைவாவுறுகோளரிபோல
மின்றிரிவன்றலைமீதுகுதித்தான்
பொன்றியவன்புவிதேரொடுபுக்கான். (கூங)

வேறு.

வஞ்சமுங்களவும்வெஃகிவழியலாவழிமேலோடி
நஞ்சினுங்கொடியராகிநவைசெயற்குரியநீரார்
வெஞ்சினவரக்கரைவரொருவனேவெல்லப்பட்ட
அஞ்செனும்புலன்களொத்தாரவனுநல்லறிவையொத்தான். (கூச)

செய்தலையுற்றவேற்கைநிருதரைச்செருவினேர்ந்தார்
உய்தலையுற்றமீண்டாரொருவருமில்லையுள்ளார்

---

* கோளரவு-இராகுகேதுக்களை.

கய்தலைப்பூசல்பொங்கக்கடுகினர்காலனுட்கும்
அய்வருமுலந்ததன்மையனைவருமமையக்கண்டார். (கரு)

இறக்குறமின்னேநம்மைக்குரங்கெனவிரங்கியேங்கி
மறக்குறுகின்றநெஞ்சின்மாதரைவைதுநோக்கி
உறக்குறுசொல்லருழித்தீயெனவுலகமேழும்
சுறக்கொளநோக்குவான்றன்செவிதொளைதீயச்சொன்னார். (கசு)

தானையுமுலந்ததைவர்தலைவருஞ்சமைந்தார்தாக்கிப்
போனபின்மீள்வேம்யாமேயதுவும்போர்புரிகிலாமை
வானையும்வென்றுளோரைவல்லையின்மடியநூறி
ஏனையரின்மைசோம்பியிருந்ததக்குரங்குமென்றார். (கஎ)

கo - வது - பஞ்சசேனாபதிகள் வதைப்படலம் - முற்றிற்று.

(ஆக திருவிருத்தம்-கூகச.)

கக - வது. அட்சகுமாரன் வதைப்படலம்.

கேட்டலும்வெகுளிவெந்தீக்கிளர்ந்தெழுமுயிர்ப்பனைத்
தோட்டலர்தெரியன்மாலைவண்டொடுஞ்சுறக்கொண்டேற
வேட்டராக்கண்டபோலுநயனத்தானொருப்பட்டானைத்
தாட்டுணைதொழுதமைந்தன்றடுத்திடைதருதியென்றான். (க)

மூக்கணனூர்தியன்றேன்மூன்றுலகடியிற்றாயோன்
ஒக்கவூர்பறவையன்றேலவன்றுயிலுரகமன்றேல்
இக்கயமல்லதேற்புன்குரங்கின்மேற்சேறிபோலாம்
இக்கடனடியேற்கீதியிருத்தியீண்டினிதினெந்தாய். (உ)

அண்டர்கோன்றன்னைப்பற்றித்தருகெனவடியேனிற்க
கொண்டனையென்முன்றன்னைப்பணியெனநெஞ்சங்கோடல
உண்டதுதிருமன்றேயுரனிலாக்குரங்கொன்றேனும்
எண்டிசைவென்றநீயேயேவுதியென்னையென்றான். (௩)

கொய்தளிர்கோதும்வாழ்க்கைக்கோடரத்துருவுகொண்டு
கய்தவமியற்றியீண்டோர்சிறுபழியிழைக்குங்கற்பான்
எய்தினனிமையாமுக்கணீசனேயென்றபோதும்
நொய்தினின்வென்றுபற்றித்தருகுவெனொடியினுன்பால். (௪)

துண்டத்துணைதனிற்றேன்றங்கோளரிசுடர்வெண்கோட்டு
மண்டொத்தகிமிராண்கேழலாயினுமலைதலாற்றா
தண்டத்தைக்கடந்துபொங்கியப்புறத்தகலினன்பால்
தண்டத்தையிடுதியன்றேகின்வயிற்றந்திலேனால். (௫)

எனவிவையியம்பியீதிவிடையெனவிறைஞ்சிநின்ற
வனைகழல்வயிரத்திண்டோண்மைந்தனைமகிழ்ந்துநோக்கித்
துனைபறித்தேர்மேலேறிச்சேறியென்றினையசொன்னான்
புனைமலர்த்தாரினானும் * போரணியணிந்துபோனான். (சு)

ஏறினனென்பமன்னோவிந்திரனிகலினிட்ட
நூறொருநூறுபூண்டநொறில்வயப்புரவிநோன்றேர்
கூறினாரக்கராசிகுமுறினமுரசக்கொண்மூ
ஊறினவுரவுத்தானையூழிபேர்கடலையொப்ப. (எ)

பொருகடன்மகரமெண்ணினெண்ணலாம்பூட்கைபொங்கித்
திரிவனமீன்களெண்ணினெண்ணலாஞ்செம்பொற்றிண்டேர்
உருவுறுமணலையெண்ணினெண்ணலாமுரவுத்தானை
வருதிரைமரபினெண்ணினெண்ணலாமவாவும்வாசி. (அ)

ஆறிரண்டடுத்தவெண்ணினாயிரங்குமரராவி
வேறிலாத்தோழர்வென்றியரக்கர்தம்வேந்தர்மைந்தர்
ஏறியதேரர்சூழ்ந்தாரிறுதியின்யாவுமுண்பான்
சீறியகாலத்தீயின்செறிசுடர்ச்சிகைகளன்னார். (கூ)

மந்திரக்கிழவர்மைந்தர்மதிநெறியமைச்சர்மக்கள்
† தந்திரத்தலைவரீன்றதநயர்கள்பிறருந்தாதைக்
கந்தரத்தரம்பைமாரிற்றோன்றினராதியாயோர்
எந்திரத்தேரர்சூழ்ந்தாரீரிரண்டிலக்கம்வீரர். (க0)

தோமரமுலக்கைசூலஞ்சுடர்மழுக்குலிசந்தோட்டி
ஏமருவரிவில்வேல்கோலீட்டிவாளெழுவிட்டேறு
மாமரம்வீசுபாசமெழுமுனைவயிரத்தண்டு
காமருகணையங்குந்தங்கற்பணங்காலநேமி. (கக)

என்றிவைமுதலயாவுமெறிதருபடைகளீண்டி
மின்றிரண்டனையவாகிவெயிலொடுநிலவுவீசத்
துன்றிருந்தூளிபொங்கித்துறுதலாலிறுதிசெல்லாப்
பொன்றிணியுலகமெல்லாம்பூதலமாயமாதோ. (கஉ)

காகமுங்கழுகும்பேயுங்காலனுங்கணக்கில்காலம்
‡ சேகுறவினையிற்செய்ததீமையுந்தொடர்ந்துசெல்லப்
பாகியல்கிளவிச்செவ்வாய்ப்படைவிழிப்பணைத்தவேய்த்தோட்
டோகையர்மனமுந்தொக்கதும்பியுந்தொடர்ந்துசுற்ற. (கங)

உழைக்குலநோக்கினார்களுவந்தவர்க்குரியமாதர்
அழைத்தழுகுரலின்வேலையமலையினரவச்சேனை

* போரணி-யுத்தவேஷம். † தந்திரம்-ஈண்டு சாம, பேத, தான, தண்டமென சதுர்விதவுபாயம். ‡ சேகுஉற-சஞ்சிதமாயிருக்க.

தழைத்தெழுமொலியினானுப்பல்லியந்துவைத்தலால்விண்
மழைக்குரலிடியிற்சொன்னமாற்றங்களொழிப்பமன்னோ. (௧௪)

வெயிற்கரமணிகள்வீசும்விரிகதிர்விழுங்கவெய்ய
அயிற்கரமணிகள்காலுமவிரொளிபருகவஃகா
எயிற்றிளம்பிறைகளீன்றவிலங்கொளியொதுங்கயாணர்
உயிர்க்குலவிரவுமன்றுபகலன்றென்றுணர்வுதோன்ற. (௧௫)

ஓங்கிருந்தடந்தேர்பூண்டவுளைவயப்புரவியொல்கித்
தூங்கியவீரத்தோளுங்கண்களுமிடத்துத்துள்ள
வீங்கினமேகமெங்குங்குருதிநீர்த்துள்ளிவீழ்ப்ப
ஏங்கினகாகமார்ப்பவிருளிலவிண்ணிடிப்பமாதோ. (௧௬)

வெள்ளவெஞ்சேனைசூழவிண்ணுளோர்வெருவிவிம்ம
உள்ளநொந்தனுங்கிவெய்யகூற்றமுமூறுவதன்னத்
துள்ளியசுழல்கட் * பேயடோள்புடைத்தார்ப்பத்தோன்றும்
கள்ளவிழலங்கலானைக்காற்றின்சேய்வரவுகண்டான். (௧௭)

இந்திரசித்தோமற்றவ்விராவணனேயோவென்னாச்
சிந்தையினுவகைகொண்டுமுனிவுற்றகுரக்குச்சீயம்
வந்தனன்முடிந்ததன்றேமனக்கருத்தென்னவாழ்த்திச்
சுந்தரத்தோளைநோக்கியிராமனைத்தொழுதுசொன்னான். (௧௮)

எண்ணியவிருவர்தம்முளொருவனால்யான்முன்னோற்ற
புண்ணியமுளதாலெங்கோன்றவத்தொடும்பொருந்தினானே
நண்ணினானுநின்றேன்காலனுநணுகிநின்றான்
கண்ணியகருமமின்றேமுடிக்குவென்கடிதினென்றான். (௧௯)

பழியிலதுருவென்றாலும்பஃறலையரக்கனல்லன்
விழிகளாயிரமுங்கொண்டவேந்தையென்றானுமல்லன்
மொழியின்மற்றவர்க்குமேலான்முரட்டொழின்முருகனல்லன்
அழிவிலொண்குமரன்யாரோவஞ்சனக்குன்றமன்னான். (௨௦)

என்றவனுவந்துவிண்டோயிந்திரசாபமென்ன
நின்றதோரணத்தினும்பரிருந்ததோர்நீதியானை
வன்றொழிலரக்கனோக்கிவாளெயிறிலங்கநக்கான்
கொன்றதிக்குரங்குபோலாமரக்கர்தங்குழாத்தையென்னா. (௨௧)

அன்னதாமச்சொற்கேட்டசாரதியையகேண்மோ
இன்னதாமென்னலாமோவுலகியலிகழ்தலம்மா
மன்னனோடெதிர்ந்தவாலிகுரங்கென்றான்மற்றுமுண்டோ
சொன்னதுதுணிவிற்கொண்டுசேறியென்றுணரச்சொன்னான். (௨௨)

---

* பேய்கடோள் எனப் பாடமுமுண்டு.

விடந்திரண்டனையமெய்யானவ்வுரைவியம்பக்கேளா
இடபுகுந்தினையசெயதவிதமெனுக்சீற்றமெஞ்சத்
தொடாந்துசென்றுலகமூன்றுந் * துருவினெறிவரும்மல்
கடந்துபின்குரங்கென்றோதுங்கருவையுங்களைவெனென்றான். (உ௩)

ஆர்த்தெழுந்தரக்கர்சேனையஞ்சனைக்குரியகுன்றைப்
போர்த்ததுபொழிந்ததம்மாபொருபடைப்பருவமாரி
வேர்த்தனர்திசைகாப்பாளர்சலித்ததுவிண்ணுமண்ணும்
தார்த் † தனிவீரன்றானுந்தனிமையும்வரமேற்சார்ந்தான். (உ௪)

எறிந்தனநிருதர்வெய்தினெய்தனபடைகள்யாவும்
முறிந்தனவீரன்மேனிமுட்டினமொகரயானை
மறிந்தனமடிந்ததேரும்வாவுமாக்குழுவுமற்றும்
நெறிந்தனவரம்பிலயாக்கையிலங்கைதன்னிலையிற்போ. (உ௫)

காயெரிமுளிபுற்கானிற்கலந்தெனக்காற்றின்செம்மல்
ஏயெனுமளவிற்கொல்லுநிருசர்க்கோரெல்லையில்லை
போயவருயிரும்போகித்தென்புலம்படர்தல்பொய்யா
தாயிரகோடிதூதருளர்கொலோநமனுக்கம்மா. (உ௬)

வாவுற்றார்வாராநின்றார்வந்தனர்வாரபில்வெம்போர்
பொரவுற்றபொழுதுயவீரனமும்மடங்காற்றல்பொங்கி
எரியிறபோய்க்கதிரோனூழியிறுதியினென்னலானன்
ஊரவுத்தோளரக்கரெல்லாமென்பிலாவுயிர்களொத்தார். (உ௭)

வேறு.

பிள்ளப்பட்டனநுதலோடைக்கரிபிறழ்பொற்றேர்பரிபிழையாமல்
அள்ளப்பட்டழிகுருதிப்பொருபுனலாறுகப்படிசேறுக
வள்ளப்பட்டனமகரக்கடலென்மதில்சுற்றியபதிமறலிக்கோர்
கொள்ளைப்பட்டனவுயிரென்னும்படிகொன்றானைம்புலன்வென்றானே. ()

தேரேபட்டனவென்றார்சிலர்சிலர்தெறுகட்செம்முகவயிரத்தோள்
பேரேபட்டனவென்றார்சிலர்சிலர்பரியேபட்டனபெரிதென்றார்
காரேபட்டனநுதலோடைக்கடகரியேபட்டனகடிதென்றார்
நேரேபட்டனர்பட ‡ மாடேதனிநில்லாவுயிரொடுநின்றாரே. (உ௯)

ஆழிப்பொருபடைநிருதப்பெருவலியடலோராய்மகளடுபேழ்வாய்த்
தாழிப்படுதயிரொத்தார்மாருதிதனிமத்தென்பதொர்தகையானன்
ஏழிப்புவனமுமிடைவாழுயிர்களுமெறிவேவிளையவரினமாக
ஊழிப்பெயர்வதொர்புனலொத்தாரனலொத்தான்மாருதமொத்தானே. ()

கொன்றானுடன்வருகுழுவைச்சிலர்பலர்குறைகின்றாருடல்குலைகின்றார்
பின்றாநினநனருதிப்பெருநதிபெருகாநின்றனமருகாரும்

* துருவுதல்-தேடுதல், † தனி-ஒப்பிலாத, ‡ மாடு-பக்கம்.

நின்றார்நின்றிலர்தனிநின்றானொருநேமித்தேரொடுமவனேரே
சென்றான்வன்றிறலயில்வாயம்புகடெரிகின்றான்விழியெரிகின்றான். (௯௧)

உற்றானிந்திரசித்துக்கிளையவனொருகாலேபலருயிருண்ணக்
கற்றானும்முகமெதிர்வைத்தானதுகண்டார்விண்ணவர் * கசிவுற்றார்
எற்றாமாறுதிநிலையென்பாரினியிமையாவிழியிணையிவையொன்றா
பெற்றாமல்லதுபெற்றாமென்றனர்பிறியாதெதிரெதிர்செறிகின்றார். (௯௨)

எய்தான்வாளிகளெரிவாயுமிழ்வனவீரேழெதிரவைபார்சோரப்
பொய்தான்மணியெழுவொன்றாலன்றதுபொடியாயுதிர்வுறவடிவாளி
வெய்தாயினபலவிட்டான்வீரனும்வேறோர்படையிலன்மாறாவெங்
கய்தானேபொருபடையாகத்தொடர்காலார்தேரதன்மேலானான். (௯௩)

தேரிற்சென்றெதிர்கோல்கொள்வானுயிர்தின்றானப்பொருசெறிதிண்டேர்
பாரிற்சென்றதுபரிபட்டனவவன்வரிவிற்சிந்தியபகழிக்கோல்
மார்பிற்சென்றனசிலபொற்றோளிடைமறைவுற்றனசிலமறவோனும்
நேரிற்சென்றவன்வயிரக்குனிசிலைபற்றிக்கொண்டெதிருறநின்றான். (௯௪)

ஒருகையாலவன்வயிரத்திண்சிலையுற்றுப்பற்றலுமுரவோனும்
இருகையாலிவன்வலியாமுன்னமதிற்றோடியதிவர்பொற்றோளான்
சுரிகையாலவனுருவிக்குத்தலுமதனைச்சொற்கொடுவருதூதன்
பொருகையாலிடைபிதிர்வித்தானமுதிர்பொறியோடும்படியறியாவே. ()

வாளாலேபொரலுற்றானிற்றதுமண்சேராமுனவ்வயிரத்திண்
தோளாலேபொரமுடுகிப்புக்கிடைதழுவிக்கோடலுமுடன்முற்றும்
நீளாயிலெனமயிர்தைத்திடமணிநெடுவாலவனுடனிமிர்வுற்று
மீளாவகைபுடைசுற்றிக்கொண்டதுபற்றிக்கொண்டனன்மேலானான். ()

பற்றிக்கொண்டவன்வடிவாளெனவொளிர்பல்லிற்றுகநிமிர்படர்கையால்
எற்றிக்கொண்டவினிடைநின்றுமிழ்சுடரினமின்னினம்விழுவனவென்ன
முற்றிக்குண்டல † முதலாமணியுகமுழைநாலாவிவர்குடர்நாலக்
கொற்றத்திண்சுவல்வயிரக்கைகொடுகுத்திப்புடையொருகுதிகொண்டான்

நீத்தாயோடினவுதிரப்பெருநதிநீராகச்சிலைபாராகப்
போய்த்தாழ்செறிதசையரிசித்தினபடிபொங்கப்பொருமுயிர்போகாமுன்
மீத்தாநிமிர்சுடர்வயிரக்கைகொடுபிடியாவிண்ணொடுமண்காணத்
தேய்த்தானாழியினுலகேழ்தேயினுமொருதன்புக ‡ ழிறைதேயாதான். ()

புண்டாழ்குருதியின்வெள்ளத்துயிர்கொடுபுக்கார்சிலர்சிலர்பொதிபேயின்
பண்டாரத்திடையிட்டார்தம்முடல்பட்டார்சிலர்சிலர்பயமூர்தத்
திண்டாடித்திசையறியாமறுகினர்சேர்ந்தார்சிலர்சிலர்செலவற்றார்
கண்டார்கண்டதொர்திசையேவிசைகொடுகோல்விட்டார்படைநகவிட்டார்.

* கசிவுறுதல்-மனமிளகுதல். † முதல்-ஏழனுருபு. ‡ இறை-கொஞ்சம்.

மீனாய்வலையையுற்றார்சிலர்சிலர்பசுவாய்வழிதொறுமேய்வுற்றார்
ஊனார்பறவையின்வடிவுற்றார்சிலர்சிலர்நான்மறையவருருவானார்
மானார்கண்ணிளமடவாராயினர்முன்னேதங்குழல்வகிரவுற்றார்
ஆனார்சிலர்சிலரையாநின்சரணென்றார்நின்றவரரியென்றார். (௪௰)

தந்தாரமுமுறுகிளையுந்தமையெதிர்தழுவுந்தொறுநமதமரல்லேம்
வந்தேம்வானவரென்றேகினர்சிலர்சிலர்மானுயரெனவாய்விட்டார்
மந்தாரங்கிளர்பொழில்வாய்வண்டுகளானார்சிலர்சிலர்மருள்கொண்டார்
இந்தாரெயிலுகளிறவித்தார்சிலரெரிபோற்குஞ்சியையிருள்வித்தார். (௪௧)

வேறு.

குண்டலக்குழைமுகக்குங்குமக்கொங்கையர்
வண்டலைத்தெழு * குழற்கற்றைகால்வருடவாய்
விண்டலத்தகவிரைக்குமுதவாய்விரிதலால்
அண்டமுற்றுளதவூரழுதபேரமலையே. (௪௨)

கதிரெழுந்தனையசெந்திருமுகக்கணவன்மா
டெதிரெழுந்தடிவிழுந்தழுதுசோரிளநலார்
அதிநலங்கோதைசேரோதியோடன்றவூர்
உதிரமுந்தெரிகிலாதிடைபரந்தொழுகியே. (௪௩)

தாவிலவெஞ்செருநிலத்திடையுலர்ந்தவர்தமேல்
ஓவியம்புரைநலார்விழுதொறுஞ்சிலருயிர்த்
தேவுகண்களுமிமைத்திலர்களாமிதுவெலாம்
ஆவியொன்றுடலிரண்டாயதாலேகொலாம். (௪௪)

ஓடினுயிர்களுடல்கள்போலுதவியால்
வீடினார்வீடினார்மிடலுடற்குவைகள்வாய்
நாடினார்மடநலார்நவையிலாநண்பரைக்
கூடினாருடினாருப்பர்வாழ்கொம்பனார். (௪௫)

தீட்டுவாளனையகட்டெரிவையோர்திருவனான்
ஆட்டினின்றயர்வதோரறுதலைக்குறையினைக்
கூட்டிநீயோருயிர்த்துணைவனெங்கோவினைக்
காட்டுவாயாதியென்றழுதுகைகூப்பினாள். (௪௬)

ஏந்திடைலையையோரழுதருங்கொம்பனாள்
காந்தனின்றுடிவானுயர்கவந்தத்தினை
வேந்தனீபலசினையவிடுதியானடமெனப்
பூந்தளிர்க்கைகளான்மெய்யுறப்புல்லினாள். (௪௭)

---

* குழற்கற்றைகால்வருடலாவது தலைமயிரவிழ்ந்து காலளவுந்தொங்க யுத்தகளத்துக்குவந்து கணவர்மேல் விழுந்தழுகிறார்களெனக்கொள்க, அவ்வூரிலே பெண்களழுத பேரமலையெனவுமாம்.

நாடினார்சாடியோனவருங்கொம்பனார்
வாடினார்கணவர்தம்மார்புறத்தழுவியே
வீடினாரவ்வயின்வெருவிவிண்ணவர்கடாம்
ஓடினாரசன்மாட்டணுகிநின்றுரைசெய்வார். (சஅ)

வேறு.

கயன்மகிழ்கண்ணிணைகலுழிகான்றுகப்
புயன்மகிழ்புரிகுழல்பொடியளாவுற
அயன்மகன்மகன்மகனடியின்வீழ்ந்தனன்
மயன்மகள்வயிறலைத்தலறிமாழ்கினாள். (சகூ)

தாவருந்திருநகர்த்தையலார்முதல்
ஏவருமிடைவிழுந்திரங்கியேங்கினார்
காவலன்கான்மிசைவிழுந்துகாவன்மாத்
தேவருமழுதனர்களிக்குஞ்சிந்தையார். (இ0)

கக-வது அட்சகுமாரன்வதைப்படலம் - முற்றிறு.

(ஆ. திருவிருத்தம்-கஅச.)

கஉ-வது. பாசப்படலம்.

அவ்வழியவ்வுரைகேட்டவாண்டகை
வெவ்விழியெரியுகவெகுளிவீங்கினான்
எவ்வழியுலகமுங்குலையவிந்திரத்
தெவ்வழிதரவுயர்விசயச்சீர்த்தியான். (க)

அரஞ்சுடர்வேற்றன * தனுசனிற்றசொல்
உரஞ்சுடவெரியுயிர்த்தொருவனேங்கினான்
புரஞ்சுடவரிசிலைப்பொருப்புவாங்கிய
பரஞ்சுடரொருவனைப்பொருவும்பான்மையான். (உ)

ஏறினன்விசும்பினுக்கெல்லைகாட்டவெ
ஆறிருநூறுபேய்பூண்டவாழித்தேர்
கூறினகூறினசொற்கள்கோத்தலால்
பீறினசெவிதிசைபிளந்ததண்டமே. (ங)

வேறு.

ஆர்த்தனகழலுந் † தாரும்பேரியுமசனியஞ்ச
வேர்த்துயிர்குலையமேனிவெதும்பினனமரர்வேந்தன்
சேர்த்ததுபேருமென்னுத்தேவர்க்குந்தேவராய
மூர்த்திகடாமுந்தத்தம்யோகத்தின்முயற்சிவிட்டார். (ச)

---

* அநுஜன்-தம்பி, † தார்-மாலை. சேனையெனவுமாம்.

தம்பியையுன்னுந்தோறுந்தாரைநீர்ததும்புங்கண்ணான்
வம்பியல்சிலையைநோக்கிவாய்மடித்துருத்துநக்கான்
கொம்பியன்மாயவாழ்க்கைக்குரங்கினாற்குரங்காவாற்றல்
எம்பியோதேய்ந்தானெந்தைபுகழன்றோதேய்ந்ததென்றான். (௫)

வேறிரண்டனவும்வில்லுமிடைந்தவும்வெற்பென்றாலும்
கூறிரண்டாக்கும்வாட்கைக்குழுவையுங்குணிக்கலாற்றேம்
சேறிரண்டருகுசெய்யுஞ்செறிமதச்சிறுகண்யானை
ஆறிரண்டஞ்சுநூற்றினிரட்டிதேர்த்தொகையுமஃதே. (௬)

ஆயமாத்தானைதான்வந்தணுகியதன்மையேனைத்
தீயவாணிருதர்வேந்தர்சேர்ந்தவர்சேரத்தேரின்
ஏயெனுமளவின்வந்தானிராவணனிருந்த* யாணர்
வாயிறோய்கோயில்புக்கானருவிசோர்வயிரக்கண்ணான். (௭)

தாளிணைவிழுந்தான்றம்பிக்கிரங்கினன்றறுகணானும்
தோளிணைபற்றியேந்தித்தழுவினனழுதுசோர்ந்தான்
வாளிணைநெடுங்கண்மாதர்வயிறலைத்தலறிமாழ்க
மீளிபோன்மொய்ம்பினானும்விலக்கினன்விளம்பலுற்றான். (௮)

ஒன்றுநீயுறுதியோராயுத்திருந்துளையகிற்றி
வன்றிறற்குரங்கினாற்றன்மரபுளியுணர்ந்துமன்னா
சென்றுநீர்பொருதிரொன்றுதிறத்திறஞ்செலுத்தித்தேயக்
கொன்றனைநீயேயன்றோவரக்கர்தங்குழுவையென்றான். (௯)

இங்கார்சம்புமாலிகேடிலாவவரென்றிப்
பைங்கழலரக்கரோடுமுடன்சென்றபகுதிச்சேனை
இங்கொருவருமீண்டார்தாமில்லையேற்குரங்கதெந்தாய்
சங்கரனயன்மாலென்பார்தாமெனுந்தகையதாமே. (௧௦)

திக்கயவலியுமேனுடிரிபுரந்தீயச்செற்ற
முக்கணன்கையிலேயோடுமுலகொருமூன்றும்வென்றாய்
அக்கனைக்கொன்றுநின்றகுரங்கினையாற்றல்காண்டி
புக்கினிவென்றுமென்றாற்புலம்பன்றிப்புலமைத்தாமோ. (௧௧)

ஆயினுமையநொய்தினுண்டொழிற்குரங்கையானே
ஏயெனுமளவிற்பற்றித்தருகுவெனிடவென்றான்றம்
நீயினியுழக்கற்பாலையல்லைநீடிருத்தியென்னாப்
போயினனமரர்கோவைப்புகழொடுகொண்டுபோந்தான். (௧௨)

உடைந்தவிருஞேற்றுப்பலருக்கொடக்கதிர்க்குழாங்கள்
மிடைந்தனம்லைச்சியாங்குமெய்யணிபலவுமின்னக்
குடைந்துவெட்டகைகலநுன்றோய்கொற்றப்போர்வாள்வில்வீர
அடைந்தகாரக்கர்தானையகலிட்டமிடமின்றென்ன. (௧௩)

* யாணர் - அழகான.

ஆழியந்தேருமாவுமாக்கருமுருக்குஞ்செங்கட்
குழிவெங்கோபமாவுந்துவன்றியநிருதர்சேனை
ஊழிவெங்கடலிற்சுற்றவொருதனிநடுவணின்று
பாழிமாமேருவொத்தான்வீரத்தின்பான்மைதீர்ப்பான். (௧௪)

சென்றனனென்பமன்றோதிசைகளோடுலகமெல்லாம்
வென்றவனிவனென்றாலும்வீரத்தேநின்றவீரன்
அன்றதுகண்டவாழிபருமனையமரினாற்றல்
நன்றெனவுவகைகொண்டான்யாவருநடுக்கமுற்றார். (௧௫)

இலைகுலாம்பூணினானுமிரும்பிணைக்குருதியீரத்
தலையில்வெம்படைகடெற்றியளவிடற்கரியவாகி
மலைகளுங்கடலும்யாறுங்காணமும்பெற்றுமற்றோர்
உலகமேயொத்ததம்மாபோர்ப்பெருங்களமென்றான்றே. (௧௬)

வெப்படையில்லாநெஞ்சிற்சிறியதோர்விம்மல்கொண்டான்
அப்படைவேலையன்னபெருமையாராற்றலோடும்
ஒப்படையில்லாரெல்லாமுலந்தனர்குரங்குமொன்றே
எப்படைகொண்டுவெல்வதிராமன்வந்தெதிர்க்கினென்றான். (௧௭)

கண்ணனாருயிரேயொப்பார்கைப்படைக்கலத்திற்காப்பார்
எண்ணலாந்தகைமையில்லாரிறந்திடைக்கிடந்தார்தம்மை
மண்ணுளேநோக்கிநின்றவாய்மடித்துருத்துமாயாப்
புண்ணுளேகோலிட்டன்னமானத்தாற்புழுங்குகின்றான். (௧௮)

கானிடையத்தைக்குற்றகுற்றமுங்கரனார்பாடும்
யானுடையெம்பிவீந்தவிக்கணும்பிறவுமெல்லாம்
மானுடரிருவரானும்வானரமொன்றினானும்
ஆனிடத்துளவென்வீரமழகிற்றேயம்மவென்றாவி. (௧௯)

தீப்புண்டருயிரவாகிநெருப்புண்டநிறத்திற்றோன்றி
ஈப்புண்டற்கரியவாயபிணக்குவடிடறச்செல்வான்
தேய்ப்புண்டதம்பியாக்கைசிவப்புண்டகண்கடீயில்
காய்ப்புண்டசெம்பிற்றோன்றக்கறுப்புண்டமனத்தன்கண்டான். (௨0)

தாருகன்குருதியன்னகுருதியிற்றனிமாச்சீயம்
கூருகிர்கிளைத்தகொற்றக்கனகன்மெய்க்குழம்பிற்றோன்றத்
தேருகக்கையின்வீரச்சிலையுகவயிரச்செங்கண்
நீருகக்குருதிசிந்தநெருப்புகவயிர்த்துநின்றான். (௨௧)

வெவ்விலையயில்வேலுக்கைவெம்மையைக்கருதிநோக்கி
வவ்வுதல்கூற்றுமாற்றான்மாறுமாறுலகின்வாழ்வார்
அவ்வுலகத்துளாருமஞ்சுவரொளிக்கலவையா
எவ்வுலகத்தையுற்றாயெம்மைநீத்தெளிதினெந்தாய். (௨௨)

ஆற்றலனனையனாகியறிவழிந்தயரும்வேலை
சீற்றமென்றொன்றுதானேமேனியிர்செலவிற்றாகித்
தோற்றியதுன்பநோயையுள்ளுறத்துரந்ததம்மா
எற்றஞ்சாலாணியாணியெதிர்செலக்கடாயதென்ன. (௨௩)

வேறு.

ஈண்டிவைநிகழ்வுழியிரவிதேரெனத்
தூண்டுறுதேரின்மேற்றோன்றுந்தோன்றலை
மூண்டெழுப்புரன்சுடமுடுகுமீசனின்
ஆண்டகைவளைகழலநுமனோக்கினான். (௨௪)

வேறு.

வென்றேனிதன்முன்சிலவீரரையென்னும்வெம்மை
அன்றேமுடுகிக்கடிதெய்தவழைத்ததம்மா
ஒன்றேயினிவெல்லுதலோற்பதடுத்ததுள்ளத்
தின்றேசமையுமிவனிந்திரசித்தவென்பான். (௨௫)

* கட்டேறுநறுங்கமழ்கண்ணியிக்காளையென்கைப்
பட்டாலதுவேயவிராவணன்பாடுமாகும்
கெட்டோமெனவெண்ணியக்கேடருங்கற்பினாளை
† விட்டேகுமதன்றியரக்கரும்வெம்மைதீர்வார். (௨௬)

ஒன்றோவிதனான்வருமூதியமொண்மையானைக்
கொன்றேனெனினிந்திரனுந்துயர்கோளுநீங்கும்
இன்றேகடிகெட்டதரக்கரிலங்கையானே
வென்றேனவிராவணன்றன்னையும்வேரொடென்றான். (௨௭)

அக்காலையரக்கருமானையுந்தேருமாவும்
முக்காலுலகம்மொருமூன்றையும்வென்றுமுற்றிப்
புக்கானின்முன்புக்குயர்பூசல்பெருக்கும்வேலை
மிக்கானும்வெகுண்டோர்மராமரங்கொண்டுமிக்கான். (௨௮)

வேறு.

உதைப்புண்டனயானையுருண்டனயானையொன்றோ
மிதிப்புண்டனயானைவிழுந்தனயானைமேன்மேல்
புதைப்புண்டனயானைபுரண்டனயானைபோரால்
வதைப்புண்டனயானைமடிந்தனயானைமண்மேல். (௨௯)

வேறு.

முடிந்ததேர்க்குலமுறிந்தனதேர்க்குலமுரணிற்
றிடிந்ததேர்க்குலமிற்றனதேர்க்குலமச்சிற்
றொடிந்ததேர்க்குலமுக்கனதேர்க்குலநெக்குப்
படிந்ததேர்க்குலம்பறிந்தனதேர்க்குலம்படியில். (௩0)

---

* கட்டேறுநறுங்கமழ்·கறங்கள்–தேறு–தெளிவு·கமழென்பதுமாம்.
† விட்டேகும்–விட்டுப்போவான்.

சிரனெரிந்தவுங்கண்மணிசிதைந்தவுஞ்செறிதாட்
டரனெரிந்தவுமுதுகிறச்சாய்ந்தவுந்தார்ப்பூண்
உரனெரிந்தவுமுதிரங்களுமிழ்ந்தவுமொண்பொற்
குரனெரிந்தவுங்கொழுங்கழுத்திழந்தவுங்குதிரை. (௯௧)

பிடியுண்டார்களும்பிளத்தலுண்டார்களும்பெருந்தோள்
ஒடியுண்டார்களுந்தலையுடைந்தார்களுமுழங்கைக்
கடியுண்டார்களுங்கழுத்திறந்தார்களுங்கரத்தால்
அடியுண்டார்களுமச்சமுண்டார்களுமரக்கர். (௯௨)

வட்டவெஞ்சிலையோட்டியவாளியும்வயவர்
விட்டவிட்டவெம்படைகளும்வீரன்மேல்வீழ்ந்த
சுட்டவல்லிரும்படைகளைச்சுடுகலாதனபோல்
பட்டபட்டனதிசையொடும்பொறியொடும்பறந்த. (௯௩)

சிகையெழுஞ்சுடர்வாளிகளிந்திரசித்து
மிகையெழுஞ்சினத்தநுமன்மேல்விட்டனவெந்து
புகையெழுந்தனவெரிந்தனகரிந்தனபோக
நகையிழந்தனவழிந்தனவானுளோர்நாட்டம். (௯௪)

தேரும்யானையும்புரவியுமரக்கருஞ்சிந்திப்
பாரின்வீழ்தலுந்தானொருதனிநின்றபனைத்தோள்
வீரவீரனுமுறுவலும்வெகுளியும்வீங்க
வாரும்வாருமென்றழைக்கின்றவநுமன்மேல்வந்தான். (௯௫)

புரந்தரன்றலைபொதிரெறிந்திடப்புயல்வானில்
பரந்தபல்லுருமேற்றினம்வெறித்துயிர்பதைப்ப
* நிரந்தரந்தலைநெடுநிலஞ்சுமந்தபேருரகன்
சிரந்துளங்கிடவரக்கன்வெஞ்சிலையைநாண்டெறித்தான். (௯௬)

ஆண்டநாயகன்றூதனுமயனுடையண்டம்
கீண்டதாமெனக்கிரியுகநெடுநிலங்கிழிய
நீண்டமாதிரம்வெடிபடவவனெடுஞ்சிலையில்
பூண்டநாணிறத்தன்னெழிற்றோள்களைப்புடைத்தான். (௯௭)

நல்லைநல்லையிஞ்ஞாலத்துனின்னொக்கநல்லார்
இல்லையில்லையாலெறுழ்வலிக்கியாரொடுமிகல
வல்லைவல்லையின்றூருநீபடைத்துளவாழ்நாட்
கெல்லையெல்லையென்றிந்திரசித்துவுமிசைத்தான். (௯௮)

நாளுக்கெல்லையுநிருதராயுலகத்தைநலியும்
† கோளுக்கெல்லையுங்கொடுந்தொழிற்கெல்லையுங்கொடியீர்
வாளுக்கெல்லையும்வந்தனவகைகொண்டுவந்தேன்
தோளுக்கெல்லையொன்றில்லையென்றநுமனுஞ்சொன்னான். (௯௯)

---

* நிரந்தரம்-எப்போதும். † கோளுக்கு-கொள்கைக்கு.

இச்சிரத்தையைத்தொலைம்பெனென்றிந்திரன்பகைஞன்
பச்சிரத்தம்வந்தொழுகிடவானவர்பதைப்ப
வச்சிரத்தனும்வலியனவயிரவான்கணைகள்
அச்சிரத்தினுமார்பினுமழுத்தலுமநுமன், (௪0)

குறித்துவாவென்றுகுறைந்திலனெஞ்சினங்கொண்டான்
மறியுமவெண்டிரைமாகடலுலகெலாமவழங்கிச்
சிறியதாய்சொன்னதிருமொழிசென்னியிற்சூடி
நெறியினின்றதன்னுயகன்புகழெனநிமிர்ந்தான். (௪௧)

பாகமல்லதுகண்டிலனநுமனைப்பார்த்தான்
மாகவன்றிசைபத்தொடும்வரம்பிலாவுலகிற்
சேகறாதனையெறுழ்வலித்தோள்பிடித்தீர்த்த
மேகநாதனுமயங்கினனுமெனவியந்தான். (௪௨)

நீண்டவீரனுநெடுந்தடக்கைகளைநீட்டி
ஈண்டுவெஞ்சரமெய்தனவெய்திடாவண்ணம்
மீண்டுபோய்விழவீசியாங்கவன்மிடற்றடந்தேர்
பூண்டமாவொடுசாரதிதரைப்படப் * புடைத்தான். (௪௩)

ஊழிக்காற்றன்னவொருபரித்தேரவனுதவப்
பாழித்தோளவனத்தடந்தேர்மிசைப்பாய்ந்தான்
ஆழிப்பல்படையனையனவளப்பருஞ்சரத்தால்
வாழிப்போர்வலிமாருதிமேனியைமறைத்தான். (௪௪)

உற்றவாளிகளூரத்தடங்கினவுகவுதருக்
கொற்றமாருதியனையவன்றேர்மிசைகுதித்துப்
பற்றிவன்கையாற்பறித்தெழுந்துலகெலாம்பலகால்
முற்றவென்றபோர்மூரிவெஞ்சிலையினைமுறித்தான். (௪௫)

முறிந்தவில்லின்வல்லோசைபோய்முடிவதன்முன்னர்
மறிந்துபோரிடைவழிக்கொள்வான்வயிரவாட்படையால்
செறிந்தவான்பெருமலைகளைச்சிறகறச்செயிரா
எறிந்தவிந்திரனிட்டவார்சிலையினையெடுத்தான். (௪௬)

நூறுநூறுபோர்வாளியோர்தொடைகொடுநொய்தின்
மாறில்வெஞ்சினத்திராவணன்மகன்சிலை † வளைத்தான்
ஊறுதனெடுமேனியிற்பலபடவொல்கி
ஏறுசேவகன்றூதனுஞ்சிறிதுபோதிருந்தான் (௪௭)

ஆர்த்தவானவராவலங்கொளீஇயறிவழிந்தார்
பார்த்தமாருதிதாருவொன்றங்கையிற்பற்றித்
தூர்த்தவாளிகண்முறைமுறைதுணிபடச்சுற்றிப்
போர்த்தபொன்னெடுமணிமுடித்தலையிடைப்புடைத்தான். (௪௮)

* புதைத்தானென்றும்பாடம். †வளைத்தானென்பதை வளைதசெய்தானெனக்கூட்டுக

பாரமாமரமுடியுடைத்தலையிடைப்படலும்
தாரையின்னெடுங்கற்றைகள்சொரிவனதயங்க
ஆரமால்வரையருவியினழிகொழுங்குருதி
சோரநின்றுடறுளங்கினனமரரைத்தொலைத்தான். (௪௯)

நின்றுபோதம்வந்துறுதலுநிறைபிறையெயிற்றைத்
தின்றுதேவருமுனிவருமவுணருந்திகைப்பக்
குன்றுபோனெடுமாருதியாகமுங்குலுங்க
ஒன்றுபோல்வனவாயிரம்பகழிகோத்துய்த்தான். (௫0)

உய்த்தவெஞ்சரமுரத்தினுங்கரத்தினுமொளிப்பக்
கய்த்தசிந்தையன்மாருதிநனிதவகனன்றான்
வித்தகன்சிலைவிடுகணைவிசையினுங்கடுகி
அத்தடம்பெருந்தேரொடுமெடுத்தெறிந்தார்த்தான். (௫௧)

கண்ணின்மீச்சென்றவிமையிடை * கலப்பதன்முன்னே
எண்ணின்மீச்சென்றவெறுழ்வலித்திறலுடையிகலோன்
புண்ணின்மீச்சென்றுபொழிபுனல்பசும்புலால்பொடிப்ப
விண்ணின்மீச்சென்றுதேரொடும்பார்மிசைவீழ்ந்தான். (௫௨)

விழுந்துபாரடையாமுனமின்னெனுமெயிற்றான்
எழுந்துமாவிசும்பெய்தினனிடையவன்படையில்
செழுந்தண்மாமணித்தேர்க்குலம்யானையுஞ்சிதைய
உழுந்துபேர்வதன்முன்னெடுமாருதியுதைத்தான். (௫௩)

ஏறுதேரிலனெதிர்நிற்குமாணிலனெரியின்
சீறுவெஞ்சினந்திருகுகின்றான்றிரிவானும்
வேறுசெய்வதோர்வினைபிறிதின்மையின்விரிஞ்சன்
மாறிலாப்பெரும்படைக்கலந்தொடுப்பதாய்மதித்தான். (௫௪)

பூவும்பூசிற † வயினியுந்தீபமும்புகையும்
தாவில்பாவனையாற்கொடுத்தருச்சனைசமைத்தான்
தேவியாவையுமுலகமுந்திருத்தியதெய்வக்
கோவினான்முகன்படைக்கலந்தடக்கையிற்கொண்டான் (௫௫)

கொண்டகொற்றவெஞ்சிலை ‡ நெடுநாணொடுகூட்டிச்
சண்டவேகத்தமாருதிதோளொடுஞ்சாத்தி
மண்டுளங்கிடமாதிரந்துளங்கிடமதிதோய்
விண்டுளங்கிடமேருவுந்துளங்கிடவிட்டான். (௫௬)

தணிப்பரும்பெரும்படைக்கலந்தழலுமிழ்தறுகட்
பணிக்குலங்களுக்கரசினதுருவினைப்பற்றித்

---

* கலப்பதன்முன்னே-கூடுவதன்முன்னே என்றால் இமைக்குமுன்னே.
† அயினியும்-பிரசாதவெண்சோறும், ‡ நெடுநாண்-நீண்டநாரி.

துணுக்கமுற்றுயர்கலுழனுநடுக்குறச்சுற்றிப்
பிணித்ததப்பெருமாருதிதோள்களைப்பிறங்க. (௮௭)

திண்ணென்யாக்கையைத்திசைமுகன்படைசென்றிறுக்க
அண்ணன்மாருதியன்றுதன்பின்சென்றவறத்தின்
கண்ணினீரொடுங்கனகதோரணத்தொடுங்கடைநாள்
தண்ணென்மாமதிகோளொடுஞ்சாய்ந்தெனச்சாய்ந்தான். (௮௮)

சாய்ந்தமாருதிசதுமுகன்படையெனுந்தன்மை
ஆய்ந்துமற்றதனாணையையவமதித்தகறல்
ஏய்ந்ததன்றெனவெண்ணினன்கண்முகிழ்த்திருந்தான்
ஓய்ந்ததாமிவன்வலியெனவரக்கன்வந்துற்றான். (௮௯)

உற்றகாலையினுயிர்கொடுதிசைதொறுமொதுங்கி
அற்றநோக்கினர்நிற்கின்றவாளெயிற்றரக்கர்
சுற்றும்வந்துடல்சுற்றியதொளையெயிற்றரவைப்
பற்றியீர்த்தனரார்த்தனர்தெழித்தனர்பலரால். (௯௦)

குரக்குநல்வலங்குறைந்ததென்றுவலங்கொட்டி
இரைக்குமாநகரெறிகடலொத்ததெம்மருங்கும்
திரைக்குமாசுணம்வாசுகியொத்ததுதேவர்
அரக்கரொத்தனர்மந்தரமொத்தனனநுமன். (௯௧)

கறுத்தமாசுணங்கனகமாமேனியைக்கட்ட
அறத்துக்காங்கொருதனித்துணையாநின்றவநுமன்
மறத்துமாருதம்பொருதநாள்வாளராவரசு
புறத்துச்சுற்றியமேருமால்வரையையும்போன்றான். (௯௨)

வந்திரைத்தனர்மைந்தருமகளிருமழைபோல்
* அந்தரத்தினும்விசும்பினுந்திசைதொறுமார்ப்பார்
முந்தியுற்றதோருவகைக்கோர்கரையிலைமொழியின்
இந்திரன்பிணிப்புண்டநாளொத்ததவ்விலங்கை. (௯௩)

௧௨-வது-பாசப்படலம்-முற்றிற்று.

(ஆக திருவிருத்தம்-௧௦௪௭.)

* அந்தரத்தினும் விசும்பினும்—அவ்விடத்திலும் ஆகாசத்திலும்.

௯-வது பிணிவீட்டுப்படலம்.

அனுமனைக்கட்டினதுவிடேதல்.

வேறு.

எய்யுமினீருமின்னெறிமின்போழுமின்
கொய்யுமின்குடரினைக்கூறுகூறுகள்
செய்யுமினுலகிடைத்தேய்மின்றின்னுமின்
உய்யுமேலில்லைநம்முயிரென்றோடுவார். (௧)

மைத்தடங்கண்ணியர்மைந்தர்யாவரும்
பைத்தலையரவெனக்கனன்றுபைதலை
இத்தனைபொழுதுகொண்டிருப்பதோவென
மொய்த்தனர்கொலைசெயமுயல்கின்றார்சிலர். (௨)

நச்சடைபடைகளானவியுமீட்டதோ
வச்சிரமுடன்மறிகடலின்வாய்மடுத்
துச்சியினழுத்துகுலுருத்ததென்றெனின்
கிச்சிடையிடுமெனக்கிளக்கின்றார்சிலர். (௩)

எந்தையையெம்பியையெம்முன்னோர்களைத்
தந்தனைபோகெனத்தடுக்கின்றார்பலர்
அந்தரத்தமரர்தமாணையாலிவன்
வந்ததென்றுயிர்கொளமறுகினார்பலர். (௪)

ஓங்கலம்பெருவலியுயிரினன்பனை
நீங்கலமின்றெடுநீங்கினுமினி
ஏங்கலமிவன்சிரத்திருந்தலாற்றிரு
வாங்கலமென்றழுமாதரார்பலர். (௫)

கொண்டனனெதிர்செலுங்கொற்றமாநகர்
அண்டமுற்றதுநெடிதார்க்குமாரப்பது
கண்டமுற்றுளவருங்கணவர்க்கேங்கிய
குண்டலமுகத்தியர்க்குவகைகூரவே. (௬)

வடிவுடைக்கனற்படைவயவர்மால்கரி
கொடியுடைத்தேர்பரிகொண்டுவீசலின்
இடிபடச்சிதைந்தமால்வரையினில்லெலாம்
பொடிபடக்கிடந்தனகண்டுபோயினான். (௭)

* முயிறலைத்தெழுமுதுமாத்தின்மொய்ம்புதோள்
கவிறலைப்புண்டதுகண்டுகொண்கிலா

* முயிறு—ஒருவகைச்செவ்வெறும்புகள்.

தெயிறலைத்தெழுமிதழரக்கரேழையர்
வயிறலைத்திரியலின் மயங்கினார்பலர். (அ)

ஆர்ப்புறவஞ்சினரடங்கினார்பலர்
போர்ப்புறச்செயலினைப்புகல்கின்றார்பலர்
பார்ப்புறப்பார்ப்புறப்பயத்தினாற்பதைத்
தூர்ப்புறத்திரியலுற்றோடுவார்பலர். (கூ)

கார்த்துறுகதமெழயிற்றரவின் கட்டொரு
பூர்த்துணர்சேர்த்தெனப்பொலியும்வாண்முகம்
தேர்ந்துறுபொருள்பெறவெண்ணிச்செய்யுமின்
வேர்த்துறல்பழுதெனவிளம்புவார்சிலர். (க0)

ஒளிவருநாகத்துக்கொல்கியன்றுதன்
இளிவரலின்றபின்னெண்ணம்வேறெனக்
களிவருசிந்தையாற்காண்டிநங்களைச்
சுளிகிலையூமெனத்தொழுகின்றார்சிலர். (கக)

பைங்கழலநுமனைப்பிணித்தபார்த்தனைக்
கிங்கரரொருபுடைகிளர்ந்துபற்றினார்
ஐம்பதினாயிரராளவிலாற்றலர்
மொய்ப்பினிமெனமுழ்வல்க் * கருளன்மும்மையர். (கஉ)

திண்டிறலரக்கர்தஞ்செருக்குஞ்சிந்தவான்
தண்டலிறன்றுருக்கரத்ததன்மையான்
மண்டமர்தொடங்கினன்வானரத்துருக்
கொண்டனனந்தகன்கொல்லென்றார்பலர். (கங)

அரமியத்தலந்தொறுமம்பொன்மாளிகைத்
தரமுறுநிலைதொறுஞ் † சாளரந்தொறும்
முரசெறிகடைதொறுமிரைத்துமொய்த்தனர்
நிரைவளைமகளிருநிரைந்தமைந்தரும். (கச)

கயிலையினொருதனிக்கணிசிவானவன்
மயிலியற்சீதைதன்கற்பின்மாட்சியான்
எயிலுடைத்திருநகர்சிதைப்பவெய்தினன்
அயிலெயிற்றொருகுரங்காவென்பார்பலர். (கரு)

அரம்பையர்விஞ்சைநாட்டளகவல்லியர்
நரம்பினுமினியசொனாகநாடியர்
கரும்பியல்சித்தியரியக்கர்கன்னியர்
வரம்பறுசும்மையார்தலைமயங்கினார். (கசா)

* கருளன்—கருடன், † சாளரம்—சன்னல்.

நீரிடைக்கண்டுயிலெனடியநேமியும்
தாருடைத்தனிமலருலகின்றூதையும்
ஓருடர்கொண்டுதம்முருவமாற்றினர்
பாரிடைப்புகுந்தனர்பகைத்தென்பார்பலர். (௧௭)

அரக்கருமரக்கியர்குழாமுமல்லவர்
கரக்கிலாநெடுமழைக்கண்ணினீரது
விரைக்குழற்சீதைதன்மெலிவுநோக்கியோ
இரக்கமோவறத்தினதெண்மையேகொலோ. (௧௮)

ஆண்டொழிலநுமனுமவரோடேகினன்
மீண்டிலன்வேறிலன்விரும்பலுற்றிலன்
ஈண்டிதுவேதொடர்ந்திலங்கைவேந்தனைக்
காண்டலேநலமெனக்கருத்தினெண்ணினன். (௧௯)

எந்தையதருளினுமிராமன்சேவடி
சிந்தைசெய்நலத்தினுஞ்சீதைவானவர்
தந்துளவரத்தினுந்தறுகட்பாசமும்
சிந்துவெனயர்வுறுசிந்தைசீரிதால். (௨௦)

வளையெயிற்றரக்கனையுற்றமந்திரத்
தளவுறுமுதியருமறியவாணையால்
விளைவினைவிளம்பினன்மிதிலைநாடியை
இளகினனென்வயினீதலையுமால். (௨௧)

அல்லதூஉமவனுடைத்துணைவராயினர்க்
கெல்லையுந்தெரிவுறுமெண்ணுந்தேறலாம்
வல்லவனிலைமையுமனமுந்தேறலாம்
சொல்லுகமுகமெனுந்தூதுசொல்லவே. (௨௨)

வாலிதன்னிறுதியுமரத்துக்குற்றதும்
கூலவெஞ்சேனையின் * குணிப்பிலாமையும்
மேலவன்காதலன்வலியுமெய்ம்மையான்
நீனிறத்திராவணனெஞ்சினிற்குமால். (௨௩)

ஆதலானரக்கனையெய்தியாற்றலும்
நீதியுமனக்கெளிதுவிரின்றவும்
பாதியின்மேற்செலநூறிப்பைப்பையப்
போதலேகருமமென்றநுமன்போயினன். (௨௪)

கடவுளர்க்கரசனைக்கடந்தோன்றலும்
புடைவரும்பெரும்படைப்புணரிபோர்த்தெழ

---

* குணிப்பிலாமை-அளவிலாமை.

விடைபிணிப்புண்டதுபோலும்வீரனைக்
குடைகெழுமன்னனிற்கொண்டுபோயினான். (௨௫)

ஆதவரோடினர்தொழுதுதொல்லைநாள்
மாதிரங்கடந்தவற்குறுகிமன்னனின்
காதலன்மரைமலாக்கடவுள்வாளியால்
வதில்வானரம்பிணிப்புண்டதாமென்றார். (௨௬)

கேட்டலுங்கிளர்சுடர்கெட்டவாளென
வீட்டிருள்விழுங்கியமார்பன்யானையின்
கோட்டெதிர்பொருதபேராரங்கொண்டெதிர்
நீட்டினனுவகையினிமிர்ந்தநெஞ்சினான். (௨௭)

எல்லையிலுவகையாலிவர்ந்ததோளினன்
புல்லுறமலர்ந்தகட்குமுதப்பூவினன்
ஒல்லையினோடிநீருரைத்தெனாணையால்
கொல்லலிர்தருகெனக்கூறவீரன்றான். (௨௮)

அவ்வுரைதூதருமாணையால்வரும்
தெவ்வுரைநீக்கினானறியச்செப்பினார்
இவ்வுரைநிகழ்வுழியிருந்தசீதையாம்
வெவ்வுரைநீங்கினாணிலைவிளம்புவாம். (௨௯)

இறுத்தனன்கடிபொழிலெண்ணிலோர்பட
ஒறுத்தனனென்றுகொண்டுவக்கின்றாளுயிர்
வெறுத்தனள்சோர்வுறவீரற்குற்றதைக்
கறுத்தலில்சிந்தையாள்கவன்றுகூறினள். (௩௰)

வேறு.

ஓவியம்புகையுண்டதுபோலொளிர்
பூவின்மெல்லியன்மேனிபொடியுறப்
பாவிவேடன்கைப்பார்ப்புறப்பேதுறும்
தூவியன்னமன்னாளிவைசொல்லினாள். (௩௧)

உற்றுண்டாயவிசும்பையுருவினாய்
முற்றுண்டாய்கலையாவையுமுற்றுறக்
கற்றுண்டாயொருகள்ளவரக்கனால்
பற்றுண்டாயிதுவோவறப்பான்மையே. (௩௨)

கடர்கடந்துபுகுந்தனை * கண்டகர்
உடர்கடந்தின்றுதிகடந்திலை
அடர்கடந்திரள்புயத்தை! நீ
இடர்கடந்தனைவந்திடர்செறுமே (௩௩)

* கண்டகர்—வலிஞர்.

ஆழிகாட்டியென்னுருயிர்காட்டினாய்க்
கூழிகாட்டுவேனென்றுரைத்தேனது
வாழிகாட்டுமென்றுண்டென்வரைப்புயப்
பாழிகாட்டியரும்பழிகாட்டினாய். (௧௪)

கண்டுபோயினைநீநெறிகாட்டிட
மண்டுபோரினரக்கனைமாய்த்தெனைக்
கொண்டுமன்னவன்போமெனுங்கொள்கையைத்
* தண்டினாயெனக்காருயிர்தந்தநீ. (௧௫)

எயப்பன்னினளின்னனதன்னுயிர்
தேயக்கன்றுபிடியுறத்தேங்குறு
தாயைப்போலத்தளர்ந்துமயர்ந்தனள்
தீயைச்சுட்டதோர்கற்பெனுந்தீயினாள். (௧௬)

பெருந்தகைப்பெரியோனைப்பிணித்தபோர்
முருந்தன்மற்றையுலகொருமூன்றையும்
அருந்தவப்பயனாலரசாள்கின்றான்
இருந்தவப்பெருங்கோயில்சென்றெய்தினான். (௧௭)

வேறு.

† தலங்கண்மூன்றிற்கும்பிறிதொருமதிதழைத்தென்ன
அலங்கல்வெண்குடைதண்ணிழலவிரொளிபரப்ப
வலங்கொடோளினான்மண்ணின்றுவானுறவெடுத்த
பொலங்கொண்மாமணிவெள்ளியங்குன்றெனப்பொலிய. (௧௮)

புள்ளுயர்த்தவன்றிகிரியும்புரந்தரனயிலும்
தள்ளின்முக்கணான் ‡ கணிச்சியிற்றாக்கியதழும்பும்
கள்ளுயிர்க்குமென்குழலியர்முகிழ்விரற்கதிர்வாள்
வள்ளுகிர்ப்பெருங்குறிகளும்புயங்களின்வயங்க. (௧௯)

துன்றுசெம்மயிர்ச்சுடர்நெடுங்கற்றைகள்சுற்றி
நின்றுதிக்குறநிரல்படக்கதிர்குழாநிமிர
ஒன்றுசீற்றத்தினுயிர்ப்பெனும்பெரும்புகையுயிர்ப்பத்
தென்றிசைக்குமோர்வடவனநிருத்தியதென்ன. (௨0)

மரகதக்கொழுங்கதிரொடுமாணிக்கநெடுவான்
நரகதேயத்துண்டுக்குறாவிருளையுரக்கச்
நிரமனைத்தையுந்திசைதொறுந்திசைதொறுஞ்செலுத்தி
உரகர்கோனினிதாகவீற்றிருந்தனனொப்ப. (௨௧)

---

* தண்டினாய்-தடைசெய்தாய.
† தலங்கண்மூன்று-திரிலோகம். ‡ கணிச்சி-ஆயுதம்.

குவித்தபன்மணிக்குப்பைகள்கலையொடுங்கொழிப்பச்
சவிச்சுடர்க்கலனணிந்தபொற்றோளொடுதயங்கப்
புவித்தடம்படர்மேருவைப்பொன்முடியென்னக்
கவித்துமாலிருங்கருங்கடலிருந்ததுகடுப்ப. (௪௨)

சிந்துராகத்தின்செறிதுகிற்கச்சொடுசெறியப்
பந்திவெண்முத்தினணிகலன்முழுநிலாப்பரப்ப
இந்துவெண்குடைநீழலிற்றரகையினம்பூண்
டந்திவானுடுத்தல்வீற்றிருந்ததாமென்ன. (௪௩)

வண்மைக்குந்திருமறைகட்கும்வானினும்பெரிய
திண்மைக்குந்தனியுறையுளாமுழுமுதற்றிசையின்
கண்மைக்குந்தொழுங்களிற்றொடுமாதிரங்காக்கும்
எண்மர்க்கும்மற்றை * யிருவர்க்கும்பெரும்பயமியற்ற. (௪௪)

† ஏகநாயகன்றேவியையெதிர்த்தபின்னை
நாகர்வாழ்விடமுதலெனநான்முகன்வைகும்
மாகமால்விசும்பீறெனநடுவணவனைப்பில்
தோகைமாதர்கண்மைந்தரிற்றோன்றினர்சுற்ற. (௪௫)

வானரங்களும்வானவரிருவருமனிதர்
ஆனபுன்றொழிலோரெனவிகழ்கின்றவவரும்
ஏனைநின்றவரிருடியர்சிலரொழிந்தியாரும்
தானவின்றவேலரக்கர்தங்குழுவொடுஞ்சுற்ற. (௪௬)

நரம்புகண்ணகத்துள்ளுறைநறைநிறைபாண்டில்
கரம்புசில்லரிப்பாணியுந்தறடுகின்றிசைப்ப
அரம்பைமங்கையரமிழ்துகுத்தாலன்னபாடல்
வரம்பிலின்னிசைசெவிதொறுஞ்செவிதொறும்வழங்க. (௪௭)

கூடுபாணியினிசையொடுமுழவொடுங்கூடத்
தோடுசேரடிவிழிமனங்கையொடுதொடரும்
ஆடனோக்குநின்றருந்தவமுனிவர்க்குமமைந்த
வீடுமீட்குறுமேனகைமேனகைவிளங்க. (௪௮)

ஊடினார்முகத்துறநறையொருமுகமுண்ணக்
கூடினார்முகக்களிநறையொருமுகங்குடிப்பப்
பாடினார்முகத்தாரமுதொருமுகம்பருக
ஆடினார்முகத்தணியமுதொருமுகமருந்த. (௪௯)

தேவரோடிருந்தரசியலொருமுகஞ்செலுத்த
மூவரோடுமாமந்திரமொருமுகமுயலப்

* இருவர்-சேடன் அருணன், † ஏகநாயகன்-ஒன்றுக்கடவுள்.

பாவகாரிதன்பாவகமொருமுகம்பயிலப்
* பூவைசானகியுருவொடுமொருமுகம்பொருந்த. (௫௦)

காந்தண்மெல்விரற்சனகிதன்கற்பெனுங்கடலை
நீந்தியேறுவதெங்ஙனமென்றொருமுகமினையச்
சாந்தளாவியகொங்கைநன்மகளிர்தற்சூழ்ந்தார்
எந்துமாடியினொருமுகமியல்புடனிலங்க. (௫௧)

பொதும்பர்வைகுதேன்புக்கருந்துதற்ககம்புலரும்
மதம்பெய்வண்டெனச்சனகிமேன்மனஞ்செலமறுகி
வெதும்புவாரகம்வெந்தழிவார்நகில்விழிநீர்
ததும்புவார்விழித்தாரைவேறொடொறுந்தாக்க. (௫௨)

மாறளாவிய † மகரந்தநறவுண்டுமகளிர்
வீறளாவியமுகுண்முலைமெழுகியசாந்தின்
சேறளாவியசிறுநறுஞ்சீகரத்தென்றல்
ஊறளாவியகடுவெனவுடலிடைநுழைய. (௫௩)

திங்கள்வாணுதன்மடந்தையர்சேயரிக்கிடந்த
அங்கயர்தடந்தாமரைக்கலரியோனாகி
வெங்கண்வானவர்தானவரென்றிவர்விரியாப்
பொங்குகைக்கடற்றாமரைக்கிந்துவேபோன்றும். (௫௪)

இருந்தவெண்டிசைக்கிழவனைமாருதியெதிர்ந்தான்
கருந்திணாகத்தைநோக்கியகலுழனிற்கனன்றான்
திருந்துதோளிடைவீக்கியபாசத்தைச்சிந்தி
உருந்துநஞ்சுபோல்பவன்வயிற்பாய்வெனென்றுடன்றான். (௫௫)

உறங்குகின்றபோதுயிருண்டல்குற்றமென்றொழிந்தேன்
பிறங்குபொன்மணியாசனத்திருக்கவும்பெற்றேன்
திறங்களென்பலசிந்திப்பதிவன்றலைசிதறி
அறங்கொள்கொம்பினைமீட்டுடனகல்வெனென்றமைந்தான். (௫௬)

தேவர்தானவர்முதலினர்சேவகன்றேவி
காவல்காண்டிவணிருந்தவர்கட்புலன்கதுவப்
பாவகாரிதன்முடித்தலைபறித்திலெனென்றால்
எவதியானினிமேற்செயுமாள்வினையென்றான். (௫௭)

மாடிருந்தமற்றிவன்புணர்மங்கையர்மயங்கி
ஊடிரிந்திடமுடித்தலைதிசைதொறுமுருட்டி
ஆடல்கொண்டுநின்றார்க்கின்றதுசெடிசம்மா
தேடிவந்ததோர்குரங்கெனும்வாசகஞ்சிறிதோ. (௫௮)

---

* பூவை-நாகணவாய்ப்புள் சொல்லுக்குவமை.
† மகரந்தநறவு—வாசனையுள்ளகள்.

நீண்டவாளெயிற்றரக்கனைக்கண்களினேரே
காண்டல்வேண்டியிவ்வுயிர்சுமந்தெதிர்சிலகழறி
மீண்டபோதுண்டுவசைப்பொருள்வென்றிலெனெனினும்
மாண்டபோதினும்புகழன்றிமற்றுமொன்றுண்டோ. (௫௯)

என்றுதோளிடையிறுக்கியபாசமிற்றேகக்
குன்றினமேலெழுகோளரியேறெனக்குதியின்
சென்றுகூடுவலென்பதுசிந்தனைசெய்யா
நின்றுகாரியமன்றெனநீதியினினைந்தான். (௬0)

வேறு.

கொல்லலாம்வலத்தனுமல்லன்கொற்றமும்
வெல்லலாந்தரத்தனுமல்லன்மேலைநாள்
அல்லெலாந்திரண்டனநிறத்தனாற்றலை
வெல்லலாமிராமனாற்பிறரும்வெல்வரோ. (௬௧)

என்னையும்வெலற்கரிதிவனுக்கீண்டிவன்
தன்னையும்வெலற்கரிதெனக்குந்தாக்கினால்
அன்னவேகாலங்கள்கழியுமாதலான்
துன்னருஞ்செருத்தொழிற்றொடங்கறாயதோ. (௬௨)

எழுயருலகங்கள்யாவுமின்புறப்
பாழிவன்புயங்களோடரக்கன்பஃறலைப்
பூழியிற்புரட்டலென்பூணிப்பாமென
ஊழியான்விளம்பியவுரையுமொன்றுண்டால். (௬௩)

இங்கொருதிங்களேயிருப்பல்யானென
* அங்கணாயகன்றனதாணைகூறிய
மங்கையுமின்னுயிர்துறத்தல்வாய்மையால்
பொங்குவெஞ்செருவிடைப்பொழுதுபோக்கினால். (௬௪)

ஆதலானமர்த்தொழிலழகிற்றன்றருந்
தூதனாந்தன்மையேதூய்தென்றெண்ணினான்
வேதநாயகன்றனித்துணைவன்வென்றிசால்
எதில்வாளரக்கன்றிருக்கையெய்தினான். (௬௫)

தீட்டியவாளெனத்தெறுசட்டேவியர்
ஈட்டியகுழுவிடையிருந்தவேந்தற்குக்
காட்டினனநுமனைக்கடலினாழ
தூட்டியயுப்பமையுலவோட்டினான். (௬௬)

புவனமெத்தனையவையனைத்துமபோர்கடந்
தவனையுற்றரியுருவானவாண்டகை

* அங்கண்—அப்போது அழகியகண்.

சிவனெனச்செங்கணனென்னச்சேவகன்
இவனெனக்கூறிநின்றிருகைகூப்பினான். (௬௭)

நோக்கிய * கட்பொறிநவன்றவாய்களில்
தூக்கியபொறியொடுமயிர்சுறுக்கொளத்
தாக்கியவுயிர்ப்பொடுந்தவழவெம்புகை
வீக்கினனவ்வுடல்சித்தபாம்பினே. (௬௮)

அன்னவோர்வெகுளியனமராரகியர்
துன்னியதுன்னலர்த்துணுக்கஞ்சுற்றுற
என்னிவண்வரவுநீயாரையென்றவன்
தன்மையைவினாயினான்கூற்றின்றன்மையான். (௬௯)

நேமியோகுலிசியோநெடுங்கணிச்சியோ
தாமரைக்கிழவனோதறுதட்பஃறலைப்
பூமிதாங்கொருவனோபொருதுமுற்றுற
நாமமுமுருவமுங்கரந்துநண்ணினாய். (௭௦)

நின்றிசைத்துயிர்கவர்நீலக்காலனோ?
குன்றிசைத்தயினுறவெறிந்தகொற்றனோ?
தென்றிசைக்கிழவனோதிசைநின்றாட்சியர்
என்றிசைக்கின்றவர்யாருள்யாவனீ. (௭௧)

அந்தணர்வேள்வியினாக்கியானையின்
வந்துறவிடுத்ததோர்வயவெம்பூதமோ?
முந்தொருமலருளோனிலங்கைமுற்றுறச்
சிந்தெனத்திருத்திய திகிரித்தெய்வமோ? (௭௨)

ஆரைநீயென்னையிங்கெய்துகாரணம்
ஆருனைவிடுத்தவாறியவானையால்
சோர்விலசொல்லுதியென்னச்சொல்லினான்
வேரொடுமமரர்தம்புகழ்விழுங்கினான். (௭௩)

சொல்லியவனைவருமல்லலென்சொன்னவப்
புல்லியவவியினோரேவல்பூண்டிலென்
அல்லியங்கமலமேயனையசெங்கணோர்
வில்லிதன்றூதன்யானிலங்கைமேயினேன். (௭௪)

அனையவன்யாரெனவறிதியாதியேல்
முனைவருமமரருமூவர்தேவரும்
எனையவரெனையவர்யாவர்யாவையும்
நினைவருமிருவினைமுடிக்கநின்றுளோன். (௭௫)

* கட்பொறி—கண்ணாகிய அறிவு.

வேறு.

ஈட்டியவலியுமேனையியற்றியதவமும்யாணர்
கூட்டியபடையுந்தேவர்கொடுத்தநல்வரமுங்கோட்பும்
தீட்டியபிறவுமெய்துத்திருத்தியவாழ்வுமெல்லாம்
நீட்டியபகழியொன்றான்முதலொடுநீக்கநின்றான். (எசு)

தேவரும்பிறருமல்லன்றிசைக்களிறல்லன்றிக்கிற்
காவலரல்லனீசன்கைலையங்கிரியுமல்லன்
மூவருமல்லன்மற்றை * முனிவருமல்லனெல்லைப்
பூவலயத்தையாண்டபுரவலன்புதல்வன்போலாம். (எஎ)

போதமும்பொருந்துகேள்விப்புரையறுபயனும்பொய்தீர்
மாதவஞ்சார்ந்ததீராவரங்களுமற்றுமுற்றும்
யாதவனினைந்தானன்னபயத்தனவேதுவேண்டின்
வேதமுமறனுஞ்சொல்லுமெய்யறமூர்த்திவில்லோன். (எஅ)

காரணங்கேட்டியாயிற்கடையிலாமறையின்கண்ணும்
ஆரணங்காட்டமாட்டாவறிவினுக்கறிவுமன்னான்
போரணங்கிடங்கர்கௌவப்பொதுநின்றுமுதலையென்ற
வாரணங்காக்கவந்தானமரரைக்காக்கவந்தான். (எகூ)

மூலமுநடுவுமீறுமில்லதோர்மும்மைத்தாய
காலமுங்கணக்குநீத்தகாரணன்கைவிலேந்திச்
சூலமுந்திகிரிசங்குங்கரகமுந்துறந்துதொல்லை
ஆலமுமலரும்வெள்ளிப்பொருப்பும்விட்டயோத்திவந்தான். (அ0)

அறந்தலைநிறுத்திவேதமருள்சுரந்தறைந்தநீதித்
திறந்தெரிந்துலகம்பூணச்செந்நெறிசெலுத்தித்தீயோர்
இறந்துகநூறித்தக்கோரிடர்துடைத்தேகவீண்டு
† பிறந்தனன்றன்பொற்பாதமேத்துவார்பிறப்பறுப்பான். (அக)

அன்னவற்கடிமைசெய்வேனாமமநுமனென்பேன்
நன்னுதறன்னைத்தேடிநாற்பெருந்திசையும்போந்த
மன்னரிற்றென்பால்வந்ததானைக்குமன்னன்வாலி
தன்மகனவன்றன்றூதன்வந்தனென்றனியெனென்றான். (அஉ)

என்றலுமிலங்கைவேந்தனெயிற்றினமெழிவிநாப்பண்
மின்றிரிந்தன்னநக்குவாலிசேய்விட்டதூத
வன்றிறலாயவாலிவலியனோகொலநின்வாழ்க்கை
நன்றுகொலென்னலோடுநாயகன்றூதனக்கான். (அங)

அஞ்சலையரக்கலார்விட்டந்தரமடைந்தானன்றே
வெஞ்சினவாலிமீளான்வாலும்போய்விளிந்தன்றே

---

* முனிவர் - ஈண்டு சனகாதியர். † ஈண்டு பிறந்தனனென்றால் இவ்வுலகத்தவதரித்தான தன்பொற்பாதமேத்துவார் பிறப்பறுக்க வல்லவன் என்க.

அஞ்சனமேனியான்றனடிகளையொன்றான்மாழ்கித்
துஞ்சினனெங்கள்வேந்தன்சூரியன்றோன்றலென்றான். (அச)

என்னுடையீட்டினாலவ்வாலியையெறுழ்வாயம்பால்
இன்னுயிருண்டதிப்போதியாண்டையானிராமனென்பான்
அன்னவன்றேவிதன்னையங்கதனுடனுற்ற
தன்மையையுரைசெய்கென்னச்சமீரணன்றனயன்சொல்வான். (அரு)

தேவியைநாடிவந்தசெங்கணற்கெங்கள்கோமான்
ஆவியொன்றாகநட்டானருந்துயர்துடைத்தியென்ன
ஓவியர்க்கெழுதவொண்ணாவுருவத்தனுருமையோடும்
கோவியற்செல்வமுன்னேகொடுத்துவாலியையுங்கொன்றான். (அசு)

ஆயவன்றன்னொடாண்டோர் * திங்களோர்நான்கும்வைகி
மேயவெஞ்சேனைசூழவீற்றினிருந்தவீரன்
போயினிர்நாடுமென்னப்போந்தனப்புகுந்ததீதென்
றேயவன்றூதன்சொன்னானிராவணனிதனைச்சொன்னான். (அஎ)

உங்குலத்தலைவன்றன்னோடொப்பிலாவுபர்ச்சியோனை
வெங்கொலையம்பிற்கொன்றாற்காட்டொழின்மேற்கொண்டீரேல்
எங்குலப்புறனஞ்சீத்திறம்மொடுமியைந்ததென்றால்
மங்குலிற்பொலிந்தஞாலமாதுமையுடைத்துமாதோ. (அஅ)

தம்முனைக்கொல்வித்தன்னறகொன்றவற்கன்புசான்ற
உம்மினத்தலைவனேவயாவெனக்குணர்த்தலுற்ற
தெம்முனைத்தூதுவந்தாயிகல்புரிதன்மையென்னே
நும்மினைக்கொல்லாநெஞ்சமஞ்சலைநுவறியென்றான். (அகூ)

வேறு.

துணர்த்ததாரவன்சொல்லியசொற்களைப்
புணர்த்துநோக்கப்பொதுநின்றநீதியை
உணர்த்தினாலதுறுமெனவுன்னருங்
குணத்தினானுமினையனகூறினான். (கூ0)

தூதுவந்ததுசூரியன்காண்முனை
ஏதுவொன்றியநீதியிலைந்தன
சாதுவென்றுணர்கிற்றியேற்றங்கண
கோதிறந்தனநின்வயிற்கூறுவாம். (கூக)

வறிதுவீழ்த்தனைவாழ்க்கையைமன்னறம்
சிறிதுநோக்கலைதீமைதிருத்தினாய்
இறுதியுற்றுளதாயினுமின்னுமோர்
உறுதிகேட்டியுயிர்கொடிதோம்புவாய். (கூஉ)

---

* திங்களோராறு எனப் பாடமுமுண்டு.

போயிற்றீர்தம்புலன்வென்றுபோற்றிய
ஆயிற்றீர்வரிதாகியமாதவம்
மாயிற்றீர்வருங்கேடருங்கற்பினாள்
தீயிற்றூயவளைத்துயர்செய்ததால். (௯௩)

இன்றுவீந்ததுநாளைச்சிறிதிறை
நின்றுவீந்ததலானிறைநிற்குமோ
ஒன்றுவீந்ததுநல்லுணரும்பரை
வென்றுவீங்கியவீக்கமீருத்ததால். (௯௪)

தீமைநன்மையைத்தீர்த்தவொல்லாதெனும்
வாய்மைநீக்கினைமாதவத்தால்வந்த
தூய்மைதூயவடன்மையிற்றோன்றிய
நோய்மையாற்றுடைக்கின்றனைநோக்கலாய் (௯௫)

திறந்திறம்பிய * காமச்செருக்கினால்
மறந்துதத்தமதியின்மயங்கினார்
இறந்திறந்திழிந்தேறுவதேயலால்
அறந்திறம்பினராருளராயினார். (௯௬)

நாமத்தாழ்கடன்ஞாலத்தவிந்தவர்
ஈமத்தான்மறைந்தாரிளமாதர்பால்
காமத்தாலிறந்தார்களிவண்டுறை
தாமத்தாரினரெண்ணினுஞ்சால்வரோ. (௯௭)

பொருளுங்காமமுமென்றிவைபோக்கிவே
றிருளுண்டாமெனவெண்ணலரீதலும்
அருளுங்காதலிற்றீர்தலுமல்லதோர்
தெருளுண்டாமெனவெண்ணலர்சீரியோர். (௯௮)

இச்சைத்தன்மையினிற்பிற † ரில்லினை
புச்சினாளுநகையுறநாணிலன்
பச்சைமேனிபுலர்ந்துபழிபடூஉம்
கொச்சையாண்மையுஞ்சீர்மையிற்கூடுமோ. (௯௯)

ஓதநீருலகாண்டவருன்றனைப்
போதநீதியராருளர்போயினார்
வேதநீதிவிதிவழிச்செல்வரும்
காதனீயறத்தெல்லைகடத்தியோ. (௧00)

வெறுப்புண்டாயவொருத்தியைவேண்டினால்
மறப்புண்டாயபின்வாழ்கின்றவாழ்வினின்

* காமச்செருக்கு காமமயக்கம். † இல்லினை – மனைவியை.

உறுப்புண்டாய்நடுவோங்கியநாசியை
அறுப்புண்டாலதழகெனலாகுமே. (௧௦௧)

பாரைஞ்ஞூறுவபற்பலபொற்புயம்
ஈரைஞ்ஞூறுதலையுளவென்னினும்
ஊரைஞ்ஞூறுங்கடுங்கனலுட்பொதி
சீரைஞ்ஞூறவைசேமஞ்செலுத்துமோ. (௧௦௨)

புரம்பிழைப்பருந்தீப்புகப்பொங்கியோன்
நரம்பிழைத்தனபாடலினல்கிய
வரம்பிழைக்குமறைபிழையாதவன்
சரம்பிழைக்குமென்றெண்ணுதல்சாலுமோ. (௧௦௩)

ஈறினாணுகவெஞ்சலினற்றிரு
நூறிநொய்தினையாகிநுழைதியோ
வேறுமின்னாநகையாய்வினைத்தொழில்
தேறினார்பலர்காமிக்குஞ்செல்வியோய். (௧௦௪)

பிறந்துளார்பிறவாதபெரும்பதம்
சிறந்துளார்மற்றுந்தேவர்க்குந்தேவராய்
இறந்துளார்பிறர்யாருமிராமனை
மறந்துளாருளராகிலர்வாய்மையால். (௧௦௫)

ஆதலாற்றனரும்பெறற்செல்வமும்
ஓதுபல்கிளையும்முயிரும்பெறச்
சீதையைத்தருகென்றெனச்செப்பினான்
சோதியான்மகனிற்கெனச்சொல்லினான். (௧௦௬)

என்றலும்பிலைசொல்லியதெற்கொரு
குன்றின்வாழுங்குரங்குகொலாமிது
நன்றுநன்றெனமாநகைசெய்தனன்
வென்றியென்றொன்றுதானன்றிவேறிலான். (௧௦௭)

குரக்குவார்த்தையுமானுடர்கொற்றமும்
இருக்கநிற்கநீயென்கொலடாவிரும்
புரத்தினுட்டருந்தூதுபுகுந்தபின்
அரக்கரைக்கொன்றதஃதுரையாயென்றான். (௧௦௮)

காட்டுவாரின்மையாற்கடிகாவினை
வாட்டினேனென்னைக்கொல்லவந்தார்களை
வீட்டினேன்பின்னுமென்மையினாலுன்றன்
மாட்டுவந்ததுகாணுமதியினால. (௧௦௯)

என்னுமாத்திரத்தீண்டெரிநீண்டுக
மின்னும்வாளெயிற்றிலன்சினம்வீங்கினான்

கொன்மினென்றனன்கொல்லியர்சேர்தலும்
நின்மினென்றனன் * வீடணனீதியான். (கசo)

ஆண்டெழுந்துநின்றண்ணலரக்கனை
நீண்டகையன்வணங்கினனீதியான்
மூண்டகோபமுறையமைதென்றுமென
வேண்டுமெய்யுரையைவிளம்பினான். (கசக)

வேறு.

அந்தணனுலகமூன்றுமாதியினறத்தினாற்றல்
தந்தவனன்புக்கான்றதவநெறியுணர்ந்துதக்கோய்
இந்திரன்கருமமாற்றுமிறைவனீயியம்புதூது
வந்தனெனென்றபின்புங்கொல்லியோமறைகள்வல்லோய். (கசஉ)

பூதலப்பரப்பினண்டப்பொகுட்டினுட்புறத்துட்பொய்தீர்
வேதமுற்றியங்குவைப்பின்வேறுவேறிடத்துவேந்தர்
மாதரைக்கொலைசெய்தார்களுலரெனவரினும்வந்த
தூதரைக்கொன்றுளார்கள்யாவரேதொல்லைநல்லோர். (கசங)

பகைப்புலனாறுகியுய்த்தார்பகர்ந்ததுபகர்ந்துபற்றார்
மிகைப்புலனடக்கிமெய்ம்மைவிளம்புதல்விரதம்பூண்ட
தகைப்புலக்கருமத்தோரைக்கோறலிற்றக்கார்யார்க்கும்
நகைப்புலன்பிறிதுண்டாமேநங்குலநவையுண்டாமே. (கசச)

முத்தலையெஃகன்மற்றைமூவரந்தகன்முனிவன்முன்னா
அத்தலைநம்மைநோனாவமரர்க்குநகையிற்றாமால்
எத்தலையுலகங்காக்குமவேந்தநீவென்றோரேவ
இத்தலையெய்தினானைக்கொல்லுதலூக்கமின்னும். (கசரு)

இளையவடன்னைக்கொல்லாதருசெவிமூக்கொடுத்து
விளைவுரையென்றுவிட்டார்வீரராய்மெய்ம்மையோர்வார்
களைதியேலாவிநம்பாலிவன்வந்துகண்ணிற்கண்ட
உளவுரையாமற்செய்தியாதியென்றமையச்சொன்னான். (கசசு)

வேறு.

நல்லதுரைத்தாய்நம்பியிவனவைசெய்தானேயானாலும்
கொல்லல்பழுதேபோயிடைநீகூறிக்கொணர்திகடிதென்னாத்
தொல்லைவாலமூலமறச்சுட்டுநகரைச்சூழ்போக்கி
எல்லைக்கடக்கவிடுமின்களென்றானின்றாரிரைத்தெழுந்தார். (கசஎ)

ஆயகாலத்தயன்படையோடிருப்பவாகாதனவிதெல்
தூயபாசமெனப்பலவுங்கொணர்ந்துபிணிமின்றோவென்று

* விபீஷணன் (சித்தியத்திற்கஞ்சி) பலவிதமாகப் பயப்படுவன்.

மேயதெய்வப்படைக்கலத்தைவிட்டானமரர்போர்வென்றான்
ஏயெனுமுன்னிடைபுக்குத்தொடைவன்கயிற்றாற்பிணித்தீர்த்தார். ()

நாட்டினகரினவுள்ளகயிறுகவிழுந்தகைமையவே
வீட்டினாசனெடும்பாசமற்றதேரும்விசிதுறந்த
மாட்டெம்புரவியாயமெலாமருவிவாங்குந்தொடையழிந்த
பூட்டெம்வல்லின்முட்கோலெம்புரசையிழந்தபோர்யானை. (௧௧௯)

மண்ணிற்கண்டவானவரைவலியிற்கவர்ந்தவரம்பெற்ற
எண்ணற்கரியவேனையரையிகலிற்பறித்ததமக்கியைந்த
பெண்ணிற்கிசையுமங்கலத்திற்பிணித்தகயிறேயிடைபிழைத்த
கண்ணிற்கண்டவன்பாசமெல்லாமிட்டுக்கட்டினா. (௧௨௦)

கடவுட்படையைக்கடந்தறத்தினானைகடந்தேனாகாமே
விடுவித்தளித்தார் * தெவ்வரேயென்றேனன்றேவிவர்வென்று
சுடுவிக்கின்றதிவ்வூரைச்சுடுகென்றுரைத்ததுணிவென்று
நடுவுற்றமையவுறநோக்கிமுற்றுமுவந்தானவையற்றான். (௧௨௧)

நொய்யபாசப்புறம்பிணிப்பநோன்மையிலபோலுடனுணங்கி
வெய்யவரக்கர்புறத்தலைப்பவீழுமுணர்ந்தேதவிரவில்லா
அய்யன் † விஞ்ஞைதனையறிந்துமறியாதான்போலவிஞ்ஞையெனு
பொய்யைமெய்போனடிக்கின்றமேயாகிப்போன்றாபோகின்றான். ()

வேந்தன்கோயில்வாயிலொடுவிரைவிற்கடந்துவெள்ளிடையின்
போந்துபுறநின்றிரைக்கின்றபொறைதீர்மறவர்புரஞ்சுற்ற
ஏந்துநெடுவால்கிழிசுற்றிமுற்றுந்தோய்த்தாரிழுதெண்ணெய்
காந்துகடுந்தீக்கொளுத்தினாரார்த்தாரண்டங்கடிகலங்க. (௧௨௩)

ஒக்கவொக்கவுடன்விசித்தவுலப்பிலாதவுரப்பாசம்
பக்கம்பக்கமிருகூறாய்நூறாயிரவர்பற்றினார்
புக்கபடைஞர்புடைகாப்போர் ‡ புணரிக்கணக்கர்புறஞ்செல்வோர்
திக்கினளவாலயனின்றுகாண்போர்க்கெல்லைதெரிவரிதால். (௧௨௪)

அந்தகருங்கடிகாவுமழிவித்தக்கன்முதலாயோர்
சிந்தநூறிச்சீதையொடுபேசிமனிதர்திறஞ்செப்ப
வந்தகுரங்கிற்குற்றதனைவம்மின்காணவம்மென்று
தந்தந்தெருவும்வாயிறொறும்யாருமறியச்சாற்றினார். (௧௨௫)

ஆர்த்தாரண்டத்தப்புறத்துமறிவிப்பார்போலங்கோடிங்
கீர்த்தார்முரசமெற்றினாரிடித்தார்தெழித்தாரெம்மருங்கும்
பார்த்தார்தாரோடிச்சானகிக்குப்பகர்ந்தாரவளுமுயிர்பதைத்தாள்
வேர்த்தாளுலந்தாள்விம்மினாள்விழுந்தாளழுதாள்வெய்துயிர்த்தாள்.

---

* தெவ்வர்-பகைவர். † விஞ்ஞை-ஞானம். ‡ புணரி-சமுத்திரம்-பத்துலக்ஷங்கோடி.

தாயேயனையகருணையான் * றுணையேயேதந்தகைவில்லா
நாயேயனையவல்லரக்கர்நலியக்கண்டாளல்காயோ
நீயேயுலகுக்கொருசான்றுநிற்கேதெரியுங்கற்பதனில்
தூயேனென்னிற்றொழுகின்றேனெரியேயவனைச்சுடவென்றாள். ()

வேறு.

வெளுத்தமென்னகையவள்விளம்புமேல்வையின்
ஒளித்தவெங்கனவலனுள்ளமுட்கினான்
தளிர்த்தனமயிர்புறஞ்சிலிர்ப்பத்தண்மையால்
குளிர்த்தவக்குரிசில்வாலென்புகூறவே. (கஉஅ)

வேறு.

மற்றினிப்பலவென்வேலைவடவனல்புவியளாய
† கற்றையங்கனவிமற்றைக் ‡ காயத்திமுனிவர்காக்கும்
முற்றுமு § மும்மைச்செந்தீமுப்புரமுருங்கச்சுட்ட
கொற்றவனெற்றிக்கண்ணின்வன்னியுங்குளிர்ந்தவன்றே. (கஉகூ)

அண்டமுங்கடந்தானங்கையனவியுங்குளிர்ந்ததங்கிக்
குண்டமுங்குளிர்ந்தமேகத்துருமெலாங்குளிர்ந்தகொற்றச்
சண்டவெங்கதிரவாகித்தழங்கிருள்விழுங்குந்தாவில்
மண்டலங்குளிர்ந்தமீளாநரகமுங்குளிர்ந்தமாதோ. (கங0)

வெற்பினாலியன்றதன்னமேனியைவிழுங்கிவெந்தீ
நிற்பினுஞ்சுடாதுநின்றநீர்மையைநினைவினோக்கி
அற்பினாலமுதசிந்தையநுமனுஞ்சனகன்பாவை
கற்பினாலியன்றதென்பான்பெரியதோர்களிப்பனானான். (கஙக)

அற்றையவ்விரவிற்றான்றனறிவினான்முழுதுமுன்னப்
பெற்றிலெனெனினுமாண்டொன்றுள்ளதுபிழையுறாமே
மற்றாறுபொறிமுன்செல்லமறைந்துசெல்லறிவுமானக்
கற்றிலாவரக்கர்தாமேகாட்டிவிறநெறியக்கண்டான். (கஙஉ)

முழுவதுந்தெரியநோக்கிமுற்றூர்முடிவிற்சென்றான்
வழுவுறாகாலமீதென்றெண்ணினன்வலிதிற்பற்றித்
தழுவினனிரண்டுநூறாயிரம்புயத்தடக்கைத்தாம்போ
டெழுவெனநாலவிண்மேலெழுந்தனன்விழுந்தவெல்லாம். (கஙங)

இற்றவாளரக்கர்நூறாயிரவருமிழந்ததோளார்
முற்றினாருலந்தாரையன்மொய்ம்பினோடுலைமூழ்கச்

---

* அக்கினிக்குச்சகாயன்வாயு வாகலாலே வாயுபுத்திரனுக்கு நீ துணையாகவேண்டுமென்று துணையே யென்றாள்; † கற்றையங்கனவி-பௌமமென்னும் சுவாலாக்கினி.
‡ காயத்தி - ஔதாரியமென்னு மக்கினி, § மும்மைச்செந்தீ - காருகபத்தியம் ஆகவநீயம் தெக்ஷிணாக்கினி.

சுற்றியகயிற்றினோடுந் தோன்றுவானரவின்சுற்றம்
பற்றியகலுழனென்னப்பொலிந்தனன்விசும்பின்பாலான். (௧௫௪)

துன்னலர்புரத்தைமுற்றுஞ்சுடுதொழிற்றொல்லையோனும்
புன்னினபொருளுநாணப்பாதகரிருக்கைபற்ற
மன்னனைவாழ்த்திப்பின்னை வயங்கெரிமடுப்பனென்றுப்
பொன்னகர்மீதேதன்போர்வாலினைப்போகவிட்டான். (௧௫௫)

தன்னிறைக்குறுகண்வெய்யோர்தாமியற்றலுங்கேட்டின்னே
அன்னவர்க்கிறுதியாகவணிநகரழிப்பலென்றுச்
செந்நிறச்சிகையவெம்போர்மழுப்பின்னர்ச்சேறலொக்கும்
அன்னிறத்தெண்ணறாதனனல்கெழுகொற்றநீள்வால். (௧௫௬)

அப்புறம்வேலைகாறுமலங்குபேரிலங்கைதன்னை
எப்புறத்தளவுந்தீயவொருகணத்தெரித்தகோட்பால்
துப்புறழ்மேனியண்ணன்மேருவிற்குழையத்தோளால்
முப்புரத்தெய்தகோலேயொத்ததமூரிப்போர்வால். (௧௫௭)

உகக்கடையுலகம்யாவுமுணங்குறவொருதன்றட்டம்
சிகைக்கொழுங்கனலைவீசுஞ்செயன்முனம்பயில்வான்போல
மிகைத்தெழுதீயராயோர்விரிநகர்வீயப்போர்வால்
தகைத்தலினேன்மைசாலுந்தனிவீரனசேணினுய்த்தான். (௧௫௮)

வெள்ளியிற்பொன்னினாலுமிலங்குபொன்மணியின்விஞ்சை
தெள்ளியகடவுட்டச்சன்கைமுயன்றரிதிற்செய்த
தள்ளருமனைகடோறுமுறைமுறைதாவிச்சென்றான்
ஒள்ளரியோடுங்குன்றத்தூழிவீழுருமொடப்பான். (௧௫௯)

நீணிறநிருதர்நீண்டுநெய்பொழிவேள்விநீங்கிப்
பால்வருபசியனென்பான்மாருதிவாலைப்பற்றி
ஆலமுண்டவனன்றாட்டவுலகெலாமழிவினுண்ணும்
காலமேயென்னமன்னோசனவியுங்கடிதினுண்டான். (௧௬௦)

௧௫-வது-பிணிவீட்டுப்படலம்-முற்றிற்று.

(ஆக திருவிருத்தம்-௧௧௮௭.)

௧௬-வது. இலங்கையெரியூட்டுப்படலம்.

கொடியைப்பற்றிவிதானங்கொளுத்தித்தான்
நெடியதூணைத்தழுவிநெடுஞ்சுவர்
முடியச்சுற்றிமுழுதுமுருக்கிற்றால்
கடியமாமனைதோறுங்கடுங்கனல். (௧)

வாசலிட்டவெரிமணிமாளிகை
மூசமுட்டிமூழுதுமுருக்கலால்
* ஊசலிட்டனவோடியுலைந்துளைப்
பூசலிட்டவிரியற்புரமெலாம். (உ)

மணியினுயவயங்கொளிமாளிகை
பிணியிற்செஞ்சுடர்க்கற்றைபெருக்கலால்
திணிகொடியுற்றதுற்றிலதேர்கிலார்
அணிவளைக்கைநல்லாரலமந்துளார். (௩)

வானகத்தைநெடும்புகைமாய்த்தலால்
போனதிக்கறியாதபுலம்பினார்
தேனகத்தமலர்பலசிந்திய
கானகத்துமயிலன்னகாட்சியார். (௪)

கூய்க்கொழுங்கனல்குஞ்சியிற்கூந்தலில்
மீச்சொரிந்தனமாதரும்வீரரும்
ஏய்த்ததன்மையினுமெரியின்மையும்
தீக்கொளுந்தினவுந்தெரிகின்றிலர். (௫)

இல்லிற்றங்குவயங்கெரியாவையும்
சொல்லிற்றீர்ந்தனபோல்வனதொல்லுருப்
புல்லிக்கொண்டனமாயைப்புணர்ப்பறக்
கல்வித்தம்மியல்பெய்துங்கருத்தர்போல். (௬)

ஆயதங்கொர் † குறளுருவாயடித்
தாயளந்துலகங்கடரக்கொள்வான்
மீயெழுந்தகரியவன்மேனியில்
போயெழுந்துபரந்ததுவெம்புகை. (௭)

நீலநின்றநிறத்தனகீழ்நிலை
மாலின்வெஞ்சினயானையைமானுவ
மேல்விழுந்தெரிமுற்றும்விழுங்கலால்
தோலுரிந்துகழன்றனதோலெலாம். (௮)

மீதிமங்கலர்தாலன்னவெம்புகை
சோதிமங்கலத்தீயொடுசுற்றலால்
மேதிமங்குலின்வீழ்புனவீழ்மட
வோதிமங்களின்மாதரொதுங்கினார். (௯)

பொடித்தெழுந்துபெருப்பொறிபோவன
இடிக்குலங்களின்வீழ்தலுமெங்கணும்

---

*ஊசலிட்டன மெலாம்-நெருப்புக்குப்பயந்து வெளியே போகிறதும் பின்னே முந்தியவைகளை நினைந்து திரும்பவருகிறது மாயின என்க. † குறளுரு—வாமனவடிவு.

வெடித்தவேலைவெதுப்பிடமீன்குலம்
துடித்துவெந்துபுலர்ந்துயிர்சோர்ந்தவால். (௧௦)

பருகுதீமடுத்துள்ளுறப்பற்றலால்
அருகுநீடியவாடகத்தாரைகள்
உருகிவேலையினூடுபுக்குற்றன
திருகுபொன்னெடுந்தண்டிற்றிரண்டவால். (௧௧)

உரையின்முந்துலகுண்ணுமெரியதால்
வரைநிவந்தனபன்மணிமாளிகை
நிரையினீணெடுஞ்சோலையினிற்குமோ
தரையும்வெந்ததுபொன்னெனுந்தன்மையால். (௧௨)

கல்லினும்வலிதாம்புகைக்கற்றையால்
எல்லிபெற்றதிமையவர்நாடியல்
வல்லிகோலிநிவந்தனமாமணிச்
சில்லியோடுந்திரண்டனதேரெலாம். (௧௩)

பேயமன்றினினின்றுபிறங்கெரி
மாயருண்டநறவுமடுத்ததால்
தூயவொன்றவர்வைகிடந்துன்னினால்
தீயான்றியுந்தீமையுஞ்செய்வ * ரால். (௧௪)

தழுவிலங்கைதழங்கெரிதாய்ச்செலீஇ
வழுவில்வேலையுலையின்மறுகின
எழுமெழுஞ்சுடர்க்கற்றைசென்றெய்தலால்
குழுவுதண்புனன்மேகங்கொதித்தவே. (௧௫)

ஊனிலோடுமெரியொடுங்குவார்
கானிலோடுநெடும்புனல் † காணொ
வானிலோடுமகளிர்மயங்கினார்
வேனிலோடருந்தேரிடைவீழ்ந்தனர். (௧௬)

தேனவாம்பொழிறீப்படச்சிந்திய
சோனைமாமலர்த்தும்பிதொடர்ந்தயல்
போனதிச்சுடர்புண்டரிகத்தடங்
கானமாமெனவீழ்ந்துகரிந்தவே. (௧௭)

நற்கடனிதுநம்முயிர்நாயகன்
மற்கடந்தெறமாண்டனன்வாழ்விலம்
இற்கடந்தினியேகலம்யாமென
விற்கடந்தறுதற்சிலர்வீடினார் (௧௮)

* ஆல்-இது ஆச்சரியம், † காண்-முன்னிலையசை.

பூக்கரிந்துமுறிபொறியாயடை
நாக்கரிந்துசினைநறுஞ்சாம்பராய்
மீக்கரிந்துநெடும்பணைவேருறக்
காக்கரிந்துகருங்கரியானவே. (௧௯)

கார்முழுக்கவெழுங்கனற்கற்றைபோய்
ஊர்முழுக்கவெதுப்பவுருகின
சோரொழுக்கமறாமையிற்றுன்றுபொன்
வேர்விடுப்பதுபோன்றனவிண்ணெலாம். (௨௦)

நெருக்கமீமிசையொக்கநெருப்பெழச்
செருக்குமெல்லகதிர்த்திங்களோச்சென்றுற
உருக்குமெய்யினமுதமுகுத்தலால்
அரக்கருஞ்சிலராவிபெற்றாரோ. (௨௧)

பருதிபற்றிநிமிர்ந்தெழுபைங்கனல்
கருகிமுற்றுமெரிந்தெழுகார்மழை
அருகுசுற்றுமிருந்ததையதாயதின்
உருகுபொற்றிரளொத்தனனொண்கதிர். (௨௨)

தளைகொளுத்தியதாவெரிதாமணி
முளைகொளுத்திமுகத்திடைமொய்த்தபேர்
உளைகொளுத்தவுலந்துலைவுற்றன
வளைகுளப்பின்மணிநிறவாசியே. (௨௩)

எழுந்துபொற்றலத்தேரலினீள்புகைக்
கொழுந்துசுற்றவுயிர்ப்பிலர்கோளுமுற்
றழுந்துபட்டுளரொத்தயர்ந்தாரழல்
விழுந்துமுற்றினர்கூற்றைவிழுங்குவார். (௨௪)

* கோசிகத்துகிலுற்றகொழுங்கனல்
தூசினுத்தரிகத்தொடுசுற்றுறு
வாசமைக்குழல்பற்றமயங்கினோர்
பாசிழைப்பரவைப்படரல்குலார். (௨௫)

வேறு.

நிலவிளங்கியதுகிலிணைநெருப்புணநிருதர்
இலவினுஞ்சிலமுத்துளவெனுநகையனையார்
புலவியின்கரைகண்டவரமுதகப்புணரும்
கலவியின்கரைகண்டிலர்மண்டினர்கடன்மேல். (௨௬)

பஞ்சரத்தொடுபசுநிறக்கிளிவெந்துபதைப்ப
அஞ்சனக்கணினருவிநீர்முலைமுன்றினலைப்பக்

* கோசிகத்துகில்-பட்டுச்சீலை.

குஞ்சரத்தனகொழுநரைத்தழுவுறுங்கொதிப்பால்
மஞ்சுறப்புகுமின்னெனப்புகையிடைமறைந்தார். (௨௭)

வரையினைப்புரைமாடங்களெரிபுகமகளிர்
புரையில்பொற்கலன்விசும்பிடைவில்லிடப்போவார்
கரையினுட்புகைப்படலையிற்கரிந்தனர்கலங்கித்
திரையினுட்பொலிசித்திரப்பாவையின்செயலார். (௨௮)

அகருமஞ்சறுஞ்சாந்தமுமுதலியவநேகம்
புகரினன்மரத்துறுவெறியுலகெலாம்போர்ப்பப்
பகருமூழியிற்காலவெங்கடுங்கனல்பருகும்
மகரவேலையின்வெந்தனநந்தனவனங்கள். (௨௯)

மினைப்பரந்தெழுதொழுஞ்சுடருலகெலாம்விழுங்க
நினைப்பரும்பெருந்திசையுறவிரிகின்றநிலையால்
சினைப்பரந்தெரிசேர்ந்திலநின்றவுஞ்சிலவும்
கனற்பரந்தவுந்தெரிகிலகற்பகக்கானம். (௩௦)

மூளும்வெம்புகைவிழுங்கலிற்சுற்றுறமுழுநீர்
மாளும்வண்ணமாமலைநெடுந்தலைதொறுமயங்கிப்
பூளைவீயன்னபோவனபுணரியிற்புனன்மீன்
மீளயாவையுந்தெரிந்திலமுகிற்கணமிசைய. (௩௧)

மிக்கவெம்புகைவிழுங்கலின்வெள்ளியங்கிரியும்
ஒக்கவெற்பினோடன்னமுங்காக்கையினுருவ
பக்கவேலையின்படியதுபாற்கடன்முடிவில்
இக்கயங்களுங்கயங்களும்வேற்றுமைதெரியா. (௩௨)

கரிந்துசிந்திடக்கடுங்கனனொடர்ந்துடல்கதுவ
உரிந்தமெய்யினரோடினர்நீரிடையொளிப்பார்
விரிந்தகூந்தலுங்குஞ்சியுமிடைதலிற்றொழும்
எரிந்துவேகின்றவொத்தனவெறிதிரைப்பரவை. (௩௩)

மருங்கின்மேலொருமகவுகொண்டொரு * தனிமகவை
அருங்கையாற்பற்றிமற்றொருமகவுபின்னரற்ற
நெருங்கினோரொடுநெறிகுழல்சுறுக்கொளநீக்கிக்
கருங்கடற்றலைவீழ்ந்தனரரக்கியர்கதறி. (௩௪)

வில்லும்வேலும்வெங்குந்தமுமுதலியவிறகாய்
எல்லுடைச்சுடரெனப்புகரெஃகெலாமுருகித்
தொல்லைநன்னிலைதொடர்ந்துபேருணர்வன்னதொழிலால்
சல்லியுண்டையிற்றிரண்டனபடைக்கலச்சாலை. (௩௫)

---

* தனி-(கைப்பிள்ளையை) நோக்காத.

செய்தொடர்க்கழல்வல்லியுர்புரவையுஞ்சிந்தி
நொய்தினிட்டவன்றறிபறித்துடலெரிநுழைய
மொய்தடச்செவிநிறுத்திவான்முதுகினின்முறுக்கிக்
கய்யெடுத்தழைத்தோடினவோடைவெங்களிமா. (௩௬)

வெருளும்வெம்புகைப்படலையின்மேற்செலவெருவி
இருளும்வெங்கடல்விழுந்தனவெழுந்திலபறவை
மருளின்மீன்கணம்விழுங்கிடவுலந்தனமனத்தோர்
அருளில்வஞ்சரைத்தஞ்சமென்றடைந்தவரனைய. (௩௭)

நீரைவற்றிடப்பருகிமாநெடுநிலந்தடவித்
தாருவைச்சுட்டுமலைகளைத்தழற்செய்துதனிமா
மேருவைப்பற்றியெரிகின்றகாலவெங்கனல்போல
ஊரைமுற்றுவித்திராவணன்மனைபுக்கதுயர்தீ. (௩௮)

வானமாதருமற்றுளமகளிருமறுகிப்
* போனபோனதிக்கறிகிலரனைவரும்போனார்
ஏனையின்றவரெவகணுந்திரிந்தனரிலங்கைக்
கோனவானவர்பதிகொண்டநாளெனக்குலைந்தார். (௩௯)

நாவியும் † நறுங்கலவையுங்கற்பகநக்கப்
பூவுமாரமுமகிலுமென்றினையனபுகையத்
தேவுதேன்மழைசொறிபெருங்குலமெனத்திசையிற்
பாவைமார்நறுங்குழல்களும்பரிமளங்கமழ்ந்த. (௪0)

சூழும்வெஞ்சுடர்தொடர்ந்திடயாவருந்தொடரா
வாழிவெஞ்சினத்தாங்கொடுமீதிராவணன்மனையின்
ஊழிவெங்கனலுண்டிடவுலகமென்றுயர்ந்த
எழும்வெந்தனவெரிந்தனநெடுநிலையேழும். (௪௧)

பொன்றிருத்தியதாமதாவிராவணன்புரைதீர்
குன்றமொத்துயர்தடநெடுமாநிலைக்கோயில்
நின்றதுற்றெரிபருகிடநெரிவுறவுருகித்
தென்றிசைகருமோர்மேருவுண்டாமெனத்தெரிந்த (௪௨)

அனையகாலையனரக்கனுமரிவையர்குழுவும்
புனைமணிப்பொலிபுட்பகவிமானத்துபபோனார்
நினையுமாதகையாவருநீங்கினர்நினையும்
வினையிலாமையில்வெந்தசவ்விலங்கன்மேலிலங்கை. (௪௩)

ஆழித்தேரவனரக்கரையழலெழநோக்கி
எழுக்கேழெனவடுக்கியவுலகங்களெரியும்

---

* போனபோன திக்கறிகிலர்—போனபோன ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு திசைகளிலேபோய்ப் புகைக்கம்மலாலே இன்னதிசை வந்தோமென்றறிந்திலர். † நறுங்குழல்—இயற்கைமணமுள்ள கூந்தல்.

ஊழிக்காலம்வந்துற்றதோபிறிதுவேறுண்டோ
யாழித்தீச்சுடவந்ததென்னகொலெனப்பகர்ந்தான். (௪௪)

காங்கன்கூப்பினர்தங்கிளைதிருவொடுங்காணார்
இரங்குகின்றவல்லரக்கர்நியம்பினரிறையோய்
தாங்கவேலையினெடியதன்வாலிட்டசழலால்
குரங்குசுட்டதீதென்றலுமிராவணன்கொதித்தான் (௪௫)

என்றகொல்குரங்கன்னதிவ்வலியுளதிலங்கை
நின்றவெந்துமாநீறெழுகின்றதுநெருப்புத்
தின்றதேக்கிடுகின்றதுதேவர்கள்சிரிப்பார்
நன்றுநன்றுபோர்வலியெனவிராவணனக்கான். (௪௬)

வேறு.

உண்டநெருப்பைக்
கண்டனர்பற்றிக்
கொண்டணைகென்றான்
அண்டரைவென்றான். (௪௭)

உற்றகலாழுன
கறறகுரங்கைப்
பற்றுமினென்றான்
முற்றமுனிந்தான். (௪௮)

சாரயனின்றார்
வீரர்விரைந்தார்
நேருதுமென்றார்
தேரினர்சென்றார். (௪௯)

எல்லையிகந்தார்
வில்லர்வெகுண்டார்
பல்லதிகாரத்
தொல்லர்தொடர்ந்தார். (௫௦)

வேறு.

நீர்கெழுவேலைநிமிர்ந்தார்
தார்கெழுதானைசமைந்தார்
போர்கெழுமாலைபுனைந்தார்
ஓரெழுவீரருயர்ந்தார். (௫௧)

விண்ணினைவேலைவிளிம்பார்
மண்ணினையோடிவளைந்தார்
அண்ணலைநாடியணைந்தார்
கண்ணினின்வேறயலகண்டார். (௫௨)

பற்றுதிர்பற்றுதிரென்பார்
எற்றுதிரெற்றுதிரென்பார்
முற்றினர்முற்றுமுனிந்தார்
கற்றுணர்மாருதிகண்டான். (ருங)

எல்கொடுவெஞ்சரெதிர்ந்தார்
கால்கொடுகைகொடுகார்போல்
வேல்கொடுகோலினர்வெந்தீ
வால்கொடுதானும்வளைந்தான். (ருச)

பாதவமொன்றுபகுத்தான்
மாதிரம்வாலின்வளைத்தான்
மோதினன்மோதமுனிந்தார்
எதியுநாளுமிழந்தார். (ருரு)

நூறிடமாருதிநொந்தார்
ஊறிடவூனிடுபுண்ணீர்
சேறிடவூரடுசெந்தீ
ஆறிடவோடினதாறாய். (ருசு)

தோற்றினர்துஞ்சினரல்லார்
எற்றிகல்வீரரெதிர்ந்தார்
காற்றின்மகன்கலைகற்றான்
கூற்றினுமும்மடிகொன்றான். (ருஎ)

மஞ்சுறழ்மேனியர்வன்றாள்
மொய்ம்பினவீரர்முடிந்தார்
ஐம்பதனாயிரரல்லார்
பைம்புனல்வேலைபடிந்தார். (ருஅ)

தோய்ச்சனன்வாலதுதோயாக்
காய்ச்சினவேலைகலந்தார்
பேய்ச்சிலர்பொன்றினர்போனார்
எச்செனமைந்தரெதிர்ந்தார். (ருகூ)

சுற்றினதேரினர்தோலா
விற்றொழில்வீரவிளைத்தார்
எற்றினன்மாருதியெற்ற
உற்றெழுவோருமுலந்தார். (கூ0)

* விட்டியர்விஞ்சையர்வெந்தீ
வட்டமுலைதருவைகும்
புட்டிரள்சோலைபுறத்தும்
சுட்டிலதென்பதுசொன்னார். (கூக)

---

* விண்டுவிட்டு எனவலித்தல்.

வந்தவர்சொல்லமகிழ்ந்தான்
வெந்திறல்வீரன்வியந்தான்
உய்ந்தனெனென்னவுயர்ந்தான்
பைந்தொடிதாளகன்பணிந்தான். (சஉ)

பார்த்தனள்சானகிபாரா
வேர்த்தெரிமேனிகுளிர்ந்தாள்
வார்த்தையென்வந்தனையென்னாப்
போர்த்தொழின்மாருதிபோனான். (சங)

தெள்ளியமாருதிசென்றான்
கள்ளவரக்கர்கள்கண்டால்
எள்ளுவர்பற்றுவரென்று
ஒள்ளொளியோனுமொளித்தான். (சச)

கச-வது-இலங்கையெரியூட்டுப்படலம்-முற்றிற்று.

(ஆக திருவிருத்தம்-கஉருக.)

கரு-வது. திருவடிதொழுதபடலம்.

நீங்குவென்விலைவினென்னுநினைவினன்மருங்குநின்ற
தாங்கொருகுடுமிக்குன்றையருக்கனினணைந்தவையன்
வீங்கினனுலகையெல்லாம்விழுங்கினனென்னவீரன்
பூங்கழறொழுதுவாழ்த்திவிசும்பிடைக்கடிதுபோனான். (க)

* மைந்நாகமென்னநின்றகுன்றையுமாபினெய்திக்
† கைந்நாகமனையோனுற்றதுணர்த்தினன்கணத்தின்காலைப்
‡ பைந்நாகநிற்கும்வீரர்தன்னொடுவரவுபார்க்கும்
$ கொய்ந்நாகநறுந்தேன்சிந்துங்குன்றிடைக்குதியுங்கொண்டான் (உ)

போய்வருங்கருமமுற்றிற்றென்பதோர்பொம்மல்பொங்க
வாய்வெரீஇநின்றவென்றிவானரவீரர்மன்றே
பாய்வருநீளத்தாங்கணிருந்தனபறவைப்பார்ப்புத்
தாய்வரக்கண்டதன்னவுவகையிற்றளிர்த்தாரம்மா. (ங)

அழுதனர்சிலவர்முன்னின்றார்த்தனர்சிலவராண்மித்
தொழுதனர்சிலவராடித்துள்ளினர்சிலவர்நீள
முழுதுறவிழுங்குவார்போன்மொய்த்தனர்சிலவர்சுற்றும்
தழுவினர்சிலவர்கொண்டுசுமந்தனர்சிலவர்தாங்கி. (ச)

* மைந்நாகம்—மைந்நாகமலை. † கைந்நாகம்-யானை, ‡ பைந்நாகம் - படமுள்ள பாம்பு. $; கொய்ந்நாகம்-(மலர்) பறிக்கும் புன்னைமரம்.

தேனொடுகிழங்குகாயுநறியனவரிதிற்றேடி
மேன்முறைவைத்தேமன்னனுகர்ந்தனைமெலிவுதீர்தி
மானவாண்முகமேநங்கட்குரைத்ததுமாற்றமென்று
தானுயர்சாகமெல்லாமுறைமுறைசிலவர்தந்தார். (ரு)

தாள்களின்மார்பிற்றோளிற்றலைகளிற்றடைக்கைதம்மின்
வாள்களின்வேலிற்கோலின்மழையினின்வகுத்தபுண்கள்
நாள்கண்மேலுலகிற்சென்றவெண்ணனநம்பிகண்ணை
ஊழ்கொளநோக்கிநோக்கியுருகவுளைந்துயிர்த்தார். (சு)

வாலிகாதலனைமுந்தைவணங்கினனெண்ணின்வேந்தைக்
காலுறப்பணிந்துபின்னைக்கடன்முறைகடவோர்க்கெல்லாம்
யேலுறவியற்றியாங்கணிருக்கிவணிருந்தோர்க்கெல்லாம்
ஞாலநாயகன்றன்றேவிசொல்லினனனைமையெனறான். (எ)

என்றலுங்கரங்கள்கூப்பியெழுந்தனரிறைஞ்சித்தாழா
நின்றனருவகைபொங்கவிம்மலானிமிர்ந்தநெஞ்சர்
சென்றதுமுதலாவந்ததிறுதியாச்செப்பற்பாலை
வன்றிறலுரவோயென்னச்சொல்லினன்மருத்தின்மைந்தன். (அ)

ஆண்டகைதேவியுள்ளத்தருந்தவமமையச்சொல்லிப்
பூண்டபேரடையாளங்கைக்கொண்டதும்புகன்றுபோரில்
நீண்டவாளரக்கரோடுநிகழ்ந்ததுநெருப்புச்சிந்தி
மீண்டதும்விளம்பான்றான்றன்வென்றியையுரைப்பவெள்கி (கூ)

பொருதமைபுண்ணேசொல்லவென்றமைபோந்ததன்மை
உரைசெயவூர்தியிட்டதோங்கிரும்புகையேயோதக்
கருதலர்பெருமைதேவிமீண்டிலாச்செயலேகாட்டத்
தெரிதரவுணர்ந்தேம்பின்னரொன்னினிச்செய்துமென்றார். (க0)

யாவையுமினிவேறெண்ணல்வேண்டுவதிறையுமில்லை
சேவகன்றேவிதன்னைக்கண்டமைவிரைவிற்செப்பி
ஆவதவ்வண்ணலுள்ளத்தருந்துயராற்றலேயாம்
போவதுபுலமையென்னாப்பொருக்கெனவெழுந்துபோனார். (கக)

போயினர்களிப்பினோடும்புங்கவன்சிலையினின்றும்
ஏயினபகழியன்னவெழுந்துவிண்படர்ந்துதாவிக்
காய்கதிர்க்கடவுள்வானத்துச்சிசென்றிறக்குங்காலத்
தாயனவீரரும்போய்மதுவனமதிலிறுத்தார். (கஉ)

எதுநாளிறந்தசாலவென்பதோர்வருத்தநெஞ்சத்
தாதலா * னுணர்வுதீர்ந்துவருந்தினமளியமெம்மைச்

* உணர்வுதீர்ந்தென்றல்-பொசிப்பில்லாமலென்க.

சாதநீர்த்தளித்தவீரதந்தருளுணவுமென்னப்
போதுநாம்வாலிசேய்பாலென்றுடனெழுந்துபோனார். (௧௩)

அங்கதன்றனையண்மிபணிவருமிருகைகூப்பிக்
கொங்குதங்கலங்கன்மார்பநின்னுடைக்குரக்குச்சேனை
வெங்கதமொழிந்துசாலவருந்தினவேடையோடி
இங்கிதற்களித்தல்வேண்டுமிருளுமிழ்பிரசமென்றார். (௧௪)

நன்றெனவவனுநேர்ந்தானலையுநடுங்கவார்த்துச்
சென்றுறுபிரசந்தூங்குஞ்செழுவனமதனினூடே
ஒன்றின்முன்னொன்றுபாயுமொடிக்குமண்பிரசமெல்லாம்
தின்றுதின்றுவகைகூருந்தேனுகாளியின்மொய்த்தே. (௧௫)

ஒருவர்வாய்க்கொள்ளுந்தேனையொருவருண்டெளிதிற்போவார்
ஒருவர்கைக்கொள்ளுந்தேனையொருவர்கொண்டோடிப்போவார்
ஒருவரோடொருவரொன்றத்தழுவுவர்விழுவரோடி
ஒருவர்மேலொருவரேறியோகையென்றுவகைகூர்வார். (௧௬)

இன்னணங்கழுங்காலையெரிவிழித்தெரிந்துசீறி
அன்னெடுஞ்சோலைகாக்கும்வானரரவரைநோக்கி
மன்னெடுங்கதிரோன்மைந்தனாணையைமறுத்துநீயிர்
என்னினைந்தென்செய்தீர்மன்னுமுயிர்க்கிறுதியென்ன. (௧௭)

முனியுமாலெம்மையெங்கோனென்றவர்மொழிந்துபோந்து
கனியுமாமதுவனத்தைக்கட்டழித்திட்டதின்று
நனிதருகவியின்றானைநண்ணலார்செய்கைநாண
இனியெம்மாற்செயலின்றென்றுத்ததிமுகற்கியம்பினாரே. (௧௮)

கேட்டவன்யாவரேயம்மதுவனங்கெடுசூழ்ந்தார்
காட்டிடென்றெழுந்தானன்னார்வாலிசேய்முதலகற்றோர்
ஈட்டம்வந்திறுத்ததாகவங்கதனேவறன்னால்
மாட்டினகவியின்றானைமதுவளருலவையீட்டம். (௧௯)

உரங்கிளர்மதுகையான்றனாணையாலுறுதிகொண்டே
குரங்கினந்தம்மையெல்லாம்விலக்கினன்கொடுமைகூறிக்
கரங்களாலெற்றநொந்தேங்காவலோவென்னவோடும்
தரங்கிளர்தாதைபட்டதறிந்திலன்றநயன்போலும். (௨௦)

எனவுரைத்தனலிற்பொங்கியெழுந்திரைத்திரண்டுகோடி
கனைகழற்கவியின்சேனைக்கல்லெனக்கலந்துபுல்லப்
புனைமதுச்சோலைபுக்கான்மதுநகர்புனிதச்சேனை
அனகனைவாழ்த்தியோடியங்கதனடியினவீழ்ந்த. (௨௧)

இந்திரன்வாலிக்கீந்தவின்சுவைமதுவின்கானம்
அ[illegible]யென்றுணை தன்னைச்

சிந்தினைகதிரோன்மைந்தன்றிறலினையறிதியன்றே
மந்தரமனையதோளாயிற்றதன்வாழ்க்கையின்றே. (உஉ)

மதுவனந்தன்னையின்மனைமாட்டுவித்தனைநீயென்னாக்
கதுமெனவாலிசெய்யவெழுந்தவக்கருங்கற்பாறை
அதுதனைப்புறங்கையாலேயகற்றியங்கதனுஞ்சீறித்
ததிமுகன்றன்னைப்பற்றிக்குத்தினன்றடக்கைதன்னால். (உ௩)

வாய்வழிகுருதிசோரமணிக்கையான்மலங்கமோதிப்
போயம்மாழிகதிரோன்மைந்தற்கென்றவன்றன்னைப்போக்கித்
தீயெழுவெகுள்பொங்கமற்றவன்சேனைதன்னைக்
காய்கனல்பொழியுங்கையாற்குத்துதிர்கட்டியென்றான். (உ௪)

பிடித்தனர்கொடிச்சடம்மாற்பிணித்தனர்பின்னுமுன்னும்
இடித்தனரசனியஞ்சவெறுழ்வலிக்கரங்களோச்சித்
துடித்தனருடலஞ்சோர்ந்தார்சொல்லும்போய்ச்சேருமென்னப்
படித்தனன்வாலிமைந்தன்பயத்துடனவரும்போனார். (உ௫)

அலைபுனல்குடையுமாபோன்மதுக்குடைந்தாடித்தத்தம்
தலைவர்கட்கினியதேனிங்கனிகளும்பிறவுந்தந்தே
உலைவுறுவருத்தந்தீர்ந்திட்டெவ்வனத்திருந்தாரப்பால்
சிலைவளைத்தவுந்தேரோன்றெறும்வெயிறணிவுபார்த்தே. (உ௬)

முத்தலையெடுத்திறற்குமுடிப்பருங்கருமமுற்றி
வித்தகன்றூதுமீண்டதுறுதுயாய்விளைந்தன்மை.
அத்தலையறிந்தவெல்லாமறைந்தனமாழியான்மாட்
டித்தலைநிகழ்ந்தவெல்லாமியம்புவானெடுத்துக்கொண்டாம். (உ௭)

வேறு.

சேற்றிளமரைமலர்த்திருவைத்தேர்கெனக்
காற்றின்மாமகன்முதற்கவியின்சேனையை
நாற்றிசைமருங்கினுமேவிநாயகற்
றேற்றினனிருந்தனன்கவியின்செம்மலே. (உ௮)

கார்வரையிருந்தனன்கதிரின்காதலன்
சீரியசொற்களிற்றெருட்டச்செங்கணான்
ஆருயிராயிரமுடையனாமெனச்
சோர்தொறுஞ்சோர்தொறுமுயிர்த்துத்தோன்றினான். (உ௯)

தண்டலிநெடுந்திசைமூன்றுந்தாயினர்
கண்டிலர்மடந்தையையெனாங்கட்டுரை
உண்டயிரகத்தெனவொறுக்கவும்முளன்
திண்டிறலநுமனைநினையுஞ்சிந்தையான். (௩0)

ஆரியனருந்துயர்க்கடலினாழ்பவன்
சீரியதன்றாஞ்செய்கைதீவரும்
பூரியவெம்பழிபொடித்ததாமெனச்
சூரியன்சிறுவனைநோக்கிச்சொல்லினான். (௯௧)

குறித்தநாளிகந்தன்குன்றத்தென்றிசை
வெறிக்கருங்குழலியைநாடன்மேயினார்
மறித்திவண்வந்திலர்மாண்டுளார்கொலோ
பிறித்தவர்க்குற்றுளதென்னைபெற்றியோ. (௯௨).

மாண்டனவவளிவண்மாண்டவார்த்தையை
மீண்டவர்க்குரைத்தலின்விளிதனன்றெனாப்
பூண்டதோர்துயர்கொடுபொன்றினார்கொலோ
தேண்டினரின்னமுந்திரிகின்றார்கொலோ. (௯௩)

கண்டனரரக்கரைக்கறுவுகைமிக
மண்டமர்தொடங்கினார்வஞ்சர்மாயையால்
விண்டலமதனின்மேயினர்கொல்வேறிலாத்
தண்டலினெடுஞ்சிறைதனைபட்டார்கொலோ. (௯௪)

கூறினாளவரிருக்கைகூடலம்
ஏறலஞ்சுதுமெனவின்பதுன்பங்கள்
ஆறினாருந்தவமயர்கின்றார்கொலோ
வேறவர்க்குற்றதென்விளம்புவாயென்றான். (௯௫)

என்றுரைத்திடருழந்திருக்கும்வேலையில்
வன்றிறற்றதிமுகன்வானரேசன்முன்
தன்றலைப்பொழிதருகுருதிதன்னொடும்
குன்றெனப்பணிந்தனனிருகைகூப்பியே. (௯௬)

எழுந்துநின்றையகேளின்றுநாளையோ
டழிந்ததுமதுவனமடையவென்றலும்
வழிந்திடுகுருதியின்வதனநோக்கியே
மொழிந்திடங்கியாரதுமுடித்துளோரென. (௯௭)

நீலனுங்குமுதனுநெடியகுன்றமே
போலுயர்சாம்பனும்புணரிபோர்த்தென
மேலெழுசேனையும்விரைவின்வந்துறாச்
சால்புடைமதுவனந்தனையழிப்பவே. (௯௮)

தகைத்தவச்சேனையைத்தள்ளிநின்னையும்
இகழ்ந்துரைத்தியைந்தனன்வாலிசேயெமக்
குகந்தனபுகன்றவவ்வுரைபொறுமையே
புகைத்தொருபாறையின்புணர்ப்புநீக்கியே. (௯௯)

இமைத்தன்முன்வாலிசேயெழில்கொள்யாக்கையைச்
சமைத்தியெனநெறிதடபுறங்கையாற்றகைத்
தமைத்தருகனலெனவழன்மறப்பற்றியே
குமைத்துயிர்பதைபபநீகூழும்பாயென்றான். (சo)

எம்பலொடெழுந்துநின்றிரவிகான்முளை
பாம்பணையமலனைவணங்கிப்பைந்தொடி
மேம்படுகற்பினையொன்றுமெய்ம்மையைத்
தாம்புகன்றிட்டதிச்சலமெனக்கூறினான். (சக)

பண்டருகிளவிபாடன்னைப்பாங்குறக்
கண்டனனன்னதோர்களிப்பினாலவா
வண்டுறைபதுவனமழித்துமாந்திய
தண்டநாயகவினியவலந்தீர்கெனா. (சஉ)

வந்தனர்தென்றிசைவானரெனப்
புந்திநொந்தென்னைகொல்புகலற்பாலரென்
றெந்தையுமிருந்தனனிரவிகான்முளை
நொந்தவததிமுகன்றன்னைநோக்கியே. (சங)

யாரவணிறுத்தவரியம்புவாயென
மாருதிவாலிசேய்மயிந்தன்சாமபவன்
சோர்வறுபதினெழுவோர்கடனனினர்
* ஆகவிநாணவந்தார்க்குஞ்சேனையார். (சச)

என்றவனுரைத்தபோதிரவிகாதலன்
வன்றிறற்றதிமுகன்வதனநோக்கியே
ஒன்றுனக்குணர்த்துவதுளதுவாலிசேய்
புன்றொழிற்செய்கைசேர்புணர்ப்பனல்லனால். (சரு)

கொற்றவன்பணிதலைக்கொண்டுதெண்டிரை
சுற்றியதிசையெலாந்துருவித்தோகையைப்
பற்றியபகைஞரைக்கடிந்துபாங்கர்வந்
துற்றனரவரையாமுரைப்பதென்னையே. (சசு)

அன்றியும்வாலிசேயரசதாதலின்
பின்றுதலரிதரோபிணங்குஞ்சிந்தையாய்
ஒன்றுநீயுணரலையுறுதிவேண்டுமேல்
சென்றவன்றனைச்சரண்சேர்தியீண்டெனா. (சஎ)

வணங்கியசென்னியன்மறைத்தவாயினன்
உணங்கியசிந்தையனொடுங்குமேனியன்

* ஆர்கலி—சமுத்திரம்.

கணங்களோடேகியக்கானநண்ணினான்
மணங்கிளர்தாரினான்மறித்தும்வந்தரோ. (சஅ)

கண்டனன்வாலிசெய்கறுவுகைமிக
விண்டவனம்மெதிர்மீண்டிளானெனின்
உண்டிகுதுமுயிரென்னவுன்னினான்
தொண்டெனத்ததிமுகன்றொழுதுதோன்றினான். (சகூ)

போழ்ந்தனயான்செய்தகுறைபொறுக்கென
வீழ்ந்தனனடிமிசைவீழவாலிசேய்
தாழ்ந்துகைபற்றிமெய்தழீஇக்கொண்டெம்மையான்
சூழ்ந்ததும்பொறுக்கெனாமுதன்மைசொல்லினான். (ருo)

யாமுதற்குளித்தநாளிறத்தலெண்ணியே
ஏமுறத்துயர்துடைத்தளித்தவேற்றம்போல்
தாமரைக்கண்ணவன்றாரந்தள்ளநீர்
போமெனத்தொழுதுமுன்னநுமன்போயினான். (ருக)

வன்றிறற்குரிசிலுமுனிவுமாறினான்
வென்றிகொள்கதிருந்தன்வெம்மையாறினான்
என்றுகொண்டியாவருமெழுந்துபோதலே
நன்றெனவேகினார்நவைக்கணீங்கினார். (ருஉ)

இப்புறத்திராமனுமிரவிசேயினை
ஒப்புறநோக்கிவந்துற்றதானையந்
தப்பறக்கண்டனமென்பரோதகா
தப்புறத்தென்பரோவறைதியாலென்றான். (ருங)

என்புழியநுமனுமிரவியென்பவன்
தென்புறத்துளனெனத்தெரிவதாயினான்
பொன்பொழிதடக்கையப்பொருவில்வீரனும்
அன்புறுசிந்தையனமையநோக்கினான். (ருச)

எய்தினனநுமனுமெய்தியேந்தறன்
மொய்கழறொழுகிலன்முளரிநீங்கிய
தையலைநோக்கியதலையன்கையினன்
வையகந்தழீஇநெடிதிறைஞ்சிவாழ்த்தினான். (ருரு)

திண்டிறலவன்செயறெரியநோக்கினான்
வண்டிறலோதியும்வலியனாமற்றிவன்
கண்டதுமுண்டவன்கற்புநன்றெனக்
கொண்டனன்குறிப்பினாலுணருங்கொள்கையான். (ருசு)

* அமைய என்பது குறிப்புத்தோன்றவெனக்கொள்க.

ஆங்கவன்செய்கையையளவையாமெனு
ஓங்கியவுணர்வினால்விளைந்ததுன்னினான்
* வீங்கினன்றோள்புனல்கண்கள்விம்மினன்
நீங்கியதருந்துயராகாதனி யடைந்த. (௫௭)

கண்டனென்கற்பினுக்கணியைக்கண்களால்
தெண்டிரையலைகடலிலங்கைத்தென்னகர்
அண்டர்நாயகவினித்துறத்தியையமும்
பண்டுளதுயருமென்றநுமன்பன்னுவான். (௫௮)

வேறு.

உன்பெருந்தேவியென்னுமுரிமைக்குமுன்னைப்பெற்ற
மன்பெருமருகியென்னுமவாய்மைக்குமிதிலைமன்னன்
தன்பெருந்தனையையென்னுந்தகைமைக்குந்தலைமைசான்றாள்
என்பெருந்தெய்வமையாவின்னமுங்கேட்டியென்பான். (௫௯)

பொன்னலதில்லைப்பொன்னையொப்பெனப்பொறையினின்றாள்
தன்னலதில்லைத்தன்னையொப்பெனத்தனக்குவந்த
நின்னலதில்லைநின்னையொப்பெனநினக்குநேர்ந்தாள்
என்னலதில்லையென்னையொப்பெனவெனக்குமீந்தாள். (௬0)

† உன்குலமுன்னதாக்கியுயர்புகழ்க்கொருத்தியாய
தன்குலந்தன்னதாக்கித்தன்னையித்தனிமைசெய்தான்
வன்குலங்கூற்றுக்கீந்தவ்வானவர்குலத்தைவாழ்வித்
தென்குலமெனக்குத்தந்தாளென்னினிச்செய்வதெம்மோய். (௬௧)

விற்பெருந்தடந்தோள்வீரவீங்குநீரிலங்கைவெற்பின்
நற்பெருந்தவத்தளாயநங்கையைக்கண்டேனலலேன்
இற்பிறப்பென்பதொன்றுமிரும்பொறையென்பதொன்றும்
கற்பெனும்பெயரதொன்றுங்களிநடம்புரியக்கண்டேன். (௬௨)

‡ கண்ணினுமுளைநீதையல்கருத்தினுமுளைநீவாயின்
எண்ணினுமுளைநீகொங்கையிணைக்குவைதன்னிலுள்ளாய்
தண்ணல்வெங்காமனெய்தவலரம்புதொளைக்கவாறாப்
புண்ணினுமுளைநீநின்னைப்பிரிந்தமைபொருந்திற்றாமோ. (௬௩)

வேலையுளிலங்கையென்னும்விரிநகரொருசார்விண்டோய்
காலையுமாலைதானுமில்லதோர்கனகக்கற்பச்
சோலையங்கதனிலும்பிபுல்லினாற்றொடுத்ததூய
சாலையினிருந்தாளையதவஞ்செய்ததவமாந்தையல். (௬௪)

---

* தோள்வீங்கினன்-புஜங்கள் பூரித்தார். †பிராட்டியினுடைய கலங்காநிலையினாலே ராட்சதர்களுக்கழிவும் மற்றெல்லாருக்கு நன்மையுமே உண்டாயிற்றென்று கருத்து. ‡ இதன் கருத்து பிராட்டி உம்மைப் பிரியவில்லையென்பதாம்.

மண்ணொடுங்கொண்டுபோனான்வானுயர்கற்பினோடன்
புண்ணியமேனிதீண்டவஞ்சுவானுலகம்பூத்த
கண்ணகன்கமலத்தண்ணல்கருத்திலாட்டொடுதல்கண்ணின்
எண்ணருங்கூறாய்மாய்தியென்றதோர்மொழியுண்டென்பான். (௬௫)

தீண்டிலனென்னும்வாய்மைதிசைமுகன்செய்தமுட்டை
கீண்டிலதநந்தனுச்சிகிழிந்திலதெழுந்துவேலை
மீண்டிலசுடர்கள்யாவும்வீழ்ந்திலவேதஞ்செய்கை
மாண்டிலதென்னுந்தன்மைவாய்மையானுணர்திமன்னோ. (௬௬)

சோகத்தாளாயநங்கைகற்பினாற்றொழுதற்கொத்த
மாகத்தார்தேவிமாரும்வான்சிறப்புற்றார்மற்றைப்
பாகத்தாளிப்போதீசன்மகுடத்தாள்பதுமத்தாளும்
ஆகத்தாளல்லண்மாயனாயிரமௌலிமேலாள். (௬௭)

இலங்கையைமுழுதுநாடியிராவணனிருக்கையெய்திப்
பொலங்குழையவரையெல்லாம்பொதுவுறநோக்கிப்போந்தேன்
அலங்குதண்சோலைபுக்கேனவ்வழியணங்கனாளைக்
கலங்குதெண்டிரையிற்றாயகண்ணீர்க்கடலிற்கண்டேன். (௬௮)

அரக்கியராளவற்றாருமலகையின்முழுவுமஞ்சச்
செருக்கினல்கண்டுசெய்யமெய்க்கனறீக்கச்சீர்த்த
இரக்கமென்றொன்றுதானேயேந்திழைவடிவமெய்தித்
தருக்கியசிறையுற்றன்னதகையளத்தமியளம்மா. (௬௯)

மாண்பிறந்தமைந்தகற்பின்வானுதனின்பால்வைத்த
சேண்பிறந்தமைந்தகாதல்கண்களிற்றெறிவிட்டித்தீராக்
காண்பிறந்தமையானீயேகண்ணகன்ஞாலந்தன்னுள்
ஆண்பிறந்தமைந்தசெல்வமுண்டனையாதியன்றே. (௭௰)

அயிர்ப்பிலர்காண்பார்முன்னுமறிந்திலரெனினுமைய
வெயிற்புனையிலங்கைமூதூ * ரிந்திரன்யாக்கைக்கேற்ற
மயிற்புனையியலினாருமைந்தருநாளுமாங்கே
உயிர்ப்பொடுமுயிரினோடுமூசனின்றுவாரும். (௭௧)

தையலைவணங்கற்கொத்தவிடைபெறுந்தன்மைநோக்கி
ஐயயானிருந்தகாலையலங்கல்வேலிலங்கைவேந்தன்
எய்தினனிரந்துகூறியிரைஞ்சினனிருந்துநங்கை
வெய்துரைசொல்லச்சீறிக்கோறன்மேற்கொண்டுவிட்டான். (௭௨)

* இந்திரனியற்கைக்கென்றும் பாடம்.

ஆயிடையணங்கின்கற்புமையநின்னருளுஞ்செய்ய
தூயநல்லறனுமென்றிங்கிவையனதொடர்ந்துகாப்பப்
போயினனரக்கிமாரைச்சொல்லுமின்பொதுவினென்றாங்
கேயினனவரெலாமென்மந்திரத்துறங்கியிற்றார். (௭௩)

அன்னதோர்பொழுதினங்கையாருயிர்துறப்பதாக
உன்னினள்கொடியொன்றேந்திக்கொம்பொடுமுறைப்பச்சுற்றித்
தன்மணிக்கழுத்திற்சார்த்துமளவையிற்றடுத்துநாயேன்
பொன்னடிவணங்கிநின்றுநின்பெயர்புகன்றபோழ்தில். (௭௪)

வஞ்சனையரக்கர்செய்கையிதுவெனமனக்கொண்டேயும்
அஞ்சனவண்ணத்தான்றன்பெயருரைத்தளியையென்பால்
துஞ்சுறுபொழுதிற்றந்தாய்துறக்கலென்றலவந்துசொன்னாள்
மஞ்செனவனமென்கொங்கைவழிநின்றமழைக்கணீராள். (௭௫)

அறிவினிற்றேறிச்சொன்னபேரடையாளம்யாவும்
செறிவுறநோக்கிநாயேன்சிந்தையிற்றிருக்கமின்மை
முறிவறவெண்ணிவண்ணமோதிரங்காட்டக்கண்டாள்
இறுதியினுயிர்தந்தீயுமருந்தொத்ததனையதெந்தாய். (௭௬)

ஒருகணத்திரண்டுகண்டேனொளிமணியாழியான்ற
திருமுலைத்தடத்துவைத்தாள்வைத்தலுஞ் * செல்வநின்பால்
விரகமென்பதனின்வந்தவெங்கொழுந்தீயினால்வெந்
துருகியதுடனேயாறிவலித்ததுகுளிர்ப்புளூற. (௭௭)

வாங்கியவாழிதன்னைவஞ்சனூர்வந்ததாமென்
றோங்குயர்மழைக்கணீராலாயிரங்கலசயாட்டி
ஏங்கினளிருந்ததல்லாலியம்பலளெய்ததமேனி
வீங்கினள்வியந்ததல்லாலிமைத்திலளுயிர்ப்புவிண்டாள். (௭௮)

அன்னவர்க்கடியனேனிற்பிரிந்தபினடுத்தவெல்லாம்
சொன்முறையறியச்சொல்லித்தோகைநீயிருந்தசூழல்
இன்னதென்றறிகிலாமேயித்தனைதாழ்த்ததென்றே
மன்னநின்வருத்தப்பாடுமுணர்த்தினெனுயிர்ப்புவந்தாள். (௭௯)

இங்குளதன்மையெல்லா † மிலையபுளியிலையக்கேட்டாள்
அங்குளதன்மையெல்லாமடியனுக்கறியச்சொன்னாள்
திங்களொன்றிருப்பெனின்னேதிருவுளந்தீர்ந்தபின்னை
மங்குவெனுயிரோடென்றுன்குரைகழற்றலைக்கண்வைத்தாள். (௮௦)

---

* செல்வ—ஓமஹாப்பிரபு. † இலையபுளி—இரமப்படியே.

வைத்தபின்றுகிலின்வைத்தமா *மணிக்கரசைவாங்கிக்
கைத்தலத்தினிதினீந்தாடாமரைக்கண்களார
வித்தககாண்டியென்றுகொடுத்தனன்வேதநன்னூல்
உய்த்துளகாலமெல்லாம்புகழொடுமொக்கநிற்பான். (௮௧)

பைப்பையப்பயந்தகாமம்பரிணமித்துயர்ந்துபொங்கி
மெய்யுறவெதும்பியுள்ளமெலிவுறுநிலையைவிட்டான்
ஐயனுக்கங்கிமுன்னரங்கையாற்பற்றுநங்கை
கையெனலாயிற்றன்றேகைபுக்கமணியின்காட்சி. (௮௨)

பொடித்தனவுரோமம்போந்துபொழிந்தனகண்ணீர்பொங்கித்
துடித்தனமார்புந்தோளுந்தோன்றினவியர்வின்றுள்ளி
மடித்ததுமணிவாயாவிவருவதுபோலதாகித்
தடித்ததுமேனியென்னேயாருளார்தன்மைதேர்வார். (௮௩)

ஆயிடைக்கவிகளோடுமங்கதன்முதலினாயோர்
மேயினர்வணங்கிப்புக்கார்வீரனைக்கவியின்வேந்தைப்
போயினகருமமுற்றிப்புகுந்ததோர்பொம்மறன்னால்
சேயிருமதியமென்னத்திகழ்தருமுகத்தரானார். (௮௪)

ஆண்டையினருக்கன்மைந்தனையகேளரிவைநம்பால்
காண்டலுக்கெளியவானோவென்றலுங்காலந்தாழ
ஈண்டினுமிருத்திபோலாமென்றனனென்றலோடும்
தூண்டிரண்டனையதோளான்பொருக்கெனவெழுந்துசொன்னான். (௮௫)

எழுகவெம்படைகளென்றானேயெனுமளவினெங்கும்
முழுமுரசெற்றிக்கொற்றவள்ளுவர்முடுக்கமுந்திப்
பொழிதிரையன்னவேலைபுடைபரந்தென்னப்பொங்கி
வழுவில்வவள்ளத்தானைதென்றிசைவளர்ந்ததன்றே. (௮௬)

நீலனைநெடிதுநோக்கிநேமியோன்பணிப்பானந்தம்
பால்வருஞ்சேனைதன்னைப்பகைஞர்வந்தடராவண்ணம்
சால்புறமுன்னர்ச்சென்றுசரிநெறிதுருவிப்போதி
மால்தறுகளிறுபோலும்படைஞர்பின்மறங்குழ. (௮௭)

என்றுரைத்தெழுந்தவேலைமாருதியிருகைகூப்பிப்
புன்றொழிற்குரங்கெனாயென்றோளிடைப்புகுதியென்னாத்
தன்றலைப்படியிற்றாழ்ந்தானண்ணலுஞ்சரணம்வைத்தான்
வன்றிறல்வாலிசேயுமிளவலைவணங்கிச்சொன்னான். (௮௮)

---

* மணிக்கரசை—சூடாமணியை.

நீயினியென்றன்றோண்மேலேறுதிமலவென்ன
வாய்புதைத்திறைஞ்சிநின்றவாலிகாதலனைநோக்கி
நாயகற்கிளையகோவுநன்றெனவவன்றன்றோண்மேல்
பாய்தலுந்தகைப்பிறனைப்படர்நெறிபடர்ந்ததன்றே. (௮௯)

கருடனில்விடையிற்றோன்றுமிருவருங்கடப்பக்காலின்
அருடருகுமரன்றோண்மேலங்கதனலங்கற்றோண்மேல்
பொருடருமவீரர்போகப்பொங்கொளிவிசும்பிற்றங்கும்
தெருடரும்புலவர்வாழ்த்திச்சிந்தினர்தெய்வப்பொற்பூ. (௯௦)

வய்யகமதனின்மாக்கண்மயங்குவர்வயவெஞ்சேனை
எய்திடினென்பதுன்னியிராகவனினிதினேவப்
பெய்கனிகிழங்குதேனென்றினையனபெறுதற்கொத்த
செய்யமால்வரையேயாறுச்சென்றனதகைப்பில்சேனை. (௯௧)

வீரரும்விரைவிற்போனார்விலங்கன்மேலிலங்கைவெய்யோர்
சோர்விலாக்காவற்பாடும்பெருமையுமாணுங்கொற்றக்
கார்நிறத்தரக்கரென்போர்முதலியகணிப்பிலாத
வார்கழலநுமன்சொல்லவழிநெடிதெளிதிற்போனார். (௯௨)

அந்நெறிநெடிதுசெல்லவரிக்குலத்தரசனோடு
நன்னெறிக்குமரர்போகநயந்துடன்புணர்ந்தசேனை
இன்னெடும்பவழக்குன்றிற்பகலெலாமிருத்தபின்னர்
பன்னிருபகலிற்சென்றுதென்றிசைப்பறவைகண்டார். (௯௩)

௧௫-வது. திருவடிதொழுதபடலம்-முற்றிற்று.

(௯௩ திருவிருத்தங்கள்-௧௩௪௪.)

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

ஆஞ்சநேயர் திருவடிகளே சரணம்.

சுந்தரகாண்டம் முற்றிற்று.